13
நூல் தேட்டம்
என். செல்வராஜா

# நூல் தேட்டம் 13

என். செல்வராஜா

அயோத்தி நூலக சேவைகள் &
குமரன் புத்தக இல்லம்

# நூல் தேட்டம்

## [தொகுதி 13]

தாயகத்திலும் புகலிடத்திலும் வெளியிடப்பெற்ற
ஈழத்துத் தமிழ் நூல்கள் பற்றிய குறிப்புரையுடனான
**நூல் விபரப்பட்டியல்**

**என். செல்வராஜா**

வெளியீடு
**அயோத்தி நூலக சேவைகள்**
&
**குமரன் புத்தக இல்லம்**
ஓகஸ்ட் 2019

| | | |
|---|---|---|
| நூலின் தலைப்பு | - | நூல் தேட்டம் (தொகுதி 13) |
| ஆசிரியர் | - | என்.செல்வராஜா |
| மின்னஞ்சல் | - | Noolthettam.ns@gmail.com |
| தொலைபேசி | - | (0044) 07817402704 |
| பதிப்பு | - | முதற்பதிப்பு, 01 ஏப்ரல் 2019 |
| வெளியீடு | - | அயோத்தி நூலக சேவைகள், ஐக்கிய இராச்சியம் & குமரன் புத்தக இல்லம், கொழும்பு |
| அச்சுப்பதிப்பு | - | குமரன் புத்தக இல்லம், |
| அட்டை வடிவமைப்பு | - | கௌதமன் செல்வராஜா |
| சர்வதேச தராதர நூல் பதிவெண் | - | 978-955-659-635-9 |
| பக்கங்கள் | - | xviii + 626 |



பதிப்புரிமை © என்.செல்வராஜா 2019



| | | |
|---|---|---|
| Title | - | Nool Thettam (Volume 13)<br>An annotated bibliography of 1000 published writings in Tamil language, by Sri Lankan Tamils, home and abroad. |
| Compiler | - | N.Selvarajah |
| e-mail | - | Noolthettam.ns@gmail.com |
| Mobile | - | (0044) 07817402704 |
| Edition | - | First Edition, 01April 2019 |
| Publishers | - | Ayothy Library Services, United Kingdom and<br>Kumaran Book House, Colombo |
| Printers | - | Kumaran Book House, 39, 36th Lane, Colombo 6, Sri Lanka<br>E-Mail: kumbhlk@gmail.com |
| Cover Design | - | Gauthaman Selvarajah |
| ISBN | - | 978-955-659-635-9 |
| Pages | - | xviii + 626 |
| Price | - | £ 15.00, Euro 20.00, SLRs 2000.00 |



© Copy Right 2019 by N.Selvarajah

All Rights Reserved. No part of this publication may be reproduced or utilised, stored in a retrieval system, or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise, without the prior written permission of the author.

# நன்றி

நூல்தேட்டத்தின் பதின்மூன்றாவது தொகுதியை உங்கள் கரங்களில் இன்று கையளிப்பதற்குத் தோன்றாத் துணையாக இருந்த அனைவருக்கும் முதலில் நன்றிகூறுவது என் தலையாய பணியாகும்.

நூல்தேட்டம் அன்று என் மனதில் கருக்கொண்ட வேளை, தன் பல்கலைக்கழக வாழ்வின் நெருக்கடிகளுக்குள்ளும் ஓடித்திரிந்து நூல்களைத் தேடித்தந்து என்னை ஆர்வத்துடன் செயற்படவைத்து மகிழ்ந்துவிட்டு இன்று எம்மிடையே இல்லாது இளமையிலேயே காலன் வசப்பட்டு, என்றும் இளமையாக எங்கள் மனதில் நிலை கொண்டுவிட்ட எம் இனிய மருமகள் சுகந்தியையே எப்பொழுதும் முதலில் நினைவுகூர்வதுண்டு.

பதின்மூன்றாம் தொகுதிக்கான தேடலில் இறங்கியிருந்த வேளையில் தமது நூற்சேர்க்கையைப் பார்வையிட மனமுவந்து அனுமதியளித்தவர்கள், தமது நூல்களை பதிவின்பொருட்டு, அன்பளிப்பாக வழங்கியவர்கள், எனது பணிகள் பற்றிய கட்டுரைகளை எழுதி தாயக, புகலிட ஊடகங்களில் பதிவாக்கியவர்கள், எழுத்தாளர்களுடனான ஒன்றுகூடல்களை தன்னார்வ முனைப்புடன் ஒழுங்கு செய்தவர்கள் என்று இப்பட்டியல் நீளும். சிலரின் பெயர்கள் தவறுதலாக விடுபட்டி ருக்கலாம். மனதில் நிலைத்தவர்களை முடிந்தவரையில் இங்கு மீட்டிருக்கின்றேன்.

பன்னிரண்டாவது தொகுதியை உரியகாலத்தில் அழகுற அச்சிட்டுத் தந்ததுடன், அத்தொகுதியை இலங்கையில் பரவலாக அறிமுகம் செய்யும் பொறுப்பினையும் கொழும்பு, குமரன் புத்தக இல்ல அதிபர் கணேசலிங்கம் குமரன் ஏற்றிருந்தார். பதின்மூன்றாவது தொகுதியையும் அச்சேற்றி விநியோகித்துத் தரும் பொறுப்பினையும் அவரே ஏற்றிருக்கிறார். அவருக்கு என் நன்றி.

பதினமூன்றாம் தொகுதிக்கான நூல்தேடலுக்கான எனது இலங்கைப் பயணத்தின் மூன்று வாரங்கள் வரையில் தனியார் நூலகங்களிலும், பதிப்பகங்களிலும் தமிழ்ச் சேர்க்கைகளைப் பார்வையிட்டு அரிய பல ஈழத்து நூல்களைப் பதிவுசெய்ய முடிந்தது. கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தின் சேர்க்கைகளே இத்தொகுப்பில் முக்கிய இடம் வகிக்கின்றன.

என்னைத் தமது நூலகத்தினைப் பயன்படுத்த அனுமதியளித்த கொழும்புத் தமிழ்ச்சங்க நிர்வாகிகளுக்கு எனது நன்றிகள். என்னையும் தமது நூலகத்தில் மிக முக்கிய பயனாளியாகக் கொண்டாடி, எனது தேடலுக்கு மிகவும் ஆர்வத்துடனும் ஈடுபாட்டுடனும் பிரதிபலன் கருதாது உதவிய கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகர் திருமதி சித்தார்த்தினி சுப்பிரமணியம் அவர்களுக்கும் அவரது குழுவினர்களான த.தாமரைச்செல்வி, ஜே.கிருஷாயினி, த.தமிழ்ச்செல்வி, பா.கீர்த்தனா, ரவிராஜ் அர்ச்சுனா, அ.நல்லகுமாரி, பா.கேஷினி ஆகியோருக்கும் எனது உளம்கனிந்த நன்றிகள்.

லண்டனில் தனிப்பட்டமுறையில் அக்கறையுடன் அவ்வப்போது தமிழ் வெளியீடுகளைத் திரட்டித் தந்துவரும் தியாகராஜா திபாகரன், அம்பலவாணர் மயூரன், தம்பிராஜா ஜெயபாலன் ஆகிய இனிய உள்ளங்களுக்கும் எனது நன்றிகள்.

தாயகத்திலும், புகலிடத்திலும் காலத்துக்குக் காலம் எனது நூல்தேட்டம் தொகுப்பு முயற்சிகளுக்கு ஆதரவான செய்திகளைப் பிரசுரித்தும், விமர்சனக் கட்டுரைகளை வெளியிட்டும் எனக்கு ஆதரவை வழங்கிவரும் சிறுசஞ்சிகை ஆசிரியர்களுக்கும், தேசிய, பிராந்தியப் பத்திரிகையாளர்களுக்கும் எனது நன்றிகள்.

எனது வாழ்வின் பெரும்பகுதி நேரத்தை விழுங்கிவிடும் நூல்தேட்டம் தொகுப்புக் கடமைகளின்போது எமது குடும்பச்சுமைகளை முழுமையாகத் தாங்கி என்னைச் சுதந்திரமாக இயங்கவிட்டதுடன் எனக்குத் துணையாகவிருந்து நூலாக்கக் கடமைகளிலும் முடிந்தவரை உதவிவரும் என் அன்புத் துணைவி விஜிக்கு நன்றி செலுத்தத் தவறினால் மிக முக்கியமான பதிவொன்றினை இங்கு மேற்கொள்ளத் தவறியவனாவேன். குடும்பத்தின் நிதி நிலைமையை மிகச் சிக்கனமாகக் கையாண்டு ஒவ்வொரு நூல்தேட்டம் தொகுதிக்கும் தேவையான மேலதிக நிதியை சேமித்து வழங்கும் இமாலயப்பணியும் இவருடையதாகும்.

உங்கள் ஆதரவில் நம்பிக்கைவைத்து, நூல்தேட்டத்தின் பதினான்காவது தொகுதியுடன் 14000 நூல்களைப் பார்வையிட்டுப் பதிவுசெய்த மனத்திருப்தியுடன் விரைவில் உங்களைச் சந்திப்பேன் என்ற உறுதியுடன் விடைபெறுகிறேன்.

**என்.செல்வராஜா**
*01.4.2019*

# முன்னுரை

## நூல்தேட்டம்
## (ஓர் அறிமுகம்)

ஈழத்துத் தமிழ் நூல்களுக்கான நூல்விபரப்பட்டியலான நூல்தேட்டத்தின் முதலாவது தொகுதி 2002இலும், இரண்டாவது தொகுதி 2004இலும், மூன்றாவது தொகுதி 2005இலும், நான்காவது தொகுதி 2006இலும், ஐந்தாவது தொகுதி 2008 இலும், ஆறாவது ஏழாவது தொகுதிகள் 2011இலும், எட்டாவது தொகுதி 2012இலும் ஒன்பதாவது தொகுதி 2014இலும், பத்தாவது தொகுதி 2015இலும், பதினொராவது தொகுதி 2017இலும், பன்னிரண்டாவது தொகுதி 2018இலும் வெளியிடப்பட்டன. அதன் தொடர்ச்சியான பதின்மூன்றாவது தொகுதியே இதுவாகும். இதில் ஈழத்துத் தமிழ் எழுத்தாளர்களினதும், வெளியீட்டாளர்களினதும் ஆயிரம் நூல்கள் பற்றிய அடிப்படை நூலியல் குறிப்புகளும் அதனையடுத்து நூல் பற்றிய சிறு அறிமுகக் குறிப்பும் இடம்பெற்றுள்ளன. தொடர் இலக்கங்கள் முதலாவது தொகுதியிலிருந்து தொடர்ச்சியாக வழங்கப்பட்டுள்ளன. அவ்வகையில் இத் தொகுதியில் இடம்பெறும் நூல்களுக்கு 12001இலிருந்து 13000வரை தொடரிலக்கமிடப்பட்டுள்ளன. 13000 நூல்களைப் பார்த்துக் குறிப்பெடுத்து, ஒழுங்கமைத்து, பதிவேற்றம் செய்து நூலுருவாக்குவதென்பது இலேசான காரியமல்ல. இதன் முக்கியத்துவத்தை புரிந்துகொண்டு எனக்கு உதவ முன்வரும் தொண்டுள்ளங்களை இன்னும்தான் எமது ஈழத்துத் தமிழ்ச் சமூகத்தில் தேடிவருகின்றேன்.

### தொகுப்பும் தவிர்ப்பும்

இது ஒரு தேர்ந்த நூற்பட்டியலன்று. இங்கு பட்டியலாக்கப்பட்டுள்ள தனி நூல்கள் (Monographs) எவையும் எவ்வித தரக்கட்டுப்பாட்டுக்கும் உட்படவில்லை. இன்று பார்வையிடக்கூடிய ஈழத்துத் தமிழ் நுல்கள் அனைத்தையும், ஒரு தொகுதிக்கு 1000 நூல்கள் என்ற எண்ணிக்கையில் பட்டியலிடுவதே நூல்தேட்டத்தின் அடிப்படை நோக்கமாகும். வெளியீட்டின் பௌதிகத் தன்மை கருதி சில பிரசுரங்கள் நூல்தேட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. துண்டுப்பிரசுரங்கள், வரை படங்கள், அச்சிடப்படாத கையெழுத்துப் பிரதிகள், ஒலி, ஒளிப்பதிவு நாடாக்கள், இறுவெட்டுகள் என்பன இத்தொகுப்பில் சேர்க்கப்படவில்லை.

பெரும்பான்மையான கல்வெட்டுகள், ஞாபகார்த்த மலர்கள், சஞ்சிகைகள், என்பனவும் இத்தொகுதியில் தவிர்க்கப்பட்டுள்ளன. ஆயினும், தனி ஆவணமாகக் கருதும்வகையில் வெளியிடப்பட்டிருக்கும் சஞ்சிகைகளின் சிறப்புமலர்கள் இத்தொகுதியில் இடம்பெற்றுள்ளன. மேலும், சில கல்வெட்டுக்களும், ஞாபகார்த்த மலர்களும் தனிநூலின் வகைக்குள் அடங்கக்கூடியதான கனதியான அம்சங்களுடன் வெளிவந்திருப்பதால் அவற்றையும் இத்தொகுதியில் சேர்த்துக்கொண்டுள்ளோம்.

இதில் தொகுக்கப்பட்டுள்ள நூல்கள் எவ்வித கால எல்லைகளுக்கும் வரையறுக்கப்படவில்லை. ஒரு நூலின் பின்னைய பதிப்புகள் வெளிவரும்போது அவை புதுக்கியோ, சுருக்கியோ, வெளிவரும் வாய்ப்பிருப்பதாலும், முற்றிலும் வேறான நூலியல் தகவல்களை அவை கொண்டிருப்பதாலும் குறித்தவொரு நூலின் பல்வேறு பதிப்புகளும் இங்கு ஒரே பதிவிலக்கத்தின் கீழ் இடம்பெறுகின்றன. முன்னைய பதிவிலக்கத்தைப் பெற்ற மீள்பதிப்புக்கள் பின்னிணைப்பில் தரப்பட்டுள்ளன.

## பதிவுகளின் ஒழுங்கமைப்பு

நூல்தேட்டம் ஒரு உசாத்துணை நூலாகும். ஒரு நூலைப் பற்றிய நூலியல் தகவல்களைக் குறுகிய நேரத்தில் வாசகர் கண்டறிய வகைசெய்யும் வண்ணம் இத்தொகுதி மூன்று பிரிவாகப் பதியப்பட்டுள்ளது.

முதற்பிரிவில், நூல் பற்றிய பிரதான பதிவுகள் பாடஒழுங்கில் வகைப்படுத்தப் பட்டு தொடரெண்கள் மூலம் அடையாளமிடப்பட்டுள்ளன. பாடவாரியாக ஒரு நூலைத்தேடும் வாசகர் இப்பிரிவின் மூலம் பயனடைவர்.

இரண்டாவது பிரிவு, தலைப்பு வழிகாட்டியாகும்.

முதற்பகுதியில் நூல்கள் பாடவாரியாக முதலில் ஒழுங்குபடுத்தப்பட்டு, பின்னர் அகரவரிசையில் காணப்படுவதால் ஒரு நூலின் தலைப்பைக் கொண்டு நூலைத் தேடவிழையும் வாசகர் இரண்டாவது பிரிவில் அகரவரிசையில் காணப்படும் தலைப்பு வழிகாட்டியின் வாயிலாக நூலின் தொடர் இலக்கத்தைக் கண்டறிந்து முதற்பகுதியில் உள்ள பிரதான பதிவைப் பார்வையிட முடியும். இங்கு தலைப்புக்கள் அகரவரிசை எழுத்தொழுங்கில் அல்லாது சொல் லொழுங்கிலேயே அகரவரிசைப் படுத்தப்பட்டுள்ளமை அவதானிக்கத்தக்கது.

ஆசிரியர், பதிப்பாசிரியர், தொகுப்பாசிரியர், மூல ஆசிரியர் ஆகியோரின் விபரங்களைக் கொண்டு ஒரு நூலைத்தேடும் வாசகர் மூன்றாவது பிரிவின் மூலம் பயனடைவர். இங்கு ஆசிரியர் அகர வரிசையில் நூல்களின் தொடர் எண்களைக் கண்டறிந்து அதன் மூலம் தான் தேடும் நூலைச் சென்றடைய முடியும். ஆசிரியர் அகரவரிசையில் புனைபெயர்களும் இடம்பெறுகின்றன. ஒரு நூலாசிரியர் இயற்பெயரிலும் புனைபெயரிலும் நூல்களை எழுதுவதால் புனைபெயரின் கீழ் நூலைத்தேடும் வாசகர் ஆசிரியரின் இயற்பெயரிலும் அவற்றைத் தேட உதவும் வகையில், பார்க்க, மேலும் பார்க்க போன்ற வழிகாட்டி அம்சங்கள் தேவை கருதிச் சேர்க்கப்பட்டுள்ளன. இரு ஆசிரியர்கள் ஒரே புனைபெயரில் வலம் வருவதையும் இங்கு காணமுடிவதால் புனைபெயரில் நூலைத்தேடும் வாசகர்கள் அவதானமாக இருக்க வேண்டும். வாசகரின் தேடுகை நேரத்தை குறைக்கும் வகையில் புனைபெயரிலும் இயற்பெயரிலும் எழுதும் ஆசிரியரின் பிரபல்யமான ஒரு பெயரின்கீழ் மட்டும் இயன்றவரை அவரது நூல்களின் தொடர்எண்களைக் குறித்துள்ளோம்.

**நூலியல் பதிவுகள்**

பிரதான பகுதியில் நூல் பற்றிய தகவல் மூன்று பகுதிகளாகத் தரப்பட்டுள்ளன. முதற்பகுதியில் நூலின் தலைப்பு, உப தலைப்பு, அந்நூலின் ஆக்கத்துக்கு அதிகாரபூர்வ உரித்துடைய ஆசிரியர், தொகுப்பாசிரியர், பதிப்பாசிரியர் விபரங்கள், வெளியீட்டு விபரம், பதிப்பு விபரம், ஆகியனவும் அடைப்புக்குறிக்குள் குறிப்பிட்ட நூலின் குறித்த பதிப்பிற்கான அச்சகத்தின் விபரமும் தரப்பட்டுள்ளன. கிடைக்கப்பெறுமிடத்து சர்வதேச தராதர நூல் எண்களும் இப்பகுதியில் இடம் பெறுகின்றன. ஆசிரியர் பற்றிய தகவலில் ஆசிரியரின் இயற்பெயர், புனை பெயர் பற்றிய குறிப்புகளும் அறியமுடிந்தால் தரப்பட்டுள்ளன. பதிவுக்குள்ளாகும் நூலின் உரித்தாளர் மூலநூலாசிரியராக இல்லாதவிடத்து, அவரின் பங்களிப்புப் பற்றிய தகவல் அவரது பெயரையடுத்து அடைப்புக்குறிக்குள் குறிப்பிடப்பட்டுள்ளது.

நூலின் வெளியீட்டாளர் பற்றிய தகவல் குறிப்பில் வெளியீட்டாளரின் இயங்குதளம், வெளியீட்டகத்தின் பெயர், முகவரி என்பன குறிப்பிடப்பட்டுள்ளன. ஒரு வெளியீட்டகம் ஒன்றுக்கு மேற்பட்ட நாடுகளில் தனது கிளைகளைப் பரப்பியிருக்கும் வேளை, பதிவுக்குள்ளாகும் நூலில், குறிப்பாக ஒரு இயங்குதளத்தை மட்டும் வெளிப்படுத்தியிருந்தாலன்றி, பதிவுத்தேவை கருதி, நூல் அச்சிடப்பட்ட நாட்டில் உள்ள வெளியீட்டகத்தின் கிளை அமைந்த ஊரே அதன் இயங்குதளமாகப் பதியப்பட்டுள்ளது. ஆசிரியரே வெளியீட்டாளராகவும் இருக்கும்போது, நூலில் காணும் ஆசிரியரின் முகவரி வெளியீட்டக முகவரியாகக் கொள்ளப்பட்டுள்ளது.

நூலின் பதிப்பு விபரத்தில், பதிவுக்குப் பெறப்பட்ட நூலின் பதிப்பு விபரமும், அப்பதிப்பு வெளியிடப்பட்ட திகதியும் குறிப்பிடப்பட்டுள்ளன. குறிப்பிட்ட நூல் முதற்பதிப்பு அல்லாதவிடத்து முன்னைய பதிப்புகள் பற்றிய திகதி விபரங்களும் நூலில் தரப்பட்டவாறாகப் பதியப்பட்டுள்ளன. சில வெளியீட்டாளர்கள், மறுபதிப்பு நூல்களையும் முதற்பதிப்பாகக் குறிப்பிட்டுள்ளமை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. குறிப்பிட்ட வெளியீட்டாளரின் முதற் பதிப்பாகவே அது கொள்ளப்பட வேண்டியுள்ளது. இவ்விபரங்கள் நூலியல் நேர்மை கருதி, பதிப்பு நூலில் குறிப்பிடப்படவேண்டியது அவர்களது கடமையாகும் என்பதை இங்கு வலியுறுத்துதல் அவசியமாகின்றது. பெரும்பான்மையான தமிழக மீள்பதிப்புக்களில் இத்தவறுகள் காணப்படுகின்றன.

நூலின் அச்சக விபரம் அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளது. இந்த விபரம் பதிவுக்குரிய நூலின் குறித்த பதிப்புக்கு மட்டும் உரியதாகும் என்பதும் கவனத்துக்குரியது.

நூலியல் பதிவின் இரண்டாவது பகுதியாக அமைவது நூலின் பௌதீகத் தகவல்களாகும். இதில் நூலின் பக்கங்கள், சிறப்பம்சங்கள், விலை, அளவு, தராதர எண் ஆகியன உள்ளடக்கப்பட்டுள்ளன.

நூலின் பக்கங்கள் மூன்று வகையில் குறிப்பிடப்படுகின்றன. அவை ரோமன் இலக்கமிடப்பட்ட பக்கங்கள், இலக்கமிடப்படாத பக்கங்கள், அரேபிய இலக்கமிடப்பட்ட பக்கங்கள் என்பனவாகும். ரோமன் இலக்கமும், அரேபிய இலக்கமும் இடப்பட்ட பக்கங்களின் எண்ணிக்கை அவ்வவ்விலக்கங்களாலேயே சுட்டப்

பட்டுள்ளன. இலக்கமிடப்படாத பக்கங்கள் அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளன. (உதாரணம்: VII, (12), 243 பக்கம்). பெரும்பான்மையான தமிழ் நூல்களில் முகவுரைப் பக்கங்கள் இலக்கமிடப்படாவிடினும் அவை பின்னர் அரேபிய இலக்கங்களாகத் தொடர்கின்றன. அத்தருணங்களில் அவை அரேபிய இலக்கமிடப்பட்ட பக்கங்களாகவே கருதப்பட்டுள்ளன.

பக்கங்கள் பற்றிய குறிப்பை அடுத்து அமைவது சிறப்பம்சங்களாகும். இங்கு வரைபடங்கள், புகைப்படங்கள், விளக்கப்படங்கள், தகடுகள் பற்றிய குறிப்புகள் காணப்படும். விலை விபரம் காலவரையறைக்குட்பட்டதாக அமைவதாயினும் வரலாற்றுத்தேவை கருதி மட்டுமே நூல்தேட்டத்தில் அவை சேர்க்கப்பட்டுள்ளது. நூலில் குறிப்பிடப்படும் விலை அந்நாட்டு நாணய அலகின் மூலம் குறிப்பிடப் பட்டுள்ளது. இலங்கை ரூபாவுக்கு மாத்திரம் நாடு குறிப்பிடப்படவில்லை. இது ஒரு வர்த்தக நூற்பட்டியல் இல்லையென்பதால் தேவைப்படுமிடத்து நூலின் தற்போதைய விலை பற்றிய தகவலை அதன் விற்பனையாளர்களிடமே வாசகர் உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும்.

நூலின் பௌதீக விபரங்களில் அடுத்ததாக வருவது, நூலின் அளவாகும். இது சதம மீற்றரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்பிரிவில் இறுதியாக அமைவது நூலுக்கான சர்வதேச தராதர நூல் எண் (International Standard Book Number) பற்றிய தகவலாகும். ஈழத்துத் தமிழ் நூல்களில் விரல்விட்டு எண்ணக்கூடிய நூல்களே இவ்விலக்கத்தைத் தாங்கி வெளிவந்திருப் பினும் அதிகரித்து வரும் அதன் முக்கியத்துவம் கருதி இவ்விலக்கம் இப்பிரிவில் இடம்பெறுகின்றது. எழுத்தாளர்கள், வெளியீட்டாளர்களின் பயன்பாடு கருதி ISBN பற்றிய விரிவான கட்டுரையொன்று முதலாவது தொகுதியில் xiv-xviii பக்கங்களில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

நூலியல் தகவலின் மூன்றாவது, இறுதிப்பிரிவு நூல்பற்றிய சுருக்கக் குறிப்பாகும். இது ஒரு திறனாய்வுக் குறிப்பாகவோ, விளம்பரமாகவோ அல்லாது நூலினதும் நூலாசிரியரினதும் சிறு அறிமுகமாக மாத்திரம் அமைவது குறிப்பிடத்தக்கது. அரியநூல்களின் வைப்பிடம் பற்றிய குறிப்பு 3வது தொகுதி யிலிருந்து வழங்கப்படுகின்றது. உதாரணமாக பெறுதற்கரிய சில ஈழத்து நூல்கள் பிரித்தானிய நூலகங்களிலும், மலேயாப் பல்கலைக்கழக இந்திய ஆய்வியல் துறையிலும் காணமுடிந்தது. அவை பற்றிய இருப்பு விபரம் இப்பகுதியில் அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளன.

**பகுப்பாக்கம்**

இந்நூலின் பிரதான பகுதியில் நூல்கள் பாட ஒழுங்கில் தொகுக்கப்பட்டுள்ளன. இதற்கென நாம் தேர்ந்தெடுத்துள்ள பாட ஒழுங்கு வரிசை, டூவியின் தசாம்சப்பகுப்பு முறையாகும். (Dewey Decimal Classification Scheme) தென்னாசியாவிலும் ஐரோப்பாவிலும் நூலகங்களில் பரவலாகப் பயன்படுத்தப்படும் இப்பகுப்பு முறை தமிழ் வாசகர்களுக்குப் பரிச்சயமானதொன்றென்ற வகையில் இப்பகுப் பாக்கத்தைப் பின்பற்றத் தீர்மானித்தோம். இப்பகுப்பாக்கத்தின் சிறப்பியல்புகளில்

ஒன்று பிராந்தியத் தேவைகருதி இப்பகுப்பு முறையில் தேவைப்படும் மாற்றத்தைப் புகுத்தமுடியும் என்பதாகும். ஈழத்துத் தமிழ்நூல்களின் பகுப்புத்தேவை கருதி இப்பகுப்பு முறை சில மாற்றங்களுடன் பயன்படுத்தப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. இப்பகுப்பாக்கம் அறிவுத்தேட்டத்தை முதலில் பத்துப் பெரும்பிரிவுக்குள் அடக்குகின்றது. பின்னர் ஒவ்வொரு பெரும்பிரிவும் பத்து உபபிரிவுகளாகின்றன. அந்த உப பிரிவுகள் மேலும் பத்து உபபிரிவுகளாகின்றன. இத்தகைய ஒரு தசாம்சப்பகுப்பு முறை பற்றிய விரிவான விளக்கத்தை இங்கே தரமுடியாவிடினும் வாசகரின் தேவை கருதி இந்நூலில் பயன்படுத்தும் பகுப்புத் திட்டம் சுருக்கமாக இந்த அறிமுகப் பகுதியையடுத்துத் தரப்பட்டுள்ளது.

**வாழ்க்கை வரலாறு**

பகுப்பாக்க ஒழுங்கில் இறுதிப்பிரிவாக அமைவது வரலாறாகும். இதில் பிரதேச வரலாற்றுடன், வாழ்க்கை வரலாற்று நூல்களும் ஞாபகார்த்த மலர்களும் இடம் பெறுகின்றன. பகுப்பாக்கத்தின் போது பன்முகத்தோற்றம் பெற்ற பெரியார்களின் வரலாற்று நூல்களைத் தரம்பிரிக்கும்போது பிரதான பதிவை ஏதாவது ஒரு பிரிவுக்குள் பதிய வேண்டிய கட்டாயத்தேவை ஏற்பட்டது. ஒருவரது ஆளுமை எத்துறையில் பிரகாசித்தது என்பதை விட குறிப்பிட்ட நூலில் அவரது பன்முகப் பட்ட ஆளுமையின் எப்பகுதி ஆய்வுக்கெடுக்கப்பட்டது என்ற அடிப்படையிலேயே அவரது நூலுக்கான பகுப்புப் பிரிவு தேர்ந்தெடுக்கப்பட்டது. அதனால் இப்பிரிவைப் பார்வையிடும் வாசகர்கள் தயவு செய்து பல்வேறு வாழ்க்கை வரலாற்றுப் பிரிவுகளிலும் கண்ணோட்டம் செலுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**இலங்கை தொடர்பான பன்னாட்டவரின் தமிழ்ப்படைப்புக்கள்**

இரண்டாம் தொகுதியிலிருந்து மேலதிக அம்சமாகச் சேர்க்கப்பட்டிருக்கும் பகுதி இதுவாகும். இன்றைய ஈழத்து இனப்பிரச்சினையின் சர்வதேசமயப்படுத்தல் காரணமாக ஈழத் தமிழரல்லாத பன்நாட்டவர்களிடையே உருவாகிவரும் ஈழத்தமிழர்சிக்கல் பற்றிய தேடலின் விளைவாக, தமிழகத்திலும் மலேசியாவிலும் ஐரோப்பாவிலும் ஈழத்தமிழர் பற்றிய நூல்களின் வரவு அதிகரித்திருப்பதைக் காணமுடிகின்றது. இவற்றில் பல தமிழிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இதன்விளைவாக, நூல்தேட்டத்தில் இவ்வாக்கங்களுக்கான ஆவணமாக்கலும் அவசியம் என்று கருதியதால், தனியானதொரு பிரிவாக அவை இடம்பெறுகின்றன.

**முன்னைய பதிவுகளுக்கான மேலதிக தகவல்கள்**

நூல்தேட்டம், ஈழத்தமிழரின் நூலியல் முயற்சிகளில், இயன்றவரை நிறைவான ஆவணமாக்கலையே மேற்கொள்ள விழைகின்றது. முன்னைய தொகுதியில் இடம்பெற்ற ஒரு நூல் திருத்திய மறுபதிப்பாக வெளியிடப்பட்டால், அதுபற்றிய தகவலையும் இத்தொகுதியில் தந்திருக்கின்றோம். தொகுப்பு முயற்சியில் குழப்பங்களைத் தவிர்க்கும் பொருட்டு இவை கொள்கையளவில் புதிய பதிவாகக் கருதப்பட மாட்டாது. இதனால் அப்பதிவிற்குத் தனியான தொடர் இலக்கத்தை

வழங்காது, அதை பின்னிணைப்பாகச் சேர்த்துள்ளோம். வாசகர்களின் பயன்கருதி குறிப்பிட்ட இந்நூற்பதிவின் மூலப்பதிப்பின் தொடர் இலக்கத்தையும் குறிப்புப் பகுதியில் தந்துள்ளோம். தொகுப்பு முயற்சியின்போது முன்னைய பதிவுகளில் தவறுகள் நேர்ந்தால், அப்பதிவுகளின் திருத்திய வடிவமும் இப்பகுதியிலேயே இடம்பெறுகின்றன. நூல்தேட்டம் தொகுதிகளை இணைத்துப் பெருந்தொகுப்பாக்கி வெளியிடும் நோக்கமும் உள்ளதால், திருத்திய பதிப்பின்போது இப்பகுதியில் இடம்பெறும் பதிவுகள் பிரதான பதிவுகளுக்குள் உள்வாங்கப்படும்.

## நிறைவுக் குறிப்பு

நூல்தேட்டத்தின் முன்னைய தொகுதிகளை எமது சக்திக்கெட்டியவரை சர்வதேச நூற்பட்டியல்களின் சிறப்பம்சங்களைக் கூர்ந்து கவனத்துக்கெடுத்துத் தொகுத் திருந்தோம். இத்தொகுதிகளில் காணப்படும் தவறுகளைச் சுட்டிக்காட்டி, காத்திரமான ஆலோசனைகளைப் பலர் வழங்கியிருந்தனர். அவற்றில் நாம் ஏற்றுக்கொண்ட பல விடயங்களை இத்தொகுதியிலும் சேர்த்திருக்கின்றோம். அடுத்து வரவுள்ள எட்டாவது தொகுதி மேலும் சிறந்ததாக அமைய உங்கள் மேலான ஆதரவை எதிர்பார்க்கின்றோம்.

இத்தொகுதி வர்த்தக நோக்கமற்றதொரு தனிமனித முயற்சியாகும். நிறுவன ரீதியில் மேற்கொள்ளப்படவேண்டிய இத்தகைய உசாத்துணை வெளியீட்டு நடவடிக்கைகள் தனிமனித முயற்சியாக மலரும்போது நிதி, காலம், நிபுணத்துவ உதவி என்பன எப்பொழுதும் வரையறைக்குட்பட்டதாகவே அமைகின்றன. இதை மனதில் கொண்டு, இத்தொகுதியின் பரந்துபட்ட அறிமுகத்திற்கும் விநியோகத்திற்கும், விற்பனைக்கும் உங்களாலான பங்களிப்பை வழங்குவீர்கள் என்று நம்புகின்றோம். இதன் விற்பனை மூலம் பெறப்படும் நிதி எமது அடுத்த தொகுதியின் துரித உருவாக்கத்துக்கு உறுதுணையாக அமையும் என்று எதிர்பார்க் கின்றோம். உலகெங்கும் பரந்துவாழும் ஈழத்தமிழர்கள் தாம் புலம்பெயர்ந்துவாழும் நாடுகளிலுள்ள நூலகங்களையும் நூல்தேட்டத்தின் அனைத்துத் தொகுதிகளும் சென்றடைவதற்குத் தங்களாலான பங்களிப்பினை நல்குவதைத் தார்மீகக் கடமையாகக் கொள்வீர்கள் என்றும் எதிர்பார்க்கின்றோம்.

# நூல்தேட்டத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள வகுப்புப் பிரிவு

## (டுவி தசாம்சப் பகுப்பை அடிப்படையாகக் கொண்டது)

## பிரதான பிரிவுகள்

| | |
|---|---|
| *000-099* | *பொதுப்பிரிவு* |
| *100-199* | *மெய்யியல்துறை* |
| *200-299* | *சமயங்கள்* |
| *300-399* | *சமூக விஞ்ஞானங்கள்* |
| *400-499* | *மொழியியல்* |
| *500-599* | *தூய விஞ்ஞானங்கள்* |
| *600-699* | *பிரயோக விஞ்ஞானம், தொழில்நுட்பம்* |
| *700-799* | *கலைகள், நுண்கலைகள்* |
| *800-899* | *இலக்கியம்* |
| *900-999* | *புவியியல், வரலாறுகள்* |

## விரிவான பிரிவுகள்

### 000 பொதுப்பிரிவு

| | |
|---|---|
| *000* | *பொது அறிவு 12001-12003* |
| *010* | *நூலியல், நூல்விபரப்பட்டியல் 12004-12009* |
| *020* | *நூலகவியல், தகவல் விஞ்ஞானம் 12010* |
| *051* | *பொதுப் பருவஇதழ் சிறப்பிதழ்கள் 12011-12012* |
| *070* | *ஊடகவியல், வெளியீட்டுத்துறை 12013-12014* |

### 100 மெய்யியல்துறை

| | |
|---|---|
| *100* | *மெய்யியல் (தத்துவவியல்) 12015* |
| *150* | *உளவியல் 12016-12017* |
| *155.4* | *குழந்தை உளவியல் 12018-12019* |
| *158.1* | *மானிட மேம்பாடு 12020-12021* |
| *158.3* | *உளவளத்துணை 12022* |

160 தர்க்கவியல் (அளவையியல்) 12023
170 ஒழுக்கவியல் 12024
180 இந்து தத்துவம் (சைவ சித்தாந்தம்) 12025-12032
190 சோதிடம், வானசாஸ்திரம் 12033

**200 சமயங்கள்**
210 பொதுச்சமயம் சார்பானவை 12034
220 கிறிஸ்தவம் 12035
220.1 கிறிஸ்தவ நிறுவனங்கள், மாநாடுகள், மலர்கள் 12036-12038
220.(2) கிறிஸ்தவ கீர்த்தனைகள், பக்திப்பாடல்கள் 12039-12040
294.3 பௌத்தம் 12041-12042
294.5 இந்து சமயம் 12043-12062
294.5(1) இந்து சமய பாடநூல்கள் 12063-12074
294.5(2) இந்து நிறுவனங்கள், ஆலய வரலாறுகள் 12075-12089
294.5(21) இந்து சமய ஆண்டிதழ்கள் 12090-12096
294.5(3) ஆலயங்கள், சமய நிறுவனங்களின் சிறப்பு மலர்கள் 12097-12117
294.5(4) பக்தி இலக்கியங்கள் 12118-12186
297 இஸ்லாம் 12187-12194

**300 சமூக விஞ்ஞானங்கள்**
301 சமூகவியல் 12195-12201
301.01 சமூகவியல்சார்ந்த பாடநூல்கள் 12202-12206
301.05 சமூகவியல் சார்ந்த ஆய்விதழ்கள்/சிறப்பு மலர்கள் 12207-12212
301.1 பண்பாடு 12213-12214
305.4 பெண்கள், பெண்ணியம், பெண்ணிலைவாதம் 12215
305.4(5) பெண்ணியம் சார்ந்த ஆய்விதழ்கள்/சிறப்பிதழ்கள் 12216-12217
306 கலாச்சாரம் 12218
310 புள்ளிவிபரவியல் 12219
320 அரசறிவியல் 12220-12229
323 மனித உரிமை 12230-12235
327 சர்வதேசத் தொடர்புகள் 12236-12242
330 பொருளியல் 12243-12253
331.88 தொழிற் சங்கங்கள் 12254-12256
336 நிதியியல், வங்கியியல் 12257

| | |
|---|---|
| *338.9* | *பொருளாதார அபிவிருத்தி 12258* |
| *340* | *சட்டவியல் 12259* |
| *340.05* | *சட்டவியல் ஆய்விதழ்கள், ஆண்டுமலர்கள் 12260-12265* |
| *342* | *அரசியலமைப்புச் சட்டம் 12266-12268* |
| *344.01* | *தொழில் சட்டங்கள் 12269* |
| *350* | *பொது நிர்வாகம் 12270* |
| *352.44* | *வரி அறவீட்டு நிர்வாகம் 12271-12272* |
| *355* | *போர்க்கலை, போரியல் விஞ்ஞானம், இராணுவ விஞ்ஞானம் 12273* |
| *360* | *சமூக சேவை நிறுவனங்கள் 12274-12277* |
| *362.292* | *மதுப்பாவனையும் குடிகாரர்களும் 12278* |
| *363* | *சுற்றாடல், சூழல் மாசுபடுதல் 12279-12281* |
| *364* | *பொதுப் பாதுகாப்பு நடைமுறைகள் 12282* |
| *368* | *காப்புறுதி 12283* |
| *369.4092* | *சாரணர் இயக்கம் 12284* |
| *370* | *கல்வியியல் 12285-12338* |
| *370.05* | *கல்விநிறுவனங்களின் ஆய்விதழ்கள், ஆண்டு மலர்கள் 12339-12438* |
| *370.1* | *கல்வி நிறுவனங்கள், மாணவர் சங்கங்கள், சிறப்பிதழ்கள் 12439-12505* |
| *370.15* | *கல்வி உளவியல் 12506-12507* |
| *372* | *பாலர் கல்வி 12508-12509* |
| *375* | *பாடத்திட்டங்கள்/பாடவிதானங்கள் 12510-12516* |
| *380.(1)* | *வர்த்தகவியல்/வணிகவியல் பாடநூல்கள் 12517-12522* |
| *388* | *தரைப்போக்குவரத்து 12523* |
| *392.5* | *சடங்கு முறைமைகள், திருமணங்கள், மரணச் சடங்குகள் 12524-12525* |
| *395* | *நாட்டார் வழக்காற்றியல் 12526-12527* |
| *398* | *கிராமிய இலக்கியங்கள், நாட்டுக்கூத்துக்கள் 12528-12532* |
| *398.1* | *பழமொழிகளும் விடுகதைகளும் 12533* |


**400 மொழியியல்**


| | |
|---|---|
| *491.48* | *சிங்கள மொழி 12534* |
| *494.8* | *தமிழ் மொழி 12535-12536* |
| *494.8(1)* | *தமிழ் இலக்கணம் 12537-12541* |
| *494.8(2)* | *தமிழ்ப் பாடநூல்கள் 12542-12577* |

## 500 தூய விஞ்ஞானங்கள்


| | |
|---|---|
| *500.01* | *பொது விஞ்ஞானப் பாடநுல்கள் 12578-12583* |
| *510* | *கணிதம் 12584-12590* |
| *519* | *பிரயோக கணிதம் 12591* |
| *520* | *வானியல் விஞ்ஞானம் 12592* |
| *530* | *பௌதிகம் 12593-12594* |
| *535* | *ஒளியியல் பௌதிகம் 12595* |
| *536* | *வெப்பவியல் பௌதிகம் 12596* |
| *537* | *மின்னியல், இலத்திரனியல் பௌதிகம் 12597-12599* |
| *538* | *காந்தவியல் பௌதிகம் 12600* |
| *540* | *இரசாயனம் 12601* |
| *541.3* | *பௌதிக இரசாயனம் 12602* |
| *550* | *புவியியல் விஞ்ஞானம் 12603* |
| *551.46* | *சமுத்திரவியல் 12604* |
| *551.47* | *சுனாமி 12605* |
| *551.6* | *காலநிலையியல் 12606* |
| *570* | *உயிரியல் 12607-12612* |
| *590* | *விலங்கியல் 12613-12615* |


## 600 தொழில்நுட்பம், பிரயோக விஞ்ஞானம்


| | |
|---|---|
| *601* | *தொழில்நுட்பம் 12616* |
| *612* | *உடற்கூற்றுத் தொழிலியல் 12617* |
| *613* | *பொது உடல்நலவியல் 12618-12619* |
| *613.7* | *யோகக்கலை 12620* |
| *614* | *பொதுச் சுகாதாரம் 12621-12622* |
| *616* | *நோய்கள் 12623-12626* |
| *618* | *பெண்நோயியல், மகப்பேற்று மருத்துவம் 12627* |
| *619* | *கீழைத்தேய மருத்துவம் 12628-12632* |
| *619.1* | *சித்த மருத்துவம் 12633-12637* |
| *620* | *பொறியியல், இயந்திரவியல் 12638* |
| *630* | *விவசாயமும் அது சார்ந்த துறைகளும் 12639-12641* |
| *636* | *விலங்குப் பண்ணைகள் 12642* |
| *642* | *உணவும் பரிமாறலும் 12643* |

| | |
|---|---|
| *650* | *முகாமைத்துவம், அலுவலக நிர்வாகம் 12644-12649* |
| *653* | *தட்டச்சு, சுருக்கெழுத்து 12650* |
| *657* | *கணக்கியல் 12651-12658* |
| *658.15* | *நிதி முகாமைத்துவம் 12659-12679* |
| *658.404* | *கருத்திட்ட முகாமைத்துவம் 12680* |
| *658.8* | *சந்தைப்படுத்தல் முகாமைத்துவம் 12681-12682* |

**700 கலைகள், நுண்கலைகள்**

| | |
|---|---|
| *730* | *சிற்பக்கலை 12683* |
| *750* | *ஓவியக்கலை 12684-12687* |
| *780* | *இசைக்கலை 12688-12696* |
| *791* | *நாட்டியக் கலை 12697-12699* |
| *791.1* | *நாட்டிய நாடகங்கள் 12700* |
| *792* | *அரங்கியல், நாடகக்கலை 12701-12713* |
| *793* | *திரைப்படக்கலை 12714-12715* |
| *796* | *உடற்பயிற்சி, விளையாட்டுகள் 12716-12720* |

**800 இலக்கியம்**

| | |
|---|---|
| *800.(1)* | *இலக்கிய அமைப்புகள் 12721-12722* |
| *801.(1)* | *சிறுவர் பாடல்கள், கவிதைகள் 12723-12726* |
| *801.(4)* | *சிறுவர் சிறுகதைகள் 12727-12728* |
| *801.(6)* | *சிறுவர்க்கான கட்டுரைகள் 12729-12732* |
| *820.9* | *ஆங்கில இலக்கியம் 12733* |
| *891.2* | *சமஸ்கிருத/வடமொழி இலக்கியம் 12734* |
| *894.8* | *தமிழ் இலக்கியம் 12735* |
| *894.8(01)* | *தமிழ் இலக்கியப் பாடநூல்கள் 12736-12750* |
| *894.8(05)* | *இலக்கிய அமைப்புகளின்/சஞ்சிகைகளின் சிறப்பிதழ்கள் 12751-12770* |
| *894.8(1)* | *தமிழ்க் கவிதைகள் 12771-12780* |
| *894.8(11)* | *மொழிபெயர்ப்புக் கவிதைகள் 12781-12782* |
| *894.8(2)* | *தமிழ் நாடகங்கள் 12783-12787* |
| *894.8(21)* | *மொழிபெயர்ப்பு நாடகங்கள் 12788-12790* |
| *894.8(3)* | *தமிழ்க்கவிதை/இசை நாடகங்கள்-காவியங்கள் 12791-12793* |

*894.8(31)* *மொழிபெயர்ப்பு இசை நாடகங்கள்-காவியங்கள் 12794*
*894.8(4)* *தமிழ்ச் சிறுகதைகள் 12795-12815*
*894.8(41)* *மொழிபெயர்ப்புச் சிறுகதைகள் 12816*
*894.8(5)* *தமிழ் நாவல்கள், குறுநாவல்கள் 12817-12829*
*894.8(6)* *பொது இலக்கியக் கட்டுரைகள், திறனாய்வு 12830-12850*
*894.8(62)* *இலக்கிய வரலாறுகள் 12851*
*894.8(621)* *இஸ்லாமியத் தமிழ், அரபுத்தமிழ் இலக்கியம் 12852-12856*
*894.8(63)* *சங்க இலக்கியங்கள் தொடர்பானவை 12857-12859*
*894.8(64)* *சமகால இலக்கிய ஆய்வுகள், கட்டுரைகள் 12860-12865*
*894.8(7)* *பலவினத் தொகுப்பு 12866*

**900 புவியியல், வரலாறுகள்**

*901.(1)* *வரலாற்றுப் பாடநூல்கள் 12867-12869*
*909* *நாகரீகங்கள் 12870-12871*
*910* *பொதுப் புவியியல் 12872-12881*
*910.(1)* *அபிவிருத்திப் புவியியல் 12882*
*911* *பிரயாண நூல்கள், வழிகாட்டிகள் 12883-12885*
*920.01* *துறைசாரா வாழ்க்கைவரலாறுகள் 12886-12896*
*920.1* *ஊடகவியலாளர், ஒலிபரப்புத்துறையினர் 12897-12898*
*922* *சமயத் தலைவர், சிந்தனையாளர் 12899-12909*
*923* *சமூகவியல்துறை சார்ந்தோர் 12910-12911*
*923.2* *அரசியல் துறையினர் 12912-12914*
*923.3(1)* *தொழிற்சங்கவாதிகள் 12915-12916*
*923.5* *பொது நிர்வாகத்துறையினர் 12917*
*923.6* *சமூக சேவகர்கள் 12918-12920*
*923.61* *விடுதலைப் போராளிகள் 12921-12922*
*923.7* *கல்வியியலாளர்கள் 12923-12939*
*923.8* *வர்த்தகர்கள் 12940*
*924* *மொழியியலாளர்கள் 12941-12944*
*927* *கலைஞர்கள் 12945-12946*
*927.8* *இசைக்கலைஞர்கள் 12947*
*928* *இலக்கிய அறிஞர்கள், புலவர்கள் 12948-12959*
*941* *பிரித்தானிய வரலாறு 12960*

*950* ஆசிய வரலாறு *12961*
*954* இந்திய வரலாறு *12962-12963*
*954.93* இலங்கை வரலாறு *12964-12965*
*954.93(1)* இலங்கை வரலாறு-பாடநூல்கள் *12966*
*954.93(2)* இலங்கை இனப்பிரச்சினை வரலாறு *12967-12977*
*954.93(3)* இனங்கள், மக்கள் குழுமங்கள், இன உறவுகள் *12978-12980*
*954.93(4)* பிரதேச வரலாறு *12981-12989*
*954.93(41)* ஊர்ச் சங்கங்களின் சிறப்பு மலர்கள்/ஆண்டு மலர்கள் *12990*
*954.93(5)* தொல்லியலாய்வு *12991-12993*

**999 இலங்கை தொடர்பான பன்னாட்டவரின் தமிழ்ப்படைப்புகள்**

*999* பன்னாட்டவரின் தமிழ்ப்படைப்புகள் *12994-13000*

முன்னைய பதிவுகள் பின்னிணைப்பு *13A01-13A30*

# நூல்தேட்டம் தொகுதி 13
# பிரதான பதிவுகள்

## 000 பொதுப்பிரிவு

### 000 பொது அறிவு

**12001**
**அறிவியல் உண்மைகள்.** வல்வை ந.அனந்தராஜ். யாழ்ப்பாணம்: ஆறுதல் நிறுவனம், 51, வைமன் வீதி, நல்லூர், திருத்திய 3வது பதிப்பு, ஜுன் 2016, 1வது பதிப்பு, நவம்பர் 1992, 2வது பதிப்பு, மார்ச் 2004. (கொழும்பு 13: கௌரி அச்சகம், 207, ஆட்டுப்பட்டித் தெரு).

xiv, 142 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 250., அளவு: 22x15 சமீ., ISBN: 978-955-4772-05-2.

இந்நூலில் விஞ்ஞான தொழில்நுட்பம், சமூக விஞ்ஞானம், சூழல் போன்ற துறைகளில் எமக்கு இயல்பாக எழும் பல வினாக்களுக்கு விடைகள் தரப் பட்டுள்ளன. இயற்கை, சூழலியல், விவசாயம், இலத்திரனியல், மருத்துவம், இரசாயனவியல், தாவரவியல், வானியல், மின்னியல், மனித உடற்கூற்றியல், பௌதிகவியல், விலங்கியல், தந்திரம், மந்திரம் ஆகியவற்றின் அறிவியல்சார் கோட்பாடுகள் எவ்வாறு வாழ்க்கையின் ஒரு அங்கமாகி விட்டிருக்கும் என்பதனை மாணவர்கள் புரிந்துகொண்டு, மனதில் பதிந்து தக்கவைக்கக் கூடியவகையில் கேள்விகளாகவும் அவற்றுக்கான பதில்களாகவும், தேவைப்படும் இடத்தில் விளக்கப்படங்களுடனும் அன்றாட வாழ்வியல் உதாரணங்களுடனும் தெளிவான ஆசிரியர் விளக்கமளித்துள்ளார்.

**12002**
**நம்பமுடியாத உண்மைகள்.** ஏ.இக்பால். பேருவளை: பேசும் பேனா பேரணி, 26/6, பள்ளிவாசல் வீதி, 1வது பதிப்பு, மார்ச் 1992. (பேருவளை: குவிக் சப்ளையர்ஸ், 26/6, பள்ளிவாசல் வீதி).

(10), 50 பக்கம், விலை: ரூபா 30., அளவு: 18x12.5 சமீ.

இந்நூலில் 78 துணுக்குச் செய்திகளாக, வரலாற்றில் நிகழ்ந்த நம்பமுடியாத பல சுவைமிகுந்த தகவல்களைத் தொகுத்து வழங்கியிருக்கிறார். 1974களில் தினகரன் வெள்ளிக்கிழமை "இஸ்லாமுல் ஆலம்" என்ற பகுதியை ஜனாப் எஸ்.எம்.ரி.எம். நிசார் என்னும் இளம் பட்டதாரி தயாரித்தளித்து வந்தார். அதிலே தொடர்ச்சியாக 1977வரை "நம்பினால் நம்புங்கள்", "நடந்தது: நம்பினால் நம்புங்கள்" என்னும் மகுடங்களின்கீழ் கவிஞர் அ.இக்பால் அவர்களால் எழுதப்பட்ட அரபுலக

வரலாற்றுக் குறிப்புகளின் தொகுப்பாக இந்நூல் உருவாகியுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 23173).

### 12003

**விவேகப் பரீட்சைகளும் பொது அறிவும்.** V.A.யோண்பிள்ளை. இளவாலை: V.A.யோண்பிள்ளை, தலைமை ஆசிரியர், இளவாலை கன்னியர் மட ஆசிரியர் கழகம், 1வது பதிப்பு, 1939. (யாழ்ப்பாணம்: புனித ஜோசப் கத்தோலிக்க அச்சகம்).

162 பக்கம், விளக்கப்படங்கள், அட்டவணைகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x13 சமீ.

நூலாசிரியர் தனது 15 ஆண்டுகால ஆசிரிய கலாசாலை ஆசிரியத்துவ அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு, தான் கண்டறிந்த பரீட்சை வழிவகைளைப் பயன்படுத்தி இந்நூலை ஆக்கியுள்ளார். விவேகப் பரீட்சையும் அதன் வரலாறும், விவேகத்தை மட்டிடுதல், கற்பனைப் பரீட்சைகள், ஒப்புநோக்கும் பரீட்சைகள், பதார்த்தப் பரீட்சைகள், வசன அர்த்தப் பரீட்சைகள், வாக்கியம் ஒழுங்குசெய்தல், கணிதவகைப் பரீட்சைகள், உயர்தரக் கணிதவகை, கணித விகடவகை, தருக்கப் பரீட்சை, நியாய விரோதப் பரீட்சை, நியாயப் பிழைகள் காணல், தருக்கத் தெரிவுப் பரீட்சைகள், சாதாரண நியாயித்தல், படப் பரீட்சைகள், பொதறிவுப் பயிற்சி, பொதறிவு வினாக்கள், பொதறிவு வினாக்களின் விடைகள் ஆகிய 19 அத்தியாயங்களில் விவேகப் பரீட்சைகள்/பொது அறிவு பற்றி விளக்கியுள்ளார். விளக்கப்படங்களாக விவேக பரிசோதனை பீடம், எண்ணூடாட்டம், பரப்பளவை வடிவங்கள், எதிர்நோக்குச் சொட்டெண், நட்சத்திர நிலைகள், கணித விகடப்படங்கள், கணிதக் கயிறிழுப்பு, படப் பரீட்சைகள், டெல்ற்றா ஆற்றிடை மேடு, இலங்கையின் வெட்டுமுகம், அமெரிக்காவின் ஆகாய விமான பாதை, மழைமுகம்/மழை நிழல் ஆகியன இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 2250).

## 010 நூலியல், நூல்விபரப்பட்டியல்

### 12004

**இலங்கைத் தேசிய நூற்பட்டியல் (கடந்த காலம்) 1941-1961.** சீ.எம்.சபீக், க.சிந்துஜா (தொகுப்பாசிரியர்கள்). கொழும்பு 7: தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை, தேசிய நூலக ஆவணவாக்கல் மத்திய நிலையம், இல. 14, சுதந்திர வழி, 1வது பதிப்பு, 2017. (கொழும்பு 7: தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை, இல. 14, சுதந்திர வழி).

(8), 145 பக்கம், விலை: ரூபா 325., அளவு: 28x20.5 சமீ., ISSN: 2550-2700.

இந்நூல் விபரப்பட்டியல் 1941-1961 காலகட்டத்திற்குரிய இலங்கைத் தமிழ்நூல் களின் விபரங்களை உள்ளடக்குகின்றது. பக்கங்கள் 1-80 வரை பாடவாரியாக ஒழுங்கமைக்கப்பெற்ற நூற்பட்டியலும், பக்கங்கள் 81-145 வரை அகரவரிசையில் அமைந்த ஆசிரியர்/தலைப்பு அட்டவணையும் இடம்பெற்றுள்ளன.

## 12005

**ஈழத்தின் தமிழ்க் கவிதையியல்: ஒரு நூல்விபரப் பட்டியல்.** என்.செல்வராஜா (தொகுப்பாசிரியர்). பிரித்தானியா: ஐரோப்பிய தமிழ் ஆவணக்காப்பகமும் ஆய்வகமும், 14, Walsingham Close, Luton LU2 7AP, இணைவெளியீடு, அயோத்தி நூலக சேவைகள்- ஐக்கிய இராச்சியம், குமரன் புத்தக இல்லம், கொழும்பு 6, 1வது பதிப்பு, மார்ச் 2018. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

xl, 999 பக்கம், விலை: ரூபா 3850., அளவு: 21x15 சமீ., ISBN: 978-955-659-586-4.

இந்நூல் ஈழத்தின் தமிழ்க் கவிதையியல் தொடர்பான விரிவானதொரு நூல் விபரப்பட்டியலாக அமைகின்றது. ஈழத்துத் தமிழ்க் கவிதைப்புலம் பற்றிய ஆய்வுகளை மேற்கொண்டுவரும் ஆய்வாளர்களின் பார்வைக்கு போதிய நூல்கள் சென்றடைவதில்லை என்பது யதார்த்த நிலையாகும். கைக்கெட்டிய தூரத்தில் இருப்பதைக்கொண்டு தமது ஆய்வுகளை மேற்கொள்ளவேண்டிய நிலையிலேயே எமது ஆய்வாளர்களும் இருக்கிறார்கள். இந்நூல் இந்நிலைமையைக் கருத்திற் கொள்கின்றது. அவர்களுக்கு ஈழத்துத் தமிழ்க் கவிதைப்புலத்தின் விரிவானதொரு பிரதேசத்திற்கு முடிந்தவரையில் ஒளியைப் பாய்ச்சி நிற்கின்றது. ஈழத்துத் தமிழ்க் கவிதை உலகில் வெளிவந்த கவிதைத் தொகுதிகளை இந்நூல் முடிந்தவரையில் ஆண்டுவாரியாக ஒழுங்குபடுத்தித் தருகின்றது. நூலியல் விதிமுறைகளைக் கடைப்பிடிப்பதில் எம்மவர்கள் காட்டும் அக்கறையின்மை காரணமாக பல நூல்கள் வெளியிட்ட ஆண்டுவிபரமில்லாமல் பிரசுரமாகியுள்ளன. அவை இறுதி யாக இப்பட்டியலில் பதிவுக்குள்ளாகியுள்ளன. இந்நூலில் காணப்படும் நூல்கள் அனைத்தும் நூல்தேட்டத்தின் பன்னிரு தொகுதிகளிலும் வெளிவந்த பதிவுகளை அடிப்படையாகக் கொண்டு தொகுக்கப்பட்டுள்ளன. நூல்தேட்டத்தின் பன்னிரு தொகுதிகளிலும் உள்ள நூல்கள் எவையும் ஆண்டுவாரியாகப் பதிவுசெய்யப்பட வில்லை. அனைத்தும் தேடலில் கிடைத்த ஒழுங்கிலேயே பதிவுசெய்யப்பட்டு வந்துள்ளன. இந்நூலில் அக்குறையை நிவர்த்திசெய்ய நூலாசிரியர் முனைந்துள்ளார்.

## 12006

**ஒரு நூலின் மகத்துவம்:தரமான நூலொன்றை ஒழுங்கமைப்பதற்கான வழிமுறைகள்.** புஷ்பகுமார விதானகே (சிங்கள மூலம்), லறீனா அப்துல் ஹக் (தமிழாக்கம்). கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, 2017. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

xvi, 61 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 350., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-659-569-7.

அழகும் நேர்த்தியும் கொண்ட தரமான நூலொன்றை உருவாக்குவதற்கான வழிமுறைகளை இந்நூல் வழங்குகின்றது. நூலின் முதற் பக்கங்கள், நூலின் உள்ளடக்கம், நூலின் பின்பக்கங்கள், நூலின் கட்டமைப்பு ஆகிய நான்கு அத்தியாயங்கள் கொண்ட இந்நூலின் முதலாவது அத்தியாயம், நூலொன்றின் முன்பக்கங்களில் இடம்பெறவேண்டிய அம்சங்கள் தொடர்பாகவும், இரண்டாவது

அத்தியாயம், நூலின் உள்ளடக்கத்தின் தரத்தினை நிர்ணயிப்பதில் கவனத்திற் கொள்ளவேண்டிய அம்சங்கள் குறித்தும் வாசகருக்குத் தேவையான வழிகாட்டலை பெற்றுத்தருகின்றது. மொழிநடை, சொற்றொகுதி, உறுதிப்பாடு எனும் அம்சங்கள் குறித்து அதிகக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. மூன்றாவது அத்தியாயத்தில் உள்ளடக்கத்தோடு பொருந்தும் வகையில் இணைக்கப்பட வேண்டிய பின் பக்கங்கள் யாவை என்பது பற்றித் தெளிவாக விபரிக்கப்பட்டுள்ளது. நான்காவது அத்தியாயத்தில் பௌதீக ரீதியில் ஒருநூல் சக்திவாய்ந்ததாக, நீண்டகால இடையறாத பாவனைக்கு ஏற்ற வகையில் எவ்வாறு அமைதல் வேண்டும் என்பது பற்றியும் சர்வதேசத் தரநிர்ணய நியமங்களுக்கு அமைவாக அதனை எவ்வாறு அச்சிடுவது என்பது குறித்தும் உரிய உதாரணங்களுடன் விளக்கப்பட்டுள்ளது. இலங்கை கல்வி நிர்வாக சேவையினைச் சேர்ந்த புஷ்பகுமார விதானகே, கல்வி அமைச்சின் பாடசாலை நூலக அபிவிருத்திப் பிரிவில் உதவிப் பணிப்பாளராகப் பணியாற்றி வருகின்றார். கொழும்பு இசிப்பத்தான கல்லூரியின் முன்னாள் அதிபரான இவர் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் தனது கல்வியியல் முதுமாணிப் பட்டத்தினையும் நூலகவியல் பட்டப்பின் டிப்ளோமா பட்டத்தையும் பெற்றவர். கொழும்புப் பல்கலைக்கழகத்தில் வருகைதரு விரிவுரையாளராக பணி யாற்றுகின்றார்.

## 12007

**தமிழ்நூல் வெளியீட்டு விநியோக அமையம்: புத்தகக் கையேடு -1.** தமிழ்நூல் வெளியீட்டு விநியோக அமையம். கொழும்பு 11: தமிழ்நூல் வெளியீட்டு விநியோக அமையம், இல.4, 3வது தளம், C.C.S.M. கொம்பிளெக்ஸ், 1வது பதிப்பு, ஜுன் 1995. (சென்னை 14: வே.கருணாநிதி, பார்க்கர் கம்பியூட்டர்ஸ்).

76 பக்கம், புகைப்படங்கள், விலை: இந்திய ரூபா 3.00, அளவு: 20.5x13 சமீ.

கொழும்பு தமிழ்நூல் வெளியீட்டு விநியோக அமையமும், யாழ்ப்பாணம், வசந்தம் புத்தக இல்லமும், தமிழ்நாடு- சவுத் ஏசியன் புக்ஸ் நிறுவனமும் இணைந்து வெளியிட்ட குறிப்புரையுடனான வர்த்தக நூற்பட்டியல் இதுவாகும். தாம் விநியோகிக்கும் நூல்கள் பற்றிய குறிப்புரையுடன் கூடிய நூற்பட்டியலாக நூலின் அட்டைப்படத்தையும் இணைத்து இந்நூலை வெளியிட்டிருந்தார்கள். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 17607).

## 12008

**நாவலரியல்: ஆறுமுக நாவலரினதும் ஆறுமுக நாவலர் பற்றியதுமான வெளியீடுகள்: தேர்ந்தெடுக்கப்பட்ட நூல்விபரப் பட்டியல்.**இ.கிருஷ்ணகுமார், ஆ.சிவநேசச்செல்வன் (தொகுப்பாசிரியர்கள்). கொழும்பு: ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபை, 1வது பதிப்பு, 1979. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).

(4), 32 பக்கம், புகைப்படம், தகடு, விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x17.5 சமீ.

நாவலரியல் நூற்கண்காட்சிக் குழுத் தலைவர் ச.அம்பிகைபாகன் அவர்களின் முகவுரையுடன் கூடிய இந்நூல்விபரப்பட்டியல், ஆறுமுக நாவலரின் நூல்கள், ஆறுமுக நாவலர் பற்றிய நூல்களும் நூல்களின் உட்குறிப்புக்களும் ஆகிய இரு பிரிவுகளின்கீழ் தொகுக்கப்பட்டுள்ளன. இந்நூல் விபரப்பட்டியலில் உபயோகப் படுத்தப்பட்ட குறுக்கங்கள் நூலின் ஆரம்பத்தில் தரப்பட்டுள்ளன. (இந்நூல் நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 003932).

### 12009

**பேராசிரியர் சோ.சந்திரசேகரனின் ஆக்கங்கள்: நூல்விபரப் பட்டியல்.** எம்.ஐ. நிஸாமுதீன், நீலாம்பிகை நாகலிங்கம் (தொகுப்பாசிரியர்கள்), எம்.பீ.எம்.பைரூஸ் (பதிப்பாசிரியர்). கொழும்பு: வெளியீட்டு விபரம், பதிப்பு ஆண்டு தரப்படவில்லை. (கொழும்பு 12: குமரன் பதிப்பகம், 361, ½, டாம் வீதி).

93 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

பேராசிரியர் சோ.சந்திரசேகரனின் கல்விசார் எழுத்துலகப் பங்களிப்பு இந்நூற் பட்டியலில் விரிகின்றது. அவரது கல்வி வாழ்க்கை பற்றிய கலாநிதி மா. கருணாநிதியின் அறிமுகக் கட்டுரையைத் தொடர்ந்து பேராசிரியரின் நூல்கள், பருவ வெளியீடுகளிலும் ஆண்டு மலர்களிலும் தினசரிப் பத்திரிகைகளிலும் தினசரி ஆங்கிலப் பத்திரிகைகளான Daily News, The Island, Work Shop (NIE) ஆகியவற்றில் வெளியிடப்பட்ட அவரது ஆக்கங்கள் பற்றிய வழிகாட்டி விபரம் ஆகியன தொகுக்கப்பட்டுள்ளன. ஈற்றில் பதிவுகளுக்கான தலையங்க அகரவரிசைப் பட்டியலும் இடம்பெற்றுள்ளது. எம்.ஐ.நிஸாமுதீன், ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் பிரதான நூலகத்தின் தகவல் அதிகாரியாகவும், நீலாம்பிகை நாகலிங்கம், வவுனியா கல்வியியற் கல்லூரியின் நூலகராகவும் பணியாற்றுகின்றனர். காலஞ்சென்ற எம்.பீ.எம்.பைரூஸ், தொகைமதிப்புப் புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் பிரதம நூலகராகப் பணியாற்றியவராவார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 44357).

**மேலும் பார்க்க: 13A22, 12952**

## 020 நூலகவியல், தகவல் விஞ்ஞானம்

### 12010

**நூலகம்.** சத்தியன் தவராஜா. திருச்சிராப்பள்ளி 620017: நூலகம் பேசுகிறது, எண் 9, 16-ஆவது வீதி, குமரன் நகர், 1வது பதிப்பு, 2017. (உறையூர்: காமாட்சி அச்சகம்).

(11), 56 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 20x14 சமீ., ISBN: 978-81-932961-6-5.

சத்தியன் தவராஜா யாழ்ப்பாண மாவட்டத்தில் வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். ஈழநாடு பத்திரிகையில் அலுவலக நிருபராக கடமையாற்றிய பின்னர் அப்பத்திரிகையின் உதவி ஆசிரியராகவும் பணியாற்றியவர். இதழியல் கற்கை நெறியைக் கற்று ஈழநாதம் நாளிதழின் உதவி ஆசிரியராகக் கடமையாற்றினார். 2001இல் வெளியிடப்பட்ட செய்தித்துறை ஒரு பார்வை என்ற

*நூலை எழுதியவர். முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு பிரதேச சபை நூலகத்தில் பணியாற்றுகின்றார். நூலகம் பற்றிய இந்நூலில், அறிமுகம்-வரலாறு, நூலக வகைகள், நூலக தகவல் ஆதாரங்கள், நூலக சேவைகள், நூலகப் பகுப்பியல், நூலகப் பட்டியலாக்கம், நூல்கள் பாதுகாத்தல் மற்றும் பராமரித்தல் ஆகிய ஏழு இயல்கள் அடங்கியுள்ளன.*

## 051 பொதுப் பருவஇதழ் சிறப்பிதழ்கள்

### 12011

**ஞானம்: எழுத்துலகில் அ.முத்துலிங்கம் 60.** *தி.ஞானசேகரன் (பதிப்பாசிரியர்). கொழும்பு 6: ஞானம் பதிப்பகம், 3*B*, 46வது ஒழுங்கை, 1வது பதிப்பு, ஏப்ரல் 2018. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48*B*, புளுமெண்டால் வீதி).*

*104 பக்கம், புகைப்படங்கள், சித்திரங்கள், விலை: ரூபா 200., அளவு: 25.5*x*18 சமீ.,* ISSN: *2478-0340.*

*ஞானம் சஞ்சிகையின் 215ஆவது இதழ் (ஒளி 18, சுடர் 11. ஏப்ரல் 2018) எழுத்தாளர் அ.முத்துலிங்கம் அவர்களின் எழுத்துலகின் அறுபதாண்டு நிறைவைக் குறிக்கும் முகமாக சிறப்பிதழாக வெளிவந்துள்ளது. எக்ஸ் தந்த நேர்காணல் (அ.முத்துலிங்கம்), அ.முத்துலிங்கத்தின் எழுத்துலகப் பிரவேசம் (எஸ்.ஜெபநேசன்), எல்லைகளற்று விரியும் இலக்கியத்தின் தனித்தமிழ்ப் பிரதிநிதி அ.முத்துலிங்கம் (தெளிவத்தை ஜோசப்), உலா ஊர்தி- அ.முத்துலிங்கம் கட்டுரைகளை வாசித்த அனுபவம் (ப.சரவணன்), ஆண்டுவட்டத்தைக் கடந்ததொரு இலக்கியப் பயணம்: அ. முத்துலிங்கத்தின் இலக்கியப் பயணம் பற்றியதொரு பதிவு (என்.செல்வராஜா), ஊர்வலம் (அ.முத்துலிங்கம் 1958இல் எழுதிய முதற் கதை), ஈழத்துச் சிறுகதை வரலாற்றில் அ.முத்துலிங்கத்தின் சிறுகதைகளும் எழுத்தாளர் அ.முத்துலிங்கமும் (செ.யோகராசா), அ.முத்துலிங்கத்தின் உண்மை கலந்த நாட்குறிப்புகள்-ஒரு பார்வை (சு.குணேஸ்வரன்), எழுத்தாளர் அ.முத்துலிங்கத்தின் சிறுகதைகள்: நயக்கவும் வியக்கவுமாய் நகர்த்திடும் லாவகம் (அன்னலட்சுமி இராசதுரை), ஈடிணையில்லாக் கதைசொல்லி (சோ.பத்மநாதன்), அ.முத்துலிங்கத்தின் இலக்கியப் பங்களிப்புகள் பற்றிய குறிப்புகள் சில (வ.ந.கிரிதரன்), உங்களுடன் வந்தவர் (அ.முத்துலிங்கம்), உவமானம் + உவமேயம் = அ.முத்துலிங்கம் + 60 (வி. ஜீவகுமாரன்), தமிழ் இலக்கிய உலகின் கதைசொல்லி அ.முத்துலிங்கம் (லெ. முருகபூபதி), அ.முத்துலிங்கம் கதைகளில் தொன்மம்: சில குறிப்புகள் (சின்னராசா குருபரநாத்), அ.முத்துலிங்கம் சுயவிபரக் குறிப்பு ஆகிய கட்டுரைகளுடன், ஞானத்தின் வழமையான பத்திகளும், கதை கவிதை ஆக்கங்களும் இச்சிறப்பிதழில் இடம்பெற்றுள்ளன.*

### 12012

**தமிழர் தகவல்: 27ஆவது ஆண்டு மலர்: இளந்தளிர் சுவடு.** எஸ்.திருச்செல்வம் *(பிரதம ஆசிரியர்),* Canada: Tamil's Information, Ahilan Associates, P.O.Box 3, Station F, Toronto, Ontario M4Y 2L4, *1வது பதிப்பு, பெப்ரவரி 2018. (*Canada: Ahilan Associates, Printers and Publishers, P.O.Box 3, Station F, Toronto, Ontario M4Y 2L4*).*

*164 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28*x*21.5 சமீ.,* ISSN:*1206-0585.*

*பெப்ரவரி 1991 முதல் கனடாவிலிருந்து வெளிவரும் தமிழர் தகவல் மாத சஞ்சிகையின் 27ஆவது ஆண்டு நிறைவு மலர். அமெரிக்க, கனடியத் தமிழ் மக்களினதும், ஐரோப்பியத் தமிழர்களினதும் 100க்கும் மேற்பட்ட அறிவியல் ஆக்கங்களைத் தாங்கி இது வெளிவந்துள்ளது. தமிழர் தகவல் ஆண்டுதோறும் வழங்கும் விருதுகளைப் பெறுவோர் பற்றிய விபரங்களும் இம்மலரில் முக்கிய இடத்தினைப் பெற்றுள்ளன. பெப்ரவரி 2018இல் கனடாவின் ரொரன்ரோ நகரசபையின் அங்கத்தவர் சபா மண்டபத்தில் இடம்பெற்ற ஆண்டு விழாவின்போது இம்மலர் வெளியிடப்பட்டது.*

## 053 வழிகாட்டிகள்

**மேலும் பார்க்க: 13A27**

## 070 ஊடகவியல், வெளியீட்டுத்துறை

### 12013

**இந்து சாதனம் 75ஆவது ஆண்டு நினைவு மலர்(இந்து சாதன எழுபானைந்தாண்டு மலர்).** *மு.மயில்வாகனம், மு.வைத்தியலிங்கம், சிவ உ.சோமசேகரம், க. கணபதிப்பிள்ளை, சி.சீவரத்தினம், க.கி.நடராசன் (தொகுப்பாசிரியர்கள்). யாழ்ப்பாணம்: சைவ பரிபாலன சபை, 1வது பதிப்பு, சித்திரை 1967. (யாழ்ப்பாணம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை).*

*(8), 72+18 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24*x*18 சமீ.*

*"இந்து சாதனம்" பத்திரிகை 1889ம் ஆண்டு செப்டம்பர் 11 இலிருந்து யாழ்ப்பாணத்துச் சைவ பரிபாலன சபையினரால், அவர்களது சைவப்பிரகாச அச்சியந்திரசாலையில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டு வந்தது. இது ஆரம்பத்தில் உட்புறத்தில் தமிழும் வெளிப்புறத்தில் ஆங்கிலமும் (*Hindu Organ*) கொண்ட இருமொழிப் பத்திரிகையாக மாதம் இருமுறை புதன்கிழமைகளில் வெளிவந்தது. ஜூலை 5, 1899 ஆம் ஆண்டிலிருந்து ஆங்கிலப் பத்திரிகை வாரம் ஒரு முறையும், ஜூலை 11, 1906 இலிருந்து தமிழ்ப் பத்திரிகை தனியாக மாதம் இரு முறையும் வெளிவர ஆரம்பித்தன. அதன் பின்னர் ஜூலை 10, 1913 இல் இருந்து ஆங்கிலப் பத்திரிகை மாதமிரு முறையும் தமிழில் வாரம் ஒரு முறையும் வெளிவந்தன. இன்றும் இப்பத்திரிகை வெளிவருகின்றது. ஆரம்பத்தில் ஆங்கிலப் பத்திரிகைக்கு முன்னாள் திருவனந்தபுரம் பிரதம நீதியரசரும் பிரபல கணிதவியலாளரும், ஆங்கிலம், வடமொழி மற்றும் தமிழ் ஆகியவற்றில் புலமை பெற்றவருமான*

தா.செல்லப்பாபிள்ளை அவர்கள் ஆசிரியராகவிருந்தார். இவர் 1891 இல் சுகவீனம் காரணமாக விலகவே வழக்கறிஞர் ஏ.கதிரவேலு மற்றும் அ.சபாபதி ஆகியோர் ஆங்கிலப் பதிப்புக்கு இணை-ஆசிரியர்களாயினர். ஜூலை 1892 முதல் அ.சபாபதி ஆசிரியரானார். அ.கதிரவேலு தொடர்ந்து பல கட்டுரைகளை எழுதி வந்தார். இவர்களைத் தொடர்ந்து ச.சிவகுருநாதர், தெ.அ.துரையப்பாபிள்ளை, எம்.எஸ்.இராஜரத்தினம், எம்.எஸ்.இளையதம்பி, வி.நாகலிங்கம், ஏ.வி.குலசிங்கம், த.முத்துசாமிப்பிள்ளை என்போர் ஆங்கிலப் பத்திரிகாசிரியர்களாக விளங்கி யுள்ளனர். தமிழ்ப் பத்திரிகைக்கு நவம்பர் 25, 1896 வரையில் ஆசிரியராகவும் பொறுப்பாளராகவும் விளங்கியவர் ஆறுமுகநாவலரின் பெறாமகன் நல்லூர் த.கைலாசபிள்ளை அவர்களாவார். அவரை அடுத்து தமிழ்ப் பத்திரிகாசிரியர்களாகப் பெ. கார்த்திகேசபிள்ளை, எஸ்.கந்தையாபிள்ளை, கு.சிற்சபேசன், மு.மயில்வாகனம் என்போர் விளங்கியுள்ளனர். அ.சபாபதி, நம.சிவப்பிரகாசம் ஆகியோர் இரு பத்திரிகைகளுக்கும் ஆசிரியர்களாக இருந்திருக்கின்றனர். இவ்விரு பத்திரிகைகளும் சைவ சமயம் சம்பந்தமான கட்டுரைகளையும் செய்திகளையும் கருத்துகளையும் தாங்கி வந்தன. சமய சம்பந்தமான நிகழ்ச்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்துப் பிரசாரஞ் செய்தன. திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் முதலிய தேவாரம் பெற்ற திருத்தலங்களின் புனருத்தாரணத் திருப்பணிகளுக்கு இவை அளித்து வந்த ஊக்கம் குறிப்பிடத்தக்கது. இப்பத்திரிகை தனது 75ஆவது ஆண்டு நிறைவினை எய்தியபோது சித்திரை 1967இல் சிறப்பிதழாக வெளியிடப்பட்டது. இவ்விதழில் என்றும் இளையாய் என வாழ்த்துவம், ஞானதீபம், பாடப் புத்தகங்கள், சைவ பரிபாலன சபையின் தோற்றமும் பணிகளும், ஆசிச் செய்தி, இந்து சாதனமே, அத்வைத விளக்கம், மகிழ்வும் வாழ்வும், சமய தீட்சையின் தாற்பரியம், நிலாவரை என்னும் புத்தூர் இடிகுண்டு, ஐந்தொழில் உண்மை, புளியந்தீவு நாகேசுரர் பதிகம், ஆணை நமதே, கயிலைமலையனைய செந்தில், தென்னாடுடைய சிவன், சைவசித்தாந்தம், யாழ்ப்பாணக் குடாநாட்டின் நீர்வளம், ஒத்துணர்வு, நாவலர் செயல்வன்மை, சிந்தியாத நாம், ஆரியத் தமிழந்தாதி, யாழ்ப்பாணப் பேச்சுத் தமிழில் தொழிற்பெயர் வழக்கு, புலவர் பெருமை, தமிழ்த்தாய் வாழ்த்து ஆகிய தமிழ் ஆக்கங்களும் சில ஆங்கில ஆக்கங்களும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 39870).

### 12014

**ஈழநாதம்: 1வது ஆண்டு மலர்.** பொ.ஜெயராஜ் (ஆசிரியர்), செ.இளங்கோ (நிர்வாக ஆசிரியர்). யாழ்ப்பாணம்: ஈழநாதம் அலுவலகம், 1வது பதிப்பு, பெப்ரவரி 1991. (அச்சக விபரம் தரப்படவில்லை).

(2), 50 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x16 சமீ.

19.2.1990 அன்று தனது முதலாவது இதழை யாழ்ப்பாணத்தில் வெளியிட்டுவைத்த "ஈழநாதம்" பத்திரிகை 19.2.1991அன்று தனது முதலாம் ஆண்டு நிறைவினைக் கொண்டாடிய வேளையில் வெளியிடப்பெற்ற சிறப்பிதழ் இது. யாழ்.பல்கலைக் கழகத் துணைவேந்தர், பேராசிரியர் அ.துரைராசா அவர்களின் வாழ்த்துச்

செய்தியுடன் தொடங்கும் இவ்விதழின் ஆக்கங்கள் இதயமென (கோ.மகேந்திரராசா), அனுபவம் வாய்ந்த ஆசான் (எஸ்.எம்.கோபாலரத்தினம்), பெருமகிழ்வுடன் (பொ.ஜெயராஜ்), ஆயிரம் வருடம் வாழ்வாய் (புதுவை இரத்தினதுரை கவிதை), எமது ஒரு வருடம் (செ.இளங்கோ, நிர்வாகி, ஈழநாதம்), எமது இலக்கு (ஆசிரியர்), ஈழநாதம் ஓர் ஆண்டு இதழ்கள்: ஒரு விமர்சனக் கண்ணோட்டம் (மு. பொன்னம்பலம்), எழுதுகோல் ஆட்சியின் எழுச்சியும் வீழ்ச்சியும் (ஏ.ஜே. கனகரட்னா), ஈழநாதம் வெளியிட்ட செய்தி விபரணக் கட்டுரைகள் ஒரு பார்வை: (பொ.பாலசுந்தரம்பிள்ளை), ஊடுருவி நெருடும் சித்திரங்கள் (எஸ்.சிவஞானசுந்தரம்), பிரித்தானியரின் பிரித்தாளும் தந்திரமும் தமிழ் மக்கள் பலியாகிய விதமும் (மு.திருநாவுக்கரசு) ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்டுச் சேர்க்கப்பட்டுள்ளன. (இந்நூல் நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 018460).

**மேலும் பார்க்க: 12287, 12897, 12971**

# 100 மெய்யியல்துறை

## 100 மெய்யியல் (தத்துவவியல்)

### 12015

**பிரபஞ்சமும் வாழ்வியலும்**. வெல்லவூர்க் கோபால் (இயற்பெயர்: சீனித்தம்பி கோபாலசிங்கம்). மட்டக்களப்பு: மனுவேதா வெளியீடு, 143/23, எல்லை வீதி, 1வது பதிப்பு, 2017. (கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, U.G.50, People's Park).

xxii, 90 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 350., அளவு: 21x14.5 சமீ., ISBN: 978-955-42694-3-9.

பிரபஞ்சம் பற்றிய முன்மொழிவு, பிரபஞ்ச தத்துவம், கடவுள் கொள்கையும் கோட்பாடும், மனிதனும் மனமும், இயற்கையும் மனித சமூகமும், நாம் யார், மதமும் மனிதனும் மாற்றங்களும், சிந்தனையும் செயல்பாடும், நம்பிக்கையும் அவநம்பிக்கையும், அறிவும் சிந்தனையும், மனதும் புத்தியும், போகவாழ்வும் காமநெறிமுறைகளும், வெற்றியும் தோல்வியும், ஆவி பற்றிய சிந்தனைகள், முழுமையை நோக்கி நாம் ஆகிய 15 அத்தியாயங்களில் பிரபஞ்சமும் வாழ்வியலும் பற்றிய ஆசிரியரின் ஆன்மீகக் கருத்துக்கள் இடம்பெற்றுள்ளன. இந்நூல் 12ஆவது மனுவேதா வெளியீடாக வெளிவந்துள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 261516CC).

## 150 உளவியல்

### 12016

**அக நூல்.** சு.சிவபாதசுந்தரம். யாழ்ப்பாணம்: சு.சிவபாதசுந்தரம், கந்தவனம், புலோலி, 1வது பதிப்பு, ஐப்பசி 1935. (சென்னை: புரோகிரசிவ் அச்சுக்கூடம்).

(7), 232 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 19x12.5 சமீ.

இந்நூல் மனிதர் இயல்பைக் கூறுவதால் யாவருக்கும் பயன்படக்கூடியதாக உள்ளது. குறிப்பாக சிறுவர்களைப் பயிற்றுவிக்கும் ஆசிரியர்களுக்கும் சிறுவர்களின் பெற்றோருக்கும் ஏற்றவகையில் விளக்கப்பட்டுள்ளது. பிரவேசம் (அகநூலின் அகலம், பயன், ஆதார விதி, ஆக்கமுறை), தேவைகள் (தேவைகளின் வகை, தேவைகளின் கலப்பு, தேவைகளின் விரிவு, தேவைகளின் ஒடுக்கம் -பற்றுக்கள்), ஊக்கங்கள் (தேவையும் ஊக்கமும், கல்வியூக்கம், காப்பூக்கம், பின்பற்றூக்கம்), பற்றுக்கள் (பற்றுக்களின் ஆக்கம், பொருட்பற்று, கல்விப் பற்று, கலப்புப் பற்று, தற்பற்று, அறப்பற்று, பற்றுக்களின் முரண்), தொழிலின் வகை (பிரதித் தொழில், ஊக்கத் தொழில், கலப்புத் தொழில், தொடர்பூக்கத் தொழில், எண்ணத் தொழில், பழக்கத் தொழில்), தொழிலின் படிமுறை (அறிதல், விரும்பல், துணிதல், முயலல், முயலலின் ஒருமை, முயலலின் அளவு, ஊக்க ஒற்றுமையால் வரும் அகமுயற்சி, ஊக்கமுரணால் வரும் அகமுயற்சி, அகமுயற்சியின் ஏற்றம்), தொழிற்றுணிபு (ஊக்கமுரண், ஆராய்வுத் துணிபு, ஊக்க அடக்கம், பழக்க அடக்கம், பொய்யடக்கம், தூய்மை செய்தல், அமைதல்), மறைதொழில் (மறைதொழிலின் இலக்கணம், கனவு, பகற்கனவு, எண்ணாதெழுதுதல், அஞ்சனம் பார்த்தல், வசியம், முழு வசியம்), தாக்கம் (வேதனை, வேதனை விதிகள், இன்பவாதம், மிச்சிர வேதனை, சுவையின் நோக்கம், சுவையின் இலக்கணம், சுவையின் வகை, கோபமும் அச்சமும், அன்பு, கலப்புச் சுவை, சுவையின் பயன்), காண்டல் (அறிதலின் வகை, அகக்காட்சி, பொறிக்காட்சி, தற்காட்சி, மானதக் காட்சி, மனக்கோள், காட்சிப் போலி), தொடர்பறிதல் (தொடர்பு, தொடர்புவகை, தொடர்புப் பன்மை), தொடர்புப் பொருளறிதல் (தொடர்புப் பொருள், பிறபொருட்றொடர்பு, அளவு மாற்றம், பிரமாணப் பிரயோகம், கல்விப் பிரயோகம், ஆக்கப் பிரயோகம்), கற்பனை (கற்பனையின் வகைகள், கனா வகை, கணிப்பு வகை, நுட்பவகை), அறிவு நிகழ்ச்சி (மனவாற்றலின் அளவு, ஊசல், அவதானம், நிலைத்தல், நினைப்பு, இளைப்பு, நினைப்பின் ஆட்சி, மறப்பு), தன்மை (தன்மையின் கூறுகள், மனப்பான்மை, மனக்கோலம், மெய்க்கூறு, மனத்திண்மை, அறிவு) ஆகிய பதினைந்து அத்தியாயங்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. திருவருட்பயன் விளக்கவுரை முதலிய நூல்களை இயற்றியவராகிய யாழ்ப்பாணம் புலோலி நகர் சு.சிவபாதசுந்தரம் அவர்களால் எழுதப்பட்டது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 2836).

### 12017

**மனோதத்துவமும் கலையும் போதனாமுறையும்.** *பாலு (இயற்பெயர்: சக்தி அ. பாலஐயா). கொழும்பு 12: போதனா பிரசுராலயம், 364, பழைய சோனகத் தெரு, 1வது பதிப்பு, செப்டெம்பர் 1952. (கொழும்பு 13: நேரு அச்சகம், 94-1, மேட்டுத் தெரு,* Hill Street*).*

*(8), 111 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 17.5*x*12 சமீ.*

*ஆரம்ப ஆசிரியர்களுக்கான மனோதத்துவமும் கலையும் போதனாமுறையும் பற்றிய இந்நூல், மனம்-கலை-கற்பனை, கலைஞனின் மனப்பண்பு-தேசத்தின் கடமை, ஞாபகப் பலன், கலையை ரசித்தல், மனோதத்துவமும் படிப்பிக்கும் கலையும், மாணவரின் மனப்பண்பு, குழந்தை காலக் கல்வி, கருத்து வெளிப்பாடு, மாணவ நட்பு, ஆசிரியர்களுக்கு, ஓவியம் அளிக்கும் பயன், ஆக்க சக்தி அவசியம், நமது தொடர்பு, நாட்டின் வருங்காலம் ஆகிய 14 இயல்களில் எழுதப்பட்டுள்ளது. சக்தி அ. பால ஐயா கவிஞர், ஓவியர், எழுத்தாளர், ஆசிரியர், சிந்தனையாளர் என்று பல்வேறு துறைகளில் தடம் பதித்து 2.8.2013இல் மறைந்தவர். தலவாக்கலை லிந்துலை தோட்டத்தை பிறப்பிடமாகவும், வத்தளை மாபோலையினை வசிப்பிடமாகவும் கொண்ட மலையகத்தின் மூத்த கவிஞர் தனிவழி கவிராயர் கலாபூஷணம் சக்தி பால ஐயா 26.07.1925 ஆம் ஆண்டு அப்பாவு விஸ்வநாதன்-லக்ஷ்மி அம்மாள் தம்பதிகளுக்கு மகனாக தலவாக்கலை லிந்துலையில் பிறந்தார். தனது ஆரம்ப கல்வியை தலவாக்கலை அரச இருமொழி பாடசாலையிலும், இடைநிலை கல்வியை தலவாக்கலை புனித பத்திரிசியார் கல்லூரியிலும், உயர்கல்வியை இலங்கை தொழில்நுட்பக் கல்லூரியிலும் பயின்றார். இந்திய வம்சாவளியினர் இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட இனமாக பிரஜாவுரிமை அந்தஸ்துடன் வாழ வேண்டும் என்பதை வலியுறுத்துவதற்காக 1961 ஆம் ஆண்டு "இலங்கை இந்திய வம்சாவளி பேரவை" எனும் அமைப்பை உருவாக்கி அதனை வழிநடத்தி வந்தார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 19793).*

**மேலும் பார்க்க: 12293**

## 155.4 குழந்தை உளவியல்

### 12018

**சிறுவர் உளநலம்: ஆரம்பப் பாடசாலை மாணவர்களுக்கு உதவும் ஆசிரியர் கைந்நூல்.** *சா.சிவயோகன், கோகிலா மகேந்திரன், தயா சோமசுந்தரம். யாழ்ப்பாணம்: சாந்திகம், 15, கச்சேரி-நல்லூர் வீதி, 2வது பதிப்பு, ஜுலை 2005, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2002. (கொழும்பு: பிரின்ட் கெயார் பக்கேஜிங் லிமிட்டெட், 21, ஸ்ரீ புஷ்பராம மாவத்தை, பாஹல பியன்வில, கடவத்தை).*

xiii, *207 பக்கம், விளக்கப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25.5*x*20 சமீ.,* ISBN*: 955-1214-02-1.*

*தனது குடும்பத்திற்குப் பிறகு ஆரம்பப் பாடசாலையே ஒரு பிள்ளையின் உலகத்தில் முக்கிய இடம் வகிக்கின்றது. பாடசாலைச் சூழல் பிள்ளையின் தற்போதைய நிலையையும் எதிர்காலத்தையும் நிர்ணயிக்கின்றது. ஒரு மாணவனின் கற்றல் திறனையும் ஆர்வத்தையும், ஆற்றலையும், அந்த மாணவனின் மனநிலையே தீர்மானிக்கின்றது. ஆகவே தமது மாணவரின் உளநலத்தைப் பற்றி ஆசிரியர் அறிந்திருத்தல் மிக அவசியம். ஒரு பிள்ளையின் உளநலம் என்றால் என்ன? அதை எவ்வாறு கணிப்பிடுவது? கற்பித்தல் நடைபெறும்போதே உள சமூக ஆரோக்கியத்தையும் மேம்படுத்துவது எவ்வாறு? உளநலப் பாதிப்புகளை எவ்வாறு இனங்கண்டு உதவுவது? இவை எல்லா ஆசிரியர்களுக்கும் தெரிந்திருக்கவேண்டிய விடயங்கள். இந்த அடிப்படை அறிவையும் ஆற்றலையும் வழங்குவதே இந்தக் கைந்நூலின் நோக்கமாகும். உளநலம், வளர்ச்சியும் விருத்தியும், கற்றல், பாட சாலைச் சூழல், குடும்பம், அனர்த்தங்கள், பிரச்சினைகள், உளவளத்துணை, உதவும் வழிமுறைகள் ஆகிய ஒன்பது இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. இந்நூல் சாந்திகத்தின் அனுசரணையுடன் அடிப்படைக் கல்வி நிகழ்ச்சித் திட்டத்தினால் தயாரிக்கப்பட்டது. இதற்கான நிதி உதவி, ஜேர்மன் சமஷ்டிக் குடியரசின் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்தி அமைச்சின் மூலம் பெறப்பட்டது. இலங்கை ஜேர்மன் அபிவிருத்தி ஒத்துழைப்பகம், இலங்கையின் கல்வி அமைச்சு, தேசிய கல்வி நிறுவகம் ஆகியவற்றின் பங்களிப்புடன் இந் நூல் ஆக்கப்பட்டுள்ளது.*

### 12019

**சிறுவர்களுடன்.** எஸ்.சிவதாஸ். வவுனியா: வவுனியா மனநலச் சங்கம், மனநலப் பிரிவு, மாவட்டப் பொது வைத்தியசாலை, 1வது பதிப்பு, 2015. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

*160 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 300., அளவு: 21.5x14.5 சமீ.,* ISBN: *978-955-0924-02-8.*

*வைத்திய கலாநிதி எஸ்.சிவதாஸ் அவர்களின் சிறுவர் மனநலம் சார்ந்த மற்றுமொரு சமூக நூல். வருங்கால சந்ததியினரான சிறார்கள் தொடர்பிலான சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தி சமூகத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் நோக்குடன் எழுதப்பட்டுள்ளது. பூவிழி உதிரும் போர்மனத் துயரங்கள் (முன்னுரை), ஆசிரியையின் கருத்துரை, ஒரு தாயின் வாழ்த்துரை, வித்தியா, என்னுரை, உங்களுடன், வளர்ச்சிப் பருவங்கள், குழந்தை வளர்ப்பு, பிணைப்பு (*Attachment*), குடும்ப முரண்பாடுகள், மகிழ்வான சிறார்கள், புலமைப் பரிசில் பரீட்சை, குடும்ப இயங்கியல், வெளிநாட்டு வேலைவாய்ப்பு, சிறுவர்களின் சிந்தனைகள், தமிழ் சினிமாவும் மது விளம்பரமும், விசேட கல்வி அலகு, உலக தாய்மொழி தினம், சிறுவர்களைப் பாதுகாத்தல் ஆகிய தலைப்புகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.*

**மேலும் பார்க்க: 12507**

## 158.1 மானிட மேம்பாடு

### 12020

**அகமலர்ச்சி.** சுவாமி சின்மயானந்தா (ஆங்கில மூலம்), பிரமச்சாரி வியக்த சைதன்யா (தமிழாக்கம்). கொழும்பு 3: சின்மயா மிஷன், எண்.15, மைல்போஸ்ட் அவென்யூ, 1வது பதிப்பு, பதிப்பு விபரம் தரப்படவில்லை. (கொழும்பு 14: எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் சிலோன் பிரைவேட் லிமிட்டெட், 185, கிராண்ட்பாஸ் வீதி).

69 பக்கம், விளக்கப்படம், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

அன்னையின் மடியிலிருந்து உலகின் மடிக்குத் தாவிய ஒரு குழந்தைக்கு எப்படி இந்த பௌதிக உலகின் தோற்றமும் செயல்களும் புதிராயும் குழப்பங்களின் உறைவிடமாயும் தன் கரணங்களை மயக்கும் தன்மைகொண்டதாயும் இருக்குமோ அது போலவே, தன் அகங்கார உணர்வுகளிலிருந்தும், ஆசையின் பிடியிலிருந்தும் தவறான ஏக்கங்களின் தழுவல்களிலிருந்தும் விடுபட்டு ஆத்ம தரிசனம் காண வெளிவந்த ஒரு சாதகனுடைய மனோநிலையும் இருக்கும். மறைநூல்கள் காட்டும் ஒவ்வொரு மார்க்கமும், தெளிவின் அளவுகோலாய் தோன்றுவதற்குப் பதிலாக, மயக்கம்தரும் மாயவலையாகத் தோன்றும். எது கரை சேர்க்க வேண்டுமோ, அதுவே தன்னைக் கவிழ்ப்பது போல் தோன்றும். இந்த ஆரம்ப சோதனையிலிருந்து ஒரு விடுதலை விரும்பியை விடுவித்து சத்தியத்தை உணர்ந்து அவன் வாழ்வில் சத்திய கீதம் பாடச் செய்வதே இந்த நூலின் நோக்கமாகும். (சின்மயா மிஷன்-அறிமுக உரையில்). (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 3038).

### 12021

**புதியதோர் உலகம் செய்வோம்.** இரா.கோபிநாத். கோயம்புத்தூர் 641002: Pee Vee Publishers, 118, West Sambandam Road, R.S.Puram, 1வது பதிப்பு, மே 2005. (கோயம்புத்தூர் 641002: Pee Vee Graphics).

80 பக்கம், விலை: இந்திய ரூபா 35., அளவு: 12x17.5 சமீ.

எல்.ஐ.சீ. ஸ்ரீலங்கா லிமிட்டெட் நிறுவனத்தின் தலைவர் மற்றும் தலைமை நிர்வாக அலுவலராகப் பணியாற்றிய நூலாசிரியர், "நமது நம்பிக்கை" மாத இதழில் வெளியிட்ட தொடர் கட்டுரையின் நூல்வடிவம். படைப்பாற்றல் திறன் என்பது நம் அனைவருக்குள்ளும் புதைந்து கிடக்கும் ஒரு வரப்பிரசாதமாகும். சாதாரண வாழ்க்கையில் தொடங்கி உற்பத்தித்துறை, மேலாண்மை, நிர்வாகத்துறை, விற்பனைத்துறை, சேவைத்துறை என அனைத்துத் துறைகளிலும் படைப்பாற்றல் திறமையால் மேன்மையடைய முடியும் என்பதனை அனுபவ வாயிலாகப் பகிர்ந்துகொண்டுள்ளார். படைப்பாற்றலை வெளிக்கொண்டுவருவதில் உள்ள தடைகளைத் தகர்த்து உங்களாலும் வெல்ல முடியும் என்பதற்கு இந்த நூல் வழி

காட்டுகின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 36975).

**மேலும் பார்க்க: 12333**

## 158.3 உளவளத்துணை

### 12022

**அனர்த்த காலங்களில் நெருக்கீடுகளை எதிர்கொள்ளல்.** அனர்த்தகால உளநலப் பணிக்குழு. யாழ்ப்பாணம்: சாந்திகம், 15, கச்சேரி-நல்லூர் வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 2005. (யாழ்ப்பாணம்: கரிகணன் தனியார் நிறுவனம், இல.681, காங்கேசன்துறை வீதி).

32 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 19x14 சமீ.

2004ம் ஆண்டு டிசம்பர் 26ம் திகதி பெரும் அழிவை ஏற்படுத்திச்சென்ற கடற்கோள் பேரழிவினைத் தொடர்ந்து ஏற்படக்கூடிய உள நெருக்கீடுகளைப் பற்றியும் அவற்றை எதிர்கொண்டு அவற்றின் பாதிப்புளைக் குறைப்பது எவ்வாறு என்பது பற்றியதுமான தகவல்களை இந்தக் கையேடு கொண்டிருக்கின்றது. யுனிசெப் தாபனத்தின் அனுசரணையுடன் இந்நூல் வெளியிடப்பட்டது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 1291/25489).

**மேலும் பார்க்க: 13A18**

## 160 தர்க்கவியல் (அளவையியல்)

### 12023

**அளவையியல், விஞ்ஞான முறை-1.** K.T.இராஜரட்ணம், N.வரதராசா. கரவெட்டி: இந்திரா இராஜரட்ணம், கொல்லன்தோட்டம், நெல்லியடி, 1வது பதிப்பு, பெப்ரவரி 1984. (கரவெட்டி: கலாலயா, நெல்லியடி).

(4), 114 பக்கம், விலை: ரூபா 24.00, அளவு: 20x14 சமீ.

விஞ்ஞானமும் விஞ்ஞான முறையும், விஞ்ஞான முறையின் இயல்பு, விஞ்ஞான முறை, கருதுகோள், நோக்கலும் பரிசோதனையும், விஞ்ஞானத்தில் பயன்படுத்தப்படும் வேறுமுறைகள், விஞ்ஞானப் பொதுமையாக்கங்கள் ஆகிய ஏழு அத்தியாயங்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. நூலாசிரியர் K.T.இராஜரட்ணம், பேராதனை, களனிப் பல்கலைக்கழகங்களின் பகுதிநேர விரிவுரையாளராகப் பணியாற்றுகின்றார். இணை நூலாசிரியர் N.வரதராசா, கரவெட்டி/ நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தின் ஆசிரியராவார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 9547).

## 170 ஒழுக்கவியல்

### 12024

**அன்புள்ள தம்பிக்கு 1000 உபதேசங்கள்.** *அராலியூர் வி. செல்வரத்தினம். வட்டுக்கோட்டை: செல்வி வி.திருவருட்சோதி, அப்புக்காத்து வளவு, அராலி மத்தி, 1வது பதிப்பு, சித்திரை 2017. (யாழ்ப்பாணம்: ஜே.எஸ். பிரின்டர்ஸ், பண்டத்தரிப்பு).*

viii, *91 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 250., அளவு: 20x14 சமீ.*, ISBN: *978-955-38168-1-8.*

*உலகப் புகழ்பெற்ற அறிஞர்களால் எழுதப்பட்ட நூல்களை வாசித்தபொழுது, ஆசிரியர் பெற்றுக்கொண்ட கருத்துக்களைத் தொகுத்து இந்நூலை எழுதியிருக்கிறார். மாக்கள் (விலங்குகள்) என்ற நிலையில் உள்ளவர்களை மக்கள் (மனிதர்) என்ற உயர்நிலைக்கு உயர்த்துவதற்கான வழகாட்டிகளாக இப்பொன்மொழிகள் அமைந்துள்ளன என்று அவர் குறிப்பிட்டுள்ளார். முன்னாள் உயர்வகுப்பு கணித, விஞ்ஞான ஆசிரியரான அராலியூர் வி. செல்வரத்தினம் தன் இளமைக் காலத்தில் கணித, விஞ்ஞான நூல்களையும் பின்னாளில் ஆன்மீக நூல்களையும் எழுதி வெளியிட்டவர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 62091).*

**மேலும் பார்க்க: 12031**

## 180 இந்து தத்துவம் (சைவ சித்தாந்தம்)

### 12025

**இந்து நாகரீகம் A/L, G.A.Q. மாணவர்களுக்குரியது: பாகம் 2.** *சி.கணேஷ் (தொகுப்பாசிரியர்). வவுனியா: எம்.எஸ்.சி. கல்வி நிலையம், குருமன்காடு, 1வது பதிப்பு, மே 1999. (வவுனியா: ஜெயக்குமார் கணனிப் பதிப்பு, குடியிருப்பு).*

*72 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.*

*வேதங்கள், ஆகமங்கள், கிராமியத் தெய்வங்கள் ஆகிய மூன்று பெரும் பிரிவுகளின்கீழ் இந்நூல் தொகுக்கப்பட்டுள்ளது. வேதங்கள் என்ற பிரிவில் இருக்குவேதம், யசுர்வேதம், சாமவேதம் ஆகிய மூன்று வேதங்கள் பற்றிய விரிவான விளக்கம் தரப்பட்டுள்ளது. ஆகமங்கள் என்ற பிரிவின்கீழ் ஆகமம் கூறும் பொருள் மரபு, ஆகமம் காட்டும் வழிபாட்டு நெறி, ஆகமம் விளக்கும் கலை, வேதத்திற்கும் ஆகமத்திற்கும் இடையே உள்ள வேறுபாடு ஆகிய தலைப்புகளில் போதிய விளக்கம் தரப்பட்டுள்ளது. இறுதிப் பிரிவு கிராமியத் தெய்வங்கள் பற்றிய சிறுதெய்வ வழிபாடு பற்றியதாகும். சிறுதெய்வ வழிபாடு என்பது நாட்டார் தெய்வங்களை வழிபடும் முறையாகும். இந்த சிறுதெய்வ வழிபாட்டில் வீட்டுத்தெய்வ வழிபாடு, குலதெய்வ வழிபாடு, இனத்தெய்வ வழிபாடு, ஊர்த்தெய்வ வழிபாடு மற்றும் வெகுசனத் தெய்வ வழிபாடு எனப் பல வகைகள் காணப்படுகின்றன. இந்த வகையான தெய்வ வழிபாட்டு முறை காலம்காலமாக முன்னோர்களால் செய்யப்*

படுகின்ற சடங்குகளை அடிப்படையாக வைத்து பின்பற்றப்படுகின்றன. இவை பற்றிய விளக்கம் இப்பிரிவில் தெளிவாக வழங்கப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 23719).

## 12026

**இந்து நாகரிகம்: பாகம் 3.** க.சொக்கலிங்கம். யாழ்ப்பாணம்: ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை, 235, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, மார்ச் 1997. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சுப்பிரமணிய அச்சகம், 63, B.A.தம்பி லேன்).

xi, 216 பக்கம், விலை: ரூபா 140.00, அளவு: 21x14 சமீ.

க.பொ.த.ப. (உயர்தர)பரீட்சைக்குரிய இந்து நாகரிகம் -1 பாடத்திட்டம் முழுமைக்கு மான விரிவான நூல். பாடத்திட்டத்தைக் கருத்திற்கொண்ட ஆக்கம் என்ற வகையில் இந்நூல் ஒரு தொகுப்பு முயற்சியாகும். பல்வேறு ஆய்வறிஞர்கள் கண்டறிந்த முடிவுகளைப் பொருட் பொருத்தமுற இணைத்து விளக்கம் தருவது, அவ்விளக்கத்தினூடாகப் புதிய பார்வைக்கான கருத்துக்களை முன்வைப்பது ஆகியன இவ்வகை முயற்சிகளின் பொதுப்பண்பாகும். சொக்கன் அவர்கள் இவ்வகையிற் சிறப்பாகச் செயற்பட்டுள்ளார். இந்துப் பண்பாடு-ஓர் அறிமுகம், இந்துவெளி நாகரிகம், வேதகால நாகரிகம், ஆகமம் பிரதிபலிக்கும் பண்பாட்டமிசம், மௌரியர்கால நாகரிகம், குப்தர்கால நாகரிகமும் இந்துமத மறுமலர்ச்சியும், தமிழகத்தில் இந்துப்பண்பாடு, இந்துசமய சீர்திருத்த இயக்கம், தென்கிழக்காசிய நாடுகளில் இந்துப் பண்பாடு ஆகிய ஒன்பது அலகுகளில் பாடங்கள் விளக்கப்பட்டுள்ளன. பின்னிணைப்பாக சிவாகமங்கள் கட்டுரை இடம்பெறுகின்றது. இக்கட்டுரை பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ணனின் இந்துப் பண்பாட்டு மரபுகள் என்ற நூலிலிருந்து மீள்பதிப்புச் செய்யப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 30194).

## 12027

**கர்மயோகம்.** மு.ஞானப்பிரகாசம். சுன்னாகம்: வட-இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகம், 1வது பதிப்பு, 1968.(சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).

xvi, 144 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12.5 சமீ.

தத்துவக் கல்வியை தாமாகவே படித்துணர முன்வரும் மாணவர்களுக்காக முக்குணங்கள், சுவதர்மம், பரதர்மம் போன்ற அடிப்படைச் சமய உண்மைகளை உள்ளடக்கிய ஆரம்பச் சமயபாட நூல். பகவத்கீதையின் மூன்றாவது அத்தியாயத்தின் கர்மயோகம் தொடர்பான 43 பாடல்களையும், 14ஆம் அத்தியாயமான முக்குணப் பாகுபாட்டில் வரும் 27 பாடல்களையும் தனித்தனி அத்தியாயங்களில் விளக்கு கின்றார். பகவத்கீதையின் 3ஆம் 14ஆம் அத்தியாயங்களில் வரும் வடமொழி மந்திரங்களுக்குப் பதிலாக சேர்.பொன். இராமநாதன் அவர்கள் அம்மந்திரங்களை மொழிபெயர்த்து வழங்கிய அறிவுரைகளை ஆசிரியர் இந்நூலில் பயன்படுத்தி யிருக்கிறார். இந்நூலின் அநுபந்தமாக கர்மயோகமும்-சாங்கிய தரிசனமும், ஸ்ரீ கிருஷ்ணபகவான் அர்ச்சுனனுக்குச் செய்த உபதேசம், கர்மயோகம்-அதன் பொது

நிலை, கர்மயோகம்-அதன் சிறப்பு நிலை, முக்குணப் பாகுபாடு, பக்தியோகம், சாங்கிய யோகம், சாங்கிய யோகம்-அதன் சார்பாக ஒரு வேண்டுகோள், அருஞ்சொற் பொருள் விளக்கம் ஆகியவை தரப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 18906).

## 12028

**சிவ நடனம்: ஒரு தலைசிறந்த கலை.** நா.செல்லப்பா. சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல. 7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2001. (சென்னை 14: பி.வி.ஆர். ஆப்செட்).

192 பக்கம், விலை: இந்திய ரூபா 40., அளவு: 17x12 சமீ.

சைவசித்தாந்தம் சிவ நடனத்தை ஒரு நிகரற்ற சிவ கலையாக வர்ணிக்கின்றது. அத்தகைய சிறப்புடைய சிவ கலையை இந்நூல் விரிவாக விளக்குகின்றது. சிதம்பர இரகசியம், மனத்தின் அணுத்தன்மை, சிரத்தை விளக்கம், அறிவும் விவேகமும், கலை விளக்கம், புற அழகு மட்டும் உண்மைக் கலையாகுமா?, கதிர்வேலனின் விந்துக்கலை, கந்தர் அனுபூதி, தத்துவ ஞானமும் கலைஞானமும் முத்திக்கு ஏணியாகும், சிவ நடனக்கலை ஓர் ஒப்பற்ற கலை, பகுத்தறிவால் மெய்யுணர்வு பெறலாமா?, புராணத்தில் சிவநடனம், நடனத்துக்கு ராஜன் நடராஜன், சிவநடன மகிமை, சிவநடனம் காட்டும் பஞ்ச கிருத்தியம், சிவானந்த நடனம் சுட்டும் சாதனை நெறி, வைராக்கிய விசார தியான சாதனை, விதிப்படி ஓத வேண்டிய பதிநாமம், சாத்தியமான செப தியான அணுகுமுறை ஆகிய 19 இயல்களில் இந் நூல் எழுதப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையைச் சேர்ந்த ஆசிரியர், 1917 கார்த்திகை 25இல் பிறந்தவர். சுகாதார பரிசோதகராகப் பணியாற்றி 1972இல் ஓய்வுபெற்றவர். பின்னாளில் புலம்பெயர்ந்து கனடாவில் வாழ்ந்தவர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 29198).

## 12029

**சிவாகம சைவசித்தாந்த சாத்திரப் படிப்பு: சிவஞானசித்தியார் சுபக்கம்-மூலம்: முதலாம் சூத்திரம்.** ஸ்ரீ வே.கந்தையா. யாழ்ப்பாணம்: ஸ்ரீ.வே.கந்தையா, அராலி தெற்கு, வட்டுக்கோட்டை, 1வது பதிப்பு, ஆவணி 1953. (யாழ்ப்பாணம்: சைவப்பிரகாச யந்திரசாலை).

24 பக்கம், விலை: சதம் 10., அளவு: 17x11.5 சமீ.

சைவஞான நூல்களைக் கற்றலும் கற்பித்தலும் ஞானபூசையாகுமென்று சிவஞான சித்தியார் கூறுகின்றது. "சிவஞான சித்தியார்" சைவ சித்தாந்தக் கோட்பாடுகளை விளக்க எழுந்த மெய்கண்ட சாத்திரங்கள் எனப்படும் பதினான்கு நூல்களுள் ஒன்றாகும். சிவஞான போதத்தின் வழி நூலான இதனை இயற்றியவர் அருணந்தி சிவாச்சாரியார் ஆவார். இவர் சிவஞான போதத்தை இயற்றிய மெய்கண்ட தேவரின் மாணவன். சுபக்கம் சிவஞான போதத்தின் 12 சூத்திரங்களை பன்னிரண்டு அத்தியாயங்களாக விரித்து எழுதப்பட்ட பகுதியாகும். சுபக்கம், 328 பாடல்களால்

ஆனது. இந்நூலில் ஸ்ரீ வே.கந்தையா அவர்கள் சிவஞானசித்தியாரின் முதலாவது சூத்திரத்தை மட்டும் தேர்ந்தெடுத்து விரிவாக விளக்கியிருக்கின்றார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 3077).

## 12030

**சுவாமி கெங்காதரானந்தஜீ அவர்களின் மணிமொழிகள்.** கெங்காதரானந்தஜீ (மூலம்), வே.ந.சிவராசா (தொகுப்பாசிரியர்). சென்னை 600005: குமரன் பதிப்பகம், 13/2 கஜபதி தெரு, திருநெல்வேலி, இணை வெளியீடு, கொழும்பு 12: வே.ந.சிவராசா, ஜீ.யூ.1-3, டயஸ் பிளேஸ், சிவன் கோவிலடி, 1வது பதிப்பு, ஜுன் 1992. (சென்னை 5: ஜீவன் பிரஸ்).

(4), 44 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12.5 சமீ.

சுவாமி கெங்காதரானந்தஜீ 1991ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 16ஆம் தேதியன்று பூதவுடலைவிட்டு நீங்குவதற்கு முன்பே சில அருள்வாக்குகள் ஞானமண்டலம், வஜனாமிர்தம், சுவாமி கெங்காதரானந்தஜீ அவர்களின் மணிமொழிகள், ஆலயம் ஆகிய நூல்களாக வெளிவந்துள்ளன. இவற்றுள் அடங்கிய ஆலயம், கடவுள், சமயம், தருமம் ஆகியவை பற்றி சுவாமிகளின் அருளுரைகளை உள்ளடக்கிய ஒரே நூலாக இவ்வெளியீடு அமைகின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 32217).

## 12031

**பிரம்ம ஞானி ஸ்ரீமத் சுவாமி கெங்காதரானந்தா அவர்கள் வழங்கிய அமிர்தத் துளிகள்.** தா.சியாமளாதேவி. திருக்கோணமலை: சிவயோக சமாஜம், பிரதான வீதி, 1வது பதிப்பு, மாசி 1999. (கொழும்பு: லின்ராஜ் பிரின்ரேர்ஸ், 133, 1வது டிவிஷன், மருதானை).

x, 58 பக்கம், விலை: ரூபா 50.00, அளவு: 21.5x14 சமீ.

சுவாமியின் அணுக்கத் தொண்டராகவிருந்து அவர் வாயிலாகவே பெற்ற பல பொன்மொழிகளையும், கேட்டும் அனுபவித்தும் பெற்ற விடயங்களையும் சேர்த்து இந்த ஆன்மீக நூலை தா.சியாமளாதேவி எழுதியுள்ளார். 1921ஆம் ஆண்டு ஜூன் மாதம் 22ம் திகதி ஆதிசங்கரர் பிறந்த கேரள நாட்டிலே கெங்காதரானந்தா சுவாமிஜி அவர்களும் பிறந்தார். இளம் வயதிலேயே சுவாமிஜி துறவற வாழ்க்கையிலே நாட்டம் காட்டினார். பல்வேறு சுவாமிகளுடன் சேர்ந்து இந்தியாவின் பல இடங்களுக்கும் யாத்திரை செய்து, தமது 19வது வயதிலே, 1940ம் ஆண்டளவில், இலங்கை வந்து சேர்ந்தார். இங்கு 1940ஆம் ஆண்டு தொடக்கம் 1991ம் ஆண்டு பெப்ரவரி 16ஆம் திகதி வரை சுவாமிஜி தன்னுடைய தெய்வீகப் பணியை ஆற்றினார். சுவாமிஜி தன்னுடைய ஞான வாழ்க்கையைத் திருக்கோணமலையில் "சிவயோக சமாஜம்" என்னும் ஆச்சிரமத்தை ஆரம்பித்து வாழ்ந்தவர். சுவாமிஜி அவர்கள் பன்குளத்திலுள்ள சமாஜத்திற்குரிய நெல்வயலிலே கடுமையாக உழைத்து அதனால் பெற்ற வருமானத்தைக் கொண்டு அநாதை

இல்லம் ஒன்றை நடத்தினார். வெள்ளம், புயல் போன்ற அனர்த்தங்கள் ஏற்பட்ட காலங்களில் ஏழைகளைப் பராமரித்து, உணவு, உடை கொடுத்து வந்தார். சுவாமிஜி யின் ஆச்சிரமத்தில் பூஜை முறைகள் அணுவளவும் பிறழாது நடாத்தி, சத்சங்கம் ஒன்றை ஸ்தாபித்து, பக்தர்களை நல்வாழ்க்கையில், வழிநடத்தியிருந்தார். (இந் நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 24788).

### 12032

**முக்கிய உபநிஷதங்களின் சாரம்: அத்தியாயம் 5-முண்டகோபநிஷதம்.** ஸ்ரீலஸ்ரீ சுவாமி சிவானந்தர். நாவலப்பிட்டி: ஆத்மஜோதி நிலையம், 1வது பதிப்பு, 1967. (நாவலப்பிட்டி: ஸ்ரீ ஆத்மஜோதி அச்சகம்).

(4), 27 பக்கம், விலை: 25 சதம், அளவு: 18x12.5 சமீ.

உபநிஷதங்கள், பிரம்ம சூத்திரம், ஸ்ரீமத் பகவத் கீதை ஆகிய மூன்றும் அறுதிப் பிரமாணமாக அமைந்த மூன்று நூல்கள் என்பர். வேதகாலச் சிந்தனையின் மணிமகுடமாகத் திகழ்பவை உபநிஷதங்கள். அறுதி உண்மையைப் பற்றிய ஆராய்ச்சியில் மனித மனத்தால் தொடக்கூடிய எல்லையை உபநிஷதங்கள் தொட்டுவிட்டன என்றே உலகின் சிந்தனையாளர்கள் கருதுகின்றனர். உபநிஷ தங்கள் பல உள்ளன. அவற்றுள் நூற்றியெட்டு பொதுவாக கணக்கில் கொள்ளப்படு கின்றன. அவற்றில் பதினான்கு உபநிஷதங்கள் முக்கியமானவையாகக் கருதப்படு கின்றன. அவை ஈச, கேன, ப்ரச்ன, முண்டக, மாண்டூக்ய, ஐதரேய, தைத்திரீய, சாந்தோக்ய, பிருஹதாரண்யக, சுவேதாஸ்வதர, கௌசீதகி, மஹாநாராயண, மைத்ராயணி உபநிஷதங்கள் ஆகும். ரிஷிகேசத்திலுள்ள திவ்யஜீவன சங்கத்தினால் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்ட உபநிஷத நூலின் ஐந்தாம் அத்தியாயத்தின் தமிழாக்கமே இதுவாகும். இதில் முன்னுரை, தெய்வீக ஆதாரத்தின் அறிவு, பொருட்களின் உற்பத்தி, கர்ம ஆராய்ச்சி, அழிவில்லாததை அடைதல், ஒன்றே பலவாகின்றது, ஆன்மீக வீரனின் இலக்கு, அனுபூதியும் பிற்பாடும், ஜீவனும் ஈஸ்வரனும், ஞானத்துணைகள், முடிவான விடுதலை ஆகிய பிரிவுகளின்கீழ் முண்டகோபநிஷதம் விளக்கப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 3016).

**மேலும் பார்க்க: 13A28**

## 190 சோதிடம், வானசாஸ்திரம்

### 12033

**மானுடமும் சோதிடமும்.** திருச்செல்வம் தவரத்தினம். யாழ்ப்பாணம்: தி. தவரத்தினம், சடையாளி, காரைநகர், 1வது பதிப்பு, மே 2013. (யாழ்ப்பாணம்: ரூபன் பிரின்டர்ஸ், ஆனைக்கோட்டை).

viii, 108 பக்கம், விலை: ரூபா 330., அளவு: 20x14.5 சமீ., ISBN: 978-955-97102-4-0.

மானுடமும் சோதிடமும், ஜாதகப் பலன், திருமண வாழ்க்கை, விவாகப் பொருத்தம், செவ்வாய் சாதகத்தில் இருக்கும் நிலையில் தோஷமும் பரிகாரங்களும்,

காலதாமதத் திருமணத்திற்குரிய ஜாதகநிலை, புத்திரப் பேறு, பெண்கள் ஜாதக பலனும் ருதுபலனும், பால அரிஸ்டம், ஆயுளும் விபத்துகளும், நோய்களும் வாழ்க்கையும், மனையடி சாஸ்திரம் என்னும் வாஸ்து சாஸ்திரம், கிணறு அமைத்தல், எண் சோதிடம், ஒலி அதிர்வு சோதிடம், கைரேகை சாஸ்திரம், சாமுத்திரிகா இலட்சணம், நினைத்த காரியம் கேட்டலும் ஆரூடம் பார்த்தலும், சகுனம் பார்த்தல், நவ இரத்தின அதிர்ஷ்டக் கற்கள், உருத்திராட்சம், நல்ல காரியங்கள் செய்யக்கூடிய நட்சத்திரங்கள், பிரயாணத்திற்கு நாள் குறித்தல், தலைக்கு எண்ணெய் வைத்தலும் தலை முழுகிடலும், விருந்துண்ணல், நற்காரியங்களுக்கு தவிர்க்கவேண்டிய காலங்கள், பஞ்சாங்க விளக்கம், கிரக தத்துவங்கள், சோதிடத் துளிகள் ஆகிய 29 தலைப்புகளில் சோதிடம் பற்றிய குறிப்புகளை எளிமையான மொழிநடையில் ஆசிரியர் வழங்கியுள்ளார்.

# 200 சமயங்கள்

## 210 பொதுச்சமயம் சார்பானவை

### 12034

**எவ்வழி நல்வழி அவ்வழி நாடுவோம்: பல்சமய உறவாடல் ஏடு.** நீர்வை தி.மயூரகிரி. யாழ்ப்பாணம்: நீர்வை தி.மயூரகிரி சர்மா, ஊடக வளங்கள் பயிற்சிகள் நிலையம், 1வது பதிப்பு, டிசம்பர் 2009. (யாழ்ப்பாணம்: ஷாம்பவி பதிப்பகம், 276 கஸ்தூரியார் வீதி, கன்னாதிட்டி).

xii, 66 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 17x12 சமீ.

நீர்வேலியைப் பிறப்பிடமாகக் கொண்ட பிரம்மஸ்ரீ நீர்வை தி.மயூரகிரி சர்மா, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இதழியல்துறையில் பயில்பவர். சமயங்களின் அடிப்படைக் கருத்துக்களை முன்வைத்து அவற்றுக்கிடையே காணப்படும் ஒற்றுமைகளை ஆராய்ந்து இந்நூலில் உறவின் வழியே, சமயங்களுள் உள்ளது தான் என்ன?, மதத்தை ஏன் பின்பற்ற வேண்டும், சமயங்களின் நம்பிக்கைகள் (இந்து, இஸ்லாமியம், கிறிஸ்துவம், பௌத்தம், சீக்கியம்), மகாத்மாவும் பல்சமய உறவும், நடைமுறை வாழ்வில் பல்மத உறவு, இன்றைய இந்துக்களிடையே பல்சமய உறவு, கத்தோலிக்கத்தில் பல்சமய உரையாடல்கள், சீரிய குர் ஆன் பேசும் சமரசம், உலக சமத்துவம் கூறும் கீதை, எம்மதத்திற்கும் இறைசக்தி ஒன்றே, சில சுவாரஸ்ய சமரச செய்திகள், மாறி வருகிறது அமெரிக்கா, சமரச வழியே, மதமாற்றம் என்பது? உண்மைப்பொருள்ஆகிய கட்டுரைகளின் வாயிலாக வழங்கியுள்ளார். ஒவ்வொரு சமயத்திலும் கூறப்படும் இறை அல்லது பரம்பொருள் பற்றிய கருத்துக்கள், சமய நூல்கள், சமயாசாரியார்கள், வழிபாட்டு முறைகள் என்பன பற்றி விரிவாக விளக்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 47943).

**மேலும் பார்க்க: 12191**

## 220 கிறிஸ்தவம்

### 12035

**விடுதலை இறையியல்.** ஞானமுத்து விக்ரர் பிலேந்திரன். யாழ்ப்பாணம்: ஆயர் இல்லம், 1வது பதிப்பு, ஜுலை 2009. (யாழ்ப்பாணம்: ஜே.எஸ். பிரின்டர்ஸ், பண்டத்தரிப்பு).

(ii), 18 பக்கம், விலை: ரூபா 40.00, அளவு: 20x14 சமீ., ISBN: 978-955-96653-7-3.

இறையியல் என்பது வெறும் கோட்பாடுகள், நம்பிக்கைகள், மீட்பு பற்றிய விடயங்களுக்குள் மட்டுப்படுத்தப்பட்ட ஒன்றல்ல. மாறாக, மனித வாழ்வின் இருத்தலியலோடு தொடர்புபட்ட அனைத்து விசைகளின் தாக்கங்களையும் அவற்றின் பின்புலங்களையும் கருத்திற்கொண்டு ஆய்ந்து எடுக்கப்படுகின்ற முடிவுகளை அடிப்படையாகக் கொண்டதாகும். திருச்சபையின் இறையியல் வரலாற்றில் நீண்டகாலமாக முதன்மைப்படுத்தப்பட்டு குருத்துவக் கல்லூரி களிலும், ஐரோப்பியப் பல்கலைக்கழகங்களிலும் கற்பிக்கப்பட்டு வந்த கோட்பாட்டு இறையியல் மனிதர் வாழ்வில் எதிர்கொண்ட சிக்கல்களையும், காரண காரியங்களையும் கண்டறிந்து பரிகாரங்களை முன்வைக்கும் முறைமைகளைக் கொண்டிருக்கவில்லை. இந்த நிலைப்பாடே இருத்தலியல் என்னும் எண்ணக் கருவின் தோற்றத்திற்கும், இருத்தலியல் இறையியலின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் முக்கிய காரணியாக அமைந்தது. மேற்கண்ட பின்னணியிலேயே விடுதலை இறையியல் பற்றி இச்சிறுநூல் பேசுகின்றது.

**மேலும் பார்க்க: 12842**

## 220.1 கிறிஸ்தவ நிறுவனங்கள், மாநாடுகள், மலர்கள்

### 12036

**முக்கிய இரு நிகழ்வுகளின் நினைவு மலர்.** அரசாங்க தகவல் திணைக்களம். கொழும்பு: அரசாங்கத் தகவல் திணைக்களம், 1வது பதிப்பு, ஜனவரி 1995. (கொழும்பு: அரசாங்க அச்சகம்).

ix, 245 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x13.5 சமீ.

"தெமங்கல மகோற்சவய" என்ற சிங்களத் தலைப்புடனும், Twice Blessed Day என்ற ஆங்கிலத் தலைப்புடனும் மும்மொழிகளிலும் வெளியிடப்பட்ட இந்த நினைவு மலரின் பக்கங்கள் 151 முதல் 179 வரை தமிழில் வண யெசேவ் வாஸ் அடிகளாரின் முத்திப்பேறு பட்டமளிப்பும், திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பரின் இலங்கை வருகையும் பற்றிய தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன. 1995 ஜனவரி 20-21ஆம் திகதிகளில் இந்நிகழ்வு இலங்கையில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 17301).

## 12037

**வாழ்க்கை நிகழ்ச்சிக் கோவையும் இலங்கை மிஷனின் சுருக்கமும்.** ஹரியட் வாட்ஸ்வேர்த் வின்ஸ்லோ (ஆங்கில மூலம்), மைரன் வின்ஸ்லோ (தொகுப்பாசிரியர்), வண. இரா. டா. அம்பலவாணர் (தமிழாக்கம்). சுன்னாகம்: சமூக ஆய்வுக்கான கிறிஸ்தவ மையம், கிறிஸ்தவ இறையியல் கல்லூரி, மருதனார்மடம், 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (வட்டுக்கோட்டை: அமெரிக்கன் சிலோன் மிஷன்).

(14), 234 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14.5 சமீ.

திருமதி ஹரியட் உவாட்ஸ்வேர்த் உவின்ஸ்லோ அவர்களின் வாழ்க்கை நிகழ்ச்சிக் கோவையுடன் இலங்கை மிஷன் பற்றிய சுருக்கக் குறிப்புகள் அடங்கிய இந் நூலின் ஆங்கில மூலநூலான Memoir of Mrs. Harriet Wadsworth Winslow combining A Sketch of the Ceylon Mission by Miron Winslow, 1835இல் லேவிற் லோர்ட் அண்ட் கம்பெனியாரால் (Boston: Leavitt Lord and Co) வெளியிடப்பட்டது. இந்நூல் திருமதி ஹரியட் உவாட்ஸ்வேர்த் உவின்ஸ்லோ, அமெரிக்காவில் கொனெக்டிக்கட் என்னும் இடத்தில், தான் இளைய வயதில் வாழ்ந்த காலம் தொட்டு, உடுவிலில் 1833இல் மரணப்படுக்கையடைந்த காலம் வரை எழுதிவந்த குறிப்பேட்டைக் கொண்டதாகவுள்ளது. வண. மைறன் உவின்சிலோ இலங்கை மிஷன் பற்றி எழுதிய குறிப்பும் இந்நூலில் சேர்க்கப்பட்டுள்ளது. ஹரியட் அம்மையாரின் ஆழ்ந்த இறைபக்தியும், தியாக மனப்பான்மையும் அன்னாரின் அறிவுசார்ந்த திறமைகளும் இங்கு பதிவுசெய்யப்பட்டுள்ளன. வண. இரா. டா. அம்பலவாணர் சுன்னாகம் கிறிஸ்தவ இறையியல் கல்லூரியின் தலைவராகப் பணியாற்றியவர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 50717).

## 12038

**விடிவை நோக்கி: 1997/1998.** சகோ.ஜோன் பேரானந்தன் (இதழாசிரியர்). பிலிமத்தலாவை: தமிழ் கலாமன்றம், இலங்கை இறையியல் கல்லூரி (Theological College of Lanka), 1வது பதிப்பு, 1998. (அச்சக விபரம் தரப்படவில்லை).

60 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ.

இலங்கை இறையியல் கல்லூரி (Theological College of Lanka) 1963 ஆம் ஆண்டு ஆங்கிலிக்க ஒன்றியம், மெதடிசம், திருமுழுக்குத் திருச்சபை, பொது ஆட்சிமுறைத் திருச்சபை ஆகியவற்றின் இணைந்த அமைப்பினால் உருவாக்கப்பட்டது. இது புதிய குருக்களை இலங்கைச் சூழ்நிலைக்கு ஏற்ப, அவர்களின் சொந்த மொழிகளான சிங்களம், தமிழ் என்பவற்றில் கற்பித்தலின் மூலம் உருவாக்குவதை நோக்காகக் கொண்டது. இக்கிறிஸ்தவ அமைப்பின் தமிழ்க் கலாமன்றத்தினர் வெளியிடும் ஆண்டிதழ் இது. இம்மலர், குருத்துவ மாணவர்களால் எழுதப்பட்ட படைப் பாக்கங்களை உள்ளடக்கியது. திரு முழுக்கும் இன்றைய நிலைப்பாடும், பரிணாமம் ஒரு பொய், நமது பண்பாட்டுக்கு உகந்த நற்கருணை வழிபாடு, திருமறையின் மையம், வாழ்வளிக்கும் வள்ளல், அன்பு, நாமே நற்செய்தியின் அருளுரைகள்,

*மோதுவது யாருடன், குறுக்கெழுத்துப் போட்டி, அன்பும் அர்ப்பணமும், திருமறை ஆய்வு, கை கொடுத்த தெய்வம், செய்திச் சிதறல்கள், ஊழியத்தில் உறுதிபெற நற்சபை தரும் நன்மொழிகள், ஒரு குருவானவரின் குமுறல், கள்வனைப் பிடியுங்கள், தரித்திரரோடு இறைவன், நட்பால் ஒரு புதுவாழ்வு மலர்கிறது, கடவுள் இருக்கின்றாரா? விஞ்ஞானத்திற்கு ஒரு கேள்வி, அவளுக்கு ஒருஆறுதல், கலாமன்றக் குடும்பம் 97/98 ஆகிய படைப்பாக்கங்கள் இம்மலரில் இடம் பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 28444).*

## 220. (2) கிறிஸ்தவ கீர்த்தனைகள், பக்திப்பாடல்கள்

### 12039

**மெதொடிஸ்த சபையாரின் தேவாராதனை ஒழுங்கு.** மெதொடிஸ்த சபை. *யாழ்ப்பாணம்: மெதொடிஸ்த சபை, 1வது பதிப்பு. 1935. (யாழ்ப்பாணம்: அமெரிக்கன் சிலோன் மிஷன் பிரஸ், தெல்லிப்பழை).*

*(4), 89 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 17x11 சமீ.*

Methodist Church Prayer and Service Book *என்ற ஆங்கில இணைத் தலைப்புடனும் வெளிவந்துள்ள கிறிஸ்தவ பிரார்த்தனை நூல். முக்கிய கவனிப்பு, இராப்போசன ஒய்வுநாள் ஆராதனை ஒழுங்கு, ஒய்வுநாள் ஆராதனை இரண்டாம் ஒழுங்கு, ஒய்வுநாள் ஆராதனை மூன்றாம் ஒழுங்கு, ஒய்வுநாள் ஆராதனை நான்காம் ஒழுங்கு, சங்கீதங்கள் வாசிக்கப்படும் கிரமம், விசேஷ செபங்கள், விசேஷ ஸ்தோத்திரங்கள், குழந்தைகளுக்குக் கொடுக்கும் ஞானஸ்நான முறைமை, வளர்ந்தவர்களுக்குக் கொடுக்கும் ஞானஸ்நான முறைமை ஆகிய 10 பொருட் தலைப்புகளின் கீழ் இந்த செப ஆராதனை நூல் உருவாக்கப்பட்டுள்ளது. (இந் நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 31790).*

### 12040

**வெற்றியின் வழி.** வண.டி.ஜீ.சோமசுந்தரம். நுகேகொடை: வண.டி.ஜீ.சோமசுந்தரம், *நிர்வாக உத்தியோகத்தர், நாற்சதுர சுவிஷேச சபை, 381/1, ஹைலெவல் வீதி, கங்கொடவில, 1வது பதிப்பு, டிசம்பர் 1992. (வத்தளை: ஸ்கான் கிராப்பிக்ஸ், 125/9, திம்பிரிகஸ்யாய வீதி).*

*(2), 75 பக்கம், விலை: ரூபா 35.00, அளவு: 17x13 சமீ.*

*இந்நூலில் வெற்றி வாழ்க்கைக்கான வழி இயேசு ஒருவரே என்னும் உண்மையும், வேதத்தில் காணப்படும் சில சத்தியங்களும் கவிதை வடிவில் கையாளப்பட்டுள்ளன. வெற்றி வாழ்க்கைக்கான வழி தெரியாத பலருக்கு வேதத்தை வாசித்து விளங்கிக்கொள்ள முடியாத பல சத்தியங்கள் இந்நூலில் வெற்றியின் வழி, உற்பத்திக் கும்மி, என்ன கைம்மாறு செய்வோம், தேவனவர் மெய்யாம், மீட்கும் மனிதன், தெரிந்துகொள்ளப்பட்ட பாத்திரம், உன் நிலையை நீயும் உணராயோ?, பரிந்து பேச ஒருவர், குடும்பம், மலைப் பிரசங்கம், வேதாகமப் பதிகம், நல்ல*

சமாரியன், அந்திக் கிறிஸ்து-1, அந்திக் கிறிஸ்து-2, சோமசுந்தர தேசிகர், ஞானகுரு பதிகம், செபமாலை ஆகிய தலைப்புகளில் அமைக்கப்பெற்ற இலகுவான கவிதைகளாகப் புனையப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 14768).

## 294.3 பௌத்தம்

### 12041

**புத்த தம்மம்: அடிப்படைக் கொள்கைகள்.** எஸ்.ஏ.எதிரிவீர (ஆங்கில மூலம்), வீ.சித்தார்த்தா (தமிழாக்கம்). சென்னை 600 008: பிக்கு யு.ரத்னபால, மகாபோதி சங்கம், 17, கென்னட் லேன், 1வது பதிப்பு, 1996. (சென்னை 600 007: குளோப் பிரின்டோகிராப்பர்ஸ், 14, முருகப்பா முதலி தெரு, புரசவாக்கம்).

vi, 91 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14.5 சமீ.

பௌத்தம் ஒருபுரண ஞான சமயமாகும். அதில் பெரும் கருணைக்கும் பேரறிவுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது. இந்நூலில் பௌத்த தம்மத்தின் அடிப்படைக் கொள்கைகளை களனிப் பல்கலைக்கழகத்தின் பௌத்தபீடத்தை சேர்ந்த கலாநிதி எஸ்.ஏ.எதிரிவீர அவர்கள் தனது ஆங்கில நூலில் விரிவாக எழுதியிருந்தார். அதன் தமிழாக்கம் பெரியார்தாசன் டாக்டர் வீ.சித்தார்த்தாஅவர்களால் இங்கு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில் புத்தரும் பவுத்தமும், புத்தரின் வாழ்க்கை, தம்மம், சில அடிப்படை போதனைகள், நான்கு உன்னத வாய்மைகள், உன்னத எண்வழிப் பாதை, மனித ஆளுமையின் பகுப்பாய்வு, இருப்பின் உண்மை நிலை, ஆன்மா இல்லை, படைப்புக் கடவுள் இல்லை, சார்புநிலைத் தோற்றுவாய், கம்மா (கர்மா), மறுபிறப்பு (மீள் உருவாக்கம்), வாழ்க்கையில் ஏற்றத்தாழ்வு, விடையளிக்கப்படாத வினாக்கள், மனத்தைப் பண்படுத்தல் (தியானம்), நிப்பாணம், அரஹந்த் (அறவோர்), சங்கம், அறவியல், அரசியல் சிந்தனைகள், பொருளாதாரச் சிந்தனைகள், சமூகப் போதனைகள், விடுதலை ஆகிய 24 அத்தியாயங்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 25261).

### 12042

**வெசாக் சிரிசர 1996.** ராஜா குருப்பு (பதிப்பாசிரியர்), ம.மு.உவைஸ் (உதவிப் பதிப்பாசிரியர்). கொழும்பு 7: பிரசுரக் கமிட்டி, அரசாங்க ஊழியர் பௌத்த சங்கம், 53/3, ஹோர்ட்டன் பிளேஸ், 1வது பதிப்பு, மே 1996. (கொழும்பு 10: ANCL, லேக் ஹவுஸ், டீ.ஆர்.விஜேவர்த்தன மாவத்தை).

(10), 118+(2) + 14, (10), 112 பக்கம், சித்திரங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

இலங்கையின் வெசாக் தினத்தை முன்னிட்டு 61ஆம் ஆண்டாக அரசாங்க ஊழியர் பௌத்த சங்கத்தின் பிரசுரக் கமிட்டியால் வெளியிடப்படும் மும்மொழி மூல ஆண்டு மலர். இதில் தமிழ்ப் படைப்பாக்கங்களாக மேதகு ஜனாதிபதி (சந்திரிக்கா பண்டாரநாயக்க) அவர்களின் வாழ்த்துச் செய்தி, சிந்திப்பதற்கான சில பயனுள்ள

விடயங்கள் (பீ.எம்.விஜேகூன்), அறமுரைக்கும் பௌத்த இந்து நூல்கள் இரண்டு: தம்மபதமும் திருக்குறளும் (த.கனகரத்தினம்), புத்தரும் சுஜாதையும் (ம.மு.உவைஸ்) ஆகிய நான்கு படைப்பாக்கங்கள் இடம்பெற்றுள்ளன. தமிழறிஞர் ம.மு.உவைஸ் இவ்விதழின் தமிழ்ப் பகுதிப் பதிப்பாசிரியராக 15 ஆண்டுகளாகப் பணியாற்றியவர். தனது 74ஆவது வயதில் மறைந்துவிட்டார். அவரது பங்களிப்புடன் வெளிவந்த இறுதி "வெசாக் சிரிசர" இதழ் இதுவாகும். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 15058).

## 294.5 இந்து சமயம்

### 12043

**அம்பிகையின் மகத்துவங்கள்.** தம்பிப்பிள்ளை காசிநாதன். யாழ்ப்பாணம்: தம்பிப்பிள்ளை காசிநாதன், ஓய்வுபெற்ற பிரதிப் பதிவாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, ஜுன் 1998. (யாழ்ப்பாணம்: ஏழாலை மஹாத்மா அச்சகம், கந்தர்மடம்).

(14), xiv, 77 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x14 சமீ.

கடவுளும் பக்தியும், சக்தி வழிபாடு, அம்பிகையின் திருவுருவங்கள், சுதுமலை அருள்மிகு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் கோவில், சைவ விரதங்கள் (ஒவ்வொரு மாதமும் அனுட்டிக்கப்படும் விரதங்கள் தனித்தனியாக மாத ஒழுங்கில் விளக்கப்பட்டுள்ளன), வழிபாட்டு முறைகள், திருக்கோயிலில் செய்யக்கூடாதவை, எனது அப்புவைப் பற்றிய நீங்காத நினைவலைகள், பாயிரம்-மானியம்பதி ஸ்ரீ தா.சுவாமிநாதன், திருவூஞ்சல்- மானியம்பதி வித்துவான் மகாஸ்ரீ அ.சுவாமிநாத முதலியார் ஆகிய 10 தலைப்புகளில் இந்நூலில் விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 33188).

### 12044

**இந்து சமய விழாக்களும் விரதங்களும்.** சோ.குஹானந்த சர்மா. கொழும்பு 6: ஆலயம் வெளியீட்டகம், குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு 2017. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

(4), 73 பக்கம், விலை: ரூபா 180., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-0881-23-9.

இந்து வித்தியாநிதி, சிவாகம பண்டிதர் பிரம்மஸ்ரீ சோ.குஹானந்த சர்மா அவர்கள் இலங்கை, கல்வி வெளியீட்டுத் திணைக்கள ஓய்வுநிலை பாடநூல் உற்பத்தி அதிகாரியாவார். புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவை சித்திவிநாயகர் தேவஸ் தானம், கொழும்பு சிவகாமி அம்பிகா சமேத பொன்னம்பலவாணேஸ்வரர் தேவஸ்தானம், திருக்கோணமலை பத்திரகாளி அம்மன் தேவஸ்தானம் ஆகியவற்றின் குருவாக விளங்கும் இவர் பத்துக்கும் மேற்பட்ட ஆன்மீக நூல் களை எழுதியுள்ளார். திறந்த பல்கலைக்கழகத்தின் பத்திரிகைத்துறை டிப்ளோமா பட்டம் பெற்றவர். இந்நூலில் ஆனந்தத் தாண்டவம் அமைந்த தைத்திங்கள், சிவ

சிந்தனையைத் தரும் மாசி, நல்வழி காட்டும் பங்குனி, புதுப் பொலிவைத் தரும் சித்திரை, அன்பும் அருளும் நிறைந்த வைகாசி, ஆனித் திருமஞ்சனம், குதூகலம் கொண்ட ஆடி, மங்கல வாழ்வு நல்கும் ஆவணி, அம்பாள் வழிபாடு கொண்ட புரட்டாதி, தத்துவங்களை விளக்கும் ஐப்பசி, சிவதரிசனத்தைக் காட்டும் கார்த்திகை, நற்பெரு வாழ்வை நல்கும் மார்கழி, விசேட விரதகாலத் திருமுறைகள், நல்வாழ்வுக்கான திருமுறைகள் ஆகிய தலைப்புகளில் அமைந்த 14 கட்டுரைகள் வாயிலாக இந்துசமய விரதங்கள், விழாக்கள் என்பவற்றை இந்நூலில் விளக்கி யிருக்கின்றார்.

## 12045

**இந்து பாரம்பரியம்.** வனஜா தவயோகராஜா (தொகுப்பாசிரியர்). கொழும்பு 3: கொழும்பு மகளிர் இந்துமன்றம், 15, பகதல வீதி, 2வது தமிழ்ப் பதிப்பு, 2005, 1வது ஆங்கிலப் பதிப்பு, 2004. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளூமெண்டால் வீதி).

xix, 324 பக்கம், புகைப்படங்கள், விளக்கப்படங்கள், தகடுகள், விலை: ரூபா 1000., அளவு: 22x14 சமீ.

இந்நூல் 2004இல் ஆங்கில மொழியில் Hindu Traditions என்ற தலைப்புடன் வெளியிடப்பட்டது. இரண்டாம் பதிப்பாக வெளிவரும் தமிழ்ப் பதிப்பில் இந்து சமயத்தில் பின்பற்றப்படும் எண்ணற்ற சடங்குகள் மற்றும் சம்பிரதாயங்களுக்கான தெளிவான விளக்கத்தை மூன்று இயல்களில் இந்நூல் வழங்குகின்றது. 1ஆவது இயலில் ஆலய வழிபாடு, கோபுர தரிசனம், கொடிமரம், ஆலய வழிபாடும் கோவிலும் விளக்கங்களும், இலங்கையில் புகழ்பெற்ற சைவத்திருத்தலங்கள், கும்பாபிஷேக முறைகளும் விளக்கங்களும், உற்சவங்கள், ஆடிவேல், இறைவனின் திருவுருவங்கள், விரதங்கள், திருவிளக்குப் பூசை, இராகுகாலப் பூசை, ஸ்ரீ சந்தோஷி மாதா பூஜை, விரதங்களும் விழாக்களும் ஆகிய விடயங்களும், 2ஆவது இயலில் குழந்தைப் பருவம், கிரியையுறுப்பியல், சைவ அநுட்டானம், சந்தியா வந்தனம், தீட்சை, பூப்புனித நீராட்டுவிழா, திருமணச் சடங்கு, புதுமனை புகுதல், சஷ்டியப்த பூர்த்தி, சைவ அபரக்கிரியை, ஆசௌச விளக்கம், இறப்பின் பின்வரும் பாவபுண்ணியங்கள், சிரார்த்த திதி ஆகிய விடயங்களும், 3ஆவது இயலில் ஓம், மந்திரங்கள், பஞ்சபுராணம், திருமுறைகள், சிவசின்னங்கள், தத்துவங்களும் இந்துப் பாரம்பரியம் பற்றிய கேள்வி-பதில்களும் விளக்கப்பட்டுள்ளன. இறுதியாக நான்காவது இயலில் தமது மன்றம் தொடர்பான செய்திகளும் தரப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 37252).

## 12046

**இந்து மதம் என்ன சொல்கிறது: பாகம் 4: இறை நோக்கிய பயணம்.** திருமதி. ஞானம் ஞானசேகர ஐயர். கொழும்பு 6: ஞானம் பதிப்பகம், 3B, 46ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, 2017. (அச்சக விபரம் தரப்படவில்லை).

viii, 136 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 20x14 சமீ., ISBN: 978-955-8354-71-1.

இது "இந்துமதம் என்ன சொல்கிறது?" என்னும் தொடரில் வெளிவந்துள்ள ஆசிரியரின் 4ஆவது நூல். இறை நோக்கிய பயணம் என்ற இந்நூலில் இறை தாளினை எய்துவதற்கான சில படிமுறைக் கருத்துக்களை பதினொரு கட்டுரைகளின் வாயிலாக வழங்கியிருக்கிறார். இந்துநெறி சன்மார்க்க நெறி, ஆட்டுவிக்கும் ஆசைகளை வேரறுத்தல், இறை நாம மகத்துவம், உள்ளத் தூய்மையுடனான அன்பு, இறைவழிபாட்டினை ஏற்றுவோம், அன்னை பராசக்தி வழிபாடு, நல்லொழுக்கம், மனிதனின் இரண்டு பக்கங்கள், மகத்தான மானுடனாய் மாற, தியானம், விஞ்ஞானம்-மெய்ஞ்ஞானம் ஆகிய தலைப்புகளில் இவை எழுதப் பட்டுள்ளன.

### 12047

**இந்து மதமும் கடவுள்கள் வரலாறும்.** கலகா பெ.தங்கராசா. கலகா: பெ.தங்கராசா, 1வது பதிப்பு, 1968. (கண்டி: நேஷனல் பிரிண்டர்ஸ், 241 கொழும்பு வீதி).

36 பக்கம், விலை: சதம் 50., அளவு: 12x9 சமீ.

கண்டி மத்திய மாகாண இந்து மாமன்றத் தலைவர் அ.துரைசாமிப்பிள்ளையின் அணிந்துரையுடன் வெளிவந்துள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 3089).

### 12048

**இந்துக்களின் சடங்குகள்.** இந்து மகளிர் மன்றம். யாழ்ப்பாணம்: அமரர் ஆ.சி. குணரெத்தினம் நினைவு வெளியீடு, 1வது பதிப்பு, 2006. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).

(32), 116 பக்கம், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14 சமீ.

இந்நினைவு மலரின் முதற்பகுதி அமரர் ஆ.சி.குணரத்தினம் அவர்களின் மறைவுக்கான அஞ்சலிகளின் தொகுப்பாக அமைந்துள்ளது. பின்னைய பகுதியில் இந்துக்கள் கடைப்பிடிக்கும் சடங்குகள் சம்பந்தமான துணுக்குச் செய்திகளின் தொகுப்பு இடம்பெற்றுள்ளது. இதிலுள்ள தகவல்கள் கொழும்பு இந்து மகளிர் மன்றத்தினரின் வெளியீடான இந்து பாரம்பரியம் இதழிலிருந்து பெற்றுத் தொகுக்கப் பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 37969).

### 12049

**இந்துப் பண்பாட்டு மரபுகள்.**ப.கோபாலகிருஷ்ண ஐயர். யாழ்ப்பாணம்: வித்தியா வெளியீடு, புதிய இல. 6, ஓடை ஒழுங்கை, வண்ணார்பண்ணை, 1வது பதிப்பு, மே 1992. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ லட்சுமி அச்சகம், 37, கண்டி வீதி, சுண்டிக்குளி).

viii, 145 பக்கம், விலை: ரூபா 90., அளவு: 19.5x14 சமீ.

இந்துப் பண்பாட்டு மரபுகளை வேத மரபு, ஆகம மரபு, புராண மரபு, கலை மரபு, ஆத்மீக மரபு ஆகிய தலைப்புகளில் வகைப்படுத்தி, அவற்றோடு தொடர்புடைய சில முக்கியமான சிந்தனைகள் இந்நூலில் இடம்பெறும் 11

கட்டுரைகளில் விளக்கம் பெறுகின்றன. வேத மரபு என்ற பிரிவின்கீழ் வேதங்கள் வழிவந்த இந்துப் பண்பாட்டு மரபுகள் என்ற கட்டுரை இடம்பெறுகின்றது. ஆகம மரபு என்ற பிரிவின்கீழ் சிவாகமங்கள், சிவாகம நெறியில் கும்பாபிஷேகக் கிரியை, காலந்தோறும் விநாயகர் வழிபாடு ஆகிய மூன்று கட்டுரைகளும், புராண மரபு என்ற பிரிவின் கீழ் இந்துப் பண்பாட்டின் கருவூலமான பதினெண் புராணங்கள், திருக்கோயில் வழிபாட்டில் மூர்த்தி தல தீர்த்த மரபு ஆகிய இரு கட்டுரைகளும், கலை மரபு என்ற பிரிவின் கீழ் விக்கிரகக் கலை மரபில் சிவலிங்கம், சிற்பக்கலை மரபு பேணும் சிற்பக் கலைஞன் ஆகிய இரு கட்டுரைகளும், ஆத்மீக மரபு என்ற பிரிவில் குருபாரம்பரியம், இந்து சமயம் காட்டும் ஆன்மீக வாழ்வு, இறப்பிற்கு முன்னும் பின்னும் ஆகிய மூன்று கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன. கலாநிதி ப.கோபாலகிருஷ்ண ஐயர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இந்து நாகரிகத் துறைத் தலைவராகப் பணியாற்றியவர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 13718).

## 12050

**இலங்கையில் கற்புடைமாதர் வழிபாடு.** க.இ.குமாரசாமி (தொகுப்பாசிரியர், புனைபெயர்: கோவைக்கிழார்). கோப்பாய்: க.இ.குமாரசாமி, அரவிந்த வாசம், கிளுவானை வீதி, 1வது பதிப்பு, 2005. (அச்சக விபரம் தரப்படவில்லை).

viii, 52 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14 சமீ.

இலங்கைத் தமிழர் பிரதேசங்களில் உள்ள "கற்புடை மாதர்" தெய்வங்களான கண்ணகையம்மன், திரௌபதி அம்மன், சீதையம்மன் ஆலயங்கள் தொடர்பாக "இலங்கைத் திருநாட்டின் இந்துக் கோயில்கள்" (இந்து கலாச்சார அமைச்சு வெளியீடு), இலங்கைச் சரித்திரம், மற்றும் பல ஆலய வெளியீடுகள், ஆய்வரங்கக் கட்டுரைகள் போன்றவற்றிலிருந்து தகவல்களைத் திரட்டித் தொகுத்து வழங்கியிருக்கிறார். சிலப்பதிகாரத்தில் கண்ணகி, இலங்கைச் சரித்திரம், இலங்கை - தமிழ்ப் பிரதேசங்களில் கண்ணகி கோயில்கள், பாரதத்தில் திரௌபதை, திரௌபதை அம்மன் கோயில்கள், பாரதத்தில் ஒரு கவிதை, இராமாயணத்தில் சீதை, சீதையம்மன் கோயில் நுவரெலியா, மட்டக்களப்பிற்கே உரிய கண்ணகியம்மன் வைகாசிப் பெருவிழா, சில குறிப்புக்கள், ஆதாரமான நூல்கள் ஆகிய பதினொரு இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 36719).

## 12051

**ஈழத்திருநாட்டின் திரௌபதி வழிபாடுகள்.** உடப்பூர் வீரசொக்கன். உடப்பு: இளம் தாரகை வட்டம், 1வது பதிப்பு, ஜுலை 2017. (அச்சக விபரம் தரப்படவில்லை).

xiii, 59 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 215., அளவு: 21x14.5 சமீ.

சக்தி வழிபாடுகள் இலங்கையில் முனைப்புப்பெற்றுவரும் இக்காலத்தில் உடப்பு, முந்தல், பாண்டிருப்பு போன்ற இடங்களில் திரௌபதி அம்மன் வழிபாட்டு முறையானது பாரம்பரியத்துடனும் மரபுகளைத் தழுவியும் நிகழ்த்தப்படுகின்றது.

இத்தகைய பின்புலத்தில் திரௌபதையம்மன் ஆலயங்களின் தொன்மைகள், சிறப்புகள், வழிபாட்டு முறைமைகள், அதையொட்டிய உற்சவ நடைமுறைகள், சடங்கு சம்பிரதாயங்கள் என்பவற்றை உள்ளீடாகக் கொண்டு இச்சிறுநூல் எழுதப்பட்டுள்ளது. இலக்கியத்தில் தாய்த் தெய்வ வழிபாடு, சக்தி வழிபாடு அதன் தொன்மை, திரௌபதை வழிபாட்டின் தோற்றம், இலங்கையில் தொன்மையும் சிறப்பும் கொண்டது திரௌபதையம்மன் வழிபாடு (மீள்பிரசுரம்: தினகரன், 09.01.2014), திரௌபதை அம்மன் ஆலய வழிபாடுகள், பாண்டிருப்பு திரௌபதை அம்மனின் தீப்பள்ளம் உற்சவம், உடப்பு திரௌபதி அம்மன் ஆலயமும் வழிபாட்டு முறைகளும், முந்தலில் தமிழ் பண்பாட்டை எடுத்தியம்பும் திரௌபதி உற்சவம் ஆகிய எட்டு இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

## 12052

**காயத்ரி என்றால் என்ன?** தவயோகி கண்ணையா. நுவரெலியா: ஸ்ரீ காயத்ரி சித்தர் ஆர்.கே.முருகேசு சுவாமிகள் ஸ்ரீலங்காதீஸ்வரர் ஆலயம், 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (அச்சக விபரம் தரப்படவில்லை).

16 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 14x11.5 சமீ.

இந்து சமயத்தவர்கள் பெருமதிப்புக் கொடுத்துள்ள காயத்ரி என்பதன் கருத்து என்ன என்பதை பலர் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை. ஏனெனில் புரிந்துகொண்டிருந்தால் யாரும் அதன் சாதனையைச் செய்யாமலிருக்க மாட்டார்கள் என்று கூறும் ஆசிரியர் இதில் காயத்ரி மந்திரம் என்பதென்னவென்று பல்வேறு சாஸ்திர ஆதாரங்களின் வழியாக விளக்குவதுடன் அவற்றின் ஆன்மீக உட்பொருள் என்ன என்பதையும் விளக்குகின்றார். காயத்ரியின் தத்துவங்களை தெள்ளத் தெளிவாக விளக்கும் தெய்வீகப் படைப்பாக தவயோகி கண்ணையா இதனை ஆக்கியிருக்கிறார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 729/42728).

## 12053

**சக்தியின் வடிவங்கள்.** வேலுப்பிள்ளை அம்பிகைபாகன். யாழ்ப்பாணம்: காங்கேயன் கலைக்கோட்டம், கலாபவனம், இல.6, தேவாலய வீதி, உடுப்பிட்டி, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2003. (யாழ்ப்பாணம்: கங்கை ஓப்செற், நாவலர் வீதி).

xii, 80, (20) பக்கம், 20 தகடுகள், விலை: ரூபா 250., அளவு: 20.5x14 சமீ.

சக்தி வழிபாட்டிற்கான தலங்களை சிந்துவெளியில் கண்டுபிடிக்கப்பட்ட முத்திரைகளிலும், தாயத்துகளிலும் இருந்து கண்டுகொள்ள முடியும் எனக்கூறும் ஆசிரியர், சக்தியின் மூன்று வெளிப்பாட்டு அம்சங்களாக துர்க்கை இலக்குமி சரஸ்வதி ஆகியோரை விரிவாக விளக்குகின்றார். சக்தியின் திருநாமங்கள் என்ற இயலில் மும்மூர்த்திகளை இயக்கும் ஆதிசக்தியாக விளங்கும் பராசக்தி பற்றிக் குறிப்பிடுகையில், ஒரு நாமம் ஒரு உருவம் ஒன்றுமில்லாத பரம்பொருளாகிய சக்தி உலக நன்மையின் பொருட்டு வெவ்வேறு வடிவங்களையும் நாமங்களையும் தாங்கி அருள்புரிந்து வருவதை இலக்கியங்களின் எடுகோளுடன் விளக்குகின்றார்.

சக்தியின் திருவிளையாடல்களாக மகிடாசுர சங்காரம், பண்டாசுரன் மீதான படையெடுப்பு, தக்கன் யாகம் ஆகியவற்றை விபரிக்கின்றார். நூலின் இறுதியில் 20 வகையான சக்தியின் வடிவங்களை வண்ணப்படங்களாக இணைத்துள்ளார். இந்நூல் சக்தி வடிவம்-தோற்றப் பின்னணி, சக்தியின் தோற்றம், சக்தியின் திரு நாமங்கள், சிற்ப நூல்களில் சக்தி வடிவங்கள், சக்தியின் சைவச் சார்பு வடிவங்கள், சக்தியின் வைணவ சார்பு வடிவங்கள், சக்தியின் திருவிளையாடல், சக்திபீடங்கள் ஆகிய எட்டு இயல்களில் எழுதப்பட்டுள்ளது. பின்னிணைப்புகளாக சக்தியின் ஆயிரம் திருநாமங்கள், துர்க்காசூக்தம், வடிவங்களின் விபரப்பட்டியல், படங்கள் ஆகியனவும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 33261).

### 12054

**சிவபுண்ணியமும் சங்காபிஷேகமும்.** ஸ்ரீலஸ்ரீ பழனி ஈசான சிவாச்சாரிய சுவாமிகள். திருக்கேதீச்சரம்: திருக்கேதீச்சர ஆலய திருப்பணிச் சபையார் வெளியீடு, 123, காலி வீதி, பம்பலப்பிட்டி, 1வது பதிப்பு, ஜுன் 1954. (கொழும்பு 11: ஸ்டான்கார்ட் பிரின்டர்ஸ், 196, செட்டியார் தெரு).

10 பக்கம், விலை: 25 சதம், அளவு: 18.5x12.5 சமீ.

சைவ சித்தாந்த சரபம் காசிவாசி ஸ்ரீலஸ்ரீ பழனி ஈசான சிவாச்சாரிய சுவாமிகள் எழுதிய இந்நூல், திருக்கேதீச்சர ஆலய திருப்பணிச் சபையாரின் 6ஆவது வெளியீடாக வெளியிடப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 3000/19631).

### 12055

**சைவக் கிரியைகளும் விரதங்களும்.** தங்கம்மா அப்பாக்குட்டி. தெல்லிப்பழை: செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் பிறந்தநாள் அறநிதியம், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், 2வது பதிப்பு, ஜனவரி 1991, 1வது பதிப்பு, ஏப்ரல் 1977. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).

52 பக்கம், விலை: ரூபா 20., அளவு: 18x12 சமீ.

"கிரியை" என்ற சைவ சமயச் சொல் பல்வேறு சந்தர்ப்பங்களில் அனுஷ்டிக்கப்படும் நியதிச் செயல்கள் என்னும் கருத்தில் சமயப் பிரமாண நூல்களில் வழங்கி வருகின்றது. கருமம், சடங்கு, பூசை என்பனவும் அதே பொருளைத்தரும் சொற்களாகும். சைவ சமயிகளுக்குரிய இத்தகைய கிரியைகள் பற்றி, சிவாகமங்களும் அவற்றைச் சார்ந்த உபாகமங்களும் இவற்றின் அடிப்படையில் எழுந்த பத்ததிகளும் விரித்துக் கூறுகின்றன. கிரியைகள் ஞானத்திற்கு மூலகாரணமாய் வீடு பேறாகிய பரமுத்திப்பேற்றை தரும். சைவக் கிரியை ஆன்மார்த்தக் கிரியை, பரார்த்தக் கிரியை என இரு வகைப்படும். ஆன்மார்த்தம் என்பது தன் நன்மை கருதிச் செய்யப்படும் சந்தியாவந்தனம், சிவபூசை போன்ற கிரியைகளைக் குறிக்கும். பரார்த்தம் என்பது பிறர் நன்மை கருதிச் செய்யப்படும் ஆலய வழிபாடுகளைக் குறிக்கும். இந்நூலில் ஆசிரியர் சைவக்கிரியைகளை திருக்கோயில், திருக்கோயில்

வழிபாடு, கோயிற் பண்பாடு, நித்திய நைமித்தியக் கிரியைகள், மகோற்சவம், கும்பாபிஷேகம், வீட்டில் நடைபெறும் கிரியைகள், திருமணக் கிரியை, அபரக்கிரியை, அந்தியேட்டி, சிரார்த்தம் ஆகிய தலைப்புகளின்கீழ் விளக்கி யிருக்கிறார். தொடர்ந்து விரதங்கள் என்ற பகுதியில், விநாயக விரதங்கள் (விநாயக சதுர்த்தி விரதம், விநாயக சஷ்டி விரதம்), சிவ விரதங்கள் (சிவராத்திரி விரதம், ஏகாதசி விரதம், பிரதோஷ விரதம், சோமவார விரதம்), சக்தி விரதங்கள் (நவராத்திரி விரதங்கள், கேதாரகௌரி விரதம், வரலட்சுமி விரதம்), கந்த விரதங்கள் (கார்த்திகை விரதம், வெள்ளிக்கிழமை விரதம், கந்தசஷ்டி விரதம்), கிரகதோஷ நிவர்த்தி ஆகிய விரதங்கள் பற்றி விளக்கியுள்ளார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 17602).

### 12056

**சோழப் பேரரசும் சமயப் பெருநெறிகளும்.** சி.பத்மநாதன், க.இரகுபரன் (பதிப்பாசிரியர்கள்). கொழும்பு 4: இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், 248, 1/1, காலி வீதி, 1வது பதிப்பு, 2009. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளூமெண்டால் வீதி).

xxii, 462 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: ரூபா 350., அளவு: 22x15 சமீ.

நான்கு பிரதான பிரிவுகளின்கீழ் ஈழத்து, தமிழகப் பேராசிரியர்களால் எழுதப்பெற்ற 31 ஆய்வுக் கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. சோழப் பேரரசும் சமயப் பெருநெறிகளும் என்ற தலைப்பில் மேற்படி அமைச்சினால் ஒழுங்கு செய்யப்பட்ட கருத்தரங்கில் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரைகள் இவை. அரசும் சமூகமும் என்ற முதற் பிரிவில் சோழர்காலச் சமூகக் கட்டமைப்பு (எ.சுப்பராயலு), அத்தரகுளியவிலுள்ள முதலாம் இராஜேந்திர சோழன் காலத்து கல்வெட்டு (சி. பத்மநாதன்), Artisans and Craftsmanship in the medieval Chola Milieu (விஜயா ராமசாமி), முதலாம் பராந்தக சோழனால் இலங்கையில் வெற்றிகொள்ளப்பட்ட நாகநாடு (ப.புஷ்பரட்ணம்), சோழநாட்டில் நீருரிமை (கி.இரா.சங்கரன்), சோழர் காலப் பெண்கள் (செ.யோகராசா) ஆகிய கட்டுரைகளும், சமயமும் தத்துவமும் என்ற இரண்டாம் பிரிவில் சோழப் பேரரசில் பௌத்தம் (சி.பத்மநாதன்), சைவத்திருமுறைத் தொகுப்பு (ந.முத்துமோகன்), வைணவ பாசரத் தொகுப்பு (அ.சண்முகதாஸ்), அடியார் வழிபாடு-தோற்றமும் வளர்ச்சியும் (க.இரகுபரன்), சோழர்காலத் திருமடங்கள் (சு.துஷ்யந்த்), சோழர் காலத்தில் சமஸ்கிருத நூல் களில் சைவ சித்தாந்தம் (கலைவாணி இராமநாதன்), திருவுந்தியார் திருக்களிற்றுப்பாடியார் நூல்களில் ஆணவம் (ந.முத்துமோகன்), சேக்கிழார் காட்டும் சைவசித்தாந்தம் (ஸ்ரீபிரசாந்தன்), கம்பராமாயணத்தில் இளையோடுகின்ற விசிட்டாத்வைதச் சிந்தனைகள் (ச.முகுந்தன்), இராமாநுசர் பணிகளும் தத்துவமும் (ஸ்ரீபிரசாந்தன்) ஆகிய கட்டுரைகளும், மொழியும் இலக்கியமும் என்ற மூன்றாவது பிரிவில் சோழர்காலத் தமிழ் வழக்கு (அம்மன்கிளி முருகதாஸ்), மொழியியல் நோக்கில் கம்பராமாயணம் (சுபதினி ரமேஷ்), சோழர்கால இலக்கண நூல்கள் ஒரு மீள்நோக்கு (மனோன்மணி சண்முகதாஸ்), சோழர்காலத் தமிழ் இலக்கண உருவாக்கம் (செல்வரஞ்சிதம் சிவசுப்பிரமணியம்), தமிழர் அழகியல் சோழர்கால

இலக்கண நூல்களை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு (ஏ.என். கிருஷ்ணவேணி), சோழர்காலச் சிற்றிலக்கியங்கள் -குலமுறை கிளத்தலும் அதன் பின்புலமும் (வ.மகேஸ்வரன்), குலோத்துங்க சோழன் குறித்த சிற்றிலக்கியங்கள் (வசந்தா வைத்தியநாதன்), சோழர் பெருமன்னர் கால சமஸ்கிருத இலக்கியம் (வி.சிவசாமி) ஆகிய கட்டுரைகளும் கோயில்களும் கலைகளும் என்ற இறுதிப் பிரிவில் சோழர்களின் மூன்று கோயில்கள் (சு.ராசவேலு), பாண்டிய நாட்டில் சோழர் கோயில்கள் (கு.சேதுராமன்), சோழர்கால இசை திருவிசைப்பா மாலை இசை (ஞானகுலேந்திரன்), சோழர்கால ஓவியக் கலை (சு.ராசவேலு), முற்காலச் சோழர் சிற்பக்கலை (வெ.வேதாசலம்), சோழர் காலத்து செப்புத் திருமேனிகள் (கு.சேதுராமன்), சோழர்கால அம்மன் விக்கிரகங்கள் (விக்னேஸ்வரி பவநேசன்) ஆகிய கட்டுரைகளும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 47020).

## 12057

**திருத்தொண்டர் திருநெறி: ஆய்வரங்கச் சிறப்பிதழ்-2017.** க.இரகுபரன், தேவகுமாரி ஹரன் (பதிப்பாசிரியர்கள்). கொழும்பு 4: இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், இந்துமத அலுவல்கள் அமைச்சு, 248, 1/1 காலி வீதி, 1வது பதிப்பு, 2017. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

(6), 106 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 24.5x18.5 சமீ., ISBN: 978-955-9233-46-6.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் 2017இல் ஒழுங்குசெய்திருந்த வருடாந்த கருத்தரங்கினையொட்டி வெளியிடப்பட்ட இச் சிறப்பு மலரில் பெரியபுராணம் தொடர்பாக ஏற்கெனவே புலமைசான்ற பெரியோரினால் எழுதப்பெற்றிருந்த சில கட்டுரைகளைத் தொகுத்து வழங்கியுள்ளனர். சேக்கிழார் நாயனார் வரலாறு (க.வெள்ளைவாரணன்), சேக்கிழார் நாயனார் காலம் (க. வெள்ளைவாரணன்), திருத்தொண்டர் புராணம் (மு.அருணாசலம்), மூலங்கட்கும் பெரிய புராணத்திற்கும் உள்ள வேறுபாடுகளும் அவற்றின் காரணங்களும் (மா.இராசமாணிக்கனார்), அடியார்கள் யார்? (அ.ச.ஞானசம்பந்தன்), பெரிய புராணத்தின் காப்பிய மாண்புகள் (அ.அ.மணவாளன்), பெரியபுராணம் (பாலூர் கண்ணப்ப முதலியார் (ஆங்கிலமூலம்), சா.திருவேணி சங்கமம் (தமிழாக்கம்) ஆகிய ஆய்வுக்கட்டுரைகள் இம்மலரில் தொகுத்துத்தரப்பட்டுள்ளன.

## 12058

**தொடக்குந் தொடர்பும் அல்லது ஆசௌச விளக்கம்.** சி.அப்புத்துரை, சு.செல்லத்துரை. கொழும்பு 6: வி.மனோன்மணி, யாழ்.தெல்லிப்பழை விஜயரத்தினம் விமலநாதன் அந்தியேட்டித் தின வெளியீடு, 27/12, பரக்கும்பா பிளேஸ், 1வது பதிப்பு, ஜூலை 2002. (கொழும்பு 13: கீதா பதிப்பகம்).

xxi, 56 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 19x13 சமீ.

ஆசௌசம் என்பது விதிவிலக்கு காலமாகும். ஏறத்தாழ எழுநூறு வருடங்களுக்கு முன்னர் சிதம்பரத்தில் வாழ்ந்த அகோர சிவாச்சாரியார் என்பவரினால் ஆகம நூல்களில் இருந்து தொகுக்கப்பட்டு எழுதப்பட்ட அகோரசிவ பத்ததி என்னும் சைவ சமயக் கிரியைகளுக்கான கை நூலில் இவை விளக்கப்பட்டுள்ளன. இலங்கையில் யாழ்ப்பாண மரபில் ஆலய உற்சவங்களும் மற்றும் கிரியைகளும் இந்த அகோரசிவ பத்ததி வழியாகவே நடாத்தப்படுகின்றன என்பது குறிப்பிடத் தக்கது. இவ்வாறே சோமசம்பு சிவாச்சாரியார் செய்த சோமசம்பு பத்ததி தமிழ் நாட்டில் வழக்கில் உள்ளது. சைவத்தின் இருபத்தெட்டு ஆகமங்களிலும் ஆசௌச விதி என்று ஒரு அத்தியாயம் உள்ளது. இவை விரிவாகவும் ஒன்றுக்கொன்று சில வேறுபாடுகளுடனும் இருப்பதால் மேற்சொன்ன தொகுப்பு நூல்களான பத்ததிகள் மிகவும் பயனுள்ள கைநூல்கள் ஆகின்றன. ஒரு குடும்பத்தில் மரணம், பிறப்பு, பூப்பு போன்ற நிகழ்வுகள் நிகழ்ந்தவிடத்து இக்காலத்தில் கோயில் வழிபாடு, தனிப்பட்ட ஆத்மார்த்த பூசை, அதிதிகளை வரவேற்று உபசரித்தல் போன்ற கடப்பாடுகளில் இருந்து அக்குடும்ப அங்கத்தவர்களுக்கு விதி விலக்கு அளிக்கப் படுகின்றது. இது அவர்களின் அதீத துக்கம் அல்லது சந்தோஷத்தைக் கொண்டாடும் காலமாகும். பாதிக்கப்பட்டவர்கள் இவ்விதமான மன அதிர்வுகளிலிருந்து தமது வழமை நிலைக்குத் திரும்பும்வரை அவர்களுக்கு அளிக்கப்படும் விடுமுறையே ஆசௌச காலம் ஆகும். இந்நூலில் ஆசௌசம் பற்றிய கருத்துக்களை, விதிமுறை களை இலகுபடுத்தித் தந்துள்ளனர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 24551).

## 12059

**பக்தர்களுக்கு சுவாமியின் வழிகாட்டல்கள்.** பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபா பஜனை நிலையம். பருத்தித்துறை: பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபா பஜனை நிலையம், வியாபாரிமூலை, 1வது பதிப்பு, 1993. (பருத்தித்துறை: விநாயகர் தரும நிதிய அச்சகம், புலோலி மேற்கு).

(8), 42 பக்கம், விலை: ரூபா 35., அளவு: 21x15 சமீ.

பகவான் ஸ்ரீ சத்யசாயி நிறுவனங்களில் வெவ்வேறு தொண்டுகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் பலதரப்பட்ட தீவிர பணியாளர்களுக்கு இந்நூல் ஒரு கைந் நூலாகும். பகவான் பாபாவின் ஒன்பது ஒழுக்கக் கோவையும் இங்கு விபரமாக விளக்கப்பட்டுள்ளன. பத்து அன்புக் கட்டளைகள், பஜனை ஒழுங்குமுறை, பஜனை நடைமுறைகள், ஆத்மீக சாதனைகள், ஸ்ரீ ஸத்யஸாயி ஸுப்ரபாதம், அஷ்டோத்திர சத நாமாவளி, ஆகார நிவேதன மந்திரம், ஸாயிராம மங்களம் ஆகிய ஒன்பது அத்தியாயங்களின்கீழ் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 37662).

**12060**

**வழிபாடு.** ப.கணபதிப்பிள்ளை. யாழ்ப்பாணம்: அமரர் பண்டிதர் ப.கணபதிப்பிள்ளை நினைவுமலர்க் குழு, 1வது பதிப்பு, பெப்ரவரி 2003. (யாழ்ப்பாணம்: திருவள்ளுவர் ஓப்செட் பிரின்டிங், நல்லூர்).

vi, 28 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14.5 சமீ.

தாம் காலம் முழுவதும் பெற்ற சைவசமயம் சார்ந்த நிலையான உண்மைகளதும் அனுபவங்களதும் களஞ்சியமாக இந்நூலை எழுதியுள்ளார். சைவசமய சாதகர்கள் அறிந்து கடைப்பிடிக்க வேண்டிய அனைத்து விடயங்களும் இச்சிறிய நூலிலே அடங்கியுள்ளன. இந்நூலை எழுதி முடித்த சில காலங்களில் 22.02.2002 அன்று நூலாசிரியர் இறைபதமெய்திவிட்டார். அன்னாரின் மறைவின் முதலாம் ஆண்டு நிறைவின் போது 12.2.2003 அன்று இந்நூல் கலாநிதி க.சொக்கலிங்கம் அவர்களின் அணிந்துரையுடன் வெளியிடப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 31839).

**12061**

**விரத நியதிகள்.** பொன் தெய்வேந்திரன். இணுவில்: இணுவை சிவகாமி அருள்நெறி மன்றம், சிவகாமிபுரம், இணுவை கிழக்கு, 1வது பதிப்பு, நவம்பர் 1994. (யாழ்ப்பாணம்: அருண் அச்சகம்).

(4), 54 பக்கம், விலை: ரூபா 45.00, அளவு: 21.5x15 சமீ.

மாத ஒழுங்கில் சைவர்கள் அனுஷ்டிக்கும் பின்வரும் விரதங்கள் பற்றியும் அவற்றின் பலன்கள் பற்றியும் இந்நூல் பிரதானமாகக் கூறுகின்றது. தைப்பொங்கல், தைப்பூசம், மகா சிவராத்திரி, மாசி மகம், மாமாங்கம்-மகாமங்கம், பங்குனித் திங்கள், பங்குனி உத்திரம், புதுவருடப் பிறப்பு, சித்திரா பூரணை, சித்திரை அட்டமி, வைகாசி விசாகம், ஆனி உத்திரம், ஆடிப்பிறப்பு, ஆடிப்பூரம், ஆடி அமாவாசை, ஆடிச் செவ்வாய், வைரவ விரதம், விநாயக சதுர்த்தி, ஆவணி ஞாயிறு, புரட்டாதிச் சனி, நவராத்திரி மாளயம், கேதார கௌரி விரதம், தீபாவளி, கந்தசஷ்டி, ஐப்பசி வெள்ளி, ஏகாதசி விளக்கீடு, கார்த்திகை சோமவாரம், விநாயகர் சஷ்டி விரதம், திருவெம்பாவை, பிரதோஷம், அபிராமிப்பட்டர் விழா, திருவிளக்குப் பூசை, நவக்கிரக வணக்கம்/விரதம் ஆகியவற்றை அனுஷ்டிக்கும் முறைகளையும், அவற்றால் விளையும் பலன்களையும் விளக்குகின்றது. மேலும் ஆலய வழிபாடு, மகோற்சவம், கதிர்காம உற்சவம், ஆடிவேல் உற்சவம் ஆகியவற்றின் நியதிகளையும், இறுதியில் விரத காலத்தில் செய்யக்கூடாத/செய்யக்கூடிய காரியங்களையும், கிழமைக்குரிய பூக்கள், பச்சிலைகள் போன்ற தகவல்களையும் இந்நூல் தருகின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 14197).

### 12062

**வினை தீர்க்கும் விநாயகர்**. *கந்தவனம் தங்கவேலாயுதன். மட்டக்களப்பு: க. தங்கவேலாயுதன், உருத்திரபதி, குருக்கள்மடம், 1வது பதிப்பு, டிசம்பர் 1992. (மட்டக்களப்பு: புனித செபஸ்தியார் அச்சகம், 65, லேடி மனிங் டிறைவ்).*

xvi, *144 பக்கம், விலை: ரூபா 101., அளவு: 18*x*12 சமீ.*

*கடவுள் நம்பிக்கை, இந்து சமயத்தின் சிறப்பியல்புகள், விக்கிரக வழிபாட்டில் விநாயகர், ஆலய தரிசனமும் அமைப்பும், விநாயகர், விநாயகர் தோற்றம், விநாயகர் திருவுருவ விளக்கம், விநாயகரை எளிய முறையில் வழிபடல், விநாயக வழிபாட்டின் தொன்மை, விநாயக நாமங்களும் விளக்கங்களும், முதல்வன் விநாயகன், வெளிநாடுகளில் விநாயக வணக்கம், ஞானக் கொழுந்து, மகா கணபதியின் 32 திவ்விய தரிசனங்கள், விநாயகர் விரும்பும் நிவேதனப் பொருட்கள் ஆகிய தலைப்புகளில் விநாயகர் வழிபாடு பற்றிய பல்வேறு தகவல்கள் இந்நூலில் தரப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 14809).*

**மேலும் பார்க்க: 13A10,12525,12832,12883,12962,12993**

## 294.5(1) இந்து சமய பாடநூல்கள்

### 12063

**இந்து சமயபாட வினா-விடை.** *க.கந்தசாமி. யாழ்ப்பாணம்: ஸ்ரீகாந்தா அச்சகம், 213, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, 1969. (யாழ்ப்பாணம்: ஸ்ரீகாந்தா அச்சகம்).*

*(2), 136 பக்கம், விலை: ரூபா 2.00, அளவு: 21.5*x*14 சமீ.*

*கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண வகுப்புக்குரிய இந்துசமய பாட வினா-விடை. 1969 டிசம்பரிலும் அதன் பின்னரும் நிகழவிருக்கும் பரீட்சைகளுக்குரிய புதிய பாடத்திட்டத்திற்கு அமைவாக எழுதப்பட்ட நூல். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 40367).*

### 12064

**ஒரு சைவ வாசகம்: தமிழ் மொழிபெயர்ப்புடனானது.***சி.பொன்னம்பலம். காரைநகர்: கூத்தப்பிரான் பதிப்பகம், 1வது பதிப்பு, மே 2008. (காரைநகர்: கூத்தப்பிரான் பதிப்பகம்).*

*128 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 200., அளவு: 22*x*14.5 சமீ.,* ISBN: *978-955-1472-13-9.*

*புலம்பெயர்ந்த சைவத் தமிழ்ச் சிறார்களை மனதிற்கொண்டு சைவ சமயம் பற்றிய அடிப்படை அறிவினை ஆங்கிலத்திலும் தமிழ் மொழிமாற்றத்துடனும் இந்நூல் வழங்குகின்றது. சிதம்பரம், ஈழத்துச் சிதம்பரம், தமிழ் எழுத்துகளுக்கிணையான ஆங்கில எழுத்துக்கள், சைவ சமயம் தொடர்பான அருஞ்சொல்லகராதி, கடவுளை ஏன் வழிபடவேண்டும்?, வேதம், மாணிக்கவாசகர், தேவாரம், ராஜராஜசோழன்,*

ஆறுமுக நாவலர், சிவலிங்கம், திருக்கோணேஸ்வரம், தைப்பொங்கல், உருத்திராட்ஷம், தீபங்களும் விளக்குகளும், கண்ணப்பர், மண்டூர், முன்னீஸ்வரம், காலி சிவன் கோவில் என இன்னோரன்ன 51 தலைப்புகளில் இந்நூல் தகவல்களை தமிழ் ஆங்கில மொழிகளில் பதிவுசெய்து வைத்திருக்கிறது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 47392).

## 12065

**சைவ சமயம்: க.பொ.த.(சாதாரணம்) புதிய பாடத்திட்டத் தொகுதி 1974-75.** விவேகானந்த சபை. கொழும்பு: விவேகானந்த சபை வெளியீடு, 1வது பதிப்பு, ஆவணி 1973. (கொழும்பு 11: அவ்ரா பிரின்டிங் வேர்க்ஸ், 19, செட்டியார் தெரு).

118+102+xxvii+23 பக்கம், விலை: ரூபா 4.00, அளவு: 20.5x14 சமீ.

கொழும்பு விவேகானந்த சபையினரின் சார்பில் ச.சுப்பிரமணியம், இ.செல்லத்துரை, க.கந்தசாமி ஆகியோர் எழுதித் தொகுத்து வழங்கியுள்ள இந்நூல், சைவ சமய வரலாறு, பன்னிரு திருமுறைகள், சைவ சித்தாந்த சாத்திரங்கள், ஈழத்திற் சைவம், சைவாதீனங்களின் தோற்றம்-வளர்ச்சி-சேவை, ஆகிய பாடங்களை முதலாம் பகுதியிலும், சைவசித்தாந்த தத்துவங்களான பதி, பசு, பாசம் (ஆணவம்-கர்மம்-மாயை) ஆகியவற்றை இரண்டாம் பகுதியிலும், சைவ சாதனைகள் விரதங்கள் ஆகியவற்றை மூன்றாம் பகுதியிலும், சைவக்கிரியைகளான திருமணக் கிரியைகள், அபிஷேகம், அபரக் கிரியைகள், சிரார்த்தம் ஆகியவற்றை நான்காம் பகுதியிலும், திருவருட்பாக்களான தேவாரம், திருவருட்பயன், சமயாசாரியார் சந்தனாசாரியார் வரலாறு என்பவற்றை ஐந்தாம் பகுதியிலும் விளக்குகின்றது. சுருக்க விடைப் பயிற்சி வினாக்கள், விரிவான விடைப்பயிற்சி வினாக்கள் ஆகியன இறுதிப் பகுதியில் காணப்படுகின்றன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 25488).

## 12066

**சைவ நெறி: ஒன்பதாம் வகுப்பு.** பதிப்புக்குழு. கொழும்பு 10: கல்வி வெளியீட்டுத் திணைக்களம், மாளிகாவத்தைச் செயலகம், 7வது பதிப்பு, 1988, 1வது பதிப்பு, 1980, 2வது பதிப்பு, 1982, 3வது பதிப்பு, 1983, 4வது திருத்திய பதிப்பு, 1985, 5வது பதிப்பு, 1986, 6வது பதிப்பு, 1987. (கொழும்பு: திசர அச்சகம், தெகிவளை).

xii, 144 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x13.5 சமீ.

இந்நூலில் சைவத்தின் தொன்மை (சிந்துவெளி நாகரிகம், வேதங்கள், உபநிடதங்கள், சங்க நூல்கள்), நால்வர் (சம்பந்தர் வரலாறு, நாவுக்கரசர் வரலாறு, சுந்தரர் வரலாறு, மாணிக்கவாசகர் வரலாறு), தோத்திரப் பாடல்கள் (திருமுறைகள், பிற்காலத் தோத்திரப் பாடல்கள்), வாழ்க்கையிற் சைவநெறி (ஆகமம் காட்டும் நெறி, சமய தீட்சை, குரு இலிங்க சங்கம வழிபாடு, திருக்கோவிலும் திருவிழாவும், விரதங்கள், பண்டிகைகள்) ஆகிய நான்கு பிரிவுகளில் ஒன்பதாம் வகுப்புக்குரிய சைவநெறிப் பாடத்திட்டத்துக்கு அமைவாக பாடங்கள் வகுத்து விளக்கப்பட்டுள்ளன. 1985ஆம் ஆண்டுத் திருத்திய பதிப்புக்கான ஆலோசனைக் குழுவில் பேராசிரியர் ஆ.

சதாசிவம், கலாநிதி அ.கந்தையா ஆகியோருடன் செ.வேலாயுதபிள்ளை, பெ.கணநாதபிள்ளை, வே.வல்லிபுரம், திருமதிகள் ச.இலிங்கம், ப.சோமகாந்தன், சொர்ணவதி மாசிலாமணி ஆகியோர் இயங்கியிருந்தனர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 34568).

## 12067

**சைவ நெறி: 11ஆம் தரம்.** சொர்ணவதி மாசிலாமணி (பதிப்பாசிரியர்). இலங்கை: கல்வி வெளியீட்டுத் திணைக்களம், இசுறுபாயா, பத்தரமுல்லை, 18ஆவது பதிப்பு, 1999, 1வது பதிப்பு, 1980. (இலங்கை: அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்).

x, 184 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

புதிய கல்விச் சீர்திருத்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் எழுத்தாளர் குழுவினால் தயாரிக்கப்பட்ட இந்நூலில் 22 பாடத் தலைப்புக்களில் பதினொராம் தரத்திற்குரிய இந்து சமய பாடங்கள் தொகுக்கப்பட்டுள்ளன. எழுத்தாளர் குழுவில் என்.சண்முகலிங்கம், வி. சிவராஜசிங்கம், க.சொக்கலிங்கம், கு.குருசுவாமி, செ.வேலாயுதபிள்ளை ஆகியோர் பணியாற்றினர். பதிப்பாசிரியராக ஐ.தம்பிமுத்து பணியாற்றினார். ஈழத்திற் சைவம் (எங்கள் சைவ பாரம்பரியம், சிவாலயங்கள், அம்மன் கோயில்கள், பிள்ளையார் கோயில்கள், முருகன் கோயில்கள், திருமால் கோயில்கள், வைரவர் வழிபாடு, எங்கள் ஞானியர்), அறுவகைச் சமயங்கள் (சைவம், வைணவம், சாக்தம், காணபத்தியம், கௌமாரம், சௌரம்), சமய இலக்கியம் (பெரிய புராணத்தில் ஒரு காட்சி-தடுத்தாட்கொண்ட புராணம், கந்தபுராணத்தில் ஒரு காட்சி-திருப்பெரு வடிவம்), அன்புநெறி (சைவநாற்பாதங்கள், அடியார் கண்ட அன்புநெறி), அறிவுநெறி (மெய்கண்ட சந்தானம், சித்தாந்த சாத்திரங்கள், சைவமெய்யியல் தத்துவம், திருவருட்பயன்) ஆகிய ஐந்து பிரிவுகளில் வகுத்துத் தரப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 37450).

## 12068

**சைவ போதினி-இரண்டாம் வகுப்பு.** விவேகானந்த சபை. கொழும்பு 13: விவேகானந்த சபை, 34, விவேகானந்த மேடு, 1வது பதிப்பு, 1973. (கொழும்பு 12: ஒட்டோ அச்சகம், 122, சென்ட்ரல் ரோட்).

64 பக்கம், சித்திரங்கள், விலை: 60 சதம், அளவு: 18x12.5 சமீ.

விவேகானந்த சபையினர் தாங்கள் அகில இலங்கை அடிப்படையில் ஆண்டுதோறும் நடத்திவரும் சைவ சமய பாடப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்குப் பயனுற வேண்டியும், இலங்கை அரசாங்க கல்வித் திணைக்களத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய பாடத்திட்டத்திற்கு அமைவாகவும் இந்நூல் எழுதப்பட்டது. இரண்டாம் வகுப்பு மாணவர்களுக்குரிய இந்நூலில் சிவபெருமான் பன்றிக் குட்டிகளுக்குப் பால் கொடுத்தமை, உமாதேவியார் குழந்தைக்குப் பால் கொடுத்தமை, தேவாரம், கடலில் மிதந்த அப்பர், தேவாரம், நல்லூர்க் கந்தசுவாமி

கோவில், கொன்றை வேந்தன், தேவாரம், பிட்டுவாணிச்சி அம்மையார், திருவாசகம், கோயிலுக்குச் செல்லுதல், கந்தசுவாமியாரும் ஔவையாரும், சிவபெருமான் குண்டோதரனுக்கு அன்னம் இட்டமை, வெவ்வேறு முறையான வழிபாடு, புராணம், பிள்ளையாரும் அகத்திய முனிவரும், கொன்றை வேந்தன் ஆகிய 17 பாடங்களை இந்நூல் கொண்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 24720).

## 12069

**சைவ போதினி-மூன்றாம் வகுப்பு.** விவேகானந்த சபை. கொழும்பு 13: விவேகானந்த சபை, 34, விவேகானந்த மேடு, 9வது பதிப்பு, ஜனவரி 1975, 1வது பதிப்பு, 1967, 2வது பதிப்பு, 1968, 3வது பதிப்பு, 1969, 4வது பதிப்பு, 1970, 5வது பதிப்பு, 1971, 6வது பதிப்பு, 1971, 7வது பதிப்பு, 1972, 8வது பதிப்பு, 1973. (நாவலப்பிட்டி: ஸ்ரீ ஆத்மஜோதி அச்சகம்).

(4), 54 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 1.10, அளவு: 18x12.5 சமீ.

விவேகானந்த சபையினர் தாங்கள் அகில இலங்கை அடிப்படையில் ஆண்டுதோறும் நடத்திவரும் சைவ சமய பாடப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்குப் பயனுற வேண்டியும், இலங்கை அரசாங்க கல்வித் திணைக்களத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய பாடத்திட்டத்திற்கு அமைவாகவும் இந்நூல் எழுதப்பட்டது. திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம், கோவில்களுக்குச் செல்லுதல், சரியை வழிபாடு, கோயிலைச் சுத்தம் செய்தல், அப்பர் சுவாமிகள் தேவாரம், சிவபிரான் கல்லானைக்குக் கரும்பு தீற்றியது, சிவபிரான் பாலனாய் வந்து தொட்டிலிற் கிடந்தமை, சுந்தமூர்த்தி நாயனார், கந்தசுவாமியார் பிரமதேவருக்குப் படிப்பித்தது, சிவபெருமான் மண்சுமந்தமை, திருவாசகம், கௌசிக முனிவர், பட்டினத்துப் பிள்ளையார், யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரன் கோவில், திருமந்திரப் பாடல், திருமுருகாற்றுப்படை, திருப்புகழ், உலகநீதி, வினாத்தாள் 1972-1973 ஆகிய 19 பாடத் தலைப்புகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 9608).

## 12070

**சைவ போதினி: நான்காம் ஐந்தாம் வகுப்புகள்.** விவேகானந்த சபை. கொழும்பு 7: இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், 98, வோட் பிளேஸ், 1வது மீள்பதிப்பு, ஓகஸ்ட் 1998. (கொழும்பு 8: அரசாங்க அச்சகத்திணைக்களம், 118, பேஸ்லைன் வீதி).

viii, 134 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

சைவபோதினியின் மூலப்பதிப்பு, கொழும்பு விவேகானந்த சபையாரால் 1972, 1979 ஆம் ஆண்டுகளில் வெளியிடப்பட்டவை. தற்கால அறநெறிப் பாடசாலைகளின் மாணவர்களின் பயன்கருதி நான்காம் ஐந்தாம் வகுப்புகளும் இணைந்ததாக 54 பாடங்களுடன் அறநெறிப் பாடசாலைகளுக்கான இலவச வெளியீடு இல. 7 ஆக

இந்நூல் இணைந்த பதிப்பாக வெளியிடப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 29062).

### 12071

**சைவ போதினி-ஐந்தாம் வகுப்பு.** விவேகானந்த சபை. கொழும்பு 13: விவேகானந்த சபை, 34, விவேகானந்த மேடு, 7வது பதிப்பு, டிசம்பர் 1972, 1வது பதிப்பு, செப்டெம்பர் 1960, 2வது பதிப்பு, நவம்பர் 1961, 3வது பதிப்பு, ஜுலை 1964, 4வது பதிப்பு, பெப்ரவரி 1967, 5வது பதிப்பு, நவம்பர் 1969, 6வது பதிப்பு, டிசெம்பர் 1971. (கொழும்பு 12: சுதந்திரன் அச்சகம்).

(4), 96 பக்கம், சித்திரங்கள், விலை: 95 சதம், அளவு: 18x12.5 சமீ.

விவேகானந்த சபையினர் தாங்கள் அகில இலங்கை அடிப்படையில் ஆண்டுதோறும் நடத்திவரும் சைவ சமய பாடப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்குப் பயனுற வேண்டியும், இலங்கை அரசாங்க கல்வித் திணைக்களத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய பாடத்திட்டத்திற்கு அமைவாகவும் இந்நூல் எழுதப்பட்டது. திருஞானசம்பந்தர் தேவாரம், அப்பூதியடிகள், கண்ணப்ப நாயனார், திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம், நம்பியாண்டார் நம்பி, ஆற்றிலிட்ட பொன்னைக் குளத்தில் எடுத்தமை, கல் தோணியாக மிதந்தது, சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம், சம்பந்தர் பொற்றாளமும் முத்துப் பல்லக்கும் பெற்றமை, நரியைப் பரியாக்கியது, மாணிக்கவாசகர் திருவாசகம், சைவசமயம், சிவபெருமான், திருக்கேதீச்சரம், திருவிசைப்பா (சேந்தனார்), நல்வினை தீவினை, திருநீறு, திருக்கோணேஸ்வரம், திருப்பல்லாண்டு (சேந்தனார்), நித்திய கருமம், கோயில்களுக்குச் செல்லுதல், கோயிலைச் சுத்தஞ்செய்தல், பூந்தோட்டத் தொண்டு, திருவிளக்கிடுதல், திருப்புராணம் (கந்புராணம், விருத்தாசல புராணம்), முன்னேஸ்வரம், கதிர்காமம், திருப்புகழ் (அருணகிரிநாதர்), நல்லூர்க் கந்தசுவாமி கோவில், செல்வச் சந்நிதி, நீதிப் பாடல்கள் (நல்வழி) ஆகிய 31 பாடங்களை இந்நூல் கொண்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 9573).

### 12072

**சைவ போதினி கீழ்ப்பிரிவு 1 (ஆறாம் வகுப்புக்குரியது).** நூலாக்கக்குழு. கொழும்பு 13: விவேகானந்த சபை, 34, விவேகானந்த மேடு, 1வது பதிப்பு, 1966. (நாவலப்பிட்டி: ஸ்ரீ ஆத்மஜோதி அச்சகம்).

(4), 180 பக்கம், விளக்கச் சித்திரங்கள், விலை: ரூபா 1.55, அளவு: 18x12.5 சமீ.

கொழும்பு விவேகானந்த சபை நடத்தும் அகில இலங்கைச் சைவசமய பாடப் பரீட்சைக்குரிய புதிய பாடத்திட்டத்திற்கு உதவும் வகையில் தயாரிக்கப்பட்ட நூல். பொது அறிவு, நன்னெறி, திருக்குறள், இளையான்குடி மாறநாயனார், மார்க்கண்டேயர், சிவபெருமான் சோதிப்பிழம்பாய்த் தோன்றியது, திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் சர்ப்பம் தீண்டி இறந்தவனை எழுப்பியருளியது, பூசலார் நாயனார், கண்ணப்ப நாயனார், திலகவதியார், சுந்தரமூர்த்தி நாயனார்

முதலை உண்ட பாலகனை மீட்டருளியது ஆகிய 11 உரைநடைக் கட்டுரைகளும், திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் தேவாரம், திருநாவுக்கரசு நாயனார் தேவாரம், சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, புராணம், திருப்புகழ், பட்டினத்தார் பாடல் ஆகிய அருட்பாடல்களும் இந் நூலில் சேர்க்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 9566).

## 12073

**சைவ போதினி: பாலர் பிரிவு- இரண்டாம் மூன்றாம் வகுப்புகள்.** விவேகானந்த சபை. கொழும்பு 4: இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், 248, 1/1, காலி வீதி, 1வது பதிப்பு, டிசம்பர் 2001. (கொழும்பு 11: அனுஷ் பிரின்டர்ஸ், 271/5, செட்டியார் தெரு).

70 பக்கம், ஓவியங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x19 சமீ.

சைவபோதினியின் மூலப்பதிப்பு, கொழும்பு விவேகானந்த சபையாரால் எழுபதுகளில் வெளியிடப்பட்டவை. தற்கால அறநெறிப்பாடசாலைகளின் மாணவர்களின் பயன்கருதி இரண்டாம் மூன்றாம் வகுப்புகளும் இணைந்ததாக 35 பாடங்களுடன் அறநெறிப்பாடசாலைகளுக்கான இலவச வெளியீடு இல.9 ஆகிய இந்நூல் இணைந்த பதிப்பாக வெளியிடப்பட்டுள்ளது. சிவபெருமான் பன்றிக் குட்டிகளுக்குப் பால் கொடுத்தமை, உமாதேவியார் குழந்தைக்குப் பால் கொடுத்தமை, தேவாரம், கடலில் மிதந்த அப்பர், தேவாரம், நல்லூர்க் கந்தசுவாமி கோவில், கொன்றை வேந்தன், தேவாரம், பிட்டுவாணிச்சி அம்மையார், திருவாசகம், கோயிலுக்குச் செல்லுதல், கந்தசுவாமியாரும் ஔவையாரும், சிவபெருமான் குண்டோதரனுக்கு அன்னம் இட்டருளியமை, வெவ்வேறு முறையான வழிபாடு, புராணம், பிள்ளையாரும் அகத்திய முனிவரும், கொன்றை வேந்தன், திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம், கோவில்களுக்குச் செல்லுதல், சரியை வழிபாடு, கோயிலைச் சுத்தம் செய்தல், அப்பர் சுவாமிகள் தேவாரம், சிவபிரான் கல்லானைக்குக் கரும்பு தீற்றியது, சிவபிரான் பாலனாய் வந்து தொட்டிலிற் கிடந்தமை, சுந்தரமூர்த்தி நாயனார், கந்தசுவாமியார் பிரமதேவருக்குப் படிப்பித்தது, சிவபெருமான் மண் சுமந்தமை, திருவாசகம், கௌசிக முனிவர், பட்டினத்துப் பிள்ளையார், யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரன் கோவில், திருமந்திரப் பாடல், திருமுருகாற்றுப்படை, திருப்புகழ், உலகநீதி ஆகிய பாடங்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. (இந் நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 29171).

## 12074

**புதிய சைவ சமயபாடம்-8 (1978 முதல்).** தமிழவேள் (இயற்பெயர்: க.இ.கந்தசாமி). கொழும்பு 6: விஜயலட்சுமி புத்தகசாலை, 248, காலி வீதி வெள்ளவத்தை, 1வது பதிப்பு, 1978. (கொழும்பு 12: குமரன் அச்சகம், 201, டாம் வீதி).

60 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x13 சமீ.

*1978 முதல் பாடசாலைகளில் சைவ சமயத்தை பயிற்றுவிப்பதற்கான பாட நூலாக இது வெளிவந்துள்ளது. எட்டாம் வகுப்பிற்குரிய பாடவிதானத்தை அடிப்படையாகக் கொண்டு, சைவசமய வரலாறு (சைவசமயம் என்பதன் பொருள், சிந்துவெளிக் காலம், வேத காலம், ஆகம காலம், சங்க காலம், பக்திநெறிக் காலம், பிற்காலம்), சைவ சமயத் தமிழ் முதநூல்கள் (திருமுறை கண்ட வரலாறு, திருமுறைகளின் பகுப்பு, திருமுறைப் பெருமை, மெய்கண்ட நூல்களின் சிறப்பு, மெய்கண்ட நூல்களும் ஆசிரியர்களும், மெய்கண்ட நூல்களின் அமைப்பு), சைவக் கொள்கைகள் (முப்பொருள்கள், திருவருளும் வீடுபேறும், சிவமூர்த்தங்கள், சக்தி வழிபாடு, சக்தி விரதங்கள், நாற்பாதங்கள்), சமயப் பெரியார்கள் (மெய்கண்டதேவர், அருணந்தி சிவாசாரியார், மறைஞானசம்பந்த சிவாசாரியார், உமாபதி சிவாசாரியார், அதிபத்த நாயனார், திருநாளைப்போவார் நாயனார், சுவாமி விவேகானந்தர்), திருமுறைப் பாடல்கள் (திருஞானசம்பந்தர் பாடல்கள், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி நாயனார், மாணிக்கவாசகர், திருவிசைப்பா-திருப்பல்லாண்டு, திருமந்திரம், பெரிய புராணம்), திருக்குறள் பாடல்கள், உபநிடதக் கதைகள் (நசிகேதன் கதை, சுவேதகேது கதை), வினாக்கள் என எட்டுப் பிரிவாகப் பகுத்து விடயங்கள் எழுதப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 34589).*

**மேலும் பார்க்க: 13A11, 13A12, 13A13,12510**

## 294.5(2) இந்து நிறுவனங்கள், ஆலய வரலாறுகள்

### 12075

**ஆனந்த சாகரம்: அங்குரார்ப்பண சிறப்பு மலர்.** *வ.பொ.பரமலிங்கம் (மலர்க்குழு சார்பாக). கொழும்பு 4: சுவாமி ராமதாஸ் பவுண்டேஷன், 42, ஷர்பெரி கார்டின்ஸ், 1வது பதிப்பு, பெப்ரவரி 2001. (கொழும்பு: யூ.கே.பிரின்டர்ஸ்).*

*(4), 25 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 23.5x18.5 சமீ.*

*ஆனந்த சாகர நிலையத்தை சுவாமி ராம்தாஸ் அவர்களின் பிரதான சிஷ்யரும் தற்போதைய ஆனந்தாஸ்ரமத்தின் தலைவருமாகிய சுவாமி சச்சஜாதானந்தா அவர்கள் 13.02.2001 அன்று சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைப்பதையிட்டு வெளியிடப்பட்ட சிறப்பு மலர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 27493).*

### 12076

**இந்து சமய மன்றம்.** *க.சி.குலரத்தினம். யாழ்ப்பாணம்: க.கனகராசா, மில்க்வைற் தொழிலகம், திருஆலவாய், 1வது பதிப்பு, 1982. (யாழ்ப்பாணம்: சாந்தி அச்சகம்).*

*(18) பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12.5 சமீ.*

*இந்து சமய மன்றம், இந்து சமய மாதர் மன்றம், இந்து சமய இளைஞர் மன்றம், இந்து சமய குழந்தைகள் மன்றம் இவ்வாறான உள்ளமைப்புகளைக் கொண்ட இந்து சமய பேரவை ஒன்றின் அவசியத்தை விளக்குவதாகவும், அத்தகையதொரு*

மன்றத்தைத் திட்டமிட்டு உருவாக்க வேண்டிய ஆலோசனைகளை வழங்குவதற்கும் இப்பிரசுரம் வெளியிடப்பட்டுள்ளது. க.சி.குலரத்தினம், மில்க்வைற் செய்திகளின் கௌரவ ஆசிரியராகப் பணியாற்றியவர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் PAM 335).

## 12077

**உலகில் மிகச் சிறந்த எட்டு சிவத்தலங்கள்.** அராலியூர் வி. செல்வரத்தினம். வட்டுக்கோட்டை: செல்வரத்தினம் கௌரி, அப்புக்காத்து வளவு, அராலி மத்தி, 1வது பதிப்பு, சித்திரை 2017. (யாழ்ப்பாணம்: ஜே.எஸ். பிரின்டர்ஸ், பண்டத்தரிப்பு).

xxi, 219 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 500., அளவு: 20x14 சமீ., ISBN: 978-955-38168-0-1.

சிவபெருமானின் எட்டுக் கோயில்கள் பற்றி எழுதப்பட்டுள்ள இந்நூலில் தல யாத்திரை பற்றிய தனது அனுபவ உணர்வுகளைப் பிரதிபலிக்கும் வகையில் அழகிய முறையில் இலகுநடையில் எளிய தமிழில் ஆசிரியர் வடித்திருக்கிறார். சிவனுடைய கோவில்களின் கட்டிட அமைப்பும் கலை அம்சங்களும் மிகவும் சிறப்பான முறையில் இவரால் விளக்கப்பட்டுள்ளன. நிரைகொண்ட விநாயகர், திருக்கார்த்திகைத் தீப தரிசனம், கிரிவலம், மதுரையிலுள்ள திருத்தலங்கள், திருக்காளத்தி, காசி, விசேட அம்சங்கள், திருக்கயிலாயம், சிதம்பரம், திருவிடை மருதூர் சீர்காழி, திருவாரூர் பற்றிய வரலாற்றுக் குறிப்புகள் என வாசகர் விளங்கத்தக்க வகையில் கேள்வி பதில்களாக எழுதியிருப்பது வாசிப்பை எளிதாக்கு கின்றது.  ஒவ்வொரு குறிப்பும் அது பற்றிய தெளிவான விளக்கங்களையும் பொருத்தமானமுறையில் ஆங்காங்கே தரப்பட்ட மேற்கோள்களையும் கொண் டுள்ளது. முன்னாள் உயர்வகுப்பு கணித, விஞ்ஞான ஆசிரியரான அராலியூர் வி. செல்வரத்தினம் தன் இளமைக் காலத்தில் கணித, விஞ்ஞான நூல்களையும் பின்னாளில் ஆன்மீக நூல்களையும் எழுதி வெளியிட்டவர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 62092).

## 12078

**சுழிபுரம் பறாளை விநாயகர், மூளாய் விநாயகர், பொன்னாலை விஷ்ணு ஆலய வரலாறுகள்.** குணரத்தினம் செல்லத்துரை. யாழ்ப்பாணம்: கு.செல்லத்துரை, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1989. (அச்சக விபரம் தரப்படவில்லை).

(9), 19 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.

சுழிபுரம் பறாளை விநாயகர், மூளாய் விநாயகர், பொன்னாலை விஷ்ணு ஆலயம் ஆகியவற்றின் வரலாறுகளினூடாக, அவற்றை நிறுவியதாகக் கருதப்படும் சித்திராயன் பரம்பரை பற்றி இந்நூலில் ஆசிரியர் ஒரு வரலாற்றுப் பதிவினை மேற்கொண்டுள்ளார். யாழ்ப்பாணத்தின் வடமேற்கே தொல்புரம், சுழிபுரம் (சோழியபுரம்) என்னுமிரு கிராமங்கள் உள்ளன. சுழிபுரம் கிராமத்தின் வயல் சூழ்ந்த மருத நிலப்பகுதியில் கிழக்கு நோக்கிய சந்நிதியாக இலங்கையின் புராதன விநாயகர் ஆலயங்களில் ஒன்றான "பறாளை விநாயகர் ஆலயம்" அமைந்துள்ளது.

சுளிபுரத்திலிருந்து மூளாய் செல்லும் பிரதான வீதியில் உள்ள வளைவில் அமைந்துள்ளது மூளாய் விநாயகர் கோவில் என வழங்கும் "மூளாய் வதிரன்புலோ சித்தி விநாயகர் ஆலயம்". அழகிய இவ்வாலயத்துடன் தீர்த்தக் கேணியொன்றும் அமைந்துள்ளது. பொன்னாலை, யாழ்ப்பாணக் கடலேரிக் கரையில் காரைநகரை நோக்கியபடி அமைந்துள்ளது. இங்கு குடிகொண்ட விஷ்ணுவின் ஆலயமே "பொன்னாலை விஷ்ணு ஆலயம்". சுழிபுரம், மூளாய், வட்டுக்கோட்டை என்னும் ஊர்கள் பொன்னாலையைச் சுற்றியே அமைந்துள்ளன. பொன்னாலை, யாழ்ப்பாணம் - மானிப்பாய்-காரைநகர் வீதி, யாழ்ப்பாணம்-பொன்னாலை-பருத்தித்துறை வீதி, வட்டுக்கோட்டை-மூளாய் வீதி என்பவற்றால் வரையறுக்கப்படும் பகுதிக்குள் ஏறத்தாழ அடங்குகிறது. பொன்னாலை விஷ்ணு ஆலயத்தில் கல்லுருவமாக அமைந்த ஆமையை ஆலயக் கருவறையில் காணலாம். அந்த கூர்மாவதார மூர்த்திக்கே ஆலயத்தின் முதற்பூஜை இன்றும் நடக்கிறது. ஆமை வடிவில் பெருமாள் தோன்றிய சமுத்திரம் திருவடிநிலை என்று இன்றும் போற்றப்படுகிறது. இவ்வாலய தீர்த்த விழா வருடாந்தம் இச்சமுத்திரக் கரையிலேயே நடைபெறுகிறது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 13509).

### 12079

**திருக்கோணமலைப் புராதன திருவுருவங்கள்: மேற்படி தலத் தேவாரப் பதிகத்துடன்.** E.P.இராசையா. யாழ்ப்பாணம்: சைவ பரிபாலன சபை வெளியீடு, 1வது பதிப்பு, செப்டெம்பர் 1951. (யாழ்ப்பாணம்: சைவப்பிரகாச யந்திரசாலை).

12 பக்கம், விலை: சதம் 10., அளவு: 17x11.5 சமீ.

இந்நூலில் அம்பிகாதேவியின் ஆலயம், இதன் பூர்வ வரலாறு, கன்னியாய் வெந்நீர் ஊற்றுக்கள், கஜபாகு அரசனுக்கும் இந்த ஆலயத்துக்கும் உள்ள தொடர்பு, தம்பலகாமம் கோணேசுவரர் கோயில், மண்டபம், திருக்கோணாசலத் திருவுருவங்கள், மூர்த்திகளின் விபரம் ஆகியவற்றை விபரிக்கும் கட்டுரை முதலாவதாகவும், கோணேசர் மீது திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் அவர்களால் பாடப்பெற்ற தேவாரப்பதிகங்கள் அதனைத் தொடர்ந்தும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 3077).

### 12080

**நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன்.** கனகசபாபதி நாகேஸ்வரன் (மூலம்), எஸ். வை.ஸ்ரீதர் (பதிப்பாசிரியர்). கொழும்பு: கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் மணிவிழாக்குழு, 1வது பதிப்பு, 2013. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

x, 110 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-4745-03-2.

சப்ரகமுவ பல்கலைக்கழக மொழித்துறை சிரேஷ்ட தமிழ் விரிவுரையாளரும் நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய வழிவழி அறங்காவலர்களில்

*ஒருவருமான கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்களால் எழுதப்பெற்று, ஈழநாடு, வீரகேசரி, தினக்குரல், தினகரன் பத்திரிகைகளிலே வெளிவந்த கட்டுரைகளும், சஞ்சிகைகளில் வெளியிடப்பட்ட கட்டுரைகளும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. நயினாதீவு குறித்த ஆய்வுகளுக்கான வரலாற்றுச் சான்றுகளும் மூலாதாரங்களும், மணிபல்லவம் என்பது நயினாதீவே, நயினை நாகபூஷணி, அற்புதத் தெய்வம் நயினை ஸ்ரீநாகபூஷணி அம்பாள், சீறிடும் நாகபூஷணித் தாய், குடமுழுக்குக் காணும் சக்திபீடம் நயினை நாகபூஷணி அம்மன், நயினை ஸ்ரீ நாகபூஷணியின் பத்ம பாதங்களில் ஆனந்த அருவியுடன் மலரிட்ட அந்தண திலகம், நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் தேர்த்திருவிழாச் சிறப்பிதழ், சர்வமத சந்நிதி நயினைப்பதியின் சிறப்பு,* Let us pray to Nagapooshani Ambaal *ஆகிய தலைப்புகளில் எழுதப்பெற்ற பத்துக் கட்டுரைகள் கொண்ட தொகுப்பு இதுவாகும்.*

## 12081

**நாகதம்பிரான் மான்மியம்.** *த.சுப்பிரமணியம். யாழ்ப்பாணம்: த.சுப்பிரமணியம், பாக்கியவாசம், சித்தன்கேணி, 1வது பதிப்பு, செப்டெம்பர் 1963. (யாழ்ப்பாணம்: ஸ்ரீகாந்தா அச்சகம்).*

*47 பக்கம், விலை: ரூபா 1.00, அளவு: 18x12.5 சமீ.*

*நாகர்களின் வரலாறு, நாக வழிபாட்டின் மகிமை, பல்வேறு நாகதம்பிரான் ஆலயங்களின் வரலாற்றுப் பெருமைகள் என்பன பற்றியும் இந்நூலில் ஆசிரியர் எடுத்துக்கூறியுள்ளார். பூர்வீக இலங்கை, நாகர் யார்?, நாக வழிபாடு, சூரிய வழிபாடு, நாகத்தை வணங்கக் காரணம், நாகர், நாகதம்பிரான் ஆலயங்கள், நாகர்கோயில் நாகதம்பிரான், நாகதம்பிரான், கப்பற் திருவிழா, புளியம்பொக்கணை நாகதம்பிரான், புதூர் நாகதம்பிரான்,சேனையூர் நாகதம்பிரான், நவாலியூர் நாகதம்பிரான், வடலியடைப்பு ஸ்ரீ புற்றடிச் சங்கரன் கோயில், பாம்பின் சிறப்பு, ஆதிசேடன், மண்டலத்தைத் தாங்குதல், பாம்பின் விடம், சத்துருக்கள், குண்டலி சத்தி, முடிபு ஆகிய 22 அத்தியாயங்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. நூலாசிரியர் பண்டிதர் த.சுப்பிரமணியம், யாழ்ப்பாணம் சித்தன்கேணியைச் சேர்ந்தவர். சொல்வன்மை, எழுத்தாற்றல், கவித்துவம் மிக்கவர். திருநெல்வேலி சைவாசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பட்டம் பெற்றதுடன் பண்டிதர் பரீட்சையிலும் சித்தியெய்திய இவர் இலங்கையின் பல பாகங்களிலுமுள்ள தமிழ்ப் பாடசாலைகளில் பணியாற்றியவர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 18433).*

## 12082

**பகவான் ஸ்ரீ ரமண மஹரிஷிகளின் அவதார மகிமையும் சந்நிதானப் பெருமையும்.** *க.இராமச்சந்திரன். இலங்கை: ரமண தொண்டர் சபை, 1வது பதிப்பு, புரட்டாதி 1942. (சாவகச்சேரி: இலங்காபிமானி அச்சியந்திரசாலை).*

*70 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 13.5x10.5 சமீ.*

ரமண மஹரிஷி (டிசம்பர் 30, 1879 - ஏப்ரல் 14, 1950) தமிழகத்தைச் சேர்ந்த ஆன்மீகவாதியாவார். அத்வைத வேதாந்த நெறியை போதித்த இவர் திருவண்ணா மலையில் வாழ்ந்தவர். இவர் விருதுநகர் மாவட்டம் திருச்சுழியில் 1879ம் ஆண்டு டிசம்பர் 30 ஆம் நாள் சுந்தரம்ஐயர், அழகம்மாள் ஆகியோருக்கு மகனாகப் பிறந்தார். இவருக்கு நாகசுவாமி என்கிற மூத்த சகோதரர் உண்டு. இவரது இயற்பெயர் வேங்கடராமன். இவர் மதுரையில் ஸ்காட் நடுநிலைப் பள்ளியில் கல்வி பயின்றார். ரமணரின் முக்கியமான உபதேசம் "நான் யார்" என்னும் ஆன்ம விசாரம். ஞான மார்க்கத்தில் தன்னை அறிதல் அல்லது முக்தி பெறுதலே இவ்வழியின் நோக்கம். உபநிடதங்கள் மற்றும் அத்வைத வேதாந்த நெறிகள் ஆகியவற்றின் சாரத்தினை இவரது உபதேசங்களில் காணலாம். இவரது உபதேசங்களின் தொகுப்பான "நான் யார்?" என்ற நூல் முதன்மையானதாகும். ஆதி சங்கரரின் ஆக்கமான "ஆத்ம போதம்" ரமணரால் தமிழில் வெண்பாக்களாக ஆக்கப்பட்டது. பலகாலம் திருவண்ணாமலையின் பல இடங்களில் தங்கிய ரமண மகரிஷி, 1922 இல் அவரது தாயின் மறைவிற்குப் பிறகு திருவண்ணாமலையின் அடிவாரத்தில் குடிபுகுந்தார். அங்கு அவரது சீடர்களால் ஆசிரமம் ஒன்று உருவாக்கப்பட்டது. இதுவே ரமண ஆசிரமமாகும். இதன் பின்னர் அவர் சமாதியடையும் வரை அந்த ஆசிரமத்தை விட்டு எங்கும் செல்லவில்லை. இந் நூல் ரமணமகரிஷின் வாழ்க்கை வரலாறாகவும் ரமணாச்சிரமத்தின் வரலாறாகவும் வெளிவந்துள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 2755).

**12083**

**பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம்: ஆண்டுமலர் 27.12.1991.** மலர் வெளியீட்டுக்குழு. பருத்தித்துறை: ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம், 1வது பதிப்பு, டிசம்பர் 1991. (அச்சக விபரம் தரப்படவில்லை).

(80) பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25.5x19 சமீ.

ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தில் கொண்டாடப்பெற்ற அன்னை சாரதாதேவி ஜயந்தியன்று இச்சிறப்பு மலர் வெளியிடப்பட்டது. இதில் வழமையான ஆசிச் செய்திகள், அறிக்கைகளுடன், தூய அன்னை ஸ்ரீ சாரதாதேவி, ஸ்ரீராமகிருஷ்ண மகத்துவம், உண்மையான வழிபாடு, சேவை என் பார்வையில் (எம்.கே. முருகானந்தன்), ஸ்ரீமத் சுவாமி பிரேமாத்மானந்தாஜீ (சுவாமி சித்ரூபானந்தா), சுவாமி விவேகானந்தரின் கல்விச் சிந்தனைகள், பிரிவு உபசார உரை, விவேகானந்தரின் உள்ளம் (சுவாமி அஜராத்மானந்தா), விபுலானந்த அடிகளாரின் தேசியக் கல்வி முறை (சுவாமி நடராஜானந்தா), ஸ்ரீ சாரதா சேவாச்சிரமம்-பொலிகண்டி கந்தவனக் கிளை, புதிய தலைவர் சுவாமிகளுக்கு ஸ்ரீ சாரதா தேவி சேவாச்சிரம வரவேற்பும் அறிக்கையும் (சுவாமி சித்ரூபானந்தா) ஆகிய தமிழ் ஆக்கங்களும், Some Revelations of the Divinity of the Holy Mother Courtesy-Vedanta Kesari, Moulding our lives in Sri Ramakrishna's Teachings – Swami Bhuteshananda, Swami's Contribution to Vedantic Thoughts-Swami Tapasyananda போன்ற சில ஆங்கில

*ஆக்கங்களும் நிறுவன அறிக்கைகளும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 14609).*

### 12084

**மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றம்: வெள்ளிவிழா மலர் 1968-1993.** *த.செல்வநாயகம் (தொகுப்பாசிரியர்). மட்டக்களப்பு: இந்து இளைஞர் மன்றம், 1வது பதிப்பு, ஏப்ரல் 1994. (மட்டக்களப்பு: புனித செபஸ்தியார் அச்சகம், 65, லேடி மனிங் டிரைவ்).*

xxxx, *(2), 65 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24*x*19 சமீ.*

*30.4.1994 அன்று நடைபெற்ற வெள்ளிவிழா நிகழ்வின்போது வெளியிடப்பெற்ற சிறப்பு மலர். இதில் ஆசியுரைகள், வாழ்த்துரைகள், அறிக்கைகளுடன் தியானம் (சுவாமி அஜராத்மானந்த), சேவைகளின் சிகரம் (திமிலைத் துமிலன்), திருவெம்பாவை-பாடல்களின் பொருள் தேடும் முயற்சி (ப.வே.இராமகிருஷ்ணன்), வாழ்க்கையில் சைவம் (கு.சோமசுந்தரம்), சைவசித்தாந்தம் கூறும் கன்மக் கோட்பாடு (சாந்தி நாவுக்கரசன்), எல்லாம் இறைவன் அருளே (செ.குணரத்தினம்), சமயத்தின் அடிப்படைத் தத்துவமும் விளக்கமும் (அன்புமணி), மட்டக்களப்பு மாநில வரலாற்றுச் சிறப்புமிக்க சைவத் திருக்கோயில்கள் (எஸ்.எதிர்மன்னசிங்கம்), புராதன ஈழத்தில் இந்து மதம் (க.தங்கேஸ்வரி), தோன்றாத் துணை (ஆர்.வடிவேல்), திருமூலர் காட்டிய திருநெறி (வி.ரி.செல்வத்துரை), அகிலம் புகழும் அருள்மொழி அரசு ஞானவள்ளல் (சு.இராசையா), அடியார்கள் கண்ட அன்புநெறி (எஸ். தெய்வநாயகம்), நம்மாழ்வார் புகழ் பாடும் மதுரகவியாழ்வார் (த.யுவராஜன்), சமயவாழ்வு (த.செல்வநாயகம்) ஆகிய ஆக்கங்களும் இடம்பெற்றுள்ளன. மலரின் இறுதிப் பகுதியில் மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றம், மன்றத்தால் மகிமைப் பட்டம் பெற்ற மகிமையாளர் மூவர், மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றத்துக்கு வருகைதந்த பிரமுகர்கள், மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்ற வெளியீடுகள், வெள்ளிவிழா தொடர்பாக மன்றம் நடத்திய போட்டி முடிவுகள் என்பன இணைக்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 14091).*

### 12085

**மட்டக்களப்பு செட்டிபாளையம் ஸ்ரீலஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலய வரலாறு.** *நூல்வெளியீட்டுக் குழு. மட்டக்களப்பு: ஆலய நிர்வாகம், செட்டிபாளையம் ஸ்ரீலஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயம், 1வது பதிப்பு, மே 1994. (மட்டக்களப்பு: புனித செபஸ்தியார் அச்சகம், 65, லேடி மனிங் டிரைவ்).*

xxxii, *226 பக்கம், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22*x*14 சமீ.*

*செட்டிபாளையம் கண்ணகை அம்மன் ஆலய வரலாறு தொடர்பான பல்வேறு ஆக்கங்களின் தொகுப்பு இது. செட்டிபாளையம் ஸ்ரீலஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயமும் கிரான்குளமும் (பொ.சிவசுந்தரம்), செட்டிபாளையம் அருள்மிகு*

கண்ணகை அம்மன் ஆலயமும் குருக்கள்மடமும் (சா.ஆறுமுகம்), செட்டிபாளையம் ஸ்ரீலஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயத்தின் பாரம்பரிய நெறிமுறைகளும் சக்திமிக்க கும்பச் சடங்கின் மகிமையும் (ஆ.முத்துலிங்கம்), செட்டியூர் ஸ்ரீலஸ்ரீ கண்ணகை அம்மன் சடங்கும் கலாசார விழுமியங்களும் (வ.ஜீவநாதன்), செட்டிபாளையம் ஸ்ரீலஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயமும் மாங்காட்டுக் கிராமமும் (க.குணசேகரன்), செட்டிபாளையம் ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயத்தில் தேத்தாதீவு மக்களுடைய சடங்கு முறைகளும் அவை மரபுரீதியாகப் பின்பற்றப்பட்டுவந்த வரலாறும் (இ.திருநேசராசா), களுதாவளையும் கண்ணகை அம்மன் குளிர்த்தியும் (ஆ. அரசரெத்தினம்), கொம்புமுறி விளையாட்டும் களுதாவளைக் கிராமமும் (கா. தட்சணாமூர்த்தி), குடியிருப்புக் கிராமமும் கும்பத்து நெல்லும் (செ.மண்முனைப் போடி), எட்டாம்நாட் சடங்கு (வெ.சுந்தரமூர்த்தி), சித்திரைச் சடங்கு வரலாறு (சி.மனோகரன்), கார்த்திகை விளக்கீட்டுச் சடங்குப் பூசை (பெ.ஆறுமுகம்), செட்டிபாளையம் ஸ்ரீலஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலய தைக் குளிர்த்தி வரலாறு (பூ.இராமநாதன்), செட்டிபாளையம் ஸ்ரீலஸ்ரீ கண்ணகை அம்மனும் கட்டாடியார் பரம்பரையும் (ஆ.அரசரத்தினம்), ஆய்வாளருக்குதவும் ஆதாரபூர்வமான தகவல்கள் (நிர்வாகம்), குளிர்த்திப் பாடல் (ஆ.அரசரெத்தினம்), செட்டிபாளையம் கண்ணகை அம்மன்காவியம் (இ.பூ.ஆறுமுகம், சி.பூ.இளையதம்பி), செட்டிபாளையம் கண்ணகை அம்மன் அகவல் (இ.பூ.ஆறுமுகம், சி.பூ.இளையதம்பி), செட்டிபாளையம் கண்ணகை அம்மன் காவியம் (ஆ.அரசரெத்தினம்), செட்டிபாளையம் கண்ணகை அம்மன் மழைக் காவியம் (கட்டாடியார் பரம்பரை), வைரவர் காவியம், வைரவர் அகவல், நாகதம்பிரான் காவியம், நாகதம்பிரான் பிரார்த்தனை, வசந்தன் கவிகள் ஆகிய ஆக்கங்கள் இம்மலருக்கு அணிசேர்த்துள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 14151).

### 12086

**வெள்ளவத்தை மயூரபதி ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்: ஆலயச் சிறப்பும் வரலாறும்.** குமார் வடிவேலு. கொழும்பு 6: வெள்ளவத்தை மயூரபதி ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம், மயூரா பிளேஸ், 1வது பதிப்பு, ஆண்டு விபரம், அச்சக விபரம் தரப்படவில்லை.

iv, 8 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 12x10.5 சமீ.

கொழும்பு, வெள்ளவத்தை மயூரபதி ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான ஆலயத்தின் சிறப்பும் வரலாறும் சுருக்கமாக இச்சிறு பிரசுரத்தில் கூறப்பட்டுள்ளது. இக்கோயிலின் பரிபாலகர் பொன்.வல்லிபுரம் அவர்கள், அப்போதைய பரிபாலன சபையினருடன் இணைந்து 1987 ஆம் ஆண்டில் அம்மனுக்கு அரச மரச்சாரலில் கோயில் அமைத்தார். தென்னிந்தியாவில் இருந்து பத்திரகாளி அம்பாளின் சிலையை வரவழைத்து, 1987 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் உத்தராட நட்சத்திர நாளில் ஆலயம் அமைத்து மருதானை கப்பித்தாவத்தை பாலசெல்வ விநாயகர் ஆலய குருக்கள் பா.சண்முகரத்தினக் குருக்களின் மேற்பார்வையில் மகா கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது. இன்று இவ்வாலயம் நாளொரு மேனியும்

பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து அடியார்களுக்கு அருள் பாலித்து வருகிறது. இவ்வாலயத்தில் நடைபெறுகின்ற ஆடிப்பூர இலட்சார்ச்சனை, தேர் உற்சவம், இந்து சமுத்திரத் தீர்த்த உற்சவம், நவராத்திரி விழா ஆகியவை யாவும் சிறப்புக் காட்சியாகும். அது மட்டுமன்றிச் சமயத்தை வளர்க்கும் பணிகளான அறநெறிப் பாடசாலை, பண்ணிசை வகுப்பு, சமய சம்பந்தமான சொற்பொழிவுகள் என்பனவும் மிகவும் சிறப்பாக ஆண்டுதோறும் நடைபெற்று வருகிறது. மேலும் இவ்வாலயத்தில் அருங்கலை மண்டபம், தியான மண்டபம் மற்றும் சுப்பம்மாள் கல்யாண மண்டபம் என்பன கட்டப்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 20706).

## 12087

**வேதாரணிய புராணம்.** அகோரதேவர் (மூலம்), க.வேற்பிள்ளை (பரிசோதித்தவர்). யாழ்ப்பாணம்: அ.அப்பாக்குட்டியாபிள்ளை, தேவஸ்தான பிரதம இலிகிதர் (தேவஸ்தானம் ஹெட் கிளார்க்கு), வேதாரணிய தேவஸ்தானம், வரணி, 1வது பதிப்பு, 1898. (சென்னபட்டணம்: ஸ்ரீ லலிதா அச்சியந்திரசாலை).

467+20 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x13 சமீ.

வேதாரணிய புராணம் யாழ்ப்பாணத்து வரணியாதீன வேதாரணிய தேவஸ்தான தருமகர்த்தாவாகிய ஸ்ரீலஸ்ரீ ஐ.சுவாமிநாத தேசிகரவர்களின் கட்டளையின்படி க.வேற்பிள்ளை அவர்களால் பல பிரதிரூபங்களைக்கொண்டு பரிசோதிக்கப்பெற்றது. க.வேற்பிள்ளை யாழ்ப்பாணம், மட்டுவில் என்ற ஊரில் கணபதிப்பிள்ளை உடையார், புலோலியைச் சேர்ந்த உமாமகேசுவரி ஆகியோருக்கு மகவாகப் பிறந்தவர். மட்டுவில் சண்முகம்பிள்ளை, நல்லூர் கார்த்திகேயப் புலவர், ஆறுமுக நாவலர் ஆகியோரிடம் கல்வி கற்றவர். சிதம்பரம் நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையில் கல்வி கற்றார். செய்யுள் இயற்றுவதில் வல்லவராக இருந்ததால் சிதம்பரம் முத்தையா பட்டர் இவருக்கு "பிள்ளைக்கவி" என்ற பட்டத்தை அளித்தார். இவரது உரையெழுதும் திறமையை வியந்த வித்துவ சிரோமணி பொன்னம்பலப் பிள்ளை இவருக்கு "உரையாசிரியர்" என்னும் பட்டத்தை அளித்தார். ம. வே. திருஞானசம்பந்தம், சட்ட அறிஞர் வே. மாணிக்கவாசகர், குருமணி ம. வே. மகாலிங்கசிவம், நடராசா, கந்தசாமி ஆகியோர் ம. க. வேற்பிள்ளையின் பிள்ளைகளாவர். புலவர் ம.பார்வதிநாதசிவம் இவரின் பேரனாவார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 24065).

## 12088

**வைரவ வழிபாடும் யாழ்.குப்பிழான் தைலங்கடவை ஞானவைரவர் ஆலய வரலாறும்.** மா.தம்பியையா. யாழ்ப்பாணம்: மா.தம்பியையா, குப்பிழான், ஏழாலை, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2005. (மதுரை 625001: மீனாட்சி அச்சகம், 247, நேதாஜி ரோடு).

100 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12.5 சமீ.

மதுரை T309 எல்லீசு நகரில் ஆசிரியர் புலம்பெயர்ந்து வாழ்ந்திருந்த வேளையில் இந்நூல் வெளியிடப்பட்டிருந்தது. இதில் கடவுள் வாழ்த்து, சமர்ப்பணம், அருள்முக ஆசியுரை, வாழ்த்துரை, பதிப்புரை, நூல் அறிமுகம், அணிந்துரை, முன்னுரை ஆகியவற்றுடன் வைரவ போற்றி போற்றி, வைரவர் காக்கும் கருணைக்கடல், சிவன் சிந்தையில் உதித்த கஞ்சுகன், நின்ற திருக்கோல நிருமலன், வைரவர் திருநாமங்கள், தைலங்கடவை தனிலமர்ந்தருள் ஞானவைரவர், இந்த நூலாக்கத்துக்கு உதவிய நூல்கள், அநுபந்தம் 1 (சொற்பொருள் விளக்கம்), அநுபந்தம் 2 (நூலில் இடம்பெற்ற தொகைப் பெயர்கள்), அநுபந்தம் 3 (தகவல் சுரங்கம்), தகவல் பலகை (நூலாசிரியர்) ஆகிய அத்தியாயங்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 36906).

### 12089

**ஸ்ரீ முன்னேஸ்வரம் திருக்கோயில் பண்பாட்டுக் கோலங்கள்.** பா.சிவராமகிருஷ்ண சர்மா. சிலாபம்: ஸ்ரீ சங்கர் வெளியீட்டகம், 144, முன்னேஸ்வரம், 1வது பதிப்பு 2017. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

xviii, 204 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 450., அளவு: 21.5x14.5 சமீ.

ஸ்ரீ முன்னேஸ்வரம் திருக்கோவிலின் பண்பாட்டு மரபுகளையும் வழிபாட்டுச் சிறப்புகளையும் எடுத்துக்கூறும் வகையில் இந்நூல் வெளிவந்துள்ளது. மகோன்னதமான வழிபாட்டுப் பண்பாட்டு முறை, காலங்கள் தோறும் வளர்ச்சி பெற்ற வழிபாட்டுப் பண்புகள், பலவேலை பழனியப்பனின் அதிகப்பிரசங்கித்தனம், கணக்கப்பிள்ளை பாதுகாத்து வந்த ஆவணங்கள், கல்யாணசுந்தர சாஸ்திரிகளின் ஆராய்வு மனப்பாங்கும் கலந்துரையாடல்களும், கோயிலின் பன்முகத்தன்மையின் மேம்பாடு, இறைபணியில் அர்ப்பணிப்புடன் தொண்டர்கள், ஊர்கூடி தேர் இழுக்கும் மகோற்சவ மாண்பு, கோலாகல வசந்த நவராத்திரியின் வசீகரத்தன்மை, இலட்சார்ச்சனை, கொடியர்ச்சனை மகாயாகம், வசந்த நவராத்திரியும் சண்டி ஹோமமும், மகா கும்பாபிஷேகம், வேதாகம சம்மேளன பிரதிஷ்டாகிரியா விளக்கம், இளைய தலைமுறையில் வழிபாடுகள் ஆகிய 15 தலைப்புகளில் இந் நூல் எழுதப்பட்டுள்ளது. நூலாசிரியர் பிரம்மஸ்ரீ பா.சிவராமகிருஷ்ண சர்மா ஓர் விஞ்ஞானப் பட்டதாரியாக இருப்பதால், இந்து சமயக் கிரியைமுறைகளையும் சம்பிரதாயங்களையும் அறிவியல் பூர்வமாகச் சிந்திக்கும் சிறந்த சிந்தனையாளராகத் தன்னை இந்நூல்வழியாக இனம்காட்டியுள்ளார்.

## 294.5(21) இந்து சமய ஆண்டிதழ்கள்

### 12090

**இந்து தருமம் 1960-1961 (மாணவர் மலர்).** சி.அமிர்தலிங்கம், ச.ஈஸ்பரதாசன் (இதழாசிரியர்கள்). பேராதனை: இந்து மாணவர் சங்கம், இலங்கைப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, 1961. (யாழ்ப்பாணம்: ஈழநாடு அச்சகம்).

(8), 48 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x19 சமீ.

இவ்விதழில் இந்து மதம் (கா.கைலாசநாதக் குருக்கள்), சைவ மறுமலர்ச்சியும் சம்பந்தர் சமயப் பிரசாரமும் (ஆ.வேலுப்பிள்ளை), சைவமும் சைவசித்தாந்தமும் (குன்றக்குடி அடிகளார்), ஈழங்கண்டதோர் தமிழ் முனிவர் (கு.அம்பலவாண பிள்ளை), கலைத் தெய்வம் (சி.தில்லைநாதன்), மஞ்சனமாட நீ வாராய் (அ. சண்முகதாஸ்), மார்கழியும் மங்கையரும் (பாலகிருஷ்ணன்), குயிலே கூறமாட்டாயா? (செ.கதிர்காமநாதன்), உடுக்கை"ராஜா", இராஜபாரதி, கிழக்கிலங்கை முஸ்லிம்களிடையே இந்துக்களின் குடிமுறைகள் (ஏ.சீ.எல்.அமீர் அலி), இந்து சமயமும் சமரசமும் (சி.பத்மநாதன்), அர்ச்சனை: சிறுகதை (க. நவசோதி), பாண்டிருப்பிற் பாஞ்சாலி (ஞானம்), மறக்கமுடியாதவை பல மறக்கவேண்டியவை சில ஆகிய படைப்பாக்கங்கள் இடம்பெற்றுள்ளன. (இந் நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 45466).

### 12091

**இந்து தருமம் 1977 (நடராஜர் சிவகாமியம்மன் மணிவாசகர் குடமுழுக்குச் சிறப்பிதழ்.** வே.தர்மகுலசிங்கம் (இதழாசிரியர்). பேராதனை: இந்து மாணவர் சங்கம், இலங்கைப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, ஏப்ரல் 1977. (யாழ்ப்பாணம்: திருமகள் அழுத்தகம், சுன்னாகம்).

xvi, 88 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x19 சமீ.

வாழ்த்துரைகள், ஆசியுரைகள், மன்ற அறிக்கைகளையும் சமயம் சார்பான கட்டுரைகளையும் இம்மலர் உள்ளடக்குகின்றது. கனகசபாபதி தரிசனம் ஒருகால் கண்டாற் கலிதீரும் (பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை), எமது நாட்டிற் சிவ வழிபாடு (சு.வித்தியானந்தன்), தாண்டவம் புரியும் எமதாண்டவன் (சாம் சண்முகநாதக் குருக்கள்), ஈழநாட்டில் முருக வழிபாடு (ஆ.வேலுப்பிள்ளை), அழகா முருகா தாலேலோ (ப.வேலுப்பிள்ளை), இலங்கையிற் சைவர்கள்: குடிசனப் புவியியல் நோக்கு (பொ.பாலசுந்தரம்பிள்ளை), இந்து மதத்தில் உருவ வழிபாடு (செ.மகேஸ்வரன்), குறிஞ்சிக் குமரன் (வே. இராமகிருஷ்ணன்), அறம் வளர்த்த தமிழ்த் தெய்வம் (ந.நிர்மலன்), ஈழத்துச் சிவாலயங்கள்: கி.பி.1000 முதல் 1300 வரை (சி.பத்மநாதன்), கந்தா நின் அருள் வேண்டும் (த.கலாமணி), மலையகத்து இந்துக்களின் தெய்வங்களும் வழிபாடுகளும் (சி.தில்லைநாதன்), மார்கழி நோன்பு (சிவகாமி கணபதிப்பிள்ளை), பல்கலைக்கழகத்தில் நடராஜர் பிரதிஷ்டை (ச.ஏ.பிரதாபர்), சிற்ப வித்தியாதரன் (இந்து மாணவர் சங்கம்), பேராதனைக் குறிஞ்சிக் குமரன் கோயிலும் பேராசிரியர் கனகசபாபதியும் (கலையரசி சின்னையா) ஆகிய கட்டுரைகள் இவ்விதழில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 02539. நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தின் சேர்க்கை இலக்கம் 008483).

### 12092

**இந்து தருமம் 1989-1990.** சாமிநாதன் வாகீசன் (இதழாசிரியர்). பேராதனை: இந்து மாணவர் சங்கம், இலங்கைப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, 1990. (கண்டி: செனித் அச்சகம், 192 கொட்டுகொடல்ல வீதி).

(54) பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x19 சமீ.

வாழ்த்துரைகள், ஆசியுரைகள் மற்றும் மன்ற அறிக்கைகளையும் சமயம் சார்பான கட்டுரைகளையும் இம்மலர் உள்ளடக்குகின்றது. இவ்விதழில் இளங்கோ காட்டும் வைதீகமதம் (பொ.பூலோகசிங்கம்), முத்தி இன்பம் - தமக்கென வாழா நிலை (சி.தில்லைநாதன்), இந்து மதமும் இரு வகை வழிபாடும் (துரை.மனோகரன்), பக்தி இயக்கமும் அதன் விளைவுகளும் (க.அருணாசலம்), ஈழத்து முருகத் தலங்களும் குறிஞ்சிக் குமரனும் (வ.நந்தகுமார்), குறிஞ்சிக் குமரன் மீது ஒரு பாடல் (ஏ.உதயராணி), மதமும் மனித மனமும் (சி.முரளி), உபநிடதச் சிந்தனைகள் (பா.சி.சர்மா), இன்றைய காலகட்டத்தில் இந்து தர்மத்தின் நிலை (இரா. இரமணிதரன்), நவராத்திரி (ஏ.உதயராணி), ஒரே பார்வையில் இந்து மதமும் உலகின் ஏனைய மதங்களும் (சு.முரளிதரன்), ஞான வரம்பு (மாதினி செல்லத்துரை), அருள்மிகு குறிஞ்சிக் குமரன் மீது ஒரு கீர்த்தனை (சி.சுரேஸ்குமார்), நடைமுறை வாழ்வில் இந்து மதம் (இரத்தினசிங்கம் சத்தியதேவி), இந்து சமயமும் எதிர்கால விஞ்ஞான யுகமும் (க.சத்தியகுமார்), இளைஞர்களே ஒரு நிமிடம் (சி.சண்முக ஆனந்தன்), சிவசூரிய வழிபாடு (ஜுட்.ஆர்.பிள்ளைநாயகம்) ஆகிய ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 13413. நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தின் சேர்க்கை இலக்கம் 008594).

### 12093

**இந்து தருமம் 1991-1992: பேராதனை பல்கலைக்கழக பொன்விழா சிறப்பு மலர்.** த.வேலுப்பிள்ளை (இதழாசிரியர்). பேராதனை: இந்து மாணவர் சங்கம், பேராதனைப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, நவம்பர் 1992. (கண்டி: செனித் அச்சகம், 192, கொட்டுகொடல்ல வீதி).

x, 104 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x18.5 சமீ.

வாழ்த்துரைகள் ஆசியுரைகளுடன் விரியும் இம்மலரில் இந்துமதம் சவாலொன்றினை எதிர்கொண்டவாறு 19ஆம் 20ஆம் நூற்றாண்டுச் சீர்திருத்த இயக்கங்கள் (சி. தில்லைநாதன்), எங்கள் அகம் மலர அருள் புரிவாய் (ஞானாம்பிகை விஸ்வநாதன்), இந்துமதம் சில குறிப்புகளும் கருத்துகளும் (எஸ்.லோகிதராஜா), இலங்கையின் நாட்டுக்கோட்டை நகரத்தார் நிறுவிய கதிர்வேலாயுத சுவாமி கோவில்கள் (ந.வேல்முருகு), எமது இன்றைய நிலைக்கு நாமே பொறுப்பு (வளர்மதி சின்னராசா), மானுடம் பாடாத மகளிர் (துரை மனோகரன்), பக்திப் பாடல்கள் (பிச்சையப்பா கணேசவரதன்), மானுடரும் கடவுளரும் (சி.சிவசேகரன்), மனம் எங்கே போகிறது (பா.நித்தியானந்தக் குருக்கள்), சுவாமி விபுலானந்தரின் நோக்கிற் சமயமும் வாழ்வும் (க.அருணாசலம்), சமயகுரவரும் நாவலர் பெருமானும் (பொ.

பூலோகசிங்கம்), வள்ளுவத்திலிருந்து சில அன்புத்துளிகள் (மா.அருணாசலம்), ஈழத்து வன்னிமைகளில் சிறுதெய்வ வழிபாடு (இரா.வை.கனகரத்தினம்), சைவ நெறியும் மாண்பும் (கே.வேலாயுதபிள்ளை), சமயமும் வாழ்வும் அதன் பயனும் (மு.சுந்தரச்செல்வன்), குறிஞ்சி அழகன்- கவிதை (பத்மதேவன்), நான் யார்? எம்மைக் கண்டோமா? (அ.ராஜ்குமார்), சிலரின் சிந்தனைகள் (பா.பாலநந்தகுமார்), குறிஞ்சிக் குமரன் ஆலயமும் இந்து மாணவர் சங்கமும் நாற்பதாண்டு கால காலக்கண்ணாடியில் (செ.ரூபசிங்கம்), இந்து தர்மம் பற்றிய ஒரு கண்ணோட்டம் (க.ரவிசங்கர்), பேராசிரியர் சி.பாலசுப்பிரமணியம் (க.விஜயமோகன்), குறிஞ்சித் தென்றல் (பா.மணிவண்ணன்) ஆகிய படைப்பாக்கங்கள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 32284).

### 12094

**இந்து தருமம் 1992-1993: குறிஞ்சிக்குமரன் ஆலய வெள்ளிவிழா**.முருகவேள் மகாசேனன் (இதழாசிரியர்). பேராதனை: இந்து மாணவர் சங்கம், பேராதனைப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, நவம்பர் 1993. (கொழும்பு: லக்சு கிராப்பிக்ஸ்).

(6),viii, 102 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 26x20.5 சமீ.

இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ள இம்மலரின் முதலாம் பகுதி வரலாற்றுக் கட்டுரைகளைக் கொண்டதாகவும், இரண்டாம் பகுதி விழிப்புணர்வுக் கட்டுரைகளைக் கொண்டதாகவும் வகைப்படுத்தப்பட்டுள்ளன. முதலாம் பகுதியில் பிரமன் வழிபாடு (பொ.பூலோகசிங்கம்), நடுகல் வழிபாடு (ந.தாரணி), மலையகத்தில் முத்துமாரியம்மன் வழிபாடு (துரை மனோகரன்), சேக்கிழார் காட்டும் பெண்ணடியார்கள் (வ.மகேஸ்வரன்), மதம் என்பது (பா.சோதிமலர்), இந்துக்களின் விரதங்கள் (வ.நந்தகுமார்), வெண்ணெய்யைக் கையிலே கொண்டு நெய்க்கு அலைகின்றோம் (நடராஜா ரவிச்சந்திரன்), குறிஞ்சிமலைக் குமரன் (க.பாலகிருஷ்ண ஐயர்), இந்து மதத்தின் சில சிறப்பான பண்புகள் (இந்திராதேவி செல்லப்பா), ஆன்ம ஈடேற்றத்தில் இந்து மதமும் ஜி.கிருஷ்ணமூர்த்தியும் (டி.வி.ரவிசங்கர்), இந்து தர்மத்தின் உட்கிடக்கையும் சிவஞானபோதத்தின் மகிமையும் (அ.சிவராசா), குறிஞ்சிவடிவேலா (வளர்மகள்) ஆகிய ஆக்கங்கள் இடம் பெற்றுள்ளன. இரண்டாம் பகுதியில் இந்துக்களின் இன்றைய சிந்தனைக்குச் சில குறிப்புகள் (கி.தில்லைநாதன்), இந்துமதம் அன்றும் இன்றும்-ஒரு வரலாற்று நோக்கு (க.அருணாசலம்), 19ஆம் நூற்றாண்டில் ஈழத்தில் தோன்றிய சைவசமய இயக்கங்கள் (இரா.வை.கனகரத்தினம்), இந்து மதத்தின் நவீனத்துவப் போக்குகள் (அம்பிகை வேல்முருகு), அந்தோ வழிபாடு கண்காட்சியானதே (மு.சுந்தரச் செல்வன்), மனமாற்றம் (சோ.சந்திரகாந்த்), வாழ்கையை வளம்படுத்தும் இந்து சமயம் -இன்றைய நிலையில் (சி.வளர்மதி), எங்கள் முதுகு (தி.பத்மநாதன்), மதங்களும் இளைய தலைமுறையினரின் ஈடுபாடும் -இன்று (பூங்குடியான்), நாமும் எமது மதமும் (து.சத்தியசீலன்), மதமாற்றம் இந்து சமயத்தில் ஏற்படுத்தும் தாக்கங்களும் அவற்றைத் தவிர்க்கும் முறைகளும் (எஸ்.கலைச்செல்வன்),

மக்களின் சமயம் (இளஞ்செல்வி கயிலாசர்), அவனருளாலே அவன்தாள் பணிவோம் (பொ.கேதாரேஸ்வரி), ஒரு வரப்பிரசாதம் (பா.நித்தியானந்தக் குருக்கள்), சமுதாயப் பணியில் இந்து மதம் (இரா.இரவிசங்கர்), குறிஞ்சிவேலனே (வி.ஞானாம்பிகை) ஆகிய கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 13701).

## 12095

**இந்து தருமம் 1993-1994**. மரியாம்பிள்ளை ரவிச்சந்திரன் (இதழாசிரியர்). பேராதனை: இந்து மாணவர் சங்கம், இலங்கைப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, 1994. (களுபோவில: டெக்னோ பிரின்ட், இல. 6, ஜெயவர்த்தன அவென்யூ, தெகிவளை).

xvii, 103 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x19 சமீ.

வாழ்த்துரைகள், ஆசியுரைகள் மற்றும் மன்ற அறிக்கைகளையும் சமயம் சார்பான கட்டுரைகளையும் இம்மலர் உள்ளடக்குகின்றது. இவ்விதழில் கலியுக வரதனே (திருமகள் குருநாதன்), அமைதிக்கு வேண்டிய ஆன்மீக விளக்கம் (சி.தில்லைநாதன்), கீதை கூறும் ஆன்ம ஈடேற்றம் (அம்பிகை வேல்முருகு), இந்து மதம்: லௌகீகமும் ஆத்மீகமும் (க.அருணாசலம்), சைவ சித்தாந்தம் காட்டும் முத்தி நெறி (மகேஸ்வரி அருள்செல்வம்), இறைவரே ஏகமான குரு: திருமூலரும் குருவும் (சுவாமி உமாஷங்கரானந்த சரஸ்வதி), ஆன்மீகத் தேடலில்......(T.V.R.சங்கர்), இந்திய மெய்யியலின் ஆத்மீக மரபு (ம.இராஜரத்தினம்), சமயம் என்பது எதற்காக? (மு.சுந்தரச் செல்வன்), பிறவிப் பெருங்கடல் (தி.ஆனந்தமூர்த்தி), ஆத்ம தரிசனம் (வை.நந்தகுமார்), இந்துமதம் காட்டும் ஆன்மீக வழியில் அன்பு நெறி (முருகேசு ஸ்ரீ வேணுகோபால சர்மா), அருள் புரிவாய் (ஞானாம்பிகை விஸ்வநாதன்), இல்லறத்தில் ஆன்மீகம் (வளர்மதி சுமாதரன்), இந்து சமயம் காட்டும் ஆன்மீக வழி (குமாரசாமி சோமசுந்தரம்), இந்து மதம் காட்டும் ஆன்மீகப் பாதை (சாயிசங்கல்பன்), கீதையின் பார்வையில் ஆன்மீகம் (இரா.இரவிசங்கர்), பகவான் இராமகிருஷ்ண பரமஹம்சருடைய ஆத்மீக வாழ்வும் இராமகிருஷ்ண மிஷனின் பணிகளும் (சி.மகேஸ்வரன்), மனித வாழ்க்கையும் இந்து மதமும் (இளையதம்பி சாந்தசொரூபன்), உன்னைப் பிரிகையிலே முருகா..... (மு.தாரகன்) ஆகிய ஆன்மீகக் கட்டுரைகள் முதலாம் பகுதியில் இடம்பெற்றுள்ளன. "வரலாறு" என்ற இரண்டாம் பகுதியில், குறிஞ்சியில் ஒரு அழகன் (க.பாலகிருஷ்ண ஐயர்), தஞ்சைப் பெரிய கோவில் ஓவியங்கள் (ந.வேல்முருகு), பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஈழத்தில் தோன்றிய சைவ சமய இயக்கங்கள்: 1854 - 1870 (இரா. வை.கனகரத்தினம்), சுவாமி விவேகானந்தரும் பெண்களும் (துரை.மனோகரன்), சைவசமயத்தின் வளர்ச்சியில் சோழப் பெரு மன்னர்கள் (அம்பலவாணர் சிவராஜா), இறைவனின் திருவடிவங்கள் (ஆ.தாரகன்), எங்கே போகிறது இந்து மதம்? (இ.ஸ்ரீதர்), ஆகமங்கள் கூறும் வழிபாடுகள் (வ.சிவலோகதாசன்), இந்து சமயத்துக்குப் புதிய விளக்கம் வேண்டுமா? ஒரு கண்ணோட்டம்... (வே.இராஜ கோபாலசிங்கம்), ஈழத்திருநாட்டின் சமய வளர்ச்சியில் சித்தர்கள் (சாந்தகுமார்

சிதம்பரம்), அவதார புருஷர் ஆபத்பாந்தவர் (கேதாரேஸ்வரி பொன்னம்பலம்), 1993/94ம் ஆண்டுக்கான இந்து மாணவர் சங்க 38வது செயற்குழுவின் ஆண்டறிக்கை (தி.கேதீஸ்வரசுதன், செல்வி. ஸ்ரீவதனா) ஆகிய ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 21427. நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தின் சேர்க்கை இலக்கம் 008558).

### 12096

**சின்மயாக்னி.** பிரம்மச்சாரி ரமண சைத்தன்யா. கொழும்பு: பிரம்மச்சாரி ரமண சைத்தன்யா, ஆச்சாரியர், இலங்கை சின்மயா மிஷன், 1வது பதிப்பு, மே 2004. (கொழும்பு: திருநீலகண்டன், லக்ஷ்மி பிரின்டர்ஸ்).

(8), 141 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x15 சமீ.

இலங்கை சின்மயா மிஷனின் துடிப்பமிக்க இளைஞர் அணியினரான "இலங்கை சின்மயா யுவகேந்திரா" குருதேவர் சுவாமி சின்மயானந்தரின் ஜெயந்தியினை "சின்மயாஞ்சலி" என்னும் கலை நிகழ்ச்சியினூடாக வருடாந்தம் கொண்டாடுவது வழக்கம். 2004ஆம் ஆண்டு திருக்கோணமலையில் இடம்பெற்ற இந்நிகழ்வின்போது வெளியிடப்பட்ட சிறப்பு மலர் இது. இமயத்திலிருந்து இதயங்கள் வரை (பத்மா சோமகாந்தன்), வெற்றியின் இரகசியம் (சுவாமி சின்மயானந்தர்), யோகம் கர்மஸு கௌஷலம் (சுவாமி சின்மயானந்தர்), ஸ்ரீ விநாயகர் (சுவாமி சின்மயானந்தர்), பரமேஸ்வரன் (சுவாமி தேஜோமயானந்தர்), கலைமகள்(பிரம்மச்சாரி ரமண சைத்தன்யா), அன்பை அள்ளிக் கொடு (சுவாமி சின்மயானந்தர்), காயத்ரி மந்திரம் (சுவாமி சின்மயானந்தர்), தியானம்-சில குறிப்புகள் (சுவாமி சின்மயானந்தர்), பெற்றோர்கள் கவனத்திற்கு (சுவாமி சின்மயானந்தர்), ஐயம் தெளிதல் (சுவாமி சின்மயானந்தர்), சின்மயா @சிறுகதைகள்.com, சின்மயா மிஷன்: ஓர் அறிமுகம், இலங்கை சின்மயா மிஷன், மலையகத்தில் மாருதி, சின்மய யுவகேந்திரா, சிந்தியுங்கள், உறுதி மொழி ஆகிய 16 தலைப்புகளில் இவிடயதானங்களை உள்ளடக்கி இம்மலர் வெளிவந்துள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 37234).

**மேலும் பார்க்க:12013**

## 294.5(3) ஆலயங்கள், சமய நிறுவனங்களின் சிறப்பு மலர்கள்

### 12097

**அளவெட்டி-நாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானம் ஸ்ரீ நாகவரத நாராயணர் சித்திரத்தேர் மலர்.** விநாசித்தம்பி சிவகாந்தன் (பதிப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானம், அளவெட்டி, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2005. (யாழ்ப்பாணம்: கரிகணன் தனியார் நிறுவனம், இல. 424, காங்கேசன்துறை வீதி).

(6), 40 பக்கம், விளக்கப்படங்கள், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப் படவில்லை, அளவு: 24x18.5 சமீ.

அளவெட்டி-நாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானத்தினர் ஸ்ரீ நாகவரத நாராயணர் சித்திரத் தேரோட்ட விழாவை 27.08.2005 அன்று கொண்டாடிய வேளையில் வெளியிடப்பெற்ற சிறப்பு மலர் இதுவாகும். சித்திரத்தேர் வெள்ளோட்டம், ஸ்ரீ நாகவரத நாராயணர் திருப்பள்ளியெழுச்சி, பிரார்த்தனை, ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானம் பூர்வ வரலாறு தேர் விருத்தம், தேரின் மகிமையும் தத்துவச் சிறப்பும், ஸ்ரீ நாராயணப் பெருமான் தேரேறி வருகிறார் வாருங்கள் அவரழகைப் பாருங்கள், சிறுதேர் உருட்டியருளே, பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபாவின் அருளுரைகள், அறியவேண்டிய சில தகவல்கள், உரு வாக்கியவர் உள்ளத்திலிருந்து, ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் கீதை உபதேச மொழிகள், ஆகிய தலைப்புகளில் ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 48865).

### 12098

**இலங்கை இந்து: திருக்கேதீச்சரம் மண்டலாபிஷேக மலர் 1976.** நா.முத்தையா (இதழ் ஆசிரியர்), ஐ.தி.சம்பந்தன் (துணைஆசிரியர்). கொழும்பு 4: அகில இலங்கை இந்து மாமன்றம், சரஸ்வதி மண்டபம், 25, லோரன்ஸ் வீதி, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1976. (நாவலப்பிட்டி: ஆத்மஜோதி அச்சகம்).

(4), 76 பக்கம், விலை: ரூபா 5.00, அளவு: 26x21 சமீ.

அகில இலங்கை இந்து மாமன்ற வெளியீடான "இலங்கை இந்து" வின் சிறப்பு மலர் இது. திருக்கேதீஸ்வர மண்டலாபிஷேகம் 21.8.1976 இல் நடைபெற்றவேளையில் இம்மலர் வெளியிடப்பட்டது. திருக்கேதீச்சரப் பெருமான் திருவடிகளே சரணம், திருக்கேதீச்சரப் பெருமான் திருவடி தீண்டப்பெற்றோர், திருக்கேதீச்சுவரர் சூசகம், திருக்கேதீச்சரம், திவ்ய ஷேத்திரம், கௌரியம்மை துதி, ஈழத்தில் சிவ வழிபாட்டின் தொன்மை, திருக்கேதீச்சரத் திருப்பணியும் சேர். கந்தையா வைத்தியநாதனும், வேண்டுகோள், ஸ்ரீதிருக்கேதீஸ்வரநாதர் திருவிருத்தம், திருக்கேதீஸ்வர நினைவுகள், பல்லாண்டுக்கொரு பரவசம், சிவபாதசுந்தரரும் திருக்கேதீச்சரமும், பிள்ளையார் வழிபாடு, எண் உருவானவன், பிற்காலச் சோழப் பெருமன்னர் காலத்துச் சமய வளர்ச்சி, கண்டுகொண்டேனே, கடவுள் உண்மை, திருக்கேதீச்சரம் ஆலயத்தின் தொன்மையும் பழமையும், திருக்கைலையும் அடியார் திருவுள்ளமும், நாவுக்கரசரின் பக்தி வைராக்கியத்தைப் புலப்படுத்துவது, கோணேசர் ஆலய வரலாறு, அரன் அமரும் ஆவிடையார், கற்கோயிலே அணுசக்தியின் பிறப்பிடம், ஈழநாடும் சைவசித்தாந்தமும், பிறவிப் பயன், புதுப்பிறவி, கற்பு நிலைமை, நாகநாதரே நல்லருள் புரிவாய், தமிழகத்துத் தவ நூலுக்கோர் தனிப்பெரும் ஆராய்ச்சியுரை, உய்வாய் மனனே, மண்டலாபிஷேக பூர்த்தியும் மகாபிஷேகமும், நமது தர்மம், திருக்கேதீச்சர கும்பாபிஷேக மங்கல வாழ்த்து, உலகம் வாழ உதவும் உயர்ந்த பணி ஆகிய 35 தலைப்புகளின்கீழ் ஆக்கங்கள் பல்வேறு அறிவுசார் பிரமுகர்களால் எழுதப்பட்டு இம்மலரில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 13381).

### 12099

**இலண்டன் சைவ மாநாடு (பத்தொன்பதாவது) சிறப்புமலர்.** *மலர் வெளியீட்டுக் குழு. இலண்டன்* N 6 5BA*: பிரித்தானிய சைவத் திருக்கோயில்கள் ஒன்றியம், 200*A, Archway Road, London, *1வது பதிப்பு, மே 2018. (இலண்டன்: ஜே.ஆர். பிரின்ட்).*

*156 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 29.5x21 சமீ.*

*பிரித்தானிய சைவத் திருக்கோயில்கள் ஒன்றியத்தின் 19வது சைவமாநாடு 2018 மே 5-6ஆம் திகதிகளில் இலண்டனில் இடம்பெற்றது. அதன்போது வெளியிடப்பட்ட இந்தச் சிறப்புமலரில் தலைவருரை, ஆசியுரைகள், வாழ்த்துரைகள் என்பனவற்றுடன், பல்வேறு இந்து சமயக் கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன. இம்மாநாடு, 05.05.2018 அன்று ஈலிங் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலயத்திலும் (*200A Archway Road, London N6 5BA*), 06.05.2018 அன்று லண்டன் லூஷியம் சிவன் கோவிலிலும் (*4A Clarendon Rise, Lewisham, London SE13 5ES*) இடம்பெற்றது.*

### 12100

**உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் கோவில் புனராவர்த்தன மகாகும்பாபிஷேக விழாமலர்.** *மலர்க் குழு. உரும்பிராய்: திருப்பணிச்சபை வெளியீடு, உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் கோவில், 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1973. (சுன்னாகம் திருமகள் அழுத்தகம்).*

*(20), 60 பக்கம், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 215x18.5 சமீ.*

*பல்வேறு இந்துமதப் பிரமுகர்களின் வாழ்த்துச் செய்திகளுடன், விநாயகர் வழிபாடு (பொன்.கிருஷ்ணபிள்ளை), ஒரு இரகசியம் பரம இரகசியம் (செ.தனபாலசிங்கன்), கர்மபரிகாரம் (சி.கணபதிப்பிள்ளை), கருணாகர கணேச அவதாரம் - கந்தபுராணம், உரும்பராய் கருணாகரப் பிள்ளையார் கும்பாபிஷேகத்தை முன்னிட்டு கலைமகள் ஆசிரியர், வாகீச கலாநிதி, கி.வா.ஜெகந்நாதன் அவர்களால் பாடப்பெற்ற கருணாகரன் புகழ்மாலை, பிள்ளையார் சுழி (ச.தண்டபாணி தேசிகர்), பல்லவர் காலச் சமய எழுச்சியும் தமிழ் இலக்கியச் சமய வளர்ச்சியும் (சு.வித்தியானந்தன்), ஆலயம் (திருமுருக கிருபானந்தவாரியார்), கருணாகர கணேச அவதாரம் - கந்தபுராணம், சைவ வாழ்வு (பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி), உரும்பராய் ஸ்ரீ கருணாகரக் கணபதி - திருப்பதிகம் (சீ.விநாசித்தம்பி), கும்பாபிஷேக மகிமை (தி.கி.சீதாராம சாஸ்திரிகள்), கருணாகரக் கணேசனே குடமுழுக் காடியருளே (செ.சிவப்பிரகாசம்), உரும்பராய் கருணாகரப் பிள்ளையார் கோயிலிலுள்ள கல்வெட்டுக்கள் (கார்த்திகேசு இந்திரபாலா), வளர்க கருணாகரன் புகழே (சாரதா), அப்பர் தேவாரத்தில் அரிய சில சொல் வடிவங்கள் (சொ.சிங்காரவேலன்), உரும்பராய் கருணாகரப் பிள்ளையார் கும்பாபிஷேக வாழ்த்துப்பா - நீர்வையூர் பண்டிதர் நீ.சி.முருகேசு அவர்கள் சொல்லியவை, உரும்பராய் கருணாகரப் பிள்ளையார் கோயில் வரலாறும் மகத்துவமும் (அ.பஞ்சாட்சரம்), உரும்பராய் கருணாகரப் பிள்ளையார் திருவூஞ்சல் ஆகிய ஆக்கங்களை இச்சிறப்பிதழ்*

கொண்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 39840. நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தின் சேர்க்கை இலக்கம் 008656).

### 12101

**கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி வரசித்தி விநாயகர் புனராவர்த்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேக மலர்.** த.இராஜதுரை, அ.பிரபாகரன் (இதழாசிரியர்கள்). கொழும்பு 4: இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி, பம்பலப்பிட்டி, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2002. (கொழும்பு 6: எஸ்.பிரின்ட், 4C-1,Fussells Lane).

80 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 27.5x21 சமீ.

இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி (Ramanathan Hindu Ladies College) கொழும்பில் அமைந்துள்ள ஒரு இந்துப் பெண்கள் பாடசாலை ஆகும். 1981 ஜனவரி 19 அன்று 26 மாணவிகளுடனும் 2 ஆசிரியர்களுடனும் கொழும்பு, பம்பலப்பிட்டியில் ஆர். ஏ. டீ. மெல் மாவத்தையில் (முன்னைய டூப்ளிகேஷன் வீதி) தொடங்கப்பட்டது. இது 2006ஆம் ஆண்டில் 89 ஆசிரியர்களையும் 2000 மாணவிகளையும் கொண்டதாக வளர்ச்சியடைந்துள்ளது. இதற்கான நிலத்தை அன்றைய புதிய கதிரேசன் கோவிலின் தர்மகர்த்தாவான பழனியப்பச் செட்டியார் கோவில் நந்தவனத்தின் ஒரு பகுதியை கல்வித் தேவைக்கு என ஒதுக்கினார். மேற்படி பாடசாலை சுற்றாடலில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்ததும் மாணவ சமூகத்தால் வணங்கப்பெற்று வந்ததுமான வரசித்தி விநாயகரின் ஆலய புனராவர்த்தன மகா கும்பாபிஷேகம் 28.10.2002 அன்று நிகழ்ந்ததையொட்டி வெளியிடப்பட்ட சிறப்பு மலர் இது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 34503).

### 12102

**சபரிமலை ஸ்ரீ ஐயப்பன் திருப்பாற்கடல்: 24ஆவது ஆண்டு மண்டலபூஜை சிறப்பு மலர்.** கே.மோகன்குமார் (தொகுப்பாசிரியர்). கொழும்பு 13: சபரிமலை தீர்த்த யாத்திரைக் குழு, அகில இலங்கை ஐயப்ப சேவா சங்கம், இல. 11, ஆட்டுப்பட்டி ஒழுங்கை, 1வது பதிப்பு, டிசம்பர் 1999. (கொழும்பு: மாஸ்க் அட்வர்டைசிங் அன்ட் நியூ நந்தா ஓப்செட்).

(34), 130 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 21.5x14 சமீ.

இலங்கையில் சபரிமலை ஸ்ரீ ஐயப்ப சுவாமி வழிபாடுகள், சபரிமலை புனித யாத்திரை நடத்தும் அமைப்புக்கள், சங்கங்கள், சந்நிதானங்கள், தேவஸ்தானங்கள் பீடங்கள் பீடாதிபதிகள், இந்துமத பாராளுமன்ற உறுப்பினர்கள் குருஸ்வாமிகள் மற்றும் அடியார்களுக்கு உதவும் வகையில் 24ஆவது மண்டலபூஜையையொட்டி வழிபாட்டுப் பாடல்களுடன் கூடியதாக இச்சிறப்பு மலர் வெளியிடப்பட்டுள்ளது. ஸ்ரீ ஐயப்ப சுவாமி வழிபாடு மனிதனை தெய்வமாக்கவல்ல வழிபாடு என்றெல்லாம் போற்றப்படும் ஸ்ரீ ஐயப்பன் வழிபாடு யாத்திரையானது இன்று இலங்கையில்

தேசிய அளவில் பல நூற்றுக்கணக்கான அடியவர்களை உள்வாங்கும் ஒரு யாத்திரையாக நடைபெற்று வருகிறது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 44738).

### 12103

**சபரிமலை ஸ்ரீ ஐயப்பன் திருப்பாற்கோவை: 22ஆவது ஆண்டு மண்டலபூஜை சிறப்பு மலர்-1997.** க.ரவீந்திரகுமார் (தொகுப்பாசிரியர்). கொழும்பு 13: சபரிமலை தீர்த்த யாத்திரைக் குழு, அகில இலங்கை ஐயப்ப சேவா சங்கம், இல. 11, ஆட்டுப்பட்டி ஒழுங்கை, 1வது பதிப்பு, டிசம்பர் 1997. (கொழும்பு 14: விக்ரம் பிரின்டர்ஸ், 40 F, சமகிபுர தொடர்மாடிக் குடியிருப்பு, செயின்ட் ஜோசெப் வீதி).

(36), 150 பக்கம், தகடுகள், விலை: ரூபா 50., அளவு: 22x14 சமீ.

இலங்கையில் சபரிமலை ஸ்ரீ ஐயப்ப சுவாமி வழிபாடுகள், சபரிமலை புனித யாத்திரை நடத்தும் அமைப்புக்கள், சங்கங்கள், சந்நிதானங்கள், தேவஸ்தானங்கள் பீடங்கள் பீடாதிபதிகள், இந்துமத பாராளுமன்ற உறுப்பினர்கள் குருஸ்வாமிகள் மற்றும் அடியார்களுக்கு உதவும் வகையில் 22ஆவது மண்டலபூஜையையொட்டி 26.12.1997 அன்று வழிபாட்டுப்பாடல்களுடன் கூடியதாக இச்சிறப்பு மலர் வெளியிடப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 21609).

### 12104

**சபரிமலை ஸ்ரீ ஐயப்பன் மகரஜோதி தரிசனம்: 26ஆவது ஆண்டு மண்டலபூஜை சிறப்பு மலர்-2001.** கே.மோகன்குமார் (தொகுப்பாசிரியர்). கொழும்பு 13: சபரிமலை தீர்த்த யாத்திரைக் குழு, அகில இலங்கை ஐயப்ப சேவா சங்கம், இல. 11, ஆட்டுப்பட்டி ஒழுங்கை, 1வது பதிப்பு, டிசம்பர் 2001. (கொழும்பு 13: மாஸ்க் அட்வர்டைசிங் அன்ட் நியூ நந்தா ஓப்செட் பிரின்டர்ஸ், 29, சங்கமித்த மாவத்தை).

(40+112), 160 பக்கம், தகடுகள், விலை: ரூபா 100., அளவு: 21x14.5 சமீ.

இலங்கையில் சபரிமலை ஸ்ரீ ஐயப்ப சுவாமி வழிபாடுகள், சபரிமலை புனித யாத்திரை நடத்தும் அமைப்புக்கள், சங்கங்கள், சந்நிதானங்கள், தேவஸ்தானங்கள் பீடங்கள் பீடாதிபதிகள், இந்துமத பாராளுமன்ற உறுப்பினர்கள் குருஸ்வாமிகள் மற்றும் அடியார்களுக்கு உதவும் வகையில் 26ஆவது மண்டலபூஜையையொட்டி 26.12.2001 அன்று வழிபாட்டுப்பாடல்களுடன் கூடியதாக இச்சிறப்பு மலர் வெளியிடப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 55667).

### 12105

**சைவத் தொண்டன்: எட்டாவது சைவ மாநாட்டு சிறப்பிதழ்-1972.** ஆ.கந்தையா (பொதுச் செயலாளர்). யாழ்ப்பாணம்: கைதடி இந்து வாலிபர் சங்கம், கைதடி, 1வது பதிப்பு, 1972. (யாழ்ப்பாணம்: வட மாகாண கூட்டுறவு அச்சக நூற்பதிப்புச் சங்கம்).

(4), 26 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x13.5 சமீ.

கைதடி இந்து வாலிபர் சங்கத்தினால் வெளியிடப்பட்ட எட்டாவது சைவ மாநாட்டுச் சிறப்பிதழ். சைவ மாநாடு பற்றிய தகவல்களை உள்ளடக்கிய சிறப்பிதழாக வெளியிடப்பட்டது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 4593/19631).

**12106**

**திருக்கோணமலை அன்புவழிபுரம் தில்லையம்பலப் பிள்ளையார் ஆலய மகா கும்பாபிஷேக சிறப்பு மலர் 01.09.2000.** மலர்க் குழு. திருக்கோணமலை: தில்லையம்பலப் பிள்ளையார் ஆலயம், அன்புவழிபுரம், 1வது பதிப்பு, செப்டெம்பர் 2000. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).

48 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x17 சமீ.

ஆசிச் செய்திகள், வாழ்த்துச் செய்திகள் ஆகியவற்றுடன், ஸ்ரீ தில்லையம்பலப் பிள்ளையார் கோவில் வரலாறு (ப.கந்தசாமி), விநாயகரது சிறப்புமிகு தத்துவங்கள் (க.பாலச்சந்திர சர்மா), வினை தீர்க்கும் விநாயகன் (கெ.சித்திரவேலாயுதன்), இந்துவாக வாழ்வோம் நாம் இந்து தர்மம் காப்போம் (சீ.யோகேஸ்வரன்), பசுவதை (பொ.கந்தையா), ஒரு நிமிடம் சிந்திப்போம் ஒரு நிமிடம் சிந்திப்போம் (திருக்கோணமலை மாவட்ட காந்தி சேவை சங்கம்), நாமும் நமது மதமும் (செல்லப்பா சிவபாதசுந்தரம்), ஞானவைரவர் கோவில்-அன்புவழிபுரம், அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவில் -அன்புவழிபுரம், அன்புவழிபுர சரவணபவ பால முருகன் ஆலயம் (த.பேரின்பநாதன்), ஸ்ரீ முத்துமாரி அம்பாள் காந்திநகர் (த.பேரின்பநாதன்), விநாயகப் பெருமானின் திருநாமங்கள் அர்ச்சனை நாமாவளியில் காரணப் பெயர், கூப்புகின்றேன், கைகூப்பி நன்றி சொல்கின்றேன் உங்களுக்கு.... (இ.மனோகரன்), அன்புவழிபுரம் தில்லையம்பலப் பிள்ளையார் திருவூஞ்சல் (கந்ததாஸ் இரவீந்திரராஜா) ஆகிய ஆக்கங்கள் இம்மலரில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 39955. நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தின் சேர்க்கை இலக்கம் 008651).

**12107**

**திருக்கோணமலை இராமகிருஷ்ண சங்க ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி அருள்மிகு சித்தி விநாயகர் ஆலய மகா கும்பாபிஷேக மலர்.** சிவயோகநாதன் பிரேம் ஆனந்த் (இதழாசிரியர்). திருக்கோணமலை: இந்து மாணவர் மன்றம், ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி, 1வது பதிப்பு, செப்டெம்பர் 1997. (கொழும்பு 14: போகய்ன்வில்லா (Bougainvilla) பிரின்டர்ஸ்).

(20), 46 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x18.5 சமீ.

ஆசிச் செய்திகள், வாழ்த்துச் செய்திகளுடன் பாடசாலை இந்து மாணவர் மன்றத்தின் அறிக்கைகளையும் கொண்டுள்ள இம்மலரில் விநாயகப் பெருமானும் கல்லூரியும், கும்பாபிஷேகம் ஒரு விளக்கம், ஆலயப் பிரதட்சணம், புண்ணியப்

பூமியில் இன்னுமோர் ஆலயம் திருக்கோணமலை மாவட்டத்தில் விநாயகர் வழிபாடு, விநாயகர் வழிபாட்டுத் தொன்மையும் சிறப்பும், ஆலய வழிபாடும் நாமும், ஆலய அமைப்பும் சிற்ப சாஸ்திரமும், அந்தரங்க சுத்தி, விநாயகர் வழிபாடு, மனம் கவர்ந்த மூவர், பிள்ளையார், இசையும் கலையும், காணாபத்தியம், விநாயக விரதங்கள், சொல்லாததும் இல்லை இல்லாததும் இல்லை, இறைவன் இசை-ஆலயம், பழந்தமிழர் பண்டை நடுகல் வழிபாடு, அன்பு வழிகாட்டும் எமது சமயம், விரதம் என்பது மனக்கட்டுப்பாடே, பாடசாலையில் சமயக் கல்வி, இந்து மதத்தின் நாகரிகம், சைவ சமய சின்னங்கள், சந்ததமும் இணைந்து பணி வோம் ஆகிய தலைப்பிலான ஆக்கங்கங்களும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 24591).

**12108**

**திருக்கோணமலை விசாலாட்சி சமேத விஸ்வநாதசுவாமி (சிவன்) கோவில் மகாகும்பாபிஷேக மலர்**.இ.வடிவேல், அ.கணேசலிங்கம், திருமலை சுந்தா, து. தவசிலிங்கம் (மலர்க் குழுவினர்). திருக்கோணமலை: விசாலாட்சி சமேத விஸ்வநாத சுவாமி கோவில், 1வது பதிப்பு, ஜுன் 1999. (திருக்கோணமலை: ஸ்ரீ கணேசா பிரஸ்).

viii, 100 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 27x21.5 சமீ.

ஆசியுரைகள், தல வரலாறு என்பவற்றுடன் ஒரு புதிய விடிதற் பொழுது (சி. சிவசேகரம்), பாணலிங்கம் (சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்கள்), விஸ்வநாத சுவாமி (சிவன்) ஊஞ்சல் (வே.அகிலேசபிள்ளை), இறைவழிபாடு (திருமுருக கிருபானந்த வாரியார்), புலவர் அகிலேசபிள்ளை வரலாறு (இ.வடிவேல்), திருமுறைகள், சிவலிங்க வழிபாடு (சி.பத்மநாதன்), சண்டேஸ்வர நாயனார் வரலாறு, மார்க்கண்டேயர், சிவாலய வழிபாட்டு நெறி, சிவகாமி அம்மன் ஊஞ்சல் (வே.அகிலேசபிள்ளை), திருமுறைகளில் இலக்கிய வளம் (சி.பாலசுப்பிரமணியம்), தாய்மையே இறைவனின் முதல் வடிவம் (தங்கம்மா அப்பாக்குட்டி), விபூதியின் சிறப்பு (திருமுருக கிருபானந்த வாரியார்), பள்ளி எழுந்தருளாயே (மணிமேகலாதேவி கார்த்திகேசு), விஸ்வநாதசிவனுக்கு கலையால் ஆராதித்த முத்தமிழ் வித்தகர் வேலாயுதம்பிள்ளை (த.சித்தி அமரசிங்கம்), ஆத்மீக உள்ளொளி (இ.செல்வராணி), கேதாரகௌரி விரதம் (ஸ்ரீ வித்தியாரஞ்சனி ஸ்ரீரங்கநாதன்), சிவனாலயம் அமைத்த சிற்பாசாரியார் (இ.சி.சுந்தரலிங்கம்), ஓம் நமசிவாய (சுவாமி தந்திரதேவர்), என்றும் இறைஞ்சுகின்றோம் (செ.நவசோதிராசா), தோத்திரப் பாடல் (அப்பாச்சிப்பிள்ளை செல்வநயினார்), குடமுழுக்கு நாயகன் (திருமலை சுந்தா), உயிர்காக்கும் மஹா ம்ருத்யுஞ்ஜய மந்திரம் (நாகராஜா கணபதிப்பிள்ளை), விஸ்வநாதரை வேண்டிநின்றாள் (த.சிவராஜசிங்கம்), பிரம்மஸ்ரீ பூரண சண்முகரெத்தினக் குருக்கள் (பூரண சுந்தரேஸ்வர சர்மா), சிவனின் திருவிளையாடற் கதைகள் (தி. பிரியந்தி), திருக்கோணமலை விசாலாட்சி சமேத விஸ்வநாதசுவாமி (சிவன்) கோவில் புனருத்தாரணப் பணி (து.தவசிலிங்கம்), நிதியுதவியோர்களின் விபரப்பட்டியல், கோவில் அமைப்பு ஆகிய படைப்பாக்கங்களும் இம்மலரில்

உள்ளடக்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 27395).

### 12109

**திருத்தம்பலகாமம் ஆதிகோணநாயகர் கோயில் மஹா கும்பாபிஷேக விழாச் சிறப்பு மலர் 1999**. வே. வரதசுந்தரம் (மலர் ஆசிரியர்). தம்பலகாமம்: அறங்காவலர் அவை, ஆதிகோணநாயகர் கோயில் தேவஸ்தானம், 1வது பதிப்பு, ஜுன் 1999. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).

68 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 75.00, அளவு: 25x17 சமீ.

21.4.1999 அன்று மகா கும்பாபிஷேகம் செய்யப்பட்ட திருத்தம்பலகாமம் ஆதிகோணநாயகர் கோயிற் பணிகளுக்கென வழங்கப்பட்ட வாழ்த்துச் செய்திகள், ஆதிகோணநாயகர் கோயில் வரலாறு, மற்றும் சைவ சமய அறிவூட்டும் படைப்பாக்கங்களைக் கொண்டதாக இம்மலர் 06.06.1999 அன்று வெளியிடப் பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 48866).

### 12110

**திருநெல்வேலி தலங்காவற் பிள்ளையார் கோவில் கும்பாபிஷேக மலர்**. எஸ். திருச்செல்வம் (தொகுப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: எஸ்.திருச்செல்வம், தலங்காவற் பிள்ளையார் கோவில், திருநெல்வேலி, 1வது பதிப்பு, 1988. (யாழ்ப்பாணம்: முரசொலி அச்சகம்).

(52) பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 23.5x18.5 சமீ.

மேற்படி கோவிலில் 17.6.1988இல் நடைபெற்ற சம்புரோஷண மகாகும்பாபிஷேகம், 03.08.1988 அன்று பூர்த்தியாகிய மண்டலாபிஷேகம் ஆகியவற்றின் நினைவாக இக்கும்பாபிஷேக மலர் முரசொலி ஆசிரியர் எஸ்.திருச்செல்வம் அவர்களால் தொகுத்து வெளியிடப்பட்டுள்ளது. இம்மலரில் சிறப்புக் கட்டுரைகளாக காலந்தோறும் விநாயகர் வழிபாடு (ப.கோபாலகிருஷ்ணன்), யாழ்ப்பாணத்து இந்து மக்களிடையே சமூக மேனிலைப்பாட்டு அசைவியக்கமும் வழிபாடும் (கார்த்திகேசு சிவத்தம்பி), கணபதி (கா.கைலாசநாதக் குருக்கள்), கோயில் வரலாற்றுக் குறிப்புகள் (எஸ்.திருச்செல்வம்), விநாயகர் பரத்துவம் (சிவஸ்ரீ சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்கள்), தலங்காவலான் அற்புத விநாயகன் (நா. சண்முகரத்தினக் குருக்கள்), பிணி தீர்க்கும் பிள்ளையார் (சதா யோகீஸ்வரக் குருக்கள்) ஆகிய ஏழு ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 9372).

**12111**

**நாயக்கர்சேனை ஸ்ரீ ஐயனார் சுவாமி கோவில் கும்பாபிஷேக சிறப்பு மலர் 1995.** ஏ.கே.திருச்செல்வம் (மலர் ஆசிரியர்). புத்தளம்: ஆலய பரிபாலன சபை, நாயக்கர்சேனை ஸ்ரீ ஐயனார் சுவாமி கோவில், மாம்புரி, 1வது பதிப்பு, ஜுன் 1995. (நீர்கொழும்பு: சாந்தி அச்சகம்).

(164) பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x18 சமீ.

16.6.1995இல் புத்தளம் மாவட்டத்தில் உள்ள நாயக்கர்சேனை ஸ்ரீ ஐயனார் சுவாமி கோவிலில் இடம்பெற்ற கும்பாபிஷேக வைபவத்தின்போது வெளியிடப்பட்ட சிறப்பு மலர். இம்மலரில் கோயிலும் குடமுழுக்கும் (சி.தில்லைநாதன்), நாயக்கர்சேனை ஸ்ரீ ஐயனார் சுவாமி கோவில் (கே.பசுபதிப்பிள்ளை), சித்திரைச் செவ்வாய் விழா-உடப்பு பிரதேசம்: ஒரு நாட்டுப்புறவியல் நோக்கு (கே.ஸ்ரீகந்தராசா), வடமேல் மாகாணத்தில் சக்தி வழிபாடு (எஸ்.நாகராஜன்), புத்தளம் மாவட்டத்தின் இந்துக் கோவில்களின் தோற்றமும் அதன் சுருக்கமான வரலாறுகளும் (பீ. தம்பித்துரை), வடமேல் மாகாணத்தின் இந்து சமய வளர்ச்சி (வ.கணேசன்), புத்தளம் மாவட்டத்தில் இந்துக்களின் திருமண, பூப்புனித நீராட்டு, அபரக் கிரியைகள் (வி.தயாளன்), ஐயனார் வழிபாட்டில் ஐயனார் மூர்த்தம் (இரா. வை.கனகரத்தினம்), புத்தளம் மாவட்ட சைவ சமய நிறுவனங்களும் அவற்றின் பணிகளும் (மு.கௌரிகாந்தன்), வடமேல் மாகாணத்தில் தோன்றிய சைவநூல் கள் (தில்லையடிச் செல்வன்), வடமேல் மாகாணத்தில் சைவசமயமும் கல்வியும் (ச.சுபதேவி) ஆகிய கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 24833).

**12112**

**நீர்கொழும்பு இந்து இளைஞர் மன்றம் பவளமலர் 2008.** கார்த்திகேயன் ஆனந்தசிவம் (இதழாசிரியர்), திருமதி கங்கா முருகன், ச.மனோகரன் (துணை இதழாசிரியர்கள்). நீர்கொழும்பு: இந்து இளைஞர் மன்றம், கடற்கரைத் தெரு, 1வது பதிப்பு, 2008. (நீர்கொழும்பு: சாந்தி அச்சகம்).

(360) பக்கம், வண்ணத் தகடுகள், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 29.5.5x22 சமீ.

ஆசிச் செய்திகள், வாழ்த்துச் செய்திகள், வரலாறுகள், கட்டுரைகள், பரிசுபெற்றோர் விபரங்கள், பரிசுக் கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள், ஆகிய பிரிவுகளின்கீழ் இம்மலர் வடிவமைக்கப்பட்டுள்ளது. கட்டுரைப் பகுதியில் வாய்மொழி இலக்கியம் தாலாட்டு பெண்களின் பங்களிப்புகள் (செல்வி திருச்சந்திரன்), சித்தாந்தச் சிந்தனைகள் - கவிதைகள் (கம்பவாரிதி ஜெயராஜ்), தமிழும் சைவமும் தழைப்பதில் புலம்பெயர்வோரின் ஈடுபாடுகள் இடைஞ்சல்கள், வளர்ச்சிகள்: ஒரு கண்ணோட்டம் (மு.ந.சிவச்செல்வன்), ஈழத்தில் முருக வழிபாடு சிறப்புப் பெற்ற தலங்கள் (கனகசபாபதி நாகேஸ்வரன்), இராமாயண இதிகாசம் வெளிப்படுத்தி நிற்கும் இலக்கிய விழுமியங்கள் (பூரணம் ஏனதிநாதன்), இந்துசமய வழிபாட்டில் ஒன்றிவிட்ட பெண்தெய்வ வழிபாடு (ச.பத்மநாதன்), மெய்கண்ட சாத்திரங்களில்

*திருவருட்பயனின் சிறப்பு (சு.செல்லத்துரை), ஆதித் தமிழர் வாழ்வில் பிறமதச் செல்வாக்கு (க.வி.விக்னேஸ்வரன்), ஆன்ம நேயம்-சில குறிப்புகள் (குமாரசாமி சோமசுந்தரம்), இந்து சமயக் கல்வி மரபு (சோ.சந்திரசேகரன்), கந்தபுராணத்தில் ஒரு துளி (மு.தியாகராசா), சமய குரவரும் சைவசமய நெறிகளும் (சற்சொரூபவதி நாதன்), இலங்கையில் இந்து சமயம் (தேவகுமாரி ஹரன்), தமிழர் கலாசார வாழ்வியலோடு பின்னிப் பிணைந்த பண்டிகைகள் (பத்மா சோமகாந்தன்), சைவத்தை வளர்க்கவேண்டியஅவசியம் (ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி), திருநீற்றின் மகிமை (எஸ்.குமாரவேலு), திருக்குறள் காட்டும் வாழ்க்கை நெறி (ந.கணேசலிங்கம்), திருவாசகத்தின் பெருமை (திருமதி ச.குமாரவேலு), சேக்கிழார் காட்டிய இறை அன்பு (இ.ஆ.க.சொக்கநாதன்), சமய கலாசார விழுமியங்களை வளர்ப்பதில் அறநெறிப் பாடசாலைகளின் பங்களிப்பு (திருமதி ஜெயந்தி நவரட்ணம்), விக்கினங்கள் போக்கும் விநாயகர் பெருமை (திருமதி நித்தியகலா கிருஷ்ணராம்), கந்தபுராணம் கூறும் இறைதத்துவம் (தாமரைலட்சுமி வைத்தியநாதன்), துரியோதனன் தீய மனத்தோன் அல்ல (எஸ்.மனோகரன்), பஞ்ச ஈஸ்வரங்கள்(திருமதி தி.அன்புக்கரசி), எல்லா மதத்தையும் உள்ளடக்கிய இந்து மதம் (கா.ஆனந்தசிவம்), கைகேயி ஒரு மாசற்ற தியாகசீலி (கா.ஆனந்தசிவம்) ஆகிய கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. மலர் வெளியீட்டுக் குழு அங்கத்தவர்களாக பொ.ஜெயராமன், சு.நவரெட்ணராஜா, ந.கணேசலிங்கம், ஆ.கந்தசாமி, ச.நடராஜன், வே.சந்திரசேகரம், திருமதி ஜெயந்தி நவரட்ணம் ஆகியோர் பணியாற்றியுள்ளனர்.*

**12113**

**புத்தளம் மன்னார் வீதி ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய கும்பாபிஷேக மலர்: 11.6.2001.** *மலர் வெளியீட்டுக் குழு. புத்தளம்: ஆலய பரிபாலன சபை, ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம், மன்னார் வீதி, 1வது பதிப்பு, ஜுலை 2001. (கொழும்பு 13: வானதி பிரின்டர்ஸ், 171, ஸ்ரீகதிரேசன் வீதி).*

*(24), 76 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 27.5x22 சமீ.*

*இம்மலரில் ஆசியுரைகள், வாழ்த்துரைகளுடன், ஆலய வரலாற்றுக் குறிப்புகள் (மு.கௌரிகாந்தன்), சிறுதெய்வ வழிபாட்டின் வரலாற்றுப் பின்னணி: ஒரு நோக்கு (மா.நாகராஜா), ஊஞ்சற் பதிகம் (ச.சுப்பிரமணியம்), சித்திவிநாயகர் பதிகம் (கே. பசுபதிப்பிள்ளை), பாமாலை (சி.சிவமூர்த்தி), பாரதி கண்ட விநாயகர் (சி. தில்லைநாதன்), நீதிநூல்கள் கூறும் கல்விச் சிந்தனைகள் (சோ.சந்திரசேகரம்), வரத பண்டிதரின் இலக்கிய சமய நூல்கள் (துரை மனோகரன்), கல்வியின் இறுதி நோக்கம் (M.H.M.M.மஹ்ரூப் மரைக்கார்), விநாயக வழிபாடு (கே.நாகேந்திரன்), சாத்தானும் அரிஹரபுத்திரனும் (வ.மகேஸ்வரன்), சைவ சமயிகள் என்போர் யாவர் (குமாரசாமி சோமசுந்தரம்), குருநாகலையில் சைவம் (எஸ்.ரமேஸ்), சிலாபம் நகரில் கிறிஸ்தவர்களினதும் இந்துக்களினதும் பரஸ்பர ஒற்றுமைப் போக்கு (வயலெற் சந்திரசேகரம்), கட்டிடக் கலையில் ஒரு கண்ணோட்டம் (நவாலியூர் தி.சந்திரன்), ஆலயங்களும் அறநெறிப் பாடசாலைகளும் (பா. மதுரநாயகம்), விநாயக விரதங்கள் (அ.ந.இராஜகோபால்), ஆன்மீகம் ஒழுக்க*

விழுமியம் மற்றும் சமூக அபிவிருத்திக்கான கல்வி (மா.கருணாநிதி), ஆலய தரிசனம் (உருத்திரசிவம் துஷ்யந்தி), ஜோதிடக்கலை (த.பத்மநாதன்) ஆகிய படைப்பாக்கங்கள் இடம்பெற்றுள்ளன. மலர் வெளியீட்டுக் குழுவில் எல். சிவநாதன்பிள்ளை, மு.கௌரிகாந்தன், அ.ந.இராஜகோபால், த.பத்மநாதன் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 39180).

## 12114

**மாவடிப்பிள்ளையார் ஆலய கும்பாபிஷேக சிறப்பு மலர் 2004.** மலர்க்குழு. மட்டக்களப்பு: மாவடிப் பிள்ளையார் ஆலயம், ஆறுமுகத்தான் குடியிருப்பு, ஏறாவூர், 1வது பதிப்பு, 2004. (ஏறாவூர் 4: ஏறாவூர் தெற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், பிரதான வீதி).

(12), 83 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x17.5 சமீ.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறப்புமிக்க மாவடிப் பிள்ளையார் ஆலய கும்பாபிஷேகத்தையொட்டி வெளியிடப்பட்ட இச்சிறப்பு மலரில், 190 ஆண்டுகளுக்கு முன்னதான பழமைச் சின்னங்கள், ஆலயத்தின் தற்போதையை விமானச் சிற்பங்கள், ஆலயத்தின் பரிவாரத் தெய்வங்கள், மாவடிப் பிள்ளையார் ஆலயத்துடன் தொடர்புடைய ஏனைய ஆலயங்கள், மாவடிப் பிள்ளையார் ஆலயம் ஒரு வரலாற்று நோக்கு, இலங்கையில் இந்து மதத்தின் தொன்மையும் அது மறைக்கப்பட்ட தன்மையும், பரத நாட்டிய விற்பன்னர்கள் முன்னே காத்து நிற்கும் காலப்பணி சிந்திப்பார்களா? செய்வார்களா?, இந்து மதமும் நாமும், கிழக்கிலங்காபுரி மக்களின் வரலாறு ஒரு அறிமுகம், இந்துக்கோயில் கட்டடக்கலை, கணேசர் உற்பவம், தமிழர் பண்பாட்டில் கார்த்திகை விளக்கீடு ஒரு நோக்கு, கும்பாபிஷேக காலங்களில் ஓதத்தக்க திருப்பதிகங்கள், கீதை எடுத்துக்கூறும் வாழ்க்கை நெறி எந்த அளவுக்கு இந்த மக்களைப் பொறுத்தமட்டில் நடைமுறை வாழ்க்கை நெறியாக அமைகின்றது?, இந்து சமூகத்தில் பெண்கள்: இன்றும் அன்றும், சித்தர் பாடல்களில் இந்து சமயம் ஒரு நோக்கு, தமிழீழத்தில் பாரம்பரிய நாட்டுக்கூத்தின் வளர்ச்சிகள், ஆறுமுகத்தான் குடியிருப்பில் நாகதம்பிரான் வழிபாடு, இந்து வாழ்வியலின் தத்துவம் ஓர் அறிமுகம், உய்வினை உறுதியாகத் தரவல்ல சில சிந்தனைகள், பெரியதம்பிரான் வழிபாடு, தலங்கள், புனரமைப்பு ஆகிய தலைப்புகளிலான ஆக்கங்கள் இம்மலரில் இடம்பெற்றுள்ளன. (இந் நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 34537).

## 12115

**மாவத்தகம டெனவர் ஸ்ரீ சகலபுவனநாயகி அம்மன் ஆலய மகாகும்பாபிஷேக மலர்-2005.** மலர் ஆக்கக் குழு. மாவத்தகம: ஸ்ரீ சகலபுவனநாயகி அம்மன் ஆலயம், டெனவர் தோட்டம், 1வது பதிப்பு, மார்ச் 2005. (அச்சக விபரம் தரப்படவில்லை).

*(138) பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x17 சமீ.*

*ஆசியுரைகள், அன்னை மகமாரிக்கு வாழ்த்துப்பா, ஆலய திருப்பொன்னூஞ்சல், ஆலய வரலாறு, கடந்தகாலத்தில் -ஒரு கண்ணோட்டம், கவிதை இதழ், கட்டுரைப் பகுதி, நினைவின் நிழல்கள் ஆகிய அம்சங்கள் இம்மலரை அலங்கரித்துள்ளன. 25.3.2005இல் வெளியிடப்பட்ட இம்மலரின் மலர் ஆக்கக் குழுவின் கௌரவ ஆசிரியராக அருட்கவியரசு கண்மணிதாசன் (ஏரூரான்) அவர்களும் உதவி ஆசிரியர்களாக ஓவியர் கவீந்திரன், வெற்றித் திருமகள், சசிகுமார் ஆகியோரும் பணியாற்றியுள்ளனர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 39920).*

### 12116

**வவுனியா வெளிவட்ட வீதி ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய முகபத்திர வட்ட (வேசரம்) சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா மலர் 2001**.*அகளங்கன் (மலராசிரியர்). வவுனியா: வெளிவட்ட வீதி ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலயம், 1வது பதிப்பு, ஏப்ரல் 2001. (வவுனியா: நியூ வன்னிகுயிக் அச்சகம், 140/2, கண்டி வீதி).*

*88 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x18 சமீ.*

*பல்வேறு மதத்தலைவர்கள், சமூகத்தலைவர்களின் ஆசிச் செய்திகள் மற்றும் வாழ்த்துச் செய்திகளுடன் வெளியிடப்பட்டுள்ள இம்மலரில் சில சிறப்பாக்கங்களும் இடம்பெற்றுள்ளன. சித்திரத்தேர், வெள்ளோட்டம் ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலயம் வவுனியா (சி.இரகுநாதபிள்ளை), வவுனியா வெளிவட்ட வீதி ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய தல வரலாற்றுச் சுருக்கம் (ஆலயபரிபாலன சபையினர்), இதயத்தேரிலிருந்து (சிற்பி கி.கலாமோகன்), வெளிவட்ட வீதி விநாயகருக்கு முகபத்திர வட்டத்தேர் (வேசரம்) (சிற்பி கி.கலாமோகன்), தேரின் அமைப்பும் தத்துவங்களும் (ஸ்தபதி சு.சண்முகவடிவேல்), சிந்திப்பவர்க்கருள் சிந்தாமணி விநாயகர் (அமரர் ச.நமசிவாயம்), நவமணிச் சித்திரத்தேர் நலமெல்லாம் சுரந்து வாழி (சீ.விநாசித்தம்பி), இத்தரை மாந்தர் துன்ப இருள் கிழித்து உலாவ வேண்டும் (கவிஞர் அகளங்கள்), வவுனியா, வெளிவட்ட வீதி ஸ்ரீ சிந்தாமணிப் பிள்ளையார் திருஊஞ்சற் பாமாலை (அருட்கவி கல்மடு பொன் தில்லையம்பலம்), வவுனியா வெளிவட்ட வீதி ஸ்ரீ சிந்தாமணிப் பிள்ளையார் திருஊஞ்சற் பாமாலை (அருட்கவி கல்மடு, பொன்.தில்லையம்பலம்), புதிய சித்திரத் தேரினை உருவாக்கிய சிற்பக்கலாமணி, சிற்பகலாரத்தினம் ஸ்தபதி திரு.கிருஷ்ணர் கலாமோகன் அவர்களுக்கு ஆலய பரிபாலன சபையினர் "சிற்பகலாகேசரி" என்னும் பட்டம் வழங்கி அளித்த பாராட்டுப் பத்திரம் ஆகியவை இம்மலரை அலங்கரிக்கின்றன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 35625. நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தின் சேர்க்கை இலக்கம் 008705).*

### 12117

**வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் கருணைமலர்: புனராவர்த்தன கும்பாபிஷேக மலர்-2003.** ஹேமா ஷண்முகசர்மா (பதிப்பாசிரியர்). முல்லைத்தீவு: அருள்மிகு ஸ்ரீ வற்றாப்பளைக் கண்ணகை அம்மன் தேவஸ்தானம், வற்றாப்பளை, திருத்திய 2வது பதிப்பு, 2003, 1வது பதிப்பு, 1978. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).

xxii, 156 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 26x19 சமீ.

இம்மலரின் 1978இல் வெளிவந்த முதற்பதிப்பிலிருந்து தேவையான அம்சங்களைத் தெரிந்தெடுத்தும் மேலதிகமாகவும் பல விடயங்களைப் புதிதாகச் சேர்த்தும் இம்மறுபதிப்பு வெளிவந்துள்ளது. ஈழத்திற் கண்ணகி வழிபாட்டின் தோற்றமும் வளர்ச்சியும் (எம்.சற்குணம்), வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் ஆலய வரலாற்று மரபு (நா.சுப்பிரமணிய ஐயர்), வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் ஆலயத்தில் நிகழ்ந்த அனர்த்தங்களும் அவற்றில் இருந்து மீண்டெழுதலும் (செ.சு.கிருஷ்ண மூர்த்தி), வற்றாப்பளைக் கண்ணகை அம்மன் பொங்கல் (சி.பாலகிருஷ்ணன்), வற்றாப்பளைக் கண்ணகை அம்மன் வயந்தன் (சீ.வினாசித்தம்பி), வற்றாப்பளைக் கண்ணகை அம்மன் கோவில் பொங்கலும் கதிர்காமம் தரை யாத்திரையும் (ந. மயில்வாகனம்), வற்றாப்பளைக் கண்ணகை அம்மன் வரலாற்றுச் சிந்து, வற்றாப்பளைக் கண்ணகை அம்மன் அற்புதமும் அனுபவமும் (கா.கார்த்திகேய சர்மா), அம்பாள் உலாவரும் அழகுத் திருமஞ்சம் (க.ஜெயவீரசிங்கம்), வற்றாப்பளைக் கண்ணகை அம்மன் மழைக் காவியம், பத்தஞானி பொங்கல்-வழிபாட்டு மரபுமுறைகள் (மயில் நல்லநாதபிள்ளை), அம்மானை, வற்றாப்பளைக் கண்ணகை அம்மன் வழிபாடு முள்ளியவளைத் தொடர்புகள் (முல்லைமணி), லட்சுமி கடாட்சம் (நா.நடராஜக் குருக்கள்), தண்ணீரூற்று ஊற்றங்கரை சித்திவிநாயகர் ஆலயம் (இ.வரதராசா), கண்ணகி வழிபாட்டில் தேசிய ஒருமைப்பாடு (சுப்பிரமணியம் திருஞானம்), வற்றாப்பளை ஞானமூர்த்திப் பிள்ளையார் ஆலயம் (க.ஜெயவிரசிங்கம்), வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் பனிச்சையாடிய பாடற்சிந்து (சி.இராசசிங்கம்), மண்ணக மாதர்க்கு அணி (புவனா ஐயம்பிள்ளை), வற்றாப்பளைக் கண்ணகை அம்மனும் கோவலன் கண்ணகிக் கூத்தும் (அருணா செல்லத்துரை), சக்தி தத்துவம் (தங்கம்மா அப்பாக்குட்டி), வற்றாப்பளைக் கண்ணகை அம்மனின் வரலாற்று வணக்கப் பாக்கள் (ச.இராமலிங்கம்), வற்றாப்பளைக் கண்ணகை அம்மன் சிலம்புகூறல் வருகைதந்த வரலாறு, வேதங்கள் (கா.கைலாசநாதக் குருக்கள்), குமுழமுனை கொட்டுக் கிணற்றுப் பிள்ளையார் (சி.தெய்வேந்திரம்பிள்ளை), தெட்சிணாமூர்த்திப் பெருமானின் தனிப்பெருங் கருணை (பூரண தியாகராஜக் குருக்கள்), பழந்தமிழர் பண்பாடு பேணும் வன்னிநாடு (அநு.வை.நாகராஜன்), கண்ணன் தூது சென்றது ஏன் (ஸ்ரீ வத்ஸ ஜெயராம சர்மா), சமயம் சக விஞ்ஞானம் சமன் மனிதப் பண்பாடு (செ.சிவராசா), காப்பிய ஆசிரியர் வெற்றிவேற் புலவர் வரலாறு, வெற்றிவேற் புலவர் பாடியருளிய சிலம்புகூறல் காவியம் (முன்னுரை), சிலம்பு கூறல் காவியம்,

உபநிடதங்கள்-ஓர் அறிமுகம் (ஆத்மகணானந்தாஜி மகராஜ்), பாரோர் புகழ் வரும் பங்குனி உத்தரம் (ஹரிஹரசர்மா), சைவசித்தாந்தம் கூறும் கடவுட் கொள்கை (ஏ.என்.கிருஷ்ணவேணி) ஆகிய 35 படைப்பாக்கங்கள் இம்மலரில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 34021).

## 294.5(4) பக்தி இலக்கியங்கள்

### 12118

**அகண்டாகார அருணாசல அருவி: நல்லைக் குகன் அழகு மதுரம்.** ஸ்ரீமத் அருணாசலம் சுவாமிகள். கொழும்பு 6: டாக்டர் கே.கிருஷ்ணானந்தசிவம், ஸ்ரீ சிவகுருநாத பீட அறக்கட்டளை, 501, லாண்ட்மார்க் கோர்ட், 33, ருத்திரா மாவத்தை, வெள்ளவத்தை, 3வது பதிப்பு, ஜனவரி 2017, 1வது பதிப்பு விபரம் தரப்படவில்லை. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

114 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x15 சமீ.

இந்துசமயம் சார்ந்த 51 அழகு தமிழ்ப் பக்திப் பாடல்களை இந்நூல் உள்ளடக்கி யுள்ளது. விநாயகர் துதி, விஸ்வநாதம், சிவசிவ சிவோகம், மாமருந்தே, தாளை ஐயனே, வாலறிவுடை மகான்களுக்கு வணக்கம், ஏகம் நான், பூரணன் நீ, ஏகமே பிரம்மமே, ஆழ மூழ்கு மனமே ஆழ மூழ்கு, உள்வாங்கு மனமே, ஜீவ பிரம்ம ஐக்கிய சொரூபம், கற்பகத் தாயே, தேவி திருமுகம், வாணி சரஸ்வதி பாரதி, புதுயுக கதிர்கள் சொரிவாய், பாரதி சரணம், வெங்கட ரமணா பூரணப் பொருளே, சைவன் இந்து யார்?, வைஷ்ணவன் யார்?, ஒளியே வழிகாட்டுவாய், இறைவா எனக்கோர் ஆசை- சித்திக்க வேண்டித் தொழுவேன், ஞான வரம்பே-மஹா மௌனம், நல்லைக்குகனே அழகு மதுரம், நல்லூர் அப்பனே, தேர் ஏறி வாறான் முருகன், வரவேணும் வரவேணும், வீரத்தின் விளக்கம், மெழுகாய் உருகி, உனையல்லால், என்தலைவன் முருகன் என இன்னோரன்ன தலைப்புகளில் இப்பக்திப் பாடல்கள் பாடப்பெற்றுள்ளன.

### 12119

**அப்பரும் சுந்தரரும் அருளிய அற்புதத் திருப்பதிகங்கள்: பதிக விளக்கத்துடன்.** சி.அப்புத்துரை (தொகுப்பாசிரியர்). கொழும்பு 6: திருவருள் குலசிங்கம் அந்தியேட்டித்தின வெளியீடு, 27/12, பரக்கும்பா பிளேஸ், 1வது பதிப்பு, ஏப்ரல் 2004. (கொழும்பு 13: கீதா பதிப்பகம்).

x, 174 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x13.5 சமீ.

இந்நூலில், சூலை நோய் கொடுத்துச் சைவத்துக்கு மீட்டமை, மதங்கொண்ட யானை வலம் வந்தமை, திருவையாற்றிற் கைலைக் காட்சி கண்டமை, கல் தெப்பமாகியமை, அரவுதீண்டி இறந்த மைந்தன் உயிர் பெற்றமை, தோன்றாத்துணை ஆயவர், திரிசூல இடப இலச்சினைப் பொறிப்பு, திருமறைக் காட்டில் வேதங்களாற் காப்பிடப்பட்ட கதவு திறந்தமை, வடதளியில் மறைந்த சிவாலயத்தைத் தோற்று வித்தமை, நீற்றறை குளிர்ந்த பொய்கைக்கரை ஆனமை, திருநின்ற செம்மை

(திருவடித் தீட்சையுடனாதல்), மாயை வசப்படாது சிவபக்தரானமை, தாம் யார்க்கும் குடியல்லாதவனாகிச் சரணடைந்தமை, சிவானுபவ உணர்வு வழி ஆகிய 14 அற்புதங்களைக் கூறும் திருப்பதிகங்களும் அவற்றுக்கான பதிக விளக்கங்களும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. இந்நூல், பன்னாலை, தெல்லிப்பழை திருவருள் குலசிங்கம் (15.4.1929-20.3.2004) அவர்களது அந்தியேட்டி வெளியீடாக 19.4.2004 அன்று வெளியிடப்பட்டது

## 12120

**அபிராமி அந்தாதி.** அபிராமிப்பட்டர் (மூலம்). கொழும்பு 13: அருள்மிகு வரதராஜ விநாயகர் கோவில், 105, கொட்டாஞ்சேனை வீதி, 1வது பதிப்பு, புரட்டாதி 1992. (சென்னை 600002: காந்தளகம், 4, முதல் மாடி, ரகிசா கட்டிடம், 834 அண்ணா சாலை).

56 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 14x10.5 சமீ.

அபிராமி அந்தாதி அபிராமி பட்டரால் இயற்றப்பட்டது. மயிலாடுதுறைக்கு அருகிலுள்ள திருக்கடையூரில் அபிராமி அம்மன் அமிர்தகண்டேசுவரர் கோயில் உள்ளது. ஒரு பாடலின் ஈற்றடியின் கடைச்சொல் (அந்தம்), வரும் பாடலின் துவக்கச் சொல்லாக (ஆதி) அமையும் இலக்கணமுறை அந்தாதி ஆகும். அந்தாதி இலக்கியங்களுள் சிறந்ததாகப் போற்றப்படுவது அபிராமி அந்தாதி ஆகும். நாகப்பட்டினம் மாவட்டத்தில் அமைந்துள்ள ஊர் திருக்கடவூர் என்பது. இது மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்று சிறப்புகளை உடையது. இத்தலத்தில் உள்ள அபிராமி அம்மை மீது அளவற்ற பக்தி செலுத்தி வந்த அபிராமிப் பட்டர் இயற்றிய நூலே அபிராமி அந்தாதி ஆகும். காப்புச் செய்யுள் ஒன்றும் நூற்பயன் செய்யுள் ஒன்றும் சேர இந்த அந்தாதி நூற்று இரண்டு செய்யுட்களை உடையது. (இந் நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 13336).

## 12121

**அருணகிரிநாத சுவாமிகளருளிய கந்தரநுபூதி.** இரா.சபாநாயகம் (தொகுப்பாசிரியர்). கொழும்பு: கதிர்காம யாத்திரீகர் தொண்டர் சபை, 1வது பதிப்பு, ஜுலை 1970. (கொழும்பு 12: நியூ லீலா அச்சகம், 33, சென் செபஸ்தியன் மேடு).

(4), 73 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14 சமீ.

கொழும்பு, கதிர்காம யாத்திரீகர் தொண்டர் சபையின் ஆதரவில் 1970களின் ஆரம்பத்தில் புலவர் சிவங்கருணாலய பாண்டியனார் சமய வகுப்புகளை நடத்தினார். அவ்வகுப்புகளில் அவர் கந்தரநுபூதிப் பாடல்களுக்கு வழங்கிய அரிய கருத்துக்கள் இங்கு சில குறிப்புகளுடன் தொகுத்து வழங்கப்பட்டுள்ளன. அருணகிரிநாதர் கி.பி. 1450இல் திருவண்ணாமலையில் ஆட்சிபுரிந்த பிரபு தேவராயர் காலத்தில் அங்கே வாழ்ந்தவர். தன்வாழ்நாளில் முருகன் புகழ் பாடிவந்தவர். அவர் பாடியருளிய திருப்புகழ் இன்றும் அழியாது முருக பக்தர்கள் மனத்தில் வாழ்கின்றன. அவர் பாடிய ஏராளமான திருப்புகழ் பாசுரங்களில் 1231

பாசுரங்களே இன்றளவில் பேணப்பட்டுவந்துள்ளன. இதைத்தவிர, கந்தர்அலங்காரம், கந்தர் அந்தாதி, திருவகுப்பு, கந்தர் அநுபூதி ஆகிய நூல்களும் பாராயண நூல் களாகப் பயன்படுகின்றன. அவர் பாடிய கந்தரநுபூதி ஐம்பத்தொரு பாசுரங்கள் கொண்ட பாமாலையாகும். கந்தரநுபூதி பற்றிய செவிவழிக்கதையொன்றுண்டு. அருணகிரிநாதர் சமயத்தாண்டார் என்பவரோடு வாக்குவாதம் உண்டானபோது, தேவலோகத்தில் மலரும் பாரிசாத மலரைக் கொண்டுவருவதாகக் கூறித் தன்னுடலைக் கோபுரத்திற் கிடக்கவிட்டு ஒரு கிளி வடிவில் தேவலோகம் சென்றார் என்றும், திரும்பி வருமுன் அவரது உடலை அவர் இறந்துவிட்டதாகக் கூறித் தகனம் செய்துவிட்டனராம். அதன்பின் கிளிவடிவிலேயே முருகப்பெருமானின் திருவடிகளில் அமர்ந்து கந்தரநுபூதியைப் பாடியதாக இக்கர்ணபரம்பரைக் கதை கூறுகின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 3005).

### 12122

**அருணகிரிநாத சுவாமிகளும் கதிர்காமத் திருப்புகழும்.** பண்டித நடராஜபிள்ளை. யாழ்ப்பாணம்: பண்டித நடராஜபிள்ளை, நீர்வேலி, 1வது பதிப்பு, 1959. (கொழும்பு 11: மெய்கண்டான் அச்சியந்திரசாலை, 161, செட்டியார் தெரு).

viii, 84 பக்கம், தகடுகள், விலை: ரூபா 2.00, அளவு: 18x12 சமீ.

இது யாழ்ப்பாணத்து நீர்வேலி, சிவசங்கரசிவப்பிரகாச பண்டிதரின் புதல்வன் பண்டித நடராஜபிள்ளையால் இயற்றப்பெற்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 2739).

### 12123

**ஆச்சி நீ காளி.** வே.வரதசுந்தரம். கொழும்பு 6: சிவகாமி அம்மாள் பப்ளிக்கேஷன்ஸ், 25, 36ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, ஜனவரி 2004. (திருக்கோணமலை: உதயன் பதிப்பகம்).

viii, 28 பக்கம், புகைப்படத் தகடு, விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 17x12 சமீ.

ஆசிரியரின் சிறிய தாயாரான அமரர் திருமதி தனலட்சுமி சிவசண்முகராஜா அவர்களின் நினைவாக, திருக்கோணமலை பத்ரகாளி அம்பாள் கோயில் இலட்சார்ச்சனை நிகழ்வினையொட்டி 29.01.2004 அன்று இந்நூல் வெளியிடப் பட்டது. பத்ரகாளி அம்பாள் பேரில் கவிஞர் வரதசுந்தரம் பாடியருளிய 108 தோத்திரங்கள் இந்நூலில் அடங்கியுள்ளன. (இந்நூல் நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 003867).

### 12124

**ஆலய வழிபாட்டில் அதிசய அனுபவங்கள்.** சந்தனா நல்லலிங்கம். கொழும்பு 4: சந்தனா நல்லலிங்கம், 9, பாலாம்பிகை நமசிவாய இல்லம், மிலாகிரிய அவென்யூ, 1வது பதிப்பு, மே 2017. (கொழும்பு 13: கீதா பதிப்பகம்).

110 பக்கம், விலை: ரூபா 500., அளவு: 21x15 சமீ.

விநாயகர் வழிபாடு, விநாயகர் பேரில் பஞ்சரத்தினம்-தம்பையா சரித்திரம், சிரித்தனர் பொன்னம்பலவாணேசர், கொழும்பு நகர் கூத்தபிரான் ஆடினார் ஊஞ்சல், திருவண்ணாமலை வழிபாடும்-திருக்கோணமலைக் குறிப்புகளும், திருவண்ணாமலை அருணாசலேச்சரர் மீது பாடப்பட்ட பதிகம், மட்டுநகர் தாமரைக்கேணி மாரியம்மன், தாமரைக்கேணி மாரி அம்மன் விழா அகவல், கதிர்காமக் கந்தனின் திருத்தலம், கதிர்காமக் கந்தன் காவடி விருத்தம், கதிர்காம முருகன் பேரில் பாமாலை, செல்வச்சந்நிதியை வழிபடும்போது, செல்வச்சந்நிதி முருகன் பேரில் கிளித்தூது, மண்டூர் முருகன், மண்டூர் முருகன் பாமாலை, நீலமேனி நெடுமால் வழிபாடு, திருமாலின் அவதாரங்கள் விருத்தப்பா, அச்சுதாஷ்டகம் ஆதி சங்கரர் அருளியது, சபரிமலை ஐயப்பன் சந்நிதானத்தில், சரணம் ஐயப்பா வழிநடைப்பாடல், முதியோர் இல்லங்களில் இறைவணக்கத்தின் போது, வாழ்த்துக்கள் ஆகிய தலைப்புகளில் ஆசிரியரின் 22 அனுபவ ஆக்கங்களை இந்நூல் உள்ளடக்கியுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 261511CC).

## 12125

**இறை மணி மாலை.** விழிசைச் சிவம் (இயற்பெயர்: செ.சிவசுப்பிரமணியம்). தெல்லிப்பழை: கலை இலக்கியக் களம், 1வது பதிப்பு, டிசம்பர் 1999. (யாழ்ப்பாணம்: போஸ்கோ பதிப்பகம், நல்லூர்).

(8), 70 பக்கம், விலை: ரூபா 75., அளவு: 20x14.5 சமீ.

விழிசைச் சிவம் அவர்கள் இறைவனின் மீது பாடிய கவிதைகளின் தொகுப்பு இது. தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி நான்மணிமாலை, பொலிகண்டிக் கந்தவனநாதர் திருவிரட்டை மணிமாலை, சாத்தானை ஸ்ரீ வீரபத்திர சுவாமி திருவூஞ்சல், நகுலாம்பிகா சமேத நகுலேஸ்வரப் பெருமான்மீது பாடிய பக்திரசக் கீர்த்தனை, மாவைச் சிலேடை வெண்பா (பிற்சேர்க்கை), தச்சன் தோப்புச் சிந்தாமணி விநாயகர் திருவிரட்டை மணிமாலை, இணுவில் பரராசசேகரப் பிள்ளையார் மும்மணிக் கோவை, இணுவில் கந்தசுவாமி திருவிரட்டை மணிமாலை, இணுவில் சிவகாமியம்மை திருவிரட்டைமணி மாலை, தெல்லிப்பழை கோயிற்புலச் சிவபெருமான் திருவூஞ்சல், கும்பழாவளை விநாயகர் திருவிரட்டை மணிமாலை ஆகிய பதினொரு பக்தி இலக்கியப் படைப்பாக்கங்களை இந்நூல் கொண்டுள்ளது.

## 12126

**எனது வாழ்வில் சாயிபாபா: முதலாம் பாகம்.** மங்களவதி சிவநாயகம் (பதிப்பாசிரியர்). கொழும்பு 13: மகளிர் அணி, கொழும்பு ஸ்ரீ சத்தியசாயி பாபா நிலையம், மோடி மண்டபம், 1வது பதிப்பு, நவம்பர் 1999. (அச்சக விபரம் தரப்படவில்லை).

(3), 173 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.

*இந்நூல் பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபாவின் அடியார்களின் பார்வையில் தாம் சாயிபாபா மீது நம்பிக்கை வைக்கக் காரணமாயிருந்த சம்பவங்கள், அதிசயங்கள் என்பவற்றை பதிவுசெய்து பகிர்ந்துகொள்ள வாய்ப்பளித்துள்ளது. அற்புத புருஷர் சாயிநாதர், சாயி சங்கல்பத்தால் பிரசாந்தி பிறந்த கதை(வி.விக்னேஸ்வரன்), திக்குத் தெரியாமல் தவித்த எங்களுக்கு வழிகாட்டியாக வந்தார் பகவான் (மாஸ்டர் சிவலிங்கம்), ஏற்காட்டில் இழந்த பாஸ்போர்ட் எழும்பூர் லாட்ஜ் வந்து கிடைத்தது (கே.லக்ஷ்மணன்), நான் ஒரு டாக்டராவதற்கு சாயிபாபா புரிந்த அற்புதம் (B.ஜானகி), டாக்டர் கைவிட்ட கணவரை ஒரே இரவில் சுகமாக்கினார் பாபா (ஏ.செல்லத்துரை), தொலைந்த சாவிக்கொத்தைக் கூடத் தேடிக்கொடுப்பவர் சாயிபாபா (D.ஈஸ்வரன்), அந்த உருவத்தில் அந்த நேரம் வந்து எங்களுடன் பேசியவர் யார்? (வை.ஸ்ரீஸ்கந்தராஜா), சொல்லாமலே அறிந்தார் என்னைச் சொஸ்தமாக்கினார் (S.N.உதயநாயகன்), ரயில் விபத்து இனக்கலவரம் இரண்டிலிருந்தும் காப்பாற்றினார் (D.ராஜேஸ்வரி), பாபாவின் காலடியில் என் கணவர் சரணடையக் காரணமான சம்பவம் (ஆர்.ராஜலட்சுமி), பழுதுபட்ட காரைத் திருத்த ஆள் அனுப்பியவர் யார்?(எம்.கண்ணன்), அலங்கார மலர்களின் மூலம் என்னுடன் பேசும் சாயிபாபா (சீ.எஸ்.ராஜேஸ்வரன்), 27 வருடமாக வருத்திய வயிற்றுவலி பாபா பஜனையால் பஞ்சாய்ப் பறந்தது (எஸ். வடுகையாப்பிள்ளை), சேலை தந்த பகவான் அதை உடுத்தவும் சொன்னார் (T.சோமசுந்தரம்), அற்புதங்களை நம்பாத நான் எப்படிச் சாயியிடம் சரணடைந்தேன் (வீ.செல்வரத்தினம்), சங்கிலியை அறுத்த திருடன் திகைத்து ஓடி மறைந்தான் (ஆர். புவனேஸ்வரி), அறுவைச் சிகிச்சை இன்றியே இருதயக் கோளாறு அகன்றது (ஆர்.ராஜ்பவன்), காணாமல் போன பத்திரத்தைக் கண்டெடுத்து வைத்தவர் யார்? (T.மனோன்மணி), வலியவே வந்து என்னை ஆட்கொண்ட சாயிபகவான் (S.B.ஐயர்), தடைபட்ட திருமணத்தில் தாலி ஏறிய புதுமை (ஜீ.ஜீவரட்ணம்), திருமணம் நிச்சயமாவதற்கு சாயி பகவான் புரிந்த அற்புதம் (எஸ்.சண்முகசுந்தரம்), இப்படி ஓர் அற்புதம் நடந்ததைச் சொன்னால் யார் நம்புவார்கள்? (D.ஜானகி இந்திரஜித்), கொலையாளியின் துப்பாக்கியை திசைதிருப்பினார் அவர் (என். மோதிலால் நேரு), தேடிய வரனை அவரே வீடுதேடிவரவைத்தார் (வி. சொக்கலிங்கம்), அவர் என்னைப் பின்தொடர்ந்து அவதானித்து வந்தாரா? (விமலநாக), ஆற்றில் மூழ்கி இறந்தவரை கரையில் எடுத்து உயிர்தந்தார் (S.T.சிவநாயகம்),* Did He follow Watching me all the way right from the Bank? (Hemantha) *ஆகிய அனுபவப் பகிர்வுகள் இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 22021).*

**12127**

**கந்த புராணக் கதைகளும் அவைகளுணர்த்தும் உண்மைநூற் கருத்தும்.** *நவாலியூர் க.சோமசுந்தரப் புலவர். வட்டுக்கோட்டை: சைவ இளைஞர் சங்கம், வட்டுக்கோட்டை சைவ ஆங்கில வித்தியாசாலை, 1வது பதிப்பு, 1939. (சங்கானை: சச்சிதானந்த அச்சியந்திரசாலை).*

(10), 84 பக்கம், விலை: 50 சதம், அளவு: 17.5x12.5 சமீ.

பாயிரம் (தோற்றுவாய், முப்பொருள் விளக்கம், கதையுணர்த்தும் மெய்ப்பொருட் கொத்து), தக்கன், அசுரர் பிறப்பு, காசிபனுபதேசம், மாயை யுபதேசம், அசுரர் வரம் பெறுதல், சுக்கிரனுபதேசம், தேவர் சிறைப்படுதல், தேவர் புலம்புதல், சிவபெருமான் திருவருள் புரிதல், உமை சிவபெருமானை நீங்குதல், காமதகனம், உமை திருமணம், முருகக் கடவுள் திருவவதாரம், துணைவர் வருதல், திருவிளையாடல், தகரேறுதல், அயனைச் சிறையிடுதல், சிவனுக்குபதேசம், படையெழுச்சி, தாரகன் வதை, சயந்தன் புலம்பல், முருகக் கடவுள் அருள்புரிதல், வீரவாகு தூது, பானுகோபன் வதை, சிங்கன் வதை, சூரன் வதை, தேவர் சிறைமீட்சி, தெய்வயானையம்மை திருமணம், விண்குடியேற்றம், வள்ளியம்மை திருமணம் ஆகிய 30 கதைகளை எளிமையான வடிவில் இந்நூலில் விளக்கியிருக்கிறார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 2922).

## 12128

**கந்த புராணச் சுருக்கம்.** க.குருமூர்த்தி ஐயர். வட்டுக்கோட்டை: க.குருமூர்த்தி ஐயர், கண்ணலிங்கேசுர சுவாமி கோவில், 1வது பதிப்பு, தாது வருடம், கார்த்திகை 1936. (யாழ்ப்பாணம்: செந்தமிழ்ப் பரிபாலன யந்திரசாலை, வண்ணார்பண்ணை).

(5+4), 60 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 17.5x12.5 சமீ.

கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள் அருளிய கந்தபுராணம் மிக விரிவானது. இதனைச் சுருக்கி கந்தபுராணம் முழுவதையும் எளிமையாக விளக்கும் வகையில் "கந்தபுராணச் சுருக்கம்" என்ற பெயரில் சம்பந்தசரணாலய சுவாமிகள் உரை நடையில் எழுதியிருந்தார். அந்த நூலைத்தழுவி குருமூர்த்தி ஐயர் இந்நூலை இன்னும் சுருக்கமாகவும், இளையோரும் வாசித்தறியும் வகையில் எளிமையாகவும் எழுதித் தான் தழுவிய முதல்நூலின் தலைப்பையே இதற்கும் இட்டு வெளியிட்டுள்ளார். பாயிரம், புராணவரலாறு, உற்பத்திக் காண்டம், மகேந்திர காண்டம், யுத்தகாண்டம், தேவகாண்டம், தக்ஷகாண்டம், அசுரகாண்டம் ஆகிய அத்தியாயங்களில் இந்நூல் சுருக்கி எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 018034).

**கந்த புராணச் சுருக்கம்.** க.குருமூர்த்தி ஐயர். கொழும்பு: ஸரஸ்வதி புத்தகசாலை, 175 செட்டியார் தெரு, 3வது பதிப்பு, 1951, 1வது பதிப்பு, தாது வருடம், கார்த்திகை 1936. (சென்னை 7: தி பிரிமியர் ஆர்ட் பிரஸ், புரசவாக்கம்).

(12), 125 பக்கம், விலை: ரூபா 2.50, அளவு: 17.5x12.5 சமீ.

யாழ்ப்பாணத்து வட்டுக்கோட்டை கண்ணலிங்கேசுர சுவாமி கோவில் யஜமானாகிய குருமூர்த்தி ஐயர் எழுதிய மூலநூலின் புதுக்கிய மூன்றாவது பதிப்பு இது. (இந் நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 2925).

## 12129

**கந்தபுராணம்-யுத்தகாண்டம்: சூரபன்மன் வதைப்படலம் மூலமும் தெளிபொருள் விளக்க விரிவுரையும்.** *ப்ரம்மஸ்ரீ கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள் (மூலம்), வே. சிதம்பரம்பிள்ளை (உரையாசிரியர்). யாழ்ப்பாணம்: ஸ்ரீமத் வே. சிதம்பரம்பிள்ளை, மேலைப்புலோலி, 1வது பதிப்பு, ஆவணி 1938. (பருத்தித்துறை: மனோகர அச்சியந்திரசாலை).*

*(7), 388+4 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 19.5x13 சமீ.*

*ப்ரம்மஸ்ரீ கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள் இயற்றிய கந்தபுராணம்-யுத்தகாண்டம், சூரபன்மன் வதைப்படலம்- மூலமும் யாழ்ப்பாணம் மேலைப்புலோலியைச் சேர்ந்த ஆசிரியர் ஸ்ரீமத் வே.சிதம்பரம்பிள்ளை அவர்கள் இயற்றிய தெளிபொருள் விளக்க விரிவுரையும் இணைந்த நூல் இதுவாகும். கந்தனது பெரும்புகழ் பேசும் நூல் கந்தபுராணமாகும். அப்புராணம் சித்தாந்தப் பொருள் நிறைந்த சைவ புராணமாகும். கந்தசஷ்டித் தினங்களாகிய ஆறு நாட்களிலும், சுப்பிரமணியப் பெருமான் சூரபன்மனாகிய ஆணவமலத்தின் வேகத்தைத் தணித்து அந்த ஆன்மாவுக்கு அருள்பாலித்தார். அந்த அற்புதமான கதை கந்தபுராணத்திலே சூரபன்மன் வதைப்படலத்தில் அழகாகக் கூறப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 17224).*

## 12130

**கந்தர்வ கானங்கள்: மாவைக் கந்தன் பாமாலை.** *மாவை பாரதி (இயற்பெயர்: பாகீரதி கணேசதுரை). மாவிட்டபுரம்: மாவை ஆதீனம், 1வது பதிப்பு, 2016. (யாழ்ப்பாணம்: தர்சன் அச்சகம், ஆனைக்கோட்டை).*

xvi, *74 பக்கம், வண்ணத் தகடுகள், விலை: ரூபா 150., அளவு: 20x14.5 சமீ.*

*தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றி ஓய்வுபெற்ற திருமதி பாகீரதி கணேசதுரை அவர்கள் மாவைக் கந்தன் மீது கொண்ட பக்தி உணர்வின் வெளிப்பாடாக கவி மொழியிலே இக்கந்தர்வ கானங்கள் என்னும் பிரார்த்தனைப் பாடல்களை பக்தி இலக்கியச் சுவை குன்றாமல் இயற்றியிருக்கிறார். 2013 முதல் 2016 வரை ஆலய மகோற்சவ காலங்களில் இவற்றை எழுதி இணையத்தளங்களின் வழியாகப் பரவவிட்டிருந்தார். அப் பாடல்களே இங்கு தொகுக்கப்பட்டுத் தனி நூலில் அமைகின்றன.*

## 12131

**கருணாகர கானாமுதம் 2014.** *கருணாகரப் பிள்ளையார் கோயில். உரும்பிராய்: பரத்தைப்புலம் ஸ்ரீ கருணாகரப் பிள்ளையார் கோவில், 1வது பதிப்பு, 2014. (மலேசியா: விசால் பிரின்ட் சேர்விஸ், கோலாலம்பூர்).*

*193 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x15 சமீ.*

*சரித்திரப் புகழ் பெற்ற உரும்பிராய், பரத்தைப்புலம் ஸ்ரீ கருணாகரப் பிள்ளையாரின் புகழ்பேசும் பாடல்கள், விநாயகப் பெருமானுக்குரிய பாடல்கள், மற்றும் ஆலய விழாக்காலப் பாடல்களாகிய சில பாடல்களின் தொகுப்பாக அமைந்த பாமாலை*

நூல் இதுவாகும். சமரப்பணம், உள்ளடக்கம், கருணாகர கானாமுதம், ஆகியவற்றுடன் உரும்பிராய், பரத்தைப்புலம் ஸ்ரீ கருணாகரப் பிள்ளையார் கோவில் வரலாறு மகத்துவச் சுருக்கம் என்பன நூலின் ஆரம்பப் பக்கங்களில் இடம்பெறுகின்றன. தொடர்ந்து, கருணாகர விநாயகர் பேரில் தோத்திரப் பாமாலை, கருணாகர நான்மணிமாலை, கருணாகரப் பிள்ளையார் பாடல், கருணாகர விநாயகர் வேண்டல்-வாழ்த்துப்பா, திருவூஞ்சல், கோவில் பஜனைப்பாடல், திருப்பதிகம், வாழ்த்துப்பா, வளர்க கருணாகரன் புகழே, கருணாகரன் புகழ்மாலை, ஐங்கர வரதன் - கருணாகரப் பண்ணவன், கருணாகர கணேசா குடமுழுக்காடியருளே, மனங்குளிரவைத்த மகத்தான குடமுழுக்கு, வழிபாட்டுப் பாடல்கள்-பஞ்சபுராணம், விநாயகர் அகவல்-ஔவையார், விநாயகர் அகவல்- நக்கீரர், விநாயகர் கவசம், விநாயகர் காரிய சித்தி மாலை, கணேசத் திருவருண்மாலை, விநாயகர் அநுபூதி, பிள்ளையார் கதை, திருவந்தாதி, திருப்பள்ளியெழுச்சி, திருவெம்பாவை, திருப்பொற்சுண்ணம், மஹோற்சவப் பாடல்கள் ஆகிய 30 தலைப்புகளில் இப்பாமாலை தொகுக்கப்பெற்றுள்ளது.

### 12132

**காளி ஆச்சி**. வே.வரதசுந்தரம். கொழும்பு 6: சிவகாமி அம்மாள் பப்ளிக்கேஷன்ஸ், 39, 36ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, மார்ச் 1999. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளூமெண்டால் வீதி).

xx, 92 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 20.00, அளவு: 17x12 சமீ.

இந்நூல் திருக்கோணமலை பத்ரகாளி அம்பாள் கோயில் கொடியேற்ற நிகழ்வின்போது 21.3.1999 அன்று கவிமாலையாக வெளியிடப்பட்டது. காளி ஆச்சி, தெய்வ சங்கல்பம், கோயிலின் தொன்மை, காவல் தெய்வம் காளி, கோணையப்பனை நோக்கும் பிராட்டி, மதனுடை நோன்றாள், அம்பாள் தேவஸ்தானம், நாயகியே நல்லமுதே, மறக்கருணை, எழில்மாரித் தாய், கவிதை பிறந்த கதை, திருவிளக்குப் பூசை, அன்னையை வழிபட்ட ஆதிசங்கரர், திருவிளக்குத் திருத்தொண்டு, திருவிளக்கு தொண்டர் கலியனார், தீபந் தூண்டிய சுண்டெலி, வளம்பல நல்கும் வைகாசிப் பொங்கல், சுகப்பிரசவம், கும்பவிழா, கொடியேற்றத் திருவிழா, ஊமை பேசிய அற்புதம், புருஷார்த்த தருமம் தரும் கோயில், என்ன சிங்காரம் எங்கள் ஈஸ்வரி, கௌரி நோன்பு, விரத முறை, கௌரி நோன்பின் பலன், அம்பாள் பக்தர் குமரகுருபரர், பராசக்தி பக்தன் பாரதி, அம்மையைப் பாடும் புரட்சிக் கவிஞர், காளி ஈந்த பகவத் கீதை, சக்தி வழிபாட்டில் மகாகாளி, ஸ்ரீசக்கரபூர்ண மகாமேரு, தாயிடம் நீ சென்று கேள், தாயே குளிர்ந்து அருள்வாய், காளியின் அன்புக்கு பாத்திரராவோம் ஆகிய தலைப்புகளில் இந் நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 28173).

## 12133

**கொழும்பு ஸ்ரீ ராமகிருஷ்ண ஆச்சிரம பஜனாவளி.** ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன். கொழும்பு 6: ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் ஆச்சிரமம் (இலங்கைக் கிளை), இராமகிருஷ்ணா வீதி, வெள்ளவத்தை, 1வது பதிப்பு, ஏப்ரல் 1960. (கொழும்பு 11: ஆவ்ரா பிரின்டிங் வேர்க்ஸ், 19, செட்டியார் தெரு).

xii, 109 பக்கம், விலை: ரூபா 1.50, அளவு: 18x13 சமீ.

வெள்ளவத்தையில் ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் ஆச்சிரமத்தினர் ஞாயிறு தோறும் நடத்தும் சமயபாட வகுப்புகளில் பயன்படுத்தும் நோக்கில் தொகுக்கப்பெற்ற கூட்டுப் பிரார்த்தனைக்குரிய பாடல்கள் அடங்கிய நூல். ஸ்தோத்திரப் பாடல்களும், நாமாவளிகளும் அடங்கியது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 2965).

## 12134

**சக்தி வழிபாடு.** சுப.இரத்தினவேல் பாண்டியன் (பதிப்பாசிரியர்). கொழும்பு 13: அருள்மிகு வரதராஜ விநாயகர் கோவில், 105, கொட்டாஞ்சேனை வீதி, 1வது பதிப்பு, அக்டோபர் 1993. (சென்னை 600002: காந்தளகம், 4, முதல் மாடி, ரகிசா கட்டிடம், 834 அண்ணா சாலை).

188 பக்கம், சித்திரங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.

1993 நவராத்திரி விழா 16.10.1993 அன்று கொண்டாடப்பட்டவேளையில் மேற்படி கொட்டாஞ்சேனை அருள்மிகு வரதராஜ விநாயகர் கோவில் அறங்காவலர்களான த.நீதிராஜா, தெ.ஈஸ்வரன், பொ.பாலசுந்தரம் ஆகியோரினால் அருள்மிகு வரதராஜ விநாயகர் கோவில் சார்பாக வெளியிடப்பட்ட சக்தி வழிபாடு தொடர்பான பக்திப்பாடல் தொகுப்பு நூல். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 17229).

## 12135

**சிவபூசைத் திரட்டு.** ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர். யாழ்ப்பாணம்: சைவ பரிபாலன சபை, 2வது பதிப்பு, ஆவணி 1926, 1வது பதிப்பு விபரம் தரப்படவில்லை. (யாழ்ப்பாணம்: சைவப்பிரகாச யந்திரசாலை).

28 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 17.5x11 சமீ.

சிவபூசை செய்கின்றவர்களின் உபயோகத்திற்காக ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் வைத்திருந்த ஏட்டின்படி இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 3077).

## 12136

**சிவஸஹஸ்ரநாமார்ச்சனை.** ஸ்ரீ முருகேசு ஞானப்பிரகாசம் (மூலம்), சிற்றம்பலம் முருகவேள் (கருத்தும் குறிப்பும்). கொழும்பு 11: பூபாலசிங்கம் புத்தகசாலை, 340,352, செட்டியார் தெரு, 1வது பதிப்பு, வைகாசி 2001. (அச்சக விபரம் தரப்படவில்லை).

xx, 124 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 22.5x15 சமீ.

ஏழாலை மடத்துப்பிள்ளையார் கோயிலடியைச் சேர்ந்த ஸ்ரீ முருகேசு ஞானப் பிரகாசம் சமஸ்கிருத அறிவு மிகுந்தவர். அவர் எழுதியுள்ள இந்நூல் அச்சுவாகனமேறும் முன்னரே நூலாசிரியர் மறைந்துவிட்டதால், அவரது தமையனாரின் மகனான சி.முருகவேள் இந்நூலுக்கான கருத்துரை, குறிப்புரை ஆகியவற்றைச் சேர்த்து அச்சுவாகனமேற்றியுள்ளார். இந்நூல் ஆசியுரை, முன்னுரை, அறிமுகம், ரோமன் லிபி எழுத்துப் பெயர்ப்பு-ஒரு வழிகாட்டல், சிவஸஹஸ்ர நாமார்ச்சனை-மூலபாடம், கருத்தும் குறிப்பும், நூற்பட்டியல் ஆகிய தலைப்புகளின் கீழ் எழுதித் தொகுக்கப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 20566).

## 12137

**செல்வச் சந்நிதி முருகன் புகழ்மாலை.** அமரர் திருமதி செல்லம்மா பாலசுந்தரம் நினைவுக்குழு. யாழ்ப்பாணம்: அமரர் திருமதி செல்லம்மா பாலசுந்தரம் நினைவுக்குழு, கரணவாய் தெற்கு, 1வது பதிப்பு, நவம்பர் 2003. (கொழும்பு 12: லீலா அச்சகம்).

57 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 14.5x11 சமீ.

கரணவாய் தெற்கு அமரர் (திருமதி) செல்லம்மா பாலசுந்தரம் அவர்களின் அந்தியேட்டியன்று அவர்களின் நினைவாக செல்வச் சந்நிதி அடியார் பெருமக்களுக்கு அமரரின் நினைவுக் காணிக்கையாக 6.11.2003 அன்று சமர்ப்பணம் செய்யப்பட்ட நூல் இது. ஜிந்துப்பிட்டி, தெட்சணத்தார் வேளாளர் மகமை பரிபாலன சொசைட்டி லிமிட்டெட் வெளியிட்ட முருகன் பாடல் தொகுதியிலிருந்து இப்பாடல்கள் பிரதி செய்யப்பட்டு நூலுருவாக்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 34944).

## 12138

**சைவ நற்சிந்தனை.** நா.முத்தையா. நாவலப்பிட்டி: நா.முத்தையா, ஆத்மஜோதி நிலையம், 1வது பதிப்பு, மார்ச் 1967. (கொழும்பு: மெய்கண்டான் அச்சியந்திரசாலை, 161, செட்டியார் தெரு).

24 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12.5 சமீ.

சிவயோக சுவாமிகள் வாழ்ந்து காட்டிய "சிவதொண்டன்" நெறியைப் பின்பற்றும் ஆத்மஜோதி முத்தையா அவர்கள் சிவயோக சுவாமிகளுடைய நற்சிந்தனைப் பாடல்களைப் பற்றி இலங்கை வானொலியில் ஆற்றிய ஆறு வானொலி உரைகளின்

எழுத்து வடிவங்கள் இந்நூலில் தரப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 2453).

## 12139

**ஞானகுரு.** ஆர்.கே.முருகேசு சுவாமிகள். நுவரெலியா: காயத்ரிபீட வெளியீடு, 82, லேடி மெக்கலம்ஸ் ட்ரைவ், 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை (சென்னை 6000024: ஏ.ஆர்.பிரின்ட்ஸ், 375-8, ஆர்க்காடு சாலை).

60 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12 சமீ.

ஆதிசங்கரர் ஏழாம் நூற்றாண்டில் இன்றைய கேரளத்திலுள்ள "காலடி" எனப்படும் ஊரில் ஆர்யாம்பாள்/சிவகுரு தம்பதியினருக்கு மகனாய் தோன்றிய மெய்ஞான வல்லுநராவார். தனது இளமைக்காலத்தில் கௌடபாதரின் சீடரான கோவிந்த பகவத்பாதரிடம் இவர் வேதாந்தம் மற்றும் இதர தத்துவங்கள் பயின்று "சங்கர பகவத்பாதர்" என்று அழைக்கப்பட்டார். இந்து சமயத்தின் மூன்று அடிப்படை நூல்களான பத்து உபநிடதங்கள், பிரம்ம சூத்திரம் மற்றும் பகவத் கீதைக்கு விளக்கவுரை அளித்து அவை போதிக்கும் அத்வதை தத்துவத்தை உலகத்திற்கு எடுத்துக்காட்டியவர் ஆதிசங்கரர். ஸ்ரீ ஆதி சங்கரர் "ஸாதனா பஞ்சகம்" என்ற நூலில் இறையருள் பெற்றுய்ய விரும்பும் ஒருவன் முதலில் என்னென்ன செய்யவேண்டுமென்பதை விளக்கியிருக்கிறார். அதில் அவர் பாடியருளிய ஐந்து சுலோகங்களின் கருத்தை தமிழில் "ஞானகுரு" என்ற இந்நூலில் முருகேசு சுவாமிகள் வழங்கியிருக்கிறார். முருகேசு சுவாமிகள் என அழைக்கப்பட்ட சுவாமி ஆர்.கே.முருகேசு (ராமன் காளிமுத்து முருகேசு, அக்டோபர் 26, 1933 - செப்டம்பர் 24, 2007) இலங்கையின் இந்து ஆன்மீகவாதிகளில் ஒருவர். காயத்திரிச் சித்தர் என அனைவராலும் போற்றப்பட்ட இவர் இலங்கையின் நுவரெலியா நகரில் வாழ்ந்தவர். நுவரெலியா நகரில் அமைந்துள்ள இலங்காதீஸ்வரர் ஆலயம் மற்றும் காயத்திரி பீடம் என்பன இவரால் நிறுவப்பட்டவை. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 26893).

## 12140

**ஞானகோஷம் (சரணாமிர்தத்துடன்).** சுவாமி தந்திரதேவா மகராஜ். திருக்கோணமலை: இந்துசமய அபிவிருத்திச் சபை, 100/13, உவர்மலை, 3வது பதிப்பு, 2000. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).

(4), 113 பக்கம், தகடுகள், விலை: ரூபா 100., அளவு: 22x14 சமீ.

ஸ்ரீமத் சுவாமி தந்திரதேவா மகராஜ் அவர்களினால் பல்வேறு காலங்களிலும் நிகழ்த்தப்பட்ட உபன்யாசத் தொகுப்பாக இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது. திவ்ய மார்க்கம் (1987), பக்தவத்ஸலம் (1993), ஆனந்த சாகரம் (1994), சர்வதர்மம் (1995), பாஞ்சஜன்யம் (1997), ஆத்ம நிவேதனம் (1997), சனாதன தீர்த்தம் (1998), அகண்டநாமம் (1998), சாரணாமிர்தம் (2000) ஆகிய உபந்யாசங்களை இந்நூல் உள்ளடக்கியுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 30186).

## 12141

**தமிழ் அர்ச்சனை மந்திரங்கள்.** *சீ.விநாசித்தம்பி. யாழ்ப்பாணம்: ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானம், நாகேஸ்வரம், அளவெட்டி, 1வது பதிப்பு, ஜனவரி 2003. (யாழ்ப்பாணம்: கரிகணன் தனியார் நிறுவனம், இல. 424, காங்கேசன்துறை வீதி).*

*(2), 50 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x14 சமீ.*

*கவியோகி அருட்கவி சீ.விநாசித்தம்பி அவர்கள் இயற்றியளித்துள்ள தமிழ் அர்ச்சனை மந்திரங்கள். இவை ஸ்ரீ விநாயகர், சிவபெருமான், சிவசக்தி, ஸ்ரீ நாராயணர், ஸ்ரீ முருகன், வைரவப் பெருமான், சனி பகவான், ஸ்ரீ ஆஞ்சநேயர் ஆகியோரின் பேரிற் பாடப்பெற்றவையாகும். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 28961).*

## 12142

**தமிழ்ப் புராண காப்பியமாகிய சங்கர விலாசம்.** *சிதம்பரநாதபூபதி (மூலம்), சி.இரத்தினசபாபதி ஐயர் (பதிப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: சி.இரத்தினசபாபதி ஐயர், இரகுநாதையர் சோதிடபரிபாலன மடம், கொக்குவில், 1வது பதிப்பு, கார்த்திகை 1937. (யாழ்ப்பாணம்: சோதிடப்பிரகாச யந்திரசாலை, கொக்குவில்).*

*(21), 251 பக்கம், விலை: ரூபா 2.00, அளவு: 22x14 சமீ.*

*"சங்கர விலாசம்" என்பது சிவபிரானுடைய திருவிளையாட்டு அல்லது திருவருட் பிரகாசம் என்று பொருள்படும். இந்நூல் சிவபுராணங்களில் கூறப்படும் விசேடங்களைத் திரட்டி வடமொழியில் இயற்றப்பெற்ற "சங்கர விலாசம்" என்ற நூலைத் தமிழில் மொழி பெயர்த்து விருத்தப்பாவால் ஆக்கப்பெற்றதென்பது இதன் வரலாற்றுச் செய்யுளால் புலப்படுகின்றது. விசயை நகரத்துச் சிதம்பரநாத பூபதியால் இயற்றப்பெற்ற இந்நூல் செய்யுள்களின் பொருளைத் தொகுத்துக்கூறும் தலையங்கங்களுடன் யாழ்ப்பாணம் கொக்குவில் இரகுநாதையர் சோதிட பரிபாலன மடத் தலைவர் பிரமஸ்ரீ ச.இ.சிவராமலிங்கையர் புத்திரரும், ஆரிய திராவிட பண்டிதருமாகிய சி. இரத்தினசபாபதி ஐயரால் ஏட்டுப்பிரதியினின்றும் எழுதப்பெற்றது. சோதிட பரிபாலன மடத்துப் புத்தகக் கருவூலத்தில் இருந்த பழைய ஏட்டுப் பிரதிகளில் ஒன்றே இதுவாகும். கி.பி. 1700ஆம் ஆண்டு எழுதப்பட்டதாக பதிப்பாசிரியர் குறிப்பிட்டுள்ளார். பதிப்புரை, நூல் வரலாறும் நூலாசிரியர் வரலாறும், வித்துவப்பெரியார் அபிப்பிராயங்கள், அணிந்துரை, முகவுரை, காப்பு, கடவுள் வாழ்த்து, பதிகம், உபமன்னியர் திருப்பாற்கடல் பெற்ற வத்தியாயம், சிவன் முருகாவனத்திற் பலியிருந்தவத்தியாயம், சுவேதமுனிவர் காலனைக்கடந்த அத்தியாயம், சிவன் முருகாவனத் திருடிகளுக்கருள்புரிந்த அத்தியாயம், ததீசிப்பிரம இருஷிவச்சிரயாக்கை வரம்பெற்ற அத்தியாயம், விட்டுணு மன்மதனைப் பெறச் சிவார்ச்சனை பண்ணின அத்தியாயம், விட்டுணு சக்கரம் பெறச் சிவார்ச்சனை பண்ணின அத்தியாயம், வசுசுருதன் பத்தியோக மகிமையுரைத்த அத்தியாயம், சுத்தியம்மினன் சிவநாமம் பகர்ந்த மகிமையுரைத்த அத்தியாயம், வீபூதி மகிமையுரைத்த அத்தியாயம், உருத்திராக்க மகிமையுரைத்த*

அத்தியாயம், கமலாலய மான்மியமுரைத்த அத்தியாயம், செய்யுண் முதற் குறிப்பகராதி ஆகிய அத்தியாயத் தலைப்புகளில் இந்நூல் பதிப்பிக்கப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 2372).

## 12143

**தாயுமான சுவாமிகள் அருளிச்செய்த திருப்பாடற்றிரட்டு.** தாயுமானவர் (மூலம்), ஆறுமுக நாவலர் (பரிசோதித்தவர்). சிதம்பரம்: பொன்னுஸ்வாமி, தருமபரிபாலகர், சிதம்பர சைவப்பிரகாச வித்தியாசாலை, 10வது பதிப்பு, மன்மத வருடம் அக்டோபர் 1955. (தமிழ்நாடு: வித்தியாநுபாலன யந்திரசாலை, இல.300, தங்கசாலைத் தெரு, சென்னபட்டணம்).

(18), 242 பக்கம், விலை: இந்திய ரூபா 1-4-0., அளவு: 18x12 சமீ.

தாயுமானவர் சுவாமிகள் அருளிச்செய்த பக்தி இலக்கியங்களான பரிபூரணானந்தம், பொருள் வணக்கம், சின்மயானந்த குரு, மௌனகுரு வணக்கம், கருணாகரக் கடவுள், சித்தர் கணம், ஆனந்தமானபரம், சுகவாரி, எங்கு நிறைகின்ற பொருள், சச்சிதானந்த சிவம், தேசோமயானந்தம், சிற்சுகோதய விலாசம், ஆகாரபுவனம் சிதம்பரரகசியம், தேன்முகம், பன்மாலை, நினைவொன்று, பொன்னை மாதரை, ஆரணம், சொல்லற்கரிய, வம்பனேன், சிவன் செயல், தன்னையொருவர், ஆசையெனும், எனக்கெனச் செயல், மண்டலத்தின் பாயப்புலி, உடல்பொய்யுறவு, ஏசற்றவந்நிலை, காடுங்கரையும், எடுத்ததேகம், முகமெலாம், திடமுறவே, தன்னை ஆக்குவை, கற்புறு சிந்தை, மலைவளர் காதலி, அகிலாண்டநாயகி சந்தவிருத்தம், பெரியநாயகி விருத்தம், தந்தைதாய், பெற்றவட்கே, கல்லாலின், பராபரக் கண்ணி, பைங்கிளிக் கண்ணி, எந்நாட்கண்ணி, காண்பெனோவென்கண்ணி, ஆகாதோ வென்கண்ணி, இல்லையோவென் கண்ணி, வேண்டாவோவென்கண்ணி, நல்லறிவேயென்கண்ணி, பலவகைக் கண்ணி, நின்றநிலை, பாடுகின்ற பனுவல், ஆனந்தக் களிப்பு, அகவல், வண்ணம் என இன்னோரன்ன திருப்பாடல்கள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத் தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 25036).

## 12144

**திரு அருட்பா மாலை: வழித் துணைவன்.** கயிலைமணி அருள் சுவாமிநாதன், இந்திரா திருநீலகண்டன் (தொகுப்பாசிரியர்கள்). கொழும்பு 6: இடைக்காடு இந்து நெறிக் கழகம், இடைக்காடு புவனேஸ்வரி அம்பாள் ஆலய பரிபாலன சபை, 17B,1/3,மயூரா பிளேஸ், வெள்ளவத்தை, 1வது பதிப்பு, பெப்ரவரி 2006. (கொழும்பு 13: வே.திருநீலகண்டன், லட்சுமி அச்சகம், 195, ஆட்டுப்பட்டித் தெரு).

xiii, 187 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14.5 சமீ.

பாராயணம் செய்வதற்கேற்ற வகையில் 61 வகைப்பட்ட அருட்பாக்கள் திரட்டப் பட்டு பாமாலையாக இந்நூலில் வழங்கப்பட்டுள்ளன. தேவாரம், திருவாசகம்,

திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருமந்திரம், 11ஆம் திருமுறை, பெரியபுராணம், திருப்புகழ், வாழ்த்து, மங்களம், விநாயகர் அகவல், விநாயகர் துதி, திருநீற்றுப்பதிகம், கோளறு பதிகம், நமச்சிவாயப் பதிகம், திருமறைக்காட்டுப் பதிகம், திருக்கயிலாயப் பதிகம், திருப்புகலூர்ப் பதிகம், திருப்பாண்டிக்கொடுமுடி, சிவபுராணம், திருவெம்பாவை, திருப்பொற்சுண்ணம், திருப்பள்ளியெழுச்சி, அடைக்கலப்பத்து, அச்சொப்பதிகம், ஸ்ரீதேவி கருமாரி அம்மன் தோத்திரம், துக்கநிவாரண அஷ்டகம், அம்மன்துதி, புராணம், சகலகலாவல்லி மாலை, சரஸ்வதி துதி, இலக்குமி துதி, அபிராமி அந்தாதி, அபிராமியம்மைப் பதிகம், கந்தசஷ்டி கவசம், முருகன்துதி, முருகன் திருப்புராணம், பெருமாள் திருமொழி, பெரிய திருமொழி, திருமால் துதி, பட்டினத்தார் பாடல், வள்ளலார் திருவருட்பா, இலிங்கோற்பவர் துதி, தட்சிணாமூர்த்தி, பைரவர் துதி, வீரபத்திரர் துதி, நந்தியெம்பெருமான் துதி, ஐயப்பன் துதி, ஆஞ்சநேயர் துதி, நவக்கிரக தோத்திரங்கள், நால்வர் துதி, அறுபத்துமூவர் துதி, சேக்கிழார் துதி, சண்டேசுரர் துதி, கொடிக்கவி, கொடியேற்றவிழாத் திருமுறைகள், நவசந்தித் திருமுறைகள், பன்னிரு திருமுறைக் குறிப்புகள் என 61 தலைப்புகளில் இவை தொகுக்கப்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 38515).

## 12145

**திருக்கோவையார் (மூலம்)** மாணிக்கவாசகர் (மூலம்). யாழ்ப்பாணம்: க.கி. நடராஜபிள்ளை, 1வது பதிப்பு, ஆடி 1942, (யாழ்ப்பாணம்: கமலாசனி அச்சு நிலையம்).

32+135+28 பக்கம், விலை: 50 சதம், அளவு: 11x14 சமீ.

வித்துவான் சி.கணேசையரின் முகவுரையுடன் கூடிய இந்நூலுக்கான சிறப்புப் பாயிரத்தை பா.இராமநாதபிள்ளை எழுதியுள்ளார். அகப்பொருள் பாடல்கள் தொகை நூல்களில் மிகுதியாக இடம் பெற்று விளங்கியபோதும், துறைகள் எல்லாம் தேர்ந்து, நூல் ஒன்று புனைய வேண்டும் என்ற அவாவே "கோவை" இலக்கியம் தோன்றக் காரணம் என்பர். 96 வகை சிற்றிலக்கியங்களுள் ஒன்று கோவையாகும். முதலில் தோன்றிய கோவை இலக்கியம், "திருக்கோவையார்". இது திருவாதவூரார் என்னும் மாணிக்கவாசகரால் இயற்றப்பட்டது. இது பன்னிரண்டு சைவத் திருமுறைகளில் எட்டாவது திருமுறையாகும். இதை திருச்சிற்றம்பலக் கோவையார் என்றும் அழைப்பர். இந்நூலுக்கு பெயர் திருக்கோவை என்பது இறைவணக்கத்தில், நண்ணியசீர்த் தேனூறு செஞ்சொல் "திருக்கோவை" என்கின்ற நானூறும் என்மனத்தே நல்கு என்பதால் விளங்கும். இந்நூல் 400 துறைகளை உடையது. இந்நூலை ஆரணம் (வேதம்) என்பர் சைவ சமய சாதகர்கள். இது 25 அதிகாரங்களை உடையது. இந்நூல் பேரின்ப நூல் ஆகும். மேலோட்டமாகக் காணும்பொழுது அகத்திணை நூல் போல் காட்சி தருகிறது. அன்பே சிவமாகவும், அருளே காரணமாகவும், சுத்த அவத்தையே நிலமாகவும், நாயகி பரம்பொருளாகவும், நாயகன் ஆன்மாவாகவும், தோழி திருவருளாகவும், தோழன் ஆன்மபோதமாகவும், நற்றாய் (அம்மை) பரையாகவும்,

சித்திரிக்கப் பட்டுள்ளனர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 3088).

### 12146

**திருஞானசம்பந்தர் அருளிய அற்புதத் திருப்பதிகங்கள்: பதிக விளக்கத்துடன்.** சி.அப்புத்துரை (தொகுப்பாசிரியர்). தெல்லிப்பழை: திருமதி குலசிங்கம் காமாட்சிப்பிள்ளை அந்தியேட்டித்தின வெளியீடு, ஆனைக்குட்டி வளவு, இணை வெளியீடு, ஐக்கிய இராச்சியம்: தி.குலசிங்கம், 2, மார்ல்பரோ பரேட், பெவர்லி ரோட், பார்மிங், மெய்ட்ஸ்டோன், கென்ட், 1வது பதிப்பு, மார்ச் 2004. (கொழும்பு 13: கீதா பதிப்பகம்).

viii, 94 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14 சமீ.

இம்மலரில் ஞானப்பாலுண்டமை, பொற்றாளம் அருளியமை, முயலகன் நோய் தீர்த்தமை, சமணருடனான அனல் வாதத்தின்போது நெருப்பிலிடப்பட்டுப் பச்சையாகவே எடுக்கப்பட்டமை, ஆண்பனைகளைப் பெண் பனைகளாக்கியமை, படிக்காசு பெற்றமை, பனிக்குளிர் காரணமான நளிர்சுரம் போக்கியமை, யாழில் அடங்காப் பதிகம் காணல், வணிகன் விடந் தீர்ந்து எழுந்தமை, வேதாரணியத்தில் ஆலயக் கதவுகளை மூடும்படி பாடியது, என்புஞ் சாம்பருமாய பூம்பாவையை எழுப்பியமை, திருநீறிட்டுப் பாண்டியன் வெப்ப நோய் தீர்த்தமை, சிவனடியாரைக் கோள்கள் எதுவுஞ் செய்யமுடியாதென்றமை, சம்பந்தர் முத்துச் சிவிகை, குடை என்பன பெற்றமை, சம்பந்தர் பொன் முடிப்புப் பெற்றமை, ஆற்றுப் பெருக்கை இல்லாது செய்தமை, மந்திரங்கள் அனைத்திற்கும் ஸ்ரீ பஞ்சாக்கரம் மூலமெனல், சமணரை வாதில் வெல்லப் பாடியது (1), யார்க்கும் ஞான மெய்ந்நெறி நமச்சிவாயவே என்றது, மடத்திற்கு வைத்த தீயின் வெம்மை பாண்டியனை அணுகியமை, புனல்வாதத்தில் ஆற்றுநீரை எதிர்த்த பாடல், நெருப்பிற் திருப்பதிக ஏடு வேகாது வந்தமை, சமணரை வாதில் வெல்லப் பாடியது (2), திரு நல்லூர்ப் பெருமணத்திற் சோதியுட் கலந்தமை ஆகிய 24 அற்புதங்களைக் கூறும் திருப்பதிகங்களும் அவற்றுக்கான பதிக விளக்கங்களும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

### 12147

**திருமந்திரம் அடிப்படையில் யோகர் சுவாமிகள் அறிவுரைகள்.** எஸ்.இராமநாதன். கொழும்பு: எஸ்.இராமநாதன், 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (கொழும்பு: ஜே.அன்ட் எஸ். சேர்விசஸ் லிமிட்டெட்).

213 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14.5 சமீ.

இந்நூலின் முதல் 78 பக்கங்களில் யோகர் சுவாமிகளின் திருவாக்குகளான நாம் அறியோம், முழுவதும் உண்மை, எப்பவோ முடிந்த காரியம், ஒரு பொல்லாப்பும் இல்லை ஆகிய நான்கு திருவாக்குகளையும் திருமூலர் அருளிய திருமந்திரத்தின் உதவியுடன் தனித்தனிக் கட்டுரைகளாக விளக்கியிருக்கிறார். பக்கம் 78-213 வரை, யோகர் சுவாமிகளின் "நற்சிந்தனை" நூலிருந்து தேர்ந்தெடுத்த அறிவுரைகளைத்

தொகுத்து வழங்கியிருக்கிறார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 21189).

### 12148

**திருமந்திரம்: ஓர் அறிமுகம்.** செல்லத்தம்பி சிறீக்கந்தராசா. கொழும்பு 6: ஆலயம் வெளியீட்டகம், குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு 2017. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

xxviii, 118 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 21.5x15 சமீ., ISBN: 978-955-0881-27-7.

சைவசித்தாந்தம், இந்தியத் தத்துவ தரிசனங்கள், திருமந்திரம் ஆகிய மூன்று பாகங்களில் 47 தலைப்புகளின்கீழ் இந்நூல் விரிவாக எழுதப்பட்டுள்ளது. சைவசித்தாந்தம் என்ற பாகத்தில் சைவசித்தாந்தம் கூறுவதென்ன, சைவ சித்தாந்தத்தில் மாயை, சிவாயநம என்ற மந்திரம், வள்ளுவரும் ஐஞ்செழுத்தும், முப்பொருள்களில் முதன்மையான பதி, அத்துமீறி நுழையும் வேற்று மதத்தினர், பதியின் பண்புகள், சைவ சமயத்தின் அடிப்படைகள்: ஒரு கண்ணோட்டம், விடை கிடைக்காத சிக்கல்கள் சில ஆகிய 9 தலைப்புகளில் சைவசித்தாந்தம் பற்றி ஆசிரியரின் கருத்துக்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. இரண்டாம் பாகமான இந்தியத் தத்துவ தரிசனங்களின் கீழ், இந்து மதம் இந்து சமயம் என்ற சொற்றொடர்கள், இந்திய தத்துவ ஞானப் பார்வைகள், ஏழு தரிசனங்கள், தத்துவ தரிசனங்களும் அவற்றின் கொள்கைகளும், சாங்கியம், யோக தரிசனம், வைசேடிகம், நியாயம் என்ற நியாய தரிசனம் ஆகிய 8 தலைப்புகளில் இந்தியத் தத்துவங்கள் பற்றி விளக்கமளிக்கப்பட்டுள்ளது. திருமந்திரம் என்ற மூன்றாவது பாகத்தில் நுழைவாயில், மந்திரம் என்றால் என்ன? திருமந்திரம் தோத்திரமா சாத்திரமா? சேக்கிழாரும் திருமூலரும், சுந்தரமூர்த்தி நாயனாரும் திருமூலரும், நம்பியாண்டார் நம்பியும் திருமூலரும், திருமுறையைத் தேடி எடுத்தவர் யார்? அப்பரும் சம்பந்தரும் திருமூலரை மதிக்கவில்லையா? திருமந்திரம் என்ற பெயர்க் காரணம், திருமந்திரமும் திருக்குறளும், திருமந்திரம் மூலநூலா? மொழிபெயர்ப்பு நூலா? திருமந்திரத்தில் எத்தனை பாடல்கள் உள்ளன? திருமந்திரம் என்பதா? திருமந்திர மாலை என்பதா? திருமந்திரமும் மெய்கண்ட சாத்திரங்களும், மெய்கண்ட சாத்திரச் சொல்லாட்சியும் திருமந்திரச் சொல்லாட்சியும், திருமந்திரப் பாடல்கள்-ஒரு பறவைப் பார்வை, திருமந்திரத்தில் இடைச்செருகல்கள் ஏற்பட்டிருக்குமா?, மீண்டும் மீண்டும் வந்துள்ள பாடல்கள், இறை இயலும் தத்துவ இயலும், திருமந்திரத்தின் உள்ளீடு-பாயிரம் பகருகின்ற செய்தி, முதலாம் தந்திரம் மொழிகின்ற செய்தி, இரண்டாம் தந்திரம் இயம்புகின்ற செய்தி, மூன்றாம் தந்திரம் முழங்குகின்ற செய்தி, நான்காம் தந்திரம் நவிலுகின்ற செய்தி, ஐந்தாம் தந்திரம் அறைகின்ற செய்தி, ஆறாம் தந்திரம் அறிவிக்கின்ற செய்தி, ஏழாம் தந்திரம் எடுத்தோதும் செய்தி, எட்டாம் தந்திரம் எண்பிக்கின்ற செய்தி, ஒன்பதாம் தந்திரம் ஒலிக்கின்ற செய்தி, திருமந்திரம் நிறைவுரை ஆகிய 30 தலைப்புகளின் கீழ் திருமந்திரம் பற்றிய விளக்க மளிக்கப்பட்டுள்ளது. நூலாக்கத்துக்கு உதவிய நூல்கள், பயனுள்ள திருமந்திரப் பாடல்கள் சில, திருமந்திரமும் மெய்கண்ட சாத்திரமும்-ஓர் ஒப்பீடு, இரட்டித்து

இடம்பெற்ற திருமந்திரப் பாடல்கள், குழூஉக்குறிச் சொற்களும் அவற்றைக் கொண்டுள்ள பாடல்களின் எண்களும், ஆசிரியரின் ஏனைய நூல்களின் பட்டியல் என்பன பின்னிணைப்புகளாக இடம்பெற்றுள்ளன.

## 12149

**திருமுறையும் சைவத்திருநெறியும்:திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருமந்திரம்.** க.இரகுபரன், ஸ்ரீபிரசாந்தன் (பதிப்பாசிரியர்கள்). கொழும்பு 4: இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், 248, 1/1 காலி வீதி, 1வது பதிப்பு, மார்ச் 2016. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

xvi, 392 பக்கம், விலை: ரூபா 700., அளவு: 22.5x16 சமீ., ISBN: 978-955-9233-41-1.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் ஒழுங்குசெய்த கருத்தரங்கில் சமர்ப்பிக்கப்பட்ட திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருமந்திரம் தொடர்பான ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பு. பக்தியிலக்கிய மரபில் திருவிசைப்பா (சோ. பத்மநாதன்), முருகக் கடவுள் மீதான திருவிசைப்பா (வ.குணபாலசிங்கம்), திருவிசைப்பா, திருப்பல்லாண்டு வெளிப்படுத்தும் பக்திச் சுவை (கிருஷ்ணவேணி நோபர்ட்), திருப்பல்லாண்டின் இலக்கிய மரபு (சாந்தி கேசவன்), திருமந்திரப் பதிப்புக்கள் (சுகந்தினி சிறீமுரளிதரன்), திருமந்திரம் உபதேசம் (அரங்க. இராமலிங்கம்), திருமந்திரம் கூறும் முத்திக்கோட்பாடு (சி.ரமணராஜா), திருமந்திரம் எடுத்தாளும் சைவப் பிரிவுகள் (நா.ஞானகுமாரன்), திருமந்திரத்தில் வடமொழி செல்வாக்கு (ச.பத்மநாபன்), திருமந்திரத்தில் குருவழிபாடு (சாந்தி நாவுக்கரசன்), அறவியல் நோக்கில் திருமந்திரம் (ஈஸ்வரநாதபிள்ளை குமரன்), திருமந்திரத்தில் உயிரியல்: அறிவியல் நோக்கு (ச.முகுந்தன்), திருமந்திரத்தில் பக்தி (றூபி வலன்ரீனா பிரான்சிஸ்), திருமந்திரத்தில் மாயை (பொ.சந்திரசேகரம்), திருமந்திரத்தில் ஆணவம் (நா.வாமனன்), திருமந்திரத்தில் சங்கமம் (தி.செல்வமனோகரன்), திருமந்திரத்தில் வாழ்வியல் (செல்வரஞ்சிதம் சிவசுப்பிரமணியம்), திருமந்திரமும் ஆகமங்களும் (பாலகைலாசநாத சர்மா), திருமந்திரத்திலும் தம்மபதத்திலும் கூறுகின்ற பஞ்சபாவங்கள் மற்றும் பஞ்சசீலம் (தம்மிக்க ஜயசிங்க), மொழியியல் நோக்கில் திருமந்திரம் (சுபதினி ரமேஸ்), திருமந்திரத்தில் பசுக் கோட்பாடு (மா. வேதநாதன்), ஆலய வழிபாடு (விக்னேஸ்வரி பவநேசன்), நவீன சிந்தனைகளின் ஒளியில் திருமந்திரம் (ம.நதிரா), திருமந்திரத்தில் கடவுட் கோட்பாடு (சிவ மகாலிங்கம்), திருமந்திரத்தில் கன்மம் (ந.சுபராஜ்), சைவமரபில் ஒன்பதாம் திருமுறை (ஸ்ரீ பிரசாந்தன்)ஆகிய ஆய்வுக் கட்டுரைகள் இந்நூலில் தொகுக்கப் பட்டுள்ளன.

## 12150

**திருவாசக ஆராய்ச்சியுரை: முதலாம் பாகம்.** சு.அருளம்பலவனார் (உரையாசிரியர்). யாழ்ப்பாணம்: அ.சிவானந்தநாதன், காரைநகர், 1வது பதிப்பு, 1967. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சண்முகநாத அச்சகம்).

(16), 480, ix பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x13 சமீ.

மணிவாசகர் அருளிச் செய்த திருவாசகத்திற்கு முழுமையான ஆராய்ச்சி உரையை அருளம்பலவனார் எழுதிமுடித்து அச்சிடும் வேளையில் உயிர்நீத்துவிட்டார். அவரது மைந்தன் அ.சிவானந்தநாதன் பின்னாளில் அந்நூலை அச்சிட்டு வெளியிட்டுள்ளார். முதற்பகுதியான இந்நூலில் சிவபுராணம், கீர்த்தித் திருவகவல், திருவண்டப் பகுதி, போற்றித் திருவகவல், திருச்சதகம், நீத்தல் விண்ணப்பம் ஆகிய பக்தி இலக்கியங்களுக்கான "சங்கநூற்செல்வர்" பண்டிதமணி சு. அருளம்பலவனாரின் உரைகள் இடம்பெறுகின்றன. பின்னிணைப்புகளாக ரோமன் இலக்கப் பக்கங்களில் பாட்டு முதற்குறிப்பகராதி, அரும்பத ஆராய்ச்சி அகராதி, மேற்கோள் நூற்பெயர்கள், பிழை திருத்தம் ஆகிய பட்டியல்கள் இடம் பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 10697).

## 12151

**திருவாசக ஆராய்ச்சியுரை: இரண்டாம் பாகம்.** சு.அருளம்பலவனார் (உரையாசிரியர்). யாழ்ப்பாணம்: திருமதி வி.அருளம்பலம், காரைநகர், 1வது பதிப்பு, 1973. (யாழ்ப்பாணம்: ஆனந்தா அச்சகம்).

xviii, 481-1402 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x15 சமீ.

மணிவாசகர் அருளிச் செய்த திருவாசகத்திற்கு அருளம்பலவனார் எழுதிய முழுமையான ஆராய்ச்சி உரையின் இரண்டாம் பாகம் இதுவாகும். அருளுரை, அணிந்துரை, பாராட்டுரை, மதிப்புரை, பதிப்புரை, மேற்கோள் நூற்பெயர்கள், திருப்பதிகப் பெயரட்டவணை, திருவாசக ஆராய்ச்சியுரை, பாட்டு முதற்குறிப்பு அகராதி, அரும்பத முதலியவற்றின் ஆராய்ச்சி அகராதி, பிழை திருத்தம் ஆகிய 11 தலைப்புகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 1057).

## 12152

**திருவாசகம்-சிவபுராணம்.** க.சு.நவநீதகிருஷ்ண பாரதியார். யாழ்ப்பாணம்: கு. பூரணானந்தா, மாவிட்டபுரம், 1வது பதிப்பு, தை 1953. (யாழ்ப்பாணம்: நாவலர் அச்சுக்கூடம்).

81 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.

மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய திருவாசகத்தின் சிவபுராணம் பகுதிக்கு மாவைக் கவுணியன் என்று போற்றப்பட்ட பண்டிதமணி க.சு.நவநீதகிருஷ்ண பாரதியார் (1889-1954) எழுதிய பேருரை இதுவாகும். அவரது மருமகனாரின் முயற்சியால் நூல்வடிவமாகியுள்ளது. யாழ்ப்பாண மாவட்டம் மாவிட்டபுரத்தைச் சேர்ந்த நவநீதகிருஷ்ண பாரதி தமிழ்நாட்டில் பிறந்தவர். கிருஷ்ணாபுரம், கரவட்டங்குடியில் சுப்பிரமணிய பாரதி என்பவருக்கு மகனாக இவர் பிறந்தார். இளம் வயதில் இலக்கணம், இலக்கியம், தருக்கம் ஆகியவற்றைக் கற்றுத் தேர்ந்தபின், திருவாவடுதுறை ஆதீனத்தில் திருமுறை ஆய்வில் ஈடுபட்டார். சேர்

*பொன்னம்பலம் இராமநாதனின் வேண்டுகோளுக்கிணங்க, 1917 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் இராமநாதன் மகளிர் கல்லூரியில் தமிழ்ப் பேராசானாகப் பணியாற்ற இலங்கை வந்தார். அதன் பின்னர் யாழ்ப்பாணவாசியாகி, ஈழத்து அறிஞராகவே இனங்காணப்பட்டார். இவரே உலகியல் விளக்கம் என்னும் தனிச் செய்யுள் நூலின் ஆசிரியராவார். அந்த நூலின் பதிப்பாசிரியராக விபுலானந்த அடிகள் பணியாற்றியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தகுந்தது. திருவாசகம், நன்னூல், திருமந்திரம் போன்ற நூல்களுக்கு உரை எழுதி இலங்கையில் மட்டுமன்றி இந்தியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளிலும் பாராட்டுப் பெற்றவர் இவர். தேசநேசன் இதழில் ஆசிரியராகவும் இவர் பணியாற்றியுள்ளார். இவரது மனைவி பெயர் சவுந்தரநாயகி. சமூகசேவகியான காலஞ்சென்ற பத்மாவதி பூர்ணானந்தா இவர்களது மகளாவார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 2971).*

### 12153

**திருவெம்பாவை-திருவம்மானை: மூலமும் உரையும்.**தமிழவேள் க.இ.கந்தசாமி *(உரையாசிரியர்). கொழும்பு 6: விஜயலட்சுமி புத்தகசாலை, 248, காலி வீதி வெள்ளவத்தை, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (கொழும்பு 12: குமரன் அச்சகம், 201, டாம் வீதி).*

*50 பக்கம், விலை: ரூபா 3.00, அளவு: 21x13.5 சமீ.*

*திருவெம்பாவையும் திருவம்மானையும் எட்டாம் திருமுறையான திருவாசகம் என்னும் நூலிலுள்ள இரு பகுதிகள். இதுவொரு சைவசமய நூலாயினும் சிறந்த இலக்கிய வளமுள்ள நூலாகும். புறத்திணை அகத்திணைப் பொருள் மரபுகளும், சொல்-பொருள் நயங்களும், பாவகைகளும் இந்நூலின் இலக்கிய வளத்தினை உணர்த்துவன. பண்டைத் தமிழரின் கடவுட்கொள்கை, பண்பாடு, வரலாறு, நாடுகள், ஊர்கள், சொல்வழக்குகள் பாவகைகள் ஆகியவற்றை இந்நூல் அறிவுறுத்துகின்றது. திருவெம்பாவையும் திருவம்மானையும் பற்றிய விரிவான விளக்கத்தைத் தரும் தமிழவேளின் இந்நூல், அவை பற்றிய அரிய ஆராய்ச்சிக் குறிப்புகளையும், பாடங்களுக்கு உரிய பதவுரை, விசேட உரைகளையும், இலக்கணக் குறிப்புகளையும் சொல்-பொருள் நயங்களையும் உள்ளடக்கியது. திருவாசக நூற்சிறப்பு, திருவெம்பாவை பற்றிய விளக்கம், திருவெம்பாவை உணர்த்தும் இறைவன் இயல்புகள், திருவெம்பாவை மூலமும் உரையும், திருவம்மானை பற்றிய விளக்கம், திருவம்மானை மூலமும் உரையும், திருவம்மானை உணர்த்தும் இறைவன் இயல்புகள் ஆகிய அத்தியாயங்களுடன் மாணவர்களுக்கு ஏற்ற மாதிரி வினாக்களும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 2445).*

### 12154

**தெய்வீகம் மலரும் பொழுது.** மு.க.சிவபாதவிருதயர். வவுனியா: பகவான் ஸ்ரீ சத்யசாயி சேவா நிலையம், சாந்தம், பிரசாந்தி வீதி, 1வது பதிப்பு, நவம்பர் 2007. (யாழ்ப்பாணம்: கரிகணன் தனியார் நிறுவனம், இல. 424, காங்கேசன்துறை வீதி).

(4), 181 பக்கம், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18.5x13.5 சமீ.

சாயிபக்தரான அமரர் மு.க.சிவபாதவிருதயர் (15.8.1945-19.10.2007) அவர்களின் சிவபதப்பேற்றையொட்டி அவரது நினைவாக 3.11.2007அன்று வெளியிடப்பட்ட அவரது தொகுப்புக்கள் அடங்கிய நூல் இதுவாகும். இவர் இலங்கை மக்கள் வங்கியின் வடவலயத்தின் ஓய்வுபெற்ற உதவிப்பொது முகாமையாளராகப் பணியாற்றியவர். திரு.மு.க.சிவபாதவிருதயர். ஒரு நல்ல பக்தன். தனது தொழிலையும் சிறப்பாகச் செய்து ஓய்வு நேரம் முழுவதையும் பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் போதனைகளை சத்யசாயி நிறுவனத்தில் உள்ள அங்கத்தவர்களுக்கும் மற்றவர் களுக்கும் விளக்க வேண்டும் என்ற பேரவாவின் காரணமாக பல நூல்களை வெளியிட்டிருக்கின்றார். அந்த வரிசையில் "தெய்வீகம் மலரும் பொழுது" என்ற ஆழ்ந்த சிந்தனைகளைத் தூண்டும் நூல் வெளியாகியுள்ளது. பகவானின் போதனைகளை ஒரு தொடராகத் தொகுத்து ஆத்மீக சாதகர்கள் தங்கள் இலக்கை அடைவதற்கு வழிகாட்டியாகப் பயன்படுத்தக்கூடிய முறையில் இதனை வெளியிட்டிருக்கிறார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 50851).

### 12155

**தேவார திருவாசகத் திரட்டு: உரையுடன்.** ம.வே.திருஞானசம்பந்தப் பிள்ளை (பொழிப்புரை, தொகுப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: சைவ பரிபாலன சபை, 3வது பதிப்பு, 1954, 1வது பதிப்பு, விகிர்தி வருடம் 1950. (யாழ்ப்பாணம்: சைவப்பிரகாச யந்திரசாலை).

(4), 68 பக்கம், விலை: 65 சதம், அளவு: 18x12 சமீ.

திருஞான சம்பந்தமூர்த்தி நாயனாரின் திருவாலவாய் திருநீற்றுப் பதிகம், திருக்கேதீச்சரத் திருப்பதிகம், திருக்கோணமலைத் தேவாரம் ஆகியனவும், திருநாவுக்கரசு நாயனாரின் நமச்சிவாயத் திருப்பதிகம், சுந்தரமூர்த்தி நாயனார் அருளிய திருக்கேதீச்சரத் தேவாரம் ஆகியனவும், திருவாசகம், திருப்பள்ளியெழுச்சி, கோயின்மூத்த திருப்பதிகம், கோயிற்றிருப்பதிகம், செத்திலாப்பத்து, அடைக்கலப்பத்து ஆகியனவும் இந்நூலில் தொகுக்கப்பெற்றுள்ளன. இலங்கை கல்வித் திணைக்களத்தினால், தமிழ் ஆங்கில எஸ்.எஸ்.சீ. பரீட்சைக்குச் சைவசமய பாடநூல்களுள் ஒன்றாக விதிக்கப்பட்ட நூல் இது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 10732).

## 12156

**தேவாரத் திருவமுதம்.** வே.க.ப.நாதன் (உரையாசிரியர்). கொழும்பு 7: வே.க.ப.நாதன், 128/5 வாட் பிளேஸ், 1வது பதிப்பு, 1954. (சென்னை 600005: கபீர் பிரின்டிங் வேர்க்ஸ்).

x, 118 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12.5 சமீ.

தினகரன் ஆசிரியர் வே.க.ப.நாதன் அவர்களின் பதவுரை, விளக்கவுரைகளுடன், பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை, பாரிப்பாக்கம் கண்ணப்ப முதலியார் ஆகியோரின் அணிந்துரைகளுடன் கூடியதாக வெளியிடப்பட்டுள்ள பக்தி இலக்கியம் இதுவாகும். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 2967).

## 12157

**நக்கீர தேவநாயனார் அருளிச்செய்த திருமுருகாற்றுப்படை.** நக்கீரதேவ நாயனார் (மூலம்), ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் (உரையாசிரியர்). யாழ்ப்பாணம்: யாழ்ப்பாணம் கூட்டுறவுத் தமிழ்நூல் பதிப்பு விற்பனைக் கழகம், 411/1, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, 1971. (யாழ்ப்பாணம்: கூட்டுறவு அச்சகம்).

(6), 72 பக்கம், விலை: ரூபா 1.00, அளவு: 17.5x12 சமீ.

பத்துப்பாட்டு நூல்களுள் முதலில் வைத்து எண்ணப்படுவது திருமுருகாற்றுப்படை. பன்னிரு திருமுறை பகுப்பில் இது பதினோராவது திருமுறையில் சேர்க்கப் பட்டுள்ளது. மதுரையைச் சேர்ந்த நக்கீரதேவநாயனாரால் இது இயற்றப் பட்டது. இது கடைச்சங்க நூல்களில் ஒன்று என்பது மரபுவழிச்செய்தியாகும். இது பிற்காலத்தில் எழுந்த நூல் என்று கருதுவோருமுள்ளனர். முருகப் பெருமானைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்ட இந்நூல் 317 அடிகளைக் கொண்ட ஆசிரியப்பாவால் ஆக்கப்பட்டுள்ளது. "ஆற்றுப்படுத்தல்" என்னும் சொல் வழிப்படுத்தல் என்னும் பொருள்படும். "முருகாற்றுப்படை" எனும்போது, வீடுபேறு பெறுவதற்குப் பக்குவமடைந்த ஒருவனை அப்பேறைப் பெற்ற ஒருவன் வழிப்படுத்துவது எனப் பொருள்படும் என்பது நச்சினார்க்கினியர் கூற்று. திருமுருகாற்றுப்படை ஆறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பகுதியும் முருகப் பெருமானின் அறுபடைவீடுகள் ஒவ்வொன்றையும் பாராட்டுவனவாக அமைந்துள்ளது. இவற்றுள் முதற்பகுதியில் திருப்பரங்குன்றமும், இரண்டாம் பகுதியில் திருச்செந்தூர் எனப்படும் திருச்சீரலைவாயும், மூன்றாம், நான்காம், ஐந்தாம், ஆறாம் பகுதிகளில் முறையே திரு ஆவினன்குடி(இந்நாளில் பழநி என்று வழங்கப்படுவது), திருவேரகம் (சுவாமிமலை), குன்றுதோறாடல், பழமுதிர் சோலை ஆகிய படைவீடுகளும் பேசப்படுகின்றன. இந் நூலை முதன்முதலில் 1834இல் சரவணப்பெருமாளையர் பக்திப் பாசுரமாகப் பதிப்பித்தார். 1851இல் ஆறுமுக நாவலரும் பதிப்பாகக் கொண்டு வந்தார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 24039).

### 12158

**நக்கீரர் இயற்றிய திருமுருகாற்றுப்படை.** நக்கீரதேவ நாயனார் (மூலம்), ஸ்ரீமதி சிவானந்தம் தம்பையா (தொகுப்பாசிரியர்),மே.வீ.வேணுகோபாலப் பிள்ளை (பதிப்பாசிரியர்). கொழும்பு: சரஸ்வதி புத்தகசாலை, 175,செட்டியார் தெரு, 1வது பதிப்பு, 1955. (சென்னை 7: தி பிரிமியர் ஆர்ட் பிரஸ், புரசவாக்கம்).

xx, 120 பக்கம், விலை: ரூபா 2.00, அளவு: 19x12.5 சமீ.

இந்நூலில் திருமுருகாற்றுப்படைக்குப் பதவுரை வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் நூலின் தொடக்கத்திலேயே அறிமுகமாக, திருக்கோணமலை, சிவானந்த தபோவனத்தின் சுவாமி சச்சிதானந்த யோகீஸ்வரர் எழுதிய "திருமுருகாற்றுப்படை வரலாறு" கட்டுரையும், யாழ்ப்பாணம் பரமேஸ்வராக் கல்லூரி ஆசிரியர் பண்டிதர் ச.இராமச்சந்திரன் எழுதிய "திருமுருகாற்றுப்படைச் சிறப்பு" என்ற கட்டுரையும், நூலின் இறுதியில் ஆங்கிலக் கட்டுரைகளாக "Worship of Muruga or Skanda" என்ற கட்டுரை பக்கம் 81-107 வரையிலும், "A Guide to Muruka" என்ற கட்டுரை பக்கம் 108-120 வரையிலும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 18419. நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தின் சேர்க்கை இலக்கம் 016472).

### 12159

**நல்லூர்க் கந்தன் திருப்புகழ்.** சொக்கன் (தொகுப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: உதயன் வெளியீடு, நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் லிமிட்டெட், த.பெ. 23, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1989. (யாழ்ப்பாணம்: திருவள்ளுவர் பதிப்பகம், இல. 6, குமார வீதி, நல்லூர்).

24 பக்கம், விலை: அன்பளிப்பு, அளவு: 20x14 சமீ.

நல்லூர் கந்தசுவாமி தேர்த் திருவிழா நாளில் வெளியிடப்பெற்ற பக்திப் பிரசுரம். 29.8.1989இல் யாழ்ப்பாணம், நியு உதயன் நிறுவனத்தாரால் அன்பளிப்பாக வழங்கப்பட்டது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 34944).

### 12160

**நற்சிந்தனைத் திரட்டு.** சிவயோக சுவாமிகள் (மூலம்). கொழும்பு 7: சிவயோக சுவாமிகள் திருவடி நம்பிக்கைப் பொறுப்பு வெளியீடு, 15, வாலுகாராம வீதி, 2வது பதிப்பு, 2000, 1வது பதிப்பு, 1965. (கொழும்பு: கலர் டொட்ஸ் பிரின்டர்ஸ்).

64 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 13x10 சமீ.

யோகர் சுவாமிகள் பாடிய பாடல்கள், கவிதைகள், அருள்மொழிகள் என்பன, அவரது சீடர்களான மார்க்கண்டு சுவாமிகள், சந்த சுவாமி, செல்லத்துரை சுவாமி என்போரால் தொகுக்கப்பட்டு, தமிழில் "நற்சிந்தனை" எனும் நூலாகவும், ஆங்கிலத்தில் "The Words of Our Master" என்ற பெயரிலும் வெளியிடப்பட்டுள்ளன. இத்தொகுப்பு சிவயோக சுவாமிகள் திருவடி நம்பிக்கைப் பொறுப்பு வெளியீடாக

2000 இல் வெளியிடப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 28590).

### 12161

**நாளும் நலம் தரும் நாம பஜனை.** ஆர்.சுந்தரராஜ சர்மா (தொகுப்பாசிரியர்). அட்டன்: ஜெயதுர்க்கா பீடம், பொன்னகர், இணை வெளியீடு, திருக்கோணமலை: இந்து சமய அபிவிருத்திச் சபை, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).

(52) பக்கம், விலை: ரூபா 25., அளவு: 21.5x14 சமீ.

இலகுவில் படிக்கக்கூடியதான சிறு பாடல்களால் ஆக்கப்பெற்ற நாம பஜனைப் பாடல்களின் தேர்ந்த தொகுப்பு. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 21204).

### 12162

**நினைத்ததை தரும் திருமுறைப் பதிகங்கள்.**ஆறுமுகம் கந்தையா (தொகுப்பாசிரியர்). கொழும்பு 11: அஷ்டலக்ஷ்மி பதிப்பகம், 320, செட்டியார் தெரு, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (கொழும்பு 11: அஷ்டலக்ஷ்மி பதிப்பகம், 320, செட்டியார் தெரு).

iv, 71 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14.5 சமீ.

இறைவன் குருவருளைப் பெற, இம்மை நலன்களைப் பெற, மகப்பேற்றைப் பெற, மணமங்கலத்தைப் பெற, மன இளைப்பைத் தீர்க்க என இன்னோரன்ன வேண்டுதல்களுடன் இறைவனை இறைஞ்சிப் போற்றுவதற்கு எம்மிடம் உள்ள இறைவழிபாட்டுப் பாடல்களில் பிரபல்யமானவை திருமுறைப் பதிகங்களாகும். மேற்கண்ட ஒவ்வொரு தேவைக்கும், மேலதிகமாக உயிருக்கு உறுதியும் சகல ஆபத்துக்களும் இருதயக் கோளாறு போன்ற நோய்கள் அண்டாது தூரநிற்கவென, எலும்புமுறிவு படுகாயம் தீவினைகளைத் தீர்ப்பதற்கென என்றவாறாகப் பல்வேறு காரணங்களைக் குறித்துப் பாடவேண்டிய சிறப்புத் திருமுறைகளை தனித்தனிப் பகுதிகளாக வகுத்தும் தொகுத்தும் இந்நூலில் தந்திருக்கின்றார் சைவநெறிக் காவலர் ஆறுமுகம் கந்தையா அவர்கள். நூலின் மேலட்டையில் "நீடூழி வாழ திருமுறைகள்" என்று தலைப்பிடப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 32154).

### 12163

**பத்தினி வழிபாடு.** சி.கணபதிப்பிள்ளை (பதிப்பாசிரியர்). மட்டக்களப்பு: சி. கணபதிப்பிள்ளை, தமிழாசிரியரும் சோதிடரும், அட்டப்பள்ளம், நிந்தவூர், 1வது பதிப்பு, ஒகஸ்ட் 1978. (யாழ்ப்பாணம்: விபுலானந்த அச்சகம்).

(2), 34 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

மட்டக்களப்பின் கண்ணகி வழிபாடு பற்றிய ஆய்வு இதுவாகும். பத்தினி வழிபாடு என்னும் கண்ணகி வழிபாடு, ஈழநாடு முழுவதும் பிரபலம் பெற்றுள்ளது.

குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் இவ்வழிபாட்டு முறைகள் இன்றும் பெருவழக்கிலுள்ளன. கண்ணகி வழிபாட்டின் பக்திப் பிரவாகத்தில் திளைத்து விளையாடிய புலவர்கள் பலர் பல சந்தர்ப்பங்களில் பாடிய பக்திப் பாடல்கள் ஆங்காங்கே சிதறிக்கிடக்கின்றன. சில செல்லரித்து மறைந்தும் விட்டன. அவற்றுள்ளே காவிய வகைகளான எழுச்சிக் கவிதைகள் பக்திப் பரவசத்தில் மக்களை ஆற்றுவதில் ஈடு இணையற்றன. கண்ணகி அம்மன் ஊர்சுற்றுக் காவியத்திலே 15 தலங்கள்மீது பாடப்பெற்ற காவியங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இவரது முன்னைய நூலான மகாமாரித் தேவி திவ்வியகரணியில் இத்தகைய எட்டுக் காவியங்கள்பற்றி ஆசிரியர் விளக்கி அவற்றை ஆவணப்படுத்தியுள்ளார். இந்நூலில் மேலும் ஏழு காவியங்களைத் தேடிச் சேகரித்து பதிவுசெய்துள்ளார். ஊர்சுற்றுக் காவியம், காரைதீவுக் கண்ணகை அம்மன் காவியம், கோராவெளி அம்மன் காவியம், தம்பிலுவில் மழைக் காவியம், மண்முனைக் கண்ணகை அம்மன் காவியம், புதுக்குடியிருப்புக் கண்ணகை அம்மன் காவியம், செட்டி பாளையக் கண்ணகை அம்மன் காவியம் ஆகிய ஏழு காவியங்களும் இந்நூலில் பதிவுசெய்யப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 2409. நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தின் சேர்க்கை இலக்கம் 004761).

### 12164

**பன்னிரு திருமுறைத் தோத்திரத் திரட்டு.** இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம். கொழும்பு 2: இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், காப்புறுதி இல்லம், 9வது மாடி, 21, வாக்ஷோல் வீதி, 1வது பதிப்பு, ஜுலை 1992. (கொழும்பு 2: ராஜன் பிரின்டர்ஸ், 31 கியூ லேன்).

(4), 43 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18.5x12.5 சமீ.

அறநெறிப் பாடசாலைகளுக்கான வெளியீட்டுத் தொடரில் முதலாவது இலவச வெளியீடாக வெளியிடப்பெற்ற நூல். திருமுறைப் பாடல்களின் பொருளை விளங்கிப் பாராயணம் செய்யவும், பண்ணுடன் பாடுவதற்கும் துணையாக அமையக்கூடியதாகத் தொகுக்கப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 13149).

### 12165

**பஜனானந்தம்: திவ்ய த்ரிமூர்த்திகளுக்கு சமர்ப்பணம்.** ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன். கொழும்பு 6: ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் ஆச்ரமம், இலங்கைக் கிளை, 40, ராமகிருஷ்ண வீதி, வெள்ளவத்தை, 1வது பதிப்பு, மார்ச் 2002. (கொழும்பு: யுனிவோக்கர்ஸ் பிரின்டிங் வேர்க்ஸ்).

(6), 130 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12 சமீ.

இறைவனின் திருப்பெயரையும் புகழையும் பாடிப் பணிதல் பக்தி நெறியின் முக்கிய அம்சமாகும். பஜனையும் நாமசங்கீர்த்தனமும் மனமாசுக்களைப் போக்கி ஆனந்தத்தை அளிக்கவல்லன. இப்படிப் பக்தர்கள் ஒன்று சேர்ந்து பாடுவதற்காக

*ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் இந்நூலை தொகுத்திருக்கின்றது. ஸ்ரீ கணேசா, ஸ்ரீ குரு, ஸ்ரீ சிவன், ஸ்ரீ தேவி, ஸ்ரீ முருகா, ஸ்ரீ ராமா, ஸ்ரீ கிருஷ்ணா, ஸ்ரீ ராமகிருஷ்ணா, ஸ்ரீ சாரதாதேவி, சுவாமி விவேகானந்தர், பிற பாடல்கள் ஆகிய 11 தலைப்புகளில் இவை தொகுக்கப்பட்டுள்ளன. நூலின் இறுதியில் முதற்குறிப்பகராதி இடம் பெற்றுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 36667).*

### 12166

**பிள்ளையார் துதியும் ஔவையார் மதியும்.** வீ.வ.நம்பி (இயற்பெயர்: வீ.வ.நல்லதம்பி). *கனடா: கனடா இந்து மாமன்றம், 1வது பதிப்பு, ஜுலை 1999. (கனடா: ரோயல் கிராப்பிக் நிறுவனம்).*

vi, *102 பக்கம், விலை: கனேடிய டாலர் 2., அளவு: 21*x*13.5 சமீ.*

*திருமுறைகளில் வரும் பாடல்களுள் பிள்ளையாரைச் சிறப்பாகத் துதிக்கும் பாடல்களையும் தமிழ் மூதாட்டி ஔவையார் பாடிய அறநெறிப் பாடல்களையும் தொகுத்துத் தரும் முயற்சியாக இந்நூல் வெளிவந்துள்ளது. கனடா, ஸ்காபரோவில் 30.07.1999இல் நடைபெற்ற ஏழாவது உலகச் சைவப்பேரவை மாநாட்டின்போது வெளியிடப்பட்டது. பண்டிதர் நல்லதம்பி, தீவகத்தில் சேர்மன் நல்லதம்பி என்று யாவராலும் அன்பாக அழைக்கப்பட்டவர். மிக இளம் வயதிலேயே சமூகப் பணிகளில் முன்னின்றுழைத்த இவர் முப்பதாவது வயதிலேயே புங்குடுதீவின் கிராமசபைத் தலைவராகத் தெரிவாகிப் பணியாற்றியவர். யாழ். மாவட்ட கிராமசபைகளின் சமாசத் தலைவராகவும் (1954) தெரிவு செய்யப்பட்டு யாவரினதும் மதிப்பினைப் பெற்றவர். அரசியல் துறையிலும் ஈடுபட்டுழைத்தவர். 1956ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலின்போது வடபகுதியில் லங்கா சமசமாஜக் கட்சியின் சார்பில் ஊர்காவற்றுறைத் தொகுதி வேட்பாளராக இவர் போட்டியிட்டார். தீவுப்பகுதி தமிழாசிரியர் சங்கத் தலைவராக, அகில இலங்கை பெற்றோர் ஆசிரியர் சங்க சம்மேளனத் தலைவராக, யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாச உபதலைவராகவும் பணியாற்றியவர். 1973ஆம் ஆண்டு புங்குடுதீவு மகா வித்தியாலயத்தின் அதிபராகக் கடமையேற்று அங்கு க.பொ.த உயர்தர வகுப்புகளை ஆரம்பிக்க ஆவன செய்தார். கவிதைகள், சிறுவர் பாடல்கள் பலவும் இவர் எழுதியுள்ளார். இறுதிக் காலத்தில் புலம்பெயர்ந்து கனடா நாட்டில் வசித்தபோதும் சைவசமயப் பணிகளில் ஈடுபட்டுழைத்தார். கனடா இந்து மாமன்றத்தை நிறுவிய பெருமையும் இவருக்குண்டு. 1999ஆம் ஆண்டு வைகாசித் திங்கள் 23ஆம் திகதி இவருக்குக் கனடாவில் இலக்கியத்திற்கான மிக உயர்ந்த விருது மாநகர மேயரால் வழங்கப்பட்டது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 34800).*

## 12167

**முருகன் பாடல்: முதலாம் பகுதி.** தொகுப்பாளர் குழு. கொழும்பு 11: தெட்சணத்தார் வேளாளர் மகமை பரிபாலன சொசைட்டி லிமிட்டெட், 98 ஜிந்துப்பிட்டி தெரு, 1வது பதிப்பு, ஆவணி 1992. (சென்னை 600002: காந்தளகம், 4, முதல்மாடி, 834, அண்ணா சாலை).

(16), பக்கம் 1-381, தகடுகள், விலை: ஆறு பகுதிகளும் ரூபா 2100., அளவு: 22x14 சமீ.

இந்நூல், இரண்டு தொகுதிகளில் தொகுதிக்கு ஆறு பகுதிகளாக, 12 பகுதி களில் (தனித்தனி நூல்களாக) வெளியிடப்பட்டுள்ளது. முதலாம் பகுதியில் திருச்செந்தூர் அகவல், கந்தரந்தாதி, திருச்செந்தூர் நிரோட்டகயமக அந்தாதி, மருதமலை யமக அந்தாதி, கந்தரநுபூதி, கந்தரலங்காரம், திருப்போரூர் அலங்காரம், மருதமலை அலங்காரம், திருமுருகாற்றுப்படை, திருத்தணிகையாற்றுப்படை, கதிரேசன்பேரில் ஆனந்தக் களிப்பு, ஆரணி ஞானியார் மடாலயத்துக் கந்தருலா, கொடுமளூர் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி ஞான உலா, திருஎழுகூற்றிருக்கை, கிளிக்கண்ணி, திருச்செந்திற் கலம்பகம், மயிலாசலக் கலம்பகம், கந்தர் கலித்துறை, ஸ்ரீஸ்கந்தகுரு கவசம், கந்தர்சஷ்டிக் கவசம், கதிர்காமத் திருமுருகன் கீர்த்தனங்கள், திருமலையாண்டவர் குறவஞ்சி, முருகக் கடவுள் மும்மணிக்கோவை, குமரகிரி மும்மணிக் கோவை, சங்கப் பாடல்களில் முருகன் (பரிபாடல், புறநானூறு, சிலப்பதிகாரம், இன்னா நாற்பது, ஐந்திணை ஐம்பது) ஆகிய பக்தி இலக்கியங்கள் இப்பகுதியில் தொகுக்கப்பட்டுள்ளன. தொகுப்பின் பொருளடக்கம் முழுமையும் எல்லாப் பகுதிகளிலும் முன்பக்கங்களில் இடம்பெற்றுள்ளன. பாட்டு முதற்குறிப்பு அகராதி, பாட்டுடைக் கோவில் அகராதி, பாட்டுத் தலைப்பு அகராதி, ஆசிரியர் அகராதி என்பன இத்தொகுதியின் இறுதிப் பகுதிகளாக உள்ளன. முதலாம் பகுதி உருவாக அணிசெய்தவர்களாக கொழும்பு 11இல் 267, செட்டியார் தெருவிலுள்ள விடிவி பவுண்டேஷன் நிறுவனத்தின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 27240).

## 12168

**முருகன் பாடல்: இரண்டாம் பகுதி.** தொகுப்பாளர் குழு. கொழும்பு 11: தெட்சணத்தார் வேளாளர் மகமை பரிபாலன சொசைட்டி லிமிட்டெட், 98 ஜிந்துப்பிட்டி தெரு, 1வது பதிப்பு, ஆவணி 1992. (சென்னை 600002: காந்தளகம், 4, முதல்மாடி, 834, அண்ணா சாலை).

(8), பக்கம் 382-798, தகடுகள், விலை: ஆறு பகுதிகளும் ரூபா 2100., அளவு: 22x14 சமீ.

இந்நூல், இரண்டு தொகுதிகளில் தொகுதிக்கு ஆறு பகுதிகளாக, 12 பகுதிகளில் (தனித்தனி நூல்களாக) வெளியிடப்பட்டுள்ளது. தொகுப்பின் பொருளடக்கம் முழுமையும் எல்லாப் பகுதிகளிலும் முன்பக்கங்களில் இடம்பெற்றுள்ளன. பாட்டு முதற்குறிப்பு அகராதி, பாட்டுடைக் கோவில் அகராதி, பாட்டுத் தலைப்பு

அகராதி, ஆசிரியர் அகராதி என்பன இத்தொகுதியின் இறுதிப் பகுதிகளாக உள்ளன. இவ்விரண்டாம் பகுதியில் குமரேச சதகம், செந்தினாயக சதகம், திருச்செந்தில்முருகன் சந்நிதிமுறை, காவடிச் சிந்து, சஷ்டி காவடிச் சிந்து, திருப்புகழ் ஆகிய பக்தி இலக்கியங்கள் தொகுக்கப்பட்டுள்ளன. இரண்டாம் பகுதி உருவாக அணிசெய்தவராக கொழும்பிலுள்ள திரு.பி.பாலசுந்தரம் அவர்களின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 50755).

## 12169

**முருகன் பாடல்: மூன்றாம் பகுதி.** தொகுப்பாளர் குழு. கொழும்பு 11: தெட்சணத்தார் வேளாளர் மகமை பரிபாலன சொசைட்டி லிமிட்டெட், 98 ஜிந்துப்பிட்டி தெரு, 1வது பதிப்பு, ஆவணி 1992. (சென்னை 600002: காந்தளகம், 4, முதல்மாடி, 834, அண்ணா சாலை).

(8), பக்கம் 799-1205, தகடுகள், விலை: ஆறு பகுதிகளும் ரூபா 2100., அளவு: 22x14 சமீ.

இந்நூல், இரண்டு தொகுதிகளில் தொகுதிக்கு ஆறு பகுதிகளாக, 12 பகுதிகளில் (தனித்தனி நூல்களாக) வெளியிடப்பட்டுள்ளது. தொகுப்பின் பொருளடக்கம் முழுமையும் எல்லாப் பகுதிகளிலும் முன்பக்கங்களில் இடம்பெற்றுள்ளன. பாட்டு முதற்குறிப்பு அகராதி, பாட்டுடைக் கோவில் அகராதி, பாட்டுத் தலைப்பு அகராதி, ஆசிரியர் அகராதி என்பன இத்தொகுதியின் இறுதிப்பகுதிகளாக உள்ளன. இம் மூன்றாம் பகுதியில் முன்னைய தொகுதியில் இறுதியாக இடம்பெற்ற திருப்புகழ் தொகுப்பின் தொடர்ச்சி இடம்பெற்றுள்ளன. திருப்புகழின் இறுதிப்பகுதி அடுத்த தொகுதியிலும் தொடர்ந்துள்ளது. மூன்றாம் பகுதி உருவாக அணிசெய்தவராக கொழும்பிலுள்ள திரு.வி.சங்கர் அவர்களின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 50756).

## 12170

**முருகன் பாடல்: நான்காம் பகுதி.** தொகுப்பாளர் குழு. கொழும்பு 11: தெட்சணத்தார் வேளாளர் மகமை பரிபாலன சொசைட்டி லிமிட்டெட், 98 ஜிந்துப்பிட்டி தெரு, 1வது பதிப்பு, ஆவணி 1992. (சென்னை 600002: காந்தளகம், 4, முதல்மாடி, 834, அண்ணா சாலை).

(8), பக்கம் 1206-1607, தகடுகள், விலை: ஆறு பகுதிகளும் ரூபா 2100., அளவு: 22x14 சமீ.

இந்நூல், இரண்டு தொகுதிகளில் தொகுதிக்கு ஆறு பகுதிகளாக, 12 பகுதிகளில் (தனித்தனி நூல்களாக) வெளியிடப்பட்டுள்ளது. தொகுப்பின் பொருளடக்கம் முழுமையும் எல்லாப் பகுதிகளிலும் முன்பக்கங்களில் இடம்பெற்றுள்ளன. பாட்டு முதற்குறிப்பு அகராதி, பாட்டுடைக் கோவில் அகராதி, பாட்டுத் தலைப்பு அகராதி, ஆசிரியர் அகராதி என்பன இத்தொகுதியின் இறுதிப்பகுதிகளாக

உள்ளன. நான்காவது தொகுதியில் முன்னைய தொகுதியில் தொடர்ந்த திருப்புகழின் இறுதிப் பகுதியும், அதனைத் தொடர்ந்து நல்லூர்க் கந்தன் திருப்புகழ், திருமுறைகளில் முருகப் பெருமான், செந்திலாண்டவர் துதியமுது, வண்டுவிடு தூது, செல்வச்சந்நிதி முருகன் பேரில் கிளித்தூது, திருச்செந்தூர் நொண்டி நாடகம், தணிகாசலப் பஞ்சரத்தினம், ஆறுமுகசுவாமி பஞ்சரத்தினம், மருதமலைச் சந்தப் பதிகம், குமரகுரு பதிகம், இரத்தினகிரிப் பாலமுருகன் உயிர்முதற் போற்றிப் பதிகம், திருமலை முருகன் பள்ளு, வையாபுரிப் பள்ளு, சண்முகப் பாமாலை, இரத்தினகிரிப் பாலமுருகன் பாமாலை, ஆகிய பக்தி இலக்கியப் பாக்கள் இடம் பெற்றுள்ளன. நான்காம் பகுதி உருவாக அணிசெய்தவராக சென்னையிலுள்ள ஈஸ்டர்ன் எக்ஸ்போர்ட்ஸ் நிறுவனதின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. (இந் நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 27243).

## 12171

**முருகன் பாடல்: ஐந்தாம் பகுதி.** தொகுப்பாளர் குழு. கொழும்பு 11: தெட்சணத்தார் வேளாளர் மகமை பரிபாலன சொசைட்டி லிமிட்டெட், 98 ஜிந்துப்பிட்டி தெரு, 1வது பதிப்பு, ஆவணி 1992. (சென்னை 600002: காந்தளகம், 4, முதல்மாடி, 834, அண்ணா சாலை).

(8), பக்கம் 1608-2021, தகடுகள், விலை: ஆறு பகுதிகளும் ரூபா 2100., அளவு: 22x14 சமீ.

இந்நூல் இரண்டு ஆறு தொகுதிகளாக, 12 தொகுதிகளில் வெளியிடப்பட்டுள்ளது. தொகுப்பின் பொருளடக்கம் முழுமையும் எல்லாப் பகுதிகளிலும் முன்பக்கங்களில் இடம்பெற்றுள்ளன. பாட்டு முதற்குறிப்பு அகராதி, பாட்டுடைக் கோவில் அகராதி, பாட்டுத் தலைப்பு அகராதி, ஆசிரியர் அகராதி என்பன இத்தொகுதியின் இறுதிப் பகுதிகளாக உள்ளன. இவ்வைந்தாம் தொகுதியில் முருகன் பேரில் அமைந்த பிள்ளைத் தமிழ்ப் பாக்கள் இடம்பெற்றுள்ளன. கதிர்காமப் பிள்ளைத்தமிழ், கம்பை முருகன் பிள்ளைத்தமிழ், திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழ், திருத்தணிகைப் பிள்ளைத்தமிழ், திருத்தணிகைப் பெருமான் பிள்ளைத்தமிழ், திருப்போரூர் முருகன் பிள்ளைத்தமிழ், திருமலை முருகன் பிள்ளைத்தமிழ், திருவிரிஞ்சை முருகன் பிள்ளைத்தமிழ், திருவிலஞ்சி முருகன் பிள்ளைத்தமிழ், பழனிப் பிள்ளைத்தமிழ் ஆகியவை இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. ஐந்தாம் பகுதி உருவாக அணிசெய்தவராக லண்டனில் வதியும் திரு. திருமதி கே. குகானந்தன் தம்பதியினரின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 27244).

## 12172

**முருகன் பாடல்: ஆறாம் பகுதி.** தொகுப்பாளர் குழு. கொழும்பு 11: தெட்சணத்தார் வேளாளர் மகமை பரிபாலன சொசைட்டி லிமிட்டெட், 98 ஜிந்துப்பிட்டி தெரு, 1வது பதிப்பு, ஆவணி 1992. (சென்னை 600002: காந்தளகம், 4, முதல்மாடி, 834, அண்ணா சாலை).

*(8), பக்கம் 2022-2403, தகடுகள், விலை: ஆறு பகுதிகளும் ரூபா 2100., அளவு: 22x14 சமீ.*

இந்நூல், இரண்டு தொகுதிகளில் தொகுதிக்கு ஆறு பகுதிகளாக, 12 பகுதிகளில் (தனித்தனி நூல்களாக) வெளியிடப்பட்டுள்ளது. தொகுப்பின் பொருளடக்கம் முழுமையும் எல்லாப் பகுதிகளிலும் முன்பக்கங்களில் இடம்பெற்றுள்ளன. பாட்டு முதற்குறிப்பு அகராதி, பாட்டுடைக் கோவில் அகராதி, பாட்டுத் தலைப்பு அகராதி, ஆசிரியர் அகராதி என்பன இத்தொகுதியின் இறுதிப் பகுதிகளாக உள்ளன. இவ்வாறாம் பகுதியில் மயிலம் முருகன் பிள்ளைத்தமிழ், மாவைப் பிள்ளைத்தமிழ், வைத்தீஸ்வரன் கோவில் முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ், ஷேத்திரக்கோவைப் பிள்ளைத்தமிழ், திருச்செந்தூர் சுப்பிரமணிய புஜங்கம்-1, திருச்செந்தூர் சுப்பிரமணிய புஜங்கம்-2, திருச்செந்தூர் சுப்பிரமணிய புஜங்கம்-3, திருவகுப்பு, வேல் விருத்தம், மயில் விருத்தம், சேவல் விருத்தம், தொட்டிக்கலை திருத்தணிகைத் திருவிருத்தம், திருமயிலைச் சிங்காரவேலன் திருவிருத்தம், திருச்செந்தூர்க் கந்தர் கலிவெண்பா, தணிகை வெண்பா, கதிரைச் சிலேடை வெண்பா ஆகிய பக்தி இலக்கியங்களை தொகுத்திருக்கின்றார்கள். ஆறாம் பகுதி உருவாக அணிசெய்தவராக கொழும்பு 11, செட்டியார் தெரு, 255ஆம் இலக்கத்தில் வதியும் சு.அசோகன் அவர்களின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 27245).

## 12173

**முருகன் பாடல்: ஏழாம் பகுதி.** தொகுப்பாளர் குழு. கொழும்பு 11: தெட்சணத்தார் வேளாளர் மகமை பரிபாலன சொசைட்டி லிமிட்டெட், 98 ஜிந்துப்பிட்டி தெரு, 1வது பதிப்பு, ஆவணி 1995. (சென்னை 600002: காந்தளகம், 4, முதல்மாடி, 834, அண்ணா சாலை).

*(16), பக்கம் 2405-2795, தகடுகள், விலை: ஆறு பகுதிகளும் ரூபா 2700., அளவு: 22x14 சமீ.*

இந்நூல், இரண்டு தொகுதிகளில் தொகுதிக்கு ஆறு பகுதிகளாக, 12 பகுதிகளில் (தனித்தனி நூல்களாக) வெளியிடப்பட்டுள்ளது. தொகுப்பின் பொருளடக்கம் முழுமையும் எல்லாப் பகுதிகளிலும் முன்பக்கங்களில் இடம்பெற்றுள்ளன. பாட்டு முதற்குறிப்பு அகராதி, பாட்டுடைக் கோவில் அகராதி, பாட்டுத் தலைப்பு அகராதி, ஆசிரியர் அகராதி என்பன இத்தொகுதியின் இறுதிப் பகுதிகளாக உள்ளன. ஏழாம் பகுதியில் சுப்பிரமணியர் அகவல், செல்வச்சந்நிதி அகவல், மாவைக் கந்தர் அகவல், அலோர்ஸ்டார் தண்டபாணி இருபா இருபது அந்தாதி, இணுவை அந்தாதி, திரு ஏரகத்து இறைவன் பல்வண்ணத்தந்தாதி, மயிலணி அந்தாதி, மாவை யமக அந்தாதி, முருகரநுபூதி, கதிர்காமத்து அம்மானை, கதிர்காம வேலர் திருவருட்பா, திருஅருட்பா, இரத்தினகிரிப் பால முருகன் அலங்காரம், ஆறுமாமுகன் அருட்பேராயிரம், அருணை ஆற்றுப்படை, சென்னிமலை முருகன் புலவர் ஆற்றுப்படை ஆகிய 16 பாடல்கள் இடம்பெற்றுள்ளன.(இந்நூல்

*கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 57672).*

## 12174

**முருகன் பாடல்: எட்டாம் பகுதி.** தொகுப்பாளர் குழு. கொழும்பு 11: தெட்சணத்தார் வேளாளர் மகமை பரிபாலன சொசைட்டி லிமிட்டெட், 98 ஜிந்துப்பிட்டி தெரு, 1வது பதிப்பு, ஆவணி 1995. (சென்னை 600002: காந்தளகம், 4, முதல்மாடி, 834, அண்ணா சாலை).

*(7), பக்கம் 2796-3203, தகடுகள், விலை: ஆறு பகுதிகளும் ரூபா 2700., அளவு: 22x14 சமீ.*

*இந்நூல், இரண்டு தொகுதிகளில் தொகுதிக்கு ஆறு பகுதிகளாக, 12 பகுதிகளில் (தனித்தனி நூல்களாக) வெளியிடப்பட்டுள்ளது. தொகுப்பின் பொருளடக்கம் முழுமையும் எல்லாப் பகுதிகளிலும் முன்பக்கங்களில் இடம்பெற்றுள்ளன. பாட்டு முதற்குறிப்பு அகராதி, பாட்டுடைக் கோவில் அகராதி, பாட்டுத் தலைப்பு அகராதி, ஆசிரியர் அகராதி என்பன இத்தொகுதியின் இறுதிப் பகுதிகளாக உள்ளன. எட்டாவது தொகுதியில் திருமுருகாற்றுப்படை, திருவேல் திருவுலா, மயூரகிரி உலா, ஆடுக ஊஞ்சல் ஆடுகவே, செல்வச் சந்நிதிக் கந்தன் திருப்பொன்னூ ஞ்சல், செல்வச் சந்நிதி முருகன் பெயரில் திருவூஞ்சல், செல்வச்சந்நிதி வேலர் திருவூஞ்சல், மயிலைச் சிவசுப்பிரமண்யர் ஊஞ்சல், வேலாயுதக் கண்ணி, செல்வச்சந்நிதி முருகன் கண்ணிகள், குறுக்குத்துறைக் கலம்பகம், குன்றக்குடியில் கோயில் கொண்டுள்ள முருகப் பெருமான் கலம்பகம், சென்னைக் கந்தகோட்ட முருகப்பெருமான் கலம்பகம், ஸ்ரீ தேவசேனாபதி கவசம், ஸ்ரீ வள்ளி நாயகன் நாடகக் காவியம், கதிரை முருகன் கீர்த்தனை, மண்டூர் முருகன் பேரில் கீர்த்தனை கள், சூரசங்காரம் முதலிய பக்திக் கீர்த்தனைகள், பேராதனைப் பல்கலைக்கழகத் திருமுருகன் கீர்த்தனைகள், மாவைக் கந்தன் பக்திரசக் கீர்த்தனைகள், குறுக்குத்துறைக் குறவஞ்சி, குறுக்குத்துறைக் கொச்சகக் கலிப்பா ஆகிய பாடல்கள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 57673).*

## 12175

**முருகன் பாடல்: ஒன்பதாம் பகுதி.** தொகுப்பாளர் குழு. கொழும்பு 11: தெட்சணத்தார் வேளாளர் மகமை பரிபாலன சொசைட்டி லிமிட்டெட், 98 ஜிந்துப்பிட்டி தெரு, 1வது பதிப்பு, ஆவணி 1995. (சென்னை 600002: காந்தளகம், 4, முதல்மாடி, 834, அண்ணா சாலை).

*(7), பக்கம் 3204-3631, தகடுகள், விலை: ஆறு பகுதிகளும் ரூபா 2700., அளவு: 22x14 சமீ.*

*இந்நூல், இரண்டு தொகுதிகளில் தொகுதிக்கு ஆறு பகுதிகளாக, 12 பகுதிகளில் (தனித்தனி நூல்களாக) வெளியிடப்பட்டுள்ளது. தொகுப்பின் பொருளடக்கம் முழுமையும் எல்லாப் பகுதிகளிலும் முன்பக்கங்களில் இடம்பெற்றுள்ளன.*

பாட்டு முதற்குறிப்பு அகராதி, பாட்டுடைக் கோவில் அகராதி, பாட்டுத் தலைப்பு அகராதி, ஆசிரியர் அகராதி என்பன இத்தொகுதியின் இறுதிப் பகுதிகளாக உள்ளன. இத்தொகுதியில் திருப்பரங்கிரி மும்மணிக்கோவை, மயிலணி முருகவேள் மும்மணிக்கோவை, திருச்செந்தில் முருகன் சந்நிதி முறை, சந்நிதிக் கந்தன் சரிதை, செல்வச்சந்நிதி முருகன் காவடிச்சிந்து, நல்லூர் முருகன் காவடிச் சிந்து, பினாங்கு தண்ணீர்மலை வேல்முருகன் காவடிச்சிந்து, திருப்புகழ் (1327-1378), குன்றக்குடிப் படைவீட்டுத் திருப்புகழ், குன்றக்குடி முருகன் திருப்புகழ்ப் பதிகம், மயிலம் சுப்பிரமணியர் துதியமுது, பழநியாண்டவர் மயில்விடு தூது, முருகக்கடவுள்மீது கிளித்தூது, நல்லூர் நாற்பது, செல்வச்சந்நிதி சுப்பிரமணிய சுவாமி நிந்தாஸ்துதி, செல்வச்சந்நிதி ஒருபா ஒருபஃது, ஸ்ரீமுருகக் கடவுள் அலங்கார பஞ்சகம், ஆறெழுத்துப்பத்து, இரத்தினகிரிப் பாலமுருகன் அடைக்கலப்பத்து, இரத்தினகிரிப் பாலமுருகன் குயிற்பத்து, வயலூர்ப் பத்து, அநுராதபுரக் கதிரேசன் கோவில் பதிகம், குன்றக்குடிப் பதிகம் 1,2,3., சிங்கை நகர் தண்டபாணி வருகைப் பதிகம், செல்வச் சந்நிதித் திருப்பதிகம், திருக்குமரன் திருப்பதிகம், திருச்செந்தூர் பாதயாத்திரைப் பதிகம், திருச்சந்நிதிப் பதிகம், திருப்பரங்குன்றப் பதிகம், தென் பசிபிக் காவலர் அருள்மிகு பிஜி முருகன் பதிகம், நல்லைப் பதிகம், மாவைக் கதிர்காம வடிவேலர் பதிகம், மாவைக் கந்தன் பதிகம், மாவைச் சுப்பிரமணியக் கடவுள் பதிகம், மாவைநகர் முருகவேள் பதிகம், மாவைப் பதிகம், செல்வச்சந்நிதி முருகன் திருப்பள்ளியெழுச்சி, திருச்செந்திலாண்டவன் திருப்பள்ளியெழுச்சி, கதிரைமலைப்பள்ளு ஆகிய பாடல்கள் இத்தொகுதியில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 57674).

### 12176

**முருகன் பாடல்: பத்தாம் பகுதி.** தொகுப்பாளர் குழு. கொழும்பு 11: தெட்சணத்தார் வேளாளர் மகமை பரிபாலன சொசைட்டி லிமிட்டெட், 98 ஜிந்துப்பிட்டி தெரு, 1வது பதிப்பு, ஆவணி 1995. (சென்னை 600002: காந்தளகம், 4, முதல்மாடி, 834, அண்ணா சாலை).

(7), பக்கம் 3632-4035, தகடுகள், விலை: ஆறு பகுதிகளும் ரூபா 2700., அளவு: 22x14 சமீ.

இந்நூல், இரண்டு தொகுதிகளில் தொகுதிக்கு ஆறு பகுதிகளாக, 12 பகுதிகளில் (தனித்தனி நூல்களாக) வெளியிடப்பட்டுள்ளது. தொகுப்பின் பொருளடக்கம் முழுமையும் எல்லாப் பகுதிகளிலும் முன்பக்கங்களில் இடம்பெற்றுள்ளன. பாட்டு முதற்குறிப்பு அகராதி, பாட்டுடைக் கோவில் அகராதி, பாட்டுத் தலைப்பு அகராதி, ஆசிரியர் அகராதி என்பன இத்தொகுதியின் இறுதிப் பகுதிகளாக உள்ளன. பத்தாவது தொகுதியில் செல்வச் சந்நிதிக் கந்தர் நாமபஜனை, செந்தில் முருகன் வழிநடைப் பாட்டு, முருகன் பாட்டு, வேல் பாட்டு, வேலன் பாட்டு, ஆய்க்குடி முருகன் பிள்ளைத் தமிழ், இணுவை முருகன் பிள்ளைத் தமிழ், கச்சிக் குமரகோட்டக் கடவுள் பிள்ளைத் தமிழ், கழுகுமலை அருள்மிகு சுப்பிரமணியக் கடவுள் பேரில் பிள்ளைத் தமிழ், காஞ்சிபுரம் திருக்குமரகோட்ட முருகன்

பிள்ளைத் தமிழ், கரவை முருகன் பிள்ளைத் தமிழ், கீழ்வேளூர் முருகன் பிள்ளைத் தமிழ், குமாரகோயில் அருள்மிகுவேலாயுதப் பெருமாள் பிள்ளைத் தமிழ் ஆகிய பக்தி இலக்கியங்கள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 57675).

## 12177

**முருகன் பாடல்: பதினொன்றாம் பகுதி.** தொகுப்பாளர் குழு. கொழும்பு 11: தெட்சணத்தார் வேளாளர் மகமை பரிபாலன சொசைட்டி லிமிட்டெட், 98 ஜிந்துப்பிட்டி தெரு, 1வது பதிப்பு, ஆவணி 1995. (சென்னை 600002: காந்தளகம், 4, முதல்மாடி, 834, அண்ணா சாலை).

(7), பக்கம் 4036-4444, தகடுகள், விலை: ஆறு பகுதிகளும் ரூபா 2700., அளவு: 22x14 சமீ.

இந்நூல், இரண்டு தொகுதிகளில் தொகுதிக்கு ஆறு பகுதிகளாக, 12 பகுதிகளில் (தனித்தனி நூல்களாக) வெளியிடப்பட்டுள்ளது. தொகுப்பின் பொருளடக்கம் முழுமையும் எல்லாப் பகுதிகளிலும் முன்பக்கங்களில் இடம்பெற்றுள்ளன. பாட்டு முதற்குறிப்பு அகராதி, பாட்டுடைக் கோவில் அகராதி, பாட்டுத் தலைப்பு அகராதி, ஆசிரியர் அகராதி என்பன இத்தொகுதியின் இறுதிப் பகுதிகளாக உள்ளன. பதினொராம் தொகுதியில் குறுக்குத்துறை குமரன் பிள்ளைத் தமிழ், சென்னை மாநகர்க் கந்தசாமி பிள்ளைத் தமிழ், சேயூர் முருகன் பிள்ளைத் தமிழ், தரங்கை வீரவேலாயுதசாமி பிள்ளைத் தமிழ், திருவருணைமுருகன் பிள்ளைத் தமிழ், தேவகோட்டை முருகன் பிள்ளைத் தமிழ், சிதம்பரம் ஸ்ரீ பாண்டிநாயகன் என்ற முருகப் பெருமான் பிள்ளைத் தமிழ், மண்டூர்ப் பிள்ளைத் தமிழ் ஆகிய பாடல்கள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 57676).

## 12178

**முருகன் பாடல்: பன்னிரண்டாம் பகுதி.** தொகுப்பாளர் குழு. கொழும்பு 11: தெட்சணத்தார் வேளாளர் மகமை பரிபாலன சொசைட்டி லிமிட்டெட், 98 ஜிந்துப்பிட்டி தெரு, 1வது பதிப்பு, ஆவணி 1995. (சென்னை 600002: காந்தளகம், 4, முதல்மாடி, 834, அண்ணா சாலை).

(8), பக்கம் 4445-4844, தகடுகள், விலை: ஆறு பகுதிகளும் ரூபா 2700., அளவு: 22x14 சமீ.

இந்நூல், இரண்டு தொகுதிகளில் தொகுதிக்கு ஆறு பகுதிகளாக, 12 பகுதிகளில் (தனித்தனி நூல்களாக) வெளியிடப்பட்டுள்ளது. தொகுப்பின் பொருளடக்கம் முழுமையும் எல்லாப் பகுதிகளிலும் முன்பக்கங்களில் இடம்பெற்றுள்ளன. பாட்டு முதற்குறிப்பு அகராதி, பாட்டுடைக் கோவில் அகராதி, பாட்டுத் தலைப்பு அகராதி, ஆசிரியர் அகராதி என்பன இத்தொகுதியின் இறுதிப் பகுதிகளாக உள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 57677).

## 12179

**யாழ்.திருநெல்வேலி முத்துமாரியம்பாள் அருள்நிதியம்.** சி.அப்புத்துரை (தொகுப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: குப்பிழானூர் அம்பலவாணர் நடராசா நினைவு மஞ்சரி, குப்பிழான், 1வது பதிப்பு, மார்ச் 2006. (கொழும்பு 13: கீதா பதிப்பகம்).

136 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12 சமீ.

கலாபூஷணம் பண்டிதர் சி.அப்புத்துரை அவர்கள் தொகுத்திருக்கும் இந்நூலின் முதற்பகுதி பன்னிரு திருமுறைகளின் சில தேர்ந்த பாக்களையும், இரண்டாம் பகுதி, அருள்மிகு முத்துமாரியம்பாள் ஆலய வரலாறு, திருப்பொற்சுண்ணம், முத்துமாரியம்பாள் ஆலயத் திருவூஞ்சல், சகலகலாவல்லி மாலை, கௌரி காப்பு, கந்தரநுபூதி, பிள்ளையார் கதை, திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சி, அபிராமி அந்தாதி, ஸ்ரீதுர்க்கா தேவி அஷ்டகம், ஸ்ரீ லிங்காஷ்டகம், கருமாரி அம்மன் ஸ்தோத்திரம் ஆகியவற்றையும் உள்ளடக்குகின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 38498).

## 12180

**வழிபாட்டுத் திரட்டு.**கா.சிவபாதசுந்தரம் (தலைவர்). யாழ்ப்பாணம்: தையிட்டி இந்து இளைஞர் சங்கம், தையிட்டி, 1வது பதிப்பு, 1970. (யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா அச்சு நிலையம்).

72 பக்கம், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12.5 சமீ.

தையிட்டி, இலங்கையின் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள வலிகாமம் வடக்குப் பிரதேசச் செயலாளர் பிரிவில் அமைந்துள்ள ஓர் ஊர். மிகவும் உயர்ந்த திடல்களை கொண்ட இடமாகவும் ஆழமான கிணறுகளை கொண்ட இடமாகவும் அமைந்துள்ள ஊர் தையிட்டி. இது தையிட்டி வடக்கு, தையிட்டி கிழக்கு, தையிட்டி தெற்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளுக்குள் உள்ளன. தையிட்டிக்கு வடக்கில் வங்காள விரிகுடாவும், மேற்கில் காங்கேசன்துறையும், கிழக்கில் மயிலிட்டியும், தெற்கில் பளைவீமன்காமமும் எல்லைப் பிரதேசங்களாகக் காணப்படுகின்றன. தையிட்டி தெற்கில் ஏறக்குறைய 400 ஆண்டுகள் பழமை வாய்ந்த "கணையவிற் பிள்ளையார் அல்லது குளத்தடி பிள்ளையார் ஆலயம்" அமைந்துள்ளது. சைவாபி மானியும் தையிட்டி கணையவில் பிள்ளையார் கோவிலில் கூட்டுப்பிரார்த்தனை நிகழ்வு ஆரம்பிப்பதற்குக் காரணகர்த்தருமான அமரர் மா.முருகேசம் பிள்ளைஅவர்களின் நினைவாக வெளியிடப்பட்டுள்ள இந்நூலில் பிள்ளையார் கதை, போற்றித் திருவகவல், வருக்கக்கோவை, தத்துவஞானத் திருவகவல், தேவாரம், திருவாசகம் முதலான பக்தி இலக்கியங்கள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 31707).

## 12181

**ஸ்ரீ காயத்ரீ உபாசனா பத்ததி (காயத்ரீ நித்ய ஹோம விதியுடன்).** தவயோகி கண்ணையா. நுவரெலியா: ஸ்ரீ காயத்ரி பீடம், ஸ்ரீ நகர், 82, லேடி மெக்கலம்ஸ் டிரைவ், 1வது பதிப்பு, 1989. (கொழும்பு 12: லீலா அச்சகம், 182, மெசெஞ்சர் வீதி).

30 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12.5 சமீ.

முருகேசு சுவாமிகள் என அழைக்கப்பட்ட சுவாமி ஆர். கே. முருகேசு (ராமன் காளிமுத்து முருகேசு, அக்டோபர் 26, 1933 - செப்டம்பர் 24, 2007) இலங்கையின் இந்து ஆன்மீகவாதிகளில் ஒருவர். காயத்திரிச் சித்தர் என அனைவராலும் போற்றப்பட்ட இவர் இலங்கையின் நுவரெலியா நகரில் வாழ்ந்தவர். அந்நகரில் அமைந்துள்ள இலங்காதீஸ்வரர் ஆலயம் மற்றும் காயத்திரி பீடம் என்பன இவரால் நிறுவப்பட்டவையே. முருகேசு சுவாமிகள் 2007ம் ஆண்டு உடல்நலம் பாதிக்கப்பட்ட நிலையில், மருத்துவ சிகிச்சைக்காக இந்தியா சென்றார். அங்கு மருத்துவமனை ஒன்றில், செப்டம்பர் 24, 2007 அன்று மறைந்தார். நுவரெலியா ஸ்ரீ காயத்திரி பீட வளாகத்திலுள்ள தியான மண்டபத்தில் சுவாமிகளின் ஜீவசமாதி அமைய பெற்றுள்ளது. தவயோகி கண்ணையாவின் சீடரான முருகேசு சுவாமிகள் தன் குருவின் நினைவாக இந்நூலைவெளியிட்டுள்ளார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 897/42728).

## 12182

**ஸ்ரீ நவராத்திரி நாயகியும் தோத்திர மாலையும்.** ஸ்ரீ விசுவாம்பா விசாலாட்சி மாதாஜி. கொழும்பு: உலக சைவப் பேரவை, இலங்கைக் கிளை, 1வது பதிப்பு, மார்கழி 1999. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).

xiv, 96 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 22x14 சமீ.

இலகுவான செந்தமிழில் சுவை குன்றாது தோத்திர, பக்திப் பாடல்களை யாத்துத் தந்துள்ள நூலாசிரியர் சைவநன்மணி, சிவமயச் செல்வி, புலவர் ஸ்ரீ விசுவாம்பா விசாலாட்சி மாதாஜி, கொழும்பு, பேலியகொடை ஸ்ரீ பூபால விநாயகர் ஆலய ஆஸ்தானப் புலவராவார். இந்நூலின் முதற் பகுதி (பாகம் 1) வசன நடையில் ஏழு அத்தியாயங்களை உள்ளடக்குகின்றது. தாய் வழிபாடு, சக்தி வழிபாடும் சக்திகளின் தன்மையும், ஆதி பராசக்தியின் வலிமையின் பெருமை, ஸ்ரீமகாலட்சுமி தேவி, ஸ்ரீ தேவி பூசை, தேவி உபாசனை, நவராத்திரி விரதம் ஆகிய தலைப்புகளில் இவ்வத்தியாயங்கள் எழுதப்பட்டுள்ளன. இரண்டாவது பாகம் புலவர் ஸ்ரீ விசுவாம்பா விசாலாட்சி மாதாஜி தொகுத்தளித்துள்ள சக்தி தோத்திரச் செய்யுள் களைக் கொண்டுள்ளது. ஆசிரியரின் 67ஆவது வயதில் வெளிவந்துள்ள அவரது 18ஆவது நூல் இதுவாகும். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 21185).

## 12183

**ஸ்ரீ ராமகிருஷ்ண பஜனாவளி.** ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன். கொழும்பு 6: ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் ஆச்ரமம், இலங்கைக் கிளை, ராமகிருஷ்ணா வீதி, வெள்ளவத்தை, 4வது திருத்திய பதிப்பு, 1969, 1வது பதிப்பு, 1960, 2வது திருத்திய பதிப்பு, 1963, 3வது திருத்திய விரிவாக்கப்பட்ட பதிப்பு, 1966. (கொழும்பு 11: அவ்ரா பிரின்டிங் வேர்க்ஸ், 19, கடல் தெரு).

viii, 240 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12.5 சமீ.

பாலர் முதல் வளர்ந்தோர் வரை உபயோகிக்கத் தக்கதாக தொகுக்கப்பெற்ற பஜனைப் பாடல்கள், தோத்திரங்கள், கீர்த்தனங்கள், நாமஸங்கீர்த்தனங்கள், உட்பட பன்னிரு திருமுறைப் பாடல்களும் திவ்ய பிரபந்தப் பாசுரங்களும் தன்னகத்தே கொண்டு இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது. ஸ்ரீ கணேசர், ஸ்ரீகுருதேவர், ஸ்ரீ ராமகிருஷ்ணர், ஸ்ரீசாரதாதேவியார், ஸ்ரீ விவேகானந்தர், ஸ்ரீ சிவபெருமான், ஸ்ரீ சக்தி, ஸ்ரீ முருகன், ஸ்ரீ ராமன் ஸ்ரீ கண்ணன், ஸ்ரீ நாராயணன், ஸ்ரீ திவ்யப் பிரபந்தம், ஸ்ரீ புத்த பகவான், ஸ்ரீ யேசுநாதர், மங்களம், சிங்களத் துதிப்பாடல்கள், அனுபந்தம் (வேத சாந்திப் பாட்டம், பிரார்த்தனை), முதற்குறிப்பகராதி ஆகிய 18 அத்தியாயத் தலைப்புகளின் கீழ் தரப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 18394).

## 12184

**ஸ்ரீ லலிதா கட்கமாலா, ஸஹஸ்ரநாமம், த்ரிஸதி.** நினைவு மலர்க் குழு. கொழும்பு 6: தில்லைநாயகி அம்மையார் நினைவு வெளியீடு, 109/4 மனிங் பிளேஸ், வெள்ளவத்தை, 1வது பதிப்பு, மே 1998. (கொழும்பு 6: பிரின்ட் கிராப்பிக்ஸ், 4, நெல்சன் பிளேஸ், வெள்ளவத்தை).

36 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x15 சமீ.

திருமதி தில்லைநாயகி இராமலிங்கம் அம்மையார் (09.10.1925-06.04.1998) அவர்களின் மறைவையொட்டி 06.05.1998அன்று வெளியிடப்பெற்றுள்ள இந்நினைவு வெளியீட்டில் அவர் தொடர்பான நினைவஞ்சலிகள், விநாயகர் வணக்கம், திருமுறைப் பாடல்களுடன் ஸ்ரீ லலிதா கட்கமாலா ஸஹஸ்ரநாமம் திரிசதி ஆகியவற்றுடன் சௌந்தர்யலஹரி 27ஆவது சுலோகத்தையும் பதிப்பித்து வெளியிட்டுள்ளனர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 37077).

## 12185

**ஸ்ரீமத் அர்த்தநாரீஸ்வரி அர்த்தநாரீஸ்வர மகிமை (சங்காதேகார்த்தம்).** பி.பா. பஞ்சாட்சரக் குருக்கள். யாழ்ப்பாணம்: பி.பா.பஞ்சாட்சரக் குருக்கள், ஐயனார் கோவிலடி, வண்ணார்பண்ணை மேற்கு, 1வது பதிப்பு, ஆவணி 1988. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சுப்பிரமணிய அச்சகம், இல.63, பீ.ஏ.தம்பி ஒழுங்கை).

xx, 80 பக்கம், தகடுகள், விலை: ரூபா 20.00, அளவு: 21.5x14 சமீ.

கேதாரவிரத நோன்புக் காலங்களில் பயன்படுத்தும் நோக்கில் கௌரி விரத நோன்புக் கதையை விரிவான வரலாற்று விளக்கத்துடனும், தமிழில் பூஜாகல்பத்துடன் கூடியதாகவும் இந்நூல்வழியாக நூலாசிரியர் பிரம்மஸ்ரீ பி.பா. பஞ்சாட்சரக் குருக்கள் அவர்கள் வழங்கியுள்ளார். இவர் யாழ்ப்பாணம் ஐயனார் கோவிலடி மேலை வண்ணை நகர் மங்கள மாகாளியம்மன் பரம்பரைப் பூஜாதுரந்தரர் இந்துப் பிரதம குரு ஆகமப் பிரவீன ஆகமாசார்யராவார். இந் நூலுக்குரிய மிகப்பழைய மூலக்கதையை கோயம்புத்தூர் பிரம்மஸ்ரீ சீ.வீ. இராமாமிர்த சாஸ்திரியவர்கள் தெலுங்கு மொழியிலுள்ள மிகத் தொன்மையானதும் கிடைத்தற்கரியதுமான விரதநூல் கல்பங்களிலிருந்தும் தமிழில் மொழிபெயர்த்துச் சொல்ல, நூலாசிரியர் தான் எழுதிவந்த குறிப்புகள், பூஜா கல்பமாகியவைகளைப் பயன்படுத்தி இதுவரை வெளிவராத புதிய தகவல்களுடன் கூடியதாக இந்நூலை எழுதியிருப்பதாக முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 32215).

### 12186

**ஹரிஹர சுதன் தெய்வீகப் பாமாலை.** ஸ்ரீ ஐயப்பன் புனித யாத்திரைக் குழுவினர். கொழும்பு 6: மயூரபதி ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம், 17A, மயூரா பிளேஸ், வெள்ளவத்தை, 1வது பதிப்பு, மார்கழி 2001. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).

(20), 160 பக்கம், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

ஐயப்ப பக்தர்கள் கூட்டம் மாலை அணிந்து விரத நியமம் பூண்டு மண்டலப்பூசை பஜனைகளைச் செய்து மகாசபரிமலை தர்மசாஸ்தாவின் யாத்திரை மேற்கொள்வது வழக்கம். அவ்வகையில் கொழும்பு மயூரபதி அம்மன் தேவஸ்தானத்தைச் சேர்ந்த ஸ்ரீ ஐயப்பன் புனித யாத்திரைக் குழுவினர் தமது பஜனைத் தேவைக்காக இந்தப் பாமாலை நூலை தொகுத்து வெளியிட்டுள்ளனர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 38259).

**மேலும் பார்க்க 13A15, 13A16,12030,12727,12892,12895**

## 297 இஸ்லாம்

### 12187

**இஸ்லாமிய வாழ்வியல் கோட்பாடுகள்.** M.A.M.சுக்ரி. பேருவளை: நளீமிய்யா இஸ்லாமிய வெளியீட்டுப் பணியகம், தபால்பெட்டி எண் 01, 1வது பதிப்பு, 1999. (தெகிவளை: ஏ.ஜே.பிரின்ட்ஸ், இல. 44, புகையிரத நிலைய வீதி).

vii, 118 பக்கம், விலை: ரூபா 75.00, அளவு: 21.5x14 சமீ., ISBN: 955-8234-00-1.

இஸ்லாமிய கல்வித் தத்துவம், இஸ்லாமிய ஒழுக்கவியல் கோட்பாடு, இஸ்லாமிய வரலாற்றுத் தத்துவம், இலக்கியம் பற்றிய இஸ்லாமியக் கோட்பாடு, இஸ்லாமிய அரசியற் கோட்பாடு ஆகிய ஐந்து இயல்களின் வழியாக இஸ்லாமிய வாழ்வியல்

கோட்பாடுகள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 23232).

## 12188

**உரை மலர்.** எம்.ஐ.எல். பக்கீர்த்தம்பி. சம்மாந்துறை: கலாபிவிருத்திக் கழகம், 1வது பதிப்பு, ஒக்டோபர் 1961. (கொழும்பு: ஜமா அதே இஸ்லாமி அச்சகம்).

(8), 100 பக்கம், விலை: ரூபா 1.25, அளவு: 18x12 சமீ.

தியாகத்தில் மலர்ந்த தீனுல் இஸ்லாம், இஸ்லாமிய நற்சிந்தனை 1-4, துருக்கியின் தந்தை முஸ்தபா கமால், உலக மக்களை உய்வித்தற்கு உதித்த உத்தமர் நபிகள் நாயகம், இலட்சிய வருடத்தின் ஹிதோபதேசம், கர்பலா காட்டும் பாதை, இஸ்லாம் தந்த விஞ்ஞானம், இஸ்லாமும் இறைவழிபாடும், இஸ்லாமும் வட்டியும், அகிலத்தின் அணையாத ஜோதியாய் விளங்கும் அண்ணல் நபிகள் நாயகம், அல்லாமா முஹம்மது இக்பாலின் இன்கவிகள் ஊட்டும் புத்துணர்ச்சி, முஸ்லிம்களுக்குத் தனி இராச்சியம் படைத்த ஈடிணையற்ற கர்ம வீரர், உமறுப் புலவர் கண்ட உத்தம நண்பர், பொறிகளை அடக்கி நெறியை வளர்க்கும் புனித நோன்பு, கிழக்கிலங்கையும் கல்வித் தரமும், அன்பே உருவான நபிகள் நாயகம் மானுக்குப் பிணை நின்ற மாண்பு, ஞான இலக்கியமாம் புர்கான் அருளப்பட்ட புனிதமான இரவு, சனநாயகம் வாழ உயிர்த் தியாகம் புரிந்த உத்தமர் ஹுசைன் (ரலி), வாய்ப்பறை சாற்றித் திரியாது வாழ்ந்து காட்ட வேண்டும், பொறாமைப் பேயை சமுதாயத்திலிருந்து களைவதே கற்றாரின் கடனாகும் ஆகிய 23 உரைகளை இந்நூல் உள்ளடக்குகின்றது. இவற்றில் பெரும்பான்மையானவை இலங்கை வானொலி உரைகளாகும். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 2592).

## 12189

**ஓர் அஜமி கண்ட அல்குர்ஆன்.** உஸ்தாத் எம்.ஏ.எம். மன்ஸூர். கொழும்பு 14: மீள்பார்வை வெளியீட்டுப் பணியகம், 63/5 C, ஸ்டாஸ் வீதி, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2001. (தெகிவளை: ஏ.ஜே.பிரின்ட்ஸ், 44, ஸ்டேஷன் வீதி).

(8), 120 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 21x14 சமீ., ISBN: 955-8226-02-5.

இஸ்லாமிய வரலாற்றிலே குர்ஆன் சம்பந்தமாக வெளிவந்த மிகவும் வித்தியாசமான தமிழ் நூல். குர்ஆனை எப்படி ஒரு அஜமி விளங்கிக்கொள்ளலாம் என்பவை சம்பந்தமாக பிரபல குர்ஆன் விரிவுரையாளர் உஸ்தாத் மன்ஸூர் அவர்கள் இங்கு தனது அனுபவத்தை அழகான மொழியில் பகிர்ந்து கொள்கிறார். ஆய்வுக்கான முற்குறிப்பு, அஜமி என்னும் சொற்பிரயோகமும் அறபு மொழியறிவும், அல்குர் ஆனும் நமது சமூகச் சூழலும், அல்குர் ஆனை விளங்குவதற்கான நிபந்தனை, அல்குர் ஆனின் வசீகரிக்கும் சக்தி, தனி எழுத்துக்களை விளங்கிக் கொள்ளல், அல்குர் ஆன் ஒரு தெய்வீக அற்புதம், குர் ஆனின் கலா உத்திகளும் உருவகங்களும், அல்குர் ஆனின் தனிப் பண்புகள், அல்குர் ஆன் முன்வைக்கும் சிந்தனைகள், முழுமைபெறாத விளக்கவுரைகளும் பிரமிக்கவைக்கும் வார்த்தைகளும், அல்குர்

ஆனின் ஐந்து மையக் கருத்துக்கள், முடிவுரை ஆகிய 13 இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 21439).

### 12190

**ஞானச்செல்வர் குணங்குடியார்.** ம.முகம்மது உவைஸ். சென்னை 1: யுனிவர்ஸல் பப்ளிஷர்ஸ், 155-156, அங்கப்ப நாயக்கன் தெரு, 1வது பதிப்பு, ஜுலை 1965. (சென்னை 1: யுனிவர்சல் பிரின்டிங் ஹவுஸ், 155-156, அங்கப்ப நாயக்கன் தெரு).

85 பக்கம், விலை: ரூபா 50., அளவு: 17.5x12.5 சமீ.

ம.முகம்மது உவைஸ் அவர்கள் வித்தியோதய பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றியவேளையில் எழுதிய நூல். சூபியாக்களின் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு எழுந்தவை மஸ்தான் ஸாஹிபு பாடல்களாகும். இவை மெய்ஞ்ஞானத்தைக் கருவூலமாகக் கொண்டு உருப்பெற்று விளங்குகின்றன. பல தத்துவங்களைப் பொதுப்படையான குறிக்கோளுடன் போதிப்பதுடன் சித்தாந்தக் கருத்துக்களையும் ஆங்காங்கே கொண்டு இவை மிளிர்கின்றன. இத்தகைய சிறப்புமிக்க பாடல்களைப்பற்றி ஆராய்ச்சிக் கண்ணோட்டத்தில் எழுதிய ம.மு.உவைஸ் அவர்களின் கட்டுரைகள் தொடர்ச்சி யாகத் தினகரன் ஞாயிறு வாரமலரில் பிரசுரமாகியிருந்தன. அவற்றின் நூல்வடிவமே இதுவாகும். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 23799).

### 12191

**மனிதனின் கௌரவப் பெயர்.** M.S.M.முபாறக் (புனைபெயர்: மருதவாசி). மருதமுனை-3: மக்காமின் அமீன் பப்ளிக்கேஷன்ஸ், ஹிஜ்றா வீதி, 1வது பதிப்பு, பெப்ரவரி 2005. (அக்கரைப்பற்று-01: நியூ செலெக்ஷன் ஓப்செட் பிரின்ட்).

(2), 129 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 955-1109-2-3.

மனிதனின் ஆரம்பம், மனித ஜனனம், மனிதனும் கடவுள் நம்பிக்கையும், ஆஸ்திகர்களின் இறை நம்பிக்கை, கிறிஸ்தவம் கூறும் போதம், இந்துமத நம்பிக்கை, பௌத்த மதக் கொள்கை, சமணர்களின் நம்பிக்கை, யூதர்களின் கொள்கை, மானிக்கே சமயக் கொள்கை, சௌராஸ்ட்டிரிய மதக் கொள்கை, செவ்விந்தியர்களின் கடவுட்கொள்கை, தீயை வணங்குவோரின் (மஜூஸிகளின்) கொள்கை, தனி மனிதத் தத்துவவாதங்கள், இன்றைய மனிதனின் கேலிக்குரித்தான பண்டைய வேதங்களின் கூற்று, கடவுளைப் படைத்தது யார்?, வரலாற்றில் ஒரு சான்று, மானிடகோடியின் பொது நீதி வேதம் எது?, மனிதர்களின் மைதானம், மனிதனும் மதமும், மதம்பிடித்த மதங்கள், ஓ மனிதர்களே, சிறப்புமிகு சிந்தனையாளர்களின் நீதமான தெரிவு, முழுமனித சமுதாயத்தினுள்ளும் ஒளிவீசும் ஏகமனதாக அங்கீகாரம் பெற்ற ஒரேயொரு மாமனிதர் விருது, தேர்ந்தெடுப்பது மேலானதாகட்டும், யார் யாரோ எந்தெந்தப் பாதைகளில் பயணமோ என 26 இயல்களின் ஊடாக

இஸ்லாமிய மத நம்பிக்கையின் முக்கியத்துவத்தை வெளிக்காட்டுவதாக இந் நூல் அமைகின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 46858).

### 12192

**முஹம்மத் (ஸல்) அவர்களின் தலைமைத்துவமும் முகாமைத்துவமும்.** மவ்லவி A.S.A.முத்தலிப். இப்பாகமுவ: மௌலவி முத்தலிப், Mujeeb Islamic Library, 56, ரத்மல்வத்த, பாங்கொல்ல வீதி, 1வது பதிப்பு, நவம்பர் 1998. (இப்பாகமுவ: ஷோபா கிராப்பிக்ஸ்).

(10), 105 பக்கம், விலை: ரூபா 60.00, அளவு: 20.5x14 சமீ.

இரண்டு பகுதிகளில் எழுதப்பெற்றுள்ள இந்நூலின் முதற் பகுதியில் முஹம்மத் அவர்களின் தனித்துவ மேம்பாடுகளை ஒப்பீடுகள் மற்றும் அறிஞர்களின் கருத்துக்களின் துணையோடு எடுத்தக்கூற முயல்கின்றார். இப்பிரிவில் புகழுக்குரிய இறைதூதர், முஹம்மத் எங்களைப் போன்ற ஒரு மனிதரா?, சர்வஞானக் களஞ்சியம், அரசியல்வானில் ஓர் உதயசூரியன், பக்தர்களும் எதிரிகளும், நபிமார்களின் போதனைகள் ஆன்மீக சிந்தனைகள், ஆராய்தல் தெளிதல், பின்பற்றுதல் ஆகிய தலைப்புகளில் இவை விபரிக்கப்பட்டுள்ளன. இரண்டாம் பிரிவில் முஹம்மத் அவர்களது தலைமைத்துவ முகாமைத்துவ நுட்பங்களை, முஹம்மத் அவர்களின் தலைமைத்துவ முகாமைத்துவ நுட்பங்கள், வழிமுறைகள், முன்மாதிரிகள் ஆகிய மூன்று தலைப்புகளில் விபரித்துள்ளார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 21063).

### 12193

**வெல்ஸுக்கோர் வெடிகுண்டு.** முஹம்மது ஸெயின். கொழும்பு 14: ஸெயின்ஸ்தான் டிரேடிங் கம்பெனி லிமிட்டெட், 703, சிரிமாவோ பண்டாரநாயக்க மாவத்தை, 1வது பதிப்பு, 1977. (கொழும்பு 3: த டயமண்ட் பிரின்டர்ஸ், 41, சென் மைக்கல் வீதி).

(4), 60 பக்கம், விலை: ரூபா 2.50, அளவு: 16x12 சமீ.

H.G.வெல்ஸ் (H. G. Wells, 21.09.1866-13.08.1946) ஒரு ஆங்கில எழுத்தாளர். புதினங்கள், வரலாறு, அரசியல், சமூக விமர்சனம் என்று பல்வகைப்பட்ட துறைகளில் எழுதிவந்தவர். அதில் "தி டைம் மெஷீன்" என்ற புதினம் காலப் பயணத்தில் சென்று வருவது பற்றி எழுதப்பட்டது. இந்த நாவல் அறிவியல் விந்தையாக அவரது காலத்தில் இருந்து இன்றுவரை பலரும் வியக்கும் விதத்தில் அமைந்துள்ளது. வெல்ஸ் எழுதிய மதம் சார்ந்த நூல்களுள் விமர்சனத்துக்குள்ளாகிய நூல் "கடவுள் கண்ணுக்கு தெரியாத அரசன்" (GOD THE INVISIBLE KING) என்பதாகும். 1917ஆம் ஆண்டு இந்த நூலை இவர் எழுதினர். இவருக்கு கடவுள் பற்றி எப்படி தெரியும் என்றும், எந்தக் கடவுளைப் பின்பற்றி இந்தப் புத்தகத்தை எழுதினர் என்றும் பல கேள்விகள் இதைப் படித்தவர்களுக்கு எழுந்தது. அதில் அவர் தனிப்பட்ட மற்றும் ஆத்மார்த்தமான கடவுள் பற்றிய கருத்தையும் வெளிப்

படுத்தி இருந்தார். இந்த நூலில் மதம் பற்றிய தெளிவான கருத்தாடல், குறிப்பாக இஸ்லாமிய மதத்தவரை எதிர்ப்புக்குரல் எழுப்ப வைத்தது. H.G.வெல்ஸ் அவர்களுக்கு பதிலளிக்கும் வகையில் மறுப்புக் கட்டுரையொன்றினை இங்கிலாந்தில் வெளியாகிவந்த Islamic Review என்ற சஞ்சிகை 1948இல் வெளியிட்டிருந்தது. இக்கட்டுரையை அடிப்படையாக வைத்து தமிழகத்திலிருந்து வெளிவரும் "தாருல் இஸ்லாம்" என்ற தமிழ்ச் சஞ்சிகை பின்னாளில் வெளியிட்ட கட்டுரையின் நூலுருவே இதுவாகும். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 2979).

### 12194

**ஸலவாத்துன் நபி.** எம்.ஏ.ஸெய்யித் முஹம்மத். காத்தான்குடி 3: ஸலவாத் மஜ்லிஸ், இஸ்மாயில் ஹாஜியார் ஒழுங்கை, 1வது பதிப்பு, ஜனவரி 1994. (மட்டக்களப்பு: ஆனந்தா அச்சகம்).

58 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் மீது கொண்டுள்ள அன்பை வெளிப்படுத்துவதற்கு அல்லாஹ் தந்துள்ள வழிமுறையாக ஸலவாத் ஓதல் இஸ்லாமியரிடையே கருதப்படுகின்றது. அதுதான் அவர்களுக்காக அல்லாஹ்விடம் அருளை வேண்டக் கூடிய ஸலவாத். இந்த நபிமொழி நமக்கு ஒரு உண்மையைத் தெளிவாக்குகின்றது. நபி(ஸல்) அவர்களைப் புகழ்கிறேன் என்று திருவிழாக்கள் கொண்டாடுவதோ, பாடல்கள் பாடிக் கொண்டிருப்பதோ நபி(ஸல்) அவர்களின் மீது நாம் கொண்ட அன்புக்கு சரியான அடையாளமாகாது. மாறாக அவர்களுக்காக அல்லாஹ்விடம் "ஸலவாத்" எனும் துஆவைச் செய்வதுதான் உண்மையான அன்பாகும் என்பதைக் கருத்திற்கொண்டு இந்நூலிலே ஸலவாத் ஓதும் பலாபலன்களை முதலில் விளக்கி, தீனுல் இஸ்லாம், றமழானின் மகத்துவம், புனித நோன்பு, பெருமானாரின் சிறப்புகள், முஹர்றத்தில் மிளிரும் ஆசூறா, தௌபா இறைஞ்சிய நபிஆதம் (அலை), தீக்கிடங்கில் நபி இப்றாகீம் (அலை), கடலிலே நடந்த நபிமூஸா (அலை), பிரளயத்தில் பிழைத்த நபிநூஹ் (அலை), மீன் வயிற்றிலிருந்து மீண்ட நபியூனுஸ் (அலை), கர்பலாவில் ஸஹீதாகிய இமாம் ஹுசைன் (றலி) ஆகிய அதிசயங்களை வியந்துபோற்றும் ஸலவாத்துக்களை ஆசிரியர் இந்நூல்வழியாக விளக்குகின்றார். இறுதி அத்தியாயமாக, ஸலவாத்தின் சிறப்பு என்ற கட்டுரையும் இந்நூலில் ஸலவாத் பற்றிய விளக்கமளிப்பதற்காகச் சேர்க்கப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 14753).

**மேலும் பார்க்க: 13A01,12002,12512,12853,12855,12856**

# 300 சமூக விஞ்ஞானங்கள்

## 301 சமூகவியல்

### 12195

**அறிவின் சமூகவியல் சிந்தனைகள்.** என்.சண்முகலிங்கன். தெல்லிப்பளை: நாகலிங்கம் நூலாலயம், நகுலகிரி, மயிலிட்டி தெற்கு, 1வது பதிப்பு, ஜுன் 2013. (யாழ்ப்பாணம்: கரிகணன் தனியார் நிறுவனம், இல. 424, காங்கேசன்துறை வீதி).

x, 108 பக்கம், விலை: ரூபா 390., அளவு: 20.5x15 சமீ., ISBN: 978-955-51560-1-1.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தரும், சமூக வியல்துறைப் பேராசிரியருமான என்.சண்முகலிங்கனின் இந்நூல் தமிழை அறிவியல் மொழியாக்குவதிலும், அறிவின் புதிய பரிமாணங்களை எட்டுவதிலும் வெற்றிகண்டுள்ளது. தமிழரின் அறிவுமுறையை உலகளாவிய நிலைக்கு இட்டுச்செல்வதும், உலகமயப்பட்ட அயலின அறிவுமுறையை நமக்கானதாகத் தன்வயப்படுத்தும் செயன்முறையும் நிகழ்ந்துகொண்டிருக்கும் இக்காலகட்டத்தில், அறிவின் சமூகவியலில் இத்தகைய உலகப் பொதுமைப்பாட்டையும் சுதேசிய சமூகங்களின் சுய அடையாளத்தையும் இணைத்தே அறியவேண்டியுள்ளது. பேராசிரியர் சண்முகலிங்கன் இந்நூலின் எட்டு இயல்களிலும் இவை பற்றி விவாதிக்கிறார். சமூக அறிவிற்கான ஊடக அறிவுக்கல்வி பற்றியும், அறிவின் அரசியல் பற்றியும், தாகூர் முன்வைத்த மனித முழுமைக்கான கல்வி பற்றியும், அறிவின் வழியான சமூக மேம்பாடு பற்றியும் அதன் சாதனைகள், சவால்கள் பற்றியும் ஆராய்ந்துள்ளார். இன்று புவியியல் காலனியவாதம் போய் கலாச்சாரக் காலனியவாதம் முக்கியத்துவம் பெறுகின்றது. இதில் தாராளமயம், தனியார்மயம், உலகமயம் ஆகிய மூன்றும் வேகமாக நம்மைச் சூழ்ந்துவருகின்றன. இவற்றின் பிடியிலிருந்து ஒவ்வொரு சமூகமும் நிலைபெற வேண்டுமானால் அது சுதேசியத் தன்மையுடனும் தற்சார்புத் தன்மையுடனும் அசைவியக்கம் பெறவேண்டும் என்ற சிந்தனைத்தளத்தை இந்நூல் முன்வைக்கின்றது. இவை அனைத்தும் நிலைபேறான மேம்பாட்டிற்கான சுதேச அறிவு, அறிதலின் முறையியல், அறிவொளியின் வரம்புகள், அறிவின் அரசியல், அறிவின் வழியான சமூக மேம்பாடு, சமூக மேம்பாட்டுக்கான ஊடக அறிவுக்கல்வி, பிள்ளை மனங்களை புரிவதற்கான அறிவு, தாகூரின் மனித முழுமைக்கான கல்வி ஆகிய எட்டு இயல்களில் எழுதப் பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 54058).

## 12196

**சமாதானத்தின் மகிமை.** ஜெயதேவ உயன்கொட, அனுஷா தல்பாவெல (ஆங்கில மூல தொகுப்பாசிரியர்கள்), அ.ஜெயரத்தினம் (தமிழாக்கம்). கொழும்பு 7: நீலன் திருச்செல்வம் நம்பிக்கையாளர் நிறுவனம், 108/1, ரோஸ்மீட் பிளேஸ், இணை வெளியீட்டாளர், கொழும்பு 8: இனத்துவ ஆய்வுகளுக்கான சர்வதேச நிலையம், இல. 2, கின்சி ரெறஸ், 1வது பதிப்பு, 1999. (கொழும்பு 13: ஈ-குவாலிட்டி கிராப்பிக்ஸ், 315, ஜம்பெட்டா வீதி).

x, 111 பக்கம், புகைப்படம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14.5 சமீ.

புத்த மதமும் அகிம்சையும் (கென்னத் கிராப்ட்), புத்த பகவானின் போதனைகளும் இன்றைய உலகும் (வண.வல்பொல ராகுலர்), அகிம்சைப் போராட்டம் ஒரு செயற்திறன் மிக்க மாற்றுவழி (யீன் சார்ப்), அகிம்சை (மகாத்மா காந்தி), கம்போடியாவில் சமாதானத்தை நோக்கிய மெதுவான பயணம் (வண.கிம் டெங் நெம்), சமாதானத்தை அறிந்து கொள்ளுதல் (எலிஸ் போல்டிங்), முரண்பாட்டுக்குப் பிந்திய சமாதான உருவாக்கம் (பூட்ரஸ் பூட்ரஸ் காலி), மீள் நல்லிணக்கம்: உறவைக் கட்டிவளர்த்தல் (ஜோன் போல் லெடராக்), அகிம்சை பற்றிய ஒரு கட்டுரை (திலீப் சிமியோன்), சமாதானமும் வாழ்வின் புனிதமும் (நீலன் திருச்செல்வம்) ஆகிய கட்டுரைகளின் தொகுப்பு இது. இலங்கையில் முன்னணி சமாதான மற்றும் மனித உரிமைகள் செயற்பாட்டாளரான நீலன் திருச்செல்வத்தின் நினைவாக இந்நூல் வெளிவந்துள்ளது. நீலன் திருச்செல்வம் (ஜனவரி 31, 1944- ஜுலை 29, 1999) ஒரு மிதவாத, ஆற்றல் மிகுந்த, அரச சட்டமைப்பு பற்றிய புலமைமிக்க, சர்வதேச மதிப்பினைப் பெற்ற இலங்கைத் தமிழ் அரசியல்வாதியாவார். இவரே இலங்கையில் கொள்கை பற்றிய முன்னணி ஆய்வு நிறுவன அமைப்புகளின் (Centre for Ethnic Studies, Law Society Trust) அமைப்பாளர்களில் ஒருவராக இருந்தவர். நீலன் திருச்செல்வம் ஜூலை 29, 1999 அன்று அடையாளம் காணப்படாத தற்கொலைக் குண்டுதாரி ஒருவரால் படுகொலை செய்யப்பட்டார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 39486. நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தின் சேர்க்கை இலக்கம் 018989).

## 12197

**ந.சி.க.முகவுரைகள்.** ந.சி.கந்தையாபிள்ளை (மூலம்), கி.குணத்தொகையன் (தொகுப்பாசிரியர்). சென்னை 601302: பஃறுளி பதிப்பகம், 1/561, பாவலரேறு தெரு, பாவாணர் நகர், மேடவாக்கம், 1வது பதிப்பு, 2004. (சென்னை 6: வெங்கடேசுவரா ஆப்செட் பிரிண்டர்ஸ், ஆயிரம் விளக்கு).

vi, 90 பக்கம், விலை: இந்திய ரூபா 60., அளவு: 21.5x14 சமீ.

ஈழத்தமிழறிஞர் ந.சி.கந்தையாபிள்ளை அவர்கள் எழுதிய 60 நூல்களின் முன்னுரைகளைத் தொகுத்து இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது. இதில் பதிற்றுப்பத்து வசனம், பத்துப்பாட்டு உரைநடை, பரிபாடல் உரை, கலித்தொகை உரை, அகநானூறு வசனம், புறப்பொருள் விளக்கம், கலிங்கத்துப் பரணி வசனம்,

விறலிவிடு தூது வசனம், பெண்கள் புரட்சி, பெண்களும் சமூகமும் அன்றும் இன்றும், பெண்கள் உலகம், உங்களுக்குத் தெரியுமா? பொது அறிவு, பொது அறிவு வினா-விடை, நூலகங்கள், அறிவுக் கட்டுரைகள், அறிவுரை மாலை, அறிவுரைக் கோவை, தமிழர் சமயம் எது?, சைவ சமய வரலாறு, இந்து சமய வரலாறு, சிவன், தமிழர் பண்பாடு, தமிழ்-பழமையும் புதுமையும், முச்சங்கம், நமது தாய்மொழி, திராவிட மொழிகளும் இந்தியும், நமது மொழி, நமது நாடு, ஆரியர் தமிழர் கலப்பு, ஆரியத்தால் விளைந்த கேடு, புரோகிதர் ஆட்சி, இராமாயணம் நடந்த கதையா?, ஆரியவேதங்கள், தமிழ்க் கடவுளுக்கு ஆரியப் பாடலா?, திராவிட நாகரீகம், திராவிடம் என்றால் என்ன?, மறைந்த நாகரிகங்கள், திராவிட இந்தியா, பாம்பு வணக்கம், ஆதி மனிதன், ஆதி உயிர்கள், மரணத்தின் பின், மனிதன் எப்படித் தோன்றினான்?, தமிழர் யார், சிந்துவெளித் தமிழர், உலக நாகரிகத்தில் தமிழர் பங்கு, தென்னிந்திய குலங்களும் குடிகளும், தமிழர் சரித்திரம், வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட பழந்தமிழர், திருவள்ளுவர், திருக்குறள், திருக்குறள் அகராதி, தமிழ்ப் புலவர் அகராதி, தமிழ் இலக்கிய அகராதி, காலக்குறிப்பு அகராதி, அகத்தியர், தமிழ் ஆராய்ச்சி, நீதிநெறி விளக்கம் ஆகிய நூல்களின் முன்னுரைகளும் தமிழ் சான்றோரின் மதிப்புரைகள் என்ற இறுதி இயலில் மா.இராசமாணிக்கம், நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர், கே.சுப்பிரமணிய பிள்ளை ஆகியோரின் மதிப்புரைகளும் இந்நூலில் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

### 12198

**நிதானமான சமூகத்தை நோக்கி.** *சிறி ஹெட்டிகே (ஆங்கில மூலம்), சோ. சந்திரசேகரன், மா.கருணாநிதி (தமிழாக்கம்). கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு 2017. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).*

xxii, *312 பக்கம், விலை: ரூபா 900., அளவு: 21.5*x*14.5 சமீ.,* ISBN: *978-955-659-550-5.*

பேராசிரியர் சிறிபால ஹெட்டிகே கொழும்புப் பல்கலைக்கழகத்தின் சமூகவியல் துறையில் மூத்த பேராசிரியராகவும் பொலீஸ் ஆணைக்குழுவின் தலைவராகவும் பணியாற்றி ஓய்வுபெற்றவர். இவர் எழுதிய Towards a Sane Society என்ற நூலின் தமிழாக்கம் இதுவாகும். சிறி ஹெட்டிகே ஏப்ரல் 2013 முதல் 2014 வரையிலான காலப்பகுதிகளில் டெய்லி மிரர் பத்திரிகையில் எழுதிய கட்டுரைகளின் தேர்ந்த தொகுப்பே இதுவாகும். உலகளாவிய சூழலமைப்பு (6 கட்டுரைகள்), அபிவிருத்தி (9 கட்டுரைகள்), ஆளுகை (11 கட்டுரைகள்), சமூக நலனளிப்பு (9 கட்டுரைகள்), இனத்துவ சமய மோதல்கள் (9 கட்டுரைகள்), இளைஞர் (2 கட்டுரைகள்), கல்வி (7 கட்டுரைகள்), சுகாதாரம் (5 கட்டுரைகள்), சுற்றாடல் (5 கட்டுரைகள்), போக்குவரத்து (3 கட்டுரைகள்) ஆகிய பத்துத் தலைப்புகளில் 66 கட்டுரைகள் வகுத்துத் தரப்பட்டுள்ளன.

## 12199

**பட்டம்: சனத்தொகையும் குடும்பநலக் கல்வியும் செயற்றிட்டம்.** *மித்தா வீரக்கொடி (மூலம்), M.H.M.யாக்கூத் (தமிழாக்கம்). மகரகம: சனத்தொகையும் குடும்பநலக் கல்வியும் செயற்றிட்டம், தேசிய கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1996. (தெகிவளை: ஏ.ஜே.பிரின்ட்).*

*iv, 154 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.*

*ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியத்தின் அநுசரணையுடன் மேற்கொள்ளப்பட்ட சனத்தொகையும் குடும்பநலக் கல்வியும் செயற்றிட்டம் தொடர்பான நூல் இதுவாகும். இளைய வயதினரின் நடத்தைகளை சீராக வழிநடத்திக்கொள்ளும் வகையில் உருவாக்கப்பட்டது. பிள்ளைகளின் வளர்ச்சி, பாலியல் கல்வி ஆகியன பற்றி இங்கு பேசப்படுகின்றது. நடத்தை உருவாக்கத்தில் இடம்பெறவேண்டிய அம்சங்கள் இந்நூலில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அவை பொருத்தமான பாத்திர வார்ப்புக்களினூடாக விளக்கச் சித்திரங்களுடன் முன்வைக்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 31788).*

## 12200

**யாழ்ப்பாணச் சமூகத்தை விளங்கிக்கொள்ளல்: அதன் உருவாக்கம், இயல்பு, அசைவியக்கம் பற்றிய ஒரு பிராரம்ப உசாவல்.** *கார்த்திகேசு சிவத்தம்பி. கொழும்பு 5: தர்சனா பிரசுரம், 81, ஹவ்லொக் வீதி, 1வது பதிப்பு, 1993. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).*

*36 பக்கம், விலை: ரூபா 50., அளவு: 20x14.5 சமீ.*

*1992 ஜூன் 2 அன்று காலஞ்சென்ற பேராசிரியர் சோ.செல்வநாயகம் அவர்களின் நினைவுதினப் பேருரையாக ஆற்றப்பட்ட உரையின் திருத்திய வடிவம் இதுவாகும். இச்சிறு ஆய்வு, (i). யாழ்ப்பாணத்தின் சமூகத்தை இனங்கண்டுகொள்ளல், (ii). யாழ்ப்பாணச் சமூகத்தின் உருவாக்கம், நிலைபேறு, தொடர்ச்சியின் சின்னமாகத் தேசவழமைச் சட்டம் அமையுமாறு, (iii). யாழ்ப்பாணச் சமூகத்தின் இயல்புகள் சிலவற்றினை நோக்கல், (iv). இச்சமூகத்தின் பண்பாடும் கருத்து நிலையும். (v). இச்சமூகத்தின் சமகால அசைவியக்கத்தின் தன்மைகள் சில. (vi). நிறைவுரை ஆகிய ஆறு உப தலைப்புகளில் விரிகின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 21432. நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தின் சேர்க்கை இலக்கம் 004688).*

## 12201

**ஸ்பியர் திட்டம்: மனிதநேய சாசனமும் மனிதநேய மறுசீரமைப்பின் அடிப்படைத் தராங்களும்.** *மனிதநேய அமைப்புக்களின் கூட்டமைப்பு. கொழும்பு 7: மனிதநேய அமைப்புக்களின் கூட்டமைப்பு, இல. 86, றொஸ்மீட் பிளேஸ், 3வது பதிப்பு, 2011, 1வது பதிப்பு, 2000, 2வது பதிப்பு, 2004. (அச்சக விபரம் தரப்படவில்லை).*

vi, *441 பக்கம், அட்டவணைகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21*x*15 சமீ.*, ISBN: *978-955-1041-46-5.*

*பல மனிதநேய அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் செஞ்சிலுவைச் சங்கங்களினால் 1997ஆம் ஆண்டு ஸ்பியர் (*Sphere*) திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்பில் உலக சமுதாயம் பிரதிபலிக்க வேண்டிய தரங்களை வரையறுப்பதற்கும் மற்றும் தீர்மானிப்பதற்குமான ஒரு முயற்சியாக ஸ்பியர் திட்டம் காணப்படுகின்றது. இந்தக் கையேட்டின் மூலம், அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட அனைத்து மக்களும் தமது வாழ்க்கையையும், வாழ்வாதாரங்களையும் மீளக்கட்டியெழுப்புவதற்கான உரிமை அங்கீகரிக்கப்பட்டும், அவர்களின் குரல் மதிக்கப்பட்டும், அவர்களுடைய கௌரவமும் பாதுகாப்பும் மேம்படுத்தப்படும் வகையில் செயற்படும் ஓர் உலகத்தை உருவாக்கும் நோக்குடன் செயற்பட முயற்சிக்கப்படுகின்றது. இக்கையேட்டில் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் உரிமைகளைப் பிரதிபலிக்கும் சட்ட மற்றும் ஒழுக்கக் கோட்பாடுகள்-மனிதநேய சாசனமாக ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. பாதுகாப்புக் கோட்பாடுகள், நான்கு பிரதான வாழ்க்கையைக் காப்பாற்றும் மனிதநேயத் துறைகளில் மிக முக்கியமான தரங்கள் மற்றும் அடிப்படைத் தரங்கள் (நீர் விநியோகம், தேகாரோக்கியம் மற்றும் போஷாக்கு மேம்பாடு: உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கு: உறைவிடம், குடியிருப்பு மற்றும் உணவல்லாத விடயங்கள்: சுகாதார நடவடிக்கை என்பன) பற்றிய முன்மொழிவுகள் இடம்பெற்றுள்ளன.*

**மேலும் பார்க்க: 12187,12319**

## 301.01 சமூகவியல்சார்ந்த பாடநூல்கள்

### 12202

**சமூகக் கல்வி: 10ஆம் ஆண்டு.** *ஹயசிந்த் தஹநாயக்க, எம்.சீ. த சில்வா, பத்மினீ என்.பெரேரா, ரஞ்சினி சேனாநாயக்க (பதிப்பாசிரியர்கள்), எம்.எம்.றாசீக், திருமதி பீ.சிவகுமாரன், எம்.எச்.எம்.ஹசன் (தமிழாக்கம்). கொழும்பு 10: கல்வி வெளியீட்டுத் திணைக்களம், 6வது பதிப்பு, 1992, 1வது பதிப்பு, 1986. (அம்பலாங்கொடை: மஹிந்த பிரின்டர்ஸ், இல. 341 அல்பிட்டிய வீதி, வத்துகெதர).*

vii, *147 பக்கம், விளக்கப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21*x*14 சமீ.*

*பத்தாம் தரத்திற்கான புதிய பாடத்திட்டத்துக்கமைய எழுதப்பட்ட சமூகக் கல்வி சார்ந்த நூல். உலகின் பௌதிகச் சூழல், காலநிலை மூலகங்களும் காலநிலையைக் கட்டுப்படுத்தும் காரணிகளும், காலநிலை வகைகளும் இயற்கைத் தாவரங்களும், கனிய வளம், தொழினுட்பமும் விவசாயமும், தொழினுட்பமும் கைத்தொழிலும், மனித செயற்பாடுகளும் உலகின் பல்வேறு பிரதேசங்களும், சர்வதேச வியாபாரம், உலக நாடுகள் ஒன்றிலொன்று தங்கியிருத்தல், ஆட்சி முறைகள், உலக உணவுப் பிரச்சினை, உலக சனத்தொகைப் பிரச்சினை, உலகின் சக்தி நெருக்கடி, சூழல் மாசுபடுதல், மனித உரிமைகளைப் பாதுகாத்தல் ஆகிய பாடப்பரப்புகளை இந்*

நூலின் 15 இயல்களும் தனித்தனியாக விபரிக்கின்றன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 17691).

### 12203

**சமூகக் கல்வி: 11ஆம் ஆண்டு.** எம்.சீ. த சில்வா, பத்மினீ என்.பெரேரா, ரஞ்சினி சேனாநாயக்க (பதிப்பாசிரியர்கள்), ஐ.தம்பிமுத்து (மொழிபெயர்ப்பாளர்). கொழும்பு 10: கல்வி வெளியீட்டுத் திணைக்களம், 6வது பதிப்பு, 1992, 1வது பதிப்பு, 1987. (அம்பலாங்கொடை: மஹிந்த பிரின்டர்ஸ், இல. 341 அல்பிட்டிய வீதி, வத்துகெதர).

vii, 144 பக்கம், வரைபடங்கள், அட்டவணைகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x14 சமீ.

பதினொராம் தரத்திற்கான புதிய பாடத்திட்டத்துக்கமைய எழுதப்பட்ட சமூகக் கல்வி சார்ந்த நூல். வளங்கள், பொருளாதார முறைகள், அபிவிருத்தி, அபிவிருத்தி யடைந்த நாடுகளினதும் அபிவிருத்தி அடைந்து வருகின்ற நாடுகளினதும் பின்னணி, அபிவிருத்தி சம்பந்தமான பிரச்சினைகள், அபிவிருத்திக்குரிய வழிவகைகள், சர்வதேசத் தாபனங்கள், அபிவிருத்தியடைந்துவரும் இலங்கை, இலங்கையின் அபிவிருத்தியின் புதிய போக்கு, மனித உரிமைகளைப் பாதுகாத்தல் ஆகிய 10 பாடங்களுக்கான அத்தியாயங்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 17688).

### 12204

**சமூகக் கல்வியும் வரலாறும்: 7ஆம் தரம்.** ஆசிரியர் குழு. கொழும்பு: தேசிய கல்வி நிறுவகம், கல்வி வெளியீட்டுத் திணைக்களம், 1வது பதிப்பு, 1999. (கொழும்பு 15: கலர் பிரின்ட்ஸ், இல. 712, புளூமெண்டால் வீதி).

viii, 72 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x17.5 சமீ.

எமது பாடசாலை, எமது நாட்டின் புவியியல் சுற்றாடலும் ஆரம்பக் குடியேற்றங் களும், ஆரம்பக் குடியேற்ற வாசிகளின் நிர்வாகம், இலங்கையின் உணவுப் பயிர்களும் வாழ்வாதாரத் தொழில்களும், பௌத்த சமயம் இலங்கையில் அறிமுகம் செய்யப்படல், எமது நாட்டு மக்கள் ஆகிய ஆறு பாடப் பரப்புக்கள் இந்நூலில் விளக்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 40274).

### 12205

**சமூகக் கல்வியும் வரலாறும்: 11ஆம் தரம்.** ஆசிரியர் குழு. கொழும்பு: தேசிய கல்வி நிறுவகம், கல்வி வெளியீட்டுத் திணைக்களம், இசுறுபாயா, பத்தரமுல்ல, 1வது பதிப்பு, 2000. (கொழும்பு: அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்).

viii, 177 பக்கம், சித்திரங்கள், விளக்கப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x18 சமீ.

சர்வதேச வர்த்தகமும் சர்வதேச ஒத்துழைப்பும், சர்வதேச அமைப்புகள், உலகில் ஏற்பட்டுவரும் பிரச்சினைகள், சனநாயகம், இலங்கையில் தற்போது நடைமுறையில் உள்ள அரசியல் யாப்பு, தேசப்படக் கல்வி ஆகிய ஆறு அத்தியாயங்களில் இந் நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 27422).

### 12206

**மாணவர் சூழல் வாசகம்: இரண்டாம் வகுப்பு.** க.சி.குலரத்தினம். யாழ்ப்பாணம்: ஆறுமுகம் சுப்பிரமணியம், ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை, 235, காங்கேசன்துறை வீதி, 2வது பதிப்பு, 1972, 1வது பதிப்பு விபரம் தரப்படவில்லை. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சுப்பிரமணிய அச்சகம், 400, காங்கேசன்துறை வீதி).

(6), 110 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 1.50, அளவு: 19.5x16 சமீ.

சூழல் பாடம், சமூகக் கலை, சமுதாய பாடம் ஆகிய பெயர்களுடைய பாடத்தைக் கற்பதன்மூலம் மாணவர்கள் தமது சுற்றாடலை, நன்கு அறிந்துகொள்கின்றனர். இந்நூல் ஒரு இரண்டாம் வகுப்பு மாணவனின் அறிவு விருத்திக்கு ஏற்ப அடிப்படை சமூகவியல் அறிவை வழங்குகின்றது. வித்தியா பகுதியாரின் புதிய பாடவிதானத்திற்கு அமைய எழுதப்பட்டுக் கல்வி அமைச்சின் 178ஆம் இலக்கச் சுற்றுநிருபத்துக்கு அமையத் திருத்தி எழுதப்பட்டது. எங்கள்நாடு, தமிழர், சிங்களவர், முஸ்லீம்கள், வேடர், இந்தியத் தமிழர், எஸ்கிமோஸ் சாதியினர், செவ்விந்தியர், பிக்மீஸ் சாதியினர், அராபியர், சுவிட்சர்லாந்து மக்கள், யப்பானியர், அமெரிக்கர் ஐரோப்பியர், தொழில்கள், கமஞ்செய்வோர், உழவர் வாழ்க, மட்பாண்டஞ் செய்வோர், மரவேலை செய்வோர், இரும்புவேலை செய்வோர், வியாபாரஞ் செய்வோர், மீன்பிடிப்போர், ஆசிரியர், வைத்தியர், பொலிசுக்காரர், தபாற்காரர், எமது வீடு, எழுத்தின் கதை, நெருப்பின் கதை, வண்டி வாகனம், நமது ஆடைகள், இலங்கையின் பழைய நகரங்கள், நாகரீகம் வாய்ந்த நாடுகள், எங்கள் அரசாங்கம், நல்ல பிள்ளை, மரியாதைப் பழக்கம், நல்லன செய், நல்ல பழக்கம், நல்ல ஒழுக்கம், சுகாதாரப் பழக்கம், சகவாழ்வு, தேகாப்பியாசமும் நித்திரையும், குதிரை, கழுதை, எருமை, யானை, அணில், வௌவால், ஆந்தை, மரங்கொத்தி, வாத்து, மீன்கொத்திக் குருவி, வண்ணாத்திப் பூச்சி, தேனீக்கள், இயற்கையின் அற்புதம், பாட்டுப்பாடுவோம், தாவரம், மாமரம், பலாமரம், நீரில் உண்டாகும் கொடிகள் ஆகிய தலைப்புகளில் பாடங்கள் ஒன்பது தொகுதிகளாகப் பிரித்துத் தரப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 2254).

## 301.05 சமூகவியல் சார்ந்த ஆய்விதழ்கள்/சிறப்பு மலர்கள்

### 12207

**நித்திய கல்யாணி: இளவாலை இந்து இளைஞர் சனசமூக நிலைய பொன்விழா மலர் 1952-2002.** மலர்க்குழு. இளவாலை: இந்து இளைஞர் சனசமூக நிலையம், 1வது பதிப்பு, ஒக்டோபர் 2003. (அச்சக விபரம் தரப்படவில்லை).

xxiv, 77 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 29x20.5 சமீ.

வாழ்த்துரைகள், அறிக்கைகள், மன்ற நிகழ்வுப் புகைப்படங்கள் ஆகியவற்றுடன், நுண்மதி பாலர் பாடசாலை (சரஸ்வதி ஆறுமுகம்), முன்பள்ளியின் முக்கியத்துவம் (ச.நிர்மலநாயகி), ஒல்லுடை அறநெறிப் பாடசாலை (இராசேந்திரம் இசைச்செல்வி), மாதர் அபிவிருத்தி நிலையப் பயிற்சி நெறி (இராசேந்திரம் திருச்செல்வி), சமூக மட்ட நிறுவனங்களில் இளைஞர்களின் பங்கை மேம்படுத்துதல் (நாகலிங்கம் மகேந்திரன்), சனசமூக நிலைய பொது நூலக முகாமைத்துவத்தில் நவீன அபிவிருத்திப் பிரயோகங்கள் (பாலசுப்பிரமணியம் தனபாலன்), மக்கள் பங்களிப்புடன் செயற்றிட்டங்களை இனங்காணலும் அமுல்நடத்தலும் (ஐ. சிவலோகநாதன்), சமூக மேம்பாட்டிற்கு சனசமூக நிலையத்தின் பங்களிப்பு (குணரட்னம் கஜரூபனா), அம்மையார் செய்த புரட்சி (த.தயானந்தன்), அம்மையார் செய்த புரட்சி (த.தயானந்தன்), மயிலங்கூடலில் சைவச்சான்றோர் சங்கமம் (சி. அப்புத்துரை), உங்களுக்குத் தெரியுமா? மலரும் நிறமும் (சுகந்தா கிருபானந்தராசா), கண்டதும் கேட்டதும் (செ.பாலச்சந்திரன்), Communication (Prabashini Balasingam), இளவாலைச் சைவாலயங்கள் (யோகநாயகி சண்முகநாதன்), சமயமும் கல்வியும் (செல்லத்துரை ஈஸ்வரன்), புலம்பெயர்ந்த தமிழர்களின் வாழ்வு (க.அருந்தவராஜா), ஞானத்தின் மிக்கார் நரரின் மிக்காரே (சுந்தரலிங்கம் கிஷோகுமார்), கல்வியினூடாக விருத்தி செய்யப்பட வேண்டுவன (சுகந்தா கிருபானந்தராசா), கல்வியின் முக்கியத்துவம் (சுப்பிரமணியம் கந்ததர்சினி), சைவத்தமிழ்ப் பண்பு (செல்லத்துரை மாவிரதன்), எண்கோலம் (சுகந்தா கிருபானந்தராசா), ஷேக்ஸ்பியரின் நாடகங்கள் ஒரு பார்வை (மா.அருள்சந்திரன்) ஆகிய படைப்பாக்கங்களும், முத்து விஜயராகவன், செல்லத்துரை நாவரசன், பாரதிதாசன், திருநாவுக்கரசு பகீரதி, சண்முகலிங்கம் முகுந்தன், தே.விக்கினேஸ்வரன் ஆகியோரின் கவிதையாக்கங்களும் இடம் பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 33035. நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தின் சேர்க்கை இலக்கம் 008683).

### 12208

**பிரவாதம் இதழ்எண் 5: ஏப்ரல் 2011.** க.சண்முகலிங்கம் (ஆசிரியர்). கொழும்பு 5: சமூக விஞ்ஞானிகள் சங்கம், 12, சுலைமான் ரெறஸ், 1வது பதிப்பு, ஏப்ரல் 2011. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

128 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 21x14.5 சமீ., ISSN: 1391-7269.

கொழும்பு, சமூக விஞ்ஞானிகள் சங்கத்தின் ஆய்வேடாக ஜனவரி 2002 முதல் வருடமிருமுறை வெளிவந்த "பிரவாதம்" இதழ் சிலகாலம் தடைப்பட்டிருந்து மீண்டும் 2005இல் நான்காவது இதழாக வெளிவந்தது. மீண்டும் ஆறு ஆண்டு இடைவேளையின் பின்னர் ஏப்ரல் 2011 முதல் தொடரும் இவ்விதழின் ஐந்தாவது இதழ் இது. ஆசிரியர் குழுவில் எம்.ஏ.நுஃமான், செல்வி திருச்சந்திரன், என். சண்முகரத்தினம், சித்திரலேகா மௌனகுரு ஆகியோர் பணியாற்றினர். வரலாறும்

வரலாறு எழுத்தியலும் (க.சண்முகலிங்கம்), வரலாற்றின் உருவாக்கத்தில் சமூகமும் தனிநபரும் (ஈ.எச்.கார்), வரலாற்று ஆசிரியரும் வரலாற்று ஆதாரங்களும்: ஈ.எச். கார் நோக்கில் அனுபவவாதமும் அகவாதமும் (க.சண்முகலிங்கம்), சமூக வரலாறும் வரலாற்றில் தனிநபரின் வகிபாகமும் (ரிச்சர்ட் ஜே.இவன்ஸ்), வரலாறு என்றால் என்ன? (ஆ.இரா.வேங்கடாசலபதி), வரலாறுகளும் அடையாளங்களும் (ரொமிலா தாப்பர்), முதிர்ச்சியுறாத கிளர்ச்சியாளர்கள் (குமாரி ஜெயவர்த்தன), இந்திய நிலமானிய முறை (ஆர்.எஸ்.சர்மா), நூல் அறிமுகம் (சனங்களும் வரலாறும், Early Historic Tamil Nadu), அஞ்சலி: பேராசிரியர் லெஸ்லி குணவர்த்தன ஆகிய ஆக்கங்கள் இவ்விதழில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 51623).

### 12209

**பிரவாதம் இதழ்எண் 6: ஜுலை 2011.** க.சண்முகலிங்கம் (ஆசிரியர்). கொழும்பு 5: சமூக விஞ்ஞானிகள் சங்கம், 12, சுலைமான் ரெறஸ், 1வது பதிப்பு, ஜனவரி 2012. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

v, 120 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 21.5x14.5 சமீ., ISSN: 1391-7269.

பிரவாதம் ஆறாவது இதழின் கட்டுரைகளாக "ஆராய்ச்சி முறையியல்" (ஜெயதேவ உயன்கொட), "சமூக விஞ்ஞான ஆராய்ச்சி முறையியல்: நேர்க்காட்சிவாதமும், மக்ஸ்வெபரின் விளக்கமுறைச் சமூகவியலும்" (க.சண்முகலிங்கம்), "விஞ்ஞானத்தின் மெய்யியல்: கால் பொப்பரும் தோமஸ் கூனும்" (சோ.கிருஷ்ணராஜா), "பூர்வகாலத் தமிழ்நாட்டில் அரசமைப்பு உருவாக்கம்" (கா.சிவத்தம்பி), "உயிர்ப்பு நிலை: பேராசிரியர் சிவத்தம்பி கண்டறிந்த தமிழ்க் கல்வி" (வீ.அரசு), "நூல் அறிமுகம் Writing Research Proposals in the Social Sciences and Humanities", "அஞ்சலி -பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி" ஆகிய ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன. இவ்விதழின் ஆசிரியர் குழுவில் எம்.ஏ.நுஃமான், செல்வி திருச்சந்திரன், என்.சண்முகரத்தினம், சித்திரலேகா மௌனகுரு ஆகியோர் பணியாற்றியுள்ளனர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 51630).

### 12210

**பிரவாதம் இதழ்எண் 7: ஒக்டோபர் 2011.** க.சண்முகலிங்கம் (ஆசிரியர்). கொழும்பு 5: சமூக விஞ்ஞானிகள் சங்கம், 12, சுலைமான் ரெறஸ், 1வது பதிப்பு, ஒக்டோபர் 2011. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

122 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 21.5x14.5 சமீ., ISSN: 1391-7269.

மீண்டும் ஒரு இடைவேளையின் பின்னர் 5ஆவது இதழிலிருந்து (ஏப்ரல் 2011) தொடரும் பிரவாதம் சமூக ஆய்வேட்டின் ஏழாவது இதழ் இது. ஆசிரியர் குழுவில் எம்.ஏ.நுஃமான், செல்வி திருச்சந்திரன், என்.சண்முகரத்தினம், சித்திரலேகா மௌனகுரு ஆகியோர் பணியாற்றினர். கொழும்புத் தமிழ் முதலாளித்துவத்தின் உருவாக்கம் (குமாரி ஜயவர்த்தனா), சார்பு மண்டல முதலாளித்துவமும் பழைய உற்பத்தி உறவுகளை மீள உயிர்ப்பித்தலும் (நியூடன் குணசிங்க), இலங்கையின் கிராமப்புறங்களில் அரசியலும் மாற்றமும் பற்றிய ஆய்வு: ஜொனதன் ஸ்பென்சரின்

நூலின் அறிமுகம் (க.சண்முகலிங்கம்), நூல் அறிமுகம்: இலங்கையில் இனத்துவமும் சமூக மாற்றமும் (ஹரன்), அஞ்சலி: ஆர்.எஸ்.சர்மா 1920-2011 (ரோமிலா தாப்பர், சுவீரா ஜயஸ்வால், டி.என்.ஜா) ஆகிய ஆக்கங்கள் இவ்விதழில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 59847).

**12211**

**பிரவாதம் இதழ்எண் 8: ஜனவரி 2012.** க.சண்முகலிங்கம் (ஆசிரியர்). கொழும்பு 5: சமூக விஞ்ஞானிகள் சங்கம், 12, சுலைமான் ரெறஸ், 1வது பதிப்பு, ஜனவரி 2012. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

133 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 22x15 சமீ., ISSN: 1391-7269.

இவ்விதழின் ஆசிரியர் குழுவில் எம்.ஏ.நுஃமான், செல்வி திருச்சந்திரன், என். சண்முகரத்தினம், சித்திரலேகா மௌனகுரு ஆகியோர் பணியாற்றியுள்ளனர். கனடாவில் பன்மைப் பண்பாட்டுவாதம் (அலெய்ன் ஜி.கக்நொன் மற்றும் றிச்சர்ட் சிமியோன்), பெல்ஜியத்தின் சமஷ்டிமுறை ஆட்சி: அதன் அடிப்படைகளும், குறைநிறைகளும் (கெல்லி பிறியன்), சமஷ்டி, சோஷலிசம், இனக்குழுமம்: சோவியத் யூனியனதும் யூகோசிலாவியாவினதும் அனுபவங்கள் (ஜயதேவ உயன்கொட), இலங்கையில் போருக்குப் பிந்திய பொருளாதார அபிவிருத்தியும் இராணுவமயமாக்கலும் (தாரிணி இராஜசிங்கம் சேனநாயக்க), நூல் அறிமுகம் - Power Sharing: The International Experience (க.சண்முகலிங்கம்) ஆகிய கட்டுரைகள் இவ்விதழில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 53765).

**12212**

**பிரவாதம் இதழ்எண் 9-10: மே-செப்டெம்பர் 2012.** க.சண்முகலிங்கம் (ஆசிரியர்). கொழும்பு 5: சமூக விஞ்ஞானிகள் சங்கம், 12, சுலைமான் ரெறஸ், 1வது பதிப்பு, செப்டெம்பர் 2012. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

147 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 21.5x14.5 சமீ., ISSN: 1391-7269.

இவ்விதழின் ஆசிரியர் குழுவில் எம்.ஏ.நுஃமான், செல்வி திருச்சந்திரன், என். சண்முகரத்தினம், சித்திரலேகா மௌனகுரு ஆகியோர் பணியாற்றியுள்ளனர். இவ்விதழில் இலங்கையில் பின்காலனித்துவ அரசு: மாற்றத்தின் வழித்தடங்கள் (ஜயதேவ உயங்கொட), அந்தொனியோ கிராம்ஸ்கி: ஒரு சுருக்க அறிமுகம் (நியூட்டன் குணசிங்க), அரசியல் மூலதனமும் குடும்ப சாம்ராஜ்ஜிய அரசியலும் (குமாரி ஜயவர்த்தன), தமிழில் கலைச்சொல் பேரகராதி (உலோ. செந்தமிழ்க் கோதை), நூல் அறிமுகம்: அடம் ஸ்மித் முதல் கார்ள் மார்க்ஸ் வரை: செவ்வியல் அரசியல் பொருளாதாரம் ஆகிய ஆக்கங்கள் இவ்விதழில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 59882).

**மேலும் பார்க்க: 12832**

## 301.1 பண்பாடு

### 12213

**ஒன்றே உலகம்.** தனிநாயக அடிகள். சென்னை 1: பாரி நிலையம், 59. பிராட்வே, 1வது பதிப்பு, மார்ச் 1966. (சென்னை 5: ஜீவன் பிரஸ்).

viii, 230 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: இந்திய ரூபா 7.00, அளவு: 21x14 சமீ.

தனிநாயக அடிகளார், முதலாவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டை கோலாலம்பூரில் 17.4.1966 முதல் 23.4.1966 வரையிலான ஏழு நாட்கள் நடத்திய வேளையில் அதன் நினைவாக அடிகளாரின் கட்டுரைகளைத் தொகுத்து இந் நூலை வெளியிட்டுள்ளனர் பாரி நிலையத்தார். இதில் உள்ள கட்டுரைகள் காலத்திற்கேற்ப வேறுபடும் மனித குலத்தின் எண்ணங்களையும் பழக்க வழக்கங்களையும் சமூகப் பண்பாடுகளையும் விளக்குவதுடன் உலக ஒருமைப் பாட்டையும் தெளிவாக விளக்குகின்றன. சுற்றுச் செலவுக் கலை, தாய்லாந்து, கம்போடியா, வியட்நாம், பர்மா, இந்தோனேஷியா, ஜப்பான், ஐக்கிய அமெரிக்கா, தென் அமெரிக்கா, சோவியத் ஒன்றகம், இங்கிலாந்து, பிரான்சு, ஜேர்மனி, ஆஸ்திரியா, இத்தாலி, வத்திக்கான், கிரேக்க நாடு, போர்த்துக்கல், ஐரோப்பாவின் சிறு நாடுகள், ஆப்பிரிக்கா, கிழக்கு ஆப்பிரிக்கா, நடு (மத்திய) கிழக்கு நாடுகள் ஆகிய 21 அத்தியாயங்களின்கீழ் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 3996).

### 12214

**பண்டைத் தமிழ்ச் சமூகம்: வரலாற்றுப் புரிதலை நோக்கி.** கார்த்திகேசு சிவத்தம்பி. சென்னை 600002: மக்கள் வெளியீடு, 49, உனிசு அலிசாகிப் தெரு, எல்லிசு சாலை, 1வது பதிப்பு, டிசம்பர் 2003.(சென்னை 600005: தேவா ஆப்செட்).

176 பக்கம், விலை: இந்திய ரூபா 60., அளவு: 21x14 சமீ.

மே.து.ராசுகுமார், ரா.வசந்தா ஆகியோரை பொதுப் பதிப்பாசிரியர்களாகக் கொண்டு வெளியிடப்பட்ட இந்நூல் 1998இல் தமிழகத்தில் ஆங்கிலத்தில் வெளியான Studies in Ancient Tamil Society என்ற பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்களின் கட்டுரைத் தொகுப்பு நூலின் தமிழாக்கமாகும். பேராசிரியர் கா. சிவத்தம்பி எழுதிய ஐந்து கட்டுரைகளின் தொகுப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது. நூலுக்கான பதிப்புரையை மே.து.ராசுகுமார் எழுதியிருக்கிறார். முன்னுரையாக "ஐராவதம் மகாதேவனின் ஆய்வு நிறைவும் சங்க கால வரலாற்று மீள்பார்வைக்கான தேவைகளும்" என்ற கட்டுரை உள்ளது. "திணைக் கோட்பாட்டின் சமூக அடிப்படைகள்" என்ற முதலாவது கட்டுரையை பேராசிரியர் நா.வானமாமலை, பேராசிரியர் ஆ.சிவசுப்பிரமணியன் ஆகியோர் தமிழாக்கம் செய்துள்ளனர். பிற கட்டுரைகளை பேராசிரியர் செ.போத்திரெட்டி தமிழாக்கம் செய்துள்ளார். "பூர்வ காலத் தமிழ் நாட்டில் அரசமைப்பு உருவாக்கம்" என்ற கட்டுரையானது, ஆட்சி அதிகாரம் உடையோரைக் குறிக்கும் சங்க காலத்துச் சொற்களை ஆதாரமாகக்

கொண்டு அக்காலத்து அரச உருவாக்கம் பற்றிய பூர்வாங்க உசாவலாக அமைகின்றது. "பண்டைய தமிழ் நாட்டில் உயர்குடி ஆதிக்க மேட்டிமையின் வளர்ச்சி" என்ற கட்டுரை பண்டைய தமிழ் நாட்டில் சமூக அடுக்கமைவுகளின் தோன்று நிலை குறித்த ஒரு ஆய்வாகும். "சங்க இலக்கியமும் தொல்லியலும்" என்ற கட்டுரை 1975இல் வெளிவந்த ஜேம்ஸ் தேவதாசன் இரத்தினம் சேவைநயப்பு Felicitation மலரில் வெளிவந்த கட்டுரையின் தமிழாக்கம். "முல்லைத் திணைக்கான ஒழுக்கம்" என்ற கட்டுரை, அந்நிலத்துக்கான பொருளாதார நடவடிக்கைகள் பற்றிய மானுடவியல் முக்கியத்துவம் குறித்த ஒரு பகுப்பாய்வாகும். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 36323. நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தின் சேர்க்கை இலக்கம் 004496).

**மேலும் பார்க்க: 12049, 12089**

## 305.4 பெண்கள், பெண்ணியம், பெண்ணிலைவாதம்

### 12215

**பெண்ணுரிமைகள் கண்காணிப்பு: ஆண்டறிக்கை 1999.** குமுதினி சாமுவேல். கொழும்பு 5: பெண்கள் தொடர்பூடகக் கூட்டமைப்பு, 12- 1/1, அஸ்கொட் ஒழுங்கை, 1வது பதிப்பு, 1999. (இரத்மலானை: பிரின்ட் இன், 66/4, ஸ்ரீ தர்மாராம மாவத்தை).

90 பக்கம், அட்டவணைகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14 சமீ., ISBN: 955-9078-02-X.

கனேடிய சர்வதேச மேம்பாட்டு முகவரகத்தின் "சக்தி பால்நிலை சமத்துவக் கருத்திட்டத்தின்" நிதியுதவியுடன் வெளியிடப்பட்ட இவ்வறிக்கை 1998 ஜனவரி முதல் டிசெம்பர் வரையிலான சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டது. பெண்கள் தொடர்பூடகக் கட்டமைப்பால் 1998ஆம் ஆண்டில் நான்கு பெண்ணு ரிமைகள் கண்காணிப்பு அறிக்கைகள் வெளியிடப்பட்டன. பெண்களுக்கு எதிராக, பெண்ணுரிமைகள் மீறப்படுகின்ற சம்பவங்கள் பத்திரிகைகளில் வெளியிடப் பட்டுள்ளவாறு அவற்றைத் தொகுத்து ஆய்வு செய்வதற்காகவே இவ்வறிக்கையில் முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. 1998இல் குமுதினி சாமுவேல் வகுத்துத் தொகுத்து வெளியிட்ட பெண்ணுரிமைகள் கண்காணிப்புக் காலாண்டு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட தரவுகளினதும் தகவல்களினதும் தொகுப்பு இதுவாகும். பெண்களுக்கு எதிரான வன்முறைகள், பெண்ணுரிமைகள் கண்காணிப்பு மூலமாக அறிக்கையிடப்பட்ட பெண்களுக்கெதிரான வன்முறைச் செயல்கள், பெண்களும் வெளிநாடுகளில் பணியாற்றுகின்ற பெண்களும், பெண்களும் இனப்பிரச்சினையும் ஆகிய நான்கு அத்தியாயங்களின்கீழ் இவ்வறிக்கை பல்வேறு தகவல்களைத் தாங்கி வெளிவந்துள்ளது. இதில் கவனம் செலுத்தப்பட்டுள்ள விடயங்களாக பெண்களுக்கெதிரான வன்முறைகள், இனப்பெருக்க சுகாதாரப் பிரச்சினைகள், வெளிநாடுகளில் பணியாற்றுகின்ற பெண்கள், அரசியல் மற்றும் மோதல்கள் சார்ந்த வன்முறைகளும் உரிமை மீறல்களும், பெண்களும் தொழிலும் ஆகியன

வாகும். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 24410).

**மேலும் பார்க்க: 12847**

## 305.4(5) பெண்ணியம் சார்ந்த ஆய்விதழ்கள்/ சிறப்பிதழ்கள்

### 12216

**நிவேதினி: பால்நிலைக் கற்கை நெறிச் சஞ்சிகை: இதழ் 9 மலர் 2 (ஆனி 2004).** செல்வி திருச்சந்திரன் (இதழாசிரியர்). கொழும்பு 6: பெண்கள் கல்வி, ஆய்வு நிறுவனம், 58 தர்மராம வீதி, 1வது பதிப்பு, ஆனி 2004. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளூமெண்டால் வீதி).

(4), 83 பக்கம், விலை: ரூபா 75.00, அளவு: 22x14 சமீ., ISSN: 1391-0353.

இவ்விதழில் (ஆனி 2004) இதழாசிரியரின் முன்னுரையுடன் தொடங்கும் ஆறு கட்டுரைகள் தரப்பட்டுள்ளன. பெருந்தோட்டப் பெண்கள் கலாச்சார அழுத்தங்களில் இருந்து மீளல் (மைக்கல் ஜோக்கிம்), பெண்கள் மூளையில் போதிய அறிவு இல்லையா? (திருமகள் இரத்தின சுப்பிரமணியம்), அல்லியின் கதை (காஞ்சனா நடராசன்), வேறு கதையாடல்களின் நோக்கில்: பெண்களினது எழுத்து சுயமரியாதை இயக்கம் பெண்ணிலைவாத மொழிபெயர்ப்பில் தொக்கிநிற்கும் அரசியல் (கே.ஸ்ரீலதா), அஞ்சுகத்தின் சுயசரிதை (செல்வி திருச்சந்திரன்), நூல்விமர்சனம்: மதப் பண்பாட்டின் கோலங்களையும் கருத்தியலை யும் கட்டவிழ்க்கும் ஒரு பால்நிலை நோக்கு (தொகுப்பு-செல்வி திருச்சந்திரன், நூல்விமர்சனம்: சே.அனுசூயா) ஆகிய படைப்பாக்கங்கள் இவ்விதழில் இடம்பெறுகின்றன. இறுதியாக நிவேதினியின் குறி இலக்கும் நோக்கும் என்ற தலைப்பில் ஆசிரியரின் சிறுகுறிப்பும் காணப்படுகின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 35072).

### 12217

**நிவேதினி: பால்நிலைக் கற்கை நெறிச் சஞ்சிகை: இதழ் 16 (2014-2015).** செல்வி திருச்சந்திரன் (இதழாசிரியர்). கொழும்பு 6: பெண்கள் கல்வி, ஆய்வு நிறுவனம், 58 தர்மராம வீதி, 1வது பதிப்பு, 2015. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

x, 126 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14.5 சமீ., ISSN: 1391-0027.

இவ்விதழில் (இதழ் 16: 2014-2015) இதழாசிரியரின் முன்னுரையுடன் தொடங்கும் பத்துக் கட்டுரைகள் இரண்டு பகுதிகளில் தரப்பட்டுள்ளன. 2014 அக்டோபர் 20இல் மறைந்த தமிழக எழுத்தாளர் ராஜம் கிருஷ்ணன் (1925 - 2014) பற்றிய 1வது பகுதியில் ராஜம் கிருஷ்ணன்: ஒரு மகத்தான பெண்ஆளுமை (லறீனா ஹக்), ராஜம் கிருஷ்ணனின் படைப்பிலக்கிய ஆற்றலும் பெண்நிலைவாத சிந்தனைப் பரவலுக்கு அவரது இலக்கியப் பங்களிப்பும் (சந்திரசேகரன் சசிதரன்),

ராஜம் கிருஷ்ணனின் தீவிர சமூகப் பிரக்ஞையும் அவரது உன்னத எழுத்தாளுமையும் (வசந்தி தயாபரன்), உரக்க ஒலித்த பெண்குரல் (சீ.எஸ்.லக்ஷ்மி (அம்பை) ஆகிய நான்கு கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. 2வது பகுதியில் பொதுவெளியில் பெண் எழுத்தும் சில சவால்களும் (எம்.எஸ்.தேவகௌரி), பெண்மையின் கட்டமைப்பும் அதன் நீட்சியான ஆண்மையின் அனுகூல அதிகார ஆட்சியும்: ஒரு உளவியல் நோக்கு (செல்வி திருச்சந்திரன்), சங்ககால ஔவையார் பாடல்கள்: ஒரு பன்முக நோக்கு (நதிரா மரியசந்தனம்), மார்க்சியமும் பெண்ணியமும் (நிரஞ்சினி), பெண்கள் மீதான வன்முறைகளும் அதனை ஒழிப்பதற்கான வழிகளும்: ஒரு சமூகவியல் நோக்கு (பகீரதி மோசேஸ்), குறமகளுடனான நேர்காணல் ஆகிய ஆறு கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன.

## 306 கலாச்சாரம்

### 12218

**எமது கலாசார பாரம்பரியம்: இரண்டாம் தொகுதி.** ஆனந்த W.P.குருகே (பதிப்பாசிரியர்), எஸ்.நடராஜ ஐயர் (மொழிபெயர்ப்பும் தொகுப்பும்). கொழும்பு: பிரதிப் பணிப்பாளர் நாயகம், மத்திய கலாசார நிதியம், கலாசார மத விவகார அமைச்சு, 1வது பதிப்பு, 1997. (மகரகம: தரஞ்ஜீ பிரின்ற்ஸ், 506, ஹைலெவல் வீதி, நாவின்ன).

xii, 400 பக்கம், விலை: ரூபா 290, அளவு: 24x18.5 சமீ.

வரண்ட வலயத்தில் புத்த மதத்தின் தோற்றம் (மென்டிஸ் ரோஹணதீர), குளங்களும் நீர்ப்பாசனமும் (அனுராதா செனவிரத்ன), பொலந்நறுவ காலத்திற் கட்டிட நிர்மாணம் (H.T.பஸநாயக்க), செதுக்குவேலைக் கலை (சிரிநிமல் லக்துசிங்க), பீடங்களுக்கிடையிலான ஒற்றுமையும் சம்பிரதாயங்களும் (மென்டிஸ் ரோஹணதீர), பௌத்த மதமும் விகாரைக் காணிகள் பற்றிய பிரித்தானிய ஆட்சியின் கருத்துக்களும் பலாபலன்களும் (K.D.G.விமலரத்ன), குடியேற்ற ஆட்சிக்காலத்தில் ஏற்பட்ட தேசிய மறுமலர்ச்சி (K.N.O. தர்மதாச), ராஜதந்திரம் (மங்கள இலங்கசிங்க), வெலிவிட்ட சரணங்கர சங்கராஜயுகம் (வினி விதாரண), புத்தர் உருவச் சிலை (சந்திரா விக்கிரம கமகே), அபயகிரி தாதுகோபுரமும் விகாரைகள் கட்டிடத் தொகுதியும் (T.G.குலத்துங்க), வரலாற்றுப் பின்னணி (ஆனந்த W.P.குருகே), ஜேத்தவனராம பாரம்பரியம் (சந்திரா விக்கிரம கமகே), பௌத்த மதத்திற்கு இலங்கை ஆற்றிய சேவை (ஆனந்த W.P.குருகே), தாதுகோபுரங்களின் நிர்மாணம் (P.L.பிரேமதிலக்க), பொதுமக்களின் சமயரீதியிலான சிந்தனை (H.A.P.அபயவர்த்தன), இலங்கையின் தர்ம விவரணங்களும் ஏனைய சமயங்களின் அறிவும் (சுமனபால கல்மங்கொட), ஏட்டுக் கல்வி நிலையங்கள்அல்லது ஏட்டுக் "குறிக்கோள் கட்டிடங்கள்" (விமல் ஜீ. பலகல்ல), பௌத்தக் கல்வியின் வளர்ச்சியும் தற்போதைய நிலையும் (ஏ.அதிகாரி), அபயகிரி பாரம்பரியம் (சந்திரா விக்ரம கமகே), மகாவிகாரையின் பாரம்பரியம் (விமல விஜயசூரிய), தம்பதெனிய யுகத்திலிருந்து கோட்டே யுகம்வரை-கட்டிடக்கலை (நந்தசேன முதியான்சே), தாதுகோபுரம் (செனரத் பரணவிதான), சிங்கள மொழியின் தோற்றமும் அபிவிருத்தியும் (விமல்

ஜீ. பலகல்ல), கண்டி யுகத்திலான கட்டிடக்கலை (நிமல் டி சில்வா), விழாக்களும் விளையாட்டுக்களும் (வினி விதாரண), சமஸ்கிருத இலக்கியம்-வளர்ச்சியும் ஆதிக்கமும் (ஆனந்த W.P.குருகே), சிங்கள எழுத்துக் கலையினதும் இலக்கியத்தினதும் ஆரம்பகாலம் (பந்துசேன குணசேகர), சிங்கள இலக்கியத்தின் மரபு வரலாறும் சிங்கள இலக்கியமும் (ஏ.வீ.சுரவீர), சிங்கள இலக்கியம்-அனுராதபுரக் காலம் (ஏ.வீ.சுரவீர), ஜேத்தவன தூபியும் ஆச்சிரமத் தொகுதியும் (ஹேம ரத்நாயக்க), வாத்தியங்களும் நடனக்கலையும் (திஸ்ஸ காரியவாசம்), சமூக நியமம் (சந்திம விஜயபண்டார) ஆகிய 33 ஆய்வுக் கட்டுரைகளை இத்தொகுதி உள்ளடக்குகின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 48477. நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தின் சேர்க்கை இலக்கம் 008884).

## 310 புள்ளிவிபரவியல்

### 12219

**புள்ளிவிபரப் படவரைகலையியல்.** க.குணராசா. யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 1, முதலாம் ஒழுங்கை, பிரவுண் வீதி, திருத்திய 3வது பதிப்பு, ஏப்ரல் 2004, 1வது பதிப்பு, செப்டெம்பர் 1994. (யாழ்ப்பாணம்: ராம் பிறின்ரேர்ஸ் கிராப்பிக்ஸ், பலாலி வீதி).

(6), 7-243 பக்கங்கள், வரைபடங்கள், அட்டவணைகள், விலை: ரூபா 250., அளவு: 20x14 சமீ.

இந்நூலில் ஏழு பகுதிகளும் 29 அத்தியாயங்களும் உள்ளன. பார் வரைப்படங்கள் (சாதாரண பார் வரைப்படம், வீத பார் வரைப்படம், கூட்டு பார் வரைப்படம், கூம்பக பார் வரைப்படம், நிரல் வரைப்படம்), சில்லு விளக்கப்படங்கள் (பிரிக்கப்பட்ட வட்டங்கள், விகித சம வட்டங்களும் உள்ளமைந்த வட்டங்களும்), கோட்டு வரைப்படங்கள் (கோட்டு வரைப்படங்கள், சராசரி விலகல் வரைப்படம், நியம விலகல் வரைப்படம், நகரும் சராசரி விலகல் வரைப்படம், லொறன்ஸ் வளையி, z-வரையம், திரள்கோட்டு வரையம்), மீடிறன் வரைப்படங்கள் (இழை வரையம், மீடிறன் பல்கோணியும் ஓராய வளையிகளும், திரட்டு மீடிறன் வளையி, ஓகைவ் வளையிகள்), காலநில வரைப்படங்கள் (கொட்டு நிரல் வரைப்படம், காலநிலை வளையி, மணிக்கூட்டு வரையம், கிளைமோ வரையம், ஹைதர் வளையி), சிதறல் வரைப்படங்கள் (பிரிக்கை வரைப்படங்கள், இருமாறிகள் வரையம் /சிதறல் வரைப்படம், முக்கூட்டு வரையம்), சமயகணிய/இடக்கணியப் படங்கள் நிழற்றுமுறை வரைப்படங்கள், புள்ளிமுறை வரைப்படங்கள், இடக்கணிய பை வரைப்படம்) ஆகிய ஏழு பகுதிகளாக இவை பிரித்து விளக்கப்பட்டுள்ளன. புள்ளி விபர வரைப்படங்களைத் தெளிவாக விளக்கும் 216 விளக்கப்படங்களும் இந்நூலில் உள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 36006).

## 320 அரசறிவியல்

### 12220

**அரசறிவியலாளன் (இதழ் 2, டிசம்பர் 2007).** ஜெ.கவிதா. யாழ்ப்பாணம்: அரசறிவியல் ஒன்றியம், அரசறிவியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, 1வது பதிப்பு, டிசம்பர் 2007. (யாழ்ப்பாணம்: மதி கலர்ஸ் பிறின்டர்ஸ், 15/2B, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்).

xii, 134 பக்கம், வண்ணத் தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ.

இலங்கையின் அடிப்படை உரிமைகள் எதிர்நோக்கும் சவால்களும் பிரச்சினைகளும் (சி.திருச்செந்தூரன்), இலங்கையின் முரண்பாட்டு அரசியல் கலாசாரம் (இரா. பிரமாலட்சுமி), தென்னாசிய நாடுகளின் அரசியலில் மதம் வகிக்கும் பங்கு (சு.துஷாலினி), பொதுத்துறை நிர்வாகத்தின் தோற்றமும் வளர்ச்சியும் (T.தவகர்ணன்), பணியகவமைப்பு (V.சுதர்சனா), அமெரிக்க அரசாங்க முறைமை: ஒரு கண்ணோட்டம் (S.கிரிஜா), அமெரிக்க அரசாங்க முறைமையில் வலுவேறாக்கத் தத்துவம் (C.சந்திரிகா), வட-அமெரிக்க சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் (L.F.ஜெரால்டீன்), உலக வர்த்தக நிறுவனத்தின் அரசியல் பொருளாதாரம் (R.ராஜரஜிதினி), பொதுஜன அபிப்பிராயமும் அதை உருவாக்கும் சாதனங்களும் (B.கிருஷ்ணவேணி), தென்னாசிய நாடுகள் எதிர்நோக்கும் சவால்களும் இந்தியாவின் வளர்ச்சியும் (K.T.கணேசலிங்கம்), உள்ளூராட்சி அரசாங்க முறைமை: ஒரு மீள்நோக்கு (அ.வே. மணிவாசகர்) ஆகிய அரசியல்துறைசார் ஆய்வுக் கட்டுரைகள் இவ்வாண்டிதழில் இடம்பெற்றுள்ளன.

### 12221

**அரசறிவியலாளன் (இதழ் 3, டிசம்பர் 2009).** ஜெ.கவிதா. யாழ்ப்பாணம்: அரசறிவியல் ஒன்றியம், அரசறிவியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, 1வது பதிப்பு, டிசம்பர் 2009. (யாழ்ப்பாணம்: மதி கலர்ஸ் பிறின்டர்ஸ், 15/2B, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்).

x, 118 பக்கம், வண்ணத் தகடுகள், விலை: 250., அளவு: 20.5x14.5 சமீ.

விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின்கீழ் இலங்கையில் பாராளுமன்றப் பிரதிநிதிகள் தெரிவுமுறை (என்.அபிராமி), அமுக்கக் குழுக்களும் அவற்றின் தொழிற்பாடுகளும் (த.பிருந்தா), மனித உரிமைகளின் பின்புலத்தில் சமூக பொருளாதார அபிவிருத்தி (வி.சொக்கநாதன்), இஸ்லாமிய அரசியல் கலாசாரம்: தென்னாசியா பற்றிய ஒரு நோக்கு (ஏ.ஞானகரன்), இலங்கையின் இன முரண் பாட்டில் மொழி வகித்த பங்கு (எஸ்.சங்கீதா), முரண்பாடு-ஓர் அறிமுகம் (சி. திருச்செந்தூரன்), முரண்பாடு: முகாமையும் உருமாற்றமும்-ஒரு கோட்பாட்டு நிலை அறிமுகம் (இ.இராஜேஸ்கண்ணன்), சிவில் சமூகமும் நல்லாட்சியும் (தி. விக்கினேஸ்வரன்), சர்வதேச தொழிலாளர் நிறுவனம்-ஓர் அறிமுகம் (ந.ரமீனா), அரசியல் மானிடவியல்: ஓர் அறிமுகம் (எஸ்.ஸ்ரீகாந்தன்), அரசியல் சித்தாந்தமாகும்

பயங்கரவாதம் (K.T.கணேசலிங்கம்) ஆகிய பதினொரு அரசியல் ஆய்வுக்கட்டுரைகள் இவ்வாண்டிதழில் இடம்பெற்றுள்ளன.

**12222**

**இலங்கை அரசியலும் பொருளாதாரமும் (1912-1959).** ஏ.ஜே.வில்சன் (ஆங்கில மூலம்), F.X.C.நடராசா (தமிழாக்கம்). கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 2வது பதிப்பு 2017, 1வது பதிப்பு, 1965. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

(4), 162 பக்கம், விலை: ரூபா 450., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-659-496-6.

1912-1959க்கு இடைப்பட்ட இலங்கையின் அரசியல் வரலாற்றை அறிந்தகொள்ள இந்நூல் பெரிதும் உதவியாக இருக்கும். இலங்கை அரசியல் அமைப்பு விதிகளும் அரசாட்சியும், குறூ-மக்கலம் அரசியற் சீர்திருத்தம் (1912-1921), மானிங் அரசியல் திட்டத்தில் (1924-1931) தேசாதிபதி, மானிங் அரசியல் திட்டத்தின் கீழ் (1924) நிதிக்குழு, இலங்கை அமைச்சர்களின் அரசியல் பொருளாதார சமூகப் பின்னணி (1947-1959), இலங்கையில் அமைச்சர் அவை ஆட்சி (1947-1959) ஆகிய ஆறு அத்தியாயங்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. அல்பிரட் ஜெயரத்தினம் வில்சன் (1928-2000), கொழும்பு ரோயல் கல்லூரியில் கல்வி கற்றுப் பின்னர் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் தனது இளமாணிப் பட்டத்தினையும் லண்டன் பொருளியல் கல்லூரியில் கலாநிதிப் பட்டத்தையும் பெற்றவர். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் அரசறிவியற் துறையில் பேராசிரியராகவும் பின்னர் கனடாவிலுள்ள நியூ பிரவுண்ஸ்விக் பல்கலைக்கழகத்தில் அரசறிவியற்துறைப் பேராசிரியராகவும், துறைத்தலைவராகவும் பணியாற்றியவர். (இந்நூலின் மூலப்பதிப்பு 1965இல் வெளியிடப்பட்டது. நூல்தேட்டம் பதிவிலக்கம் 5281.)

**12223**

**உலகின் தேசிய இனங்களின் விடுதலையும் சமஷ்டி அரசியல் தீர்வும்: சமஷ்டி தொடர்பான மூன்று கட்டுரைகள்.** க.சண்முகலிங்கம். கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு 2017. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

65 பக்கம், அட்டவணைகள், விலை: ரூபா 250., அளவு: 21x14.5 சமீ., ISBN: 978-955-659-579-6.

2007ஆம் ஆண்டு "விழுது" ஆற்றல் மேம்பாட்டு நிறுவனத்தின் "கூடம்" இதழில் வெளிவந்த "நான்காவது உலகம்" (பெர்னாட் நைட்ஸ்மான்) என்ற கட்டுரையையும், "சமஷ்டி அரசியல் முறையும் பண்பாட்டுப் பன்மைத்துவமும்" (டி.கே.ஊம்மன்) என்ற கட்டுரையையும், றொனால்ட் எல். வார்ட்ஸ் என்பவர் எழுதிய கட்டுரை யொன்றைத் தழுவி ஆசிரியரால் எழுதப்பட்ட "பன்மைத்துவத்தை முகாமை செய்தலும் அதற்கான சமஷ்டி மாதிரிகளும்" என்ற கட்டுரையுமாக மொத்தம் மூன்று கட்டுரைகளின் தமிழாக்கம் இந்நூலில் இடம்பெற்றுள்ளது. உலகில் ஒடுக்கப்பட்ட தேசிய இனங்கள் பற்றியும், தேசிய அரசுகள் (Nation States)

எனப்படும் சிறைக்கூடங்களில் வதைக்கு உள்ளாகும் தேசிய இனங்களின் துன்பத்தையும் துயரத்தையும் எடுத்துக்கூறும் கோட்பாடே நான்காவது உலகம் என்பதை பெர்னாட் நைட்ஸ்மானின் கட்டுரை விளக்குகின்றது. 1990களில் 191 தேசிய அரசுகளின் எல்லைகளுக்குள் 5000 வரையிலான தேசிய இனங்கள், பழங்குடி மக்கள், சிறுபான்மை மக்கள் குழுமங்கள் என்பன இருந்துள்ளன. இந்நிலையில்இவற்றின் பிரச்சினைகளுக்கான தீர்வு என்ன? உலகஅரங்கினிலே ஏற்றுக்கொள்ளப்பட்ட சிறந்த தீர்வு சமஷ்டி அரசியல் முறையும் அதனோடு இணைந்ததான பன்மைப் பண்பாட்டுவாதமும் ஆகும். இது பற்றி டி.கே. ஊம்மனின் கட்டுரை விளக்குகின்றது. க.சண்முகலிங்கம் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப்பட்டம் பெற்றவர். இலங்கை நிர்வாக சேவையில் 1971-2004 காலப்பகுதியில் பணியாற்றி ஓய்வுபெற்றவர். வடக்கு-கிழக்கு மாகாணத்தின் கூட்டுறவு ஆணையாளராகவும், கல்வி அமைச்சின் செயலாளராகவும் விளங்கியவர். தற்போது கனடாவில் புலம்பெயர்ந்து வாழ்ந்து வருகிறார்.

## 12224

**சமாதானத் தூது: கட்டுரைத் தொகுப்பு.** ஜெஹான் பெரேரா (ஆங்கில மூலம்), மா.செ.மூக்கையா (தமிழாக்கம்). கொழும்பு 6: இலங்கை தேசிய சமாதானப் பேரவை, 12/14, புராண விஹாரை வீதி, 1வது பதிப்பு, 2014. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

xiii, 355 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14.5 சமீ., ISBN: 978-955-1274-69-6.

தேசிய சமாதான பேரவையின் நிறைவேற்றுப் பணிப்பாளரான கலாநிதி ஜெஹான் பெரேரா எழுதிய ஐம்பது கட்டுரைகளின் தமிழாக்கம் இது. வன்னிக்கு மக்களை மையமாக வைத்த அபிவிருத்தியே தேவை, ஐ.நா.நிபுணர் குழுவின் அறிக்கை ஏற்படுத்தியுள்ள வாதப்பிரதிவாதங்கள், ஐ.நா.நிபுணர் குழுவின் சிபாரிசுகளை நடைமுறைப்படுத்த சரியான தருணம், பான் கீ மூன் நிபுணர் குழுவின் அறிக்கை தொடர்பில் நடுநிலையுடன் செயற்படுவோம், சமூகங்களிடையே யான நல்லிணக்கத்துக்கு இன்னொரு பரம்பரை வரை காத்திருப்பதா?, இன்றைய நடைமுறையின் இரட்டைத் தன்மை, ஐ.நா.நிபுணர் குழுவினருடனான சிக்கலை சமாளிக்கக்கூடிய வழிமுறைகள், தனிப்பட்ட அறிவுரைகள் மட்டும் பல்லின மக்களின் மனதை வெல்லாது, அரசு சாரா நிறுவனங்கள் மீதான அரசின் புலனாய்வு விசாரணை, உள்ளூராட்சிசபைத் தேர்தல் வெற்றியை அரசு அர்த்தமுடையதாக்க வேண்டும், இலங்கையின் புதிய எதிர்பார்ப்பு, இலங்கையின் மதிப்பு தொடர்ந்தும் பாதிப்புக்குள்ளாகி வருவது ஏன்? என்பன போன்ற ஐம்பது தலைப்புகளில் இவரது ஆக்கபூர்வமான கட்டுரைகள் அமைந்துள்ளன.

## 12225

**பல்லின சமூகத்தில் சனநாயகம்.** டொனால்ட் எல்.ஹரோவிட்ஸ் (ஆங்கில மூலம்), மா.கருணாநிதி (தமிழாக்கம்), எஸ்.அன்ரனி நோபேட் (பதிப்பாசிரியர்). கொழும்பு 5: மார்கா நிறுவனம், தபால்பெட்டி எண். 601, இல.61, இசிப்பத்தான மாவத்தை, 1வது பதிப்பு, 1995. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளூமெண்டால் வீதி).

102 பக்கம், அட்டவணைகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14 சமீ.

Democracy in a Plural Society என்ற தலைப்பில் Donald L.Horowitz அவர்கள் எழுதிய கட்டுரையின் தமிழாக்கம். "பிரிவுபட்ட சமூகங்களில் சனநாயகம்" என்ற முதலாவது பிரிவில் தொடக்கநிலைத் தடைகள், சமுதாயத்தின் எல்லைகளைக் குறைத்தல், சேர்தலும் விலக்குதலும், சனநாயக நிறுவனங்களும் சனநாயகரீதியற்ற விளைவு களும், சனநாயகரீதியான மீள்மத்தியஸ்தம், இணங்கிச் செல்லும் நிறுவனங்களை உருவாக்கல் ஆகிய தலைப்புகளின்கீழ் விவாதிக்கப்பட்டுள்ளது. "சனநாயகச் செயல்முறையின் பிரச்சினைகள்" என்ற இரண்டாம் பிரிவில் சனநாயகச் செயல்முறைக்கான தகுதி விதிகள், பெரும்பான்மை ஆட்சியும் சனநாயகச் செயல்முறையும், கடினத் தன்மைகள் ஆகிய மூன்று தலைப்புகளில் விடயப்பரப்பு ஆராயப்பட்டுள்ளது. இறுதிப் பகுதியான "சிறந்த மாற்றுவழியொன்று உண்டா?" என்ற பகுதியில் மிகச்சிறந்த பெரும்பான்மை, வரையறுக்கப்பட்ட ஜனநாயக ஆட்சி, ஓரளவு பாதுகாப்பு, பெரும்பான்மை வல்லாட்சி எதிர் சிறுபான்மை வல்லாட்சி, சனநாயக நாடுகளில் பெரும்பான்மை ஆட்சி, சனநாயகக் கோட்பாட்டி லும் பார்க்க சனநாயக நடைமுறையில் பெரும்பான்மை ஆட்சியின் மதிப்பு குறைவாக இருப்பது என்?ஆகிய உபதலைப்புகளின்கீழ் தனது கருத்துக்களை டொனால்ட் எல்.ஹரோவிட்ஸ் முன்வைத்துள்ளார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 20029).

## 12226

**பாதுகாப்பையும் இறைமையையும் பங்கமின்றிப் பாதுகாத்தல் (கே.ஜி.கண்ணபிரான் அங்குரார்ப்பண நினைவுப் பேருரை).** சி.வி.விக்னேஸ்வரன். சென்னை 600 001: மக்கள் சிவில் உரிமைக் கழகம், பி.யூ.சீ.எல். தமிழ்நாடு/புதுவை, ஹூசைனா மன்ஜில், 255, அங்கப்ப நாயக்கன் தெரு, 1வது பதிப்பு, நவம்பர் 2014. (தமிழ்நாடு: அச்சக விபரம் தரப்படவில்லை).

40 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.

09.11.2014அன்று சென்னையில் மக்கள் சிவில் உரிமைக் கழகத்தினால் ஒழுங்குசெய்யப்பட்ட கே.ஜீ.கண்ணபிரான் அங்குரார்ப்பண நினைவுப் பேருரை Safeguarding Security and Sovereignty என்ற தலைப்பில் ஆங்கிலத்திலும், பின்னர் தொடர்ந்து "பாதுகாப்பையும் இறைமையையும் பங்கமின்றிப் பாதுகாத்தல்" என்ற தலைப்பில் தமிழிலும் நீதியரசரும், இலங்கையின் வடக்கு மாகாண முதலமைச்சருமான க.வி.விக்கினேஸ்வரன் அவர்களால் ஆற்றப்பட்ட உரையின்

எழுத்து வடிவம் இது. அமரர் கே.ஜீ.கண்ணபிரான் மக்கள் சிவில் உரிமைக் கழகத்தின் தலைவராக 1994-2009 காலப்பகுதியில் பணியாற்றியவர்.

## 12227

**பாராளுமன்றத்தில் ஹிஸ்புல்லாஹ்.** M.L.A.M.ஹிஸ்புல்லாஹ் (மூலம்), எஸ்.எல். சியாத் அஹமட் (தொகுப்பாசிரியர்). காத்தான்குடி 30100: மட்டக்களப்பு பல்கலைக்கழகக் கல்லூரி, ஹிஸ்புல்லாஹ் ஸ்டேடியம் வீதி, 1வது பதிப்பு, 2015. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

xxviii, 900 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22.5x15 சமீ., ISBN: 978-955-7838-00-7.

முன்னாள் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் அவர்கள் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரைகளின் தொகுப்பு இதுவாகும். முஹம்மது ஹிஸ்புல்லாஹ் 1963ஆம் ஆண்டு பெப்ரவரி 2ம் திகதி பிறந்தவர். இவரது தந்தை ஒரு மார்க்க அறிஞராவார். ஆரம்பக் கல்வியை காத்தான்குடி அல் அமின் வித்தியாலயத்திலும், காத்தான்குடி மத்திய மகாவித்தியாலயத்திலும், அளுத்கமை சாஹிராக் கல்லூரியிலும் பெற்றவர். பட்டப்படிப்பை பேராதனைப் பல்கலைக்கழகத்தில் நிறைவுசெய்தபின் சென்னை பல்கலைக்கழகத்தில் அரசியல்துறையில் முதுமாணிப் பட்டம் பெற்றவர். அமரர் எம்.எச்.எம்.அஷ்ரப் அவர்களின் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பாசறையில் இணைந்து 15.2.1989இல் மட்டக்களப்பு மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப் படுத்திப் பாராளுமன்றம் நுழைந்தவர். 19 வருட பாராளுமன்ற வாழ்க்கையில் இவர் ஆற்றிய உரைகளின் தொகுப்பாக இந்நூல் அமைகின்றது. எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் இலங்கை முஸ்லிம் உலமாக்களுக்காக உருவாக்கிய மட்டக்களப்புப் பல்கலைக் கழகக் கல்லூரியும், முஸ்லிம்களின் 1500 வருடகால வரலாற்றுப் பூர்வீகத்தையும் முஸ்லிம்கள் இந்த நாட்டுக்குச் செய்த அளப்பரிய பங்களிப்புகளையும் வரலாற்றுச் சான்றுகளுடன் எடுத்துக்கூற காத்தான்குடியில் பல வருடகால உழைப்பின் மூலம் உருவாக்கியுள்ள பூர்வீக நூதனசாலையும் இவரது சேவைகளில் சிலவாகும்.

## 12228

**முஸ்லிம் அரசியல் முன்னோடி அறிஞர் சித்திலெப்பை.**எம்.எஸ்.எம்.அனஸ். கொழும்பு 6: சித்தி லெப்பை நிறுவகம், 414, காலி வீதி, 1வது பதிப்பு, 2017. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

(6), 58 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x15 சமீ.

இந்நூல் சித்திலெப்பையின் இலட்சியங்கள், 19ம் நூற்றாண்டு வரையிலான முஸ்லிம் அரசியல், முஸ்லிம் அரசியல் முன்னோடி அறிஞர் எம்.சி.சித்திலெப்பை ஆகிய மூன்று இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. பின்னிணைப்பாக சித்திலெப்பை: முஸ்லிம் நேசன் கட்டுரைகளும், குறிப்புகளும் இடம்பெற்றுள்ளன. அறிஞர் சித்திலெப்பை சமூகத்தின் எழுச்சி என்பது ஒரு துறையில் மட்டும் தங்கி யிருப்பதில்லை என்பதை சரியாக உணர்ந்து, கல்வித் துறையில் மறுமலர்ச்சி

யொன்றை ஏற்படுத்தியது போன்றே அரசியல் விவகாரங்களிலும் கருத்துருவாக்கம் செய்தார். இவரது சமூக, கல்வி, ஆன்மீக பணிகளைப் போன்றே அரசியல், சிந்தனைப் பங்களிப்பை எடுத்துக்காட்டும் வகையில் இந் நூல் வெளிவந்திருக்கின்றது. அறிஞர் சித்திலெப்பை இலங்கைவாழ் முஸ்லிம்களின் அரசியல் விவகாரங்கள் குறித்து அக்கறையுடன் செயற்பட்டுள்ளார். முஸ்லிம் சமூகத்தை அரசியல் ரீதியாக வழிநடத்துவதிலும் பங்களித்துள்ளார். சர்வதேச முஸ்லிம்களின் விவகாரங்கள் குறித்தும் இவர் பெரிதும் அக்கறை கொண்டிருந்தார். அறிஞர் சித்திலெப்பையின் அரசியல் சிந்தனை இரு பரிமாணங்களைக் கொண்டிருந்ததை கலாநிதி எம்.எஸ். எம். அனஸ் இந்நூலினூடாக எடுத்துக்காட்டியுள்ளார். சித்திலெப்பை தேசிய ரீதியில் நாட்டின் மொத்த மக்களுக்குமான விடுதலையை முன்னிறுத்தி போராடிய தோடு, முஸ்லிம் சமூகத்தின் அரசியல் உரிமைகளுக்காகவும் போராடியவர். இன்றைய முஸ்லிம் அரசியல் கட்சிகள் முஸ்லிம்கள் என்ற தனித்துவ அடையாளத்துடன் கூடிய கட்சிகளை உருவாக்கிக் கொண்டு முஸ்லிம்களுடைய விவகாரங்களில் மாத்திரம் கவனம் செலுத்தி வருவது அறிஞர் சித்திலெப்பை உணர்த்திய அரசியல் கலாசாரத்திற்கு மாறுபட்டதாகும். முஸ்லிம்கள் மற்றும் முஸ்லிம் அரசியல் கட்சிகள் இந்த நாட்டின் அபிமானமிக்க பிரஜைகள் என்ற வகையில் இலங்கையின் தேசிய பிரச்சினைகளில் பங்கெடுத்து, தேசத்தைக் கட்டியெழுப்பும் பணியில் கைகோர்க்க வேண்டும் என்பதே சித்திலெப்பையின் அரசியல் பாரம்பரியமாகும்.

### 12229

**வன்முறை மோதலுக்குப் பின்பான மீளிணக்கப்பாடு: கொள்கைச் சுருக்கம்.** ஜனநாயகம் மற்றும் தேர்தல் செயற்பாட்டு உதவிக்கான சர்வதேச நிறுவகம் (IDEA). கொழும்பு 7: மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், 24/2, 28ஆவது ஒழுங்கை, ஓவ் பிளவர் வீதி, 1வது பதிப்பு, 2004. (கொழும்பு 10: குளோப் பிரின்டிங் வேர்க்ஸ்).

40 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 26x18 சமீ.

இக்கொள்கைச் சுருக்கமானது சுவீடனிலுள்ள IDEA நிறுவனத்தின் வெளியீடான வன்முறை மோதலுக்குப் பின்னரான மீளிணக்கப்பாடு: ஒரு கையேடு (Reconciliation After Violent Conflict: Policy Summary 2003) என்ற நூலின் சாராம்சமாகும். மூல நூலின் உதாரணங்களும் விடயக் கற்கைகளும் நீக்கப்பட்டு வலுவூட்டும் விவாதங் களும் சுருக்கப்பட்டுள்ளன. கடந்தகால வன்முறையின் மரபுரிமைப் பண்பு பொருத்தமான முன்னேற்றமான கொள்கை உருவாக்கத்தை வரைவதற்கான முக்கிய அம்சங்களின் சுருக்கமே இக்கையேட்டில் தொடர்ந்தும் இருக்கும் சாராம்சமாகும். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 1960/25489).

## 323 மனித உரிமை

### 12230

**அகில உலக மனித உரிமை வெளியீடு: ஆசிரியர்களுக்கான குறிப்புக்கள்.** அ.பாலசுப்பிரமணியம் (மொழிபெயர்ப்பாளர்). கொழும்பு: வெளியீட்டுப் பிரிவு, அரசகரும மொழித் திணைக்களம், 2வது பதிப்பு, 1964, 1வது பதிப்பு, 1956. (கொழும்பு: இலங்கை அரசாங்க அச்சகம்).

vi, (4), 89 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

இந்நூல் வெளியீடும் ஆசிரியரும், வெளியீட்டின் வரலாறு, மனித உரிமை வெளியீடு, அறிவு விருந்தின் ஆக்கம், மனித உரிமைகளைப் பற்றிக் கற்பித்தல், வகுப்புப் புறச் செய்கைகள் ஆகிய ஆறு பிரிவுகளின்கீழ் எழுதப்பட்டுள்ளது. இந்நூலின் இரு அனுபந்தங்களாக மனித உரிமைகளைக் காப்பதற்கான முறைகளையும் வழிகளையும் விளக்கும் சில உதாரணங்கள், பாடசாலை வாழ்க்கை முறை ஆகிய இரண்டு குறிப்புக்கள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 39704. நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தின் சேர்க்கை இலக்கம் 014143).

### 12231

**இலங்கை மனித உரிமைகள் நிலை 1994.** சட்டத்துக்கும் சமூகத்துக்குமான அறநிலையம். கொழும்பு 8: சட்டத்துக்கும் சமூகத்துக்குமான அறநிலையம், 3, கின்சி றெறஸ், 1வது பதிப்பு, வைகாசி 1995. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).

xiii, 328 பக்கம், அட்டவணைகள், விலை: ரூபா 210., அளவு: 22x14 சமீ., ISBN: 955-9062-24-7.

சுருக்க நோக்கு, இலங்கையில் அரசியல் உரிமைகளுக்கான கௌரவம், அவசரகால ஆட்சி, ஒரு நபரின் நன்மதிப்பைக் கௌரவித்தல், மனித உரிமைகளுக்கான நீதிமுறைப் பாதுகாப்பு, கடந்தகால மீறல்கள் பற்றிய புலன் விசாரணை, தண்டனையிலிருந்து தப்பித்தல், கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரமும் தொடர்பு சாதனங்களும், கலாசார உரிமைகள்: கலைத்துவ கருத்துவெளிப்பாட்டுக்கான உரிமை, தொழிலாளர் உரிமைகள், சமூக பொருளாதார உரிமைகள், சிறு பான்மையினர் உரிமைகளும் இனத்துவ முரண்பாடும், உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர், அகதிகளும் திருப்பி அனுப்புதலும், சிறுவர்களின் உரிமைகள், இலங்கையில் பெண்கள் நிலை ஆகிய 16 பிரிவுகளில் இவ்வறிக்கை எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 30789).

**12232**

**இலங்கை மனித உரிமைகள் நிலை 2002.** சட்டத்துக்கும் சமூகத்துக்குமான அறநிலையம். கொழும்பு 8: சட்டத்துக்கும் சமூகத்துக்குமான அறநிலையம், 3, கின்சி ரெறஸ், 1வது பதிப்பு, ஒக்டோபர் 2002. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளூமெண்டால் வீதி).

xi, 207 பக்கம், அட்டவணைகள், விலை: ரூபா 300., அளவு: 22x15 சமீ., ISBN: 955-9062-82-4.

2001ஆம் ஆண்டு தை-மார்கழி வரையுள்ள காலப்பகுதியை இவ்வறிக்கை உள்ளடக்குகின்றது. சுருக்க நோக்கு, இலங்கையின் அரசியலமைப்பிற்கான 17ஆவது திருத்தம், 2001இல் நீதித்துறை, சமூக பொருளாதார உரிமைகள் மற்றும் நிலைபேண் அபிவிருத்தியின் மீதான மின்சார நெருக்கடியின் தாக்கம், மனித உரிமைகளின் நீதிமுறைப் பாதுகாப்பு, இலங்கையின் பொதுச் சேவை ஆகிய ஆறு பிரிவுகளின்கீழ் இவ்வறிக்கை எழுதப்பட்டுள்ளது. அறிக்கையின் இறுதியில் மூன்று பின்னிணைப்புகளாக இலங்கையினால் பின்னுறுதிப்படுத்தப்பட்ட மனித உரிமைச் சாதனங்கள் (மார்கழி 2001), இலங்கையினால் பின்னுறுதிப்படுத்தப்படாத சில மனிதஉரிமைச் சாதனங்கள், 2001இல் தீர்மானிக்கப்பட்ட அடிப்படை உரிமை வழக்குகள் ஆகிய அட்டவணைகள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 31479).

**12233**

**உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர் தொடர்பானநெறிமுறை விதிகள்.** ஐக்கிய நாடுகளின் அகதிகள் ஸ்தானிகராலயம். கொழும்பு 7: ஐக்கிய நாடுகளின் அகதிகள் ஸ்தானிகராலயம், 97 ரொஸ்மீட் பிளேஸ், 1வது பதிப்பு, 2002.(அச்சக விபரம் தரப்படவில்லை).

24 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.

இந்த விதிகள் உள்நாட்டில் இடம்பெயர்வோர் இடம்பெயரும் ஒவ்வொரு கட்டத்திலும் தம் பாதுகாப்பு விடயங்களில் என்னென்ன உரிமைகளையும் உத்தரவாதங்களையும் பெறலாமென்பதைத் தெளிவுபடுத்துகின்றன. எதேச்சாதிகாரமாக விரட்டப்படுவதிலிருந்து பாதுகாப்பளிக்கின்றன. இடம்பெயரும் வேளையில் பாதுகாப்பு, ஒத்தாசை ஆகியவற்றை அளிப்பதற்கான வரைமுறையை வழங்குகின்றன. பாதுகாப்பாகத் திரும்பிச்சென்று மீளக்குடியேறி சமுதாயத்தில் மீளவும் இணைவதற்கான உத்தரவாதங்களையும் முன்வைக்கின்றன. இவை எவரையும் கட்டுப்படுத்தும் சாசனமாக இல்லாவிட்டாலும் சர்வதேச மனித உரிமைகள், மனிதநேயச் சட்டம், அதற்கமைவான அகதிச்சட்டம் ஆகியவற்றைப் பிரதிபலிக்கின்றன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 1286/25489).

**12234**

**புதிய அரசியலமைப்பில் மனித உரிமைகள்.** *மனித உரிமைகள் அமைப்பு. வெளியீட்டுத் தகவல் தரப்படவில்லை. (கொழும்பு 10:* Associated Newspapers of Ceylon Ltd, 35, D.R. Wijewardena Mawathe).

*42 பக்கம், விளக்கச் சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x13.5 சமீ.*

*மனித உரிமையை நாம் எவ்வாறு இழந்தோம் என்பது முதல் அதனை மீட்டெடுக்க வேண்டியதன் அவசியத்தை கருத்தோவியங்களின் உதவியுடன், சாதாரண மக்களுக்கு இலங்கையின் அனுபவப் பின்னணியில் மிக எளிய வடிவில் இந் நூல் விளக்குகின்றது. பாதுகாப்புக் காரணங்களுக்காக இந்நூலை உருவாக்கிய நிறுவனம் பற்றிய எவ்வித நூலியல் தகவல்களும் நூலில் இடம்பெறவில்லை. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 25489. நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தின் சேர்க்கை இலக்கம் 013876).*

**12235**

**மனித உரிமைகள், அரசியல் மோதலும் இணக்கப்பாடும்.** *இயன் மார்ட்டின். கொழும்பு 8: இனத்துவ ஆய்வுகளுக்கான சர்வதேச நிலையம், கின்சி றெரஸ், 1வது பதிப்பு, 1999. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளூமெண்டால் வீதி).*

*22 பக்கம், புகைப்படம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.*

*அமரர் நீலன் திருச்செல்வத்தின் (31.01.1944-29.07.1999) முதலாவது சிரார்த்த தினத்தை முன்னிட்டு கொழும்பு, இலங்கை மன்றக் கல்லூரியில் ஒழுங்கு செய்யப்பட்ட ஞாபகார்த்தச் சொற்பொழிவில், கிழக்கு திமோருக்கான ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்தின் முன்னாள் விசேட பிரதிநிதியும், சர்வதேச மன்னிப்புச் சபையின் முன்னாள் செயலாளர் நாயகமுமான இயன் மார்ட்டின் ஆற்றிய உரை. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 39543. நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தின் சேர்க்கை இலக்கம் 006160).*

**மேலும்பார்க்க: 12285, 12306**

## 327 சர்வதேசத் தொடர்புகள்

**12236**

**இலங்கை மீதான இந்திய ஆக்கிரமிப்பு.** *தோழர் பாலன். லண்டன்: தோழர் பதிப்பகம், 1வது பதிப்பு, ஜுன் 2016. (அச்சக விபரம் தரப்படவில்லை).*

*(4), 58 பக்கம், புகைப்படங்கள், விலை: இந்திய ரூபா 25.00, அளவு: 21.5x13.5 சமீ.*

*இலங்கை மீதான இந்திய அரசின் திட்டமிட்ட ஆக்கிரமிப்பினை இந்நூல் இலங்கை மீதான இந்திய ஆக்கிரமிப்பு, இலங்கை அரசியலில் இந்தியாவின்*

தலையீடு, இலங்கையில் இந்தியாவின் பொருளாதார ரீதியிலான தலையீடு, இலங்கையில் இந்தியாவின் இராணுவத் தலையீடு, இந்திய ஆக்கிரமிப்பில் இருந்து விடுபடுவது எப்படி? ஆகிய ஐந்து இயல்களில் விளக்குகின்றது. இந்நூலாசிரியர் தோழர் பாலன் இலங்கையில் கரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். தற்போது லண்டனில் வாழ்ந்து வருகின்றார். இவர் தமிழ் மக்கள் பாதுகாப்பு பேரவை என்னும் புரட்சிகர இயக்கத்தின் ஆரம்பகர்த்தாக்களில் ஒருவர். அதன் செயற்குழு உறுப்பினர்களுள் ஒருவராகவும் இயங்கியவர். புரட்சிகர சக்திகளுடன் ஐக்கியம் மேற்கொண்டமைக்காக 12.03.1991 அன்று சென்னையில் இவர் கைது செய்யப்பட்டார். இவர் மதுரை, சென்னை சிறைகளிலும் வேலூர், துறையூர், மேலூர் சிறப்பு முகாம்களிலும் அடைக்கப்பட்டார். 17.02.1997இல் இவர் நிரபராதியென திண்டுக்கல் முதன்மை நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியபோதும் விடுதலை செய்யப்படாமல் தொடர்ந்தும் சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டிருந்தார். இறுதியாக எட்டு வருட சிறைவாழ்க்கையின் பின்னர் 03.04.1998 அன்று இந்தியா விலிருந்து வெளியேற்றப்பட்டார்.

## 12237

**எதிர்கால உலகமும் நாமும்.** *அ.சி.உதயகுமார். சுன்னாகம்:* Institute of Historical Studies, *வேதராணியார் வளவு, உடுவில், 1வது பதிப்பு, நவம்பர் 1991. (யாழ்ப்பாணம்: அருண் பிரின்டர்ஸ்).*

xi, *92 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x15 சமீ.*

*இந்நூலில் "நியூக்கிளியர் ஆயதங்கள் தொடர்பான அமெரிக்க புதிய கொள்கைத் திட்டங்களும் எதிர்கால உலகமும் நாமும்" என்ற ஆய்வுக் கட்டுரை இடம்பெற்றுள்ளது. ஜோர்ஜ் புஷ் இனது புதிய கொள்கைத் திட்டங்கள், எதிர்கால உலகமும் நாமும், முடிவுரை ஆகிய மூன்று அத்தியாயங்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. 1991 செப்டெம்பர் 27ஆம் திகதியன்று அமெரிக்க ஜனாதிபதி "புதிய உலக ஒழுங்குமுறை" பற்றி ஆற்றிய தொலைக்காட்சி உரையின் பாதிப்பில் எழுதப்பட்ட சர்வதேச அரசியல் நிலவரம் குறித்த முக்கியமான ஆய்வு இது. (இந்நூல் நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 014852).*

## 12238

**கிலரி கிளிண்டன் தோற்றாரா தோற்கடிக்கப்பட்டாரா?.** *கி.செ.துரை. திருச்சி 26: தமிழர் நடுவம், எண்:1744, 100 அடி சாலை, அண்ணா நகர், நவல்பட்டு, 1வது பதிப்பு, மார்ச் 2018. (சிவகாசி: ஸ்ரீ சண்முகா பிராசஸ்).*

*180 பக்கம், புகைப்படங்கள், விலை: இந்திய ரூபா 200.,* ISBN: *978-87-970470-0-2.*

*புகலிடத் தமிழ் வானொலிகளில் சர்வதேசச் செய்தியாளராகவிருக்கும் டென்மார்க், கி.செ.துரை அவர்களின் 34ஆவது நூல் இது. அமெரிக்க அதிபர் தேர்தலில் டொனால்ட் ட்ரம்ப்பின் வெற்றிக்கும் ஹிலரி கிளின்டனின் தோல்விக்கும் காரணமாக இருந்ததாகக் கருதப்படும் தேர்தலின்போது சந்தேகிக்கப்பட்ட*

ரஷ்யாவின் பின்னணியும், அதன் கருவியாகச் சந்தேகிக்கப்படும் சைபர் யுத்தமும் பற்றிய மிக விரிவான செய்திகளை 27 அத்தியாயங்களில் சுவாரஸ்யமாகத் தொகுத்து வழங்கும் ஒரு தமிழ் நூல் இது. சர்வதேச அரசியல் பற்றிய நூல்களின் வருகை தமிழ்ச் சூழலில், குறிப்பாக ஈழத்துத் தமிழ்ச் சூழலில் மந்தகதியில் அமைந்துள்ள சூழலில் இந்நூலின் வருகை முக்கியமானது.

## 12239

**சர்வதேச அரசியல் பிரச்சினைகள்: மொழிபெயர்ப்புக் கட்டுரைகளின் தொகுப்பு.** *க.சண்முகலிங்கம் (தொகுப்பாசிரியர், மொழிபெயர்ப்பாளர்). கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு 2017. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).*

viii, *108 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 21.5x14.5 சமீ.,* ISBN: *978-955-659-578-9.*

*சர்வதேச அரசியல் நிபுணர்கள் பலரால் எழுதப்பட்ட 18 கட்டுரைகளின் தமிழாக்கமே இந்நூலாகும். இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ள இக்கட்டுரைத் தொகுப்பின் "உலகம்" என்ற முதலாவது பகுதியில் நல்லாட்சி என்றால் என்ன கிரேக்கம் தரும் பாடங்கள் (சுமனசிறி லியனகே)/ இமாலயச் சாதனைக்குத் தயாராகும் ஹிலாரி கிளின்டன் (சித்தானந் ராஜ்கட்டா)/மலேசியாவும் இலங்கையும்: ஒற்றுமைகளும் வியப்பளிக்கும் வேற்றுமைகளும் (குமாரி டேவிட்)/ முதலாம் உலக யுத்தத்திற்குப் பிறகு கடந்துவிட்ட ஒரு நூற்றாண்டு (யோசப் எஸ்.நை)/நேபாள மக்களில் பெரும்பகுதியினர் எதிர்க்கும் புதிய அரசியல் யாப்பு (சி.கே.லால்)/ சிங்கப்பூரின் ஆங்கில மொழிக் கொள்கை: லீ குவான் யூ வகுத்த முன்மாதிரி (குமார் டேவிட்)/ தென்சீனக் கடலிலும் கிழக்கேயும் சீனா கிளப்பும் சச்சரவுகள்: கொந்தளிப்பு ஏற்படுமா? (குமார் டேவிட்)/செல்வச் செழிப்புமிக்க நாடாவதற்கு முன்னர் முதியோர் நாடாகப் போகும் சீனா (மோகன் குருசாமி) ஆகிய 8 மொழிபெயர்ப்புக் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. "மேற்கு ஆசியா"என்ற இரண்டாவது பகுதியில் அமெரிக்கா நேச நாடுகளுக்கு ஆயுதங்களை வழங்குதல்: சூழும் ஆபத்துகள் டேவிட் அக்ஸ் (டேவிட் அக்ஸ்)/ சிரியாவில் ரஷ்ஷியத் தலையீட்டின் பின்னணி (ஆசிரியர் பெயர் குறிப்பிடப்படவில்லை)/மேற்காசியாவின் பாதுகாப்பு (தர்மிஸ் அகமட்)/ ஜோர்தான்: வளைகுடாவில் ஓர் அமைதிப் பூங்கா (மிச்செல் ஜான்சன்)/ ஐரோப்பாவின் அகதிகள் நெருக்கடியின் வேர்கள் (தனஞ்சே திரிபாதி)/ அகதிகளா இடம்பெயர்ந்தோரா?(மனோஜ் சன்கினசா)/பிம்பங்கள் வரலாற்றை மாற்றும் சக்தியுடையனவா? (இயன் ஜக்)/மத்திய கிழக்கில் சர்வதேசம் மூட்டிய தீ (ஜமால் கஞ்)/அரபு நாடுகள் கூட்டு இராணுவத்தை உருவாக்கியதன் காரணம் யாது? (சிப்லி டெல்ஹமி)/எப்போதும் வன்முறைத் தீர்வுகளையே நாடிய ஏரியல் ஷரோன் (1928-2014) (அவிஷலம்) ஆகிய 10 மொழிபெயர்ப்புக் கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன.*

## 12240

**சைப்பிரஸ் மற்றும் சூடான்: அவர்களது சமாதானத்தின் இரு உதாரணங்கள்.** நியமுவா வெளியீடு. கொழும்பு 10: நியமுவா வெளியீட்டகம், மக்கள் விடுதலை முன்னணி, 198/19, பஞ்சிக்காவத்தை வீதி, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2007. (புறக்கோட்டை: ஆர்.சீ. பிரின்டர்ஸ், அன்ட் பப்ளிஷர்ஸ், 70, மிஷன் வீதி).

110 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 21x14.5 சமீ., ISBN: 955-8696-08-0.

இலங்கையின் தேசியப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக சைப்பிரஸ் அல்லது சூடான் "மாதிரியை" விடப் பொருத்தமான வேறொன்றும் இல்லை என்ற ஏகாதிபத்தியவாதிகளின் கூற்றை மக்கள் விடுதலை முன்னணி (JVP) மறுதலித்து இப்போலிக் கருத்துக்கு எதிராக மக்களை அணிதிரட்டும் நோக்குடன் சிங்களத்தில் ஜுலை 2006இல் வெளியிடப்பட்ட நூலின் தமிழாக்கமே இதுவாகும். இந்நூலைத் தமது நியமுவா அமைப்பின்மூலம் பிரசுரித்துள்ளனர். இரண்டு பகுதிகளில் எழுதப்பட்டுள்ள இந்நூலின் முதலாம் பகுதியில் பிரிவினைவாதத்தால் அடிவாங்கும் சைப்பிரஸ், சைப்பிரசின் வரலாறு, சைப்பிரசின் தேசியப் பிரச்சினை, தற்போதைய நிலை ஆகிய அத்தியாயங்களும், இரண்டாம் பகுதியில் சூடான் ஒரே நாட்டிலிருந்து இரு நாடுகள் வரை, சூடானின் வரலாறு, சூடானிய தேசியப் பிரச்சினையின் தற்போதைய வடிவம், டாபூர் பிரச்சினை, சூடானுக்குள் ஐக்கிய நாடுகள் சபையின் தலையீடு, சூடானிய தேசியப் பிரச்சினையில் நோர்வேயின் தலையீடு, சூடானின் எண்ணெய்யோடு பிணைந்த அரசியல் பொருளாதார தொடர்புகள் ஆகிய அத்தியாயங்களும் உள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 48437).

## 12241

**நட்சத்திரப் போர்:ஒரு யுத்த நோக்கு.** மு.வரதராசா. வந்தாறுமூலை: மு.வரதராசா, கிழக்குப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, மார்கழி 1996. (மட்டக்களப்பு: ஜெஸ்கொம் அச்சகம்).

xix, 99 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 18x12.5 சமீ.

சர்வதேச யுத்த அரசியல் பற்றிய ஆய்வுநூல். விண்வெளிக் கண்டுபிடிப்பும் மனித நலனும், மனிதனின் அறிவியல் வளர்ச்சி, அணு சக்தி யுகம், அமெரிக்காவின் ஆயுதப் பொருளாதாரப் போர் ஏற்படுத்தும் அவலநிலை, ஏவுகணை எதிர்ப்புக் கருவி அமைப்புக் கொண்ட புதுவகை நட்சத்திரப் போரும் அதற்கான செலவுகளும், போர் போர் போர் உலகப் போர், ஐக்கிய நாடுகள் சபையில் அமெரிக்காவின் போக்கு, போரின் மதிப்பு முடிவுரை ஆகிய ஒன்பது இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. நூலாசிரியர் அக்கரைப்பற்று ஸ்ரீ இராமகிருஷ்ண தேசிய பாடசாலையில் முகாமைத்துவ உதவியாளராக பணிபுரிந்து வருகிறார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 23336).

**12242**

**படைக் குறைப்பும் மூன்றாம் உலகமும்.** லயனல் மென்டிஸ். கொழும்பு 6: சாமர அச்சகமும் புத்தக வெளியீட்டாளர்களும், 22ஏ, மல்லிகா ஒழுங்கை, 1வது பதிப்பு, நவம்பர் 1984. (கொழும்பு 6: சாமர அச்சகம், 22ஏ, மல்லிகா ஒழுங்கை).

140 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

உலக சமாதானம் நிலவ வேண்டுமானால் படிப்படியாகப் படைக்குறைப்பை மேற்கொள்வது அவசியம். எனவேதான், படைக்குறைப்பும் சமாதானமும் அபிவிருத்தியும் பிரிக்கமுடியாதவையாக இருக்கின்றன. இப்பிரச்சினைகளை முடிந்தவரையில் விளக்கி இந்நூல் எழுதப்பட்டிருக்கின்றது. இவை மூன்றாம் உலகம்: மானிட நிலவரம், ஆதிக்கம் பெற முயற்சி, இராணுவத் தொழில் தொகுப்பு, ஆயுத உற்பத்திப் போட்டியின் பளு, ஆயுதச் சந்தை, படைக்குறைப்பும் அபிவிருத்தியும் ஸ்தூலமான மதிப்பீடுகள், கிழக்கு-மேற்கின் இராணுவச் சமபலம், உலக அரசியலின் இரு போக்குகள் ஆகிய ஒன்பது அத்தியாயங்களில் விளக்கப் பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 31787).

## 330 பொருளியல்

**12243**

**ஆரம்ப பொருளியல்.** அ.விசுவநாதன். யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா புத்தகசாலை, காங்கேசன்துறை வீதி, 3வது பதிப்பு, 1976, 1வது பதிப்பு, 1966, 2வது பதிப்பு, 1972. (யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா அச்சகம்).

(8), 391 பக்கம், அட்டவணைகள், விலை: ரூபா 10.00, அளவு: 21x14 சமீ.

ஆறு பகுதிகளைக் கொண்டமைந்துள்ள இந்நூலில் பகுதி 1இல் ஆரம்ப உரையாக, உற்பத்தி, உற்பத்திக் காரணிகள் ஆகிய அத்தியாயங்களும், பகுதி 2இல் உற்பத்தி ஸ்தாபன அமைப்புகள், தொழில் தேர்ச்சி, உற்பத்தியின் அளவு ஆகிய அத்தியாயங்களும், பகுதி 3இல் சந்தைகள், அளிப்பும் கேள்வியும், எல்லை நிலைக் கோட்பாடு ஆகிய அத்தியாயங்களும், பகுதி 4இல் தேசிய வருமானம், பங்கீட்டுக் கோட்பாடு ஆகிய அத்தியாயங்களும், பகுதி 5இல் நாணயம் அல்லது பணம், வங்கித் தொழில்முறை, இலங்கை மகா வங்கி ஆகிய அத்தியாயங்களும், பகுதி 6இல் சர்வதேச வர்த்தகம், வெளிநாட்டு நாணயம், வேலையின்மையும் வர்த்தகச் சூழலும், அரசாங்க நிதி, பொருளாதாரத் திட்டம், மீட்சி வினாக்கள், கலைச்சொல் அகராதி ஆகிய அத்தியாயங்களுமாக மொத்தம் 21 அத்தியாயங்களில் பொருளியலின் அடிப்படைகள் விளக்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 24259).

**12244**

**இலங்கை மத்திய வங்கி: பொருளாதார அளவீடு 1992இன் முதலரைப் பகுதி.** இலங்கை மத்திய வங்கி. கொழும்பு 1: நாணயச் சபை, இலங்கை மத்திய வங்கி, தபால் பெட்டி இலக்கம் 590, 1வது பதிப்பு, 1992. (கொழும்பு 14: ஸ்டார்லைன் பிரின்டர்ஸ், 213, கிரான்ட்பாஸ் வீதி).

57 பக்கம், அட்டவணைகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x16 சமீ.

1992ஆம் ஆண்டின் முதலரைப் பகுதிக்கான இலங்கையின் பொருளாதார அளவீடுகள், வேளாண்மை, கைத்தொழில், பொருளாதார சமூக நலன்புரிச் செலவுகள், விலைகள், வர்த்தகமும் சென்மதி நிலுவையும், அரசநிதி, பணமும் கொடுகடனும் ஆகிய எட்டு பிரிவுகளின்கீழ் அறிக்கையிடப்பட்டுள்ளன. (இந் நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 23655).

**12245**

**இலங்கை மத்திய வங்கி: பொருளாதார நிலை 1997.** இலங்கை மத்திய வங்கி. கொழும்பு 1: பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி, இல.30, சனாதிபதி மாவத்தை, 1வது பதிப்பு, நவம்பர் 1997. (கொழும்பு: இலங்கை மத்திய வங்கி அச்சகம்).

(6), 89 பக்கம், அட்டவணைகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x19 சமீ.

முதலாவது பகுதியில் 1997இன் பொருளாதாரம்: பொது நோக்கு என்ற தலைப்பின் கீழும், இரண்டாவது பகுதியில் பொருளாதாரச் செயலாற்றம்: முதலரைப் பகுதி 1997 என்ற தலைப்பின் கீழும், மூன்றாவது பகுதியில் பொருளாதாரத் தோற்றப்பாடு-1997 என்ற தலைப்பின் கீழும், நான்காவது பகுதியில் 1998இற்கான பொருளாதார வாய்ப்புக்கள் என்ற தலைப்பின் கீழும் இலங்கையின் பொருளாதார நிலைமை அறிக்கையிடப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 24008).

**12246**

**இலங்கை மத்திய வங்கி: பொருளாதார மீளாய்வு 1982.** இலங்கை மத்திய வங்கி. கொழும்பு 1: பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி, சனாதிபதி மாவத்தை, 1வது பதிப்பு, 1983. (கொழும்பு: குமரன் அச்சகம், 201, டாம் வீதி).

xiv, 424 பக்கம், 128 அட்டவணைகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x19 சமீ.

இலங்கையின் பொருளாதாரப் போக்குகளையும் அபிவிருத்திகளையும் பற்றிய விரிவான ஆய்வைத் தரும் பொருளாதார மீளாய்வு, 1975ஆம் ஆண்டிற்கு முன்பு மத்திய வங்கி ஆண்டறிக்கையின் ஒரு பகுதியாக இருந்து வந்துள்ளது. 1975ஆம் ஆண்டிலிருந்து பொருளாதார மீளாய்வினை மத்திய வங்கி ஆண்டறிக்கையிலிருந்து

வேறுபட்ட ஒரு வெளியீடாக வெளியிட முடிவுசெய்யப்பட்டது. இதற்கேற்ப 1982ஆம் ஆண்டுக்குரிய ஆண்டறிக்கை 1983 எப்ரல் மாதம் வெளியிடப்பட்டது. பொருளாதார மீளாய்வு, உயர் அலுவலர்களைக்கொண்ட ஆசிரியர் குழுவொன்றினால் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தினால் வெளியிடப் பட்டுள்ளது. பதினொரு பிரிவுகளின்கீழ் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இம்மீளாய்வு அறிக்கையில் தேசிய உற்பத்தியும் வருமானமும் செலவும், வேளாண்மை, கைத்தொழில், பொருளாதார சமூக செலவினம், குடித்தொகை, மனிதவலுப் பயிற்சி, தொழிவலுநிலை, விலைகளும் கூலிகளும், வர்த்தகம், சுற்றுலா, சென்மதி நிலுவை, அரச நிதி, நாணய, வங்கித் தொழில் அபிவிருத்திகள் ஆகிய விடயங்கள் பற்றிய 1982ஆம் ஆண்டுக்கான மீளாய்வு அறிக்கையிடப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 31122).

## 12247

**கேள்வியும் நிரம்பலும்.** ந.பேரின்பநாதன், ப.சிவநாதன். யாழ்ப்பாணம்: பட்டப் படிப்புகள் கல்லூரி, 148/1, ஸ்ரான்லி வீதி, 1வது பதிப்பு, மார்ச் 1986. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).

(4), 143 பக்கம், வரைபடங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14 சமீ.

விரிவுரையாளர்களான ந.பேரின்பநாதன், ப.சிவநாதன் இருவரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பொருளியல் துறையைச் சேர்ந்தவர்களாவர். இந்நூலில் எல்லைப்பயன் கோட்பாடு, கேள்விக் கோட்பாடு, நிரம்பல் கோட்பாடு, சந்தையில் விலை நிர்ணயம் ஆகிய நான்கு அத்தியாயங்களில் பொருளியல் கோட்பாட்டில் முக்கிய இடம்பெற்றுள்ள கேள்வி-நிரம்பல் பற்றிய அடிப்படைத் தத்துவங்களை விரிவாக இவ்விருவரும் இணைந்து விளக்கியுள்ளனர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 38487).

## 12248

**பொருளாதார வளர்ச்சிக் கட்டங்கள்: பொதுவுடைமைவாதச் சார்பற்ற ஒரு பனுவல்.** W.W.றொஸ்ரோ (ஆங்கில மூலம்), திருமதி இரத்தினம் நவரத்தினம் (தமிழாக்கம்). கொழும்பு 3: இலங்கை கல்வி வெளியீட்டுத் திணைக்களம், 1வது பதிப்பு, 1976. (கொழும்பு: இலங்கை அரசாங்க அச்சகம்).

xii, 211 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

அமெரிக்காவின் மசச்சுஸற்ஸ் மாநிலத் தொழில்நுட்பக் கழகத்தின் பொருளாதார வரலாற்றுப் பேராசிரியரான W.W.Rostow அவர்களால் எழுதப்பெற்று லண்டன் Cambridge University Press நிறுவனத்தால் வெளியிடப்பெற்ற The Stages of Economic Growth என்ற நூலின் தமிழாக்கம் இது. இந்நூலின் தொடக்க அத்தியாயங்களில் பொருளாதார வளர்ச்சியின் பல்வேறு கட்டங்கள் பகுத்தாய்வு செய்யப்பட்டுள்ளன. பரம்பரைச் சமூகம், முன்னிலைமைக் காலம், வளர்ச்சியின் ஆரம்பம், முதிர்ச்சி,

பெருவாரி நுகர்வுக் காலம் என முறையே வருகின்ற இவ்வைம்பெருங் கட்டங்களையும் பின்னர் ஆசிரியர் விரித்தும் விளக்கியும் எழுதியிருக்கிறார். பொதுவாக எல்லா நாடுகளுக்கும் பொருந்தத் தக்கவாறு, இற்றைக்காலப் பொருளாதார வரலாற்றை ஆதாரமாகக் கொண்டு, பொருளாதார வளர்ச்சியைப் படிமுறையாக ஆராய்கின்ற நூல் இது. முன்னுரை, வளர்ச்சியின் ஐந்து கட்டங்கள், ஆரம்பத்திற்கு வேண்டிய முன்னிலைமைகள், ஆரம்பம், முதிர்ச்சியை நோக்கி முன்னேறுதல், பெருவாரி நுகர்வுக் காலம், ருஷியாவிலும் அமெரிக்காவிலும் வளர்ச்சிமுறை, வளர்ச்சிக் கட்டங்களும் ஆக்கிரமிப்பும், வளர்ச்சிக் கட்டங்களும் சமாதானப் பிரச்சினையும், மார்க்சியமும் பொதுவுடைமைவாதமும் வளர்ச்சிக் கட்டங்களும் ஆகிய பத்து இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 35079).

### 12249

**பொருளாதாரக் கொள்கைகள்.** ஆனொல்ட் ஹார்பேர்கர், போர்ஜ் லியுங்கிரன், றோபேட் வேட், ஜுவான் கார்லோஸ் டி பப்லோ (ஆங்கில மூலம்), மா.கருணாநிதி, டி.தனராஜ் (தமிழாக்கம்), எஸ்.அன்ரனி நோபேட் (பதிப்பாசிரியர்). கொழும்பு 5: மார்கா நிறுவனம், தபால்பெட்டி எண். 601, இல.61, இசிப்பத்தான மாவத்தை, 1வது பதிப்பு, 1995. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளூமெண்டால் வீதி).

92 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.

Economic Policy என்ற தலைப்பில் Arnold Harberger, Robert Wade, Borje Ljunggren, Juan Carlos de Pablo ஆகியோர் எழுதிய கட்டுரைத்தொகுப்பின் தமிழாக்கம். இத்தொகுதியில் உள்ள கட்டுரைகள், இதன் தலையங்கம் கூறுவதுபோல் சந்தைப் பொருளாதாரம் எந்த வழிகளிற் செயற்படுகின்றது என்பது பற்றிய தெளிவான விளக்கத்தையும் ஏனைய பொருளாதார முறைமைகளுடன் ஒப்பிடும்போது ஏன் அது சிறந்ததாக உள்ளது என்பதற்குமான விளக்கத்தையும் அளிக்கின்றன. சந்தைப் பொருளாதாரம் பற்றி அதற்கு சார்பாகவும் எதிராகவும் பல தவறான எண்ணக் கருக்கள் காணப்படுகின்றன. இலங்கையில் நீண்ட மரபினைக் கொண்ட சோசலிசக் கருத்தியலானது சந்தையை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார முறைமைகள் பற்றிய சந்தேகத்தை வளர்க்கும் மனோபாவங்களைத் தோற்று வித்துள்ளது. முதலாளித்துவம், சோசலிசம் திட்டமிட்ட பொருளாதாரம், சந்தைப் பொருளாதாரம் ஆகிய கருத்தாழம் மிக்க சொற்கள் பல காணப்படுவதுடன் ஒவ்வொன்றும் ஒருவரின் கருத்தியல் சார்பு நிலைக்கேற்ப நேர்கணிய, எதிர்கணிய பொருளைத் தருவதாக உள்ளது. இரண்டு பகுதிகளாகப்பிரிக்கப்பட்டுள்ள இந் நூலில் முதலாவது பகுதியில் பொருளாதாரக் கொள்கை பற்றிய சில படிப்பினைகள், அரசு மற்றும் சந்தை என்பனவற்றின் பங்கு பற்றி ஆழமான புரிந்து கொள்ளல், கிழக்காசியாவில் சந்தைகளை ஆட்சிபுரிதல் (அறிமுகம், கிழக்காசியப் பொருளாதார வெற்றியின் குறிகாட்டிகள், விவாதம், வளர்ச்சியைத் தோற்றுவிக்கும் சந்தைகளின் ஆற்றலை விருத்தி செய்வதற்கான அரச நடவடிக்கைகள், கிழக்காசிய அரசுகளை ஒழுங்குபடுத்தியது என்ன?, விவாதத்திற்கான பதிலிறுப்பு, முடிவுரை) ஆகிய

தலைப்புகளில் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. இரண்டாம் பகுதியில், ஒரு பொருளாதார அமைச்சரின் படுதோல்வியைத் தடுத்து நிறுத்துவது எப்படி? என்ற தலைப்பில் அறிமுகம், பொருளாதாரக் கொள்கை உருவாக்கத்துடன் தொடர்பான தவறுகள், பொருளாதாரக் கொள்கையின் அமுலாக்கல், பரம்பல் (விரிவாக்கம்) தொடர்பான தவறுகள், தனிப்பட்டதும் ஆளுமை தொடர்பானதுமான தவறுகள் ஆகிய அத்தியாயங்களில் விளக்கமளிக்கப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 22092. நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தின் சேர்க்கை இலக்கம் 008892).

## 12250

**பொருளாதாரம்: பொருளாதாரக் கொள்கைகள் பற்றிய பாடநூல்.** அல்பிரட் W.ஸ்டோனியர், டக்ளஸ் சி.ஹேக். கொழும்பு 5: அரச கரும மொழித் திணைக்களம், 5, தி.பொன்சேக்கா வீதி, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1963. (கொழும்பு: அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்).

xx, 630 பக்கம், அட்டவணைகள், வரைபடங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

Alfred W. Stonier, Douglas C.Hague ஆகிய இருவரும் எழுதி Longmans Green and Co. Limited நிறுவனத்தால் வெளியிடப்பட்ட A text book of Economic Theory என்ற நூலின் தமிழாக்கம். விலைக் கொள்கை என்ற பகுதி 1இல் தேவையும் விநியோகமும், நுகர்வோனின் தேவை, சமநோக்குக் கோட்டு ஆராய்ச்சி, இரு பொருள்களுக்கு மேற்பட்ட நிலையில் நுகர்வோனின் சமநிலை, கம்பனியின் சமநிலை, கைத்தொழிலிலே போட்டி, போட்டிச் சமநிலை, ஏகபோக உரிமை, ஏகபோக உரிமைப்போட்டி, விளைவு விதிகள், இறுதிநிலை விளைதிறன், சம்பளங்கள், வாடகை, வட்டி, இலாபங்கள், உற்பத்திச் சாதனங்களுக்கிடையேயுள்ள தொடர்புகள் ஆகிய அத்தியாயங்களும், வேலைக்கொள்கை என்ற பகுதி 2இல் சர்வாங்கச் சமநிலையும் வேலையும், பணம், வேலைக் கொள்கை, நுகர்ச்சி, முதலீடு, வட்டிவீதம், கெய்ன்சின் வேலைக் கொள்கையின் சுருக்கம், கேய்ன்சும் பழைய பொருளியலும் ஆகிய அத்தியாயங்களுமாக மொத்தம் 24 அத்தியாயங்களில் இந்நூல் உயர் கல்வி, பல்கலைக்கழக மாணவர்களுக்காக விரிவாக எழுதப் பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 23595).

## 12251

**பொருளியல்: முதற் பகுதி.** H.M.குணசேகர, W.D.லக்ஷ்மன். கொழும்பு 10: கல்வி வெளியீட்டுத் திணைக்களம், மாளிகாவத்தைச் செயலகம், 2வது பதிப்பு, 1977, 1வது பதிப்பு, 1976. (கொழும்பு: அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்).

vii, 96 பக்கம், வரைபடங்கள், அட்டவணைகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

இப்பகுதியில் ஒரு சமூகத்தின் அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகள், பொருளாதார அமைப்பு முறைகளும் மாற்றமும் பல்வேறு வகைகளும், தேவையும் வழங்கீடும் ஆகிய மூன்று அத்தியாயங்களில் தேசிய உயர்கல்விச் சான்றிதழ்ப் பரீட்சைக்குரிய பொருளியலின் பல்வேறு அம்சங்களும் விளக்கப்பட்டுள்ளன. இந்நூலின் மொழிபெயர்ப்பாளர்களாக கு.உதயகுமார், அ.தாசீசியஸ், த.ர.இராசலிங்கம், எம்.பீ.எச்.மொகமட் ஆகியோர் பணியாற்றியுள்ளனர். (இந் நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 28255).

### 12252

**பொருளியல்: இரண்டாம் பகுதி.** W.D.லக்ஷ்மன், H.M.குணசேகர, G.W.பர்ணாந்து. கொழும்பு 10: கல்வி வெளியீட்டுத் திணைக்களம், மாளிகாவத்தைச் செயலகம், 1வது பதிப்பு, 1979. (கொழும்பு: அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்).

(4), 102 பக்கம், விளக்கப்படங்கள், அட்டவணைகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.

தேசிய வருமானம், பணமும் வங்கித் தொழிலும், விலைமட்டமும் சுட்டெண்களும் பணவீக்க பணச் சுருக்கங்களும் ஆகிய மூன்று அத்தியாயங்களில் கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சைக்குரிய பொருளியலின் பல்வேறு அம்சங்களும் இந்நூலில் விளக்கப்பட்டுள்ளன. இந்நூலின் மொழிபெயர்ப்பாளர்களாக கு. உதயகுமார், இ.சிவானந்தன், த.ர.இராசலிங்கம் ஆகியோர் பணியாற்றியுள்ளனர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 28254).

### 12253

**பொருளியல் மூலம் (பகுதி 1).** I.T.S. வீரவர்த்தனாவும் பாரியாரும். கொழும்பு 7: வெளியீட்டுப் பிரிவு, அரச கரும மொழித் திணைக்களம், புல்லர் வீதி, 2வது பதிப்பு, 1968, 1வது பதிப்பு, 1960. (கொழும்பு: இலங்கை அரசாங்க அச்சகம்).

(10), 300 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14 சமீ.

உயர்கல்வி, பல்கலைக்கழக மட்டத்தில் பொருளியல் பாடத்திற்காக பயன் படுத்தப்படும் இந்நூலில் பொருளாதார மூலம் பற்றிய பாடங்கள் மானிய யுகம், பெரும் புரட்சி, முதலாண்மையும் சமுதாயவாதமும் பேணல் அரசும், புதுச் சமுதாயத்தில் பொருளியல் ஒழுங்கு, மனிதனுடைய தேவைகளும்-அவற்றைத் தணித்தலும், உறுதிக் கேள்வி, போட்டியுற்பத்தியாளன், தனியுரிமை, கேள்வியும் நிரம்பலும் விலையும், சம்பளங்கள், வாடகை, வட்டியும் இலாபமும், பணமும் வங்கிகளும், அரசாங்க வரவுசெலவுப் பரிபாலனம் ஆகிய 14 அத்தியாயங்களில் விளக்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 35090).

**மேலும் பார்க்க: 12222**

## 331.88 தொழிற் சங்கங்கள்

### 12254

**தொழில் உறவுகள் பற்றிய கையேடு.** ஆசிரியர் குழு, பீலிக்ஸ் டீ பிலிப் (தமிழாக்கம்). கொழும்பு 4: பிறெட்ரிக் ஈபர்ட் ஸ்டிவ்டுங் (Friedrich Ebert Stiftung FES), 4, அடம்ஸ் அவென்யூ, 1வது பதிப்பு, 1998. (கொழும்பு: நியூ கணேசன் பிரின்டர்ஸ்).

250 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x14 சமீ., ISBN: 955-607-021-4.

Friedrich Ebert Stiftung என்பது இலாபநோக்கமற்ற சமூக, சனநாயகத்திற்கும் தொழிலாளர் அமைப்பிற்கும் உரிய அடிப்படைக் கருத்துக்களுக்காகவும் மதிப்புகளுக்காகவும் உழைக்கும் ஓர் ஜேர்மன் தனியார் கல்வி நிறுவனமாகும். இந்நூல் அறிமுகம், தொழில் தருநர்-தொழிலாளர் உறவு, தொழில் ஒப்பந்தம், நியதி நிபந்தனைகள், சோதனையில் இருத்தல், தொழிலை முடிவுறுத்துதல், தொழிற்சங்கங்கள், முகாமைத்துவத்தில் வேலையாட்களின் பங்கேற்பு, அரசும் வேலையாளும், இயைபான தொழிற் சட்டங்கள், வேலையாட்களும் பகிரங்க அவசரகால நிலையும், தொழில் நியாய சபைகள், அரசியலமைப்புப் பாதுகாப்புகள், சர்வதேச உடன்படிக்கைகள், சர்வதேச தொழில் தாபனம் (ஐ.எல்.ஓ) ஆகிய 15 அத்தியாயங்களில் விரிவாக எழுதப்பட்டுள்ளது. ஆசிரியர் குழுவில் R.K.W.குணசேகர, K.விஜயரத்தினம், J.C.வெலியாமுன, S.R.அதிகாரி, திருமதி அன்டனட் திருப்பதி, ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். இந்நூலின் தமிழாக்கத்தை சட்ட வரைநர் திணைக்களத்தின் பிரதம மொழிபெயர்ப்பாளர் பீலிக்ஸ் டீ பிலிப் அவர்கள் மேற்கொண்டுள்ளார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 38009).

### 12255

**தொழிற்சங்க நூற்றாண்டு: 1893-1993.** இலங்கைத் தொழிலாளர் கல்வியாளர் கழகம். கொழும்பு: இலங்கைத் தொழிலாளர் கல்வியாளர் கழகம், இல. 7, சேர்க்குலர் வீதி, மவுன்ட் லவீனியா, 1வது பதிப்பு, 1995. (களனி: வித்யாலங்கார அச்சகம்).

x, 181 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ., ISBN: 955-9360-00-0.

இலங்கையில் 1893இல் தொழிற்சங்கம் தொடக்கப்பட்டு நூற்றாண்டுகள் நிறைவடைந்தமையையொட்டி வெளியிடப்பெற்றுள்ள சிறப்பு மலர். இலங்கைத் தொழிற்சங்கங்கள் பற்றிய கடந்த ஒரு நூற்றாண்டு கால வரலாற்று, பரிணாம வளர்ச்சி, மற்றும் அவற்றின் அனுபவங்கள் சிலவற்றைப் பற்றிய தகவல்களை வழங்குவது இச்சிறப்பு மலரின் நோக்கமாகின்றது. இதில் மும்மொழிகளிலுமான 32 கட்டுரைகள் உள்ளன. இவை அனைத்தும் தொழிற்சங்கக் கல்வித் துறையிலும், நேரடியான தொழிற்சங்க நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு அனுபவம் மிக்கவர்களால் எழுதப்பட்டுள்ளன. இவற்றில் 20 ஆங்கிலமொழியிலும், 8 சிங்கள மொழியிலும், 4 தமிழ்மொழியிலும் எழுதப்பட்டுள்ளன. தமிழ்மொழி மூலக் கட்டுரைகள்

*"மலைநாட்டவர்களும் அவர்கள் வரலாற்றின் ஒரு சிறு துளியும்" (வீ.எஸ்.ராஜா, இலங்கை கிராமிய தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளர்), "இலங்கை தொழிற்சங்க வரலாற்றில் சில முக்கிய மைல்கற்களும் சமூக முன்னேற்றமும்" (எஸ்.வி.சண்முகராஜா, அகில இலங்கை தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளர்), "இலங்கைத் தொழிற் சட்டங்களின் அபிவிருத்தி" (எஸ்.இராமநாதன், லங்கா தோட்டத் தொழிலாளர் யூனியன் பொதுச் செயலாளர்), "பெருந்தோட்டத்துறை தொழிலுறவுகளின் போக்கு ஒரு பொது நோக்கு" (ஓ.ஆறுமுகம், இலங்கை மன்றக் கல்லூரியின் முதுநிலை விரிவுரையாளரும் தொழிலாளர் கல்வியாளர் கழகத்தின் உதவிப் பொருளாளரும்) ஆகிய தலைப்பு களில் இக்கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 38531).*

### 12256

**மேதின வரலாறும் அதன் போதனைகளும்.** *வீ.எல்.பெரைரா (பொதுச் செயலாளர்). கொழும்பு 12: மலையக இளைஞர் பேரவை, 74. 2/1, டாம் வீதி, 1வது பதிப்பு, மே 1978. (அச்சக விபரம் தரப்படவில்லை).*

*12 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18.5x13.5 சமீ.*

*மே தினம் எனப்படும் உலகத் தொழிலாளர் தினம் ஆண்டுதோறும் மே முதலாம் திகதி உலகளாவிய ரீதியில் கொண்டாடப்படுவதாகும். 1889 ஜூலை 14 அன்று பாரீசில் சோசலிசத் தொழிலாளர்களின் "சர்வதேச தொழிலாளர் பாராளுமன்றம்" கூடியது. 18 நாடுகளில் இருந்து 400 பிரதிநிதிகள் இக்கூட்டத்தில் பங்கேற்றனர். பிரெட்ரிக் ஏங்கெல்ஸ் உட்படப் பலர் கலந்துகொண்ட இக்கூட்டத்தில் கார்ல் மார்க்ஸ் வலியுறுத்திய 8 மணி நேர போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வது என்றும், 1890 மே 1 அன்று அனைத்துலக அளவில் தொழிலாளர்கள் இயக்கங்களை நடத்திட வேண்டும் என்றும் அறைகூவல் விடப்பட்டது. இந்த அறைகூவலே மே முதல் நாளை, சர்வதேச தொழிலாளர் தினமாக, மே தினமாக அனுஷ்டிப்பதற்கு வழிவகுத்தது. இந்நூல் மேதினம் பற்றிய வரலாற்றுக் குறிப்புகளையும், இலங்கையின் பொருத்தப்பாடுகளையும் எளிய நடையில் விளக்குகின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 2750).*

## 336 நிதியியல், வங்கியியல்

### 12257

**நாணய முகாமைத்துவம்.** *மாணிக்கம் நடராஜசுந்தரம். யாழ்ப்பாணம்: உயர் கல்விச் சேவைகள் நிலையம், 374, மணிக்கூட்டுக் கோபுர வீதி, 1வது பதிப்பு, 2000. (யாழ்ப்பாணம்: உயர் கல்விச் சேவைகள் நிலையம்).*

*(8), 187 பக்கம், விளக்கப்படங்கள், வரைபடங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x18 சமீ.*

*நூலாசிரியர் மாணிக்கம் நடராஜசுந்தரம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ வணிகபீடத்தில் பீடாதிபதியாகப் பணியாற்றுகின்றார்.* Money

Management எனப்படும் நாணய முகாமைத்துவம் பற்றிய இந்நூலில் அவர் பணம், வட்டிவீத கட்டமைப்பு, நிதிச் சந்தையும் நிதிச் சாதனங்களும், பண நிரம்பல், பணத்திற்கான கேள்வி, நாணயக் கொள்கை, வங்கிகளின் தீர்வை இல்லம், நாணய மாற்றுவீதமும் ஆபத்து முகாமைத்துவமும், வங்கியியல் புதிய அணுகு முறைகள் ஆகிய ஒன்பது இயல்களில் அதனை விரிவாக விளக்கியிருக்கின்றார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 30130).

## 338.9 பொருளாதார அபிவிருத்தி

### 12258

**போரின் பின்-முன்நோக்கிய நகர்வு.** சி.வி.விக்னேஸ்வரன். கொழும்பு 11: அதிகாரத்தைப் பகிர்ந்து ஐக்கியப்படும் இயக்கம் (Movement for unity with Power Sharing- MUPS), இல. 72, பாங்க்ஷால் வீதி, 1வது பதிப்பு, மார்ச் 2014. (அச்சக விபரம் தரப்படவில்லை).

52 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ.

வடமாகாணசபை முதல்வர் நீதியரசர் க.வி.விக்கினேஸ்வரன் அவர்களால் 2014 பெப்ரவரி 13 ஆம்திகதி தாஜ் சமுத்திரா ஹோட்டலில் நடைபெற்ற "போருக்குப் பின்னரான சமூகப் பொருளாதார அபிவிருத்தி" என்ற தொனிப்பொருளில் இடம்பெற்ற பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் தேசிய மாநாட்டில் நிகழ்த்திய பிரதான உரையின் மும்மொழிகளிலுமான எழுத்து வடிவம் இதுவாகும். "போரின் பின்னரான முன்னோக்கிய நகர்வு என்பது அரசியல் அதிகாரங்களைப் பகிர்ந்துகொள்ளும் தேசிய ஐக்கியமாக மட்டுமே இருக்கமுடியும் என்பதை இங்கே வடமாகாண முதல்வர் க.வி.விக்கினேஸ்வரன் தர்க்கரீதியாக விளக்கியுள்ளார். தேசிய ஐக்கியம் என்ற தலைப்பு, பார்வையற்றோர் ஆளாளுக்கு யானையைத் தொட்டுத் தடவிப் பார்த்து கருத்துச் சொல்லும் விடயத்தைப் போல இந்நாட்டில் இருக்கின்றது. அது அப்படி இனிமேலும் இருக்க முடியாது. இருக்கவும் கூடாது. தேசிய ஐக்கியம் என்பது உணரப்படக் கூடிய, புரியக்கூடிய திட்டவட்டமான விடயம் ஆகும். அதற்கான முன்நிபந்தனை சமத்துவம் ஆகும். அந்த சமத்துவம் இனங்களுக்கிடையே அரசியல் அதிகாரங்கள் பகிரப்படும்போது மாத்திரம் சாத்தியமாகும். ஆகவே அரசியல் அதிகார பகிர்வுக்கு எதிரானவர்கள் தான், இந்த நாட்டின் ஐக்கியத்துக்கு எதிரான பிரிவினைவாதிகள். அரசியல் அதிகார பகிர்வுக்கு ஆதரவானவர்கள் இந்த நாட்டின் ஐக்கியத்துக்காகப் பாடுபடுபவர்கள்". (மனோ கணேசன், முகவுரையில்).

## 340 சட்டவியல்

### 12259

**இலங்கையில் தமிழர் இறைமை.** *சந்திரசேகரம் பரமலிங்கம்.* London: Segarams Publishers, 221A, Edgware Road, London NW9 6LP, *1வது பதிப்பு, ஜனவரி 2018. (தமிழ்நாடு: எழுத்து கலையகம், திருநெல்வேலி).*

*(42), 274 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5*x*17.5 சமீ.*, ISBN: *978-1-9999141-0-3.*

*"சர்வதேசச் சட்டம், அரசுகளை மட்டுமன்றி, இன, மொழி, மத, சமூகப் பிரிவினரையும், அதனது விடயப்பொருளாகக் கொண்டு வளர்ச்சி கண்டுள்ளது. இப்பின்னணியில், இந்நூல் தமிழர் இறைமைக் கோரிக்கையுடன் தொடர்புடைய சர்வதேசச் சட்டக் கோட்பாடுகள், சட்ட ஆவணங்கள், தேசிய, சர்வதேச, நீதி மன்றங்களது தீர்ப்புகள் என்பன இலங்கைத் தமிழர்களது இறைமைக் கோரிக்கைக்குத் தீர்வுகாண எவ்வாறு பொருத்தமுடையன என்று ஆராய்கின்றது. காலம் காலமாக, பல்வேறு துறைசார்ந்தோரால் இலங்கைத் தமிழர்களது வரலாறு, அரசியல், கலாச்சாரம் என்ற விடயங்கள் எடுத்துக்காட்டப்பட்டாயிற்று. இலங்கைத் தமிழர்களது இறைமைக் கோரிக்கையின் சர்வதேசச் சட்டப் பரிமாணங்கள் எவை என்பதே இந்நூலின் அடிப்படைத் தேடுதலாக அமைகின்றது. இத்துறையில் இதுவே முதல் முயற்சி என நம்புகின்றேன்" (நூலாசிரியர் முன்னுரையில்). இந் நூல் ஆய்வு பற்றிய பொது அறிமுகம், சர்வதேசச் சட்டத்தில் இறைமைக் கோட்பாடு, சர்வதேசச் சட்டத்தில் சுயநிர்ணய உரிமை சட்டத் தத்துவமும், ஐ.நாவின் சட்ட கட்டமைப்பும், சர்வதேசச் சட்டத்தில் பிரிந்துசெல்லும் உரிமை, சர்வதேசச் சட்டத்தில் இறைமையும் மனித உரிமையும், சர்வதேசச் சட்டத்தில் சிறுபான்மை யோர் உரிமை, கொசோவா(*Kosovo*), குபெக் (*Qubec*) மக்களின் இறைமைக் கோரிக்கை, இலங்கைத் தீவின் வரலாற்றுப் பின்னணிகள், இலங்கையில் குடியேற்றவாதத்தின் முடிவாக்கம், தமிழ்த் தேசிய இனத்தின் இறைமைக் கோரிக்கையின் சட்டப் பரிமாணங்கள், சர்வதேசச் சட்டத்தின் அடிப்படையில் இலங்கைத் தமிழ்த் தேசிய இனத்தின் இறைமைக் கோரிக்கைக்கான தீர்வுகள் ஆகிய பதினொரு அத்தியாயங்களில் இந்நூல் கட்டமைக்கப்பட்டுள்ளது.*

## 340.05 சட்டவியல் ஆய்விதழ்கள், ஆண்டுமலர்கள்

### 12260

**நீதிமுரசு 1989.** *இதழாசிரியர் குழு. கொழும்பு 12: இலங்கை சட்டக் கல்லூரி தமிழ் மன்றம், 244, ஹல்ஸ்ரொப் வீதி, 1வது பதிப்பு, டிசம்பர் 1989. (கொழும்பு 12: குமரன் அச்சகம், 201 டாம் வீதி).*

*138 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5*x*18.5 சமீ.*

*இலங்கைச் சட்டக் கல்லூரியின் சட்ட மாணவர் தமிழ் மன்றத்தின் 1989ஆம் ஆண்டுக்கான ஆண்டு மலர் பல்வேறு தமிழ் ஆங்கிலக் கட்டுரைகளுடன்*

வெளிவந்துள்ளது. தேசவளமைச் சட்டத்தின் ஏற்புடைமை (நா.செல்வக்குமாரன்), ஒத்த நிகழ்வுகள் சான்று-ஒரு பார்வை (செ.சதானந்தன்), தேடிய தேட்டம் அதன் ஒன்றிணைப்பு முறையிலிருந்து தனிப்பட்ட ஆதன முறைக்கு மாற்றம் (நாகேந்திரா), கலாநிதி மௌனகுருவுடன் நேர்காணல் (செல்வி. லிங்கேஸ்வரி காசிப்பிள்ளை), சட்டத்தின் முன் யாவரும் சமம் (ஆ.ஜெகசோதி), வழக்காற்றுத் திருமணம் நடைமுறையிலுள்ள திருமண பதிவுக் கட்டளைச் சட்டத்தினை புறத்தொகுக்கு கின்றதா? முஸ்லிம் சட்டமும் வாரிசுச் சொத்துப் பகிர்ந்தளிப்பும் (எம்.லாபிர் தாஹிர்), Absolute Liability (Ryaland vs Fletcher) கோட்பாட்டின் விருத்தியும் இலங்கை வழக்குகளில் அதன் தாக்கமும் (எம்.எஸ்.எம்.கமில்), அரசியலமைப்புக்கான 13ஆவது 16ஆவது திருத்தங்களும் மொழிகளும் (வி.புவிகரன்), இஸ்லாமிய சான்றுச் சட்டம் (என்.எம்.எம்.பிஷ்ருல் அமீன்), இலங்கையின் நரம்புமண்டல தாக்கத்தால் பாதிக்கப்படுபவர்களுக்கான நியதிச் சட்டப் பாதுகாப்பினை அறிமுகப்படுத்தல் அவசியமா?, புலமைச் சொத்துச் சட்டமும் நேர்மையற்ற போட்டியும் (மனோ இராமநாதன்) ஆகிய முக்கியமான கட்டுரைகள் இவ்விதழில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 10194).

### 12261

**நீதிமுரசு 1991.** ஏ.எம்.மொஹமட் றஊப் (இதழாசிரியர்). கொழும்பு: இலங்கை சட்டக் கல்லூரி தமிழ் மன்றம், 1வது பதிப்பு, செப்டெம்பர் 1991. (கொழும்பு 12: குமரன் அச்சகம், 201 டாம் வீதி).

(142) பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x19 சமீ.

இலங்கைச் சட்டக் கல்லூரியின் சட்ட மாணவர் தமிழ் மன்றத்தின் 1991ஆம் ஆண்டுக்கான ஆண்டு மலர் (16-09-1990) பல்வேறு தமிழ் ஆங்கிலக் கட்டுரை களுடன் வெளிவந்துள்ளது. ஆசிச் செய்திகள், வருடாந்த அறிக்கைகளுடன், இலங்கைத் தேர்தல்களும் அங்கத்தவர்கள் தெரிவுசெய்யப்படும் முறைகளும் (கே. ஜீ.ஜோன்), விவாகரத்து ஒரு கண்ணோக்கு (யூட் உதயகுமார்), சட்டவியலில் தண்டனைகள் ஒரு கண்ணோட்டம் (எம்.கே.பேரின்பராஜா), சொத்தும் சொத்துரிமையும் (சீ.வீ.விக்கினேஸ்வரன்), குற்றவியல் வழக்குகளில் கடும் பொறுப்பு (இ.மு.இஸ்ஹர்), கருச்சிதைவு சட்டபூர்வமாக்கப்படலாமா? (சுமந்திரன் மதியாபரணம்), நமது நாட்டுக் கைத்தொழில் பிணக்குகளில் முதுநிலை விசாரணையின் பங்கு (M.Z.M.ஹில்மி), விளம்பல் வழக்குகள் (யூ.ஏ.மௌஜூத்), மீள ஒப்படைப்பும் பயங்கரவாதமும்-சர்வதேச சட்டத்தில் ஒரு ஆய்வுரைக் கண்ணோட்டம் (எம்.இளஞ்செழியன்) ஆகிய கட்டுரைகளும், தேவை தானா (கவிதை, கேசவன் முதலி), நான் கிளம்பிவிட்டேன் என்னைத் தடுக்காதே (கவிதை, எஸ்.எம்.எம்.நிளாம்), இனியாவது புரியுமா?(கவிதை, மொஹமட் மெக்கி), ஒரு நிமிடம் (கவிதை, விஜிதா சண்முகராஜா), தண்டனை தண்டனை (சிறுகதை, ரசீத் எம்.இம்தியாஸ்), ஏது விடியல் (கவிதை, வி.ஜோன்சன்), கண்ணுறங்கு கண்மணியே (கவிதை, கி.துரைராசசிங்கம்) ஆகிய படைப்பாக்கங்களும்

தமிழில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 11090).

### 12262

**நீதிமுரசு 1994.** சின்னத்துரை மயூரன் (இதழாசிரியர்). கொழும்பு 12: இலங்கை சட்டக் கல்லூரி தமிழ் மன்றம், 244, ஹல்ஸ்ரொப் வீதி, 1வது பதிப்பு, செப்டெம்பர் 1994. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).

(130) பக்கம், அட்டவணைகள், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x18.5 சமீ.

இலங்கைச் சட்டக் கல்லூரியின் சட்ட மாணவர் தமிழ் மன்றத்தின் 1994ஆம் ஆண்டுக்கான ஆண்டு மலரின் 31ஆவது இதழ் (17-09-1994) பல்வேறு தமிழ் ஆங்கிலக் கட்டுரைகளுடன் வெளிவந்துள்ளது. ஆசிச் செய்திகள், வருடாந்த அறிக்கைகளுடன், மாகாண சபைகளும் அவற்றின் அமைப்பும் அவை உருவாக்கப் படுவதற்குக் காரணமாயிருந்த சட்டமும் (மாணிக்கவாசகர் கணேசராஜா), ஆவணப்பதிவில் முந்துரிமை (க.வி.விக்கினேஸ்வரன்), உரிமை நிறுவல் வழக்கின் தன்மையும் பயன்பாடும் (சிவா. திருக்குமரன்), மனநோயாளியும் குற்றம் புரிய முடியுமா? (ஜானகி கணேந்திரா), நீதி (திருமதி சு.இராஜகுலேந்திரா), ஒரு புதிய கம்பெனியைக் கூட்டிணைத்தல் (கந்தையா நீலகண்டன்), திருமணத்தில் வலிதுடைமையும் சட்ட விளைவுகளும் (வாசுகி நடராஜா), அரசியலமைப்பும் சட்ட ஆட்சியும் (இராமநாதன் கண்ணன்), நிருவாகச் சட்டம் -ஒரு கண்ணோட்டம் (நா.செல்வக்குமாரன்), தீங்கியல் சட்டத்தில் இடம் கொண்டிருப்போரின் பொறுப்புடைமை (ஜீ.எம்.சிவபாதம்), நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் (எச்.எம்.எம்.பஸில்), தீங்கியலில் நரம்பு மண்டலத் தாக்கத்துக்காக வழக்குத் தொடரக்கூடிய சந்தர்ப்பங்கள் (ராமையா யோகேஸ்வரி) ஆகிய சிறப்புக் கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 23644).

### 12263

**நீதிமுரசு 2009.** இதழாசிரியர் குழு. கொழும்பு 12: இலங்கை சட்டக் கல்லூரி தமிழ் மன்றம், 244, ஹல்ஸ்ரொப் வீதி, 1வது பதிப்பு, 2009. (அச்சக விபரம் தரப்படவில்லை).

xx, 241 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x19 சமீ.

இலங்கைச் சட்டக் கல்லூரியின் சட்ட மாணவர் தமிழ் மன்றத்தின் 2009ஆம் ஆண்டுக்கான ஆண்டு மலரின் 44ஆவது இதழ், பல்வேறு தமிழ் ஆங்கிலக் கட்டுரைகளுடன் வெளிவந்துள்ளது. ஆசிச் செய்திகள், வருடாந்த அறிக்கைகளுடன், அம்மா (சு.சு.உஷாந்தினி), பகிரங்க நம்பிக்கைப் பொறுப்புக் கோட்பாடு: ஓர் ஆய்வு (செ.செல்வகுணபாலன்), சன சமுதாயத்தில் பாதுகாப்புத் தேவைக்கான நிரலில் பயங்கரவாதத் தடைச்சட்டம் மற்றும் அவசரகால ஒழுங்குவிதிகள் (ச.

ஆனல்ட் பிரியந்தன்), எப்போது நான் நானாக (சிவதர்ஷினி சிவலிங்கம்), சட்ட முரணான கைது ஒரு அடிப்படை உரிமை மீறலாகும் (சா.அன்புவதனி), கனவாகிப் போய்விடுமோ? (இ.எழில்மொழி), பெண்ணியக் கவிதை வளர்ச்சி (மேமன்கவி), தமிழே எம்முடலிலே உதிரமாய் ஊறும் (மன்னார் அமுதன்) ஆகிய தமிழ்ப் படைப்பாக்கங்களும் ஏராளமான ஆங்கிலப் படைப்பாக்கங்களும் இம்மலரில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 23093).

## 12264

**நீதிமுரசு 2010**. இதழாசிரியர் குழு. கொழும்பு 12: இலங்கை சட்டக் கல்லூரி தமிழ் மன்றம், 244, ஹல்ஸ்ரொப் வீதி, 1வது பதிப்பு, 2010. (கொழும்பு 6: எஸ். பி.கிராப்பிக்ஸ்).

xv, 245 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: ரூபா 300., அளவு: 29x20 சமீ.

இலங்கைச் சட்டக் கல்லூரியின் சட்ட மாணவர் தமிழ் மன்றத்தின் 2010ஆம் ஆண்டுக்கான ஆண்டு மலரின் 45ஆவது இதழ் பல்வேறு தமிழ் ஆங்கிலக் கட்டுரைகளுடன் வெளிவந்துள்ளது. ஆசிச் செய்திகள், வருடாந்த அறிக்கைகளுடன், சட்ட உதவியினைப் பெற்றுக்கொள்வதற்கான உரிமை கோட்பாடுகளும் நடைமுறைப் பிரச்சினைகளும் (இரா.ஜெ.ட்ரொஸ்கி), கொசொவோ சுதந்திரப் பிரகடனத்தின் சர்வதேச சட்ட இயைபுத் தன்மை தொடர்பில் சர்வதேச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு: சில அறிமுகக் குறிப்புகள் (குமாரவடிவேல் குருபரன்), தீங்கியல் சட்டத்தில் கவனயீனம் எனும் கோட்பாடு (நடராஜா ரஜீவன்), சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையின் தார்ப்பரியம் (மேனகா கந்தசாமி), அதிகரித்துவரும் பெண்கள் மீதான வன்முறை சட்டத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள பெண்ணுரிமை கள் (வியாளினி தனபாலசிங்கம்), பகிடிவதைக்குப் பின்னால் (பவித்திரா வரவேஸ்வரன்), தீர்ப்பும் தண்டனையும் (ஜின்னாஹ் ஷரிபுத்தீன்), எதை எண்ணிப் பாட (மர்சூம் மௌலானா), பெய்யெனப் பெய்யா மழை (மட்டுவில் ஞானகுமாரன்), செந்நெறி காட்டும் வள்ளுவம் (இந்தி விமலேஸ்வரன்), தமிழ் இலக்கியங்கள் நீதித்துறைக்கு ஆற்றிய பணிகள் (எழில்மொழி இராஜகுலேந்திரா), வல்லமை தாராயோ? (எழில்மொழி இராஜகுலேந்திரா), வயோதிப இல்லத்திலிருந்தொரு மடல் (எம்.கே.எப். பசவா) ஆகிய தமிழ்ப் படைப்பாக்கங்களும் இருபது ஆங்கிலப் படைப்பாக்கங்களும் இம்மலரில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 49928).

## 12265

**நீதிமுரசு 2012**. துளசிகா கேசவன் (இதழாசிரியர்). கொழும்பு 12: இலங்கை சட்டக் கல்லூரி தமிழ் மன்றம், 244, ஹல்ஸ்ரொப் வீதி, 1வது பதிப்பு, 2012. (கொழும்பு 6: Fast Printers, 289, ½, காலி வீதி).

(32), 186 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 29x21 சமீ.

இலங்கைச் சட்டக் கல்லூரியின் சட்ட மாணவர் தமிழ் மன்றத்தின் 2012ஆம் ஆண்டுக்கான ஆண்டு மலரின் 47ஆவது இதழ், பல்வேறு தமிழ் ஆங்கிலக் கட்டுரைகளுடன் வெளிவந்துள்ளது. ஆசிச் செய்திகள், வருடாந்த அறிக்கைகளுடன், 1979ஆம் அண்டு 44ஆம் இலக்க ஆரம்ப நீதிமன்றங்கள் நடபடிச் சட்டத்தின் கீழான பிரிவு வழக்குகள் (க.வி.விக்கினேஸ்வரன்), மாறிடும் சமூகத்தில் ஊடகங்களின் வகிபங்கு: ஒருமெய்ப்பொருள் நோக்கு (வி.ரி.தமிழ்மாறன்), தேசவழமையின் கீழான ஆதனம் (செ.செல்வகுணபாலன்), முஸ்லிம் தனியார் சட்டத்திற்கு திருத்தம் அவசியமா?(A.H.G. அமீன்), குற்றவியல் நீதிமன்றம் ஒன்றில் எதிரி ஒருவர் எவ்வாறு விளங்கப்படுகிறார்? (கே.ஜீ.ஜோன்), பிரேத பரிசோதனையின் அவசியம் (சுஜப் ஆஷீக்), நிபுணத்துவ சாட்சியம் (துளசிகா கேசவன்), குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக் கோவையில் வழக்குரைகளின் திருத்தம் மிகவும் திறந்த ஒரு அணுகுமுறையைக் கொண்டிருத்தலும் ஒரு விதிக்காக திருத்தம் ஒன்று பொதுவாக அனுமதிக்கப்படுதலும் (மகிழினி மடோனா மரியதாஸ்), இலங்கையில் சிறுவர் உரிமை தொடர்பான சட்ட ஏற்பாடுகளும் மோசமாக அதிகரித்துவரும் சிறுவர் துஷ்பிரயோகமும் (யோகானந்தி யோகராசா), இலங்கை தேசிய இயக்கமும் (தேசிய காங்கிரஸ்) தளர்வும் (சுஜீவன் நடராஜா), மரண வாக்குமூலம் (ஐஸ்வர்யா சிவகுமார்), சிறுவர் உழைப்பு எனும் கண்ணோட்டத்தில் சிறுவர் பாதுகாப்பு நிறுவனங்களின் சமூகப் பணிகள் (M.K.F. பஸீலா) ஆகிய சட்டவியல் சார்ந்த தமிழ்க் கட்டுரைகளும், ஆங்கிலக் கட்டுரைகள் சிலவும், கம்பவாரிதி இ.ஜெயராஜ், ஏ.எம்.எம்.அலி, ஐஸ்வர்யா சிவகுமார், பாத்திமா இர்பியா ஷரீப், என்.நஜ்முல் ஹுசைன் ஆகியோரின் கவிதைகளும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 244477).

## 342 அரசியலமைப்புச் சட்டம்

### 12266

**இரண்டாம் குடியரசு அரசியலமைப்பு.** U.T.தமீம். கொழும்பு 13: U.T.தமீம், ராஜேஸ்வரி நிறுவனம், 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (அச்சக விபரம் தரப்படவில்லை).

35 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ.

ஒவ்வொரு நாட்டிற்கும் அரசியல் திட்டம் என்பது முழுமையாக ஒரு அரசினை செயற்படுத்தும் கருவியாக இருப்பதோடு இவ் அரசியலமைப்பானது ஒவ்வொரு அரசிற்கும் ஏற்றவகையில் நெகிழும், நெகிழா அரசியலமைப்பாகவும் ஒற்றையாட்சி, சமஷ்டியாட்சி அரசியலமைப்பாகவும் மற்றும் எழுதப்பட்ட எழுதப்படாத அரசியலமைப்பாகவும் அமைந்துள்ளது. இதன்படி இலங்கையானது எழுதப்பட்ட நெகிழா ஒற்றையாட்சி அரசியலமைப்பினைக் கொண்டுள்ளது. பிரித்தானியா இலங்கையில் காலனியாதிக்கத்தினை நிலை நாட்டிய காலம் முதல் இலங்கையில் முறையே 1833, 1910, 1921, 1924, 1931, 1947 ஆண்டுகளில் பல்வேறு அரசியலமைப்பு சீர்திருத்தங்கள் முன்வைக்கப்பட்டன. ஆனால் 1948 ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரம் பெற்றதன் பின்னர் 1978ஆம் ஆண்டு இரண்டாம் குடியரசு

அரசியலமைப்பு இலங்கை மக்களால் தமக்கென உருவாக்கிக் கொள்ளப்பட்டது. இவ்வாறு 1978 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இலங்கையின் அரசியலமைப்பு இன்றுவரையிலும் இலங்கையில் நடைமுறையில் இருந்தாலும் இது பல்வேறு குறைபாடுகளையும் நெருக்கடிகளையும் கொண்ட அரசியலமைப்பாகவே காணப்படுகின்றது. இந் நெருக்கடிகள் மற்றும் புதிய அரசியலமைப்பின் முக்கியத்துவம் என்பவற்றை உள்ளடக்கிய ஒரு சுருக்கமான விமர்சனப் பார்வை யாக இந்நூல் அமைகின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் PAM4098).

### 12267

**இலங்கைக்கான ஜனநாயக அரசியல் கட்டமைப்பு.** அரசயாப்பு சீர்திருத்த இயக்கம். கொழும்பு 3: அரசயாப்பு சீர்திருத்த இயக்கம், 18/2 அலோய் சாலை, 1வது பதிப்பு, பெப்ரவரி 1995. (அச்சக விபரம் தரப்படவில்லை).

v, 16 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14.5 சமீ.

இலங்கையின் அரசியலானது, கடந்த ஒரு தசாப்தத்திற்கும் மேலாக மிகவும் நெருக்கடிகள் நிறைந்துள்ளதாகவே காணப்படுகின்றது. எமது அரசியல் கட்டமைப்பில் பாரிய மாற்றங்களை மேற்கொள்வதன் மூலமே இந்த நெருக்கடி களைத் தீர்த்துவைக்க இயலும். இனவாத பிரச்சினையைத் தீர்க்கத் தவறியமை, அரசியல் வன்முறைகள் தொடர்ந்தும் பிரயோகிக்கப்பட்டமை, நாட்டிலுள்ள ஜனநாயக நிறுவனங்களும், ஜனநாயக நடைமுறைகளும் பலவீனப்பட்டமை, அரசினது சர்வாதிகாரப் போக்குகள் போன்ற நிலைமைகள் என்பன எமது ஜனநாயக அரசியல் கட்டமைப்பில் காணப்படுகின்ற குறைபாடுகளையும் ஜனநாக நடைமுறைகளைப் பலப்படுத்துவதற்கு விடுக்கப்படுகின்ற புதிய கோரிக்கைகளை ஏற்றுக்கொள்வதில் உள்ள இயலாத் தன்மையையும் மிகத் தெளிவாகக் காண்பிக்கின்றன. இந்நிலைமையை அடிப்படையாக வைத்து அரசியல் யாப்பு சீர்திருத்த இயக்கம் புதிய அரசியல் கட்டமைப்பு தொடர்பாகத் தன் அவதானிப்பு களையும் கருத்துக்களையும் இந்நூலில் முன்வைத்துள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 852/25489. நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தின் சேர்க்கை இலக்கம் 014033).

### 12268

**நம் அனைவரதும் நாடு.** சுமனசிறி லியனகே. கொழும்பு: திட்டமிடுதல் மற்றும் வடிவமைப்புப் பிரிவு, இன விவகார மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சு, 1வது பதிப்பு, 1997. (கொழும்பு: இலங்கை அரசாங்க அச்சகத் திணைக்களம்).

(4), 28 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x17 சமீ.

அரசியல் யாப்பு என்றால் என்ன? அரசியல் யாப்பினூடாக சனநாயக ரீதியானதும் நியாயமானதுமான சட்டப் புறவமைப்பினை உருவாக்குவதன் மூலம் அரசுக்கு ஒரு சிறப்புருவம் எவ்வாறு வழங்கப்படுகின்றது என்பன போன்ற விடயங்களை என்பதை இந்நூல் எளிய முறையில் சாதாரண மக்களுக்கும் விளங்கும் வகையில்

சித்திரங்களின் உதவியுடன் விளக்கப்படுத்தியுள்ளது. பேராசிரியர் ரஞ்சித் அமரசிங்க, கலாநிதி ஏ.எம்.நவரத்ன பண்டார, கலாநிதி மைக்கல் பெர்னாந்து ஆகியோரின் மேற்பார்வையில் இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 046399).

## 344.01 தொழில் சட்டங்கள்

### 12269

**தொழில் சட்டங்கள் 01.** ரி.தர்மலிங்கம் (தமிழாக்கம்). கொழும்பு 5: தொழிலாளர் கல்விக் கிளை, தொழில் திணைக்களம், 1வது பதிப்பு, 2002. (புறக்கோட்டை: அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம், பானலுவ, பாதுக்க, 130 சீ, பாகொட வீதி, பிட்டக்கோட்டே).

vi, 82 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.

இலங்கையில் கைத்தொழில் அமைதியையும் வினைத்திறனையும் அதிகரிக்க வேண்டுமாயின் தொழில்கொள்வோரும் ஊழியர்களும் தத்தமது உரிமைகளையும் கடமைகளையும் பற்றிய தெளிவான விளக்கத்தைக் கொண்டிருத்தல் அவசியம் என்ற வகையில் இந்நூல் தொழிலாளர், தொழில்தருவோர் தொடர்பான, அவர்களுக்கு அன்றாடம் அறிந்துவைத்திருக்கவேண்டிய சட்டங்களைத் தனியாகத் தொகுத்து, அதனைத் தமிழில் தமிழாக்கம் செய்து தருகின்றது. சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம், கடை அலுவலக ஊழியர் சட்டம், ஊழியர் சேமலாபநிதிச் சட்டம், ஊழியர் நம்பிக்கை நிதியம், பணிக்கொடைக் கொடுப்பனவு, மகப்பேற்று நலன்கள் சட்டம், தொழிலாளர் நட்டஈட்டு கட்டளைச் சட்டம், தொழிற் பிணக்குகள் சட்டம், தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டம், பெண்கள், இளைஞர், சிறுவர்களை வேலையில் ஈடுபடுத்தும் சட்டம், உச்ச வினைத்திறனுக்கு ஐந்து எஸ் ("5S") ஆகிய பதினொரு இயல்களின்கீழ் ஆசிரியர் இந்நூலை விரிவாக எழுதி வழங்கியுள்ளார். நூலாசிரியர் யாழ்ப்பாண மாவட்டத்தின் பிராந்திய பிரதித் தொழில் ஆணையாளராகப் பணியாற்றியவர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 33450).

**மேலும் பார்க்க: 12254**

## 344.032 சிறுவர் பாதுகாப்புச் சட்டம்

**மேலும் பார்க்க: 12282**

## 350 பொது நிர்வாகம்

### 12270

**கிராமோதய சபை கைந்நூல்.** உள்ளூராட்சி வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சு. கொழும்பு: உள்ளூராட்சி வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சு, 1வது பதிப்பு, 1981. (கொழும்பு: இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களம்).

viii, 68 பக்கம், அட்டவணைகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.

கௌரவ ஆர்.பிரேமதாசா இலங்கையின் பிரதம மந்திரியாகப் பணியாற்றிய வேளையில் சிங்களப் பிரதேசங்களில் கிராமோதய சபைகள் அறிமுகப்படுத்தப் பட்டன. அத்திட்டத்தை தமிழ்ப் பிரதேசங்களில் எடுத்துச் செல்லும் வகையில் இக்கைந்நூல் உருவாக்கப்பட்டது. அபிவிருத்தி முயற்சியில் அபிவிருத்தி சபைகளின் பங்களிப்பு, அபிவிருத்திச் சபைகளின் சட்டம், ஒழுங்கு விதிகள், என்பனவற்றின் தொடர்பு நோக்கில் சட்டத்தின்கீழ் வகுக்கப்பட்ட கிராமோதய சபைகள் பிரதேச சபைகள் ஆகியவற்றின் சட்டரீதியான நிறுவனசபை முறையீயன்ற சட்டகம், கிராமோதய சபை: கருமச் செயலாட்சி, தொழில் நோக்கம், மூலவளப் பதிவேடு ஒன்றினைத் தயாரித்தல், திட்டவமைப்பு, திட்டங்களின் செயற்பாட்டின் பொருட்டு ஒத்துழைப்பினை நாடல், உள்ளூர் மட்ட அபிவிருத்தித் தொழினுட்பவியல் புதுமாற்றம் ஆகிய ஏழு அத்தியாயங்களில் இந்நூல் கிராமோதய சபை வேலைத் திட்டத்தை அறிமுகப்படுத்துகின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத் தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 31724).

**மேலும் பார்க்க: 12226**

## 352.44 வரி அறவீட்டு நிர்வாகம்

### 12271

**பண்டங்கள் சேவைகள் வரிச் சட்டத்தின் கைநூல்.** உள்நாட்டு இறைவரித் திணைக்களம். கொழும்பு: உள்நாட்டு இறைவரித் திணைக்களம், 1வது பதிப்பு, நவம்பர் 1998. (மஹரகம: தரஞ்ஜீ பிரின்ட்ஸ், 506, ஹைலெவல் வீதி, நாவின்ன).

(4), 56 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x13.5 சமீ.

பண்டங்கள் சேவைகள் வரியானது 1996ஆம் ஆண்டின் 34ஆம் இலக்கச் சட்டத்தினால் அறிமுகம் செய்யப்பட்டு 1998 ஏப்ரல் 1ம் திகதியன்று நடைமுறைக்கு வந்தது. பண்டங்கள் சேவைகளின் உள்ளூர் நுகர்வு மீது அறவிடப்பட்ட பல்நிலை வரியொன்றான 1981இன் 69ஆம் இலக்க மொத்த விற்பனவு வரிச்சட்டத்தினை பண்டங்கள் சேவைகள் வரிச் சட்டம் மீள்விக்கின்றது. இந்நூல் பண்டங்கள் சேவைகள் வரிக்கான விரிவான வழிகாட்டலை வழங்குகின்றது. பண்டங்கள் சேவைகள் வரியினை விதித்தல், பதிவுபெறுதல், வரி விபரத் திரட்டும் வரிக் கணிப்பும், வரிக் கொடுப்பனவு, வரி மதிப்பீடு, மேன்முறையீடுகள், வரி அறவீடு, வரி மீளளிப்பு ஆகிய எட்டுஅத்தியாயங்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. பண்டங்கள் சேவைகள் வரி பிரிவுபடுத்தல் குறியீட்டு இலக்கங்கள் அட்டவணை உருவில் இந்நூலின் இறுதியில் தரப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 26963).

**12272**

**வரி விதிப்பு 1998/1999, 1999/2000, 2000/2001.** உள்நாட்டு இறைவரித் திணைக்களம். கொழும்பு: உள்நாட்டு இறைவரித் திணைக்களம், 1வது பதிப்பு, செப்டெம்பர் 2001. (கொழும்பு அரசாங்க அச்சுத் திணைக்களம்).

viii, 167 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

இச்சிறு நூலானது இலாபங்கள் மற்றும் வருமானம் என்பவற்றின் வரிவிதிப்புத் தொடர்பிலான 1979ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் (1996ஆம் ஆண்டின் 16அம் இலக்க திருத்தச் சட்டத்தினால் இறுதியாகத் திருத்தப்பட்டவாறாகவும்) முக்கிய ஏற்பாடுகளையும் 2000/2001 வரிமதிப்பாண்டு தொடர்பில் 2000ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் முக்கிய ஏற்பாடுகளையும் சுருக்கமாக விளக்குகின்றது. மேலும் திணைக்களத்தின் பல்வேறு அலுவலகங்களுக்கிடையிலான பணிகளின் பகிர்வு, அலுவலகங்கள் அமைந்துள்ள இடங்கள், தொலைபேசி இலக்கங்கள் போன்ற பல பயனுள்ள தகவல்களையும் இது உள்ளடக்கியுள்ளது. வரிசெலுத்துவோருக்கு அவருடைய வரிப் பொறுப்புடைமை தொடர்பிலான சட்டங்களை அறியத்தருவதே இச்சிறு நூலின் நோக்கமாகும். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 36553).

**மேலும் பார்க்க: 12964**

## 355 போர்க்கலை, போரியல் விஞ்ஞானம், இராணுவ விஞ்ஞானம்

**12273**

**கமிக்காசிகள் (The Kamikazes).** எட்வின் பீ. ஹொய்ற் (ஆங்கில மூலம்), ந.சுரேந்திரன் (தமிழாக்கம்). கிளிநொச்சி: போர்ப்பறை வெளியீட்டகம், 1வது பதிப்பு புரட்டாதி 2004. (கிளிநொச்சி: அன்பு அச்சகம்).

303 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 560., அளவு: 22.5x15.5 சமீ.

நம்பிக்கையிழந்த நிலை, சாவுக்குத் தயாராதல், ஒழுங்கமைத்தல், இறப்பதற்கு எடுக்கப்பட்ட முடிவு, சிறப்புத் தாக்குதல் படை, தயாராதல், ஏ - நடவடிக்கை நாள், படையை விரிவாக்குதல், எமது முயற்சியை இரு மடங்காக்க வேண்டும் அட்மிரல் ஒனிஷி, புதிய காலங்கள் புதிய வழிமுறைகள், சாவுக்கு..., வானில் மட்டுமல்லாது, வால்வெள்ளிகள் மேலெழுகின்றன, பிலிப்பைன்ஸ் வதங்கியது, புதுவாழ்வுக்கான வாய்ப்பு, சாவுக்குப் புதுவாழ்வு, B ரக வான்கலங்களின் வருகை, இவோ ஜிமாவில் கடும் சண்டை, சிதறிய நம்பிக்கை, யப்பானுக்கான சமர், யப்பானுக்கான சமர் 2, தற்கொடை பிரிகேட், இறுதித் தீர்க்கமான சமருக்கு முதல் நாள், ஒக்கினாவாவின் அழிவுக்கு முந்திய தோற்றம், ரென் கோ நடவடிக்கை, ரென் கோ நடவடிக்கை 2, தூய நாரையின் பறத்தல், பின்னுரை ஆகிய 28 அத்தியாயங்களில் இந்நூல் யப்பானின் தற்கொடைப் போராளிகளான கமிக்காசிகள் வரலாறு பற்றி விபரமாகப் பதிவுசெய்கின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 36756).

## 360 சமூக சேவை நிறுவனங்கள்

### 12274

**சமூக சேவைகள்: 1998ஆம் ஆண்டின் செயற்பாட்டு அறிக்கை.** சமூக சேவைகள் அமைச்சு. பத்தரமுல்ல: சமூக சேவைகள் அமைச்சு, 5ஆம் மாடி, செத்சிறிபாய, 1வது பதிப்பு, 1998. (கொழும்பு: அரசாங்க அச்சகம்).

42+90 பக்கம், அட்டவணைகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x13.5 சமீ.

நான்கு பகுதிகளாகக் காணப்படும் இவ்வறிக்கையில் சமூக சேவைகள் அமைச்சு என்ற முதற்பகுதியில், அமைச்சின் பணி, முன்னுரிமை விடயங்கள், குறிக்கோளும் தொழிற்பாடும், நிறுவனக் கட்டமைப்பு, தொழிற்பாட்டுக் கட்டமைப்பு, சமூக அபிவிருத்தி தொடர்பாக அமைச்சின் கண்ணோட்டம் ஆகிய விடயங்கள் குறித்து விளக்கமளிக்கப்பட்டுள்ளன. இரண்டாவது பகுதியான அமைச்சின் கீழ்வரும் திணைக்களங்களும் நிறுவனங்களும் என்ற பகுதியில் சமூக சேவைத் திணைக்களம், சிறுவர் நன்னடத்தை பராமரிப்பு சேவைகள் திணைக்களம், தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம் ஆகியவற்றின் செயற்பாடுகள் பற்றி அறிக்கையிடப் பட்டுள்ளது. அமைச்சின் கீழ்வரும் செயலகங்களும் சபைகளும் என்ற மூன்றாவது பகுதியில் சமூகப் பாதுகாப்புச் சபை, அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான தேசிய செயலகம், ஊனமுற்ற ஆட்களுக்கான தேசிய செயலகம், தேசிய இடர் நிவாரண முகாமைத்துவ நிலையம் ஆகியவை பற்றி அறிக்கையிடப்பட்டுள்ளது. இறுதிப்பகுதி செயற்பாடு பற்றியதாகும். இதில் நிதி பௌதிகச் செயற்பாடு- 1998, செயற்றிட்டங்களும் ஒதுக்கீடுகளும்- 1999 ஆகிய அறிக்கைகள் இடம்பெறுகின்றன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 35631).

### 12275

**நிழல்.** என்.கே.குலசிங்கம். யாழ்ப்பாணம்: கலாசாரப் பேரவை, நல்லூர்ப் பிரதேச செயலகம், நல்லூர், 1வது பதிப்பு, ஜனவரி 2016. (யாழ்ப்பாணம்: பிள்ளையார் அச்சகம், நல்லூர்).

vi, 146 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-42883-0-0.

யாழ்ப்பாணத்தில் காணப்படும் தொண்டு நிறுவனங்கள் சிலவற்றை இனம்கண்டு, அவை ஆற்றிவரும் சமூக சேவைகளையும், அவற்றின் குறிக்கோள்களையும், நிறுவனத்தின் வரலாற்றையும் அவை தொடர்பான மக்கள் அறிந்திருக்க வேண்டிய முக்கியமானதும் பயனுள்ளதுமான தகவல்களையும் உள்ளடக்கியதாக இவ்வாவணம் உருவாக்கப்பட்டுள்ளது. இதில் யாழ்ப்பாணத்தில் இயங்கும் 32 அமைப்புகளைப் பற்றிய விபரங்கள் காணப்படுகின்றன. இவை அனைத்தும் முன்னர் தினக்குரல் பத்திரிகையில் பிரசுரமான கட்டுரைகளாகும். ஊடகத்துறையில் 35 ஆண்டுகள் பணியாற்றிய இவரது இப் படைப்பாக்கங்கள் சமூகநலன் சார்ந்தவை. அந்த வகையில் இந்நூலில் இடம்பெற்றுள்ள நிறுவனங்களாவன,

பிரம்மகுமாரிகள் நிலையம், வாழ்வகம், சிவபூமி, மனதுருக்கம் அமைப்பு, குப்பிளான் சிவபூமி ஞான ஆச்சிரமம், "இதம்" தொண்டு நிறுவனம், சிவபூமி அறக்கட்டளை நிதிய மண்டபம், நல்லை திருஞான சமபந்தர் ஆதீனம், சிவபூமி இல்லம், யாழ்ப்பாணம்-ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம், கைதடி சாந்தி நிலையத்தன் அரச முதியோர் இல்லம், துர்க்காபுரம் மகளிர் இல்லம், தேவை நாடும் மகளிர் அமைப்பு, கைகொடுக்கும் நண்பர்கள் அமைப்பு, பெதஸ்டா விஷன், சிவதொண்டன் நிலையம், சைவச்சிறுவர் இல்லம் (திருநெல்வேலி), பரமானந்தா ஆச்சிரமம், திருநெல்வேலி பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபா இல்லம், மகாதேவா ஆச்சிரமம், அகில இலங்கை இந்து மாமன்றம், சந்நிதியான் ஆச்சிரமம், விழிப்புலன் அற்றோர் சங்கம், செஞ்சிலுவைச் சங்கம், குடில்- மனநலம் குன்றியவர்களுக்கு மறுவாழ்வளிக்கும் சங்கம், சர்வதேச இந்து குருமார் ஒன்றியம், நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபம், காயத்ரிபீட தர்மசாஸ்த்தா குருகுலம், எஸ்.ஓ.எஸ்.சிறுவர் கிராமம், சொண்ட் நிறுவனம், யாழ்ப்பாணம் மனவளக் கலை மன்றம், ஆவரங்கால் V and T நம்பிக்கை நிதியம் ஆகியவையாகும்.

## 12276

**மணிமலர்: நீர்கொழும்பு இந்து இளைஞர் மன்றம்: கலாசார மண்டபத் திறப்புவிழா.** மலர்க் குழு. நீர்கொழும்பு: இந்து இளைஞர் மன்றம், கடற்கரை வீதி, 1வது பதிப்பு, ஜுலை 1994. (நீர்கொழும்பு: சாந்தி அச்சகம்).

(264) பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x18 சமீ.

நீர்கொழும்பு இந்து இளைஞர் மன்றம் (முன்னாள் இந்து வாலிபர் சங்கம்) தமது மணிவிழாவையிட்டு கட்டியெழுப்பிய கலாசார மண்டபத் திறப்புவிழாவன்று (3.7.1994 அன்று) வெளியிட்ட மணிமலர். புதிதாக அமைக்கப்பட்டுள்ள இக் கலாச்சார மண்டபம் புத்தளம் தொடக்கம் நீர்கொழும்பு, வத்தளை ஈறாக உள்ள பிரதேசங்களில் வாழும் இந்துக்களுக்கென்று திருமண மண்டபத்தோடு கூடிய கலாச்சார மண்டபம் ஒன்று இல்லையென்ற குறைபாட்டை நிவர்த்தி செய்திருக் கின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 14150).

## 12277

**வாழ்வகம்:விழிப்புல வலுவிழந்தோர் இல்லம்.** மோகனவதனி ரவீந்திரன். சுன்னாகம்: ஆறுமுகம் ரவீந்திரன், தலைவர், வாழ்வகம், சபாபதிப்பிள்ளை வீதி, 1வது பதிப்பு, மார்ச் 2015. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சாயி அச்சகம், காங்கேசன்துறை வீதி, இணுவில்).

(6), 66 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x14.5 சமீ.

விழிப்புல வலுவிழந்த மாணவர்கள் தமது அறிவினை விசாலித்துக் கொள்வதன் மூலம் தமது விழிக் குறைவை வெல்லவேண்டும் என்ற அடிப்படை நோக்குடனும் அவாவுடனும் 29.6.1988 அன்று கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பி

*அம்மையாரினால் விழிப்புலன் இழந்த 12 சிறார்களுடன் தெல்லிப்பழையில் உருவாக்கப்பட்ட "வாழ்வகம்" பற்றிய வரலாற்று நிகழ்வுகளையும், அதன் சிறார்கள் சமூகத்தில் அடைந்த உச்சங்களையும், சாதனைகளையும் புகைப்பட ஆதாரங் களுடன் பதிவுசெய்வதாக இவ்வாவணத் தொகுப்பு உருவாக்கப்பட்டுள்ளது. தொகுப்பாசிரியை திருமதி மோகனவதனி ரவீந்திரன், வாழ்வகத் தலைவர் ஆறுமுகம் ரவீந்திரன் அவர்களின் துணைவியாரும், வாழ்வகத்தின் உப தலைவருமாவார்.*

## 362.292 மதுப்பாவனையும் குடிகாரர்களும்

### 12278

**புதை குழிக்குத் தள்ளும் புகைப்பழக்கம்.** *முஹம்மத் ரஸீன்-ஹஸனீ. குருநாகலை: தாருல் குர்-ஆன் வெளியீட்டுப் பணியகம், இல. 100, கண்டி வீதி, மல்லவப்பிட்டிய, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2004. (அச்சக விபரம் தரப்படவில்லை).*

*56 பக்கம், விலை: ரூபா 60., அளவு: 20.5x14 சமீ.,* ISBN: *955-8734-04-7.*

*புகைத்தலிலிருந்து விடுதலைபெற விளையும் அனைத்து வயதினரையும் நல்வழிப்படுத்தும் ஓர் அழகிய வழிகாட்டி. புகைத்தல், புகையிலை மற்றும் சிகரெட் புகை ஒரு அபாயம், புகைத்தல் தரும் பரிசு (தொண்டைப்புற்று நோய், நுரையீரல் புற்றுநோய், இதய நோய்கள், மூளை நோய்கள், நுரையீரல் நோய்கள், வயிற்றுப்புண், ஒரினப் புணர்ச்சி, மலட்டுத் தன்மை), புகைப்பவனுக்கு 24 வகையான பரிசுகள், புகைப்பழக்கமும் இளைய சமூகமும், புகைப் பழக்கமும் பெண்களும், புகைப்பழக்கத்தில உலக நாடுகள் (சீனா, ஜப்பான், இந்தியா, இலங்கை), இலங்கையின் நிலவரம், புகைப்பழக்கத்தில் உலகம், புகைத்தலைப் பற்றி குர் ஆன், அகிலத்தாருக்கு இஸ்லாம் கூறும் அறிவுரைகள்-1-6, என இன்னோரன்ன 40 தலைப்புகளில் சிறு கட்டுரைகளின் வடிவில் இந்நூல் விளக்கப் பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 38657).*

## 362.7 சிறுவர் பராமரிப்பு

**மேலும் பார்க்க: 12019**

## 363 சுற்றாடல், சூழல் மாசுபடுதல்

### 12279

**அற்புதமான நீரைப் பராமரிப்போம்.** *சரத் அமரசிறி (ஆங்கில மூலம்), சீரங்கன் பெரியசாமி (மொழிபெயர்ப்பாளர்). நுகேகொட: இலங்கை இயற்கை ஒன்றியம், 546/3, வட்ட மாவத்தை, கங்கொடவில, 1வது பதிப்பு, ஜூன் 2008. (கண்டி: கிரியேட்டிவ் பிரின்டர்ஸ் அன்ட் டிசைனர்ஸ், இல. 3*A*, பஹிரவகந்த வீதி).*

xv, *155 பக்கம், அட்டவணைகள், விலை: ரூபா 150., அளவு: 20.5x14 சமீ.,* ISBN: *978-955-1944-02-5.*

சரத் அமரசிறி எழுதிய Caring for Water என்ற நூலின் தமிழாக்கம். அறிமுகம், நீரின் பண்புகள், புவியில் நீர், இலங்கையில் நீர், நீரின் பயன்களும் தேவையான தரங்களும், நீர் மாசடைதல், நற்போசணை, முடிவுரையும் முன்னால் உள்ள சவால்களும் ஆகிய எட்டு இயல்களில் இந்நூல் பூமியில் நீரின் பராமரிப்பு பற்றிய தெளிவான விளக்கத்தை வழங்குகின்றது. தெரிவுசெய்யப்பட்ட நூல்விபரக் கோவையொன்று மேலதிக வாசிப்பிற்காக நூலின் இறுதியில் பட்டியலிடப் பட்டுள்ளது. நூலுக்கான சுட்டியொன்றும் தரப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 49701).

### 12280

**பசுமை:உலக சூழல்தின சிறப்பிதழ் 2001**. மலர்க் குழு. கொழும்பு 4: கொழும்பு இந்துக் கல்லூரி, 1வது பதிப்பு, ஜுன் 2001. (கொழும்பு: ஏ.எஸ்.சற்குணராஜா, எஸ்.பிரின்ட்).

ix, 120 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14 சமீ.

கொழும்பு இந்துக் கல்லூரியின் 2001 காலகட்ட சூழற் காப்பு ஒன்றியத்தின் இணைச்செயலாளர்களாக ஏ.சிவகுமார், ஏ.சஞ்ஜயன் ஆகியோர் பணியாற்றி யுள்ளனர். சமூக உணர்வுடன் சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகளில் பாடசாலை மட்டத்தில் செயற்திட்டங்களை முன்னெடுத்து வந்த இவ்வமைப்பினர் உலக சூழல் பாதுகாப்புத் தினத்தை முன்னிட்டு 6.6.2001அன்று கல்லூரி மண்டபத்தில் ஒழுங்கு செய்திருந்த விழாவின்போது வெளியிடப்பட்ட சிறப்பிதழ் இதுவாகும். மாணவர்களாலும் ஆசிரியர்களாலும் எழுதப்பெற்ற சூழல் பாதுகாப்பு சார்ந்த விழிப்புணர்வுக் கட்டுரைகள் இம்மலரின் ஆசியுரை, அறிக்கைகளுக்கு இடையே இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 22212).

### 12281

**வன வளம்**. திருச்செல்வம் தவரத்தினம். கொழும்பு 12: பீனிக்ஸ் பப்ளிக்கேஷன்ஸ், No. C.G.6, செபஸ்தியன் தொடர்மாடிக் குடியிருப்பு, புனித செபஸ்தியார் வீதி, குணசிங்கபுர, 1வது பதிப்பு, 2017. (கொழும்பு 13: கௌரி அச்சகம், 207, சேர். இரத்தினஜோதி சரவணமுத்து மாவத்தை).

x, 132 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 280., அளவு: 22x15 சமீ., ISBN: 978-955-7226-00-2.

வனச்சூழலானது பல்வேறு வகையான தாவரங்கள், விலங்குகள், நுண்ணுயிர்கள் போன்றவற்றை உள்ளடக்குவதோடு சக்திச் சுற்றோட்டம், உணவு வட்டம், போன்றவற்றுடன் இயற்கை மற்றும் இரசாயனம் சார்ந்த செயற்பாடுகளுக்கும் இடமளிக்கின்றது. இத்தகைய முக்கியத்துவம் மிக்க வனவளம்பற்றி உலக வனவளங்கள், வனவளத்துடன் தொடர்புபட்ட ஒப்பந்தங்களும் மகாநாடுகளும், இலங்கை வனவளம், உயிர்ப் பல்வகைமைக் காப்பகமாக வனவளம், வனவள

முகாமைத்துவம், இயற்கைச் சுற்றாடல், வனவள உற்பத்திகள், எமது பிரதேச வனவள பொருளாதார விருத்தி, சாரணர் வனக் குறியீடுகள் ஆகிய ஒன்பது அத்தியாயங்களினூடாக இந்நூல் பேசுகின்றது. சுழிபுரம் விக்ரோரியா கல்லூரியின் முன்னாள் ஆசிரியரும் அராலி முருகமூர்த்தி வித்தியாலயத்தின் தற்போதைய அதிபருமான திருச்செல்வம் தவரத்தினம் அவர்கள் எழுதிய நூல் இது.

## 364 பொதுப் பாதுகாப்பு நடைமுறைகள்

### 12282

**பாதுகாப்பாக இருங்கள்.** எஸ்கேப் ஆசிரியர் குழு. தயா தியாகராஜா (தமிழாக்கம்). கொழும்பு: எஸ்கேப் (Escape) பிரசுரம், 25, வைத்தியசாலை வீதி, தெகிவளை 10350, 2வது பதிப்பு, 2002, 1வது பதிப்பு, 2000. (கொழும்பு: New Ferrine Printers).

24 பக்கம், ஓவியங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 19x13.5 சமீ.

எஸ்கேப் (Escape-Eradicating Sexual Child Abuse Prostitution and Exploitation) நிறுவனம் வெளியிட்டுள்ள அறிவூட்டல் பிரசுரம் இது. இந்நூலுக்கான எஸ்கேப் ஆசிரியர் குழுவில் கத்தி ஜே.ஹானர், ருஷிகா அமரசேகர, அனோமா பெரேரா ஆகியோர் பணியாற்றியுள்ளனர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 35477).

## 368 காப்புறுதி

### 12283

**காப்புறுதி: பூட்கையும் செயற்பாடும்.** லாம்ஸன் வீரசேகர (சிங்கள மூலம்), த.கனகரத்தினம் (தமிழாக்கம்). கொழும்பு 2: அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபன வெளியீடு, பானலுவ, பாதுக்கை, 1வது பதிப்பு, 1994. (கொழும்பு 2: அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம், பானலுவ, பாதுக்கை).

xi, 171 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 21x14 சமீ., ISBN: 955-610-112-8.

இன்றைய பொருளாதார உலகம், காப்புறுதி அறிமுகம், காப்புறுதி வகைகள், காப்புறுதிப் பூட்கை, காப்புறுதி முன்மொழிவுப்(பிரேரணை) பத்திரமும் உறுதியும், கடற் காப்புறுதி, ஆயுட் காப்புறுதி, தீக் காப்புறுதி, எதிர்பாராத விபத்துப் பொறுப்பு பல்வேறு பாதுகாப்பு வகைகள், மீள் காப்புறுதி, இலங்கைக் காப்புறுதி வணிகச் சந்தையின் வரலாறு, சொற்களஞ்சியம் ஆகிய தலைப்புகளில் காப்புறுதித் திட்டம் பற்றிய இந்நூல் எழுதப்பட்டுள்ளது. 105ஆவது அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபன வெளியீடாக இந்நூல் வெளிவந்துள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 14738).

## 369.4092 சாரணர் இயக்கம்

### 12284

**இளைஞர் சாரணீயம்.** *கில்வெல்-பேடன் பவெல் பிரபு (ஆங்கில மூலம்), தெல்லியூர் செ.நடராசா (தமிழாக்கம்). கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 2வது பதிப்பு 2017, 1வது பதிப்பு, கார்த்திகை 1952. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).*

xiv, *360 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 700., அளவு: 21.5*x*14.5 சமீ.,* ISBN: *978-955-659-539-0.*

*சாரணர் இயக்கம் பேடன் பவல் பிரபு (*Lord Baden-Powell: 1857-1941*) என்ற ஆங்கிலேயரால் 1908ஆம்ஆண்டு இங்கிலாந்தில் ஆரம்பிக்கப்பட்டது. இவர் ஒரு இராணுவ வீரராக இருந்து ஓய்வுபெற்றவர். 1876இல் இராணுவத்தில் சேர்ந்த இவர் இந்தியா, ஆப்கானிஸ்தான், தென் ஆபிரிக்காஆகிய இடங்களில் பணியாற்றியவர். இவரது பணிகளின் பயனாக பதவியுயர்வுகளைப் பெற்று 1908இல் லெப்டினன்ட் ஜெனரலாகப் பணியாற்றி ஓய்வு பெற்றார். தனது தங்கையானஅக்னிஸ் பேடன் பவல் (*Agnes Baden-Powell:1858-1945*) அவர்களின் ஒத்துழைப்புடன் பெண் சாரணர் (*Girld Guide*) இயக்கத்தையும் 1910இல் தோற்றுவித்தார். இந்தப் பின்புலத்தில் இளைஞர் சாரணீயம் (*Scouting for Boys*) என்ற நூலை 1908இல் எழுதினார். சாரணர் இயக்கத்தின் வேதநூலாகக் கருதப்பட்ட இந்நூல் இலங்கையில் சாரணர்களிடையே பிரபல்யமாகவிருந்தது. அதன் முக்கியத்துவம் கருதி தமிழறிஞர் தெல்லியூர் நடராசா அவர்களால் இது 1952இல் தமிழாக்கம் செய்யப்பட்டிருந்தது. அதன் மீள்பதிப்பாக 65 ஆண்டுகளின் பின்னர் இந்நூல் வெளிவந்துள்ளது.*

## 370 கல்வியியல்

### 12285

**அமைதியான சமாதானத் தூதுவர்: ஆசிரியர்களுக்குச் சமர்ப்பணம்.** *எஸ்.சந்திரசேகரம் (தொகுப்பாசிரியர்), பீ.எஸ்.சர்மா (தமிழாக்கம்). பத்தரமுல்ல: ஸ்ரீலங்கா யுனெஸ்கோ தேசிய சபை, இசுருபாய, 1வது பதிப்பு, 2000. (கொழும்பு: இலங்கை அரசாங்க அச்சகம்).*

*21 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21*x*24.5 சமீ.*

*யுனெஸ்கோவின் பணிப்பாளர் நாயகம் பிரட்ரிக்கொ மேயர் தனது "நாளைய சமாதானம்" (லாபையிக்ஸ்) என்ற நூலில் உலகளாவியரீதியில் தற்கால வரலாற்றுப் பாடநூல்களில் போர்களுக்கும் போர் வெற்றிகளுக்கும் சக்கரவர்த்திகளுக்கும் தளபதிகளுக்கும் கொடுக்கும் முக்கியத்துவத்தை சமாதானமாகப் பெறப்பட்ட வெற்றிகளுக்கும், அதற்காக உழைத்த கல்விமான்கள், எழுத்தாளர்கள், கலைஞர்களுக்கும் வழங்கத் தவறியுள்ளோம் என்று சுட்டிக்காட்டி விளக்கியுள்ளார். போரற்றதொரு சமாதானபூமியாக உலகை மாற்றவேண்டுமானால் இந்த முக்கியத்துவம் மாற்றியமைக்கப்படவேண்டும் என்பதை வலியுறுத்தும் அவர்*

பாடசாலை ஆசிரியர்கள், கல்விமான்களிடம் அந்த விழிப்புணர்வு சென்றடையவேண்டும் என்ற நோக்கில் இந்நூலை அறிமுகப்படுத்துகின்றார். அறிமுகம், உரையாடலின் பாடங்கள் (ஒல்வின் புரொஸ்ட், வட அயர்லாந்து), அன்பின் பாடங்கள் (எம்.திரேசா ராணி, ஸ்ரீலங்கா), குடியுரிமையின் பாடங்கள் (பஸ்கல் டையார்ட், பிரான்ஸ்), சாத்வீக எதிர்ப்பின் பாடங்கள் (சொஹ்ராடீ, அல்ஜீரியா), ஒருமைப்பாட்டின் பாடங்கள் (தெரேசா கங்கேமி, இத்தாலி), ஒத்துப்போதலின் பாடங்கள் (மாரி லேடிடியா காயிரோவா, புருண்டி), புரிந்து கொள்வதின் பாடங்கள் (அசிஜடா பொரோவக், பொஸ்னியா, ஹேர்சேகோவினா), பொறுப்பின் பாடங்கள் (அவி பிளக், ஐக்கிய அமெரிக்கா) ஆகிய பன்னாட்டு அனுபவ ஆக்கங்கள் சமாதானத்தை வலியுறுத்துவதாக இந்நூலில் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 31186).

## 12286

**அன்பான வேண்டுகோள்(கல்வி, உளவியல், தத்துவம்).** கே.வி.குணசேகரம். கோப்பாய்: கே.வி.குணசேகரம், பிள்ளையார் கோவிலடி, கோப்பாய் மத்தி, 2வது பதிப்பு, மார்ச் 2009. (கொழும்பு 12: லங்கா புத்தகசாலை, F.L.1/14, டயஸ் பிளேஸ், குணசிங்கபுர).

142 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 22x14 சமீ.

கே.வி.குணசேகரம் அவர்களது மணிவிழா வெளியீடாக வெளிவரும் இந்நூலில் கல்வியைப் பற்றியும், உளவியலைப் பற்றியும், கற்றலை விருத்திசெய்வது எப்படி என்பதைப் பற்றியும் எழுதியிருக்கிறார். சுமார் ஐம்பதாண்டு கல்விச்சேவையில் ஆசிரியராகச் சேர்ந்தவர். தனது அறுபதாவது வயதில் நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் பதவியிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார். இவரது ஐம்பதாண்டு கல்வித்துறை அனுபவங்களின் வழியாகத் தான் கற்றறிந்தவற்றை மாணவர் சமூகத்திற்கும் அவர்களின் பெற்றோருக்கும் தெரிவிக்கும் ஒரு முயற்சியாக சுயசரிதைப் பாணியில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 46675).

## 12287

**இலங்கைப் பாடசாலைப் பாடப்புத்தக வரலாறு.** க.தா.செல்வராசகோபால் (புனைபெயர்: ஈழத்துப் பூராடனார்). கனடா: ஜீவா பதிப்பகம், 1108 Bay Street, Toronto, Ontario M5S 2W9, 1வது பதிப்பு, வைகாசி 2000. (கனடா: ரிப்ளெக்ஸ் அச்சகம், 1108 Bay Street, Toronto, Ontario M5S 2W9).

xxxii, 232 பக்கம், விளக்கப்படங்கள், தகடுகள், விலை: கனேடிய டொலர் 20., அளவு: 21x14 சமீ.

1918 முதல் 1984 வரையிலான காலகட்டத்தில் இலங்கையின் பாடநூல்கள் வளர்ச்சியடைந்த வரலாற்றை இந்நூல் விரிவாகப் பதிவுசெய்துள்ளது. (இந்நூல்

கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 34198).

### 12288

**இலங்கையில் 8ஆம் 10ஆந்தர மாணவரின் அடைவு பற்றிய தேசிய கணிப்பீடு: தேசிய அறிக்கை.** லால் பெரேரா, சுவர்ணா விஜயதுங்க, ஏ.ஏ.நவரட்ண, எம்.கருணாநிதி. கொழும்பு 3: தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் மதிப்பீட்டு நிலையம், NEREC, கல்விப் பீடம், கொழும்புப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, ஏப்ரல் 2007. (அச்சக விபரம் தரப்படவில்லை).

xxv, 209 பக்கம், அட்டவணைகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 30x21 சமீ., ISBN: 978-955-1187-16-3.

உலக வங்கியின் நிதியுதவியுடன் கல்வி அமைச்சுக்காக கொழும்புப் பல்கலைக்கழக கல்விப்பீடம் இவ்வாய்வினை மேற்கொண்டிருந்தது. ஆய்வின் பின்னணியும் முறையியலும் என்ற முதலாவது பகுதியில் பின்னணி, முறையியல் ஆகியவையும், கற்றல் அடைவுகளின் கோலங்களும் செல்நெறிகளும் என்ற இரண்டாம் பகுதியில் தேசிய, மாகாண, மாவட்ட மட்டங்களில் மாணவர்களின் பெறுபேறுகள் தனித்தனி இயல்களிலும் அறிக்கையிடப்பட்டுள்ளன. மூன்றாவது பகுதியான கற்றல் அடைவுகளில் செல்வாக்குச் செலுத்தும் பின்னணிக் காரணிகளாக பாடசாலைப் பின்னணியும் கற்றல் அடைவும், வீட்டுப் பின்னணியும் கற்றல் அடைவும், மாணவர் பின்னணியும் கற்றல் அடைவும், வலயக்கல்வி அலுவலகப் பின்னணியும் கற்றல் அடைவும், கற்றல் அடைவில் செல்வாக்குச் செலுத்தும் சில ஏனைய மாறிகள் ஆகிய ஐந்து பிரிவுகளில் விரிவாக அறிக்கையிடப்பட்டுள்ளது. இறுதிப்பகுதியில் முடிவுகளும் விதந்துரைகளும் தரப்பட்டுள்ளன. பின்னிணைப்பில் சொற்களஞ்சியம், உசாத்துணை நூல்கள், மாதிரியில் இடம்பெற்ற பாடசாலைகள், ஹெனிவால்ட், கிரேய்க் ஆகியோரின் எண்ணக்கருச் சட்டகம், புள்ளிவிபர அட்டவணைகள் ஆகியன இடம்பெற்றுள்ளன. புள்ளிவிபர அட்டவணைகளில் மூன்று பாடங்களில் மதிப்பெண் பரம்பல்-மாகாண அடிப்படை, மூன்று பாடங்களில் நாடளாவிய சராசரிப் பெறுமானத்தின் வேறுபாடுகள், கற்றல் அடைவுகளில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் பற்றிய வரைபடம், 8, 10ஆம் தரங்களுக்குரிய கலைத்திட்டச் சாதனங்களுக்குரிய ஆசிரியரின் பதிற்குறிகள் ஆகியன உள்ளடக்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 57261).

### 12289

**இலங்கையில் தமிழர் உயர்கல்வி.** ஹிலறி குறூஸ் (ஆங்கில மூலம்), கணபதிப்பிள்ளை சச்சிதானந்தன் (தமிழாக்கம்). கொழும்பு 12: சுதந்திரன் வெளியீடு-5, 194 ஏ, பண்டாரநாயக்க வீதி, 1வது பதிப்பு, ஆனி 1975. (கொழும்பு 12: சுதந்திரன் அச்சகம், 194 ஏ, பண்டாரநாயக்க வீதி).

(8), 30 பக்கம், அட்டவணைகள், விலை: ரூபா 2.00, அளவு: 21x14 சமீ.

பேராசிரியர் ஹிலறி குரூஸ் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் பேராதனை வளாகத்தில் விலங்கியல்துறைத் தலைவராகப் பணியாற்றிய வேளையில் வெளியிடப்பெற்ற நூல். தமிழர் கல்வி பற்றி அவ்வப்போது இவர் ஆங்கிலத்தில் ஆற்றிய உரைகளின் தேர்ந்த பகுதிகள் இங்கு தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளன. "யாழ்ப்பாண வளாகம்-சில சிந்தனைகள்" என்ற முதலாவது உரை முன்னர் எங்கும் பிரசுரமாகியிருக்கவில்லை. இரண்டாவதாக உள்ள "பல்கலைக்கழகத்தின் நோக்கங்கள்" என்ற கட்டுரை மார்க்கா நிறுவனத்தின் ஆய்விதழான The Marga Journal (Volume 2, No.3, 1974) இல் பிரசுரிக்கப்பட்டது. மூன்றாவது உரை "உயர்நிலை விஞ்ஞானக் கல்வியின் நோக்கும் போக்கும்" என்பதாகும். இது Proceedings of the Twenty-sixth Annual Sessions of the Ceylon Association for the Advancement of Science என்ற கருத்தரங்க ஏட்டில் 1971இல் பிரசுரமானதாகும். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 2890).

## 12290

**இலங்கையிற் கல்வி: கி.மு.ஆறாம் நூற்றாண்டு முதல் இற்றை வரை: நூற்றாண்டுவிழா மலர் (பகுதி 1).** நூற்றாண்டு விழா மலர்க் குழு. கொழும்பு: இலங்கை கல்வி கலாசார அலுவல்கள் அமைச்சு, 1வது பதிப்பு, 1969. (கொழும்பு: அரசாங்க அச்சகப் பகுதி).

lxxxvi, 405 பக்கம், வரைபடங்கள், விலை: ரூபா 525., அளவு: 25.5x20 சமீ

இலங்கையின் கல்வி அமைச்சராக I.M.R.A.ஈரியகொல்ல பணியாற்றிய காலகட்டத்தில் இலங்கையின் கல்வி நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டது. அவ்வேளையில் மூன்று பகுதிகளாகப் பிரித்து வெளியிடப்பட்ட நூற்றாண்டு மலரின் முதற் பகுதியே இந்நூலாகும். இந்நூலில் பண்டைக்காலம் (அத்தியாயம் 1-14), இடைக்காலம் (அத்தியாயம் 15-25), போத்துக்கேயர் ஒல்லாந்தர் ஆட்சியிற் கல்வி (அத்தியாயம் 26-30) ஆகிய மூன்று பிரிவுகளின்கீழ் 30 தனித்தனி அத்தியாயங்கள் பல்வேறு கல்வியியலாளர்களால் எழுதித் தொகுக்கப்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 31805).

## 12291

**இலங்கையிற் கல்வி: கி.மு.ஆறாம் நூற்றாண்டு முதல் இற்றை வரை: நூற்றாண்டுவிழா மலர் (பகுதி 2).** நூற்றாண்டு விழா மலர்க் குழு. கொழும்பு: இலங்கை கல்வி கலாசார அலுவல்கள் அமைச்சு, 1வது பதிப்பு, 1969. (கொழும்பு: அரசாங்க அச்சகப் பகுதி).

(12), 417-904 பக்கம், வரைபடங்கள், விளக்கப்படங்கள், அட்டவணைகள், விலை: ரூபா 525., அளவு: 25.5x20 சமீ.

இலங்கையின் கல்வி நூற்றாண்டு விழாவையொட்டி வெளியிடப்பட்ட நூலின் இரண்டாவது பகுதி இது. இப்பகுதியில் பிரித்தானியர் ஆட்சியின் ஆரம்பகாலம் (அத்தியாயம் 31-35), பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதி (அத்தியாயம்

36-40), இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதி (அத்தியாயம் 41-49), நிகழ்காலம்-அதன் அடிப்படையும் போக்கும் (அத்தியாயம் 50-67) ஆகிய மூன்று பிரிவுகளின்கீழ் 37 தனித்தனி அத்தியாயங்கள் பல்வேறு கல்வியியலாளர்களால் எழுதித் தொகுக்கப்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 31806).

## 12292

**இலங்கையிற் கல்வி: கி.மு.ஆறாம் நூற்றாண்டு முதல் இற்றை வரை: நூற்றாண்டுவிழா மலர் (பகுதி 3).** நூற்றாண்டு விழா மலர்க் குழு. கொழும்பு: இலங்கை கல்வி கலாசார அலுவல்கள் அமைச்சு, 1வது பதிப்பு, 1969. (கொழும்பு: அரசாங்க அச்சகப் பகுதி).

(6), 909-1514 பக்கம், வரைபடங்கள், விலை: ரூபா 525., அளவு: 25.5x20 சமீ.

இலங்கையின் கல்வி நூற்றாண்டு விழாவையொட்டி வெளியிடப்பட்ட நூலின் மூன்றாவது பகுதி இது. இப்பகுதியில் கல்வி அமைப்பு (அத்தியாயம் 68-76), கல்வியின் பொருளடக்கம் (அத்தியாயம் 77-87), கல்வியின் பொருளாதார அமிசங்கள் (அத்தியாயம் 88-92), மரபு வழிவந்த கல்வி முறைகள்-மீணோக்கு (அத்தியாயம் 93-95), கல்வியும் துணைச் சேவைகளும் (அத்தியாயம் 96-100) ஆகிய மூன்று பிரிவுகளின்கீழ் 33 தனித்தனி அத்தியாயங்கள் பல்வேறு கல்வியியலாளர்களால் எழுதித் தொகுக்கப்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 31807).

## 12293

**உளநூலும் கல்வியும்.** த.இராமநாதபிள்ளை. பருத்தித்துறை: த.இராமநாதபிள்ளை, அதிபர், புலோலி ஆண்கள் கல்லூரி, 1வது பதிப்பு, 1958. (யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா அச்சகம், காங்கேசன்துறை வீதி).

(2), 166 பக்கம், விலை: ரூபா 3.50, அளவு: 21.5x14.5 சமீ.

உடலுயிர், உள்ளம், உளநூலறிவும் கல்வி கற்பித்தலும், சாதித தோற்றம், சாதி விருத்தி, வாழ்க்கை விழைச்சும்(Horme) முதிசஞானமும்(Mneme), விழைச்சுக்கள் (Instincts), உளத்திரிபு (அகநோய்), முதிசமும் சூழலும் (Heredity and Environment), பார்த்துச் செய்தல்-தூண்டுதல், இரங்குதல், ஒழுக்க வளர்ச்சி, கவனம், ஞாபகம், சந்தித்தல், புத்தி, விளையாட்டு. கூட்டுளம், கல்வியின் நோக்கம், பாடசாலை, விளையாட்டு மூலம் கல்வி, மன்றிசூரியம்மையார் முறை, உடன்படிக்கை முறை (டோல்ற்றன் முறை), ஏர்பாட் முறை, அடக்கமும் பாடசாலை ஒழுக்கமும், அடங்காப் பிள்ளைகள், கடைமாணாக்கர், தொழிற்கல்வி அறிவுக்கல்வி, முதியோர் கல்வி ஆகிய தலைப்புகளில் இந்நூலில் உளவியல்சார் கல்விச்செயற்பாடுகள் விளக்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 2837).

**12294**

**எண்ணக்கரு கற்றல்.** சபா.ஜெயராசா. யாழ்ப்பாணம்: அம்மா வெளியீடு, இணுவில், மருதனார்மடம், 1வது பதிப்பு, 1992. (யாழ்ப்பாணம்: அம்மா அச்சகம்).

(4), 46 பக்கம், விலை: ரூபா 50.00, அளவு: 18x12.5 சமீ.

Concept learning என்று வழங்கப்படும் எண்ணக்கரு கற்றல் தொடர்பான கல்வியியல் துறைசார் கருத்துக்களை ஆசிரியர் இந்நூலில் வழங்கியிருக்கிறார். எண்ணக்கரு கற்றல் தன்னிச்சையான ஒரு செயலன்று, அதிலே பல காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன என்பதை உளவியலாளர் ஆய்வுகள் மூலம் கண்டறிந்துள்ளனர். உயிரிகளையும் பொருட்களையும், அவற்றின் இயல்புகளுக்கு ஏற்ப வேறுபடுத்தி இனங்காண்பதுவும், அவற்றின் பண்புகளைப் பொதுமைப் படுத்துவதுமே எண்ணக்கருக்களைக் கற்றல் எனக்கூறலாம். ஒருவனது வாழ்க்கை பூராவும் எண்ணக் கருவாக்கம் நிகழ்கின்றது. ஆசிரியர் மாணவரிடம் பொருட்கள் பற்றியும், அவற்றின் பண்புகள் பற்றியும் தவறற்ற எண்ணக்கருக்களை உருவாக்க முயலுதல் வேண்டும் என்பதை இந்நூல் விளக்குகின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 38398).

**12295**

**கல்வி அகராதி.** சபா ஜெயராஜா. கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, U.G.50, People's Park, 1வது பதிப்பு, 2013. (கொழும்பு 11: சேமமடு பதிப்பகம்).

ix, 112 பக்கம், விலை: ரூபா 260., அளவு: 19x12 சமீ., ISBN: 978-955-685-018-5.

இலங்கையில் கல்வி அகராதி வெளியீட்டின் முன்னோடி முயற்சியாக இந்நூல் வெளிவந்துள்ளது. சொற்களுக்குரிய பொருள் விளக்கங்களோடு கூடிய ஆக்கமாக இது இடம்பெற்றுள்ளது. மேலைத்தேய நவீன அகராதி ஆக்கங்களை முன் மாதிரியாகக் கொண்டு இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. கல்வி ஆளுமை கள் பற்றிய விபரங்களும் இடம்பெற்றுள்ளன. தமிழ்ச் சொற்களுக்கு இணையான ஆங்கிலச் சொற்களும் தரப்பட்டுள்ளன. பொருள் விளக்கத்திற்கு மேலும் துணைசெய்யும் வகையில் இந்த ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 52505).

**12296**

**கல்வி உளவியல்(பாகம் 1): பிள்ளை வளர்ச்சி.** ச.முத்துலிங்கம். கொழும்பு 3: பேராசிரியர் ச.முத்துலிங்கம், கல்வி உளவியல்துறை, கல்விப் பீடம், கொழும்புப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, ஜுலை 1980. (யாழ்ப்பாணம்: ஆசீர்வாதம் அச்சகம்).

(4), 204 பக்கம், விலை: ரூபா 30., அளவு: 21.5x14 சமீ.

கல்வி உளவியலின் முதலாம் பாகம் 1 முதல் 15 வரையிலான அத்தியாயங்களில் கல்வி உளவியலும் அதன் ஆய்வுமுறைகளும், பரம்பரையும் சூழலும், முதிர்வு, வளர்ச்சிக் கோலங்கள், குழந்தைப் பருவம், பிள்ளைப் பருவம், கட்டிளமைப்

பருவம், ஊக்கலும் தேவைகளும், பொருத்தப்பாடு, நுண்மதி, வளர்ச்சி-பியாஜேயின் கருத்துக்கள், ஆளுமை, மனப்பான்மையும் கவர்ச்சியும், தனியாள் வேறுபாடுகள், வழிகாட்டல் ஆகிய அத்தியாயத் தலைப்புகளில் விளக்கப்பட்டுள்ளன. (இந் நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 34098).

## 12297

**கல்வி உளவியல்(பாகம் 2): கற்றலும் கற்பித்தலும்.** ச.முத்துலிங்கம். கொழும்பு 3: பேராசிரியர் ச.முத்துலிங்கம், கல்வி உளவியல்துறை, கல்விப் பீடம், கொழும்புப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, ஜுலை 1980. (யாழ்ப்பாணம்: ஆசீர்வாதம் அச்சகம்).

(4), 205-423 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 22., அளவு: 21.5x14 சமீ.

ஆசிரியர் ச.முத்துலிங்கம் அவர்களின் முன்னுரையுடன் தொடங்கும் இவ்விரண்டாம் பாகத்தின் பக்க எண்ணிக்கை முதற் பாகத்தின் தொடர்ச்சியாக இலக்கமிடப் பட்டுள்ளது. பொருளடக்கம், கவனமும் புலக்காட்சியும், ஞாபகம், கற்றல் 1: தூ ண்டி - துலங்கல் நிபந்தனைப்பாடு, கற்றல் 2: தொழிலி நிபந்தனைப்பாடு, கற்றல் 3-அகக்காட்சி, எண்ணக் கருவும் கோட்பாடும், கற்றல் இடமாற்றம், பிரச்சினை விடுவித்தல், சிந்தனை பற்றிய கருத்துக்கள், நிரலித்த கற்றல், கற்றலும் ஊக்கலும், கற்றலும் கற்பித்தலும், புள்ளிவிபரவியல், பாட அடைவின் அளவீடு ஆகிய அத்தியாயங்களை இப்பாகம் கொண்டுள்ளது. அனைத்தும் அத்தியாயம் 16 முதல் 29 வரை இலக்கமிடப்பட்டுள்ளன. (இந்நூல் நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 002570).

## 12298

**கல்வி-ஒரு பன்முக நோக்கு.** சோ.சந்திரசேகரம். கொழும்பு 6: உமா பதிப்பகம், 521/1B, காலி வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 2004. (கொழும்பு 12: பேர்பெக்ட் பிரின்டர்ஸ், 130, டயஸ் பிளேஸ்).

(6), 136 பக்கம், விலை: ரூபா 175., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 955-98551-0-7.

கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கல்வியியல் பேராசிரியரான சோ.சந்திரசேகரன் அவர்கள் எழுதிய 20 கல்வியியல் சார்ந்த கட்டுரைகளின் தொகுப்பு இது. கல்வித் தராதரங்கள் பற்றிய ஒரு நோக்கு, தொழிற் கல்விச் சிந்தனைகள், கல்விச் சிந்தனையும் செயற்பாடும், தென்கிழக்காசிய நாடுகளின் கல்வி வளர்ச்சி, புதிய ஆராய்ச்சி நெறிமுறைகள், புனர்நிர்மாண அபிவிருத்திக்கான கல்வி, புதிய பாடசாலைக் கணிப்பீட்டுமுறை, நவீன கல்வியும் சுதேச அறிவுப் பாரம்பரியமும், வகுப்புகள் அற்ற பாடசாலைகள், பெண்கல்வியும் அபிவிருத்தியும், தென்னாசியா வில் கல்வியின் வீழ்ச்சி, கட்டாய ஆரம்பக் கல்வியின் அவசியம், பாடசாலைகளில் எதிர்காலவியல் பாடம், படைப்பாற்றல் பற்றிய சில கருத்தோட்டங்கள், புதிய கல்விச் சிந்தனைகள், இலங்கையில் தகவல் தொழில்நுட்பம், இலங்கையின் கல்விமுறையில் தமிழ்வழிக் கல்வி, கல்வி வரலாற்றில் இரு புரட்சிகள், எதிர்

காலவியல் நோக்கில் மேலைநாட்டுக் கல்வி, சுதந்திர இலங்கையின் கல்வி வளர்ச்சி ஆகிய விடயங்களை இதிலுள்ள இருபது கட்டுரைகளும் அலசுகின்றன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 32858).

### 12299

**கல்வி பயிற்றலின் அத்திவாரம்.** எச்.எஸ்.பெரேரா. மதராஸ்: லாங்மன்ஸ் க்ரீன் அண்ட் கம்பனி லிமிட்டெட், 36 ஏ, மௌன்ட் ரோட், 1வது பதிப்பு, 1932. (மதராஸ்: எவிரிமான் பிரஸ்).

xii, 112 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12 சமீ.

கல்வியியல்துறையில் ஈடுபடுவோருக்கான அடிப்படை அறிவை ஊட்டும் வகையில் தயாரிக்கப்பட்ட கைநூல். மாணவனது இயற்கை உபகரணங்கள் (வல்லபங்கள், மூல ஆசைகள், மெய்ப்பாடுகள், புலன்கள்), கவர்ச்சிகளும் ஆசைகளும் (காட்சிப் பொருள்களிற் கவர்ச்சி, மூல ஆசைகள் வழியாக வரும் கவர்ச்சி, விளையாட்டு, பின்பற்றுதல், சமூக சம்மதம், சித்தியும் இகலும், நெருக்குதலும் அதன் தீமைகளும், அச்சத்தை தக்க வழியிலும் தகாத வழியிலும் உபயோகித்தல், நோக்கம், யத்தனம், தடைகள்), மாணவரது இருப்பெண்ணங்கள் (சொற்களும் எண்களும், பாலப் பருவத்து எண்ணங்களும் சொற்களும், எண்களின் விருத்தி, அறிந்ததைக்கொண்டு அறியாததை விளங்குதல், எண்ணங்கள் விருத்தியாகும் படிகள்), புதிய எண்ணங்களின் வளர்ச்சி (புதியனவற்றை மட்டிடல், பொது எண்ணங்களும் சிறப்பெண்ணங்களும், விளக்குதல், வரைவிலக்கணம், காட்டு, விவரணப் பாகுபாடு, புதிய எண்ணத் தோற்றம், மெய்பாட்டுச் சேர்க்கை, விளக்குதலில் வரும் பிழைகள்), பிழை (மட்டிடற் குறை, கவர்ச்சிக் குறை, களைப்பும் பொறிகளிலுள்ள குறைகளும், மீட்டற்குறை, விவரணப் பிழைகள், வரைவிலக்கணப் பிழைகள், காட்டுப் பிழைகள்), அறிவு விருத்தியடையும் வகை (விசார விஷயம், கவர்ச்சி, சுய முயற்சி, சொல்லலும் வினாதலும், கூட்டுவேலை, தனிவேலை), பயிற்சியும் பரீட்சையும் (பயிற்சியின் தன்மை, பயிற்சியின் வகைகள், பயிற்சியின் நோக்கம், பயிற்சியின் அளவு, பயிற்சியின் எல்லை, பிழை திருத்தம், பரீட்சித்தல்), பிரயோகம் அல்லது அறிவின் தொழிற்பாடு (பிரயோகத்தின் நோக்கம், சுவாதீனம், உணர்ச்சியும் பயிற்சியும், கணிதம், சாஸ்திரம், சரித்திரம், பூமி சாஸ்திரம், இலக்கியம், மொழிகள், பிரயோகம்), பிரயோகம் (பள்ளிப் பாடத்தின் நோக்கம், உபயோகப் பயன், அறிவுப் பயன், அறிவும் செயலும், பாடசாலையின் நோக்கம், இன பேதங்கள், புற அதிகாரம்), கற்கும் விதிகள் (நோக்கம், கற்றலின் படிகள், விதிகள், முதல் விதி, இரண்டாம் விதி, மூன்றாம் விதி), உளநூற் கல்விநூற் பதங்களின் அகராதி ஆகிய அத்தியாயத் தலைப்புகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 002561).

## 12300

**கல்வி முகாமைத்துவம்(தொடர் 1).** எம்.செல்வராஜா. மஹரகம: கல்வி முகாமைத்துவ அபிவிருத்தி ஆலோசனைக் கழகம், கௌரி வெளியீட்டு இல்லம், 1வது பதிப்பு, 1993. (கொழும்பு 11: இராஜேஸ்வரி அச்சகம், 18, பிரின்ஸ் வீதி).

44 பக்கம், அட்டவணைகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x12.5 சமீ.

தமிழ்மொழி மூலப் பாடசாலை அதிபர்கள், உப அதிபர்கள், பகுதித் தலைவர்கள், ஆசிரியர்கள் ஆகியோர், கல்வி முகாமைத்துவம் பற்றிச் சுயமாகப் படித்துத் தமது முகாமைத்துவத் திறனை வளர்ப்பதற்கேற்ற வகையில் நேர முகாமைத்துவம் (நேரத்தைப் பயன்படுத்த சில அறிவுறுத்தல்கள், நேரப்பயன்பாட்டுக்கான திட்டங்கள், நாளாந்த வாராந்த மாதாந்த வருடாந்த திட்டங்கள், கடந்த காலத்தை மீளாய்வு செய்தல், நேரத்தை திருடுவன), பாடசாலைகளில் கூட்டங்களை நடாத்துதல் (தலைவரிடம் இருக்கவேண்டிய பண்புகள், கூட்டத்திற்குப் பின், கூட்ட மண்டப ஒழுங்கு), இலக்கு அடிப்படை முகாமைத்துவ விஞ்ஞானம் - MBO (கருத்தின் தோற்றம், வரைவிலக்கணம், MBO வினைப் பயன்படுத்துவதற்கான காரணம், முயற்சியின் நிலைப்பு, நிறுவனத்தின் இலாப அடைவினை அதிகரித்தல், வாடிக்கையாளர்களது திருப்தி, வளர்ச்சிக்கான நெறியை அமைத்தல், பணியாட்களின் திருப்தி, தொழில்நுட்பவிருத்தி, நிறுவனத்தின் சமூகப் பங்களிப்பு, MBO முகாமைத்துவத்தின் பிரதான தத்துவங்களும் கல்விப் பிரச்சினைகளுக்கு அதன் பிரயோகங்களும், இலக்குகளை அமைத்தல், செயற்றிட்டம், முகாமைத்துவ அபிவிருத்தி, ஊக்குவித்தல், MBO வில் தொடர்புறும் பிரச்சினைகள்) ஆகிய அலகுகளை இந்நூல் விளக்குகின்றது. மா.செல்வராஜா மஹரகம தேசிய கல்வி நிறுவனத்தில் கல்வி முகாமைத்துவ அபிவிருத்தித் துறையின் செயற்திட்ட அதிகாரியாகப் பணியாற்றுகின்றார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 35305, 14743).

## 12301

**கல்வி முன்னேற்றம்: செப்டெம்பர்1997- ஆகஸ்ட் 1998.** கொள்கை திட்டமிடல் கண்காணிப்பு பிரிவு. கொழும்பு: கொள்கை திட்டமிடல் கண்காணிப்பு பிரிவு, கல்வி உயர்கல்வி அமைச்சு, 1வது பதிப்பு, 1998. (கொழும்பு: இலங்கை அரசாங்க அச்சகத் திணைக்களம்).

x, 250 பக்கம், அட்டவணைகள், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 30x21 சமீ.

இலங்கையின் கல்வி உயர்கல்வி அமைச்சகத்தின் கொள்கை திட்டமிடல் கண்காணிப்பு பிரிவு சமர்ப்பித்த 1997/98ஆம் ஆண்டுக் காலகட்டத்துக்கான கல்வி அறிக்கை. நோக்கம் கூற்று, கல்வி உயர்கல்வி அமைச்சின் பூரண பணிகள், தேசிய கல்வி நிறுவகத்தின் பணிகள், கல்வி அமைச்சின் பணி அமைப்பின் வியூகத்தை முறைப்படுத்தல் ஆகியவை முதலாவது அத்தியாயத்தில் அறிக்கையிடப்பட்டுள்ளன. புதிய கல்விச் சீர்திருத்தம், ஆரம்ப கல்விச் சீர்திருத்தம்,

கனிஷ்ட இரண்டாம் நிலை கல்விச் சீர்திருத்தம், சிரேஷ்ட இரண்டாம் நிலை கல்விச் சீர்திருத்தம், புதிய உயர்தர கல்விச் சீர்திருத்தம், பல்கலைக்கழகக் கல்விச் சீர்திருத்தம் ஆகியன இரண்டாம் அத்தியாயத்திலும், பொதுக் கல்விச் செய்திட்டம், ஆசிய அபிவிருத்தி வங்கி உதவிபெறும் இரண்டாம் நிலைக் கல்வி அபிவிருத்திச் செய்திட்டம், சீடா உதவி பெறும் ஆரம்பப் பாடசாலை அபிவிருத்திச் செய்திட்டம், சீடா உதவிபெறும் பெருந்தோட்டப் பாடசாலைகள் கல்வி அபிவிரத்திச் செய்திட்டம், ஆசிரிய கல்வி ஆசிரிய பதவியமர்த்தல் செய்திட்டம், ஜீ.டீ.இசட் செய்திட்டம், ஆரம்பக் கணித செய்திட்டம், ஆரம்பக் கல்வித் திட்டச் செய்திட்டம், கோட்ட மட்டத்தில் கனிஷ்ட பாடசாலை அபிவிருத்திச் செய்திட்டம் ஆகியன 3ஆவது அத்தியாயத்திலும் விளக்கப்பட்டுள்ளன. பிரதேச செயலக கோட்ட மட்டத்தில் பாடசாலைகளை அபிவிருத்திசெய்யும் செய்திட்டம், தேசிய பாடசாலைகள் நிகழ்ச்சி நிரல், கணனி மத்திய நிலையங்கள் என்பன நான்காவது அத்தியாயத்திலும், இலவசப் பாடசாலைச் சீருடைத் துணி, பாடநூல்கள், 5ம் ஆண்டு புலமைப்பரிசில் கொடை, பாடசாலைப் பருவப் பயணச்சீட்டு, பாடசாலைகள் நூல்நிலைய அபிவிருத்தி ஆகியவற்றினை வழங்குதல் என்பன 5ஆம் அத்தியாயத்திலும் அறிக்கையிடப்பட்டுள்ளன. மேலும், தேசிய ஆசிரியர் கல்வி அதிகாரி, பணிமுன் ஆசிரியப் பயிற்சி-தேசிய கல்விக் கல்லூரி, பயிற்றப்படாத ஆசிரியரைப் பயிற்றுவித்தல்/ஆசிரியர் கலாசாலைகள், வெளிநாட்டு முகவர் நிறுவகமும் வெளிநாட்டுப் பணியகமும், இலங்கை ஆசிரியர் சேவை, இலங்கை கல்வி நிர்வாகச் சேவை, புதிய ஆசிரியரைச் சேர்த்தல் ஆகியன ஆறாம் அத்தியாயத்திலும், சிங்கள மொழியும் மானிடவியலும், தமிழ் மொழிமூலப் பாடசாலைகள் கிளை, ஆங்கிலக் கிளை, முஸ்லிம் பாடசாலைகள் கிளை, சமய விழுமியக் கல்விப் பிரிவு, பிரச்சினைகளைத் தீர்த்துவைக்கும் கல்வி, விவசாயக் கல்வி, விஞ்ஞான கணித கல்வி, விளையாட்டுக்கள், உடற்கல்விக் கிளை, பாடசாலைகள் மேற்பார்வைக் கிளை, ஆலோசனையும் தொழில் வழிகாட்டலும் நிகழ்ச்சி நிரல்கள், பிரிவேனைக் கல்விக் கிளை, இணைப் பாடவிதான கல்விக் கிளை, முறைசாராக் கல்விக்கிளை கட்டாயக் கல்விச் சட்டங்களை நடைமுறைப் படுத்துதல் ஆகிய விடயங்கள் 7ஆவது அத்தியாயத்திலும் அறிக்கையிடப்பட்டுள்ளன. 8ஆவது அத்தியாயம் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு, புத்தசிராவக பிக்குகள் பல்கலைக்கழகம், இலங்கை பௌத்த, பாளி பல்கலைக்கழகம், இலங்கை உயர்தொழில் நுட்பக் கல்வி நிறுவகம் ஆகியன பற்றிய அறிக்கையையும், 9ஆவதுஅத்தியாயம், தேசியகல்வி நிறுவகம், இலங்கை பரீட்சைத் திணைக்களம், கல்வி வெளியீட்டுத் திணைக்களம், இலங்கை தேசிய நூல் அபிவிருத்திச் சபை, இலங்கை தேசிய நூலகச் சேவைச் சபை, கல்விச் சேவை ஆணைக்குழு, இலங்கை யுனெஸ்கோஆதசிய சபை ஆகியவற்றின் பணிகள் பற்றி அறிக்கையினையும் கொண்டுள்ளது. பத்தாவது அத்தியாயத்தில் கல்விச்செலவு 1987/2000, பாடசாலைகள் வகைரீதியாக மாணவர் எண்ணிக்கை, தரப்பிரிவின் அடிப்படையில் பாடசாலைகளின் மாணவர் எண்ணிக்கை, ஆசிரியர் எண்ணிக்கை அடிப்படையில் அரச பாடசாலைகளின் எண்ணிக்கை, மாணவர் எண்ணிக்கை அடிப்படையில் அரச பாடசாலைகளின் எண்ணிக்கை, பால், போதனா மொழி, பிரிவு அடிப்

படையில் அரச பாடசாலைகளிலுள்ள மாணவர் எண்ணிக்கை, பால், போதனா மொழி கல்வித் தகுதி, அடிப்படையில்அரச பாடசாலைகளிலுள்ள ஆசிரியர் எண்ணிக்கை என இவ்வறிக்கை விரிகின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 37932).

### 12302

**கல்வி வளர் சிந்தனைகள் (பாகம் 1).** சு.க.சீவரத்தினம் (புனைபெயர்: சுகசீவன்). யாழ்ப்பாணம்: கச்சாய்த் தமிழ் இலக்கிய மன்ற வெளியீடு, கச்சாய், சாவகச்சேரி, 1வது பதிப்பு, ஏப்ரல் 2002. (சாவகச்சேரி: ஏ.ஆர்.எஸ். பிரின்டேர்ஸ்).

xvi, (4), 58 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 125.00, அளவு: 20x14 சமீ.

கச்சாயூர்ப் பண்டிதர், இளைப்பாறிய பாடசாலை அதிபர் கவிஞர் சுகசீவன் எழுதியுள்ள நூல் இது. 1966-1967 காலப்பகுதியில் யாழ்/ கொழும்புத்துறை ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் பயிற்சியை முடித்தபின்னர் நுவரெலியா மாவட்டத்தில் ஐந்தாண்டு ஆசிரியப்பணியாற்றிய பின்னர் யாழ்./கச்சாய் அரசாங்க தமிழ் கலவன் பாடசாலையில் தன் பணியைத் தொடர்ந்தவர். 15.01.1975இல் அதிபர் பரீட்சையில் சித்தியடைந்து, வவுனியாக் கல்வி மாவட்டத்தில் சிறிதுகாலம் பணியாற்றியவர். பின்னர் 01.01.1982 இல் தன் விருப்பத்திற்குரிய முன்னைய பாடசாலையான கச்சாய் அ.த.க. பாடசாலைக்கே பணியாற்றத் தொடங்கினார். இவரது கல்விசார் அனுபவங்களின் வெளிப்பாடாக இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 27468).

### 12303

**கல்விக் கொள்கைகள் பாடசாலைப் பரிபாலனம் சம்பந்தமான விரிவுரைகளின் தொகுப்பு.** அரசினர் தமிழர் ஆசிரியர் சங்கம். கொழும்பு 13: அரசினர் தமிழர் ஆசிரியர் சங்கம், 162, ஜம்பட்டா வீதி, 1வது பதிப்பு, மே 1973. (யாழ்ப்பாணம்: கலைவாணிஅச்சகம், 10, பிரதான வீதி).

(16), 102 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x18.5 சமீ.

அரசினர் தமிழர் ஆசிரியர் சங்கம், வடமாநிலக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து நடாத்திய விடுமுறைக்காலப் பயிற்சிக் கழகத்திலும் கருத்தரங்கிலும் கல்விக் கொள்கைகள், பாடசாலைப் பரிபாலனம் சம்பந்தமாக விரிவுரையாளர் நிகழ்த்திய விரிவுரைகளின் தொகுப்பு. மேற்படி விரிவுரைகள் யாழ்/வேம்படி மகளிர் கல்லூரியில் 1973, ஏப்ரல் 15,16,17ஆம் திகதிகளிலும், யாழ்/வீரசிங்கம் மண்டபத்தில் 1973ஏப்ரல் 18,19ஆம் திகதிகளிலும் இடம்பெற்றிருந்தன. "கல்விக் கொள்கைகள்" என்ற முதலாம் பகுதியில் கல்வியின் நோக்கங்களும் கல்விக் கொள்கைகளும், மகாத்மா காந்தியின் கல்விக் கொள்கை, பெற்றிக் பிரீபல் (1782-1852), ரூசோவின் கல்விக் கருத்துக்கள், மேரி மொன்டிசூரி அம்மையாரின் கல்விக் கொள்கைகள், ஜோன் டியூயின் கல்விக் கொள்கை, பெற்றோர்-ஆசிரியர்-மாணவர்

தொடர்பு, பாடத்திட்ட வகைகளும், பாடத்திட்டம் அமைக்கும்போது கவனிக்க வேண்டிய விதிகளும், பாடசாலைக் கருமங்களைத் திட்டமிடும்போது கவனிக்கவேண்டியவை, கல்வி முன்னேற்றத்திற்குச் சமூகத்தால் செய்யப்படும் சேவைகள், டோல்ரன் முறையும் தொழில்முறையும், தொழில்முறை, கேள்வி கேட்டல் சம்பந்தமான வழிமுறைகள், பொருளாதார விருத்தியும் கல்வியும், சமூக மாற்றங்கள் ஏற்படுத்துவதற்கான கல்வித் திட்டத்தினை இயைபுபடுத்தல், கல்வி அமைச்சிலிருந்து பாடசாலை வரையிலான தொடர்பு, இலங்கையின் எதிர்காலக் கல்வித் திட்டம் ஆகிய விரிவுரைத் தொகுப்புகள் காணப்படுகின்றன. "பரிபாலனம்" என்ற இரண்டாவது பகுதியில் கல்விச் சட்டங்கள், பாடசாலைகளின் உட்பரிபாலனம், வரலாற்றுக் குறிப்புகள், பெற்றோர் ஆசிரியர் சங்கமும் பாடசாலைக் கட்டடங்களும், நியமனம், அரச ஊழியர்களுக்கு அரசியல் உரிமைகள், அவைகளில்/அமைப்புகளில் அங்கத்துவம் வகித்தல் கருத்து வெளியீட்டு உரிமைகளைப் பிரயோகித்தல், பொது நடத்தையும் ஒழுக்கமும், இடமாற்றங்கள், ஒரு பாடசாலையில் வைத்திருக்கவேண்டிய பதிவேடுகளின் அட்டவணை, இருப்புப் பொருட்களின் பதிவேடும் கணக்கீடும் கட்டுக்காப்பும், அரசினர் விடுதிகளும் ஆசிரியர்களும், அரசினர் பாடசாலைகளில் பணம் திரட்டல், சம்பளக் கடன்கள், லோகொர் சீமாட்டி கடன் நிதி, லீவு, புகையிரத ஆணைச்சீட்டு, தொழிற்சங்கம், பொது அறிவு (சுருக்கக் குறிப்புகள்) ஆகிய விரிவுரைத் தொகுப்புகள் காணப்படுகின்றன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 34527).

## 12304

**கல்விக் கொள்கையும் முகாமைத்துவமும்.** மா.செல்வராஜா. மகரகம: கல்வி முகாமைத்துவ அபிவிருத்தித்துறை, தேசியகல்வி நிறுவகம், 2வது திருத்திய பதிப்பு, 1997, 1வது பதிப்பு, 1995. (தெகிவளை: ஏ.ஜே.பிரின்ட்ஸ், 1-B, P.T. டீ சில்வா மாவத்தை).

iv, 128 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 120., அளவு: 21.5x14 சமீ., ISBN: 955-95598-5-0.

இந்நூலில் கல்விக் கொள்கை, கல்வி நோக்கங்களும் குறிக்கோள்களும், இலங்கையில் கல்வி நோக்கங்களும் குறிக்கோள்களும், இலங்கையின் கல்விக் கொள்கையின் சிறப்பம்சங்களைப் பிரதிபலிக்கும் செயற்பாடுகள், கல்விக் கொள்கை உருவாக்க மாதிரி, ஆசிரியர் கல்வி (சில உத்தேசிக்கப்பட்ட புதிய கொள்கைகளும் ஒழுங்கமைப்புகளும்), அதிபர்களது முகாமைத்துவத் திறன்கள், அதிபரும் அபிவிருத்தித் தலைமைத்துவமும், அறிவுறுத்தல் தலைமைத்துவமும் பாடசாலையில் கலைத்திட்ட முகாமையும், பாடசாலை நேரசூசி தயாரித்தல், பாடசாலை மேற்பார்வை, பாடசாலையில் தொடர்பாடல், கல்வி மாற்றங்களை முகாமைத்துவம் செய்தல், பாடசாலை அபிவிருத்திக்கு சமூக தொண்டர் ஸ்தாபனங்களின் பங்களிப்பும் அதிபரது கடமையும், பன்முகப்படுத்தலின்பின் கல்வி முறைமையில் கட்டமைப்பு, மாவட்டக் கல்வி நிருவாகத்தை மீள் ஒழுங்கமைத்தல், மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள், தேசிய

கல்வி நிறுவகம், தேசியகல்வி ஆணைக்குழு, பாடசாலைகளில் குழுக்கள் உருவாக்கமும் அவற்றை முகாமைசெய்தலும் ஆகிய 20 கல்வியியல் முகாமைத்துவம் சார்ந்த கட்டுரைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 30361).

### 12305

**கல்விக் கோட்பாடுகளும் இலக்கியக் கோட்பாடுகளும்.** சபா ஜெயராஜா. யாழ்ப்பாணம்: கல்வியியல் துறை, யாழ். பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, 2004. (யாழ்ப்பாணம்: சண்ஷைன் கிராப்பிக்ஸ், கே.கே.எஸ். வீதி, இணுவில்).

(6), 134 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 19.5x14 சமீ.

கல்வித்துறையிலும் இலக்கியத்துறையிலும் மேற்கிளம்பிய கோட்பாடுகளைத் தமிழ்மொழியில் விளக்கும் நோக்கத்துடன் இந்நூலாக்கம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பல்வேறு துறைகளையும் உள்ளடக்கிய அகல்விரிவாக்கப் பண்பு கொண்ட அமைப்பியல் வடிவத்தை இந்நூல் பெற்றுள்ளது. கல்வியியலிற் கூறப்பட்டுள்ள கோட்பாடுகள் இலக்கியத் திறனாய்வுப் புலத்திலும் இடம்பெறும் ஒப்புமை இத்தகைய ஒரு நூலாக்கத்தை மேற்கொள்வதற்கான காரணமாகியுள்ளது. இத்துறையில் மேலும் தேடலை முன்வைக்கும் வகையில் ஆங்கில எண்ணக் கருக்களும் ஆசிரியரால் தரப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 35846).

### 12306

**கல்விக்கான உரிமையும்உலகளாவிய ஏற்பாடுகளும்.**அல்-ஷெய்ஹ் எம்.முஹம்மத் ஜவாத். மூதூர் 05: அல்-ஹுஸ்னா பவுண்டேஷன், அரபிக் கல்லூரி வீதி, 1வது பதிப்பு, ஏப்ரல் 2009. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, ½, டாம் வீதி).

x, 134 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-1248-02-4.

மனித உரிமைகள்-ஓர் எளிய அறிமுகம், கல்விக்கான உரிமை, கல்விக்கான உரிமையும் உலகப் பொது நோக்கும், அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம், சிறுவர் உரிமைகள்-ஒரு சுருக்க அறிமுகம், சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம், பொருளாதார சமூக கலாசார உரிமைகள் மீதான சமவாயம், பெண்களுக்கெதிரான எல்லாவகை ஓரங்காட்டுதலையும் நீக்குவது பற்றிய சமவாயம், தேசிய அல்லது இனம்சார் மதம்சார் மற்றும் மொழிசார் சிறுபான்மையோரைச் சேர்ந்த ஆட்களின் உரிமைகள் பற்றிய வெளிப்படுத்துகை, உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர் தொடர்பான நெறிமுறைகள், அகதிகளின் அந்தஸ்து தொடர்பான சமவாயமும் தாயேடும், இனப்பாகுபாட்டை ஒழிப்பதற்கான அனைத்துலக உடன்படிக்கை, கல்விக்கான உரிமையும் சர்வதேச மனிதாபிமானச் சட்டமும், யாவருக்கும் கல்வி, கல்விக்கான உரிமையும் சர்வதேச இடர்பாடுகளும்-ஒரு விமர்சனக் குறிப்பு, கல்விக்கான உரிமையும் தேசிய எற்பாடுகளும், கல்விக்கான உரிமையில் இலங்கை-சிலஅவதானங்கள், சுதந்திர இலங்கையில் கல்விக்கான உரிமை, இலங்கையில் கல்விக்கான உரிமையும் ஆவணம் சார்ந்த ஏற்பாடுகளும், இலங்கைப்

பெண்கள் பட்டயம், இலங்கையில் கல்விக்கான உரிமை- ஒரு விமர்சனக் குறிப்பு, கல்விக்கான உரிமையும் பிராந்திய ஏற்பாடுகளும் ஆகிய 22 அத்தியாயங்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 47793).

## 12307

**கல்விச் செயற்பாட்டில் புதிய செல்நெறிகள்**.சோ.சந்திரசேகரன். மதுரை 625020: கவிதா பதிப்பகம், 4/825, நேரு வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 1996. (மதுரை 625001: விவேகானந்தா பிரஸ், 48, மேலைமாசி வீதி).

(8), 56 பக்கம், விலை: இந்திய ரூபா 80., அளவு: 21x14 சமீ.

கல்விச் செயற்பாடும் எதிர்காலவியல் நோக்கும், புதிய தகவல் மைய நூற்றாண்டுக் கான மாணவர் திறன்கள், கல்விச் செயற்பாட்டில் தகவல் திறன்கள், நவீன யுகத்துக்கான விஞ்ஞானக் கல்வியும் தொழில் நுட்பக்கல்வியும், மறைநிலைப் பாட ஏற்பாட்டுச் சிந்தனை, கல்வி நிர்வாகத்தில் புதிய அணுகுமுறைகள், அறிவாக்கத்தில் விஞ்ஞான ஆய்வுமுறை - சில மாற்றுக் கருத்துக்கள், "கற்பதற்குக் கற்றல்" - புதிய கல்விக் குறிக்கோள், உழைக்கும் உலகமும் பாடசாலைக் கல்வியும், வளர்முக நாடுகளில் தொழிற்கல்வி ஏற்பாடுகள், "கல்வித்துறையில் சமவாய்ப்புகள்" - இக்கோட்பாட்டின் தோற்றம் ஆகிய இயல்களில் இந்நூல் விரித்தெழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 19427. நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தின் சேர்க்கை இலக்கம் 014072).

## 12308

**கல்விப் பணியில் நாவலர்**. க.இரகுபரன் (தொகுப்பாசிரியர்). கொழும்பு 4: நாவலர் நற்பணி மன்றம், இல. 36, நந்தன கார்டின்ஸ், 1வது பதிப்பு 2014. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

iv, 71 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14 சமீ.

ஆறுமுக நாவலரது கல்விப்பணிகள் தொடர்பாக வெளிவந்த கட்டுரைகளின் தொகுப்பு. நாவலரின் கல்விப்பணி (ச.தனஞ்சயராசசிங்கம்), நாவலர் கல்விப் பணி (ச.அம்பிகைபாகன்), கல்வித் துறையில் தீர்க்கதரிசனம் (கி.லக்ஷ்மணன்), கல்வியியல் நோக்கில் நாவலர் (இ.முருகையன்), ஈழத்துச் சிந்தனைக் கதிர் நாவலர் பெருமான் (ப.சந்திரசேகரம்), கல்வித்துறையில் நாவலரின் பெருங்கனவு (ஸ்ரீ பிரசாந்தன்) ஆகிய ஆறு கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 59213).

## 12309

**கல்விப் பாரம்பரியங்கள்**.வ.ஆறுமுகம். யாழ்ப்பாணம்: உயர்கல்விச் சேவைப் பதிப்பகம், 374, மணிக்கூட்டு வீதி, திருத்திய 2வது பதிப்பு, ஒக்டோபர் 2000, 1வது பதிப்பு விபரம் தரப்படவில்லை. (யாழ்ப்பாணம்: உயர்கல்விச் சேவைப் பதிப்பகம்).

(4), 128 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 21x14.5 சமீ.

யாழ்ப்பாணத்தில் சைவக்கல்விப் பாரம்பரியம், 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் யாழ்ப்பாணத்தில் சைவக் கல்வியின் நிலை, எமது கல்வி, ஆசிரியரின் பல்வகைத் தோற்றங்களும் செயற்பாடுகளும், கல்வியில் கடமையும் அர்ப்பணிப்பும், கல்வி அன்றும் இன்றும், 1970க்குப் பின் இலங்கைக் கல்வியில் புதிய போக்குகள் எதிர்பார்ப்பும் நிறைவேற்றமும், இலங்கைக் கல்வியில் மோர்கன் அறிக்கை, பன்மைச் சமூகத்தில் கல்வியின் நோக்கும் போக்கும், சுதந்திர இலங்கையில் கல்வியில் மொழிக் கொள்கை-பயன்நோக்கிய சிந்தனைகள் ஆகிய 10 அலகுகள் இடம்பெற்றுள்ளன. இவ்விரண்டாம் பதிப்பின் இறுதிக்கட்டுரை இப்பதிப்பிற்கெனப் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளதுடன் 3வது அலகான "எமது கல்வி" என்ற கட்டுரை திருத்திப் புதுப்பிக்கப்பட்டுள்ளது. இந்நூலாசிரியர் பேராசிரியர் வ.ஆறுமுகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கல்வியியற்துறைத் தலைவராவார். (இந் நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 31261).

## 12310

**கல்விப் பொதுத்தராதரப் பத்திரப் பரீட்சை (சாதாரணம்): 1978ஆம் ஆண்டு 10ஆந் தரத்துக்கான பாடத்திட்டம்.** கல்வி அமைச்சு. கொழும்பு: இலங்கை பரீட்சைத் திணைக்களம், கல்வி அமைச்சு, 1வது பதிப்பு, ஜனவரி 1978. (கொழும்பு: இலங்கை அரசாங்க அச்சகம், பரீட்சைத் திணைக்களம்).

87 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

சமயம் (இந்து சமயம், றோமன் கத்தோலிக்க கிறிஸ்தவ சமயம், றோமன் கத்தோலிக்கர் அல்லாத கிறிஸ்தவ சமயம், இஸ்லாம்), போதனை மொழி-தமிழ், இரண்டாம் மொழி-ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம், சமூகக் கல்வி, அழகியற் கல்வி (நாட்டியம், கர்நாடக சங்கீதம், சித்திரம்), தொழில் முன்னிலைப் பாடநெறி, சுகாதாரக் கல்வி ஆகிய ஒன்பது பாடங்களுக்குமான கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் பரீட்சை (சாதாரணம்)க்கான கல்வித் திணைக்களத்தினால் அறிவுறுத்தப் பட்ட பாடத்திட்டம் இதுவாகும். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 27470).

### 12311

**கல்வியியல் அடிப்படைகள்.** N.P.M. சுல்தான், மேனகா கிருஷ்ணபிள்ளை. கொழும்பு: N.P.M.சுல்தான், செல்வி மே.கிருஷ்ணபிள்ளை, போதனாசிரியர், தொலைக் கல்வி மத்திய நிலையம், 1வது பதிப்பு, ஏப்ரல் 2001. (கொழும்பு 6: உதயா பப்ளிக்கேஷன்ஸ், 83/3, 3/2, 37ஆவது ஒழுங்கை, வெள்ளவத்தை).

vii, 177 பக்கம், அட்டவணைகள், விலை: ரூபா 190., அளவு: 22x15 சமீ.

கல்வித் தத்துவம், கல்வி உளவியல், கலைத்திட்டம், கல்வித் தொழில்நுட்பம், கல்விப் புள்ளிவிபரவியல் ஆகிய ஐந்து இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. ஆசிரியப் பயிற்சி பெறும் மாணவர்கள் தொழில்சார் கல்விப் பாடங்களில் எதிர் நோக்கும் பிரச்சினைகளுக்கு சிறப்பாகத் தீர்வு காண்பதே ஆசிரியரின் நோக்கமாகவுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 26900).

### 12312

**கல்வியியல்: ஓர் அறிமுகம்.** ச.முத்துலிங்கம். யாழ்ப்பாணம்: வி.சதாசிவம், கீதாஞ்சலி, நல்லூர், 1வது பதிப்பு, செப்டெம்பர் 1974. (யாழ்ப்பாணம்: ஆசீர்வாதம் அச்சகம், 32 கண்டி வீதி).

(8), 322 பக்கம், அட்டவணைகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

கல்விக் கோட்பாடுகள் (கல்விச் சிந்தனையாளர் சிலரின் கருத்துக்கள், கல்வியும் பொருளாதாரமும், கல்வியும் சமூகமும், கலைத்திட்டமும் அதன் வகைகளும், சமயக்கல்வி), உளவியல் (ஊக்கம் பற்றிய கொள்கைகள், பிள்ளை வளர்ச்சிப் பருவங்கள், பிள்ளைகளின் பொருத்தப்பாடு, எண்ணக்கருவும் சிந்தனையும், அறிவு வளர்ச்சி), கற்றலும் கற்பித்தலும் (கற்றலும் ஊக்கமும், கற்பித்தற் பொது முறைகள், ஸ்கின்னரின் கொள்கையும் நிரலித்த கற்பித்தலும், வகுப்பறைக் கற்பித்தல்), அளவீடும் வழிகாட்டலும் (பாட அடைவும் அதன் அளவீடும், நுண்மதியும் அதன் அளவீடும், ஆளுமையும் அதன் அளவீடும், தொழிலுக்கு வழிகாட்டல், கூட்டு வழிகாட்டல்), கல்வி முறை (சுதந்திரத்தின் பின் இலங்கையில் கல்வி மாற்றங்கள், இலங்கையிற் புதிய கல்வித் திட்டம், இங்கிலாந்தின் கல்வி முறை) ஆகிய ஐந்து பாகங்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. நூலாசிரியர் சதாசிவம் முத்துலிங்கம் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் பேராதனை வளாகத்தின் கல்வியியல்துறை விரிவுரையாளராவார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 34443. நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தின் சேர்க்கை இலக்கம் 017268).

## 12313

**கல்வியியல் சுற்றறிக்கைகளின் தொகுப்பு (தெரிந்தெடுக்கப்பட்டவை) 2006.**

*சி.சரவணபவானந்தன் (தொகுப்பாசிரியர்). கொழும்பு 15: சி.சரவணபவானந்தன், நிருவாகச் செயலாளர், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம், கொழும்பு பணிமனை, கனடா இல்லம், 40, மத்திய வீதி, 1வது பதிப்பு, 2006. (கொழும்பு: ஈ.எஸ். பிரின்டர்ஸ்).*

iv, *214+116 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 27*x*20 சமீ.*

*இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கொழும்புக் கிளைகளின் உதவியுடன் வாண்மை விருத்தி, வழிகாட்டல் அமர்வுகளைத் தொடராக கடந்த 2005 ஒக்டோபர் மாதத்தில் இருந்து சிலகாலம் நடாத்தி வந்தது. இவ்வாண்மை விருத்தி வழிகாட்டல் அமர்வில் பல்வேறு ஆவணங்களைத் தொகுத்து ஐந்து வகையான சிறு கையேடுகளை வழங்கியுள்ளது. அத்துடன் 2002இல் இலங்கைக் கல்வி நிருவாக சேவை பரீட்சை நடைபெற்றபோது வெளியிடப்பட்ட கல்வி முகாமைத்துவ சுற்றறிக்கைகளின் தொகுப்பு இற்றைப்படுத்தப்பட்டு இணைக்கப்பட்டுள்ளது. ஆசிரியர் தேவைப்பாடு, ஆசிரியர் செயலாற்றுகை தரங் கணிப்பீடு, ஆசிரியர் சேவை/பதவியுயர்வு, ஆசிரியர் பிரசவலீவு, ஆசிரியர் ஓய்வூதியம், பாடசாலை முகாமைத்துவம், பாடசாலை மட்டக் கணிப்பீடு, பொது நிர்வாகம், தாபன விடயம், தகவல் தொழில்நுட்பம், பொது ஆகிய தலைப்புகளில் இவை தொகுக்கப் பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 42378).*

## 12314

**கல்வியியல் நோக்கு.** *யூ.எல்.அலியார். கொழும்பு 14: பைத்துல் ஹிக்மா, 143/15, கிராண்ட்பாஸ் வீதி, 1வதுபதிப்பு, மே 1995. (கொழும்பு 12: டொப் பிரின்ட்ஸ், 35ஏ, முதலாவது பள்ளித் தெரு).*

xvii, *147 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 17*x*12 சமீ.,* ISBN: *955-95831-0-7.*

*இந்நூலில் ஆசிரியரின் கல்வியியல் சார்ந்த பன்னிரு கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. கல்வியியல் நோக்கு, முன்பள்ளிக் கல்வி-நோக்கும் போக்கும், ஆரம்பக் கல்வி ஆசிரியர்-உயர் பண்புகள், நேர முகாமைத்துவம், இஸ்லாமிய தத்துவ நோக்கில் ஆசிரிய நெறி, பகற் கனவு ஓர் உளவியல் சீராக்கம், பாடசாலைகளில் கட்டொழுங்கு பேணல், கல்வி வழிகாட்டலும் ஆலோசனை சேவையும், பாடசாலை நூலகங்கள், பாடசாலைக் கொத்தணி முறை, கல்வி முறையில் கலாசார தனித்துவம், கல்வியில் சமவாய்ப்பு-கோட்பாடும் செயற்பாடும் ஆகிய தலைப்புகளில் இவை எழுதப் பட்டுள்ளன. கிழக்கிலங்கையின் அம்பாறை மாவட்டத்தில், சம்மாந்துறையைச் சேர்ந்த உதுமா லெவ்வை தம்பதியினரின் புதல்வரான அலியார் சம்மாந்துறை முஸ்லிம் மகாவித்தியாலயம், மட்டக்களப்பு அரசினர் கல்லூரி, பேராதனைப் பல்கலைக்கழகம், கொழும்புப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், அவுஸ்திரேலியாவின் மக்குவாரி பல்கலைக்கழகம் ஆகியவற்றின் பழைய மாணவராவார். கல்வித்துறை டிப்ளோமா, ஊடகத்துறை டிப்ளோமா, கல்வியியல்*

முதுமாணி ஆகிய பட்டங்களைப் பெற்றுள்ள இவர் மக்குவாரி பல்கலைகழகத்தில் Dip. in. EMIS பட்டத்தினையும் பெற்றுள்ளார். வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தில் கல்விப் பணிப்பாளராகப் பணியாற்றித் தற்போது ஓய்வுபெற்றுள்ள அலியாரின் முதலாவது ஆக்கம் 1965 அக்டோபர் 10 "சுதந்திரன்" பத்திரிகையில் "ஈழநாடும் கண்ணகி வழிபாடும்" எனும் தலைப்பில் பிரசுரமானது. ஆக்க இலக்கியங்களை இவர் படைக்காவிடினும் கூட அறிவுசார் கட்டுரைகள் முன்னூற்றுக்கும் மேல் எழுதியுள்ளார்.கொழும்புப் பல்கலைக்கழத்தில் 1997 இல் பத்திரிகையியல் டிப்ளோமா நெறியைப் பூர்த்தி செய்து விசேட சித்தி பெற்றார். தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் பத்திரிகையியல் டிப்ளோமா நெறிக்கு 2002-2003ஆம் ஆண்டுகளில் விரிவுரையாளராகப் பணியாற்றியுள்ளார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 14739).

## 12315

**கல்வியியற் சிந்தனைகள்.** ச.நா.தணிகாசலம்பிள்ளை. திருக்கோணமலை: ச.நா. தணிகாசலம்பிள்ளை, கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு, வடக்கு-கிழக்கு மாகாணம், 1வது பதிப்பு, ஏப்ரல் 1998. (திருக்கோணமலை: உதயன் பதிப்பகம், 39, அருணகிரி வீதி).

xii, 90 பக்கம், தகடுகள், விலை: ரூபா 125., அளவு: 24x18 சமீ.

அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர், மாணவர்களின் வினைத்திறன் மேம்பாட்டிற்கான சிந்தனைகள், கலாநிதி ச.நா.தணிகாசலம்பிள்ளை அவர்கள் கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் திட்டமிடல் கல்விப் பணிப்பாளராகப் பணியாற்றியவர். கல்வியின் வரையறை, கல்வியின் முக்கியத்துவம், கல்வியும் சுகவாழ்வும், கல்வியும் உடல் உறுதியும், ஆசிரியரும் அர்ப்பணிப்பும், கல்வி நிறுவனங்களின் கட்டமைப்பு, கல்வி நிர்வாகக் கட்டமைப்பில் உயர்த்தப்படும் உயர்பதவிகள், சமூக உறவும் பள்ளிக்கூடமும், கல்வியை நிர்வகிப்பதில் மனித வளத்தின் இன்றியமையாமை, கல்விப் பிரச்சினைகளின் பொதுக் காரணிகள், கல்வி நிர்வாகக் கட்டமைப்பு மாற்றம், தாயூட்டும் கல்வியின் அவசியம், கிராமக் கல்விக் களம், சமூக நிதி அளிப்பும் பள்ளிக்கூட விருத்தியும், பள்ளிக்கூடம் சமூகத்தில் ஏற்படுத்தும் தாக்கம், நீங்கள் எங்கு போகின்றீர்கள்? கல்வியும் சமூக வளர்ச்சியும் தலைமை பற்றிய சமூகவியற் கொள்கையும், அழகியவுணர்வு அகத்தை அமைதிப்படுத்தும், கல்விக் குடும்பமும் தொழிற் குழுக்களும், கற்றற் கவின் நிலையும் கற்பித்தற் கவின்நிலையும், பாடசாலை நிறுவன உள்ளகக் கட்டமைப்பு ஆகிய தலைப்புகளில் இந்நூல் விரிவாக எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 21168).

## 12316

**கல்வியின் அடிப்படைகள்.** வீ.கருணலிங்கம், செ.திருநாவுக்கரசு. யாழ்ப்பாணம்: வீ.கருணலிங்கம், இல. 135, கன்னாதிட்டி வீதி, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2015. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ மாருதி பிரின்டர்ஸ், 555, நாவலர் வீதி).

vi, *224 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 20.5*x*14.5 சமீ.,* ISBN: *978-955-42642-0-5.*

*கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் வீ.கருணலிங்கம், மேற்படி கலாசாலையின் ஓய்வுநிலைப் பிரதியதிபரான செ.திருநாவுக்கரசு ஆகிய இருவரும் இணைந்து எழுதிய கல்வியியல்சார் நூல். கல்வி என்றால் என்ன? கல்வித் தத்துவவியலாளர்கள், பல்வேறு கல்வியியல் அணுகுமுறைகள், கல்வியின் புதிய போக்கு, ஆசிரியரின் முகாமைத்துவ வகிபாகம், சமூகமயமாக்கல், சமூகமயமாக்கல் காரணிகளின் பங்களிப்பு, சமூகப் பல்வகைமையும் சமூக வளங்களுக்கு ஏற்பக் கற்றல் கற்பித்தல் செயல்முறையை மேற்கொள்ளலும், பாடசாலைக்கும் சமூகத்திற்கும் இடையிலான தொடர்புகள், ஆசிரிய வாண்மைத்துவம், இலங்கையின் கல்வி வரலாறு, விளைதிறன் மிக்க பாடசாலை, அனர்த்த முகாமைத்துவக் கல்வி, கலைத்திட்டம், கற்றல்-கற்பித்தல் முறைகள், கற்றல் வளங்கள், கல்விசார் குறிப்புகள் ஆகிய 14 அத்தியாயங்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 031188).*

### 12317

**கற்பிப்பதற்கான சுதந்திரமும் கற்பதற்கான சுதந்திரமும்.** *டீ.ஏ.பெரேரா. மகரகம: கல்வி ஆராய்ச்சித் துறை தேசிய கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, ஒக்டோபர் 1997. (மகரகம: அச்சிடற் பிரிவு, தேசிய கல்வி நிறுவகம்).*

*(2), 73 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5*x*13.5 சமீ.,* ISSN: *1391-1635.*

*கலாநிதி* C.W.W.*கன்னங்கரா அவர்களின் ஞாபகார்த்தப் பேருரையாக 13.10.1997 அன்று நிகழ்த்தப்பட்ட உரையின் எழுத்து வடிவம். அரசு, பாடசாலைக் கல்வி முறையில் மாற்றத்தை ஏற்படுத்த முனையும் வேளையில் கவனத்திற்கெடுக்கவேண்டிய மிக முக்கிய அம்சம் வகுப்பறையில் நிகழும் மாற்றங்களாகும். இதில் சம்பந்தப்பட்ட இரு பாத்திரங்களான ஆசிரியர்-மாணவர் ஆகிய இருவருக்கும் தற்போதுள்ளதைவிட அதிக சுதந்திரம் வழங்கப்படல் வேண்டும் என்றுகூறும் டீ.ஏ.பெரேரா, இலங்கையில் முறைசார் பாடசாலைகளின் தோற்றத்தை, தற்போது முறைசார் பாடசாலைகளில் பிள்ளைகளின் கல்வியின்மீது அரச செலுத்தும் அதிகாரத்தினதும் கட்டுப்பாட்டினதும் நோக்கிலிருந்தும் அது எவ்வாறு தோன்றியது என்ற நோக்கிலிருந்தும் இவ்வுரையைத் தொடங்குகின்றார். இரண்டாவதாக ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் எவ்விதமான சுதந்திரம் வழங்கப்படவேண்டும் என்பது தொடர்பான தனது கருத்துக்களை முன்வைக்கின்றார். இறுதியாகத் தொடர்ந்து நிலவும் சில பிரச்சினை களையும் பாரிய அளவு சுதந்திரத்துடன் அவற்றைத் தீர்க்க முடியுமா என்பதையும் தற்போதைய அரசியல் பண்பாட்டுச் சூழலைக் கவனத்திற்கொண்டு விவரிக் கின்றார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 56694).*

## 12318

**கற்றலில் மாணவர் பிரச்சினைகளுக்கான தீர்வுகள்(ஓர் உளவியல் நோக்கு).** எம்.எம்.பஹீம். கொழும்பு 9: இஸ்லாமிக் புக் ஹவுஸ், 77, தெமட்டகொட வீதி, 1வது பதிப்பு, 2011. (அச்சக விபரம் தரப்படவில்லை).

viii, (4), 64 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 150., அளவு: 21x14 சமீ.

இந்நூல், எண்ணங்களைத் தட்டிக் கொடுங்கள், பிரச்சினைகளின் பிறப்பிடம், மன அமைதிக்கு வழி, நேர முகாமைத்துவம், ஞாபக மறதியா? கவலையே வேண்டாம், துரித கற்றல் முறைகள், மனதை ஒருமுகப்படுத்தல், கற்றலைப் பாதிக்கும் நடத்தைகள், பெற்றோர் பங்களிப்பு ஆகிய ஒன்பது இயல்களில் மாணவர்களிடையே உருவாகும் கல்விசார் பிரச்சினைகளுக்கு வழிதேடுகின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 50211).

## 12319

**சனத்தொகையும் குடும்ப வாழ்க்கைக் கல்வியும்: ஆசிரியர் ஆலோசகர்களுக்கான கைந்நூல்.** K.T.கனகரத்தினம் (பதிப்பாசிரியர்). மஹரகம: சனத்தொகையும் குடும்ப வாழ்க்கைக் கல்விக்கான செயற்றிட்ட வெளியீடு, தேசிய கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (கொழும்பு: ஏ.ஜே.பிரின்ட்ஸ், 44, புகையிரத நிலைய வீதி, தெகிவளை).

80 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x19 சமீ.

ஐக்கிய நாடுகளின் ஆதரவுடன் சனத்தொகை நிதியத்தின் அனுசரணையுடன் இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது. சனத்தொகைப் பரம்பலியல் (அடிப்படை எண்ணக்கரு, சனத்தொகை வேறுபாடு, சனத்தொகையும் வாழ்க்கை நலன்களும், குடும்ப அலகு, பொறுப்புள்ள பெற்றோர்கள், கட்டிளமைப் பருவம்), பாடவிடய ஒன்றிணைப்பு (பாடவிடயங்கள் சமூகக் கல்வி, விஞ்ஞானம், சுகாதாரம்), இனப் பெருக்க சுகாதாரம் கற்பிக்க உபயோகிக்கக்கூடிய உருக்கள், சனத்தொகை குடும்ப வாழ்க்கை கல்விச் செயலமர்வுகளில் பாடசாலை நடைமுறைப்படுத்தக்கூடிய செயற்பாடுகள், மதிப்பீடு (வரலாறும் சமூகக் கல்வியும், விஞ்ஞானம்), பிரதேச ரீதியான செயலமர்வுகளில் கவனிக்கப்படவேண்டியவை, பாடத்திட்டம் ஆகிய ஏழு பிரிவுகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 39140).

## 12320

**சுதந்திரத்திற்கான கல்வி-அபிவிருத்தி, தனிப்பட்ட இலக்குகள், சமூக முன்னுரிமைகள் ஆகியன தொடர்பான பிரச்சினைகள்.** லக்ஷ்மன் ஜயத்திலக்க. மகரகம: கல்வி ஆராய்ச்சித் துறை, தேசிய கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, ஒக்டோபர் 1994. (மகரகம: தேசிய கல்வி நிறுவகம்).

34 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x13.5 சமீ.

20.10.1994 அன்று நிகழ்த்தப்பட்ட C.W.W.கன்னங்கரா (கிறிஸ்தோப்பர் வில்லியம் விஜேகூன் கன்னங்கரா) ஞாபகார்த்த பேருரைத் தொடர் இலக்கம் 7. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 3776).

## 12321

**சுற்றுநிருபம்: தமிழ் மொழித் தினம்-1998.** கல்வி உயர்கல்வி அமைச்சு. கொழும்பு: தமிழ்மொழிப் பிரிவு, கல்வி, உயர் கல்வி அமைச்சு, இசுருபாயா, பத்தரமுல்ல, 1வது பதிப்பு, 1997. (கொழும்பு: இலங்கை அரசாங்க அச்சகம்).

(2), 50 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் பாடசாலைகளில் தமிழ் மொழித் தினங்களை ஒழுங்குசெய்யும் நடைமுறைகள் பற்றிய 1997ஆம் ஆண்டின்26ஆம் இலக்க சுற்று நிருபணம் இதுவாகும். தமிழ்மொழித்தினப் போட்டிகளை பாடசாலை மட்டத்திலும், வலய மட்டத்திலும், மாகாண மட்டத்திலும் இறுதியாக தேசிய மட்டத்திலும் எவ்வாறு நடத்துவது என்றும் அதற்காக வகுக்கப்பட்ட விதிமுறைகள் என்னவென்று விளக்குவதுடன், போட்டியாளர்களை மதிப்பீடு செய்யும் நடைமுறைகள் என்ன என்பதையும் விபரமாக இந்தச் சுற்றுநிருபணம் தெளிவுபடுத்துகின்றது. நூலுருவில் வெளியிடப்பெற்றுள்ள இவ்வாவணம் உயர் கல்வி அமைச்சின் தமிழ் மொழிப் பிரிவினால் சகல தமிழ்ப் பாடசாலைகளுக்கும் இதர கல்விசார் நிறுவனங்களுக்கும் விநியோகிக்கப்பட்டிருந்தது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 35525).

## 12322

**தமிழர் கல்விச் சிந்தனைகள்.** சபா ஜெயராஜா. கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, U.G.50, People's Park, 1வது பதிப்பு, 2017. (கொழும்பு 11: சேமமடு பதிப்பகம்).

vi, 126 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 21x15 சமீ., ISBN: 978-955-685-049-9.

பல்வேறு கோணங்களில் இருந்து எழுச்சிபெற்ற தமிழர் கல்விச் சிந்தனைகள் இந்நூலில் விரிவாக இடம்பெற்றுள்ளன. தமிழ்த் தேசிய உருவாக்கத்தில் கல்விச் சிந்தனைகளின் வகிபாகத்தைக் கண்டுகொள்வதற்கும் இந்நூல் துணைசெய்கின்றது. தமிழரின் தொன்மையான பொருள்முதல்வாதக் கல்விக்கோட்பாடு-ஆசீவகம், தொல்காப்பியமும் மனவெழுச்சிக் கல்விச் சிந்தனைகளும், தமிழ்மரபில் தாந்திரீகக் கல்வி, சமணக் கல்விச் சிந்தனை, சித்தர் கல்விச் சிந்தனை, தமிழர் கல்வியும் அளவை முறையும், அறக் கல்விச் சிந்தனை, அழகியற் கல்விச் சிந்தனை, திருமூலரின் கல்விச் சிந்தனை, திருக்குறள் வழி எழும் கல்விச் சிந்தனை, மணிமேகலை வழி மேலெழும் பௌத்த கல்வி, திறனாய்வுக் கல்வி, வைசேடிகக் கல்வி, சாங்கியக் கல்வி, சைவக்கல்வி, இராமானுசரின் கல்விச் சிந்தனை, தொழில்நுட்பக் கல்வி, நாவலரின் கல்விச் சிந்தனை, விபுலானந்த அடிகளாரின் கல்விச் சிந்தனை, சமகாலக் கல்வி, பிற்குறிப்பு ஆகிய 21 அத்தியாயங்களில்

இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 62226).

## 12323

**தொலைக் கல்விப் பாடநெறிகள்: கைந்நூல்.** தொலைக் கல்வி நிறுவகம். கொழும்பு: தொலைக்கல்வி நிறுவகம், தேசியக் கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1990. (கொழும்பு: Pacific Press).

20 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x18 சமீ.

தொலைக்கல்வி ஆசிரியர் கல்விப் பாடநெறிகளைக் கற்கவுள்ள ஆசிரிய மாணவர்களக்காக இக்கைந்நூல் தயாரிக்கப்பட்டுள்ளது. அறிமுகம், குறிக்கோள் களும் நோக்கங்களும், பாடநெறியின் தன்மை, பயிலுநர்களைப் பாடநெறிக்குச் சேர்த்துக் கொள்ளல், பாடநெறி உள்ளடக்கம், கற்றல் செயன்முறை, மதிப்பீடுஆகிய எட்டு அத்தியாயங்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 14290).

## 12324

**தொழிலாளர் கல்விக் கையேடு.** ஓ.ஆறுமுகம், பி.சுதந்திரராஜா, ஆர்.ஸ்ரீகாந்தன், சந்திரா குமாரசுவாமி. கல்கிஸ்சை: இலங்கை தொழிலாளர் கல்வியாளர்களின் சங்கம், இல.7, சேர்கியூலர் வீதி, 1வது பதிப்பு, ஜுலை 1991. (கொழும்பு: வரையறுக்கப்பட்ட மெக்லீன் அச்சகம்).

(8), 179 பக்கம், விளக்கப்படங்கள், அட்டவணைகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 23.5x16 சமீ.

இலங்கையில் தொழிலாளர் கல்வி மேம்பாட்டுக்காக தயாரிக்கப்பட்ட இப்புத்தகம், சர்வதேச தொழிலாளர் தாபனத்தினால் ஆங்கில மொழியில் வெளியிடப்பட்டுள்ள "Workers Education and its Techniques" என்னும் நூலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இந்தக் கையேடு அந்த நூலை மூலமாகக் கொண்டு தேசிய ரீதியாக தொழிலாளர் கல்வித் தேவைகளுக்குப் பொருந்தக்கூடிய வகையிலான தேவையான அம்சங்களை எடுத்துத் தயாரிக்கப்பட்டுள்ளது. அவ்வகையில், நோக்கம், தொழிலாளர் கல்வியின் விரிவெல்லை, உள்ளடக்கம், பயிற்றுவிப்போர், அமைப்பாளர்கள், வெளியார் உதவி, மாணவர்கள், காலமும் இடமும், வளர்ந்தோரும் கற்றல் செயல்முறையும், நுட்பங்கள், கருவிகளும் பொருட்களும் ஆகிய பதினொரு இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 39062. நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தின் சேர்க்கை இலக்கம் 014797).

## 12325

**நிலைமாற்று முகவர்.** சத்தார் எம். பிர்தௌஸ். மருதமுனை: அன்னை வெளியீட்டகம், 251 ஏ, பிரதான சாலை, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2009. (அக்கரைப்பற்று: நியூ செலெக்ஷன்).

xvi, 136 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 20.5x14 சமீ., ISBN: 978-955-0122-01-1.

சீராக்கம், ஐந்தெழு மாதிரிகை என்றால் என்ன?, 5E உம் குணநல உள்ளீடும், செயற்பாட்டு மாதிரிப் படிவம், பாடசாலை மட்டக் கணிப்பீடு, SBA நியதியும் புள்ளி வழங்கலும், கணிப்பீட்டுக் கருவிகள், கருவிகளும் பண்புகளும், கருவிகளும் அடையப்படும் தேர்ச்சிகளும், பாடசாலை மட்டக் கணிப்பீடும் வசதியேற்படுத்துநர் வகிபாகமும், சோதனை வகைகள், ஆசிரியர் தரவட்டம், பரிகாரம், பயிற்றுகை, மதிப்பீடு, மேம்பாடு, திட்டமிடல், உபாயத் திட்டமிடல், ஆரம்பக் கல்வி, கற்றல் கற்பித்தல் துணைச் சாதனங்கள், கற்றல் வளங்கள், அடிப்படை முகாமைத்துவ எண்ணக்கருக்கள், மாணவர் மைய வகுப்பறை முகாமைத்துவம், வகுப்பறை அமைவு, குழுச் செயற்பாடு, அறிக்கைசார் செயற்பாடுகளுக்கான பதங்கள், தொடருறு கல்வி, E- Learning ஆகிய 27 தலைப்புகளின்கீழ் கல்வித்துறை சார்ந்த இந்நூல் எழுதப்பட்டுள்ளது. சத்தார் எம். பிர்தௌஸ் (Sathar M.Firthous) கல்முனை வலயக் கல்வி அலுவலகத்தில் பணியாற்றுபவராவார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 49650).

## 12326

**நிறைவான கல்விக்கு.** ச.சுப்பிரமணியம். யாழ்ப்பாணம்: கல்விக் கதிர், 342 பருத்தித்துறை வீதி, நல்லூர், 1வது பதிப்பு, ஐப்பசி 1997. (கொழும்பு 14: கோல் குவிக் பிறின்டர்ஸ்).

(4), 117 பக்கம், அட்டவணைகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21 சமீ.

21 வேலைத்திட்டங்களுடன் இந்நூலாசிரியர் இலங்கையில் ஒரு நிறைவான கல்வித் திட்டத்தை அறிமுகப்படுத்த முனைகின்றார். இதில் கல்வி அபிவிருத்திக்கான காரணிகள், கல்வி-நோக்கமும் குறிக்கோள்களும், கல்விக் குறிக்கோள்களை இசைவுபடுத்தல், கல்விப் பெறுபேற்றை மதிப்பீடு செய்வதெப்படி?, பொதுக்கல்வி இலக்குகள், பாடவிதான அபிவிருத்தியின் அடிப்படை, தற்போதைய பாடத்திட்டத்தில் உள்ள குறைபாடுகள், கல்விப் பெறுபேற்றை உயர்த்துவதற்கு யாது செய்யலாம்? கல்விப் பிரச்சினைகளை இனங்காணல், மாணவர் தொடர்பாக இனங்காணப்பட்ட பிரச்சினைகள், மாணவர் தொடர் மதிப்பீட்டுத் திட்டம் (திட்டம் 1), ஆக்க முயற்சிப் போட்டி நடாத்துதல் (திட்டம் 2), பின்தங்கிய மாணவர்களுக்கான விசேட ஊக்குவிப்புத் திட்டம் (திட்டம் 3), ஆசிரியர் தொடர்பாக இனம்காணப்பட்ட பிரச்சினைகள், "எல்லோரும் சித்தி" கற்பித்தல் நுட்பம் (திட்டம் 4), ஆசிரியர் சேவை தொடர் மதிப்பீட்டுத் திட்டம் (திட்டம் 5), திட்டமிட்ட ஆசிரியர் சேவைக்காலப் பயிற்சி (திட்டம் 6), முகாமைத்துவம் தொடர்பான அபிவிருத்திகள், முகாமைத்துவம் தொடர்பான பிரச்சினைகள், வகுப்பறை மேற்பார்வைத் திட்டம் (திட்டம் 7), பாடசாலை மேற்பார்வைத் திட்டம் (திட்டம் 8), அதிபர் சேவை தொடர் மதிப்பீட்டுத் திட்டம் (திட்டம் 9), அபிவிருத்தித் திட்டம் வகுத்து நிறுவனத்தை மேம்படுத்துதல் (திட்டம் 10), கோட்டக் கல்விப் பணியாளர் கண்காணிப்புத் திட்டம் (திட்டம் 11),

முதன்மையாசிரியர் அபிவிருத்தித் திட்டம் (திட்டம் 12), முதன்மையாசிரியர் சேவை தொடர்பான குறைபாடுகள், முதன்மையாசிரியருக்கான சேவைக்காலப் பயிற்சித்திட்டம் (திட்டம் 13), முதன்மையாசிரியர் சேவையை தொடர் மதிப்பீடு செய்தல் (திட்டம் 14), திட்டமிட்ட ஆசிரியர் பயிற்சித் திட்டம் (திட்டம் 15), முதன்மை யாசிரியருக்கான ஆக்க முயற்சித் திட்டம் (திட்டம் 16), பௌதிக வளம் தொடர்பாக இனம்காணப்பட்ட பிரச்சினைகள், திட்டமிட்ட வளப்பங்கீடு செய்தல் (திட்டம் 17), கல்வி வள நிலையம் அமைத்தல் திட்டம் (திட்டம் 18), சமூகம் தொடர்பாக இனங்காணப்பட்ட கல்விப் பிரச்சினைகள், தவணைக்கொரு தரம் பெற்றார் சந்திப்புத் திட்டம் (திட்டம் 19), சமூக அறிவூட்டல் திட்டம் (திட்டம் 20), புது முயற்சி தொடர்பாக இனம்காணப்பட்ட குறைகள், புத்தாக்க முயற்சி அபிவிருத்தித் திட்டம் (திட்டம் 21), நிறைவுரை ஆகிய 41 அத்தியாயத் தலைப்புகளில் இந்நூல் விரிவான ஆலோசனைகளுடன் வெளியிடப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 39204).

### 12327

**பயிற்று மொழியாக மீண்டும் ஆங்கிலம்: ஒரு விளக்கநிலை நோக்கு.** சோ.சந்திரசேகரம், மா.கருணாநிதி. கொழும்பு 7: அகவிழி வெளியீடு, 3, டொறிங்டன் அவெனியூ, 1வது பதிப்பு, டிசம்பர் 2006. (கொழும்பு 6: டெக்னோ பிரின்ட், 55, ஈ.ஏ.குரே மாவத்தை).

96 பக்கம், விலை: ரூபா 125.00, அளவு: 21x15 சமீ.

அறிமுகம், இந்நூலின் நோக்கங்கள், இலங்கையில் ஆங்கிலக் கல்வி: ஒரு வரலாற்று நோக்கு, மீண்டும் பயிற்றுமொழியாக ஆங்கிலம், முடிவுரை ஆகிய பிரதான ஐந்து இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. பின்னிணைப்புகள் என்ற பெயரில் போதனாமொழி மாற்றத்தின் பின்னணி, பாடசாலைகளில் தாய்மொழிக் கல்வி வெற்றிபெற்றுள்ளதா?, மலேசியாவிலும் சிங்கப்பூரிலும் பயிற்றுமொழிப் பிரச்சினை, முடிவுரை என இந்நூல் மேலதிக தகவல்களை உள்ளடக்கியுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 47701).

### 12328

**பாடசாலைகளில் முரண்பாடுகளை முகாமைத்துவம் செய்தல்.** ஏ.எஸ்.பாலசூரிய (ஆங்கில மூலம்), M.H.M.யாக்கூத், M.P.M.M.ஷிப்லி, M.H.M.ஹஸன் (தமிழாக்கம்), மா.செல்வராஜா (பதிப்பாசிரியர்). மகரகம: கல்வி முகாமைத்துவ அபிவிருத்தித் துறை, தேசிய கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1994. (மகரகம: வெளியீட்டுத்துறை, தேசிய கல்வி நிறுவகம்).

iv, 284 பக்கம், அட்டவணைகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14 சமீ., ISBN: 955-597-223-0.

Conflict Management in Schools என்ற நூலை ஏ.எஸ்.பாலசூரிய அவர்கள் யூனிசெப் நிறுவனத்தின் Peace Education Project என்ற சமாதானக் கல்விச் செயற்திட்டத்தின் கீழ் எழுதியிருந்தார். இந்நூல் அந்த ஆங்கில மூல நூலின் தமிழாக்கமாகும். பாடசாலை நிர்வாகச் சூழலில் ஒவ்வொருவரது கருத்துக்களுக்கும் இடையே வேறுபாடுகள் காணப்படுவது தவிர்க்கமுடியாததாகும். இவ்வாறான வேறுபாடுகள் காரணமாக அவர்களிடையே முரண்பாடுகள் தோன்றும் வாய்ப்புக்கள் அடிக்கடி ஏற்படுகின்றன. எமது கல்விச் சமூகம், விஞ்ஞான, தொழில்நுட்ப ரீதியில் உயர்ந்த நிலையை எட்டிப்பிடித்துள்ள போதிலும், அதற்கு இயைய உளரீதியிலும், ஆன்மீகரீதியிலும், ஒழுக்கவியல் சார்ந்தும் விருத்தியடையாத நிலையே ஆங்காங்கே காணப்படுகின்றது. இச்சமூகத்தில் பாடசாலை மட்டத்தில் தனியாள்களுக் கிடையிலான இம்முரண்பாடுகள் மிக வலிமையுடனும் சிக்கலான விதத்திலும் இடம்பெறுவதைக் காணமுடிகின்றது. முரண்பாடுகளை முகாமைசெய்தல் என்னும் புதுத்துறை தொடர்பான ஆய்வு நடவடிக்கைகளில் சான்றோர் இன்று ஈடுபட்டு வருகின்றார்கள். இவ்வாறான சந்தர்ப்பங்களில் அதிபரும் ஆசிரியர்களும் எவ்வாறு முரண்பாடுகளை அறிவுபூர்வமாகவும், நியாயபூர்வமாகவும் எதிர் கொள்ளவேண்டும் என்பது தொடர்பான தெளிவான விளக்கத்தை இந்நூல் வழங்குகின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 25487).

## 12329

**பாடசாலையும் ஆசிரியரும்: ஓர் ஊடக வழிப் பார்வை.** மா.சின்னத்தம்பி (மூலம்), ப.இராஜேஸ்வரன் (தொகுப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: தினக்குரல் பத்திரிகை நிறுவனம், 1வது பதிப்பு, 2009. யாழ்ப்பாணம்: சுரபி பதிப்பகம்).

viii, 116 பக்கம், அட்டவணைகள், விலை: ரூபா 250., அளவு: 21x15 சமீ.

தினக்குரல் பத்திரிகையில் வாராந்தம் வெள்ளிக்கிழமைகளில் "கல்விப் பயணம்" என்ற மகுடத்தில் வெளிவந்த 25 கட்டுரைகளின் தொகுப்பு. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கல்வியியற்துறைப் பேராசிரியரான மா.சின்னத்தம்பி இவற்றை எழுதியிருந்தார். ஆசிரியர்கள் ஆய்வாளராக ஏன் வளர முடிய வில்லை?ஆசிரியர் -மாணவர் தொடர்பாடலில் வன்மம் வளர்கின்றதா? கல்வி ஏற்றத்தாழ்வை ஊக்கப்படுத்துகின்றதா? களைந்துள்ளதா? மாணவர்களின் விழுமிய வளர்ச்சிக்கு யார் பொறுப்பு?ஆசிரியர்கள் வினைதிறன் குறைந்தவர்களா? ஆங்கில பாடத் தோல்வியை ஏற்பதா? யாது செய்யலாம்? ஆசிரியர்கள் உயர்கல்வியை பெறுகின்றனரா? அதனை விரயமாக்குகின்றனரா? ஆசிரியர்களிடம் சுயமுகாமைத்துவம் வளர்க்கப்படவில்லையா? பாடசாலைகள் ஆசிரியர்களை ஊக்கப்படுத்துகின்றனவா? ஆசிரியர்கள் வகுப்பறையில் தோற்றுப்போய்விட்டனரா? நிறுவனங்களில் இணைந்தவர்களுக்கு கல்வி வழங்கினால் மட்டும் போதுமா? பாடசாலைகள் தவறானவையா? ரியூற்றரிகள் ஏன் அங்கீகாரம் பெற்றன? செலவந்த நாடுகள் வறிய நாட்டுப் பல்கலைக்கழகங்களை உயர்த்துகின்றனவா? ஆசிரியர் இடமாற்றம் ஏற்புடையதா? சிந்திப்போமா? பாடசாலை ஆசிரியர் ரியூட்டரியில் கற்பிக்கலாமா? பட்டதாரிகள் இலவச தயாரிப்புகளா? தரமான

தயாரிப்பா? அதி திறமை மாணவர்களை பாடசாலைகள் கவனிப்பதில்லையா? பல்கலை படிப்பு வேலை பெற்றுத் தருமா? கைவிடுமா? கல்வி வியாபார மாகிவிட்டதா? சேவையுடன் செயற்படுகிறதா? பெற்றோர்-பிள்ளை கவனமின்மை: தோல்விக்கு காரணம் யார்? பாடசாலை மாணவர்கள் அறிவு, திறன் பெறுகின்றனரா? பெற்றோர் பாடசாலை தரிசிப்பில் அக்கறை இல்லையா/கல்வியில் முதலிடுவது வருமானத்தை அதிகரிக்குமா? சிறிய பாடசாலைகள் அவசியம்தானா? கல்வி உடலுழைப்பை விடுவிக்குமா? ஆகிய கல்விசார் கேள்விகளுக்குப் பதில்களாக இக்கட்டுரைகள் அமைகின்றன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 47782).

## 12330

**பாரம்பரிய தொழிற்பயிற்சி முறையில் உய்த்துணரத்தக்க கல்வி முறைகள்.** நாகமுத்து தணிகாசலம்பிள்ளை. கொழும்பு: ச.நா. தணிகாசலம்பிள்ளை, 1வது பதிப்பு, 2009. (கொழும்பு 6: Fast Printers, 289, ½, காலி வீதி).

60 பக்கம், விலை: ரூபா 175., அளவு: 17.5x12.5 சமீ., ISBN: 978-955-50250-4-1.

பாரம்பரிய தொழிற்பயிற்சி முறையில் உய்த்துணரத்தக்க கல்வி முறைகளின் முக்கியத்துவம் பற்றிய மூன்று இயல்கள் கொண்ட ஆய்வாக இந்நூல் எழுதப்பட்டுள்ளது. கல்விமுறையில் தொழில் முன்னிலைக் கல்வியின் அவசியம், தொழில் முன்னிலைக் கல்வியின் பாடங்கள், தொழில் முன்னிலைப் பாடங்கள் கல்விமுறையில் சேர்க்கப்பட்டதற்கான காரணங்கள், தொழில் முன்னிலைப் பாடங்களின் பகுப்பு முறை, தொழில் முன்னிலைக் கல்வியான புதிய கல்விமுறை பற்றிய ஓர் ஆய்வு, இப்பாடங்களில் முக்கியமானது பாரம்பரிய தொழிற்பயிற்சி முறை, பாரம்பரிய தொழிலின் சமகால நிலை, பாரம்பரிய தொழில் பற்றிய ஆய்வு மதிப்பீட்டை நவீன தொழில் முறையுடன் ஒப்பீடு செய்தல், நவீன முறையில் ஊறிய பாரம்பரிய முறையைச் சேர்த்து மாற்ற முடியாமைக்குக் காரணம், தொழில்முன்னிலைப்பாட மீன்பிடித் தொழில் பாடத்திட்டம் பற்றிய ஓர் ஆய்வு, பாரம்பரியத் தொழிற்பயிற்சி முறையில் இருந்து பெறத்தக்க பயிற்றல் முறை, பயிற்சிக் கட்டங்களும் பயிற்சி முறைகளும், பயிற்றல்முறை மூலம் பயிற்றுவிக்கப்பட்ட தொழிலாளி ஒரு பூரண தொழிலாளி என்பதற்கான திறன்பேறுகள் ஆகிய அத்தியாயங்களின் வழியாக இந்நூல் விளக்கப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 47462).

## 12331

**புதிதாக சிந்திப்போம்: சமுதாயத்திற்கான கல்வி.** மா.சின்னத்தம்பி. யாழ்ப்பாணம்: பேராசிரியர் மா.சின்னத்தம்பி, கல்வியியல் துறை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, டிசம்பர் 2013. (யாழ்ப்பாணம்: கரிகணன் தனியார் நிறுவனம், இல.681, காங்கேசன்துறை வீதி).

viii, 206 பக்கம், விலை: ரூபா 420., அளவு: 22x15 சமீ., ISBN: 978-955-41194-0-6.

2013ஆம் வருடம் வலம்புரி நாளிதழில் முப்பது வாரங்களாகத் தொடர்ச்சியாக வெளிவந்த கட்டுரைகளின் தொகுப்பு. பெற்றோர்களே உங்கள் பிள்ளைகளுக்காக என்ன செய்கிறீர்கள் என்ற கட்டுரையில் தொடங்கி, உங்களை முன்னேற்றுவதற்கு உண்மையில் நீங்கள் ஆசைப்படுகின்றீர்களா? அது எவ்வாறு சாத்தியப்படும்? என்பது ஈறாக முப்பது கட்டுரைகள் இங்கு தொகுத்துத் தரப்பட்டுள்ளது. அனைத்தும் இலங்கையின் கல்விச் செயற்பாட்டினையும் சமூகவியல் சார்ந்த கருத்தக்களையும் எளிமையாக பொது வாசகர்களுடன் உரையாடி அவர்களிடம் எடுத்துச் செல்வதாக அமைகின்றன. பெற்றோரியம், பொதுப் பரீட்சைகள், மொழிக்கல்வி, மாணவர்களிடையே பேச்சாற்றல் வளர்க்கப்படுதல், பட்டதாரி களிடையே வேலையில்லாத் திண்டாட்டம், முன்பள்ளிகளில் தேவைப்படும் விழிப்புணர்வு, கல்வித்துறைக்கு புலம்பெயர்ந்த பழைய மாணவர்களின் பங்களிப்பு, நேரம் தவறாமை எனப் பல விடயங்களை இவரது கட்டுரைகள் தொட்டுச் செல்கின்றன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 55286).

## 12332

**பெற்றோர் அறிய வேண்டியவையும் மாணவர் பிரச்சனைகளும்.** சுப்பிரமணியம் சிவநாயகமூர்த்தி. கனடா: சுப்பிரமணியம் சிவநாயகமூர்த்தி, டொரன்ரோ, 1வது பதிப்பு, 2008. (கனடா: Fine Copy Printing, Toronto).

ii (12), 78 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x13 சமீ.

புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் மாணவர்கள் தமிழ்மொழியைக் கற்க வேண்டியதன் அவசியம், புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் எம் மாணவர்களுக்குப் பெற்றோர் சமயக் கல்வி புகட்ட ஆவன செய்தல் வேண்டும், ஒன்ராரியோ மாகாணப் பாடசாலைகளில் மாணவர்களுக்கு வழங்கப்படும் தேர்ச்சி அறிக்கை பற்றிய சில தகவல்கள், ரொரன்ரோப் பாடசாலைகளில் கற்கும் சிறார்களின் காலை உணவும் பெற்றோர்களின் கவனமும், கனடியப் பாடசாலை மாணவர்களும் தேகாரோக்கியத்திற்கான செயற்பாடுகளும், மாணவர்களிடத்தில் வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்துவதில் பெற்றோரின் பங்கு, கற்றலில் பின்தங்கிய மாணவர்களும் அவர்களுக்கான கற்பித்தல் செயற்பாடுகளும், E.Q.A.O.பரீட்சை பற்றிய சில தகவல்கள், போதைப் பொருட் பாவனையில் மாணவர்கள் ஈடுபடாதிருக்கப் பெற்றோரின் செயற்பாடுகள், ரொரன்ரோப் பாடசாலைகளில் மாணவர்களிடையே அதிகரிக்கும் வன்செயல்களைத் தடுப்பதில் பெற்றோரின் பங்கு, உயர்பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், பெற்றோர் ஆசிரியர், மாணவர் ஆகிய முத்தரப்பினரதும் இணைந்த செயற்பாட்டின் விளைவே கற்றலின் பெறுபேறாகும், புலம்பெயர்ந்த நாடுகளில் தமிழ்மொழி வாரமும் பெற்றோர்களும், உயர் பாடசாலை மாணவர்களும் சமூகக் கல்லூரிகளும், உயர்கல்வி கற்கும் மாணவர்களும் பல்கலைக்கழகமும், புலம்பெயர்ந்த நாட்டில் சூதாட்டத்தினால் பாதிக்கப்படும் சில பெற்றோர்கள், புவி மாசடைவதைத் தடுப்பதில் பெற்றோரின் பங்கு, புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் மாணவர்களும் கவின்கலைகளும், பெற்றோர் பாடசாலையில் கல்வி

கற்கும் மாணவர்களுக்கு எவ்வழிகளில் உதவி புரியலாம் ஆகிய 19 கட்டுரைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. கனடாவில் புலம்பெயர்ந்து வாழும் நூலாசிரியர் முன்னைநாள் பிரதிக் கல்விப் பணிப்பாளராவார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 47310).

## 12333

**மனித விழுமியத்துக்கான சத்திய சாயி கல்வி.** லொறேன் பறோஸ் (ஆங்கில மூலம்), சபா.ஜெயராசா (தமிழாக்கம்). யாழ்ப்பாணம்: பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையம், பிள்ளையார் கோவிலடி, தாவடி, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1992. (கொழும்பு 13: ஸ்பார்ட்டன் பிரின்ட்ஸ், 154, Wolfendhal Street).

(8), 136 பக்கம், விலை: ரூபா 80.00, அளவு: 21.5x14 சமீ.

பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபாவுடைய அருள் உரைகளில் இருந்து தேர்ந்த வரிகள் இவை. ஆங்கில மொழியில் முன்னர் Loraine Burrows அவர்கள் எழுதிய நூலின் தமிழாக்கம். ஆங்கில மூல நூலை தாய்லாந்திலுள்ள சத்திய சாயி நிறுவனம் அச்சிட்டு வெளியிட்டிருந்தது. கல்வியின் நோக்கம், ஆசிரியரின் பங்கு, மாணவரின் கடமை, இலட்சிய மாதர் இயல்பு, சிறுவர்களுக்கு அறிவுரை, பெற்றோரின் வழிகாட்டல், சாயி ஆன்மீகக் கல்வி, மேற்கோள்கள் ஆகிய 8 பகுதிகளில் இந் நூல் கல்வியியல் சார்ந்த ஆன்மீகத் தத்துவங்களையும் அறிவுரைகளையும் கொண்டதாகத் தொகுக்கப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 34593).

## 12334

**முரண்பாட்டுத் தீர்வுக்கான கல்வி: ஆரம்பக் கல்வி ஆசிரியர் கைந்நூல்.** பதிப்பாசிரியர் குழு. மஹரகம: ஆரம்பக் கல்வித் துறை, தேசிய கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (கொழும்பு: ஏ.ஜே.பிரின்ட்ஸ், 44, புகையிரத நிலைய வீதி, தெகிவளை).

58 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x21.5 சமீ.

இந்நூலாக்கத்தின் பதிப்புக்குழுவில் பி.சுப்பிரமணியம், கே.ஏ.டீ.பீ.சரச்சந்திர, எஸ்.எம்.ஆர்.சூதீன், டீ.எம்.ஆர். ஜயசிங்க, K.W.லியனகே, பத்மா சுமணசீலா த சில்வா ஆகியோர் இடம்பெற்றிருந்தனர். மொழிபெயர்ப்பாளராக S.M.சூதீன் பணியாற்றினார். இந்நூலில் முதலாம் ஆண்டுக்கானஅழகியற் கல்வி, ஆக்கத் தொழிற்பாடு, உடற்கல்வி ஆகியனவும், இரண்டாம் ஆண்டுக்கான மொழிவிருத்தி, மூன்றாம் ஆண்டுக்கான மொழிவிருத்தி, கணிதம், நான்காம் ஆண்டுக்கான சுற்றாடற் கல்வி, மொழி விருத்தி, மற்றும் ஐந்தாம் ஆண்டுக்கான ஆரம்ப விஞ்ஞானம், ஆக்கத் தொழிற்பாடு ஆகிய பாடப் பரப்பு சார்ந்த ஆசிரியர்களுக்கான கல்விச் செயற்பாடுகள் விளக்கப்பட்டுள்ளன. இவை அவதானமாகச் செவிமடுத்தல், உறுதியான வெளிப்பாடு, கூட்டுவலிமையை உறுதிப்படுத்தல், தனிநபர்களுக் கிடையிலான புரிந்துணர்வினை வலுப்படுத்தல், பிரச்சினையை வரைபுபடுத்தல், முரண்பாடு தீர்த்தல், பிறரை மதித்தல், ஆகிய விடயப் பகுதிகளை உள்ளடக்கியதாக

அமைந்துள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 24318).

### 12335

**முரண்பாடு தீர்வுக்கான கல்வி: பயிற்றுநர் கைந்நூல்.** S.M.R.சூதீன் (தமிழாக்கமும், பதிப்பாசிரியரும்). மகரகம: ஆரம்பக் கல்வித் துறை, தேசிய கல்வி நிறுவகம், 2வது பதிப்பு, 1996, 1வது பதிப்பு 1995. (மகரகம: அச்சிடற் பிரிவு, தேசிய கல்வி நிறுவகம்).

(8), 51 பக்கம், அட்டவணைகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 19.5x21.5 சமீ.

தேசியக்கல்வி நிறுவக ஆரம்பக் கல்வித் துறையினர் "முரண்பாடு தீர்வுக்கான கல்வி" தொடர்பான முன்னோடிச் செயற்திட்டமொன்றை இரு வருடகாலமாக நடைமுறைப்படுத்திப் பெற்ற அனுபவங்கள் இப்பயிற்சிக் கைந்நூலின் தயாரிப்புக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆசிரிய ஆலோசகர்கள் மூலமாக ஆசிரியர்களை வளம் படுத்துவதற்குப் பதிலாக ஆசிரியர் குழுவில் பயிற்சிபெற்ற ஒருவர் தமது சக ஆசிரியர்களை வளம்பெறச்செய்தல் என்னும் கோட்பாட்டினைச் செயல்முறைப்படுத்தும் திட்டத்துக்கான பயிற்றுநர் கைந்நூல் இதுவாகும். மனதை ஒருநிலைப் படுத்தல், தனியாள் இடைத் தொடர்பு I, தனியாள் இடைத் தொடர்பு II, அவதானமாகச் செவிமடுத்தல், உறுதியான வெளிப்பாடு I, உறுதியான வெளிப்பாடு II, முரண்பாட்டைப் பகுப்பாய்வு செய்தல், முரண்பாடு தீர்த்தல், நடுநிலைமை, ஏனையோரை மதித்தலும் கூட்டு வலிமையும், மதிப்பீடு-சிந்தனைக் கிளர்வு, அநுபந்தம் ஆகிய 12 அத்தியாயங்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 50468).

### 12336

**முன்பள்ளி ஆசிரியர் பயிற்றுநர் கைநூல்.** வெளியீட்டுக் குழு. திருக்கோணமலை: ஆரம்பப் பிள்ளைப் பருவ அபிவிருத்திப் பிரிவு, கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை, இளைஞர் விவகார அமைச்சு, 1வது பதிப்பு, 2002. (திருக்கோணமலை: பதிப்பத் திணைக்களம், வடக்கு கிழக்கு மாகாண அரசு).

vi, 340 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28.5x22 சமீ.

இப்பயிற்றுநர் கைநூலில் ஒவ்வொரு தலைப்புக்குமான அறிமுகத்துடன் பயிலுநர் அடையவேண்டிய குறிக்கோள்களும் வரையறுக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட குறிக்கோளை பயிலுநர் அடைவதற்கு வழிப்படுத்தும் செயற்பாடுகள், பொருத்தமான பின்னணித் தகவல்களுடன் தெளிவாக வழங்கப்பட்டுள்ளன. குழந்தை உளவியல், பிள்ளை வளர்ச்சியும் அபிவிருத்தியும், பிள்ளையின் இயல்பும் கற்கும் முறையும், ஆக்கத்திறன் விருத்தி-சித்திரம், ஆக்கத் தொழிற்பாடு-சங்கீதம், மொழி விருத்தி, கணித விருத்தி, சூழலைப் புரிந்துகொள்ளல், உடல் விருத்திச் செயற்பாடு கள், கற்றல் நிலையங்கள், முன்பள்ளியின் முகாமைத்துவமும் நிர்வாகமும்,

ஒருங்கிணைந்த அணுகுமுறை, முன்பள்ளி ஆசிரியர் பெற்றோர் தொடர்பு, சிறுவர் உரிமைகள், சுகாதாரமும் போசாக்கும் முதலுதவியும் ஆகிய 15 இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 43616).

## 12337

**முன்பள்ளிக் கல்விக் கற்றற் செயற்பாடுகள்.** ச.அருளானந்தம். வெல்லம்பிட்டிய: மக்ஸ்ப்ரோ பப்ளிக்கேஷன்ஸ், 1வது பதிப்பு, மே 2012. (கொழும்பு 12: லங்கா புத்தகசாலை, F.L.1/14, டயஸ் பிளேஸ், குணசிங்கபுர).

(6), 74 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 250., அளவு: 29x20.5 சமீ., ISBN: 978-955-0984-08-4.

3-5 வயது முன்பள்ளிக் கலைத்திட்டம், செயற்பாட்டுப் பூங்காவின் பயன்பாடு, கற்றல் வட்டம், தன்னிச்சையானதும் சுதந்திரமானதுமான விளையாட்டு, வகுப்பறையில் கற்றல் நிலையங்கள், வளப் பயன்பாடு, மாதிரிக் கால அட்டவணை, ஒருங்கிணைந்த கற்றல் அணுகுமுறை, முன்பள்ளி ஆசிரியரின் நடிபங்கு, உடலபிவிருத்தி, அறிவாற்றல் அபிவிருத்தி, மொழி விருத்தி, கணித விருத்தி, சூழலைப் புரிந்துகொள்ளல், ஆக்கச் செயல் விருத்தி, ஆக்கச் செயலில் சித்திரத்தின் பங்கு, சித்திரம், இசை/சங்கீத/நடன/ நாடகச் செயற்பாடுகள் ஆக்க விருத்தியை விரிவுபடுத்துகின்றன. மனவெழுச்சி விருத்தி, சமூக மனவெழுச்சி விருத்தி, மனவடுக்களுக்கதுள்ளான பிள்ளைகளை இணைத்துக்கொள்ளல், செயற்பாட்டுப் பதிவு மாதிரிப் படிவம் ஆகிய அத்தியாயங்களில் முன்பள்ளிகளுக்கான கல்விக் கற்றல் செயற்பாடுகள் பற்றி விளக்கமளிக்கப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 53655).

## 12338

**ஸ்ரீ அரவிந்தரின் கல்விச் சிந்தனைகளும் கல்விப் பணிகளும்.** என்.கே.தர்மலிங்கம் (மூல நூலாசிரியர்), தர்மசுதர்சன் (பதிப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: தமிழ்த் தென்றல் வெளியீடு, 1வது பதிப்பு, 2017. (பருத்தித்துறை: பரணி அச்சகம், நெல்லியடி).

vii, 180 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 20.5x14.5 சமீ.

ஸ்ரீ அரவிந்தர் வாழ்ந்த காலம், ஸ்ரீ அரவிந்தர் வாழ்ந்த காலமும் கருத்தும், ஸ்ரீ அரவிந்தர் கண்ட தத்துவ, சமூக ஆன்மீகக் கருத்துகள், ஸ்ரீ அரவிந்தரின் கல்விச் சிந்தனைகள், ஸ்ரீ அரவிந்தரால் அமைக்கப்பட்ட கல்வி நிறுவனங்கள், ஸ்ரீ அரவிந்தரது கல்விச் சிந்தனைகளும் சமகாலத்திற்கான பொருத்தப்பாடும், மதிப்பீடு ஆகிய ஏழு இயல்களில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. கலாநிதி சபா. ஜெயராசா அவர்களின் நெறிப்படுத்தலின் கீழ் என்.கே.தர்மலிங்கம் அவர்கள் மேற்கொண்ட கல்வியியல் ஆய்வு இதுவாகும். நெடுந்தீவைப் பிறப்பிடமாகக்கொண்ட இலக்கிய வித்தகர் என்.கே.தர்மலிங்கம் ஒரு கல்வியியலாளரும் அரங்கியலாளரு மாவார். 1987இல் வெளிவந்த இவரது கீழைத்தேய கல்வியியற் சிந்தனைகள் என்ற

நூல் தமிழ் சாகித்திய விருது பெற்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 62095).

**மேலும் பார்க்க:** 12017,12199,12649,12927,12938.

## 370.05 கல்விநிறுவனங்களின் ஆய்விதழ்கள், ஆண்டு மலர்கள்

### 12339

**இந்து நாதம்: 1994.** கு.திவாகரன் (இதழாசிரியர்). கொழும்பு 4: இந்து மாணவர் மன்றம், பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி, 1வது பதிப்பு, நவம்பர் 1994. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளூமெண்டால் வீதி).

60 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x19 சமீ.

கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியின் இந்து மாணவர் மன்றம், 30.11.1994 அன்று வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடத்திய கலைமகள் விழாவின்போது இவ்வாண்டு மலர் வெளியிடப்பட்டது. வழமையான ஆசிச் செய்திகளுடன் மாணவர்களின் படைப்பாக்கங்களும், நிகழ்வுகளின் புகைப்படப் பதிவுகளும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 32283).

### 12340

**இந்து மாருதம் 2016.** சி.மனோஜன், ர.சஷ்விந்த் (இணை இதழாசிரியர்கள்). கல்கிஸ்சை: இந்து மாணவர் மன்றம், பரி.தோமாவின் கல்லூரி, 1வது பதிப்பு, 2016. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

116 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14.5 சமீ.

கல்கிஸ்சை பரிசுத்த தோமையர் கல்லூரியின் இந்து மாணவர் மன்றம் ஆண்டு தோறும் "இந்து மாருதம்" என்ற தலைப்பில் ஆண்டுமலரை வெளியிட்டுவருகின்றனர். வாழ்த்துரைகளுடன் ஆசிரியர்கள், மாணவர்களின் ஆக்கங்களும் இம்மலரை அலங்கரிப்பதுண்டு. 2016ஆம் ஆண்டுக்குரிய இம்மலர் பரி.தோமாவின் கல்லூரியின் இந்து மாணவர்கள் நடத்திய "செழுங்கலாஞ்சலி 2016" நிகழ்வின்போது 08.10.2016 அன்று வெளியிடப்பட்டது. இவ்வைபவத்தின் பிரதம அதிதியாக ஆறு.திருமுருகன் பங்கேற்றிருந்தார்.

### 12341

**இந்துவின் சொல்லாடற் களறி (இயற்றமிழ் வேள்வி 2003).** சி.கு.சிவராம், க.செந்தூரன், ப.பிறிந்தன் (இதழாசிரியர்கள்). கொழும்பு 4: பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2003. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளூமெண்டால் வீதி).

xvi, 106 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14 சமீ.

பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி வருடாந்தம் நடத்தும் இயற்றமிழ் வேள்வி நிகழ்வு 11.8.2003 அன்று வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் இடம்பெற்றது. அந்நிகழ்வுடன் இணைந்ததாக இம்மலர் மாணவர் ஆக்கங்களுடன் வெளியிடப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 31064).

### 12342

**இந்துவின் தமிழ்த் தீபம் (தமிழ்ச் சுடரின் ஆண்டுச் சிறப்பிதழ்).** தனபாலசுந்தரம் தமிழமுதன், குணரட்ணம் லக்ஷ்மன் (இதழாசிரியர்கள்). கொழும்பு 4: பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி, 1வது பதிப்பு, நவம்பர் 1997. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால வீதி).

172 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி வருடாந்தம் நடத்தும் "முத்தமிழ் விழா" வின்போது வெளியிடப்பட்டுள்ள 1997ஆம் ஆண்டுக்கான ஆண்டு மலர் இது. பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி மாணவர்களின் மாதாந்த சஞ்சிகையான "தமிழ்ச்சுடர்" ஆண்டுச் சிறப்பிதழாக இம்மலர் மாணவர்களின் தேர்ந்த ஆக்கங்களுடன் வெளிவந்துள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 44446).

### 12343

**இமயம் 2012-2013: கொ/இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி.** மலர் வெளியீட்டுக் குழு. கொழும்பு 4: இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி, பம்பலப்பிட்டி, 1வது பதிப்பு, 2014. (கொழும்பு: கே.ஜே. என்ரர்பிரைசஸ்).

233 பக்கம், தகடுகள், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x17.5 சமீ.

இமயம் ஆண்டுமலரின் மூன்றாவது இதழ் இதுவாகும். கல்லூரியின் பரிசளிப்பு விழாவுடன் இவ்விதழ் வெளிவருகின்றது. ஈழத்து இலக்கிய வரலாற்றில் இரகுவம்சம் (ஸ்ரீபிரசாந்தன்), சிலப்பதிகாரத்தில் கண்ணகி (க.இரகுபரன்), தலைமைத்துவம் (தனேஸ்வரி ரவீந்திரன்), செந்நெறி இலக்கியத்தில் நாட்டார் இலக்கியத்தின் பங்கு, பாசம்மிகு கதாபாத்திரம் இராமன், வாழ்க்கையை மேம்படுத்தும் மனித விழுமியங்கள் என்பன உள்ளிட்ட மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் ஆக்கங்கள் இம்மலரில் இடம்பெற்றுள்ளன. மலர் ஆசிரியர் குழுவில் கோதை நகுலராஜா, மே.கிருஷ்ணபிள்ளை, ச.பாஸ்கரன், சி.இராஜவரோதயம், சு.சிவரதன், எஸ்.பிரசாந்தன் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 56903).

### 12344

**இமயம் 2016: கொ/இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி.** மலர் வெளியீட்டுக் குழு. கொழும்பு 4: இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி, பம்பலப்பிட்டி, 1வது பதிப்பு, 2016. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).

xlviii, *96 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x17.5 சமீ.*

*19.01.1981இல் திருமதி ஜீ. புவனராஜன் அவர்களை முதலாவது அதிபராக வரித்துக்கொண்டு தன் கல்விப் பயணத்தை பம்பலப்பிட்டி, இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி ஆரம்பித்தது. தொடர்ந்த தன் கல்விப் பயணத்தில் 09.12.1994 அன்று தேசிய பாடசாலையாகத் தரமுயர்த்தப்பட்டது. இமயம் என்ற ஆண்டு மலரை வருடாந்த மலராக வெளியிட்டு வரும் இப்பாடசாலையினர் அதில் மாணாக்கர்களினதும் ஆசிரியர்களினதும் படைப்பாக்கங்களை பதிவுசெய்து அவர்களது எழுத்துத் துறைக்கு களம் அமைத்து வந்துள்ளனர். கல்லூரிப் புகைப்படங்கள், ஆசியுரைகளுடன், சங்கங்களின் அறிக்கைகளையும் ஆவணப்படுத்தி இவ்விதழ் வெளிவந்துள்ளது.*

### 12345

**இளங்கதிர்: இதழ் 1 மலர் 3 (1950-1951).** *அ.ரங்கநாதன் (இதழாசிரியர்). பேராதனை: தமிழ்ச்சங்கம், இலங்கைப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, 1951. (கொழும்பு 12: சுதந்திரன் அச்சகம், 194ஏ, சில்வர் ஸ்மித் வீதி).*

*70 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.*

*"இளங்கதிர்" பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கத்தினரால் வெளியிடப் படும் வருடாந்த இதழ். இதன் வெளியீடு 1948ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு வருடந்தோறும் தொடர்ச்சியாக வெளிவருகின்றது. பல்கலைக்கழக மாணவர்களுக்கும் விரிவுரையாளர்களுக்குமான வெளியீட்டுக் களமாக இது விளங்குகின்றது. உள்ளடக்கத்தில் இலங்கையின் பல்லின பண்பாட்டு பாரம்பரியம், கலை பற்றிய ஆய்வுகள், இலக்கியப் படைப்புக்கள், விமர்சனங்களுடன் தமிழ்ச் சங்கத்தின் நிகழ்வுகளின் பதிவையும் தாங்கி வெளிவருகின்றது. இவ்விதழில் இளங்கதிர் இன்பம்: கவிதை (க.சு.நவநீத கிருஷ்ணபாரதி), முத்தமிழ் - ஆசிரியர் உரை (அ.ரங்கநாதன்), இலண்டனில் கீழைத்தேச மொழிக் கல்வி (க. வித்தியானந்தன்), நாயகன் (உமார் காயம்), சிங்கள மொழியில் தமிழ் மொழி (அ.சந்தியாப்பிள்ளை), தென் கிழக்கு ஆசியாவின் பொருளாதார முன்னேற்றம் (குமரேசன்), திராவிடமும் பாரதமும் (மு.கார்த்திகேசு), பெரிய புராணமும் தமிழ் மக்கள் மறுமலர்ச்சியும் (முருகவேள்), எமது சங்கம் (1950 1951) வில்லி ஒக்கும் வில்லி, விந்தை முதியோன் (க.கணபதிப்பிள்ளை), ஆனந்த நடனம் மாமலையும் மறைந்ததா?ஆகிய தலைப்புகளில் ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 007980).*

### 12346

**இளங்கதிர்: இதழ் 1 மலர் 6 (1953-1954).** *சி.வெங்கடேச சர்மா (இதழாசிரியர்). பேராதனை: தமிழ்ச்சங்கம், இலங்கைப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, 1954. (கண்டி: அருணா பிரஸ், இல. 42, ஹில் ஸ்ட்ரீட்).*

112 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

இவ்விதழில், அழகின் நடுவே கலைக் கூடம் (க.சு.நவநீதகிருஷ்ணா), தமிழும் தமிழனும் (சி.வெங்கடேச சர்மா), தேர்வுக் குண்டு (கலைமகிழ்நன்), பொண்ணை யாற்றங்கரையிலே (க.சொக்கலிங்கம்), மயங்கி விழும் என் துயரம் (க.கைலாசபதி), என்றைக்குதான் விடிவு? (வள்ளி தெய்வானை), சமணத்துறவிகள் தமிழுக்காற்றிய தொண்டு (ஈசன்), சிலப்பதிகாரம் ஒரு பெருங்காப்பியமா? (பு.சுப்பிரமணியம்), வெறுங்கோயில்-கவிதை (கா.சிவத்தம்பி), உமரின் தமிழ்ப்பண்பு (ஷரீப்), கோணற்பாதை (அம்பலத்தான்), எண்ணாத எண்ணம் (வேனிலான்), வாழும் வழி வகுத்த கவிஞர் (செ.மு.ஹனிபா), தமிழ்ச் சங்கம் சோழர்காலத் தமிழ் இலக்கியம் (சு.வித்தியானந்தன்), தமிழினமே -கவிதை (குழூஉ இறையனார்), இலக்கிய பூங்கா (ஆ.சதாசிவம்), சொல்லும் பொருளும் (வி.செல்வநாயகம்), முகிலே, என் தூது சொல்வாயே-கவிதை (குறிஞ்சி நாடன்), கோயில் சிற்பக்கலை (க.கணபதிப்பிள்ளை) ஆகிய படைப்பாக்கங்கள் இடம்பெற்றுள்ளன. (இந் நூல் நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 004025).

### 12347

**இளங்கதிர்: இதழ் 1 மலர் 9 (1956-1957).** செல்லத்துரை குணரெத்தினம் (இதழாசிரியர்). பேராதனை: தமிழ்ச்சங்கம், இலங்கைப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, 1957. (யாழ்ப்பாணம்: ஆனந்தா அச்சகம், 226, காங்கேசன்தறை வீதி).

(6), 133 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

சிவமும் செந்தமிழும் (செல்லத்துரை குணரத்தினம்), ஆசிரியர் குறிப்புகள், சிவப்பிரகாச சுவாமிகள் பாடற்சிறப்பு, பட்ட மகிமை (மலைவாணன்), பெறுதல் வழக்கோ? (குணனார்), மர்மம் (காயத்திரி), கல் நார் உரித்த கவி (முருகையன்), பிச்சை வேண்டாம் நாயைப் பிடி (பரதேசி), கலையும் சிலையும் (அம்பலத்தான்), ஆனந்தக் கூத்து (சோ.செல்வநாயகம்), சோழர்காலக் காப்பிய வளர்ச்சி (ச. தனஞ்செயராசசிங்கம்), ஆறுமுகநாவலரும் தமிழ்ப் பல்கலைக் கழகமும் (சு. வித்தியானந்தன்), பல்கலைக் கழகங்கள் (ஆ.சதாசிவம்), கடல் (வி.செல்வநாயகம்), உடன் போக்கு ”இறையனார்” (க.கணபதிப்பிள்ளை), என் இன்பமான நாட்கள் (க.கணபதிப்பிள்ளை), தமிழ்ச் சங்கச் செயலாளர் அறிக்கை (T.S.மேதர்: செயலாளர்), துரோகிகள் (ச.இம்மானுவேல் கமலநாதன்), தேசியக் கவிதைகள் (இம்மானுவேல் கமலநாதன்), காதல் இலக்கியம் (கு.நாரயணசாமி), பெண்மைபற்றி இலக்கியம் (வி.சி.), குழந்தை இலக்கியம் (செ.சின்னையா), வசன இலக்கியம் (க.கைலாசபதி) ஆகிய படைப்பாக்கங்களை இவ்விதழில் காணமுடிந்துள்ளது. (இந்நூல் நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 007981).

### 12348

**இளங்கதிர்: 10ஆவது ஆண்டு மலர் (1957-1958).** ஆ.வேலுப்பிள்ளை (இதழாசிரியர்). பேராதனை: தமிழ்ச் சங்கம், இலங்கைப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, ஏப்ரல் 1958. (கொழும்பு 12: சுதந்திரன் அச்சகம், 194ஏ, சில்வர் ஸ்மித் வீதி).

(12), 179 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

இவ்விதழில் கனவு நனவாகுமோ? என்ற ஆ.வேலுப்பிள்ளை அவர்களின் ஆசிரியர் உரையுடன் ஆக்கங்கள் வகுத்துத் தரப்பட்டுள்ளன. "தமிழர் வரலாற்றுப் பரப்பிலே" என்ற பிரிவில் இராசராசனும் இராசேந்திரனும் (மணியம்), பல்லவ காவியம் (ஆனந்தன்), நாகரிகம் பரப்பிய தமிழன் (வேல்முருகு) ஆகிய ஆக்கங்களும், "சிறுகதைக் கொத்து" என்ற பிரிவில் சிறுவிழி குறுநகை (ஏ.பி.வி.கோமசு), சைக்கிள் சவாரி (மு.தளையசிங்கம்), காற்றோடு வந்தவன் (மு.கணேசசுந்தரம்), நச்சுக் கோப்பை (பாலன்) ஆகிய ஆக்கங்களும், "கவிதைக் கோவை" என்ற பிரிவில், என் ஆசிரியன் (அமுது), தெய்வமே(மோ?) (க.கணபதிப்பிள்ளை), இன்பத் தமிழ் (சி. தில்லைநாதன்), வைகறை (க.கணபதிப்பிள்ளை) ஆகிய கவிதைகளும், "இலக்கியச்சோலை" என்ற பிரிவில், திருமாலை (மாலன்பன்), காரைக்காலம்மையாரும் தமிழிலக்கியமும் (வி.சிவசாமி), இலக்கியமும் சமுதாயமும் (கு.நாராயணசாமி), சிலப்பதிகாரமும் சங்க இலக்கியமும் (ச. தனஞ்செயராசசிங்கம்), பாரதி சபதம் (சு.வித்தியானந்தன்), கடலோசை (வி. செல்வநாயகம்) ஆகிய இலக்கியக் கட்டுரைகளும், "நவீன கலம்பகம்" என்ற பிரிவில், இசைக் கருவி (ஞானா சிவசுப்பிரமணியம்), நவீன கோவை (நாதன்), விஞ்ஞான முறையில் கொள்கைகளின் தோற்றம் (ஆ.வேலுப்பிள்ளை), தமிழில் வேர்ச் சொற்கள் (அ.சதாசிவம்),பொன்மொழிகள் ஆகிய ஆக்கங்களும், "ஈழத் தமிழகத்தில்" என்ற பிரிவில், நிலமும் வளமும் (கா.குலரத்தினம்), விடுதலையும் தமிழரும் (ஜெயரத்தினம் வில்சன்), சமயமும் கல்வியும் (சு.வித்தியானந்தன்), விஞ்ஞானமும் அகராதியும் (க.கணபதிப்பிள்ளை), இலக்கியமும் சிற்பமும் (கலைமகிழ்நன்), பேராதனைப் பல்கலைக் கழகத் தமிழ்ச் சங்கம் - ஆண்டறிக்கை 1957 - 1958 என்பனவும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 007982).

### 12349

**இளங்கதிர்: 11ஆவது ஆண்டு மலர் (1958-1959).** ச.அடைக்கலமுத்து (இதழாசிரியர்). பேராதனை: தமிழ்ச் சங்கம், இலங்கைப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, 1959. (கொழும்பு 12: சுதந்திரன் அச்சகம், 194ஏ, சில்வர் ஸ்மித் வீதி).

(17), 196 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

இவ்விதழில் "காற்றே கேள்" என்ற தலைப்பில் ச.அடைக்கலமுத்து (அமுதுப் புலவர்) அவர்களின் ஆசிரியர் உரையுடன் தொடங்கும் பதிவுகளில், "நாமிருக்கும் நாடு" என்ற முதலாவது பிரிவில், ஈழநாட்டுத் தமிழ்க் கல்வெட்டுக்கள்

(கா.இந்திரபாலா), ஈழநாட்டிலே கத்தோலிக்கமும் தமிழும் (சீ.அந்தோனிமுத்து), இலங்கையில் ஒல்லாந்தர் ஆட்சியின் வளர்ச்சியும் வீழ்ச்சியும் (எஸ்.அரசரத்தினம்), யாழ்ப்பாண நில அமைப்பும் நீர் ஊற்றும் (கா. குலரத்தினம்) ஆகிய ஆக்கங்களும், "இலக்கியச் சோலை" என்ற பிரிவில், கம்பன் காட்டும் வாலி (சி. தில்லைநாதன்), பக்திச் சுவை (சிவன்), கண்ணுற்றான் வாலி (வீ.செல்வநாயகம்), நாடகத் தமிழ் வளர்ச்சி (சு.வித்தியானந்தன்), கோவலன் - சோக நாடகத்தின் தலைவன் (ச. தனஞ்செயராசசிங்கம்) ஆகிய ஆக்கங்களும், "கவி அமுதம்" என்ற பிரிவில், இரவு (மறைமணி), கோப்பிக் குறள் (ஆனாமூனா), எங்கள் நாடு (அமுது) ஆகிய ஆக்கங்களும் "நகைச்சுவை" என்ற பிரிவில், திருடர்களும் சமூகமும் (சத்தியா), தம்பிக்கு (கலிங்கன்), நகைச்சுவைக் கட்டுரை: பாக்கு வெட்டி (அமுது) ஆகிய ஆக்கங்களும், "முத்துக் குவியல்" என்ற பிரிவில், விஞ்ஞானம் சமயத்தின் விரோதியா? (சீவன்), வராளி (ஞானா சிவசுப்பிரமணியம்), காரணம் சமாதானம் சாட்டு (ஆ.வேலுப்பிள்ளை), அறிஞர் எழுதிய கடிதங்கள், கருத்து மேடை, தமிழிற் பிறமொழிக் கலப்பு (சூ.குமாராசாமி சிவலிங்கம்), ஒரு சிறு நாடகம்: கரடி (க.செபரத்தினம்), புதிய உலகம்: ஒற்றுமை அமெரிக்கா (தனிநாயகம் அடிகள்), எழுது கருவிகள் (க.கணபதிப்பிள்ளை) ஆகிய ஆக்கங்களும், "சிறுகதைகள்" என்ற பிரிவில், சிறுகதை மலர்கள்-முன்னுரை, எதிர் பாராதது (M.I.H.அமீர்), வாழ்க்கைச் சுழலிலே (சி.தில்லைநாதன்), அர்ப்பணம் (பவானி ஆழ்வாப்பிள்ளை) ஆகிய படைப்பாக்கங்களும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 007983).

### 12350

**இளங்கதிர்: 12ஆவது ஆண்டு மலர் 1959-1960.** மு.தளையசிங்கம் (இதழாசிரியர்). பேராதனை: தமிழ்ச்சங்கம், இலங்கைப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, 1960. (கண்டி: கிங்ஸ்லி அச்சகம், 205, கொழும்பு வீதி).

118 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

விடியுமா எமக்கு?(ஆசிரியர்), புதுமைப்பித்தனுக்குப் பின் (சி. தில்லைநாதன்), மலரும் மங்கையும் (பவானி), யாழ்ப்பாணத்துச் சாசனங்கள் (கா. இந்திரபாலா), அணைத்த கை-சிறுகதை (உதயணன்), மனப்புண் - சிறுகதை (சி. தில்லைநாதன்), எப்படி இருக்கிறது, உலகம்?- சிறுகதை (சுசீலா சின்னத்துரை), அழைப்பிதழ்-சிறுகதை (அ. சண்முகதாஸ்), பச்சைப் புதிது-கவிதை (அ. சண்முகதாஸ்), வாசிற்றிக்கா வாம்மா வா-கவிதை (நளினி), மனிதன் நீயே-கவிதை (சுந்தரம்), தமிழ்ச் சங்க ஆண்டறிக்கை (செயலாளர்), நிலவைப் பிடித்திடுவேன்-கவிதை (நாதன்), "கொடு கொட்டி" ஆடல் (இராஜபாரதி), சத்தி வழிபாடு (பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை), புறநானூற்றில் ஒரு பாட்டு (வி. செல்வநாயகம்), இல்லறத்தின் நற்கனி (ஞானரெத்தினம்), பண்தேய்ந்த மொழியினார் கொண்டேத்தும் கோவலன் (சு. வித்தியானந்தன்), தமிழ்த்தாய் மடியிற்றவழுந் தவமுனி (சு.கணபதிப்பிள்ளை), திராவிடத் தாய் (அ. சதாசிவம்), ஒரு வார்த்தை (ஆசிரியர்) ஆகிய படைப்பாக்கங்களை இம்மலர் உள்ளடக்கியுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில்

பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 37409. நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தின் சேர்க்கை இலக்கம் 008304).

### 12351

**இளங்கதிர்: 13ஆவது ஆண்டு மலர் (1960-1961).** வி.கி.இராசதுரை (இதழாசிரியர்). பேராதனை: தமிழ்ச் சங்கம், இலங்கைப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, 1961. (கண்டி: கிங்ஸ்லி அச்சகம், இல. 205, கொழும்பு வீதி).

(2), 120 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

13ஆவது ஆண்டுக்குரிய இளங்கதிர் இதழில் சங்கக் காப்பாளர் விபரம், ஈழ நாடும் இலக்கியமும் (வி.கி.இராசதுரை), பாடாத தேனீ (ஆ.இராஜகோபால்), நெஞ்சில் நஞ்சு (கதிர்காமநாதன்), ஐயோ வாசுகி (அ.சண்முகதாஸ்), அவனும் - அவளும் (ஞானரதம்), போடியார் மகள் (ஞானம்), கல்லுமலைத் தோட்டத்திலே (இராஜபாரதி), அற நூல்கள் எழுந்தன (சி. தில்லைநாதன்), உலகெலாம் பரவிய தமிழும் தமிழர் சால்பும் (சு.வித்தியானந்தன்), யாழ்ப்பாணத்துப் பழக்க வழக்கங்கள் (சு.கணபதிப்பிள்ளை), கற்பனைக்குழவி (பொ.பூலோகசிங்கம்), தமிழ் நாட்டில் சமணர்: முதல் இயல் (ஆ.வேலுப்பிள்ளை), பேரதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்க ஆண்டறிக்கை 1960 (புஷ்பா காசிப்பிள்ளை), ஆகிய ஆக்கங்களும், கவிதைப் படைப்புகளாக பொங்குங் கவிதை பொலிந்து (சி.தில்லைநாதன்), பிறக்கவேண்டும் (அ.சண்முகதாஸ்), எனது வாழ்வின் ஜோதி (இராஜபாரதி), தமிழ்க்கன்னி (வ. கோவிந்தபிள்ளை),

வான யாத்திரை (ஈழத்து குழூஉ இறையனார்) ஆகியனவும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 37410. நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தின் சேர்க்கை இலக்கம் 008305).

### 12352

**இளங்கதிர்: 14ஆவது ஆண்டு மலர் (1961-1962).** எஸ்.செபநேசன் (இதழாசிரியர்). பேராதனை: தமிழ்ச் சங்கம், இலங்கைப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, 1962. (மானிப்பாய்: அமெரிக்க இலங்கை மிஷன் அச்சகம்).

(9), 106 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

ஐயா, எழுத்தாளரே கொஞ்சம் நில்லும் (தலையங்கம்), நாடகம்: காதற்சிறை (செம்பியின் செல்வன்), வரலாற்று மாணவன் கண்ணில் குவெய்றொஸ் (க.அருமைநாயகம்), பேட்டிகளின் கதை (ஆசிரியர்), வாழும் வர்ணனைகள் 02: தண்ணீர்ப்பஞ்சம் (சுந்தர ராமசாமி), வான யாத்திரை (ஈழத்து குழூஉ இறையனார்), சிறு கதை எழுந்தது (எஸ். செபநேசன்), வாழும் வர்ணனைகள் 03: வியப்பு (கல்கி), சிறுகதை - மணிக்கொடிக் குழு (ஆ.வேலுப்பிள்ளை), வாழும் வர்ணனைகள் 04: காப்பொரேஷன் விளக்கு (புதுமைப்பித்தன்), ஈழநாட்டுச் சிறுகதையாசிரியர்

(அம்பலத்தான்), சிறுகதை - தற்கால எழுத்தாளர் (முகம்மது ஜெமீல்), சங்கப் பாடல்களும் கிராமியப் பாடல்களும் (அ. சண்முகதாஸ்), வாழும் வர்ணனைகள் 05: சாலையோரம் (கு. ப. ரா.), மட்டக்களப்பு முஸ்லிம்களின் நாட்டுப் பாடல்கள் (ஏ.சி.எஸ்.அமீர் அலி), வழக்குஞ் செய்யுளும் (செல்வநாயகம்), வாழும் வர்ணனைகள் 06: வானம் (பாரதிதாசன்), நாடகத் தயாரிப்பு (சு.வித்தியாந்தன்), வாழும் வர்ணனைகள் 07: உணவு (பாரதியார்), நாடும் நாயன்மாரும்: பல்லவர்கால இலக்கியம் பற்றிய ஆராய்ச்சி (க.கைலாசபதி), வாழும் வர்ணனைகள் 08: வளையல் காரன் (லா.ச.ராமாமிர்தம்), தமிழும் பிறமொழியும் (சு.கணபதிப்பிள்ளை), வாழும் வர்ணனைகள் 09: யுகம் கண்ட தம்பதிகள் (கு.அழகிரிசாமி), கதை எழுதப் போகிறேன் (மணிமாறன்), பேரதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்க ஆண்டறிக்கை, ஆகியவற்றுடன், பட்டப் பகல்தன்னில் பாவலர்க்குத் தோன்றுவது (எஸ்.மௌனகுரு), மலைக்குள் மாண்டிடவோ அவரிங்கு மனிதராகி வந்தார் (செ.யோகநாதன்), நானுந்தான் பார்த்துவிட்டேன் (செ.கதிர்காமநாதன்), மெய்க் காதல் (வ.கோவிந்தபிள்ளை), தமிழ்த் தாய் (இராசபாரதி) ஆகிய கவிதைகளும், மலரும் செடியும் (செ.யோகநாதன்), பரிகாரம் (க.குணராஜா), சலனம் (எஸ். மௌனகுரு), இரண்டாம் அத்தியாயம் (செ.பேரின்பாநாயகம்) ஆகிய சிறுகதைகளும் இவ்விதழில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 008306).

### 12353

**இளங்கதிர்: 17ஆவது ஆண்டு மலர் 1965/1966**. ஆ.சிவநேசச்செல்வன் (இதழாசிரியர்). பேராதனை: தமிழ்ச்சங்கம், பேராதனைப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, 1966. (கண்டி: ரா.மு.நாகலிங்கம், அதிபர், செய்தி அச்சகம், 241, கொழும்பு வீதி).

(12), 112 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

இவ்விதழில், தூவுதும் மலரே (ஆசி. செல்வன்), ஆயிரங்காலத்துப் பயிர்(ஆசிரியர்), பேராசிரியர் க. கணபதிப்பிள்ளையும் பல்கலைக் கழகத் தமிழ்த் சங்கமும் (நா. மயில்வாகனம்), பேச்சுத் தமிழில் இலக்கிய வழக்கு (ச.தனஞ்சயராசசிங்கம்), உவமையும் உருவாகமும் (வி.செல்வநாயகம்), மாதவையரின் பத்மாவதி சரித்திரம் குறையும் நிறையும் (சி.தில்லைநாதன்), வழூஉச்சொல்லென்பதறிகிலன் (சொ. சுந்தரமூர்த்தி), மனதற்ற நிலை (ஆ.வேலுப்பிள்ளை), மட்டக்களப்புத் தமிழிற் சிங்கள் வழக்கு (ம.சற்குணம்), தமிழ் வரலாற்றிற் பாரதிதாசன் (க.பி.முருகேசு), பிர்தவ்ஸியின் ஷா - நாமா (ஏ.சி.எல்.அமீர் அலி), ஏன் இந்த மாற்றம்? (குறிஞ்சிச் செல்வி), மணிவாசகரும் பக்திநெறியும் (சோ.செல்வநாயகம்), அகத்திணைக் கோவையிற் பாத்திர இயல்புகள் (ந.சோமசுந்தரம்), அகலிகை (மஹாகவி) ஆகிய கட்டுரைகளும், மார்கழிப்பாவை (மு.பொன்னம்பலம்), தலையணை விடு தூது (ஆசி.செல்வன்), மனவோட்டம் (சபா.ஜெயராசா), என்ன...? (சிதம்பரபத்தினி), கவிஞனானேன் (சி.சடாட்சர சண்முகதாஸ்), கண்கள் புரிந்துவிட்ட பாவம் (த.சி. நாதன்), நீயில்லா வாழ்வும் வாழ்வோ (வ.கோவிந்தபிள்ளை), மனிதா மனத்திரை திறப்பாய் (மு.த.சிவச்செல்வன்), அமுதாய் இனிப்பதனால் ... (சி.பற்குணம்)

ஆகிய கவிதைகளும், உருவகக்கதையான குறுக்கீடு (குந்தவை) மற்றும் சங்கத்தின் அறிக்கைகளாக நாம் இட்டுச் சென்ற பாதை ... (பொ.அருந்தவநாதன்), நன்றி மறப்பது நன்றன்று (ஆசிரியர்), 1965 - 66 சிறப்பு நிகழ்ச்சிகள், பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கத்தினர் நடித்த இராவணேசன் (வடமோடிக் கூத்து: தயாரிப்பு-கலாநிதி சு. வித்தியானந்தன்) ஆகியவையும் இடம்பெற்றுள்ளன (இந் நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 37412).

### 12354

**இளங்கதிர்: 19ஆவது ஆண்டு மலர் (1967-1968).** ஆ.பாலேந்திரன் (இதழாசிரியர்). பேராதனை: தமிழ்ச் சங்கம், இலங்கைப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, 1968. (கொழும்பு 13: இரஞ்சனா அச்சகம், 98, விவேகானந்தர் மேடு).

(32), 166 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

அமரர் பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை (அஞ்சலி), உலகத் தமிழ் மகாநாடு, ஞானப்பிரகாச சுவாமிகள் (வி. செல்வநாயகம்), இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதிகளின் கனிப்பொருள் வளமும் பொருளாதார விருத்தியும் (சோமசுந்தரம் செல்வநாயகம்), யாழ்ப்பாணப் பேச்சுத் தமிழில் சொல்லும் பொருளும் (ச.தனஞ்சயராசசிங்கம்), தீபவங்ஸ நூல் (க. இந்திரபாலா), திருநூற்றந்தாதி (ஆ.வேலுப்பிள்ளை), காதலும் கட்டுப்பாடும் (க.கைலாசபதி), ஆங்கில அரசாங்கமும் சைவ சமயக் கல்வியும்: 19ஆம் நூற்றாண்டு (க.அருமைநாயகம்), பூட்டோரிக்கோவின் மொழிப் பிரச்சினை (ப.சந்திரசேகரம்), நல்ல மாறுதல் (மு.வை.அரவிந்தன்), கோல்புறூக் கமறன் சீர்திருத்தங்கள்: ஒரு மதிப்பீடு (ச.நாகேந்திரன்), பாரதியின் நகைச்சுவை (சு.சண்முகம்), திருவாசகத்தின் உட்கிடை (சி.இராமலிங்கம்), முச்சங்கங்கள் பற்றிய உண்மை (ம.சற்குணம்), பெரியாழ்வாரின் உண்மை அனுபவம் (செல்வி புவனா குமாரசாமி), தோட்டத் தொழிலாளர்: ஒரு பொருளாதாரக் கண்ணோட்டம் (எம்.வாமதேவன்), இலக்கியத்தின் இலக்கணம் (ஈரோடு மே.து.ரா.), அம்மையாரின் பக்தி ஊற்று (செ.சயனொளிபவன்), பாரதியின் யுகப்புரட்சி (மு.சின்னத்துரை), பொய்கையார் சொன்மாலை (நா.சுப்பிரமணிய ஐயர்), பாடல் நின்றது (ஈழத்துச் சிவானந்தன்), திராவிடர் என்னும் பெயரும் தற்கால ஆராய்ச்சியும் (சுப்பிரமணியம் தவராசா), எம்மிடையேயுள்ள எழுத்தாளர்கள் (இரா.சிவச்சந்திரன்), பள்ளி எழுச்சிப் பாட்டின் வளர்ச்சி (சு.வைகுந்தநாதன்), மட்டக்களப்புப் பேச்சுத் தமிழிலே சிதைந்த வழக்குகள் (இ.பாலசுந்தரம்), மனக்கோணல் (சரநாதன்), தமிழ்ச் சங்கத்தாரால் நடாத்தப்பட்ட சுற்றுலாக் காட்சிகள், இரண்டாவது உலகத் தமிழ் மகாநாட்டின் போது நிறுவப்பட்ட சிலைகள் சில: முத்தமிழ் விழாவில் பேராசிரியர், பேராசிரியர் க.கணபதிப்பிள்ளையும் இலங்கைப் பல்கலைக் கழகமும் (சு.வித்தியானந்தன்), தமிழும் பிறமொழியும் (க.கணபதிப்பிள்ளை), அன்றும் இன்றும் (க. கணபதிப்பிள்ளை), எம்மிடையில் (நா.சுப்பிரமணியம்), இலங்கையிற் கண்ணகி வழிபாடு (க.கணபதிப்பிள்ளை) ஆகிய படைப்பாக்கங்களும், சுவைத்து

*முடியவில்லை (திலீபன்), இன்ப வீடு (சி.கிருஷ்ணபிள்ளை), கண்ணாடி காட்டுமா (வயிரமுத்து), வண்டும் மலரும் (வயிரமுத்து) ஆகிய கவிதைகளும் இம்மலரில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 011264).*

### 12355

**இளங்கதிர்: 26ஆவது ஆண்டு மலர் 1991/1992.** *த.தவவதனி (இதழாசிரியர்). பேராதனை: தமிழ்ச்சங்கம், பேராதனைப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, 1992. (கண்டி: சென்ட்ரல் பிரின்டர்ஸ், 98, டி.எஸ்.சேனநாயக்க வீதி).*

xvi, *122 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25*x*18.5 சமீ.*

*இவ்விதழில் இலங்கைப் பல்கலைக்கழகங்களும் இலக்கியத் திறனாய்வும் (துரை. மனோகரன்), தமிழின் சிறப்பெழுத்துக்கள் (சி.சிவசேகரம்), தனியார் மயமாக்கமும் குறைவிருத்தி நாடுகளும், "கீத கோவிந்தம்" பாடல்களை விளக்கும் ராசபுத்திர ஓவியங்கள் (ந.வேல்முருகு), இருண்ட யுகத்திலிருது விடியலுக்கு...(ந.இரவீந்திரன்), பல்கலைக் கழகங்களில், "பகிடிவதை" எனப்படுவது ஒரு மரபா? அது தவிர்க்க முடியாத ஒன்றா? (றமீஸ் அப்துல்லா), இசையில் பரிணாமம் (ப.சுசித்திரா), "மூட்டத்தினுள்ளே" (நாவல்): ஒரு நோக்கு (க.அருணாசலம்), பேராதனைப் பல்கலைக்கழகம் அன்றும்... இன்றும்... ___ (வ.நந்தகுமார்), இலங்கைவாழ் மலையகத் தமிழர் தனியானதொரு தேசிய சிறுபான்மையினார்? (அம்பலவாணர் சிவராஜா), மாரடைப்பும் மனித வாழ்வும் சில காரணிகள் பற்றிய ஆய்வு (இரா. சிவகணேசன்), மார்க்ஸிய மெய்யியலில் அந்நியமாதல் எண்ணக்கருவும் ஒழுக்கவியல் அடிப்படையும் (எம்.எஸ்.எம்.அனஸ்), இலக்கியத்திலிருந்து... வஞ்சிமாநகரமும் வஞ்சியும் (ஊர்க் குருவி), பனை: மறைந்து கிடக்கும் அளவற்ற அபரிமித பொருளாதார வளம் ஒன்று, தொகுத்துப் பார்க்கும் போது துயரவரலாறு சொல்லும் மலையக நாவல்கள் (சு.முரளிதரன்) ஆகிய கட்டுரைகளும், வாய்ச் சொல்லில் வீரரடி (மரினா இல்யாஸ்), நட்பு (க.இரமணீதரன்), இலையுதிர்கால வசதங்கள் (மு.விஜேந்திரா), அந்திநேரத்து பூபாளம் (சூரியதாசன்) ஆகிய சிறுகதைகளும், அட்டைப் படக் கவிதை, இளங்கதிர் நீ வாழி, உரமிட்டு... உதைபட்டு... (என்.தாரணி), அடிமைச்சுவடுகள் (ஏ.சிவேந்திரா), மனிதா உன்னிடம் ஓர் யாசிப்பு (அருந்ததி சங்கரதாஸ்) தன்னம்பிக்கைக்கு (*Alpert Heppart*),சுதந்திரம் (இராஜேஷ் இராஜரத்தினம்), வதந்திகள் (மாத்தளை ரிஸ்வான்), மழை (எஸ். கருணானந்தராஜா), வெப்ப வசந்தங்கள் (கநா), சிரி(நெரு)ப்பு (எம்.ராஜன் நசூர்தீன்), ஒவ்வாத படிமங்கள் (ஏ.எச்.எம்.நவாஷ்), எதிர்காலம் (த.றொஷான்), குழந்தாய் ஏன் அழுகிறாய்....? (எஸ்.எல்.பலாஹுதீன்), மறந்து விடாதே (மரீனா இல்யாஸ்) ஆகிய கவிதைப்படைப்புகளும் இம்மலரில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 24120).*

## 12356

**இளங்கதிர்: 27ஆவது ஆண்டு மலர் 1992-1993.** எஸ்.வை.ஸ்ரீதர் (இதழாசிரியர்கள்). பேராதனை: தமிழ்ச்சங்கம், பேராதனைப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, 1993. (கண்டி: செனித் அச்சகம், 192, தொட்டுகொடல்ல வீதி).

xviii, 174 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x18.5 சமீ.

இவ்விதழில் தமிழ்ச் சங்கக் கீதம் (சக்திதாசன்), வாழ்த்துரைகள், தமிழ்ச் சங்கச் செயற்குழு 1992 / 93 அறிக்கைகளுடன் ஓ ... தென்றலே (எஸ்.வை.ஸ்ரீதர்), மௌனராகம் (எம்.ராஜன் நசூர்தீன்), மனிதா உன்னைத்தான் (ரஷீத் எம்.றியாழ்), முடிவுரையும் முன்னுரையும் (வே.இராஜகோபாலசிங்கம்), வழி பிறக்காதா ...? (இ.ஸ்ரீதர்), அண்ணனுக்கு ஓர் அஞ்சல் (மரீனா இல்யாஸ்), உரமாகிப் போனது (கே.எம்.அப்துஸ் ஸமது), சமநிலை உணர்ந்து சமன் செய்து கொண்டு (T.V.R.சங்கர்), காத்தல் (இரா.இரவிசங்கர்), ஒரே ஒரு முறை மட்டும் ...(செல்வி ந.தாரணி), இயற்கை அளிக்கும் ரகம், இதயம் களிக்கும் சுகம் (எம்.வை.எம்.அலி), மனு நீதி (பீற்றர் ரஞ்சித்) ஆகிய கவிதைகளும், பாதை மாறிய பயணங்கள் (மு.விஜேந்திரா), சொந்தங்கள் சுமையானபோது (செல்வி மரீனா இல்யாஸ்), இன்னொரு ஜனனம் (செல்வி என். தாரணி) ஆகிய சிறுகதைகளும், பேராதனைப் பல்கலைக் கழகத் தமிழ்ச் சங்கம் (1926 - 1993): ஒரு வரலாற்று நோக்கு (கலாநிதி க. அருணாசலம்), பள்ளு இலக்கியத்தில் நாட்டார் இலக்கியக் கூறுகள் (கலாநிதி துரை மனோகரன்), சிங்கள நாடகமரபில் "கலைப்பாணி"யின் செல்வாக்கு (ஜனாப். எம்.எஸ்.எம். அனஸ்), விபுலாநந்த அடிகளாரின் மானிட நோக்கு (சி.தில்லைநாதன்), இலங்கையில் தமிழ்த் தேசிய வாதத்தின் தோற்றமும் வளர்ச்சியும் (அம்பலவாணர் சிவராஜா), குறை விருத்தியும் குறைந்த வாழ்க்கைத் தரத்தின் பரிமாணங்களும் (மா.செ.மூக்கையா), குருதி அழுத்த அதிகரிப்பிற்கான காரணிகள் (கலாநிதி இரா. சிவகணேசன்),வாசகரின் நடுநிலைப்போக்கு (எம்.ஏ.அப்துல் சக்காப்), "எயிட்ஸ்" மனித உலகுக்கு ஒரு சவால் (எஸ்.ஜெயசீலன்), கிராம அபிவிருத்தியும் அதில் கிராம மக்களின் பங்களிப்பும் (நல்லதம்பி நல்லராஜா), கணனிகளே வாழ்க்கையாக (செல்வன் மு.தாரகன்), இலங்கையின் இனப்பிரச்சினைக்கு சமஷ்டி முறை தீர்வாகுமா? (எம்.அப்துல் நாஹிப்), மஹாமேதை கலாயோகி ஆனந்தகுமார சுவாமியின் கலை மெய்யியல் பற்றிய ஓர் சிறு நோக்கு (கே.கணேசராஜா), பெண்நிலை வாதமும் மகளிர் நிலைப்பாடும் (நல்லதம்பி நல்லராஜா), கீழைத்தேய கலை, அழகியல் மெய்யியலில் இந்தியாவின் பங்களிப்பு: ஓர் அறிமுகம் (பீ.எம். ஜமாஹிர்), குறள் கூறும் நவீன மருத்துவம் (ஸ்ரீதரன் ஜெயரட்ணம்), வளி மாசடைதல்: காரணிங்களும் விளைவுகளும் (வை.நந்தகுமார்), பழந்தமிழ் இலக்கியத்தில் அங்கத மரபுகள் (பொ.பூலோகசிங்கம்), பேராசிரியர் சு. வித்தியானந்தன் பற்றி (சி.தில்லைநாதன்), பதிவு நவிற்சி ஓவியங்கள் (ந.வேல்முருகு) ஆகிய கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 13699. நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தின் சேர்க்கை இலக்கம் 008308).

## 12357

**இளங்கதிர்: 28ஆவது ஆண்டு மலர் 1993-1994**. *எம்.ஏ.முஹம்மது றமீஸ் (இதழாசிரியர்). பேராதனை: தமிழ்ச்சங்கம், பேராதனைப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, 1994. (களுபோவில: டெக்னோ பிரின்ட், இல. 6, ஜெயவர்த்தன அவென்யூ, தெகிவளை).*

*(20), 121 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x19 சமீ.*

*தலைமைத்துவமும் அதன் முக்கிய பண்புகளும்- தமிழ் இலக்கியங்களை ஆதாரமாகக் கொண்ட சில குறிப்புகள் (க.அருணாசலம்), இளங்கதிரே புறப்படு (தோப்பூர் றிஸ்வி), நவீன இலக்கியமாகப் புதுக்கவிதை (வெ.குணசேகரன்), அரூப ஓவியங்கள் - கலாநிதி ந. வேல்முருகு, சீ .... என்ன சமுதாயம் இது? (பா.த.குமார்), கடவுளுக்கோர் கடிதம் (மு. விஜேந்திரா), ஏ.கே.ராமானுஜன் (எம். ஏ. நுஃமான்), நமது தேசம் (எம்.முஷட் விஜிலி), வேண்டாமையும் வேண்டுதலும் (செல்வி ஞானாம்பிகை விஸ்வநாதன்), சொந்த மண்ணில் பெற்ற சுகம் (இ.ஸ்ரீதர்), பேராசிரியர் சு.வித்தியானந்தன் (08.05.1924 - 22.01.1989) உருவப்படத் திரைநீக்கம், இலக்கியமாமணி (சட்டத்தரணி அல்ஹாஜ் எஸ். எம். ஹனிபா), நாளை என்பது நலமாக .... (மு.தாரகன்), தமிழ்த் திரையிசைப் பாடல்கள் சில குறிப்புக்கள் (துரை. மனோகரன்), முத்தமிழ் வித்தகர் விபுலாநந்தர் (செல்வி கேதாரேஸ்வரி பொன்னம்பலம்), பெண்களும் சமுதாயமும் (வே.இராஜகோபாலசிங்கம்), நீ - உளவியல் தழுவல் (ரீ.வீ.சங்கர்), காலம் பதில் சொல்லும் (முருகேசு ஸ்ரீவேணுகோபால சர்மா), அரசியலமைப்பு திருத்தம் தமிழ் பேசும் மக்களின் பிரச்சனைக்கான தீர்வுக்கு வழிசமைக்குமா? (ஆறுமுகம் யோகராசா), மணக்கும் மனிதம், பல்லுப்போனால் .....? ( வைத்திய கலாநிதி தி.ஆனந்தமூர்த்தி), சிலவேளை .... நாமும் நிமிர்வுடனே? (இளஞ்செல்வி), வளர்முக நாடுகளும் நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தியும் (ஜாபீர் எஸ். முஹம்மட்), கனவுகள் (தே.சேந்தன்), ஓ ஆசானே (செல்வி மிஸ்பாசாலி), பச்சைவீட்டு வாயுக்களும் வளிமண்டலத்தில் அவற்றின் தாக்கங்களும் (வை. நந்தகுமார்), கண்ணீர் கனவுகள் (மு.விஜேந்திரா), மெய்யியல் பற்றிய சிறு கண்ணோக்கு (ஏ.எல்.முஹம்மது றியால்), ஒளிரும் விம்பங்கள் (பா.பிரியதர்சன்), கீரைகளும் அவற்றின் போசணை இயல்புகளும் முக்கியத்துவமும் (கலாநிதி இரா.சிவகணேசன்), மனப் பிரதிநிதி (எச்.எம். கலால்தீன்), அகதிகளும் அவர்கள் எதிர்நோக்கும் சவால்களும் சர்வதேச ரீதியிலான கருத்தாய்வு (எம்.ஐ.ஏ. நஸார்), உன் புன்னகை என்ன விலை? (எஸ். கலைச்செல்வன்), ஈழநாட்டில் உரையின் தோற்றமும் வளர்ச்சியும் - ஓர் அறிமுகம் (இரா.வை. கனகரத்தினம்), வள்ளுவர் பார்வையில் மகளிர் (மு.கா.யாகூதுன்னிசா), நாடக விழா "94 ஒரு கண்ணோட்டம், முற்றுப்பெறாத முகவரிகள் (இரா.இரசவிசங்கர்), இந்திய சமஷ்டி முறை (வளர்மதி சின்னராசா), ஒரு விடுகையின் விசும்பல் (எஸ்.இம்தியாஸ்), சங்கத்தின் பாதையிலே (செல்வரூபன்), செயலாளர் அறிக்கை (அருள் பெனடிக்ட் இராஜேந்திரன்), நன்றி சொல்லித்தான் ஆகவேண்டும் (எம்.ஏ.முஹம்மது றமீஸ்), தத்துவஞானி விட்கைன்ஸ்ட்டைனின் (*Wittgentseins*) மொழி பற்றிய கருத்து ஒரு சுருக்கக் கண்ணோட்டம் (மு.ரவி)*

ஆகிய ஆக்கங்கள் இம்மலரை அலங்கரித்துள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 18824. நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தின் சேர்க்கை இலக்கம் 008309).

### 12358

**இளங்கதிர்: 29ஆவது ஆண்டு மலர் 1994-1995.** H.M.கலால்தீன் (இதழாசிரியர்). பேராதனை: தமிழ்ச்சங்கம், பேராதனைப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, 1995. (களுபோவில: டெக்னோ பிரின்ட், இல. 6, ஜெயவர்த்தன அவென்யூ, தெகிவளை).

(20), 111 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 26x19 சமீ.

இவ்விதழில் மானுடத்தை இதய சுத்தியோடு நேசித்த முதுபெரும் எழுத்தாளர் எஸ். அகஸ்தியர் (க.அருணாசலம்), தன்னிகரில்லாத் தலைவர்களும் தமிழ்ப்படக் கதாநாயகர்களும் (துரை. மனோகரன்), புதுமைகளும் மாறுதல்களும் (சி. தில்லைநாதன்), தம்பி (சேந்தன்), கவிஞர்களின் கரங்களில் கூரிய வாள் ஹைக்கூ, திருக்கோணமலை மாவட்ட நாட்டாரியலில் காணப்படும் காதல் சுவை (H.M.கலால்தீன்), சூரிய வெளியும் இனிச் சுகம்தான் (பா.பிரதீபன்), இலங்கை அரசியலில் சாதிச் செல்வாக்கும் அதன் தாக்கமும் (M.I.M. நஸார்), காதல் ஓர் அலசல் (ந.சுரேந்திரன்), கிழக்கு மாகாணத் தமிழ் - முஸ்லீம் இனமுரண்பாட்டின் காரணங்களும் ஒருமைப்பாட்டை உருவாக்குவதற்கான சில ஆலோசனைகளும் (I.L.அப்துல் நசார்), கதகளி - கேரளத்தின் தேசியக் கலை வடிவம் (அம்பிகை வேல்முருகு), மனித வாழ்வில் இரும்புச் சத்தின் முக்கியத்துவம் (இரா. சிவகணேசன்), இலங்கையில் தேசிய ஒருமைப்பாடு (M.A.M.பைசல்), அவைக்காற்றுகையில் அனுபவத்தின் ஊடாக ஒரு நாடகத்தின் வெற்றியைத் தீர்மானிக்கும் காரணிகள் (சங்கர்), மகாத்மாவின் வாழ்வும் அவரது சிந்தனைகளும் (A.L.முகம்மட் றியால்), ஊனங்கள் (மு. விஜேந்திரா), செல்வந்த நாடுகளுக்கும் வறிய நாடுகளுக்கும் இடையிலான ஏற்றத்தாழ்வைப் போக்குதல் (யே.யோக்கியம்), வறுமை ஒழிப்பில் சமூர்த்தித் திட்டத்தின் பங்கு (R.றிஸ்வான் முகமட்), மார்கழித் திருவாதிரை நோன்பும் திருவெம்பாவையும் (கெ.கிருஷ்ணவேணி), நாடகவிழா - 95: சாதாரண ரசிகன் என்ற கோணத்திலிருந்து ... (சி. சிவானந்தன்), வதனமார் வழிபாடு (இரா.வை.கனகரத்தினம்), விஞ்ஞான வளர்ச்சியில் கணனியின் அவதாரம் (சிவசண்முகம் சுதாகரன்), அவன் வருவான் (இ.ஸ்ரீதர்), மனித ஆளுமை பற்றிய பிரச்சனைகளும் பிராய்டிய விளக்கமும் (பீ. எம்.ஜமாஹிர்), தண்டனைக் கோட்பாடுகளும் அதில் காணப்படும் பிரச்சினைகளும் (எம். ஐ.அப்துல் மஜீட்) ஆகிய படைப்பாக்கங்கள் இடம்பெற்றுள்ளன. மேலும் கவிதைகளின் பிரிவில் நலமுடன் வாழ்க இளங்கதிரே (M.Y.M.அலி), சமாதானமே ஓடி வா (றஹீம் எஸ். எம்), என் கறுப்பு டயறி (எம்.விஜிலி), இதுவா நிதர்சனம்? (இரா.நித்தியாநந்தன்), புது வாழ்வு மலரட்டும் (செல்வி சந்திரவதனி ஐயனார்), போதனை (செல்வி ஞானம்பிகை விஸ்வநாதன்), பிரிகின்ற நேரமும் பின்வரும் காலமும் (வே.இராஜகோபாலசிங்கம்), பட்டதாரியின் துயர் (A.L.M.கைஸ்சர்), அகதிகளாய் (கோ.சுரேஷ்), மலையக மைந்தரே (செல்வி சுமைரா அன்வர்) ஆகிய கவிதைப்

படைப்பாக்கங்களும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 18823, 14801).

### 12359

**இளங்கதிர்: 30ஆவது ஆண்டு மலர் 1996-1997.** இராசரத்தினம் இரவிசங்கர் (இதழாசிரியர்). பேராதனை: தமிழ்ச்சங்கம், பேராதனைப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, 1997. (களுபோவில: டெக்னோ பிரின்ட், இல. 6, ஜெயவர்த்தன அவென்யூ, தெகிவளை).

(16), 148 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 26x19 சமீ.

முதற் பகுதியான "சமூக கலை இலக்கிய அறிவியற் பகுதியில்" எல்லாமே போலிகள் (வைத்திய கலாநிதி தி.ஆனந்தமூர்த்தி), மட்டக்களப்பும் தமிழர்களும்-ஓர் நோக்கு (சிவசண்முகன் சுதாகரன்), இனிவரும் தசாப்தம் என்ன கொண்டு வரும்? (பா.மணிமாறன்), 1970களில் ஈழத்தின் இலக்கியப்போக்கு: சிறப்பாக நாவல் இலக்கியம் இக்காலப்பகுதியில் கொண்டிருந்த பிரதான பண்பு (உமா. கிருஷ்ணசாமி), தமிழுக்கும் கணனிக்கும் பாலமமைப்போம் (வே.ஏ.மனோராஜ்), பத்திரிகைத்துறை ஒரு வெட்டுமுகம் (எம்.என்.என்.நவ்ரஜி), பித்தன் கே.எம்.ஷா கவிதைகளிற் சமூக நோக்கு (தா.மணிமேகலா), இன்ரநெற்றும் தமிழும் (து.வசீகரன்), உயிரியல் தொழில்நுட்பம் ஓர் அறிமுகம் (சுரேந்திரன்) ஆகிய படைப்பாக்கங்கள் இடம்பெற்றுள்ளன. இரண்டாம் பகுதியான "இளைய தலைமுறைச் சிறப்புப் பகுதியில்" இளைஞர் பண்பாடு சில குறிப்புகள் (கார்த்திகேசு சிவத்தம்பி), இளைய தலைமுறையினரும் கலை இலக்கிய ஈடுபாடும் (க. அருணாசலம்), தலைமுறை முரண்பாடு (சி. தில்லைநாதன்), போதையின் பிடிக்குள் எமது நாடு (ருஸ்னா ராகுக்), விழுமியங்களின் பொதுமையும் மெய்யியலும் (திருமதி மல்லிகா இராஜரத்தினம்), இலங்கையில் இளைஞர் அமைதியின்மைக்கான காரணங்கள் பற்றியதொரு ஆரம்ப உசாவல் (பேராசிரியர் அம்பலவாணர்), பல்கலைக்கழக மாணவர்களின் அமைதியைக் குலைக்கும் புல்லுருவிகள் (வை. நந்தகுமார்), தற்கொலையின் ஆரம்பங்கள் (பேராசிரியர் டியூடர் சில்வா), காலம் உனக்கொரு வாழ்வு தரும் (றமேஷ் அலோஷியஸ்), உளவியல் நோக்கில் இளையோர் பிரச்சினைகள் (எம்.எஸ்.எம்.அனஸ்) ஆகிய கட்டுரைகளும், விடை காணா வினா (அனுஷா பாலேந்திரன்), அவள் தாயாகிறாள் (ந.சந்திரிகா), பார்வதி ஒரு பாடம் (சி.கருணாகரன்), கொலைகள் (சூசை அந்தனிதாசன்), கனவு சிதைந்ததொரு வாழ்வு (ப.பீரதீபன்) ஆகிய சிறுகதைகளும், வண்டித்தடம் (யோ.அன்ரனியூட்), எட்டத் தொலைவிலிருந்தோர் கீதம் (முகமூடி), என்னை நான் மீட்க (ஏ.குபேரன்), தணியுமா சுதந்திர தாகம் (கோமதி கிருஷ்ணசாமி), நான் அகதியாயிருக்கலாம் (என்.எஸ்.பி.கரன்), அகதி (எம். எச்.ஜெய்புன்நிஸா) ஆகிய கவிதைகளும், பெண்ணியம்: தெளிவை நோக்கிய ஒரு முயற்சி (தொகுப்பு: பா.பிரதாபன், இரா. இரவிசங்கர்), இவர்கள் பார்வையில் (நேர்கண்டு தொகுத்தவர் இரா. இரவிசங்கர்), கல்வியியல் பேராசிரியருடன் ஒரு நேர்காணல் (தொகுப்பு: மா.அன்புதாஸ்) ஆகிய நேர்காணல்களும்

இடம்பெற்றுள்ளன. இறுதப்பிரிவில் "சங்க நிகழ்வுகளுடன் ஓர் சங்கமம்" என்ற பிரிவில் தமிழ்ச்சங்கச் செய்திகளும், அறிக்கைகளும் இடம்பெற்றுள்ளன. மேலும் தமிழ் நாட்டுக்கூத்து மரபை ஆராய்ந்தே "மனமே" நாடகம் எழுதப்பட்டது (மறைந்த பேராசிரியர் பி.ஆர்.சரச்சந்திர), நாடகப் பட்டறையும் அதன் எதிரொலிகளும் (சூ.அன்ரனிதாசன்), கவிதை பற்றிக் கதைப்போம் வாருங்கள் (தொகுப்பு: சுமைரா அன்வர், கிருபால் சரவணமுத்து), இலங்கையில் தமிழ்-முஸ்லிம் உறவு (தொகுப்பு: சி. சுதாகரன்) ஆகிய படைப்பாக்கங்களும் இப்பிரிவில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 18870. நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தின் சேர்க்கை இலக்கம் 008311).

## 12360

**இளங்கதிர்: 31ஆவது ஆண்டு மலர் 1997-1998.** அ.ப.மு.அஷ்ரப், செல்வி இரா. சர்மிளாதேவி (இதழாசிரியர்கள்). பேராதனை: தமிழ்ச்சங்கம், பேராதனைப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, 1998. (களுபோவில: டெக்னோ பிரின்ட், 83, ஆஸ்பத்திரி வீதி, தெகிவளை).

xii, 160 பக்கம், ஓவியங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x19 சமீ.

இவ்விதழில் மூன்று பிரிவுகளின்கீழ் படைப்பாக்கங்களை வகுத்துப் பதிவுசெய்யப்பட்டுள்ளன. முதலாவது பகுதி பல்சுவை அறிவியல் பகுதியாகும். இதில் இனமுரண்பாட்டுக்குத் தீர்வு காணுதல் தொடர்பாக மீறப்பட்ட வாக்குறுதிகளும் கைவிடப்பட்ட ஒப்பந்தங்களும் (அம்பலவாணர் சிவராஜா), உலங்கு தொலைபேசி சேவை-Mobile Telephone (து. வசீகரன்), மலையகத் தமிழ் நாவல்கள்: சில அவதானிப்புகள் (க.அருணாசலம்), நுகர்வோர் விலைச் சுட்டெண்கள் பற்றிய எண்ணக்கருக்களும் பயன்பாடுகளும் (பா.றெஜீஸ் பெர்னாண்டோ), இந்திய மெய்யியல் மரபில் சாருவாகம் - ஓர் நோக்கு (எம்.ஐ.இஸ்ஹாக்), பொருளாதார வளர்ச்சியில் காலநிலையின் தாக்கம் (நல்லதம்பி நல்லராசா), தமிழ் இலக்கிய வரலாற்றில் ஐரோப்பியர் காலம் (துரை மனோகரன்), உலகக்கிண்ண உதைபந்தாட்டம் (க.நரேந்திரநாதன்), பத்மாவதி சரித்திரத்தில் பெண்கள் நிலை (செல்வி.அம்பிகை வேல்முருகு), கணணியில் தமிழ் (ப. பிரியதர்சன்), பௌத்த சிந்தனையில் சூன்யவாதத்தின் முக்கியத்துவம் (எம்.ஐ.மஜீட்), மனிதனைப் பிரதியெடுப்பது சாத்தியமா? (வே.தி.பத்மநாதன்) ஆகிய படைப்பாக்கங்கள் இடம்பெற்றுள்ளன. இரண்டாவது பகுதி தொழில்நுட்ப வளர்ச்சியும் மனித நேயமும்-சிறப்புப்பகுதி எனத் தலைப்பிடப்பட்டுள்ளது. இதில் கட்டுரைகளாக விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சியும் மனித நேயமும் (சி. தில்லைநாதன்), மனித உரிமை மீறல்களால் ஏற்படும் உளவியல் தாக்கங்கள் - ஒரு நோக்கு (வஸீல்), சிறியோரல்லாம் சிறியருமல்ல (ம.திவாகரன்), உலகம் ஓர் கிராமமாதல்: சாத்தியப்படும் நிலைமைகள் (எம்.எம்.எம். றிபாய்), "பதினாறும் பெற்று பெருவாழ்வு...." (உ.கருணாகரன்) ஆகிய கட்டுரைகளும், சிறுகதைகளாக அந்த தியாகச் சுடர் உறங்கவில்லை (மாதுமீனா), துளிர்ப்பு (எம்.எச்.எம்.ஜவ்பர்), மாட்டு வண்டி (முலம்: சோமரத்ன பாலசூரிய), கூண்டு (உமா கிருஷ்ணசாமி),

ஏகலைவன் (ச.மதிரூபன்), வேலிகள் (தி.பத்மநாதன்) ஆகிய ஆக்கங்களும், கவிதைகளாக- எங்கள் வீடு (நவீனன்), தேற்றுவாரின்றிய தேம்பல்கள் (நா. மணிமேகலை), விண்ணப்பம் (ஸ்ரீ பிரசாந்தன்), நாய் என்று நினைத்திடாதீர் (எஸ்.உதயசீலன்), நாளை வருவான் ஒரு மனிதன் (புரட்சிக்கமால்), தொடரும் எரிகை (ஞானாம்பிகை விஸ்வநாதன்), ஓ வெண்புறாவே (லறீனா அப்துல் ஹக்) ஆகிய படைப்புகளும் இடம்பெற்றுள்ளன. இப்பிரிவில் பல்கலைக்கழக கல்வியும் வாழ்கையும் - ஓர் கலந்துரையாடல் (தொகுப்பு: பொ.நக்கீரன், பா.மணிமாறன்), புதிய கல்விச் சீர்திருத்தமும் அதன் அடிப்படைகளும் அவசியமும் (நேர்காணல் தொகுப்பு: திருமலை அஷ்ரஃப்) ஆகிய ஆக்கங்களும் இடம்பெற்றுள்ளன. மூன்றாவது பகுதியில் சங்க நிகழ்வுகளின் மீள்பார்வைகள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 18825. நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தின் சேர்க்கை இலக்கம் 008312).

### 12361

**இளங்கதிர்: 32ஆவது ஆண்டு மலர் 1998-1999**. பாலகிருஷ்ணன் பிரதாபன் (இதழாசிரியர்). பேராதனை: தமிழ்ச்சங்கம், பேராதனைப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, 1999. (களுபோவில: டெக்னோ பிரின்ட், இல. 6, ஜெயவர்த்தன அவென்யூ, தெகிவளை).

(12), 182 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25.5x19 சமீ.

இவ்விதழின் கட்டுரைகளாக, சிலிக்கன் பள்ளத்தாக்கு: உலகின் உயர் தொழில் நுட்பச் சுரங்கம்: இன்றைய நிலைமை பற்றிய சில குறிப்புக்கள் (மா.செ.மூக்கையா), உலக கணணி வலைப்பின்னல் Internet (வே. மகிந்தன்), ஈழத்துப் பூதந்தேவனார் பற்றிய கருத்து நிலைகள்: ஓர் உசாவல் (வ.மகேஸ்வரன்), வங்கித்துறையில் ஏற்பட்டுவரும் நவீன தகவல் தொழில்நுட்பங்கள் பற்றிய ஒரு நோக்கு (வ. தர்மதாசன்), மன்னார் மாவட்டத்தின் நாட்டுக்கூத்துக் கலை (அ. எட்வேட் நிக்சன் சொய்சா), கோதாவரி நதியும் சான்றோர் கவியும் (க.ஜெயநிதி), இலங்கையின் பாதுகாப்புச் செலவினமும் பொருளாதார வளர்ச்சியில் அதன் தாக்கமும் (இராசா. கோகுலதாஸ்), சாருமதியின் கவிதைகள் - ஒரு கண்ணோட்டம் (செ.சிங்காரவேல்), இலங்கையிலுள்ள தமிழர்களும் சுயநிர்ணய உரிமை பற்றிய தத்துவமும் (சுமணசிறி லியனகே), தாவர நோயியலில் மூலக்கூற்று உயிரியலின் பங்கு (மணிமேகலா நாகநாதன்), சர்வதேச அரங்கை எதிர்கொள்ளும் சுதேசிய அரங்குகள் (சி. ஜெயசங்கர்), பனைவளத்தின் விஞ்ஞான, பொருளாதார கோட்பாடுகள் - ஒரு நோக்கு (சோ. கோகுலதாசன்), ஆகிய கட்டுரைகளும், இது மரண தேசம் (ஐ.எம்.ஜெமீல்), எச்சம் பார்த்துச் சொல்கிறோம் (வே. முருகதாசன்), காலத்தின் கல்லறையில் ... (யோ. அன்ரலி யூட்) ஆகிய கவிதைகளும், உன்னோடு (சி. மைதிலி), அகதி எனும் முத்திரை (றெ.வைகுந்தன்) ஆகிய இரு சிறுகதைகளும், இடம்பெற்றுள்ளன. இவற்றைவிட 20ஆம் நூற்றாண்டை நோக்கிய மீள்பார்வையும், 21அம் நூற்றாண்டை நோக்கிய எதிர்வுகூறலும் என்ற பிரிவில் இலங்கைப் பல்கலைக்கழக வளர்ச்சிக்குத் தமிழர் பங்களிப்பு (பேராசிரியர் சி. தில்லைநாதன்),

இருபதாம் நூற்றாண்டில் தலைமைத்துவம்: ஒரு மீள் பார்வை (பூ.சோதிநாதன்), சுதந்திர இலங்கையின் அரசியலமைப்புகளில் மனிதவுரிமைச் சட்டங்கள் - ஓர் ஒப்பிட்டாய்வு (ஆறுமுகம் யோகராஜா), இலங்கையில் தேசிய ஒருமைப்பாட்டுப் பிரச்சினைக்கான அடிப்படைக் காரணங்கள் (இஸ்மாயில் ஏ. நஜீம்), தமிழர்களின் பாரம்பரிய தாயகம் சார்பு - எதிர்வாதங்கள் (அம்பலவாணர் சிவராஜா), சமூக அரசியல் மெய்யியல் நோக்கில் காந்தியஅஹிம்சையும், வன்முறையும், இலங்கைத் தமிழ்த் தேசியவாதத்தின் பரிணாமம் (சுவர்ணராஜா நிலக்ஷன்), எங்கள் வரலாறுகள் காக்கப்படுமா? (யோகநாதன் திலீபன்), அடுத்த நூற்றாண்டா, அது எப்போது? (சி.சிவசேகரம்), புதிய நூற்றாண்டின் தேவை மாற்றங்களை உள்வாங்கும் முகாமை: இலங்கை ஒரு பார்வை (வ.சிவலோகதாசன்), நவீன விவசாயத்துறை: 21ஆம் நூற்றாண்டை நோக்கி ...(முருகேசு ஸ்ரீ வேணுகோபால சர்மா), 21 ஆம் நூற்றாண்டில் தமிழ் மொழியின் பயன்பாடு ஆகிய கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. இவ்விதழுக்கான கவிதைகளை ஸ்ரீ பிரசாந்தன், வல்லிபுரம் சுகந்தன், கி.பாலநாதன், ஷர்மிளா றஹீம், முனவ்பியா ஏ.கபூர், லறீனா அப்துல் ஹக், வேழினி வல்லிபுரம் ஆகியோர் எழுதியுள்ளனர். மீன் சந்தை (பா.மணிமாறன்), உறவுகளைத் தேடி ... (ந.சந்திரிக்கா), தேடல் (சியாமளா சிவம்), கருகிப்போன அரும்புகள் (வல்லிபுரம் சுகந்தன்) ஆகியவை இம்மலரின் சிறுகதைகளாக இடம்பெற்றுள்ளன. (இந் நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 18822).

### 12362

**இளங்கதிர்: 33ஆவது ஆண்டு மலர் 1999/2000.** வேலாயுதம் முருகதாசன், மதுராந்தகி சின்னத்தம்பி (இதழாசிரியர்கள்). பேராதனை: தமிழ்ச்சங்கம், பேராதனைப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, 2000. (களுபோவில: டெக்னோ பிரின்ட், இல. 6, ஜெயவர்த்தன அவென்யூ, தெகிவளை).

(12), 147 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 26x20 சமீ.

தமிழ்ச் சங்கக் கீதம் (சக்திதாசன்), மனவெழுச்சிகளும் (Emotions) அவை மனித நடத்தையில் ஏற்படுத்தும் தாக்கமும் (எம்.ஐ.அப்துல் மஜீட்), 1940 வரை இலங்கைத் தமிழ்க் கவிதை மரபு பற்றிய ஒரு நோக்கு (செ.செல்வமோகன்), காளிதாசனின் இருதுசம்ஹாரன் - மழைக்கால வர்ணனை (க.ஆனந்தகுமார்), இலங்கையின் அரசியலில் பெண்கள் (எச்.எம்.எம்.றைஹான்), பாரதியும் விஞ்ஞானமும் (அ.மு.றியாஸ் அஹ்மட்), நாவலரின் "கொன்றைவேந்தன்" உரைவளம் (இரா. வை.கனகரத்தினம்), இப்படியும் ஒரு பெண்ணா எஸ்.பொ. வின் இரு கதைத் தலைவர்கள் (துரை மனோகரன்), தமிழிலக்கியப் பரப்பில் ஈழத்து நவீன கவிதை (செ.யோகராசா), பொருளாதார அபிவிருத்தியிலிருந்து மானிட அபிவிருத்தியை நோக்கி (எம்.ஐ.பஸீஹா), தோழி நீ வாழி (இரா.சர்மிளாதேவி), துளிர்க்கிறது ஓர் உறவு (சிறுகதை- வல்லிபுரம் சுகந்தன்), கனகம்மாள் காத்திருக்கிறாள் (சிறுகதை-க. மயூரதி) ஆகிய படைப்பாக்கங்களுடன், முடிவின் தொடக்கத்தில் .... (சி.பத்மசீலன்), விடிவுக்காய் பல்கலையில் ... (இ.ஜனந்தன்), அதர்மத்தில் ஓர் ஆய்வு (ஆர். சண்முகப்பிரியா), விழுமியமும் விழிக்கட்டும் (என்.சுதன்), அம்மா (சி.

தெ.ஞானக்குமரன்), நான் விற்கப்படுகின்றேன் (வல்லிபுரன் சுகந்தன்), சினேகம் ... (யோ.அன்ரனி), மிலேனியம் மிகுந்துரைக்காதோ (கோமதி கிருஷ்ணசாமி), எல்லோருக்கும் நல்லவனாக .... (அ.அலங்கேஸ்வரன்), நெஞ்சு பொறுக்குதில்லையே (நா.மணிமேகலா), பிரிவு (கவிப்பிரியன்), நான் உலகை விரும்பியது நேற்று ... இன்று ... ஆனால் நாளை? (இ.ஜனந்தன்), தாய் (றொசான் ச. றாகல்), இதய இராகம் (கருணாகரன்), தேடல் (வ.ஜெயரூபன்), காதல் கூடுதல் (சு.வில்வரெத்தினம்), கடந்து செல்தல் (சு.வில்வரெத்தினம்), பண்பாடு (சு.வில்வரெத்தினத்தினம்), விதைப்பு (நிலவின்தாசன்), கனவு போனது (வேலையா சதீஸ்குமார்), அறிவுச்சட்டை அணிந்த சாத்தான்களும் அழுகை அழியாத அவலமும் (ஸ்ரீ பிரசாந்தன்), அகதி எம் அவலங்கள் (எ.எ.அஷ்ரப்), உலகினை ஐக்கியப்படுத்துவோம் (லறீனா அப்துல் ஹக்) ஆகிய கவிதைகளும் இம்மலரில் இடம்பெற்றுள்ளன. தொடர்ந்து சங்க நடவடிக்கைகள், நூல் விமர்சனங்கள், நேர்காணல்கள் என்பனவும் இடம்பெற்றுள்ளன. அவை தமிழ்த் தகவற் துறை பற்றிய சில தகவல்கள் (சி. சிவசேகரம்), நம் தமிழர் வாழ்வும் - தமிழ் சினிமாவும் (தி.மகேஸ்வரராஜா), பௌத்தர்கள் என்றால் சிங்களவர் என்ற தப்பான கருத்து (பூ.ம.செல்லத்துரை-தினக்குரல்), இலங்கைத் தமிழ்ப்பெண் எழுத்தாளர்கள், பெண்களுக்கு எதிரான வன்முறையும் "பாலியல் வல்லுறவும்", பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் முன்வைத்துள்ள அரசியல் யாப்பு சீர்திருத்தத்துக்கான ஆலோசனைகள்: ஒரு பகுப்பாய்வு (அம்பலவாணர் சிவராஜா), வீரம் செறிந்த வன்னியில் தேடல்கள் (யோகநாதன் திலீபன்), பேராசிரியர் எஸ். இரட்னஜீவன் கூலுடனான ஒரு நேர்காணல் - தொகுப்பு: கு.சிவசுதன்), பேட்டி: வவுனியா அகதிமுகாம் (இளங்கதிர் சார்பில் பேட்டி கண்டவர்: ம. அமுதராஜ்), சகோதர இன மக்களுடனான ஒரு நேர்காணல் - ம.அமுதராஜ் (பதவியா அகதிகள் முகாம்) ஆகிய தலைப்புகளில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 40789. நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தின் சேர்க்கை இலக்கம் 008314).

### 12363

**இளங்கதிர்: 34ஆவது ஆண்டு மலர் 2000-2001.** க.ஈசன், ச.ஜெகநாதன் (இதழாசிரியர்கள்). பேராதனை: தமிழ்ச்சங்கம், பேராதனைப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, 2001. (கொழும்பு 6: எஸ். பிரின்ட்).

(13), 157 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21 சமீ.

"இளங்கதிர்" பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கத்தினரால் வெளியிடப் படும் வருடாந்த இதழ். இதன் வெளியீடு 1948ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு வருடந்தோறும் தொடர்ச்சியாக வெளிவருகின்றது. பல்கலைக்கழக மாணவர்களுக்கும் விரிவுரையாளர்களுக்குமான வெளியீட்டுக் களமாக இது விளங்குகின்றது. உள்ளடக்கத்தில் இலங்கையின் பல்லின பண்பாட்டு பாரம்பரியம், கலை பற்றிய ஆய்வுகள், இலக்கிய படைப்புக்கள், விமர்சனங்களுடன் தமிழ்ச்சங்கத்தின் நிகழ்வுகளின் பதிவையும் தாங்கி வெளிவருகின்றது. (இந்நூல்

*கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 20646).*

## 12364

**இளங்கதிர்: 35ஆவது ஆண்டு பவளவிழா மலர் 2002/2003**. *வி.கோகுலசிங்கம், ந.புஷ்பராசா (இதழாசிரியர்கள்). பேராதனை: தமிழ்ச்சங்கம், பேராதனைப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, 2003. (அச்சக விபரம் தரப்படவில்லை).*

*(16), 186 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 29x21 சமீ.*

*75 வருடகால வரலாற்றைக் கொண்ட பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கம், அரைநூற்றாண்டு கால வரலாற்றைக் கொண்ட இளங்கதிர் என்னும் ஆண்டு மலரை இம்முறை பவளவிழா மலராக வெளியிட்டுள்ளது. அட்டைப்படக் கவிதை, மற்றும் கவிதைகள், கட்டுரைகள், கதைகள், இலக்கியப்போட்டியில் வெற்றிபெற்ற ஆக்கங்கள், சங்க நடவடிக்கைகள் என நூற்றுக்கும் அதிகமான ஆக்கங்களுடன் இத்தொகுப்பு வெளிவந்துள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 57244).*

## 12365

**இளங்கதிர்: 36ஆவது ஆண்டு மலர் 2004/2005**. *ஜெ.ஆன்.யாழினி (இதழாசிரியர்). பேராதனை: தமிழ்ச்சங்கம், பேராதனைப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, 2005. (முறுதகஹமுல்ல 20526: வர்தா பதிப்பகம், 85 சீ, பிட்டுனுகம).*

viii, *146 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x15 சமீ.*

*தமிழ்ச் சங்கக் கீதம் (சக்திதாசன்), போர்த்துக்கேயர் கால அரசியல் சமயச் சூழலும் தமிழ் இலக்கிய வளர்ச்சியும (துரை மனோகரன்), சிலாபப் பிரதேசச் சிறுதெய்வ வழிபாட்டில் காளி, கண்ணகி (நாராயணன் மல்லிகாதேவி), கனகிபுராணம்: ஒரு பண்பாட்டுச் சிதைவின் குறிகாட்டி (மஹேஸ்வரன்), இலங்கையின் இனமோதலை விளக்கிக் கொள்ளல் (எஸ்.பாஸ்கரன்), மலைத்தாய் (ஜோ.தியாகராஜா), ஈழத்துத் தமிழ்ச் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும் ஒரு சில குறிப்புகள் (க. அருணாசலம்), மாதவி பிறப்புத் தொடர்பான சில குறிப்புகள் (பரா.ரதீஸ்), இழிவுபடுத்தப்பட்ட தமிழர் கலை (இரா. தேவமாறன்), செம்பறைச் சிதம்பர சுவாமிகள்: ஓர் அறிமுகம், இலங்கையின் முரண்பாட்டு அரசியல் கலாசாரம் (ந.புஸ்பராசா), தெம்மாங்குப் பாடல்கள் (ஓர் ஆய்வு: ஆர்.சோதிமலர்), எழுதிச் செல்லும் விதியின் கைகள்: உமர் கையாமின் ருபையாத் - ஒரு பார்வை (ஜே.இல்ஹாம்), பிறழ்வுகள் (கெ.சர்வேஸ்வரன்), நான்கு கவிதைகளும் ஒரு சிறுகதையும் மறுமலர்ச்சி இதழில் மஹாகவியின் படைப்புகள் சில குறிப்புகள், வன்னியின் வரலாற்றில் பண்டார வன்னியன் (எஸ்.பிரமிளா), சங்க நடவடிக்கைகள் - 2004 (வா.அம்பிகை) ஆகிய கட்டுரைகளும், நீயே எல்லாமுமாகி ... (ஜெஸீமா ஹமீட்), முடிந்தால் திருத்திகொள் ..(எஸ். சுதாகரன்), கனவுகள் கலைகின்றன, மழையின் ஓலங்கள் (கோ.நளாயினி), ஒரு ஜீவ பிரவாகம் (ஷர்மிளா ஜெயக்குமார்)*

*ஆகிய கவிதைகளும் இம்மலரில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 37975. நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தின் சேர்க்கை இலக்கம் 008315).*

### 12366

**இளங்கதிர்: 39ஆவது ஆண்டு மலர் 2008**. *யோ.கலைவாணி, மு.ஜெயசீலன் (இதழாசிரியர்கள்). பேராதனை: தமிழ்ச்சங்கம், பேராதனைப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, 2008. (கொழும்பு 6: எஸ். பிரின்ட்).*

*(14), 176+(18) பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x19 சமீ.*

*இம்மலரில் சைவமும் தமிழும் என்னும் கருத்துநிலை, சோழர்காலத் தமிழ் இலக்கிய வளர்ச்சி, தகவல் தொழில்நுட்பமும் தமிழும், முருக வழிபாட்டில் மறுமலர்ச்சி, புலம்பெயர் கவிதைகளில் உணர்வுநிலைப் போராட்டங்களும் அகதி நிலைச் சித்திரிப்பும், பக்தி இலக்கியத்தில் பெண் பக்தி: ஆண்டாளின் பாடல்களை முன்வைத்து சில குறிப்புகள், மலையகக் கவிதை வளர்ச்சி: விரிவுபெற வேண்டிய எல்லைகள், முல்லைத்தீவு மாவட்ட முஸ்லிம்களின் பாரம்பரியக் கலை இலக்கியங்கள்: 1990 வரையிலான கண்ணோட்டம், ஆனந்தமயிலின் படைப்புலகம், பாஞ்சாலி சபதம்: ஒரு மீளாய்வு, அகலிகை ஒரு வரலாற்றுப் படிமம், தமிழ்மொழியில் ஐந்திலக்கண மரபு, மஹாகவியின் நவீன காவியங்களில் இன்னல், உழைப்பு, ஏழ்மை, உயர்வு, ஈழத்தின் கவிப்பரப்பில் தேசியத்தின் குரல், தமிழ்க் கவிதையில் பெண்ணியம், ஈழத்து நவீன தமிழ்க் கவிதையின் மூலங்கள், ஜெயகாந்தன் சிறுகதைகள்: சில குறிப்புகள், தீமைகள் ஒழிக்கவும் அறத்தை நிலைநாட்டவும் எழுந்த காப்பியமே கம்பராமாயணம், ஊடக ஒழுக்கவியல், சேது சமுத்திரத் திட்ட மர்மங்கள்: நெடுந்தீவு தொடர்பிலான புலன் விசாரணை, தீவிரவாதப் புவியியலுக்கான அறிமுகம், அட்லாண்டிக்கின் பெர்முடா முக்கோணம்: ஆழ்கடல் மர்மங்கள், உலக நிதி நெருக்கடியும் இலங்கைப் பொருளாதாரமும், இந்திய சுதந்திரப் போராட்டத்தில் நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ் அவர்களின் வகிபாகம், இஸ்லாமும் மனித உரிமைகளும்: ஓர் இஸ்லாமியச் சட்டவியல் நோக்கு, அமுக்கக் குழுக்கள், சர்வதேச சட்டத்தின் கீழ் நாடொன்று அங்கீகரிக்கப் படுவதற்கான தேவைப்பாடுகள், சட்டம் பற்றிய பல்பக்கப் பார்வை, இலங்கையும் நிலைத்திருக்கக்கூடிய சமாதானமும், உலக சமாதானத்தைப் பேணுவதில் ஐக்கிய நாடுகள் சபை, மொழி-பிராந்தியம்-தேசியம்: இலங்கையில் தமிழ்த் தேசியத்தைக் கட்டமைத்தல், இலங்கையின் இன முரண்பாட்டில் தமிழ்நாட்டின் வகிபங்கு, இலங்கையில் தமிழ்த் தேசியவாதம் மற்றும் சிங்களத் தேசியவாதம்: எழுச்சியும் போக்குகளும், சமுதாய மேம்பாட்டில் சமூக அணிதிரட்டலின் பங்கு, பெருந்தோட்டத்துறையில் வறுமை: ஒரு நோக்கு, இலங்கையில் பால்நிலைப் பாகுபாடு, மலையக சிறார்களின் சிறைகளாக பிள்ளைப் பராமரிப்பு நிலையங்கள் ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட கட்டுரைகளும், இனியொரு பொழுது, தீ எரிகின்ற தேசம், வேதனம் மட்டும், விதி வரைந்த பாதை வழியே, செக் பொயின்ற், அவள், முடிச்சுமாறி ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட சில ஆக்க இலக்கியங்களும்*

இம்மலரை அலங்கரிக்கின்றன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 55575).

## 12367

**கல்வியியலாளன்: தொகுதி 01, ஒக்டோபர் 2003.** பரராஜசிங்கம் இராஜேஸ்வரன், நடராசா திருவாசகன் (பிரதம ஆசிரியர்கள்). யாழ்ப்பாணம்: கல்வியியல் வெளியீட்டு நிலையம் (Educational Publication Centre), 257, பலாலி வீதி, கந்தர்மடம், 1வது பதிப்பு, ஐப்பசி 2003. (யாழ்ப்பாணம்: ஸ்மார்ட் பிறிண்டர்ஸ், 717, காங்கெசன்துறை வீதி).

xi, 197+11 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 21.5x15 சமீ.

யாழ்ப்பாணம், கல்வியியல் வெளியீட்டு நிலையத்தின் முதலாவது அணியாகவிருந்து பட்டம்பெற்ற இரு கல்வியியலாளர்களால், கல்வித்துறை சார்ந்தோருக்காக வருடாந்தம் வெளியிடப்படும் ஆய்விதழின் முதலாவது இதழ். இவ்விதழில், கல்வியியல் வெளியீட்டு நிலையம்: தொலைநோக்கு, உளக்குலைவு - மேலைத் தேச உளவியல் அணுகுமுறைகள் அபத்தங்கள் (சபா.ஜெயராசா), எதிர்காலவியல் நோக்கில் கல்விமுறைகள் ஒரு பார்வை (சோ.சந்திரசேகரன்), கனடா நாட்டின் நவீன கல்விச் செல்நெறிகள் கல்விச் சுற்றுலா அனுபவப் பகிர்வு (தி.கமலநாதன்), ஜப்பானிய மாணவர் வாழ்க்கையும் கல்விநெறியும் (மனோன்மணி சண்முகதாஸ்), ஆசிரியரும் வாண்மைத் தகைமையும் சில பரிசீலனைகள் (மா.சின்னத்தம்பி), முன்பள்ளிக் கல்வியும் ஆசிரியர் பயிற்சித் தேவையும் (அனுஷ்யா சத்தியசீலன்), சுதந்திர இலங்கையின் கல்வி வளர்ச்சியில் அரசியல் தலையீடு ஏற்படுத்திய விளைவுகள் (கே.ரீ.கணேசலிங்கம்), இலங்கையில் தொழில் சார்ந்த கல்வியியற் பண்புகள் (தனலட்சுமி வில்வநாதன்), தமிழ் கற்போருக்கு புதிய கருவிநூல் (அ.சண்முகதாஸ்), பரீட்சை காலங்களில் ஏற்படக்கூடிய உடல் உளப் பிரச்சினைகள் (எஸ்.டேமியன்), உளவியல் வளர்ச்சியும் அதன் பயன்பாடும் (நா.ஞானகுமாரன்), கல்வியும் பிள்ளைகளின் வளர்ச்சியும் (எஸ்.ஜே.இராஜநாயகம்), மாணவர் பிரச்சினைகளுக்கான தீர்வுக் களமாக பாடசாலைகளின் உருவாக்கம் (கு. சண்முகதாஸ்), மனித மேம்பாட்டில் கல்வி சார் விழுமியங்கள் (ப.கோபாலகிருஷ்ண ஐயர்), பாடசாலைகளில் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளினூடாக மனித விழுமிய மேம்பாடுகளைக் கற்பித்தல் (ஜெயலட்சுமி இராசநாயகம்), இந்து பாரம்பரியத்தில் அறிக்கைத்திறன் விருத்தி (கலைவாணி இராமநாதன்), ஆரம்பநிலையியல் சுற்றாடல்சார் செயற்பாடுகளை அமுலாக்கும் நுட்பமுறைகள் (ஜெயமலர் தியாகலிங்கம்), போதனாமுறைத் தொழில் நுணுக்கத்தில் ஆக்கபூர்வகற்றலுக்கான சுதந்திர கோட்பாடும் நடைமுறைகளும் (பா.தனபாலன்), பின் நவீனத்துவம்: ஓர் அறிமுகம் (செ.திருநாவுக்கரசு),சுவாமி விபுலானந்தரின் கல்விப்பணி - ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி, கல்வித்துறையினரும் நேர முகாமைத்துவமும் (எஸ்.ஆர்.சத்தியேந்திரா), நியமப் புள்ளி முறையும் பல்கலைக்கழக அனுமதியும் (எஸ்.அறிவழகன்), முன்பள்ளி பிள்ளைகளினுடலியல் பண்புகள் (இ.சிவகுமார்), Use of Audio - Visual Aids in Foreign Language Teaching (S.Rajaram), Pronunciation and Language Teaching (Selvamalar Sivapatham) ஆகிய அக்கங்கள் இடம்பெற்றுள்ளன.

(இந்நூல் நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 014120).

## 12368

**கல்வியியலாளன் ஆய்விதழ்: தொகுதி 04, ஏப்ரல் 2016.** பரராஜசிங்கம் இராஜேஸ்வரன் (பிரதம ஆசிரியர்). யாழ்ப்பாணம்: கல்வியியல் வெளியீட்டு நிலையம் (Educational Publication Centre), 55/3, விளையாட்டு மைதான வீதி, கல்வியங்காடு, 1வது பதிப்பு, ஏப்ரல் 2016. (யாழ்ப்பாணம்: கரிகணன் தனியார் நிறுவனம், இல. 424, காங்கேசன்துறை வீதி).

132 பக்கம், அட்டவணைகள், வரைபடங்கள், விலை: ஆண்டு சந்தா ரூபா 1500., அளவு: 24.5x19 சமீ., ISSN: 1800-1378.

இவ்விதழில், யாழ்ப்பாண மாவட்ட ஆரம்பக் கல்விப் பாடசாலைகளில் 2003ஆம் ஆண்டிலிருந்து சிறுவர் நட்புறவுப் பாடசாலைச் செயற்றிட்டத்தை அமுலாக்கலும் பிரச்சினைகளும் (பா.தனபாலன்), வகுப்பறைச் செயற்பாடுகளுக்கூடாக கற்றல் சாராத தேர்ச்சிகளை வளர்ப்பதில் ஆசிரியர்களின் பங்களிப்பு (சந்திரிகா நாகேந்திரன், ஜெயலட்சுமி இராசநாயகம்), பாடசாலைகளில் தரம் 10,11 இல் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப பாடம் கற்றல்-கற்பித்தலில் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகளும் அவற்றுக்கான தீர்வுகளும் (சுபோதினி திசாகரன், ஆனந்தமயில் நித்திலவர்ணன்), பாடசாலை மட்டத்தில் வழிகாட்டல் ஆலோசனைச் சேவையை வினைத்திறன் மிக்கதாக நடைமுறைப்படுத்துவதில் எதிர்கொள்ளப்படும் பிரச்சினைகள் (ஞானசக்தி கணேசநாதன்), தொழிற்தகைமை பெற்ற ஆசிரியர்களின் கற்பித்தல் உபாயங்கள் (சபாரட்ணம் அதிரதன்), யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள வகை 1 பாடசாலைகளில் கல்விச் செயற்பாடுகளின் தரவுறுதியைப் பேணுவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் (வேல்நாயகம் திருச்சபேசன்), பௌதிகவியல் ஆய்வுகூடச் செயற்பாடுகளை மேற்கொள்வதில் மாணவர்கள் எதிர்கொள்ளும் இடர்பாடுகள் (சின்னத்துரை குகன்), ஈழத்துத் தமிழ்ப் பத்திரிகைகளின் வரலாற்றில் இந்துசாதனம் (சின்னத்தம்பி பத்மராசா), Investigation of students' achievement in Mathemetics in the G.C.E.O/L Examination in Ambagamuva Educational Zone (Sathasivam Amirthalingam), பன்முக நுண்மதி கற்றல் கற்பித்தல் கோட்பாட்டில் தொழில்நுட்பக் கருவிசார் வளங்களின் பங்களிப்பு (சுப்பிரமணியம் பரமானந்தம்) ஆகிய படைப்பாக்கங்கள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 036397).

## 12369

**கல்வியியலாளன் ஆய்விதழ்: தொகுதி 05, ஒக்டோபர் 2016.** பரராஜசிங்கம் இராஜேஸ்வரன் (பிரதம ஆசிரியர்). யாழ்ப்பாணம்: கல்வியியல் வெளியீட்டு நிலையம் (Educational Publication Centre), 55/3, விளையாட்டு மைதான வீதி, கல்வியங்காடு, 1வது பதிப்பு, ஐப்பசி 2016. (அச்சக விபரம் தரப்படவில்லை).

*110 பக்கம், அட்டவணைகள், விலை: ரூபா 500., அளவு: 24.5x19 சமீ.,* ISSN: *1800-1378.*

*வகுப்பறைக் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளின் விருத்தியில் அதிபரின் போதனா தலைமைத்துவம், யா/அச்செழு சைவப்பிரகாசா வித்தியாலயத்தின் மாணவர் இடைவிலகல், கஷ்டப் பிரதேச பாடசாலைகளில் ஆசிரியர் அமர்த்துகை, விஞ்ஞான பாடக் கற்றல்-கற்பித்தல் செயன்முறையில் கல்வித் தொழினுட்ப சாதனங்களின் பிரயோகத்தின் நிலை, திறந்த தொலைக்கல்வி மாணவர்களின் சகபாடிக் கற்றல் அணுகுமுறைகள், தீவகக் கல்விக் கோட்டத்தின் தற்காலக் கல்விநிலை, இரண்டாம் தேசிய மொழி(தமிழ்) கற்பித்தலில் சுயமொழி மற்றும் சுயமொழியல்லா ஆசிரியர்களும் கற்றல் கற்பித்தலின் மீதான ஊக்கலும், முல்லைத்தீவு, வவுனியா பாடசாலைகளில் இலவசக்கல்வி வழங்கலின் சவால்கள், இருமொழி கற்றலில் இடைநிலை ஆசிரியர்கள் மாணவர்கள் எதிர்நோக்கும் வலிவுகளும் சவால்களும்,* Improving Punctuation Skills among the 1st year English prospective teachers of Jaffna National College of Education *ஆகிய பத்து கல்வியியல் சார்ந்த கட்டுரைகள் இவ்விதழில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம்* Pam *8064).*

### 12370

**கலாசுரபி: தூண்டல்-01, துலங்கல்-01.** T.கிருபாகரன், M.கெங்காதரன் *(மலராசிரியர்கள்). யாழ்ப்பாணம்: தேசிய கல்வியியற் கல்லூரி, கோப்பாய், 1வது பதிப்பு, 2001. (யாழ்ப்பாணம்: ஹரிகணன் அச்சகம், 424 ஏ, காங்கேசன்துறை வீதி).*

*(24), 97 பக்கம், புகைப்படத் தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x17.5 சமீ.*

*கோப்பாய் பிரதேசத்தில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி நிர்வாகத்தினரால் தமது 1ஆவது ஆண்டு நினைவாக வெளியிடப்பட்ட முதலாவது ஆண்டிதழ். 02.05.2000 முதல் 30.04.2001 காலகட்டத்தின் முதலாவது பீடாதிபதி அறிக்கையுடன் மலர் தொடங்குகின்றது. கல்லூரியின் மன்றங்கள் தொடர்பான குறிப்புகளுடன் தொடரும் படைப்பாக்கங்களாக கல்வியில் தரக்காப்பீடும் இடர் சிக்கிய மாணவர்களும் (சபா.ஜெயராசா), புதியஆசிரியர் கல்விக் கலாச்சாரமும் யாழ்ப்பாண தேசிய கல்வியியல் கல்லூரியின் தோற்றமும் (பா.தனபாலன்), தேசிய கல்வியியல் கல்லூரிகளின் ஒழுங்கமைப்புகளும் யாழ்ப்பாண தேசிய கல்வியியல் கல்லூரியும் (எஸ். ஆர்.சத்தியேந்திரம்பிள்ளை), பாடசாலை மட்டக் கணிப்பீடு (ஜெ.சந்திரப்பிரகாசம்), இரசாயன பீடைநாசினிகளின் பாவனையின் தாக்கங்களும் அதற்கான மாற்று நடவடிக்கைகளும் (சந்திரிகா நாகேந்திரன்), நம் வாழ்வை வளமாக்கும் கலைகள் (விக்னேஸ்வரி நரேந்திரா), கரகாட்டம் ஒரு கண்ணோட்டம் (ஞானசக்தி கணேசநாதன்), தேன் தமிழ் தேயலாமோ? (கௌரி சுரேசன்), அழகியல் தழுவிய விழுமியங்கள் (க. ரட்ணேஸ்வரன்), பண்டைக்கால இசையும் கூத்தும் (நா.தயாளினி), கணிதக்*

கல்வி விருத்திக்கு உதவும் பள்ளிப் புறச் செயற்பாடு (மயூரதி மயில்வாகனம்), தமிழ் அறநூல்களிலிருந்து கல்வி பற்றிய ஓர் கண்ணோட்டம் (அருள்நாதன் டெய்சி), ஓவியமும் ஜீவியமும் (தேவராஜா பகீரதி), வீணை பேசும் மீட்டும் விரல்களைக் கண்டு (த.சித்ரா), புரியாத புதிரா? (கு.சுரேந்தினி), கற்றல் செயற்பாட்டில் புதிய பரிமாணங்கள் ஓர் அனுபவப் பகிர்வு (நடேசன் இரவீந்திரன்), தட்டிக் கொடுத்தல் (இ.கோகிலஸ்ரீ மாலினி), விலங்குகளின் நடத்தைக் கோலங்கள் (அ.சியாமளரூபன்), உடற்கல்வியும் ஆளுமை விருத்தியும் (டயாளினி இராசநாயகம்), அழகியலும் சில ஆய்வுகளும் (எஸ். சுரேஷ்குமார்), பண்பட்ட கல்வியை புண்படுத்துவதா? (சு.ப.கஜேந்திரன்), பிறப்புரிமையியலில் புதிய சாதனை "குளோனிங்" (சி.சந்திரகுமார்), நடனம் ஓர் தெய்வீகக் கலை (கதிர்காமத்தம்பி குமாரி ஜசந்தினி), உடற்கல்வி மூலம் உளநல விருத்தியும் கடமைகளும் (கிரிஜா கந்தசாமி), பாடசாலை கலைத்திட்ட படிம மலர்ச்சியும் இலங்கையின் புதிய கல்விச் சீர்திருத்தமும் (சுகந்தினி சுப்பிரமணியம்), வளமான எதிர்காலத்திற்கு தரமான ஆரம்பக் கல்வி (இ.இராஜேஸ்வரன்) ஆகிய தமிழ் கட்டுரைகளும், உதயமாவாய் மிலேனியமே, கல்லூரித்தாயே வாழ்க பல்லாண்டு, தூண்டல் வடிக்கும் தூரிகை, உனது புலர்வு, காட்சியும் கவிதையும், சீரிய சிந்தையுடன் சிறகடிப்போம், இதயத்தின் கீதங்கள் ஆகிய கவிதைகளும், The Role of English in Sri Lanka (Selvamalar Sivapatham), Teaching Profession (Dushyanthini Ranganathan), The Aim of Education and the role of a teacher (Sri Vithya Kopalakrishna Iyer) ஆகியஆங்கில ஆக்கங்களும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 040928).

## 12371

**கலாசுரபி: தூண்டல்-02, துலங்கல்-11.** மலர்க்குழு. யாழ்ப்பாணம்: தேசிய கல்வியியற் கல்லூரி, கோப்பாய், 1வது பதிப்பு, 2011. (யாழ்ப்பாணம்: குரு பிரிண்டர்ஸ், 39/2, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி).

ix, 181 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x17.5 சமீ.

கல்லூரியில் ஐந்து வருட பீடாதிபதி சேவையைப் பூர்ததியாக்கும் உயர்திரு எஸ்.கே.யோகநாதன் அவர்களின் சிறப்புமலர். யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி S.K.யோகநாதன் அவர்களின் அறிக்கையுடன் தொடங்கும் இம்மலரில் கற்றல் கற்பித்தல் விருத்தியாக்கமும் நவீன தர மேம்பாடு முகாமைத்துவம் (S.K.யோகநாதன்), சுற்றுலாத்துறையும் சிறுவர் பாலியல் துஸ்பிரயோகங்களும் ஆய்வியல் நோக்கு (டீ.ஜீ.சில்வா), யாழ் மாவட்ட ஆரம்பப் பாடசாலைகளிற் போதனா முகாமைத்துவம் (நிர்மலாதேவி நல்லையா), கற்றல் செயற்பாடுகளில் மாணவர்களுக்கு ஆர்வமூட்டல் (ஞா.கணேசநாதன்), யாழ்ப் பாணம் தேசிய கல்வியற் கல்லூரி பத்தாம் ஆண்டின் நிறைவில் பரிணமிக்கின்றது, இராமு சண்முகம் பேரம்பலம் நாகரத்தினம், கல்விக் காருண்யன் திருமிகு. பேரம்பலம் நாகரட்ணம் அவர்களின் பொதுச் சேவையை பாராட்டி "கல்விக் காருண்யம்" எனும் பட்டத்தினை வழங்கி நிறுவனத்தால் வழங்கப்பட்ட

வாழ்த்துப்பா, "தரம் - 1 மாணவர்களுக்கிடையே உறுப்பமைய எழுதாமல் இடர்படும் மாணவர்களை அந்நிலையிலிருந்து மீட்டெடுத்தல்" (நி.ஷியாமளா மகாலிங்கம்), தேசிய கல்வியியல் கல்லூரிகளின் நிர்வாக நடைமுறையில் பீட்டர் டிரக்கரின் முகாமைத்துவக் கோட்பாடு (க.பாஸ்கரன்), பெற்றோரின் நெருக்கீடுகளும் பிள்ளைகளின் எதிர்பார்ப்புக்களும், கற்றல் கற்பித்தலில் ஞாபகம் (சுகந்தினி அன்ரனி தவச்செல்வம்), "அம்மையே அப்பா": பெற்றோர், இளைஞர், யுவதிகளுக்கான விழிப்புணர்வு நாடகம்- (க.இ.கமலநாதன்), அன்றைய மெஞ்ஞானமும் இன்றைய விஞ்ஞானமும் (த.யோகதர்சினி), ஈழத் தமிழர் பண்பாட்டில் நாட்டாரிசை ஏற்படுத்திய தாக்கங்கள் (வி.நரேந்திரா), மூத்தோர் வார்த்தை கேள் (நடராசா விஜிதரன்), ஆசிரியர் செயற்பாடு சார்ந்த தரக்கணிப்பீடு, இலக்கியங்கள் காலத்தின் கண்ணாடி (கோகிலவாணி சுந்தரலிங்கம்), தீர்மானம் எடுத்தல் நுட்பங்கள் (ஏ.குகன்), சமூக மாற்றமும் ஆசிரியர் வகிபாகமும், ஆசிரியர் என்னும் ஆச்சரியம் (வன்னியசிங்கம் குகானந்தி), கற்றல் கட்டுருவாக்கம் கல்விப்புலம் (M.E.B. மரியதாசன்), அறிவுரை (வி.சுதாஜினி), நாடகம் எனும் எண்ணக்கருவும், செய்கையும் செய்கைக்கான பின்புலமும் (க. திலகநாதன்), ரூசோவின் கல்வி தத்துவம் இலங்கையின் கல்வி அமைப்பில் ஏற்படுத்திய தாக்கம் (ஜானகி தர்மசீலன்), 11ம் அகவை காணும் எங்கள் ஆலமரம், தொலைக்காட்சி (நிவேதிக்கா), இன்றைய கல்வி அறிவை மாத்திரமின்றி திறனையும் வேண்டி நிற்கின்றது (நிஷாந்தினி விஜயசிங்கம்), கற்றலும் ஞாபகத்திறனும்... (எஸ்.மேரி கிறிஸ்டினா), யாழ்ப்பாண மாவட்ட ஆரம்பப் பாடசாலைகளில் 2003ஆம் ஆண்டின் கல்விச் சீர்திருத்தங்களை அமுலாக்குகையில் எதிர்கொள்ளப்படும் பிரச்சினைகள் ஆகிய படைப்புக்கள் மாணவ ஆசிரியர்களாலும், விரிவுரையாளர் களாலும் எழுதிச் சேர்க்கப்பட்டுள்ளன. (இந்நூல் நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 014338).

### 12372

**கலாசுரபி: தூண்டல்-02, துலங்கல்-12.** மலர்க்குழு. யாழ்ப்பாணம்: தேசிய கல்வியியற் கல்லூரி, கோப்பாய், 1வது பதிப்பு, 2012. (யாழ்ப்பாணம்: குரு பிரிண்டர்ஸ், 39/2, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி).

ix, 140 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x17.5 சமீ.

கல்லூரி கீதம், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி S.K.யோகநாதன் அவர்களின் அறிக்கை, யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி ஆரம்பித்த காலத்திலிருந்து பயிற்சி பெற்று வெளியேறிய முகிழ்நிலை ஆசிரியர்கள் விபரம் ஆகிய ஆரம்ப அறிக்கைகளைத் தொடர்ந்து, ஆசிரியர் கல்வியிலிருந்து ஆசிரியர் அபிவிருத்தி நோக்கிய செயலாற்றுகைகள் (S.K.யோகநாதன்), அதிபரின் வேலைப்பகிர்வும் ஆசிரியரின் ஊக்குவிப்பும் (S.அமிர்தலிங்கம்), பாடசாலையில் மாணவர்கள் கற்றலின் தாக்கத்தினை ஏற்படுத்தும் நெறிபிறழ்வுச் செயற்பாடுகள் (ஜெயமலர் தியாகலிங்கம்), தொடர்பாடல் (மேடை நாடகம்) (த.திலகநாதன்), விசேட தேவையுடைய பிள்ளைகளினதும் விசேட சூழலில் வைக்கப்பட்ட

பிள்ளைகளினதும் உரிமைகள் (த.சிவகுமார்), இனிதாய் வாழ்வோம் (க.இ.கமலநாதன்), UNESCO Strategy on Teachers (2012 - 2015), இலங்கையில் கட்டாயக் கல்வி (B.பாலகணேசன்), ஆசிரியத்துவத்தின் வெற்றிக்கு பங்களிப்பு செய்வதில் முக்கியத்துவம் பெறும் பிள்ளை வளர்ச்சியும் அதன் பருவங்களும் (ஜானகி தர்மசீலன்), பேராசான் கலாகீர்த்தி பேராசிரியர் சி.தில்லைநாதன் அவர்களின் பணிகளின் பயன்கள் : பவள விழா நினைவுக்கட்டுரை (முருகேசு கௌரிகாந்தன்), பாடசாலை மாணவர்களிடையே மிருது திறன்களை விருத்தி செய்வதன் முக்கியத்துவம் (க. பஸ்கரன்), யாழ்ப்பாணக் கோட்டையில் போர்த்துக்கேயர் காலத்துக்கு முற்பட்ட இந்து ஆலயங்களின் சிதைவுகள் (நடேசபிள்ளை ஞானவேல்), சிறுநீரகங்களுக்கு ஓய்வளிக்காதீர்கள், சூழல் மாசடைதல், கையடக்கத் தொலைபேசியால் பாதிப்பு, விஞ்ஞானத்தின் விந்தை, கல்லூரி வசந்தம், பாடசாலையில் நடனக்கலை, Youth Unrest, இலக்கு எம் வாழ்வின் உயிரோட்டம் (பா.தமிழினி), ஆசிரியம் (ஆன் அன்ரனி கணேஸ்), கல்வி (நாகராசா பத்மராஜ்), பரத நாட்டியத்தில் நட்டுவாங்கமும் அதன் நுட்பவியலும் (புவனேந்திரன் கோபிநாத்), இஸ்லாத்தின் பார்வையில் கல்வியின் முக்கியத்துவம் ஆகிய ஆசிரிய மாணவர்களின் ஆக்கங்கள் இம்மலரில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 014341).

### 12373

**கலாசுரபி: தூண்டல்-02, துலங்கல்-13.** மலர்க்குழு. யாழ்ப்பாணம்: தேசிய கல்வியியற் கல்லூரி, கோப்பாய், 1வது பதிப்பு, 2013. (யாழ்ப்பாணம்: குரு பிரிண்டர்ஸ், 39/2, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி).

ix, 171 பக்கம், 12 புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x17.5 சமீ.

கோப்பாய் பிரதேசத்தில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல் லூரி நிர்வாகத்தினரால் 13ஆவதுஆண்டாக வெளியிடப்படும் ஆண்டிதழ். ஆசிரியர் தொழில்வாண்மை விருத்தியில் அதிபரின் வகிபாகம், நட்புக்கொள்ள வைப்பதற்கான விதிகள், சமூக ஒருங்கிசைவு நோக்கி கல்வியை முகப்படுத்தல், ஆசிரிய வாண்மைத்துவம் சமகால எதிர்பார்ப்புகளும் வாய்ப்புகளும், வருக வண்ண அமிர்தமே வளர்க வளமிகு மகுடமே, நூற்றாண்டு காணும் பண்டிதர், பேராசிரியர், டாக்டர் கா.பொ.இரத்தினம் அவர்களின் வாழ்வும் பணிகளும், கல்லூரிக் காலங்கள், தமிழ் மரபில் மாணவர் ஒழுக்க விழுமியங்கள், ஆசிரியரும் தலைமைத்துவமும், வகுப்பறைக் கற்றல்-கற்பித்தலில் ஊக்கல் உபாயங்கள், நனோ தொழில்நுட்பமும் வளர்ச்சியும், விசேட கல்வி அலகின் நோக்கங்களும் முக்கியத்துவமும் பயன்பாடும், பெரியோர் சொற்கேட்போன் (சிறுவர் நாடகம்), மாணவர் உளநலம் பேணுதல் அணுகுமுறை, உட்படுத்தல் கல்வியும் பிரயோகங்களும், நித்தமும் கைதொழுவேன், மனிதம், சினத்தின் குணம், ஈழத்தமிழர் பிரச்சினைக்குப் புலம்பெயர்தல் தீர்வாகுமா?, தகவல் தொழில்நுட்பம் பற்றிய அடிப்படை எண்ணக்கருத்துக்கள், தற்காலத்தில் பன்மொழியாற்றலின்

தேவை, தாயே, மகத்தான பணியின் பயன், கைத்தொலைபேசி சில ஆபத்துக்கள், தமிழின் மகத்துவம், ஈஸ்டர்தீவு சிலைகளின் இரகசியம், நம்பிக்கை என்னும் சக்கரமே வாழ்க்கை, என் பெயர் என்ன? (கதை), எதிர்கால தலைமையை ஏற்கும் இளம் சமுதாயத்தவர்கள் கொண்டிருக்கவேண்டிய குணநலவியல்புகள், முகாமைத்துவ விஞ்ஞான அணுகுமுறை, கல்லூரி தோழியே உனக்கு என் நட்பின் வரிகள், இணையம் பற்றிய தகவல்கள், கல்லூரிச் சாலையிலே, அன்னையர் தினத்தின் ஆரம்பம், காத்திருப்புகளோடு, ஆதிமூலத்தின் ஓவிய வெளிப்பாடு, பாடசாலையும் வழிகாட்டல் ஆலோசனையும், அழுத்தங்கள் நிறைந்த பிரதேசத்தில் கற்பிக்கும் ஆசிரியர்களும் உளப்பாங்கும், வெற்றிகரமான வகுப்பறைக் கற்றல் கற்பித்தலில் ஆசிரியரின் வகிபாகம், சந்நிதியும் எம் சந்ததியும், சிறுவர் நட்புறவுப் பாடசாலை, இலங்கையில் ஆசிரியர் கல்வியை வழங்குவதில் தேசிய கல்வியியற் கல்லூரிகளின் வகிபாகம் ஆகிய படைப்பாக்கங்களுடன் கல்லூரியின் பல்வேறு மன்றங்களின் ஆண்டறிக்கைகளும் இம்மலரில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 54647).

### 12374

**கலைச்செல்வி: 1974**. க.கனகசிங்கம், செல்வி வ.மாரிமுத்து (இணையாசிரியர்கள்), மு.இரத்தினம், செல்வி ஜீ.வடிவேல் (துணையாசிரியர்கள்). மட்டக்களப்பு: கலைச்செல்விக் குழு, முத்தமிழ் மன்றம், அரசினர் ஆசிரியர் கலாசாலை, 1வது பதிப்பு, 1974. (மட்டக்களப்பு: கத்தோலிக்க அச்சகம், இல.18, மத்திய வீதி).

(18), 64 பக்கம், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x19.5 சமீ.

ஈ.சி.வேலாயுதபிள்ளை அவர்கள் அதிபராகவிருந்த காலகட்டத்தில் வெளியிடப்பட்ட சிறப்பு மலர் இது. தமிழ்த் தெய்வ வணக்கம் (மனோன்மணியம்), கலாசாலை வாழ்த்துப்பா, மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் கலாசாலை: கலைச்செல்விக் குழு 1974இன் அறிக்கை, அதிபர் ஈ.சி.வேலாயுதபிள்ளை அவர்களின் ஆசியுரை ஆகியவற்றுடன் அறிஞர்கள், ஆசிரியர்கள், ஆசிரிய-மாணவர்களின் படைப்புகளை உள்வாங்கியதாக இம்மலர் வெளிவந்துள்ளது. கல்வியின் வரையறை (வி. ஆறுமுகம்), புதிய பாடத்திட்டமும் இடைநிலைப் பருவக் கல்வியும் (சோ. செல்வநாயகம்), நமது கல்விமுறையும் சமுதாயமும் (சி.சிவசேகரம்), நல்லவை செய்வோம் (க.கனகசிங்கம்), ஆரம்பக் கல்வியின் இசையும் அசைவும் (செல்வி பாலேஸ்வரி செல்லத்தம்பி), இலங்கைத் தமிழ்த் திரைப்படங்கள் (தம்பிஐயா தேவதாஸ்), வளம் பெறுவோம் (இ.சின்னு), நீங்காத நினைவுகள் (மு.சம்பந்தர்), அன்புடைய காதலிக்கு (வே.தங்கராசா), ஊமை நினைவுகள் (மு.இரத்தினம்), உள்ளத்தால் பொய்யா தொழுகின்... (மண்டூர் எஸ்.தில்லைநாதன்), சூழற் றொழிற்பாடு (பொன்.சிவாநந்தன்), குந்தியின் மடியில் கர்ணன் ஓரங்க நாடகம் (ஐ.சிவசுந்தரம்), கவனம் (கு.செல்வேந்திரத் தேவர்), வாணி விழாவில் பாடப்பட்ட கவிதை (இர.ரெங்கராஜன்), The Teacher of English Language and His Easy Approach to it (M.Arumugam), இலங்கை கல்வி வரலாறு (திருமதி அ.வேலாயுதம்) ஆகிய கட்டுரைகள் இம்மலரை அலங்கரிக்கின்றன. இறுதிப்பகுதியில் சைவ மன்ற

ஆண்டறிக்கை 1974 (த. மனோகரராஜா), கிறிஸ்தவ மாணவ மன்ற அறிக்கை (கே.ஜீ.அருளானந்தம்), எமது சாரணர் படையின் ஆண்டறிக்கை 1974 (A.ஜோசப்), தமிழ் இலக்கிய மன்ற அறிக்கை 1974 (வே.தங்கராசா), கல்விக் கழக ஆண்டு அறிக்கை 1974 (வே. ஹரிதாஸ்), கணித விஞ்ஞானக் கழக ஆண்டறிக்கை 1974 (கே.ஜீ. அருளானந்தம்), விவசாய விஞ்ஞான கழக அறிக்கை (கே.சுப்பையா), அரசினர் ஆசிரிய கலாசாலை மட்டக்களப்பு (எஸ்.கனகமூர்த்தி), வருடாந்த இல்ல மெய்வல்லுநர்ப் போட்டி 1974, போட்டி முடிவுகள், அரசினர் ஆசிரிய கல்லூரி மட்டக்களப்பு, 1974ம் ஆண்டு பயிற்சி முடிந்து வெளியேறுவோர் ஆகிய விபரங்கள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 007638).

## 12375

**கலைச்செல்வி: 1986.** சீ.இராசலிங்கம், திருமதி து.தமயந்தி (இணையாசிரியர்கள்), செல்வி அருள்மணி சுப்பிரமணியம், து.இராதாகிருஷ்ணன் (துணையாசிரியர்கள்). மட்டக்களப்பு: கலைச்செல்விக் குழு, முத்தமிழ் மன்றம், அரசினர் ஆசிரியர் கலாசாலை, 1வது பதிப்பு, 1986. (மட்டக்களப்பு: சென்.செபஸ்தியன் பிரஸ், இல. 65, லேடி மனிங் டிரைவ்).

(92) பக்கம், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x18 சமீ.

க.கனகசூரியம் அவர்கள் அதிபராகவிருந்த காலகட்டத்தில் வெளியிடப்பட்ட சிறப்பு மலர் இது. தமிழ்த் தெய்வ வணக்கம் (மனோன்மணியம்), கலாசாலை வாழ்த்துப்பா, மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் கலாசாலை: கலைச்செல்விக் குழு 1986இன் அறிக்கை, பல்வேறு மன்ற அறிக்கைகள், அதிபர் ஆசியுரை ஆகியவற்றுடன் அறிஞர்கள், ஆசிரியர்கள், ஆசிரிய-மாணவர்களின் படைப்புகளையும் உள்வாங்கியதாக இம்மலர் வெளிவந்துள்ளது. அன்பெனும் அமுதம் (செல்வி அருள்மணி சுப்பிரமணியம்), சேனையுள் யானைக்கூட்டம் (ச.இந்திரநாதன்), வாழ்க்கை (என்.முத்துக்குமார்), இன்பம் பொங்கட்டும் இளைஞர் வாழ்வினிலே (இ.சங்கரப்பிள்ளை), மனமே உனக்கொரு வார்த்தை (திமிலைத்துமிலன்), ஏன்? (திருமதி விமலா சிவராமமூர்த்தி), பண்பான வாழ்வு (செல்வி அன்னபாக்கியம்), சூழல் (சா.மகாலிங்கம்) ஆகிய கவிதைகளும், ஒரு பிஞ்சின் உதிர்வு (செல்வி வ.மீனாம்பிகை), நியதிகள் நிலைமாறினால் (செல்வி நடராஜா யோகேஸ்வரி), அவளுக்கும் அதே கதி (திருமதி யோ. செல்வராஜா) ஆகிய சிறுகதைகளும், காலத்தைக் கணிக்கும் கருவிகள் (ஆர்.வெஸ்லஸ் வாஸ்), இலங்கையில் கலாயோகி ஆனந்த குமாரசுவாமி (வீ.இராசையா), மேதைகளுக்கான அடித்தளம் ஆரம்பக்கல்வி (வ.கனகசிங்கம்), பாலர் வகுப்பிலே பிரவேசிக்கும் பிள்ளையிடம் காணக்கூடிய நடத்தைக் கோலங்கள் (திருமதி அ.லோறன்ஸ்), நேரத்திற்கெதிராக (த.டே.பத்மகைலநாதன்), சித்திர இனங்கள்: சிறாரின் சித்திரம் (எம்.எஸ்.ஏ.அசீஸ்), பாரதியும் தமிழும் (செல்வி ஆர். பாரததேவி), நல்லாசிரியனும் மாணவரும் (திருமதி ரஜனி சிறீகரன்), கல்வி (செல்வி க.திலகவதி), பாலியல் கல்வி மாணவர்களுக்கு அவசியமா? (சி.இராசலிங்கம்), நீங்களும் உங்கள் நுண்ணறிவும் (மு.பரஞ்சோதி), பயம்-மனிதன்-விடுதலை (செல்வி ஜே.ஜெயராணி),

கணனி ஒரு புதிய காலன் (ஜீ.வீ.அமல்ராஜ்) ஆகிய கட்டுரைகளும் இம்மலரை அலங்கரித்துள்ளன. (இந்நூல் நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 014440).

## 12376

**கலைச்செல்வி: 1997**. ந.இராஜு (இதழாசிரியர்). மட்டக்களப்பு: முத்தமிழ் மன்றம், அரசினர் ஆசிரியர் கலாசாலை, 1வது பதிப்பு, 1997. (மட்டக்களப்பு: ஈஸ்ரன் கிராப்பிக்ஸ், 205/2, பார் வீதி).

xvi, 118 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x19.5 சமீ.

மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் 1997ம் ஆண்டுக்குரிய சிறப்பு மலர். தோத்திரித்துக் காண்போம் சுகம், நூற்றாண்டு விழாக்காணும் ஞானச் சுடர் விளக்கு, எட்டுப் பேறுகள், சரஸ்வதி தேவிக்குச் சமர்ப்பணம், பெற்றோரும் குழந்தைகளும், வேளறுவோ வேறுளவோ, பொன்னுலகம் பூக்காதோ, மொழி கற்பித்தல், வாசற்படி, 40 நிமிட பாடக்குறிப்பின் அவசியம், பல்லியே சொல்லு பலன், விடுதலைக்கான கல்வி, அன்புக்கோர் அன்னை தெரேசா, மட்டக்களப்பு கோயில்களில் வளர்ந்த நுண்கலைகள், அணில்வால் ஒரு விழுமிய நோக்கு, கற்றலும் கற்பித்தலும், ஏய் நாய் வால்களே, இன்றைய அவலங்கள், மன்ற அறிக்கைகள், நலம் வாழ வாழ்த்துகிறேன், ஆலய தரிசன விதிமுறைகள், மாணவனாக அல்ல, இன்றைய நிலையில் சிறுவர் விபச்சாரம், இலங்கைக் கல்வி வளங்களின் வீண் விரயங்கள், கணிதத்தில் பண்டைய எண்குறி முறைகள், கர்நாடக இசையுலகில் வயலின் வாத்தியம், நீர்வளம் பேணி நிலவளம் காப்போம், சரித்திரத்தில் நீ ஒரு வரப்பிரகாஷ், சிங்கராஜ வனம், இலங்கை கல்விமுறை அவுஸ்திரெலியா கல்விமுறை ஒப்பீடு, கணிதத்துறையில் அல்பெட் ஐன்ஸ்டைன், பொன்விழாவில் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டோர்,ஆசிரியர் மாணவர் விபரம், நன்றி நவிலல் ஆகிய 35 ஆக்கங்களை இம்மலர் உள்ளடக்கியுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 23294).

## 12377

**கூர்மதி (மலர் 1): 2003**. என்.நடராஜா (பதிப்பாசிரியர்), எஸ்.சிவநிர்த்தானந்தா (உதவி ஆசிரியர்). பத்தரமுல்ல: தமிழ் மொழிப் பிரிவு, மனிதவள அபிவிருத்தி, கல்வி, பண்பாட்டு அலுவல்கள் அமைச்சு, இசுருபாய, 1வது பதிப்பு, 2003. (கொழும்பு 12: கிறிப்ஸ் பிரின்டேர்ஸ் பிரைவேற் லிமிட்டெட், 162, டாம் வீதி).

136 பக்கம், அட்டவணைகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 30x21 சமீ.

கல்வி அமைச்சின் தமிழ் மொழி அலகு ஆண்டுதோறும் வெளியிடும் இம்மலரில் பல்வேறு கல்வியியலாளர்களால் எழுதப்பட்ட பல்துறைசார் கட்டுரைகள், ஆக்க இலக்கியங்கள் என்பன இடம்பெற்றுள்ளன. கற்றல்-கற்பித்தல் முறையில் பன்முக நுண்மதி (உ.நவரட்ணம்), எனது நாடு இலங்கை (எம்.யசோகீர்த்தனா), திருமுறை

களில் இலக்கிய நெறி (அ.சண்முகதாஸ்), மலேசியத் தமிழ் இலக்கியத்தில் நாளிதழ் (எஸ்.குமரன்), கர்நாடக சங்கீதத்தின் பொற்காலம் (மீரா வில்லவராயர்), வாழ்க்கை வாழ்த்தும் (அதிஸ்டப்பிரதா தர்மலிங்கம்), விளைதிறன் கற்றலுக்கான கற்பித்தல் முறை (து.இராஜேந்திரம்), மலையகக் கல்வி அபிவிருத்தி: சில முன்மொழிவுகள் (தை.தனராஜ்), சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்போம் (ந.குருசாந்), நாடே செழித்திடுமாம் நன்று (தமிழோவியன்), தமிழ் இலக்கிய வளர்ச்சியில் வெகுசனத் தொடர்பு சாதனங்கள் (எஸ்.சிவநிர்த்தானந்தா), மாணவ மணிக்கு (த.சுந்தரலிங்கம்), இலங்கையை சிறப்பு நோக்காகக் கொண்டு வயது முதிர்வு (ஆர்.சிறீகாந்தன்), பட்டினத்தடிகள் அருளிச்செய்த திருப்பாடல்கள் (க.அருணாசலம்), மலையகத்தின் மாறாத அவலம் (காயத்ரி அருணாசலம்), விபுலாநந்த அடிகளாரின் தமிழ் உரைநடைப் பாணி (என்.நடராஜா), நடுத்தர வர்க்கம் (எம்எல்.இஸட் கயிர்), தேடல் (லெனின் மதிவானம்), முகில் விடு தூது (தான்தோன்றிக் கவிராயர்), ஆசிரிய சேவையின் புதிய பரிமாணங்கள் (தம்பிப்பிள்ளை முத்துக்குமாரசாமி), அனைவருக்கும் அடிப்படைக் கல்வி (முத்து சிவஞானம்), சூழற் கல்வியும் எதிர்கால இளந்தலைமுறையினரும் (மனோன்மணி சண்முகதாஸ்), எங்கள் விழிநேர் தாயகம் (செ.சிவானந்ததேவன்), நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் (ந.கணேசலிங்கம்), பாரதியின் மேதாவிலாசம் (எம்.ஏ.நுஃமான்), பெருந்தோட்டப் பாடசாலைகளும் கல்விச் சீர்திருத்தமும் (ம.சபாரஞ்சன்), ஏங்குதே ஏழை நெஞ்சு (பொத்துவில் அஸ்மின் உதுமாலெவ்வை), சமகால கணித ஆசிரியர் ஆற்றுகை (சி.பவனேஸ்வரன்), இன்றைய கல்விநிலை மீது ஒரு மேலோட்டமான பார்வை (எஸ்.ஜெயக்குமார்), நாட்டாரிலக்கியம் ஒரு அறிமுகம் (வல்வை. ந.அனந்தராஜ்), இ.சிவானந்தனின் கவிதைகள் (க.அருணாசலம்), உலக பாடசாலை நூலக நாளும் பாடசாலை நூலகங்களும் (ச.ஜேசுநேசன்) ஆகிய தலைப்புகளில் இக்கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 33996, 56397).

## 12378

**கூர்மதி (மலர் 2): 2004**. என்.நடராஜா (பதிப்பாசிரியர்), எஸ்.சிவநிர்த்தானந்தா (உதவி ஆசிரியர்). பத்தரமுல்ல: தமிழ் மொழி அலகு, கல்வி அமைச்சு, இசுறுபாய, 1வது பதிப்பு, 2004. (கொழும்பு 8: அரசாங்க அச்சுத் திணைக்களம்).

xx, 309 பக்கம், அட்டவணைகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 30x21 சமீ.

தமிழ் மொழி வழி கல்வி கற்கும் மாணவர்கள் தமிழ்மொழி இலக்கியம் சாராப் பாடங்களைப் பயில்வதற்குப் பெற்றிருக்க வேண்டிய அடிப்படை மொழித் தேர்ச்சியும். அறிவும்: இதற்கான கற்பித்தல் முறைமை பற்றிய ஒரு குறிப்பு (கா. சிவத்தம்பி), கிறிஸ்தவத் தமிழ் இலக்கிய வளர்ச்சி (அ.சண்முகதாஸ்), விபுலானந்தர் முதல் வித்தியானந்தன் வரை (எஸ்.சிவலிங்கராஜா), கடலாடுகாதை - ஒரு வாழ்வியல் திருப்புமுனை (மனோன்மணி சண்முகதாஸ்), புறநானூற்றில் புலவர் களும் புரவலர்களும் (கி.விசாகரூபன்), யாவருக்கும் கல்வி (முத்து சிவஞானம்), இராகங்களும் உணர்வுகளும் (மீரா வில்லவராயர்), சித்தர் பாடல்கள்: ஒரு நோக்கு

(ந.சிதம்பரநாதன்), எண்பதுகளில் ஈழத்து நாவல்கள் (செ.யோகராசா), கடிதம் எழுதும் கலை (குமாரசாமி சோமசுந்தரம்), ஊழியர்களை ஊக்கப்படுத்தல் Motivation of employees (க.தேவராஜா), மூன்றாம் உலகின் கைத்தொழில் மயமாக்கம் (ஆர்.சிறீகாந்தன்), சமப்பாட்டுப் புள்ளிப் பகுப்பாய்வும் அதன் பிரயோகங்களும் (Break - even analysis and its applications) (ஆர்.யோகராஜா), வாழ்வாங்கு வாழ் வழிகாட்டும் இலக்கியம் (புலவர்மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளை), முயற்சியாண்மைக் கலாசாரம் (வி.ஈஸ்வரன்), ஈழத்தில் அறிவியல் இலக்கிய வளர்ச்சி (செல்வரஞ்சிதம் சிவசுப்பிரமணியம்), சைவத்திருமுறைகள் பக்தி இலக்கியங்களுட் பெறும் முக்கியத்துவம்: தமிழ் இலக்கிய வரலாற்று நோக்கு (கனகசபாபதி நாகேஸ்வரன்), ஈழத்தில் ஆரம்பகாலத் தமிழ் நாவல்களின் பண்புகளும் அவற்றை நிர்ணயித்த காரணிகளும் (புண்ணியேஸ்வரி நாகலிங்கம்), ஈழத்துச் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும்: ஒரு மதிப்பீடு (வல்வை ந.அனந்தராஜ்), கலை -அது காலத்தின் கண்ணாடி (செ.சிவப்பிரகாசம்), மனிதன் உலகம் (ஏ.இக்பால்), வேம்பு (கனகசபை தேவகடாட்சம்), ஆய்வுச் செயன்முறையில் நூலக ஆய்வின் பயன்பாடுகள் (ப.மு.நவாஸ்தீன்), உடைந்த இராமர் சிலைக்குள் உற்பத்தியான தெய்வீகம் (நடராஜா கணேசலிங்கம்), யாவரும் கற்றலிலும் கற்பித்தலிலும் பாடசாலை நூலகங்கள் (ச.ஜேசுநேசன்), என்தமிழே என்ன சொல்லி உனைப்பாட.... (எஸ். சிவநிர்த்தானந்தா), ராமன் எத்தனை ராமனடி (ஜி.தெய்வேந்திரராசா), சிறுகதை: தெளிவு (திக்குவல்லை கமால்), ஆசிரியர்களின் கற்கும் கற்பிக்கும் சுதந்திரம் (சி. சரவணபவானந்தன்), மலையகம் என்ற பின்புலத்தில் கைலாசபதி என்ற மனிதர் (லெனின் மதிவானம்), யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்.... (ஜின்னாஹ் சரிபுத்தீன்), கோவலன் வீழ்ச்சிக்கு வித்திட்டது ஊழ்வினையா? அவன் உள்ளத் தடுமாற்றமா? (செல்வராணி வேதநாயகம்), விதி (மண்டூர் மீனா), மட்டக்களப்புக் கிராமியக் கவிகள் (எஸ்.கிருஸ்ணபிள்ளை), அருமையான படைப்பு "அழகின் சிரிப்பு" (தமிழோவியன்), கற்றலின் ஆயத்த நிலை (கு.சதாசிவமூர்த்தி), கூர்மதியே எங்கள் கூர்மதியே.... (க.யோகானந்தன்), ஈழத்து தேவாரத் திருப்பதிகங்கள் காட்டும் இயற்கை அழகும் இறை மகத்துவமும் (நடேசபிள்ளை ஞானவேல்), கரையில்லாக் கடல் (எம்.எம்.ஏ.ஸமட்), கிழக்கினில் தோன்றிய முத்தமிழ் வித்தகர் (செ.சிவானந்ததேவன்), அபிவிருத்திப் பொருளியல் (மாணிக்கம் லோகசிங்கம்), தமிழ் இலக்கியமும் சித்தர்களும்: சிருஷ்டி (என்.ஆர்.மகேந்திரன்), நல்லாசிரியத் தொழில் (எஸ்.சபாரெத்தினம்), பல்லவர்கால பக்தி நெறி (சுலோசனா சகாதேவன்), இப்சன் காட்டும் நோறா (வனிதா சுரேஸ்), வகுப்பறைகளில் பன்முக வாசிப்பு (பெ.பேரின்பராஜா), தமிழ் ஐந்திலக்கண மரபு (க.குணசேகரம்), பழைமைக்கும் புதுமைக்கும் பாலமமைத்த கவிஞன் ஏ.பெரியதம்பிப்பிள்ளை (கி.சண்முகநாதன்), கல்விச் செல்வம் (வாசுகி குணரத்தினம்), பரதநாட்டியத்தில் இசையின் பங்கு (குணரத்தினம் பாரதி), வளராய் உயிரே (இரா.கிருஷ்ணபிள்ளை), கனவுகளே கனவுகளே..... (ஆ.அரசரெத்தினம்), மட்டக்களப்பில் பாடும் மீன்கள்: பாடுவது மீன்களா அல்லது....? (நிலக்ஷன் மாணிக்கவாசகர்), விஞ்ஞானத்தின் விந்தைகள் (சுபாங்கி விமலநாதன்), குறுந்தொகையில் தோழி (தனபாலன் சிவரூபி), சூழல் மாசடைதல் (எம்.எவ்.எவ்.அரபா), விற்றமின் "ஏ" வாழ்வின் ஒளி (த.உஷா),

*இந்து மதமும் இதிகாசங்களும் (ந.குருசாந்), மடாலயங்களும் ஆதீனங்களும் ஆற்றிய பணிகள் (ம.குந்தவி), ஹைக்கூ (ந.ஹம்சினி), உறவுப்பாலம்...... (G.K.மேகலா), அவலத்தின் கொடூரம் (வேலாயுதபிள்ளை சுபிதா), விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் (சஜிக்ஷா விநாயகமூர்த்தி), நட்பின் பிரிவின் நாளன்று...... (எம்.எஸ்.கவிதா), எ.எம்.எ.அஸீஸ் (எம்.எவ்.எவ்.றில்வானா), வாழ்வை வளமாக்கித்தர தகுந்த பல திறன்களைக் கற்பிக்கும் வாழ்க்கைத்திறன் எனும் பாடமும் அதன் அவசியமும் (எம்.எம்.எம்.பயாஸ் அஹமத்), புலம்பெயர்வும் தமிழனும் (சீ.காஞ்சனா), கிரிக்கெட் - சந்தோக்ஷ் (தமிழினியன் ஜேசுநேசன்), அறிவியல் வளர்ச்சி (ஆர்.சிவசங்கர்), 2ம் உலகப் போரில் ஜப்பானும் அமெரிக்காவும் (அ.மு.ராபி), சிலவேளை இப்படி நடக்கலாம்?..... (இரா.யோகேஸ்வரன்), அந்த நாளினிலே.... (ஜெ.எம்.ஹிஜாஸ்), கவிக்கோ அப்துல் ரஹ்மான் (ஏ.எம். முர்க்ஷிடா) ஆகிய ஆக்கங்களை இவ்விதழ் உள்ளடக்குகின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 36236. நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தின் சேர்க்கை இலக்கம் 008456).*

## 12379

**கூர்மதி (மலர் 3): 2005**. *எஸ்.சிவநிர்த்தானந்தா (பதிப்பாசிரியர்), திருமதி ஜீ. தெய்வேந்திரராசா, பி.இராசையா (உதவிப் பதிப்பாசிரியர்கள்). பத்தரமுல்ல: தமிழ் மொழி அலகு, கல்வி அமைச்சு, இசுறுபாய, 1வது பதிப்பு, 2005. (கொழும்பு: தீபானி பிரின்டர்ஸ் பிரைவேட் லிமிட்டெட், நுகேகொடை).*

xviii, *260 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 30x21 சமீ.*

*கல்விப் பொதுத் தராதர உயர் மட்டப் பரீட்சையில் தமிழ்ப் பாடத்துக்கு வேண்டும் அறிவாழமும் அதற்கான பாடத்திட்டமும் (கார்த்திகேசு சிவத்தம்பி), தமிழகத்தில் பக்தி இயக்கம்: தோற்றமும் வளர்ச்சியும் (அ.சண்முகதாஸ்), அபிவிருத்தி அடைந்த நாடுகளும் இலங்கை பொருளாதாரத்தில் அவற்றின் பங்களிப்பும் (வி. நித்தியானந்தன்), தமிழ்த் திறனாய்வு மரபு உருவாக்கம் பேராசிரியர் ச.வையாபுரிப் பிள்ளையின் வகிபாகம் (வீ.அரசு), தமிழ் மக்களின் வாழ்வியலிற் பனை (எஸ். சிவலிங்கராஜா), செம்மையின் திருவடித்தலம் (மனோன்மணி சண்முகதாஸ்), தலைவன் தலைவி பாவ தமிழ்ப் பதிகங்களும் பதங்களும் (சுபாஷிணி பார்த்தசாரதி), கம்பன் என்றொரு மகாகவி (துரை.மனோகரன்), ஈழத்தில் தமிழ் நாவல்: தோற்றமும் தொடர்ச்சியும் (மயில்வாகனம் இரகுநாதன்), சுவாமி விபுலானாந்தரது ஆய்வறிவுப்புலம் (வ.மகேஸ்வரன்), 21ம் நூற்றாண்டில் இசை உலகில் பெண்மணிகள் (டி.கே.பட்டம்மாள், எம்.ஏ.பாகீரதி), மொழிபெயர்ப்பு (செல்வரஞ்சிதம் சிவசுப்பிரமணியம்), மட்டக்களப்பில் சிதைந்து வழங்கும் தமிழ்ச்சொற்கள் (புலவர்மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளை), சான்றோர் பலர் யான் வாழும் ஊரே (தங்கம்மா அப்பாக்குட்டி), பாதீட்டுக் கட்டுப்பாடு (ரதிராணி யோகேந்திரராஜா), ஆலயங்களில் இசை (மீரா வில்லவராயர்), மொழித் தேர்ச்சிக்கு வாசிப்பின் அவசியம் (புண்ணியேஸ்வரி நாகலிங்கம்), இலங்கைப் பல்கலைக்கழகம்: ஓர் வரலாற்று நோக்கு (எப்.எம்.நவாஸ்தீன்), இலங்கையின் பொருளாதாரத்தில் எண்ணெய் விலையதிகரிப்பின் தாக்கங்கள் (சிவசுப்பிரமணியம் சிவநேசன்),*

பாலைவனத்தில் ஒரு பசுந்தரை: ஜீலியஸ் பூசிக்கின் "தூக்கு மேடைக்குறிப்பு" (லெனின் மதிவானம்), புற்றுநோயையும் வெற்றி கொள்ளலாம் (சிவப்பிரகாசம் அனுஷ்யந்தன்), சூழல் பாதுகாப்பும், வீடுகள் / கட்டடத்தொகுதிகளில் இருந்து கழிவு நீர் சேகரித்தலும் வெளியகற்றுவதும் (சி.ரவிச்சந்திரன்), பாடசாலை மாணவர்களுக்கான பற் சுகாதாரம் (பிரியந்தி சண்முகலிங்கம்), பாடசாலை நூலகமும் தகவலியலும் (ச.ஜேசுநேசன்), தாயுமானவர் சுவாமிகள் எமக்குத் தந்த சைவ சித்தாந்த தத்துவம் (நா.சிதம்பரநாதர்), "நாளைக்கு ஆசிரியர் தினமாம்" (திக்குவல்லை கமால்), மானக் கயிறு (நடராஜா கணேசலிங்கம்), மட்டக்களப்பு தமிழகத்தில் நாட்டுக்கூத்துக் கலை (கு.சண்முகம்), அரக்கத்தனத்திற்குள்ளும் கம்பர் காட்டமுனைந்த மனித நேயம்: கும்பகர்ணன் பற்றிய ஒரு ஆய்வு (ச.கு.கமலசேகரன்), ஆறுமுகம் தந்த தேறு தமிழ்ச் சைவம் (இணுவை. ந. கணேசலிங்கம்), பேச்சு மொழியும் எழுத்து மொழியும் (க.குணசேகரம்), பல்லவர் கால கலை இலக்கிய இயக்கம் (பெ.பேரின்பராஜா), மெல்லத் தமிழினி..... (ஜின்னாஹ் ஷரிபுத்தீன்), தெய்வீகக் கலைகள் (க.சுந்தரலிங்கம்), விஜய நகர நாயக்கர கால இலக்கியப் பண்பு (சுலோஜனா சகாதேவன்), கிறிஸ்துவுக்கு முன் இருந்த கீழைத்தேய இசை வரலாற்றின் ஒரு கண்ணோட்டம் (ஞான குமாரி சிவநேசன்), ஆசிரியர் (A.W.வதூத் சியாம்), இலங்கை இந்திய பின்னணியில் சேது சமுத்திரத் திட்டம் ஒரு கண்ணோட்டம் (சிவசுப்பிரமணியம் சிவசங்கர்), விந்தை மிகு தாவரங்கள் (பொன்னையா அரவிந்தன்), கல்வியின் புதிய எண்ணக் கருவும் தமிழ் இணையப் பயன்பாடும் (சிவரஞ்சினி சிவப்பிரகாசம்), "வாப்பா அறிஞ்சாரெண்டால் வாளேடுத்து வீசிடுவார்": நாட்டார் இலக்கியம் (எல்.ரீ.எம். சாதிக்கீன்), ஈழத் தமிழ் இலக்கிய வரலாற்றில் மட்டக்களப்பின் பங்களிப்பு (கி. சண்முகநாதன்), சமுதாய மைய கல்வியில் அவசியமாகும் "சூழலியல் கற்கை நெறி" (பரராஜசிங்கம் இராஜேஸ்வரன்), நாட்டார் பாடல்கள் (வயலற் சந்திரசேகரம்), வித்துவான் பூபாலபிள்ளையின் தமிழியற் பணிகள் (நளினா ஸ்ரீதரன்), கண்ணீரைக் காவுகொண்ட கடலலைகள் (எஸ்.கே.ஆப்தீன்), சிலப்பதிகாரத்தில் தமிழர் கலைகள் (சித்திராஞ்ஜனி இராஜவரோதயம்), சுற்றாடலை அச்சுறுத்தும் பொலித்தீன் பாவனை (ரி.நகுலேசபிள்ளை), மந்திரமா? தந்திரமா? மருந்தா? (ஆறுமுகம் அரசரெத்தினம்), இருப்பின் முற்றுப்புள்ளி (மு.பஷீர்), பொறாமையெனும் பெரும் தீ (பருத்தியூர் பால.வயிரவநாதன்), அரங்க நாடகமும் நாமும் (A.S.M.பீலிக்ஸ்), தனித்தமிழ் இலக்கியம் (க.இதயவேணி), தமிழ் பேசும் சமூகங்களின் உறவும் தமிழ் ஊடகங்களின் கடப்பாடும் (முனையூரான்), கண்ணீரில் கரையும் காவியங்கள் (மண்டூர் மீனா), பூவே பூச்சூடவா (இந்திராணி வரதநாதன்), எம்மவர் வரலாறு (சு.விசாகன்), நிதர்சனச் சித்தன் மகாகாவி பாரதி (மகாதேவன் வாகேஸ்வரி), குருதட்சணை (சி.செந்தூர்), திருக்குறளின் பெருமை (ஏ.மஞ்சுளா), அன்னையும் பிதாவும்..... (சங்கவை சிவநிர்த்தானந்தா), இன்றைய இளைஞர்களே நாளைய தலைவர்கள் ஆவர் (ப.லியோ கொட்ஸி), பத்திரிகைகள் (அருண்யா சபாரஞ்சன்) ஆகிய படைப்பாக்கங்கள் இம்மலரை அலங்கரிக்கின்றன. (இந்நூல் நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 008457).

12380

**கூர்மதி (மலர் 4): 2006-2008.** வீ.எஸ்.இதயராஜா (பதிப்பாசிரியர்), எம்.மனோகரன், ஸ்ரீமதி த.இராஜதுரை, திருமதி றெஷியா நிஷாம்டீன் (உதவிப் பதிப்பாசிரியர்கள்). பத்தரமுல்ல: தமிழ் மொழி அலகு, கல்வி அமைச்சு, இசுறுபாய, 1வது பதிப்பு, 2008. (கொழும்பு: சேன் பிரின்ட், வெல்லம்பிட்டிய).

xxiii, 327 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 30x21 சமீ.

இவ்விதழில் "இலக்கிய கட்டுரைகள்" என்ற பிரிவுக்குள், நவாலியூர் சோமசுந்தரப் புலவர்: ஓர் அறிமுகம் (கிருஷ்ணபிள்ளை விசாகரூபன்), மண்ணும் மனித உறவுகளும் (க.கைலாசபதி), விஞ்ஞானம், மெஞ்ஞானம் இலக்கியம் என்ற நோக்கில் யோகக்கலை: நவீன யுகத்தின் மருத்துவம் (கனகசபாபதி நாகேஸ்வரன்), மொழியும் அதன் இயல்பும் (பண்டிதர் க.கந்தையா), பேராசிரியர் க. கணபதிப்பிள்ளையின் நாடகங்களில் பேச்சு மொழியின் செல்வாக்கு: (தேவகுமாரி சுந்தரராஜன்), இளைய தலைமுறையினரும் வாழ்வியல் விழுமியங்களும் (கே. ஆர் டேவிட்), மட்டு நகர் ஈந்த முத்தமிழ் வித்துவான் சரவணமுத்துப்பிள்ளை (ரஜனி நடராஜா), எங்கள் நினைவுகளில் சிவலிங்கம் என்றொரு ஆசிரியர் (லெனின் மதிவானம்), ஒட்டக்கூத்தரும் அவரது பணிகளும் (ஆர்.குணசேகரன்), கடவுள் அமைத்துவைத்த மேடை (மலர் சின்னையா), பழைய ஆத்திசூடியும் புதிய ஆத்தி சூடியும் ஒரு ஒப்பு நோக்கு (ச.கு.கமலச்சேகரன்), சிலேடைக் கவிநயம் (வ.சிவராசசிங்கம்), இலங்கைத் தமிழ்ப் பத்திரிகைகளும் படைப்புக்களும் (பரராஜசிங்கம் இராஜேஸ்வரன்), வாழ்வியல் தேடல்கள்: எதிரிகள் (பருத்தியூர் பால.வயிரவநாதன்), இணையம் பிள்ளைகளை வழிகெடுக்க இன்றைய பெற்றோர்கள் பொறுப்பாளிகளா? (எம்.எம்.ஸமட்), இலக்கியமும் விமர்சனமும் (அருட் சகோ.ஜோசப் ஜெயகாந்தன்), ஈழத்துத் தமிழ் நாவல் வளர்ச்சியில் இளங்கீரன் (றமீஸ் அப்துல்லாஹ்), சில்லையூர் செல்வராசனின் கவிதைகளில் மேலோங்கியிருப்பது தனிமனித வாதம் (அ.முகம்மது சமீம்), திராவாட மொழியியல்: ஒரு கண்ணோட்டம் (ச.அகத்தியலிங்கம்), குண்டலகேசி - வளையாபதி (ச.தனஞ்சயராசசிங்கம்), முத்தமிழ் கலாநிதி பிரம்மஸ்ரீ வீரமணி ஐயர் என்னும் கலை அரும்பு மலர்கிறது (திருமதி புவனேஸ்வரி வேல்நிதி), பாரதியும் தேசியமும் (சி.காண்டீபன்), நாட்டார் இலக்கியம் (தே.கருணாகரன்), எமது நாட்டில் அழிப்பேரலை அனர்த்தம் (ந.டினோஜா), ஜீவா என்னும் கலை இலக்கியப் போட்டி: (பொன்னீலன்), தமிழ்க் காப்பியங்களில் அவல நாயகர்கள் (து.இளங்குமரன்), திறனாய்வு (ப.தாட்சாயிணி) ஆகிய ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன. "கல்வியியற் கட்டுரைகள்" என்ற பிரிவில் பீட்டர் ட்றக்கறின் எதிர்காலவியல் பற்றிய மற்றும் பல்வேறு பயன்னுள்ள கருத்துக்கள் (சோ. சந்திரசேகரன்), கல்வி நிறுவனங்களில் பகிடிவதையையும் ஏனைய வன்முறை களையும் தடுப்பதற்கான சட்டக் கட்டமைப்பின் சில அம்சங்கள் (அ.சர்வேஸ்வரன்), புராதன இந்தியக் கல்வி: சில குறிப்புகள் (வி.சிவசாமி), ஆசிரியர் கல்வியின் அவசியம் - நிலை - போக்கு (திருநாவுக்கரசு கமலநாதன்), ஒரு கல்வியியல் நூலாகத் திருக்குறள் (ந.இரவீந்திரன்), விசேட தேவையுள்ளோரின் கல்வியும்

உரிமைகளும் (ஏ.ஆர்.எம்.ஜிப்ரி), மின்கல்வியும் தமிழ்ச் சூழலும் - ஓர் எளிய அறிமுகம் (எஸ்.முரளிதரன்), ஆசிரியர்களுக்கும் பிள்ளைகளுக்குமான உறவு (இளைய அப்துல்லாஹ்), மொழி விருத்தியில் சிறுவர் ஆக்கங்கள் (ந.பார்த்திபன்), ஈழத்தில் மேனாட்டார் வருகைக்கு முன்னர் நிலவிய கல்விசார் அறிவிலக்கிய பாரம்பரியம் (க.இரகுபரன்), முகாமைக் கல்வியும் கற்றலும் (பூ.சோதிநாதன்), கல்வியின் முகாமைத்துவமும் மதிப்பீடும் ஓர் நோக்கு (Z.தாஜுதீன்), சமயக் கல்வி அறிவுக்கான பாடமல்ல, வாழ்க்கைப் பாடம் (அருட்தந்தை ஜெராட் டீ ரொசய்ரோ), ஆரம்பக் கல்வி கற்பித்தலில் அரங்கக் கலையின் பங்கு (செ.மோகநாதன்), ஆசிரியத்துவ வாண்மை விருத்தியில் மொழிப் பயன்பாட்டின் முக்கியத்துவம் (ஜெ.சற்குருநாதன்), கற்பித்தல் மாதிரிகள் (ப.மு.நவாஸ்தீன்), பிள்ளைகளின் ஆளுமை விருத்தியில் குடும்பத்தின் பங்கு (கோகிலா மகேந்திரன்), தாய்மொழி கற்பிப்பதில் துணைச் சாதனங்களின் பங்களிப்பு (நடேசபிள்ளை ஞானவேல்), ஆசிரிய ஆலோசகர் சேவையும் கல்வித்தர மேம்பாடும் (விசேட கல்வியும் விசேட உதவியும் தேவைப்படும் பிள்ளைகள் (கு.சண்முகம்), உலகமயமாதலில் இந்துசமயக் கல்வி (என்.எஸ்.வாசீகன்)ஆகிய கட்டுரைகள் அடங்குகின்றன. கவிதைகள் என்ற பிரிவுக்குள் சோமசுந்தரப் புலவர், இ.முருகையன், மஹாகவி, வயலற் சந்திரசேகரம், ஜின்னாஹ் ஷரிபுத்தீன், இரா.கிருஷ்ணபிள்ளை (இராகி), நித்தியஜோதி, பெ.இராசையா, மு.பஷீர், சோலைக்கிளி, சிவகுமார்.சி., சண்முகம் சிவலிங்கம், ஹம்சத்வனி, அனார், தமயந்தி, இளவாலை விஜயேந்திரன், அ.சங்கரி, ஆழியாள், பாமினி, ஜஸ்மின், அ.அன்றுகிறி, எம்.ரீ.எப்.ரிக்ஸானா, எம்.ரி.பி. அமாறூல்லாஹ், குந்தவி ஆகியோரின் கவிதைகள் இடம்பெற்றுள்ளன. சிறுகதைப் பிரிவில், அழியாப் பொருள் (சீ.வைத்தியலிங்கம்), லண்டன் விசா (எம்.என்.எம்.அனஸ்), மன்னிப்போம்.... (ஷீலா சிறிதரன்), நட்புக்காக.... (முனையூரான்), சீதனப் புயலிலே சிக்குண்ட வள்ளம் (எம்.அருசியா மீரான்), முன்னேற்றம்.... (திக்குவல்லை கமால்), பெண்ணினமே தயங்காதீர் (எம்.எப்.பஹீதா), அடிக்கல்லும் அரசியல்வாதிகளும் (வத்துமுல்லை நேசன்), வாழ்வியல் (தம்புசிவா) ஆகிய சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 45663. நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தின் சேர்க்கை இலக்கம் 008459).

### 12381

**கூர்மதி (மலர் 5): 2011.** கிறேஸ் சடகோபன் (பதிப்பாசிரியர்). பத்தரமுல்ல: தமிழ் மொழி அலகு, கல்வி அமைச்சு, இசுறுபாய, 1வது பதிப்பு, 2011. (கொழும்பு: அரசாங்க அச்சகத் திணைக்களம்).

xvii, 255 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 30x21 சமீ.

கூர்மதி இதழ் வருடந்தோறும் தேசிய மொழிகள் மற்றும் மானுடவியல் பிரிவின் தமிழ்மொழி அலகுக்கான கல்வி அமைச்சின் வெளியீடாக வெளிவருகிறது. கல்வி சார்ந்த ஆக்கங்களைத் தாங்கி இந்த இதழ் வெளிவருகிறது. செம்மொழி வரையறைகளும் தமிழும் (கார்த்திகேசு சிவத்தம்பி), புதிய அறிவுப் பிரவாகமும் வாசிப்புப் பண்பாடும் (சோ.சந்திரசேகரன்), சமகாலத்து ஆக்க மலர்ச்சி ஆய்வுகளும்

மறுமதிப்பீடும் (சபா ஜெயராசா), கற்பித்தலுலகமும் பட்டெறிக்கைக் கலாச்சாரமும் (க.முரளிதரன்), கவிஞர் சி.வி.யின் இலக்கிய நோக்கு காலமும் கருத்தும் (லெனின் மதிவானம்), கண்ணிவெடி அனர்த்தம் பற்றிய அறிவு அனைவருக்கும் அவசியம் (இஸட்.தாஜூதீன்), தேசவழமைச் சட்டத்தின் ஏற்புடமை (எஸ்.சந்திரராஜா), இசையின் முப்பரிமாணம் ஒரு சமுதாய நோக்கு (தம்பு சிவசுப்பிரமணியம்), அன்னைத் தமிழ் (ஜின்னாஹ் ஷரிபுத்தீன்), வரால் மீன்கள் (எம்.எஸ்.அமானுல்லா), இயங்கியல் பொருள் முதல் வாதம் (ந.இரவீந்திரன்), உயிர்க்குறியின் உயிர்ப்பு (நா.பார்த்தீபன்), கல்வியின் சமூகப் பயன் (சி.சிவசேகரம்), முன்பள்ளிகளின் மகிழ்நிலைக் கற்றலுக்குதவும் இயற்கைவாதச் சிந்தனைகள் (எம்.மூவேந்தன்), நாயன்மார் பாடல்களில் முற்போக்கு சிந்தனைகள் (அ.வைத்திலிங்கம்), இலங்கையில் வேலையில்லாப் பிரச்சினைகள் பற்றிய சமூகவியல் பார்வை (மோ. ஜெனிதா), வகுப்பறையின் அமைப்பும் இயங்கியல் தன்மையும் (சரவணமுத்து கணேசமூர்த்தி), நவீன யுகத்தில் எழுத்தறிவுத் திறனுக்கப்பால் வலியுறுத்தப்படும் தகவல் தொழில்நுட்பக் கலாசாரம் (சிவசித்ரா பழனி), எயிட்ஸ் என்னும் ஆட்கொல்லி நோய் (ஜெயபிரியா ஜெகதீஸ்வரன்), மனம் எனும் மாயசக்தி (பாலவைரவநாதன்), இலங்கையில் கவிதை பற்றிய ஒரு நோக்கு (A.S.M. பீலிக்ஸ்), ஊவாவில் இலக்கியம் வளர்த்த பாமுதலோன் தமிழோவியன் (பூனாகலை நித்திய ஜோதி), கலாநிதி ம.மு.உவைஸ் அவர்களின் இஸ்லாமியத் தமிழ் இலக்கியப் பணி பற்றிய கண்ணோட்டம் (எம்.எம்.முகம்மது சப்ரி), விளம்பரமின்றேல் விற்பனையில்லை (வயலற் சந்திரசேகரம்), பாரதியின் குயிற்பாட்டு ஒரு நோக்கு (ந.தேவராசா), கல்வியின் மூன்று படிநிலைகளும் பிள்ளையின் கல்வி நிலைகளும் (சரவணமுத்து நவேந்திரன்), இந்து நாகரீக மரபில் சிற்பக்கலை (இராஜினிதேவி சிவலிங்கம்), தமிழ் இலக்கிய வரலாற்றில் சங்ககாலம் (சுதேஷணா சோதிலிங்கம்), இறைவாக்குப் பெற்ற அருள் வாக்கி (சாந்தி முஹியத்தின்),ஆசிரிய வாண்மையில் ஆசிரியர் தேர்ச்சியின் பங்களிப்பு (குணசிங்கம் பிரதீபன்), குழந்தைகள் தொடர்பாக பத்து முதுமொழிகள் (ஷ.அமனஷ்விலி), சமத்துவமாய் வாழ வழிகாண வேண்டும் (கி.குலசேகரன்), தெற்காசிய நாடுகளின் கல்வி நிலை (சுதாகரி மணிவண்ணன்), ஒன்றிணைவோம்: ஒருகையாய் ஒன்றித்து பார்ப்போம் (க.பாலகௌரி), இலக்கியம் நயத்தல் (எம்.ஏ.எப்.சுமையா), பாடசாலைகளில் மாணவர்களுக்கு தலைமைத்துவ பயிற்சி வழங்கப்படுவதன் முக்கியத்துவமும் நிருவாக பங்களிப்பின் அவசியமும் (எ.எல்.மன்சூர்), மூளையை வடிவமைத்து வளர்த்தெடுப்பது சாத்தியமா? (இரா. சடகோபன்), கல்வியும் மாணவர் இடை விலகலும் ஓர் பொது நோக்கு (நிலாந்தி ரவிச்சந்திரன்), தற்கொலை பிரச்சினைக்கு தீர்வாகி விடுமா? (எம்.எச். எப்.ஹூஸ்னியா), காலம் ஒரு நாள் மாறும் (ஆர்.மைதிலி), சங்க இலக்கியங்களில் அகத்திணை ஒழுக்கம் (A.L.பாத்திமா றிஸ்னா), திறனாய்வு (ரி.நஜ்பா), முயற்சி திருவினையாக்கும் (எம்.ஏ.எப்.அஷ்ரபா), நாமும் நவீன தொலைபேசிகளும் (ஆர். உமையாளினி), கற்றாங்கு ஒழுகுவோம் (எஸ்.அனந்ததர்வின்), இன்பத் தமிழே (என்.சதுஜா), விஞ்ஞானமும் இன்றைய உலகமும் (எம்.என்.சஸ்னா பர்வின்), தமிழுக்கு எத்தனை அடைமொழிகள் (தமிழ்மணி அகளங்கன்) ஆகியஆக்கங்களை இம்மலர் கொண்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில்

*பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 37718. நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தின் சேர்க்கை இலக்கம் 014484).*

### 12382

**கூர்மதி (மலர் 7): 2014.** *கிறேஸ் சடகோபன் (மலராசிரியர்). பத்தரமுல்ல: தமிழ் மொழி அலகு, கல்வி அமைச்சு, இசுறுபாய, 1வது பதிப்பு, 2014. (கொழும்பு: அரசாங்க அச்சுத் திணைக்களம்).*

xiv, *196 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24*x*18 சமீ.*

*கல்வி அமைச்சின் தமிழ் மொழி அலகு ஆண்டுதோறும் வெளியிடும் இம்மலரில் பல்வேறு கல்வியியலாளர்களால் எழுதப்பட்ட பல்துறைசார் கட்டுரைகள், ஆக்க இலக்கியங்கள் என்பன இடம்பெற்றுள்ளன. ஆயிரம் இடைநிலைப் பாடசாலைகள் அபிவிருத்தியோடு மேம்படுத்தப்படும் விஞ்ஞான, கணித, விவசாய மற்றும் தொழில்நுட்ப பாடத்துறைகள்(எஸ்.முரளிதரன்), இலங்கைப் பல்கலைக்கழகங்களில் வெளிநாட்டு மாணவர்கள் (சோ.சந்திரசேகரம்), புனைகதைகளிற் பேச்சு வழக்கு (க.இரகுபரன்), ஈழத்து இலக்கிய மொழிபெயர்ப்புகள் (கந்தையா ஸ்ரீகணேசன்), கைகேயி சூழ்வினைப் படலத்தினூடாக வெளிப்படும் கம்பனின் கவித்துவம் (ச.லலீசன்), தமிழ் மொழியில் "அ" எழுத்துக்குள்ள மாற்றொலிகளின் முக்கியத்துவம் (எஸ்.ஜே.யோகராஜா), ஈழத்துச் சிறுகதை முன்னோடிகளான இலங்கையர்கோன், சி.வைத்தியலிங்கம் ஆகியோர் சிறுகதைகள்: மறு மதிப்பீடு (செ.யோகராசா), சங்க இலக்கியங்களில் தோழி (செல்வரஞ்சிதம் சிவசுப்பிரமணியம்), நூலுரை ஆசிரியன் (ஏ.எல்.அப்துல் கபூர்), பாடசாலைகளில் கவனமின்மைசார் தீங்குகளும் உடலியல்சார் தண்டனைகளும் பற்றிய நோக்கு (செல்வரட்ணம் சந்திரராஜா), மெல்லத் தமிழ் இனிச் சாகாது (கிண்ணியா ஏ.எம்.எம்.அலி), வெகுசன ஊடகமும் கலாசாரமும் (ப.ராஜேஸ்வரன்), ஆற்றுப்படை இலக்கியத்தின் தோற்றமும் வளர்ச்சியும் (ஜனகா சிவசுப்பிரமணியம்), பாடசாலைகளில் கற்றலும் கற்பித்தலும் முறையாக முன்னெடுக்கப்படுகின்றதா? (எஸ்.எல்.மன்சூர்), உறவுகள் (சிறுகதை-தியத்தலாவை எச்.எப்.ரிஸ்னா), பிஞ்சுமனம் (சிறுகதை-ரிம்ஸா முஹம்மத்), இன்னும் எத்தனை நாட்கள் (சிறுகதை-இரா.சடகோபன்), இலங்கையின் தேசிய கீதம் (வயலற் சரோஜா), இலக்கியச் சுவை: பொய் சொல்லுவது பாவமா? (வயலற் சரோஜா), இலங்கையின் அபிவிருத்தியில் இலங்கை சீன ஒப்பந்தம் (சி.சிவசங்கர்), இலங்கையில் இதழ்களின் தோற்றமும் வளர்ச்சியும் (றைஹானா அப்துல் ரஸாக்), தகவல் தொழில்நுட்பமும் இணையத்தள பயன்பாடும் (மா.திலக்ஷிகா), கருவினில் சுமந்தவள் (குறுநாடகம்- எல்.சித்ரா), கருந்தேள் (கவிதை-எவ்.பவானி), என் தாய் நானானால் (கவிதை- து. வுகாரி), கிராமிய பாடல்களும் தமிழும் (எம்.ஐ.எப்.இஷ்ரா), நம்பிக்கையூன்றி நட (குறுநாடகம்- ஸ்ரீ வேதிகா), ஆகிய ஆக்கங்களும், 2014ஆம் ஆண்டுக்கான அகில இலங்கை தமிழ்மொழித் தினத் தேசிய நிலைப் போட்டிகளின் பெறுபேறுகள் பற்றிய அறிக்கையும் இம்மலரில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 60137).*

## 12383

**கூர்மதி (மாணவர் சிறப்பு மலர்): 2005.** எஸ்.சிவநிர்த்தானந்தா (பதிப்பாசிரியர்), திருமதி ஜீ.தெய்வேந்திரராசா, பி.இராசையா (உதவிப் பதிப்பாசிரியர்கள்). பத்தரமுல்ல: தமிழ் மொழி அலகு, கல்வி அமைச்சு, இசுறுபாய, 1வது பதிப்பு, 2005. (கொழும்பு 12: கிறிப்ஸ் பிரின்டேர்ஸ் பிரைவேற் லிமிட்டெட், 162, டாம் வீதி).

67 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 30x21 சமீ.

கல்வி அமைச்சின் தமிழ் மொழி அலகு ஆண்டுதோறும் வெளியிடும் மலரின் மாணவர் சிறப்பிதழ் இது. மாணவர்களால் எழுதப்பட்ட பல்துறைசார் கட்டுரைகள், ஆக்க இலக்கியங்கள் என்பன இடம்பெற்றுள்ளன. எம்மவர் வரலாறு (க.விசாகன்), நிதர்சனச் சித்தன் மகாகவி பாரதி (மகாதேவன் வாகேஸ்வரி), குருதட்சணை (சி. செந்தூர்), திருக்குறளின் பெருமை (ஏ.மஞ்சுளா), அன்னையும் பிதாவும்..... (சங்கவை சிவநிர்த்தானந்தா), இன்றைய இளைஞர்களே நாளைய தலைவர்கள் ஆவர் (ப.லியோ கொட்ஸி), பத்திரிகைகள் (அருண்யா சபாரஞ்சன்), நிம்மதி (H.A.S.தாரணி), தேய்பிறையும் ஒளிதரும் (எஸ்.நிரஞ்சன்), தமிழ் மொழியின் பெருமை (காயத்திரி மகாதேவன்), கல்வியும் கல்வியின் சிறப்பும் (கணேசன் ரஜீவ்), நவீன விஞ்ஞானத்தினால் சுற்றாடலில் ஏற்படும் பிரச்சினைகள் (பஸ்னா பாரூக்), அம்மா (தர்ஷிகா ஸ்ரீஸ்கந்தராஜா), இஸ்லாத்தில் ரமழான் மாத நோன்பின் முக்கியத்துவம் (இ.இஹ்ஸான்), இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையின் தமிழ் இலக்கிய விமர்சன நோக்கு (சி.ஜனகன் முத்துக்குமார்), சர்வதேச அரங்கில் பெண்களின் நிலை (திவ்யா இரத்தினவேலு), மனிதன் மரித்தானோ (எஸ்.ஷர்மிலா), தித்திக்கும் தமிழ் மொழியை தழைக்கச் செய்வோம் (கவிதா பிரியதர்சினி நாகநாதன்), கல்வியறிவே உலகின் ஒளி (ச.பா.சபியா), விழித்தெழு (பாத்திமா சௌதா ஜெ.ஆப்டீன்), அரவணைப்பு (பஸ்னா பாரூக்), இனியும் வேண்டாம் (பா.பிரணவி), அன்பு (டிலுஷ்கா அபிராமி மூர்த்தி), தங்கத் தாத்தா நவாலியூர் சோமசுந்தரப் புலவர் (எம்.எப்.எப்.றிபாஷா), ஜாதி (தாமோதரம்பிள்ளை ராகவன்), வையத்துள் வாழ்வாங்கு வாழ...... (செ. ஏகாந்தசெல்வி), விழிநீர் வீழ்ச்சி (பாத்திமா ஷகிலா ஹலால்டீன்), இஸ்லாம் கல்விக்கு அளித்துள்ள முக்கியத்துவம் (எம்.ஜே.எவ்.பரினா) ஆகிய மாணவர் படைப்பாக்கங்கள் இம்மலரில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 37722. நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தின் சேர்க்கை இலக்கம் 008458).

## 12384

**கொழும்பு இந்துக் கல்லூரி ஆண்டு மலர் 1997.**க.சேய்ந்தன், க.ரமணேஷ் (இதழாசிரியர்கள்). கொழும்பு 4: கொழும்பு இந்துக் கல்லூரி, 77, லொரென்ஸ் வீதி, பம்பலப்பிட்டி, 1வது பதிப்பு, 1997. (கொழும்பு: சரசு அச்சகம்).

190 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 23x18 சமீ.

கொழும்பு இந்துக் கல்லூரி, 1951 ஆம் ஆண்டு பெப்ரவரி 12 ஆம் திகதி "பிள்ளையார் பாடசாலை" என்ற பெயருடன் கொழும்பு இந்து வித்தியாவிருத்திச் சபையினால் தொடங்கப்பட்டது. நீதியரசர் செல்லப்பா நாகலிங்கம் தலைமையில் 24 அங்கத்தவர்களைக் கொண்டு இச்சபை ஆரம்பிக்கப்பட்டது. இக்கல்லூரி இப்போது இயங்கிவரும் காணி சம்மாங்கோடு மாணிக்க விநாயகர் கோயில், மற்றும் கதிரேசன் கோயில் தர்மகர்த்தாக்களால் வழங்கப்பட்டது. இப்பாடசாலையின் முதல் அதிபராக இருந்தவர் கார்த்திகேசு பத்மநாபன். ஆரம்பப்பிரிவு அதிபராக ரி. சதாசிவம் பணியாற்றினார். உயர் வகுப்புகள் 1953 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டன. 1953 ஆம் ஆண்டு அப்போதைய இலங்கைப் பிரதமர் சேர் ஜோன் கொத்தலாவல கொழும்பின் புறநகரான இரத்மலானையில் புதிய கட்டிடத்திற்கான அடிக்கல்லை நாட்டினார். இதனை அடுத்து ஐந்தாம் வகுப்புக்கு மேற்பட்ட வகுப்புகள் 1955 ஆம் ஆண்டு இரத்மலானைக்குக் கொண்டு செல்லப்பட்டன. இரத்மலானை பாடசாலை "கொழும்பு இந்துக் கல்லூரி" என்றும், தற்போதைய பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி "இந்து கனிஷ்ட பாடசாலை" எனவும் பெயர் மாற்றங்கள் பெற்று இயங்கிவரத் தொடங்கின. கல்விப் பொதுத்தராதர உயர்வகுப்பு 1976 இல் ஆரம்பிக்கப்பட்டது. இப்பாடசாலை 1976 சனவரி 1 ஆம் நாள் "கொழும்பு இந்துக் கல்லூரி" எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. கல்லூரி அதிபர் செய்தி, அஞ்சலி, நிறுவுநர் நினைவுநாள், பாடசாலை அபிவிருத்திச் சபை, பழைய மாணவர் சங்கம், விளையாட்டு அறிக்கைகள், இல்ல அறிக்கைகள், சங்கங்களும் அமைப்புகளும், ஆசிரியர் நலன்புரிக் கழகம், பிரிவுபசாரம், மாணவர் ஆக்கங்கள், ஆசிரியர் பட்டியல், இதழாசிரியர் குறிப்பு ஆகிய விடயங்கள் இம்மலரில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 22338).

## 12385

**சிந்தனை: மலர் 1 இதழ் 1 (ஏப்ரல் 1967).** கா.இந்திரபாலா (பதிப்பாசிரியர்). பேராதனை: சிந்தனை வெளியீடுகள், பேராதனைக் கலைக் கல்விக் கழகம், 1வது பதிப்பு, ஏப்ரல் 1967. (கண்டி: செய்தி அச்சகம், 241, கொழும்பு வீதி).

48 பக்கம், அட்டவணைகள், விலை: ரூபா 1., அளவு: 24x18 சமீ.

சிந்தனை இதழ் பேராதனை வளாக, கலைக் கல்விக் கழகத்தால் வெளியீடு செய்யப்பட்டது. இதன் ஆசிரியராக கா.இந்திரபாலா விளங்கினார். மொழியியல், அரசியல், பொருளியல், இலக்கியம், வரலாறு, தொல்பொருளியல் சார்ந்த ஆக்கங்கள் இதில் இடம் பெற்றிருந்தன. சிந்தனை இதழின் முதலாவது பிரசுரம் இதுவாகும். இவ்விதழில் புறநானூற்றில் நிலையாமை (ஆ.வேலுப்பிள்ளை), கலிங்கர் ஆட்சிக்காலம் (ஸிரிமா கிரிபமுண), சமுதாயவியல் முன்னோடி கார்ல் மார்க்ஸ்(முஹம்மது மஃரூப்), இலங்கையில் மழைவீழ்ச்சியின் அரும்போக்குகள் (தம்பையாப்பிள்ளை), இலங்கையில் ஒல்லாந்தர் பின்பற்றிய சமயக் கொள்கை (க.அருமைநாயகம்), பிராமண மதத்தின் செல்வாக்கினைப் பிரதிபலிக்கும் பௌத்த விக்கிரகங்கள் (எல்.பிரேமதிலக்க), நாட்டுப் பாடல்கள் (க.கைலாசபதி) ஆகிய ஆய்வுக்கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

### 12386

**சிந்தனை: மலர் 1 இதழ் 2 (ஜுலை 1967).** கா.இந்திரபாலா (பதிப்பாசிரியர்). பேராதனை: சிந்தனை வெளியீடுகள், பேராதனைக் கலைக் கல்விக் கழகம், 1வது பதிப்பு, ஜுலை 1967. (கண்டி: செய்தி அச்சகம், 241, கொழும்பு வீதி).

(4), 58 பக்கம், அட்டவணைகள், விலை: ரூபா 1., அளவு: 24.5x18 சமீ.

இவ்விதழில் அயன மண்டலச் சூறாவளிகளும் இலங்கையின் வானிலையும் (G.G.R.தம்பையாப்பிள்ளை), இலங்கையின் அரசியல் யாப்புச் சீர்திருத்த இயக்கத்திற்குப் பின்னணியாக அமையும் பொருளாதார அமைப்பு 1833-1863 (I.H.வண்டென் ட்றீஸென்), மலேஷியாவில் கலிங்கம் -தொகுப்பு (கா.இந்திரபாலா), நூல் விமர்சனம்: தமிழ்மொழியிற் சமூகவியல் (மு.மவ்ரூப்), விஞ்ஞானக் கலைச்சொல்லாக்கம் (கா.இந்திரபாலா), "கைத்தொழிற் புரட்சி" என்ற பதம் (செ.ராஜரத்தினம்), கலிங்கர் ஆட்சிக் காலம் - II, அரசியல் வரலாறு (ஸிரிமா கிரிபமுண), சிங்கள நாடகக் கலை-ஸொகறியும் கோலமும் (எதிரிவீர ஸரத்சந்த்ர) ஆகிய கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 033307).

### 12387

**சிந்தனை: மலர் 1 இதழ் 3 (ஒக்டோபர் 1967).** கா.இந்திரபாலா (பதிப்பாசிரியர்). பேராதனை: சிந்தனை வெளியீடுகள், பேராதனைக் கலைக் கல்விக் கழகம், 1வது பதிப்பு, ஒக்டோபர் 1967. (கண்டி: செய்தி அச்சகம், 241, கொழும்பு வீதி).

(4), 65 பக்கம், அட்டவணைகள், விலை: ரூபா 1., அளவு: 24x18 சமீ.

இவ்விதழில் கல்வித் தத்துவமும் இலட்சியவாதமும் (ப.சந்திரசேகரம்), திருக்குறள்-ஒரு கண்டன நூல் (ஆ.வேலுப்பிள்ளை), 19ஆம் நூற்றாண்டில் பிரித்தானியாவின் கடல்கடந்த முதலீடுகள் (செல்வரத்தினம் ராஜரத்தினம்), மறைமலை அடிகளின் இரு நாவல்கள் (க.கைலாசபதி), நிஸ்ஸங்கமல்ல -கலிங்கர் ஆட்சிக்காலம் III (ஸிரிமா கிரிபமுண), இலங்கை நகரவிருத்தியில் ஏற்பட்டுவரும் சில மாற்றங்கள் (பீ.எல்.பண்டிதரத்ன), இலங்கைப் பாராளுமன்ற நிறுவனங்களினது செயற்பாட்டை நிர்ணயிக்கும் காரணிகள் (ஏ.ஜே.வில்சன்), இலங்கையில் சனத்தொகைக் கட்டுப்பாடு (சீ.எச்.எஸ்.ஜயவர்த்தன), நூல் விமர்சனம்: பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும் (எம்.மவ்ரூப், க.அருமைநாயகம், இ.முருகையன்) ஆகிய கட்டுரைகளுடன் ஆசிரியரால் தொகுக்கப்பட்ட அறிவியல் நிகழ்வுகளின் குறிப்பும் இடம்பெற்றுள்ளன.

### 12388

**சிந்தனை: மலர் 2 இதழ் 1 (ஏப்ரல் 1968).** கா.இந்திரபாலா (பதிப்பாசிரியர்), க.அருமைநாயகம் (நிர்வாக ஆசிரியர்). பேராதனை: சிந்தனை வெளியீடுகள், பேராதனைக் கலைக் கல்விக் கழகம், 1வது பதிப்பு, ஏப்ரல் 1968. (கண்டி: நேஷனல் பிரின்டர்ஸ், 241, கொழும்பு வீதி).

(2), 54 பக்கம், அட்டவணைகள், விலை: ரூபா 1.25, அளவு: 24.5x18 சமீ.

இவ்விதழில் பள்ளிப்படை (சீ.ஆர்.ஸ்ரீநிவாசன்), 19-ம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் ஏற்பட்ட பெருமந்தம் (செ.ராஜரத்தினம்), ஈழநாட்டுத் தமிழ்ச் சாசனங்கள் -2: அநுராதபுரத்திலுள்ள குமாரகணத்துப் பேரூரார் கல்வெட்டுக்கள் (கா. இந்திரபாலா), பௌராணிக மதமும் சமணமும் (ஆ.வேலுப்பிள்ளை), போர்த்துக்கீசரும் கோட்டை இராச்சியமும் - அரசியல் தொடர்பு - 1505-1597 வரை (க.அருமைநாயகம்), தராதர இலங்கைத் தமிழ் - சில கருத்துக்கள் (தி.கந்தையா), இலங்கைப் பாராளுமன்ற நிறுவனங்களின் செயற்பாட்டை நிர்ணயிக்கும் காரணிகள் III (ஏ. ஜே. வில்சன்) ஆகிய ஏழு ஆய்வுக்கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 000678).

### 12389

**சிந்தனை: மலர் 2 இதழ் 4 (ஜனவரி 1969).** கா.இந்திரபாலா (பதிப்பாசிரியர்). பேராதனை: சிந்தனை வெளியீடுகள், பேராதனைக் கலைக் கல்விக் கழகம், 1வது பதிப்பு, ஜுலை 1969. (கண்டி: நேஷனல் பிரின்டர்ஸ், 241, கொழும்பு வீதி).

(2), 52 பக்கம், அட்டவணைகள், விலை: ரூபா 1.50, அளவு: 24.5x18 சமீ.

இவ்விதழில் மலேசியாவில் கலிங்கம் (கா.இந்திரபாலா), தென்கிழக்காசியாவுடன், சிறப்பாகப் பர்மாவுடன், இலங்கையின் தொடர்புகள் (ஸி.கிரிபமுண), சோதனை முறையால் நீதியுணர்த்தல் (சி.ஆர்.ஸ்ரீனிவாசன்), யாழ்ப்பாணத்துக் கல்வெட்டுக்கள் (கா. இந்திரபாலா) ஆகிய ஆய்வுக் கட்டுரைகளும் ஆசிரியரால் தொகுக்கப்பட்ட அறிவியல் நிகழ்வுகளின் குறிப்பும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 000697).

### 12390

**சிந்தனை: மலர் 3 இதழ் 2 (ஜுலை 1970).** கா.இந்திரபாலா (பதிப்பாசிரியர்). பேராதனை: சிந்தனை வெளியீடுகள், பேராதனைக் கலைக் கல்விக் கழகம், 1வது பதிப்பு, ஜுலை 1970. (கண்டி: நேஷனல் பிரின்டர்ஸ், 241, கொழும்பு வீதி).

77-160 பக்கம், அட்டவணைகள், விலை: ரூபா 2., அளவு: 24.5x18 சமீ.

இவ்விதழில் சிவஞானசித்தியார் கூறும் லோகாயுதம் (வே.இராமகிருஷ்ணன்), யாழ்ப்பாண இராச்சியத்தின் தொன்மைபற்றிய சில பழைய கருத்துக்கள் (கா.இந்திரபாலா), 13 ஆம் நூற்றாண்டில் பாண்டி நாட்டிலிருந்த படை அமைப்பு (செ.குணசிங்கம்), இருப்புவாதம் ஓர் அறிமுகம் (பீ.ஏ. ஹூசைன்மியா), இலங்கையின் மகாதேசாதிபதி (ஏ.ஜெயரத்தினம் வில்சன்) ஆகிய ஆய்வுக் கட்டுரைகளும், செய்தியும் குறிப்பும் என்ற பகுதியில் ஆசிரியரால் தொகுக்கப்பட்ட அறிவியல் நிகழ்வுகளின் குறிப்பும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 000709).

### 12391

**சிந்தனை: மலர் 4 இதழ் 1,2 (ஜனவரி-ஜுலை 1971).** கா.இந்திரபாலா (பதிப்பாசிரியர்). பேராதனை: சிந்தனை வெளியீடுகள், பேராதனைக் கலைக் கல்விக் கழகம், 1வது பதிப்பு, ஜுலை 1971. (கண்டி: நேஷனல் பிரின்டர்ஸ், 241, கொழும்பு வீதி).

102 பக்கம், அட்டவணைகள், விலை: ரூபா 2.50, அளவு: 24.5x18 சமீ.

இவ்விதழில் நான்கு பதில்மைகளின் அளவையியல் (கே.என்.ஜயதிலக), கண்டி இராச்சியம்: 1658 க்கும் 1710 க்கும் இடையில் அதன் வெளிநாட்டுத் தொடர்புகளையும், வர்த்தகத்தையும் பற்றிய சில அம்சங்கள் (சி.அரசரத்தினம்), கயிலாய வன்னியனார் சிதம்பர தருமசாதனப் பட்டையம் (1722) (செ.குணசிங்கம்) அகிய நான்கு ஆய்வுக் கட்டுரைகளும் ஆசிரியரால் தொகுக்கப்பட்ட அறிவியல் நிகழ்வுகளின் குறிப்பும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 000710).

## 12392

**சிந்தனை: மலர் 5 இதழ் 1&2 (ஜனவரி-ஜுலை 1972).** கா.இந்திரபாலா (பதிப்பாசிரியர்), பி.ஏ.ஹுசைன்மியா (துணைப் பதிப்பாசிரியர்). பேராதனை: சிந்தனை வெளியீடுகள், பேராதனைக் கலைக் கல்விக் கழகம், 1வது பதிப்பு, ஜுன் 1972. (கண்டி: நேஷனல் பிரின்டர்ஸ், 241, கொழும்பு வீதி).

(4), 42 பக்கம், அட்டவணைகள், விலை: ரூபா 2., அளவு: 24.5x18 சமீ.

இவ்விதழில் இலங்கையின் 19ம் நூற்றாண்டுப் பொருளாதார வளர்ச்சியிற் சிறுபயிர்க் கோப்பிச் செய்கையின் வரலாறும் பங்கும் (ஏ.சி.எல்.அமீர் அலி), விளிப்பெயர் விளக்கம் (அ.தாமோதரன்), யாழ்ப்பாணத்தரசருடைய கொடிகளிலும் நாணயங்களிலும் பயன்படுத்தப்பட்டுள்ள இலச்சினை (கா. இந்திரபாலா) ஆகிய ஆய்வுக் கட்டுரைகளும், செய்தியும் குறிப்பும் என்ற பகுதியில் ஆசிரியரால் தொகுக்கப்பட்ட அறிவியல் நிகழ்வுகளின் குறிப்பும் இடம்பெற்றுள்ளன.

## 12393

**சிந்தனை: தொகுதி I இதழ் 1 (ஜனவரி 1976).** அ.சண்முகதாஸ் (இதழாசிரியர்), ஆ.சிவநேசச்செல்வன் (நிர்வாக ஆசிரியர்). யாழ்ப்பாணம்: மனிதப் பண்பியற் பீடம், இலங்கைப் பல்கலைக்கழக யாழ்ப்பாண வளாகம், திருநெல்வேலி, 1வது பதிப்பு, தை 1976. (யாழ்ப்பாணம்: கூட்டுறவு அச்சகம், பிரதான வீதி).

(7), 68 பக்கம், விலை: ரூபா 20.00, அளவு: 24.5x18.5 சமீ.

சிந்தனை இதழ் பேராதனை வளாக, கலைக் கல்விக் கழகத்தால் வெளியீடு செய்யப்பட்டது. அறுபதுகளின் பிற்பகுதியிலும் 70களின் ஆரம்பத்திலும் இந்த இதழ் வெளியானது. இதன் ஆசிரியராக கா.இந்திரபாலா விளங்கினார். மொழியியல், அரசியல், பொருளியல், இலக்கியம், வரலாறு, தொல்பொருளியல் சார்ந்த ஆக்கங்கள் இதில் இடம் பெற்றிருந்தன. யாழ்ப்பாண வளாகம் ஆரம்பிக்கப் பட்டபின்னர் "சிந்தனை" யாழ்ப்பாண வளாகத்தினரால் பொறுப்பேற்கப்பட்டது. தை 1976இல் வெளிவந்த அதன் முதலாவது இதழ் இதுவாகும். இதில் இயற்கை உரிமைகளும் மனித உரிமைகளும் (சோ.கிருஷ்ணராஜா), பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் நாடகங்களிற் சமூக நோக்கு (துரை மனோகரன்), இலங்கையில் உணவு உற்பத்தியும் ஆற்று வடிநில விருத்தியும் (இ.மதனாகரன்), ஈழத்து நாவல்களிற் சமூக உணர்வின் தோற்றம் (சித்திரலேகா மௌனகுரு),

வடமொழிச் சாசனமும் தமிழ்ச் சாசனமும் (வி.சிவசாமி), கவிஞரும் மொழியும்- ஒரு மொழியியல் நோக்கு (அ.சண்முகதாஸ்), கலைப்படைப்புகள் பற்றிய கருத்துரை (சு.கம்லத்), தகவல்: 1970க்குப் பின்னர் ஈழத்தில் வெளிவந்த தமிழ் நாவல்கள் (நா.சுப்பிரமணியம்) ஆகிய படைப்பாக்கங்கள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 20945. நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தின் சேர்க்கை இலக்கம் 048121).

## 12394

**சிந்தனை: தொகுதி I இதழ் 2 (சித்திரை 1976).** அ.சண்முகதாஸ் (இதழாசிரியர்), ஆ.சிவநேசச்செல்வன் (நிர்வாக ஆசிரியர்). யாழ்ப்பாணம்: மனிதப் பண்பியற் பீடம், இலங்கைப் பல்கலைக்கழக யாழ்ப்பாண வளாகம், திருநெல்வேலி, 1வது பதிப்பு, ஏப்ரல் 1976. (யாழ்ப்பாணம்: கூட்டுறவு அச்சகம், பிரதான வீதி).

(6), 75 பக்கம், விலை: ரூபா 20.00, அளவு: 24.5x18.5 சமீ.

இவ்விதழில் இலக்கியத்திறனாய்வும் உணர்வு நலனும் (க.கைலாசபதி), பொருளியலிற் பொதுக் கொள்கையின் முக்கியத்துவம் (ந.பேரின்பநாதன்), மானிடவியலும் ஆக்க இலக்கியமும் (க.சண்முகலிங்கம்), இலங்கையின் ஆதிப் பிராமிக் கல்வெட்டுக்கள் காட்டும் இந்து மதம் (சி.க.சிற்றம்பலம்), வேற்றுமையும் சொல்லொழுங்கும் (யோகேஸ்வரி கணேசலிங்கம்), இலங்கையும் இந்து சமுத்திர வர்த்தகமும்: கி.மு. 2ம் நூற்றாண்டு முதல் கி.பி. 13ம் நூற்றாண்டு வரை (ச. சத்தியசீலன்) ஆகிய ஆய்வுக்கட்டுரைகளுடன், தென்னாசியாவியற் கருத்தரங்கக் கட்டுரைகளான 1970க்குப் பின் ஈழத்து தமிழ் நாவல்கள் (நாகராஜஐயர் சுப்பிரமணியம்), சைவ சித்தாந்த அறிவுக் கொள்கை - காட்சி (சோ.கிருஷ்ணராஜா), பிரதேச நாவல்கள் - யாழ்ப்பாணப் பிரதேச நாவல்கள் (துரை மனோகரன்), யாழ்ப்பாணத்தில் நூலக வளர்ச்சி (மனோன்மணி சண்முகதாஸ்) ஆகிய நான்கு கட்டுரைகளும் இவ்விதழில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 19400. நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தின் சேர்க்கை இலக்கம் 000680).

## 12395

**சிந்தனை: தொகுதி I இதழ் 3,4 (புரட்டாதி, மார்கழி 1976).** அ.சண்முகதாஸ் (இதழாசிரியர்), ஆ.சிவநேசச்செல்வன் (நிர்வாக ஆசிரியர்). யாழ்ப்பாணம்: மனிதப் பண்பியற் பீடம், இலங்கைப் பல்கலைக்கழக யாழ்ப்பாண வளாகம், திருநெல்வேலி, 1வது பதிப்பு, மார்கழி 1976. (யாழ்ப்பாணம்: கூட்டுறவு அச்சகம், பிரதான வீதி).

63 பக்கம், விலை: ரூபா 20.00, அளவு: 24x18 சமீ.

இவ்விதழில் மலர் 3க்குரிய கட்டுரைகளாக, யாழ்ப்பாண வளாகத்தில் “தமிழ் நாவல் நூற்றாண்டு” தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட வங்காள நாவல்கள் தமிழ் நாவல்களில் ஏற்படுத்திய தாக்கம் (செ. யோகராசா), பெண்களும் தமிழ் நாவலும் (மனோன்மணி சண்முகதாஸ்), இரு காந்தீய நாவல்கள் (சோ. கிருஷ்ணராஜா),

19-ம் நூற்றாண்டில் ஆங்கிலக் கல்வியும் தமிழ் நாவலின் தோற்றமும் (சாந்தினி சந்தானம்) ஆகிய கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. மலர் 4இற்குரிய கட்டுரைகளாக மத்தியகாலத் தமிழ்நாட்டு இந்துக் கோவில்கள் - தொழில் நிறுவனங்கள் (செல்லத்துரை குணசிங்கம்), ஞாயிற்றுச் சக்தியும் அதன் சமநிலையும் (அ. கணபதிப்பிள்ளை) ஆகிய இரு கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

## 12396

**சிந்தனை: தொகுதி I இதழ் 1 (பங்குனி 1983).** சி.க.சிற்றம்பலம் (இதழாசிரியர்), சி.முருகவேள் (நிர்வாக ஆசிரியர்). யாழ்ப்பாணம்: கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, 1வது பதிப்பு, மார்ச் 1983. (யாழ்ப்பாணம்: செட்டியார் அச்சகம், 430, காங்கேசன்துறை வீதி).

100 பக்கம், அட்டவணைகள், விலை: ரூபா 10., அளவு: 20.5x15 சமீ.

இலங்கையில் நவீன கல்வியும் கோல்புறூக் விதப்புரைகளும் (வ.ஆறுமுகம்), இலங்கையைச் சிறப்பாகக் கொண்ட கிராமிய சமுதாய விருத்திக்கான நோக்குகள் (இ.மதனாகரன்), தமிழ்மொழி கற்றல் கற்பித்தலில் ஒத்த கருத்துள்ள சொற்களும் எதிர்க் கருத்துள்ள சொற்களும் (சு.சுசீந்திரராஜா), சேர். செய்யித் அகமத்கான்: இந்திய முஸ்லிம் தேசியவாதத்தின் தொடக்கம் (எம்.எஸ்.எம்.அனஸ்), தமிழர் சமயப் பாரம்பரியத்தில் நாவலர் (மௌ.சித்திரலேகா), திருக்குறளும் ஒழுக்கமும் (வே.இராமகிருஷ்ணன்), பிராமிக் கல்வெட்டுக்களும் தமிழும் (சி.க.சிற்றம்பலம்), நிலவளமும் நிலப்பயன்பாடும் (செ.பாலச்சந்திரன்) ஆகிய ஆய்வுக் கட்டுரைகள் இவ்விதழை செழுமைப்படுத்தியுள்ளன.

## 12397

**சிந்தனை: தொகுதி I இதழ் 2 (ஆடி 1983).** சி.க.சிற்றம்பலம் (இதழாசிரியர்). யாழ்ப்பாணம்: கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, 1வது பதிப்பு, ஜுலை 1983. (யாழ்ப்பாணம்: மகாத்மா அச்சகம், ஏழாலை மேற்கு, ஏழாலை).

(7), 154 பக்கம், அட்டவணைகள், விலை: ஆண்டு சந்தா ரூபா 60., அளவு: 24x17 சமீ.

இவ்விதழில் தமிழ்மொழிப் பாடநூல்களில் பேச்சுத் தமிழும் எழுத்துத் தமிழும் (சு.சுசீந்திரராஜா), விகிதாசாரப் பிரதிநிதித்துவமும் தமிழ்பேசும் சிறுபான்மை இனங்களின் அரசியல் நலன்களும் (வே.மணிவாசகர்), வரண்ட பிரதேசக் குடியேற்றத் திட்டங்களின் உற்பத்தித் திறனில் தொழில்நுட்பங்களின் பங்களிப்புப் பற்றிய மதிப்பீடு (அ.கணபதிப்பிள்ளை), பிரித்தானிய மலாயாவில் யாழ்ப் பாணத்தவரின் அரசியல் நடவடிக்கைகள்(ச.சத்தியசீலன்), ஆரம்ப வகுப்புகளில் தமிழ்மொழி கற்பித்தல்: சில அடிப்படைப் பிரச்சினைகள் (எம்.ஏ.நுஃமான்), யாழ்ப்பாணக் குடாநாட்டில் 19ஆம் நூற்றாண்டில் நிலவிய பாரம்பரியக் கல்விமுறை (எஸ்.சிவலிங்கராஜா), யாழ்ப்பாண மாவட்ட மக்களின் இடப்பெயர்வு (கா.குகபாலன்), அம்பாறை மாவட்டத்தின் நிலப்பிரச்சினைகளும் குடியேற்றப்

பிரச்சினைகளும் (எம்.வை.மொகமட் சித்தீக்), பண்டைய ஈழத்து யக்ஷநாக வழிபாடு (சி.க.சிற்றம்பலம்), நாவலரும் சைவசித்தாந்தமும் (கலைவாணி இராமநாதன்), புராண படனம்-அன்றும் இன்றும் (யோகேஸ்வரி கணேசலிங்கம்) ஆகிய ஆய்வுக்கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 59120).

### 12398

**சிந்தனை: தொகுதி I இதழ் 3 (கார்த்திகை 1983).** சி.க.சிற்றம்பலம் (இதழாசிரியர்). யாழ்ப்பாணம்: கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, 1வது பதிப்பு, கார்த்திகை 1983. (யாழ்ப்பாணம்: மகாத்மா அச்சகம், ஏழாலை மேற்கு, ஏழாலை).

(7), 141 பக்கம், விலை: ரூபா 60., அளவு: 24.5x17 சமீ.

இந்திய இசை, சமய, இலக்கிய மரபுகளில் ஜயதேவர்-ஓர் ஆய்வு (வி.சிவசாமி), இலங்கையில் உப-உணவுப் பயிர்களுக்காக வணிக வங்கிகளால் வழங்கப்பட்ட கடன் வசதிகள் பற்றிய ஓர் ஆய்வு 1965-1980 (ந.பேரின்பநாதன்), பௌத்தத்துக்கு முந்திய ஈழத்து இந்துமதம் (சி.க.சிற்றம்பலம்), யாழ்ப்பாண நகர நிலப் பயன்பாடு (கே.கே.ஆறுமுகம்), யாழ்ப்பாணக் குடாநாட்டில் கிடைத்த நாணயங்கள் (செ. கிருஷ்ணராஜா), இலங்கையில் கல்வி நிருவாகத்தின் பன்முகப்படுத்தலுக்கான வழிமுறைகள் (தி.வேலாயுதம்), ஈழத்தில் இந்து இலக்கியங்கள்: பத்தொன்பதாம் நூற்றாண்டு வரை (கலையரசி சின்னையா), தமிழர் வழிபாட்டில் செவ்வேளும் திருமாலும் (அ.சண்முகதாஸ்), யாழ்ப்பாணப் பகுதியில் மீன்பிடித் தொழில் அபிவிருத்தி (கா.ரூபாமூர்த்தி), "அம்பிடு" என்னும் சொல்பற்றி ஒரு குறிப்பு (இரத்தினமலர் கயிலைநாதன்) ஆகிய ஆய்வுக்கட்டுரைகள் இவ்விதழை அலங்கரிக்கின்றன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 59121).

### 12399

**சிந்தனை: தொகுதி II (புதிய தொடர்) இதழ் 1 (மார்ச் 1984).** சி.க.சிற்றம்பலம் (இதழாசிரியர்). யாழ்ப்பாணம்: கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, 1வது பதிப்பு, மார்ச் 1984. (யாழ்ப்பாணம்: மகாத்மா அச்சகம், ஏழாலை மேற்கு, ஏழாலை).

(4), 141 பக்கம், விலை: ஆண்டுசந்தா ரூபா 75., அளவு: 24.5x16.5 சமீ.

இவ்வாய்விதழில் இடைநிலைப் பாடசாலைக் கல்வி அனுபவ ஒழுங்கமைப்பின் நவீன வடிவங்கள் (சபா.ஜெயராசா), இசைமேதை பாபநாசம் சிவன் (வி.சிவசாமி), ஈழத்துத் தமிழ்க் கவிதைப் பாரம்பரியம் (கார்த்திகேசு சிவத்தம்பி), இலங்கையின் வன்னிப் பிரதேச விவசாய அபிவிருத்தி (இரா.சிவச்சந்திரன்), ஐந்தாம் வகுப்பு மாணவர் தமிழ்மொழிப் பயிற்சிகளில் சில அவதானிப்புகள் (பார்வதி கந்தசாமி), யாழ்ப்பாணக் குடாநாட்டில் சுண்ணாம்புக் கற்பாறைகளை அகற்றுவதனால் ஏற்படக்கூடிய விளைவுகள் (இ.மதனாகரன், த.குணசேகரம்), ஈழமும் இந்து

மதமும்-அநுராதபுரக் காலம் (சி.க.சிற்றம்பலம்) ஆகிய ஏழு ஆய்வுக் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

### 12400

**சிந்தனை: தொகுதி II (புதிய தொடர்) இதழ் 2 (ஆடி 1984).** சி.க.சிற்றம்பலம் (இதழாசிரியர்). யாழ்ப்பாணம்: கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, 1வது பதிப்பு, ஜுலை 1984. (யாழ்ப்பாணம்: மகாத்மா அச்சகம், ஏழாலை மேற்கு, ஏழாலை).

(4), 160 பக்கம், விலை: ரூபா 25., அளவு: 24.5x17 சமீ.

இவ்வாய்விதழில் பாண்டியர்கால ஆட்சிஇயல் (நடன.காசிநாதன்), யாழ்ப்பாணத்துப் பேச்சுத் தமிழில் ஆக்கப் பெயர்கள் (சு.சுசீந்திரராஜா), பயிர்ச் செய்கைப் பிரதேசம் ஒன்றில் நீர்ப்பாய்ச்சல் திட்டமிடுதலில் சில முக்கிய அம்சங்கள் (அ. கணபதிப்பிள்ளை), இலங்கைத் தமிழ் வணிக கணங்களும் நகரங்களும்: கி. பி.1000-1250 (சி.பத்மநாதன்), இலங்கையில் முயற்சியாளர் வர்க்க எழுச்சியும் அதன் முதலாளித்துவ இணக்கப்பான்மையும் (வி.நித்தியானந்தன்), ஈழமும் இந்து மதமும்-பொலநறுவைக் காலம்: கி.பி.1000-1250 (சி.க.சிற்றம்பலம்) ஆகிய ஆறு ஆய்வுக்கட்டுரைகள் இவ்விதழில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 23093).

### 12401

**சிந்தனை: தொகுதி II (புதிய தொடர்) இதழ் 3 (நவம்பர் 1984).** சி.க.சிற்றம்பலம் (இதழாசிரியர்), சி.முருகவேள் (நிர்வாக ஆசிரியர்). யாழ்ப்பாணம்: கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, 1வது பதிப்பு, நவம்பர் 1984. (யாழ்ப்பாணம்: மகாத்மா அச்சகம், ஏழாலை மேற்கு, ஏழாலை).

179 பக்கம், அட்டவணைகள், விலை: ஆண்டு சந்தா ரூபா 75., அளவு: 23.5x17 சமீ.

இவ்விதழில் இலங்கையில் தொலைவு நுகர்வு ரீதியான நிலப்பயன்பாட்டு ஆய்வுகள் (செ.பாலச்சந்திரன்), "விலாசம்" தமிழ் நாடக வகை ஒன்று பற்றிய ஆய்வு (சி. மௌனகுரு), இலங்கையில் நெல்லிற்கான உத்தரவாத விலைத்திட்டமும் அதன் செயற்பாடும் (ந.பேரின்பநாதன்), குறியீட்டு அளவையியல்: ஓர் அறிமுகம் (சோ. கிருஷ்ணராஜா), இலக்கணக் கொள்கைக் கட்டுரைகளிலே கணேசையரின் அணுகுமுறை (ஆ.வேலுப்பிள்ளை), ஈழமும் இந்துமதமும்: பொலநறுவை அரசுக்குப் பிற்பட்ட போர்த்துக்கேயர் வருகைக்கு முற்பட்ட காலம்: கி.பி.1250-1505 (சி.க.சிற்றம்பலம்) ஆகிய ஆய்வுக் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

### 12402

**சிந்தனை: தொகுதி III இதழ் 1 (மார்ச் 1985).** சி.க.சிற்றம்பலம் (இதழாசிரியர்). யாழ்ப்பாணம்: கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, 1வது பதிப்பு, மார்ச் 1985. (யாழ்ப்பாணம்: மகாத்மா அச்சகம், ஏழாலை மேற்கு, ஏழாலை).

(6), 145 பக்கம், விலை: ரூபா 25., அளவு: 24x16.5 சமீ.

ஆங்கிலத்தில் தமிழ் அசைகளின் செல்வாக்கு (பார்வதி கந்தசாமி), காரைக்காலம்மையாரும் அவர் பாடிய பிரபந்தங்களும்-ஓர் ஆய்வு (சந்திரலேகா வாமதேவா), இலங்கையில் தேசிய குடிக்கணிப்புகளும் அவற்றின் குறைநிறைகளும் (கா.குகபாலன்), இலங்கைத் தமிழர்-இந்திய வம்சாவளித் தமிழர் இடையிலான உறவுகள் பற்றிய சில கருத்துக்கள் (ச.சத்தியசீலன்), தமிழ் மொழியில் உளப்பாட்டுத் தன்மைப் பன்மை (இரத்தினமலர் கயிலைநாதன்), இலங்கையின் நீர்ப்பாசன அபிவிருத்தியில் வரலாற்றுச் சிறப்பம்சங்கள் (அ.கணபதிப்பிள்ளை), பிரதேச அபிவிருத்திக்கான பொருத்தமான நில வகைப்பாட்டுத் தேர்வு: அளவுசார் ரீதியான அணுகுமுறை (S.T.P. இராஜேஸ்வரன்), இலங்கையில் பல்கலைக்கழகக் கல்வி இன்றைய காலகட்டத்தில் முகங்கொடுக்கவேண்டிய சில பிரச்சினைகள் (சுசீலா அருளானந்தம்), முத்தையன்கட்டு இளைஞர் குடியேற்றத்திட்டம்: ஒரு விவசாயப் புவியியலாய்வு (இரா.சிவச்சந்திரன்), இலங்கையின் கிழக்குக்கரை மழைவீழ்ச்சி வலயத்தின் மழைவீழ்ச்சித் தளம்பல்கள் (மா.பவனேஸ்வரன்) ஆகிய ஆய்வுக் கட்டுரைகள் இவ்விதழில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் Pamp. 4184).

## 12403

**சிந்தனை: தொகுதி III இதழ் 2,3 (ஜுலை,ஆகஸ்ட். 1985).** ப.சிவநாதன் (இதழாசிரியர்). யாழ்ப்பாணம்: கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, 1வது பதிப்பு, ஆகஸ்ட் 1985. (யாழ்ப்பாணம்: மகாத்மா அச்சகம், ஏழாலை மேற்கு, ஏழாலை).

(12), 134 பக்கம், விலை: ரூபா 30., அளவு: 24x16 சமீ.

பேராசிரியர் ப.சந்திரசேகரம் அவர்களுக்குச் சமர்ப்பணம் செய்யப்பட்டுள்ள இவ்விதழில் பண்டிதமணி ஆய்வில் எழும் சிக்கல்கள் (சு.சுசீந்திரராசா), கற்றலில் கட்டுப்பாடு (வ.ஆறுமுகம்), அனுபலப்த்திப் பிரமாணம் (நா.ஞானகுமாரன்), ஈழத்து நவீன தமிழ் நாடக மரபின் தோற்றம் (சி.மௌனகுரு), தமிழில் யாப்பும் யாப்பியலும்-வரலாற்று நோக்கு (நா.சுப்பிரமணியன்), பௌத்த சிற்பங்கள் ஊடாக அறியப்படும் இலங்கை-ஆந்திர உறவுகள் (ப.புஷ்பரட்ணம்), நாட்டார் கலைமரபில் வசந்தன் கூத்து-ஓர் ஆய்வு (இ.பாலசுந்தரம்) ஆகிய ஏழு ஆய்வுக் கட்டுரைகள் இதில் இடம்பெற்றுள்ளன.

## 12404

**சிந்தனை: தொகுதி IV இதழ் 1 (மார்ச் 1990).** ப.சிவநாதன் (இதழாசிரியர்). யாழ்ப்பாணம்: கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, 1வது பதிப்பு, மார்ச் 1990. (யாழ்ப்பாணம்: நியூ ஈரா பப்ளிக்கேஷன்ஸ், 267, பிரதான வீதி).

117 பக்கம், அட்டவணைகள், விலை: ஆண்டு சந்தா ரூபா 300., அளவு: 24x16 சமீ.

இவ்விதழில் தமிழ்மொழியில் லகர மெய்யீற்றுப் புணர்ச்சி - அன்றும் இன்றும் (சுபதினி ரமேஸ்), விவசாய நிலப் பயன்பாடுகளுக்கான நில பொருத்தப் பாகுபாடு தெரிந்தெடுக்கப்பட்ட ஒரு நிர்வாகப் பிரிவை சிறப்பாகக்கொண்ட ஒரு ஆய்வு (பா.இராஜேஸ்வரன், க.சுதாகர்), நீலகண்ட பாடியத்தில் முப்பொருள் உண்மை (சோ.கிருஷ்ணராஜா), இந்திய தென்கிழக்காசிய தொடர்புகளும் இந்துப் பண்பாடு பற்றிய சில பிரச்சினைகளும் ஒரு வரலாற்றுக் குறிப்பு (செ.கிருஷ்ணராசா), இலங்கையின் அந்நியச் செலாவணி விகிதங்களின் போக்கு: 1978-1990 (கா. கந்தையா), கிறிஸ்தவத் தமிழ் நாவல்களும் சமுதாய விழிப்புணர்வும் (ஏ.ஜே. வி.சந்திரகாந்தன்), இலங்கையில் வெங்காயச் சந்தைப்படுத்தல் பற்றிய ஆய்வு (ப.சிவநாதன்) ஆகிய ஏழு ஆய்வுக் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

### 12405

**சிந்தனை (தொகுதி V, இதழ் 1/2).** ச.சத்தியசீலன் (இதழாசிரியர்), சி.முருகவேள் (நிர்வாக ஆசிரியர்). யாழ்ப்பாணம்: கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, 1வது பதிப்பு, ஜுலை 1993. (யாழ்ப்பாணம்: A B அச்சகம், 430, காங்கேசன்துறை வீதி).

(4), 116 பக்கம், விலை: ஆண்டு சந்தா ரூபா 300., அளவு: 24.5x18.5 சமீ.

சிந்தனை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீட ஆய்விதழாகும். வருடத்திற்கு மூன்று இதழ்களாகத் தொடங்கிய இவ்விதழின் 5ஆவது ஆண்டின் முதலிரு இதழ்களினதும் இணைந்த பிரசுரமாக இது வெளிவந்துள்ளது. இவ்விதழில் அடங்காப்பற்று வன்னிமைகள் (சி.பத்மநாதன்), சங்கரரின் உலகு பற்றிய நோக்கு (நா.ஞானகுமாரன்), யாழ்ப்பாண மாவட்டத்தில் இறப்புக்களின் போக்கினைத் தீர்மானிக்கும் காரணிகளும் விளைவுகளும் (கா.குகபாலன்), இலங்கையில் ஏற்றுமதி மேம்பாட்டுக் கைத்தொழிலாக்கம்-சாதனைகள், குறைபாடுகள், சவால்கள் (கா.கந்தையா), கிராமிய வறுமைத் தணிப்பு-உலக வங்கியின் அணுகுமுறை (சி. அம்பிகாதேவி), இலங்கையில் விஞ்ஞானக் கல்வியின் தேவையும் அதன் இன்றைய நிலையும் (சு.அருளானந்தம்), யாழ்ப்பாணப் பேச்சுத் தமிழில் இறந்தகால அமைப்பு (இ.கயிலைநாதன்), பிரித்தானியர் கால நல்லூர்-ஒரு நோக்கு (ச. சத்தியசீலன்), யாழ்ப்பாணக் குடாநாட்டின் நன்னீர் வளம்-ஒரு நோக்கு (செ. பாலச்சந்திரன்) ஆகிய ஒன்பது ஆய்வுக் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

### 12406

**சிந்தனை (தொகுதி V, இதழ் 3).** ச.சத்தியசீலன் (இதழாசிரியர்), சி.முருகவேள் (நிர்வாக ஆசிரியர்). யாழ்ப்பாணம்: கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, 1வது பதிப்பு, கார்த்திகை 1993. (யாழ்ப்பாணம்: A B அச்சகம், 430, காங்கேசன்துறை வீதி).

(7), 105 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ஆண்டு சந்தா ரூபா 300., அளவு: 23.5x19 சமீ.

சமகால ஈழத்துத் தமிழ்க் கவிதையில் முப்போக்குகள்-ஒரு மூன்றாம் உலக இலக்கியக் கண்ணோட்டம் (சுரேஷ் கனகராஜா), அழகியலும் மதமும் (அ.நோ. கிருஷ்ணவேணி), இலங்கையில் இனவாதமும் தேசக் கட்டுமானமும் (ச. சத்தியசீலன்), வரலாற்றுக்கு முற்பட்டகால ஈழத்து இந்துமத நம்பிக்கைகள் (கலைவாணி இராமநாதன்), சுயாதீனசித்தமும், சைவசித்தாந்தமும் (நா. ஞானகுமாரன்), யாழ்ப்பாணக் குடாநாட்டின் உருவாக்கமும் அதன் உருவவியல் அமைப்பும்-விமானப்பட அடிப்படையிலான ஆய்வு (S.T.B. இராஜேஸ்வரன், ஜி.றொபேட், இ.துஷ்யந்தி), மட்டக்களப்புப் பிரதேசத்தின் காலநிலையியல் நீர்ச்சமநிலை (க.இராஜேந்திரம், செ.பாலச்சந்திரன்), இலங்கை மீன்பிடித்துறையின் இன்றைய நிலை-ஒரு நோக்கு (ஏ.எஸ்.சூசை), செய்தித் தொடர்புறுத்தலுக்குரிய இடையூறுகளும் அவற்றை வெற்றிகொள்வதில் ஆவணப்படுத்தலுக்குரிய பங்களிப்பும் (ஆர்.பரராஜசிங்கம்), கயிலாய வன்னியனார் மட தர்மசாதனப் பட்டையம்-சில வரலாற்றுக் குறிப்புகள் (சி.பத்மநாதன்) ஆகிய பத்து ஆய்வுக் கட்டுரைகள் இவ்விதழில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 24506, 31496).

### 12407

**சிந்தனை (தொகுதி VI, இதழ் 1,2).** ச.சத்தியசீலன் (இதழாசிரியர்), சி.முருகவேள் (நிர்வாக ஆசிரியர்). யாழ்ப்பாணம்: கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, 1வது பதிப்பு, மே 1997. (யாழ்ப்பாணம்: பாரதி பதிப்பகம், 430, காங்கேசன்துறை வீதி).

(6), 119 பக்கம், அட்டவணைகள், விலை: ஆண்டு சந்தா ரூபா 300., அளவு: 24x19 சமீ.

1994ஆம் ஆண்டிற்குரிய பங்குனி, ஆடி இதழ் பல்வேறு தடங்கல்களால் மே 1997இல் வெளியிடப்பட்டுள்ளது. இவ்விதழில் உள்ளூராட்சி அரசாங்கம்: ஒரு எண்ணக்கருக் கண்ணோட்டம் (அ.வே.மணிவாசகர்), சைவசித்தாந்த ஒழுக்கவியல் தேவிகாலோத்திர ஆகமப் போதனைகள் (சோ.கிருஷ்ணராஜா), பௌத்த களத்தில் கிறிஸ்தவ இறையியல்: லின் டீ சில்வாவின் இறையியல் அணுகுமுறை (ஐ. ஹென்றி விக்டர்), திருக்குறளில் "ஊழ்" (நா.சுப்பிரமணியன்), நடையியல் நோக்கில் நிலக்கிளி-காட்டாறு ஒப்பாய்வு (ம.இரகுநாதன்), இலங்கைப் பாடசாலைக் கலைத்திட்டத்தில் ஒன்றிணைந்த விஞ்ஞானத்தின் வளர்ச்சியும் அமுலாக்கமும் (சு.அருளானந்தம்), கல்வியும் சுயவேலை வாய்ப்புக்களும் சமன்பாடுகளின் பகுப்பாய்வு (சபா.ஜெயராசா), நிலப்பயன்பாட்டு வகைகளை மதிப்பீடு செய்தல் (S.T.P.இராஜேஸ்வரன்), பன்முகப்படுத்தப்பட்ட தலைமைத்துவ அமைப்புகள் சமூக உளவியல் நோக்கு (கே.சிவானந்தமூர்த்தி), இலங்கையை இலௌகீக ஆன்மீக வழிகளில் கைப்பற்றுதல் - சில குறிப்புகள் (எஸ்.கிருஷ்ணகுமார்), "சிந்தனை" ஆய்வுக் கட்டுரைகளின் விபரப் பட்டியல் (ச.சத்தியசீலன்) ஆகிய ஆய்வுப் படைப்பாக்கங்களை இவ்விதழ் கொண்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 24507).

### 12408

**சிந்தனை: தொகுதி VI இதழ் 3 (நவம்பர் 1994).** இராசரத்தினம் சிவசந்திரன் (இதழாசிரியர்). யாழ்ப்பாணம்: கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, 1வது பதிப்பு, 1997. (யாழ்ப்பாணம்: மகாத்மா அச்சகம், ஏழாலை மேற்கு, ஏழாலை).

(9), 102 பக்கம், விலை: ரூபா 25., அளவு: 23.5x18.5 சமீ.

1994ஆம் ஆண்டிற்குரிய மூன்றாவது இதழ் பல்வேறு தடங்கல்களால் 1997இல் வெளியிடப்பட்டுள்ளது. இவ்விதழில் சிறுவர்களும் அசைவுகளுக்கூடான கல்வியும்(சபா.ஜெயராசா), அரசியல் அபிவிருத்தியில் கட்சிகளை இனங்காணலும் வகைப்படுத்தலும் மதிப்பிடலும் (அ.வே.மணிவாசகர்), செங்கை ஆழியானின் நாவல்களில் வரும் உரையாடல்களின் மொழி பற்றிய சில குறிப்புகள் (ம.இரகுநாதன்), சங்ககால இந்திய மெய்யியல்-ஒருநோக்கு (கே.சிவானந்தமூர்த்தி), தலித்தியமும் அதன் கலை இலக்கியப் பார்வைகளும்: ஓர் அறிமுகம் (நா. சுப்பிரமணியன்), யாழ்ப்பாண இராச்சியமும் 1591ஆம் ஆண்டில் இடம்பெற்ற நல்லூர் உடன்படிக்கையும் (சோமேசசுந்தரி கிருஷ்ணகுமார்), இலங்கைப் பாடசாலைகளில் ஆரம்பமட்ட விஞ்ஞான பாடமும் அதில் உயிரியல் தொடர்பான அம்சங்களும் (சுசிலா அருளானந்தம்), அறிவும் உணர்வும் அரசியலும்: பௌத்தம் துரோகம் செய்தது? (என்.சண்முகலிங்கன்), சோழர்காலத் தமிழகத்தில் சமூக ஒன்றுகூடல் மையங்களின் முகாமைத்துவம்: சாசனச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு (செல்லையா கிருஷ்ணராசா), சூழல்பேண் புதிய பொருளாதார ஒழுங்கும் இயற்கை வேளாண்மையும் (இரா.சிவசந்திரன்) ஆகிய பத்து ஆய்வுக் கட்டுரைகள் இவ்விதழில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 24508).

### 12409

**சிந்தனை (தொகுதி VII, இதழ் 1/3).** இராசரத்தினம் சிவசந்திரன் (இதழாசிரியர்). யாழ்ப்பாணம்: கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, 1வது பதிப்பு, 1998. (கொழும்பு 12: ஜே அன்ட் எஸ். சேர்விஸஸ் அச்சகம், 115 மெசெஞ்சர் வீதி).

(8), 105 பக்கம், விலை: ஆண்டு சந்தா ரூபா 300., அளவு: 24x19 சமீ.

சிந்தனை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீட ஆய்விதழாகும். வருடத்திற்கு மூன்று இதழ்களாகத் தொடங்கிய இவ்விதழின் 7ஆவது ஆண்டின் மூன்று இதழ்களினதும் இணைந்த பிரசுரமாக இது வெளிவந்துள்ளது. இவ்விதழில் இனத்துவக் கணித சிந்தனை-சில அறிமுகக் குறிப்புகள் (சோ.சந்திரசேகரன்), சைவசித்தாந்தம் காட்டும் மனித விழுமியங்கள்-சில சிந்தனைகள் (நா. ஞானகுமாரன்), தென்னாட்டு வைணவ பக்திநெறியில் இராமானுஜர் (விக்னேஸ்வரி சிவசம்பு), செல்வச்சந்நிதி ஆலய வழிபாட்டு மரபு- ஒரு குறிப்பு (நாச்சியார் செல்வநாயகம்), பூநகரிப் பிராந்திய தொல்லியல் மேலாய்வில் கிடைத்த தொல் பொருள் சின்னங்கள்: ஒரு வரலாற்று ஆய்வு (பரமு புஷ்பரட்ணம்), சமயஅறிவில்

தமிழ்க் கல்வியின் பங்கு (கலைவாணி இராமநாதன்), நவீன தமிழ்க் கவிதைப் பரப்பில் சோலைக்கிளியின் கவிதைகள் (செ.யோகராசா), பத்துப்பாட்டின் கவிதையியல் (கார்த்திகேசு சிவத்தம்பி), பிராந்திய ஒத்துழைப்பிற்கான தெற்காசியச் சங்கம் - அமைப்பும் பிரச்சினைகளும் (தனபாலசிங்கம் கிருஷ்ணமோகன்) ஆகிய ஒன்பது ஆய்வுக் கட்டுரைகள் இம்மலரில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 24510).

### 12410

**சிந்தனை: தொகுதி VIII 1996 முதல் தொகுதி XI 1999 வரை இணைந்த வெள்ளிவிழாச் சிறப்பிதழ்.** இராசரத்தினம் சிவச்சந்திரன் (இதழாசிரியர்). யாழ்ப்பாணம்: கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, 1வது பதிப்பு, நவம்பர் 1999. (அச்சக விபரம் தரப்படவில்லை).

(8), 142 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 25x20 சமீ.

வெள்ளிவிழாச் சிறப்பிதழாக வெளிவந்திருக்கும் இப்பதிப்பில் சுதந்திர இலங்கையில் கல்வியில் மொழிக் கொள்கை: பயன் நோக்கிய சிந்தனைகள் (வ.ஆறுமுகம்), இலங்கையில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் தேசிய மறுமலர்ச்சியும் கல்வியில் சுதேச மொழிகளின் எழுச்சியும் (அனுஷ்யா சத்தியசீலன்), தண்டனையும் தண்டனைக் கொள்கைகளும் (கந்தசாமி அன்ரன் டயஸ்), மெய்யியலில் ஐயவாதம் (கனகசபை சிவானந்தமூர்த்தி), சர்வதேச ரீதியான தொழிலாளர் குடிபெயர்வும் விளைவுகளும் (மா.செ.மூக்கையா), யாழ்ப்பாண மாவட்ட தீவக மக்களின் நம்பிக்கைகள்: ஓர் ஆய்வு நோக்கு (கி.விசாகரூபன்), யாழ்ப்பாணக் குடாநாட்டின் உள்நாட்டுக் கடல்நீரேரி நிலவுருவங்கள் (எஸ்.ரி.பி. இராஜேஸ்வரன்), யாழ்ப்பாணத்து மரபுவழிப் பெண்கல்வி (சபா.ஜெயராசா), இலங்கை முஸ்லிம்களின் கல்விமொழி மாற்றம்: சில பிரச்சினைகள் (எம்.ஏ.நுஃமான்), செய்மதித் தொலை உணர்வுத் தொழில்நுட்பம்: எண்ணக்கருக்களும் பிரயோகங்களும் (கருணாகரன் சுதாகர்), இடைநிலைப் பாடசாலை மாணவரது கல்வியில் தாக்கம் கொள்ளும் பாடசாலை வளங்கள் பற்றிய ஒரு நோக்கு- யாழ் மாவட்டத்தை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு (சுசீலா அருளானந்தம்), இலங்கையின் தகவல் தொடர்பாடலில் தமிழ் (இராசரத்தினம் சிவசந்திரன்) ஆகிய 12 படைப்பாக்கங்கள் இடம்பெற்றுள்ளன.

### 12411

**சிந்தனை தொகுதி XII, இதழ் 1.(மார்ச் 2000).** சோமேசசுந்தரி கிருஷ்ணகுமார் (இதழாசிரியர்), எஸ்.சூசை (நிர்வாக ஆசிரியர்). யாழ்ப்பாணம்: கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, 1வது பதிப்பு, 2001. (யாழ்ப்பாணம்: எஸ்.எஸ்.ஆர். கொம்பியூட்டர் அன் ஒப்செட் பிரின்டர்ஸ், 537 சிவன்கோவில் வீதி, திருநெல்வேலி).

101 பக்கம், விலை: ஆண்டு சந்தா ரூபா 600., அளவு: 25x18.5 சமீ.

இவ்விதழில் ஈழமும் சங்ககால முதுமக்கள் தாழிகளும்-ஓர் ஆய்வு (சி.க.சிற்றம்பலம்), மார்க்ஸினது மெய்யியலின் ஊற்றும் போயாபார்க் கருத்துரைகளும் (சோ. கிருஷ்ணராஜா), ஈழத்துப் புனைகதைகள் பற்றிய ஆய்வு முயற்சிகள் (ம.இரகுநாதன்), இலங்கைத் தமிழ் சிங்கள நாவல்களின் தோற்றம் (சாமிநாதன்-விமல்), அந்நியமாதல் பற்றிய பிரச்சினை ஓர் ஆய்வு (க.சிவானந்த மூர்த்தி), வளர்முக நாடுகளில் பெண்கல்வி விருத்திக்கான மீள் சிந்தனை (மா.சின்னத்தம்பி), தமிழ்ப் பிரதேசத்தில் குடியேற்றத் திட்டங்களும் அவற்றின் அரசியல் பரிமாணங்களும் (ச.சகாயசீலன்), யாழ். குடாநாட்டில் மீன்பிடித் தடைகளும் மீனவர் எதிர்நோக்கும் பிரச்சினைகளும் (ஆ.சூசை), தொலை உணர்வுத் தொழில்நுட்பம் ஊடாக மேற்பரப்பு நீர் நிலைகளைப் படமாக்கல் (கருணாகரன்-சுதாகர்), ஈழத்தில் தமிழ் மொழிபெயர்ப்பும் கலைச்சொல்லாக்கமும் (செல்வரஞ்சிதம் சிவசுப்பிரமணியம்), இந்து மரபுக் கல்வியின் ஆன்மீக சிந்தனைகள் (ஜெ.இராசநாயகம்) ஆகிய 11 ஆய்வுக் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

### 12412

**சிந்தனை தொகுதி XIV, இதழ் 1 (பங்குனி 2004).** கார்த்திகேசு குகபாலன் (இதழாசிரியர்), சோ.கிருஷ்ணராசா (நிர்வாக ஆசிரியர்). யாழ்ப்பாணம்: கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, 1வது பதிப்பு, மார்ச் 2004. (யாழ்ப்பாணம்: கரிகணன் தனியார் நிறுவனம், இல. 424, காங்கேசன்துறை வீதி).

127 பக்கம், விலை: ஆண்டு சந்தா ரூபா 600., அளவு: 24x17.5 சமீ.

இவ்விதழில் சமகால நோக்கில் இலங்கையில் சைவசமயம்-ஓர் ஆய்வு (நா. ஞானகுமாரன்), யாழ்ப்பாணத் தமிழில் பால்காட்டும் பெயராக்க உருபுகள் (சிவராணி சிறீசற்குணராசா), தமிழிலக்கணப் பாற்பகுப்பின் அடிப்படை (க.இரகுபரன்), மிருச்சகடிகம் சமகால சமூகத்தைப் பிரதிபலிக்கும் சமஸ்கிருத நாடகம் (சிறிகலா ஜெகநாதன்), நடப்பியல்-ஓர் அறிமுகம் (க.விசாகரூபன்), சிவானந்தலஹரி காட்டும் பக்திநெறி (விஜயலட்சுமி சிவச்சந்திரன்), தொழில்வாய்ப்பு மற்றும் பல்கலைக்கழகங்கள்: அடிப்படையும் பிரச்சினைகளும்-வளர்முக நாடுகளை அடிப்படையாகக் கொண்டது (மா.சின்னத்தம்பி), கந்தபுராணம் காட்டும் முருகவடிவங்கள் (மா.வேதநாதன்), டானியலின் படைப்புகளில் நடைநயம் (ம.இரகுநாதன்), தென்னிந்திய சாஸ்திரீய இசையில் 32 தாய்ராகப் பட்டியலை நடைமுறைக்குக் கொண்டுவருதல்: ஓர் ஆய்வுக் கண்ணோட்டம் (ஸ்ரீ தர்ஷணன்), மாறிவரும் பால்விகித மாற்றத்தில் பெண்கள்: ஒரு சமூக குடிப்பள்ளியியல் நோக்கு (கா.குகபாலன்) ஆகிய ஆய்வுக் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. பங்குனி 2004இல் முதலாவதாக வெளிவந்துள்ள இவ்விதழின் தொகுதி ix எனத் தவறாக சிந்தனை இதழில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### 12413

**சிந்தனை தொகுதி XIV, இதழ் 2 (ஜுலை 2004).** கார்த்திகேசு குகபாலன் (இதழாசிரியர்), சோ.கிருஷ்ணராசா (நிர்வாக ஆசிரியர்). யாழ்ப்பாணம்: கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, 1வது பதிப்பு, ஜுலை 2004. (யாழ்ப்பாணம்: கரிகணன் தனியார் நிறுவனம், இல. 424, காங்கேசன்துறை வீதி).

129 பக்கம், விலை: ஆண்டு சந்தா ரூபா 600., அளவு: 23x18 சமீ.

இவ்விதழில் யாழ்ப்பாணக் குடாநாட்டின் புகையிலை வர்த்தகத்தில் மலையாளம் (க.அருந்தவராஜா), இந்துக்களின் கனவுக்கோட்பாடு (க.அன்ரன் டயஸ்), இந்து சமயத்தில் பழமொழிகள் (இ.கயிலைநாதன்), இலங்கைப் புகலிட நாவல்கள் (செ.யோகராசா), யாழ்ப்பாணத் தமிழரிடையே வழங்கும் "சத்தியம் செய்தல்" குறித்த நம்பிக்கை வழக்கம் (கிருஷ்ணபிள்ளை விசாகரூபன்), மெய்யியலில் கெடுதி பற்றிய பிரச்சினை-ஓர் ஆய்வு (நா.ஞானகுமாரன்), முன்பள்ளிக் குழந்தைகளிடையே காணப்படும் பிரச்சினைகளும், அவற்றைக் கையாளும் முறைகளும் (ஜெ.இராசநாயகம்), இலங்கையில் கிடைத்த பார்வதி வெண்கலச் சிலைகள் (செல்லையா கிருஷ்ணராசா), இந்து மக்களின் பரம்பல்-கலாசார குடிப் புள்ளியியல் நோக்கு (கா.குகபாலன்), ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் இலக்கணச் சுருக்கம்: ஓர் அறிமுகம் (பொ.செங்கதிர்ச்செல்வன்), தந்திரோபாய உருவாக்கற் செய்முறையில் வெளிச்சூழல் ஆய்வின் பங்கு (க.தேவராசா) ஆகிய 11 ஆய்வுக் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

### 12414

**சிந்தனை (தொகுதி XV, இதழ் 1).** கார்த்திகேசு குகபாலன் (இதழாசிரியர்). யாழ்ப்பாணம்: கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, 1வது பதிப்பு, மார்ச் 2005. (யாழ்ப்பாணம்: கரிகணன் தனியார் நிறுவனம், இல. 424, காங்கேசன்துறை வீதி).

(6), 125 பக்கம், விலை: ஆண்டு சந்தா ரூபா 600., அளவு: 24x18.5 சமீ.

சிந்தனை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீட ஆய்விதழாகும். வருடத்திற்கு மூன்று இதழ்களாகத் தொடங்கிய இவ்விதழின் 15ஆவது ஆண்டின் முதலாவது இதழ் இது. இலங்கைத் தமிழர் குடிபெயர்வு மலாய-மேற்குலகக் குடிபெயர்வு: ஓர் ஒப்பீட்டாய்வு (ச.சத்தியசீலன்), யாழ்ப்பாணப் பிரதேச மணற் படிவுகளின் தோற்றமும் பரவலும்: கொலோசீன் கால கடற்பெருக்கு நிகழ்வுகளுடன் தொடர்புபட்ட முறையிலான ஓர் புவியியல் நோக்கு (S.T.B.இராஜேஸ்வரன்), ஈழத்து சிற்றிலக்கியங்களின் மரபு (செல்வரஞ்சிதம் சிவசுப்பிரமணியம்), சமஸ்கிருத மொழியும் சர்வதேச வலைப் பின்னலும்-ஓர் ஆய்வு (க.நவநீதகிருஷ்ணன்), ஈழத்தில் வைஷ்ணவப் படிமக்கலைப் பாரம்பரியம் காட்டும் விக்கிரகவியல் பண்பாட்டுச் சிறப்பியல்புகள்-ஓர் ஆய்வு (செ.கிருஷ்ணராசா), தென்னிந்திய சாஸ்திரீய இசையின் ஆரம்பப் பயிற்சிக்கு மிகவும் பொருத்தமான இராகத்தைக் கண்டறிவதற்கான செயல்நிலை ஆய்வு (ஸ்ரீதர்ஷனன்), பண்பாடும் கல்வியும்

(ஜெயலக்சுமி இராசநாயகம்), தொல்காப்பியத்தில் இசைச் செய்திகள் (கிருபாசக்தி கருணா), நிரந்தரமற்றவற்றை நிரந்தரமாக்கல்: யாழ்ப்பாணத்துக் கோயில் முக மண்டபங்களின் கோல, நிலை மாற்றங்கள் (தா.சனாதனன்), இராமகிருஷ்ண பரமஹம்சரின் சிந்தனை:ஒரு நோக்கு (நாச்சியார் செல்வநாயகம்) ஆகிய ஆய்வுக் கட்டுரைகள் இவ்விதழில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 12415

**சிந்தனை (தொகுதி XV, இதழ் 2).** செல்லையா கிருஷ்ணராசா (இதழாசிரியர்), எஸ்.சந்திரசேகரம் (நிர்வாக ஆசிரியர்). யாழ்ப்பாணம்: கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, 1வது பதிப்பு, ஜுலை 2015. (யாழ்ப்பாணம்: கரிகணன் தனியார் நிறுவனம், இல. 424, காங்கேசன்துறை வீதி).

103 பக்கம், விலை: ஆண்டு சந்தா ரூபா 600., அளவு: 24.5x19 சமீ., ISSN: 2478-1061.

சிந்தனை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீட ஆய்விதழாகும். வருடத்திற்கு மூன்று இதழ்களாகத் தொடங்கிய இவ்விதழின் 15ஆவது ஆண்டின் முதலாவது இதழ் 2005இல் வெளிவந்த நிலையில், இரண்டாவது இதழ் பத்தாண்டுகள் கழிந்து 2015இல் வெளிவந்துள்ளது. இவ்விதழில் இலங்கையில் தமிழ் கற்றல்-கற்பித்தல்: தற்கால நடைமுறைகளும் சவால்களும் (ஆ. நித்திலவர்ணன்), உலக இலக்கியம் பற்றிய எண்ணக்கருவும் தமிழ் இலக்கியச் சூழலும்: மாற்றத்தினை வேண்டிநிற்கும் தமிழாய்வுச் சூழல் குறித்ததோர் ஆய்வுநோக்கு (ஈ.குமரன்), நீரிழிவு நோயில் யாழ்ப்பாணத்து மருத்துவ மூலிகைகள் செயற்படும் திறன் பற்றிய ஓர் ஆய்வு (ஸ்ரீ.அன்புச்செல்வி, க.ஸ்ரீதரன்), கல்வி உலகின் மாற்றத்தில் முக்கிய பங்குதாரர்களாகிய ஆசிரிய ஆய்வாளர்கள்: புதிய சிந்தனைப் போக்குகளும் செயற்பாடுகளும் (ஜெயலட்சுமி இராசநாயகம்), இனப்படுகொலைகளும் ஐக்கிய நாடுகள் சபையின் பொறுப்புக் கூறுதலும்: ஒரு நுணுக்கப்பட்ட பகுப்பாய்வு (த.கிருஷ்ணமோகன்), சம்பந்த சரணாலயரின் தத்துவ விளக்கமும் ஸ்ரீ காசிவாசி செந்திநாதையரின் உரைச் சிறப்புகளும் (பொ. சந்திரசேகரம்), சர்வதேச அரசியலில் புதிய கோட்பாட்டின் எழுச்சி: ஒருநோக்கு (கே.ரி.கணேசலிங்கம்), காலனிய யாழ்ப்பாணத்தில் சுதேச உயர் குழாமினர்: மரபும் உருமாற்றமும் பற்றிய ஒரு வரலாற்றுச் சமூகவியல் பார்வை (இராஜேஸ்வரன் இராஜேஸ்கண்ணன்), இக்கட்டான நிலையில் மீன்பிடித்தல்: பாக்குக்குடா பிரதேசத்தில் எல்லைதாண்டும் அத்துமீறல்-ஓர் ஆய்வு: ஏ.எஸ்.சூசை, ஜே.இஸ்கொல்டன், எம்.பாவின்க்), நூல்மதிப்புரை: முனைவர் பக்தவத்சலபாரதியின் இலக்கிய மானிடவியல்: தமிழ்ச் சமூகத்தின் செல்நெறிகளின் மீதான பண்பாட்டியல் பார்வை (என்.சண்முகலிங்கன்) ஆகிய பத்து ஆய்வுக்கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. (இந்நூல் நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 036388).

### 12416

**சிந்தனை (தொகுதி XV, இதழ் 3).** செல்லையா கிருஷ்ணராசா (இதழாசிரியர்), எஸ்.சந்திரசேகரம் (நிர்வாக ஆசிரியர்). யாழ்ப்பாணம்: கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, 1வது பதிப்பு, நவம்பர் 2015. (யாழ்ப்பாணம்: கரிகணன் தனியார் நிறுவனம், இல. 424, காங்கேசன்துறை வீதி).

v, 117 பக்கம், விலை: ஆண்டு சந்தா ரூபா 1500., அளவு: 24.5x19 சமீ., ISSN: 2478-1061.

இவ்விதழில் புறவயநிலையில் இலங்கைத் திருச்சபை வரலாற்றில் விளக்கம் அளிப்பதில் எதிர்கொள்ளப்படுகின்ற சவால்கள்: குறிப்பாக போர்த்துக்கேயர் கால ஆவணங்களை மையமாகக் கொண்டது (வணபிதா ஞா.பிலேந்திரன்), உள்நாட்டு யுத்தத்திற்குப் பின்னர் இலங்கையில் நல்லிணக்கத்தினை கட்டியெழுப்புதல்: சவால்களும் சந்தர்ப்பங்களும் (த.கிருஷ்ணமோகன்), யுத்தத்திற்குப் பின்னரான சூழலில் இலங்கையின் வடமாகாண பாடசாலை மாணவர்க்குரிய பொதுப்பரீட்சைகளின் பெறுபேறுகளிலான தளம்பல்கள்: அவற்றுக்கான காரணங்கள் மற்றும் தீர்வுகள் (ஆ.நித்திலவர்ணன்), யாழ்ப்பாணத்தில் பழப்பாகு தயாரிப்புக்களில் தரநிர்ணய அளவீடுகள்: ஓர் ஆய்வு (பத்மாசனி குலராஜசிங்கம், அருளானந்தம் கிறிஸ்ரி தவரஞ்சித்), வாழ்வாதாரச் சொத்துக்களை படமாக்கலும் வறுமையின் பரிமாணமும்: ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவை சிறப்பாகக் கொண்டது (சுபாஜினி உதயராஜா, கருணாகரன் சுதாகர்), குடியேற்றங்களால் உருவான தொன்மங்கள்-நல்லூர் அரசமரபின் உருவாக்கத்திற்கு அடிப்படையாக அமைந்த குடியேற்றங்கள் தந்த தொன்மங்கள் பற்றிய ஆய்வு (செல்லையா கிருஷ்ணராசா), யாழ்ப்பாணப் பொருளாதாரக் கட்டமைப்பு (1930-1953): ஈழகேசரிப் பத்திரிகையினை அடிப்படையாகக் கொண்டது (கா.அருந்தவராஜா), யாழ்ப்பாண மாவட்டத்தில் காலநிலை மாற்றமும் தணிப்பு நடவடிக்கைகளும் (நா.பிரதீபராஜா) ஆகிய ஆய்வுக் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 61369).

### 12417

**சிவசக்தி 1967-1968: றோயல் கல்லூரி இந்து மாணவர் மன்ற ஆண்டுமலர்.** R.R.நவரட்ணம், K.ஓம்பிரசாதம் (ஆசிரியர் குழு). கொழும்பு 7: இந்து மாணவர் மன்றம், றோயல் கல்லூரி, 1வது பதிப்பு, 1968. (கொழும்பு 2: அரசன் அச்சகம்).

(24), 48 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x18 சமீ.

கொழும்பு றோயல் கல்லூரி இந்து மாணவர் மன்றத்தின் ஆண்டு மலர் இது. ஆசியுரைகள், அறிக்கைகள், வர்த்தக விளம்பரங்களுக்கிடையே தமிழ் அறிஞர்கள், மாணவர்களின் இந்துசமயக் கட்டுரைகள் ஆங்காங்கே இடம்பெற்றுள்ளன. கந்தபுராணமும் நாவலர் பெருமானும் (பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை), பாரதிக்குச் சிவசக்தி அளித்த குருவருள் சேர் திருவருள் பொலியும் ஈழவளநாடு (க.கணபதிப்பிள்ளை), வழித்துணை வே.குமாரசாமி), இந்து சமயமும் காந்தியத்

தத்துவங்களும் (ஆர்.கந்தையா), சிந்தனைக்கு (அ.க.சர்மா), இலங்கையில் நாகவழிபாட்டுத் தலங்கள் (ஆர்.சுப்பிரமணியம்), சமயக் குரவர்கள் சைவசமய வளர்ச்சிக்கு ஆற்றிய தொண்டுகள் (க.சங்குகன்), இலங்கையின் பாடல்பெற்ற தலங்கள் (பொ.சூரியகுமார்), நெறி காட்டும் திரு (மு.மகாலிங்கம்), அருள்நோக்கு (நா.தேவமனோகரன்), பெண்மை காட்டிய நெறி (நா.தேவமனோகரன்), பக்தி நெறி (ம.முருகேசு), ஆசை (T.ஸ்ரீதரன்), சமயக்கல்வி (எஸ்.மனோகரன்), நல்லவண்ணம் வாழவைக்கும் நவராத்திரி (ந.சிவானந்தன்) ஆகிய தமிழ்ப் படைப்பாக்கங்களும் ஏழு ஆங்கிலப் படைப்பாக்கங்களும் இம்மலரில் இடம் பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 4583).

## 12418

**தமிழ் ஆரம் 2016**. சுகிர்தா சிவசுப்பிரமணியம், டிலக்ஷிகா அரவிந்தன் (இதழாசிரியர்கள்). யாழ்ப்பாணம்: தமிழ் மன்றம், யாழ். இந்து மகளிர் கல்லூரி, 1வது பதிப்பு, 2016. (யாழ்ப்பாணம்: கரிகணன் பதிப்பகம், 681, காங்கேசன்துறை வீதி).

xvii, 90 பக்கம், அட்டவணைகள், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x19 சமீ.

யாழ். இந்து மகளிர் கல்லூரியின் தமிழ் மன்றத்தினரால் வெளியிடப்பட்ட "தமிழ் ஆரம்" என்ற கல்லூரி ஆண்டிதழின் மூன்றாவது பிரசுரம் இது. மாணவர்கள், ஆசிரியர்களின் படைப்பாக்கங்கள் இடம்பெற்றுள்ளன. தோல்விகள் தடையல்ல, உலக தாய்மொழித் தினம், வாசிப்புத் திறனை மேம்படுத்துவோம், தங்கத்தமிழ், விஞ்ஞானமும் இலக்கியமும், இன்றைய வாழ்வில் இசைத்துறையின் பங்களிப்பு என இன்னோரன்ன 42 தலைப்புகளில் இவை எழுதப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 61217).

## 12419

**தமிழோவியம் 1945-2014**. செ.கேசவன், செ.விவேக், வி.ஆதர்ஷன் (இதழாசிரியர்கள்). கொழும்பு: தமிழ் இலக்கிய மன்றம், பரி.தோமாவின் கல்லூரி, 1வது பதிப்பு, 2014. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளூமெண்டால் வீதி).

xxiv, 157 பக்கம், தகடுகள், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x17 சமீ.

கொழும்பு பரி.தோமாவின் கல்லூரி தமிழ் இலக்கிய மன்றத்தினரின் ஆண்டு மலர், பிரமுகர்களின் ஆசியுரைகள், கல்லூரியின் அறிக்கைகள், ஆசிரியர், மாணவர்களின் படைப்பாக்கங்களுடன் வெளிவந்துள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 61653).

### 12420

**தாரகை - இதழ்18:2014.** க.வினோஷியா, ரா.சுகிர்தா (இதழாசிரியர்கள்). கொழும்பு: வுல்வெண்டால் பெண்கள் உயர்தரப் பாடசாலை, 1வது பதிப்பு, 2014. (கொழும்பு 11: அஷ்டலட்சுமி பதிப்பகம், 320, செட்டியார் தெரு).

226 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x18.5 சமீ.

கொழும்பு வுல்வெண்டால் பெண்கள் உயர்தரப் பாடசாலை மாணவியரால் ஆண்டுதோறும் வெளியிடப்படும் தாரகை ஆண்டிதழின் 18ஆவது இதழ் இது. ஆசிச் செய்திகள், கல்லூரி அறிக்கைகளையும், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்களின் ஆக்கங்களுடன் இணைத்து இவ்வாண்டுமலர் பிரசுரமாகியிருக் கின்றது. இலைமறை காயாக மாணவர்களிடம் காணப்படும் ஆற்றல்களையும், ஆளுமைகளையும், திறன்களையும் வெளிக்கொண்டுவரும் களமாக இது அமைகின்றது. தாரகையின் இதழ்ப் பொறுப்பாசிரியர்களாக திருமதிகள் கோசலை ரவீந்திரன், கோமளவதி மதியழகன், மே.சு.இராஜகுலநாதன், ஹே.யோகநாதன், ஜோ.சரோஜினிதேவி, செல்வி தயாளினி நடேசு ஆகியோர் செயற்பட்டிருந்தார்கள். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 61264).

### 12421

**தாரகை - இதழ்19:2015.** சி.ஸஹானா, பா.ஸாஹிரா (இதழாசிரியர்கள்). கொழும்பு: வுல்வெண்டால் பெண்கள் உயர்தரப் பாடசாலை, 1வது பதிப்பு, 2015. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

177 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x17.5 சமீ.

கொழும்பு வுல்வெண்டால் பெண்கள் உயர்தரப் பாடசாலை மாணவியரால் ஆண்டுதோறும் வெளியிடப்படும் தாரகை ஆண்டிதழின் 19ஆவது இதழ் இது. பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்களின் ஆக்கங்களுடன், கல்லூரி அறிக்கைகளையும் சேர்த்து இவ்வாண்டுமலர் பிரசுரமாகியிருக்கின்றது. இலைமறை காயாக மாணவர்களிடம் காணப்படும் ஆற்றல்களையும், ஆளுமைகளையும், திறன்களையும் வெளிக்கொண்டுவரும் களமாக இது அமைகின்றது. தாரகையின் இதழ்ப் பொறுப்பாசிரியையாக திருமதி கோ.மதியழகன் செயற்பட்டிருந்தார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 61263).

### 12422

**தாரகை - இதழ்20:2016.** பாத்திமா நஸீரா நிஜாம், துர்க்கா சுப்பிரமணியம் (இதழாசிரியர்கள்). கொழும்பு: வுல்வெண்டால் பெண்கள் உயர்தரப் பாடசாலை, 1வது பதிப்பு, 2016. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

241 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x17.5 சமீ.

கொழும்பு வுல்வெண்டால் பெண்கள் உயர்தரப் பாடசாலை மாணவியரால் ஆண்டுதோறும் வெளியிடப்படும் தாரகை ஆண்டிதழின் 20ஆவது இதழ் இது. பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்களின் ஆக்கங்களுடன், கல்லூரி அறிக்கைகளையும் சேர்த்து இவ்வாண்டுமலர் பிரசுரமாகியிருக்கின்றது. இவ்விதழ் வெளியீட்டின் பொறுப்பாசிரியராக திருமதி இ.சுரேஷ்குமார், திருமதி ச.புவிராஜன் ஆகியோர் செயற்பட்டுள்ளனர்.

## 12423

**தூரிகை 2007.** உயர்தர மாணவர் மன்றம். கொழும்பு 14: புனித அந்தோனியார் தமிழ் மகா வித்தியாலயம், மகாவத்தை, 1வது பதிப்பு, 2007. (கொழும்பு: அச்சக விபரம் தரப்படவில்லை).

(10), 124 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 29x21 சமீ.

கொழும்பு மாவத்தை புனித அந்தோனியார் தமிழ் மகா வித்தியாலயத்தினால் வெளியிடப்படும் சிறப்பு மலர். இதில் அறிக்கைகள், நிர்வாகக் குழுவினரின் ஆசியுரைகளுடன் மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் படைப்பாக்கங்கள் கட்டுரை, கதை, கவிதைகளாக இந்நூலில் இடம்பெற்றுள்ளன. பரதக் கலை ஒரு தெய்வீகக் கலை, கால அடிப்படையில் இந்து மதம், தொலைக்காட்சித் தொடர்கள், மனித வாழ்வில் மது, இலங்கையில் இயற்கை வளங்கள், சைவ வாழ்வில் அறிந்திருக்க வேண்டியவை போன்ற இன்னோரன்ன தலைப்புகளில் இக்கட்டுரை களும் கவிதைகளும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 44346).

## 12424

**தென்மதி: தென்மராட்சிக் கல்வி வலய வெளியீடு ஆடி-மார்கழி 2013** . க.க.ஈஸ்வரன், ச.பத்மநாதன் (பதிப்பாசிரியர்கள்). சாவகச்சேரி: வலயக் கல்வி அலுவலகம், தென்மராட்சி, 1வது பதிப்பு, 2013. (யாழ்ப்பாணம்: நோபிள் பிரின்டர்ஸ், 103, பலாலி வீதி).

65 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14 சமீ.

தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகம் வெளியிடும் அரையாண்டுச் சஞ்சிகையின் நான்காவது இதழ் இது. இம்மடல் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், தொழில் நுட்பம் ஆகிய துறைகளில் ஆசிரியர்களினதும் மாணவர்களினதும் துறைசார் வல்லுநர்களினதும் படைப்பாக்கங்களின் தொகுப்பாக வெளிவந்துள்ளது, வேர்ல்ட் விஷன் அமைப்பின் நிதியுதவியுடன் இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது. கணித வினாடி வினாப்போட்டி 2013, க.பொத. சா/த. மாணவர்களுக்கான விசேட செயற்பாடுகள், க.பொத. சா/த. மாணவர்களுக்கான கணிதச் செயற்பாடுகள், எனது பார்வையில் புத்தாக்கம், கணிதத்தில் தேற்றம், கருவிலிருந்து கல்லறை

வரை கணிதத்தின் பங்கு, உயர்தரத்தில் ஒரு மைல்கல்-தொழில்நுட்ப பாடத்துறையின் அறிமுகம், தெரிந்தும் தெரியாதவை பிரமிட், தொழில்நுட்ப பாடத்துறை சார்ந்த மாணவர்களுக்கான தொழில் வழிகாட்டல் செயலமர்வு 2013, பாடசாலை கணினி வன்பொருள் வலையமைப்பு, இலங்கையில் க.பொ.த. உ/த தொழில்நுட்பத்துறை, தென்மராட்சி கல்வி வலயத்தில் தொழில்நுட்பத்துறை, கணிதத்தின் பெருமை, தரம் 6 கணிதச் செயற்பாட்டு முகாமும் மதிப்பீடும் 2013, தரம் 7 மாணவர் அடைவு அதிகரிப்பும் ஆசிரியர்களின் கற்றல் வாண்மை விருத்தியும், க.பொ.த. உயர்தர பாடத்துறைகளும் பாடச் சேர்மானங்களும், தேசிய கல்விக் கல்லூரிகளின் தேவைப்பாடுகளும் க.பொ.த. உ/த, சா/த மாணவர்களும் ஆகிய 19 தலைப்புகளில் கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 58477).

### 12425

**நித்திலம்: தமிழ் மொழித்தினவிழா மலர் 1998**. எஸ்.எதிர்மன்னசிங்கம் (தொகுப்பாசிரியர்). திருக்கோணமலை: வடக்கு கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களம், 1வது பதிப்பு, ஜுன் 1998. (திருக்கோணமலை: ஸ்ரீ கணேச அச்சகம்).

(14), 28 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x19 சமீ.

திருக்கோணமலை வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் வருடாந்தம் நடத்தும் தமிழ் மொழித்தின விழாவினையொட்டி வெளியிடப்படும் சிறப்பு மலர் இதுவாகும். அப்பிரதேசத்தின் மாணவர்கள், ஆசிரியர் மற்றும் கல்வியியலாளர்களின் பல்துறை ஆய்வுகள், ஆக்கங்கள் என்பன பல்வேறு படைப்பாக்கங்களின் வாயிலாக இதில் பதிவுசெய்யப்பட்டுள்ளன. பல்வேறு ஆசியுரைகளுடன் வெளிவரும் இம்மலரில், புதிய கல்விச் சீர்திருத்தங்கள் பாட ஏற்பாட்டு மாற்றங்கள் (சோ.சந்திரசேகரன்), தமிழன்னையிடம் ஒன்று கேட்பேன்-கவிதை (தவநேசன் பிரதாபன்), தமிழ் ஆளுமை: மொழி ஆளுகையின் தன்மையே ஒருவனின் ஆளுமை விருத்தியைத் தீர்மானிக்கிறது (எம்.எஸ்.ஸ்ரீதயாளன்), மாதா,பிதா,குரு,தெய்வம் (கே.ரெனிக்கா குரூஸ்), வெற்றிப் பாதை (பூ.சௌதாயினி), வெண் புறாவே விரைந்து வா-கவிதை (டி.பி.சந்திரலால்), மாலை நேரத்தில் கடற்கரைக் காட்சி (நீரஜா சிவகணேசன்), ஏற்றிய தீபம் - சிறுகதை (ஏ.கே. செபானா), பாரம்பரியக் கலைகள் மறக்கப்படக் கூடாதவை (ச.இரமணீகரன்), இனியொரு விதிசெய்வோம் - கவிதை (கந்தசாமி மோகனதாசன்) ஆகிய ஆக்கங்களுடனும், நிகழ்ச்சிகளில் பங்கேற்றுப் பரிசுபெற்ற போட்டியாளர்களின் பெயர்ப்பட்டியல், வடக்கு கிழக்கு மாகாணத் தமிழ்மொழித்தின விழாக்குழுச் செயலாளரின் செய்தியும் நன்றி நவிலலும் ஆகிய அம்சங்களும் இறுதியில் இடம்பெற்றுள்ளன. இம்மலர் வெளியீட்டுக் குழுவில் எஸ்.மகாலிங்கம், எஸ். எதிர்மன்னசிங்கம், எஸ்.நவரட்ணம், எஸ்.மகேஸ், எஸ்.இரமணீகரன், எஸ். பவளகாந்தன், எம்.பற்குணம், பீ.தண்டாயுதபாணி, என்.ஸ்ரீதேவி என ஒன்பது பேர் பணியாற்றியுள்ளனர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 34534. நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தின் சேர்க்கை இலக்கம் 004034).

## 12426

**நித்திலம் 2009.** *எஸ்.சிவநிர்த்தாநந்தா (பதிப்பாசிரியர்), ச.சிறிதரகுமார் (உதவிப் பதிப்பாசிரியர்). திருக்கோணமலை:* CSDI *பிரிவு, வலயக்கல்வி அலுவலகம், 1வது பதிப்பு, 2009. (திருக்கோணமலை: சண் பிரிண்டர்ஸ், 306 மத்திய வீதி).*

xvi, *193 பக்கம், அட்டவணைகள், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 29*x*20 சமீ.*

*திருக்கோணமலை வலயக்கல்வி அலுவலகத்தின்* CSDI *பிரிவு, வருடாந்தம் வெளியிடத் திட்டமிட்டுள்ள ஆண்டு மலர் வரிசையில் முதலாவது இதழ் இதுவாகும். ஆசிச் செய்திகள், வாழ்த்துச் செய்திகள், பதிப்பாசிரியர் உரைகளுடன் தமிழிலக்கணம் கற்பித்தல் (கா.சிவத்தம்பி), தமிழ் ஒரு செம்மொழி (அ. சண்முகதாஸ்), அறிவுசார் பொருளாதாரம் பற்றிய வரையறை (சோ.சந்திரசேகரம்), வகுப்பறை ஆளுமை (எம்.இளங்கோவன்), தமிழ்மொழிக் கற்கையின் பண்பும் பயனும் (மனோன்மணி சண்முகதாஸ்), நீர்மலி கண்ணொடு நினைப்பாகின்றோ (வ.மகேஸ்வரன்), இலங்கையில் மூன்றாம் நிலைக் கல்வி பரவலாக்கலும் நவீனமாக்கலும் (*T.*தனராஜ்), நவீன இலக்கிய வளர்ச்சியில் செ.கணேசலிங்கனது தடங்கள் (செ.யோகராசா), நாலாயிரந் திவ்வியப் பிரபந்தத்தில் இலங்கைத் தமிழர் நாட்டார் வழக்காற்றியல் கூறுகள் (சிவலிங்கம் சிவநிர்த்தானந்தா), சமணம்-ஓர் அறிமுகம் (அ.இலட்சுமி தத்தை), நாவலாசிரியர் செ.கணேசலிங்கன் ஓர் அறிமுகம் (கி.விசாகரூபன்), பண்களின் தோற்றமும் வளர்ச்சியும் (மீரா வில்லவராயர்), சுவாமி விபுலானந்தரின் நாடக நோக்கு (க.இரகுபரன்), நடிப்பும் பார்ப்போரும் (ஜெயரஞ்சனி ஞானதாஸ்), சர்வதேச வர்த்தகத்தின் மீதான தடைகளும் விளைவுகளும் (*A.A.M.*நபைல்), திண்மக் கழிவு முகாமைத்துவம் (*G.F.*லூயிஸ்), பாடசாலையும் தலைமைத்துவமும் (ந.விஜேந்திரன்), ஆசிரிய நண்பா (த. சுந்தரலிங்கம்), பாடசாலைகளில் மாணவர்களின் வரவு ஒழுங்கீனத்திற்கு காரணம் பெற்றோரின் கவலையீனமா? அல்லது பாடசாலை செயற்பாடுகளில் உள்ள கவர்ச்சியின்மையா?(*P.*ஜெராட்), ஆரம்பக் கல்வி மறுசீரமைப்பு-நடைமுறையும் பிரச்சினைகளும் (எஸ்.வரதசீலன்), இசையும் கல்வியில் அதன் பங்கும் (தே. முருகுப்பிள்ளை), இஸ்லாமும் கல்வியும் (ஜே.எம்.யூசுப்), செல்வத்துள் செல்வம் கல்விச் செல்வம் எம் சிறார்களை சென்றடைய வழி சமைப்போம் (ஓ.குலேந்திரன்), நனோ தொழில்நுட்பமும் அதன் பிரயோகமும் (ச.சுதாகரன்), உங்கள் பழைய கணனியை என்ன செய்யப் போகின்றீர்கள்: இலத்திரனியல் கழிவுகள் பற்றிய ஒரு பார்வை (மா.பாலசிங்கம்), திருக்கோணமலை கல்வி வலயத்தின் அபிவிருத்திச் செயற்பாடுகள்(க.அரியநாயகம்), அற்றைத் திங்கள் அவ்வெண்ணிலவில் (க.ஜெயநாதன்), ஆசிரியர் தொழிலும் வாண்மைத்துவமும் (இ.பரசுபாணி), அது ஒருஜனனம் (ஜனாப் எச்.சிஹாப்தீன்), முறைசாராக் கல்வி பற்றி ஒரு கண்ணோட்டம் (சு.கிருபானந்தன்), விசேட தேவைகளையுடைய சிறார்களின் உரிமைகளை உறுதிப்படுத்துவதில் பாடசாலைகளின் பங்கு (வ.மகேஸ்வரன்), ஆசிரிய ஆலோசகர் சேவை (சந்திரவதனா மகேந்திரஜோதி), கற்றல் கற்பித்தல் வளங்களைத் தயாரித்தலில் கல்வித் தொழில்நுட்பத்தின் பங்கும் ஆசிரியரும்*

(ச.தேவசகாயம்), திருக்கோணமலை வலயத்தின் தமிழ்மொழி மூல க.பொ.த.(சா.த.) பரீட்சை 2008-விஞ்ஞான பாட அடைவுமட்டப் பின்னடைவும் எதிர்கால நடவடிக்கைகளும் (ப.அரியநாயகம்), பாடசாலைகளில் வழிகாட்டல் ஆலோசனைச் சேவை (பீ.புவனேஸ்வரன்), உலக மேதைகளின் நகைச்சுவை, நேர முகாமைத்துவம் (ஜீ.மதியழகன்), இறைவார்த்தையின் பயன் (ஜே.கீதபொன்கலன்), நவீன சித்திரத்தின் வளர்ச்சி பற்றி அறிய ஆவலா? (எஸ்.கருணாகரன்), ஆரம்பக் கல்விப் புலத்தில் ஆசிரியரின் பங்கு (பத்மசிறீ ஜெயகாந்தன்), கல்விக்கான உணவு - உலக உணவுத் திட்டம் (ச.சதீஸ்காந்தன்), ஆசிரியர் (அருள்மணி விபுணசேகரம்), சிங்கப்பூரும் சிறப்புறு கல்வியும் (கி.உதயகுமார்), மாற்றுத் திறனுள்ள பிள்ளைகளும் உளவளத்துணையும் (த.மோகனராஜா), மாணவர்கள் மத்தியில் சூழல் தொடர்பான திறனை ஏற்படுத்துவதில் பாடசாலைகளின் வகிபாகம் (ஏ.பாலச்சந்திரமூர்த்தி), முரண்பாடுகள் தாண்டிய உடன்பாடு (ஜனாப் ஏ.ஜே.எம்.சாலி), கம்பன் கண்ட வாலி (எஸ்.பிரகாஷ்), இலக்கியத்தில் திறனாய்வு பற்றிய கண்ணோட்டம் (ஞா. யோகேஸ்வரன்), ஒளி (ஜனாப் ஏ.ஆர்.எம்.றியாட்), ஆசிரியவாண்மை (மர்ளியா சக்காப்), விஞ்ஞானத்தின் விந்தை (மோகனசுந்தரம் லாவண்யா), கல்வியினூ டாக தேசிய ஊழல் எதிர்ப்புச் செயற்றிட்டம் (பிரவீணா கிருபைராஜ்), கற்பிக்கத் தேவை கற்றல் (வினோரஞ்சி சபேசன்), தேடலில்லா ஆசிரியன் (ஏ.ஜே.எம். சாலி), பள்ளிப் பருவத்தில் கொண்ட நட்பு (பா.கௌதமி), நூலகம் (இ.நிரஞ்சலா), கல்லறை நினைவுகள் (எஸ்.எச்.பாத்திமா சஹ்ரா), உறவுகள் புதிது (எம்.எச். சதீஸ்ரன்) ஆகிய 77 படைப்பாக்கங்கள் இவ்விதழில் இடம்பெற்றுள்ளன. (இந் நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 47720).

### 12427

**நித்திலம் 2010**. எஸ்.சிவநிர்த்தாநந்தா (பதிப்பாசிரியர்), ச.சிறிதரகுமார் (உதவிப் பதிப்பாசிரியர்). திருக்கோணமலை: CSDI பிரிவு, வலயக்கல்வி அலுவலகம், 1வது பதிப்பு, 2010. (திருக்கோணமலை: சண் பிரிண்டர்ஸ், 306 மத்திய வீதி).

xii, (28), 212 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x20 சமீ.

திருக்கோணமலை வலயக்கல்வி அலுவலகத்தின் CSDI பிரிவு, வருடாந்தம் வெளியிடத் திட்டமிட்டுள்ள ஆண்டு மலர் வரிசையில் இரண்டாவது இதழ் இதுவாகும். ஆசிச் செய்திகள், வாழ்த்துச் செய்திகள், பதிப்பாசிரியர் உரைகளுடன் மும்மொழிகளிலும் எழுதப்பெற்ற 94 ஆக்கங்கள் இம்மலரில் இடம்பெற்றுள்ளன. அவற்றுள் தமிழின் செவ்வியல் இலக்கியத் தோற்றம் (அ.சண்முகதாஸ்), சங்கத் தமிழர் பண்பாடு (இ.பாலசுந்தரம்), தமிழ் வகுப்புகளில் புதிய அணுகுமுறைகள் (அ.அறிவுநம்பி), மாணிக்கவாசகர் இசைக்கூற்றில் மங்கையர் மாண்பு (இரா. சீதாலட்சுமி), கேடு இல் விழுச்செல்வம் (மனோன்மணி சண்முகதாஸ்), தமிழ்ச் சமூகத்தின் தொடக்ககால தகவல் தொடர்பு முறைகள் (கி.விசாகரூபன்), தமிழர் ஆடற்கலையில் நட்டுவாங்கக் கலைநுட்பங்கள் (இரா.மாதவி), கந்தபுராணம் காட்டும் சிவ வடிவங்கள் (மா.வேதநாதன்), கோல்புறூக் கமரோன் சீர்திருத்தங்கள்

*(அனுசூயா சேனாதிராஜா), செம்மொழித் தமிழில் விபுலாநந்தரின் யாழ்நூல் (சிவலிங்கம் சிவநிர்த்தானந்தா), அன்றாட வாழ்வில் தத்துவங்கள் சில (எஸ்.ஜே. யோகராஜா), தகவல் தொழில்நுட்ப யுகத்தில் மின்நூலகங்கள் சில குறிப்புக்கள் (மைதிலி விசாகரூபன்), மாணவர்களுக்கு கல்வியில் சமவாய்ப்பு எப்போது? (எஸ்.கே.ஆனந்தராஜா), வேரினில் வேறுபாடா? (எஸ்.சேஷாத்திரி), கிழக்கிலங்கையில் தோன்றிய பழந்தமிழ் இலக்கியம் ஒன்று (க.இரகுபரன்), தேம்பாவணி-பைதிரம் நீங்குபடலம்-ஒரு நோக்கு (றூபி வலன்ரீனா பிரான்சிஸ்), நாணய மாற்றுவிகித நிர்ணயிப்பும் கொள்வனவுச் சக்தி சரிசம மதிப்புக்கோட்பாடும் (ஜனாப் அ.அ.மு.நுபைல்), கண்ணிவெடி பற்றிய அறிவு அனைவருக்கும் அவசியம் (ஜனாப் இசட் தாஜிடீன்), சிகிரிய புராதன கலை ஆளுமை வெளிப்பாடு (சு. சீவரெத்தினம்), மலேசிய ஹைக்கூ கவிதைகளின் தோற்றமும் வளர்ச்சியும் (நா. பாலகிருஷ்ணன்), அழுத்த முகாமைத்துவம் (கி.முருகுப்பிள்ளை), தமிழ்க் கலாச்சார மாற்றங்களும் அழிவுகளும் (எஸ்.எதிர்மனசிங்கம்), முறைசாராக் கல்வியின் அவசியம் (ஏ.குலேந்திரன்), தமிழ் சர்வதேச மொழியில் வைக்க அந்தஸ்து உள்ளதா? (என்.புவனேந்திரன்), இன்றைய வகுப்பறைகளே ஒரு நாட்டின் எதிர்கால அபிவிருத்தியை தீர்மானிக்கின்றது (ஏ.செல்வநாயகம்), இயற்கை எப்போதுமே கவிதைமழை பொழிகிறது (காசிப்பித்தன் க.ஜெகநாதன்), விழிப்புணர்வு வேண்டுமடா நண்பா (என்.சத்தியமூர்த்தி), கற்றல் கற்பித்தல் 5E முறைபற்றிய கண்ணோட்டம் (பத்மலோஜனி அரியநாயகம்), செயற்கையான நுண்ணறிவு (மா.பாலசிங்கம்), முதல் இடை கடை (தாமரைத்தீவான்), அளவோடு ஆசைகள் (செ.ஞானராசா), சமாதானத்தின் சுவாசம் (முனையூரான் எம்.எம்.ஏ. சமட்), அனைத்துலக ஆங்கில மொழிக்கான திறனாய்வுத் தேர்வு (ச.தேவசகாயம்), முரண்பாடுகளும் அதனைப் பாடசாலைகளில் முகாமைத்துவம் செய்தலும் (சதாசிவம் பவானந்தன்), விடிவை நோக்கி (ரேவதி சதாசிவம்), நாம் இந்நாட்டின் ஆசிரியர்களாவோம் (எச்.எம்.எம்.மன்சூர்), விழுமிய கல்வியின் இன்றியமையாமை (வி.யோகேஸ்வரன்), நேற்றைய கடந்த நாளைய மனிதன் (ஏ.ஜே.முகமட் சாலி), தமிழுக்கு அமுதென்று பெயர் (வினோரஞ்சினி சபேசன்), கிராமத்தில் அற்புத திருக்காளாத்தீஸ்வரர் (நிரஞ்சனி நாகரத்தினம்), தற்கால உலகில் பிரசித்திபெற்ற வரவட்டை கடனட்டை (டர்மிளா இளஞ்செல்வன்), ஆசான் என்றால் என்ன?(சசிகலா நடேசபவானந்தன்), தமிழ்மொழியும் நாட்டுப்புறவியலும் (சிவகௌரி மோகன்), கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின் (சுஜித்தா பிரகாஷ்), இஸ்ரேலில் இருபத்தொரு நாட்கள் (செல்வராஜினி புவனேஸ்வரன்), இன்றைய மாணவ சமுதாயம் (இரா.அன்பழகன்), வாழ்ந்தது போதுமடா (ஜெயவதனி மரியதாஸ்), மலரவேண்டிய மொட்டொன்று கருகுகின்றது (ஷலோமி தீபிகா வரதசீலன்), சமூக அமைப்பும் கல்வியும் (பிரவினா கிரபராசா), கல்வி (இ.யாழினி), தந்தையின் கல்லறையில் ஓர் புலம்பல் (ந.நதுர்சியா), இணையத்தளத்தில் சரிவடைந்த மைக்கிரோசொப்ட் உத்திகள் (சி.அறிவாளன்), தமிழரின் வாழ்வு (மனோகரதாஸ் பிரதீபன்), மனதில் உறுதி வேண்டும் (மாதவநாயகன் சுதர்சன்), கனவுகள் மெய்ப்பட (நிலூமி ஜேசுதாசன்), கொடுத்து மகிழும் இன்பமே கோடிபெறும் (மாதுமை கண்ணதாசன்), சமாதானத்தின் பின்*

இலங்கை (பிரசாந்தி சிறிதரன்), எமது நாட்டில் சமாதானத்தைப் பேணுவோம் (ஆரபி ஜெய்க்குமார்), கல்வி எதிர்காலத்தில் கைகொடுக்கும் (சின்னத்தம்பி மகிரா), வெற்றிபெற்ற தேசத்தை சிறுவர்களுக்காகக் கட்டிஎழுப்புவோம் (இராசரத்தினம் நிரஞ்சலா), சமாதானம் (மனோகரதாஸ் பிரதீபன்), A-Z மனித உறவு மேம்பட ஆகிய தமிழ் மொழி ஆக்கங்களும் இடம்பெற்றுள்ளன. (இந் நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 56390).

## 12428

**பல்கலை: தொகுதி 07, இதழ் 01: 2015.** வீ.மகேஸ்வரன், பீ.எம்.ஜமாஹிர் (இணையாசிரியர்கள்), கே.ஞானேஸ்வரன் (நிர்வாக ஆசிரியர்). பேராதனை: கலைப்பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, 2015. (அச்சக விபரம் தரப்படவில்லை).

vi, 108 பக்கம், விலை: ரூபா 175., அளவு: 24.5x17 சமீ.

"பல்கலை", பேராதனைப் பல்கலைக்கழகக் கலைப்பீடத்தினால் ஆண்டுக்கு இருமுறை ஜனவரி, ஜுலை மாதங்களில் வெளியிடத் தீர்மானிக்கப்பட்டதொரு ஆய்விதழ். சமூக விஞ்ஞானம், மனிதப் பண்பாட்டியல் சார்ந்த ஆய்வுக் கட்டுரைகளும் நூல் மதிப்புரைகளும், கருத்துரைகளும் இவ்வாய்விதழில் பிரசுரமாகின்றன. ஏழாவது ஆண்டின் முதல் இதழாக மலர்ந்துள்ள இவ்விதழில், இலங்கையின் பொருளாதார வளர்ச்சிப் போக்கும் சமூக நலத்துறையின் பங்களிப்பும் (எஸ்.விஜேசந்திரன், என்.மகேஸ்வரன்), மகாகவி அல்லாமா இக்பாலின் சமய மெய்யியல் சிந்தனைகள் (பி.எம்.ஜமாஹிர்), மெய்கண்டாரின் உபநிடதக் கொள்கை (பொ.சந்திரசேகரம்), இலங்கையில் பூந்தலை தேசிய பூங்காவில் யானைகளைப் பாதுகாப்பதில் உயிரின இணைப்பு வழிகளது வகிபங்கு (எம்.ஏ.எம்.இஸ்திகார்), பாடசாலை நூலகங்கள்: புதிய கோட்பாடும் நடைமுறையும் (மைதிலி விசாகரூபன்), எடுத்துரைப்பியல் நோக்கில் எம்.ஏ.நுஃமானின் அதிமானிடன் (எம்.எம்.ஜெயசீலன்), முயற்சியாண்மையை விருத்தி செய்வதில் முயற்சியாளர்கள் எதிர்கொள்ளும் பேரண்டச் சூழல் சவால்கள் (வ.தர்மதாசன், இரா.நிர்மலாதேவி) ஆகிய ஆய்வுக்கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

## 12429

**பேழை: மட்/வின்சன்ற் மகளிர் கல்லூரி, மட்டக்களப்பு: 175ஆவது ஆண்டு நிறைவு சிறப்பு மலர்: 1820-1995.** சி.இரவீந்திரநாத் (மலர் ஆசிரியர்). மட்டக்களப்பு: வின்சன்ற் மகளிர் கல்லூரி, 1வது பதிப்பு, 1995. (அச்சக விபரம் தரப்படவில்லை).

xxiv, 144 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x18.5 சமீ.

மட்டக்களப்பு வின்சன்ற் மகளிர் கல்லூரியின் ஆண்டிதழான "பேழை", மேற்படி கல்லூரியின் 175ஆம் ஆண்டு நிறைவையொட்டி சிறப்பிதழாகவும் வெளியிடப்பட்டது. கல்லூரியின் வரலாறு மற்றும் மாணவர்கள் ஆசிரியர்களின் தமிழ்/ஆங்கில மொழி ஆக்கங்கள் உள்ளிட்ட 73 படைப்பாக்கங்களுடன் இம்மலர்

வெளியிடப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 14802).

### 12430

**யாழ்நாதம்: இதழ் 3-1997**. சிவகாமி அம்பலவாணர் (இதழாசிரியர்). கொழும்பு: பழைய மாணவிகள் சங்கம், யாழ். இந்து மகளிர் கல்லூரி- கொழும்புக் கிளை, 1வது பதிப்பு, 1997. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).

(2), 94 பக்கம், புகைப்படங்கள், அட்டவணைகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.

யாழ். இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்க, கொழும்புக்கிளை ஆண்டுதோறும் வெளியிடும் பல்சுவை இதழ் இதுவாகும். இதில் தலைவர் செய்தி, பத்துப் பருவங்கள், சிரித்துக்கொண்டே இருப்பேன், சத்தியம் காத்த சந்திரமதி, கீதையில் ஒரு துளி, சங்க கீதம், நாலு கோடிப் பாடல், வாடக் கூடாது கல்யாணமாலை, மாதர் கட்டிய சேலை, என் வாழ்க்கையில் மறக்க முடியாத சம்பவங்கள், லலிதா, பெண்ணின் பெருமை, யாழ். இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கத்தின் மூன்றாம் ஆண்டறிக்கை 1996, எளிமையாக வீட்டில் செய்யும் சிற்றுண்டி வகைகள் சில, கைமருந்துகள், சிறுவர் விஞ்ஞானம், உலகின் விந்தைகள் சில உங்களுக்காக, தங்கம் பற்றிய தகவல்கள், யாழ் நாதம்-2 வெளியீட்டின் போது அளித்த மெல்லிசை (விமர்சனம்) ஆகிய தமிழ் ஆக்கங்களும் ஆறு ஆங்கில ஆக்கங்களும் இம்மலரில் இடம்பெற்றுள்ளன. கொழும்புக் கிளையின் தலைவியாக சற்சொரூபவதி நாதன் பணியாற்றுகின்றார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 39653).

### 12431

**யாழ்நாதம்: இதழ் 6-2000**. சிவகாமி அம்பலவாணர் (இதழாசிரியர்). கொழும்பு: பழைய மாணவிகள் சங்கம், யாழ். இந்து மகளிர் கல்லூரி- கொழும்புக் கிளை, 1வது பதிப்பு, 2000. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).

68 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ.

இவ்வாண்டுக்குரிய மலரில் கலைத்திறமை, யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு வரை, எனனுயிர் நீதானே, காக்கை பாடினி, பாரதியாரின் மனஉறுதி, நீராவி ஸ்ரீஜய வீரகத்தி விநாயகர் ஆலயம், தமிழரும் இசையும், பழைய மாணவிகள் சங்கம், யாழ். இந்து மகளிர் கல்லூரி- கொழும்புக் கிளையின் ஆறாம் ஆண்டறிக்கை, சமோசா, கரட் அல்வா, சிவத்தமிழ்ச் செல்வி, லீலாவதி பாலசிங்கத்தின் வாழ்க்கை வரலாறு, சிவயோகவல்லி ஐயாத்துரையின் வாழ்க்கை வரலாறு, சிவம் சிவமேயானது, காயா, தென்னகத்தில் காசி யாத்திரை செய்யும் விதிமுறை, நக்கீரன் உறுதி, யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு வந்திருந்த இந்து மகளிர் கல்லூரி மாணவிகளுடன் ஒரு சந்திப்பு, கொழும்பில் நல்லைக் குறவஞ்சி, நடன

அளிக்கைகள் (ஆங்கிலம்), நல்லைக் குறவஞ்சியில் குறத்தி ஆகிய படைப்பாக்கங்கள் இடம்பெற்றுள்ளன. கொழும்புக் கிளையின் தலைவியாக சற்சொரூபவதி நாதன் பணியாற்றுகின்றார். (இந்நூல் நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 037359).

## 12432

**யாழ்நாதம்: இதழ் 9-2003.** சிவகாமி அம்பலவாணர் (இதழாசிரியர்). கொழும்பு: பழைய மாணவிகள் சங்கம், யாழ். இந்து மகளிர் கல்லூரி- கொழும்புக் கிளை, 1வது பதிப்பு, 2003. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளூமெண்டால் வீதி).

72 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ.

யாழ். இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்க, கொழும்புக்கிளை ஆண்டுதோறும் வெளியிடும் பல்சுவை இதழ் இது. இதில் தலைவரின் செய்தி, எழுவகைத் தாண்டவம், அன்பே சிவம், சமாதானம் (ஆங்கிலம்), புதுப்புது அர்த்தங்கள், வல்லாரை, சிரிப்பு, முதிய பெண்மணி (ஆங்கிலம்), சிவநெறி, திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் தேவாரம்-இரண்டாம் திருமுறை, பழைய மாணவிகள் சங்கம், யாழ். இந்து மகளிர் கல்லூரி- கொழும்புக் கிளையின் ஒன்பதாம் ஆண்டறிக்கை, இளைய சமுதாயத்தினரே, வரவேற்புப் பாடல், அன்பிற்குமுண்டோ அடைக்குந் தாள், ரி.ரி.என். அறிவுச் செல்வம் போட்டி-2002, திருக்கோணேஸ்வரம் கோவில், திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் தேவாரம்- மூன்றாம் திருமுறை ஆகிய படைப்பாக்கங்கள் இம்மலரில் இடம்பெற்றுள்ளன. கொழும்புக் கிளையின் தலைவியாக சற்சொரூபவதி நாதன் பணியாற்றுகின்றார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 31493).

## 12433

**வித்தியாதீபம்: இதழ் 1&2: 1994/1995.** மலர்க்குழு. வவுனியா: வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி, பூந்தோட்டம், 1வது பதிப்பு, ஒக்டோபர் 1995. (கொழும்பு 5: சரசு பதிப்பகம்).

124 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x18 சமீ.

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி தனது இரண்டாவதாண்டு நிறைவை 18.10.1995 அன்று கொண்டாடி மகிழ்ந்தவேளையில் வெளியிடப்பெற்ற கல்லூரியின் ஆண்டு மலர். கல்வியியற் கல்லூரிகளும் ஆசிரிய கல்வியும், ஆசிரியர் கல்வி, ஆசிரியரும் மாணவர் பரீட்சையில் சித்தியின்மைக்கான காரணங்களும், நம்நாட்டு எழுத்தறிவு-ஏற்றம் பெற்ற காரணங்கள், இன்றைய நிலையில் பாடசாலையும் சமுதாயமும், கல்லூரியின் உடற்கல்விச் செயற்பாடு, வகுப்பறைக் கற்பித்தலில் நடிப்பு முறையின் முக்கியத்துவம், வினைத்திறன் மிக்க பாடசாலைகளுக்கு தனியார் தொடர்புகளின் அவசியம், இலங்கை கல்வி முறையில் இணைப்பாட விதானம், இன்றைய கல்வி முறை, கற்பித்தல், விளையாட்டுக்களில்

விசையும் இயக்கமும், உடற்கல்வியின் தத்துவவியல் அடிப்படை, இசைக்கலை வரலாற்றில் சங்கீதக்கலையின் பெருமை, இருபதாம் நூற்றாண்டில் கவிதை, இசையும் ஆசிரியரும், வீண் வார்த்தையின் விபரீதம், 21ஆம் நூற்றாண்டில் சூழல் மாசடைவதால் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகள், விரிவான முடிவை நோக்கி, பாடசாலைக் கல்வியால் பெறக்கூடிய சிறந்த அனுபவங்கள், நிஜத்தின் தரிசனம், இலக்கணத்தின் அவசியமும் பயிற்றும் முறைகளும் ஆகிய 22 தமிழ்க் கட்டுரைகளும் ஆறு சிங்களக் கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 24512).

## 12434

**வித்தியாதீபம்: இதழ் 7&8: 2000-2001.** மலர்க்குழு. வவுனியா: வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி, பூந்தோட்டம், 1வது பதிப்பு, 2001. (கொழும்பு: ஜெயனிக்கா அச்சகம்).

127 பக்கம், புகைப்படங்கள், ஓவியங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28.5x20 சமீ.

ஆசிச் செய்திகள், வாழ்த்துரைகள், கல்லூரி அறிக்கைகள் ஆகியவற்றுடன் கற்றலுக்காகக் கற்றல், கட்டுறுப் பயில்வு, சிறுகதை என்பது சிறிய கதை அன்று, மாணவர்களது ஒழுங்குணர்வும் பாடசாலைகளின் தூர நோக்கும், நாலடியார் காட்டும் கல்விச் சிந்தனைகள் ஒரு நோக்கு, 21ஆம் நூற்றாண்டில் ஆசிரியர் எதிர்நோக்கும் சவால்கள், கல்விக் கல்லூரிகளில் ஆசிரியர் பயிலுனர்களுக்கான செயலாய்வு, சாரணியத்தில் ஆளுமை, ஆதங்கம், மாணவர்களை வெற்றிபெறச் சிந்திப்பதற்கான கல்வி, புதிய கல்விச் சீர்திருத்தம் இன்றைய சூழலில் தேவையா?, அவன் குற்றவாளியா?, முன்னேற.., விதியின் கை ஓங்குகிறது, வகுப்பறையில் ஒழுங்கு, ஏமாற்றம், மாணவ மனநிலைகள், கல்வி, முடியாத பயணங்கள், இணைபு, ஆரம்பக் கல்வி, மனிதம், ஆசிரியத் தொழிலின் மகத்துவம், புதிய நூற்றாண்டுக்கான கல்வி, கல்வியியற் கல்லூரியின் பயிற்சி, பாடசாலை மட்டக் கணிப்பீடு, புரிந்துணர்வு எம் தேசத்தில், பாடசாலையின் இன்றைய ஆசிரியர், கணிதமும் சமூக விழுமிய மனப்பாங்கு விருத்தியும், எல்லோருக்கும் கல்வி ஆகிய தலைப்புகளில் ஆசிரிய மாணவர்கள், விரிவுரையாளர்கள் எழுதிய ஆக்கங்கள் இவ்விதழில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 28330).

## 12435

**வித்தியோதயம்: 1975-1976.** பொ.இரத்தினசிங்கம், நி.சரவணபவான் (இணை இதழாசிரியர்கள்). நுகேகொடை: தமிழ் மன்றம், வித்தியோதய வளாகம், இலங்கைப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, செப்டெம்பர் 1976. (கொழும்பு 12: குமரன் அச்சகம், 201, டாம் வீதி).

xix, 214 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x18 சமீ.

இவ்விதழில் பொருளியல், முகாமையியல், கணக்கியல், புவியியல், சட்டம், சிறுகதைகள் ஆகிய பிரிவுகளில் கட்டுரைகள் வகுக்கப்பட்டுள்ளன. பொருளியல் பிரிவில் வெளிநாட்டு உதவியின் தத்துவம் (வி.நித்தியானந்தம்), இலங்கையில் பணவீக்க நெருக்கடிகள் (ஆர்.ஜெயரத்தினராசா), தேயிலையும் இலங்கையின் பொருளாதாரமும் (க.சுந்தரலிங்கம்), இலங்கையில் வங்கித் தொழில்முறை (இ.பாலசிங்கம்), இலங்கையிற் கைத்தொழில் வளர்ச்சி (பொ.சங்கரப்பிள்ளை), ஆயிரம் ரூபா சேமிப்பும் அதன் பொருளாதார விளைவுகளும் (க.மென்டிஸ் அப்பு), பேரினப் பொருளியலில் பெருக்கெண்ணின் தொழிற்பாடு (கே.எஸ். நடராசா), மத்திய வங்கியின் கடன் கட்டுப்பாட்டு முறைகள் (வ.அன்ரனி) ஆகிய ஆக்கங்களும், முகாமையியல் பிரிவில் இலங்கையில் மூலதன முதலீட்டுத் தீர்மானங்கள் (ஹேமா விஜயவர்த்தனா), நிகழ்ச்சித் திட்ட, செயல்திட்ட வரவுசெலவுத் திட்டமிடலுக்கோர் அறிமுகம் (பொ.சிவசுப்பிரமணியம்), இலங்கையின் பொருளாதார விருத்தியில் திட்டமிடுதலும் முகாமையின் பங்கும் (சி.சிறீஸ்கந்தராசா), முகாமை விஞ்ஞானம் (எஸ்.எம்.கிறிஸ்ரி) ஆகிய ஆக்கங்களும், கணக்கியல் பிரிவில் கணக்கியலில் புதிய திருப்பம் (சு.சிவகுரு), கம்பனிக் கணக்குகளில் ஏற்பாடுகளும் ஒதுக்கீடுகளும் உபயோகிக்கப்படவேண்டிய முறை (ச.தம்பிப்பிள்ளை), இலங்கையில் வரியமைப்பு முறையும் 1976 வரவு செலவுத் திட்டமும் (ந.மனோரஞ்சன்), கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் (எஸ்.இராசதுரை), நிர்மாண வேலைகளுக்கு நிதித் திட்டமிடுதலும் கிரயக் கட்டுப்பாடும் (டி. ரி.இராஜரட்ணம்), கிரயக் கணக்குகளையும் நிதிக் கணக்குகளையும் இணங்கச் செய்தல் (டி.ரி.இராஜரட்ணம்), கணக்கியல் விகித ஆய்வினுக்கோர் அறிமுகம் (எஸ்.சிதம்பரநாதன்) ஆகிய ஆக்கங்களும், புவியியல் பிரிவில் மூலவளக் கோட்பாடும் மூலவளப் பயன்பாடும் (மா.செ.மூக்கையா) என்ற கட்டுரையும், சட்டப் பிரிவில் பங்குடைமைச் சட்டம் (செ.தங்கராஜா) என்ற கட்டுரையும், சிறுகதைப் பிரிவில் "இதயங்கள் வெல்லப்படுகின்றன" (சண். அருள்சோதி), "மேலும் ஒரு திரை கிழிகின்றது" (எ.ஜே.மலன்கொவ்) ஆகிய இரு சிறுகதைகளும் இடம் பெறுகின்றன. இறுதிப் பிரிவாக தமிழ் மன்றச் செய்திகள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 11236).

### 12436

**வித்தியோதயம்: 1976-77-78.** ச.அருட்சோதி, நா.வரதராசா (இணை இதழாசிரியர்கள்). நுகேகொடை: தமிழ் மன்றம், வித்தியோதய வளாகம், இலங்கைப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, 1978. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).

xxiv, 236 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x18 சமீ.

வித்தியோதய பல்கலைக்கழகத் தமிழ்மன்றத்தின் ஆண்டிதழ். 1976-1978 வரையிலான மூன்றாண்டுகளின் கூட்டிதழாக வெளிவந்துள்ளது. இவ்விதழில் கணக்கியல், முகாமையியல், வணிகவியல், பொருளியல், அரசியல், சிறுகதை, சட்டவியல் ஆகிய பிரிவுகளின்கீழ் ஆக்கங்கள் தரப்பட்டுள்ளன. கணக்கியல் பிரிவில் மூலதனத் திட்டங்களின் இலாப இயல்பு முறைகள் (டி.ரி.இராஜரட்ணம்),

ஒன்றித்த கணக்குகளும் கம்பனிச் சட்டமும் (ச.தம்பிப்பிள்ளை), கணக்கீடும் கணக்கீட்டுக் கற்பிதங்களும் (க.முருகேசு), கணக்கியலில் சில நுண்ணாய்வுகள் (எஸ்.இராசதுரை) ஆகிய ஆக்கங்களும், முகாமையியல் பிரிவில் முகாமையில் அதிகாரக் கையளிப்பு (மீரா சவுரிமுத்து), சந்தைப்படுத்தல் திட்டமும் அதன் முக்கியத்துவமும் (வ.அன்ரனி) ஆகிய ஆக்கங்களும், வணிகவியல் பிரிவில் வங்கிக்கும் வாடிக்கையாளருக்கும் இடையே உள்ள உறவுமுறை (இ.பாலசிங்கம்), ஏற்றுமதி இறக்குமதியில் வர்த்தக மாற்றுவீதத்தின் தாக்கம் (து.சந்திரகுமார்) ஆகிய ஆக்கங்களும், பொருளியல் பிரிவில் இரட்டை அமைப்பும் பொருளாதார அபிவிருத்தியும் (வி.நித்தியானந்தம்), கைத்தொழிற்துறை-பொருளாதார அபிவிருத்தியில் அதன் பங்கு (எம்.யூ.எம்.ஸனூஸ்), குறைவிருத்தி நாடுகளின் இறைக்கொள்கை (கே.எஸ்.நடராசா), இலங்கையின் வேலையின்மையின் நோக்கும் வேலை நிறைவுக் கொள்கையின் பங்கும் (சி.சிறீஸ்கந்தராசா), பொதுத்துறை நிறுவனங்களில் விலையிடற் கொள்கைகள் (கே.ஏ.முனசிங்க), சுதந்திர வர்த்தக வலயம் - ஓர் அறிமுகம் (இ.இராசசுந்தரம்), இலங்கையில் விவசாயத்துறை தொடர்பான போக்குவரத்து முயற்சியும் சந்தைப்படுத்தலும் (க.சுந்தரலிங்கம்), இலங்கை நாணயத்தின் மீள்மதிப்பீடு (மொஹமட் இல்லியாஸ்) ஆகிய ஆக்கங்களும், அரசியல் பிரிவில் 1977ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் முடிவுகள்-ஒரு கண்ணோட்டம் (ஆர்.ஜெயரத்தினராசா) என்ற கட்டுரையும், சிறுகதைப் பிரிவில் என்.சரவணபவன் எழுதிய "அம்மா" என்ற சிறுகதையும், சட்டவியல் பிரிவில் கம்பனிகள் சட்டம் (செ.தங்கராசா) என்ற கட்டுரையும் இறுதியாக மன்றச் செய்தியும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 11237).

## 12437

**விழி 1994**. வீரவாகு பரஞ்சோதி (இதழாசிரியர்). வவுனியா: தேசிய கல்வி நிறுவனம்-பிரதேச நிலையம், வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம், வவுனியா தென் கல்வி வலயம், கண்டி வீதி, 1வது பதிப்பு, 1994. (அச்சக விபரம் தரப்படவில்லை).

60 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21 சமீ.

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம் (V/Vavuniya Tamil Madhya Maha Vidyalayam) வட மாகாணம் வவுனியா மாவட்டம் வவுனியா தென் கல்வி வலயத்தில் கண்டி வீதியில் 1890இல் தாபிக்கப்பட்ட பாடசாலையாகும். இது இன்று அம்மாவட்டத்தின் முன்னணி கலவன் பாடசாலைகளில் ஒன்றாகத் திகழ்கின்றது. இதுவொரு தேசியப் பாடசாலையாகும். இப்பாடசாலையில் தேசிய கல்வி நிறுவகத்தின் பிரதேச நிலையமும் இயங்குகின்றது. அதில் கற்கும் பட்டப்பின்படிப்பு கல்வி டிப்ளொமா பாடநெறி 1992/93 வருட மாணவர்களின் வெளியீடாக "விழி" (மலர் 1, இதழ் 1) வெளியிடப்பட்டுள்ளது. ஆசிச் செய்திகளுடன் ஆசிரிய மாணவர் களின் கட்டுரைகளும் இதில் இடம்பெற்றுள்ளன. பாடசாலை ஒரு சமூக நிறுவனம் (இந்துமதி இராசரெத்தினம்), மேற்பார்வையும் பாடசாலை அபிவிருத்தியும் (வீரவாகு பரஞ்சோதி), ஆசிரியன் ஒரு சமூக மனிதன் (வேலுப்பிள்ளை

அன்னலட்சுமி), வகுப்பறை முகாமைத்துவமும் ஆசிரியரும் (தாமோதரம்பிள்ளை விக்கினேஸ்வரி), பாடசாலையில் ஓர் அசாதாரண நிலை ஏன்? (இ.சிவநாதன்), ஆசிரியரின் கடமைகளும் பொறுப்புகளும் (நாகேஸ்வரி மாணிக்கவாசகம்), ஆசிரியரும் நேர முகாமைத்துவமும் (ஜெ.தவமனோகரன்), கல்வியில் வீண் விரயங்கள்-ஒரு கண்ணோட்டம் (சி.அழகரெத்தினம்), கற்றலில் ஊக்கம் (ஜீ. நடராஜா), ஆசிரியப் பணியே அறப்பணி (வ.தர்மரட்ணம்), ஆரம்பக் கல்வியின் அவசியம் (கு.நிமலேஸ்வரி), விஞ்ஞானம் கற்பிக்கும் நுட்பமுறைகள் (க.பாலராஜா), தமிழ்மொழி கற்பித்தலில் துணைச்சாதனப் பயன்பாடும் ஆக்கத்திறன் விருத்தியும் (அ.தனபாக்கியம்), உத்தியோகம் பார்க்கும் குடும்பப் பெண்களும் எதிர்நோக்கும் பிரச்சினைகளும் (த.கணேசபாதம்), ஈழநாட்டில் இசை வளர்ச்சி (த.மனோரஞ்சிதம்), மாணவர்கள் மையக் கல்வி பற்றி ஒரு நோக்கு (இ.கந்தையா) ஆகிய கட்டுரைகள் இம்மலரில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 014276).

## 12438

**வெளி: நான்காவது ஆண்டு மலர் 2004**. த.சேரலாதன் (இதழாசிரியர்). மட்டக்களப்பு: மாணவர் அவை, கலை பண்பாட்டுப் பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, 2004. (மட்டக்களப்பு: வனசிங்கா பிரிண்டர்ஸ், திருமலை வீதி).

ix, 117 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x20 சமீ.

தமிழ்ச் சமூகத்தில் தொலைக்காட்சி நாடகங்கள், சுனாமி முன் எச்சரிக்கை முறைமைகள், பல்கலைக்கழக ஆசிரியர்களும் ஆராய்ச்சிகளும், திண்மக் கழிவு முகாமைத்துவம், ஊடகங்களின் தாக்கத்தால் மாறிவரும் மட்டக்களப்பு, ஜப்பானிய "ஐ"விதி எண்ணக்கரு, ஐ.நா.ஸ்தாபனமும் அதன் யாப்புகளும், இலங்கைப் பெருந்தோட்டத் தொழிற்சங்க இயக்கங்கள், ஈழத்துச் சிறுகதை வளர்ச்சி பற்றிய ஒரு மறுமதிப்பீடு, மட்டக்களப்பில் திருமணச் சடங்குகள் மரபும் மாற்றமும், பிரதாப முதலியார் சரித்திரம் காவியமா? நாவலா?, மெல்லத் தமிழ் இனி, சுரண்டலுக்கும் கட்டுப்படுத்தலுக்குமான கருவியாக விஞ்ஞானம், விஞ்ஞான முறையியலில் உய்த்தறியும் தொகுத்தறியும், பெண்கள் மீதான வன்முறையும் பெண்ணிலைவாதச் சிந்தனையும், தொழில்நுட்பம்-தொழில்நுட்பக் கலைகளில் அரசியல், இலங்கையில் பாடசாலை மாணவர்கள் எதிர்நோக்கும் சிக்கல்கள், ஈழத்துக் கூத்தரங்கில் பங்குகொள் ஆய்வுச் செயற்பாடுகள், தமிழ் வரிவடிவத்தில் ஏற்பட்ட மாறுதல்கள், கோணேசின் ஓவியங்கள் ஆகிய கட்டுரைகளும், ஈழத்தில் மட்டுமல்ல, சேற்றில் செந்தாமரை, சுந்தரும் ஓட்டுக் கொழுக்கட்டையும், எனது நினைவுகளிலிருந்து ஆகிய சிறுகதைகளும், என் வாழ்வும் விளையாட்டும், அலை அலையாய், புதியது, ஏன் சுனாமியானாய், விதி வரைந்த கோலம், பட்டம் கட்டுகிறோம் பக பகா, நஷ்டஈடு, யுகவேகம், தனிமை சுகம், மாறாத காயங்களுடன், புள்ளயப்பிடி பேயும் புனிதவதித் தாயும், வளாக நட்பு, நச்சுவேர், கால் பதித்த வேளை, மானிடம் மலரும், முடிவில்லாப் பேச்சுக்கள், ஒரு நாள் கழியுமோ, அறிவுத் தீபத்தை அகத்தில் ஏற்றுவோம், உன்னையே நீ அறிவாய் ஆகிய

கவிதைகளும் இம்மலரை அழகுசெய்கின்றன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 37277).

**மேலும் பார்க்க: 12634**

## 370.1 கல்வி நிறுவனங்கள், மாணவர் சங்கங்கள், சிறப்பிதழ்கள்

### 12439

**அகில இலங்கை தமிழ்மொழித் தினம் 1990.** வெ.சபாநாயகம் (மலர்க் குழு சார்பாக). கொழும்பு: தமிழ்மொழிப் பிரிவு, கல்வி இராஜாங்க அமைச்சு, 1வது பதிப்பு, 1990. (கொழும்பு 11: மெய்கண்டான் அச்சகம், 161, கடற்கரைத் தெரு).

(52) பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28.5x22 சமீ.

1990ஆம் ஆண்டு தமிழ்மொழித்தின விழாவுக்கென மாகாணக் கல்வி அமைச்சு மட்டத்தில் மாணவ மாணவியரின் திறமையைக் காட்டக்கூடிய பல்வேறு போட்டிகள், வெகு விமரிசையாக நடத்தப்பட்டன. அதனைத் தொடர்ந்து அகில இலங்கைத் தமிழ்த்தினப் போட்டியினை மிகவும் கோலாகலமாக நடத்தவென கல்வி, உயர்கல்வி அமைச்சும், கல்வி இராஜாங்க அமைச்சும் துரிதமாகச் செயற் பட்டன. சந்தர்ப்ப சூழ்நிலையால் 1990ஆம் ஆண்டு அகில இலங்கை தமிழ்த்தின விழா காலவரையரையின்றி ஒத்திவைக்கப்பட்டது. 1990க்கான அகில இலங்கைத் தமிழ்மொழித் தின மலர் 12.2.1991இல் மாணவர்களின் ஆக்கங்களுடன் அறிஞர்களின் ஆய்வுக் கட்டுரைகள் சிலவும் இம்மலரில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 28316).

### 12440

**அகில இலங்கை தமிழ்மொழித் தினம் 1991.** மலர்க் குழு. கொழும்பு: தமிழ்மொழிப் பிரிவு, உயர் கல்வி அமைச்சு, இணை வெளியீடு, கொழும்பு: கல்வித் திணைக்களம், மேல் மாகாணம், 1வது பதிப்பு, ஜுலை 1991. (கொழும்பு 11: மெய்கண்டான் அச்சகம், 161, செட்டியார் தெரு).

(32) பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28.5x22 சமீ.

கல்வி உயர்கல்வி அமைச்சின் தமிழ்மொழிப் பிரிவு மேல்மாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் நடாத்தும் அகில இலங்கைத் தமிழ் மொழித் தின விழா 1991 பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் 19.7.1991 அன்று பி.ப. 2.30 முதல் மாலை 8.30 வரை, கல்வி இராஜாங்க அமைச்சர் இராசமனோகரி புலேந்திரன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வெளியிடப்பெற்ற சிறப்பு மலர் இது. குழுக்கள், உபகுழுக்கள் மற்றும் பொறுப்பாளர்களின் பட்டியல், ஆசிச் செய்திகள், போட்டிகளில் பரிசுபெற்ற மாணவர்களின் விபரம், நிகழ்ச்சி நிரல் போன்றவற்றை உள்ளடக்கியதாக சிறப்புக் கட்டுரைகள் எதுவுமின்றி இச்சிறப்பு மலர் வெளியிடப்பட்டுள்ளது. (இந்நூல்

கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 28315).

### 12441

**அகில இலங்கை தமிழ்மொழித் தினம் 1992.** மலர்க் குழு. கொழும்பு: தமிழ்மொழிப் பிரிவு, உயர் கல்வி அமைச்சு, இணை வெளியீடு, கொழும்பு: கல்வித் திணைக்களம், மேல் மாகாணம், 1வது பதிப்பு, ஜுலை 1992. (கொழும்பு 11: மெய்கண்டான் அச்சகம், 161, செட்டியார் தெரு).

(50) பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28.5x22 சமீ.

கல்வி உயர்கல்வி அமைச்சின் தமிழ்மொழிப் பிரிவு மேல்மாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் நடாத்தும் அகில இலங்கைத் தமிழ் மொழித் தின விழா 1992 கண்டி, புனித அந்தோனியார் கல்லூரி மண்டபத்தில் 19.7.1992 அன்று பி.ப. 2.45 முதல் மாலை 8.30 வரை, கல்வி இராஜாங்க அமைச்சர் இராசமனோகரி புலேந்திரன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வெளியிடப்பெற்ற சிறப்பு மலர் இது. குழுக்கள், உபகுழுக்கள் மற்றும் பொறுப்பாளர்களின் பட்டியல், ஆசிச் செய்திகள், போட்டிகளில் பரிசுபெற்ற மாணவர்களின் விபரம், நிகழ்ச்சி நிரல் போன்றவற்றை உள்ளடக்கியதாக இச்சிறப்பு மலர் வெளியிடப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 28314).

### 12442

**அகில இலங்கை தமிழ்மொழித் தினம் 1993.** தமிழ்மொழிப் பிரிவு. கொழும்பு: தமிழ்மொழிப் பிரிவு, கல்வி இராஜாங்க அமைச்சு, 1வது பதிப்பு, 1993. (கொழும்பு: அரசாங்க அச்சகம்).

(52) பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x22 சமீ.

கல்வி உயர்கல்வி அமைச்சின் தமிழ்மொழிப் பிரிவு மேல் மாகாணக் கல்வி அமைச்சின் அனுசரணையுடன் நடத்தும் அகில இலங்கைத் தமிழ் மொழித் தின விழா 1993, பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் 19.7.1993 அன்று இடம்பெற்றது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட இந்நிகழ்வில் இராஜமனோகரி புலந்திரன் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வினையொட்டி இச்சிறப்பிதழ் வெளியிடப் பட்டது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 34522).

### 12443

**அகில இலங்கை தமிழ்மொழித் தினம் 1995.** மலர்க் குழு. கொழும்பு: தமிழ்மொழிப் பிரிவு, உயர் கல்வி அமைச்சு, இணை வெளியீடு, கொழும்பு: கல்வித் திணைக்களம், மேல் மாகாணம், 1வது பதிப்பு, ஜுலை 1995. (கொழும்பு: அரசாங்க அச்சுத் திணைக்களம்).

(40) பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x22 சமீ.

கல்வி உயர்கல்வி அமைச்சின் தமிழ்மொழிப் பிரிவு மேல்மாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் நடாத்தும் அகில இலங்கைத் தமிழ் மொழித் தின விழா 1995 பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் 19.7.1995 அன்று நடைபெற்றது. கல்வி உயர்கல்வி அமைச்சராகவிருந்த றிச்சட் பத்திரண நிகழ்வின் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட இந்நிகழ்வில் வெளியிடப்பெற்ற சிறப்பு மலர் இது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 14530).

## 12444

**அகில இலங்கை தமிழ்மொழித் தினம் 1996**. மலர்க் குழு. கொழும்பு: தமிழ்மொழிப் பிரிவு, உயர் கல்வி அமைச்சு, இசுருபாய, பத்தரமுல்ல, இணை வெளியீடு, கொழும்பு: கல்வித் திணைக்களம், மேல் மாகாணம், 1வது பதிப்பு, ஜுலை 1996. (கண்டி: ரோயல் ஓப்செட் அச்சகம், 190, கொழும்பு வீதி).

(60) பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x18 சமீ.

கல்வி உயர்கல்வி அமைச்சின் தமிழ்மொழிப் பிரிவு மேல்மாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் நடாத்தும் அகில இலங்கைத் தமிழ் மொழித் தின விழா 1996 ஜுலை 19 இல் மாத்தளை நகர மண்டபத்தில் நடைபெற்றபோது வெளியிடப்பட்ட சிறப்பு மலர். ஆசியுரைகள், வாழ்த்துரைகளுடன் தமிழ்த்தினப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுடைய ஆக்கங்களையும், பங்கேற்றோரினதும் பரிசுபெற்றோரினதும் விபரங்களையும் உள்ளடக்கியுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 15072).

## 12445

**அகில இலங்கை தமிழ்மொழித் தினம் 1997**. மலர்க் குழு. கொழும்பு: தமிழ்மொழிப் பிரிவு, உயர் கல்வி அமைச்சு, இசுருபாய, பத்தரமுல்ல, இணை வெளியீடு, கொழும்பு: கல்வித் திணைக்களம், மேல் மாகாணம், 1வது பதிப்பு, ஜுலை 1997. (கொழும்பு: அச்சக விபரம் தரப்படவில்லை).

100 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 29x22 சமீ.

கல்வி உயர்கல்வி அமைச்சின் தமிழ்மொழிப் பிரிவு மேல்மாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் நடாத்தும் அகில இலங்கைத் தமிழ் மொழித் தின விழா 1997 ஜுலை 19 இல் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றபோது வெளியிடப்பட்ட சிறப்பு மலர். ஆசியுரைகள், வாழ்த்துரைகளுடன் தமிழ்த்தினப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுடைய ஆக்கங்களையும், பங்கேற்றோரினதும் பரிசுபெற்றோரினதும் விபரங்களையும் உள்ளடக்கியுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 34538).

## 12446

**அகில இலங்கை தமிழ்மொழித் தினம் 1998.** மலர்க் குழு. கொழும்பு: தமிழ்மொழிப் பிரிவு, உயர் கல்வி அமைச்சு, இசுருபாய, பத்தரமுல்ல, இணை வெளியீடு, கொழும்பு: கல்வித் திணைக்களம், மேல் மாகாணம், 1வது பதிப்பு, ஜுலை 1998. (கொழும்பு: Kadds Publications).

(170) பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 29x22 சமீ.

கல்வி உயர்கல்வி அமைச்சின் தமிழ்மொழிப் பிரிவு மேல்மாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் நடாத்தும் அகில இலங்கைத் தமிழ் மொழித் தின விழா 1998 ஜுலை 19 இல் பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் நடைபெற்றபோது வெளியிடப்பட்ட சிறப்பு மலர். ஆசியுரைகள், வாழ்த்துரைகளுடன் தமிழ்த்தினப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுடைய ஆக்கங்களும், பங்கேற்றோரினதும் பரிசுபெற்றோரினதும் விபரங்களை உள்ளடக்கியுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 17418).

## 12447

**அகில இலங்கை தமிழ்மொழித் தினம் 1999.** தமிழ்மொழிப் பிரிவு. கொழும்பு: தமிழ்மொழிப் பிரிவு, கல்வி இராஜாங்க அமைச்சு, 1வது பதிப்பு, 1999. (கொழும்பு அச்சக விபரம் தரப்படவில்லை).

(52) பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28.5x22 சமீ.

1999ஆம் ஆண்டு தமிழ்மொழித்தின விழாவுக்கென மாகாணக் கல்வி அமைச்சு மட்டத்தில் மாணவ மாணவியரின் திறமையைக் காட்டக்கூடிய பல்வேறு போட்டிகள், வெகு விமரிசையாக நடத்தப்பட்டன. அதனைத் தொடர்ந்து அகில இலங்கைத் தமிழ்த்தினப் போட்டியினை மிகவும் கோலாகலமாக நடத்தவென கல்வி, உயர்கல்வி அமைச்சும், கல்வி இராஜாங்க அமைச்சும் துரிதமாகச் செயற்பட்டன. 1999க்கான அகில இலங்கைத் தமிழ்மொழித் தின மலர் 19.7.1999இல் நடத்தப்பட்ட விழாவினையொட்டி மாணவர்களின் போட்டி விபரங்கள், அவர்களின் படைப்பாக்கங்களுடன் அறிஞர்களின் ஆய்வுக் கட்டுரைகள் சிலவும் இம்மலரில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 17885).

## 12448

**அகில இலங்கை தமிழ்மொழித் தினம் 2001.** எஸ்.தில்லைநடராஜா (மலர்க் குழு சார்பாக). கொழும்பு: தமிழ்மொழிப் பிரிவு, உயர் கல்வி அமைச்சு, இணை வெளியீடு, கொழும்பு: கல்வித் திணைக்களம், மேல் மாகாணம், இசுருபாயா, பத்தரமுல்ல, 1வது பதிப்பு, 2001. (கொழும்பு 13: யூ.கே. பிரின்டர்ஸ், 98 A, விவேகானந்தா மேடு).

(4), 56 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 29x22 சமீ.

கல்வி உயர்கல்வி அமைச்சின் தமிழ்மொழிப் பிரிவு மேல்மாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் நடாத்தும் அகில இலங்கைத் தமிழ் மொழித் தின விழா 2001இல் நடைபெற்றவேளையில் வெளியிடப்பெற்ற சிறப்பு மலர் இது. அழகியற் கல்வியில் நடனத்தின் முக்கியத்துவம் (லீலாம்பிகை செல்வராஜா), கலைத்திட்டமும் மொழி கற்பித்தலும் (தை.தனராஜ்), தமிழ்த் தின விழா சில சிந்தனைகள் (செ.யோகநாதன்), மெல்லத் தமிழினிச் சாகும் (U.L.அலியார்), தமிழர் மரபில் புலக்காட்சியும் ஆடல் அழகியலும் (சபா.ஜெயராசா), இலக்கியம் கற்பித்தல்: ஏன் எதற்கு (கா.சிவத்தம்பி) ஆகிய சிறப்புக் கட்டுரைகள் இம்மலரில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 41194).

### 12449

**அகில இலங்கைத் தமிழ்த் தின விழா: மட்டக்களப்பு, 1970.** மலர்க் குழு. மட்டக்களப்பு: கல்வித் திணைக்களம், 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1970. (மட்டக்களப்பு: சென். செபஸ்தியன் அச்சகம், 65, லேடி மனிங் டிரைவ்).

28 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x19 சமீ.

மட்டுநகர் மாநகர மண்டபத்தில் 1970 ஆகஸ்ட் 13,14,15ஆம் திகதிகளில் இடம்பெற்ற அகில இலங்கைத் தமிழ்த்தின விழாவை முன்னிட்டு மட்டக்களப்பு கல்வித் திணைக்களம் வெளியிட்ட சிறப்பு மலர். ஆசியுரைகள், வாழ்த்துரைகள், நிகழ்ச்சி நிரல், பங்குபற்றும் பாடசாலைகளின் விபரம், விழா அமைப்புக் குழு, தமிழ்த்தின விழா நடுவர் குழு பற்றிய தகவல் ஆகியவற்றுடன், தமிழ்த்தின விழா (முகம்மது சமீம்), தமிழ்த்தின விழாவின் முக்கியத்துவம் (பொன். சின்னத்துரை), தமிழ்த்தின விழா நோக்கமும் பயனும் (க.கைலாசபதி) ஆகிய ஆக்கங்களும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 9614).

### 12450

**ஆசிரிய தீபம்: சர்வதேச ஆசிரிய தின விழா சிறப்பு மலர் 1991.** வே.உமாமகேஸ்வரன் (மலர் ஆசிரியர்). வாழைச்சேனை: ஆசிரிய ஒன்றியம், வாழைச்சேனைக் கல்விக் கோட்டம், 1வது பதிப்பு, ஒக்டோபர் 1991. (மட்டக்களப்பு: சென் ஜோசப் கத்தோலிக்க அச்சகம்).

(12), 54 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x19 சமீ.

06.10.1991 அன்று வாழைச்சேனைக் கல்விக் கோட்ட ஆசிரிய ஒன்றியத்தினால் ஒழுங்குசெய்யப்பட்ட சர்வதேச ஆசிரியதின விழாவின்போது விநியோகிக்கப்பட்ட சிறப்பு மலர். ஆசிச் செய்திகளுடன், பாலரைப் பயிலுங்கள் பயிற்றுங்கள், எம்பணி தொடர்வோம், பாடசாலை அதிபரும் சுற்றாடற் தொடர்பும், கல்வியில் சில முதன்மைகள், மாணவரின் மனப்பாங்கு விருத்தியில் ஆசிரியரின் பங்கு, இலங்கை ஆசிரியர் சேவை, ஆசிரியர் தினம், பாடசாலை வளர்ச்சியில் நல்லாசிரியர் நற்பண்புகள், மகாத்மாவே நீ வாழ்க, ஆசிரியத் தொழிலின் மகத்துவம், நிதரிசனம்,

வகுப்பறைக் கற்பித்தல், ஆசிரியத் தொழிலின் மகத்துவமும் மதிப்பும், அவருக்குப் பாராட்டு விழா, ஆசிரியத் தொழிலும் சில நடைமுறைப் பிரச்சினைகளும், நல்லாசிரியன், தமிழ்மொழி கற்பித்தலும் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளும், கனத்த சுமையை, விபுலாநந்தரும் ஒரு ஆசிரியர், கல்விப் பயிரை வளர்ப்போமே, சிகரம், ஈசனே மன்னித்திடு, அர்த்தம் தேடும் ஆசிரியம், கண்ட பலன், பனைமரமே நீயும் நானும் ஒன்றுதான், அரசர்க்கு அரசன் ஆசிரியன், மனித தெய்வம், ஒளிவிளக்கேற்றுபவர் ஆசிரியர், வாழைச்சேனை கோட்டத்துப் பாடசாலைகளும் தரங்களும் ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட ஆசிரியத்துவம் சார்ந்த கல்வியியல் கட்டுரைகளும், ஆக்க இலக்கியப் படைப்புகளும் இம்மலரில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 39142).

### 12451

**ஆசிரிய தீபம்: சர்வதேச ஆசிரிய தின விழா சிறப்பு மலர் 1994.** சா.மோகனதாஸ் (மலர் ஆசிரியர்). வாழைச்சேனை: ஆசிரிய ஒன்றியம், கோரளைப்பற்று, கோரளைப்பற்று வடக்கு கல்விப் பிரதேசம், வாழைச்சேனைக் கல்விக் கோட்டம், 1வது பதிப்பு, ஒக்டோபர் 1994. (மட்டக்களப்பு: ஜெஸ்கொம் அச்சகம்).

(14), 50 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x18.5 சமீ.

ஒக்டோபர் 1994 கொண்டாடப்பெற்ற சர்வதேச ஆசிரியர் தின விழாவையொட்டி வெளியிடப்பட்ட இச்சிறப்பு மலரில் ஆசியுரைகள், வாழ்த்துரைகளுடன், உங்களுடன் சில வார்த்தைகள் (சாமித்தம்பி மோகனதாஸ்), "அழகியல்" ஓர் ஆன்மீக வெளிப்பாடு (ந.வெ.அருள்சீலன்), மக்கள் வாழ்வில் இலக்கியங்களின் பயன்பாடு (கு.கமலசேகரன்), புதுச் சரிதம் புனைந்திடுவோம் (செல்வி சசிக்கலா சந்திரசேகரன்), சிறிய பாடசாலைகளில் பல்தர கற்பித்தல் முறைமைகள் (க. கிருஷ்ணபிள்ளை), ஆசிரியன் அன்றும் இன்றும் (ந.ஆ.கோவில்சோதி), ஆசிரியன் (சீ. லோகேஸ்வரி), அக்கரைப் பகுதியின் ஒரு கண்ணோட்டம் (சி.குழந்தைவேல்), ஆசிரியர் என்பவர் யார்? (திருமதி த.தேவராஜா), குறிக்கோள் (இ.ஜீவரெட்ணம்), ஆசிரியர் நாம் (சுமதினி மோகனதாஸ்), What is the Education (Saradhadevi Rasiah), கல்வியின் விழுமிய நோக்கங்கள் (ம.சிவசுந்தரம்), ஆசிரியரும் தொழில்சார் கல்வியின் அவசியமும் (சா.மோகனதாஸ்), பசியும் பாடலும் (பூ.தர்மபாலன்), சாரணீயமும் ஆசிரியரும் (ஜீ.தம்பிப்பிள்ளை), சமூக விருத்தியில் கல்வியும் ஆசிரியப் பணியும் (ம.வசந்தி), இலங்கையில் இலவசக் கல்வி (கா.தாமோதரம்), தீபமன்றோ (ஏ. மகேசன்), சலனங்களும் தெளிவும் (ராஜலோகினி செல்வராஜா), இணைப் பாடவிதான செயற்பாடுகள் (கந்தையா ஆனந்தராஜா), மனம் திறந்து பேசுங்கள் (என்.கதிர்காமத்தம்பி), வாழ்க நல்லாசான் (க.கிருஷ்ணபிள்ளை), காந்தி அடிகளின் கல்விச் சிந்தனைகள் (மா.பொன்னுத்துரை), வயது ஏறிப் போச்சு ஆகிய படைப்பாக்கங்கள் இம்மலரில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 39172).

## 12452

**இணுவில் இந்து: 150ஆவது ஆண்டு நிறைவு சிறப்பு மலர் 1864-2014**. தி.சசீதரன் (மலர் ஆசிரியர்). யாழ்ப்பாணம்: இணுவில் இந்துக் கல்லூரி, இணுவில், 1வது பதிப்பு, மே 2015. (சுன்னாகம்: மகிந்தன் கணனி அச்சகம்).

xxxix, 182 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x18 சமீ.

இணுவில் இந்துக் கல்லூரி தனது 150ஆவது ஆண்டு விழாவைச் சிறப்பாக 24.5.2015 இல் கொண்டாடியது. அதன் நினைவாக கல்லூரிச் சஞ்சிகையான "இணுவில் இந்து" இச்சிறப்பு மலரை வெளியிட்டுள்ளது. மலர்க்குழுவில், ச. கவிதா, ந.சுகுமாரன், பி.கவியரசி, ச.ஜெகன் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர். கல்லூரியின் வரலாற்றை விளக்கும் ஆவணங்களும் கட்டுரைகளும் இச்சிறப்பு மலரில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 61069).

## 12453

**இந்து மாநாட்டுச் சிறப்பு மலர்-2007**. மலர்க்குழு. வவுனியா: வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி, பூந்தோட்டம், 1வது பதிப்பு, 2007. (வவுனியா: மல்ரிவிஷன் அச்சுக் கலையகம்).

ix, (3), 44 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x18 சமீ.

சிவஸ்ரீ மு.க.கந்தசாமி குருக்கள், ஜானாப் கே.முகமட்தம்பி, திரு.சி.சண்முகம் ஆகியோரின் ஆசியுரைகளுடனும், பீடாதிபதி திரு.க.பேர்னாட், கு.சிதம்பரநாதன், த.ம.தேவேந்திரன் அகியோரின் வாழ்த்துரைகளுடன் தொடங்கும் இம்மலரில், மனதில் உதித்தவை (பா.பரமேஸ்வரன், சு.சுவர்ணராஜ), மலர் முகம் (பொ. சத்தியநாதன்), இந்து மாநாட்டின் நோக்கம் (சதாசிவம் பவானந்தன்), சமயமும் அறிகையும் (சபா ஜெயராசா), பெருவாழ்வுக்கு திருமுறைகளே பெருமறையாகும் (பொன் தெய்வேந்திரன்), வன்னிப் பிரதேசத்தில் கிராமிய வழிபாட்டின் செல்வாக்கு (அகளங்கன்), இந்து மதத்தில் அறிந்ததும் அறியாததும்: சில குறிப்புகள் (த. சிவகுமாரன்), இந்துவாக வாழ்வோம் இந்து தர்மம் காப்போம் (து.ஜெயசுமதி), இந்து தத்துவஞானத்தின் உப நிடதங்களின் நிலை, இந்து மதத்தில் கடைப் பிடிக்கப்படும் சடங்குகள், சம்பிரதாயங்கள், கிரியைகள் வெளிப்படுத்தும் உளவியல் உண்மைகள் (எஸ்.சுதர்சினி), கலைகளின் நோக்கம் கடவுளைக் காணல் (கே.எஸ். ரமேஷ்), அரங்குப் பெரியோர்கள் (மு.கௌரிகாந்தன்) ஆகிய படைப்பாக்கங்கள் இடம்பெற்றுள்ளன.(இந்நூல் நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 009537).

## 12454

**இலங்கையின் வருங்கால ஆசிரியர்கள் (சஞ்சிகை இலக்கம் 2).** யூ.எம்.அபயவர்த்தன (ஆசிரியர்). கொழும்பு 2: கல்வி நூற்றாண்டு விவசாய விசேட வெளியீடு, வேலையனுபவ விவசாயக் கிளை, கல்வி கலாச்சார அமைச்சு, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1969. (கொழும்பு: அரசாங்க அச்சகம்).

51 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x18 சமீ.

இலங்கையின் கல்வி நூற்றாண்டையொட்டி வெளியிடப்பட்ட விசேட சஞ்சிகையின் இரண்டாவது இதழ். விவசாயத்தில் அமைதியான புரட்சி (வீ.துரைசிங்கம்), பொருளாதார அபிவிருத்திக்கான கல்வி (F.S.C.P. கல்பகே), விவசாயச் சமுதாய பாடசாலை (ஈ.அபயரத்ன), விவசாயம் கற்பித்தலைத் தொழிலாகக் கொள்ளல் (பி.என்.சிங்), வேலை அனுபவம் (ஜீ.டீ.சோமபால), பாடவமைப்புத் தயாரித்தல் (என்.எம்.கே.அரம்பேபொல), விவசாயம் கற்பித்தலிற் கட்புல உபகரணங்கள் (யூ.எம்.அபயவர்த்தன), வீட்டுத் தோட்டத் திட்டங்கள் (H.A.J.H. ரணவக்க), பாடசாலைத் தோட்டத்தை அமைத்தல் (தி.பெரியதம்பி), பயன்தரக்கூடிய விவசாயக் கல்விக்கான சியவச மாதிரிப் பண்ணைகளைப் பாடசாலைகளில் அமைத்தல் (H.D.S.சுமனசேகரா), விவசாய விஞ்ஞான பாடத்திற்கான வகுப்புச் சோதனைக்குரிய வினாக்களைத் தயாரித்தல் (பி.என்.சிங்), பாடசாலைகளிலும் வீட்டுத் தோட்டங்களிலும் தேனீ வளர்த்தல் (யூ.எம்.அபயவர்த்தன), புதிதாகக் கோழி வளர்ப்பு ஆரம்பிப்பவர்களுக்கு (ஜே.டீ.ரன்முத்துகல) ஆகிய 13 விவசாயம் சார்ந்த கட்டுரைகளை இவ்விதழ் கொண்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 35609).

## 12455

**உடப்பு தமிழ் மகாவித்தியாலயம்: நூற்றாண்டு விழா சிறப்பிதழ் 2004.** நடராஜா பத்மானந்தன் (இதழாசிரியர்). புத்தளம்: பு/உடப்பு தமிழ் மகா வித்தியாலயம், பிரதான வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 2004. (கொழும்பு 13: யூ.கே. பிரின்டர்ஸ், 103, விவேகானந்தா மேடு).

xvii, 148 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x18 சமீ.

இச்சிறப்பிதழில், ஆசியுரைகள், வாழ்த்துரைகள், அறிக்கைகள் என்பவற்றுடன், பாடசாலை கீதம் (இரா.பாலகிருஷ்ணன்), பாடசாலை வரலாறு (ச.கோபாலன்), உள்ளத்தைத் தொட்டு நிற்கும் உடப்பு (க.சின்னத்தம்பி), கலையுணர்வில் நினைவில் நிற்பவை (ஆர்.பாலகிருஷ்ணன்), பாடசாலையின் விளையாட்டுத்துறை (இரா.வேலாயுதன்), உடப்பு தமிழ் மகா வித்தியாலயத்தின் நூறாவது ஆண்டு நிறைவில் உடப்பூரின் கல்வி (வ.சிவலோகதாசன்), சமய வளர்ச்சியில் பாடசாலை (பெரி.சண்முகநாதன்), உடப்புப் பிரதேசத்தில் மக்கட் பெயர்கள்: ஓர் ஆய்வு அறிமுகம் (கிருஷ்ணன் ஸ்ரீஸ்கந்தராசா), புத்தளம் மாவட்டத்தில் மகப்பேற்று நிபுணர் பேராசிரியர் அ. சின்னத்தம்பி அவர்களின் சைவப்பணிகள் (வீ. நடராஜா), எமது ஊரில் வெளிநாட்டு மோகத்தினால் ஏற்படும் சமூக பொருளாதார விளைவுகள் (S.ஐங்கரசோதி), உடப்பூரில் முத்தமிழ் வளர்ச்சி (ச.கோபாலன்),

கல்வி தொடர்பான பெற்றோர் அணுகுமுறை (மா.சின்னத்தம்பி), தரமான கல்விக்கான கிரயம் (உலகநாதர் நவரட்ணம்), மாணவர்களைக் கல்வியின்பால் திசைதிருப்புவது ஆசிரியர் செய்யக்கூடியதும் செய்ய வேண்டியதுமான பணியாகும் (இரா.பாலகிருஷ்ணன்), புதிய கல்விச் சீர்த்திருத்தமும் ஆசிரியரும் (ஆ. நிர்மலகாந்தன்), உளவியல் தேவைகள் (வை. இராமச்சந்திரன்), கவிதை நயமும் அழகியற் பரிமாணங்களும் (சபா. ஜெயராசா), 20 ஆம் நூற்றாண்டில் இலங்கையின் இசை வளர்ச்சி (சிவானந்தன் ஷாழினி), உலகப் புகழ் பெற்ற மறுமலர்ச்சிக் கால ஓவியர் லியானடோ டாவின்சி (நா.ஸ்ரீதர்ஷன்), யாழ்ப்பாணத் தமிழ் மன்னர் காலமும் தமிழ் இலக்கிய வளர்ச்சியும் (துரை.மனோகரன்), அன்புள்ள பெற்றோர்களே (ஆர்.பாலகிருஷ்ணன்), தமிழ்ச் சிறுகதையின் வளர்ச்சிப் போக்கு (சீ.எம்.எஸ்.ஜெனீஸா), கல்வியும் ஆசானும் (கமலேஸ்வரன் மேகலா), நல்லாசிரியர் பண்புகள், உதவாத மனித நேயம் துன்பஞ் சேர்க்கும் (எஸ்.எம்.ஏ.முத்தலிப்), அன்புள்ள ஆசிரியருக்கு (ஆர்.பாகிருஷ்ணன்), எங்கள் தமிழ் மொழி (இரா. பாலகிருஷ்ணன்), அமெரிக்கா மீதான செப்டெம்பர் 11 தாக்குதலும் இலங்கையின் சமாதான முயற்சிகளும் (எஸ்.ஐ.கீதபொன்கலன்), மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை விளங்கிக் கொள்ளல் (ச.பாஸ்கரன்), சைவசித்தாந்தத்தில் உபநிடதங்கள்: ஒரு நோக்கு (முருகேசு கௌரிகாந்தன்), வேலைத்தளங்களில் காணப்படுகின்ற முரண்பாடுகளும் முகாமை செயற்றிறனில் அதன் தாக்கமும் (S.மகேஸ்வரன்) ஆகிய ஆக்கங்களும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 32913. நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தின் சேர்க்கை இலக்கம் 009723).

## 12456

**உடுப்பிட்டி மகளிர் கல்லூரி 125ஆவது ஆண்டு விழா மலர் 1868-1993.** ச.வேலுப்பிள்ளை (மலராசிரியர்). பருத்தித்துறை: உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, உடுப்பிட்டி, 1வது பதிப்பு, மே 1995. (பருத்தித்துறை: குமார் அச்சகம்).

(38), 138 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 27.5x22 சமீ.

1993ஆம் ஆண்டு மே மாதம் 7ஆம் திகதி தனது நூற்றிருபத்தைந்தாவது அகவையைக் கொண்டாடியதை முன்னிட்டு உடுப்பிட்டி மகளிர் கல்லூரி வெளியிட்டு வைத்திருந்த சிறப்பிதழ் இதுவாகும். போர்ச் சூழலில் தமது பழைய ஆவணங்களையும் கட்டிடங்களையும் பெருமளவில் இழந்துவிட்டிருந்த இக்கல் லூரி, சிலகாலம் இடம்பெயரவேண்டிய சூழலும் ஏற்பட்டிருந்தது. வரலாற்றா வணங்களை இழந்தும், தீவிர முனைப்புடன் தமது பாடசாலையின் வரலாற்றை மீளவும் ஆவணப்படுத்தும் முயற்சியாக இம்மலர் வெளியிடப்பட்டுள்ளது. ஆசிகளும் வாழ்த்துக்களும், பழைய மாணவர் சங்கச் செயலாளர் அறிக்கை, அன்னையின் வாழ்வும் வரலாறும், நயப்பிற்கும் நன்றிக்குமுரிய சிற்பிகள், இன்றைய அதிபர் திருமதி இரஞ்சிதம் குட்டித்தம்பி, சிறப்பு ஆக்கங்கள், நினைவுகள் பழையன ஆனால் பசியன, 125ஆவது ஆண்டு ஞாபகார்த்த மலர்ப் போட்டிகள், மாணவர் ஆக்கங்கள், அன்னையின் 125ஆவது அகவை ஆரம்ப நிகழ்வுகள், அதிபர்-ஆசிரியர்-ஊழியர் 1993, அஞ்சலி, மதிப்புரை: திரு ஆர். எஸ். நடராசா,

நன்றிகள் ஆகிய தலைப்புகளில் இம்மலர் ஆக்கப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 17025).

## 12457

**உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம் பவளவிழா மலர், 1915-1990.** பாடசாலை அபிவிருத்திச் சபை. உரும்பராய்: பாடசாலை அபிவிருத்திச் சபை, உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம், 1வது பதிப்பு, 1992. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).

(30), 91 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x18 சமீ.

யாழ். உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாசாலையின் வரலாறு தொடர்பான பல்வேறு அறிக்கைகள், கட்டுரைகள் மற்றும் கவிஞர்கள் இ.முருகையன், சு. செல்லத்துரை, க.இ. சரவணமுத்து, திருமதி ம.சிவசிதம்பரலிங்கம், நம. சிவப்பிரகாசம், செ.ஐயாத்துரை, க. ஆனந்தராசா, சோ.பத்மநாதன், இ.நவரத்தினக் குருக்கள், ம.பார்வதிநாதசிவம், பெரியதம்பிப்பிள்ளை தருமலிங்கம் ஆகியோரின் வாழ்த்துக் கவிதைகள் என்பவற்றுடன் தொடங்கும் இம்மலர், பேராசிரியர் வ. ஆறுமுகம் (கல்வி அன்றும் - இன்றும்), கு. சோமசுந்தரம் (நாவலர் கல்விச் சிந்தனையும் சைவத் தமிழ்க் கல்வி மறுமலர்ச்சியும்), பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை (ஆச்சிரமக் கல்வி), சி. தில்லைநாதன் (இலங்கைப் பல்கலைக் கழக வளர்ச்சிக்குத் தமிழர் பங்களிப்பு), அ.சண்முகதாஸ் (தமிழ் மொழி கற்பித்தல் தொடர்பான சில சிக்கல்கள்), ஆர்.எஸ்.நடராசா (ஆசிரியரின் சிந்ததனைக்கும் செயற்பாட்டுக்கும்), க.சொக்கலிங்கம் (பாரத இளவல்கள் மூவர்), செல்லப்பா நடராசா (மாணவர்களும் வாசிப்பும்), கா.இராஜகோபால் (சைவத் தமிழிற் கல்வி வளர்ச்சி), ப. கோபாலகிருஷ்ணன் (சைவ சமய மரபுச் சிந்தனைகள்), அ. பஞ்சாட்சரம் (உரும்பிராய் பற்றிய ஒரு நோக்கு) ஆகியோரின் கட்டுரைகளை உள்ளடக்குகின்றது. மேலும் பாடசாலை மாணவ மணிகளின் படைப்பாக்கங்களும் இம்மலரை அலங்கரிக்கின்றன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 13508).

## 12458

**கமலமலர்: பவளவிழா சிறப்பு மலர் 2011.** ஆ.பேரின்பநாதன் (மலராசிரியர்). யாழ்ப்பாணம்: பவளவிழா மலர்க்குழு, யா/புங்குடுதீவு கமலாம்பிகை கனிஷ்ட மகாவித்தியாலயம், புங்குடுதீவு, 1வது பதிப்பு, 2011. (யாழ்ப்பாணம்: கரிகணன் (தனியார்) நிறுவனம், 424, காங்கேசன்துறை வீதி).

xxvi, 140 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x18.5 சமீ.

யா/புங்குடுதீவு கமலாம்பிகை கனிஷ்ட மகாவித்தியாலயத்தின் 75ஆவது ஆண்டு பவளவிழாவையொட்டி மலர்ந்துள்ள கமலமலர் இது. ஆசிரியர் முகவுரையுடன் தொடங்கும் இவ்விதழில் எங்கள் குருநாதர்-யோகர் சுவாமிகள், எமது வித்தியாலயம், கல்விச் சிந்தனைகள், புங்குடுதீவு கமலாம்பிகை கனிஷ்ட மகாவித்தியாலய

வரலாறு, புங்குடுதீவு- மீள்குடியேற்றமும் அபிவிருத்திச் சவால்களும், இயல்பூக்கங்களும் மாணவர் கல்வியும், மாணவர் கல்வியில் மன, உடலாரோக்கியத்தின் அவசியம், மாணவர் நடத்தையில் மனவெழுச்சிப் பங்கு, மாணவர்களின் குறிக்கோள் திறன், மாணவர் உளநலம், கல்விச் செயல்முறையில் ஆசிரியரின் பங்கு, சமாதானக் கல்வியும் ஆசிரியரும், எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே, வறுமை கல்விக்குத் தடையல்ல, பாடசாலைகளிற் பாலியற் கல்வியின் தேவையும் கலவன் பாடசாலைகளின் அவசியமும், மாணவர் பரீட்சையிற் சித்தியடைவது எப்படி?, மாணவரின் கட்டிளமைக் காலப் பிரச்சினைகள், பிள்ளைகள் பொய் சொல்லுவது-திருடுவது ஏன்?, எம் மண்ணின் மாமனிதன் சட்டத்தரணி எஸ்.கே.மகேந்திரன், தீவகம் ஒரு வரலாற்று நோக்கு, நான் கண்ட கமலாம்பிகை வித்தியாலயம், ஏழு பிறவியும் ஒரு துறவியும், அன்னையைப் போல் ஒரு தெய்வமுண்டோ?, எம் சூழலைப் பாதுகாப்போம், புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றிய மாணவர்களிடையே நடத்தப்பட்ட ஆய்வு, புங்குடுதீவு நாடகக் கலை, புங்குடுதீவு ஈழத்து இராமேஸ்வரப் பெருமான் மீது பாடப்பட்ட ஐந்திணை சூழ்பதி, தூரதேசத்திலிருந்து ஒரு பாடல், கல்வி, உழவர் பாட்டு ஆகிய ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன.

## 12459

**கரவை விக்னேஸ்வராக் கல்லூரி: பவளவிழா 1917-1992 சிறப்பு மலர்.** ஆ.சுப்பிரமணியம் (மலராசிரியர்). யாழ்ப்பாணம்: பழைய மாணவர் சங்கம், கரவை விக்னேஸ்வராக் கல்லூரி, கரவெட்டி, 1வது பதிப்பு, செப்டெம்பர் 1994. (யாழ்ப்பாணம்: தாசன் அச்சகம், மகேந்திரா வீதி).

(30), 76 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், அட்டவணைகள், வரைபடங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 26x21.5 சமீ.

16.01.1995 அன்று நிறைவடைந்த மூன்றுநாள் பவளவிழா நிகழ்வின்போது வெளியிடப்பெற்ற சிறப்பிதழ் இது. வாழ்த்துக்கள்,ஆசிச் செய்திகளுடன் விக்னேஸ்வராக் கல்லூரியின் வரலாறு (மலர் வெளியீட்டுக் குழு), வடமராட்சி தென்மேற்கின் புவியியல் பின்னணி-விக்னேஸ்வராவின் அமைப்பு (கதிர்காமு பரஞ்சோதி), ஞான தினகரன் (கை.நமசிவாயக் குருக்கள்), வெள்ளிவிழா கண்ட ஆசிரியர்கள், விக்னேஸ்வராக் கல்லூரியும் அதன் கல்விப் பணியும் (முருகேசு சிவசங்கரம்), சமூகநீதி சமூக மேலசைவு ஆகியவற்றை கருத்திலே இருத்திய கல்லூரி (வி.செ.சுவாமிநாதன்), தொட்டில் பழக்கம் சுடுகாடு வரை (மு. சிவசிதம்பரம்), நாற்பதுகளில் விக்னேஸ்வரா (கே.சிதம்பரப்பிள்ளை), பிரம்மாவின் பிரம்மாக்கள் (தெணியான்), ஐம்பதுகளில் விக்னேஸ்வரா (ஜே.சீ.அம்பிகாவரன்), காலத்தால் தளராத தரிசனங்கள் கரவெட்டியின் பண்பாட்டு ஆளுமை (கா. சிவத்தம்பி), இரு கோணங்களில் -கவிதை (மனோன்மணி நடராசா), விளையாட்டுத்துறையும் விளையாட்டுகளும் (கே.எஸ்.சிதம்பரநாதன்), "சுயபாஷா" -நாடகம் (ஆட்டிஸ்ட் பாலா), விக்னேஸ்வராவில் ஆங்கிலக் கல்வி (ஏ.சின்னத்தம்பி), நினைவில் நிரம்பிவை (வ.செல்லையா), விடிவுக்கு வித்திட்ட விக்னேஸ்வரா-கவிதை (மன்னவன்), எண்பதுகளில் விக்னேஸ்வரா (அ.ம.ஜெபரத்தினம்),

விக்னேஸ்வரா-கரவையின் கலைக்கோவில் -நினைவலைகளும் உணர்வலைகளும் (ஆ.சுப்பிரமணியம்), இலங்கையில் தமிழர் நிலை -மறுபதிப்பு (வி.மகேஸ்வரன்), ஆசிரியனின் பல்வகைத் தோற்றங்களும் செயற்பாடுகளும் (வ.ஆறுமுகம்), ஐந்தைம்மூ வாண்டாகும் அத்தியாயம் காணும் அருள்- கவிதை (திவ்யா தங்கன்) ஆகிய படைப்பாக்கங்களும் பவளவிழாப் போட்டியில் பரிசுபெற்ற மாணவர் படைப்பாக்கங்களும் இம்மலரில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 39862. நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தின் சேர்க்கை இலக்கம் 034359).

### 12460

**கலையரசி 2017.** பரா. பார்த்திபன் (இதழாசிரியர்). கனடா: யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிச் சங்கம், தபால் பெட்டி எண். 92074, RPO Bridlewood Mall, Scarborough, ஒன்ராரியோ M1W 3Y8, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2017. (கனடா: மொஹமட் ரமீஸ், மொனரா கிராப்பிக் டிசைனிங் அன் பிரின்டர்ஸ்).

100 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21.5 சமீ.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் கனடா பழைய மாணவர்கள் 08.10.2017இல் ரொரன்ரோவின் சீனக் கலாச்சார நிலையத்தில் ஒழுங்குசெய்திருந்த கலையரசி ஒன்றுகூடல் விழாவின்போது வெளியிடப்பட்ட சிறப்பு மலர். மலர்க் குழுவில் ப.தயாநிதி, க.பிரேமசந்திரா, ஐ.சண்முகநாதன், ச.அருள்மொழிவர்மன், தி. புவனேந்திரன், ர.கிருஷ்ணானந்தன் ஆகியோர் பணியாற்றினர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 63004).

### 12461

**கலைவிழா 1999.** கே.ஆர்.விக்டர் (பொறுப்பாசிரியர்), அ.டிலோஜன் (இதழாசிரியர்). கொழும்பு 4: தமிழ் இலக்கிய மன்றம், புனித பேதுரு கல்லூரி (St. Peter's College), 1வது பதிப்பு, மார்ச் 2000. (கொழும்பு 12: ரஜனி பிரின்டர்ஸ், EG 2, மத்திய வீதி).

204 பக்கம், புகைப்படங்கள், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 29x21 சமீ.

04.03.2000 அன்று புனித பேதுரு கல்லூரியின் தமிழ் இலக்கிய மன்றம் ஒழுங்கு செய்திருந்த கலைவிழாவின்போது வெளியிடப்பட்ட சிறப்பு மலர். இவ்விழா மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா அவர்களது தலைமையில் நடைபெற்றது. மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் சிறு கட்டுரைகளுடனும், பாடசாலை அமைப்புகளின் அறிக்கைகள், ஆசியுரைகளுடனும் இம்மலர் வெளியிடப் பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 22335).

## 12462

**காவலூர் புனித அந்தோனியார் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் இலங்கைக் கிளைச் செய்தி ஏட்டின் வெள்ளிவிழா மலர் 1978-2003.** எஸ்.எம்.ஜோசெப் (மலராசிரியர்). ஊர்காவற்றுறை: பழைய மாணவர் சங்கக் கிளை- தென் இலங்கை, புனித அந்தோனியார் கல்லூரி, 1வது பதிப்பு 2003. (கொழும்பு 13: லட்சுமி அச்சகம், 195, வூல்பெண்டால் வீதி).

(20), 37 பக்கம், புகைப்படங்கள், அளவு: 26x20 சமீ.

காவலூர் (ஊர்காவற்றுறை) புனித அந்தோனியார் கல்லூரியின் பழைய மாணவர் சங்க- தென் இலங்கைக் கிளையினர் 1978இல் செய்தி ஏடொன்றினை கைற்ஸ் அந்தோனியன் (Kayts Anthonian) என்ற பெயரில் தொடங்கியிருந்தனர். பாடசாலை நடவடிக்கைகளை பழைய மாணவர்களிடையே தொடர்ச்சியாகக் கொண்டுசேர்த்து அவர்களை ஒரு பிணைப்புக்குள் வைத்திருந்து, ஒரு குடும்பமாக உணரச்செய்யும் பணியை இவ்விதழ் செய்துவந்தது. அதன் வெள்ளிவிழா ஆண்டு 2003இல் அமைவதன் நினைவாக இச்சிறப்பிதழை அவர்கள் வெளியிட்டுள்ளனர். இதில் மலர் ஆசிரியர் உரை, தலைவரின் செய்தி, யாழ்.ஆயரின் வாழ்த்துச் செய்தி, அதிபரின் செய்தி, தாய்ச்சங்கத்தின் வாழ்த்து, காவலூர்க் கண்ணின் மணி, Concern not only in Plucking Fruits, Concept of Alma Mater, Memories of of a Septuagenarian, S.A.E.Ratnarajah-a Vetaran Principal, S.A.E.ரெட்ணராஜா அவர்களின் மறைவுக்கு கொழும்புக் கிளையின் அனுதாபச் செய்தி, இறையியல்துறை புலமையாளன், அணையாத தீபம், நல்லாசிரியன் நடராசன், செயற்திறனுக்கு ஒரு மரியநாயகம், மேன்மையுறு காப்பாளர் திரு. J.F.ஜெகராஜசிங்கம், பிறந்த பதியினும் சிறந்த தொன்றில்லை, உயர்திரு இ.நடராசா அவர்களின் சேவை நலம், எம் இளமையில் நாம் மதிக்க மறந்த ஜீவன்கள், தாய்ச்சங்க நடப்பாண்டு நிர்வாகிகள், திருமண வாழ்த்து, Why not a Swimming Pool, கல்லூரிப் புளியமரம் பேசுகிறது ஆகிய 22 ஆக்கங்கள் இம்மலரில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 42019).

## 12463

**குருநாகல் இந்து தமிழ்மகாவித்தியாலயம் வெள்ளிவிழா சிறப்புமலர் 1969-1994.** இதழாசிரியர் குழு. குருநாகல்: இந்து தமிழ் மகாவித்தியாலயம், 1வது பதிப்பு, 1995. (கொழும்பு 15: அகன்யா அச்சகம்).

(248) பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x18 சமீ.

20.03.1995 அன்று மேற்படி பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்ற வெள்ளிவிழா நிகழ்வின்போது வெளியிடப்பெற்ற சிறப்பு மலர். ஆசிச் செய்திகளும், வாழ்த்துச் செய்திகளும் பாடசாலை, மற்றும் மாணவர் சங்கங்களின் அறிக்கைகளும் மாணவர் களின் ஆக்கங்களும் வர்த்தக விளம்பரங்களுடன் இம்மலரை அலங்கரித்துள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 28327).

## 12464

**கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் கொழும்புக் கிளை பொன்விழா சிறப்புமலர் 1944-1994.** மலர்க் குழு. கொழும்பு: பழைய மாணவர் சங்கம், கொழும்புக் கிளை, கொக்குவில் இந்துக் கல்லூரி, 1வது பதிப்பு, 1994. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளூமெண்டால் வீதி).

xl,180 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x19 சமீ.

அளவுக்கு அதிகமான விளம்பரப் பக்கங்களுடன் 5.3.1995 அன்று வெளிவந்துள்ள இப் பொன்விழாச் சிறப்பு மலரினுள் 72 ஆக்கங்கள் உள்ளன. பெரும்பாலானவை வாழ்த்துரைகளாகவும், அவற்றில் பெரும்பாலும் ஆங்கில மொழியில் அமைந்ததாகவும் உள்ளன. இதற்குள் புதையுண்டுபோன 13 தமிழ் மொழி மூலமான பதிவுகளையே காணமுடிகின்றது. அவற்றில் கல்லூரி கீதம், தமிழகக் கவிஞர் வைரமுத்து, உப அதிபராகவிருந்த திரு. அ.பஞ்சலிங்கம், வீரமணிஐயர், சுபத்திரா இராமநாதன், கனடா செ.வேலாயுதபிள்ளை ஆகியோரின் வாழ்த்துக்கள் போக எஞ்சிய பின்வரும் ஆக்கங்களையே இனம்காண முடிகின்றது. நிறுவனங் களின் வளர்ச்சியில் தலைமைத்துவத்தின் பங்கு (க.தேவராஜா), பயன்தரும் வாசிப்பு (வ.சிவராஜசிங்கம்), கல்வி மாதரசை வணங்கி வாழ்வோம் (வ. சிவராஜசிங்கம்), கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் கொழும்புக்கிளை (சி.முத்துக்குமாரசுவாமி), கணித மேதைகள் வரிசையில் இராமானுஜம் (எஸ்.ரவீந்திரன்), கோமா என்னும் கொடிய நிலை (பீ.மயூரன்), பள்ளித்தோழியே (சண்முகவதனி சண்முகநாதன்). (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 34601).

## 12465

**கொழும்பு இந்துக் கல்லூரி -முகத்துவாரம்: வெள்ளிவிழா மலர் 2002.** எஸ். டபிள்யூ.ஜோர்ஜ் (இதழாசிரியர்). கொழும்பு: கொழும்பு இந்துக் கல்லூரி, முகத்துவாரம், 1வது பதிப்பு, 2002. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளூமெண்டால் வீதி).

xxix, 64 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 29x21 சமீ.

கல்லூரியின் 25ஆவது ஆண்டு 2001இல் நிறைவுபெற்றதை முன்னிட்டு வெளியிடப்பட்ட வெள்ளிவிழா ஞாபகார்த்த மலர். ஆசிச் செய்திகள், மாணவர் விபரங்கள், மாணவர்களின் ஆக்கங்கள், என்பவற்றுடன் அறிவியல் ஆக்கங்களாக, இலங்கையிற் கல்வி சில அடிப்படைத் தகவல்கள் (சோ.சந்திரசேகரம்), கந்தன் வழிபாட்டில் காவடியாட்டம் ஓர் அறிமுகம் (மா.வேதநாதன்), வாழ்க்கைக் காலம் முழுவதும் கல்வி (மா.கருணாநிதி), இந்துக் கல்லூரிகளும் தமிழ்க் கல்வி மரபும் (க.நாகேஸ்வரன்), என்னுள் இருக்கும் ஈரமான பக்கங்கள் (டொமினிக் ஜீவா), மாறிவரும் சமுதாயத்தில் தொலைக்காட்சி சில குறிப்புகள் (ஆ.சிவநேசச்செல்வன்), 1950வரை ஈழத்துச் சிறுகதைகளின் முக்கிய பண்புகள் அவற்றை நிர்ணயித்த

காரணிகள் (இ.க.சிவஞானசுந்தரம்), ஆரம்பக் கல்வியும் பெற்றோரும் (ஸ்ரீவித்யா ஸ்ரீரங்கநாதன்), இந்து சமய வாழ்க்கை முறையில் காணும் விஞ்ஞான ரீதியான விளக்கங்கள் (சந்திரா நகுலேந்திரன்), மனித ஆளுமை வளர்ச்சியில் விளையாட்டுக்களின் செல்வாக்கு (பொன். சிவஞானம்), வாழ்க்கைக்குப் பயனுறும் கணிதம் (அசோகமாலா ஜெயராமச்சந்திரன்) ஆகிய படைப்பாக்கங்களும் இடம பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 40290).

### 12466

**கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி இருபதாம் ஆண்டு நிறைவையொட்டிய வெளியீடு 2001.** தனாளினி கதிர்காமநாதன், காயத்திரி இராஜகோபால் (இதழாசிரியர்கள்). கொழும்பு 4: இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி, பம்பலப்பிட்டி, 1வது பதிப்பு, ஜனவரி 2001. (கொழும்பு: அச்சக விபரம் தரப்படவில்லை).

46 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14.5 சமீ.

இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி (Ramanathan Hindu Ladies College) கொழும்பில் அமைந்துள்ள ஒரு இந்துப் பெண்கள் பாடசாலை ஆகும். 1981 ஜனவரி 19 அன்று 26 மாணவிகளுடனும் 2 ஆசிரியர்களுடனும் கொழும்பு, பம்பலப்பிட்டியில் ஆர். ஏ. டீ. மெல் மாவத்தையில் (முன்னைய டூப்ளிகேஷன் வீதி) இப்பாடசாலை தொடங்கப்பெற்று வளர்ச்சி அடைந்து வந்துள்ளது. இதன் வளர்ச்சிப்பாதையில் இருபதாம் ஆண்டு நிறைவையொட்டிய நிகழ்வு 19.01.2001 அன்று இடம்பெற்ற வேளையில் இச்சிறப்பிதழ் வெளியிடப்பட்டது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 27490).

### 12467

**சிவசக்தி 2016: றோயல் கல்லூரி இந்து மாணவர் மன்றம் கலைமகள் விழா மலர்.** என்.கே.அபிஷேக்பரன், எம்.ரூபீக்ஷன், T.சிந்துஜன் (ஆசிரியர் குழு). கொழும்பு: இந்து மாணவர் மன்றம், றோயல் கல்லூரி, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2016. (கொழும்பு: ஓசை டிஜிட்டல் நிறுவனம்).

256 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x15 சமீ.

கொழும்பு றோயல் கல்லூரி இந்து மாணவர் மன்றத்தின் 61ஆவது கலைவிழாவின் சிறப்பு மலர் இது. ஆசியுரைகள், அறிக்கைகள், வர்த்தக விளம்பரங்களுக்கிடையே தமிழ் மாணவர்களின் இந்துசமயக் கட்டுரைகள் ஆங்காங்கே இடம்பெற்றுள்ளன.

### 12468

**சுகிர்தம்: இதழ் விரிப்பு (யாழ். ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலை சிறப்பிதழ்) 2001.** மலர்க் குழு. சுன்னாகம்: ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலை, ஏழாலை, 1வது பதிப்பு, ஜூலை 2001. (ஏழாலை: மகாத்மா அச்சகம்).

*(22), 131, (25) பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x17 சமீ.*

*பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்களின் பங்களிப்புடன் வெளிவந்துள்ள இச்சிறப்பிதழில் திருவருள் வியாபகத்தை மறவாதிருப்போமாக, அருளாசிச் செய்திகள், வாழ்த்துரைகள், பாடசாலையின் வளர்ச்சிப் பாதையில், பாடசாலை மாணவர்களின் பாட்டுக்களும் கதைகளும், நாணயம் வந்ததெப்படி, மன அழுத்த முகாமைத்துவம், ஆரம்பக் கல்வி புதிய முறையியல், எமது பண்பாடு, நம் வாழ்வு நலம்பெற நல்லதை.., அத்திவாரம் (சிறுகதை), பள்ளி சுமந்த எம்உயிர்மொழி, சாரணியமும் பாடசாலையும், வரலாறு, மகிழ்வின் மூலம் பிள்ளைகளின் உடல், உள,சமூக வளர்ச்சி, சித்தர்கள் கண்ட சமயம், சைவசித்தாந்தம் காட்டும் குருநெறி, புத்திக்கூர்மைபெற பிராண சக்தி, வைதிகக் கல்வி மரபில், திருமந்திரத்தில் சன்மார்க்க நெறி, ஞானத்தின் வெளிப்பாடும் குருசிஷ்ய ஒழுக்கமும், எல்லாம் சிவமயம் ஆகிய 25 ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 20811).*

## 12469

**செழுந்தமிழ்ச் சிகரம்-சிறப்புமலர் 2003 (அகில இலங்கைத் தமிழ்மொழித் தினம்).** *சிறப்பு மலர்க்குழு. கொழும்பு: தமிழ்மொழிப் பிரிவு, மனிதவள அபிவிருத்தி, கல்வி, பண்பாட்டு அலுவல்கள் அமைச்சு, 1வது பதிப்பு, டிசம்பர் 2003. (கொழும்பு: அரசாங்க அச்சகம்).*

*108 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 30x22 சமீ.*

*கல்வி அமைச்சின் தமிழ்மொழிப் பிரிவினால் 14.12.2003 அன்று நடத்தப்பட்ட அகில இலங்கைத் தமிழ்மொழித் தினப் போட்டிக்கான பரிசளிப்பு விழாவின் பொழுது வெளியிடப்பட்ட சிறப்பு மலர். ஆசிச் செய்திகள், வாழ்த்துச் செய்தி களுடன், தலைநகரில் தமிழ்த்தின விழா, விபுலாநந்தரின் வழியில் தடம்பதித்த நடராஜானந்தா, தாயே, தமிழ் மொழியின் சிறப்பு, சமாதானம் பிறக்கட்டும், தமிழின் பெருமை, இன்றைய இளைஞர்களே நாளைய தலைவர்கள், காலந்தோறும் தமிழ்மொழி, இலக்கியச் சொற்பொழிவு, பணியும் என்றும் பெருமை, ஒற்றுமையின்றேல் உயர்வில்லை, ஒளிமயமான எதிர்காலம், இலட்சியப் பயணம், விடியலைத் தேடி, அகில இலங்கை தமிழ்மொழித் தினப் போட்டிகள் 2003, மாகாண நிலைத் தமிழ்மொழித் தினப் போட்டிகளின் பெறுபேறுகள்ஆகிய விடயங்கள் பற்றிய ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 33998).*

## 12470

**செழுந்தமிழ்ச் சிகரம்-சிறப்புமலர் 2004 (அகில இலங்கைத் தமிழ்மொழித் தினம்).** *சிறப்பு மலர்க்குழு. கொழும்பு: தமிழ்மொழிப் பிரிவு, கல்வி அமைச்சு, 1வது பதிப்பு, டிசம்பர் 2004. (நுகேகொட: தீபனீ அச்சகம், 464. ஹைலெவல் வீதி, கங்கொடவில).*

111 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 30x21 சமீ.

கல்வி அமைச்சின் தமிழ்மொழிப் பிரிவினால் 30.12.2004 அன்று நடத்தப்பட்ட அகில இலங்கைத் தமிழ்மொழித் தினப் போட்டிக்கான பரிசளிப்பு விழாவின்பொழுது வெளியிடப்பட்ட சிறப்பு மலர். ஆசிச் செய்திகள், வாழ்த்துச் செய்திகளுடன், விபுலானந்த அடிகளாரின் கல்வித் தொண்டு, தமிழ் இலக்கியத்துக்கு முஸ்லிம்களின் பங்களிப்பு, தெய்வம் இருப்பதை நிலைநாட்டும் தீர்ப்பு, நீரர மகளிர் காவியக் கனவு, விபுலானந்தம், முதலாம் உலகப்போர் (1914-1918), சமாதானமா சர்வாதிகாரமா, தாய், எங்கள் நாடு, ஒழுக்கம் உயர்வு தரும், உயிர்களிடத்தில் அன்பு வேண்டும், விஞ்ஞானத்தில் விளைவுகள், இலக்கியமும் சமூகமும், முயற்சி திருவினையாக்கும், கலங்காதிரு மனமே, மனந்திருந்து மனிதா, கானல் கனவுகள், மாதர்க்குண்டு சுதந்திரம், ஓர் இளந்தென்றல் புயலாகிறது ஆகிய படைப்பாக்கங்களுடன் தமிழ்த்தினப் போட்டி முடிவுகள், இறுதிப் பெறுபேறுகள், பங்குபற்றியோர் விபரம் ஆகிய தகவல்களும் இம்மலரில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 39161).

## 12471

**செழுந்தமிழ்ச் சிகரம்-சிறப்புமலர் 2005 (அகில இலங்கைத் தமிழ்மொழித் தினம்).** எஸ்.சிவநிர்த்தானந்தா (பொறுப்பாசிரியர்). கொழும்பு: தமிழ்மொழிப் பிரிவு, கல்வி உயர்கல்வி அமைச்சு, 1வது பதிப்பு, 2005. (கொழும்பு: அரசாங்க அச்சகம்).

xx, 99 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 30x22 சமீ.

கல்வி அமைச்சின் தமிழ்மொழிப் பிரிவினால் நடத்தப்பட்டு வருகின்ற அகில இலங்கைத் தமிழ்மொழித் தினப் போட்டிக்கான பரிசளிப்பு விழாவின்பொழுது வெளியிடப்பட்ட சிறப்பு மலர். சுவாமி விபுலாநந்தரின் நினைவாக ஆண்டுதோறும் பாடசாலை மட்டத்தில் நடாத்தப்பெறும் இப்போட்டிகளில் எழுத்துப் போட்டி களில் பங்குபற்றியோரின் தேர்ந்த எழுத்தாக்கங்கள், குறிப்பாக பரிசுபெற்ற சிறார்களின் ஆக்கங்கள், கல்விமான்களது சிறப்புக் கட்டுரைகள், தேசிய மட்டத்தில் பரிசுபெற்ற சிறார்களின் பெயர்ப்பட்டியல் என்பன இடம்பெற்றுள்ளன. (இந் நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 37725).

## 12472

**சைவ வித்தியாவிருத்திச் சங்கம்: 1958ஆம் ஆண்டு முடிவுக்கான அறிக்கை.** செயலாளர். யாழ்ப்பாணம்: சைவ வித்தியாவிருத்திச் சங்கம், 1வது பதிப்பு, 1959. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).

71 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

The Hindu Board of Education, Jaffna எனப்படும் சைவ வித்தியாவிருத்திச் சங்கம் 1923, டிசம்பர் 9ஆம் திகதி உருவாக்கப்பட்டு, 1926ஆம்ஆண்டு 23ஆம் இலக்கச் சட்டத்தின் பிரகாரம் பதிவுசெய்யப்பெற்றது. சேர் பொன்னம்பலம் இராமநாதன்,

1923 ஆம் ஆண்டிலே யாழ்ப்பாணத்திற் சைவ வித்தியாவிருத்திச் சங்கம் தோன்றுவதற்குக் காலாக இருந்ததோடு அதன் முதற் தலைவராகவும் பள்ளிக்கூடங் களின் முகாமையாளராகவும் 1926 வரை சேவை செய்தார். தொடர்ந்து அதன் போஷகராகவும் விளங்கினார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 4610).

## 12473

**தமிழ் நயம் 2003: ரோயல் கல்லூரி தமிழ் இலக்கிய மன்றம் கலை விழா மலர்.** அஸீம்அ.மக்கீன் (இதழாசிரியர்), வி.விமலாதித்தன், மு.ஜும்லி, ச.சிவாகணேஷ் (துணை ஆசிரியர்கள்). கொழும்பு: தமிழ் இலக்கிய மன்றம், கொழும்பு ரோயல் கல்லூரி, 1வது பதிப்பு, 2003. (கொழும்பு 13 : வீ மாஸ் பிரின்டர்ஸ், 282, ஆதிருப்பள்ளித் தெரு, Wolfendhall Road).

(274) பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x18.5 சமீ.

கொழும்பு ரோயல் கல்லூரியின் தமிழ் இலக்கிய மன்றம் 2003ஆம் ஆண்டு நவம்பர் 30ஆம் திகதி கொழும்பு, நவரங்கஹல மண்டபத்தில் நடத்திய கலைவிழாவின்போது வழங்கப்பட்ட சிறப்பு மலர். வழமையான ஆசிச் செய்திகளுடன் மாணவர்களின் படைப்பாக்கங்களும், நிகழ்வுகளின் புகைப்படப் பதிவுகளும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 33969).

## 12474

**தமிழ் நயம் 2006: ரோயல் கல்லூரி தமிழ் இலக்கிய மன்றம் கலை விழா மலர்.** எஸ். விஸ்மன், எம்.மோதீஸ், எஸ்.வசந்தன், பீ.பிரதீபன் (இதழாசிரியர்கள்). கொழும்பு: தமிழ் இலக்கிய மன்றம், கொழும்பு ரோயல் கல்லூரி, 1வது பதிப்பு, 2006. (கொழும்பு: நியூ யூ.கே. பிரின்டர்ஸ்).

(276) பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x17.5 சமீ.

கொழும்பு ரோயல் கல்லூரியின் தமிழ் இலக்கிய மன்றம் 2006ஆம் ஆண்டு நடத்திய கலைவிழாவின்போது வழங்கப்பட்ட சிறப்பு மலர். வழமையான ஆசிச் செய்திகளுடன் மாணவர்களின் படைப்பாக்கங்களும், நிகழ்வுகளின் புகைப்படப் பதிவுகளும் இடம்பெற்றுள்ளன. இம்மலர் வெளியீட்டுக் காலப் பகுதியில் கல்லூ ரியின் தமிழ்த்துறைப் பொறுப்பாசிரியராக திரு. ஆர்.ராஜசூரியரும், மன்றத் தலைவராக பி.அரவிந்தன் அவர்களும், இணைச் செயலாளர்களாக என். ஹிஸாம் முஹம்மத், எம்.எஸ்.ஏ.எம். சினாஸ் அலீம் ஆகியோரும் பணி யாற்றியிருந்தனர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 41075).

## 12475

**தமிழ்மொழித் தின விழா மலர் 1994**. மலர்க் குழு. கொழும்பு: கொழும்பு தெற்குக் கல்விக் கோட்டம், கல்வித் திணைக்களம், 1வது பதிப்பு, ஜுன் 1994. (வத்தளை: வத்தளை பிரின்டர்ஸ், 17/10, நீர்கொழும்பு வீதி).

(76) பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x18.5 சமீ.

04.6.1994 அன்று இடம்பெற்ற தமிழ் மொழித்தின விழாவின்போது கொழும்பு தெற்கு கல்விக் கோட்டத்தினரால் வெளியிடப்பெற்ற சிறப்பு மலர். இணைச் செயலாளர்களாக அருளானந்தம் அருள்பாஸ்கரன், பொன்மலர் கணேசராசா ஆகியோர் இயங்கியுள்ளனர். உங்களுடன் சில நிமிடம் (அருளானந்தம் அருள்பாஸ்கரன்), இலக்கிய விமரிசனமும் இலக்கியம் கற்பித்தலும் (கார்த்திகேசு சிவத்தம்பி), திருக்குறளும் பகவத் கீதையும் (நா.சுப்பிரமணியன்), மாணவர்களின் கற்றற் பாங்குகளும் வகுப்பறைத் தொடர்புகளும் (சோ.சந்திரசேகரன்), ஆலயத்திலிருந்து அரங்கேறிய தெய்வீகக்கலை பரதக்கலை (சாந்தினி சிவநேசன்), தமிழ்மொழி பற்றிய விபுலானந்த அடிகளாரின் நோக்குகள் (இ.பாலசுந்தரம்), ஒழுக்கம் விழுப்பம் பெற விழுமியக் கல்வி (கு.சோமசுந்தரம்) ஆகிய படைப்பாக்கங்கள் இம்மலரை அலங்கரிக்கின்றன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 34614. நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தின் சேர்க்கை இலக்கம் 009333).

## 12476

**தமிழ்மொழித் தின விழா மலர் 1995**. மலர்க் குழு. கொழும்பு: கொழும்பு தெற்குக் கல்விக் கோட்டம், கல்வித் திணைக்களம், 1வது பதிப்பு, ஜுன் 1995. (வத்தளை: வத்தளை பிரின்டர்ஸ், 17/10, நீர்கொழும்பு வீதி).

(108) பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x18.5 சமீ.

10.6.1995 அன்று இடம்பெற்ற தமிழ் மொழித்தின விழாவின்போது கொழும்பு தெற்கு கல்விக் கோட்டத்தினரால் வெளியிடப்பெற்ற சிறப்பு மலர். இவ்வெளியீட்டின் அமைப்பாளராக பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆர். சண்முகசர்மா அவர்களும் இணைச்செயலாளர்களாக அருளானந்தம் அருள்பாஸ்கரன், திருமதி பொன்மலர் கணேசராஜா ஆகியோரும் பணியாற்றியுள்ளனர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 28313).

## 12477

**தமிழ்மொழித் தின விழா மலர் 1996: சிறப்பு மலர்**. க.ந.ஜெயசிவதாசன் (இதழாசிரியர்), இ.சண்முகசர்மா (அமைப்பாளர்). கொழும்பு: தமிழ் மொழிப் பிரிவு, கொழும்பு கல்வி வலயம், கல்வி உயர்கல்வி அமைச்சு, இசுரபாயா, பத்தரமுல்ல, 1வது பதிப்பு, ஜுன் 1996. (கொழும்பு 12: கவிதா பிரின்டர்ஸ், 107/3, பண்டாரநாயக்க மாவத்தை).

(100) பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 26x21 சமீ.

கொழும்பு வடக்கு, தெற்கு கல்விக் கோட்டங்களில் உள்ள அறுபத்தியொரு பாடசாலைகளும் இணைந்து கொழும்பு வலயமாக மிளிர்கின்றது. இதன் கன்னிப் படைப்பாக, தமிழ் மாணவர்களின் படைப்பாக்கங்களை உள்ளடக்கியதாக இம்மலர் உள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 34619).

### 12478

**தமிழ்மொழித் தினம் 1993.** மலர்க் குழு. திருக்கோணமலை: கல்வித் திணைக்களம், வடக்கு-கிழக்கு மாகாணம், 1வது பதிப்பு, ஜுன் 1993. (திருக்கோணமலை: பிரைட்ஸ் அச்சகம்).

(21), 13 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x19 சமீ.

1993 ஆனித் திங்கள் 28ஆம், 29ஆம் திகதிகளில் திருக்கோணமலை புனித சூசையப்பர் கல்லூரி மண்டபத்தில் நடத்தப்பட்ட வடக்கு-கிழக்கு மாகாண அரசின் கல்வித் திணைக்களத்தின் தமிழ் மொழித் தின நிறைவுநாள் விழாவின்போது 29.6.1993 அன்று வெளியிடப்பட்டது. தமிழ்த் தாய் வணக்கம், ஆசிச் செய்திகள் (திருமதி. இராசமனோகரி புலந்திரன், லெப். ஜென. ஜீ. டி. ஜீ. நளின் செனவிரத்ன, வெற்றிவேலு சபாநாயகம், திரு. சொ. கணேசநாதன், ஜனாப். எம். ஏ. சீ. முகைதீன், மாகாணக் கல்விப் பணிப்பாளர் க. தியாகராசா), வாழ்த்துச் செய்தி (ஜனாப். எம். ஈ. எச். மஃறூப்), கவிதை: எங்கள் தமிழ்ப் பாவை (ஆலையூரன்), தமிழ் மொழித்தின விழாக் குழுச் செயலாளரின் செய்தி (எஸ். கமலநாதன்), மலர்க்குழு இணைப்பாளரிடமிருந்து...(எஸ். எதிர்மன்னசிங்கம்), ஆசிரியர் கீதம் ஆகியவை இம்மலரில் இடம்பெற்றுள்ளன. (நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தின் சேர்க்கை இலக்கம் 009564. இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 34618).

### 12479

**தமிழ்மொழித் தினம் 1994.** ச.அருளானந்தம் (இதழாசிரியர்). திருக்கோணமலை: கல்வித் திணைக்களம், வடக்கு-கிழக்கு மாகாணம், 1வது பதிப்பு, ஜுலை 1994. (மட்டக்களப்பு: புனித செபஸ்தியார் அச்சகம்).

xx, 156 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x19 சமீ.

1994 ஆடித் திங்கள் 6ஆம், 7ஆம் திகதிகளில் கல்முனையில் நடத்தப்பட்ட வடக்கு-கிழக்கு மாகாண அரசின் கல்வித் திணைக்களத்தின் தமிழ் மொழித் தின விழாவின்போது 7.7.1994 அன்று வெளியிடப்பட்டது. இதிலுள்ள 48 படைப்பாக்கங் களும் தமிழ்மொழியின் சிறப்பும் அதன் விரிவாக்கமும், தமிழ் மொழியும் தற்காலமும், எதிர்காலத் தமிழ் வாழுமா வீழுமா?, வலிவுறத் தமிழினி ஆளும், தமிழுக்கு நாம் செய்யக்கூடிய சேவை, காலத்தை வென்று நிற்கும் தமிழ், தமிழ்மொழி கற்பித்தலில் ஆரம்பப் பாடசாலையின் பங்கு, கற்றலும் நிற்றலும், நந்தமிழ், பைந்தமிழ் நவின்ற செந்நாப்புலவன், தமிழிற் குழந்தை இலக்கியம், வெல்லட்டும், மனச்சாட்சி, பைந்தமிழ் கற்பதால் ஏற்படும் பயன், பௌர்ணமி,

ஓசை ஒலியெலாம் ஆனாய், கத்துங் குயிலோசை, கல் முதல் மின்னல் வரை, குடையை விரியாதே, இலக்கியக் காதல், சுதந்திரத் தமிழ், மலையக கலை இலக்கியமும் சமூக மாற்றமும், மொனாலிசாவுக்கு முறுவல் சொல்லித் தந்தவளே, ஒத்திகையும் ஒப்பனையும், வாழும் வழி, ஓடி விளையாடு பாப்பா, அற்புதத் தொண்டு, மொழி வளர்ச்சியில் நூலகங்களின் பங்கு, கட்டுச்சோறு, சிறுவர் சுவைக்கும் கதைகள், பாரதியின் காதற்சுவை மிகு கவிதைகள், புதுயுகம் படைப்போம், தமிழ் மொழியில் எழுத்துச் சீர்திருத்தம், அந்தப் பூனையைப் போல எங்களால் அமைதியாகத் தூங்க முடியுமா? நமது இசை, தமிழ் இலக்கிய வரலாற்றில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், தன்னிகரில்லாத் தமிழ், மட்டக்களப்பு மாநிலத்தின் கவிவளம் மிக்க வசந்தன்-கலைநலம், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பாடல்கள்- ஒரு நோக்கு, தமிழ் நாவலிலக்கிய முன்னோடி முகம்மது காசிம் சித்திலெவ்வை, சிறுவர்க்கான நாடகங்களும் ஆசிரியர்களும், இனிய தமிழ் இலக்கியத்தில் இயற்கை வர்ணனைப் பாடல்கள், இலக்கியத்திற் சிலேடை-ஒரு நோக்கு, பாடசாலையில் சாதனையை உயர்த்தக்கூடிய வழிகள், இலக்கியமும் திறனாய்வும் மாணவர்களும், இலக்கியக் கல்வியின் நோக்கங்களும் கற்பித்தல் அணுகுமுறைகளும், திருக்கோணமலை மாவட்ட நாடகச் சிந்தனைகள், இன்பத் தமிழும் இஸ்லாமிய இலக்கியங்களும் ஆகிய தலைப்புகளில் இம்மலரில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 19180).

## 12480

**தமிழ்மொழித் தினம் 1994**. தமிழ்த்தின விழாக் குழு. கொழும்பு: தமிழ்மொழிப் பிரிவு, கொழும்பு வடக்கு கல்விக் கோட்டம், கல்வி இராஜாங்க அமைச்சு, 1வது பதிப்பு, ஜுன் 1994. (கொழும்பு 13: ரிபாய் அச்சகம், 143/9, ஜிந்துப்பிட்டி வீதி).

(66) பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22.5x18 சமீ.

கொழும்பு வடக்கு கல்விக் கோட்ட தமிழ் மொழி மூலப் பாடசாலைகளின் தமிழ்மொழித் திறன் விழாவை முன்னிட்டு வெளியிடப்படும் சிறப்பு மலர் இது. சமகாலத்தில் நாடளாவிய ரீதியில் நடைபெற்றுவந்த தமிழ்மொழித் திறன் போட்டிகள் தமிழ்மொழி மூல மாணவர்களின் ஆக்கத்திறன்களை மதிப்பீடு செய்யும் சிறந்த உரைகல்லாக அமைந்திருந்தன. அதற்குச் சாட்சியாக ஆசியுரை, வாழ்த்துரைகளுக்கும் விளம்பரங்களுக்கும் அப்பால், இம்மலரில் மாணவர்கள், ஆசிரியர்களின் படைப்பாக்கங்கள் முன்னிலைப்படுத்தப்பட்டிருக்கின்றன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 34615).

## 12481

**தமிழ்மொழித் தினம் 1997: சிறப்பு மலர்**. இ.சண்முகசர்மா (அமைப்பாளர்). கொழும்பு: கொழும்பு கல்வி வலயம், 1வது பதிப்பு, ஜுன் 1997. (கொழும்பு: ஸ்ரீசக்தி பிரின்டிங் இன்டஸ்ட்ரீஸ்).

(150) பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x19 சமீ.

பிரதம விருந்தினராக வந்திருந்த மேல்மாகாண முதலமைச்சரின் (சுசில் பிரேமஜெயந்த) முன்னிலையில் 30.06.1997 அன்று கொழும்பு 13, விவேகானந்த கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற தமிழ்மொழித் தின விழாவின்போது வெளியிடப்பட்ட சிறப்பு மலர். பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. இ.சண்முகசர்மா அமைப்பாளராக இருந்து நிகழ்வையும் விழா மலர் வெளியீட்டினையும் ஒழுங்குசெய்திருந்தார். விளம்பரங்களை அளவுக்கு அதிகமாகக் கொண்டிருக்கும் இம்மலரில் ஆங்காங்கே சில அறிக்கைகளும், மாணவர்கள், ஆசிரியர்களின் ஆக்கங்களும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 27129).

### 12482

**தமிழருவி: தமிழ்விழா சிறப்பிதழ்: 1990: தமிழ் மகா வித்தியாலயம், பண்டாரவளை.** மலர்க் குழு. பண்டாரவளை: தமிழ் மகா வித்தியாலயம், 1வது பதிப்பு, 1990. (அச்சக விபரம் தரப்படவில்லை).

160 பக்கம், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x18.5 சமீ.

பண்டாரவளை தமிழ் மகா வித்தியாலயத்தின் தமிழ் விழா சிறப்பிதழ். ஆசியுரைகள், வாழ்த்துரைகளுடன் பாடசாலை அறிக்கைகளும் இவ்விதழில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 14301).

### 12483

**தமிழருவி: ஐந்தாவது இதழ் 1974-1975.** வீரகத்தி கதிரமலை (மலர் ஆசிரியர்). கொழும்பு 10: தமிழ் மன்றம், இலங்கை தொழில்நுட்பக் கல்லூரி, 1வது பதிப்பு, 1975. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).

xvi, 80 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x18.5 சமீ.

கொழும்பு, மருதானையில் இயங்கும் கொழும்பு தொழில்நுட்பக் கல்லூரியின் தமிழ் மன்றம் ஆண்டுதோறும் வெளியிடும் தமிழருவி ஆண்டிதழின் ஐந்தாவதாண்டு இதழ். இவ்விதழில் அடித்தளத்தின் ஆழம் நாம் அடைய முயலும் இலட்சியம் (செயலாளர்), ஆளத்தான் போகிறோம்-வாழத்தான் போகின்றோம் (சரஸ்வதி சிவஞானம்), கடைச்சங்க காலமுந் தமிழரின் சமூக பொருளாதார வாழ்க்கையும் (பொ.சங்கரப்பிள்ளை), சோஷலிசமும் சட்டமும் (என்.சத்தியேந்திரா), விஞ்ஞான கைகணி (தா.சோமசேகரம்), நீ ஓர் அசல் கோமாளி (வீரகத்தி கதிரமலை), மறைந்தும் மறையாதவர் (ஈழவேந்தன்), இலங்கைத் தமிழரின் கட்டிடக்கலை (வி.எஸ்.துரைராஜா), பிரதேச அபிவிருத்தி மன்றத்தின் தோற்றமும் அதன் நோக்கங்களும் (செ.ஆறுமுகராஜா), தம்பியே தட்டிக்கேளுன்னை (கதிர் பொன்னுத்துரை), தனக்கென்றொரு பாதை (ஜி.என்.எஸ்), கோழியும் ஆமையும் (எம்.எச்.ஏ.சமது), நன்மைக்கு நன்மை செய்வது (சந்திரன்), ஆக்க இலக்கியத்தின் அவசியம் (வ.இராசையா), நாம் நாடகம் பற்றிக் கேட்ட கேள்விகளுக்கு இருவர்

அளித்த பதில்கள் (சு.வித்தியானந்தன், கார்த்திகேசு சிவத்தம்பி), இலங்கை அறிவு இயக்கத்தை சந்திக்கிறோம் (பேட்டி), Valuation (எம்.நடராஜா), உலகம் உய்ய உயிர்த்தெழுந்தார் (டி.ஆர்.அம்பலவாணர்), நிறைந்த நாகரிகம் (கந்தையா சிவசுப்பிரமணியம்) ஆகிய ஆக்கங்கள் இவ்விதழில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 4427).

## 12484

**தமிழருவி 1994: கலைவிழாச் சிறப்பிதழ்.** ச.நவாதரன், க.ஜீவலிங்கம், பா.சுகன்னியா (இதழாசிரியர்கள்). மொரட்டுவை: தமிழ் இலக்கிய மன்றம், மொரட்டுவை பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, 1994. (கொழும்பு 12: Sharp Graphics Pvt Ltd, D.G.2, Central Road).

(96) பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 26x19 சமீ.

மொரட்டுவைப் பல்கலைக்கழகம் நடத்திய தமிழ் விழா கலை நிகழ்வு 1998 அன்று நடைபெற்றவேளையில் வெளியிடப்பட்ட சிறப்பு மலர். ஆசியுரைகள், வாழ்த்துரைகள், அறிக்கைகள் என்பவற்றுடன், துணைவேந்தர் துரைராஜா (அ.ந.சசிதரன்), பயம் (திருக்கோவில் கவியுவன்), மௌனமான சோகங்கள் (மணிபாரதி), ஓ அவைகட்கு ஐந்தறிவோ (வை.ஆ.சர்மா), சமாதானம் (க. அன்பினி), மனிதத்திற்கு மாலையிடுவோம் (யாழவன்), ஏ மானிடா (எஸ்.ஈ. ஜெயராஜ்) ஆகிய கவிதைகளும், ஏற்றத்தாழ்வுகள் என்ற சிறுகதையும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 14166).

## 12485

**தமிழருவி 1997-1998: கலைவிழாச் சிறப்பிதழ்.** அ.நந்தகுமாரன், இ.இராஜராஜன், ம.சண்முகபிரகாஷ் (இதழாசிரியர்கள்). மொரட்டுவை: தமிழ் இலக்கிய மன்றம், மொரட்டுவை பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, 1998. (களுபோவில: டெக்னோ பிரின்ட், இல. 6, ஜெயவர்த்தன அவென்யூ, தெகிவளை).

(120) பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x18 சமீ.

மொரட்டுவைப் பல்கலைக்கழகம் நடத்திய தமிழ் விழா கலை நிகழ்வு 1998இல்அன்று நடைபெற்றவேளையில் வெளியிடப்பட்ட சிறப்பு மலர். இதழாசிரியர் குழுவில் அ.நந்தகுமாரன், இ.இராஜராஜன், ம.சண்முகபிரகாஷ் ஆகியோர் பணியாற்றியுள்ளனர். ஆசியுரைகள், அறிக்கைகள் விளம்பரங்களுக் கிடையே, குழந்தை தான், புலமையாளன் எனப்படுபவன், இனம்புரியாத வெறுப்பில், உழைப்பாளி வெற்றி உயர்வு, எங்கு நீர் சென்றீர், உறவைத் தேடி, பிரச்சினைகளும் அரசின் வழிமுறைகளும், மெல்லெனப் பெய் மழையே ஆகிய படைப்பாக்கங்களும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 39956).

### 12486

**தமிழருவி 2002-2003: கலைவிழாச் சிறப்பிதழ்.** ந.கௌதீபன்,பே.சோமேசன், பா. பத்மசீலன் (இதழாசிரியர்கள்). மொரட்டுவை: தமிழ் இலக்கிய மன்றம், மொரட்டுவை பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, 2003. (களுபோவில: டெக்னோ பிரின்ட், இல. 6, ஜெயவர்த்தன அவென்யூ, தெகிவளை).

(146) பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x18.5 சமீ.

இம்மலரில் கவித்துவம் ஒரு தனித்துவம் (ச.வெங்கடேசன்), மனிதனின் உடல் அமைப்பும் அதனை அடிப்படையாகக் கொண்ட வளர்ச்சிகளும் (இ.சிவராமச் சந்திரன்), தொற்றுநோய் (பு.விஜய்தாப்), Z-Score என்றால் என்ன (கை.ஜெகதீசன்), மனம் ஒருபுதிர் (இ.ஷியாமினி), காதல் சரியா தவறா (வி.செந்தூரன்) ஆகிய கட்டுரைகளும், தமிழா தமிழா, யுத்தம் விட்டுச்செல்லும் எச்சம், அவள், பிரிந்தும் பிரியாமல், அன்பு என்று கொட்டு முரசே, இலக்கை நோக்கிய இறுதிப் பயணம், இராவணாயனம், சுதந்திர மனிதர்கள், காதல் விபத்து, கடவுளிடம், தோடியப்பன் தேடி நிற்கும், விடிவு, பொன் விளக்கு, எம்மை எழுதச் சொன்னால், முகவரி, போர், மெல்லத் தமிழ் இனி, இவர்களும் நானும், பிரம்மனின் Special Product, வணக்கத்துக்குரிய கல்வித் தெய்வங்கள், காலத்தின் கோலங்கள், பூவொன்று புயலானது, வாக்குறுதி, புண்படுத்தவல்ல பண்படுத்த, என்னவளே, படிப்பு, கண்டேன், மறக்க நினைக்கையில், நவீன சீதை, காதலியே, கூடவே உந்தன், எதிர்பார்ப்புகள், நோய், காத்திருக்கிறேன், சிந்தனையில் வெறும் கற்பனைகள், தாகம், வளர்ச்சிப் பாதையில், போதை, அடி பெண்ணே, கவிதை ஆகிய தலைப்புகளிலான கவிதைகளும், சொர்க்கத்தை மிஞ்சிய நரகம், நினைவுகள், துயர் சுமந்த மண், நெஞ்சு பொறுக்குதில்லையே, தெளிவு, கடவுளுக்கு ஓர் கடிதம், உன்னத முத்து, தன் வீட்டு முற்றத்திலே, காலச் சித்தனும் காதல் பித்தனும் ஆகிய சிறுகதைகளும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 34801).

### 12487

**தழும்பு 1998: ஒன்றுகூடல் மலர்.** J.ஜெயகிருஷ்ணன், V.ராஜகுமார், V.சந்திரஹாசன், K.சுமந்திரன் (மலர் ஆசிரியர்கள்). மொரட்டுவை: இரண்டாம் வருட மாணவர்கள், தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா, மொரட்டுவை பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, ஒக்டோபர் 1998. (அச்சக விபரம் தரப்படவில்லை).

(10), 160 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x19 சமீ.

மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா வகுப்பு மாணவர்களில் அப்பயிற்சியின் இரண்டாவது வருடத்தில் பயிலும் மாணவர்களின் ஒன்றுகூடல் நிகழ்வு 31.10.1998 இல் நடைபெற்றது. அவ்வேளையில் வெளியிடப்பட்ட சிறப்பு மலர் இது. குருவிற்குக் குரு, என்னவளைக் கண்டிடுவேன், நிறம்மாறும் மனிதர்கள், நாம், சுயகட்டுப்பாடு, நிம்மதியைத் தேடி, நட்பு, உண்மை ஒளி, விபத்துக் கொலைகள், தெளிவு, பண்டைய இலக்கியமும் நவீன இலக்கியமும்,

இன்ரர்நெட், மனிதம் மறந்தா மனிதா?, நின்னுக்கோரி வர்ணம், முடியாத யுத்தம், முகவரி தவறியதால் உன்னை முழுதாய்த் தெரியவில்லை, ஆயுதம், உலகில் விடுதலைப் போராட்டங்கள், வீழ்தலையும் காதல் செய்பவன், நினைவோடு உனக்காக, இளமை, இன்றைய இளைஞர், யாரிடம் நான் உரைப்பேன், ஞாபகங்கள் தாலாட்டும், சாதி, இன்ரர்நெட்டின் வரவும் தொடர்ந்து வரும் சவால்களும், வளாகத்தில், கவிதைத் துளிகள் ஆகிய படைப்பாக்கங்கள் மாணவர்களின் கைவண்ணத்தில் உருவாகி இம்மலரில் பதியம் பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 21700).

## 12488

**தென்னவள்: மார்கழித் திங்கள் முழுநிலா நாள் கலைவிழாச் சிறப்பு மலர் 2014.** தி.அபராஜிதன் (இதழாசிரியர்). சாவகச்சேரி: தென்மராட்சி கல்வி வலயம், கல்வித் திணைக்களம், 1வது பதிப்பு, 2014. (சாவகச்சேரி: கஜானன் பன்முக சேவைகள், மீசாலை).

xix, 44 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x17.5 சமீ.

சாவகச்சேரி, தென்மராட்சிக் கல்வி வலயம் 2014 மார்கழியில் ஒழுங்குசெய்த பிரதேச பாடசாலைகளுக்கிடையிலான கலைவிழாவின்போது வெளியிடப்பெற்ற சிறப்பு மலர். ஆசிச் செய்திகள் வாழ்த்துரைகளுடன் விழா பற்றிய விழா இணைப்பாளர் கோபாலபிள்ளை கயிலாசநாதனின் அறிக்கையும், மண் மகிழ மனம் குளிர மெருகூட்டிய மார்கழித் திங்கள் முழுநிலா (தி.அபராஜிதன்), தென்மராட்சியின் பண்பாட்டைப் பிரதிபலித்த மார்கழித் திங்கள் முழுநிலா நாள் கலைவிழாவின் ஊர்திப் பவனி- ஒரு பார்வை (க.க.ஈஸ்வரன்), தமிழர் மரபில் இன்னியம்: ஒரு கண்ணோட்டம் (க.குணரத்தினம்), இன்னியத்தில் பயன்படுத்தப்படும் பாரம்பரிய வாத்தியங்கள் (திருமதி புனிதகுமாரி ஈழநேசன்), நாட்டியக் கலையில் நவரசம் (வி.சுனில் ஆரியரத்ன), காலந்தோறும் இசை (கு.ஜோதிரட்ணராஜா), பின்னல் கோலாட்டம்: ஓர் அறிமுகம் (தர்சினி பீதாம்பரன்) ஆகிய ஆக்கங்களும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 58278).

## 12489

**நவரசம்: நாடகவிழா மலர் 2003.** கொழும்பு: ரோயல் கல்லூரி தமிழ் நாடக மன்றம், 1வது பதிப்பு, 2003. (கொழும்பு 2: அரசன் அச்சகம்).

190 பக்கம், வண்ணப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14.5 சமீ.

கொழும்பு, ரோயல் கல்லூரியின் நவரங்கஹல மண்டபத்தில் 27.7.2003 அன்று 2003க்கான கல்லூரி நாடக விழா நடைபெற்றிருந்தது. அவ்வேளையில் வெளியிடப்பட்ட சிறப்பிதழ் இது. ரோயல் கல்லூரியின் தமிழ் நாடக மன்றத்தின் பல்வேறு அரங்கியல் பணிகள் பற்றிய பதிவாக மலர்ந்துள்ள இம்மலரில்

மாணவர்களின் ஆக்கங்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 31023).

### 12490

**நவரசம் 2016.** என்.கே.அபிஷேக்பரன், எஸ்.சஜிஷ்னவன் (மலராசிரியர்கள்). கொழும்பு: ரோயல் கல்லூரி தமிழ் நாடக மன்றம், 1வது பதிப்பு, 2016. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

186 பக்கம், வண்ணப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x15.5 சமீ.

கொழும்பு, ரோயல் கல்லூரி தமிழ் நாடக மன்றத்தின் பல்வேறு அரங்கியல் பணிகள் பற்றிய பதிவாக மலர்ந்துள்ள சிறப்பு மலர்.

### 12491

**பயிலுனன்: பயிற்சி ஆசிரியர் நினைவுமலர் 1991-1993.** மலர்க் குழு. கொழும்பு 12: தொலைக்கல்வி மத்திய நிலையம் (201), பாத்திமா முஸ்லிம் மகளிர் மகா வித்தியாலயம், 1வது பதிப்பு, 1993. (கொழும்பு 2: டெக்னிக்கல் பிரின்டர்ஸ், 66, வக்சோல் வீதி).

(132) பக்கம், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x22 சமீ.

தொலைக்கல்வியின் சில அம்சங்கள் (சோ.சந்திரசேகரன்), A Survey of School-Based Study Support Visit in the Tamil Medium Schools of the Colombo Region - (1991 - 1992), கற்றலுக்கு ஊக்குவித்தல் (என்.பி.எம்.சுல்தான்), இன்று அல்ல நாளை (எம்.எச். எம்.நாளிர்), ஆசிரியரின் பண்பும் பணியும் (மேனகா கிருஷ்ணபிள்ளை), வளரும் செடிகளை வளர்ப்பது எப்படி (யோகசுந்தரி குமாரசுந்தரம்), இலங்கையில் தொலைக் கல்வி (எம்.ஷஹீல் காஸிம்), கற்றல் செயற்பாட்டில் பெற்றோரும் ஆசிரியரும் (இஸட் ஏ.கைருன்நிஷா, ஏ.எச். நஜ்முன்னிஸா), ஒழுக்கக் கல்வி (ஜெயராணி தியாகராஜா), பாடக்குறிப்பின் அவசியம் (மகாலிங்கம் கலைமணி), நல்லாசிரியன் (ப.சத்தியேந்திரா), உடற்கல்வியின் முக்கியத்துவம் (ஆ.ஆ.பாரீபிக்), பணிவு நயம் (ஜெயந்தி பாலசுப்பிரமணியம்), பரீட்சை (M.Z.ஷாஜஹான்), கற்றல் கற்பித்தலில் ஆளுமை (நூர்நஸீமா), பொன் மொழிகள் - தொகுப்பு (பு.கலைவாணி), பிரார்த்தனை முறை - 1 (கௌசலா சாம்பசிவம்), பிரார்த்தனை முறை - 2 (எம்.எஸ். என்.ஹூஸ்னா), கற்பதற்கு சில ஆலோசனைகள் (எம்.என்.எம்.நிஹார்), சின்ன சின்ன ஆசை (நுவைஸா பீர் மொஹமட்), பெற்றோர்க்கும் பிள்ளைகளுக்கும் இடையிலான தொடர்பு (கலைமதி சுப்பையா), அன்பு எங்கே?-கதை (அ. அமிர்தாம்பிகை), தத்துவ முத்துக்கள் - தொகுப்பு (எம்.எம்.ஐனுல் மர்லியா), பயிலுனர் ஆசிரியையின் வெளிக்களப் புத்தகத்திலிருந்து (த.கிருஷ்ணகுமாரி) ஆகிய படைப்பாக்கங்களும், தாகம் தீர்ந்தேன் (ல.யூ.கி.விறெட்றிக்), போதனைச் சிற்பிகள் (சி.கீதா), நாங்கள் (எம்.எம்.பஷீருல் சிராஜு), மண்ணில் மனிதம் சிறக்கட்டும் (கலாநெஞ்சன்), ஆத்மாவின் கதை (இஸட் எ.கைருநிஷா), நினைவுகள்

(எம்.எஸ்.எம்.சுஜாஊஹதீன்), கற்க நிற்க கற்பிக்க (தொகுப்பு: இரண்டாம் வருட பயிலுனர் ஆசிரியர்கள்), நிறைவு தேடி (இ.தயாபதி), புதியதோர் உலகம் செய்வோம் (M.Y.ரபீகா பேகம்) ஆகிய கவிதைகளும் இடம்பெற்றுள்ளன.(இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 14155. நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தின் சேர்க்கை இலக்கம் 008791).

### 12492

**பொன்னெழுத்துக்களிற் பொறிக்கவேண்டிய ஒரு கதை.** தர்மசேன ரசாபான (மூலம்), தம்பு கனகரத்தினம் (தமிழாக்கம்). கொழும்பு: நிசங்க ஜயவர்த்தன, வெளியீட்டுப் பிரிவு, கல்வி அமைச்சு, 1வது பதிப்பு, 1983. (கொழும்பு: அரசாங்க அச்சகக் கூட்டத்தாபனம்).

14 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14.5 சமீ.

முன்னாள் ஜனாதிபதி அமரர் ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் காலகட்டத்தில் 18.01.1980 அன்று சம்பிரதாயபூர்வமாக அரச பாடசாலைகளுக்கு இலவச பாட நூல் விநியோகம் மேற்கொள்ளப்பட்டது. அந்த வேலைத்திட்டத்தின் மூன்றாண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் குளியாப்பிட்டி நகரில் நக்காவத்தை மத்திய மகா வித்தியாலயத்தில் ஒரு பொது வைபவம் நடத்தப்பட்டது. அன்றையதினம் இப் பிரசுரம் விநியொகிக்கப்பட்டது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 4049/10276).

### 12493

**மகாஜனன் பாரிஸ்-மலர் 1993.** சின்னத்துரை மனோகரன் (இதழாசிரியர்), ப. பாலசிங்கம் (இதழ் ஆலோசகர்). பிரான்ஸ்: எம்.சின்னத்துரை, பாரிஸ் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம், 73, Rue Doudeau ville,75018,Paris,1வது பதிப்பு, செப்டெம்பர் 1993. (அச்சக விபரம் தரப்படவில்லை).

80 பக்கம், விளக்கப்படங்கள், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28.5x20.5 சமீ.

பாரிஸ் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் உருவாக்கப் பட்ட இரண்டாவது ஆண்டு நிறைவில் இம்மலர் வெளியிடப்பட்டுள்ளது. தெல்லிப்பழை, மட்டக்களப்பு, கொழும்பு, லண்டன், கனடா என விரிந்த இக்கல்லூரியின் பழைய மாணவர் சங்கங்களின் வரிசையில் ஆறாவது கிளை இதுவாகும். இவ்விதழில், மகாஜனக் கல்லூரியின் இலக்கியப் பாரம்பரியம் (நா. சண்முகலிங்கன்), அசோக மரங்களும் சிறைவைக்கப்பட்ட நினைவுகளும் (இளவாலை விஜயேந்திரன்), "T" வடிவில் இருந்தது வளர்ந்தது -பாடசாலை வரலாறு (இ.சிவசோதி, இரண்டு அஞ்சலிகள்: குலநாதன் மாஸ்டர், ஆசிரியர் கதிரேசர்பிள்ளை (உ.சேரன்), நெருடல்-சிறுகதை (புவனன்), இரத்தக் கண்ணீர்-சிறுகதை (மாதினிராஜ்), ஏக்கங்கள்-சிறுகதை (சி.ராதாகிருஷ்ணன்), கந்தசாமி மாஸ்டர் (ச.சதர்சன்), எங்கள் T.P.(பத்மநாதன்) காலமானார்: கண்ணீர் அஞ்சலி, திருக்குறளில் உலக நெறி (நா.சிவபாதசுந்தரனார்), பிரான்சிய கல்விமுறை

(தினேஷ் சங்கர் பாலேஸ்வரதன்), புலம்பெயர்ந்த நாடுகளில் பழைய மாணவர் (சிவலிங்கம் சிவபாலன்), தெல்லிப்பழை அருளம்பலம் துரையப்பாபிள்ளை: பாவலர் முதல் ஈழத்து நவீன தமிழ்க் கவிதையின் முன்னோடி வரை (மயிலங் கூடலூர் பி.நடராஜன்) ஆகிய படைப்பாக்கங்களை இம்மலர் கொண்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 14497).

## 12494

**மகுடம்: 85ஆவது ஆண்டு சிறப்பு மலர் 1923-2008.** மா.பாலசிங்கம் (பதிப்பாசிரியர்). திருக்கோணமலை: ஸ்ரீ சண்முக இந்து மகளிர் கல்லூரி தேசிய பாடசாலை, 1வது பதிப்பு, 2008. (திருக்கோணமலை: அஸ்ரா பிரின்டேர்ஸ் பிரைவேற் லிமிட்டெட், இல.43, திருஞானசம்பந்தர் வீதி).

xxvi, (6), 144 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 29x21 சமீ.

திருக்கோணமலை, ஸ்ரீ சண்முக இந்து மகளிர் கல்லூரி 1923இல் உருவாக்கப்பட்டது. 2008இல் 85ஆவது அகவையை அடையும் இப்பாடசாலையின் சிறப்புமலர் 11.10.2008இல் நடைபெற்ற 85ஆவது ஆண்டு நிறைவுக் கொண்டாட்டத்துடனும் பரிசளிப்பு விழாவையொட்டியும் வெளியிடப்பட்டது. மேற்படி பாடசாலையின் வருடாந்த வெளியீடான "மகுடம்" ஆண்டிதழின் இரண்டாவது இதழே சிறப்பிதழாக மலர்ந்துள்ளது. அதிபர் அறிக்கை, கம்பன் காட்டும் ஆள்பவனுக்கு உரிய கடப்பாடுகள், கவிதானுபவம், முருக வழிபாடும் தத்துவமும், சித்தாந்த வாழ்வியல் தத்துவம், வினையாற்றல் குறைந்த ஆசிரியர்களை முகாமைத்துவம் செய்தல், தரமான கல்விக்கு தரமான ஆசிரியர்கள், இலக்கியங்கள் மனித மேம்பாட்டுக்காகவே படைக்கப்படல் வேண்டும், பண்புசார் முகாமைத்துவச் செயற்பாடுகள், இலங்கையில் உணவு வறுமையின் போக்கு, தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையும் எமது பாடசாலையும், இங்கே இப்போதே முக்தி, இறைவனை வழிபடு, எங்கள் அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய கல்லூரி அதிபர், மாணவர்கள் கல்வியில் முன்னேறவேண்டுமா?, இலக்கியங்களும் மனித விழுமியங்களும், நானும் உங்களில் ஒருவன், ஊடகங்கள் மனித வாழ்வில் ஏற்படுத்தும் தாக்கங்கள், ஊடகங்களும் நாமும், அன்பினால் அகிலத்தை வெல்வோம், மகுடம் சூடும் எனது கல்லூரிக்கு, வங்கிச் சேவையின் உபயோகங்கள், இன்றைய உலகில் போதைப் பொருட் பாவனை, இது இவ்வரங்கம் அறிந்த இரகசியம், அன்பு, முதியோரை மதித்தல் வேண்டும், நாங்கள் மனிதர்கள், மனிதாபிமானத்திற்கான தகவல் பரிமாற்றம் ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட ஆக்கங்கள் இம்மலரில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 48872).

### 12495

**மன்னார் சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி: நாற்பதாண்டு நிறைவுச் சிறப்பு மலர் 1959-1999**. *எஸ்.யூ. சந்திரகுமாரன் (மலராசிரியர்). மன்னார்: சித்தி விநாயகர் இந்தக் கல்லூரி, 1வது பதிப்பு, 1999. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48*B*, புளுமெண்டால் வீதி).*

*172 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28*x*21 சமீ.*

*சைவப் பெருந்தகை குமரையா முத்துக்குமாரு அவர்களால் வழங்கப்பட்ட காணியில் உருவான சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி தான் கடந்துவந்த பயணப் பாதையினை வரலாற்றாவணமாக்கும் நோக்கில் இந்நாற்பதாண்டு நிறைவுக் கொண்டாட்டத்தின்போது இம்மலரை வெளியிட்டுள்ளனர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 18525).*

### 12496

**முதல் உலகத் தமிழாசிரியர் மாநாடு, சிங்கப்பூர் 1992**. *இரா.மதிவாணன் (மலர்க்குழு சார்பாக). சிங்கப்பூர்: சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்கம், 1வது பதிப்பு, ஜுன் 1992. (சென்னை: சுனிதா அச்சகம்).*

*(4), 280 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28*x*21.5 சமீ.*

*சிங்கப்பூர் தமிழாசிரியர் சங்கத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்ட முதல் உலகத் தமிழாசிரியர் மாநாடு சிங்கப்பூரில் 15-18 ஜுன் 1992 இல் நடைபெற்ற வேளையில் வெளியிடப்பட்ட சிறப்பு மலர் இது. தமிழ்நாடு, சிங்கப்பூர், மலேசியா, இலங்கை, மொரிஷியஸ், பிரிட்டன், தென்னாபிரிக்கா முதலான நாடுகளில் உள்ள தமிழ் அறிஞர்கள், பாவலர்கள், கல்வியியலாளர்கள் எனப் பலரும் தத்தம் படைப் பாக்கங்களை இம்மலருக்கு வழங்கியிருக்கிறார்கள். இலங்கையிலிருந்து "பல்வேறு பண்பாட்டுச் சூழலில் பைந்தமிழ் பயிற்றுவிப்போர் பங்கு" (வை.கா.சிவப்பிரகாசம்), "பேச்சுத் தமிழில் ஆங்கிலத்தின் தாக்கம்" (அமெரிக்காவிலிருந்து முனைவர் பார்வதி கந்தசாமி) ஆகியோரின் ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன. இருவகைப்பட்ட இலக்கணக் கல்வி, இலக்கணம் கற்பிக்கும் நெறிமுறை, இலக்கியம் கற்பித்தல்,* Teaching Clasical Tamil Poetry, *கருத்துப் பரிமாற்ற அணுகுமுறை வாயிலாகப் பேச்சுத்தமிழை மேம்படுத்துதல், தாய்மொழிப் பாடத்திட்டம், மொழி கற்பித்தலில் விளையாட்டு முறையும் மொழி விளையாட்டுகளும், மொழிபெயர் தேயத்தினருக்குத் தமிழ் கற்பித்தலில் சிக்கல்களும் தீர்வுகளும், தமிழ் இலக்கியம் கற்பித்திடப் புதிய சிந்தனைகள்,* Tamil Teaching and learning-Today and Tomorrow: A South African Perspective, *பாலர் பள்ளி மாணவர்களிடையே வாசிப்புத் திறனை வளர்த்தல், மொரிஷியசில் தமிழ் கற்றல் - கற்பித்தல், தமிழ் கற்றலில் மாணவர்களுக்கு எதிர்ப்படும் இடர்ப்பாடுகள், இலக்கணம் புதியதும் பழையதும், அயல்நாடுகளில் தமிழ்ச் சிறார்களுக்குத் தமிழ் பயிற்றுவிப்பதில் எதிர்நோக்கவேண்டிய இடர்ப்பாடுகள், இலக்கணம், இலக்கணத்திற்காகவா? மொழிக்காகவா?, பகிர்ந்து படித்தல் பற்றி பள்ளி சார்ந்த ஓர் ஆய்வு, செய்முறை உத்தியைக் கொண்டு கட்டுரை கற்பித்தல், உயர்நிலை நான்கில் பயிலும் மாணவர்களின் கருத்தறிதல்*

திறனை மேம்படுத்துதல்-ஓர் ஆய்வு, மாணவர்கள் பேச்சாற்றலை வளர்க்க ஒலிநாடாக்களின் பங்கு, தமிழ் கற்பித்தலில் இனிமையும் எளிமையும், மாணவரின் மொழித்திறன் வளர்ச்சியும் மதிப்பீட்டு முறைகளும், தமிழ் கற்றலை மேம்படுத்துவதில் பயிற்று கருவிகளின் பங்கு, தமிழ்மொழிப் பாடத்திட்டம்-புதிய பார்வை, சிங்கப்பூர்த் தமிழ்க் கல்வியில் அரசாங்கத் தேர்வு முறை, சிங்கப்பூரில் தமிழாசிரியர் பயிற்சி, சிங்கப்பூரில் தமிழ், சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்கம் நடந்துவந்த பாதை ஆகிய தலைப்புகளில் ஆய்வரங்கக் கட்டுரைகளும் உரைகளும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 23306).

## 12497

**யா/இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம் பவளமலர் 1922-1997.** மலர்க் குழு. யாழ்ப்பாணம்: மெய்கண்டான் மகா வித்தியாலயம், இளவாலை, 1வது பதிப்பு, 1997. (கொழும்பு 13: செவ்வந்தி பதிப்பகம், இல. 130, ஸ்ரீ குணானந்த மாவத்தை).

xxxii, 170 பக்கம், அட்டவணைகள், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 27x21 சமீ.

இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயத்தின் வரலாற்றையும், வளர்ச்சியையும், கடந்த 75 ஆண்டுக்காலப் பகுதியில் பாடசாலைச் சமூகத்திற்கு அது ஆற்றிய அளப்பரிய சேவையையும் ஆவணப்படுத்தும் வகையில் இச்சிறப்புமலர் உருவாக்கப்பட்டுள்ளது. 1978இல் முன்னர் வெளியிடப்பட்ட பொன்விழா மலர் அதுவரைகாலத்திற்குட்பட்ட வரலாற்றாவணமாகப் பதிவுபெற்றமையால், இப்பொழுது வெளியிடப்பெறும் பவளவிழா மலரில் முதல் ஐம்பதாண்டு வரலாற்றுப் பதிவுகள் சுருக்கமாகவும், பின்வந்த 25 ஆண்டுக்கால வரலாற்றுப் பதிவுகள் விரிவாகவும் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. ஆசிரியர்-மாணவர்களின் ஆக்கங்களும் சேர்க்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 39228).

## 12498

**யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி: 150ஆவது ஆண்டு நிறைவு மலர் 1852-2002.** மலர்க்குழு. யாழ்ப்பாணம்: கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, கோப்பாய், 1வது பதிப்பு, 2002. (யாழ்ப்பாணம் பிள்ளையார் அச்சகம்).

149 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 29x20.5 சமீ.

கோப்பாய் பிரதேசத்தில் ஒரு கிறிஸ்தவ ஆலயமும் பாடசாலையும் அமைப்பதற்கென வணக்கத்துக்குரிய றொபேட் பிறெண்ட் மற்றும் அவரது துணைவியார் 1849 நவம்பரில் வருகை தந்திருந்தனர். இதன்பின் ஒருஆலயம் அமைக்கப்பட்டு ஆலய வளவில் திருமதி. பிறெண்ட் அவர்களால் ஆங்கிலமொழி மூலம் பெண்களுக்கான பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் 1852 ம் ஆண்டு இப்பாடசாலை

தனித்துவமாக இயங்கத் தொடங்கியது. அப்பொழுது 36 பெண்கள் கல்வி கற்றுக் கொண்டிருந்தனர். மதகுருமாரின் மேற்பார்வையில் இப்பாடசாலை 1899 வரை இயங்கியதன் பின்னர் யா/புனித பரியோவான் கல்லூரியின் முகாமையின் கீழ் நிர்வகிக்கப்பட்டது. 1939 இல் திரு.G.S. செல்லையா பாடசாலையின் தலைமை ஆசிரியரானார். புதிய வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டு சிரேஷ்ட சான்றிதழ் பரீட்சை 1940 இல் நடைமுறைக்கு வந்தது. இக்கால கட்டத்தில் செல்வி வயலெற் ஹட்சின்ஸ் அவர்களின் தலமையில் இயங்கிய பெண்கள் விடுதிப் பாடசாலையும் திரு.G.S.செல்லையா அவர்களை தலைமை ஆசியராக கொண்ட ஆண்கள் பாட சாலையும் ஒன்றிணைக்கப்பட்டு 1945 இல் "கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி" எனும் பெயரில் இயங்கத் தொடங்கியது. இதன் முதலாவதுஅதிபராக திரு.G.S.செல்லையாவும் பிரதிஅதிபராக செல்வி வயலற் ஹட்சின்ஸ் அவர்களும் கடமையாற்றினார்கள். இக்கல்லூரி தாபிக்கப்பட்டு 150 ஆண்டு நிறைவையொட்டி இச்சிறப்பிதழ் வெளியிடப்பட்டுள்ளது. இவ்விதழின் மலர்க் குழுவில் திருமதி ச.கனகரத்தினம், சி.சிவலிங்கம், பே.சா.அ.அரியரத்தினம், க.சிவநேசராசன், ப. கணேசன், வி.லிங்கேஸ்வரன், திருமதி எஸ்.சிவஞானரத்தினம், வே.மகாலிங்கம், எஸ்.கே.தங்கவடிவேல், யோசப் தாவீது, சு.சண்முகதாசக் குருக்கள் ஆகியோர் பங்கேற்றுள்ளனர். ஆசியுரை, வாழ்த்துரைகளுடன், கல்லூரி வரலாறு, அதிபர்கள், ஆசிரியரிகள், ஒய்வுபெற்ற ஆசிரியர்கள், அலுவலகர்களின் வரலாற்றுப் பட்டியல்கள், கல்லூரி வரலாறு, மன்றங்களின் அறிக்கை, மாணவர் பக்கம், விளையாட்டுத்துறை அறிக்கை, பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம், 2002 கல்லூரியின் நிகழ்ச்சித் தொகுப்பு, 150ஆவது ஆண்டு விழாச்சபை அறிக்கை என இன்னோரன்ன ஆவணப் பதிவுகளை இம்மலர் உள்ளடக்குகின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 34752).

## 12499

**யா/புங்குடுதீவு ஸ்ரீ சித்திவிநாயகர் மகா வித்தியாலயம் நூற்றாண்டு மலர்.** த.தவரூபன், சு.சண்முகானந்தன் (மலராசிரியர்கள்). புங்குடுதீவு: நூற்றாண்டுவிழாக் குழு, புங்குடுதீவு ஸ்ரீ சித்திவிநாயகர் மகா வித்தியாலயம், 5ஆம் வட்டாரம், இறுப்பிட்டி, 1வது பதிப்பு, 2014. (யாழ்ப்பாணம்: கரிகணன் (தனியார்) நிறுவனம், 681, காங்கேசன்துறை வீதி).

xii, 264 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x18.5 சமீ.

தீவக கல்வி வலயத்தின் வேலணை கல்விக் கோட்டத்திற்கு உட்பட்ட புங்குடுதீவு ஸ்ரீ சித்திவிநாயகர் மகா வித்தியாலயம் 2014இல் தனது நூற்றாண்டு விழாவை விமரிசையாகக் கொண்டாடிய வேளையில் வெளியிடப்பட்ட சிறப்பு மலர். புங்குடுதீவு ஸ்ரீ சித்திவிநாயகர் மகா வித்தியாலயத்தின் வரலாறு, நிறுவுநர் வரலாறு ஆகியவற்றுடன் தொடங்கும் இம்மலர் வாழ்த்துச் செய்திகள், ஆசியுரைகள், வாழ்த்துரைகள், சர்வதேசச் சங்கத்தினரின் வாழ்த்துக்கள், பழைய மாணவர்களின் வாழ்த்துக்கள், பாடசாலை அதிபர்கள், மற்றும் பழைய மாணவர்கள், ஆசிரியர்கள்,

கிராமத்து அதிபர்கள், பழைய மாணவர்கள், முன்னாள் ஆசிரியர்கள், கிராமத்துப் பெரியோர்கள், ஆகியோரின் நினைவுப் பதிகைகளுடன் பாடசாலை ஆசிரியர் , மாணவர்களின் தேர்ந்த படைப்பாக்கங்களுடன் இம்மலர் வெளிவந்துள்ளது. நூலின் சிறப்பம்சமாக பிரதேசத்தின் வரலாற்றுக் கட்டுரைகளாக புங்குடுதீவு சமய, சமூக பண்பாட்டு நோக்கு, தவத்திரு தனிநாயகம் அடிகளாரது பன்முக ஆளுமை, புங்குடுதீவு இறுப்பிட்டிக் கிராமம் வளமும் வாழ்வும், கல்வியின் சிறப்பு, யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்களின் உணவுப் பண்பாடு, தீவகத்து இந்துக் கோயில்கள் தொன்மையும் தொடர்ச்சியும், தீவகத்து மரபுரிமைச் சின்னங்கள்- சில வரலாற்றுக் குறிப்புகள் ஆகிய ஏழு சிறப்புக் கட்டுரைகளும் பக்கம் 198-259 களில் இடம்பெற்றுள்ளன.

### 12500

**யாழ். இந்து மகளிர் கல்லூரி: பொன்விழா மலர் 1943-1993.** மலர்க் குழு. யாழ்ப்பாணம்: இந்து மகளிர் கல்லூரி, 1வது பதிப்பு, 1993. (யாழ்ப்பாணம்: அருண் பிரின்டர்ஸ்).

(10), 132 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x18.5 சமீ.

இப்பொன்விழா மலரின் மலர்க்குழுவின் இணைப்பாளராக திருமதி ச. பாலசுப்பிரமணியமும், அங்கத்தவர்களாக திருமதிகள் தி.யோகநாதன், இ. சண்முகம், ஞா.சொக்கலிங்கம், கா.சிவநேசன், செல்வி அ.கந்தையா, திரு சு. சிவபாலன் ஆகியோரும் பணியாற்றியுள்ளனர். நல்லாசிகளுடனும் வாழ்த்துக் களுடனும் தொடங்கும் இம்மலரில் கல்லூரி அதிபர், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சபை, பழைய மாணவர் சங்கம், ஆசிரியர் மன்றம் ஆகியவற்றின் அறிக்கைகள் அடுத்ததாக இடம்பெறுகின்றன. தொடரும் சிறப்புக் கட்டுரைப் பகுதியில் நடுத்தோட்ட இராஜவரோதயப் பிள்ளையார் கோவில் வரலாறு (திருமதி இ.சண்முகம்), கல்வியில் கடமையும் அர்ப்பணமும் (பேராசிரியர் வ.ஆறுமுகம்), இலங்கையில் பெண்களும் பல்கலைக்கழக கல்வி வாய்ப்புகளும் (திரு.கா.குகபாலன்), சூழலைப் பாதிக்கும் விவசாய நடவடிக்கைகள் (கலாநிதி பால.சிவகடாட்சம்), கோவிலும் நாமும் (செல்வி அ.கந்தையா), இலங்கையில் வணிகக் கல்வியும் பல்கலைக்கழக அனுமதியும் (செல்வி நி.சண்முகம்), மாணவர் உலகை நோக்கிச் சமூகத்தின் சில எதிர்பார்ப்புக்கள் (செல்வி த.நகுலேசபிள்ளை) ஆகியோரின் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. தொடர்ந்து வரும் பக்கங்களில் ஆசிரியர்களின் பசுமை நினைவுகள், மாணவர் ஆக்கங்கள், மன்ற அறிக்கைகள் என்பன இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 39199).

## 12501

**வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம் வெள்ளிவிழா மலர் 1946-1971.** வி.கந்தவனம் (மலராசிரியர்), ச.விநாயகமூர்த்தி, சி.நடராசா (உதவி ஆசிரியர்கள்), ந.நவமணி, அ.அருள்மணி (மாணவர் பகுதி ஆசிரியர்கள்). யாழ்ப்பாணம்: வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம், வயாவிளான், 1வது பதிப்பு, செப்டெம்பர் 1972. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).

(16), 40 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x19 சமீ.

1945 அக்டோபர் 10 ஆம் நாள் வயாவிளான், குரும்பசிட்டி, பலாலி மற்றும் அயல் கிராமங்களிலுள்ள முன்னணிப் பிரமுகர்களின் ஒன்றுகூடலில் வயாவிளான் மத்திய கல்லூரியின் தோற்றம் பற்றிய ஆரம்ப முடிவு எடுக்கப்பட்டது. மயிலிட்டி கிராமசபைத் தலைவராக இருந்த ஈழகேசரி நா. பொன்னையா தலைவராகவும், வழக்கறிஞர் திரு.வீ. இராசநாயகம் செயலாளராகவும், ஆசிரியர் ரீ. சின்னத்துரை பொருளாளராகவும் செயற்குழுவில் அங்கம் பெற்றனர். நாடாளுமன்ற உறுப்பினர் சு. நடேசன் காப்பாளராக நியமிக்கப்பட்டார். 1946 சனவரி 16 புதன்கிழமை அன்று 115 மாணவர்களுடன் நா. பொன்னையாவிற்குச் சொந்தமான மீனாட்சி பண்ணையில் அமைச்சர் சி. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கரா பாடசாலையைத் திறந்து வைத்தார். மீனாட்சி பண்ணை அப்போது குரும்பசிட்டியில் அமைந் திருந்ததால் குரும்பசிட்டி மத்திய கல்லூரி என ஆரம்பத்தில் பெயரிடப்பட்டது. காலப் போக்கில் அப்பகுதி வயாவிளானுடன் இணைக்கப்பட்டதனால் வயாவிளான் மத்திய கல்லூரி எனப் பெயர்மாற்றம் செய்யப்பட்டது. இப்பாடசாலையின் முதலாவது அதிபராக கே. காராளசிங்கம் நியமிக்கப்பட்டார். இவருடன் மூன்று ஆசிரியர்களும் நியமிக்கப்பட்டனர். பிற்காலத்தில் இப்பாடசாலை அரசாங்கத்தினால் மாதிரிப் பாடசாலையாக தெரிவுசெய்யப்பட்டது. பெண்கள், ஆண்களுக்கென தனித்தனியான மாணவர் விடுதிகளும் அமைக்கப்பட்டன. 1978 ஆம் ஆண்டளவில் திரைஅரங்கு மற்றும் நாடக வகுப்புக்களும் உயர்தர மாணவர்களுக்கு பயிற்றுவிக்கப்பட்டன. ஈழப்போர் காரணமாக 1990 ஆம் ஆண்டில் கட்டாய இடப்பெயர்வு நடந்தது. 1990 முதல் 1991 வரை புன்னாலைக்கட்டுவன் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையிலும் பின்னர் உரும்பிராய் இந்துக் கல்லூரியிலும் இயங்கி வந்தது. 1995 ஆண்டு இடப்பெயர்வின் பின்னர் 1996 முதல் உரும்பிராயில் உள்ள தனியார் காணி ஒன்றில் 12 பரப்புக் காணியில் 1352 மாணவர்களுடன் பல ஆண்டுகளாக இயங்கி வந்தது. 2010 செப்டம்பர் 28 இல் உயர் பாதுகாப்பு வலயத்திலிருந்து பாடசாலை விடுவிக்கப்பட்டிருந்தது. 2010 அக்டோபர் 11 இல் தரம் 10, க.பொ.த சாதாரண தரம், உயர்தர வகுப்புக்கள் உள்ளடங்கலாக சுமார் 450 மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன. யாழ்ப்பாணம் வலிகாமம் வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்திலிருந்து விடுவிக்கப்பட்ட வயாவிளான் மத்திய கல்லூரியின் கல்விச் செயற்பாடுகள் 20 ஆண்டுகளின் பின்னர் 2014 அக்டோபர் 11 இல் மீள ஆரம்பிக்கப்பட்டது. 240 பரப்புக் காணியைக் கொண்ட வயாவிளான் மத்திய கல்லூரி யாழ்ப்பாண மாவட்டத்திலேயே அதிக பரப்பளவைக் கொண்ட

தாகவும் பெரிய விளையாட்டுத் திடலைக் கொண்ட பாடசாலையாகவும் திகழ்கிறது. இப்பாடசாலையின் வெள்ளிவிழா 15.9.1972 அன்று கொண்டாடப்பட்டபோது வெளியிடப்பட்ட சிறப்பு மலர் இதுவாகும். ஆசியுரை, வாழ்த்துரை, பாடசாலை அறிக்கைகளுடன், வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம் அன்றும் இன்றும், வயாவிளான் மத்திய மகாவித்தியாலய வரலாறு, தொழிற்கல்விக்குப் பெயர்பெற்ற கல்லூரி, முதல் முத்திரை, E.V.J.ஹென்ஸ்மன் அவர்களின் சேவைநலம் குறித்த பாராட்டிதழ் ஆகிய வரலாற்றுக் கட்டுரைகளும், திருவாளர்கள் க.அருணாசலம், சி.மயில்வாகனம், இ.நாகரத்தினம், செல்வி சோமசுந்தரம் ஆகியோர் பற்றிய வரலாற்றுக் குறிப்புகளும், மாணவர் ஆக்கங்களும் இடம்பெற்றுள்ளன. (இந் நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 39159).

### 12502

**விபுலவாணி: வாணிவிழாச் சிறப்பு மலர் 2004.** மலர் வெளியீட்டுக் குழு. கொழும்பு 9: இந்து மன்றம், கொழும்பு விவேகானந்த மகா வித்தியாலயம், 1வது பதிப்பு, ஒக்டோபர் 2004. (கொழும்பு 13: கீதா பப்ளிக்கேஷன்ஸ்).

xviii, 82 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25.5x18.5 சமீ.

பாடசாலையில் நவராத்திரி பூஜைக் காலங்களில் மாணவர்களால் தயாரிக்கப்பட்டு கன்னிப் பிரசுரமாக 26.10.2001 அன்று வெளியிடப்பட்ட சிறப்பு மலர், தொடர்ந்து ஆண்டு மலர்களாக விஜயதசமி தினங்களில் வெளியிடப்பட்டு வந்தது. இம்மலரில் விபுலானந்தரும் கல்வியும் (சுவாமி ஜீவானந்தா), தாய்மைத் தெய்வம் (வசந்தா வைத்தியநாதன்), இந்து தர்மம் சில விஞ்ஞான விளக்கங்கள் (சோமசுந்தரம் முரளி), முப்பெரும் சக்தியாக ஜகன்மாதா (பா.ஜானகி), கணபதியை கடலில் கரைப்பது ஏன்?(ம.குமுதினி), சமயபாடத்தின் முக்கியத்துவம் (கு.ஸ்ரீஸ்கந்தராஜா), பரதக் கலையும் சக்தி வழிபாடும் (சி.அகிலேஸ்வரி), நவராத்திரி விரதத்தின் மகிமை (ஆ.நேசமலர்), நற்சிந்தனை (ச.சத்தியஜாலனி), இறைவனைக்காண (ஆ.ஷியாமினி), முப்பெரும் தேவியர் (ர.துஹாரா), சிந்தனைகள் (க.கிருஷாந்தி), விபுலவாணி ஒரு கவிதை தான் (ப.ரொஷான்), இதயம் மலரானால் வாசனை வார்த்தையில் தெரியும் (மு.கிருஷ்ணவேணி), தாயே நீயே தெய்வம் (சுபானி தாஜ்டீன்), நம்பிக்கையும் வலிமையும் (பா.உதயவாணி), சைவசமய சின்னங்கள் (புவனா சந்திரன்), செம்மொழித் தமிழ் (ஜே.சிவகுமார்), நவராத்திரி நாயகி (இ.ரொசாந்தினி), பெருமை (கிருஷாந்தி கணேசன்), வேண்டும் (இ.அகல்யா), கல்வி (ச.கிஷான்), எமது சமயம் (புவனா சந்திரன்), விழாக்களும் விரதங்களும் (இ.ரொசாந்தினி), ஈழத்தில் இந்து சமயம் (ப.கமல்), Help us to protect our culture (N.ஜெயசீலி), வாணிவிழாப் போட்டி முடிவுகள் 2004 ஆகிய 28 ஆக்கங்களை இம்மலர் கொண்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 34732).

## 12503

**விபுலவாணி: வாணிவிழாச் சிறப்பு மலர் 2005.** மலர் வெளியீட்டுக் குழு. கொழும்பு 9: இந்து மன்றம், கொழும்பு விவேகானந்த மகா வித்தியாலயம், 1வது பதிப்பு, ஒக்டோபர் 2005. (கொழும்பு: கிரிப்ஸ் பப்ளிக்கேஷன்ஸ்).

152 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x15 சமீ.

பாடசாலையில் நவராத்திரி பூஜைக் காலங்களில் மாணவர்களால் தயாரிக்கப்பட்டு கன்னிப் பிரசுரமாக ஒக்டோபர் 2001 முதல் வெளியிடப்பட்டுவரும் சிறப்பு மலரின் 2005ஆம் ஆண்டுக்கான இதழ் இது. அரும்பு என்ற பிரிவில் ஆரம்பப் பிரிவு மாணவர்களின் ஆக்கங்களும், மலர் என்ற பிரிவில் இடைநிலை, உயர்தர வகுப்பு மாணவர்களின் ஆக்கங்களும், தாரகை என்ற பிரிவில் மேல்மாகாண மொழித்தினப் போட்டியில் பரிசுபெற்ற இப் பாடசாலை மாணவர்களின் படைப்புக்களும், தேட்டம் என்ற பிரிவில் சைவசமய உணர்வை வளர்க்கும் உத்திமுறைகள் (கு.ஸ்ரீகந்தராஜா), ஓர் ஆசிரியர் உள்ளத்திலிருந்து (சிவகுமாரி புவனராசா), இலங்கை வளம் (சோமசுந்தரம் முரளி), சிவசக்தி விநாயகன் துணை (சோமசுந்தரம் முரளி), சைவசமய வழிபாட்டில் விதிக்கப்பட்டுள்ள ஆசௌசங்களும் நீக்கத்துக்கான கால எல்லைகளும் (ம.சிவசுப்பிரமணியம்) ஆகிய ஆசிரியர் படைப்பாக்கங்களும், புது வரவு, ஆசிரியர் தினம்-2004 ஆகிய அறிக்கைகளும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 36891).

## 12504

**வீரசங்கிலி: முத்தமிழ் விழா மலர் 2017.** முருகேசு கௌரிகாந்தன் , பாலசிங்கம் பாலகணேசன் (மலராசிரியர்கள்). கோப்பாய்: தமிழ் மன்றம், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2017. (யாழ்ப்பாணம்: கரிகணன் (தனியார்) நிறுவனம், 681, காங்கேசன்துறை வீதி).

xii, 134 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x19 சமீ.

வாழ்த்துச் செய்திகளுடன் தொடங்கும் இம்மலரில் இலங்கைத் தமிழர் வரலாறு, பண்பாட்டை அர்த்தப்படுத்துவோம், அரங்கத்தறிஞர் இருவர், ஈழவேந்தன் வீரசங்கிலியும் வாரலாற்றாசிரியர்களும்: ஒரு பார்வை, முத்தமிழ்- மூலக் கருத்துப் பற்றியதொரு குறிப்பு, சங்கிலி மன்னன், மாமன்னன் வீர சங்கிலியன் மீதான ஆய்வுத் தேடலுக்கு, யாழ்ப்பாண இராச்சியத்தின் கடைசி மன்னன் சங்கிலியா? சங்கிலி குமாரனா?, ஆரியச் சக்கரவர்த்திகள், Tamil-Hindu King Sankili of Jaffna in Goa, கோப்பாய் பழைய கோட்டையின் கோலம், தமிழக அரசரும் தேவியரும் நீராடி மகிழ்ந்த ஜமுனாரி, 15ஆம் நூற்றாண்டில் தமிழ் மன்னர், வீர சங்கிலியனின் அரும்பணிகள், வீரசங்கிலி மன்னன், வெற்றியாளனாய் வீரம் நிகழ்த்தினாய், சங்கிலி மாமன்னனின் வரலாற்றுப் பாடம், நம் வீர மன்னன் சங்கிலியன், நம் வீர சங்கிலியன், வீரா நம் சங்கிலியனே, வீர சங்கிலி செகராசசேகரன், சங்கிலி நாடகம் ஆகிய படைப்பாக்கங்களும் இறுதிப் பகுதியில் முத்தமிழ் விழாவின்

பிரதம விருந்தினர்கள், முத்தமிழ் விழாச் சிறப்பு விருந்தினர்கள் (செல்வி சவுந்தராம்பிகை கணபதிப்பிள்ளை, திரு. தம்பு சிவசுப்பிரமணியம்), முத்தமிழ் விழாவில் கௌரவிக்கப்பெறுபவர் (முனைவர் துரை மனோகரன், சி.சிவலிங்கராஜா) ஆகியவையுமாக மொத்தம் 27 விடயதானங்களை இம்மலர் தன்னகத்தே கொண்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 62119).

### 12505

**வேலாயுதம்: 1895-2010: 115ஆவது ஆண்டு நிறைவுவிழா சிறப்பு மலர்.** சிவா கிருஷ்ணமூர்த்தி (மலர்ஆசிரியர்). கொழும்பு 6: வேலாயுதம் மகா வித்தியாலயம், பழைய மாணவர் சங்கம்-கொழும்பு, 71 ஏ, பீற்றசன் ஒழுங்கை, 1வது பதிப்பு, 2010. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).

xxiv, 157 பக்கம், அட்டவணைகள், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x17 சமீ.

வேலாயுதம் மகா வித்தியாலயத்தின் 115ஆவது நிறைவு ஆண்டில் கல்லூரி பற்றிய தகவல்களை ஒரு வரலாற்றுத் தொகுப்பாகப் பதிவுசெய்யும் நோக்கத்துடன் இந் நூல் தொகுக்கப்பட்டுள்ளது. முன்னாள் ஆசிரியர்கள், அதிபர்கள், பழைய மாணவர்கள், அதிகாரிகள் மூலம் சேகரித்த விடயதானங்களைத் தருவதுடன், அறிஞர் பெருமக்களின் ஆய்வுடன் கூடிய கட்டுரைகளையும் இம்மலர் வழங்கு கின்றது. கடந்த கால, நிகழ்காலப் புகைப்படங்களையும் இம்மலரில் காணமுடிகின்றது. வேலாயுதம் மகா வித்தியாலயம் ஆற்றிய சேவைகள், புரிந்த சாதனைகள், முகம்கொடுத்த சோதனைகள், பல்லாண்டு காலம் எடுத்த பெருமுயற்சிகளின் பயனாகக் கிடைத்த வெற்றிகள் என்பன 33 கட்டுரைகளில் சிறப்பாகப் பதிவாகியுள்ளன. மேலதிகமாக, பிரித்தானியர்கால யாழ்ப்பாணத்தில் புரட்டஸ்தாந்து வியாப்திக்கெதிரான சைவப் பதிற்குறிகள், வடமராட்சியின் கல்வியும் சமூக முனைவுப்பாடும், ஆங்கில மொழி மூலக் கல்வி, செ. கதிர்காமநாதனின் "வெறுஞ்சோற்றுக்கே வந்தது" சில பார்வைகள், ஈழத்தின் பழந்தமிழ் இலக்கியம் ஒன்று திருக்கரைசைப் புராணம், பணச்சலவை-ஒரு நோக்கு, வடமராட்சியின் கல்விப் பாரம்பரியம், தமிழ் எழுத்துக்கலையின் தோற்றமும் வளர்ச்சி வரலாறும்-ஒரு மொழியியலாய்வு நோக்கு, அருள் திருமுருகனின் எழிலும், அவன் பெருமையும், செம்மொழி-தமிழ்மொழி-எம்மொழி, அமரர் சின்னையா தேவராசா, இந்துப் பாரம்பரியத்தை வளர்த்த கல்விக் கலைக் கோயில்கள் ஆகிய கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 49694).

## 370.15 கல்வி உளவியல்

### 12506

**உள்ளக் கமலம்.** கோகிலா மகேந்திரன் (பிரதம ஆசிரியர்), ப.விக்னேஸ்வரன் (நிர்வாக மேற்பார்வை), தயா சோமசுந்தரம் (துறைசார் மேற்பார்வை). கொழும்பு: சிறுவர் பாதுகாப்பு நிதியம், இணை வெளியீடு, யாழ்ப்பாணம்: வலிகாமம் கல்வி வலயம், கல்வித் திணைக்களம், 1வது பதிப்பு, ஜனவரி 2006. (யாழ்ப்பாணம்: கரிகணன் தனியார் நிறுவனம், இல. 424, காங்கேசன்துறை வீதி).

(4), 140 பக்கம், அட்டவணைகள், வரைபடங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x18.5 சமீ.

உளவியல் சார்ந்து சிறுவர்களுக்கு உதவும் அதிபர், ஆசிரியர், பெற்றோருக்கான பயிற்றுநர் கைந்நூலாக இது தயாரிக்கப்பட்டுள்ளது. (இந்நூல் நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 002014).

### 12507

**சமகால உளவியல்.** இந்திரா செல்வநாயகம். வவுனியா: தமிழ் மன்றம், வ/தேசிய கல்வியியற் கல்லூரி, 1வது பதிப்பு, மே 2017. (வவுனியா: விஜய் அச்சுப் பதிப்பகம்).

xv, 141 பக்கம், விலை: ரூபா 350.00, அளவு: 21x15 சமீ., ISBN: 978-955-38057-0-6.

"சமகால உளவியல்" என்ற தலைப்பில் வெளிவரும் கல்வியியல்சார்ந்த இந் நூலில், உள்ளடக்கற் கல்வி, விழுமியக் கல்வி, சீர்மியக் கல்வி, சமூக உறவுகளை மேம்படுத்தும் கல்வி, முகாமைத்துவ உளவியல் நுட்பங்கள் முதலாம் துறைகளுடன் இணைந்த கல்வியியல் நூலாக்கமாக அமையப்பெற்றுள்ளது. விசேட கல்வித் தேவையுடையவர்களை வகைப்படுத்தல், விசேட கல்வி ஆசிரியருக்குரிய இலட்சணங்கள், மெதுவான உளவளர்ச்சிப் போக்கும் ஆசிரியரின் விசேட செயற்பாடுகளும், செவிச் செல்வமும் பேணும் வழிமுறைகளும், கவனித்தற் குறைவு அதீத செயற்பாட்டுக் கோளாறு, கற்றல் இடர்பாடுடைய மாணவர்களுக்கான கல்வி, பார்வையற்றோருக்கான நூலக வசதிகளை மேம்படுத்தல், உடல்நல பாதிப்புடைய மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கை, பேச்சுத்திறன் குறை மாணவர் மீதான கவனம், உட்படுத்தற் கல்வி விருத்தியில் தேசிய கல்வியியற் கல்லூரிகளின் பங்களிப்பு, கல்வி நிறுவன தலைமைத்துவத்தில் உளவியலின் பங்கு, பாடசாலைகளில் சீர்மியம், மனவெழுச்சிகளும் அதன் விளைவுகளும், கற்றலுக்கான ஊக்கச் செயற்பாடுகள், வகுப்பறை முகாமைத்துவ உளவியல் நுட்பம், பாடசாலையில் ஆசிரியர் மாணவர் உறவு, மனப்பாங்கு விருத்தியும் நன்னடத்தைப் பண்புகளை உருவாக்குதலும், மனிதப் பண்புகளை வளர்க்கும் மையங்களாக நூலகம், சூழலுடன் இயைபு பெறுவதில் சமகாலச் சிந்தனையின் தேவை ஆகிய 19 அத்தியாயங்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 62209).

**மேலும் பார்க்க: 12018**

## 372 பாலர் கல்வி

### 12508

**பாலர் கல்வியும் விஞ்ஞான அணுகுமுறையும்.** *பாலர் கல்விக் கழகம். யாழ்ப்பாணம்: இ.இரத்தினகோபால், செயலாளர், பாலர் கல்விக்கழகம், 49/5 யாழ் வீதி, 1வது பதிப்பு, 1986. (யாழ்ப்பாணம்: சுவர்ணம் பப்ளிசிட்டீஸ், 125ஏ, புகையிரத நிலைய வீதி).*

*(14), 170 பக்கம், விலை: ரூபா 25.00, அளவு: 17x12 சமீ.*

*இந்நூல் பாலர் கல்வி தொடர்பான பல்வேறு அறிஞர்களின் கட்டுரைகளின் தொகுப்பாகும். விஞ்ஞானமுறை ஆய்வாளர்களின் பாலர் கல்விக் கொள்கைகளும் சித்தாந்தமும், பாடவிதான வழிகாட்டுதல், பாலர்களின் உடல்நலம், புலன்-பயிற்சியும் நுண்மதிப் புலப்பாடமும், குழந்தைப் பாடசாலையில் எண்ணை அறிமுகம் செய்தல், குழந்தைகளுக்கான மொழி அபிவிருத்தியை ஏற்படுத்துதல், பாலர் சித்திரமும் செயற்பாட்டு முறைகளும், பாலர் கல்வியும் இசையும் அசைவும், விஞ்ஞான அனுபவங்கள், குழந்தைகளின் உளவியற் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் பெற்றோர்களினதும் ஆசிரியர்களினதும் பங்கு, முன்பள்ளிக் கலைத்திட்டத்தை வளமுறச் செய்தல், பாலர் பாடசாலையின் ஆசிரியையும் பெற்றோரும் சமுதாயமும், குழந்தைக் கல்விக் கோட்பாடுகள், குழந்தைக் கல்வியில் பாரம்பரியமும் சூழலும், பாலர் பாடசாலை அமைப்பும் அதன் தளபாட உபகரணங்களும் ஆகிய 15 கட்டுரைகளை இந்நூல் கொண்டுள்ளது. பின்னிணைப்பு களாக, வளர்ச்சிபெற்ற நாடுகளில் (மேற்கு ஜேர்மனி) பாலர் கல்வி முறை-ஒரு கண்ணோட்டம்,* The Usefulness of First Aid to Teachers, *பாலர் கல்விக் கழக ஆட்சிக்குழு உறுப்பினர்கள்-1986 ஆகிய மூன்று ஆவணங்களும் இணைக்கப்பட்டுள்ளன. இது பாலர் கல்விக் கழகத்தின் முதலாவது வெளியீடாகும். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 87079).*

### 12509

**பாலர் விளையாட்டுக்கள்.** *சபா ஜெயராசா. யாழ்ப்பாணம்: நகர்ப்புற அடிப்படைச் சேவைகள் நிகழ்ச்சித் திட்டம், யாழ்ப்பாண மாநகரசபை, 1வது பதிப்பு, 1999. (யாழ்ப்பாணம்: யாழ். மாவட்ட கூட்டுறவு கவுன்சில், 40/1, நாவலர் வீதி).*

*24 பக்கம், வண்ணச் சித்திரங்கள், விலை: ரூபா 160., அளவு: 22.5x18 சமீ.,* ISBN: *978-955-1997-36-6.*

*பாலர்களுக்குரிய இருபது விளையாட்டுக்கள், பாலர்களைக் கவரும் முழுப்பக்க வண்ண விளக்கச் சித்திரங்களுடன் இடம்பெற்றுள்ளன. உள்-வெளி விளையாட்டு, புதிர்ப்பொதி விளையாட்டு, மலர் விளையாட்டு, உறுப்பு அறிதல் விளையாட்டு, ஆரை விளையாட்டு, மேசை அலங்கரிப்பு விளையாட்டு, விழா மண்டபம் அறை அலங்கரிப்பு விளையாட்டு, மாமர விளையாட்டு, பெரிது சிறிது விளையாட்டு, கடித உறை விளையாட்டு, அடுக்குப் பெட்டி விளையாட்டு, கொடி விளையாட்டு, நிறைகுட விளையாட்டு, தண்ணீர் விளையாட்டு, விடையோட்டம், கயிற்று விளையாட்டு, சுருள்வலை விளையாட்டு, கருத்து அறிதல் விளையாட்டு, மணம்*

அறி விளையாட்டு, நிறம் அறி விளையாட்டு ஆகிய இருபது விளையாட்டுக்களே இந்நூலில் இடம்பிடித்துள்ளன. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வியியல்துறையின் தலைவராக விளங்கும் கலாநிதி சபா ஜெராசா அவர்களினால் ஆக்கப்பெற்ற இந்நூலின் ஆலோசகராக மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி ஆர். தெய்வேந்திரமும், பதிப்பாசிரியராக நகர்ப்புற அடிப்படைச் சேவைகள் நிகழ்ச்சித் திட்ட பிராந்தியத் திட்ட அலுவலர் ஏ.ஜேசுரெட்ணம் அவர்களும் இயங்கியுள்ளனர். இதே தலைப்பில் சபா.ஜெயராசா அவர்களின் மற்றுமொரு நூல் 24 பக்கங்களுடன் பத்து விளையாட்டுகளுடன் குமரன் புத்தக இல்லத்தின் மூலம் 2012இல் வெளியிடப்பட்டது. பதிவு இலக்கம் 8469.

## 375 பாடத்திட்டங்கள்/பாடவிதானங்கள்

### 12510

**அறநெறிப் பாடசாலைகளுக்கான பாடத்திட்டம்.** பாடத்திட்டக் குழு. கொழும்பு 2: இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், காப்புறுதி இல்லம், 9வது மாடி, 21, வாக்ஷோல் வீதி, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (கொழும்பு 2: ராஜன்அச்சகம், 31, கியூ ஒழுங்கை).

28 பக்கம், விலை: இலவசம், அளவு: 21x12.5 சமீ.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நாடளாவிய ரீதியில் நிறுவப்பட்டு வரும் சைவ சமய பாடசாலைகளான அறநெறிப் பாடசாலைகளுக்கான ஒருங்கிணைந்த பாடத்திட்டம் இது. சமயக் கல்வி மூலம் அன்பு, அஹிம்சை, நேர்மை, பொறுமை, இன்சொல், சேவை, தியாகம், கூட்டுறவு ஆகிய உயர் பண்புகளை வளர்க்கும் நோக்குடன் இப்பாடத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. பாலர் பிரிவு (2ஆம், 3ஆம் ஆண்டுகள்), கீழ்ப்பிரிவு (4ஆம், 5ஆம் 6ஆம் ஆண்டுகள்), மத்திய பிரிவு (7ஆம், 8ஆம், 9ஆம் ஆண்டுகள்), மேற்பிரிவு (10ஆம், 11ஆம் ஆண்டுகள்) என நான்கு பிரிவுகளாக வகுக்கப்பட்டு இந்தப் பாடத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வாரமும் ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 9 மணி முதல் 12 மணி வரை மூன்று மணித்தியாலங்கள் வீதம் 52 வாரங்களும் மொத்தம் 156 மணித்தியாலங்கள் மாணவர்கள் இந்த அறநெறிப் பாடசாலை களில் செலவிட எதிர்பார்க்கப்படுகின்றனர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 13155).

### 12511

**கல்வியும் கலைத்திட்டமும்.** சபா.ஜெயராசா. யாழ்ப்பாணம்: அபிராமி பதிப்பகம், 17, ஜும்மா பள்ளிவாசல் வீதி, 1வது பதிப்பு, மார்ச் 1984. (யாழ்ப்பாணம்: அபிராமி பதிப்பகம்).

63 பக்கம், விலை: ரூபா 12.00, அளவு: 17x12 சமீ.

இந்நூல் கல்வியும் கலைத்திட்டமும், கலைத்திட்ட அபிவிருத்தி, கலைத்திட்ட ஒழுங்கமைப்பு, கலைத்திட்டத்தைத் திட்டமிடல், கலைத்திட்ட நோக்கங்கள், கலைத்திட்டத்தை வளம்படுத்தும் கல்வித் தரிசனங்கள், உளவியற் செல்வாக்கு

நிலைகள், எதிர்மறைத் தாக்க விசைகள், கலைத்திட்டச் செயற்பாடுகளின் இருமைத் தன்மை, பாடசாலை என்ற காட்டுரு, கற்பித்தல் நுணுக்கங்கள், ஆசிரியத்துவம், பரீட்சைகள், பாடநூல்கள், பாடசாலை நூல்நிலையங்கள், வானொலி, தொலைக்காட்சி, கலைத்திட்டமும் மொழியும், தொடர்புக் கோலங்கள் ஆகிய அத்தியாயங்களின் வழியாக இந்நூல் கல்வியும் கலைத்திட்டமும் பற்றிய விளக்கமளிக்கின்றது. மேற்குலகில் கலைத்திட்டத்திலே காலத்துக்குக் காலம் புதுமைகள் புகுத்தப்பட்ட வேளைகளில் அவற்றுக்கு ஈடுகொடுக்கக்கூடியவகையில் இலங்கையில் ஆசிரியர்களுக்கு பணியிடைப் பயிற்சிகள் வழங்கும் திட்டங்கள் அமுல்படுத்தப்படலாயிற்று. அத்தகைய பயிற்சிநெறிகளில் பயன்படுத்த இந் நூல் பயனுள்ளதாகின்றது. (இந்நூல் நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 009646. யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் சேர்க்கை இலக்கம் 122973).

## 12512

**பன்மைச் சமூகத்தில் இஸ்லாமிய நெறிமுறைகள்: அறபுக் கல்லூரிகளுக்கான பாடவிதானத்துடன் தொடர்புடைய ஆவணங்கள்.** முஸ்லிம்களுக்கான செயலகம். கொழும்பு: முஸ்லிம்களுக்கான செயலகம், 165/2, 1/1, துட்டுகெமுனு வீதி, 1வது பதிப்பு, 2015. (அச்சக விபரம் தரப்படவில்லை).

104 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x18.5 சமீ.

பன்மைத்துவமும் சகிப்புத்தன்மையும் ஒரு இஸ்லாமிய அணுகுமுறை, இஸ்லாமும் மனித உரிமைகளும், சமாதான சகவாழ்வு, தனித்துவம் பேணலும் இணைந்து வாழலும், நல்லிணக்கமும் சமாதானத்தைக் கட்டியெழுப்புதலும், முரண்பாடும் முரண்பாட்டுத் தீர்வும் ஆகிய ஆறு அத்தியாயங்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 60698).

## 12513

**பாடத் திட்டமும் ஆசிரியர் கைந்நூலும்: தரம் 2.** ஆசிரியர் குழு. கொழும்பு: ஆரம்பக் கல்வித் துறை, தேசிய கல்வி நிறுவகம், 2வது பதிப்பு, 2000, 1வது பதிப்பு, 1999. (கொழும்பு: ஏ.ஜே.பிரின்ட்ஸ், 44, புகையிரத நிலைய வீதி, தெகிவளை).

ix, 213 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 29x21 சமீ.

கல்வியியற் கல்லூரி, ஆசிரியர் கல்லூரி விரிவுரையாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், ஆசிரியர்கள், கல்வி அதிகாரிகள் ஆகியோரிடமிருந்து கருத்துக்களும் ஆலோசனைகளும் பெறப்பட்டு, தேசிய கல்வி நிறுவகத்தின் ஆரம்பக் கல்வித் துறையினரால் புதிய கல்விச் சீர்திருத்தத்தை ஆதாரமாகக் கொண்டு தரம் 2 இற்காகத் தயாரிக்கப்பட்ட பாடத்திட்டமும் ஆசிரியர் கைநூலும் இதுவாகும். ஆசிரியர்களுக்குத் தேவையான வழிகாட்டலும், பாட உள்ளடக்கம் தொடர்பான விளக்கமும் வழங்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 39223).

## 12514

**பாடவிதான முகாமைத்துவமும் பாடசாலை ஒழுங்கமைப்பும் (அத்தியாயம் 1-6).** ஆசிரிய கல்வி நிறுவகம். மகரகம: ஆசிரிய கல்வி நிறுவகம், தேசிய கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1993. (தெகிவளை: ஏ.ஜே.பிரின்ட்ஸ், 1-B, P.T. டீ சில்வா மாவத்தை).

138 பக்கம், அட்டவணைகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x20.5 சமீ.

ஆறு அத்தியாயங்கள் கொண்ட இந்நூலில் பாடசாலை ஒழுங்கமைப்பும் பாடவிதான முகாமைத்துவமும்/ ஒரு நிறுவனம், ஒரு சமூகத் தொகுதி என்ற வகையில் பாடசாலையின் எதிர்பார்ப்புகள்/ தனிநபர் பாத்திரத்துக்கேற்ப முகாமைத்துவச் செயன்முறைகள்/ பாடசாலை ஒழுங்கமைப்பும் பாடவிதானத்தை செயற்படுத்துதலில் ஆசிரியரின் பாத்திரமும்/ ஆசிரியர்களுக்கான திட்டமிடல், முகாமைத்துவ நுட்ப முறைகளும் திறன்களும்/ பாடவிதானத்தைத் திட்டமிடலும் ஒழுங்கமைத்தலும் ஆகிய தலைப்புகளின்கீழ் பாடவிதான முகாமைத்துவம் பற்றியும் பாடசாலையின் ஒழுங்கமைப்பு பற்றியும் விளக்கமளிக்கப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 34613).

## 12515

**பாடவிதான முகாமைத்துவமும் பாடசாலை ஒழுங்கமைப்பும் (அத்தியாயம் 7-12).** ஆசிரிய கல்வி நிறுவகம். மகரகம: ஆசிரிய கல்வி நிறுவகம், தேசிய கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1993. (தெகிவளை: ஏ.ஜே.பிரின்ட்ஸ், 1-B, P.T. டீ சில்வா மாவத்தை).

143 பக்கம், அட்டவணைகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x20.5 சமீ.

மேலும் ஆறு அத்தியாயங்கள் கொண்ட இரண்டாவது பாகமான இந்நூலில் வகுப்பறை முகாமைத்துவம்/ மேற்பார்வை/ பாடசாலை ஆளணிக் குழுக்கள் (ஆசிரியரும் மாணவரும்) மீது செல்வாக்குச் செலுத்தும் சட்டதிட்டங்கள்/ பாடசாலைக் கற்றல் சூழ்நிலையும் ஒழுங்கமைப்பும் கலாசாரமும்/ பாடசாலை சம்பந்தமான உறவுகள்/ ஆசிரியர் நலனோம்புகையும் தொழில் விருத்தியும் ஆகிய அத்தியாயங்களில் பாடவிதான முகாமைத்துவமும் பாடசாலை ஒழுங்கமைப்பும் பற்றி விளக்கப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 41182).

## 12516

**பிள்ளைகளுக்குச் சமாதானத்தைக் கற்பித்தல்: ஓர் மாதிரிப் பாடத்திட்டம் (உயர் இடைநிலை வகுப்புகளுக்காக).** ஏ.எஸ்.பாலசூரிய (ஆங்கில மூலம்), ஆர்தர் ஜோன்ஸ் பெர்னாண்டோ (தமிழாக்கம்), தை.தனராஜ் (பதிப்பாசிரியர்). மகரகம: கல்வி முகாமைத்துவ அபிவிருத்தித்துறை, தேசியகல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1995. (கோட்டே: கிரபிக்ஸ் சிஸ்டம்ஸ் லிமிட்டெட், இல. 11, உஸ்வத்த மாவத்தை).

ix, *270 பக்கம், சித்திரங்கள், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21*x*15 சமீ.*, ISBN: *955-597-308-3.*

Teaching Peace to Children (Model lessons for upper secondary classes) *என்ற நூலை ஏ.எஸ்.பாலசூரிய அவர்கள் யூனிசெப் நிறுவனத்தின்* Education for Conflict Resolution Project *என்ற வேலைத்திட்டத்தின்கீழ் எழுதியிருந்தார். சமாதானக் கல்வியை அறிமுகப்படுத்தும் நோக்குடன் பாடசாலைகளுக்கு இலவசமாக விநியோகிக்கப் பட்ட அந்த நூலின் தமிழாக்கம் இதுவாகும். பாடத்திட்ட அறிமுகம், சமாதானம் என்றால் என்ன? மானிட வன்முறைப் பண்பு பற்றிய பிரச்சினை, சமாதானக் கல்வியும் ஆசிரியரும், ஆகிய அறிமுக அத்தியாயங்களைத் தொடர்ந்து அன்போடு வாழ்வோம், எல்லாவற்றினதும் நல்ல பக்கத்தை நோக்குவோம், விலங்குகள் மீது கருணை காட்டுவோம், இம்சையின் தன்மையை விளங்கிக்கொள்வோம், இம்சையைத் தவிர்ப்போம், எமக்கிடையே உள்ள பிணக்குகளை பரஸ்பர ஒத்துழைப்பு மூலம் தீர்த்துக்கொள்வோம், சமூகத்தை மாற்றியமைப்பதில் அஹிம்சைவழிச் செயன்முறைகளைக் கைக்கொள்வோம், சமாதானம் நிறைந்த உலகத்தைக் கட்டியெழுப்புவோம் ஆகிய எட்டு மாதிரிப் பாடங்கள் இடம பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 26984).*

**மேலும் பார்க்க: 12506**

## 380. (1) வர்த்தகவியல்/வணிகவியல் பாடநூல்கள்

### 12517

**சர்வதேச வர்த்தகமும் ஒத்துழைப்பும்: சர்வதேச அமைப்புக்கள்.** *ஜெயராணி தியாகராஜா, வீரகுட்டி தியாகராஜா. கொழும்பு 13: கீதா பப்ளிகேஷன், 1வது பதிப்பு, தை 2001. (கொழும்பு: நிஷான் பிரின்டர்ஸ்).*

*(6), 114 பக்கம், அட்டவணைகள், விலை: ரூபா 90., அளவு: 21*x*14 சமீ.*

*தரம் 11 சமூகக் கல்வியும் வரலாறும் பாடத்திற்கான முதல் இரு அலகுகளான சர்வதேச வர்த்தகமும் ஒத்துழைப்பும், சர்வதேச அமைப்புக்கள் ஆகிய இரண்டு பாடக்கூறுகளுக்குமான மேலதிக பாடநூல் இது. முதலாவது அலகில் சர்வதேச வர்த்தக விருத்திக்கான காரணங்கள், இரு பக்க வர்த்தகமும் பல்பக்க வர்த்தகமும், நாணய மாற்று விகிதம், சென்மதி நிலுவை, வர்த்தக மீதி, வர்த்தக விகிதம், சர்வதேச வர்த்தகத்தின் சாதகமும் பாதகமும், சர்வதேச வர்த்தகத்தினால் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகம், சர்வதேச வர்த்தகம் தொடர்பான சர்வதேச தாபனங்கள், வெளிநாட்டு உதவி, வெளிநாட்டுக் கடன், வெளிநாட்டு நன்கொடை ஆகிய விடயப் பரப்புகள் தனித்தனிப் பாடங்களாக விளக்கப்பட்டுள்ளன. இரண்டாவது அலகில் தென்னாசிய நாடுகளின் பிராந்திய ஒத்துழைப்பிற்கான கூட்டமைப்பு-சார்க், சப்தா, சப்ரா, கொழும்புத் திட்டம், பொதுநலவாய அமைப்பு, ஐக்கிய நாடுகள் சபை, ஐக்கிய நாடுகள் அமையத்தின் சில முக்கிய இணைத்தாபனங்கள்*

(யுனெஸ்கோ, யுனிசெப், உலக சுகாதார ஸ்தாபனம், ஐக்கிய நாடுகளின் கைத்தொழில் அபிவிருத்தி தாபனம், ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியம், சர்வதேச தொழிலாளர் தாபனம், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம், புனரமைப்புக்கும் அபிவிருத்திக்குமான சர்வதேச வங்கி), சர்வதேச நாணய நிதியம், பெற்றோலிய ஏற்றுமதி நாடுகள் அமைப்பு - ஒபெக், தென்கிழக்காசிய நாடுகளின் சங்கம் - ஆசியான், ஆசிய அபிவிருத்தி வங்கி, பரீட்சை மதிப்பீட்டுக் கருவிகள் ஆகிய விடயப் பரப்புகள் தனித்தனியாக விளக்கப்பட்டுள்ளன. நூலாசிரியர் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் அதிதி விரிவுரையாளராவார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 36567).

## 12518

**வணிகக் கல்வி: உயர்தர வகுப்புகளுக்குரியது: வங்கிகளும் வங்கித் தொழிலும்.** சு.இராஜகிருஷ்ணர் இரகுநாதன். கண்டி: பவளரத்ன பப்ளிக்கேஷன்ஸ், 396/12B, பேராதனை வீதி, 2வது பதிப்பு, ஜனவரி 2001, 1வது பதிப்பு, ஜூன் 1993. (கொழும்பு 15: கலர் பிரின்ட்ஸ், 712, புளூமெண்டால் வீதி).

(8), 71 பக்கம், விலை: ரூபா 60., அளவு: 22x14 சமீ., ISBN: 955-8389-00-5.

இந்நூல் வங்கித்தொழிலையும் அது தொடர்பான சகல செயற்பாடுகளையும் மிகவும் எளிமையான முறையில் இலகு தமிழில் எடுத்துக் கூறுகின்றது. இலங்கை மத்திய வங்கி, வர்த்தக வங்கிகள், வங்கியல்லாத நிதி நிறுவனங்கள், தேசிய சேமிப்பு வங்கி, அபிவிருத்தி வங்கிகள், கிராமிய வங்கிகள், வியாபார வங்கிகள், நிதிக் கம்பெனிகள், குத்தகைக் கம்பெனிகள், கைமாறத்தக்க சாதனங்கள், காசோலை, மாற்றுண்டியல், வாக்குறுதிச் சீட்டு, பணம், நாணய மாற்று விகிதம் ஆகிய தலைப்புகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 38011).

## 12519

**வணிகக் கல்வி: துணைச் சேவைகள் பாகம் 1 (க.பொ.த.உயர்தர வகுப்புக்குரியது).** செல்லமுத்து இம்மானுவேல் (தொகுப்பாசிரியர்). கொழும்பு 6: வி.கே.வி. வெளியீடு, இல. 6, கொலிங்வுட் பிளேஸ், வெள்ளவத்தை, 1வது பதிப்பு, மே 2004. (கொழும்பு 6: குளோபல் கிராப்பிக்ஸ், இல. 14, 57ஆவது ஒழுங்கை, வெள்ளவத்தை).

vii, 88 பக்கம், விலை: ரூபா 120., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 955-98558-0-8.

க.பொ.த. உயர்தர வகுப்பு மாணவர்களின் வணிகக் கல்விப் பாடத்திட்டத்தில் இடம்பெற்றுள்ள காப்புறுதி, போக்குவரத்து, தொடர்பாடல் ஆகிய பாடப் பரப்புகளை விளக்குவதுடன் கடந்த கால வினாக்களையும் நூலின் இறுதியில் சேர்த்துள்ளனர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 33203).

**12520**

**வணிகக் கல்வி-பகுதி II: முகாமைத்துவம்.** A.விஜேந்திரன் (புனைபெயர்: சண்). கொழும்பு: விஜேந்திரன் (சண்), 1வது பதிப்பு, நவம்பர் 2001. (கொழும்பு 12: லங்கா புத்தகசாலை, F.L.1-14, டயஸ் பிளேஸ், குணசிங்கபுர).

(6), 146 பக்கம், விலை: ரூபா 175., அளவு: 21.5x15 சமீ.

க.பொ.த. உயர்தரம் புதிய பாடத்திட்டத்தில் பகுதி 2இல் அறிமுகப்படுத்தப்பட்ட 3ஆம், 4ஆம் அலகுகளை உள்ளடக்கி இந்நூல் எழுதப்பட்டுள்ளது. இந்நூல் பல்கலைக்கழகப் பரீட்சை, வங்கிப் பரீட்சை, தொழில்நுட்பக் கல்லூரிப் பரீட்சை போன்றவற்றிற்கும் ஏற்புடையதாகத் தயாரிக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்திற்கும் வணிக முயற்சிகளுக்கும் இடையிலான தொடர்பின் முக்கியத்துவம், முயற்சி யாண்மை, சிறிய நடுத்தர அளவு நிறுவனங்கள், முகாமைத்துவம், மனிதவள முகாமை, நிதிமுகாமை, உற்பத்தி முகாமை, இருப்புக் கட்டுப்பாடு, சந்தைப்படுத்தல் முகாமை, செயற்திட்ட அறிக்கை, விடய ஆய்வு ஆகிய அத்தியாயத் தலைப்பு களின்கீழ் இந்நூல்எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 21574).

**12521**

**வணிகக் கல்வியும் கணக்கீடும்: தரம் 11.** இ.இரத்தினம். யாழ்ப்பாணம்: உயர்கல்விச் சேவைகள் பதிப்பகம், 3வது பதிப்பு, 2003, 1வது பதிப்பு, 2001, 2வது பதிப்பு, 2002. (யாழ்ப்பாணம்: உயர்கல்விச் சேவைகள் பதிப்பகம்).

(4), 124 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 21.5x14.5 சமீ.

க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கு வணிகக் கல்வியும் கணக்கீடும் என்ற பாடம் 2000ஆம்ஆண்டிலிருந்து 10ஆம் தரத்திலிருந்து அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்நூல் தேசிய கல்வி நிறுவனத்தின் 11ம் தரத்தின் புதிய பாடத்திட்டத்துக்கு அமைவாக அனைத்து அலகுகளையும் உள்ளடக்கியதாக வெளியிடப்பட்டுள்ளது. மாணவர்களுக்கு இலகுவான முறையில் விளங்கக்கூடியதாக வடிவமைக்கப் பட்டுள்ளது. முதலீட்டு வாய்ப்புகளும் நிறுவனங்களுக்கான நிதிச் சேவையும், முயற்சியாண்மை, கிரயமும் விலை நிர்ணயமும், தகவல் தொழில்நுட்பம், நிறுவன முகாமைத் தொழிற்பாடு, காசேட்டுத் திருத்தமும் வங்கி இணக்கக்கூற்றும், தொங்கல் கணக்கு (வழுக்களைச் செவ்வைசெய்தல்), முடிவுக் கணக்கு, இலாப நோக்கற்ற நிறுவனங்களின் கணக்கு, இறுதிக் கணக்கு நிலைக்குத்து வடிவம் ஆகிய பாடப்பரப்புகள் விளக்கப்பட்டுள்ளன. க.பொ.த. சாதாரண தரம் 2002 பரீட்சை வினாக்கள் இறுதியில் தரப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 29676).

### 12522

**வர்த்தகவியல்: தொழில் முன்னிலைப் பாடநெறி: ஒன்பதாம் தரம்.** வே.அழகேசன், அ.ஸ்ரீஸ்கந்தராசா, யாழ்ப்பாணம்: வே.அழகேசன், அ.ஸ்ரீஸ்கந்தராசா, 2வது பதிப்பு, மார்ச் 1977, 1வது பதிப்பு, ஜுன் 1975. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ பார்வதி அச்சகம்).

*(4), 248 பக்கம், விலை: ரூபா 9.00, அளவு: 20x13.5 சமீ.*

*இலங்கையில் 1972இல் அடிப்படை மாற்றத்தையுடைய கல்விச் சீர்திருத்தங்களைப் புகுத்தினர். இதன் முக்கிய அம்சங்களில் ஒன்றாகத் தொழில் முன்னிலைப் பாடநெறிகள் புகுத்தப்பட்டன. இதில் வர்த்தவியலும் ஒன்றாகும். இந்நூல், வர்த்தகவியலின் ஒன்பதாம் தரத்துக்குரிய பொருளாதார அடிப்படையும் வர்த்தகமும், இலங்கைப் பொருளாதாரமும் ஏனைய நாடுகளின் பொருளாதாரமும், சில்லறை வியாபாரம், மொத்த வியாபாரம், உள்நாட்டு வியாபாரம், வியாபார அமைப்பு, கூட்டுறவு இயக்கம், பணமும் வங்கித் தொழிலும், விளம்பரம், வியாபாரத் தகவல் பரிமாறல், போக்குவரத்து, வெளிநாட்டு வர்த்தகம், பண்டக சாலையும் களஞ்சியமும், காப்புறுதி ஆகிய 14 பிரிவுகளின்கீழ் எழுதப்பட்டுள்ளது. இறுதியில் மூன்று மீட்டல் பயிற்சிகளும் தரப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 24721).*

**மேலும் பார்க்க: 12518**

## 388 தரைப்போக்குவரத்து

### 12523

**நியூ வேவ் டிரைவிங் ஸ்கூல் (New Wave Driving School).** குமாரசாமி இந்திரசித். லண்டன் HA 9 7ND: New Wave Driving School, Office 203, 11 Courtenay Road, East Lane, Wembley, 1வது பதிப்பு, 2013. (அச்சக விபரம் தரப்படவில்லை).

iv, *666 பக்கம், விளக்கப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x15 சமீ.,* ISBN: *978-1-908357-47-2.*

*1.1.2013 முதல் பயன்படுத்தத்தக்க பிரித்தானிய உத்தியோகபூர்வ சாரதி நியம நிறுவனம்* DVLA *வழங்கிய எழுத்துமூல கேள்வி-பதில் தரவுகளை உள்ளடக்கிய வாகன ஓட்டுநருக்கான பயிற்சிக் கைநூல். இது மீட்டல் கேள்விக் கொத்தினையும் எழுத்துமூல பரீட்சைக்காகத் தேவைப்படும் அறிவும்,அதனைப் புரிந்துகொள்வதற் கான பாடநெறியும் உள்ளடங்கியது. விழிப்புணர்வு, மனோபாவம், பாதுகாப்பும் உங்கள் வாகனமும், பாதுகாப்பு எல்லைக் கோடுகள், ஆபத்துக்கான முன்னுணர்வு, காயம்படத்தக்க வீதிப் பாவனையாளர்கள், வேறுவகையான வாகனங்கள், வாகனத்தைக் கையாளல், நெடுஞ்சாலை வீதி விதிகள், வீதிவிதி முறைகள், வீதியும் வீதிச் சமிக்ஞைகளும், ஆவணங்கள், சம்பவங்கள், விபத்துக்களும் அவசரகால நிலைமைகளும், வாகனச் சுமையேற்றல் ஆகிய பதினான்கு பிரிவுகளில் இவை விரிவாக விளக்கப்பட்டுள்ளன.*

## 392.5 சடங்கு முறைமைகள், திருமணங்கள், மரணச் சடங்குகள்

### 12524

**சைவத் தமிழ் திருமணங்கள்: ஓர் கையேடு.** இ.குமாரவடிவேல் (தொகுப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: குருபரன்-ஆரணி திருமணநாள் ஞாபகார்த்த வெளியீடு, 1வது பதிப்பு, பெப்ரவரி 2014. (யாழ்ப்பாணம்: கரிகணன் தனியார் நிறுவனம், இல. 424, காங்கேசன்துறை வீதி).

44 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ.

குருபரன்-ஆரணி திருமணநாள் ஞாபகார்த்த வெளியீடாக 10.02.2014 அன்று விநியோகிக்கப்பெற்ற இப்பிரசுரம், யாழ்ப்பாணச் சைவப் பெருமக்களின் திருமணச் சடங்கு தொடர்பான நடைமுறைகளையும் சம்பிரதாயங்களையும் விளக்குகின்றது. பொன்னுருக்கலும் கன்னிக்கால் அல்லது முகூர்த்தக்கால் நடுதலும் எவ்வாறு நடத்தப்படவேண்டும் என்பதில் தொடங்கி திருமணத்தின் பின்னர் கால்மாறல் வரையிலுமான அனைத்துக் கட்டங்களிலும் எவ்வாறு செயற்படல் வேண்டும் என்பதை இச்சிறுநூல் விளக்குகின்றது. முதலாவது பின் இணைப்பாக திருமண ஏற்பாட்டு ஒழுங்குகள் பற்றி 15 வகையான செயற்பாடுகள் பட்டியலிடப்பட்டுள்ளன. இரண்டாவது இணைப்பில் பொன்னுருக்கும் வைபவத்திற்குத் தேவையான பொருட்களின் பட்டியலும், மூன்றாவது இணைப்பில் மணமக்கள் வீடுகளில் கன்னிக்கால், மரக்கிளை/மரக்கன்று நடுவதற்குத் தேவையான பொருட்களின் பட்டியலும், அதனைத் தொடர்ந்து வரும் இணைப்புகளில் மணநாளன்று மணமக்கள் வீடுகளில் அலங்காரம், மணநாளன்று மணமகன் அழைப்பு/ நீராட்டின்போது தேவைப்படும் பொருட்கள், மணமகனுடன் மணமண்டபத்துக்கு எடுத்தச் செல்லப்படும் தட்டங்கள், மணநாளன்று கல்யாண மண்டப ஒழுங்குகள், திருமணக் கிரியைகளுக்குத் தேவையான பொருட்கள் என்பன பட்டியலிடப்பட்டுள்ளன.

### 12525

**மஹாளய சிராத்தம்.** நீர்வேலி தி. நடனசபாபதி சர்மா. ஜேர்மனி: ஸாயிநாதம், போஃகும், 1வது பதிப்பு, 1998. (Germany: Sainatham, Bochumerstr -138, 44866 Bochum).

x, (2+10), 91 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 22x14.5 சமீ.

பிரான்ஸ், தூலுஸில் புலம்பெயர்ந்து வாழும் நீர்வேலி தி. நடனசபாபதி சர்மா அவர்களினால் அபரக்கிரியைகள் சம்பந்தமான கிரந்தங்களோடு ஒப்பிட்டு ஆராய்ந்து கிரியா பாகங்களையும், செய்யும் வழி முறைகளையும் தமிழில் விரிவாக விளக்கி எழுதப்பெற்றுள்ள நூல். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 18267).

**மேலும் பார்க்க: 12048,12055,12058**

## 395 நாட்டார் வழக்காற்றியல்

### 12526

**ஈழத்து நாட்டார் வழிபாடு.** இரா.வை.கனகரத்தினம். பேராதனை: தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, 2016. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

x, 186 பக்கம், விலை: ரூபா 650., அளவு: 22x14.5 சமீ.

இத்தொகுதியிலுள்ள கட்டுரைகள் இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் அமரர் இரா.வை.கனகரத்தினம் அவர்கள் ஊடாடிப்பெற்ற அனுபவத்தின் வழியாகவும், திட்டமிட்ட கள ஆய்வு நடவடிக்கைகள் மூலமும் பெற்ற தகவல்களின் அடிப்படையிலும் கட்டமைக்கப்பட்டுள்ளன. இவை வெறுமனே வழிபாட்டு நிகழ்த்துமுறைகளை-சடங்காசாரங்களை விபரணம் செய்வதுடன் மட்டும் நின்றுவிடவில்லை. சடங்கு, அவற்றின் வழியே உருப்பெறும் நிர்வாக முறைமைகள், பல்வேறு சமூகக் குழுக்களின் இணைவு, அந்த இணைவின் சாத்தியப்பாடுகள், சடங்கின் சமூக முக்கியத்துவம் எனச் சடங்குடன் தொடர்புடைய ஒவ்வொரு கூறும் மிக நுணுக்கமான கண்ணோட்டத்துடன் ஆராயப்பட்டுள்ளது. ஈழநாட்டிற் கண்ணகி வழிபாடு-ஓர் ஆய்வு, வன்னியிற் கண்ணகி வழிபாடு, ஈழத்து வன்னிமைகளின் சிறுதெய்வ வழிபாடு, ஐயனார் வழிபாடும் ஈழத்து வன்னிமை மக்களும், வன்னிவள நாட்டில் நாச்சிமார் வழிபாடு, நாட்டார் வழக்காற்றில் கொத்தித் தெய்வம், வதனமார் வழிபாடு, நாட்டார் வழக்காற்றில் பெரியதம்பிரான் வழிபாடு, நாட்டுப்புறத் தெய்வ வழிபாட்டில் பெரியதம்பிரான் வழிபாடு-ஓர் அறிமுகம் ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட ஒன்பது கட்டுரைகள் இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன. அமரர் இரா.வை.கனகரத்தினம் அவர்களின் ஞாபகார்த்த மாகத் தொகுக்கப்பெற்ற இந்நூலின் நுலாக்கக் குழுவில் வ.மகேஸ்வரன், சோதிமலர் ரவீந்திரன், ஸ்ரீ பிரசாந்தன், ஆன் யாழினி சதீஸ்வரன், பெ.சரவணகுமார், எம்.எம்.ஜெயசீலன், பா.சுமன், எம்.என்.ஜெஸ்மினா, எம்.வை.எப்.ரிஸ்மியா ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

### 12527

**முஸ்லிம் நாட்டாரியல்: தேடலும் தேவையும்.** எம்.எஸ்.எம்.அனஸ். திருச்சி மாவட்டம்: அடையாளம் வெளியீடு, 1205/1, கருப்பூர் சாலை, புத்தாநத்தம் 621310, 1வது பதிப்பு, 2008. (சென்னை 5: மணி ஓப்செட்).

104 பக்கம், விலை: இந்திய ரூபா 65., அளவு: 21.5x13.5 சமீ., ISBN: 978-81-7720-098-0.

முஸ்லிம் நாட்டாரியல் குறித்த அறிவியல்பூர்வமான ஆய்வுகள் இந்நூலில் நிகழ்த்தப்பட்டுள்ளன. தமிழகத்திலும் இலங்கையிலும் முஸ்லிம் நாட்டாரியலில் இதுவரை நிகழ்த்தப்பட்டுள்ள துறைசார்ந்த ஆய்வுகளையும் பதிவுகளையும் இந்நூல் பட்டியலிடுகிறது. இலங்கைத் தமிழ் முஸ்லிம்களிடம் வழக்கில் உள்ள வழிநடைச் சிந்து, யானைக்காதல், பதம், அறக்கவி, வசைப்பாடல்கள் போன்ற நாட்டார் தரவுகள் தமிழ் ஆய்வாளர்களுக்கும் வாசகர்களுக்கும் புதிய

செய்திகளாகும். இலங்கையில் ஒரு காலத்தில் புழக்கத்தில் இருந்த நாட்டார் நாடகங்கள், இசைப்பாடல்கள், கதைப்பாடல்கள் என்பன போன்ற நாட்டார் நிகழ்த்தல் கலைகளையும் இந்நூல் அறிமுகம் செய்கின்றது. தர்ஹா பண்பாடு, மவ்லூது பாடல்கள், பைத் பாடல்கள், நோன்புகாலக் கலாச்சாரங்கள், காதல் பாடல்கள் என்று பல்வேறுவிதமான தரவுகளையும் அனஸ் இந்நூலில் விரிவாகப் பதிவுசெய்துள்ளார். இலங்கையில் முஸ்லிம் நாட்டாரியல், வரகவி செய்கு அலாவுதீனும் இலங்கை நாட்டாரியல் போக்குகளும், முஸ்லிம் வழிநடைச் சிந்துகள், அரபு நாடுகளில் நாட்டாரியல் ஆகிய ஐந்து இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 47631).

## 398 கிராமிய இலக்கியங்கள், நாட்டுக்கூத்துக்கள்

### 12528

**ஈழம்-மட்டக்களப்பு மாநிலத்தில் தொன்றுதொட்டு வழக்கில் இருந்துவரும் வசந்தன் கூத்து: ஒரு நோக்கு.** *ஈழத்துப் பூராடனார், அன்புமணி இரா.நாகலிங்கம், க. தங்கேஸ்வரி, மு.நடேசானந்தம் (தொகுப்பாசிரியர்கள்). கனடா: ஜீவா பதிப்பகம், 1109* Bay Street, Toronto, Ontario M5S 2B3, *1வது பதிப்பு, ஏப்ரல் 2000. (கனடா: ரிப்ளெக்ஸ் அச்சகம், 1109* Bay Street, Toronto, Ontario M5S 2B3).

*36 பக்கம், புகைப்படங்கள், விலை: கனேடிய டொலர் 3.00, அளவு: 21.5*x*14 சமீ.*

*மட்டக்களப்பு அன்புவெளியீடு ஆதரவிலும், கனடிய மட்டக்களப்பு மக்கள் சமூக ஆதரவிலும் நிழல் வெளியீடாக இந்நூல் வெளிவந்துள்ளது. மட்டக்களப்பு மக்கள் ஒரு சிறு வரலாறு, வசந்தன் கூத்து, வசந்தன் கூத்து அண்ணாவித்துவம், வசந்தன் கூத்து அவற்றின் சந்தங்கள், வேளாண்மைவெட்டு வசந்தனும் பள்ளுப் பிரபந்தங் களும், வேளாண்மைவெட்டு வசந்தன், வசந்தன் வகையின் அகரவரிசை ஆகிய தலைப்புகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 28711).*

### 12529

**குருக்கேத்திரன் போர்: வடமோடிக் கூத்து.** வடிவேல் இன்பமோகன் (பதிப்பாசிரியர்). *வந்தாறுமூலை: கிழக்குப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, 2017. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).*

xxxv, *(8), 109 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 600., அளவு: 21*x*15 சமீ.,* ISBN: *978-955-1443-91-7.*

*ஈழத்திலும் தென்னிந்தியாவிலும் பரவலாக வழங்கிவருகின்ற அரியதொரு நாட்டார் கதைமரபின் ஒரு குறிப்பிட்ட வடிவத்தைத் தேடி முயன்று பதிப்பித்திருக்கிறார் கலாநிதி வடிவேல் இன்பமோகன். கள ஆய்வின் அடிப்படையில் அரிய பல தகவல்களைத் திரட்டி, குருக்கேத்திரன் போர் வடமோடிக் கூத்தின் எழுத்துப் பனுவலை அச்சில் கொண்டுவந்துள்ளார். இவர் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் இளமாணிப் பட்டத்தினையும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதுமாணிப்*

பட்டத்தினையும், கலாநிதிப் பட்டத்தினையும் பெற்றவர். கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறையின் சிரேஷ்டி விரிவுரையாளராகப் பணியாற்றுகின்றார். இலங்கையில் அரையாண்டிதழாக வெளிவரும் மொழிதல் ஆய்வேட்டின் ஆசிரியர்களில் ஒருவராகவும் பணியாற்றுகின்றார். இந்நூலின் பின்னிணைப்பாக 2017இல் குருக்கள்மடத்தில் இடம்பெற்ற குருக்கேத்திரன் போர் கூத்தின் படங்களும் இணைக்கப்பட்டுள்ளன.

## 12530

**நாட்டார் பாடல்கள்.** திருச்செல்வம் தவரத்தினம். யாழ்ப்பாணம்: தி. தவரத்தினம், சடையாளி, காரைநகர், 1வது பதிப்பு, 2017. (கொழும்பு 12: பீனிக்ஸ் பப்ளிக்கேஷன்ஸ், No.C.G.6, செபஸ்தியன் தொடர்மாடிக் குடியிருப்பு, புனித செபஸ்தியார் வீதி, குணசிங்கபுர).

xii, 124 பக்கம், விலை: ரூபா 290., அளவு: 22x15 சமீ., ISBN: 978-955-7226-04-0.

சுழிபுரம் விக்ரோரியா கல்லூரியின் முன்னாள் ஆசிரியரும் அராலி முருகமூர்த்தி வித்தியாலயத்தின் தற்போதைய அதிபருமான திருச்செல்வம் தவரத்தினம் அவர்கள் எழுதிய நூல் இது. நாட்டார் பாடல்கள், கடவுள் வாழ்த்து, தாலாட்டுப் பாடல்கள், குழந்தைப் பாடல்கள், மழைப் பாடல்கள், நகைச்சுவைப் பாடல்கள், தொழிற் பாடல்கள், ஒப்பாரிப் பாடல்கள், மலையக நாட்டார் பாடல்கள், இஸ்லாமிய நாட்டார் பாடல்கள், காதல் பாடல்கள் எனப் பதினொரு பிரிவுகளில் இலங்கையின் பல பாகங்களிலும் வழக்கிலிருந்த நாட்டார் பாடல்களைத் தேடித் தொகுத்துத் தந்துள்ளார்.

## 12531

**நாட்டார் பாடல்கள் (தொகுப்பு): க.பொ.த. சா.த. தமிழ்மொழி புதிய பாடத்திட்ட பாடநூல்.** பத்திப்பாசிரியர் குழு. கொழும்பு 10: கல்வி வெளியீட்டுத் திணைக்களம், தபால்பெட்டி எண் 520, புதிய செயலகம், மாளிகாவத்தை, 3வது பதிப்பு, 1981, 1வது பதிப்பு, 1976, 2வது பதிப்பு, 1980. (கொழும்பு: அரசாங்க அச்சகத் திணைக்களம்).

(6), 98 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

கல்வி அமைச்சின் தமிழ்மொழிப் புதிய பாடத்திட்டத்தின் அ-பாடத்திட்டத்திற்கும் ஆ-பாடத்திட்டத்திற்கும் பொதுவாக அமையுமாறு "நாட்டார் பாடல்கள்" என்னும் இந்நூல் 9ம் 10ம் தரங்களில் பயிலும் மாணவர்களுக்காகத் தொகுக்கப்பட்டுள்ளது. பதிப்பாசிரியர் குழுவில் சு.சுசீந்திரராஜா, அ.சண்முகதாஸ், எம்.ஏ.நுஃமான், செ.வேலாயுதபிள்ளை ஆகியோர் பணியாற்றியிருந்தனர். இந்நூல் வாழ்த்துப்பாடல், தாலாட்டுப் பாடல்கள், விளையாட்டுப் பாடல்கள், வேடிக்கைப் பாடல்கள், காதற் பாடல்கள், தொழிற் பாடல்கள், ஒப்பாரிப் பாடல்கள், வசந்தன் பாடல்கள், நாடகப் பாடல்கள், கதைப் பாடல்கள் ஆகிய 10 பிரிவுகளின்கீழ் தொகுக்கப்பெற்ற நாட்டார் பாடல்களைக் கொண்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 14054).

### 12532

**போருக்குப் பின்: தென்மோடி நாட்டுக்கூத்து.** *பிரான்சிஸ் மிக்கேல்பிள்ளை (புனைபெயர்: தூயமணி). யாழ்ப்பாணம்: இளைஞர் கலைக்கழகம், குருநகர், 1வது பதிப்பு, ஆடி 2006. (யாழ்ப்பாணம்: ஏ.சீ.எம்.அச்சகம்).*

x, *86 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 150., அளவு: 20*x*14 சமீ.*

*அமரர் தூயமணி அவர்கள் படைத்த தென்மோடி நாட்டுக்கூத்து இதுவாகும். தமிழ்நாட்டு வேளிர்குல மரபிலே வந்த முதலாம் புலிகேசி மன்னன் காலத்தைய ஒரு வரலாற்று நிகழ்வினை இந்நாட்டுக்கூத்து கதையாக ஆசிரியர் அமைத்துள்ளார். பாரிசில் வாழும் டேமியன் சூரி, இராசதுரை குமார், குருசுமுத்து பீலிக்ஸ், ஆகியோரின் முயற்சியின் பயனாக அமரர் பிரான்சிஸ் மிக்கேல்பிள்ளை அவர்களின் நினைவாக வெளியிடப்பட்டுள்ள நூல் இது. தாயகத்திலிருந்து கிளமென்ற் மாட்டின் நெல்சன், அவர்களின் துணையுடன் குருநகர் இளைஞர் கழகத்தின் வெளியீடாக இது வெளியிடப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 183247*CC*).*

**மேலும் பார்க்க: 12163,12787**

## 398.1 பழமொழிகளும் விடுகதைகளும்

### 12533

**பழமொழித் தீபிகை.** *வே.ஆ.சிதம்பரப்பிள்ளை. பருத்தித்துறை: வே.ஆ. சிதம்பரப்பிள்ளை, 1வது பதிப்பு, 1916. (யாழ்ப்பாணம்: நாவலர் அச்சுக்கூடம்).*

*(8), 120 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20*x*13.5 சமீ.*

*மூதாதையரின் யுக்தி அனுபவங்களிலிருந்து திரண்டெழுந்து வாய்மொழியாக வழங்கிவந்த பழமொழிகள் கற்றோருக்கும் மற்றோருக்கும் ஒருங்கே இலகுவாய் உள்ளத்திற் பதியும் வண்ணம் உண்மைகளை அறிவுறுத்துவதில் மற்றெவ்வகையான பாவினங்களையும்விடச் சிறந்து விளங்குகின்றன. அத்தகைய ஆய்ந்தெடுத்த பழமொழிகளும் அவற்றிற்குப் பொருத்தமான விளக்கவுரையும் இந்நூலில் அடங்கியுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 2373).*

# 400 மொழியியல்

## 491.48 சிங்கள மொழி

### 12534

**அடிப்படைச் சிங்களம்.** *நூல் வெளியீட்டுக் குழு. கொழும்பு 1: அரசகரும மொழிகள் திணைக்களம், பாரொன் ஜயத்திலக்க மாவத்தை, 1வது பதிப்பு, 1993. (கொழும்பு 2: லேக் ஹவுஸ் பிரின்டர்ஸ், இல. 41,* W.A.D.*ராமநாயக்க மாவத்தை).*

*(10), 191 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x18 சமீ.,* ISBN: *955-9180-06-5.*

*"மூலிக்க சிங்ஹல" என்ற சிங்களத் தலைப்புடனும்,* Basic Sinhala *என்ற ஆங்கிலத் தலைப்புடனும் வெளிவந்துள்ள சிங்கள மொழிப் பயிற்சிக்கான கைந்நூல். (இந் நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 31193).*

## 494.8 தமிழ் மொழி

### 12535

**கிரந்தம் தவிர் தமிழ்பழகு.** *வி.இ.குகநாதன் (தொகுப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: அறம்செய் அமைப்பு, 1வது பதிப்பு, மே 2018. (அச்சக விபரம் தரப்படவில்லை).*

*30 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x15 சமீ.*

*சமூக நலன்புரி அமைப்பான "அறம்செய்" அமைப்பினர் 30.4.2017 அன்று விழிசிட்டி சனசமூக நிலையத்தில் 130 மரக்கன்றுகளை வழங்கிவைத்துத் தமது சமூக சேவையினை ஆரம்பித்தனர். பாடசாலைகளுக்கு விளையாட்டு உபகரணங்களை (சதுரங்கப் பலகைகள்)வழங்கியதுடன் அமெரிக்காவின் ஹார்வார்ட் பல்கலக்கழகத்தின் தமிழ் இருக்கைக்கு நிதிஉதவி வழங்கியதும் இவ்வமைப்பின் சில பணிகளாகும். அவ்வகையில் தூய தமிழ்மொழிப் பயன்பாட்டை வலியுறுத்துவதில் தமது பங்களிப்பாக இந்நூலை 2018 மே 9இல் வெளியிட்டு வைத்திருக்கின்றார்கள். முன்னைநாள் தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்க முகாமையாளரும், முன்னைநாள் "அக்குறோதாபாஸ்" நிறுவன தொழில்முனைவோராகவும் "அறம் செய்" அமைப்பின் இயக்குநராகவுமிருந்த அமரர் கனகசபை இலங்கநாதன் அவர்களுக்குக் காணிக்கையாக இந்நூல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. வடமொழிச் சொற்களையும் அவற்றுக்கிணையான தமிழ்ச் சொற்களையும் அகரவரிசையில் பட்டியலிட்டுள்ள இந்நூலின் இறுதிப்பகுதியில் எது தமிழ்ப் புத்தாண்டு? முருகன் தமிழ்க் கடவுளா? செம்மொழியான தமிழின் தனிச் சிறப்பு ஆகிய தலைப்புகளிலான மூன்று கட்டுரைகளும் ஆசிரியரால் எழுதிச் சேர்க்கப்பட்டுள்ளன.*

### 12536

**சூடாமணி நிகண்டு பதினொராவது பன்னிரண்டாவது (மூலமும் உரையும்).** *மண்டல புருடர் (மூலம்), ஆறுமுகநாவலர் (பதிப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், நல்லூர், 5வது பதிப்பு, 1925, முதலாவது பதிப்பு விபரமில்லை. (சென்னை: நிரஞ்சன விலாச அச்சியந்திரசாலை, சூளை).*

*82+42 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 19x12 சமீ.*

*எதுகையும் மோனையும் கவிதையின் எழிலுக்கும் ஏற்றத்துக்கும் மட்டும் காரணமாக நிற்கவில்லை. நெஞ்சம் கவிதைகளை மறக்காமல் இருப்பதற்கும் எதுகைத் தொடரும் மோனைத் தொடரும் பெருந்துணையாக விளங்குகின்றன.*

*இவற்றைத் துணையாகக் கொண்டு நம் முன்னோர்கள் நிகண்டுகளை உருவாக்கினர். தமிழின் சொல்வளத்தைப் பாதுகாக்கும் வங்கிகளாக நிகண்டுகள் விளங்கி வந்துள்ளன. ஒரு சொல்லுக்கு எத்தனை பொருள், ஒரு பொருளுக்கு எத்தனை சொல் என்று வியக்கவைக்கும் இந்நிகண்டுகள் நல்ல தமிழ்ச் சொற்களை காலம் காலமாக எமக்குக் காவித்தந்துள்ளன. யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர் பதிப்பித்த சூடாமணி நிகண்டு 12 பிரிவுகளில் தேவப்பெயர்த் தொகுதி, மக்கட் பெயர்த் தொகுதி, விலங்கின் பெயர்த் தொகுதி, மரப் பெயர்த் தொகுதி, இடப் பெயர்த் தொகுதி, பல்பொருட் பெயர்த் தொகுதி, செயற்கை வடிவப் பெயர்த் தொகுதி, பல்பொருட் பெயர்த் தொகுதி, செயற்கை வடிவப் பெயர்த் தொகுதி, பண்பு பற்றிய பெயர்த் தொகுதி, செயல் பற்றிய பெயர்த் தொகுதி, ஒலி பற்றிய பெயர்த் தொகுதி, ஆகியவற்றைத் தொகுத்திருந்தார். இந்நூல் ஒருசொற்பல்பொருட் பெயர்தொகுதி, பல்பெயர்க் கூட்டத்தொரு பெயர்த் தொகுதி ஆகிய பின்னைய இரு இயல்களை மாத்திரம் உள்ளடக்கியதாக வெளிவந்துள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 26774).*

**மேலும் பார்க்க: 13A09, 13A29**

## 494.8(1) தமிழ் இலக்கணம்

### 12537

**இலக்கண விளக்கம்: மூலமும் உரையும்.** *திருவாரூர் வைத்தியநாத தேசிகர் (மூலம்), சி.வை.தாமோதரம்பிள்ளை (பதிப்பாசிரியர்), மதுரை ஜில்லா: திருமலை போடய காமராசய பாண்டிய நாயக்கர், போடிநாயக்கனூர் ஜமீந்தார், 1வது பதிப்பு, புரட்டாதி, 1889. (சென்னபட்டணம்: வித்தியாநுபாலன யந்திரசாலை).*

*20+851+3 பக்கம், விலை: இந்திய ரூபா 5.00, அளவு: 20.5x12 சமீ.*

*சி. வை. தாமோதரம்பிள்ளை (12 செப்டம்பர் 1832 - 1 ஜனவரி 1901) என்னும் சிறுப்பிட்டி வைரவநாதபிள்ளை தாமோதரம்பிள்ளை பண்டைய சங்கத் தமிழ் நூல்கள் செல்லரித்து அழிந்து போகாது, தமது அரிய தேடல்கள் மூலம் அவற்றை மீட்டெடுத்து, காத்து, ஒப்பிட்டு பரிசோதித்து, அச்சிட்டு வாழ வைத்த முதல்வர். தமிழின் நூல்கள் தொடர்ந்து தமிழ் மக்களுக்குக் கிடைக்க வேண்டும். தமிழின் பெருமையை, அருமையை தமிழர் உணர்ந்து உயர வேண்டும் என்ற அரிய நோக்கங்களோடு தொண்டாற்றியவர். தமிழ்ப் பதிப்புத்துறையின் முன்னோடி. இவர் மூலப் பிரதிரூபங்களைப் பரிசோதித்து வெளியிட்ட முக்கியமான இலக்கண நூல் இதுவாகும். பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்த இலக்கணப் பெரும்புலவரான திருவாரூர் வைத்தியநாத தேசிகர் தாமே உரையும் இயற்றி அமைத்த "குட்டித் தொல்காப்பியம்" எனப்படும் இலக்கண விளக்கம் பொருட்படலப் பாட்டியலோடு நிறைவுறுகிறது. இந்நூலின் பாட்டியலை உரையுடன் இயற்றியவர் வைத்தியநாத தேசிகருடைய இளைய மகனான தியாகராச தேசிகர் என்னும் செய்தியும் அறியக் கிடக்கின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 14617).*

## 12538

**நன்னூல் விருத்தியுரை**.சங்கரநமச்சிவாயப் புலவர் (மூலம்), சிவஞான சுவாமிகள் (திருத்தியவர்). யாழ்ப்பாணம்: ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர், நல்லூர், 6வது பதிப்பு, வைகாசி 1944. (சென்னபட்டணம்: விததியாநுபாலனயந்திரசாலை).

326 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x12 சமீ.

இவ்விருத்தியுரையானது திருநெல்வேலிச் சங்கரநமச்சிவாயப் புலவரால் செய்யப்பட்டு திருவாவடுதுறை ஆதீனத்துச் சிவஞானசுவாமிகளால் திருத்தப்பட்டது. யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலரவர்கள் பரிசோதித்தபடி அச்சிற் பதிப்பிக்கப்பட்டுள்ளது. நன்னூல், 13ஆம் நூற்றாண்டில் பவணந்தி முனிவரால் எழுதப்பட்ட தமிழ் இலக்கண நூலாகும். தமிழ்மொழி இலக்கண நூல்களுள் தற்போது இருப்பனவற்றில் மிகப் பழமையானதான தொல்காப்பியத்தின் சில பகுதிகள் வழக்கொழிந்துபோய்விட்டன, மற்றும் சிலவற்றிற்குக் காலக்கிரமத்தில் கூடுதல் விளக்கம் தேவைப்பட்டது. வழக்கொழிந்த இலக்கணப் பயன்பாடுகளுக்கு இணையான சமகாலப் பயன்பாடுகளை வகுத்தும், ஏற்கனவே வகுக்கப் பெற்ற பயன்பாடுகளை மேலும் விளக்கியும், எளிமைப்படுத்தியும் நன்னூலில் விருத்தியுரைகள் எழுதப்பட்டன. தற்காலம்வரை, செந்தமிழுக்கான இலக்கணமுறை நன்னூலைப் பின்பற்றியே உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. நன்னூல் இரு அதிகாரங்களாகப் பகுக்கப்பட்டுள்ளது. தொல்காப்பியத்தினை ஒட்டி எழுதப்பட்ட இந் நூலிலும் 5 அதிகாரங்கள் இருந்தன என்றும் பல காரணங்களுக்காக 3 அதிகாரங்கள் தொலைந்து போயிருக்கக்கூடும் எனவும் சான்றோர் கூறுவர். இவை: பாயிரம், எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் என்பனவாகும். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 19286).

## 12539

**நன்னூற் காண்டிகையுரை**. பவணந்தி முனிவர் (மூலம்), ஆறுமுக நாவலர் (உரையாசிரியர்). யாழ்ப்பாணம்: சதாசிவப்பிள்ளை, நல்லூர், 1வது பதிப்பு, சித்திரை 1880. (சென்னபட்டணம்: வித்தியானுபாலன யந்திரசாலை).

(6), 400 பக்கம், விலை: ரூபா 2.00, அளவு: 19x11.5 சமீ.

இலக்கண வரம்புகளை வழுவாமல் காத்தால்தான், தமிழ் மொழி, என்றும் எழிலிற் குன்றாது சிறப்பாக விளங்கும். தமிழ் இலக்கண நூல்களுள் தொன்மையானது தொல்காப்பியம் ஆகும். தொல்காப்பியத்துக்குப் பின்னர் எழுந்தவற்றுள் அனைவரும் விருப்புடன் கற்று வந்தது பவணந்தி முனிவரின் நன்னூலாகும். பவணந்தி முனிவர் சமணச் சான்றோர் இன்றைய கர்நாடக மாநிலத்திலுள்ள சனநாதபுரம் என்னும் சனகை என்னும் ஊரிற் பிறந்தவர். சீய கங்கன் என்னும் அப்பகுதி அரசனால் ஆதரிக்கப் பெற்றவர். எழுத்தும் சொல்லும் பொருளும் யாப்பும் அணியும் என்னும் ஐந்து இலக்கணங்களுள், முதல் இரண்டுமான எழுத்தையும் சொல்லையும் குறித்த இலக்கணங்களை மட்டுமே இந் நன்னூல் கூறுகின்றது. இதன் உரைகளுள் மயிலைநாதர் உரை பழைமையானது.

*இதனையடுத்துத் திருநெல்வேலியிலுள்ள சேற்றூர்ச் சமஸ்தானப் பெரும்புலவரான சங்கர நமச்சிவாயரின் விருத்தியுரை வெளிவந்து, பலரின் பாராட்டு தலுக்கும் உரியதாயிற்று. இதனை அப்படியே வைத்துக் கொண்டு, தாம் கருதிய சில திருத்தங்களையும் மாற்றங்களையும் சேர்த்து மாதவச் சிவஞான முனிவர் அவர்கள் தம் விருத்தியுரையினை வெளியிட்டனர். இதனை மேலும் சிறிது திருத்தியும், புதிய விளக்கங்களைச் சேர்த்தும் யாழ்ப்பாணத்து ஆறுமுக நாவலர் அவர்கள் (1822-1879) தம்முடைய நன்னூற் காண்டிகை உரைப்பதிப்பை வெளியிட்டனர். நாவலர் பதிப்புத் தமிழ் அறிஞரால் விரும்பி வரவேற்கப்பெற்ற சிறந்த பதிப்பாகும். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 19292).*

## 12540

**மஞ்சுகாசினியம்-இயங்கு தமிழியல்.** *க.சச்சிதானந்தன். தெல்லிப்பழை: க. சச்சிதானந்தன், வானியல் வல்லுநர், மாவிட்டபுரம், 1வது பதிப்பு, 2001. (யாழ்ப்பாணம்: நவயோக அச்சகம்).*

xv, *171 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5*x*13.5 சமீ.*

*மஞ்சு என்ற தனது மகளின் நினைவாக இந்த இலக்கண நூலுக்கு ஆசிரியரால் பெயரிடப்பட்டது. மொழியியல், தொல்காப்பிய அடிப்படையில் இன்றைய வாழ்க்கையையும் இலக்கண வரம்புக்குள் இந்நூல் அடக்குகின்றது. புதிய கோணத்தில் எழுதப்பட்ட இலக்கண நூல் இதுவாகும். பண்டிதர் கணபதிப்பிள்ளை சச்சிதானந்தன் (10.10.1921 - 21.03.2008) காங்கேசன்துறையில் பிறந்தவர். மகாவித்வான் நவநீதகிருஷ்ண பாரதியிடம் முறையாகத் தமிழ் கற்றவர். காங்கேசன்துறை நடேசுவரா கல்லூரி, பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயம், பருத்தித்துறை ஹார்ட்லி கல்லூரி, யாழ்ப்பாணம் பரமேசுவரா கல்லூரி (1938-1940) ஆகிய பாடசாலைகளில் ஆரம்ப, இடைநிலை, உயர் கல்வி கற்றார். தந்தையாரிடம் வானியலும் சோதிடம் கற்ற இவர், சிவப்பிரகாச தேசிகரிடமும் சுப்பிரமணிய சாஸ்திரிகளிடமும் பாலசுந்தரக் குருக்களிடமும் சமஸ்கிருதக் கல்வியும் பயின்றார். மதுரைத் தமிழ்ப் பண்டிதர் பட்டமும் 1971 ஆம் ஆண்டில் லண்டனில் முதுகலைமாணிப் பட்டத்தையும் பெற்றார். 2001 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டம் பெற்றார். பலாலி ஆசிரியர் கலாசாலையில் உளவியல் விரிவுரையாளராகப் பணியாற்றிய இவர் சச்சிதானந்த என்ற பெயரிலும், ஆனந்தன், யாழ்ப்பாணன், பண்டிதர், சச்சி ஆகிய புனைபெயர்களிலும் எழுதியுள்ளார். ஆங்கிலம், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளிலும் புலமை உடைய இவர், சுவாமி விபுலாநந்தரின் படியெடுக்கும் மாணாக்கராகச் சில காலம் சேவையாற்றினார். அதனால் இவருக்கு ஆய்வுத்துறையில் மிகுந்த ஆர்வம் இருந்தது. "தமிழர் யாழியல்" என்ற இவரது நூல் இலங்கை இலக்கியப் பேரவையின் சிறந்த ஆய்வு நூலுக்கான விருதைப் பெற்றது. யாழ்ப்பாண இராச்சியத்தின் காலகட்டத்தினை விபரிக்கும் "யாழ்ப்பாணக் காவியம்" என்ற நூல் இலங்கை சாகித்திய மண்டலப் பரிசு, வடகிழக்கு மாகாண இலக்கியப்*

*பரிசு, சம்பந்தர் விருது ஆகியவற்றைப் பெற்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 29107).*

### 12541

**மொழித்திறன்: ஒத்த கருத்துச் சொற்களும் எதிர்க் கருத்துச் சொற்களும்.** *வே. நவமோகன் (தொகுப்பாசிரியர்). தெகிவளை: காயத்ரி பப்ளிக்கேஷன்ஸ், தபால் பெட்டி எண் 64, 3வது பதிப்பு, ஜனவரி 2004. (தெகிவளை: காயத்திரி அச்சகம்).*

*56 பக்கம், விலை: ரூபா 75.00, அளவு: 21x15 சமீ., ISBN: 955-97518-8-3.*

*தமிழில் வழங்கும் 4000க்கும் மேற்பட்ட தற்காலப் பயன்பாட்டிலுள்ள ஒத்த கருத்துச் சொற்களும் எதிர்க் கருத்துச் சொற்களும் இந்நூலில் தொகுத்து வழங்கப்பட்டுள்ளன. புலமைப்பரிசில் மாணவர்கள் முதல் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை மாணவர்கள் வரையான மாணவர்களைக் கருத்திற்கொண்டு இந் நூல் தொகுக்கப்பட்டுள்ளது. ஒத்த கருத்துச் சொற்களையும், எதிர்க்கருத்துச் சொற்களையும், பின்னிணைப்பு பகுதியில் பல முக்கிய விடயங்களையும் கொண்ட தாகத் தொகுக்கப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 49483).*

## 494.8(2) தமிழ்ப் பாடநூல்கள்

### 12542

**அன்றாடத் தேவைகளுக்காக எழுதுதல் I: மேலதிக மொழி விருத்திப் பாடநெறி-தமிழ்.** *M.J.M. அஸ்ஹர், S.M.R.P.சமரக்கோன். கொழும்பு: தொலைக்கல்வித் துறை, தேசிய கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1997. (கொழும்பு: P and A பிரின்டர்ஸ் லிமிட்டெட்).*

*52 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x19 சமீ.*

*தாய்மொழியல்லாத இரண்டாவது மொழியான தமிழ்மொழி மூலம் தமது அன்றாடத் தேவைக்காக உரையாடலை விருத்தி செய்வது எப்படி என்ற அறிவை படிமுறையில் வழங்கும் மொழிக் கைந்நூல். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 47778).*

### 12543

**உமா வாசகம்: முதலாம் புத்தகம்.** *நூல் வெளியீட்டுக்குழு. யாழ்ப்பாணம்: திருமதி P.தம்பித்துரை, கலைவாணி புத்தக நிலையம், 10, மெயின் வீதி, 2வது பதிப்பு, செப்டெம்பர் 1972, 1வது பதிப்பு, 1965. (யாழ்ப்பாணம்: கலைவாணி அச்சகம், 10, மெயின் வீதி).*

*(4), 88 பக்கம், விலை: ரூபா 3.50, அளவு: 23x17.5 சமீ.*

*இலங்கைக் கல்விப்பகுதியினரின் புதிய பாடத்திட்டத்தைத் தழுவி முதலாம் வகுப்பில் வாசினை படிப்பித்தற்கு ஒரு பாடப் புத்தகமாக எழுதப்பெற்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 34343).*

## 12544

**கட்டுரை மணிகள்.** S.F.L.மொஹிடீன் ரஜா (புனைபெயர்: கதைவாணன்). கொழும்பு 12: ஆதவன் பதிப்பகம், 30/3, டாம் வீதி, 5ஆம் (திருத்திய) பதிப்பு, ஜனவரி 2003, 1வது பதிப்பு, ஜனவரி 1997, 2வது பதிப்பு, ஜுன் 1999, 3வது பதிப்பு, டிசம்பர் 2001, 4வது பதிப்பு, ஜுன் 2002. (அச்சக விபரம் தரப்படவில்லை).

132 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 21.5x15 சமீ.

க.பொ.த. சாதாரண தரப்பரீட்சையில் தமிழ் மொழி வினாத்தாளில் கேட்கப்படும் கட்டுரை எழுதுதலுக்கான பயிற்சி நூல் இதுவாகும். 300 சொற்களில் எழுதவேண்டிய உரைப் பகுதிகளான சுயசரிதை, கற்பனைக் கட்டுரை, விளக்கக் கட்டுரை, வருணனைக் கட்டுரை, விமர்சனக் கட்டுரை, வரலாற்றுக் கட்டுரை, நகைச்சுவைக் கட்டுரை, விவரணம், சிறுகதை, உரையாடல், மேடைப் பேச்சு ஆகியனவும், 100 சொற்களில் எழுதவேண்டிய கடிதம், அறிக்கை, விளக்கம், துண்டுப் பிரசுரம், விளம்பரம் ஆகிய பகுதிகளும் இங்கு மாதிரிக் கட்டுரைகளாகத் தரப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 29835).

## 12545

**கன்னித் தமிழ் ஓதை: மூன்றாம் புத்தகம்.** வ.கி.இம்மானுவேல். கொழும்பு: B.G. இம்மானுவேல், தலைமைத் தமிழ்ப் போதனாசிரியர், கொழும்பு வேத்தியற் கல்லூரி, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1962. (கொழும்பு: வரையறுக்கப்பட்ட எம்.டி.குணசேன அன் கொம்பனி அச்சகம், 217 ஒல்கொட் மாவத்தை).

(4), 154 பக்கம், விலை: ரூபா 2.50, அளவு: 19.5x14.5 சமீ.

வணக்கம், மழை, தாய் அன்பு (உரை-செய்யுள்), சிலம்புச் செல்வி (கட்டுரை), மகளிர் பந்தாட்டம் (தேம்பாவணி), ஐம்புலன்கள் அறிவின் வாயில்கள், தமிழும் சுவையும் (திருவாசகம்), கடித ஏமாற்றம், தனியே வந்தான் (இராமன் காதை நிகழ்ச்சி), பொறுமை (உரை-செய்யுள்), நளவெண்பா (சுயம்வர சருக்கம்), திருக்குறள் தந்த வள்ளுவர், மருத்துவத் தாதியரின் மகத்துவ சேவை, ஈழம் எமது நாடு (கட்டுரை), பழந்தமிழர் பண்பாடு (புறநானூறு), உமறுப் புலவர் பண்பு (சீறாப் புராணம்), வீரம் (உரை-செய்யுள்), கண்ணகியின் வழக்கு (நாடகம்), கவிஞனுக்குக் கவரி வீசிய காவலன், பழமொழி (பதினெண் கணக்குகள்), சூழ்ச்சி பலித்தது (செகசுபியர்), பேச்சுக் கலை, யூலியஸ் சீசரின் மறைவு ஆகிய 23 பாடங்களாக இவை எழுதப்பட்டுள்ளன.(இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 2292).

## 12546

**கன்னித் தமிழ் வாசகம்: இரண்டாம் புத்தகம்: 7ம் வகுப்பு.** வ.கி.இம்மானுவேல். கொழும்பு: வ.கி.இம்மானுவேல், 3வது பதிப்பு, 1963, 1வது பதிப்பு, டிசம்பர் 1957. (அச்சக விபரம் தரப்படவில்லை).

132 பக்கம், விலை: ரூபா 2.15, அளவு: 19.5x14.5 சமீ.

இந்நூல் ஏழாம் வகுப்பு மாணவர்களுக்கேற்ற பாடங்களை 26 அத்தியாயங்களில் கொண்டுள்ளது. ஒவ்வொரு பாடத்தின் பின்னரும் இலக்கண அறிவு, மொழித் தேர்ச்சி, கட்டுரைத் திறன், ஆகியவற்றிற் கிசைந்த பயிற்சி வினாக்கள் அப்பியாசங்கள் முதலியன ஏற்ற முறையில் சேர்க்கப்பெற்றுள்ளன. அவ்வகையில் காலையும் மாலையும் கடவுளைத் தொழுவோம் (செய்யுளும் விளக்கமும்), நமது மொழி (உரைநடை), இயற்கையும் வாழ்க்கையும் (பாவும் பயனும்), முயற்சியின் உயர்ச்சி (கதை), நறுந்தொகை (செய்யுட் பகுதி), உடல்நலப் பழக்கவழக்கங்கள் (வசனம்), அற்ப அறிவு ஆபத்திற்கிடம் (செய்யுளும் விளக்கமும்), இராமாயணம் (இராமாயண சாரம்), கவியரசர் கம்பர் (கம்பர் வரலாறு), கற்றோர் உயர்வும் கல்லாதார் இழிவும் (செய்யுளும் பொழிப்பும்), கடித வகைகள், சுதந்திர தாகம் (கதை), தேசியகவி சுப்பிரமணிய பாரதியார் (கட்டுரையும் செய்யுளும்). அழையாது நுழையும் விருந்தினர், நாரை கொண்டு சென்ற தூது (செய்யுளும் நயமும்), செய்தித்தாளின் பயன் (உரையாடல்), தமிழும் சுவையும், பண்டைத்தமிழர் வாணிபம், திருக்குறள் இன்பம் (செய்யுளும் கருத்துரையும்), பாரியின் பறம்பு நாடு, கடமை வீரம், பொருளின் அவசியம் (செய்யுள்-பொழிப்பு), வெனிசு நகர வாணிபன் (கதை), நெஞ்சில் விளைந்த நஞ்சு, அமைதிக்கு உழைத்த ஔவையார் (நாடகம்), செய்யுள் வகை (பாடங்களுடன் சேர்த்து மனனஞ் செய்யக்கூடிய பாக்கள்) ஆகிய தலைப்புகளில் பாடங்கள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 27270).

## 12547

**கவிதைகளையும் பாடல்களையும் சுவைப்போம்: மேலதிக மொழி விருத்திப் பாடநெறி-தமிழ்.** M.M.M. முஹ்ஸின், A.G.குணரட்ண. கொழும்பு: தொலைக்கல்வித் துறை, தேசிய கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1997. (கொழும்பு: P and A பிரின்டர்ஸ் லிமிட்டெட்).

44 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x19 சமீ.

தாய்மொழியல்லாத இரண்டாவது மொழியில் வழங்கும் கவிதையாக்கங்களையும் பாடல்களையும் சுவைக்கும் பயிற்சிக் கைந்நூல். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 47778).

## 12548

**செந்தமிழ்ப் பயிற்சி மாலை: ஆறாம் ஏழாம் வகுப்புகளுக்குரியது.** சௌந்தரம் சந்தனநங்கை கந்தப்பு. கோப்பாய்: செல்வி சௌந்தரம் சந்தனநங்கை கந்தப்பு, விரிவுரையாளர், மகளிர் அரசினர் ஆசிரிய கலாசாலை, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1953. (யாழ்ப்பாணம்: அர்ச் பிலோமினா அச்சகம், 102, மெயின் வீதி).

(2), 80 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 19.5x14 சமீ.

ஆறாம் ஏழாம் வகுப்பு மாணவர்களின் தமிழ்மொழிப்பாடத்திற்கான அறுபத்தி இரண்டு பயிற்சிகளைக் கொண்டதாக இந்நூல் வெளியிடப்பட்டிருக்கிறது. நூலாசிரியர் கோப்பாய் மகளிர் அரசினர் ஆசிரிய கலாசாலையின் போதனாசிரியை

யாவார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 2284).

### 12549

**செந்தமிழ்ப் பயிற்சி (வாசிப்பு நூல்): ஐந்தாம் வகுப்புக்குரியது.** சௌந்தரம் சந்தனநங்கை கந்தப்பு. கோப்பாய்: செல்வி சௌந்தரம் சந்தனநங்கை கந்தப்பு, விரிவுரையாளர், மகளிர் அரசினர் ஆசிரிய கலாசாலை, 2வது பதிப்பு, 1964, 1வது பதிப்பு, 1958. (யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா அச்சகம், 234, காங்கேசன்துறை வீதி).

(4), 112 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 1.50, அளவு: 21x14 சமீ.

இவ்வாசகத் தொடர் சிறுவர்களிடையே தமிழின் பெருமையை உணரச்செய்யவும், வாசிப்பின்பால் நாட்டத்தை ஏற்படுத்தும் வகையிலும் இடையிடையே பாடல்களும் இணைந்ததாக உருவாக்கப்பட்டுள்ளது. மழை வளம், மிருகங்களினது தலைகள், இலங்கையும் இராமாயணக் கதையும், வள்ளுவர் பொன்மொழிகள், வசந்தம், தமிழர் போற்றிய மலரும் மாலையும், பாரதியாரும் பாப்பாவும், கடற் பிரயாண வரலாறு, நமது நாடும் நாமும், பறவைகளினது அலகுகள், பொங்கல் விழா, குருவி கொஞ்சம் நில், நுட்பமான தீர்ப்பு, படை எழுச்சி, மானம் காத்த மன்னவன், ஆறு சொன்ன கதை, இசை இன்பம், செய்திகளை எவ்வாறு அறிகிறோம், பிறந்தநாள் விழா, கதறும் கடல், பண்பில் உயர்ந்த பரஞ்சோதி, பொன். அருணாசலம், அப்துல்லாவின் வெள்ளைக் கழுதை, வீரத்துறவி விவேகானந்தர், நலந்தரும் நன்மொழிகள்ஆகிய 25 ஆக்கங்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 24542).

### 12550

**செந்தமிழ்ப் பூம்பொய்கை பாகம் 3.** ஆ.சி.நாகலிங்கம்பிள்ளை. யாழ்ப்பாணம்: ஆ.சி.நாகலிங்கம்பிள்ளை, சுதுமலை, 1வது பதிப்பு, 1949. (யாழ்ப்பாணம்: ச. குமாரசுவாமி, சண்முகநாதன் அச்சகம்).

iv, 130 பக்கம், விலை: ரூபா 1.30, அளவு: 21x14 சமீ.

பாடசாலை மாணவர்களின் தமிழ் அறிவை விருத்திசெய்யும் வகையில் உப பாடநூலாகப் பயன்படுத்துவதற்கேற்றவகையில் இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது. செய்யுட் பகுதியில் கடவுள் வாழ்த்து, வான் சிறப்பு, நாட்டுச் சிறப்பு, நகர்ச் சிறப்பு, மணவினை, அரசு, கல்வி, மக்கட்பேறு, வீரம், நீதிகள், பல்சுவை ஆகிய செய்யுட்கள் இடம்பெற்றுள்ளன. கதைப்பகுதியில் குசேலோபாக்கியானம், நள தமயந்தியர் பிரிவு ஆகிய இரு பாடங்களும், கட்டுரைப் பகுதியில் நாவலரும் பாரதியும் (கா. பொ.இரத்தினம்), சுதந்திர உணர்வு-மொழிபெயர்ப்பு (க.கார்த்திகேசு), இணுவைச் சின்னத்தம்பிப் புலவர் (ஆ.சி.நாகலிங்கம்பிள்ளை), அருளுடைமை (மு. ஞானப்பிரகாசம்), பொல்லநறுவையும் சைவமும் (சோ.நடராசா), திருவாசகம் (க.கி.நடராஜன்), சிற்றில் சிதைத்தல் (பொ.கிருஷ்ணபிள்ளை), தமிழரின்றொன்மை (செ.இளையதம்பி), கணவரையிழந்தோரும் கைம்மை நோன்பும் (கி.இலட்சுமண

*ஐயர்), விஞ்ஞானம்-யுத்தத்தின் முன்னும் பின்னும் (செ.வேலாயுதபிள்ளை), உமர்ப் புலவர் (மு.சின்னத்தம்பி), கொடைவள்ளல் (ஏ.ஏ.அப்துல்ஸ் சமது), தாயும் சேயும்-ஓர் அங்க நாடகம் (ஆ.சி.நாகலிங்கம்பிள்ளை) ஆகிய 13 கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 2601).*

### 12551

**தமிழ்: ஆண்டு 5.***இ.விசாகலிங்கம் (பதிப்பாசிரியர்). கொழும்பு 10: கல்வி வெளியீட்டுத் திணைக்களம், மாளிகாவத்தைச் செயலகம், 2வது பதிப்பு, 1986, 1வது பதிப்பு, 1985. (கொழும்பு 11: மெய்கண்டான் அச்சகம், 161, கடற்கரைத் தெரு).*

viii, *205 பக்கம், விளக்கப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21*x*14 சமீ.*

*இந்நூலில் மொழிப்பயிற்சியை வளர்ப்பதற்காக 27 உரைநடைப் பாடங்களையும் ஒன்பது செய்யுட் பாடங்களையும் ஐந்து பகுதிகளாக மொழிப்பயிற்சிகளையும் தந்துள்ளனர். சின்ன மகளின் சின்னக் கைகள், புத்தாண்டு பிறந்தது, தேசிய விளையாட்டு விழா, அம்மா நான் விளையாடப் போறேன், உணவு அறிந்து உண், நாங்கள் உடைகள், துருக்கித் தொப்பி, உலகநீதி, உழைக்கும் கரங்கள், மைதானம் பிறந்தது, கமமும் புலமும், பாடுபடுபவர்க்கே, சித்திரக் குன்றம், புதையல் யாருக்கு, கடதாசி பேசுகிறது, நாங்களும் செய்வோம், நோன்புப் பெருநாள், மகிழ்ந்தான் பையன், இராமன், சின்னவன் வென்றான், புதிய அத்திசூடி, பொய் சொல்லமாட்டேன், வளரும் பயிரை முளையிலே தெரியும், யாத்திரை, கடன்காரன், ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு, ஒரு தீர்ப்பு, மணிமொழி, துடிப்பான சிறுவன், சிவப்பு ரோசா, புதுவருடம் பிறந்த கதை, கைகொடுப்போம், கொடுத்தார்க்குக் குறைவில்லை, மேன்மக்கள், கதிர்காமம், எங்கள் நாடு ஆகிய தலைப்புகளில் இவை 36 பாடங்களாக வகுக்கப்பட்டுள்ளன. இந்நூல் வெளியீட்டுக்கான தமிழ்ப் பகுதிப் பொறுப்பாளராக வே.வல்லிபுரம் அவர்கள் பணியாற்றியிருக்கிறார். நூலாக்கக் குழுவில் இ.விசாகலிங்கம், முக்தார் ஏ. முஹம்மது, இராஜேஸ்வரி செல்வரத்தினம், கிருஷ்ணகுமாரி நடராஜா, ஏ.எச். எம். யூசுப், பவானி பாலசிங்கம், எஸ்.பாலச்சந்திரன் ஆகியோர் பணியாற்றியுள்ளனர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 24756).*

### 12552

**தமிழ்: ஆண்டு 6.** *த.கனகரத்தினம், இ.விசாகலிங்கம், எம்.ஆரிப்,* M.I.S.A.*கலீல் (பதிப்பாசிரியர்கள்). கொழும்பு 10: கல்வி வெளியீட்டுத் திணைக்களம், மாளிகாவத்தைச் செயலகம், 4வது பதிப்பு, 1988, 1வது பதிப்பு, 1985, 2வது பதிப்பு, 1986, 3வது பதிப்பு, 1987. (கொழும்பு: அரசாங்க அச்சகக் கூட்டத்தாபனம்).*

viii, *220 பக்கம், விளக்கப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21*x*13.5 சமீ.*

இந்நூலில் மொழிப்பயிற்சியை வளர்ப்பதற்கான பாடங்களாக வளரும் பயிர், இலக்குப் பார் அம்பை விடு, இரவும் பகலும், தீராத விளையாட்டுப் பிள்ளை, கண்டிப் பெரஹர, இன்றைக்கு இறைத்தது போதும், நான் தான் மகாவலி, ஆறு, வேம்பின் வீம்பு, அறிஞர் அறபி பாஷா, உண்மையின் உயர்வு, பெருமானே நாயகமே, நான் சாரணன் ஆனேன், அறிஞர் ஏ.எம்.ஏ.அஸீஸ், புதிய பாட்டு, முரசு, பூங்காக்கள், ஒரு குழந்தை-இரண்டு தாய், விண்வெளிப் பயணம், அருளாளர், சோயா உற்பத்தி, பேராசை பெருநட்டம், ஈழம் கண்ட இப்னு பதூதா, துணிவே துணை, மகா பராக்கிரமபாகு, உண்மைக்குப் பரிசு, நான் ஒரு பழைய பத்திரிகை, அழகான ஊர், விளையாட்டுப் போட்டி, மனமாற்றம், மரங்களைப் பாதுகாப்போம், எலியும் சேவலும், மணிக்கல், அம்மைப்பாலின் கதை, மலையகத்திலிருந்து ஒரு கடிதம், ஒன்றும் இல்லையே குறை, இலங்கையும் அறபு நாடுகளும், இரண்டு கிராமங்களைத் தின்ற ஆடு, தமிழ் வளர்த்த சி.வை. தாமோதரம்பிள்ளை, பெற்றோர் ஆவல், மட்கலம், நான் கொக்கு அல்ல, மருதமுனை நெசவு, பேரின்பம் ஆகிய தலைப்புகளில் 44 பாடங்கள் தரப்பட்டுள்ளன. இந்நூல் வெளியீட்டுக்கான தமிழ்ப்பகுதிப் பொறுப்பாளராக வே.வல்லிபுரம் அவர்கள் பணியாற்றியிருக்கிறார். நூலாக்கக் குழுவில் த.கனகரத்தினம், சு.வேலுப்பிள்ளை, கே.இராஜதுரை, எம்.எஸ். அபுல் ஹஸன், A.C.A.M.புகாரி, முக்தார் ஏ.முஹம்மது ஆகியோர் பணி யாற்றியுள்ளனர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 27121).

### 12553

**தமிழ்: ஆண்டு 8**. கல்வி வெளியீட்டுத் திணைக்களம். கொழும்பு 10: கல்வி வெளியீட்டுத் திணைக்களம், மாளிகாவத்தைச் செயலகம், 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1985. (கொழும்பு: திசர அச்சகம், 135, துட்டுகமுனு வீதி, தெகிவளை).

viii, 204 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

முதற்பாடம் இந்நூற் பொருளைத் திரட்டிக் கூறும் முன்னுரையாக அமைகின்றது. மொத்தம் 23 உரைப் பாடங்களும் 7 செய்யுட்பாடங்களும் இந்நூலில் அமைந்துள்ளன. இவை மனித இனத்தின் முன்னேற்றம், காணாமற்போன குழந்தை, விளையாட்டுக்கள், கண்ணன் என் சேவகன், தேர் திரும்பியது, மணிமேகலை, நபிநாயக மான்மிய மஞ்சரி, ஈழத்து நாட்டுப் பாடல்கள், மார்க்கோ போலோ கண்ட ஈழமும் தமிழகமும், அனுமான் கண்ட இலங்கை, கலாயோகி ஆனந்த குமாரசுவாமி, நளவெண்பா, ஞானசவுந்தரி, கலீபா உமரின் வாழ்விலே, பண்டார வன்னியன், உழவுத் தொழில், திருப்பணி தொடங்கியது, செஞ்சோற்றுக் கடன், நிக்கலஸ் கொப்பனிக்கஸ், தனிப்பாடல், அறிஞர் சித்திலெவ்வை, சக்தி பிறக்கிறது, குடிமக்கள் காப்பியம், கூட்டுறவு இயக்கம், கசாவத்தை ஆலிம் புலவர், திருக்குறள், கல்வி, பல்துறை மேதை அல் புரூனி, பழமொழிகள் ஆகிய 29 பாடங்களாக இவை தரப்பட்டுள்ளன. தமிழ்ப் பகுதிப் பொறுப்பாளராக வே.வல்லிபுரம் அவர்களும், பதிப்பாசிரியராக இ.விசாகலிங்கம் அவர்களும் பணியாற்றியுள்ளனர். நூலாக்கக் குழுவில் செ.வேலாயுதபிள்ளை, இ.விசாகலிங்கம், முத்தார் ஏ.முஹம்மது, இராசேஸ்வரி செல்வரத்தினம், கிருஷ்ணகுமாரி நடராசா,

A.H.M. யூசுப், திலகவதி விவேகானந்தன், என்.பாலச்சந்திரன் ஆகியோர் பணியாற்றியுள்ளனர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 24991).

## 12554

**தமிழ்: ஆண்டு 9.** கல்வி வெளியீட்டுத் திணைக்களம். கொழும்பு 10: கல்வி வெளியீட்டுத் திணைக்களம், மாளிகாவத்தைச் செயலகம், 1வது பதிப்பு, 1986. (கொழும்பு: திசர அச்சகம், 135, தட்டுகமுனு வீதி, தெகிவளை).

viii, 208 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

மனத்தின் விந்தை (வாசிப்பும் விளக்கமும், மொழி அறிவு-மொழியின் தோற்றமும் பயன்பாடும்), வாழ்க்கையின் மூன்று படிகள் (விளக்கப் பயிற்சி, மொழி அறிவு-எழுத்தியல்), பறவைகளின் இசைவாக்கம் (விளக்கப் பயிற்சி, மொழி அறிவு-பதவியல்), பழமை என்ற விளக்கு (விளக்கப் பயிற்சி, மொழி அறிவு-புணரியல் 1), நாடகம் தோன்றிய வரலாறு (விளக்கப் பயிற்சி, மொழி அறிவு-புணரியல் 2), மண்டூரில் தமிழ் என்றால் திருச்செந்தூர்ப் புராணம் (விளக்கப் பயிற்சி, மொழி அறிவு-சொல்லியல்), இசைக் கருவிகள் (விளக்கப் பயிற்சி, மொழி அறிவு-பெயரியல்), நம் பண்டைய நீதி நூலாசிரியர் (விளக்கப் பயிற்சி, மொழி அறிவு-வினையியல்), சங்கப் புலவரும் சங்க இலக்கியப் பண்பும் (விளக்கப் பயிற்சி, மொழி அறிவு-தொடர் மொழியியல்) ஆகிய ஒன்பது பாடங்கள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 17671).

## 12555

**தமிழ்: ஆண்டு 9: பயிற்சி விளக்கங்களும் விடைகளும்.** தமிழவேள் (இயற்பெயர் க.இ.க.கந்தசாமி). கொழும்பு 12: குமரன் புத்தகசாலை, 201, டாம் வீதி, 2வது பதிப்பு, டிசம்பர் 1993, 1வது பதிப்பு, ஜனவரி 1989. (சென்னை: நிறைமொழி அச்சகம்).

(8), 100 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x13.5 சமீ.

இந்நூலில் அலகுகள் ஒவ்வொன்றிலும் அருஞ்சொற்கள், சொற்றொடர்கள், செய்யுட் பொருள்கள், சொற்புணர்ப்பு, இலக்கண-எழுத்தாக்கங்களின் விளக்கங்கள், இலக்கிய இலக்கண எழுத்தாக்கப் பயிற்சி விடைகள், பயன்தரு குறிப்புகள் என்பன இடம்பெற்றுள்ளன. மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பயன்படும் வகையில் தொகுக்கப்பெற்றுள்ளது. மனத்தின் விந்தை (மொழிஅறிவு), வாழ்க்கையின் மூன்று படிகள் (எழுத்துகள்), பறவைகளின் இசைவாக்கம் (பதங்கள்), பழமை என்ற விளக்கு (சந்தி விதிகள்), நாடகம் தோன்றிய வரலாறு (மொழிப்பயிற்சி), மண்டூரில் தமிழ் என்றால் திருச்செந்தூர்ப் புராணம் (சொற்கள்), இசைக் கருவிகள் (பெயர்ச்சொற்கள்). நம் பண்டைய நீதி நூலாசிரியர் (வினைச் சொற்கள்), சங்கப் புலவரும் சங்க இலக்கியப் பண்பும் (தொடர் மொழிகள்), கட்டுரைப் பயிற்சிகள் ஆகிய பத்து அலகுகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

(இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 23483).

## 12556

**தமிழ்: ஆண்டு 10**. இ.விசாகலிங்கம் (பதிப்பாசிரியர்). கொழும்பு 10: கல்வி வெளியீட்டுத் திணைக்களம், மாளிகாவத்தைச் செயலகம், 1வது பதிப்பு, 1986. (கொழும்பு: திசர அச்சகம், 135, துட்டுகமுனு வீதி, தெகிவளை).

vii, 206 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x13.5 சமீ.

நூலாக்கக் குழுவில் செ.வேலாயுதபிள்ளை, சிரோன்மணி இராசரத்தினம், புஷ்பா சிவகுமாரன், முக்தார் ஏ.முஹம்மது, த.கனகரத்தினம் ஆகியோர் பணியாற்றியுள்ளனர். தமிழகமும் நிலமும், செல்வம், எது தமிழ் இலக்கியம், பழந்தமிழர் கலைகள், தொல்காப்பியரும் மொழி வளர்ச்சியும், ஊருடன் கூடிவாழ், பௌத்தரும் தமிழும், தமிழ் அடிச்சொல் இயல்பு, சிவகாமி சரிதை ஆகிய ஒன்பது பாடங்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன இவை ஒவ்வொன்றுக்குமான விளக்கப்பயிற்சி, இலக்கணம் எழுத்தாக்கம் ஆகிய மூன்று வகையிலுமான பாடவிளக்கம் அவ்வப் பாடத்துடன் அளிக்கப்பட்டுள்ளன. இலக்கணப் பயிற்சி களில், வாக்கியத்தின் இயல்பு, வாக்கிய வகைகள், வாக்கியக் கூறுகள், தொகைநிலை வாக்கியங்கள், வாக்கியத்தின் அகத் தொடர்புகள், வாக்கிய வழுக்களும் வழாநிலைகளும் வழுவமைதிகளும், வாக்கியங்களை அணிபெற அமைத்தல் ஆகிய பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. எழுத்தாக்கப் பயிற்சிகளில் பந்தி எழுதுதல், கட்டுரை எழுதுதல், கடிதம் எழுதுதல், அறிக்கை எழுதுதல், சுருக்கம் எழுதுதல், நடைமாற்றி எழுதுதல், உரைநடை வகைகள் ஆகிய பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 27471).

## 12557

**தமிழ்: ஆண்டு 11**. கல்வி வெளியீட்டுத் திணைக்களம். கொழும்பு 10: கல்வி வெளியீட்டுத் திணைக்களம், மாளிகாவத்தைச் செயலகம், 1வது பதிப்பு, 1987. (கொழும்பு: திசர அச்சகம், 135, துட்டுகமுனு வீதி, தெகிவளை).

viii, 276 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

**தமிழ்: ஆண்டு 11**. கல்வி வெளியீட்டுத் திணைக்களம். கொழும்பு 10: கல்வி வெளியீட்டுத் திணைக்களம், மாளிகாவத்தைச் செயலகம், 4வது பதிப்பு 1991, 1வது பதிப்பு, 1987, 2வது பதிப்பு, 1988, 3வது பதிப்பு, 1990. (நீர்கொழும்பு: விஜய அச்சகம்).

viii, 275 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

"கள்" பெற்ற பெருவாழ்வு (விளக்கப் பயிற்சிகள், மொழித்திறன்- இடைச்சொற்களின் பயன்பாடு), கவிஞர்கள் (விளக்கப் பயிற்சிகள், மொழித்திறன்-உரிச்சொற்களின் பயன்பாடு), முத்தமிழ் முனிவரின் ஒப்பியல் நோக்கு (விளக்கப் பயிற்சிகள், மொழித்திறன்- சொல்வளம் 1), தமிழ்ச் சிறுகதைகளின் இன்றைய போக்குகள்

(விளக்கப் பயிற்சிகள், மொழித்திறன்- சொல்வளம் 2), நபித்துவமும் அல்குர் ஆனும் (விளக்கப் பயிற்சிகள், மொழித்திறன்- சொற்றொடர் வளம் 1), ஆபுத்திரனின் கதை (விளக்கப் பயிற்சிகள், மொழித்திறன்- சொற்றொடர் வளம் 2), தாய்மொழியில் உயர்தரக் கல்வி (விளக்கப் பயிற்சிகள், மொழித்திறன்- இலக்கியங் கற்றல்), இளங்கோவடிகளும் கம்பரும் (விளக்கப் பயிற்சிகள், மொழித்திறன்- நாடக விமர்சனம்), இலக்கியச் சொற்கள் (விளக்கப் பயிற்சிகள், மொழித்திறன்- சிறுகதை ஆக்கம்) ஆகிய ஒன்பது பாடங்களை இந்நூல் உள்ளடக்குகின்றது. இந்நூலுக்கான பதிப்பாசிரியராக M.I.S.A.கலீல் அவர்களும், நூலாக்கக் குழுவில் செ. வேலாயுதபிள்ளை, கலாநிதி இராசரத்தினம், த.கனகரத்தினம், முக்தார் ஏ முஹம்மது, புஷ்பா சிவகுமாரன் ஆகியோரும் பணியாற்றினர். (இந்நூல்கள் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டன. சேர்க்கை இலக்கம் 9623, 17687).

## 12558

**தமிழ் எழுத்து பேச்சுப்பயிற்சி**. எஸ்.ஜே.யோகராசா. கொழும்பு 15: எஸ்.ஜே. யோகராசா, 65/322 காக்கை தீவு, மட்டக்குழி, இணைவெளியீடு, தேசிய ஒருமைப்பாட்டுச் செயற்றிட்டப் பணியகம், 1வது பதிப்பு, செப்டெம்பர் 1999. (கொழும்பு: மாரியோ அச்சகம்).

x, 62 பக்கம், விலை: ரூபா 50., அளவு: 22x14.5 சமீ., ISBN: 955-95655-6-7.

தமிழ் மொழி படிக்கும் சிங்கள மாணவர்களுக்கு எழுத்துத் தமிழ் மொழியைப் படிக்கும்போது உதவும் வகையில் இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது. ஐந்து பிரிவுகளாக இந்நூல் பிரிக்கப்பட்டுள்ளது. முதல் பிரிவில் மெய்யெழுத்துக்களை எழுதும் முறையையும் அவற்றிற்கான ஒலிகளையும், இரண்டாவது பிரிவில் உயிர் எழுத்துக்களையும் அவற்றின் ஒலி வேறுபாடுகளையும், மூன்றாவது பிரிவில் உயிர் மெய் எழுத்துக்களையும், நான்காவது பிரிவில் மெய்யெழுத்துக்களின் ஒலி மாற்றங்களையும் ஐந்தாவது பிரிவில் உரையாடல்களையும் பயிற்சிகளையும் ஆசிரியர் வழங்கியுள்ளார். ஒவ்வொரு உரையாடலும் பேச்சுத் தமிழிலும் எழுத்துத் தமிழிலும் காட்டப்பட்டுள்ளது. சொற்கள் தமிழிலும் அதைத் தொடர்ந்து அதன் உச்சரிப்பு ஒலியியல் எழுத்துக்களிலும் அதன்பின் சிங்கள எழுத்திலும் இறுதியாக கருத்துக்கள் சிங்கள மொழியிலும் தரப்பட்டுள்ளன. எஸ்.ஜே.யோகராசா, களனிப் பல்கலைக்கழகத்தில் மொழியியல்துறையில் பணியாற்றுகின்றார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 21156).

## 12559

**தமிழ் எழுத்துப் பயிற்சி (Practice in Tamil Writing)**. எஸ்.ஜே.யோகராசா. கொழும்பு 15: எஸ்.ஜே.யோகராசா, 65/322 காக்கை தீவு, மட்டக்குழி, 1வது பதிப்பு, மே 2002. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளூமெண்டால் வீதி).

x, 38 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 21.5x14 சமீ., ISBN: 955-97763-0-4.

தமிழ் மொழி படிக்கும் சிங்கள மாணவர்களுக்கு எழுத்துத் தமிழ் மொழியைப் படிக்கும்போது உதவும் வகையில் இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது. எஸ்.ஜே. யோகராசா, களனிப் பல்கலைக்கழகத்தில் மொழியியல்துறையில் பணியாற்று கின்றார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 28403).

## 12560

**தமிழ்: தரம் 4-பாடநூல்.** ஆசிரியர் குழு. கொழும்பு: தேசிய கல்வி நிறுவகம், கல்வி வெளியீட்டுத் திணைக்களம், 2வது பதிப்பு, 2001, 1வது பதிப்பு, 2000. (கொழும்பு: அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்).

x, 110 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x19 சமீ.

கல்வி மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தின் கீழ், தரம் 4 மாணவர்களுக்காகத் தயாரிக்கப்பட்ட பாடத்திட்டத்திற்கமைய எழுதப்பட்ட இப்பாட நூல், செவிமடுத்தல், பேசுதல், வாசித்தல், எழுதுதல் என்னும் மொழித்திறன்களை வளர்த்தெடுப்பதற்குப் பொருத்தமான பாடங்களை உள்ளடக்குகின்றது. அவ்வகையில் எழுந்திரு, கல்வியின் சிறப்பு, காளையை முட்டிய பசு, பயனுள்ள வாசிப்பு, சின்னக்குருவி பறக்கிறது, முல்லைக்குத் தேர் கொடுத்த பாரி, பழங்கள் பேசுகின்றன, ரைட் சகோதரர்கள், உடல்நலம் பேணுவோம், அனுபவம் புதுமை, நாம் சென்ற கல்விச் சுற்றுலா, தவறு செய்ய மாட்டோம் மயில் ஆகிய 13 பாடத்தலைப்புகளில் தரம் 4 மாணவர்களுக்காக இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 35478).

## 12561

**தமிழ் மலர்: மூன்றாம் புத்தகம்.** நூல் வெளியீட்டுக் குழு. கொழும்பு: கல்வி வெளியீட்டுத் திணைக்களம், 1வது பதிப்பு, 1967. (கொழும்பு: இலங்கை அரசாங்க அச்சகம்).

xv, 205 பக்கம், விளக்கப்படங்கள், சித்திரங்கள், விலை: ரூபா 1.95, அளவு: 20.5x16.5 சமீ.

முதலாம் பருவத்துக்குரிய பாடங்களாக நமது நாடு, சுப்பிரமணிய பாரதியார், சிங்கமும் தேனீயும், ஆபிரகாம் இலிங்கன், காகம், எனது புகைவண்டிப் பிரயாணம், இராமனும் மந்திரவாதியும், ஒழுக்கம், வழித்துணை, உலக நீதி ஆகியவையும், இரண்டாம் பருவத்துக்குரிய பாடங்களாக சமயோசித புத்தி (நாடகம்), மூன்று மீன்கள், அரிச்சந்திரன், பருத்தி, சேர்.பொன் இராமநாதன், ஆறு, வாழை, வண்ணத்துப்பூச்சி, தனக்கு வந்தால் தெரியும், புலியும் பூனையும், புத்தி தெளிந்தான், பிச்சை புகினும் கற்கை நன்றே, வெற்றி வேற்கை ஆகிய பாடங்களும், மூன்றாம் பருவத்துக்குரிய பாடங்களாக விபுலாநந்தர், அதிக ஆசை அதிக நட்டம், மயில், நன்றி மறவேல், கடற்கரைக் காட்சி, தபால் சொன்ன கதை, அலிம் அசனா லெப்பைப் புலவர், கேலி செய்யாதீர், யப்பானும் யப்பானியரும், வாக்குண்டாம்

ஆகிய பாடங்களுமாக மொத்தம் 33 பாடங்கள் தரப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 27475).

### 12562

**தமிழ் மலர்: நான்காம் புத்தகம்.** நூல் வெளியீட்டுக் குழு. கொழும்பு: கல்வி வெளியீட்டுத் திணைக்களம், 2வது பதிப்பு, 1970, 1வது பதிப்பு, 1968. (கொழும்பு: இலங்கை அரசாங்க அச்சகம்).

(14), 206 பக்கம், விளக்கப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x17 சமீ.

முதலாம் பருவத்துக்குரிய பத்து பாடங்களாக எனது ஊர், காகமும் மானும் நரியும், பனைமரம் (பாட்டு), ஒற்றுமை, ஆறுமுக நாவலர், மனக்கோட்டை (பாட்டு), வீட்டில் வளரும் பிராணிகள், ஔவையாரும் குடியானவனும், நல்வழி -1, நல்வழி-2 ஆகியவை இந்நூலில் இடம்பெற்றுள்ளன. இரண்டாம் பருவத்துக்குரிய பன்னிரு பாடங்களாக, உண்மையின் உயர்வு, எங்கள் நாடு (பாடல்), காகிதத் தொழிற்சாலை, தயாளன், நெல்லைநாத முதலியார், நட்பின் வெற்றி (நாடகம்), தாய்சொல்லைத் தட்டாதே (நாடகம்), நான் யார்?, சுவிட்சர்லாந்து, அறிஞர் சித்திலெப்பை, நல்வழி 3, நல்வழி 4 ஆகியவை இடம்பெற்றுள்ளன. மூன்றாம் பருவத்துக்குரிய பத்து பாடங்களாக தமிழ்மொழி, சேனாதிராச முதலியார், பாரி, பொன்மொழிகள்-பழமொழிகள்-விடுகதைகள், சேர் ஐசாக் நியூட்டன், புத்திமான் பலவான் (பாட்டு), கமத்தொழில், சிந்துபாத்து, தனிப்பாடல்கள், நன்னெறி ஆகியவை இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 27474).

### 12563

**தமிழ் மலர்: ஏழாம் புத்தகம்.** நூல் வெளியீட்டுக் குழு. கொழும்பு: கல்வி வெளியீட்டுத் திணைக்களம், 2வது பதிப்பு, 1967, 1வது பதிப்பு, 1966. (கொழும்பு: இலங்கை அரசாங்க அச்சகம்).

(4), viii, 295 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 2.80, அளவு: 21 x14 சமீ.

ஏழாம் வகுப்பு மாணவர்களுக்குத் தேவையான மொழிப்பயிற்சிகள் இங்கே சிறு பாடப் பிரிப்புகளாக வழங்கப்பட்டுள்ளன. கடவுள் வாழ்த்து, பாண்டவரும் கௌரவரும், எழுவாய்-பயனிலை-செயப்படுபொருள், பொறாமையின் கேடு (கதை), நதி கடலை அடைதல், காந்தியடிகளின் கல்விக் கொள்கை, மூவகைப் பயனிலைகள், கல்வியும் விளையாட்டும், குறக்குடியின் இயல்பு, சூதாட்டம், தொழிற்பெயர், நீர் கண்ட பயங்கரக் கனவு, மனுநீதிகண்ட சோழன், தாமோதரம்பிள்ளை, தொழிற்பெயரும் பண்புப் பெயரும், நீர் அறிந்த பெரியார், வனவாசமும் அஞ்ஞாதவாசமும், ஈரொற்றுக்கள், அறியாது செய்த தீங்கும் அதன் பரிகாரமும் (கற்பனை), அடக்கமுடைமை, ஆற்றங்கரைக் காட்சி, ஆகுபெயர், காலைக்காட்சி, தெரிந்து செயல்வகை, கண்ணன் தூது, இடுகுறிப்பெயர்

காரணப்பெயர், உரையாடல் (பாரத கதாபாத்திரங்கள்), பூவையும் முயலும் உயிரிழந்த கதை, குகனும் பரதனும் (நாடகம்), தொழிற்பெயர்-வினைச்சொல், போரும் சமாதானமும், பாரதப் போர், பூவையும் முயலும் (கதை), யானைப் பரிசு, சேர். பொன்னம்பலம் இராமநாதன், நேர்க்கூற்று-பிறன்கூற்று, கதையை முடித்தல், நீதி வெண்பா, கோவூர்க் கிழார் (நாடகம்), உரையாடல் (கல்லூரி மாணவிகள்), யூலியர் சீசர், கோப்பெருஞ்சோழனும் பிசிராந்தையரும், நட்பு, தமயந்தி புலம்பல், தொழிலாளர், மூவிடப் பெயர், வினைமுற்றுக்கள், மதுவிலக்கு, ஆலமரமொன்று கூறிய கதை, வினைமுற்று, ஓர் ஆறு தன்கதை கூறுதல், திரிகடுகம், தென்னாட்டில் என் விடுமுறை நாள், ஏவல் வினைமுற்று, விடுமுறையைக் கழித்த விதம் (கடிதம்), மருத நிலம், சூரப்பனும் அரத்தனும், இடைநிலைகள், விகுதிகள், செய்தித்தாள்கள், குசேலன் கண்ணபிரானைக் காணல், வினை முற்றுக்கள், தந்தை தாய் பேண், கூத்தரும் குலோத்துங்கனும், தந்தை தாய்ப் பேண் (கதையாக்கம்), நபி அவதாரம், நெல்லிக்கனி, பெயரெச்சம்-வினையெச்சம், சுகவாழ்வு, விதுரன் தூது, கல்வி, வியங்கோள் வினைமுற்று, நூல்நிலையம், இயற்கை எழில் நிறைந்த சிகிரிய, முதனிலை, மலைக்காட்சி, சாணக்கிய நீதிவெண்பா, குரவைக்கூத்து, இறுதி நிலை, நாம் கொண்டாடும் விழாக்கள் (கடிதம்), கந்துகவரி, குமணன், மோனை எதுகை மீட்டற் பயிற்சி, கிராமச் சந்தைகள், தாளாண்மை-வாக்கியம்-தொடர், நிலைமொழி வருமொழி, பிச்சைக்காரன் தன் கதை கூறுதல், கண்ணுவரும் சகுந்தலையும், சுவாமி ஞானப் பிரகாசர், இயல்பு புணர்ச்சி, விகாரப் புணர்ச்சி, விபுலாநந்தர், கடமை, ஒலிம்பிக் விளையாட்டுக்கள், உடம்படுமெய், மாணவர் கடமை, ஆகிய பாடங்கள் இந் நூலில் 26 பகுதிகளாக இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 27472).

## 12564

**தமிழ்மொழி வழிகாட்டி: தமிழ்மொழி பயிலும் மாணவர்களுக்கான வழிகாட்டி நூல்.** தென்புலோலியூர் மு.கணபதிப்பிள்ளை. கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, மீள்பதிப்பு, 2016, 1வது பதிப்பு, 1955, 2வது பதிப்பு, 1967. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

vi, 185 பக்கம், விலை: ரூபா 295., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-659-493-5.

ஆசிரியர் முன்னர் எழுதிய பயிற்சித் தமிழ் என்ற நூலின் சுருக்க வடிவம் இதுவாகும். எங்கள் இளந்தலைமுறையினரைத் தமிழ்ப் பாரம்பரிய உணர்விற் திளைக்க வைப்பதையும் தமிழைப் பிழையின்றித் தெளிவாக எழுதும் ஆற்றலை அவர்கள் மத்தியில் வளர்ப்பதையும் நோக்கமாகக் கொண்டவையாகவே தென்புலோலியூர் மு.கணபதிப்பிள்ளை அவர்களின் நுல்கள் அமைவது வழமை. அவ்வகையில் இந்நூல் எழுத்து, சொல், சொற்றொடர், வாக்கியம், நடையாக்கம் ஆகிய ஐந்து பிரிவுகளில் மாணவர்களிடையே தமிழ்மொழி அறிவை வளர்த்தெடுக்கும் நோக்கில் எழுதப்பட்டுள்ளது.

### 12565

**தமிழ் மொழி விளக்கம்: இரண்டு பகுதிகள் அடங்கியது.** க.கயிலாயநாதன். வட்டுக்கோட்டை: க.கயிலாயநாதன், உதவி அதிபர், வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி, சித்தன்கேணி, 3வது பதிப்பு, 1955, 1வது பதிப்பு, பங்குனி 1953, 2வது திருத்திய பதிப்பு, 1954. (யாழ்ப்பாணம்: புனித வளனார் கத்தோலிக்க அச்சகம்).

xii, 189 பக்கம், விலை: ரூபா 3.50, அளவு: 21x13.5 சமீ.

தமிழ் மரபுக்கேற்ப இலக்கண வழுவின்றித் தமிழை எழுதவும் தற்காலத் தமிழ் மொழி வளனுக்கேற்பப் பொதுத் தேர்வுகளில் காணப்படும் சொற்கள், மரபுச் சொற்றொடர்கள், விளக்கப் பயிற்சி, கடிதம் வரைதல், கட்டுரை வரைதல், சுருக்கி எழுதல், உரைநடை ஆக்கம் செய்தல், செய்யுள் நயம் கூறல், மொழி பெயர்த்தல் முதலியவற்றை அடிப்படையாகக் கொண்ட கேள்விகளுக்குத் தகுந்த முறையில் விடை எழுதவும் உதவுவதற்காக இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது. முதற்பகுதியில் சொற் பயிற்சி, சொற்றொடர்ப் பயிற்சி, வாக்கியப் பயிற்சி ஆகிய பாடங்களும் இரண்டாம் பகுதியில் விளக்கப் பயிற்சிகள், கடிதம் வரைதல், கட்டுரை வரைதல், சுருக்கி எழுதுதல், உரைநடை ஆக்கம் செய்தல், செய்யுள் நயம் கூறல், மொழி பெயர்ப்பு ஆகிய பயிற்சிகளும் தரப்பட்டுள்ளன. J.S.C, G.C.E. வகுப்புகளுக்கும் பொதுத் தேர்வுகளுக்கும் ஏற்ற புதிய தமிழ்மொழிப் பயிற்சி இதுவாகும். டாக்டர் மு.வரதராசனார், சி.சுவாமிநாதன் ஆகியோரின் அணிந்துரைகளுடன் கூடியது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 33120).

### 12566

**தமிழ் மொழிப் பயிற்சி நூல்.** எஸ்.ஜே.யோகராசா. கொழும்பு 15: எஸ்.ஜே.யோகராசா, 65/322 காக்கை தீவு, மட்டக்குழி, 1வது பதிப்பு, மார்ச் 2003. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).

x, 38 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 24.5x17 சமீ., ISBN: 955-97763-1-2.

தமிழ் மொழி படிக்கும் சிங்கள மாணவர்களுக்கு எழுத்துத் தமிழ் மொழியைப் படிக்கும்போது உதவும் வகையில் இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது. எஸ்.ஜே. யோகராசா, களனிப் பல்கலைக்கழகத்தில் மொழியியல்துறையில் பணியாற்று கின்றார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 28399).

### 12567

**பாலபாடம்: முதற்புத்தகம்.** ஆறுமுக நாவலர். கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, இணை வெளியீடு, கொழும்பு 4: நாவலர் நற்பணி மன்றம், இல. 36, நந்தன கார்டின்ஸ், 1வது பதிப்பு 2016. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

42 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-659-534-5.

*யாழ்ப்பாண நல்லூர் ஆறுமுக நாவலர் ஆற்றிய பணிகளில் கல்விப்பணி குறிப்பிடத்தக்கது ஆகும். சிறுவர்களுக்கு எளிய முறையில் தமிழ் கற்பிப்பதற்காக அவர் பாலபாடம் இயற்றியமை அதன் ஒரு பகுதியாக அமைகின்றது. ஆறுமுக நாவலரால் உருவாக்கப்பட்ட பாலபாடம் முதல் புத்தகம் 1850ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இந்த முதல் புத்தகம் தமிழ் நெடுங்கணக்கு, சொற்கள், சொற்றொடர்கள், பிராதக்காலப் பிரார்த்தனம் (விடியற்கால பிரார்த்தனை), சாயங்காலப் பிரார்த்தனம் என்னும் ஐந்து பிரிவுகளைக் கொண்டுள்ளது.*

## 12568

**பாலபாடம்: இரண்டாம் புத்தகம்.** *ஆறுமுக நாவலர். கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, இணை வெளியீடு, கொழும்பு 4: நாவலர் நற்பணி மன்றம், இல. 36, நந்தன கார்டின்ஸ், 1வது பதிப்பு 2016. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).*

*80 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 21.5x14.5 சமீ.,* ISBN: *978-955-659-535-2.*

*ஆறுமுக நாவலரால் உருவாக்கப்பட்ட பாலபாடம் இரண்டாம் புத்தகம் 1850ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. அதில் நீதிக் கருத்துக்கள், கதைகள், அறிவியல் சார்ந்த விடயங்கள், உலகத்துப் பொருள்கள் பற்றிய அறிமுகம் எனப் பல விடயங்கள் இடம்பெற்றுள்ளன. இதில் கடிதம் எழுதும் முறை பற்றியும் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.*

## 12569

**பாலபோதினி: ஐந்தாம் புத்தகம்.** *வட இலங்கை தமிழ்நூற் பதிப்பகம். சுன்னாகம்: வட இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகம், 11வது பதிப்பு 1966. 1வது பதிப்பு விபரம் அறியமுடியவில்லை. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).*

*(2), 124 பக்கம், சித்திரங்கள், விளக்கப்படங்கள், விலை: ரூபா 1.00, அளவு: 21x14 சமீ.*

*ஆரம்பக்கல்வி மாணவர்களுக்கான தமிழ்மொழிப் பாடநூலாக வழக்கில் இருந்து வரும் நூல். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 24535).*

**பாலபோதினி: ஐந்தாம் புத்தகம்.** *வட இலங்கை தமிழ்நூற் பதிப்பகம். சுன்னாகம்: வட இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகம், திருத்திய 20ஆவது பதிப்பு, 1959, திருத்திய 2வது பதிப்பு, 1953, 1வது பதிப்பு விபரம் அறியமுடியவில்லை. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).*

*(4), 104 பக்கம், சித்திரங்கள், விளக்கப்படங்கள், விலை: 90 சதம், அளவு: 21x14 சமீ.*

*ஆரம்பக்கல்வி மாணவர்களுக்கான தமிழ்மொழிப் பாடநூலாக நீண்டகாலமாக பாவனையில் இருந்து வரும் நூல். இப்பதிப்பில் திருவள்ளுவர், பொறாமையின் கேடு, மழைத்துளி சொன்ன கதை, பாண்டவர்-1, இரட்டைப் புலவர், பொன் பெற்ற துறவி, பஞ்சபாண்டவர்-2, யாழ்ப்பாணம், கீரிமலை நீரூற்றுக்கள்,*

பஞ்சபாண்டவர்-3, இலங்கை மணித்திருநாடு, வாழையும் புலவனும், நிலத்தைப் பண்படுத்தல், பஞ்சபாண்டவர்-4, எனது சுகதுக்கங்கள், சிரங்கு, சிவனொளிபாத மலை, பஞ்சபாண்டவர்-5, மகாகவி ரவீந்திரநாதர், காகிதம், பஞ்சபாண்டவர்-6, வைத்தியர்களின் மகத்தான சேவை, கடலின் உபயோகம், கட்டுரைப் பயிற்சி, அழைப்புப் பத்திரம், நன்னெறிச் சுருக்கம், நீதிவெண்பாச் சுருக்கம், நன்னெறிச் சுருக்க உரை, நீதிவெண்பாச் சுருக்க உரை ஆகிய பாடங்கள் இதில் உள்ளடக்கப் பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 2290).

## 12570

**பேச்சுத் தமிழுக்கு அறிமுகம்**. எஸ்.ஜே.யோகராஜா. கொழும்பு 15: எஸ்.ஜே. யோகராஜா, 65/322 காக்கை தீவு, மட்டக்குழி, 1வது பதிப்பு, டிசம்பர் 2009. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).

xvi, 146 பக்கம், விலை: ரூபா 450., அளவு: 25x17 சமீ., ISBN: 978-955-97763-5-2.

தமிழ் மொழி படிக்கும் சிங்கள மாணவர்களுக்கு பேச்சுத் தமிழ் படிக்கும்போது உதவும் வகையில் இந்நூல் 15 பாடங்களாக வகுத்து உருவாக்கப்பட்டுள்ளது. உயிரெழுத்துக்கள், மெய்யெழுத்துக்கள், உயிர்மெய் எழுத்துக்கள், உச்சரிப்பு வேறுபாடுகள் அ,ஆ,இ,ஈ,எ,ஏ,உ, உச்சரிப்பு வேறுபாடுகள் க,ச,ட, உச்சரிப்பு வேறுபாடுகள் ப,ற,த, சாப்பாட்டுக் கடையில் உரையாடல், இலக்கணம் (வேணும்-வேண்டாம், இருக்கு, இல்லை, சந்தி, ஆ-கேள்வி உருபு, வினையெச்சம், உம், உம், ங்கோ(ங்க)..உங்கோ(உங்க), பெயரெச்சம், இலக்கம் 1-10, காரியாலயத்தில் நடந்த உரையாடல், தொலைபேசி உரையாடல், நிகழ்காலம் எதிர்காலத்தில் பயன்படுதல், எதிர்காலம், இறந்தகாலப் பெயரெச்சம், இறந்தகால அழுத்தமான வினைச்சொற்கள், முடிவற்ற எச்சத்துடன் இல்லை சேர்வது, வீதிச் சோதனைச் சாவடியில் நடந்த உரையாடல், கடவுச்சீட்டுக் காரியாலயத்தில் நடந்த உரையாடல், புடவைக்கடையில் நடந்த உரையாடல், இருவருக்கிடையில் நடந்த உரையாடல், மரக்கறிக் கடையில் நடந்த உரையாடல், தபாற்கந்தோரில் நடந்த உரையாடல், நேர்முகப் பரீட்சை எனப் பல்வேறு தலைப்புகளிலும் உப தலைப்புகளிலும் பேச்சுத் தமிழ்மொழி புகட்டப்பட்டுள்ளது. எஸ்.ஜே.யோகராசா, களனிப் பல்கலைக்கழகத்தில் மொழியியல்துறையில் பணியாற்றுகின்றார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 48367).

## 12571

**மாணவர் மஞ்சரி (Student's Bouquet of Verses in Tamil)**. அ.ஜே.ஷாவ்றர். கொழும்பு: அ.ஜே.ஷாவ்றர், தலைமைத் தமிழ்ப் பண்டிதர், பரி.தோமஸ் கலாசாலை, 1வது பதிப்பு, டிசம்பர் 1933. (அச்சக விபரம் தரப்படவில்லை).

xx, 163 பக்கம், விலை: ரூபா 1.00, அளவு: 18x12.5 சமீ.

"திரு அவதார மாலை" என்னும் காப்பியத்தின் ஆக்கியோனான அமரர் சி.பீற்றர் அடால்பஸ் புலவர் அவர்களின் புத்திரனும் பரி.தோமஸ் கலாசாலைத் தலைமைத் தமிழ்ப் பண்டிதருமான A.J.Schaffter அவர்கள் எழுதிய தமிழ்ப் பாடநூல் இது. மூன்று பாகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ள இந்நூலின் முதற்பாகத்தில் மழையும் மின்னலும், வயிற்றுவலி, மங்களம், காற்றாடி, குழந்தையும் கூட்டுப் பிராணிகளும், செல்லப்பிள்ளை, கவனமில்லாத பிள்ளை, நல்ல பிள்ளை சொல்வது, மின்னு மின்னு வெள்ளியே, விடாமுயற்சி, ஓர் விடுகதை, மூளியுங் காளியும் (கும்மி), கமக்காரன், சிப்பியின் இரகசியம், விடுமுறை நாட்கள், வேலையின் பின் விளையாட்டு, உலோபி, வேலையும் விளையாட்டும், உடம்புப் பயிற்சி, கைவிரல்கள் என இன்னோரன்ன 54 பாடங்கள் இடம்பெற்றுள்ளன. இரண்டாம் பாகத்தில் மேலோரைக் கனம் பண்ணல், விருது விரும்பிய சித்திரர், கிளிப்பிள்ளையின் கதை என இன்னோரன்ன 13 பாடங்கள் உள்ளன. இறுதியாக உள்ள மூன்றாவது பாகத்தில் சம்சோன் வெண்பா இடம்பெற்றுள்ளது. இவ்வெண்பா, பாயிரம், சென்ன காண்டம், மணம்புரி காண்டம், வினைசூழ் காண்டம், வாழி ஆகிய ஐந்து பிரிவுகளில் காணப்படுகின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 25126).

### 12572

**முதலாம் தொடர்புறு பாட வாசகம் 1: மேற்பிரிவு.** ஆ.வி.சோமசுந்தரம். யாழ்ப்பாணம்: ஆ.வி.சோமசுந்தரம், 6வது பதிப்பு, 1947, 1வது பதிப்பு, 1934. (யாழ்ப்பாணம்: க.வைத்தியலிங்கம், அதிபர், நாவலர் அச்சுக்கூடம்).

52 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x13.5 சமீ.

Correlative Lessons Book 1 for Kindergarten upper Division என்ற ஆங்கில இணைத்தலைப்புடன் வெளியிடப்பட்ட பாலர் மேற்பிரிவுக்கான இந்நூல் 1934இல் தமிழ் பாடநூல் கமிட்டியினால் பாடநூலாக அங்கீகாரம்பெறப்பட்டது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 12939. நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தின் சேர்க்கை இலக்கம் 011879).

### 12573

**மொழிப் பயிற்சி: உயர்தர வகுப்புகளுக்குரியது.** வ.நடராஜன், சு.வேலுப்பிள்ளை. சுன்னாகம்: வட இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகம், 1வது பதிப்பு, 1959. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).

(8), 176 பக்கம், விலை: ரூபா 2.50, அளவு: 21x13.5 சமீ.

மொழிப் பயிற்சி ஆறாம் புத்தகம் 7ஆம், 8ஆம் வகுப்புகளுக்குரியதாக முன்னர் வெளியிடப்பட்டிருந்தது. அதனை அடுத்து வெளிவந்துள்ள உயர்தர வகுப்பு களுக்குரிய இந்நூல், சுருக்கி எழுதுதல், செய்யுள் பொழிப்பு, செய்யுள் நயம், பொது, கட்டுரை எழுதுதல், மொழிபெயர்ப்பு ஆகிய பாடங்களை விளக்கும்வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. மொழிபெயர்ப்புப் பகுதிகள் இந்நூலின் அனுபந்தமாகத்

தரப்பட்டுள்ளதுடன் செய்யுள் அருஞ்சொற் பொருள் அகராதியும் நூலின் இறுதியில் தரப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 18083).

## 12574

**வளரும் தமிழ்: ஆறாம் வகுப்புக்குரியது.** க.யோ.ஆசிநாத பண்டிதர். யாழ்ப்பாணம்: யாழ். தமிழ் இலக்கியக் கழக வெளியீடு, 2வது பதிப்பு, 1959, 1வது பதிப்பு, 1957. (யாழ்ப்பாணம்: புனித வளனார் கத்தோலிக்க அச்சகம்).

vi, 128 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

இந்நூலில் ஆறாம் வகுப்பிற்குரிய தமிழ்மொழிப் பாடங்கள் விளக்கப்பட்டுள்ளன. வாக்கியம் (வாக்கியத்தின் பொது அமைப்பு/வாக்கிய வகைகள்), வாக்கிய உறுப்புக்கள் (எழுவாய்/பயனிலை/செயப்படுபொருள்), சொற்கள் (பெயர்ச்சொல்/ வினைச்சொல்/ இடைச்சொல்/உரிச்சொல்), எழுத்து (எழுத்துக்களின் வகை/ எழுத்திலக்கணம்/பொருள் வேற்றுமை/வேறுபாட்டுச் சொற்கள்), புணர்ச்சி (நிலைமொழி/வருமொழி/ இன்றியமையாப் புணர்ச்சிகள்), மொழிப்பயிற்சி (அடைமொழி, வாக்கியப் பொருத்தம், இடம்விட்டெழுதுதல், சேர்த்தெழுதுதல், சொற்பொருத்தம்), நிறுத்தற் குறிகள் (குறியீடுகளின் வகைகள்), உரை நடை-கட்டுரை (கட்டுரை வகைகள்/ கதை எழுதுதல், வரலாறு எழுதுதல், வர்ணித்து எழுதுதல், சொற்றொடர்களை விளக்கி எழுதுதல், நிகழ்ச்சிகளை வரைதல், விழா நிகழ்ச்சிகள், பின்குறிப்பின்றி கட்டுரை வரைதல், கடிதக் கட்டுரை, உரையாடற் கட்டுரை) ஆகிய தமிழ் மொழிப்பாடங்கள் இதில் அடங்கியுள்ளன. நூலாசிரியர் க.யோ.ஆசிநாத பண்டிதர் கிளிநொச்சி, புனித தெரேசா மகாவித்தியாலயத்தின் அதிபராகப் பணியாற்றியவர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 21341).

## 12575

**விளங்கி எழுதுவோம் வாசிப்போம்-II: மேலதிக மொழி விருத்திப் பாடநெறி-தமிழ்.** M.H. யாகூத், பீ.சிவகுமாரன். கொழும்பு: தொலைக்கல்வித் துறை, தேசிய கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1997. (கொழும்பு: P and A பிரின்டர்ஸ் லிமிட்டெட்).

44 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x19 சமீ.

தாய்மொழியல்லாத இரண்டாவது மொழியை விளங்கி எழுதவதற்காகவும் வாசித்து விளங்கிக்கொள்வதற்காகவும் மாணவர்களை வழிப்படுத்தும் அடிப்படைப் பயிற்சியை இக்கைந்நூல் வழங்குகின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 47778).

## 12576

**விளங்கி வாசித்தலும் எழுதுதலும்-II: மேலதிக மொழி விருத்திப் பாடநெறி-தமிழ்.** M.M.M. முஹ்ஸின், A.G.குணரட்ண. கொழும்பு: தொலைக்கல்வித் துறை, தேசிய கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1997. (கொழும்பு: P and A பிரின்டர்ஸ் லிமிட்டெட்).

52 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x19 சமீ.

தாய்மொழியல்லாத இரண்டாவது மொழியை வாசித்து விளங்கி எழுதவதற்காக மாணவர்களை வழிப்படுத்தும் அடிப்படைப் பயிற்சியை இக்கைந்நூல் வழங்கு கின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 47778).

### 12577

**விளங்கிக் கொண்டு கருத்து வெளியிடுதல் -1: மேலதிக மொழி விருத்திப் பாடநெறி- தமிழ்.** தேசிய கல்வி நிறுவகம். கொழும்பு: தொலைக்கல்வித் துறை, தேசிய கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1997. (கொழும்பு: P and A பிரின்டர்ஸ் லிமிட்டெட்).

48 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x19 சமீ.

மூன்று பிரிவுகளில் எழுதப்பட்டுள்ள இந்நூல், ஒரு படத்தை அல்லது ஓவியத்தை அவதானித்து அதனை விளக்குதல், ஒரு நிகழ்வை அல்லது சம்பவத்தைப் பார்த்து அதனை விபரித்தல், ஒரு செயற்பாட்டினை அல்லது நடவடிக்கையை விபரித்தல் ஆகிய மூன்று வகையான கருத்து வெளிப்பாடுகளையும் பற்றிய அறிவை வழங்குகின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 47778).

**மேலும்பார்க்க: 13A14, 12998**

# 500 தூய விஞ்ஞானங்கள்

## 500.01 பொது விஞ்ஞானப் பாடநூல்கள்

### 12578

**ஆரம்ப விஞ்ஞானம்: ஆண்டு 5.** கு.வி. அச்சகத்தினர். யாழ்ப்பாணம்: கு.வி.அச்சகம், 1வது பதிப்பு, 1997. (கொழும்பு 13: கு.வி.அச்சகம், 58, கிறீன் லேன்).

(4) 108 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 80., அளவு: 26.5x20 சமீ.

1997ஆம் ஆண்டு முதல் நடைமுறைக்கு வந்துள்ள தேசிய கல்வி நிறுவகம், ஆரம்பக் கல்வித்துறை வெளியிட்ட ஆண்டு 5 விஞ்ஞானத்திற்கான விரிவான பாடத்திட்டம் முழுவதையும் அடிப்படையாகக்கொண்டு இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது. பன்னிரு பாடங்களாக வகுக்கப்பட்டுள்ள இந்நூலின் உள்ளடக்கத்தில் எமது சுற்றாடல், மண்ணின் பண்புகள், எமக்கு அவசியமான நீர், பூண்டுகளும் மரஞ்செடி கொடிகளும், பிராணிகளின் தகவல்கள், காந்தம், எம்மைச் சூழவுள்ள வளி, நாம் பயன்படுத்தும் மின்சாரம், நாம் உணரும் சூடு, பார்ப்பதற்கு உதவும் வெளிச்சம், எமது இயந்திர சாதனங்கள், நாம் செவிமடுக்கும் சத்தம் ஆகிய பாடங்கள் அடங்கியுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 55033).

## 12579

**ஆரம்ப விஞ்ஞானம்: 7-1.** இ.குணநாதன் (பதிப்பாசிரியர்). கொழும்பு 10: கல்வி வெளியீட்டுத் திணைக்களம், மாளிகாவத்தைச் செயலகம், 1வது பதிப்பு, 1980. (கொழும்பு: திசர அச்சகம், 135, தட்டுகமுனு வீதி, தெகிவளை).

vii, 64 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

மண், மண்வளம், சூரியனும் சூரிய சக்தியும், ஞாயிற்றுத் தொகுதி, வளியமுக்கம், வளிமண்டலத்திலுள்ள வாயுக்கள் ஆகிய ஆறு தலைப்புகளில் ஏழாம் வகுப்புக்கான ஆரம்ப விஞ்ஞான பாடம் விளக்கப்பட்டுள்ளது. இந்நூலின் மூல நூலாக்கக் குழுவில் திருமதி நாளினி எதிரிசிங்க, நிமால் இரத்நாயக்க, S.M.விஜேரத்ன, உபாலி சல்பதொறு ஆகியோர் பணியாற்றியுள்ளனர். நூலின் தமிழாக்கக் குழுவில் இ.குணநாதன், திருமதி. க.சிவபாதசுந்தரம், த.வாகீசமூர்த்தி ஆகியோர் பணி யாற்றியுள்ளனர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 24990).

## 12580

**குழந்தைகளுக்கான ஆரம்ப விஞ்ஞானம்: ஆண்டு 4.** ஞானசுரபி புத்தகசாலை. யாழ்ப்பாணம்: ஞானசுரபி புத்தகக் கம்பெனி, 217, மின்சார நிலைய வீதி, 1வது பதிப்பு, 1987. (யாழ்ப்பாணம்: கு.வி.அச்சகம், 386, மணிக்கூட்டு வீதி).

(2), 60 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 15.50, அளவு: 20x14 சமீ.

கல்வியமைச்சு 1987ஆம் ஆண்டு தொடக்கம் நடைமுறைப்படுத்தியுள்ள ஆரம்ப விஞ்ஞானப் பாடத்திட்டத்திற்கான தொழிற்பாடுகளுடன் கூடிய திருத்திய புதிய வெளியீடு. சூழலை அவதானிக்க ஐம்புலன்களையும் பயன்படுத்துதல், நிலம், தாவரம், விலங்குகள், நீர், வளி, தகனம், காந்தம், மின்சாரம் ஆகிய ஒன்பது பாடங்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 034471).

## 12581

**நவீன விஞ்ஞானம்(முழு அலகுகளும்): ஆண்டு 8.** ஐ.ஜெகநாதன். யாழ்ப்பாணம்: ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை, 235, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, ஜூன் 1986. (அச்சுவேலி: ராஜா அச்சகம்).

(4), 137 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 19.00, அளவு: 21x14 சமீ.

கல்வித் திணைக்களத்தின் விஞ்ஞான ஆலோசகர் ஐ.ஜெகநாதன் அவர்கள் எழுதிய நூல் இது. 1986ஆம் ஆண்டு முதல் அமுலிலுள்ள புதிய பாடத்திட்டத்திற் கேற்ப முழு ஆண்டுக்குமுரிய எல்லாப் பகுதிகளையும் அதாவது அலகு 1 முதல் அலகு 11 வரை மனிதனும் சூழலும், வளிமண்டலத்தில் ஏற்படும் மாற்றங்களும் வானிலையும், வான், ஒளி, உணவு, நீர், சடப்பொருள், மின்னும் காந்தமும், வெப்பம், விசையும் விசையை அளத்தலும், அடர்த்தி ஆகிய பாடங்களை உள்ளடக்கியதாக வெளிவந்துள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 25718).

**12582**

**புதிய விஞ்ஞானம்: ஆண்டு 10 பகுதி 1.** கல்வி வெளியீட்டுத் திணைக்களம். கொழும்பு 10: கல்வி வெளியீட்டுத் திணைக்களம், மாளிகாவத்தைச் செயலகம், 1வது பதிப்பு, 1987. (கொழும்பு 11: மெய்கண்டான் அச்சகம், 161, செட்டியார் தெரு).

viii, 139 பக்கம், விளக்கப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x18 சமீ.

கல்வி அமைச்சின் 1985ஆம் ஆண்டுப் பாடத்திட்டத்தின்படி இந்நூல் தயாரிக்கப் பட்டுள்ளது. மேற்படி பாடத்திட்டத்தின் முதல் ஏழு அலகுகளை பகுதி ஒன்று உள்ளடக்கியுள்ளது. அணுக்களும் மூலக்கூறுகளும், திணிவு மாறாவிதி, கரைசல்களும் அவற்றின் செறிவும், மனித உடலினுள் பதார்த்தங்கள் கொண்டு செல்லப்படுதல், மூலகங்களும் ஆவர்த்தனவியல்பும், வெப்பம், இயக்கம் ஆகிய ஏழு அத்தியாயங்களில் இவை விரிவான உபதலைப்புகளின்கீழ் விளக்கப் பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 11198).

**12583**

**விஞ்ஞான போதினி: 7ஆம் 8ஆம் வகுப்புகளுக்குரியது.** ம.பரமானந்தன், நா.சா.இரத்தினசிங்கம். சுன்னாகம்: வட இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகம், 3வது திருத்திய பதிப்பு, 1964, 1வது பதிப்பு, 1959, 2வது பதிப்பு, 1961. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).

xii, 551 பக்கம், விலை: ரூபா 6.50, அளவு: 19x12.5 சமீ.

வட மாகாண ஆசிரிய சங்கப் பாடத்திட்டத்திற்கு அமைவாக யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி ஆசிரியர்களால் எழுதப்பட்ட நூல் இது. பௌதிகவியல், இரசாயனவியல், உயிரினவியல் ஆகிய மூன்று பிரிவுகளில் எழுதப்பட்டுள்ளது. பௌதிகவியல் பிரிவில், வளி, வளியின் உபயோகங்கள், ஈர்ப்பு, அளவைகள், வளி அலகுகள், நிறுவை, அடர்த்தியும் தன்னீர்ப்பும், ஆர்க்கிமிடீசின் விதி, மிதத்தல், சில இலகுவான பொறிகள், புவியீர்ப்பு மையமும் சமநிலையும், வெப்பம், வெப்பநிலை, வெப்பமானிகள், வெப்பத்தின் விளைவுகள், நிலைமாற்றம், உருகுதல், கொதித்தல், ஆவியாகல், பனி, முகில், மழை, மூடுபனி, வெப்ப இடமாற்றுகை, ஒளி, ஒளியின் உபயோகங்கள், ஒளியினது நேர்கோட்டுச் செலுத்துகை, ஒளியும் நிழலும், ஒளித்தெறிப்பு, ஒளிமுறிவு, நிறப்பிரிகை, ஒலி, எதிரொலி, காந்தவியல், நிலைமின்னியல், மின்னோட்டம், மின்கலங்கள் ஆகிய பாடங்கள் விளக்கப்பட்டுள்ளன. இரசாயனவியல் பிரிவில் மின்னோட்டமும் வாழ்க்கையும், சடப்பொருள், பௌதிக-இரசாயன மாற்றங்கள், மூலகம், கலவைகள், சேர்வைகள், பௌதிக முறைகள், வளியின் இயல்பும் அமைப்பும், ஒட்சிசன், ஐதரசன், நீர், காபனீரொட்சைட்டு, குளோரீன், கந்தகம், கந்தகவீரொட்சைட்டு, அமிலங்கள், சில உப்புகளும் இரசாயன சேர்க்கைகளும் ஆகிய பாடங்களும், இறுதிப் பிரிவான உயிரினவியலில் வாழ்வுள்ள பொருட்களும் வாழ்வற்ற

*பொருட்களும், தாவரமும் அதன் பகுதிகளும், சிறப்பான தொழில்கள் புரியும் சில வேர்கள், சிறப்பான தொழில்புரியும் தண்டுகள், நலிந்த தண்டுத் தாவரங்கள், இலையும் அதன் தொழில்களும், பூ, மகரந்தச் சேர்க்கை, பழங்கள், பழங்களும் வித்துக்களும் பரம்பல், வித்துக்களும் முளைத்தலும், சூழ்நிலைக் கலைகள், மண், தாவரங்களின் பொருளாதார முக்கியத்துவம், விலங்குகள் பாகுபாடு, முள்ளந் தண்டுள்ள சில விலங்குகள், பூச்சிகள், தோட்டத்து விலங்கினங்கள் ஆகிய பாடங்களும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 33089).*

**மேலும் பார்க்க: 12616.**

## 510 கணிதம்

### 12584

**அட்சரகணிதம்-1.** *க.அருளானந்தம், க.கமலநாதன், பொ.மகேஸ்வரன், சு. வே.மகேந்திரன். யாழ்ப்பாணம்: யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம், 1வது பதிப்பு, 2000. (யாழ்ப்பாணம்:* STP Computer World).

*(8), 187 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 23.5*x*17.5 சமீ.*

*நான்கு அத்தியாயங்களில் எழுதப்பட்டுள்ள இந்நூல் காரணிப் படுத்தல் (தொகுப்பு முறை வகுத்தல், மீதித் தேற்றம், மீள் காரணிகள், பல்லுறுப்பிச் சார்புகளைக் காரணிப்படுத்தல்), இருபடிச் சமன்பாடுகள்-சார்புகள் (இருபடிச் சமன்பாடுகளும் தீர்வுகளும், கூலங்களின் தன்மை, இருபடிச் சார்புகள், விகிதமுறு சார்புகள்), தொடர் (தொடரின் கூட்டுத்தொகை, தொடரின் கூட்டுத்தொகை கண்டுபிடிப்பதற் குரிய வித்தியாச முறை, தொடரின் கூட்டுத்தொகை காண்பதற்கான விசேட முறைகள்), எண்ணும் முறைகள் (வரிசை மாற்றம், சேர்மானம், எல்லாம் வேறுபடாத பொருள்களின் சேர்மானமும் வரிசைமாற்றமும்) ஆகிய தலைப்புகளில் இப்பாடப் பயிற்சிகள் தரப்பட்டுள்ளன. நூலின் இறுதியில் பயிற்சிகளுக்கான விடைகள் இடம்பெற்றுள்ளன. யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் கணிதம் வெளியீட்டுத் தொடரில் 1வது நூல் இதுவாகும். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 37444).*

### 12585

**கணிதம் ஆண்டு 4.** M.P.M.M.*ஷிப்லி, கோ.கோணேசபிள்ளை (தமிழாக்கம்), ந. வாகீசமூர்த்தி, திருமதி ம.திருநாவுக்கரசு (பதிப்பாசிரியர்கள்). கொழும்பு 2: கல்வி வெளியீட்டுத் திணைக்களம், கல்வி அமைச்சு, மலாய் வீதி, 1வது பதிப்பு, மே 1984. (கொழும்பு: அரசாங்க அச்சகம்).*

xi, *322 பக்கம், விளக்கப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 23*x*18 சமீ.*

*கணிதக் கல்வியின் புதிய போக்குகளுக்கேற்ப 1985 முதல் நடைமுறைக்கு வரும் புதிய பாடத்திட்டத்தின்படி தயாரிக்கப்பட்டுள்ள இந்நூல் 90 படிமுறைகளைக்*

கொண்டது. எண்களை அறிதல், வாசித்தல், எழுதுதல், இடப்பெறுமானம், எண்களை ஒப்பிடுதலும் வரிசைப்படுத்தலும், கணிதச் செய்கை, எண்ணுதலும் கோலங்களும், பணம், அளத்தல், வடிவமும் சமச்சீரும், வரைபு, அயலும் வரிசைப்படுத்தலும், திசைகளும் பருமட்டான படங்களும், சாதாரண பின்னம், உரோமன் இலக்கங்கள், பிரசினங்களைத் தீர்த்தல், எண்களை ஒப்பிடுதலும் வரிசைப்படுத்தலும் ஆகிய பாடங்கள் படிமுறைகளில் பயிற்சிகளுடன் இந் நூலில் விளக்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 25364).

### 12586

**கணிதம் ஆண்டு 5-பகுதி 2.** M.P.M.M.ஷிப்லி (தமிழாக்கம்), ந.வாகீசமூர்த்தி (பதிப்பாசிரியர்). கொழும்பு 10: கல்வி வெளியீட்டுத் திணைக்களம், தபால்பெட்டி எண் 520, புதிய செயலகம், மாளிகாவத்தை, 1வது பதிப்பு, 1987. (கொழும்பு: அரசாங்க அச்சகத் திணைக்களம்).

x, பக்கம் 189-413, விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x18.5 சமீ.

கல்வி அமைச்சின் 1985ஆம் ஆண்டுப் பாடத்திட்டத்தின்படி இந்நூல் தயாரிக்கப்பட்டது. எண்களை அறிதல், எண்களை ஒப்பிடுதலும் வரிசைப்படுத்தலும், கணிதச் செய்கை (கூட்டல், கழித்தல்), எண்ணுதலும் கோலங்களும், கணிதச் செய்கை (பெருக்கல் பிரித்தல்), பணம், அலகு முறை, பிரச்சினைகளைத் தீர்த்தல், வடிவமும் சமச்சீரும், சாதாரண பின்னம், தசம பின்னம், அளத்தல் (நீளமும் சுற்றளவும், காலம்), வரைபுகள், எண்களை அறிதல் (வாசித்தல், எழுதுதல், இடப்பெறுமானம்), திசைகளும் பருமட்டான படங்களும் ஆகிய பாடப்பரப்பில் படிமுறைகள் 44முதல் 90 வரை இந்நூலில் இடம்பெற்றுள்ளன. பக்கம் 396-413வரை பலவினப் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 11195).

### 12587

**கணிதம்: ஆண்டு 8: செயல்நூல்.** வி.ச.சுப்பிரமணியம். யாழ்ப்பாணம்: கணிதக் கழகம், நாவற்குழி, கைதடி, 1வது பதிப்பு, கார்த்திகை 1997. (அச்சக விபரம் தரப்படவில்லை).

(4), 64 பக்கம், விலை: ரூபா 60., அளவு: 21x14 சமீ.

இந்தச் செயல்நூல் பாடசாலை மட்டத்தில் நடைமுறையிலிருக்கும் பாடத் திட்டத்திற்கு அமைவாக எட்டாம் வகுப்பு மாணவர்களுக்காகத் தயாரிக்கப்பட்டது. 45 படிமுறைகளாக அமைந்த எண்ணக்கருக்களை எண்கள், பரப்பளவும் கனஅளவும், கோவைகள்-காரணிகள்-சமன்பாடுகள், பல்கோணிகள், விகிதம்-சதவீதம்-வட்டி, அமைப்புக்கள், நிகழ்தகவும் புள்ளிவிபரவியலும், வரைபுகள், முக்கோணிகள், அளவிடைப் படங்கள் ஆகிய 10 தலைப்புகளில் வகைப்படுத்தி இச்செயல்நூலிலுள்ள பயிற்சிகள் தயாரிக்கப்பட்டுள்ளன. மூன்று தவணைப் பரீட்சைகளுக்கும் உரிய மாதிரி வினாத்தாள்களும் விடைகளும் இறுதியில்

சேர்க்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 27415).

### 12588

**கணிதம் தரம் 6.** கல்வி வெளியீட்டுத் திணைக்களம். கொழும்பு 10: கல்வி வெளியீட்டுத் திணைக்களம், 3வது பதிப்பு, 2000, 1வது பதிப்பு, 1998, 2வது பதிப்பு, 1999. (கொழும்பு 15: கலர் பிரின்ட்ஸ் அச்சகம், 712, புளூமெண்டால் வீதி).

viii, 262 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x17.5 சமீ.

இலங்கைக் கல்வித்துறையின் தரம் ஆறுக்குரிய பாடவிதானத்தையொட்டி அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட கணித பாடநூல். இதில் இடப்பெறுமானம், மில்லியன், ஒற்றை எண்களும் இரட்டை எண்களும், மதிப்பீடு, முழு எண்களில் கூட்டல், முழு எண்களில் கழித்தல், எண்கோலங்கள், சேர்த்தி எண்கள், முதன்மை எண்கள், முதன்மைக் காரணிகள், கோட்டின் மீது எண்கள், எண்கோடு, தெரிதல், சமனிலிகள், பின்னங்கள், தசமங்கள், முழு எண்களில் பெருக்கல், முழு எண்களில் வகுத்தல், நீளத்தை அளத்தல், எட்டுத்திசைகள், கூற்றுக்கள், பரப்பளவுகள், நிறை-திரவ அளவீடு, நேரம், நேர்கோட்டுத் தளவுருவம், தரவுகளைச் சேகரித்தல், தரவுகளை வகைக்குறித்தல், வகுபடு தன்மை, சுட்டிகள், விகிதம், வட்டம், தொடர்பு, திண்மம், நிகழ்ச்சியொன்றின் நிகழ்வு ஆகிய 34 பாடங்கள் விளக்கப் பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 40433).

### 12589

**கணிதம் 10ஆம் ஆண்டு.** M.P.M.M.ஷிப்லி (தமிழாக்கம்), ந.வாகீசமூர்த்தி, திருமதி ம.திருநாவுக்கரசு (பதிப்பாசிரியர்கள்). கொழும்பு 10: கல்வி வெளியீட்டுத் திணைக்களம், 7வது பதிப்பு, 1992, 1வது பதிப்பு, 1986. (கொழும்பு 13: பசிபிக் அச்சகம், இல. 267, ஆட்டுப்பட்டித் தெரு).

vii, 410 பக்கம், விளக்கப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

இந்நூலில் தொடைகள், செலாவணி வீதமும் அந்நியநாட்டு நாணயமும், முக்கோணிகளின் ஒருங்கிசையல், ஒருங்கமை சமன்பாடுகள், வலையுரு வரையமும் மீடிறன் பல்கோணியும், இருசமபக்க முக்கோணிகள், சதவீதம், இருபடிக் கோவைகளின் காரணிகள், இணைகரங்கள், எண் அடிகள், வரைபுகள், முக்கோணிகளின் சமமின்மை, பரப்பளவு, அட்சரகணிதக் கோவைகளின் பொ.ம.சி., வெட்டுத்துண்டுத் தேற்றங்கள், வட்டி, மடக்கைகள், இணைகரங்களினதும் முக்கோணிகளினதும் பரப்பளவுகள், அட்சரகணிதப் பின்னங்கள், நிகழ்தகவு, வட்டம் ஒன்றின் நாண்கள், பங்குடைமை வியாபாரப் பங்குகள், இருபடிச் சமன்பாடுகளைத் தீர்த்தல், வட்டம் ஒன்றின் கோணங்கள், இடை, கூட்டல் தொடர், கேத்திரகணித அமைப்புகள், விகிதமும் விகித சமனும், கனவளவு,

திரிகோணகணித விகிதங்கள், இருபடிச் சமன்பாடுகள், அளவிடையை ஆக்குதல் ஆகிய பாடங்கள் இந்நூலில் விளக்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 25362).

### 12590

**கேத்திர கணிதம்: முதற் புத்தகம்.** ச.சிதம்பரப்பிள்ளை. சுன்னாகம்: வட-இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகம், 2வது பதிப்பு, 1954, 1வது பதிப்பு, 1953. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).

viii, 252 பக்கம், வரைபடங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18.5x12.5 சமீ.

ஆதார கேத்திர கணிதம், ஆரம்ப கேத்திர கணிதம், முறையான கேத்திர கணிதம் என மூன்று பாகங்களில் விளக்கப்பட்டிருக்கும் கேத்திரகணித பாடநூல் இதுவாகும். கேத்திர கணித விடயங்களை செவ்வனே விளங்கிக்கொள்வதற்கு அடிப்படையான கோணங்களின் தன்மை, சமாந்தர வரைகள், செங்குத்து வரைகள், படுக்கை முதலான அடிப்படைக் கருத்துக்களை இப்பிரிவு வழங்குகின்றது. இலகுவான கேத்திரகணித உண்மைகள் சில செய்கை முறையாக இப்பிரிவில் அறிமுகப்படுத்தப்படுகின்றன. முக்கோணிகளின் சமத்துவம், துவிசமபுய முக்கோணிகள், போன்றவற்றின் பண்புகள் என்பன உதாரணத்துக்குச் சிலவாகும். கேத்திர கணித ரீதியில் விஷயங்களை முறையாக ஆராய்வது மூன்றாம் பாகமாகும். சூத்திரங்களும், உள்ளுறைகளும், சூத்திரங்களைத் தழுவிய ஆக்கங்களும் இப்பாகத்தில் படிமுறையாக விளக்கப்படுத்தப்பட்டுள்ளன. நூலில் ஆங்காங்கே போதியளவு அப்பியாசங்கள் பயிற்சிக்காகக் கொடுக்கப்பட்டுள்ளன. விசேஷமாக மூன்றாம் பாகத்திலே வரும் அப்பியாசங்கள் கணித்தல், வரைதல், நிறுவுதல் எனப் பிரிக்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 14077).

## 519 பிரயோக கணிதம்

### 12591

**க.பொ.த.உயர்தர வகுப்புக்கான பிரயோக கணிதம்: இயக்கவியல் பயிற்சிகள்: பகுதி 1.** கார்த்திகேசு கணேசலிங்கம். கொழும்பு 6: சாயி எடியுகேஷனல் பப்ளிக்கேஷன்ஸ், 155, கனால் வீதி, வெள்ளவத்தை, 1வது பதிப்பு, மார்ச் 1998. (சென்னை 17: மாணவர் நகலகம்).

iv, 160 பக்கம், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.

ஆசிரியரின் பிரயோக கணிதம் நிலையியல் பயிற்சிகளைத் தொடர்ந்து இரு பகுதிகளாக வெளிவரும் இயக்கவியல் பயிற்சிகளின் முதற் பகுதியே இந் நூலாகும். ஒவ்வொரு அலகிலும் பயிற்சிகள் எளிமையானதிலிருந்து தொடங்கி படிப்படியாகச் சிக்கலான பயிற்சிகளாக விரிவடைகின்றன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 32908).

## 520 வானியல் விஞ்ஞானம்

### 12592

**ஆரம்ப விண்ணியல்.** இ.செந்தில்நாதன். சென்னை: நீலமலர் பதிப்பகம், 1வது பதிப்பு, டிசம்பர் 1986. (சென்னை 86: சாலை அச்சகம், இல. 11, திருவீதியான் தெரு, கோபாலபுரம்).

(8), 9-100 பக்கம், விளக்கப்படங்கள், அட்டவணைகள், விலை: இந்திய ரூபா 10.00, அளவு: 18x12.5 சமீ.

யாழ்ப்பாண வானியல் கழகத் தலைவராக இருந்தவர் வழக்கறிஞரான இந் நூலாசிரியர். பூமி, சந்திரன், சூரியன், கிரகணங்கள், சூரிய குடும்பம், புதன், சுக்கிரன், செவ்வாய், வியாழன், சனி, யூரேனஸ், நெப்ரியூன், புளூட்டோ, விண்துகள்கள், வால்வெள்ளிகள், விண்கற்கள், நட்சத்திரங்கள், உடுக்கூட்டங்கள், பால்வழி, நெபுலங்கள், கிரகங்களின் உற்பத்தி என்பன பற்றிய பல்வேறு தகவல் களை இலகு நடையில் இந்நூலில் வழங்கியுள்ளார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 19998).

## 530 பௌதிகம்

### 12593

**சடமும் கதிர்ப்பும்.** ஈ.ஜே.சற்குணராஜா. திருக்கோணமலை: கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு, வடக்கு-கிழக்கு மாகாணம், 1வது பதிப்பு, ஜுலை 1997. (திருக்கோணமலை: பதிப்பகத் திணைக்களம், வடக்கு-கிழக்கு மாகாணம்).

(12) 92 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 80., அளவு: 21x17 சமீ.

சடமும் கதிர்ப்பும் பற்றிய முக்கிய பௌதிகவியல் எண்ணக்கருக்களை கற்க விரும்புவோருக்கான நூல். க.பொ.த. உயர்தர பாடத்திட்டத்தின்அடிப்படையில் எழுதப்பட்டிருப்பதுடன் நவீன பௌதீகத்தினதும் கருப் பௌதிகத்தினதும் அடிப்படை விடயங்களையும் விபரிக்கின்றது. சடமும் கதிர்ப்பும் சம்பந்தமான அடிப்படை எண்ணக்கருக்கள் மற்றும் கொள்கைகள் பற்றிய தர்க்கரீதியானதும் தெளிவானதுமான அறிமுகத்தை வழங்குகின்றது. வெப்பக் கதிர்ப்பு, ஒளி மின் விளைவு, சடத்தின் அலை இயல்பு, எக்ஸ் கதிர்கள், கதிர் தொழிற்பாடு ஆகிய ஐந்து பிரதான இயல்களில் சடமும் கதிர்ப்பும் பற்றிய இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 37483).

### 12594

**செய்முறைப் பௌதிகவியல் நூல்.** H.S.அலன், H.மூயர் (ஆங்கில மூலம்), க.ச.அருள்நந்தி (தமிழாக்கம்). கொழும்பு 5: வெளியீட்டுப் பிரிவு, அரச கரும மொழித் திணைக்களம், த.பெ.எண் 520, 1வது பதிப்பு, 1963. (கொழும்பு: இலங்கை அரசாங்க அச்சகம்).

xxii, *861 பக்கம், விளக்கப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5*x*13.5 சமீ.*

H.S.Allen, H.Moore *ஆகியோரால் எழுதப்பெற்று லண்டன்* Mac Millan *நிறுவனத்தால் வெளியிடப்பெற்ற* A Text Book of Practical Physics *என்ற நூலின் தமிழாக்கம் இது. சடப்பொருளின் இயல்புகள், ஒலியியல், ஒளியியல், வெப்பம், காந்தம், மின்னியல் ஆகிய ஆறு பாகங்களாக அமைந்துள்ள நூல். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 31500).*

## 535 ஒளியியல் பௌதிகம்

### 12595

**உயர்தர மாணவர் பௌதிகம்: ஒளியியல்.***அ.கருணாகரர். யாழ்ப்பாணம்: சிறீ சுப்பிரமணிய பொத்தகக் களஞ்சியம், 235, காங்கேசன்துறைச் சாலை, 2வது பதிப்பு, 1994. (யாழ்ப்பாணம்: சிறீ சுப்பிரமணிய அச்சகம், 63,* B.A. *தம்பி ஒழுங்கை).*

*(4), 224 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 100., அளவு: 21*x*14 சமீ.*

*இந்நூல் புதிய பாடத்திட்டத்துக்கு அமைய எழுதப்பட்ட பௌதிகவியல் பாடநெறி யின் ஒளியியல் பகுதியைக் கொண்டதாகும். ஒன்பது அத்தியாயங்களில் எழுதப்பட்டுள்ள இந்நூல் ஒளியும் நேர்கோட்டுச் செல்லுகையும், தளமேற்பரப்புக் களில் தெறிப்பு, கோளவாடிகளில் தெறிப்பு, தளமேற்பரப்புகளில் ஒளி முறிவு, அரியங்களினூடு முறிவு, நிறப்பிரிக்கையும் திருசியங்களும், வளைந்த கோள மேற்பரப்பில் முறிவு, கமரா, கண், கண்ணின் குறைபாடுகள், ஒளியியற் கருவிகள் ஆகிய அத்தியாயத் தலைப்புக்களில் ஒளியியல் பாடவிளக்கங்களை உள்ளடக்கி யுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 40394).*

## 536 வெப்பவியல் பௌதிகம்

### 12596

**உயர்தர மாணவர் பௌதிகம்: வெப்பவியல்.***அ.கருணாகரர் (மூலம்), க.புவனபூஷ ணம் (மீள்பார்வை). யாழ்ப்பாணம்: மாசில் பதிப்பகம், ஈச்சமோட்டை, 2வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (யாழ்ப்பாணம்: நாமகள் அச்சகம், 319, காங்கேசன்துறை வீதி).*

iv, *(4), 216 பக்கம், விளக்கப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21*x*14 சமீ.*

*க.பொ.த.ப. (உயர்தர) வகுப்புக்குரிய வெப்பவியல் (அனைத்துலக* SI *அலகு முறையில்) பகுதியே இந்நூலாகும். இதன் முதற் பதிப்பு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆசிரியர் அ.கருணாகரர் அவர்களால் எழுதி வெளியிடப்பட்டி ருந்த நிலையில் இவ்விரண்டாவது பதிப்பு, அதே கல்லூரியின் ஆசிரியர் க. புவனபூஷணம் அவர்களால் மீள்பார்வையிடப்பெற்று அனைத்துலக முறை*

பற்றிய புதிய அதிகாரம், அனைத்துலக முறையில் வரையறைகளும் பௌதிக மாறிலிகளும், அனைத்துலக முறையில் பின்னிணைப்பாகப் போதிய பலவினப் பயிற்சிகள் ஆகிய மூன்றும் சேர்க்கப்பெற்று வெளியிடப்பட்டுள்ளது. பத்து இயல்கள் கொண்ட இந்நூலின் அத்தியாயங்கள் வெப்பமானி இயல், திண்மங்களின் விரிவு, திரவங்களின் விரிவு, வாயுக்களின் விரிவு, கலோரியளவியல், நிலை மாற்றம் -ஈரப்பதன், வெப்பத்தின் பொறிமுறைச் சமவலு, சமவெப்பமாற்றம் வெப்பஞ்செல்லா நிலைமாற்றம், வெப்பக்கடத்தல்-மேற்காவுகை, கதிர்வீசல் ஆகிய தலைப்புகளில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 38537).

## 537 மின்னியல், இலத்திரனியல் பௌதிகம்

### 12597

**உயர்தர மாணவர் பௌதிகம்: மின்னியல்.**அ.கருணாகரர். யாழ்ப்பாணம்: மாசில் பதிப்பகம், வை.எம்.சீ.ஏ. கட்டிடம், மேல்மாடி, ஈச்சமோட்டை, 2வது பதிப்பு, 1979. (யாழ்ப்பாணம்: நாமகள் அச்சகம், 319, காங்கேசன்துறை வீதி).

(4), 268 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 70., அளவு: 20.5x14 சமீ.

இந்நூல் புதிய பாடத்திட்டத்துக்கு அமைய எழுதப்பட்ட பௌதிகவியல் பாடநெறியின் மின்னியல் பகுதியைக் கொண்டதாகும். மின்னியல் கணியங்கள் யாவும் SI அலகுக்கேற்ப வரையறுக்கப்பட்டுள்ளன. ஒன்பது இயல்களாக வகுக்கப்பட்டு அவற்றில் நிலை மின்னியல் அடிப்படைத் தோற்றப்பாடுகள், நேர்-எதிர் ஏற்றங்கள், அழுத்தம் கொள்ளளவு ஒடுக்கிகள், ஓட்ட மின்னியல், கலங்கள் மின்னோட்டத்தினால் ஏற்படும் காந்தவிளைவு, கல்வனோமானி, மின் இயக்கவியல், கடத்தியில் தொழிற்படும் விசை, இயங்குசுருள் கல்வனோமானி, புவிக்காந்தவியல், காந்தமானிகள், மின் கணியம், ஓமின் விதி, தடை-தற்றடை, கெச்சோவின் விதி, உவீத்தனின் பாலம், அழுத்தமானி, மின்னோட்டத்தினால் ஏற்படும் இரசாயன விளைவு பரடேயின் மின் பகுப்பு விதிகளும் பரிசோதனைகளும், மின்னோட்டத்தினால் ஏற்படும் வெப்பவிளைவு, யூலின் விதிகளும் பரிசோதனைகளும், மின்காந்தத் தூண்டல், தூண்டற் சுருள் மாற்றி தைனமோ, நேரோட்ட மோட்டர், வெப்ப மின்னோட்டம் ஆகிய மின்னியல்சார் பாடங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 40395).

### 12598

**நவீன உயர்தர இலகு மாணவர் பௌதிகம்: அலகு 6: ஓட்ட மின்னியல், வெப்ப விளைவு, மின்காந்தத் தூண்டல்.**அ.கருணாகரன். கொழும்பு 15: அ.கருணாகரன், அபிராமி பதிப்பகம், இல. 68A, எலிஹவுஸ் வீதி, திருத்திய 2வது பதிப்பு, பெப்ரவரி 2000, 1வது பதிப்பு விபரம் தரப்படவில்லை. (கொழும்பு 13: யுனைட்டட் மேர்ச்சன்ட்ஸ் லிமிடெட், 529/19,புளுமெண்டால் ரோட்).

(6), 111 பக்கம், விலை: ரூபா 160., அளவு: 25x18.5 சமீ.

*க.பொ.த. உயர்தர வகுப்புகளுக்குரிய பௌதிகவியல் நூல் தொடரில் வெளிவந்துள்ள ஆறாவது அலகில் ஓட்ட மின்னியல், தடை, தடைத்திறன், ஓமின் விதி, ஓட்டத்தின் வெப்ப விளைவு, மின் முதல்கள், மின் இயக்கவிசை ஓட்டம், கேச்சொவின் விதிகள், மின்காந்தத் தூண்டல் ஆகிய பாடங்களும் பல்தேர்வு வினா-விடைகளும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 30135).*

### 12599

**மார்க்கோணியின் மின்சாதன பாதுகாப்புக் கையேடு.** *மார்க்கோணி தொழில்நுட்ப நிறுவனம். கொழும்பு 6: மார்க்கோணி தொழில்நுட்ப நிறுவனம், இல. 410, 2ஆம் மாடி, காலி வீதி, வெள்ளவத்தை, 1வது பதிப்பு, ஜுலை 2005. (கொழும்பு 6: எஸ். பிரின்ட்ஸ்).*

x, *134 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 230., அளவு: 22*x*15 சமீ.*, ISBN: *955-1287-00-2.*

*வயர்லஸ் தொழில்நுட்பத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட பல்வேறு உபகரணங்களின் பயன்பாடு, பராமரிப்பு, பாதுகாப்பு தொடர்பான தொழில்நுட்ப அடிப்படை அறிவை வழங்கும் வகையில் போதிய விளக்கப்படங்களுடன் இக்கையேடு தயாரிக்கப்பட்டுள்ளது. உள்ளடக்கப்பட்டுள்ள மின் சாதனங்கள், பாவனையாளர்களுக்கான மின் அலகுகள், ஸ்ரீரியோ மற்றும்* DTS *என்றால் என்ன?, மின்சாதனங்களுக்குரிய இணைக்கும் பகுதிகள், மின்னியல் இலத்திரனியல் உதவிச் சாதனங்கள், பாவனையாளர்களுக்குரிய அடிப்படை மின்னியல் அறிவு, மின் தாக்கப்பட்ட ஒருவருக்கான முதல் உதவி, மின் விரயத்தினைக் குறைப்பதற்கான வழிகள், மின்னியல் அருஞ்சொற்களின் களஞ்சியம், பாவனையாளருக்குரிய மின் குறியீடுகள், கணனி மாணவர்களுக்கான அருஞ்சொற்கள், மின்சாதனங்களைத் திருத்துவதில் சிக்கல்கள், கோகுலம் சிறுவர்கள், மார்க்கோணியின் தொழில் நடவடிக்கைகள் ஆகிய 14 அத்தியாயத் தலைப்புகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 36803).*

**மேலும் பார்க்க: 12600**

## 538 காந்தவியல் பௌதிகம்

### 12600

**உயர்தர மாணவர் பௌதிகம்: காந்தவியலும் மின்னியலும்.** *அ.கருணாகரர். யாழ்ப்பாணம்: அ.கருணாகரர், இல.8, வைமன் வீதி, 1வது பதிப்பு, கார்த்திகை 1971. (யாழ்ப்பாணம்: த.வேலாயுதபிள்ளை, நாமகள் அச்சகம், 319, காங்கேசன்துறை வீதி).*

*(4), 392 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 8.90, அளவு: 20.5*x*13.5 சமீ.*

11 இயல்களைக் கொண்டமைந்த இந்நூலின் முதல் மூன்று இயல்களும் காந்தவியல் தொடர்பானதாகவும், இயல் 4, 5 ஆகியவை நிலைமின்னியல் தொடர்பானதாகவும், இயல் 6 மின்னியக்கவியல் தொடர்பானதாகவும், இயல் 7முதல் 11 வரை ஓட்டமின்னியல் தொடர்பானதாகவும் வகுக்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 2294).

## 540 இரசாயனம்

### 12601

**ஜீ.சீ.ஈ. உயர்தரம் 10: 1998-2007 பரீட்சை வினாக்களும் விடைகளும்: இரசாயனவியல் 1&2**. அஸ்ரன் பதிப்பக ஆசிரியர் குழு. கொழும்பு 6: அஸ்ரன் பதிப்பகம், 92, மனிங் பிளேஸ், 1வது பதிப்பு, 2008. (கொழும்பு 6: அஸ்ரன் பதிப்பகம், 92, மனிங் பிளேஸ்).

(320) பக்கம், விலை: ரூபா 280., அளவு: 28x21 சமீ.

க.பொ.த. உயர்தர இரசாயனவியல் பரீட்சையின் பத்தாண்டு கேள்விகளையும் அவற்றுக்கான பதில்களையும் மாணவர் பயிற்சிக்குரிய இந்நூலில் வழங்கியுள்ளனர்.

**மேலும் பார்க்க: 13A26**

## 541.3 பௌதிக இரசாயனம்

### 12602

**பௌதிக இரசாயனம்: பகுதி 1: வாயுக்களின் நடத்தைக் கோலங்கள்.** தம்பையா சத்தீஸ்வரன். யாழ்ப்பாணம்: திருமதி சுபாசினி சத்தீஸ்வரன், 108, பிறவுன் வீதி, 1வது பதிப்பு, 1989. (யாழ்ப்பாணம்: சுவர்ணா பிரிண்டிங் வேர்க்ஸ், 295/7, காங்கேசன்துறை வீதி).

(4), 74 பக்கம், விலை: ரூபா 60., அளவு: 21x14 சமீ.

இந்நூல் சடப்பொருள்களின் இயக்கவியல் பற்றிய அறிமுகம், வாயு விதிகள், வாயுவிதிகளை இணைத்தலும் இலட்சிய வாயுச் சமன்பாடும் வாயு மாறிலி R-ஐக் கணித்தலும், இலட்சிய வாயுக்களும் உண்மை வாயுக்களும், வாயுச்சமன்பாட்டில் இருந்து விலகல், இலட்சிய வாயுச் சமன்பாட்டின் பிரயோகங்கள், இலட்சிய வாயுச் சமன்பாட்டில் கணிப்புகள், வாயுக்கலவைகள் பகுதி அமுக்கம், வாயுக்கள் பற்றிய இயக்கவியல் மூலக்கூற்றுக் கொள்கை, இயக்கவியல் வாயுச் சமன்பாடு, வாயுக்களைத் திரவமாக்கல், வெப்பக்கூட்டப் பிரிகை, சுயமதிப்பீட்டு வினாக்களின் விடைகள் ஆகிய 13 அத்தியாயங்களில் கட்டமைக்கப்பட்டுள்ளது. நூலாசிரியர் காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையில் இரசாயினியாகப் பணியாற்றியவர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 33096).

## 550 புவியியல் விஞ்ஞானம்

### 12603

**பௌதிகப் புவியியற் றத்துவங்கள்.** F.J.மங்கவுசு (ஆங்கில மூலம்), W.L.ஜெயசிங்கம், V.சுப்பிரமணியம் (தமிழாக்கம்). கொழும்பு 7: வெளியீட்டுப் பிரிவு, அரச கரும மொழித் திணைக்களம், 1வது பதிப்பு, 1962. (கொழும்பு: இலங்கை அரசாங்க அச்சகம்).

xxi, 610 பக்கம், விளக்கப்படங்கள், வரைபடங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14 சமீ.

F.J.Monkhouse அவர்களால் எழுதப்பெற்று லண்டன் University of London Press நிறுவனத்தால் வெளியிடப்பெற்ற The Principles of Physical Geography என்ற நூலின் தமிழாக்கம் இது. புவியோட்டின் பொருள், புவியின் அமைப்பு, எரிமலையியல், புவிமேற்பரப்பின் சிற்பத் தொழிற்பாடு, தரைக்கீழ் நீர், ஆறுகளும் ஆற்றுத் தொகுதிகளும், பனிக்கட்டியாற்றுத் தாக்கம், காற்றின் செயலும் பாலை நிலங்களும், கடற்கரையோரங்கள், ஏரிகள், சமுத்திரங்களினதும் கடல்களினதும் உருவவமைப்பு, சமுத்திர நீர், காலநிலை: பொது வியல்புகள், வெப்பநிலை, அமுக்கமும் காற்றுக் களும், ஈரப்பதனும் படிவு வீழ்ச்சியும், காலநிலை மாதிரிகள், மண், தாவரம், பிரித்தானியத் தீவுகளின் தாவர வகைகள், முடிவுரை ஆகிய பாடத்தலைப்புகளின்கீழ் உலகின் பௌதிக புவியியல் தத்துவங்கள் விளக்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 24698).

## 551.46 சமுத்திரவியல்

### 12604

**சமுத்திரவியல்.** ஏ.எஸ்.ஆனந்தன். யாழ்ப்பாணம்: உயர்கல்விச் சேவை நிலையம், 12/1, வடக்கு புகையிரத வீதி, 2வது பதிப்பு, 2003, 1வது பதிப்பு, 2001. (யாழ்ப்பாணம்: உயர்கல்விச் சேவை நிலையம்).

vi, 151 பக்கம், விளக்கப்படங்கள், அட்டவணைகள், விலை: ரூபா 190., அளவு: 20.5x14.5 சமீ.

இந்நூல் அறிவியல்முறையில் சமுத்திரவியலை பல்வேறு கூறுகளாகவும் அணுகித் தெளிந்த அறிவைப்பெற வழிகாட்டுகின்றது. இந்நூலின் முதற்பகுதி அறிமுகம், கடலடி நிலவுருவவியல், நீரின் இயல்புகள், கடலின் அசைவுகள், சமுத்திரச் சூழல் தொகுதிகள், சமுத்திரங்களின் உணவுத் தொடர்கள், சமுத்திரச் சூழல் மாசடைதலும் விளைவுகளும் ஆகிய ஏழு அத்தியாயங்களின் வழியாக சமுத்திரவியல் பற்றிய பரந்து விரிந்த அறிவையும், இரண்டாம் பகுதி, அறிமுகம், துறைரீதியான உற்பத்தி, தலா நுகர்வும் ஏற்றுமதி இறக்குமதியும், மீன்பிடி உபகரணங்களின் வகுப்பாக்கம் ஆகிய நான்கு அத்தியாயங்களின் வழியாக மீன்பிடித் தொழிலை விருத்தி செய்யும் வழிகளை வழங்குகின்றது. பின்னிணைப்பு களாக மீன்பிடி அபிவிருத்தி நிறுவனங்களும் பணிகளும், உசாத்துணை நூல்கள்,

இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் முக்கிய மீன் இனங்கள் ஆகியவற்றையும் ஆசிரியர் தந்துள்ளார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 36007).

## 551.47 சுனாமி

### 12605

**சுனாமி ஒரு மீள்பார்வை.** வெல்லவூர்க் கோபால் (இயற்பெயர்: சீ. கோபாலசிங்கம்). மட்டக்களப்பு: சீ.கோபாலசிங்கம், விபுலம் வெளியீடு, 143/23, எல்லை வீதி, 1வது பதிப்பு, பெப்ரவரி 2005. (மட்டக்களப்பு: ஆதவன் அச்சகம், அரசடி).

(3), 41 பக்கம், விளக்கப்படங்கள், வரைபடங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 19x13 சமீ.

2004 டிசம்பர் 26இல் நிகழ்ந்த இயற்கை அநர்த்தமான சுனாமிப் பேரழிவு தொடர்பான மீள்பார்வையே இந்நூலாகும். சுனாமி ஓர் மீள் பார்வை, கடற்கோள்கள், புவி நடுக்கம் (நில அதிர்வு), உருவாக்கத் தன்மை, அழிவுத் தன்மை, மோதுகைத் தன்மை, புவி நடுக்க காரணிகள், புவிநடுக்க வலயங்கள், புவிநடுக்க அனர்த்தங்கள், இலங்கைக்கான புவித்தகடு, சுனாமி, சுனாமியின் உருவாக்கம், பூமியதிர்ச்சியினால் ஏற்படும் சுனாமி, நிலச்சரிவுகள் எரிமலை வெடிப்புக்கள் விண்வெளிப் பொருட்களால் உருவாகும் சுனாமி, சுனாமியின் கரையை நோக்கிய பயணம், வரலாற்றில் குறிப்பிடப்படும் சுனாமிகள், நிலநடுக்க உணர் கருவிகளும் ரீச்டர் அளவுத் திட்டம், சுனாமி 26.12.2004, சுனாமி அலை வந்து சேர எடுத்துக் கொண்ட நேரம், நிலநடுக்கம் ஏற்பட்ட பகுதி, சுனாமியால் புவி அமைப்பில் ஏற்பட்ட மாற்றங்கள், சுனாமி ஆபத்தை தடுக்க முடியுமா?, மீளாய்வு, எடுக்கப்படவேண்டிய உடனடி நடவடிக்கைகள், சான்றுகள் ஆகிய தலைப்புகளின்கீழ் சுனாமி பற்றிய பல்வேறு தகவல்கள் இவ்வறிமுக நூலில் பதிவுசெய்யப்பட்டுள்ளன. இவ்விலவச வெளியீடு மட்டக்களப்பு விபுலம் வெளியீட்டு வரிசையில் 12ஆவது நூலாகும். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 35905. நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தின் சேர்க்கை இலக்கம் 004396).

## 551.6 காலநிலையியல்

### 12606

**காலநிலையியல்: வளிமண்டல இயக்கமும் பிரதேச காலநிலையும்.** எஸ்.அன்ரனி நோர்பேட். கொழும்பு 6: தர்ஷனா வெளியீடு, 58-1/3, 37ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு மார்ச் 1997. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளூமெண்டால் வீதி).

(12), 176 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 175., அளவு: 21.5x14 சமீ., ISBN: 955-96132-2-7.

வளிமண்டல இயக்கம் (வளிமண்டல இயக்கம், காற்றுக்களும் அமுக்கச் சாய்வுகளும், ஒருங்குதலும் விரிதலும், புவியின் மேற்பரப்புக் காற்றோட்டங்கள்,

பூகோளத்தின் அமுக்கப்பாங்குகள், ஓரிடக் காற்றுக்கள், இடை அயன ஒருங்கல் வலயம், மொன்சூன் சுற்றோட்டம், வளித்திணிவுகள், பிரிதளங்கள்), அயனப் பிரதேச வானிலை ஒழுங்குகள் (அயனப் பிரதேச வானிலை, அயனச் சுற்றோட்டங்களின் ஒழுங்கற்ற தன்மைகள், அயனக் குழப்பங்கள்), வளிமண்டலப் பொதுச் சுற்றோட்டம் பொதுச்சுற்றோட்டத்துக்கான காரணங்கள், வளிமண்டலப் பொதுச் சுற்றோட்ட மாதிரிகள், அலைக் கோட்பாட்டு அணுகுமுறை, பிரச்சினைகளும் எதிர்கால நிலைமைகளும்), காலநிலைப் பாகுபாடும் பிரதேசக் காலநிலைகளும் (அறிமுகம், கெப்பனின் காலநிலைப் பாகுபாட்டுத் திட்டம், தொண்வைற்றின் காலநிலைப் பாகுபாடுகள்), கெப்பனின் காலநிலைப் பிரிவுகள் (அயன்மழைக் காலநிலை, வரண்ட காலநிலைகள், சூடான வெப்ப மழைக் காலநிலைகள், குளிரான பனிக்காட்டுக் காலநிலைகள், முனைவுக் காலநிலைகள்) ஆகிய ஐந்து இயல்களில் காலநிலையியல் பற்றிய விரிவான விளக்கம் தரப்பட்டுள்ளது. (இந் நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 23277).

## 570 உயிரியல்

### 12607

**அடிப்படை உயிரியல்: க.பொ.த.உயர்தரம் உயிரியல் பாடத்திட்டம்.** வீ.ச.சிவகுமாரன். கொழும்பு 6: வேதா சிவகுமாரன், 6/1, டாக்டர் ஈ.ஏ.கூரே மாவத்தை, வெள்ளவத்தை, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2003. (கொழும்பு: கிரிப்ஸ்).

136 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 200., அளவு: 22x15 சமீ.

உயிர் அங்கிகளின் சிறப்பியல்புகள், கலக் கட்டமைப்பும் தொழிற்பாடுகளும், கல வட்டம், ஒடுக்கற்பிரிவு, உயிரிகளின் இரசாயன அடிப்படை, நியூக்கிளிக்கமிலங்கள், தாவர இழையங்கள், விலங்கு இழையங்கள், நொதியங்கள், கலச்சக்தி தொடர்பு ஆகிய பத்து இயல்களில் அடிப்படை உயிரியல் (Core Biology) என்ற பாடம் க.பொ.த. உயர்தர உயிரியல் பாடத்திட்டத்தின் முதலாவது அலகுக்கு ஏற்ப விளக்கப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 38924).

### 12608

**இயைபாக்கமும் ஒரு சீர்திட நிலையும்: உயிரியல் புதிய பாடத்திட்டம்.** வீ.ச.சிவகுமாரன். கொழும்பு 6: வேதா சிவகுமாரன், 6/1, டாக்டர் ஈ.ஏ.கூரே மாவத்தை, வெள்ளவத்தை, 1வது பதிப்பு, 2010. (கொழும்பு: கிரிப்ஸ்).

128 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 325., அளவு: 21.5x15 சமீ., ISBN: 978-955-1475-00-3.

இயைபாக்கமும் ஒரு சீர்திட நிலையும் (Coordination and Homeostasis) என்ற தலைப்பிலான இவ்வுயிரியல் நூல், இயைபாக்கம், விலங்குகளின் நரம்புத் தொகுதியின் ஒழுங்கமைப்பு, மனிதனின் நரம்புத் தொகுதி, மனித மூளையின் அமைப்பு, புலன் அங்கங்கள், கண் அமைப்பும் தொழிற்பாடும், செவி அமைப்பும்

தொழிற்பாடும், மனிதனின் அகஞ்சுரக்கும் தொகுதி, ஒருசீர்த்திடநிலை, மனிதனின் தோல் ஆகிய 10 அத்தியாயங்களைக் கொண்டுள்ளது. உயர்தர உயிரியல் புதிய பாடத்திட்டத்தின் ஏழாம் அலகின் அனைத்து தேர்ச்சி மட்டங்களுக்கும் அமைவாக இந்நூல் எழுதப்பட்டுள்ளது. இயைபாக்கத்தின் வகைகளும் அவற்றின் உடற்றொழிலியல் தன்மைகளும் தெளிவாக விபரிக்கப்பட்டுள்ளன. மொத்தக் கட்டமைப்புகளின் விபரிப்புகள், படங்கள் என்பன பரீட்சை நோக்கில் அமைக்கப் பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 49485).

## 12609

**இலங்கையின் பொதுப் பறவைகள்.** சரத் கொடகம (மூலம்), கணபதிப்பிள்ளை அசோகன் (தமிழாக்கம்). கொழும்பு 3: இலங்கை களப் பறவையியல் குழு, விலங்கியல் துறை, கொழும்புப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, 2012. (கொழும்பு: கருணாரத்ன அன் சன்ஸ்).

(8), 146 பக்கம், விளக்கப்படத் தகடுகள், விலை: ரூபா 441.00, அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-955-8576-29-8.

இலங்கையின் பொதுப்பறவைகளை அடையாளம் காண்பதற்கான கைந்நூல். உடலுருவ அமைப்பு, வால், கால்கள், அலகு, பருமன் ஆகியவற்றைக்கொண்டு பறவைகளை அடையாளம் காணுதல், சிறகுகள், களப்பண்புகள், நிறங்கள், பறவைகளின் குரலொலி மற்றும் பறவைப் பாடல், பறத்தல் ஆகியவை பற்றிய அறிதல்கள் ஆகியவற்றுடன் பறத்தலிலும் கூர்மையாக அவதானிக்கத்தக்க மடித்துப்பறத்தல் (Flapping), வட்டமிட்டுப் பறத்தல் (Hovering), மிதந்து பறத்தல் (Souring), வழுக்கிப் பறத்தல் (Gliding) ஆகிய வகைகள் பற்றிய அவதானிப்பு, உணவூட்டல், இடப்பெயர்ச்சி, இனப்பெருக்கம் ஆகிய பறவைகளின் நடத்தைக் கோலங்கள், பறவைகளின் வாழிடம், மற்றும் ஏனைய பண்புகள் பற்றி இந் நூல் விரிவாக விளக்கியிருக்கின்றது. மேலும் பறவைகளை அவதானிப்பதற்கு எவ்வாறு தங்களை ஆயத்தப்படுத்தவேண்டும், எவ்வாறு பறவைகளை முறையான வழியில் அவதானிப்பது, அவற்றை எப்படி அடையாளம் காண்பது e-Bird Sri Lanka என்னும் இணைய வசதியைப் பயன்படுத்துதல், பறவைகளின் பெயர்கள் என இன்னோரன்ன பறவைகள் அவதானிப்புக்கான நடைமுறைக்கு ஏற்ற ஆலோசனைகளையும் இந்நூல் வழங்குகின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 53474).

## 12610

**உயிர்ப்பல்வகைமை Biodiversity.** வீ.ச.சிவகுமாரன். கொழும்பு 6: வீ.ச.சிவகுமாரன், இந்த மகளிர் கல்லூரி, 1வது பதிப்பு, நவம்பர் 2001. (கொழும்பு: சு.கிருஷ்ணமூர்த்தி, கிரிப்ஸ்).

(6), 122 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 175., அளவு: 21.5x14.5 சமீ.

க.பொ.த. உயர்தரம் உயிரியல் பாடத்திட்டத்துக்கு அமைவாக எழுதப்பட்ட நூல். அங்கிகளின் பாகுபாடு, பாகுபாட்டின் பிரிவுகளை இனம்காணுதல் பற்றிய அறிவு என்பன உயிர்ப்பல்வகைமை பற்றிக் கற்றலின் அடிப்படையான பகுதியாகும். உயிர்ப்பல்வகைமைக் கூர்ப்பு என்னும் பகுதியில் தொல்லுயிரியலின் அடிப்படைகள் எடுத்துக்காட்டப் படுகின்றது. உயிர்ப்பல்வகைமையின் முக்கியத்துவங்களும் அதனைப் பேணும் நடவடிக்கைகளின் அடிப்படைகளும் இலகுவாக விளங்கக்கூடிய வாறு பொருத்தமான உதாரணங்களுடன் இந்நூலில் தரப்பட்டுள்ளது. இவற்றை உயிர்ப்பல்வகைமை, உயிரினப்பாகுபாடு, Moneraகளும் Protistaகளும், விலங்குகளின் பல்வகைமை, தாவரப் பல்வகைமை, உயிர்ப்பல்வகைமையின் கூர்ப்பு, உயிர்ப் பல்வகைமையின் முக்கியத்துவம், அழிவுச் செயற்பாடுகள், உயிர்ப்பல்வகைமைக் காப்பு, இலங்கையின் உயிர்ப்பல்வகைமை ஆகிய 10 அலகுகளில் இந்நூல் விரிவாக எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 38925).

### 12611

**உயிரியல்(பொதுத் தராதரப் பத்திர வகுப்புக்குரியது).** வீ.இராமகிருஷ்ணன், த. புத்திரசிங்கம். யாழ்ப்பாணம்: வீ.இராமகிருஷ்ணன், முன்னாள் ஆசிரியர், யாழ்ப்பாண இந்துக் கல்லூரி, இணை வெளியீடு, யாழ்ப்பாணம்: த.புத்திரசிங்கம், ஆசிரியர், வைத்தீஸ்வரா வித்தியாலயம், 3வது பதிப்பு, 1965, 1வது பதிப்பு, 1962, திருத்திய 2வது பதிப்பு, 1964. (யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா புத்தகசாலை, 234, காங்கேசன்துறை வீதி).

(12), 558 பக்கம், xiv, விளக்கப்படங்கள், விலை: ரூபா 12.80, அளவு: 21.5x14 சமீ.

இந்நூல் பாடநூல் பிரசுர ஆலோசனை சபையினரால் க.பொ.த.ப. வகுப்புகளுக்குப் பாடநூலாக அங்கீகரிக்கப்பட்டது. உயிர் (உயிரியலின் வியாபகம்), உணவு (உணவு வகைகள், இலையின் அமைப்பும் பச்சிலையமும்), சமிபாடு (முலையூட்டிகளின் சமிபாடு, கலத்தகச் சமிபாடு, உறிஞ்சல்), கொண்டுசெல்லல் (தாவரங்களில் கொண்டுசெல்லல், விலங்குகளில் கொண்டுசெல்லல்), சுவாசம் (வாயுமாற்றம், சத்திச் சேமிப்புகள்), கழிவு (முலையூட்டிகளின் கழிவு), அசைவு (விலங்குகளிலும் தாவரங்களிலும் அசைவு, அசைவின் இயைபாக்கம்), இனப்பெருக்கம் (விலங்குகளிலும் தாவரங்களிலும் இனப்பெருக்கம், புத்துயிர்ப்பு), விசேட வாழ்க்கை முறைகள், பக்ரீரியாக்கள், ஈட்டம், வியாபகம், சூழலியல், மண், கூர்ப்பு, பிறப்புரிமையியல், பாகுபாடும் பெயரீடும், பொருளாதார உயிரியல், பெயரகராதி ஆகிய பல்வேறு பாடத் தலைப்புகளின்கீழ் விரிவானமுறையில் உயிரியல் பாடம் விளக்கப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 24941).

**12612**

**உயிரியல் திரட்டு Block 2 (Unit 2) புதிய பாடத்திட்டம்.** கே.வி.குகாதரன், ஆர். நரேந்திரன். கொழும்பு 13: குளோபல் பப்ளிக்கேஷன்ஸ், 195, ஆதிருப்பள்ளித் தெரு (Wolfendhal Street), 1வது பதிப்பு, டிசம்பர் 2001. (Colombo 13: Global Printers, 195, Wolfendhal Street).

*(6), 329 பக்கம், விளக்கப்படங்கள், வரைபடங்கள், விலை: ரூபா 250., அளவு: 21x14 சமீ.*

*உயிரப் பல்வகைமை என்னும் பாடப்பரப்பு க.பொ.த. உயர்தர பாடத்திட்டத்தின்கீழ் உயிரியலின் அலகு 2 ஆக படிமுறை செய்யப்பட்ட புதிய வார்ப்பாகும். உயிரியலின் மிக முக்கிய இப்பாடப்பரப்பிலே முன்னைய தாவரவியலில் விலங்கியலில் காணப்பட்ட வெவ்வேறு பெரும் பிரிவுகள் ஒன்றாக்கப்பட்டுள்ளதுடன் உயிரின காப்பு, அழிவு பற்றியும் புதிய விடயதானங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. அவ்வகையில் இந்நூல் உயிர்ப்பல்வகைமை என்றால் என்ன?, பாகுபாடும் பெயரீடும், உயிர்ப்பல்வகைமை பற்றிக் கற்கவேண்டியதன் அவசியம், உயிர்ப்பல்வகைமை பரிமாணம் ஆகிய இயல்களில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 38923).*

## 580 தாவரவியல்

**மேலும் பார்க்க: 12640**

## 590 விலங்கியல்

**12613**

**தொழிற்படும் விலங்கு: க.பொ.த. உயர்தரம் உயிரியல் பாடத்திட்டம்.** வீ.ச.சிவகுமாரன். கொழும்பு 6: வேதா சிவகுமாரன், 6/1, Dr. E.A.கூரே மாவத்தை, வெள்ளவத்தை, 1வது பதிப்பு, 2003. (அச்சக விபரம் தரப்படவில்லை).

*152 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 200., அளவு: 21.5x15 சமீ.*

*மாணவர்களின் பரீட்சைத் தேவைகளைப் பூர்த்திசெய்யும் வகையில் பத்து அலகுகளில் எழுதப்பட்டுள்ள இந்நூலில் முறையே சுவாசக் கட்டமைப்புகள், விலங்குகளில் போசணை, விலங்குகளில் கொண்டுசெல்லுதல், நைதரசன் கழிவுகளின் வெளியேற்றம், ஒருசீர்த்திடநிலை, நரம்பு இயைபாக்கம், இரசாயன இயைபாக்கம், புலன் அங்கங்கள், உடலைத் தாங்கும் முறையும் அசைவும், இனப்பெருக்கம் ஆகிய பாடப் பரப்புகள் தனித்தனி இயல்களில் விளக்கப்படு கின்றன.(இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 30113).*

## 12614

**புதிய க.பொ.த. உயர்தர விலங்கியல் பகுதி III: ஒப்பீட்டு உடலமைப்பியலும் உடற்றொழிலியலும்: கரப்பான்-தேரை-மனிதன்.** எஸ்.செல்வநாயகம். யாழ்ப்பாணம்: ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை, 235, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, மாசி 1990. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சுப்பிரமணிய அச்சகம், 63, B.A. தம்பி வீதி).

(4), 81 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 50., அளவு: 24x18.5 சமீ.

கல்விப் பொதுத் தராதர உயர்தர விலங்கியல் பாடத்திட்டத்திற்கமைவாக எழுதப் பட்டுள்ள இந்நூலில், கரப்பான்-தேரை-மனிதன் ஆகிய மூன்று உயிரினங்களின் ஒப்பீட்டு உடலமைப்பியலும் உடற்றொழிலியலும் பற்றிப் பொதுவாகவும், இவ்வுயிரினங்களின் குருதிச் சுற்றோட்டத்தொகுதி, நிணநீர்த் தொகுதி பற்றி ஆழமாகவும் ஒன்பது அலகுகளில் விளக்கமளிக்கப்பட்டுள்ளன. இவை அறிமுகம், சுற்றோட்டத்தொகுதியின் அவசியமும் அதன் கூறுகளும், சுற்றோட்டத்தொகுதியின் கூறுகள் (தொடர்ச்சி), கரப்பானின் சுற்றோட்டத்தொகுதி, முள்ளந்தண்டுள்ள விலங்குகளின் குருதிச் சுற்றோட்டத் தொகுதி, நாடித் தொகுதி, நாளத் தொகுதி, நிணநீர்த் தொகுதி, மனிதனின் முதிர் மூலவுருச் சுற்றோட்டம் ஆகிய அத்தியாயத் தலைப்புகளில் விளக்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 35398).

## 12615

**புதிய க.பொ.த. உயர்தர விலங்கியல் பகுதி IV: ஒப்பீட்டு உடலமைப்பியலும் உடற்றொழிலியலும்: கரப்பான்-தேரை-மனிதன்.** எஸ்.செல்வநாயகம். யாழ்ப்பாணம்: ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை, 235, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, மாசி 1990. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சுப்பிரமணிய அச்சகம், 63, B.A. தம்பி வீதி).

(4), 119 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 50., அளவு: 24.5x19 சமீ.

கல்விப் பொதுத் தராதர உயர்தர விலங்கியல் பாடத்திட்டத்திற்கமைவாக எழுதப்பட்டுள்ள இந்நூலில், கரப்பான்-தேரை-மனிதன் ஆகிய மூன்று உயிரினங்களின் ஒப்பீட்டு உடலமைப்பியலும் உடற்றொழிலியலும் பற்றிப் பொதுவாகவும், இவ்வுயிரினங்களின் சுவாசத் தொகுதி, நரம்புத் தொகுதி பற்றி ஆழமாகவும் பன்னிரு அலகுகளில் விளக்கமளிக்கப்பட்டுள்ளன. பகுதி-1இல் சுவாசத்தொகுதி பற்றிய நான்கு அலகுகள், அறிமுகம், சுவாச மேற்பரப்புகளின் வகைகள், தரைவாழ் விலங்குகளில் வாயுப் பரிமாற்றம் நடைபெறும் முறைகள், சுவாச உடற்றொழிலியல் ஆகிய தலைப்புகளின்கீழ் தரப்பட்டுள்ளன. பகுதி-2இல் நரம்பு இயைபாக்கம், நரம்புத் தொகுதி பற்றிய எட்டு அலகுகள் உள்ளன. இவை அறிமுகம், தாழ்ந்த விலங்ககளின் நரம்புத் தொகுதி, கரப்பானின் நரம்புத் தொகுதி, முள்ளந்தண்டுள்ள விலங்குகளின் நரம்புத் தொகுதி, தேரையின் மூளை, மனிதனின் மூளை, முண்ணாண், சுற்றயல் நரம்புத் தொகுதி ஆகிய தலைப்புகளின்கீழ் விளக்கப்பட்டுள்ளன. இறுதியாக மைய நரம்புத் தொகுதி-அடிப்படைப் பாங்கு பற்றிய ஒப்பீடும் இடம்பெற்றுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 35399).

# 600 தொழில்நுட்பம், பிரயோக விஞ்ஞானம்

## 601 தொழில்நுட்பம்

### 12616

**விஞ்ஞானமும் தொழில்நுட்பவியலும்: க.பொ.த. சாதாரண தர மற்றும் தரம் 10 மாணவர்களுக்கு உரியது.** த.பரமேஸ்வரன். கொழும்பு 6: திருமதி நிஷாந்தினி பரமேஸ்வரன், யுப்பிட்டர் பதிப்பகம், 17, சாளிமென்ட் ரோட், வெள்ளவத்தை, 1வது பதிப்பு, நவம்பர் 2001. (கொழும்பு 12: லங்கா புத்தகசாலை, F.L.1/14, டயஸ் பிளேஸ், குணசிங்கபுர).

79 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 21.5x14.5 சமீ.

கொழும்பு வெஸ்லிக் கல்லூரியின் ஆசிரியரும் குட்டி மாஸ்டர் என அறியப்பட்ட வருமான த.பரமேஸ்வரன் அவர்கள் எழுதிய நூல் இதுவாகும். அளக்கும் கருவிகள், அம்புக்குறிப் படங்கள், உங்களுக்குத் தெரியமா?, வரைவிலக்கணங்கள், சமன்பாடுகள், சர்வதேச அலகுகள், நோய்கள், அட்டவணைத் தரவுகள், வரைபுகள், விதிகள், பகுதிகளின் தொழில்கள், சுருக்கக் குறிப்புகள், விஞ்ஞானிகளும் கண்டுபிடிப்புகளும், மூலகச் சக்கரங்கள், இரசாயனச் சமன்பாடுகள், வேறுபாடுகள், ஆகிய அத்தியாயங்களினூடாக அடிப்படை எண்ணக்கருக்களை முற்றிலும் உள்ளடக்கியதாக இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது.

## 612 உடற்கூற்றுத் தொழிலியல்

### 12617

**பருவமானவர்கள்.** பெக்கி மோகன் (மூலம்). க.நடனசபாபதி (தமிழாக்கம்).

கொழும்பு 11: தேசிய கலை இலக்கியப் பேரவை, வசந்தம் புத்தக நிலையம், இல. S44, 3வது மாடி, CCSM Complex, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2002. (கொழும்பு 13: கௌரி அச்சகம், 207, ஆட்டுப்பட்டித் தெரு).

xvi, 128 பக்கம், விலை: ரூபா 175., அளவு: 21x14 சமீ., ISBN: 955-8637-10-6.

இந்நூல் பருவமடைதல் (Adolescence) தொடர்பான அனைத்து விடயங்களையும் பேசாதபோதிலும் பாலியலுறவு பற்றிய அடிப்படை உண்மைகளைப் பேசுகின்றது. பருவமானவர்கள், உடல் மாற்றங்கள் (பெண்கள்), உடல் மாற்றங்கள் (ஆண்கள்), பாலியலும் அது தொடர்பான பிறவும், அபாயங்களும் முரண்களும், பெற்றோருக்கு ஆகிய ஆறு இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. பருவமானவர்களும் அவர்களின் பெற்றோர்களும் மாத்திரமன்றி ஆசிரியர்களும், இளைய தலைமுறையினருடன் தொடர்புள்ள ஒவ்வொருவருக்கும் ஏற்ற விடயங்கள் இதில் அடங்கியுள்ளன. நூல் கேள்வி பதில் வடிவில் எழுதப்பட்டிருப்பதால் வாசகரோடு நேரடியாகப் பேசுவது போல் அமைகின்றது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 133409CC).

## 613 பொது உடல்நலவியல்

### 12618

**இயற்கையுடன் வாழுதல்: கட்டுரைகள்.** ஷியாமளா நவம். வல்வெட்டித்துறை: நான்காவது பரிமாணம், தெணியகம், பொலிகண்டி, 1வது பதிப்பு, 2017. (பருத்தித்துறை: பரணி அச்சகம், நெல்லியடி).

*120 பக்கம், அட்டவணைகள், விலை: ரூபா 300., அளவு: 18.5x13 சமீ.,* ISBN: *978-956-7295-00-8.*

*இன்றைய காலகட்டத்தில் உடல்நலத்துடன் நீண்டகாலம் வாழ்வதற்குத் தடையாய் உள்ள விடயங்கள் குறித்தும் அந்தத் தடைகளை எவ்வாறு உடைத்தெறிய முடியும் என்பது பற்றியும் வாசிப்போரை சிந்திக்கத் தூண்டும் வகையில் ஆசிரியர் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பு இது. உணவுகள், ஊட்டச்சத்துகள், மூலிகைகள், வாழ்வியல் விழுமியங்கள், எவ்வகையில் மனித வாழ்வுக்கு உதவும் என்பதனை மிக விரிவாகவும் விளக்கமாகவும் பன்னிரண்டு கட்டுரைகளில் தந்துள்ளார். மேல்நாட்டு வைத்திய, வாழ்க்கை முறைகளில் அதீத மோகம் கொண்டியங்கும் இன்றைய சமூகத்தை மாற்றியமைக்க இக்கட்டுரைகள் பயன்படக்கூடியவை. உணவெனும் உன்னதம், நோய்களைப் பெருக்கி ஆயுளைச்சுருக்கி, உணவே மருந்தாம், வள்ளுவம் சொல்லும் வைத்தியம், எனக்கென்ன பைத்தியமா?, தெளிந்த மனமே திண்ணிய உடலின் திறவுகோல், இனிப்புக்கேன் இப்படியோர் இழிபெயர், எமக்கு நாமே எமனாகலாமா?, இரசாயன மருந்துக் குளிசைகளின் மறுபக்கம், நோய்கள், மருந்துகள் மீதான பார்வைகளும் பயங்களும், மருந்தில்லா மருத்துவங்கள் சில, நலன் எனும் நற்பேறு ஆகிய தலைப்புக்களில் பன்னிரு கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன.*

### 12619

**நலம் பேணல் விஞ்ஞானம்(Text book of Nursing).** அ.சின்னத்தம்பி. கண்டி: ஊற்றுப் பிரசுரம், மருத்துவ வெளியீடு, 154, கொழும்பு வீதி, 1வது பதிப்பு, நவம்பர் 1972. (கொழும்பு 12: குமரன் அழுத்தகம், 201 டாம் வீதி).

xii, *399 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 12.50, அளவு: 21x14 சமீ.*

*இந்நூல் நோயாளி நலம்பேணற் கலை, நோயாளிகளும்* (Patient) *நலம்பேணிகளும் (*Nurses*), பிணிதீர் மனை, பிணிதீர்மனையும் தனிநோயாளியும், நலம்பேணிகள் (நல்லி, நல்லாள்), ஒழுக்கவிதிகள், தொழிலியல், மனைக்குரிய காவறை வேலை, காவறை, அடுக்களை, ஆகியவற்றில் புழங்கும் சாமான்கள், காவறைக்குப் பணிக்கு வேண்டிய தளவாடங்கள், படுக்கையமைத்தல், படுக்கைப்பட்ட நோயாளியின் மெத்தையை மாற்றல், நோயாளியின் பொதுமுறை நலம் பேணல், படுக்கை நீராட்டல், உணவு ஊட்டலும் சமைத்தலும், நோயாளியின் நீர் தேவைப்பாடும் பாயிச் சமனிடையும், சாரக உடல்நிலை நோக்கல்கள், கடிசளி, வாந்தி, ஊறுநீர் (சலம்), மலம் ஆகியவற்றை நோக்கல், மருந்துப் பொருட்கள், ஒட்சிசன் வழங்கல், சோதனைகளும் ஆய்வுகளும், எனிமாக்களும் உள்ளிடையங்களும், அலசல், கதீத்தற் செய்கை, செயற்கை ஊண்களும் குழாய் உணவூட்டலும், கிருமியழிப்புச்*

செய்தல், காவறை அணியங்கள், காவறையில் குறுக்குத் தொற்றும் நல்லியும், அறுவை வினைக்கு முன்னம் நலம் பேணலும் அதன் பின்னர் நலம்பேணலும், கட்டுதலும் கட்டுக்களும் (பந்தனங்கள்), தோலுக்கு இடப்படும் தீர்வு முறைகள், ஒரிட மருந்திடல் முறைகள், மட்டைகளும் சாந்து மட்டைகளும்-நீட்டலும், சில தீர்வுச் செயல்முறைகளும் ஊடறிதற் செயல்முறைகளும், அறுவை வினையறை இயங்கும் முறை, ஏனைய தீர்வு முறைகள், பொதுவாக காவறையில் காணப்படும் சில நோய்களும் நோயாளரின் நலம் பேணலும், தொட்சி நிலைமைகள், சிலஅறுவைவினை நிலைமைகள், பெண் நோய்களில் நலம்பேணல், காது நாசி தொண்டை சோதித்தல், உடல்நலமுடைய குழந்தை, கைமகவுக்கு உணவூட்டல், முதலுதவி, எரிகாயங்கள், குருதிவாரி, அல்துடிப்புயா, இதய நிறுத்தம், நஞ்சூட்டல், என்பு முறிவுகள், புறப்பொருள் உடலிகளால் கெடுதிகள், சாவு ஆகிய 52 அத்தியாயங்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. அயனாந்த தேச நோய்கள், மகப்பேற்று மருத்துவம் ஆகிய நூல்களை எழுதியுள்ள பேராசிரியர் அ.சின்னத்தம்பி அவர்கள் ஒரு பெண்நோயியல் அறுவைச் சிகிச்சை வைத்தியராவார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 2830).

## 613.7 யோகக்கலை

### 12620

**யோகாசனமும் மூலிகையின் மகத்துவமும்.** சனா சொக்கலிங்கம். வவுனியா: றூபி கிருஷ்ணலிங்கம், ஆசிரியை, சைவப்பிரகாச மகளிர் வித்தியாலயம், 2வது பதிப்பு, 2002, 1வது பதிப்பு, 1994.(வவுனியா: நியூ வன்னி குவிக் அச்சகம்).

(4), 266 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 175.00, அளவு: 21.5x14 சமீ.

யோகாசனமணி சனா சொக்கலிங்கம் அவர்களின் இந்நூல் 22 தலைப்புகளின்கீழ் யோகாசனம் பற்றியும், மேலும் 8 தலைப்புகளில் மூலிகைகளின் மகத்துவம் பற்றியும் விளக்கமளிக்கின்றது. ஆழ்நிலைத் தியானம், சூரிய நமஸ்காரம், கவியோகி சுவாமி சுத்தானந்த பாரதியார் விளக்கம், மகரிஷி யோகசுவாமியின் குருபூசை விளக்கம், பிராணாயாமப் பயிற்சி, யோகச் சிறப்புக் கற்பனைகள், யோகாசனமும் வாழ்வும், எல்லோரும் ஆசனம் செய்யலாம்-சில நிபந்தனைகள் உண்டு, Yoga for all, மில்க்வைற் கலாநிதி க.கனகராசா கடிதம், மகாத்மா காந்தி அடிகளின் கருத்துரைகள், பெண்களுக்கும் யோகாசனம் வேண்டும், ஆசன அட்டவணை, ஹடயோக விளக்கம், கற்பூரத் தீபவொளி- 28 யோகாசனங்களும், சில விதிமுறைகள், ஆசனப் பயிற்சியின் முதல் அங்கம், யோகாசனங்கள் பழகுவதால்? Yoga Saba Letter, வாழ்த்துச் செய்திகள் 10, யோகாசனங்கள் 28 பட விளக்கத்துடன் (கும்பிடாசனம் தொடங்கி சவசாந்தி வரை), தியான முறை ஆகிய தலைப்புகளில் யோகாசனமணி அவர்கள் இந்நூலில் யோகாசனம் பற்றி விரிவாக விளக்குகின்றார். தொடரும் நூலின் அடுத்த பகுதியில் செலவில்லாத சுலப வைத்தியம், உணவே மருந்து, மூலிகையின் மகத்துவம், பக்கவிளைவின்றி நோய் தீர்க்கும் மூலிகைகள், தேனும் குங்குமப்பூவும், மூலிகைச் சத்துக்கள், கைமருந்து சூரணம், விசேஷ

சிகிச்சைகள் சில ஆகிய எட்டுத் தலைப்புகளில் மூலிகையின் மகத்துவம் பற்றி விளக்கியிருக்கின்றார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 38408).

## 614 பொதுச் சுகாதாரம்

### 12621

**புதிய சுகாதாரக் கல்வி தரம் 7.** எஸ்.செல்வநாயகம், செல்வி எஸ்.பிரான்சிஸ். யாழ்ப்பாணம்: மாசில் பதிப்பகம், ஈச்சமோட்டை வீதி, 2வது பதிப்பு, தை 1981, 1வது பதிப்பு விபரம் தரப்படவில்லை.(யாழ்ப்பாணம்: ஸ்ரீசுப்பிரமணிய அச்சகம்).

(4), viii, 84 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 9.00, அளவு: 20.5x14 சமீ.

உணவும் சமிபாடும், உணவுப் பொருட்களின் குறைபாட்டு விளைவுகள், உணவைச் சமைத்தலும் பாதுகாத்தலும், உணவு அழுக்குப்படல், நீர், கொண்டுசெல்லலும் பாதுகாப்பும், உடற்பயிற்சியும் ஓய்வும் நித்திரையும் ஆகிய ஏழு பாடங்கள் இந் நூலில் விளக்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 24939).

### 12622

**போசாக்குக் கைந்நூல்.** ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் (யுனிசெப்). கொழும்பு: கொள்கை திட்டமிடல், அமுலாக்கல் அமைச்சு, சௌக்கிய அமைச்சு, 1வது பதிப்பு, ஜுன் 1994. (கொழும்பு: குணரத்ன ஓப்செட் லிமிட்டெட்).

(4), 101 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x15 சமீ., ISBN: 92-806-3117-9.

பத்து அத்தியாயங்களில் சமூக சுகாதார நலன் சார்ந்து எழுதப்பட்டுள்ள இந் நூல் அடிப்படை சுகாதார/போஷாக்கு நடைமுறைகள் பற்றிய தகவல்களை வழங்குகின்றது. கர்ப்பகாலத்திற்கும் பாலூட்டும் காலத்திற்குமுரிய ஆகாரங்களும் பராமரிப்பும், தாய்ப்பாலூட்டும் நடைமுறைகள், துணை ஆகாரமூட்டும் நடைமுறைகள், குடும்பத்துக்கு உகந்த உணவுப்பொருட்களைத் தேர்ந்தெடுத்தல், நோயுற்ற குழந்தைகளுக்கு உணவூட்டுதல், சமுதாய வாரியாக குழந்தைகளின் வளர்ச்சியைக் கண்காணித்தலும் ஊக்குவித்தலும், நீர் வடிகால் மற்றும் சுகாதார நடைமுறைகள், வீட்டுணவுப் பாதுகாப்பு, குடும்பத் திட்டம், கல்வியும் பாடசாலை சார்ந்த நடவடிக்கைகளும் ஆகிய அத்தியாயங்களாக இந்நூல் வகுத்து விளக்கப் பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 34583).

**மேலும் பார்க்க: 13A23**

## 616 நோய்கள்

### 12623

**எயிட்சிலிருந்து பாதுகாத்துக் கொள்வது எப்படி?** அ.பொ.செல்லையா. சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2003. (சென்னை 94: ஸ்கிரிப்ட் ஆப்செட்).

188 பக்கம், விலை: இந்திய ரூபா 45., அளவு: 18x12.5 சமீ.

இதயம் நடுங்க வைக்கும் எயிட்சு, இரகசியத்தைப் பேணி மருத்துவத்தைப் பெறவேண்டும், யார் வாங்குகிறார்கள் யார் கொடுக்கிறார்கள்? இருவகையான உணர்வுகள், அதிர்ச்சி தரத்தக்க செய்தி, எந்தப் பொருத்தம் முக்கியம், அறியாமை தெரியாமை அதிகம் பாதிக்கிறது, கிழக்கு ஐரோப்பாவில் எயிட்சு, காம உணர்வுக்கு எல்லைபோடமுடியுமா?, எயிட்சும் இறப்பு விகிதமும், எயிட்சு ஆரம்பம் எப்போது?, எயிட்சு என்றால் என்ன, எயிட்சு வியாதியால் வருகிறதா?, நோய் பரப்பும் நுண்கிருமிகள், எயிட்சின் வகைகள், எயிட்சு கண்டபிடிக்கப்பட்டது எப்போது?, காமத்துக்கு கண் உண்டா இல்லையா?, உடலைப் பாதுகாக்கும் சீவ அணுக்கள், மருத்துவ பரிசோதனை அவசியம் தேவை, இனப்பெருக்கத்தில் பல நிலைகள், உண்ணாவிரதம் ஒத்துக்கொள்ளாது, பல தொற்றுநோய்களும் பாதிப்புத் தரலாம், எயிட்சின் அடையாளக்குறிகள், எயிட்சு சுயபரிசோதனையும் தடுப்பும், வருமுன் தடுப்பது அவசியம், எயிட்சு போன்ற வேறு நோய்கள், கலை கொலையாகலாமா?, உலக எயிட்சு நாள் ஆகிய 28 அத்தியாயங்களில் இந் நூல் எழுதப்பட்டுள்ளது. அரிமா சங்கத்தின் இலங்கைக் கிளையின் அங்கத்தவராக விருந்த விஞ்ஞானப் பட்டதாரியான நூலாசிரியர், பின்னாளில் கனடாவில் புலம்பெயர்ந்து வாழ்ந்தவர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 33222).

### 12624

**நீரிழிவு நோயாளர் பராமரிப்பு.** கா.வைத்தீஸ்வரன். கொழும்பு: கா.வைத்தீஸ்வரன், ஆற்றுப்படுத்தல் நிலையம், 7, அல்பேர்ட் பிளேஸ், தெகிவளை, 1வது பதிப்பு, ஜுன் 2016. (கொழும்பு 13: கீதா பதிப்பகம்).

109 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 275., அளவு: 22.5x15 சமீ., ISBN: 978-955-44396-7-2.

நலப் பணியாளர், சமூக சேவையாளர், ஆசிரியர், நீரிழிவு நோய்க்கு இலக்காகியவர், அவர்தம் குடும்பத்தினர் ஆகியோருக்கான கைந்நூல். நீரிழிவு வருமுன் காப்போம், சலரோகம்-ஒரு கண்ணோட்டம், வருமுன் காப்போம்-ஆரோக்கியத்தை விருத்தி செய்வோம், நீரிழிவு நோயுடன் இயல்பு வாழ்க்கை வாழலாம்? எப்படி? நீரிழிவு நோயாளர் பராமரிப்பு, நோயாளர் பராமரிப்பில் சில முக்கிய குறிப்புகள், நீரிழிவு-சிக்கல்கள் தவிர்ப்போம், நீரிழிவு நோய்-சருமம், பற்கள், பாதங்கள் யாவற்றையும் பாதுகாப்போம், நீரிழிவு நோயாளருக்கான உணவுகள், உணவுப் பழக்கவழக்கம்-முக்கிய குறிப்புகள், நீரிழிவு நோயாளர்களுக்கான சில உணவுகள்- செய்முறை விளக்கம், உடல் உழைப்புடனான வாழ்க்கை ஆகிய 10 அத்தியாயங்களில் இந்

நூல் எழுதப்பட்டுள்ளது. பின்னிணைப்புகளாக, நீரும் எமக்கு மருந்தாகும், எமது ஆரோக்கியத்தை மீளாய்வு செய்வோம், மனநலம் இருதயத்தைப் பாதுகாக்கும், உடற் பருமன் முற்றாகத் தவிர்ப்போம், நீரிழிவு நோயாளர்களுக்கான உடற்பயிற்சியின் அவசியம் ஆகிய ஐந்து கட்டுரைகள் இணைக்கப்பட்டுள்ளன. ஆங்கிலேய மருத்துவத்தை விரும்பாதவர்களுக்கு மாற்றீடாக இயற்கையோடு இணைந்த உள்ளூர் மருத்துவ முறையைப் பின்பற்ற இந்நூல் வழிகாட்டியுள்ளது.

### 12625

**நீரிழிவு வியாதியும் அது பற்றிய சில அனுபவக் குறிப்புகளும்.** *மருதூர் ஏ.மஜீத்.*

*சாய்ந்தமருது 3: மருதூர் வெளியீட்டுப் பணிமனை, 436, பழைய சந்தை வீதி, சாய்ந்தமருதூர், கல்முனை, 1வது பதிப்பு, நவம்பர் 1997. (கல்முனை: இளம்பிறை ஒப்செற் அச்சகம், மருதமுனை).*

*55 பக்கம், விலை: ரூபா 60.00, அளவு: 18x12.5 சமீ.*

*சலரோகம் எனப்படும் நீரிழிவு நோய் பற்றிய விரிவான தகவல்களை வழங்கும் இந்நூல், நீரிழிவு நோயின் வரலாறு, நோயின் தன்மை, நோய் வருவதற்கான காரணங்கள், நோயின் வகை, நோயின் அறிகுறிகள், நோயாளிகள் கவனிக்க வேண்டியவை (நோய் பற்றிய அறிவு, உணவுக் கட்டுப்பாடு, மருத்துவப் பாவனை, தேகப்பயிற்சி), ஞாபகத்தில் வைத்திருக்கவேண்டிய குறிப்புகள், நீரிழிவுநோய் பற்றிய எனது ஒரு நாள் நடைமுறைகள், முடிவுரை ஆகிய அத்தியாயங்களில் அதனை விரிவாக விளக்குகின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 31385).*

### 12626

**பேரிடர்களை பெருவாய்ப்புகளாக மாற்றுதல்: இளம் பருவத்தினரும் எச்ஐவி/எயிட்சும்-தெற்காசியா.** *கம்லா பாசின், பிந்தியா தாபர் (ஆங்கில மூலம்), மு.பொன்னம்பலம் (தமிழாக்கம்). கொழும்பு 5: சமூக விஞ்ஞானிகள் சங்கம், 12, சுலைமான் டெரஸ், 1வது பதிப்பு, 2008. (கொழும்பு 6: டெக்னோ பிரின்ட்).*

*(12), 81 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 400., அளவு: 23x17.5 சமீ.,* ISBN: *978-955-1772-19-2.*

*எழுத்துக்கள் என்ன சொல்கின்றன என்பதைப் பார்ப்போம், எச்ஐவி/எயிட்ஸ் முற்றுமுழுதாகத் தவிர்க்கப்படக்கூடியது, வேகமாகப் பரவும் எச்ஐவி/எயிட்ஸ், தெற்காசியாவில் எச்ஐவி/எயிட்ஸ், எச்ஐவி எப்படி எங்களுக்கு ஏற்படக் கூடியதாக இருக்கின்றது என்பதை இப்பொழுது பார்ப்போம், பாலியலும் எச்ஐவி/எயிட்சும், எப்படி எச்ஐவி பரவாது இருக்கிறதென்பதை இப்பொழுது பார்ப்பது அவசியம், ஆபத்துகளையும் மன அழுத்தத்தையும் தவிர்க்க ஏன் சோதனைக்குட்படுத்தக் கூடாது? எளிமையான முறையில் தடுத்தல் மன அழுத்தத்திலிருந்து எங்களை விடுவிக்கும், எச்ஐவி/எயிட்சோடு வாழ்க்கையை ஆமோதித்து வாழப் பழகுதல், இளம் பருவத்தினரும் எச்ஐவி/எயிட்சும், குறைந்த உரிமைகள் அதி தாக்குதலுக் குள்ளாதல் பெண்பிள்ளைகள்/பெண்கள் மற்றும் எச்ஐவி/எயிட்ஸ் , எச்ஐவிக்கு*

எதிரான போராட்டம் என்பது உங்கள் உரிமைகளுக்கான போராட்டமாகும், எச்ஐவி/எயிட்ஸ்: எங்களையே பார்ப்பதற்கான கண்ணாடி, இறுதி வார்த்தைகள் ஆகிய 15 தலைப்புகளில் எச்ஐவி/எயிட்ஸ் பற்றிய புரிதல்களை மக்களிடையே ஏற்படுத்தும் நூல். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 47711).

**மேலும் பார்க்க: 12887**

## 618 பெண்நோயியல், மகப்பேற்று மருத்துவம்

### 12627

**மகப்பேற்று மருத்துவம்.** அ.சின்னத்தம்பி. யாழ்ப்பாணம்: பேராசிரியர் அ. சின்னத்தம்பி, மானிப்பாய், 1வது பதிப்பு, 1969. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்),

xvi, 488 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x13.5 சமீ.

மகப்பேற்று விஞ்ஞானம் "தாய்மைப்பேறு" அடைந்த பெண்களுக்கான நூல். இந்நூலில் உடற்கூற்று மருத்துவம் தொடர்பான செய்திகளைத் தமிழில் விளக்கி யுள்ளதுடன் ஒரு பெண் கர்ப்பம் தரித்த நாள்முதல் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பன போன்ற விடயங்களையும் மகப்பேற்று சிகிச்சை முறைகளையும் இந்நூல் விளக்குகின்றது. மருத்துவத் தாதிமார்களுக்கு ஏற்றவகையில் ஏராளமான குறிப்புகளுடன் எழுதப்பட்டுள்ளது. முறைமையான கருப்பநிலை, பிறழ்வான கருப்பநிலை, பேற்றுநிலையின் தொழிலும் அதன் நடையும், பிறழ்வான பேறுகள், பிள்ளைப்பேற்றுக் காலமும் புனிற்றுப்பேற்றுக் குழந்தையும், அறுவை வினை யாற்றலும் மற்றும் வினையாற்றல்களும், பிற்சேர்ப்பு ஆகிய ஏழு பகுதிகளையும் 46 இயல்களையும் இந்நூல் கொண்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 20920).

## 619 கீழைத்தேய மருத்துவம்

### 12628

**உடல்நல வாழ்வும் அதற்குரிய மூலிகை மருந்துகளும் தாவர உணவு வகைகளும்.** சி.கண்ணுச்சாமிப் பிள்ளை. பருத்தித்துறை: விநாயகர் தரும நிதியம், தெணியம்மன் வீதி, வியாபாரி மூலை, புலோலி மேற்கு, 1வது பதிப்பு, நவம்பர் 1991. (உடுப்பிட்டி: ஸ்ரீவாணி அச்சகம், இலக்கணாவத்தை).

48 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 19.5x14 சமீ.

ஏறத்தாழ 320 பக்கங்கள் கொண்ட சித்தவைத்திய பதார்த்தகுண விளக்கம் என்ற நூல் தமிழகத்தின் வைத்திய வித்வன்மணி சி. கண்ணுசாமிபிள்ளை அவர்களால் பல காலங்களுக்கு முன் எழுதப்பட்டது. சிகிச்சாரத்ன தீபம், கண்ணுசாமியம், வைத்திய பதார்த்தகுண விளக்கம் (மூல வர்க்கம்) முதலிய நூல்களுக்கு ஆசிரிய ராகிய இவரது நூலின் சில பகுதிகளையும், வேறும் சில சித்த வைத்தியர்களினது நூல்களிலிருந்து பெறப்பட்ட தகவல்களையும் தொகுத்து இந்நூலை, பருத்தித்துறை

விநாயகர் தருமநிதிய ஸ்தாபகர் ஆ.சி.முருகுப்பிள்ளை ஆக்கியுள்ளதுடன் அதனைத் தனது தருமநிதியத்தின் 16ஆவது இலவச வெளியீடாகவும் வெளியிட்டுள்ளார். மூலிகை வைத்தியம் பற்றிய பதார்த்தகுண விளக்க நூலாக இந்நூல் அமைகின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 21905).

### 12629

**உடல்நல வாழ்வும் மூலிகை மருத்துவமும் உணவு வகைகளும்.** ஆ.சி.முருகுப்பிள்ளை. பருத்தித்துறை: விநாயகர் தரும நிதியம், தெணியம்மன் வீதி, வியாபாரி மூலை, புலோலி மேற்கு, 1 வது பதிப்பு, மார்ச் 1997. (பருத்தித்துறை: விநாயகர் தரும நிதிய அச்சகம், புலோலி மேற்கு).

(16), 150 பக்கம், விலை: ரூபா 39.00, அளவு: 21.5x14 சமீ.

பருத்தித்துறை விநாயகர் தரும நிதியத்தினரின், 16ஆவது மனிதசேவை வெளியீடாக அந்நிறுவனத்தின் தாபகரின் மருத்துவக் குறிப்புகளின் தொகுப்பாக இந்நூல் 21.11.1996 அன்று உருவாக்கப்பட்டு மார்ச் 1997இல் வெளியிடப்பட்டுள்ளது. விநாயகர் தரும நிதிய கணக்கு விபரம், தர்மசாதன விபரம், நூல் வெளியீட்டு விபரக் கணக்கறிக்கை ஆகியவற்றுடன் இந்நூல் ஆரோக்கிய வாழ்வும் அதற்குரிய மூலிகை மருந்துகளும், எய்ற்ஸ் நோய் தீர எளிய வழி, நலமான வாழ்விற்கு, இலைக்கஞ்சி, உடற் செயற்பாட்டு முறைகளுக்கான மூலிகை விபரங்கள், பழவகைகளும் அவற்றை உண்பதனால் அடையும் பலாபலனும், பதார்த்த குணவிபரம், நோய்களும் மருத்துவ சிகிச்சைகளும், அனுபவமுள்ள குடிநீர்வகைகள், உணவு வகைகளும் பயன்களும், ஏழுவகை உயிர்ச்சத்துகளின் அட்டவணை, விசக்கடி வைத்தியமும் மூலிகை மருத்துவமும் ஆகிய அத்தியாயங்களில் உடல்நல வாழ்வும் மூலிகை மருத்துவமும் உணவு வகைகளும் பற்றி விளக்கக் குறிப்புகள் தொகுக்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 40263).

### 12630

**குணமாக்கும் மூலிகைகளின் மகத்துவம்.** ஹெமினியா டீ குஸ்மேன் லெடியன் (சிங்கள மூலம்), கே.துரைராஜா (தமிழாக்கம்). நுகேகொடை: இலக்பஹான பிரசுராலயம், இல. 8, தேவாலய வீதி, பாகொட, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (நுகேகொடை: இலக்பஹான பிரசுராலயம்).

151 பக்கம், விளக்கப்படங்கள், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x15 சமீ.

மருத்துவ மூலிகைகளின் வல்லமைக்கு வழிகாட்டியான இந்நூலினை திருமதி கே.துரைராஜா தமிழாக்கம் செய்திருக்கிறார். சாதாரணமான நோய்களும் அதற்கான சிகிச்சைகளும், தண்ணீர் சிகிச்சை முறைகள், மருந்துச் செடிகள், இயற்கை-ஆண்டவரின் வைத்தியன், மூலிகைகளைக் குறித்து வேதம், ஆலோசனைகள், கருத்துக்கள் எனப் பல்வேறு தலைப்புகளின் கீழ் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள இந்த

மூலிகை வைத்திய நூல் இயற்கையின் குணமாக்கும் மூலகங்களைத் தெரிந்துகொண்டு அதன்படி சாதாரணநோய்களுக்குப் பரிகாரம் செய்துகொள்ளும் வழிவகைகளைக் கூறுகின்றது. இச்சிகிச்சைகளிலே பயன்படுத்தப்படும் தாவரங்கள் இலங்கைத் தெருவோரங்களிலும் தோட்டங்களிலும் எளிதில் கிடைப்பன. இலைகளும் பூக்களும் மரத்தண்டுகளும் அவிக்கப்பட்டு அல்லது இலைகளில் பிழிந்தெடுக்கப்பட்டுப் பெறப்படும் சாறுகள் சாதாரண நோய்களைக் குணமாக்கப் போதிய வல்லமைபெற்றிருந்தும் நாம் அதிக விலைகொடுத்து கடைகளில் செயற்கை மாத்திரைகளையும் வில்லைகளையும் களிம்புகளையும் பயன்படுத்துவதை இந்நூல்வழியாகக் கண்டிக்கும் இந்நூலின் ஆசிரியர், இயற்கை மருத்துவத்தில் வாசகரின் நம்பிக்கையை வளர்த்தெடுக்க இந்நூலைப் பயன்படுத்தியிருக்கிறார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 20563).

## 12631

**சுதேச மருத்துவம் பற்றிய இலங்கைத் தமிழ் நூல்கள்: பொருள் மரபும் இலக்கிய வளர்ச்சியில் அவற்றின் பங்கும்.** கனகசபாபதி நாகேஸ்வரன் (மூலம்), எஸ். வை.ஶ்ரீதர் (பதிப்பாசிரியர்). கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, 2013. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

xx, 315 பக்கம், விலை: ரூபா 700., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-659-374-7.

சித்த வைத்தியர்களுக்கே உரித்தான நூல்களான பரராசசேகரம், செகராசசேகரம் அமுதாகரம் போன்ற நூல்கள் ஆயுர்வேத நூல்களாகும். அஷ்டாங்க இருதயம், மாதவ நிதானம், சரஹசம்கிதை போன்ற நூல்களோடு வரலாற்றுரீதியாக, அடிப்படைரீதியாக, விஞ்ஞான ரீதியாக இலக்கியரீதியாக, இறையியல்ரீதியாக மதிப்பீடு செய்திருப்பது இந்நூலுக்குத் தனிச்சிறப்பைத் தருகின்றது. இலக்கியத்தையும், பக்தி இலக்கியத்தையும், சுதேச மருத்துவத்தையும் பற்றிய தெளிவினை இந்நூலில் பெறமுடிகின்றது. ஆறு இயல்களைக் கொண்ட இந் நூல் ஆரியச் சக்கரவர்த்திகள் காலம் வரையிலான இலங்கைத் தமிழர் வரலாறும் தமிழ் இலக்கிய முயற்சிகளும், பரராசசேகரம் நூலின் அமைப்பும் பொருளடக்கமும், இந்திய மருத்துவ நூலாசிரியர்களும் மருத்துவ நூல்கள் குறித்த சிறு விளக்கமும் - ஈழத்து மருத்துவ நூல்களில் அவற்றின் தாக்கமும், செகராசசேகரம், பரராசசேகரம் ஒப்பீடு, பரராசசேகரத்தின் இலக்கிய நோக்கு, பயில்முறையில் செகராசசேகரம், பரராசசேகரம், அமுதாகரம் ஆகியவை வகிக்கும் முக்கியத்துவம் ஆகிய அத்தியாயத் தலைப்புகளைக் கொண்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 52993).

## 12632

**மூலிகை மகத்துவம்.** இராமநாதன் கலைவாணன். மட்டக்களப்பு: அன்பு வெளியீடு, 18, நல்லையா வீதி, 1வது பதிப்பு, ஜூன் 2005. (மட்டக்களப்பு: எவர்கிரீன், திருமலை வீதி).

xi, 73 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 100., அளவு: 20.5x15 சமீ.

இந்நூலில் துளசி, பட்டிப்பூ, கையான்தகரை, குப்பைமேனி, வல்லாரை, பொன்னாங்காணி, அமுக்குறா, வெள்ளைப்பூடு, நெல்லி, ஆடுதீண்டாப் பாலை, ஆடாதோடை, கீழ்க்காய் நெல்லி, அரிவாள் மனை, கண்டங்கத்தரி, மருதாணி, சிறுகுறிஞ்சா, எருக்கு, இம்பூறல், முருங்கை, நெருஞ்சி, அறுகு, நீர்முள்ளி, திருநீற்றுப்பச்சை, அம்மன் பச்சரிசி, புண்கை, வேம்பு, வசம்பு, செம்பரத்தை, இலுப்பை, கோரைக் கிழங்கு, அரசு, நஞ்சறப்பாஞ்சான், இலந்தை, வெங்காயம், தவசிமுருங்கை, பப்பாசி, மாதுளை, ஆலமரம், அகத்தி, வில்வம், வெற்றிலை, தூதுவளை, புதினா, தர்ப்பை, கழற்சி, யானைவணங்கி, கருவேலம், வேலிப்பருத்தி ஆகிய 48 மூலிகைகளின் குணாம்சம், மருத்துவப் பயன்பாடு ஆகியவற்றை இந் நூல் வழங்குகின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 37186).

**மேலும் பார்க்க: 12620**

## 619.1 சித்த மருத்துவம்

### 12633

**ஏட்டு மருத்துவம்(தல்பதே பிலியம் 22ஆம் தொகுப்பு).** ஆயுள்வேத திணைக்களம். கொழும்பு 8: ஆயுள்வேத திணைக்கள வெளியீடு, இல. 325, டாக்டர் எம்.எம். பெரேரா மாவத்தை, 1வது பதிப்பு, மார்ச் 1994. (தெகிவளை: ஏ.ஜே.பிரின்ட்ஸ்).

(6), 330 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x14 சமீ.

நாவின்னை பண்டாரநாயக்க ஞாபகார்த்த ஆயுள்வேத ஆராய்ச்சி நிலையம், கொழும்பு பல்கலைக்கழக சுதேச வைத்திய நிறுவகம் ஆகியவற்றில் தேங்கிக் கிடக்கும் மருத்துவ ஏடுகளைத் தொகுத்து "தல்பதேபிலியம்" என்ற தொடரில் நூலுருவில் கொண்டுவரும் முயற்சியில் 21 தொகுப்புகள் சிங்கள மொழியில் நூலுருவாகியுள்ளன. இத்திட்டத்தின் ஒரு படியாக, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சித்த மருத்துவப் பிரிவின் தலைவர் வைத்திய கலாநிதி எஸ்.பவானி அவர்களால் அனுப்பி வைக்கப்பட்ட தமிழ் வைத்திய ஓலைச் சுவடியின் தமிழ் நூல்வடிவம் இது. ஓலைச்சுவடியை வாசித்து உதவியவர் கொழும்பு ஆயுள்வேத போதனா வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவின் தலைவர் வைத்திய கலாநிதி ஏ.ஆர்.எம். தாஹீர் அவர்களாவார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 34131).

### 12634

**சித்த மருத்துவம் 1988/1989.** S.யோகேந்திரன், B.சைலஜா (இதழாசிரியர்கள்). யாழ்ப்பாணம்: சித்த மருத்துவ மாணவர் மன்றம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, 1989. (யாழ்ப்பாணம்: புனித வளன் கத்தோலிக்க அச்சகம்).

xvi, 104 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x18 சமீ.

என் எண்ணங்கள் (சு.யோகேந்திரன்), மன்றத்தின் மனத்துடிப்பு (சித்த மருத்துவ மாணவர் மன்றம்), நினைவில் நிறைந்த பேராசான் வித்தியானந்தன் (பேராசிரியர். என்.பாலகிருஷ்ணன்), பாண்டு ரோகத்தில் "புனர்னவா மண்டூரம்" என்ற ஔடதத்தின் செயலாற்றும் திறன் பற்றிய ஒரு மதிப்பீடு (டாக்டர் சு.பவானி), யூனானி மருத்துவத்தின் சிறப்பம்சம் பற்றிய ஒரு கண்ணோட்டம் (டாக்டர் திருமதி ஞானாமிர்தம் பவானி), Neer Kuri (Urine Examination) ( S.திருநாவுக்கரசு), கயரோகம் (சி.திரிபுரநாயகி), நாவற்குழி வாழ் மக்களின் குருதி நிறப்பொருளின் செறிவை அறிதல் (தொகுப்பு: மு.சிவராஜா, B.சைலசா, P.மங்களேஸ்வரி), இலங்கையில் காணப்படும் தாவர நஞ்சுகள் (ஆங்கிலத்தில்: பேராசிரியர் திருமதி T.சரவணபவானந்தன்), பரராசசேகரம் (பேராசிரியர் கலாநிதி பொ.பூலோகசிங்கம்), பாரிசவாதம் (Hemiplegia - Paralysis) (செல்வன் சி.வடிவேலு), Nadi (Pulse) in Hindu Medicine (கலாநிதி பசுபதி ரோமகேஸ்வரன்), மூலவியாதி (Piles) (செல்வன் சி. ராஜ்குமார்), முதலுதவியின் நோக்கமும் முறிவுகளுக்குரிய சிகிச்சை முறைகளும் (சீ.எஸ்.சுப்பிரமணியம்), கூடியிருந்து கொடுமை செய்யும் விஷ ஜந்துக்கள் (சித்தவைத்தியர் க.சிற்றம்பலம்), Sechhium edule (chocho) a Hill Country Vegetable Useful as Antidiabetic Agent (Dr.S.Mohandas), Concept of Pruritus (Kandu) in Ayurveda (Dr. Srikantha Arunachalam), மூலிகையியலும் ஆராய்ச்சியியலும் (செல்வன் சு. யோகேந்திரன்), நன்றியோடு நினைக்கின்றோம் (சித்த மருத்துவ மாணவர் மன்றம்), (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 39238. நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தின் சேர்க்கை இலக்கம் 008797).

### 12635

**தமிழர் சுகாதாரம்: சித்த வைத்திய சுகாதாரம்.** தண்டிகைக் குலசேகரம்பிள்ளை (இயற்பெயர்: க. பாலசுப்பிரமணியம்). யாழ்ப்பாணம்: இலங்கா தமிழ் வைத்திய ஆராய்ச்சி மன்றம், 1வது பதிப்பு, ஜுன் 1986. (காரைநகர்: பாலா அச்சகம்).

(4), 49 பக்கம், விலை: ரூபா 10., அளவு: 20.5x14 சமீ.

இலங்கா தமிழ் வைத்திய ஆராய்ச்சி மன்றத்தின் பிரதம ஆராய்ச்சியாளரும், தலைவருமான வைத்தியர் க.பாலசுப்பிரமணியம் அவர்களின் சித்த வைத்திய நூல் இது. சுத்தம், நாட்கடமை, பருவ காலங்களும் வாழ்க்கை முறைகளும், உணவு, உணவும் சுவையும், உணவும் நஞ்சும், நமது உணவிலுள்ள சத்துக்கள், வேகங்களை அடக்கலாகாது, பிணி, மருத்துவம், நோய் தடுப்பும் நீடித்த வாழ்நாளும் ஆகிய அத்தியாயங்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 9447. நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தின் சேர்க்கை இலக்கம் 007183).

## 12636

**பரராசசேகரம்: பித்தரோக நிதானமும் சிகிச்சையும்.** ஐ.பொன்னையாபிள்ளை. யாழ்ப்பாணம்: மீள்பதிப்புக் குழு, அகஸ்தியர் வைத்தியசாலை & மருந்தகம், 29, மூத்தவிநாயகர் வீதி, நல்லூர், 2வது பதிப்பு, நவம்பர் 1999, 1வது பதிப்பு, 1934. (யாழ்ப்பாணம்: தயா பிரின்டர்ஸ், 138, நாவலர் வீதி).

x, 44 பக்கம், விலை: ரூபா 80.00, அளவு: 20x14 சமீ., ISBN: 955-8379-00-8.

மூலநூல் பதிப்பாசிரியர் ஏழாலை சுதேச வைத்தியர் ஐ.பொன்னையாபிள்ளை அவர்களால் 1934இல் பிரசுரிக்கப்பட்ட சித்தவைத்திய நூலின் மீள்பதிப்பு இது. வைத்தியகலாநிதி சு.நவரத்தினம், க.வே.துரைராசா ஆகியோரின் குறிப்புரைகளுடன் திருத்திய இப்பதிப்பு வெளியிடப்பட்டுள்ளது. முதற் பகுதியில் வாயுவிற் பித்தம் தொடங்கி ஓடும் பித்தம் ஈறாக 56 வகையான பித்தங்களைப்பற்றி விளக்கி எழுதப்பட்டுள்ளது. இரண்டாம் பகுதியில் பறங்கியாதி சூரணம் முதல் முசுமுசுக்கை நெய் ஈறாக பல்வேறு சிகிச்சை முறைகள் பற்றி இயல் 62 முதல் 107 வரை விளக்கப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 21165).

## 12637

**மருந்தில்லா மருத்துவம்.** ந.சிவசுப்பிரமணியம் (புனைபெயர்: வாணி). முல்லைத்தீவு: செல்லமுத்து வெளியீட்டகம், வள்ளுவர்புரம், விசுவமடு, 1வது பதிப்பு, ஜனவரி 2018. (வவுனியா: விஜய் அச்சுப் பதிப்பகம்).

xxvi, 140 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 20x14.5 சமீ., ISBN: 978-955-4096-11-0.

சித்த ஆயர்வேத மருத்துவ முறை 3000 ஆண்டுகள் பழமைவாய்ந்ததென்பர். நோய் பாதிப்பு ஏற்படாமல், பக்க விளைவுகள் ஏற்படாவண்ணம் குணமாக்க பல அரிய மூலிகைகள் இருக்கின்றன. அவை பற்றிய விபரங்களை 15 அத்தியாயங்களில் இலகுவாக அனைவரும் விளங்கிக்கொள்ளும் வண்ணம் ஆசிரியர் இந்நூலில் விபரித்துள்ளார். அன்றாட வாழ்வில் பயன்படும் பல உணவுப் பொருட்களே இங்கு நோய்தீர்க்கும் மருந்தாகின்றன. காய்கறிகள், பழவகைகள், மலர்கள், வேர்கள், கிழங்குகள், கீரை வகைகள் எனப் பல மருத்துவ விடயங்களை எளிமையான தமிழ்நடையில் சாதாரண மக்களும் விளங்கிக்கொள்ளக்கூடிய வகையில் மருத்துவர் வாணி இந்நூலை எழுதியிருக்கிறார். மருத்துவ குணமுள்ள சில மூலிகைகள், மருத்துவ குணமுள்ள சில பட்டைகள், எனது 36 வருட சேவையில் கையாண்ட சில மருந்துகள், மருத்துவ குணமுள்ள சில காய்கறிகள், மருத்துவ குணமுள்ள சில பழங்கள், மருத்துவ குணமுள்ள சில வேர்கள், மருத்துவ குணமுள்ள சில மலர்கள், மருத்துவ குணமுள்ள சில கிழங்குகள், மருத்துவ குணமுள்ள சில மர வகைகள், போர்க்காலத்தில் மருந்துகள் தடைசெய்யப்பட்டபோது நாம் பயன்படுத்திய சில மூலிகைகள், மருத்துவ குணமுள்ள மூலிகைகளின் இலகுவான பலன்கள், மருத்துவ குணமுள்ள கீரைகள், மருத்துவ குணமுள்ள இலைகள், உடல் பருமனைக் குறைத்திட, அதிகரிக்க இயற்கை வைத்தியம்,

பொதுவான சில மருத்துவக் குறிப்புகள் ஆகிய 15 தலைப்புகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

## 620 பொறியியல், இயந்திரவியல்

### 12638

**கொங்கிறீற்றின் முக்கிய தன்மைகளும் அதன் கலவை விதானமும்.** வே.நவரெத்தினராசா. யாழ்ப்பாணம்: பேராசிரியர் வே.நவரெத்தினராசா, குடிசார் பொறியியல்துறை, பொறியியல் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, 1995. (கொழும்பு 13: லக்ஷ்மி அச்சகம்).

iii, 59 பக்கம், விளக்கப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

கொங்கிறீற்றுக் கட்டடங்களும் பாலங்களும் குறுகிய காலத்தில் பழுதடைவதற்கு கொங்கிறீற்றின் தன்மைகளைப்பற்றித் தொழில்நுட்பவியலாளர்கள் மத்தியில் காணப்படும் விளக்கக்குறைவும் ஓர் முக்கிய காரணமாகும். அத்தகையதொரு குறைபாட்டை நிவர்த்திசெய்யும் வகையில் இலகுதமிழில் இந்நூல் வெளிவந்துள்ளது. கொங்கிறீற்றின் முக்கிய மூலப்பொருட்களான சீமெந்து, பெரிய /சிறிய துணிக்கை களைப் பற்றியும் விளக்கம் தரப்பட்டுள்ளன. உடன் கலந்த கொங்கிறீற்றில் பேணப்படவேண்டிய தன்மைகளும் கொங்கிறீற்று கடினமடைந்தபின் அதன் தன்மைகளும், இவற்றை பரிசோதிக்கும் முறைகளும் விபரிக்கப்பட்டுள்ளன. சிறந்த தன்மைகளைக் கொண்ட கொங்கிறீற்றுக் கலவை தயாரிக்கும் முறையும் விளக்கப்பட்டுள்ளது. இலங்கையில் பயன்படுத்தப்படும் கொங்கிறீற்று தொடர்பான பிரித்தானிய/ இலங்கை நியமங்களும் ஆங்காங்கே தரப்பட்டுள்ளன. இவை இந்நூலில் கொங்கிறீற்று, போட்லந்து சீமெந்து, கொங்கிறீற்றுத் துணிக்கைகள், நீர், உடன்கலந்த கொங்கிறீற்றின் தன்மைகள், கடினப்பட்ட கொங்கிறீற்றின் தன்மைகள், கொங்கிறீற்றுக் கலவை விதானம், கொங்கிறீற்று கலத்தல், கொங்கிறீற்று நியமங்கள் ஆகிய ஒன்பது இயல்களில் விளக்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 30392).

## 630 விவசாயமும் அது சார்ந்த துறைகளும்

### 12639

**இலங்கையில் பழப்பயிர்களைப் பாதிக்கும் பீடைகளும் அவற்றைக் கட்டுப்படுத்தலும்.** G.A.W.விஜேசேகர, ஜயந்தா இளங்கோன் மெனிக்கே (மூலம்), சீரங்கன் பெரியசாமி (தமிழாக்கம்). பேராதனை: விவசாயஅமைச்சு, விவசாயத் திணைக்களம், 1வது பதிப்பு, 2001. (பெரதெனிய: விவசாய அமைச்சின் அச்சகப் பிரிவு, கன்னொருவை).

(6), 72 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 26.5x20 சமீ., ISBN: 955-9282-04-2.

இலங்கையின் பழச்செய்கையின் பிரதான பீடைகள் தொடர்பான விஞ்ஞானத் தகவல்கள் இப்பிரசுரத்தின் மூலம் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

மாமரத்தைப் பாதிக்கும் மாம்பழ ஈ, மாவிலைத் தத்தி, தண்டு துளைப்பான் புழு, மாவிதை வண்டு, மாவிலை வண்டு, மாவிலை சுருட்டி வண்டு ஆகியவை பற்றியும், சித்திரசுப் பயிர்களைப் பாதிக்கும் சித்திரசு வண்ணாத்திப்பூச்சி, சித்திரசு இலைச்சுருங்கமறுப்பி, சித்திரசு கறுப்பு ஈ, சித்திரசு இலைச்சுருட்டிப் புழு, சித்திரசு அழுக்கணவன், சித்திரசு செதிற்பூச்சி, சித்திரசு வெண்மூட்டுப் பூச்சி, சித்திரசு சிவப்புச் சிற்றுண்ணி, காய்துளை அந்து ஆகியவை பற்றியும், வாழையினத்தைத் தாக்கும் வாழைக் கிழங்கு நீள்மூஞ்சி வண்டு, வாழைத்தண்டு வண்டு ஆகியவை பற்றியும், அன்னாசிப் பயிரைத் தாக்கும் வெண்மூட்டுப் பூச்சி பற்றியும், கொடித் தோடையைத் தாக்கும் கொடியை வெட்டும் வண்டு பற்றியும், மாதுளையைத் தாக்கும் காய்துளைப்பான் பற்றியும், அம்பரெல்லா மரத்தைத் தாக்கும் இலைச் சுருட்டிப்புழு, இலைகூடுகட்டிப் புழு, இலையரிப்புழு ஆகியவை பற்றியும், பாலாக்காய் துளைப்புழு, ஆனைக்கொய்யா மூட்டுப் பூச்சி, பப்பாசி செதில் பூச்சி ஆகியன பற்றியும் முள்ளு அன்னமுன்னா, கொய்யா, திராட்சை, ரம்புட்டான், விளாம்பழம் போன்ற ஏனைய பழங்களில் காணப்படும் பிரதான பீடைகள் பற்றியும் இந்நூல் விளக்கமான தகவல்களைத் தருகின்றது. இறுதியில் பழப்பயிர்களைப் பாதிக்கும் பீடைகளைக் கட்டுப்படுத்த விவசாயத் திணைக் களத்தினால் சிபார்சு செய்யப்பட்ட பீடைநாசினிகள் பற்றிய விபரங்கள் தரப் பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 34517).

### 12640

**இலை மரக்கறிகள்.** விவசாயத் திணைக்களம். பேராதனை: விவசாயத் திணைக்களம், விவசாய காணி அமைச்சு, த.பெ.எண் 18, 1வது பதிப்பு, 1999.(பேராதனை: விவசாயத் திணைக்கள அச்சகம், கண்ணொறுவை).

26 பக்கம், விளக்கப்படங்கள், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x20 சமீ.

தாவரங்களின் இலைகள், இளம் தண்டுகள் என்பதாகவே இலை மரக்கறிகளாக இந்நூலில் குறிப்பிடப்படுகின்றது. இலங்கையில் இலை மரக்கறியாக பலவகையான தாவரங்கள் உண்ணப்படுகின்றன. இவற்றை இனம்கண்டு அவற்றின் பொருளாதார/ வர்த்தக நோக்கிலான உற்பத்திப் பெருக்கத்திற்கான ஆலோசனைகளை விவசாயி களுக்கு வழங்கும் நோக்கில் இந்நூல் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்நூலில் இலைமரக்கறிகளாக இனம்காணப்பட்டுள்ள பொன்னாங்காணி, வல்லாரை, சாறணை, கொஹில, கங்குன், பசளி, அகத்தி ஆகிய தாவரங்களின் இயல்புகள், அவற்றைப் பயிரிடும் வழிவகைகள் என்பனவற்றைத் தனித்தனி இயல்களாக இந்நூல் விளக்குகின்றது. மேலும் இவற்றின் ஆயர்வேத இயல்புகள் பற்றியும் இறுதியாக ஒரு இயலில் விளக்கப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 32716).

### 12641

**சேதனப் பசளைகள்.** S.T.திசாநாயக்க, ராஜகருணா தொலுவீர, சீரங்கன் பெரியசாமி. பேராதனை: விவசாயத் திணைக்களம், விவசாய காணி அமைச்சு, த.பெ.எண் 18, 1வது பதிப்பு, 2000. (பேராதனை: விவசாயத் திணைக்கள அச்சகம், கண்ணொறுவை).

(2), 18 பக்கம், விளக்கப்படங்கள், அட்டவணைகள், விலை: ரூபா 5.00, அளவு: 21x14.5 சமீ.

மண் சேதனப் பொருட்களிலிருந்து கிடைக்கும் நன்மைகள், சேதனப் பசளைகளின் வகைகள், நெற்செய்கையில் வைக்கோலை இடல், தழைப் பசளைகளை இடும்போது அவதானிக்கவேண்டிய அம்சங்கள், கால்நடை எருவைப் பயன் படுத்தும்போது கடைப்பிடிக்கவேண்டிய சில முக்கியமான அம்சங்கள், சேதனப் பொருட்களைக் கூட்டெருவாக்கல் (வீட்டு, நகர்ப்புறக் கழிவுகளுக்கு), கூட்டெருவைத் தயாரிக்கும் முறை, குழிமுறை, குவியல் முறை, அதிக வெப்ப முறை, சிறிளவில் கூட்டெருத் தயாரித்தல்- பீப்பாய் முறை, சேதனப் பசளைகளை மாத்திரம் பயன்படுத்தல் ஆகிய தலைப்புகளில் இந்நூல் சேதனப் பசளைகள் பற்றிய விரிவான விளக்கங்களை வழங்குகின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 32716).

## 636 விலங்குப் பண்ணைகள்

### 12642

**கோ பெருஞ்செல்வம்.** திருச்செல்வம் தவரத்தினம். யாழ்ப்பாணம்: தி. தவரத்தினம், சர்வசக்தி வெளியீடு, சடையாளி, காரைநகர், 1வது பதிப்பு, டிசம்பர் 2017. (யாழ்ப்பாணம்: ஆரணன் பதிப்பகம், மருதனார்மடம்).

x, 86 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 20.5x15 சமீ., ISBN: 978-955-38483-1-4.

பசுவின் பெருமைபேசும் இந்நூல், பசுவின் மகிமை, நாட்டு மாடுகளின் சிறப்பு, அந்நிய நாட்டு கலப்பின மாடுகள், திருமுறைப் பாடல்களில் பசு, பசுத்தானம், கோபூசை, பசுவுக்காக வாழ்ந்தோர், வீபூதி, பசுப்பாலின் மகிமை, மாடு பற்றிய பழமொழிகள், காளை மாடுகள், ஆவுரஞ்சிக் கல், சவாரி மாடுகளின் நல்ல இலட்சணங்கள், சவாரி மாடுகளுக்குரிய குற்ற அங்க அடையாளங்கள், பசு, காளைகளுக்குரிய குற்ற அடையாளச் சுழிகள், விதியை மாற்றும் சுழிகளும் சாஸ்திரங்களும், கண்ணனும் பசுக்களும், மாட்டுத் தொழுவத்தில் இயேசுபிரான், காமதேனுப் பசு, மாடுகளிலிருந்து கிடைக்கும் மகத்தான மருந்துகள், மாடுகளுக்கான மருந்துகள், சூட்சுமமான சூட்டுக்கோல் குறிகள் ஆகிய 22 தலைப்புக்களில் மாட்டினம் பற்றிய பல்வேறு தகவல்களை இந்நூலில் நூலாசிரியர் பதிவுசெய்திருக்கிறார். சுழிபுரம் விக்ரோரியா கல்லூரியின் முன்னாள் ஆசிரியரும் அராலி முருகமூர்த்தி வித்தியாலயத்தின் தற்போதைய அதிபருமான திருச்செல்வம் தவரத்தினம் அவர்கள் எழுதிய நூல் இது.

## 642 உணவும் பரிமாறலும்

### 12643

**சத்துணவுகள்.** *மலர் சிவராசா. மண்டூர்: மலர் சிவராசா, மலரகம், 1வது பதிப்பு, 1994. (மட்டக்களப்பு: கத்தோலிக்க அச்சகம்).*

*(8), 96 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.*

*சோளத்தில் தயார் செய்யக்கூடிய சத்து உணவுகள், இறுங்கில் தயார்செய்யக்கூடிய உணவுகள், குரக்கனில் தயாரிக்கும் சத்துணவுகள், மரவள்ளியில் சுவையான சத்துணவுகள், புடிங் வகைகள், சோயா அவரையில் சுவையுள்ள உணவுகள், பழங்களையும் காய்கறிகளையும் பாதுகாக்கும் முறைகள், கஞ்சி வகை,சம்பல் வகை, ஈரப்பலாக்காயில் கட்லெட் ஆகிய பத்து அத்தியாயங்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. விவசாயத்தில் டிப்ளோமா பட்டம்பெற்ற திருமதி மலர் சிவராசா விவசாயத் திணைக்களத்தில் பல ஆண்டுகாலம் பணியாற்றியவர். இவரது கணவர் அமரர் அ. சிவராசா அவர்களும் விவசாயப் போதனாசிரியராக பல ஆண்டுகாலம் பணி புரிந்தவர். விவசாயத்துறையில் அறிவும், ஆற்றலும், அனுபவமும் பெற்ற மலர் சிவராசா எடுத்துக்கொண்ட அரிய முயற்சியின் பயனாக உருவாக்கிய இந்நூலில் சாமான்ய மக்களின் உணவாகக் கருதப்படும் தானியங்கள், கிழங்குவகைகள், காய்கறிகள், பழவகைகள் ஆகியவற்றில் இருந்து தயாரிக்கக்கூடிய போசாக்கும், ருசியும், கவர்ச்சியும் கொண்ட பல்வேறு உணவு வகைகளைப்பற்றி விபரிக்கப்பட்டுள்ளது. மூலப்பொருட்கள் அனைத்தும் இலகுவாகப் பயிரிடக் கூடியதும், மலிவாகப் பெற்றுக்கொள்ளக் கூடியதாயும் இருப்பது இந்நூலின் இன்னுமோர் சிறப்பம்சமாகின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 14754. நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தின் சேர்க்கை இலக்கம் 007171).*

**மேலும் பார்க்க: 13A08**

## 650 முகாமைத்துவம், அலுவலக நிர்வாகம்

### 12644

**அபிவிருத்திக்கான முகாமைத்துவச் சிந்தனைகளும் செயற்பாடுகளும்.** *மா.செல்வராஜா. மகரகம: மா.செல்வராஜா, கல்வி முகாமைத்துவ அபிவிருத்தித்துறை, தேசிய கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1996. (தெகிவளை: ஏ.ஜே.பிரின்ட்ஸ், 1,* B.T.P.De Silva Mawatha).

*163 பக்கம், விலை: ரூபா 120., அளவு: 21.5x14 சமீ.,* ISBN: *955-95598-4-2.*

*பல முகாமைத்துவ ஆராய்ச்சியாளர்களின் கருத்துக்களை இவ்வெளியீட்டின் மூலம் நூலாசிரியர் வெளிக்கொணர்ந்துள்ளார். முகாமைத்துவக் கருத்துக்கள் காலப்பரிமாணப் படிமுறையில் தொகுத்துத் தரப்பட்டுள்ளமை இந்நூலின் தனிச்சிறப்பாகும். இதில் முகாமைத்துவச் சிந்தனையாளர்களது கருத்துக்கள் தரப்பட்டுள்ளதுடன் முகாமைத்துவச் செயற்பாடுகள் தொடர்பான ஓர் ஆரம்ப*

அறிவும் கொடுக்கப்பட்டுள்ளது. முடியுமான அளவில் இலகுவான மொழியில் தரப்படுவதால் விளங்குவதற்கு இலகுவாக உள்ளது. இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ள இந்நூலின் முகாமைத்துவச் சிந்தனைகள் என்ற முதற் பகுதியில், அறிமுகம், பிரடெரிக் டபிள்யு. ரெயிலர், ஹென்றி பயோல், எல்ரன் மாயோ, மேரி பொலெற், டக்ளஸ் மக்றேகர், பிரடெரிக் ஹேஸ்பேர்க், ஏபிரகாம் மாஸ்லோ, பீற்றர் றக்கர், தியோடோர் லெவிற் ஆகியோரது கருத்துக்கள் தரப்பட்டுள்ளன. முகாமைத்துவச் செயற்பாடுகள் என்ற இரண்டாம் பகுதியில், அறிமுகம், முகாமைத்துவச் சிந்தனைப் பிரிவுகளும் அணுகுமுறைகளும், முகாமைத்துவத் தொழிற்பாடுகள், திட்டமிடல், ஒழுங்கமைத்தல், கட்டுப்படுத்தல், தீர்மானம் செய்தல், தொடர்பாடல், குறிக்கோள் சார்ந்த முகாமைத்துவம் ஆகிய முகாமைத் துவச் செயற்பாடுகள் விபரிக்கப்பட்டுள்ளன. நூலின் இறுதியில் துணை நூற் பட்டியலும், கலைச் சொற் பட்டியலும் தரப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 33309. நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தின் சேர்க்கை இலக்கம் 007219).

## 12645

**அலுவலகம் மரபும் செயலும்**. காசுபதி நடராசா, சீ.அமிர்தலிங்கம் (தொகுப்பாசிரியர்கள்). மட்டக்களப்பு: பிரதேச செயலகம், மண்முனைப்பற்று, ஆரையம்பதி, 1வது பதிப்பு, ஜூன் 1996. (மட்டக்களப்பு: ஆதவன் அச்சகம்).

iv, 68 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.

நொராட் நிதியுதவித் திட்டத்தின்கீழ் மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைந்த புனர்வாழ்வு புனரமைப்புத் திட்டத் தலைவரும் அரச அதிபருமான அ.கி. பாக்கியநாதன் அவர்களின் தலைமையில், திட்ட இணைப்பாளர் ஆர். சிவானந்தராசா அவர்களின் ஆலோசனையில், மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் மா.உதயகுமார் அவர்களின் வழிகாட்டலில் மண்முனைப்பற்று பிரதேச செயலக உத்தியோகத்தர்களின் அலுவலக நிர்வாக முகாமைத்துவ அறிவை மேம்பாடடையச் செய்வதற்காக மட்டக்களப்பு அரசினர் கலாசாலையில் 1995 டிசம்பர் 15-17 வரையும், 22-24 வரையும் இரு குழுக்களாக இடம்பெற்ற மூன்று நாள் வதிவிடப் பயிற்சி முகாமின் கருத்தரங்கின் தொகுப்பு நூல். மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ள இந்நூலின் முதலாம் பிரிவான "அலுவலகமும் செயற்பாடுகளும்" என்ற பிரிவில் அலுவலகம்-1: அமைப்பும் நிலையும் (சி. சண்முகம்), அலுவலகம்-2: உள்ளக ஒழுங்கமைப்பு (ப.கிட்ணபிள்ளை), அரச நிதிப் பிரமாணங்களும் நிதி நடைமுறைகளும் (கு.ஆறுமுகம்), அரச திணைக்களங்களின் குறைகளும் நீக்கும் வழிகளும் (ஞா.தேவஞானன்), கணக்காய்வும் ஐய வினாக்களும் நடவடிக்கையும் (கு.அருளானந்தம்), ஒழுக்காற்று நடவடிக்கைகள் (இரா.தியாகராசா), பொதுசனத் தொடர்பு (எஸ்.லோகநாதன்) ஆகிய கட்டுரைகளும், இரண்டாம் பிரிவான "திட்டமிடலும் அபிவிருத்தியும்" என்ற பிரிவில் திட்டமிடலும் முகாமைத்துவமும் (சா.ஜெயராம்), அபிவிருத்தி நிர்வாகம் (எஸ்.சண்முகம்), கிராம அபிவிருத்தியில் அரச ஊழியர் (ஆர். தியாகலிங்கம்) ஆகிய கட்டுரைகளும், மூன்றாவது பிரிவான "சேவைகளும்

பயன்பாடும்” என்ற பிரிவில் புனர்வாழ்வு புனரமைப்பில் சமூகநல சேவை (ஜனாப் எம். எஸ்.பசீர்), வறுமை நிவாரண நிகழ்ச்சித் திட்டத்தில் உணவு முத்திரை (வி.எம்.பத்மநாதன்), சூழல் மாசடைதலும் அதனைக் கட்டுப்படுத்துதலும் (க. பிரேம்குமார்) ஆகிய கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன. பிற்சேர்க்கையாக வாழ்வோடு விளையாடும் மன அழுத்தம் (தெ.ஜெயராமன்) என்ற வீரகேசரி கட்டுரையின் மீள்பதிப்பும் இடம்பெற்றுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 38775).

## 12646

**தந்திரோபாய மனிதவள முகாமைத்துவம்(உயர்கல்விக்குரியது).** தனேஸ்வரி ரவீந்திரன். யாழ்ப்பாணம்: உயர்கல்வி நிலையம், 1வது பதிப்பு, ஜுன் 2004. (அச்சக விபரம் தரப்படவில்லை).

iv, 156 பக்கம், விலை: ரூபா 225., அளவு: 21x15 சமீ.

நிறுவனங்கள் சிறந்த வினைத்திறனை அடைவதற்கு தொழில் வழங்குவோரும் முகாமையாளர்களும் மனித வளங்களை சரியான முறையில் முகாமைசெய்ய வேண்டிய தேவை எழுந்துள்ளது. இதனால் இன்று மனிதவள முகாமைத்துவம் பிரபல்யம்பெற்ற ஒரு துறையாக வளர்ந்துள்ளது. தந்திரோபாய மனிதவள முகாமைத்துவம் (Strategic Human Resource Management) பற்றிய அறிவினை எட்டு அத்தியாயங்களில் இந்நூல் தந்திரோபாய மனிதவள முகாமைத்துவத்திற்கான அறிமுகம், ஊழியரது உரிமைகளை மதித்தலும் ஒழுக்காற்று முறைமையை முகாமை செய்தலும், தொழில் உறவுகளின் இயக்கங்கள், மனக்குறைகளை கையாளுவது தொடர்பான படிமுறைகள், வேலைத்தலத்திலான பாதுகாப்பும் ஆரோக்கியமும், ஊழியர் நலன்களும் சேவைகளும், ஊழியர் வேலையிலிருந்து விலகுதல் தொடர்பான முகாமைத்துவம், சர்வதேசரீதியான மனிதவள முகாமைத்துவம் ஆகிய தலைப்புகளின்கீழ் வழங்குகின்றது. நூலாசிரியர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளராவார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 39451).

## 12647

**தடை தாண்டல், பதவி உயர்வுகள், நேர்முகப் பரீட்சைகள்.** ஏ.எல்.எம். பளீல். ஸ்ரீலங்கா: பல்கலைக் கல்வி நிலையம், 1வது பதிப்பு, 2001. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளூமெண்டால் வீதி).

8+31+60+16+27 பக்கம், விலை: ரூபா 199., அளவு: 23x18 சமீ.

ஒவ்வொரு வருடமும் இலங்கை அரசாங்கத்தால் வெளியிடப்படும் புதுப்புதுச் சுற்றறிக்கைகள், அரசாங்கப் பிரமாணங்கள் என்பவற்றைக் கருத்துக்கெடுத்து தயாரிக்கப்பட்ட பரீட்சை வழிகாட்டி. சகல வகை உத்தியோகத்தர்களுக்குமானது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 20807).

## 12648

**மனித வள முகாமை: உற்பத்தித்திறன் அதிகரிப்பிற்கான தந்திரோபாயங்களும் நுட்பங்களும்.** க.ரகுராகவன், இரா.பத்மரஞ்சன். மட்டக்களப்பு: யுனைட்டட் வெளியீடு, மட்டக்களப்பு மாவட்ட லயன்ஸ் கழகத்தின் சமூக அபிவிருத்தி நிதிக்கான வெளியீடு, 1வது பதிப்பு, டிசம்பர் 1997. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

(6), 173 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 19x13 சமீ., ISBN: 955-645-000-9.

நிகழ்கால நிறைவேற்றுநர்களுக்கான உற்பத்தித்திறன் அதிகரிப்பிற்கான பதினைந்து செயல்முறைத் தந்திரோபாயங்களின் சுருக்கமே இந்நூலின் உள்ளடக்கமாகும். நூலாசிரியர்கள் நிறுவன உற்பத்தித் திறனை அதிகரிக்கும் வகையில் எவ்வாறான நடத்தையியல் மற்றும் பிரயோக உபாயங்களை முகாமையாளர்கள் கையாளமுடியும் என்பதைக் கோட்பாடுகளின் துணைகொண்டு விளக்கியுள்ளனர். இவை முகாமையாளர்களின் சிந்தனைக்கு விருந்தாக அமைவதுடன் அவர்கள் மனித வளத்தை சிறப்பாகக் கையாள உதவுவதாகவும் அமைகின்றது. நூலாசிரியர் க. ரகுராகவன் கிழக்குப் பல்கலைக்கழக வணிக முகாமைத்துவபீட பீடாதிபதியாவார். இரா.பத்மரஞ்சன், தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வணிக முகாமைத்துவ பீடத்தின் விரிவுரையாளர்களுள் ஒருவராவார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 23236).

## 12649

**வலுவூட்டல் முகாமைத்துவம்.** தி.வேல்நம்பி. யாழ்ப்பாணம்: குரு வெளியீடு, 1வது பதிப்பு, 2008. (யாழ்ப்பாணம்: குரு பிரின்டர்ஸ், 39/2, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி).

viii, 136 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 20x14 சமீ., ISBN: 978-955-51423-1-1.

பல்வேறு முகாமைத்துவ எண்ணக்கருக்களை ஒரே சமயத்தில் உள்வாங்கிய முறையில் இந்நூல் அமைகின்றது. இந்நூல் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், நிர்வாகிகள் என அனைவருக்கும் முகாமைத்துவ அறிவினை வளர்த்தெடுக்கும் வகையில் எழுதப்பட்டுள்ளது. செயல்திறன் அளவீட்டுக் காரணிகள்: ஓர் எண்ணக்கரு ரீதியான ஆய்வு, ஆசிரியர் தொழில்சார் வாண்மை விருத்தியும் வழிகாட்டலும்: ஓர் செயற்பாட்டுத் திட்டம், பாடசாலைத் தலைமைத்துவம், நேரமுகாமைத்துவம், கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட சிறுகைத் தொழில் முயற்சிகள்-ஒரு ஆய்வு ஆகிய ஐந்து பிரதான இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. ஆசிரிய வாண்மை விருத்திக்கான வழிவகைகளும், பாடசாலைத் தலைமைத்துவத்திற்கான வழிகாட்டல்களும் இயலுமானவரை இந்நூலில் பட்டியலிடப்பட்டுள்ளன. எல்லோருக்கும் அவசியமான நேர முகாமைத்துவம் சற்று விரிவாக ஆராயப்பட்டுள்ளதுடன் சிறு தொழில் முயற்சிகள் பற்றிய தடைகள், அத்தடைகளை நீக்குவதற்கான வழிகள் பற்றியும் இந்நூலில்

*விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 51031).*

**மேலும் பார்க்க: 12192**

## 653 தட்டச்சு, சுருக்கெழுத்து

### 12650

**தமிழ்த் தட்டெழுத்து: தொடுகைமுறைப் பயிற்சி வழிநூல்.** *சே.சிவசுப்பிரமணிய சர்மா. சுன்னாகம்: சே.சிவசுப்பிரமணிய சர்மா, கந்தரோடை, 1வது பதிப்பு, மே 1964. (கல்லச்சுப் பிரதியாக வெளிவந்த நூல்).*

*(28), 11+19 பக்கம், விலை: ரூபா 2.00, அளவு: 16x20 சமீ.*

*கல்லச்சுப் பிரதியாக ஆசிரியரால் வெளியிடப்பட்ட இப்பயிற்சி நூல் சித்திரக் கொப்பி வடிவில் அச்சிடப்பட்டுள்ளது. கணனிப் பயன்பாட்டுக்கு முன்னர் ஒரு காலகட்டத்தில் பிரபல்யமாக இருந்த றிமிங்ரன், ஒலிம்பியா வகைத் தமிழ்த் தட்டச்சு இயந்திரங்களின் எழுத்தமைப்புக்கு இணங்கத் தயாரிக்கப்பட்ட தட்டச்சுப் பயிற்சிக் கைநூல் இது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 2886).*

## 657 கணக்கியல்

### 12651

**உயர் கணக்கீடு: உற்பத்திக் கணக்கீடு: அலகு 1-1.** *கு.கலைச்செல்வன். கொழும்பு 6: கு.கலைச்செல்வன், எம்.ஓ.டீ. ஸ்டடி சென்டர், 33, பொஸ்வெல் பிளேஸ், வெள்ளவத்தை, 1வது பதிப்பு, ஜனவரி 2000. (கொழும்பு : அச்சக விபரம் தரப்படவில்லை).*

*(2), 46 பக்கம், விலை: ரூபா 80., அளவு: 24.5x17 சமீ.*

*உற்பத்திக் கணக்கீடு பற்றிய கணக்கியல் அறிவினை வழங்கும் இந்நூல் உற்பத்திக் கணக்கு அறிமுகம், பயிற்சிக் கணக்குகள்: விபரமான விடையுடன், உற்பத்தி இலாபம்/நட்டம், விற்பனையாகாத முடிவுப் பொருளும் தேறாத இலாபமும், கிரயக் கூற்று, பயிற்சிக் கணக்குகள் ஆகிய ஆறு அலகுகளில் விரிவான விளக்கத்தையும் பயிற்சிகளையும் வழங்குகின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 36987).*

### 12652

**கணக்கியல்: இரண்டாம் பகுதி.** *எம்.ரீ.சுமணானந்த, ஆனந்த சிறிசேன (மூலம்), இ.சிவானந்தன், த.இ.இராசலிங்கம் (மொழிபெயர்ப்பாளர்கள்), வே.பேரம்பலம் (பதிப்பாசிரியர்). கொழும்பு 10: கல்வி வெளியீட்டுத் திணைக்களம், மாளிகாவத்தைச் செயலகம், 1வது பதிப்பு, 1979. (கொழும்பு: அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்).*

*(6), 82 பக்கம், அட்டவணைகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x13.5 சமீ.*

*உயர்கல்வித் தரங்களில் கணக்கியல் பயிலும் மாணவர்களுக்கு உதவுமாறு இந் நூல் எழுதப்பட்டுள்ளது. இது 11ஆம் 12ஆம் தரங்களில் கணக்கியலை ஒரு பாடமாகக் கற்கும் மாணவர்களுக்கு ஒரு துணைநூலாக விளங்கும் தன்மையது. துணையேடுகள் (முதற்பதிவு ஏடுகள்), பரீட்சை நிலுவைகள், இறுதிக்கணக்கு ஆகிய மூன்று பிரிவுகளில் இதன் விடயதானங்கள் வகுத்துத் தரப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 35096).*

## 12653

**கணக்கியற் சுருக்கம்: பகுதி II.** வே.அழகேசன். யாழ்ப்பாணம்: வே.அழகேசன், *1வது பதிப்பு, 1980. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ பார்வதி அச்சகம், (288), 536, ஆஸ்பத்திரி வீதி).*

*பக்கம் 375-722, விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x13.5 சமீ.*

*கணக்கியற் சுருக்கம் நூலின் முதற்பாகம் 374 பக்கங்களில் வெளிவந்துள்ள நிலையில் இவ்விரண்டாம் பாகம் தொடர் பக்க இலக்கங்களுடனும் அத்தியாயங்கள் 10 முதல் 21 வரையிலுமான விடயதானங்களுடன் வெளிவந்துள்ளது. இவ்விரண்டாம் பாகத்தில் வங்கிக் கணக்கிணக்கக் கூற்று, மீட்டல் அப்பியாசம் II, ஒப்படைக் கணக்குகள், பங்குடமை, தற்சமனாக்கும் பேரேடுகள், பரும்படிச் செய்கைக் கணக்கு, பகுதிக் கடைக் கணக்குகள், கூட்டு முயற்சிக் கணக்குகள், கொள்ளல் கொடுத்தற் கணக்கு/வருமானச் செலவுக் கணக்கு, நிறைவில் பதிவுகளிலிருந்து கணக்குகள் தயாரித்தல், மீட்டல் அப்பியாசம் III, வினாப் பத்திரங்கள், விடைகள் ஆகியவை இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 35322).*

## 12654

**கணக்கீடு பகுதி 3.** நாகலிங்கம் யோகராசா. கொழும்பு 6: ஜனனி வெளியீட்டகம், *181/4, 3/1 W.A. சில்வா மாவத்தை, 1வது பதிப்பு, ஆவணி 2004. (கொழும்பு 6: கு.பிரதீபன், எஸ்.பிரின்ட்).*

*iv, 216 பக்கம், விலை: ரூபா 160., அளவு: 21x14 சமீ.*

*நிலையான சொத்துக்களின் பெறுமானத் தேய்வு, நிறைவிற் பதிவேடுகள், இலாப நோக்கமற்ற அமைப்புக்களின் கணக்குகள் ஆகிய மூன்று விடயத் தலைப்புகளில் க.பொ.த. உயர்தர வகுப்பு மாணவர்களுக்கேற்ற வகையில் இந்நூல் எழுதப் பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 36943).*

## 12655

**கிரயக் கணக்கியல்: பாகம் 1.** ரதிராணி யோகேந்திரராஜா. யாழ்ப்பாணம்: ரதிராணி யோகேந்திரராஜா, வணிகவியல் துறை, முகாமைத்துவ வணிகவியல் புலம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, 2002. (யாழ்ப்பாணம்: உயர் கல்விச் சேவைகள் நிலையம்).

321 பக்கம், விலை: ரூபா 450., அளவு: 24.5x19 சமீ.

Cost Accounting எனப்படும் கிரயக்கணக்கியல் பற்றிய இந்நூல், நவீன உற்பத்திச் சூழலில் முகாமைத்துவ நோக்கங்களை நிறைவேற்ற இன்றியமையாததாக உள்ளது. ஒரு நிறுவனத்தின் திட்டமிடல் தீர்மானமெடுத்தல் கட்டுப்படுத்தல் போன்ற முகாமைத்துவக் கருமங்களுக்கு கிரயக் கணக்கியலே உறுதுணையாக அமைகின்றது. இந்நூல் கிரயக் கணக்கியலை அறிமுகம், கிரய மூலங்களும் கிரய வகைப்படுத்தலும், மூலப்பொருள் கிரயம், கூலிக்கிரயம், மேந்தலைகள், எல்லைக் கிரயவியலும் உள்ளடக்க கிரயவியலும், கிரயக்கணக்குப் பதிவியல் ஆகிய ஏழு அத்தியாயங்களில் படிமுறையில் விளக்குகின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 30125).

## 12656

**கிரயக் கணக்கீடு: அலகு 6-2: கூலிக்கிரயமும் மேந்தலைக் கிரயமும்.** கு.கலைச்செல்வன். கொழும்பு 6: கு.கலைச்செல்வன், எம்.எஸ்.பப்ளிக்கேஷன்ஸ், இல. 6, கொலிங்வுட் பிளேஸ், வெள்ளவத்தை, 3வது பதிப்பு, பெப்ரவரி 2002, 1வது பதிப்பு, 1997, 2வது பதிப்பு, 1999. (கொழும்பு: யூ.கே.பிரின்டர்ஸ்).

103 பக்கம், அட்டவணை, விலை: ரூபா 120., அளவு: 25x18 சமீ.

Cost Accounting எனப்படும் கிரயக் கணக்கீட்டுப் பாடத்திட்டத்தில் அலகு 6-2 ஆக வெளிவரும் இப்பாகத்தில் கூலிக்கிரயமும், மேந்தலைக் கிரயமும் ஆகிய இரு விடயங்கள் பற்றி விரிவாக விளக்கப்பட்டுள்ளது. கூலிக் கிரயம் என்ற பகுதியில் அறிமுகம், நேரப் பதிவு, செயற்படுகாலப் பதிவு, கூலிக் கொடுப்பனவு முறைகள், நேரக்கூலி முறை, துண்டுக்கூலி முறை, மிகை ஊதியத்திட்டம் (கல்சி முறை/கல்சிவெயர் முறை/ ரொவான் முறை/பாத் முறை), பயிற்சிகள், சம்பளப்பட்டியல், சம்பளப்பட்டியல் தொடர்பான பயிற்சிகள், கடந்தகாலப் பரீட்சை வினாக்கள்-கூலிக்கிரயம், தொழிலாளர் புரழ்வுவீதம், கிரயக்கட்டுப்பாடும் வேலை ஆய்வும் ஆகிய பாடங்கள் விளக்கப்பட்டுள்ளன. மேந்தலைக் கிரயம் என்ற பிரிவில் அறிமுகம், முதலாம் கட்டப் பகிர்வு, இரண்டாம் கட்டப் பகிர்வு, பயிற்சி, மேந்தலைச் செலவுகளை உள்ளடக்குதல், கடந்தகாலப் பரீட்சை வினாக் கள் (மேந்தலைக் கிரயம்) ஆகிய பாடங்கள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 36985).

## 12657

**நிதிக் கணக்கீட்டுக்கோர் அறிமுகம்: கணக்கீட்டு முதன்மைகள், இலங்கை கணக்கீட்டு நியமங்கள்.** கு.கலைச்செல்வன். கொழும்பு 6: மொட் ஸ்டடி சென்டர், 33, பொஸ்வெல் பிளேஸ், வெள்ளவத்தை, 2வது பதிப்பு, ஜுலை 1999, 1வது பதிப்பு, ஜனவரி 1996. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளூமெண்டால் வீதி).

(4), 80 பக்கம், விலை: ரூபா 90.00, அளவு: 21.5x14 சமீ.

நிதிக் கணக்கீட்டுக்கோர் அறிமுகம், கணக்கீட்டு முதன்மைகள் (எண்ணக்கருக்கள், கணக்கீட்டு மரபுகள்), கணக்கிட்டு உள்ளீடுகள், கணக்கீட்டு செயன்முறை வருமானங்களினதும் செலவுகளினதும் பாகுபாடு, இணைதல் எண்ணக்கரு, இலங்கை கணக்கீட்டு நியமம் (இ.க.நி.), இ.க.நி. 3, இ.க.நி. 5, இ.க.நி. 8, இ.க.நி. 9, இ.க.நி. 10, இ.க.நி. 12 ஆகிய தலைப்புகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. நூலாசிரியர் கு.கலைச்செல்வன், யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறையின் நாரந்தனை கிழக்கு கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். கொழும்பு 7, டீ.எஸ். சேனாநாயக்க கல்லூரியின் ஆசிரியராகக் கடமையாற்றுகின்றார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 38014).

## 12658

**பங்குடமைக் கணக்கீடு- அலகு 9.** கு.கலைச்செல்வன். கொழும்பு 6: மொட் ஸ்டடி சென்டர், 33, பொஸ்வெல் பிளேஸ், வெள்ளவத்தை, 1வது பதிப்பு, நவம்பர் 1998. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளூமெண்டால் வீதி).

iv, 228 பக்கம், அட்டவணைகள், விலை: ரூபா 190.00, அளவு: 21x14 சமீ.

கணக்கியலில் Partnership Accounting பற்றிய பாடப்பரப்பை விளக்கும் நூல் இது. பங்குடமை அறிமுகம், உத்தரவாத இலாபப் பங்கு, பற்று வட்டி, பங்குடமை முடிவுக்கணக்குப் பயிற்சிகள், பங்குடமை முடிவுக்கணக்கு பயிற்சி விடைகள், நன்மதிப்பு, பங்காளர் இலாபநட்ட விகிதாசார மாற்றம், பங்காளர் சேர்தலும் சொத்துக்கள் மறுபடி விலைமதித்தலும், பங்காளர் சேர்தல் முடிவுக் கணக்குப் பயிற்சிகள், பங்காளர் சேர்தல் முடிவுக் கணக்குப் பயிற்சி விடைகள், பங்காளர் சேர்தல் கடந்தகாலப் பரீட்சை வினாக்கள், பங்காளர் ஓய்வுபெறல், பங்காளர் ஓய்வுபெறல் முடிவுக்கணக்குப் பயிற்சிகள், பங்காளர் ஓய்வுபெறல் முடிவுக்கணக்குப் பயிற்சி விடைகள், பங்காளர் ஓய்வுபெறல் கடந்தகாலப் பரீட்சை வினா 1994, பங்காளர் ஓய்வுபெறுதலும் சேர்தலும், பங்காளர் ஓய்வுபெறுதலும் சேர்தலும் பயிற்சி வினாக்கள், பங்காளர் ஓய்வுபெறுதலும் சேர்தலும் பயிற்சி விடைகள், பங்காளர் ஓய்வுபெறுதலும் சேர்தலும் கடந்தகாலப் பயிற்சி வினாக்கள் 1997 ஆகிய 20 தலைப்புகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 36991).

## 658.15 நிதி முகாமைத்துவம்

### 12659

**இலங்கை மத்திய வங்கி: ஆண்டறிக்கை 1970.** இலங்கை மத்திய வங்கி. கொழும்பு 1: நாணயச் சபை, இலங்கை மத்திய வங்கி, தபால் பெட்டி இலக்கம் 590, 1வது பதிப்பு, மார்ச் 1971. (கொழும்பு 12: குமரன் பதிப்பகம், 201, டாம் வீதி).

(8), 286, xx+vii பக்கம், 23 வரைபடங்கள், 30 அட்டவணைகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 27x17.5 சமீ.

நாணய விதிச் சட்டத்தின் (422ஆம் அத்தியாயம்) 35(1)ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க வெளியிடப்பட்டுள்ள இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினது 21ஆவது ஆண்டறிக்கை இது. நான்கு பிரிவுகளாயமைந்துள்ள இவ்வறிக்கையின் முதற் பிரிவில் பொருளாதாரச் செயலாற்றல் பிரச்சினைகள், கொள்கைகள்-1970 (பொருளாதாரச் செயலாக்கம், சென்மதி நிலுவைப் பிரச்சினை) ஆகிய தலைப்புகளிலும், இரண்டாவது பிரிவில் பொருளாதார நிதிப் போக்குகள்-1970 (தேசிய உற்பத்தியும் செலவும், கைத்தொழில் உற்பத்தி, அரசாங்கத் தொழில் முயற்சிகள், பணம், வங்கித் தொழில்ஆகியவற்றின் அபிவிருத்திகள், கிராமியக் கொடுகடன்கள், அரசாங்க நிதி, சென்மதி நிலுவையும் வெளிநாட்டு இருப்புச் சொத்துக்களும் சுற்றுலாவும், விலைகளும் கூலிகளும், வேலை தொழில் உறவுகளும், வெளிநாட்டு வர்த்தகம் ஆகிய தலைப்புகளிலும், மூன்றாவது பிரிவில் மத்திய வங்கியின் கணக்குகளும் தொழிற்பாடும் என்ற தலைப்பிலும், நான்காவது பிரிவில் அலுவலகப் பணியாளர் என்ற தலைப்பிலும் இவ்வறிக்கை சமர்ப்பிக்கப் பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 4552).

### 12660

**இலங்கை மத்திய வங்கி: ஆண்டறிக்கை 1971.** இலங்கை மத்திய வங்கி. கொழும்பு 1: நாணயச் சபை, இலங்கை மத்திய வங்கி, தபால் பெட்டி இலக்கம் 590, 1வது பதிப்பு, மார்ச் 1972. (கொழும்பு 12: குமரன் பதிப்பகம், 201, டாம் வீதி).

viii, 281, clxxxvi+xv பக்கம், 23 வரைபடங்கள், 65 அட்டவணைகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 27x17 சமீ.

நாணய விதிச் சட்டத்தின் (422ஆம் அத்தியாயம்) 35(1)ஆம் பிரிவின் ஏற்பாடு களுக்கிணங்க வெளியிடப்பட்டுள்ள இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினது 22ஆவது ஆண்டறிக்கை இது. இவ்வறிக்கை நான்கு பகுதிகளாகத் தயாரிக்கப்பட்டுள்ளது. முதலாவது பகுதியில், 1971ஆம் ஆண்டுக்குரிய பொருளாதாரச் செயலாற்றல், பிரச்சினைகள் கொள்கைகள் என்பன அறிக்கையிடப்பட்டுள்ளன. 2ஆவது பகுதியில், 1971ம் ஆண்டுக்குரிய தேசிய உற்பத்தியும் செலவும், கைத்தொழில் உற்பத்தி, அரசாங்கத் தொழில் முயற்சிகள், பணம், வங்கித் தொழில் ஆகியவற்றின் அபிவிருத்திகள், கிராமிய வங்கித் தொழிலும் கொடுகடனும், அரசாங்க நிதி, சென்மதி நிலுவைகளும் வெளிநாட்டு இருப்புச் சொத்துக்களும், விலைகளும் கூலிகளும், வேலை நிலையும் தொழில்

உறவுகளும், வெளிநாட்டு வர்த்தகம் என்பனவற்றின் பொருளாதார நிதிப் போக்குகள் என்பன அறிக்கையிடப்பட்டுள்ளன. மூன்றாவது பகுதியில், மத்திய வங்கியின் கணக்குகளும் செயற்பாடுகளும், நான்காவது பகுதியில், அலுவலகப் பணியாளர்கள் பற்றியும் அறிக்கையிடப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 4553).

### 12661

**இலங்கை மத்திய வங்கி: ஆண்டறிக்கை 1972**. இலங்கை மத்திய வங்கி. கொழும்பு 1: நாணயச் சபை, இலங்கை மத்திய வங்கி, தபால் பெட்டி இலக்கம் 590, 1வது பதிப்பு, மார்ச் 1973. (கொழும்பு 12: குமரன் பதிப்பகம், 201, டாம் வீதி).

xii, 304, cclxv+xxii பக்கம், 23 வரைபடங்கள், 65 அட்டவணைகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x16 சமீ.

நாணய விதிச் சட்டத்தின் (422ஆம் அத்தியாயம்) 35(1)ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க வெளியிடப்பட்டுள்ள இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினது 23ஆவது ஆண்டறிக்கை இது. நான்கு பிரிவுகளாயமைந்துள்ள இவ்வறிக்கையின் முதற் பிரிவில் 1972ஆம் ஆண்டுக்கான பொருளாதாரச் செயலாற்றம், மற்றும் சிக்கல்களும் கொள்கைகளும் விளக்கப்பட்டுள்ளன. பொருளாதார நிதிப் போக்குகள் என்ற பிரிவில் தேசிய உற்பத்தியும் செலவினமும், கைத்தொழில் உற்பத்தி, அரசாங்கத் தொழில் முயற்சிகள், பணம், வங்கித் தொழில், ஆகியவற்றின் அபிவிருத்திகள், கிராமிய வங்கித் தொழிலும் கொடுகடனும், நடைமுறை மாதிரி அளவைகள், அரசாங்க நிதி, சென்மதி நிலுவையும் வெளிநாட்டுச் சொத்துக்களும், விலைகளும் கூலிகளும், தொழில்நிலையும் தொழில் உறவுகளும், வெளிநாட்டு வர்த்தகம் ஆகிய விடயங்கள் அறிக்கையிடப்பட்டுள்ளன. 3ம் பிரிவில் மத்திய வங்கிக் கணக்குகளும் தொழிற்பாடுகளும், 4ஆம் பிரிவில் ஆளணி வளங்களும் அறிக்கையிடப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 4554).

### 12662

**இலங்கை மத்திய வங்கி: ஆண்டறிக்கை 1976**. இலங்கை மத்திய வங்கி. கொழும்பு 1: நாணயச் சபை, இலங்கை மத்திய வங்கி, தபால் பெட்டி இலக்கம் 590, 1வது பதிப்பு, ஏப்ரல் 1977. (கொழும்பு 12: குமரன் பதிப்பகம், 201, டாம் வீதி).

(10), 55, lxxxiii+iv பக்கம், 7 வரைபடங்கள், 21 அட்டவணைகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25.5x16 சமீ.

நாணய விதிச் சட்டத்தின் (422ஆம் அத்தியாயம்) 34(1)ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க வெளியிடப்பட்டுள்ள இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினது 27ஆவது ஆண்டறிக்கை இது. இவ்வறிக்கையில் பொருளாதாரச் செயலாற்றமும், சிக்கல்களும் கொள்கைகளும் -1976 என்ற பிரிவில் பாரளாதார வளர்ச்சி, விலைகளும் கூலிகளும், தொழில் நிலை, வெளிநாட்டு வர்த்தகம், சென்மதி நிலுவை, அரசின் இறைத் தொழிற்பாடுகள், நாணய வங்கித் தொழில்

அபிவிருத்திகள் ஆகிய தலைப்புகளில் அறிக்கையிடப்பட்டுள்ளன. தொடர்ந்து மத்திய வங்கியின் கணக்குகளும் தொழிற்பாடுகளும், ஆளணி ஆகிய தலைப்புகளில் அறிக்கையிடப்பட்டுள்ளன. பின்னிணைப்புகளாக இலங்கை மத்திய வங்கியினதும் வங்கி நிறுவனங்களினதும் கடமைகளையும் தொழிற்பாடுகளையும் பற்றி 1976ஆம் ஆண்டில் இலங்கையின் தேசிய அரச பேரவையால் இயற்றப்பட்ட முதன்மைச் சட்டவாக்கங்கள், 1976ஆம் ஆண்டில் நாணயச்சபை மேற்கொண்ட முக்கிய நிர்வாக நடவடிக்கைகள் என்பன அறிக்கையிடப்பட்டுள்ளன. இறுதிப் பிரிவில் புள்ளிவிபர அட்டவணைகள் தேசிய உற்பத்தியும் செலவும், பணமும் வங்கித் தொழிலும், அரசநிதி, வெளிநாட்டு நிதி, வெளிநாட்டு வர்த்தகம், விலைகளும் கூலிகளும் ஆகிய தலைப்புகளின்கீழ் இடம்பெற்றுள்ளன.(இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 31124).

### 12663

**இலங்கை மத்திய வங்கி: ஆண்டறிக்கை 1977**. இலங்கை மத்திய வங்கி. கொழும்பு 1: நாணயச் சபை, இலங்கை மத்திய வங்கி, தபால் பெட்டி இலக்கம் 590, 1வது பதிப்பு, ஏப்ரல் 1978. (கொழும்பு 12: குமரன் பதிப்பகம், 201, டாம் வீதி).

(10), 66, xix+x பக்கம், 7 வரைபடங்கள், 21 அட்டவணைகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25.5x17 சமீ.

நாணய விதிச் சட்டத்தின் (422ஆம் அத்தியாயம்) 35(1)ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக் கிணங்க வெளியிடப்பட்டுள்ள இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினது 28ஆவது ஆண்டறிக்கை இது. இவ்வறிக்கையில் பொருளாதாரச் செயலாற்றமும், சிக்கல்களும் கொள்கைகளும் -1977 என்ற பிரிவில் தேசிய உற்பத்தியும் வருமானமும், வேளாண்மை உற்பத்தி, கைத்தொழில் உற்பத்தி, விலைகள், கூலிகள், தொழில் நிலை, வெளிநாட்டு வர்த்தகம், சென்மதி நிலுவை, அரசின் இறைத் தொழிற்பாடுகள், நாணய வங்கித் தொழில் அபிவிருத்திகள் ஆகிய தலைப்புகளில் அறிக்கையிடப்பட்டுள்ளன. தொடர்ந்து மத்திய வங்கியின் கணக்குகளும் தொழிற்பாடுகளும், ஆளணி ஆகிய தலைப்புகளில் அறிக்கையிடப் பட்டுள்ளன. பின்னிணைப்புகளாக இலங்கை மத்திய வங்கியினதும் வங்கி நிறுவனங்களினதும் கடமைகளையும் தொழிற்பாடுகளையும் பற்றி 1977ஆம் ஆண்டில் இலங்கையின் தேசிய அரச பேரவையால் இயற்றப்பட்ட முதன்மைச் சட்டவாக்கங்கள், 1977ஆம் ஆண்டில் நாணயச்சபை மேற்கொண்ட முக்கிய நிர்வாக நடவடிக்கைகள் என்பன அறிக்கையிடப்பட்டுள்ளன. இறுதிப் பிரிவில் புள்ளிவிபர அட்டவணைகள் தேசிய உற்பத்தியும் செலவும், பணமும் வங்கித் தொழிலும், அரசநிதி, வெளிநாட்டு நிதி, வெளிநாட்டு வர்த்தகம், விலைகளும் கூலிகளும் ஆகிய தலைப்புகளின்கீழ் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 31123).

## 12664

**இலங்கை மத்திய வங்கி: ஆண்டறிக்கை 1980**. இலங்கை மத்திய வங்கி. கொழும்பு 1: நாணயச் சபை, இலங்கை மத்திய வங்கி, சனாதிபதி மாவத்தை, 1வது பதிப்பு, 1981. (கொழும்பு: குமரன் அச்சகம், 201, டாம் வீதி).

(10), 169 பக்கம், civ, 38 அட்டவணைகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 23.5x16.5 சமீ.

31ஆவது ஆண்டாகத் தயாரிக்கப்பட்ட 1980ம் ஆண்டுக்கான ஆண்டறிக்கை இதுவாகும். 4 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ள இவ்வறிக்கையின் முதலாவது பிரிவில் பொருளாதார செயலாற்றமும், சிக்கல்களும் கொள்கைகளும்-1980, வேளாண்மை, கைத்தொழில், பொருளாதார சமூக நலன்புரிச் செலவுகள், தொழில்நிலை, சுற்றுலாத்துறை, அரசின் இறைத் தொழிற்பாடுகள், பணமும் வங்கித் தொழிலும் ஆகிய எட்டு விடயங்கள் பற்றிய அறிக்கை இடம்பெறுகின்றது. 2வது பிரிவில் மத்திய வங்கியின் கணக்குகளும் தொழிற்பாடுகளும், 3வது பிரிவில் 1980ஆம் ஆண்டின் முதன்மையான நிர்வாக வழிமுறைகளும், 4வது பிரிவில் 1980ஆம் ஆண்டின் முதன்மைச் சட்ட ஆக்கங்களும் இடம்பெற்றுள்ளன. (இந் நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 4558).

## 12665

**இலங்கை மத்திய வங்கி: ஆண்டறிக்கை 1983**. இலங்கை மத்திய வங்கி. கொழும்பு 1: நாணயச் சபை, இலங்கை மத்திய வங்கி, சனாதிபதி மாவத்தை, 1வது பதிப்பு, 1984. (கொழும்பு: குமரன் அச்சகம், 201, டாம் வீதி).

(12), 198 பக்கம், xxxvii, xvii, xxvi, 46 அட்டவணைகள், விலை: ரூபா 15.00, அளவு: 24x17 சமீ.

இலங்கை மத்திய வங்கி (Central Bank of Sri Lanka), இலங்கையின் நாணயக் கொள்கை, நிதியியல் முறைமையினை கட்டுப்படுத்தல், நெறிப்படுத்தல், நாணயங்களை அச்சிடல் போன்ற பணிகளை மேற்கொள்வதற்காக அமைக்கப்பட்ட அரச நிறுவனமாகும். இது இலங்கையின் நாணய மேலாண்மைச் சபையாக விளங்குகின்றது. இலங்கை விடுதலை பெற்று இரு ஆண்டுகளுக்குப் பின்னர் Central Bank of Ceylon எனும் பெயருடன் 1950 ம் ஆண்டு ஆகஸ்டு 28ம் திகதி நிறுவப்பட்டது. பின்னர் 1985 ல் தற்போதைய பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டது. அதுவரை நாட்டின் நாணய வழங்கலுக்குப் பொறுப்பாக இருந்த பணச் சபைக்குப் பதிலாக இலங்கை மத்திய வங்கி ஏற்படுத்தப்பட்டது. இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை மாண்புமிகு நிதி திட்டமிடல் அமைச்சருக்கு ஒப்படைத்த 1983ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கை இதுவாகும். 4 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ள இவ்வறிக்கையின் 1ம் பகுதியில் 1983ஆம் ஆண்டுக்குரிய பொருளாதாரச் செயலாற்றமும், பிரச்சினைகளும், கொள்கைகளும் அறிக்கையிடப்பட்டுள்ளன. இரண்டாம் பகுதியில் மத்திய வங்கியின் கணக்குகளும் தொழிற்பாடுகளும், 3ம் பகுதியில் முதன்மையான நிர்வாக விதிமுறைகளும், இறுதிப் பகுதியான 4வது

பகுதியில் முதன்மைச் சட்டவாக்கங்களும் அறிக்கையிடப்பட்டுள்ளன. (இந் நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 31103).

### 12666

**இலங்கை மத்திய வங்கி: ஆண்டறிக்கை 1985**. இலங்கை மத்திய வங்கி. கொழும்பு 1: நாணயச் சபை, இலங்கை மத்திய வங்கி, இல. 30, சனாதிபதி மாவத்தை, 1வது பதிப்பு, 1986. (கொழும்பு 14: ஸ்டார்லைன் அச்சகம், இல. 213, கிரான்ட்பாஸ் வீதி).

(12), 161, lxxxx பக்கம், 35 அட்டவணைகள், விலை: ரூபா 20., அளவு: 24.5x18 சமீ.

நாணய விதிச் சட்டத்தின் (422ஆம் அத்தியாயம்) 35(1)ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க வெளியிடப்பட்டுள்ள இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினது 36ஆவது ஆண்டறிக்கை இது. இதில் பொருளாதாரச் செயலாற்றம் 1985, மொத்த தேசிய உற்பத்தி, வருமானம், செலவு, வேளாண்மை, கைத்தொழில், பொருளாதார சமூக நலன்புரிச் செலவுகள், விலைகள், கூலிகள், தொழில்நிலை, வர்த்தகமும் சுற்றுலாவும், சென்மதி நிலுவை, அரச நிதி, பணமும் வங்கித் தொழிலும், ஆகிய விடயங்கள் சார்ந்த அறிக்கை முதலாம் பிரிவிலும், மத்திய வங்கியின் கணக்குகளும் தொழிற்பாடுகளும் இரண்டாம் பிரிவிலும், முக்கிய நிர்வாக வழிமுறைகள் மூன்றாவது பிரிவிலும், முதன்மைச் சட்டவாக்கங்கள் நான்காவது பிரிவிலும் புள்ளிவிபரப் பின்னிணைப்புகள் இறுதியாகவும் இடம் பெற்றுள்ளன.(இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 4561).

### 12667

**இலங்கை மத்திய வங்கி: ஆண்டறிக்கை 1990**. இலங்கை மத்திய வங்கி. கொழும்பு 1: நாணயச் சபை, இலங்கை மத்திய வங்கி, இல. 30, சனாதிபதி மாவத்தை, 1வது பதிப்பு, 1986. (கொழும்பு 14: ஸ்டார்லைன் அச்சகம், இல. 213, கிரான்ட்பாஸ் வீதி).

(12), 161, lxxxx பக்கம், 35 அட்டவணைகள், விலை: ரூபா 50., அளவு: 24.5x18 சமீ.

நாணய விதிச் சட்டத்தின் (422ஆம் அத்தியாயம்) 35(1)ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க வெளியிடப்பட்டுள்ள இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினது 41ஆவது ஆண்டறிக்கை இது. இவ்வறிக்கையின் முதலாம் பகுதியில் 1990இல் பொருளாதாரச் செயலாற்றம், பிரச்சினைகளும் கொள்கைகளும், தேசிய வருமானமும் செலவும், வேளாண்மை, ஏனைய வேளாண்மை உற்பத்திகள், கைத்தொழில், பொருளாதார சமூக நலன்புரிச் செலவுகள், விலைகள், கூலிகள், தொழில்நிலை, வர்த்தகமும் சுற்றுலாவும், சென்மதி நிலுவை, அரச நிதி, பணமும் வங்கித் தொழிலும், தேசிய உற்பத்தியும் செலவும் ஆகிய தலைப்புகளில்

*அறிக்கையிடப்பட்டுள்ளது. 2ம் பகுதியில் மத்திய வங்கிக் கணக்குகளும் தொழிற்பாடுகளும், 3வது பகுதியில் முக்கிய நிர்வாக வழிமுறைகள், 4ம் பகுதியில் முதன்மைச் சட்டவாக்கங்கள் ஆகியன அறிக்கையிடப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 10990).*

**12668**

**இலங்கை மத்திய வங்கி: ஆண்டறிக்கை 1998**. இலங்கை மத்திய வங்கி. கொழும்பு 1: நாணயச் சபை, இலங்கை மத்திய வங்கி, 35ஆவது மாடி, மேற்குக் கோபுரம், உலக வர்த்தக நிலையம், எக்சலன் சதுக்கம், இலங்கை வங்கி மாவத்தை, 1வது பதிப்பு, ஏப்ரல் 1999. (கொழும்பு 12: ஜே அன்ட் எஸ். சேர்விஸஸ் அச்சகம், 115 மெசெஞ்சர் வீதி).

(30), 287 பக்கம், lxii, liii, x, 122 அட்டவணைகள், விலை: ரூபா 100.00, அளவு: 27x20 சமீ., ISBN: 955-575-057-2.

*நாணய விதிச் சட்டத்தின் (அத்தியாயம் 422) 35ஆம் பிரிவானது பொருளாதார நிலைமை, மத்திய வங்கியின் நிலைமை மற்றும் நாணயச் சபையினால் மேற்கொள்ளப்பட்ட கொள்கைகள், வழிமுறைகள் என்பன பற்றிய ஆய்வு மீதான ஆண்டறிக்கையை ஒவ்வொரு நிதியாண்டும் முடிவடைந்து நான்கு மாதங்களுக்குள் மத்திய வங்கியின் நாணயச்சபை நிதி திட்டமிடல் அமைச்சுக்கு அனுப்பிவைக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றது. அவ்வகையில் 49ஆவது ஆண்டறிக்கை யாகத் தயாரிக்கப்பட்ட 1998ம் ஆண்டுக்கான ஆண்டறிக்கை இதுவாகும். 4 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ள இவ்வறிக்கையின் 1ம் பகுதியில் பொருளாதாரச் செயலாற்றல் பிரச்சினைகளும் கொள்கைகளும், தேசிய வருமானமும் செலவும், வேளாண்மை, மீன்பிடி, காடாக்கல், கைத்தொழில், பொருளாதார சமூக நலன்புரிச் செலவுகள், விலைகளும் கூலிகளும், குடித்தொகை, தொழிற்படை மற்றும் தொழில்நிலை, அரசிறைக் கொள்கையும் வரவு செலவுத் திட்ட தொழிற்பாடுகளும், வர்த்தகம் சென்மதி நிலுவைகள் மற்றும் சுற்றுலா, நிதியியற்துறை ஆகிய பத்து பிரிவுகள் அறிக்கையிடப்பட்டுள்ளன. 2வது பகுதியில் மத்திய வங்கியின் கணக்குகளும் தொழிற்பாடுகளும், பகுதி 3இல் 1998இல் நாணயச் சபையால் மேற்கொள்ளப்பட்ட முக்கிய நிர்வாக வழிமுறைகளும், 4வது பகுதியில் மத்திய வங்கியினதும் இலங்கையில் உள்ள வங்கித் தொழில் நிறுவனங்களினதும் கடமைகளும் தொழிற்பாடுகளும் தொடர்பான 1998ஆம் ஆண்டின் முதன்மைச் சட்டங்களும் அறிக்கையிடப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 18770).*

### 12669

**இலங்கை மத்திய வங்கி: ஆண்டறிக்கை 1999**. இலங்கை மத்திய வங்கி. கொழும்பு 1: நாணயச் சபை, இலங்கை மத்திய வங்கி, 35ஆவது மாடி, மேற்குக் கோபுரம், உலக வர்த்தக நிலையம், எக்சலன் சதுக்கம், இலங்கை வங்கி மாவத்தை, 1வது பதிப்பு, ஏப்ரல் 2000. (கொழும்பு 12: ஜே அன்ட் எஸ். சேர்விஸஸ் அச்சகம், 115 மெசெஞ்சர் வீதி).

(28), 304 பக்கம், lxix, lxxx, l, 124 அட்டவணைகள், விலை: ரூபா 100.00, அளவு: 28x20.5 சமீ., ISBN: 955-575-070-x.

நாணய விதிச் சட்டத்தின் (422ஆம் அத்தியாயம்) 35(1)ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க வெளியிடப்பட்டுள்ள இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினது 50ஆவது ஆண்டறிக்கை இது. நான்கு பிரிவகளைக்கொண்ட இவ்வறிக்கையின் முதலாவது பிரிவில் பொருளாதாரச் செயலாற்றம், கொள்கைகளும் விடயங்களும், தேசிய வருமானமும் செலவும், வேளாண்மை, கடற்றொழில் மற்றும் காடாக்கல், கைத்தொழில், பொருளாதார மற்றும் சமூக நலன்புரிச் செலவுகள், விலைகளும் கூலிகளும், குடித்தொகை, தொழிற்படை மற்றும் தொழில்நிலை, இறைக் கொள்கையும் வரவுசெலவுத் திட்டத் தொழிற்பாடுகளும், வர்த்தகம், சென்மதி நிலுவை மற்றும் சுற்றுலா, நிதியியல்துறை, ஆகிய உபதலைப்புகளின் கீழும், இரண்டாவது பிரிவில் மத்திய வங்கியின் கணக்குகளும் தொழிற்பாடுகளும் என்ற தலைப்பின் கீழும், மூன்றாவது பிரிவில் 1999இல் நாணயச் சபையினால் மேற்கொள்ளப்பட்ட முக்கிய நிர்வாக வழிமுறைகள் என்ற தலைப்பின்கீழும் அறிக்கையிடப்பட்டுள்ளது. இறுதிப் பிரிவில் மத்திய வங்கியினதும் இலங்கையிலுள்ள வங்கித் தொழில் நிறுவனங்களினதும் கடமைகளும் தொழிற்பாடுகளும் தொடர்பான 1999ஆம் ஆண்டின் முதன்மைச் சட்டவாக்கங்கள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 18771).

### 12670

**இலங்கை மத்திய வங்கி: ஆண்டறிக்கை 2000**. இலங்கை மத்திய வங்கி. கொழும்பு 1: நாணயச் சபை, இலங்கை மத்திய வங்கி, இல. 30, சனாதிபதி மாவத்தை, 1வது பதிப்பு, 2001. (கொழும்பு 12: ஜே.அன். எஸ் சேர்விசஸ் அச்சகம், இல. 115, மெசெஞ்சர் வீதி).

பகுதி 1: (14), 343 பக்கம், பகுதி 2: lxxii, பகுதி 3: (4), xlix பக்கம், பகுதி 4: (28) பக்கம், வரைபடங்கள், அட்டவணைகள், விலை: ரூபா 150., அளவு: 27x20.5 சமீ., ISBN: 955-575-076-9.

51ஆவது ஆண்டாகத் தயாரிக்கப்பட்டுள்ள 2000ம் ஆண்டுக்கான மத்திய வங்கியின் ஆண்டறிக்கை இதுவாகும். 4 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ள இவ்வறிக்கையின் முதலாவது பிரிவில் பொருளாதாரச் செயலாற்றல் தோற்றப்பாடு, கொள்கைகள் மற்றும் விடயங்கள், தேசிய வருமானமும் செலவும், வேளாண்மை, மீன்பிடித் தொழில் மற்றும் காடாக்கல், கைத்தொழில், பொருளாதார மற்றும் சமூக நலன்புரிச்

செலவுகள், விலைகளும் கூலிகளும், குடித்தொகை தொழிற்படை மற்றும் தொழில் நிலை, இறைக் கொள்கையும் வரவுசெலவுத் திட்டத் தொழிற்பாடும், வர்த்தகம், சென்மதி நிலுவை மற்றும் சுற்றுலா, நிதியியல்துறை ஆகிய விடயங்கள் அறிக்கையிடப்பட்டுள்ளன. இரண்டாவது பிரிவில் மத்திய வங்கியின் கணக்குகளும் தொழிற்பாடுகளும், மூன்றாவது பிரிவில் 2000-இல் நாணயச் சபையினால் மேற்கொள்ளப்பட்ட முக்கிய நிர்வாக வழிமுறைகளும், இறுதிப் பிரிவில் மத்திய வங்கியினதும் இலங்கையிலுள்ள வங்கித் தொழில் நிறுவனங்களினதும் கடமைகளும் தொழிற்பாடுகளும் தொடர்பான 2000-ஆம் ஆண்டின் முதன்மைச் சட்டவாக்கங்களும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 20847).

### 12671

**இலங்கை மத்திய வங்கி: ஆண்டறிக்கை 2001**. இலங்கை மத்திய வங்கி. கொழும்பு 1: நாணயச் சபை, இலங்கை மத்திய வங்கி, இல.30, சனாதிபதி மாவத்தை, 1வது பதிப்பு, ஏப்ரல் 2002. (கொழும்பு 12: ஜே அன்ட் எஸ். சேர்விஸஸ் அச்சகம், 115 மெசெஞ்சர் வீதி).

(28), 371 பக்கம், xciii, lxxxviii, xvii, 129 அட்டவணைகள், விலை: ரூபா 200.00, அளவு: 28x20 சமீ., ISBN: 955-575-098-1.

இவ்வறிக்கையில் பொருளாதாரச் செயலாற்றல், தோற்றப்பாடு மற்றும் விடயங்களும் கொள்கைகளும், தேசிய வருமானமும் செலவினமும், வேளாண்மை மீன்பிடி மற்றும் காடாக்கல், கைத்தொழில், பொருளாதார மற்றும் சமூக நலன்புரிச் செலவுகள், விலைகளும் கூலிகளும், குடித்தொகை, தொழிற்படை மற்றும் தொழில்நிலை, இறைக் கொள்கையும் வரவு செலவுத்திட்ட தொழிற்பாடுகளும், வர்த்தகம் சென்மதி நிலுவை மற்றும் சுற்றுலா, நிதியியல்துறை ஆகிய 10 தலைப்புகளின் கீழ் இலங்கையின் 2001ஆம் ஆண்டுக்கான பொருளாதாரப் போக்குகள் அறிக்கையிடப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 23104).

### 12672

**இலங்கை மத்திய வங்கி: ஆண்டறிக்கை 2002**. இலங்கை மத்திய வங்கி. கொழும்பு 1: நாணயச் சபை, இலங்கை மத்திய வங்கி, இல. 30, சனாதிபதி மாவத்தை, 1வது பதிப்பு, ஏப்ரல் 2003. (கொழும்பு 12: ஜே.அன். எஸ் சேர்விசஸ் அச்சகம், இல. 115, மெசெஞ்சர் வீதி).

பகுதி 1: (28), 375 பக்கம், பகுதி 2: lxxxiii, பகுதி 3: ciii பக்கம், பகுதி 4: cxxi பக்கம், 157அட்டவணைகள், விலை: ரூபா 200., அளவு: 27.5x20.5 சமீ., ISBN: 955-575-076-9.

53ஆவது ஆண்டாகத் தயாரிக்கப்பட்டுள்ள 2002ம் ஆண்டுக்கான மத்திய வங்கியின் ஆண்டறிக்கை இதுவாகும். 4 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ள இவ்வறிக்கையின் முதலாவது பிரிவில் பொருளாதாரச் செயலாற்றம், தோற்றப்பாடு,

விடயங்களும் கொள்கைகளும், தேசிய வருமானமும் செலவும், வேளாண்மை, மீன்பிடி மற்றும் காடாக்கல், கைத்தொழில், பொருளாதார மற்றும் சமூக நலன்புரிச் செலவுகள், விலைகளும் கூலிகளும், குடித்தொகை, தொழிற்படை மற்றும் தொழில் நிலை, இறைக் கொள்கையும் வரவுசெலவுத்திட்ட தொழிற்பாடுகளும், வர்த்தக, சென்மதி நிலுவை மற்றும் சுற்றுலா, நிதியியல்துறை என்பனவற்றின் பொருளாதார நிதிப் போக்குகள் என்பனவும் அறிக்கையிடப்பட்டுள்ளன. இரண்டாவது பிரிவில் இலங்கை மத்திய வங்கியின் கணக்குகளும் தொழிற்பாடுகளும், மூன்றாவது பிரிவில் 2002 நாணயச் சபையினால் மேற்கொள்ளப்பட்ட முக்கிய நிர்வாக நடவடிக்கைகளும், நான்காவது பிரிவில் 2002ம் ஆண்டு மத்திய வங்கி யினதும் இலங்கையிலுள்ள வங்கித் தொழில் நிறுவனங்களினதும் கடமைகளும் தொழிற்பாடுகளும் தொடர்பான 2002அம் ஆண்டின் முதன்மைச் சட்டவாக்கங்கள் பற்றிய அறிக்கை இடம்பெறுகின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 28927).

### 12673

**இலங்கை மத்திய வங்கி: ஆண்டறிக்கை 2003.** இலங்கை மத்திய வங்கி. கொழும்பு 1: நாணயச் சபை, இலங்கை மத்திய வங்கி, இல.30, சனாதிபதி மாவத்தை, 1வது பதிப்பு, 2004. (கொழும்பு 12: ஜே அன்ட் எஸ். சேர்விஸஸ் அச்சகம், 115 மெசெஞ்சர் வீதி).

(32), 406 பக்கம், cxiv, lxxxviii, cliv, 165 அட்டவணைகள், விலை: ரூபா 200.00, அளவு: 28x20.5 சமீ., ISBN: 955-575-098-1.

நாணய விதிச் சட்டத்தின் (அத்தியாயம் 422) 35ஆம் பிரிவானது பொருளாதார நிலைமை, மத்திய வங்கியின் நிலைமை மற்றும் நாணயச் சபையினால் மேற்கொள்ளப்பட்ட கொள்கைகள், வழிமுறைகள் என்பன பற்றிய ஆய்வு மீதான ஆண்டறிக்கையை ஒவ்வொரு நிதியாண்டும் முடிவடைந்து நான்கு மாதங்களுக்குள் மத்திய வங்கியின் நாணயச்சபை நிதி திட்டமிடல் அமைச்சுக்கு அனுப்பிவைக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றது. அவ்வகையில் 54ஆவது ஆண்டாகத் தயாரிக்கப்பட்ட 2003ம் ஆண்டுக்கான ஆண்டறிக்கை இதுவாகும். 4 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ள இவ்வறிக்கையின் முதலாவது பிரிவில் பொருளாதாரச் செயலாற்றல், தோற்றப்பாடு, விடயங்களும் கொள்கைகளும், தேசிய வருமானமும் செலவும், வேளாண்மை, மீன்பிடி மற்றும் காடாக்கல், கைத்தொழில், பொருளாதார மற்றும் சமூக நலன்புரிச் செலவுகள், விலைகளும் கூலிகளும், குடித்தொகை, தொழிற்படை, மற்றும் தொழில் நிலை, இறைக் கொள்கையும் வரவுசெலவுத்திட்ட தொழிற்பாடுகளும், வர்த்தகம், சென்மதி நிலுவை மற்றும் சுற்றுலா, நிதியியல்துறை, கொடுப்பனவும் தீர்ப்பனவுகளும் ஆகிய விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. 2வது பகுதியில் இலங்கை மத்திய வங்கியின் கணக்குகளும் தொழிற்பாடுகளும் விளக்கப்பட்டுள்ளன. 3வது பிரிவில் 2003 நாணயச் சபையினால் மேற்கொள்ளப் பட்ட முக்கிய நிர்வாக நடவடிக்கைகள் பட்டியலிடப்பட்டுள்ளன. இறுதிப்பிரிவில் 2003இல் மத்திய வங்கியினதும் இலங்கையிலுள்ள வங்கித் தொழில் நிறுவனங்களினதும் கடமைகளும் தொழிற்பாடுகளும் தொடர்பான 2003ம்

ஆண்டின் முதன்மைச் சட்டங்கள் பற்றிய தகவல்களும் வழங்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 33792).

## 12674

**இலங்கை மத்திய வங்கி: ஆண்டறிக்கை 2008.** இலங்கை மத்திய வங்கி. கொழும்பு 1: நாணயச் சபை, இலங்கை மத்திய வங்கி, இல.30, சனாதிபதி மாவத்தை, 1வது பதிப்பு, 2009. (இரத்மலானை: சர்வோதய விஷ்வலேகா வெளியீடு, 41, லும்பினி அவென்யூ, பிரிவேனா வீதி முடிவு).

(30), 207 பக்கம், lxxii, cliii, xxix, 146 அட்டவணைகள், விலை: ரூபா 350.00, அளவு: 27x20.5 சமீ., ISBN: 978-955-575-171-1.

நாணய விதிச் சட்டத்தின் (அத்தியாயம் 422) 35ஆம் பிரிவானது பொருளாதார நிலைமை, மத்திய வங்கியின் நிலைமை மற்றும் நாணயச் சபையினால் மேற்கொள்ளப்பட்ட கொள்கைகள், வழிமுறைகள் என்பன பற்றிய ஆய்வு மீதான ஆண்டறிக்கையை ஒவ்வொரு நிதியாண்டும் முடிவடைந்து நான்கு மாதங்களுக்குள் மத்திய வங்கியின் நாணயச்சபை நிதி திட்டமிடல் அமைச்சுக்கு அனுப்பி வைக்கவேண்டும் என்பதை வலியுறுத்துகின்றது. அவ்வகையில் 59ஆவது ஆண்டாகத் தயாரிக்கப்பட்ட 2008ம் ஆண்டுக்கான ஆண்டறிக்கை இதுவாகும். 4 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ள இவ்வறிக்கையின் முதலாவது பிரிவில் பொருளாதாரம், விலை மற்றும் நிதியியல் முறைமை, உறுதித்தன்மை, தோற்றப்பாடு மற்றும் கொள்கைகள், தேசியஉற்பத்தியும் செலவினமும், பொருளாதார மற்றும் சமூக உட்கட்டமைப்பு, விலைகள் கூலிகள் தொழில்நிலை மற்றும் உற்பத்தித் திறன், வெளிநாட்டுத்துறை அபிவிருத்திகளும் கொள்கைகளும், இறைவரிக் கொள்கையும் அரச நிதியும், நாணயக் கொள்கை, பணம் கொடுகடன் மற்றும் வட்டி வீதங்கள், நிதியியல்துறை அபிவிருத்திகளும் முறைமை உறுதித் தன்மையும் ஆகிய விடயங்கள் அறிக்கையிடப்பட்டுள்ளன. பகுதி இரண்டில் இலங்கை மத்திய வங்கியின் கணக்குகளும் தொழிற்பாடுகளும் அறிக்கையிடப்பட்டுள்ளன. மூன்றாவது பகுதியில் 2008ஆம் ஆண்டில் நாணயச் சபையால் மேற்கொள்ளப்பட்ட முக்கிய நிர்வாக வழிமுறைகள் பட்டியலிடப்பட்டுள்ளன. இறுதிப் பகுதியில் மத்திய வங்கியினதும் இலங்கையிலுள்ள வங்கித் தொழில் நிறுவனங்களினதும் செயற்பாடுகளுடனும் தொழிற்பாடுகளுடனும் தொடர்பான 2008ஆம் ஆண்டின் முக்கிய சட்டவாக்கங்கள் என்பன பதிவுசெய்யப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 47087).

## 12675

**இலங்கை மத்திய வங்கி: ஆண்டறிக்கை 2010.** இலங்கை மத்திய வங்கி. கொழும்பு 1: நாணயச் சபை, இலங்கை மத்திய வங்கி, இல.30, சனாதிபதி மாவத்தை, 1வது பதிப்பு, 2011. (கொழும்பு: பிரின்ட் கெயார் பக்கேஜிங் லிமிட்டெட், 21, ஸ்ரீ புஷ்பராம மாவத்தை, பாஹல பியன்வில, கடவத்தை).

*(30), 212+123+115+8 பக்கம், 147 அட்டவணைகள், விலை: ரூபா 350.00, அளவு: 27x20 சமீ., ISBN: 978-955-575-215-2.*

*இவ்வறிக்கை நான்கு பிரிவாகத் தயாரிக்கப்பட்டுள்ளது. 1வது பகுதியில் பொருளாதாரம், விலை மற்றும் நிதியியல் முறைமை, உறுதிப்பாடு, தோற்றப்பாடு மற்றும் கொள்கைகள், தேசிய உற்பத்தியும் செலவினமும், பொருளாதார மற்றும் சமூக உட்கட்டமைப்பு, விலைகளும் கூலிகளும், தொழில்நிலை மற்றும் உற்பத்தித் திறன், வெளிநாட்டுத்துறை அபிவிருத்திகளும் கொள்கைகளும், இறைக் கொள்கையும் அரச நிதியும், நாணயக் கொள்கைகள், பணக் கொடுகடன் மற்றும் வட்டி வீதங்கள், நிதியியல்துறை முறைமையும் உறுதித்தன்மையும் ஆகிய 10 தலைப்புகளின் கீழ் அறிக்கையிடப்பட்டுள்ளது. 2வது பகுதியில் இலங்கை மத்திய வங்கியின் கணக்குகளும் தொழிற்பாடுகளும், பகுதி 3இல் 2010ஆம் ஆண்டில் நாணயச் சபையால் மேற்கொள்ளப்பட்ட முக்கிய நிர்வாக வழிமுறைகள், 4வது பகுதியில் மத்திய வங்கியினதும் இலங்கையிலுள்ள வங்கித் தொழில் நிறுவனங் களினதும் செயற்பாடுகளுடனும் தொடர்பான 2010ஆம் ஆண்டின் சட்டவாக்கங்கள் ஆகியன அறிக்கையிடப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 49979).*

**12676**

**இலங்கை மத்திய வங்கி: ஆண்டறிக்கை 2012**. *இலங்கை மத்திய வங்கி. கொழும்பு 1: நாணயச் சபை, இலங்கை மத்திய வங்கி, இல.30, சனாதிபதி மாவத்தை, 1வது பதிப்பு, 2013. (கொழும்பு: பிரின்ட் கெயார் பக்கேஜிங் லிமிட்டெட், 21, ஸ்ரீ புஷ்பராம மாவத்தை, பாஹல பியன்வில, கடவத்தை).*

*(28), 240+101+92+32 பக்கம், 148 அட்டவணைகள், விலை: ரூபா 400.00, அளவு: 27x20.5 சமீ., ISBN: 978-955-575-262-6.*

*இவ்வறிக்கை நான்கு பகுதிகளாகத் தயாரிக்கப்பட்டுள்ளது. முதலாவது பகுதியில், பொருளாதாரம், விலை மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாடு தோற்றப்பாடு மற்றும் கொள்கைகள், தேசிய உற்பத்தியும் செலவினமும், பொருளாதாரம் மற்றும் சமூக உட்கட்டமைப்பு, விலைகள், கூலிகள், தொழில்நிலை மற்றும் உற்பத்தித்திறன், வெளிநாட்டுத்துறை அபிவிருத்திகளும் கொள்கைகளும், இறைக் கொள்கைகளும் அரச நிதியும், நாணயக் கொள்கை, பணம் கொடுகடன் மற்றும் வட்டி வீதம், நிதியியல்துறை செயலாற்றமும் முறைமை உறுதிப்பாடும் ஆகிய விடயங்கள் அறிக்கையிடப்பட்டுள்ளன. இரண்டாவது பகுதியில், இலங்கை மத்திய வங்கியின் கணக்குகளும் தொழிற்பாடுகளும், மூன்றாவது பகுதியில், 2012ஆம் ஆண்டில் நாணயச் சபையால் மேற்கொள்ளப்பட்ட முக்கிய நிர்வாக வழிமுறைகள் என்பனவும், நான்காவது பகுதியில், மத்திய வங்கியினதும் இலங்கையிலுள்ள வங்கித் தொழில் நிறுவனங்களினதும் செயற்பாடுகள் மற்றும் தொழிற்பாடுகள் தொடர்பான 2012ஆம் ஆண்டின் முக்கிய சட்டவாக்கங்கள் என்பனவும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 53526).*

### 12677

**நிதி வளர நெறி இதுவே.** யோகி தம்பிராஜா, மரியா எட்வேட். கனடா M5S 2W9: நிழல் வெளியீடு, ஜீவா பதிப்பகம், ரிப்ளக்ஸ் அச்சகம், 1108, பே வீதி, தொரன்ரோ, 1வது பதிப்பு, ஆனி 1988. (கனடா M5S 2W9: ஜீவா பதிப்பகம், ரிப்ளக்ஸ் அச்சகம், 1108, வே வீதி, தொரன்ரோ).

(12), 57 பக்கம், அட்டவணைகள், விலை: கனேடிய டொலர் 3.90, அளவு: 21x14 சமீ.

நிதி வளர்ச்சித் திட்டமிடல், வருமானம்-செலவு-சேமிப்பு, காலம் செய்யும் மாயம், முதலீட்டு நிதிகள், ஓய்வுகாலச் சேமிப்புத் திட்டம், கல்விக்கான சேமிப்புத் திட்டம், உயிர் காப்புறுதித் திட்டங்கள், உண்மையும் பொய்யும், நிதி வளர்ச்சித் திட்ட நிபுணர் ஆகிய எட்டு இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. கனடா வாழ் ஈழத்தமிழர் தமது உழைப்பு, செலவு, சேமிப்பு, முதலீடு போன்றவற்றையும் புதிய பாதையில் திருத்தியமைக்க வேண்டும் என்கிறார். வரிச்சுமை, பணவீக்கம், ஆகியவற்றில் இருந்து எமது சேமிப்பை எவ்வாறு காப்பாற்றலாம் என்றும், சேமித்த பணத்தை எவ்வாறு உழைக்கவைக்கலாம் என்பவற்றுக்கான வழிவகை களைக் கூறுவதாகவும் இந்நூல் அமைந்துள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 18462).

### 12678

**பொது முதலீடு 1991-1995.** கொள்கை திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சு. கொழும்பு: தேசிய திட்டமிடல் திணைக்களம், கொள்கை திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சு, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1991. (கொழும்பு 12: குமரன் பதிப்பகம், 201, டாம் வீதி).

(4), 150 பக்கம், அட்டவணைகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x19 சமீ.

பொது முதலீட்டு திட்ட வரிசையில் 13ஆவதாக வெளியிடப்படும் 1991-1995ஆம் ஆண்டுக்கான இந்த வெளியீடு, இலங்கையின் பொருளாதாரம் புதுப்பிக்கப்பட்ட இயக்க ஆற்றலை வெளிப்படுத்தும் ஒரு காலப்பகுதியில் முன்வைக்கப்படுகின்றது. அடுத்த ஐந்தாண்டு காலத்திற்கான அரசாங்கத்தின் முழுமையான பொருளாதார உபாயத்தையும் கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் விளக்குகின்றது. இது ஒன்பது அத்தியாயங்களையும் அதைத் தொடர்ந்து புள்ளிவிபர அட்டவணை களையும் உள்ளடக்குகின்றது. இந்நூலின் அத்தியாயங்கள் பொருளாதார செயலாற்றலும் கண்ணோட்டமும், விவசாயம், கைத்தொழில்கள், பொருளாதார உட்கட்டமைப்பு, மனிதவள அபிவிருத்தி, மனித குடியேற்றங்கள், அரசதுறையினது மறுசீரமைப்பு, கிராமிய பிராந்திய அபிவிருத்தி, பொது முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம் 1991-1995 ஆகிய அத்தியாயத் தலைப்புகளைக் கொண்டுள்ளது. புள்ளிவிபர அட்டவணை அரச மூலதனச் செலவின ஒதுக்கீடு 1991-1995 என்ற தலைப்பில் 50 பக்கங்களில் தரப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 23622).

**12679**

**பொது முதலீடு 1992-1996.**கொள்கை திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சு. கொழும்பு: தேசிய திட்டமிடல் திணைக்களம், கொள்கை திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சு, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1992. (கொழும்பு 12: குமரன் பதிப்பகம், 201, டாம் வீதி).

(4), 250 பக்கம், அட்டவணைகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x18.5 சமீ.

அபிவிருத்தி செயற்றிட்டங்களுக்கான அரசாங்கத்தின் மூலவள ஒதுக்கீட்டினையும், அதனது அடிப்படையான பேரண்ட பொருளியல் மற்றும் துறைரீதியான கொள்கைகளையும் விளக்குவதற்காக, ஆண்டுதோறும் தயாரிக்கப்படும் பொது முதலீட்டு நிகழ்ச்சித் திட்டத் தொடரில் இது 14ஆவது வெளியீடாகும். 1988ம் ஆண்டின் அரசாங்க தேர்தல் விஞ்ஞாபனத்தில் வெளியிடப்பட்ட நோக்கங்களையும் தத்துவங்களையும் அதற்குப் பின்னால் மேற்கொள்ளப்பட்ட கொள்கைத் தீர்மானங்களையும் அடிப்படையாகக் கொண்டது. இவ்வெளியீடு பொருளாதாரச் செயலாற்றமும் கண்ணோட்டமும், விவசாயம், கைத்தொழில், பொருளாதார உட்கட்டமைப்பு, சனத்தொகைப் போக்குகளும் எதிர்நோக்குகளும், மளிதவள அபிவிருத்தி, வறுமை ஒழிப்பும் சமூக சேமநல நிகழ்ச்சித் திட்டங்களும், மானிட குடியேற்றங்கள், பொதுத்துறையின் மறுசீரமைப்பு, பொது முதலீடு 1992-1996, அரச மூலதனச் செலவின ஒதுக்கீடு 1992-1996 ஆகிய பதினொரு அதிகாரங்களைக் கொண்டது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 23615).

## 658.404 கருத்திட்ட முகாமைத்துவம்

**12680**

**கருத்திட்ட முகாமைத்துவம்.** தம்பையா லங்காநேசன். கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு 2016. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

xxii, 306 பக்கம், அட்டவணை, விலை: ரூபா 950., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-659-541-3.

திட்டமிடல், கருத்திட்டத்தின் அறிமுகம், இலங்கையில் கருத்திட்டங்களை இனங்காணும் மூலங்கள், கருத்திட்டத்தை இனங்காண்பதற்கான அணுகுமுறைகள், கிராமிய அபிவிருத்திக் கருத்திட்டங்களை திட்டமிடும் அணுகுமுறைகள், இலக்கு-குறிக்கோள்கள்-கருத்திட்டம் நிகழ்ச்சித் திட்டம்- எடுகோள்கள்- அமுலாக்கத்தைக் கட்டுப்படுத்தும் காரணிகள், கருத்திட்டச் சக்கரம், கருத்திட்டச் சாத்திய வளஆய்வு, தேவைகளை இனங்காணல், குறிக்கோள்களை வரையறுத்தல், வேலைத்திட்டம், வரவு-செலவுத் திட்டம், கருத்திட்டம் வடிவமைப்பு, கருத்திட்ட மதிப்பீடு, கருத்திட்ட அமுலாக்கத்திற்கு திட்டமிடல், கருத்திட்ட முகாமைத்துவம், கருத்திட்ட மேற்பார்வையும் கட்டுப்பாடும், கண்காணிப்பு, கருத்திட்ட மீளாய்வு, கருத்திட்ட

வடிவமைப்பு வழிகாட்டி, கருத்திட்ட வரைவு, கருத்திட்டங்களின் வெற்றிக்கும் தோல்விக்குமான காரணிகள் ஆகிய 22 அத்தியாயங்களில் கருத்திட்ட முகாமைத்துவம் (Project Management) பற்றி விரிவாக விளக்கப்பட்டுள்ளது. தம்பையா லங்காநேசன் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் வர்த்தகப் பட்டதாரி. 35 ஆண்டுகளுக்கும் மேலாக அரசபணியில் ஈடுபட்டவர். அரசாங்க அதிபர், பல தேசிய அமைச்சுகளின் மேலதிகச் செயலாளர், பதில் செயலாளர் ஆகிய பதவிகளை வகித்தவர். சேவைக்காலத்தில் வெளிநாடுகளும், சர்வதேச நிதி நிறுவனங்களும் நிதியிட்ட பத்து கருத்திட்டங்களின் திட்ட முகாமையாளராகப் பணியாற்றிய அனுபவம் இந்நூலை எழுத இவருக்கு உதவியுள்ளது.

## 658.8 சந்தைப்படுத்தல் முகாமைத்துவம்

### 12681

**அடிப்படைச் சந்தைப்படுத்தல்: உயர்தர வகுப்புகளுக்குரியது.** தேவராஜன் ஜெயராமன். யாழ்ப்பாணம்: ஸ்ரீராம் பதிப்பகம், 392/2, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, ஜுலை 1994. (கொழும்பு 5: சரசு பப்ளிக்கேஷன்ஸ், 215D,2/8 பார்க் வீதி).

72 பக்கம், விலை: ரூபா 40., அளவு: 21.5x14 சமீ.

உயர்தர வகுப்புகளில் வர்த்தகமும் நிதியும் என்ற பாடத்திட்டத்தில் சந்தைப்படுத்தல் ஒரு பிரதான பாடமாகும். வர்த்தகமும் நிதியும் வினாத்தாள்-1இல் இரண்டு வினாக்கள் சந்தைப்படுத்தல் தொடர்பாக கேட்கப்பெறுவது வழமை. இந்நூல் சந்தைப்படுத்தல் தொடர்பாக உயர்தர வகுப்பு மாணவர் அறிந்திருக்கவேண்டிய அறிவை ஒன்பது இயல்களில் விளக்குகின்றது. சந்தைப்படுத்தல், சந்தைகள், சந்தைப்படுத்தல் கலவை, சந்தைத் துண்டமாக்கல், விலையிடல் விநியோகம், மேம்படுத்தல் கலவை, சந்தை ஆராய்ச்சி சர்வதேச சந்தைப்படுத்தல் ஆகிய தலைப்புகளில் இவ்வலகுகள் வகுத்து விரிவாக விளக்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 42121).

### 12682

**சந்தைப்படுத்தல்: தத்துவங்களும் நடைமுறையும்-1.** எம்.வை.எம்.சித்தீக். களுபோவில: Educational Literal and Business (E.L.B.) Publications, 46/4A, ஆசிரி மாவத்தை, 1வது பதிப்பு, 1997. (தெகிவளை: ஏ.ஜே.பிரின்ட்ஸ், இல. 1 B, P.T.De Silva Mawathe).

vi, 106 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 22x15 சமீ., ISBN: 955-9550-01-2.

மனித தேவைகளும் திருப்தியும், சந்தைப்படுத்தல், தந்திரோபாயச் சந்தைப்படுத்தல் திட்டமிடல், திட்டமிடல் மாதிரிகள், சந்தைப்படுத்தல் செய்முறை, உற்பத்திப் பொருள் திட்டமிடலும் அபிவிருத்தியும், விலையிடல் ஆகிய ஏழு அத்தியாயங்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. நூலாசிரியர் எம்.வை.எம்.சித்தீக், சப்பரகமுவ பல்கலைக்கழகத்தின் வர்த்தகக் கல்வித்துறையின் துறைத் தலைவராகப் பணி

யாற்றுகிறார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 30561).

# 700 கலைகள், நுண்கலைகள்

## 701 பொதுக்கலைகள்

**மேலும் பார்க்க: 13A02**

## 730 சிற்பக்கலை

### 12683

**மகாஸ்தபதி கோவிந்தராஜுவின் தேர்த்திறன்.** வேலுப்பிள்ளை அம்பிகைபாகன். இந்தியா: தென்னாசிய சமூக விஞ்ஞான நிதியம், குமேயோன் ஹில்ஸ், அல்மோறா, இணை வெளியீடு, யாழ்ப்பாணம்: காங்கேயன் கலைக்கோட்டம், ராஜசில்பி விலாட சங்கிலியின் மரபுவழி நிறுவகம், கலாபவனம், விஸ்வகர்ம வட்டம், தேவாலய வீதி, உடுப்பிட்டி, 1வது பதிப்பு, ஜுன் 2009. (யாழ்ப்பாணம்: தமிழ்ப் பூங்கா அச்சகம், நெல்லியடி, கரவெட்டி).

xxi, 72, xxiv பக்கம், புகைப்படங்கள், 24 தகடுகள், விலை: ரூபா 600., அளவு: 24x17 சமீ.

கலாதேவன் கோவிந்தராஜு ஸ்தபதி: ஓர் அறிமுகம், யாழ்ப்பாணியின் எதிர்க் கருத்துக்கள் விமர்சனம், கைலாசநாத விநாயகர் தேர் நிர்மாணம், நீர்வேலி வாய்க்காற்றரவை விநாயகர் தேர், நல்லூர் முருகன் அலங்காரச் சித்திரத்தேர், தேர் வடிவமைப்புத் திறனும் பொதுப் பண்பும், கோபியும் நந்தாவில் மனோன்மணி தேர்ப்பணியும், வண்ணார்பண்ணைக் காமாட்சி தேர்ச்சிற்பம், யாழ்ப்பாணத் தேரில் உயர்நிலைச் சிற்பியாக, யாழ்ப்பாணியின் சார்புநிலைக் குழுக்களும் மாணவர்களும், இரு தேர் மகாஸ்தபதிகள் காலதேவனும் கலாகேசரியும், மகா கோபியம், மகாஸ்தபதி கோபி அவர்களுக்கு ஓர் கடிதம், இந்தியத் தேர் மகாஸ்தபதி களுடன் கோபி ஓர் ஒப்பீடு ஆகிய 14 அத்தியாயங்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் உதவி விரிவுரையாளர் வேலுப்பிள்ளை அம்பிகைபாகன், வடமராட்சி வலயத்தின் முறைசாராக் கல்வி செயற்றிட்ட அலுவலராகப் பணியாற்றுகிறார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 51037).

## 750 ஓவியக்கலை

### 12684

**அழகியற் கல்வி சித்திரக் கல்வி (பாடநூல்): தரங்கள் 10-11.** பொன்.சக்திவேல். கொழும்பு 11: பிறைற் புக் சென்டர், எஸ்.27, முதலாவது தளம், த.பெ.எண். 162, C.C. Super Market Complex, 1வது பதிப்பு, ஒகஸ்ட் 2000. (கொழும்பு 11: பிறைற் புக் சென்டர்).

(2), 122 பக்கம், புகைப்படங்கள், விளக்கப்படங்கள், விலை: ரூபா 125., அளவு: 24.5x18.5 சமீ., ISBN: 955-9387-43-X.

அழகியற் கல்வியைப் பயிலும் மாணவர்களின் தேவையினைப் பூர்த்திசெய்யும் வகையில் உருவாக்கப்பட்ட நூல். அழகியல் கல்வியில் ஓரம்சமான சித்திரக்கலை பற்றி இந்நூல் விரிவான பயிற்சிகளை வழங்குகின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 36047).

## 12685

**ஐரோப்பிய ஓவிய வரலாற்றுச் சுருக்கம்.** R.H.விலென்ஸ்கி (ஆங்கில மூலம்), A.ஜோன் ஜோர்ஜ் (தமிழாக்கம்). கொழும்பு: A.ஜோன் ஜோர்ஜ், 7/13, ஹேன வீதி, கல்கிசை, 1வது பதிப்பு, மாசி 2002. (கொழும்பு: இசுரு என்டர்பிரைஸஸ்).

76 பக்கம், விளக்கப்படங்கள், புகைப்படங்கள், விலை: ரூபா 100.00, அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 955-97879-0-x.

கிறிஸ்துவுக்கு முந்திய காலம் தொடக்கம் 20ஆம் நூற்றாண்டு வரையுமுள்ள காலத்தில் ஐரோப்பிய ஓவியம் அடைந்த வளர்ச்சியை இந்நூல் சுருங்கச் சொல்லி விளங்கவைக்கின்றது. உலகறிந்த ஓவியர்களான மைக்கெல் ஆஞ்சலோ, றவாயேல், பிக்காசோ போன்ற தலைசிறந்த ஓவியர்களது படைப்புகள் பற்றியும், இத்தாலி, பிரான்ஸ், ஸ்பெயின் ஆகிய நாடுகளின் ஓவியக் கலைக்கான பங்களிப்புப் பற்றியும் இங்கே குறிப்பிடப்பட்டுள்ளது. கிறிஸ்துவிற்கு முந்திய ஓவியம், இடைக்கால கிறிஸ்தவ ஓவியம், மறுமலர்ச்சி ஓவியம், 17ஆம் நூற்றாண்டு ஓவியம், 18ஆம் நூற்றாண்டு ஓவியம், 19ஆம் நூற்றாண்டு ஓவியம், 20ஆம் நூற்றாண்டு ஓவியம், மாதிரி வினாக்கள் ஆகிய எட்டு அத்தியாயங்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 35924).

## 12686

**நிறந் தீட்டுவோம்: உடல் உளவிருத்திக்கான துணைநூல்.** வி.என்.எஸ்.உதயசந்திரன். யாழ்ப்பாணம்: உமா வெளியீட்டகம், 43, பொன்னம்பலம் வீதி, அரியாலை, 1வது பதிப்பு, ஜனவரி 1998. (சென்னை 5: பக்கம் மறுதோன்றி (Page Offset), 6/2, தேவராசன் தெரு).

(8), 9-64 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 75., அளவு: 21x14 சமீ.

இந்நூல் ஆரம்ப வகுப்பு மாணவர்கள் சுயமாகத் தமது திறமைகளை வெளிக் கொணரத் துணைசெய்கின்றது. நிறந்தீட்டுதல் என்பது ஒரு கலையாகும். நுட்பமாக நிறந் தீட்டுகின்றபோது, அந்தச் சித்திரம் உயிரோட்டமுள்ள சித்திரமாக மாறுகின்றது. நிறந்தீட்டும் பயிற்சி சிறுவர்களின் தசைப் பயிற்சிக்கும் நுண்ணறிவு விருத்திக்கும் உறுதுணை புரிகின்றது. இந்நூலாசிரியர் கொழும்பு விவேகானந்த கல்லூரியின் ஆசிரியராவார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 29546).

**12687**

**பிரதிமைக் கலை.** க.இராசரத்தினம். திருக்கோணமலை: கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு, வடக்கு கிழக்கு மாகாணம், 1வது பதிப்பு, நவம்பர் 1999. (திருக்கோணமலை: பதிப்பகத் திணைக்களம், வடக்கு-கிழக்கு மாகாணம்).

x, 121 பக்கம், ஓவியங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x15 சமீ.

"பிரதிமைக்கலை" எனும் இந்நூலை பிரதிமைக்கலைமாமணி க. இராசரத்தினம் அவர்கள் எழுதியுள்ளார். அவரால் வரையப் பெற்றதும் உதாரணத்திற்கெனக் கையாளப்பட்ட உலகப் புகழ்பெற்ற ஓவியங்கள் பலவும் அடங்கலாக இந்நூல் அமைகிறது. முன்னாள் சித்திர ஆசிரியராகவும், 1949ம் ஆண்டிலிருந்து யாழ்ப்பாணம் கன்னியர்மடம் மகளிர் கல்லூரியில் இயங்கிய எஸ்.ஆர். கனகசபையின் வின்சர் ஓவியக் கழகத்தின் விரிவுரையாளராக இயங்கிய இவர் அதன் இறுதிக் காலமான 1955ம் ஆண்டு வரை இயங்கியவர். முன்னாள் சித்திரப் பாடத்திற்கான வித்தியாதிகாரியாகவும் பணியாற்றிய இவரின் பங்களிப்பிற்காக 1999இல் நடந்த தமிழ் இலக்கிய விழாவில் ஆளுநர் விருது வழங்கப்பட்டது. இவரால் வரையப்பட்ட பிரதிமை ஓவியங்கள் பலவும் புகழ் பெற்றவை. யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் இடம்பெற்றுள்ள, முன்னாள் யாழ். பல்கலைக் கழக உபவேந்தர்களான, கலாநிதி க. கைலாசபதி, பேராசிரியர் துரைராஜா ஆகியோரின் பிரதிமை ஓவியங்கள் அவற்றில் குறிப்பிடத்தக்கவை. "பிரதிமைக்கலை நரம்பு வெடிக்கும் பிரச்சினைக்குரிய கலை. இது புகைப்படம் போல் அமையலாகாது. ஆக்கமுறையி லமைத்தல் வேண்டும்" எனக் கூறுகிறார் இராசரத்தினம். வின்ஸர் ஆட்கிளப்புடன் இணைந்து பிரதிமை ஓவியம், ஓவியத்தொகுப்பமைவு, நீர்வண்ணப் பிரயோகம் என்பனவற்றில் சிறப்புத் தேர்ச்சிபெற்ற இராசரத்தினத்தின் ஓவியங்கள் கிராமத்திற்குத் திரும்பும் வண்டில் (1951 தைலவர்னம்), பொதுக்கிணற்றில் குளித்தல் (1959 தைலவர்ணம்) திருவெம்பாவை (1951 தைலவர்னம்) இதற்கான சிறப்பான உதாரணங்களாகும். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 30941. நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தின் சேர்க்கை இலக்கம் 007257).

## 780 இசைக்கலை

**12688**

**இசைத்தமிழ்ச் சிந்தனைகள்: தமிழரின் இசை மரபு சார்ந்த கட்டுரைகளின் தொகுப்பு.** கௌசல்யா சுப்பிரமணியன். கொழும்பு 6: ஆலயம் வெளியீட்டகம், குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு 2017. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

xxxii, 297 பக்கம், விலை: ரூபா 950., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-955-659-570-3.

2000 ஆண்டுகளுக்கும் முன்னரே பெரும் வளர்ச்சி அடைந்திருந்த தமிழிசையின் அடித்தள அமைப்பையும் அதிலிருந்து படிப்படியாக ஓங்கி வளர்ந்து செழித்த

வரலாற்றையும் செவ்விய முறையில் சித்திரிக்கும் கட்டுரைகளின் தொகுப்பு. சங்கத் தமிழ்ச் சமூகத்தில் இசை-மகளிரின் நிகழ்த்துக் கலைச் செயற்பாடுகளை மையப்படுத்திய ஒரு பார்வை, தமிழரின் இசை மரபு-வரலாறும் வளர்ச்சியும், இசைத்தமிழ் வரலாற்றில் நாட்டாரிசையும் செவ்வியல் இசையும், இசைத்தமிழ்ப் பாடல் மரபு-தொல்காப்பியத்தை மையப்படுத்திய ஓர் பார்வை, கவிப்பாவும் தமிழரின் இசைமரபும், தேவபாணி, நரம்பின் மறை-யாழ் முதல் வயலின் வரை, சிலப்பதிகாரத்தின் அரங்கேற்று காதை, சிலப்பதிகார வரிப்பாடல்கள், சிலப்பதிகார ஆய்ச்சியர் குரவை, பக்திகால இசைமரபின் மூலங்கள் பற்றிய தேடல், தமிழில் இறைபுகழ் பாடும் மரபு-இலக்கணநிலைசார் வரலாற்றுப் பார்வை, தமிழில் பக்தியிசை மரபும் காரைக்காலம்மையாரும், தேவாரப் பண்ணிசை மரபு, மணிவாசகரின் பண்சுமந்த பாடல்கள், பரம்பொருள் தத்துவத்தில் பண்ணும் பரதமும், விருத்தத்தின் விஸ்வரூபம், தமிழரின் இசைமரபும் கம்பரும், குணங்குடி மஸ்தான் சாகிபு அவர்களின் இசைப்பாடல்கள், தமிழ்க் கீர்த்தனை வகைகளும் அவற்றில் பயிலும் அணிகளும், புலம்பெயர் சூழல்களில் தமிழர் கலை மரபுகளின் பேணுகை-இசை மற்றும் நடனம் ஆகிய கலைகளின் பயில்நிலைகளை மையப்படுத்திய பார்வை, தமிழரின் இசைமரபில் ஆய்வியல் அணுகுமுறைகள்-ஓர் அறிமுகக் குறிப்பு, பேராசிரியர் சிவத்தம்பியவர்களின் பார்வையில் தமிழரின் இசைமரபு, மதிப்புரை:அநுபவம் தொற்ற வைக்கும் கீதங்கள்-"கரிசல் குயில்கள்" பாடல்கள் ஒலிப்பேழை, வாழ்த்துரை: "விருது பெறும் விரல்கள்"-வயலினிசை வித்தகர் கலைமாமணி பரூர் எம்.எஸ்.அனந்தராமன் அவர்கள், அணிந்துரை: கலாபூஷணம் இராஜமணி சிங்கராஜா அவர்களின் தெய்வீகக் கீர்த்தனைகள், திறனாய்வுரை: கலாநிதி மீரா வில்லவராயரின் கர்நாடக சங்கீதம் ஒரு அறிமுகம், நினைவுரை: இசையறிஞர் சங்கீத வித்துவான் அ.மு.வர்ணகுலசிங்கம் அவர்களைப் பற்றிய நீங்காத நினைவுகள் ஆகிய தலைப்புகளில் அமைந்த 28 கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. பின்னிணைப்பில் இந்நூலாசிரியரின் "தமிழில் இசைப்பாடல் வகைகள்" என்ற ஆய்வுநூலுக்கு ஈழத்தில் கிடைத்த வாழ்த்தும் வரவேற்பும் என்ற தலைப்பில் அன்றைய நிகழ்வு பற்றிய சிறப்புக் கட்டுரை இடம்பெற்றுள்ளது. யாழ்.மாவட்டத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட ஆசிரியர் கனடாவில் புலம்பெயர்ந்து வாழ்ந்துவருகின்றார். "தமிழில் இசைப்பாடல் வகைகள்" என்ற தலைப்பில் இந்திய இசைத்துறையில் தனது கலாநிதிப் பட்டத்திற்கான ஆய்வை மேற் கொண்டவர். இது 2017இல் நூல்வடிவம் பெற்றது. பேராசிரியர் நா.சுப்பிரமணியம் அவர்களின் துணைவியாரான இவர் தனித்தும், துணைவருடன் இணைந்தும் பல நூல்களை எழுதியுள்ளார். கனடாத் தமிழ்க் கல்லூரியின் நுண்கலைப் பீடத் தலைவராக செயற்பட்டுவருகின்றார்.

**12689**

**இசையியல் விளக்கம்: 3ம் பாகம்**. *மீரா வில்லவராயர். மொரட்டுவை: மீரா வில்லவராயர், 21B 2/1 , 1வது பதிப்பு, 2003. (கொழும்பு 12: லங்கா புத்தகசாலை, F.L.1/14, டயஸ் பிளேஸ், குணசிங்கபுர).*

*159 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 200., அளவு: 21.5x15 சமீ.*

வடஇலங்கை சங்கீத சபை தரம் 5 பாடத்திட்டங்களுக்கமைவாக எழுதப்பட்ட இசை அறிமுக நூல். தரம் ஐந்து பாடத்திட்டம், கிராம, மூர்ச்சனா, ஜாதி என்பவற்றின் விபரம், வாதி, சம்வாதி, விவாதி அனுவாதி ஆகியவற்றின் விரிவான விளக்கம், 22 சுருதிகள் பற்றிய முழு விபரம், இராகலட்சணம், மனோதர்ம சங்கீதத்தின் பிரிவுகளும் இராகம் தானம் நிரவல் பாடும் முறைகளும், தசவித கமகங்கள், உருப்படிகளுக்கு மதிப்பு வியாசம் எழுதுதல், இசைக்கருவிகளின் பிரிவு, நாதஸ்வரம், தவில், புல்லாங்குழல், கஞ்சிரா, தேசாதி மத்யாதி 175 தாளங்கள், கானகாலம் ராகரஸங்கள் பண்வகைகள், சியாமா சாஸ்திரிகள், முத்துஸ்வாமி தீக்ஷிதர், கோபாலகிருஷ்ண பாரதியார், பேராசிரியர் சாம்பமூர்த்தி, விபுலானந்த அடிகள், ஸ்வாதி திருநாள் மகாராஜா, மைசூர் வாசுதேவாசாரிகள், அருணகிரிநாதர், புத்துவாட்டி சோமு, திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார், மாணிக்கவாசக சுவாமிகள், பல்லவியின் பிரிவுகள், ஈழத்து இசை வரலாறும் வளர்ச்சியும், பண்ணிசை வரலாறும் வளர்ச்சியும், ஈழத்து நாட்டார் இசை வரலாறும் வளர்ச்சியும், கேள்விஞானப் பரீட்சைக்குரிய வினாக்கள், பார்த்துப் பாடலுக்கான சஞ்சாரங்கள், மாணவருக்குரிய அறிவுறுத்தல்கள், மாதிரி வினாத்தாள்கள் ஆகிய 36 பாடங்கள் இந்நூலில் விளக்கப்பட்டுள்ளன. மஹரகம தேசிய கல்வி நிறுவனத்தின் அழகியல்துறைப் பிரிவின் கர்நாடக சங்கீதத் துறைக்குச் செயற்றிட்ட அதிகாரியாக நூலாசிரியர் விளங்குகின்றார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 29677).

### 12690

**கர்நாடக சங்கீதம்**. தேசிய கல்வி நிறுவகம். மகரகம: நுண்கலைத் துறை, தேசிய கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1992. (கொழும்பு 13: யுனைட்டெட் மேர்ச்சன்ட்ஸ் லிமிட்டெட்).

(8), 115 பக்கம், விளக்கப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14.5 சமீ.

தேசிய கல்வி நிறுவக நுண்கலைத் துறையின் அழகியற் கலைப்பிரிவுப் பணிப்பாளர் திருமதி மிரண்டா ஹேமலதாவின் வழிகாட்டலின்கீழ் எஸ். கணபதிப்பிள்ளை, எஸ்.திலகநாயகம் போல், செல்வி யோ.செல்லையாபிள்ளை, திருமதி வனஜா ஸ்ரீனிவாசன், செல்வி ஆர்.நடராஜா, திருமதி மீரா உதயசங்கர் ஆகியோரை ஆசிரியர் குழுவாகக்கொண்டு இந்நூல் எழுதப்பட்டுள்ளது. இதில் கலை விளக்கம், கர்நாடக சங்கீதம், ஸப்த தாளங்களும் அதன் விபரமும், உருப்படிகள், ஜனக ஜன்ய ராகங்கள், இசைக் கருவிகள், ஈழத்துக் கிராமியப் பாடல்கள், பாடத்திட்டம் தரம் 9 ஆண்டு 10, பாடத்திட்டம் தரம் 10 ஆண்டு 11, தானவர்ணங்கள், எழுபத்திரண்டு மேளகர்த்தா சக்கரம் ஆகிய தலைப்புகளில் பாடங்கள் வகுத்துத் தரப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 38255).

**12691**

**சங்கீதம்: வினா-விடை தரம் 2 & 3.** குமுதினி கனகரெத்தினம். கொழும்பு 12: லங்கா புத்தகசாலை, F.L.1/14, டயஸ் பிளேஸ், குணசிங்கபுர, 2வது பதிப்பு, 1997, 1வது பதிப்பு, 1993. (கொழும்பு 14: கோல் குவிக் பிரின்டர்ஸ்).

(4), 111 பக்கம், விலை: ரூபா 75.00, அளவு: 21x14 சமீ.

வட இலங்கை சங்கீத சபையினர் நடத்தும் சங்கீதப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்காக இந்த வினா-விடைத் தொகுப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இலங்கையில் இசைத்துறையை வளர்க்கும் நோக்கமாக இசைத்துறையில் ஆர்வம் கொண்ட திரு மு. சிவசிதம்பரம் (M.S.பரம்) அவர்களால் 08.08.1931 அன்று வட இலங்கைச் சங்கீத சபை ஆரம்பிக்கப்பட்டது. முதலாவது தலைவராக வட மாகாண கல்வி அதிகாரியான Dr. இயன் சன்டிமனும், உப தலைவராக கந்தரோடையை சேர்ந்த திரு.W.M.குமாரசாமியும், செயலாளராக ஏழாலையைச் சேர்ந்த திரு மூ.சிதம்பரம் அவர்களும் பொருளாளராக அண்ணாசாமிப் பிள்ளையும் பதவி வகித்தனர். இச் சபைக்கு அண்ணாமலை பல்கலைக் கழக பேராசிரியர் T.P. சபேசையரின் வழிகாட்டலில் முதலாவது பாடத்திட்டம் வரையப்பட்டது. அதன் அடிப்படையில் 1933 ஆம் ஆண்டு தொடக்கம் சங்கீத பாடத் தேர்வுகள் நடாத்தப்பட்டன. பாடத்திட்டத்தின் தேவைக்கேற்ற காலத்திற்கு காலம் மாற்றம் செய்யப்பட்டது. அவ்வாறு 1972, 1993, 2001, 2005, 2015 ஆகிய ஆண்டுகளில் பாடத்திட்டம் மறுசீரமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இச் சபையினால் சங்கீதம், வயலின், வீணை, புல்லாங்குழல், ஹார்மோனியம், தவில், நாதஸ்வரம், நடனம், பண்ணிசை, நாடகம், மிருதங்கம் போன்ற பாடங்களை அகில இலங்கை ரீதியாக வருடந்தோரும் பத்தாயிரத்துக்கும் அதிகமான பரீட்சார்த்திகள் இப் பரீட்சைக்கு தோற்றுகின்றனர். இச் சபையானது 1931 ஆண்டு தொடக்கம் 2013 ஆம் ஆண்டு வரை யாழ் கல்வி திணைக்களத்தின் சிறிய பகுதியில் இயங்கி வந்தது. 2013 ஆம் ஆண்டு சுன்னாகம், மருதனார்மடத்தில் சொந்த கட்டடத்தில் காரியலயம் ஆரம்பிக்கப்பட்டு இன்றுவரை நடைபெற்று வருகின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 38863).

**12692**

**தமிழிசைத் தீபம்: பகுதி 1.** சச்சிதானந்தம் ஸ்ரீகாந்தா. கொழும்பு 4: திருமதி பு. சச்சிதானந்தம், 10 L-Block, தரைத் தளம், அரச தொடர்மாடிக் குடியிருப்பு, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1977. (பருத்தித்துறை: கலாபவன அச்சகம்).

xii, 200 பக்கம், அட்டவணைகள், விலை: ரூபா 12.50, அளவு: 22x14.5 சமீ.

வட இலங்கை சங்கீத சபையினரின் 1975-ம் ஆண்டுப் பாடத்திட்டத்திற்கேற்ப 2ம்,3ம்,4ம் ஆண்டுப் பரீட்சைகளுக்குத் தயார் செய்யும் மாணவர்களுக்கும் க. பொ.த. சாதாரணதர, தேசிய கல்விச் சான்றிதழ் பரீட்சைகளுக்கும் கர்நாடக இசையைப் பாடமாகப் பயிலும் மாணவர்களுக்கும் உதவும் கைந்நூல். நூலாசிரியர் மேலைப் புலோலி சச்சிதானந்தம் ஸ்ரீகாந்தா, பம்பலப்பிட்டி கொழும்பு இந்தக்

கல்லூரியின் கலைமன்ற இசை ஆசிரியராவார். இவர் இந்நூலை இசையின் அடிப்படை அம்சங்கள், இராகம், இராக இலட்சணங்கள் (29 இராகங்கள்), தாளம், மனோதர்ம சங்கீதம், இசைக் கருவிகள், தென்னிந்திய இசை உருப்படி வகைகளின் பிரிவுகள், வாக்கேயகாரர்கள் (இசைப் புலவர்கள்) ஆகிய எட்டு அத்தியாயங்களில் எழுதி வழங்கியுள்ளார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 2612).

## 12693

**தமிழில் இசைப்பாடல் வகைகள்: அறிவனாரின் பஞ்சமரபு நூலை மையப்படுத்திய ஒரு நுண்ணாய்வு.** கௌசல்யா சுப்பிரமணியன். கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, 2017. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

xxiv, 224 பக்கம், விலை: ரூபா 750., அளவு: 21x14.5 சமீ., ISBN: 978-955-659-545-1.

இவ்வாய்வானது தமிழில் இசைப்பாடல்களின் தோற்றம் பற்றியும் அப்பாடல்கள் காலங்காலமாகப் பல படிநிலைகளில் எய்திவந்த வளர்ச்சி பற்றியுமான ஒரு வரலாற்றுப் பார்வையாகும். தமிழின் இசைப்பாடல்கள் தொடர்பாக இதற்கு முன்னரும் பல ஆய்வு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவை குறிப்பாக சிந்து, கீர்த்தனை மற்றும் பரிபாடல் முதலிய பாடல் வடிவங்கள் பற்றி மேற்கொள்ளப்பட்டவையாகும். இவ்வாய்வானது மேற்படி பா வடிவங்களையும் உள்ளடக்கி ஒட்டுமொத்தமான தமிழ்ப் பாவடிவ வரலாற்றை இனம்காட்ட முற்பட்டுள்ளது. அவ்வகையில் இது ஒரு முழுநிலை வரலாற்றுப் பார்வையாக அமைந்துள்ளது. பாடல்வடிவம் தொடர்பான இந்த ஆய்விலே குறிப்பிடத்தக்க மற்றொரு அம்சம் தமிழில் இன்று எமக்கு நூல்வடிவில் கிடைக்கும் ஒரேயொரு பண்டைய இசையிலக்கண நூலானஅறிவனாரின் பஞ்சமரபு என்ற ஆக்கம் மையப்படுத்தி நோக்கப்பட்டமையாகும். இந்நூல் தமிழில் இசைப்பாடல் மரபும் இசையிலக்கண முயற்சிகளும், தமிழில் இசைப்பாடல் வகையின் தோற்றம் வளர்ச்சி மற்றும் வகைப்பாட்டு முறைமைகள், பஞ்சமரபின் பார்வையும் பகுப்புமுறையும், வண்ணமும் அதன் வளர்ச்சி நிலைகளும், கீர்த்தனையின் உருவாக்கமும் வளர்ச்சி நிலைகளும் ஆகிய ஐந்து பிரதான அத்தியாயங்களில் எழுதப்பட்டுள்ளது.

## 12694

**35 தாளங்களில் தனியாவர்த்தனம்.** நல்லை க.கண்ணதாஸ். யாழ்ப்பாணம்: ஏழிசை மிருதங்க நர்த்தனாலயம், 203, புங்கன்குளம் வீதி, அரியாலை, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2016. (யாழ்ப்பாணம்: மதி கலர்ஸ் பிரின்டர்ஸ், நல்லூர்).

xvii, 273 பக்கம், விலை: ரூபா 1000., அளவு: 19x26 சமீ., ISBN: 978-955-4079-00-7.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இசைத்துறை மிருதங்க ஆசான் நல்லை க. கண்ணதாஸ் அவர்கள் எழுதிய நூல் இது. வட இலங்கை சங்கீத சபையினது 5ஆம் 6ஆம் தரங்களிலும், இராமநாதன் நுண்கலைப்பீட இசைத்துறை

மாணவர்களினதும், மட்டக்களப்பு விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவக மாணவர்களினதும் பாடத் தேவையைப் பூர்த்திசெய்யும் வகையில் எழுதப்பட்டது. தாளம், 35 தாளங்கள் உருவாகும் விதம், கால அளவுகளைக் காட்டுகின்ற குறியீடுகளும் விளக்கமும், தனியாவர்த்தனத்தின் பகுதிகள், எல்லாத் தாளங்களுக்கும் வேகமாக பெரிய மோரா தயாரிக்கும் வழிகள், 35 தாளங்களில் தனியாவர்த்தனம் ஆகிய அத்தியாயங்களில் இந்நூல் விளக்கமாக எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 61893).

### 12695

**ஸௌந்தர்யலஹரிக் கீர்த்தனாஸதகம்.** மா.த.ந.வீரமணி ஐயர். யாழ்ப்பாணம்: மா.த.ந.வீரமணி ஐயர், விரிவுரையாளர், இராமநாதன் நுண்கலைக்கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, ஏப்ரல் 1997. (யாழப்பாணம்:ஸ்ரீ சாயி அச்சகம், இணுவில்).

xlvi, 102 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14 சமீ.

ஸௌந்தர்யலஹரிக் கீர்த்தனாஸதகம் ஸ்ரீமத் ஆதிசங்கர பகவத்பாதர் அருளியதாகும். கலாபூஷணம், கவிமாமணி இணுவில் பிரம்மஸ்ரீ மா.த.ந.வீரமணி ஐயர் அவர்களால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது. "ஸௌந்தர்யலஹரி" தெய்வத்திடமிருந்து தெய்வ மனிதரான ஆதிசங்கரருக்கு வழங்கப்பட்டதென்பர். அம்பாளின் அருளழகு, ஆட்சி அழகு, மாட்சியழகு, காட்சியழகு, கருணையழகு, கடைக்கண்ணழகு, கழலழகு, பேச்சழகு எனப் பல அழகின் அலைகள் இன்ப வெள்ளமாகப் பெருகும் இசைப்பாடல்களாக இவை விளங்குகின்றன. அம்பாளின் உடல் அழகை வர்ணித்து எமது உள்ளத்தின் அழகைப் பெருக்கும் கவிகள் இவை. இது ஸ்ரீமதி வீரமணி ஐயர் ருக்மணி அம்மாள் அவர்களின் ஆத்மசாந்தி மலராக இணுவில் வட்டுவினி தர்மஸாஸ்தா குருகுலம் காயத்ரிபீடம் ஸ்ரீ கண்ணகாபரமேஸ்வரி அம்பாளின் பாதாரவிந்தங்களில் சமர்ப்பிக்கப்பட்டது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 23265).

### 12696

**ஹிந்துஸ்தானி இசை-மேற்கத்திய இசை: ஓர் அறிமுகம்.** மீரா வில்லவராயர். மொரட்டுவை: மீரா வில்லவராயர், 21B 2/1 , 1வது பதிப்பு, 2003. (கொழும்பு 6: வின்னர்ஸ் லிமிட்டெட், 30, நிஹால் சில்வா மாவத்தை, கிரில்லப்பனை).

vi, 72 பக்கம், விளக்கப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21 x14.5 சமீ.

கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தர வகுப்பின் கர்நாடக சங்கீத பாடத்திட்டம் 1995இல் மாற்றியமைக்கப்பட்ட வேளை கர்நாடக இசையோடு மேற்கத்திய, ஹிந்துஸ்தானி இசை சம்பந்தமான ஆரம்ப அறிவையும் மாணவர் பெறவேண்டும் என்ற நோக்கத்தோடு சில விடயங்கள் பாடத்திட்டத்தில் புகுத்தப்பட்டன. திருத்தியமைக்கப்பட்ட பாடத்திட்டத்தைக் கருத்திற்கொண்டு இந்நூல்

*உருவாக்கப்பட்டுள்ளது. ஹிந்துஸ்தானி இசையின் இராகங்கள், ஹிந்துஸ்தானி இசை உருப்படி வகைகள், ஹிந்துஸ்தானி இசைத் தாளங்கள், ஹிந்துஸ்தானி சங்கீதத்தில் பாவனையில் உள்ள வாத்தியக் கருவிகள், கர்நாடக ஹிந்துஸ்தானி சங்கீதங்களுக்கு இடையிலான ஒற்றுமை/வேற்றுமைகள், ஹிந்துஸ்தானி சங்கீத லிபி முறை, கர்நாடக சங்கீதத்தில் ஹிந்துஸ்தானி சங்கீதத்தின் செல்வாக்கு, ஹிந்துஸ்தானி சங்கீதத்தில் பிரபல்யம் வாய்ந்த வாக்கேயகாரர் சரித்திரம், ஐரோப்பிய சங்கீதமும் கர்நாடக சங்கீதமும்: ஓர் ஒப்புநோக்கு, ஐரோப்பிய சஙகீத லிபி முறை, ஐரோப்பிய சங்கீத வாத்தியக் கருவிகள், ஐரோப்பிய சங்கீதத்தில் பிரபல்யம் வாய்ந்த வாக்கேயகாரர் சரித்திரம், மேலைத்தேய இசையில் வழங்கும் சில பதங்களுக்குரிய விளக்கங்கள் ஆகிய அத்தியாயத் தலைப்புகளில் இப்பாடங்கள் விளக்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 24686).*

**மேலும் பார்க்க: 13A05**

## 791 நாட்டியக் கலை

### 12697

**அருங்கலை ஆடற்கலை.** *சுபாஷிணி பத்மநாதன். தெகிவளை: விமலோதய கிளாசிக்கல் பரத நாட்டிய சென்டர், இல. 19, கிரகரி பிளேஸ், 1வது பதிப்பு, ஜனவரி 1998. (கொழும்பு 6: பிரின்ட் கிராப்பிக்ஸ், 4, நெல்சன் பிளேஸ், வெள்ளவத்தை).*

*(6), 82 பக்கம், தகடுகள், விலை: ரூபா 250., அளவு: 22x14.5 சமீ.*

*இந்நூல் ஏற்கனவே ஆசிரியரால் எழுதப்பட்டு பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட சில கட்டுரைகளை உள்ளடக்கியுள்ளது. ஆடற்கலையில் செறிந்தும், நிறைந்தும், பொதிந்தும், மலிந்தும் உள்ள பல அம்சங்களை உள்ளடக்கியதாக இந்நூல் விளங்குகின்றது. குறிப்பாக தமிழக சாஸ்திரீக நாட்டிய வடிவங்களுக்கு இடையிலான தொடர்பு, நடைமுறை நாட்டிய உருப்படிகளுக்கு இடையிலான ஓர் அடிப்படை நோக்கு, காலக்கிரமத்தில் இக்கலை எதிர்கொள்ளும் சில உத்தியியல் மாற்றங்கள், பண்டைய பண்ணிசையும் நாட்டியமும் மற்றும் பண்டைய நாட்டிய நூல்களில் இடம்பெற்ற சில அரிய அம்சங்களும், அவற்றின் அன்றைய நிலைப்பாடுகளும், பரதக்கலை வளர்ச்சிக்கு ஆக்கபூர்வமாக அரும்பெரும் பங்களிப்பை நல்கிய, ஆண்களின் அர்ப்பணிப்பும், தொன்மை மிக்க தொல்காப்பியத்தில் இடம்பெறும் ரச உணர்வுப் பேதங்களும், அவற்றை இன்றைய ரச உணர்வுப் பேதங்களுடன் தொடர்புபடுத்தி, ஆய்வு நோக்கில், இந் நூலில் ஆராயப்படுகின்றது. அணுகுமுறையில், இந் நூலின் ஆய்வுக்கண்ணோட்டம், ஏனைய நாட்டிய நூல்களிலிருந்து வேறுபட்டு விளங்குவதாயும், மிகவும் எளிய தமிழில், இலகு நடையில், யாவர்க்கும் விளங்கும் வகையில், இந்நூல் எழுதப் பட்டுள்ளது. குறிப்பாக நடனத்தைப் பயிலும் மாணவர்களுக்கும், மற்றும் இத்துறையில் ஈடுபாடும், ஆர்வம் மிக்க ரசிகப் பெருமக்களுக்கும், இக் கலையின் அடிப்படை நுட்ப நுணுக்கங்களை தெளிவுற உணரும் வகையில் இந்நூல் எழுதி*

*வெளியிடப்படுகின்றது. இந்நூலில் உள்ள கட்டுரைகள், தமிழகம் தந்த இரண்டு கலாச்சார நாட்டிய வடிவங்கள், இன்றைய நடைமுறை நாட்டிய நிகழ்வுகளில் இடம்பெறும் நடன உருப்படிகள், இன்றைய பரத நாட்டியத்தில் பக்கவாத்தியப் பாவனைப் பிரயோகம், பரதத்தில் பதங்கள் கீர்த்தனங்கள் ஜாவளிகள், பரதத்தில் மாற்றமுறும் உத்திகள், வைணவமதப் பக்தி நெறியில் நாட்டியம், பண்டைய பண்ணிசையும் நாட்டியமும், பண்டைய நாட்டிய நூல்களும் இன்றைய நாட்டிய நூல்களும், பரதக்கலையானது ஆண்களின் ஆர்வத்தாலும், அர்ப்பணிப்பாலும், அரவணைப்பினாலேயுமே வளர்ச்சியுற்று, எழுச்சியுற்று, மிளிர்ச்சியுற்று உயர்ச்சிபெற்று வளம் பெற்றது, தெல்காப்பியத்தில் நாட்டியம் ஆகிய பத்து அத்தியாயங்களாக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 20299. நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தின் சேர்க்கை இலக்கம் 007480).*

## 12698

**அழகியற் கல்வி: பரத நாட்டியம்.** *யசோதரா விவேகானந்தன். சாவகச்சேரி: கமலாவதி பிரசுரம், சரசாலை, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1992. (சாவகச்சேரி: திருக்கணித அச்சகம், மட்டுவில்).*

viii, *34 பக்கம், விளக்கப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5*x*14 சமீ.*

*பரத நாட்டியம் பற்றிய அடிப்படை அறிவினையும் ஆரம்ப விளக்கத்தையும் இந்நூல் வழங்குகின்றது. பரதக் கலை, நடனக் கலையின் உலகியல் வரலாறு, நடனக் கலையின் புராண வரலாறு, நடனம் கற்பதன் நோக்கமும் நன்மைகளும், பரத நாட்டியக் கச்சேரி அமைப்பும் உருப்படிகளின் விளக்கமும், பாத்திர இலட்சணங்கள், அபாத்திர இலட்சணங்கள், பரதநாட்டிய இலட்சணங்கள், நமஸ்கார விளக்கம், தியான ஸ்லோகம், பரத நாட்டியத்தின் அடிப்படை மண்டல நிலைகள், பாதபேதங்கள், அடவு, முத்திரைகள், பரத நாட்டிய பயிற்சி அடவுகளும் அவை பற்றிய விளக்கங்களும், தெய்வமாக்கலை, நடன உட்பிரிவுகள், பரதநாட்டிய உடை அலங்காரங்கள் ஆகிய பதினெட்டு இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. நூலாசிரியை நாட்டியக் கலைமணி திருமதி யசோதரா விவேகானந்தன் தென்மராட்சிக் கோட்ட பரதநாட்டிய ஆசிரிய ஆலோசகராவார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 25333).*

## 12699

**தமிழர் அறிகையும் பரத நடனமும்.** *சபா ஜெயராஜா. யாழ்ப்பாணம்: போஸ்கோ வெளியீடு, நல்லூர், 1வது பதிப்பு, 2002. (யாழ்ப்பாணம்: போஸ்கோ ஆர்ட்ரோன் பிரிண்டர்ஸ்).*

*(6), 69 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: ரூபா 100., அளவு: 20.5*x*14.5 சமீ.*

பரத நாட்டியம் தொடர்பாக முன்னர் கொழும்புத் தமிழ்ச் சங்கத்திலும் பின்னர் பெருமாட்டி லீலாவதி இராமநாதன் நினைவுச் சொற்பொழிவாக யாழ்பாணப் பல்கலைக்கழகத்திலும் நிகழ்த்திய இருவேறு சொற்பொழிவுகளை ஆதாரங்களாகக் கொண்டு இந்நூலாக்கம் இடம்பெறுகின்றது. தொன்மங்களும் நடன ஆக்கமும், தில்லை அம்பலத்து ஆடல், சிவதாண்டவங்களும் பரத நடனமும், பரத நடனமும் கலையறிகைக் கோலமும், பரத நடனமும் பெண் தெய்வ வழிபாடும் ஆகிய ஐந்து இயல்களில் இந்நூல் ஆக்கப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 33006. நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தின் சேர்க்கை இலக்கம் 009934).

## 791.1 நாட்டிய நாடகங்கள்

### 12700

**நாட்டிய நாடகத் தொகுப்பு (பரிசு பெற்ற நாடகங்கள்).** வைகுந்தம் கணேசபிள்ளை. யாழ்ப்பாணம்: இணுவில் திருநெறிய தமிழ்மறைக்கழகம், ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் திருக்கோவில், 1வது பதிப்பு, 2012.

xix, 124 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 20.5x14.5 சமீ.

யாழ். இராமநாதன் மகளிர் கல்லூரியின் முன்னாள் ஆசிரியையான கலாபூஷணம், பண்டிதை வைகுந்தம் கணேசபிள்ளை அவர்கள் இயற்றிய நாட்டிய நாடகங்களின் தொகுப்பு இதுவாகும். இதில் அரிச்சந்திர மயான காண்டம், கண்ணகி, யார் யார்க்கும் குடியல்லர், கற்பு, சாந்தி சமாதானம், வந்ததே வசந்தம், பாஞ்சாலி சபதம், பரதன் பாதுகை பெறல், பஞ்ச பூதங்கள், கங்குலும் பகல்பட வந்தான், தமயந்தி இரண்டாம் சுயம்வரம், மயிர் நீப்பின் வாழா கவரிமான், சூரன்போர், கர்ணன், ஜடாயுவின் மோட்சம், சிவனது தவத்தால் அந்த இயமனையும் வெல்வேன் யானே ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட 16 பரிசுபெற்ற நாட்டிய நாடகங்களை இந்நூல் உள்ளடக்குகின்றது. இவை 1997-2010 காலகட்டங்களில் மேடையேற்றம்பெற்றுப் பரிசுபெற்றவை. இந்நூல் பண்டிதை வைகுந்தம் கணேசபிள்ளை அவர்கள் கலாபூஷணம் விருது பெற்றமையையொட்டிய நினைவேடாகவும் வெளியிட்டுள்ளமையால் இந்நூலின் ஆரம்பத்தில் வாழ்த்துரைகள் பலவும் இடம்பெற்றுள்ளன.

## 792 அரங்கியல், நாடகக்கலை

### 12701

**அரங்க நிர்மாணம்: நாடகமும் அரங்கியலும்: மாணவர் கைந்நூல்.** கந்தையா ஸ்ரீகந்தவேள். வவுனியா: சண்முகலிங்கம் கல்வியியல் அரங்கு, 1வது பதிப்பு, ஆனி 2009. (வவுனியா: மல்ரிவிஷன் அச்சுக் கலையகம், இல. 77, முதலாம் குறுக்குத் தெரு).

60 பக்கம், விளக்கப்படங்கள், புகைப்படங்கள், விலை: ரூபா 150., அளவு: 20.5x14.5 சமீ.

நாடகமும் அரங்கியலும் என்னும் துறையானது ஒரு கற்கைநெறியாக இலங்கை கல்வித் திணைக்களத்தினால் 1978இல் அதன் பாடத்திட்டத்தில் அறிமுகப் படுத்தப்பட்டது. க.பொ.த. சாதாரண, உயர்தர மாணவர்களின் பாடத்தேவையை பூர்த்திசெய்யும் வகையில் இந்நூல் அரங்க நிர்மாணம் பற்றி விளக்கமளிக்கின்றது. நாடகபாடம், அரங்க வெளி, காட்சி விதானிப்பு, அரங்கத் திரை, ஒளிவிதானிப்பு, வேட உடை விதானிப்பு, ஒப்பனை, வேடமுகம், அரங்கிற்கான இசை, அரங்கிற்கான நடனம், மேடைப் பொருட்கள், கைப்பொருட்கள், அரங்கப் பொறிகள், அரங்கத் தொழில்நுட்பம், பெருங்காட்சி, பார்ப்போர், நடனக் கோலம், அரங்கியலாளர்கள் ஆகிய தலைப்புகளின்கீழ் அரங்க நிர்மாணம் தொடர்பான விரிவான விளக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன. நூலாசிரியர் ஸ்ரீகந்தவேள், வவுனியா பண்டாரிக்குளம் வ/ விபுலாநந்தாக் கல்லூரியின் ஆசிரியராவார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 56223).

## 12702

**அரங்கியல் நூல்:க.பொ.த.உயர்தரம் (நாடகமும் அரங்கியலும்).** வனிதா சுரேஸ். களுவாஞ்சிக்குடி: திருமதி வனிதா சுரேஸ், வாகரையார் வீதி, களதாவளை-1, 1வது பதிப்பு, தை 2006. (மட்டக்களப்பு: நியூ கீன் அச்சகம், 73, முனை வீதி).

v, 62 பக்கம், விலை: ரூபா 125.00, அளவு: 20x15 சமீ.

க.பொ.த. தரத்தில் "நாடகமும் அரங்கியலும்" ஒரு பாடமாகக் கற்கும் மாணவர்களின் பாடத் தேவையைப் பூர்த்திசெய்யும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள இந்நூலில் ஈடிபஸ், ஒதல்லோ, பொம்மை வீடு, செறித் தோட்டம், மாணிக்கமாலை, இராம நாடகம், ஏழு நாடகங்கள் ஆகிய தலைப்புகளில் அரங்கியல் பாடங்கள் ஒழுங்குபடுத்தப்பட்டு கதைச்சுருக்கம், வினாக்கள், விடைகள், படங்கள் என்பன விளக்கமளிக்கப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 38516).

## 12703

**கட்டியம்: உலகத் தமிழர் அரங்க ஆய்விதழ். தொகுதி 1-எண்1: ஏப்ரல்-ஜுன் 2002.** அன்ரன் பொன்ராஜா (நிர்வாக ஆசிரியர்), வீ.அரசு (சிறப்பாசிரியர்). சுவிட்சர்லாந்து: தமிழ் நாடகக் கல்லூரி, சுவிஸ், இணை வெளியீடு, தமிழ்நாடு: விறல் அறக்கட்டளை, 1வது பதிப்பு, ஜுன் 2002. (சென்னை 14: வே.கருணாநிதி, பார்க்கர் கம்பியூட்டர்ஸ்).

166 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x18 சமீ.

கட்டியம் உலகத் தமிழர் அரங்கியல் ஆய்விதழின் ஆசிரியர் குழுவில் இலங்கை யிலிருந்து கா.சிவத்தம்பி, சி.மௌனகுரு, குழந்தை ம.சண்முகலிங்கம் ஆகியோரும், தமிழகத்திலிருந்து ந.முத்துசாமி, கவிஞர் இன்குலாப், ஓவியர் ட்ராஸ்கி மருது ஆகியோரும், புகலிடத்திலிருந்து ஏ.சி.தாசீசியஸ், இளைய பத்மநாதன், மக்கின் ரையர் ஆகியோரும் இணைந்து பணியாற்றியுள்ளனர். இவ்விதழில் தலையங்கம் (தமிழர் அலைவும் தமிழ் அரங்கும்), ஆய்வுக் கட்டுரைகள் (கூத்தும் நடனமும்/

கா.சிவத்தம்பி, மரபுகளின் தொடர்ச்சி: கம்பெனி நாடகமும் தமிழ் சினிமாவும்/சு. தியடோர் பாஸ்கரன், வேத்தியல் பொதுவியல் என்று இரு திறம்/இளைய பத்மநாதன், பின் அமைப்பியல் பின் நவீனத்துவ நோக்கில் கூத்தைப் புரிந்து கொள்ளல் ஓர் ஆரம்ப முயற்சி/சி.மௌனகுரு), உரையாடல் (எழுதப்பட்ட அரங்கப் பிரதிக்கு இணையான ஒளி அமைப்புப் பிரதி/ செ.ரவீந்திரன்), நாடக விமர்சனம் (மெடியாவும் மணிமேகலையும்/எஸ்.வி.ராஜதுரை, சுவிஸில் எழுந்த கடலம்மா அலை/கல்லாறு சதீஷ், இராவணேசன்-கூத்தின் இன்றைய வடிவம்/ சி.சந்திரசேகரம்), நூல் விமர்சனமும் அறிமுகமும் (பெண்-அரங்கம்-தமிழ்ச் சூழல்/இன்குலாப், ஈழத்தின் மரபவழி அரங்கம் குறித்த இரு நூல்கள்/தெ. மதுசூதனன்), ஆவணம் (தெருக்கூத்துப் பிரதியில் இசைக்கூறுகள்/ப.குணசுந்தரி), நாடகப் பிரதி (கடலம்மா/யோகராஜா), பதிவு (அரங்க ஆற்றுகையாளர் ஒன்று கூடல்) ஆகிய எட்டு பிரிவுகளில் படைப்பாக்கங்கள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 30936).

### 12704

**கட்டியம்: உலகத் தமிழர் அரங்க ஆய்விதழ். தொகுதி 1-எண்3: அக்டோபர்-டிசம்பர் 2002.** அன்ரன் பொன்ராஜா (நிர்வாக ஆசிரியர்), வீ.அரசு (சிறப்பாசிரியர்). சுவிட்சர்லாந்து: தமிழ் நாடகக் கல்லூரி, சுவிஸ், இணை வெளியீடு, தமிழ்நாடு: விறல் அறக்கட்டளை, 1வது பதிப்பு, டிசம்பர் 2002. (சென்னை: கணேசமூர்த்தி, ஜோதி என்டர்பிரைசஸ்).

175 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x18.5 சமீ.

கட்டியம் உலகத் தமிழர் அரங்கியல் ஆய்விதழின் ஆசிரியர் குழுவில் இலங்கையிலிருந்து கா.சிவத்தம்பி, சி.மௌனகுரு, குழந்தை ம.சண்முகலிங்கம் ஆகியோரும், தமிழகத்திலிருந்து ந.முத்துசாமி, கவிஞர் இன்குலாப், ஓவியர் ட்ராஸ்கி மருது ஆகியோரும், புகலிடத்திலிருந்து ஏ.சி.தாசீசியஸ், இளைய பத்மநாதன், மக்கின் ரையர் ஆகியோரும் இணைந்து பணியாற்றியுள்ளனர். இவ்விதழில் தலையங்கம் (பண்பாட்டு நிறுவனங்களும் அரசுசார் செயல்பாடுகளும்), ஆய்வுக் கட்டுரைகள்(வாழ்க்கை, சடங்கு, மேடை ஆகியவற்றில் பாவனை: பாவனை நடனம், பாவனை நாடகம்/ஆ.தனஞ்செயன், புலம்பெயர் நாடுகளில் தமிழ் நாடக ஆற்றுகை/க.ஆதவன், புலம்பெயர்ந்த கலைகளின் மூலக்கருத்து புலம்பெயராமல் இருக்கமுடியுமா?/குலசேகரம் சஞ்சயன்), உரையாடல் (ஈழத்தின் அரங்கம்/கா.சிவத்தம்பி), நாடக விமர்சனம் (அம்மையே அப்பா ஒப்பில்லா மணியே: உபகதை/ந.இரவீந்திரன், பனித்தீ/இரவிவர்மா), நூல் விமர்சனமும் அறிமுகமும் (நாடகமேடை நினைவுகள்/பம்மல் சம்பந்த முதலியார்), ஆவணம் (நாடகத் தடைச் சட்டம்/வீ.அரசு, கீமாயணம், எம்.ஆர்.ராதா), நாடகப் பிரதி (தனு/இளைய பத்மநாதன், அம்மையே அப்பா ஒப்பில்லா மணியே/யோகராசா), பதிவு (கிழக்கிசை குறித்த கட்டுரைகள்/செ.யோகராசா, வ.இன்பமோகன், பட்டமளிப்பு விழா உரை/அ.மங்கை) ஆகிய எட்டு பிரிவுகளில் இவ்வாய்விதழின்

படைப்பாக்கங்கள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 32148).

### 12705

**கட்டியம்: உலகத் தமிழர் அரங்க ஆய்விதழ். தொகுதி 1-எண்6: அக்டோபர்-டிசம்பர் 2003.** அன்ரன் பொன்ராஜா (நிர்வாக ஆசிரியர்), வீ.அரசு (சிறப்பாசிரியர்). சுவிட்சர்லாந்து: தமிழ் நாடகக் கல்லூரி, சுவிஸ், இணை வெளியீடு, தமிழ்நாடு: விறல் அறக்கட்டளை, 1வது பதிப்பு, டிசம்பர் 2003. (சென்னை: கணேசமூர்த்தி, ஜோதி என்டர்பிரைசஸ்).

159 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x18 சமீ.

கட்டியம் உலகத் தமிழர் அரங்கியல் ஆய்விதழின் ஆசிரியர் குழுவில் இலங்கையிலிருந்து கா.சிவத்தம்பி, சி.மௌனகுரு, குழந்தை ம.சண்முகலிங்கம் ஆகியோரும், தமிழகத்திலிருந்து ந.முத்துசாமி, கவிஞர் இன்குலாப், ஓவியர் ட்ராஸ்கி மருது ஆகியோரும், புகலிடத்திலிருந்து ஏ.சி.தாசீசியஸ், இளைய பத்மநாதன், மக்கின் ரையர் ஆகியோரும் இணைந்து பணியாற்றியுள்ளனர். இவ்விதழில் தலையங்கம் (கண்ணப்பத் தம்பிரான்), அஞ்சலி (வீராசாமித் தம்பிரானின் புரிசை தெருக்கூத்துப் பரம்பரை/ த.முத்துசாமி, மரபை மீறிய கலைஞனின் முடிவிலாத் தேடல்/செ.இரவீந்திரன்), ஆய்வுக் கட்டுரைகள்(கூத்து ஒரு அறிமுகம்/இளைய பத்மநாதன், விடுதலைக்கான அரங்கின் தேவை/எஸ். பாலசிங்கம், பார்சி அரங்கு: தோற்றமும் வளர்ச்சியும்-1/சோம்நாத் குப்தா), உரையாடல் (மண்ணும் மரபும் மூச்சாக/ஏ.சீ.தாசீசியஸ், தெருவெளி அரங்கம் நோக்கி/பாலசிங்கம்), நாடக விமர்சனம் (நாடகவெளி: பிரதியை நோக்கித் திரும்புதல்/வளர்மதி, காத்தவன் கூத்து-ஓர் அநுபவம்/பராசக்தி சுந்தரலிங்கம்), குறுந்தகடு அறிமுகம் (அல்ப்ஸ் கூத்தர்கள்/அம்ஷன் குமார்), நூல் விமர்சனமும் அறிமுகமும் (ஈழத்து தமிழ் நாடக அரங்கியல்துறையில் பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை/கா.சிவத்தம்பி), ஆவணம் (வீராசாமித் தம்பிரான் வாழ்ந்த வரலாறு), நாடகப் பிரதி (ஆத்ம தகனம்/செ.இளங்கோ), பதிவு (ஈழத்து நாடகக் கலைச் சூழலில் அக்கினிப் பெருமூச்சு ஒரு பார்வை/சு.வில்வரத்தினம், தமிழ் அவைக்காற்றுக் கழகத்தின் நாடக விழா 2003/ஏ.ஜே.கனகரத்தினா) ஆகிய பத்துப் பிரிவுகளில் இவ்வாய்விதழின் படைப்பாக்கங்கள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 31459).

### 12706

**சிகரம்.** பிரியா சதீஸ்குமார் (தொகுப்பாசிரியர்). கொழும்பு 6: நாடக மன்றம், சைவ மங்கையர் வித்தியாலயம், இல.23, உருத்திரா மாவத்தை, வெள்ளவத்தை, 1வது பதிப்பு, 2013. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

viii, 112 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: ரூபா 300., அளவு: 21x14.5 சமீ.

இது நாடகத் தமிழ் தொடர்பான பயன்மிகு கட்டுரைகளின் தொகுப்பு. சிகரத்தின் சிகரம், மன்றத்தின் சுவடுகள், நாடகக் கலையின் வரலாறு, மறைந்துபோன நாடகத் தமிழ் நூல்கள், ஈழத்துத் தமிழ் நாடகங்கள் வகைகளும் வளர்ச்சியும், கம்ப நாடகம், பின் காலனித்துவமும் ஈழத்தமிழர் அரங்கமும், தமிழில் நாடகத் தோற்றம், தமிழ் மொழித்தினப்போட்டிக் கூத்துகள் எதிர்நோக்கும் சவால்கள், சமூக ஒருங்கிணைப்புக் கலையாகவும் கற்கை நெறியாகவும் கூத்து, ஈழத்துத் தலைசிறந்த நாடக கலைஞர் நடிகமணி வி.வி.வைரமுத்து, அருணா செல்லத்துரையின் நாடகங்களில் ஒரு பார்வை ஆகிய 12 தலைப்புகளில் இச்சிறப்பு மலர் உருவாக்கப்பட்டுள்ளது. இறுதிப் பகுதியில் பாடசாலை மட்டப் போட்டிகளின் முடிவுகள், பதிந்த நிழல்கள் ஆகிய இரு ஆக்கங்களும் இடம்பெற்றுள்ளன. திருமதி பிரியா சதீஸ்குமார் சைவ மங்கையர் வித்தியாலய நாடக மன்றப் பொறுப் பாசிரியராவார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 54095).

### 12707

**சோஃபகிளீஸின் மன்னன் ஈடிப்பஸ்.** சோஃபகிளீஸ் (கிரேக்க மூலம்), குழந்தை ம.சண்முகலிங்கம் (தமிழாக்கம்), நாகேந்திரம் நவராஜ் (பதிப்பாசிரியர்). கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு 2018. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

viii, 238 பக்கம், விலை: ரூபா 500., அளவு: 22x14.5 சமீ., ISBN: 978-955-659-585-7.

சோஃபகிளீஸ் எழுதிய அவலச் சுவை கொண்ட கிரேக்க நாடகமான மன்னன் ஈடிப்பஸ் E.F.Watling அவர்களால் ஆங்கிலத்தில் King Oedipus by Sophocles என்ற தலைப்பில் எழுதப்பட்டது. இந்நாடகத்தின் ஆங்கிலவழித் தமிழாக்கமும் அது தொடர் பான பல்வேறு கட்டுரைகளும் கொண்ட தொகுப்பே இந்நூலாகும். விதியின் கைகளில் ஆட்டுவிக்கப்படுகின்ற மனித அவலம்தான் இந்நாடகத்தின் தொனிப் பொருள். இந்நூல் சோஃபகிளீஸ்- கிரேக்கத்தின் சத்துச்சாறு, சோஃபகிளீஸின் மன்னன் ஈடிப்பஸ் நாடகம் (பக்கம் 17-107), நாடக எழுத்துருவொன்றினைப் புரிந்துகொள்ளல், மன்னன் ஈடிப்பஸ் நாடகம் பற்றியதொரு பருமட்டான பார்வை, மன்னன் ஈடிப்பஸ் நாடகத்தின் சூழ்வும் கட்டமைப்பும், மன்னன் ஈடிப்பஸ் நாடகத்தின் கருக்களும் கருத்துக்களும், மன்னன் ஈடிப்பஸ் நாடகப் பகுப்பாய்வு, மன்னன் ஈடிப்பஸ் நாடகத்தை விளங்கிக்கொள்ளச் சில வினாக்களும் விடைக் குறிப்புக்களும், அவலச்சுவை: சில அறிஞர்களின் கருத்துக்கள், கிரேக்க அரங்கு பற்றிய ஒழுங்கு முறை சாராத பொதுப்பார்வை ஒன்று, பிற்சேர்க்கை- குழந்தை ம.சண்முகலிங்கத்தின் நாடக எழுத்துருக்கள் ஆகிய 11 ஆக்கங்களை இந்நூல் உள்ளடக்குகின்றது.

### 12708

**தமிழில் நாடகம்: கட்டுரைத் தொகுப்பு.** பாலசுகுமார். மட்டக்களப்பு: அனாமிகா வெளியீடு, 54, பெய்லி முதலாம் குறுக்குத் தெரு, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1995. (அச்சக விபரம் தரப்படவில்லை).

(44) பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

இந்நூலில் தமிழில் நாடகம்: ஓர் ஆய்வுப் பார்வை, வடமோடி-தென்மோடி கூத்து வடிவங்கள்-ஒரு விபரண நோக்கு, பறைமேளக் கூத்து-மட்டக்களப்பு கூத்து வகை ஒன்று பற்றிய அறிமுகம், சிங்கள நாடக அரங்கு-ஒரு அறிமுகம் ஆகிய நான்கு கட்டுரைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. அனாமிகா வெளியீட்டுத் தொடரில் மூன்றாவது பிரசுரம் இதுவாகும். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 17710).

## 12709

**நாடகமும் அரங்கியலும்.** க.திலகநாதன். வல்வெட்டித்துறை: திருமதி சிவாஜினி திலகநாதன், ஜனனி வெளியீட்டகம், புது வளவு, பொலிகண்டி, 2வது பதிப்பு, வைகாசி 2009, 1வது பதிப்பு, பங்குனி 2008. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, ½, டாம் வீதி).

101 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரம்) பரீட்சை 2001-2009 வரையான கடந்தகால வினாத்தாள்களும் விடைகளும் அடங்கிய நூல்.

**நாடகமும் அரங்கியலும்.** க.திலகநாதன். வல்வெட்டித்துறை: திருமதி சிவாஜினி திலகநாதன், ஜனனி வெளியீட்டகம், புது வளவு, பொலிகண்டி, 3வது பதிப்பு, ஐப்பசி 2011, 1வது பதிப்பு, பங்குனி 2008, 2வது பதிப்பு, வைகாசி 2009. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

135 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 21x15 சமீ.

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரம்) பரீட்சை 2001-2010 வரையான கடந்தகால வினாத்தாள்களும் விடைகளும் அடங்கிய நூல். நூலாசிரியர், கோப்பாய், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் நாடகத்துறை விரிவுரையாளராகப் பணியாற்றுபவர்.

## 12710

**நாடகமும் அரங்கியலும்: 2015 புதிய பாடத்திட்டத்திற்கு அமைவானது-தரம் 10.** சு.சந்திரகுமார். கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, 2016. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

xvi, 155 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 375., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-659-468-3.

**நாடகமும் அரங்கியலும்: 2015 புதிய பாடத்திட்டத்திற்கு அமைவானது-தரம் 10.** சு.சந்திரகுமார். கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, திருத்திய 2வது பதிப்பு, 2017, 1வது பதிப்பு, 2016. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

168 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 395., அளவு: 21x14.5 சமீ., ISBN: 978-955-659-468-3.

*இந்நூல் 2015ஆம் ஆண்டில் தரம் 10இற்கான நாடகமும் அரங்கியலும் புதிய பாடத்திட்டத்திற்கு அமைவாகத் தயாரிக்கப்பட்டது. நாடகம், அரங்கு தொடர்பான பல விடயங்கள் மிகத் தெளிவாகவும் சுருக்கமாகவும் எடுத்துக்காட்டுகளுடனும் இந்நூலில் விபரிக்கப்பட்டுள்ளன. தேவையான இடங்களில் மிகப் பொருத்தமான விளக்கப்படங்கள் தரப்பட்டுள்ளன. ஆசிரியர்களுக்குக் கைந்நூலாகவும் மாணவர்களுக்குப் பாடப்புத்தகமாகவும் அமையத்தக்க வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. இந்நூலாசிரியர் கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார பீடத்தின் நுண்கலைத்துறையில் நாடகமும் அரங்கியலும் பாடத்தைக் கோட்பாட்டுரீதியாகவும், செயல்முறைரீதியாகவும் கற்பிக்கும் விரிவுரையாளராவார்.*

### 12711

**நாடகமும் அரங்கியலும்: 2016 புதிய பாடத்திட்டத்திற்கு அமைவானது-தரம் 11.** *சு.சந்திரகுமார். கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, 2016. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).*

viii, *128 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 350., அளவு: 21*x*14 சமீ.,* ISBN: *978-955-659-488-1.*

*இந்நூல் 2016ஆம் ஆண்டில் தரம் 11இற்கான நாடகமும் அரங்கியலும் புதிய பாடத்திட்டத்திற்கு அமைவாகத் தயாரிக்கப்பட்டது. இதில் நாடக அரங்கக் கலைகள், அதன் கூறுகளான நெறியாழ்கை, நாடகத் தயாரிப்பு, அரங்கக் காட்சியமைப்பு, அரங்க இசை விதானிப்பு, அரங்கிற்கான அசைவியக்கம், வேட உடை விதானிப்பு, நாடக ஒப்பனை, அரங்க ஒளி விதானிப்பு, நாடகத்தில் பார்ப்போர், ஊமச்சித்திரிப்பு, அரங்கப் பயிற்சிகள் என்பனவும் நாடகம்சார் சடங்குகள், பாரம்பரியக் கூத்து, ஈழத்துத் தமிழ் நாடக ஆளுமைகள், சிங்கள நாடக அரங்கு என்பனவும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன. விதிக்கப்பட்ட நாடக பாடமான "புதியதொரு வீடு" நாடகப் பகுப்பாய்வும் அதன் கரு, கதை, அதில் வரும் பாத்திரங்கள், அதில் வெளிப்படும் சமகால அரசியல் பொருளாதார விடயங்கள் என்பனவும் தரப்பட்டுள்ளன. புதியதொரு வீடு நாடகம் ஆற்றுகை நிலையடையும்போது வெளிப்படும் விடயங்கள், இதன் நாடகப் பாணி என்பனவும் குறிப்பிடப்பட்டுள்ளன. மாணவர்கள் செய்முறைப் பரீட்சையில் சித்தியடைவதற்கு அப்பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள்களும், எழுத்துப் பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள்களும் தரப்பட்டுள்ளன. நூலாசிரியர் கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார பீடத்தின் நுண்கலைத்துறையில் நாடகமும் அரங்கியலும் பாடத்தைக் கோட்பாட்டுரீதியாகவும், செயல்முறைரீதியாகவும் கற்பிக்கும் விரிவுரையாளராவார்.*

### 12712

**பெருநதியின் புதிய கிளை: வித்தியானந்தன் பாணியிலான மரபுவழி நாடக மரபு.** *சுந்தரலிங்கம் சந்திரகுமார். மட்டக்களப்பு: விமோசனா வெளியீடு, 42/15, ஐந்தாம் குறுக்குத் தெரு, இருதயபுரம் மேற்கு, 1வது பதிப்பு, ஜுன் 2009. (மட்டக்களப்பு: வணசிங்கா பிரிண்டர்ஸ்).*

xxii, *110 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 20.5*x*15 சமீ.,* ISBN: *978-955-51736-2-9.*

ஈழத்துக் கூத்தும் வித்தியானந்தன் பாணியிலான நாடக வடிவமும், வித்தியானந்தன் பாணி உருவாவதற்கான காலச்சூழல், மட்டக்களப்பு மாவட்டப் பாடசாலைகளில் வித்தியானந்தன் பாணியிலான நாடகத்தின் அறிமுகமும் 1990களின் முன் அதன் செயற்பாடுகளும், 1990களின் பின் மட்டக்களப்பு மாவட்டப் பாடசாலைகளில் வித்தியானந்தன் பாணியிலான நாடகச் செயற்பாடுகள், பாடசாலைக் கூத்துக்கள் பற்றிய மதிப்பீடு ஆகிய ஐந்து இயல்களில் இவ்வாய்வு எழுதப்பட்டுள்ளது. சுந்தரலிங்கம் சந்திரகுமார் கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத் துறையின் சிறப்புமிக்க மாணவர்களுள் ஒருவர். பாடசாலை ஆசிரியராகப் பணியாற்றும் இவர் அரங்கியல்துறையில் அதீத ஈடுபாடு கொண்டவர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 51329).

## 12713

**மேலகரம் திரிகூடராசப்பக் கவிராயர் இயற்றிய திருக்குற்றாலக் குறவஞ்சி.** அம்மன்கிளி முருகதாஸ், க.திலகநாதன் (பதிப்பாசிரியர்கள்). வல்வெட்டித்துறை: ஜனனி வெளியீட்டகம், புது வளவு, பொலிகண்டி, 1வது பதிப்பு, 2009. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, ½, டாம் வீதி).

x, 125 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14 சமீ.

திரிகூடராஜப்ப கவிராயர் என்பவரால் இயற்றப்பட்ட திருக்குற்றாலக் குறவஞ்சி க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கு நாடகமும் அரங்கியலும் பாடத்திற்கான பாடநூல்களுள் ஒன்றாக வைக்கப்பெற்றுள்ளதுடன் பல்கலைக்கழக மாணவர்களுக்கு இலக்கியமாகவும் நாடக எழுத்துருவாகவும் கற்பிக்கப்படுகின்றது. திருக்குற்றாலக் குறவஞ்சி புதிய பதிப்பெதுவும் வெளிவராத நிலையில் மாணவர் களின் கல்வித்தேவைகளுக்காக எளியவடிவில் இந்நூல் பதிப்பிக்கப்பட்டுள்ளது. இதன் உரை திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகப் பதிப்பை அடியொற்றியது. நாடக நோக்கிலான அறிமுகத்துடன் கூடியது. கலாநிதி அம்மன்கிளி முருகதாஸ் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் மொழித்துறை முதுநிலை விரிவுரையாளராவார். திரு.க.திலகநாதன் யாழ்ப்பாணம் தேசியக்கல்வியியற் கல்லூரியின் நாடக/அரங்கியல் துறையின் விரிவுரையாளராவார்.

**மேலும் பார்க்க: 13A03,12489,12529,12532,12721**

# 793 திரைப்படக்கலை

## 12714

**தமிழ்த் திரைப்படக் களஞ்சியம்: தொகுதி இருபத்தொன்று.** செ.ஜோர்ஜ் இதயராஜ், நிழல் எட்வேட் சந்திரா (தொகுப்பாசிரியர்கள்). கனடா M5S 2W9: ஜீவா பதிப்பகம், ரிப்ளக்ஸ் அச்சகம், 1108, பே வீதி, தொரன்ரோ, 1வது பதிப்பு, ஐப்பசி 1993. (கனடா M5S 2W9: ஜீவா பதிப்பகம், ரிப்ளக்ஸ் அச்சகம், 1108, வே வீதி, தொரன்ரோ).

xxxii, 314 பக்கம், புகைப்படங்கள், விலை: கனேடிய டொலர் 20., அளவு: 21.5x14 சமீ.

தமிழ்த் திரைப்படங்களின் வரலாற்றுத் தகவல்களுடன் வெளிவரும் பெருந் தொகுப்பின் 21ஆவது அங்கம் இந்நூலாகும். இது 235 இந்தியத் தமிழ்த் திரைப்படங்களின் கதைச்சுருக்கங்களை உள்ளடக்கியதாக வெளிவந்துள்ளது. இதில் ஒரு வருடத் தமிழ்த் திரைப்படத் தயாரிப்புக் கணிப்பு 1982, 1941இல் வெளிவந்ததொரு பட விளம்பரம், தேசிய விருது நடுவர் குழு, தமிழ்த் திரைப்படக் கலைஞர்களின் பிறந்த தினம், இலங்கையில் தயாரான தமிழ்ப் படங்கள், தமிழக அரசின் விருதுபெற்ற படங்கள் 1967-1993, மௌனப் படங்கள் 1913-1932, தமிழக அரசின் விருதுபெற்ற நடிகர்கள், நினைவு விருதுகள், இந்திய வானொலி ஒலிபரப்பின் ஆரம்பம், இந்தியத் தொலைக்காட்சியின் ஆரம்பம் போன்ற தகவல்களும் தரப்பட்டுள்ளன. இத்தொகுப்பில் திரைப்படத்துறையின் அத்திவாரம் இலக்கியம் வரலாறு, திரைப்படத்துறை வழக்குகள், திரைப்படங்களின் போக்கைக் கண்காணிக்கும் தமிழ்ப் பத்திரிகைகள், திரைப்படக் காட்சிப் படங்களின் பெயர் அகரவரிசை, திரைப்படக்காட்சிகளில் தோன்றும் நடிகர் பெயர் வரிசை ஆகிய பட்டியல்களும் மேலதிகமாக இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 14589).

### 12715

**திரைப்பட விழாக்களின் படங்களும் அவை தொடர்பான சுவையான செய்திகளும்.** கே.எஸ்.சிவகுமாரன். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல. 7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2017. (சென்னை 94: ஆதிலெட்சுமி கிராஃபிக்ஸ்).

xxii, 196 பக்கம், இலங்கை விலை: ரூபா 300., அளவு: 17.5x12 சமீ., ISBN: 978-93-86031-62-4.

இந்நூலில் திரைப்படத் திறனாய்வு, "டொக்யூமென்டரி" என்றால் என்ன?, திரைப்படக்கலை பற்றிய தமிழில் ஒரு அருமையான நூல், தென்னிந்தியத் திரைப்படங்கள், கல்கத்தா திரைப்பட விழாவில் குறிப்பிடத்தக்க படங்கள், இரு சிங்கள நெறியாளர்கள், மெல்லெனக் காமத்தைத் தீண்டும் ஐரோப்பியப் படங்கள் இரண்டு, மேலை இசை விற்பன்னர், கன்னட சினிமா, கன்னட சினிமா: க்ரி கஸ்ஸரவல்லி (க்ரௌர்யா-கன்னடம்), மலையாள சினிமா: ஜி.அரவிந்தனின் படங்கள், நான்கு மலையாளத் திரைப்படங்கள், அஸ்ஸாமிலிருந்து ஓர் அழகிய பெண்ணியப் படம், ஹிந்தி சினிமா பிக்ரம் சிங்கின் படம், தமிழ் சினிமா பூமணியின் படம், சிங்கள சினிமா எச்.டீ. பிரேமரத்னவின் படம், சம்ஸ்கிருத மொழி சினிமா: ஜி.வி.ஐயர், இந்திய சினிமா: பெண் நெறியாளர்கள், பம்பாய் படவிழா: பெண் நெறியாளர்கள், பல மொழிகளின் பட நெறியாளர்: ஷியாம் பெனிகல், பன்மொழி நடிகை: ஸ்மிதா பட்டேல் (மராட்டி), இந்திய சினிமா: திரைப்படங்கள் சில, குறுந்திரைப்படங்கள்: பி.லெனின் (கா.சிவபாலன்), பிரிட்டிஷ் சினிமா: அயர்லாந்து நடிகர், கனேடிய சினிமா: ஜேம்ஸ் கமரூன், உலக சினிமா: பல்வெற வெளிப்பாடகள், உலக சினிமா: காமஞ்சார்ந்த படங்கள், உலக சினிமா: மேலும்சில படங்கள், உலக சினிமா: இன்னும் சில படங்கள், உலக சினிமா: சில துணுக்குகள், உலக சினிமா: சில அனுபவங்கள், உலக சினிமா: சில பதிவுகள்,

உலக சினிமா: சில செய்திகள், தமிழ் சினிமா: முன்னைய பிறமொழி இசை ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட திரைப்படம் சார்ந்த திறனாய்வு மற்றும் அறிமுகக் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. ஈழத்தமிழ் இலக்கியப் பரப்பில் சினிமாத்துறை சார்ந்த விமர்சனங்களை எழுதுவதில் நீண்டகால அனுபவம் உடையவர் கே.எஸ்.சிவகுமாரன். இந்த நூலில், உலக சினிமா பற்றிய நுணுக்கங்கள், அவை பற்றிய ஆசிரியரது அனுபவங்கள், உலகத் திரைப்பட விழாக்களில் விதந்து பேசப்பட்ட திரைப்படங்கள், அவை தொடர்பான திறனாய்வுகள் என்பன அடங்கியுள்ளன. சர்வதேச ரீதியில் திரைப்படக் கலையின் போக்கு எவ்வாறு உள்ளது என்பதை அறிந்துகொள்ள இந்நூல் சிறந்ததொரு வழிகாட்டியாகும். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 261463CC).

**மேலும் பார்க்க: 12996**

## 796 உடற்பயிற்சி, விளையாட்டுகள்

### 12716

**ஆரோக்கியம் தேகப்பயிற்சி.** உடுவில் வே.மு.சபாரத்தினசிங்கம். யாழ்ப்பாணம்: சைவ பரிபாலன சபை, வண்ணார்பண்ணை, 3வது பதிப்பு, 1958, 1வது பதிப்பு, 1948, 2வது பதிப்பு, ஒக்டோபர் 1948 (யாழ்ப்பாணம்: ம.வே.திருஞானசம்பந்தன், சைவப்பிரகாச யந்திரசாலை, வண்ணார்பண்ணை).

(2), 108 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 1.00, அளவு: 17.5x12.5 சமீ.

இந்நூல் ஐந்தாம் ஆறும் வகுப்பு மாணவர்க்கெனச் சிறப்பாக எழுதப்பட்டிருப்பினும் ஏனைய வகுப்பிலுள்ள மாணவர்க்கும், தேகசுகத்தைப் பேண விரும்பும் எவருக்கும் பெரும் பயனைத் தருவதாகும். ஆரோக்கியம் என்ற முதற் பிரிவில், தேகாரோக்கியம், செவ்வையாக நிற்றல், இருத்தல்-நடத்தல், இளைப்பாறுதல், நித்திரை, சுவாசித்தல், உடற் சுத்தம், ஸ்நானம், பற்கள், மயிர், பேன் நகங்கள், கண், காது, ஆசாரம் (வீடு அயல் ஆதியவற்றைச் சுத்தமாகப் பேணல்), மலசலங் கழித்தல், தண்ணீர், போசனம், நோய்களைப் பரப்பும் பிராணிகள்: ஈக்கள், முட்டுப்பூச்சி, நுளம்பு, சரீரத்தின் அமைப்பு, சரீரத்தின் தொழில்கள்-1, சரீரத்தின் தொழில்கள்-2, சில நோய்களும், தடுக்கும் வழிகளும்: சிரங்கு, மலேரியா, பாண்டுநோய், கூகைக்கட்டு, சின்னமுத்து, கோப்புளிப்பான், குக்கல், அம்மை, வாந்திபேதி, பிளேக் கயரோகம், நெருப்புக் காய்ச்சல், சாதாரண கிருமி நாசினிகள், சூரிய வெளிச்சம், இலகுவான உடன் சிகிச்சை, வீதியிற் போய்வருதல் ஆகிய 23 தலைப்புகளில் பாடங்கள் விளக்கப்பட்டுள்ளன. தேகப்பயிற்சிப் பிரிவில் நிற்றல், இருத்தல், ஆறுதலாக நிற்றல், அவதானத்துடன் நிற்றல், நடத்தல், சமநிலைப் பயிற்சி, கும்மியடித்தல், சுவாச அப்பியாசம், கும்மி, கயிற்றுப் பாய்ச்சல், கும்மி, (உடற்சுத்தம்), கோலாட்டம் (ஆனந்தக்களிப்பு), துலா ஆடுதல், பசுவும் புலியும், பந்தாலடித்தல், போசனக் கிரமம் (கும்மி), வரிசைக்கு நால்வராக அணிவகுத்துச் செல்லுதல், தொட்டோடுதல், நோய்களின் வகை, நோய்கள் பரவும் வகை (கும்மி), சரீராப்பியாசம், நோயைத் தடுக்கும் முறை (கும்மி), ஆட்டங்களில் நடந்துகொள்ள வேண்டியமுறை,

நோயைத் தடுக்கும் முறை (கும்மி) ஆகிய தலைப்புகளின்கீழ் இப்பிரிவில் தேகப்பயிற்சிகள் விளக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபைப் பிரசுர இலக்கம் 49. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 2251. நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தின் சேர்க்கை இலக்கம் 007110).

## 12717

**கிரிக்கெட் உலக சாதனையாளர்கள்.** நூராணியா ஹசன். மாவனல்ல: நூராணியா பதிப்பகம், 157, உயன்வத்தை, தெவனகல, 1வது பதிப்பு, ஏப்ரல் 2000. (மாவனல்ல: எம்.ஜே.எம். ஓப்செட் அச்சகம், 119 பிரதான வீதி).

xi, 60 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 75., அளவு: 19.5x14 சமீ., ISBN: 955-8402-00-1.

தினகரன் பண்ணையில் வளர்ந்த மற்றொரு எழுத்தாளராகத் திகழ்பவர் நூராணியா. இந்நூலில் ஒன்பது கிரிக்கெட் வீரர்களின் வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கத்தினைத் தந்துள்ளார். கிரிக்கெட் உலகில் அவர்கள் பதித்துச் சென்ற சாதனைகளையும் தெளிவாகத் தந்துள்ளார். குறிப்பாக இலங்கை வீரர் முத்தையா முரளிதரனின் சாதனைகளை விபரமாகத் தரமுயன்றுள்ளார். மொழியைச் சிறப்பான விதத்தில் கையாண்டு வாசகர்களைக் கவரும் வகையில் நூராணியா ஹசனின் எழுத்தோட்டம் அமைந்துள்ளது. இந்நூலில் முத்தையா முரளீதரன், இம்ரான்கான், அலன்போடர், கபில்தேவ், விவியன் ரிச்சாட்ஸ், கிரஹம் கூச், மைக்கல் ஹோல்டின், சேர். ரிச்சர்ட் ஹட்லி, துலிப் மெண்டிஸ் ஆகியோர் பற்றிய பல சுவாரஸ்யமான தகவல்களை இந்நூலில் கண்டறிய முடிகின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 20955. நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தின் சேர்க்கை இலக்கம் 007483).

## 12718

**கிரிக்கெட் உலகில் பிரகாசித்தவர்கள்.** நூராணியா ஹசன். மாவனல்ல: நூராணியா பதிப்பகம், 157, உயன்வத்தை, தெவனகல, 1வது பதிப்பு, டிசம்பர் 2000. (மாவனல்ல: எம்.ஜே.எம். ஓப்செட் அச்சகம், 119 பிரதான வீதி).

xi, 52 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 75.00, அளவு: 21x13.5 சமீ., ISBN: 955-8402-01-x.

வானொலி தொலைக்காட்சி இரசிகர்களுக்கு நன்கு அறிமுகமான "நூராணியா ஹசன்" கிரிக்கெட் நேர்முக வர்ணனையாளராகத் திகழ்வதோடு பத்திரிகைகளிலும் பல கட்டுரைகளை எழுதியுள்ளார். அவற்றுள் சில நூலுருவம் பெற்றுள்ளதால் வாசிக்கவும் தகவல்களை அறிந்து கொள்வதற்கும் பயனுள்ளவையாக இருக்கின்றன. ஜாவிட் மியன்டாட் (Javed Miandad), சுனில் கவாஸ்கர் (Sunil Gavaskar), டெஸ்மன் ஹேய்ன்ஸ் (Desmond Haynes), மாக் டேலர் (Mark Taylar), அர்ஜுன ரணதுங்க (Arjuna Ranathunga), ரவி சாஸ்திரி (Ravi Shastri), மாட்டின் குரோ (Martin Crow) ஆகிய கிரிக்கெட் வீரர்கள் பற்றிப் பல்வேறு சுவையான செய்திகளையும் இந்

நூல் வழங்குகின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 29077. நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தின் சேர்க்கை இலக்கம் 007484).

## 12719

**சதுரங்கத்தின்அடிப்படைகளும் தொடக்க முறைகளும்.** சி.வித்தியாதரன். யாழ்ப்பாணம்: ஹரி கஸ்பரோவ் சதுரங்க அக்கடமி (Garry Kasparov Chess Academy), No.5, வைமன் வீதி, நல்லூர், 1வது பதிப்பு, ஜுலை 2005. (யாழ்ப்பாணம்: சிமாட் பிரின்டர்ஸ், இல. 717 காங்கேசன்துறை வீதி).

viii, 49 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 100., அளவு: 20x14 சமீ.

இந்நூலாசிரியர் கடந்த ஒரு தசாப்தமாக யாழ்ப்பாண மண்ணில் பல சதுரங்கப் போட்டிகளில் பங்கேற்றும், பல போட்டிகளை நடத்தியும், பயிற்சிக் கருத்தரங்கு களை நடாத்தியும் அனுபவம் பெற்றவர். இந்நூல் சதுரங்கம் பற்றிய பல்வேறு நிபுணத்துவத் தகவல்களைத் தருகின்றது. சதுரங்கம் என்றால் என்ன?, சதுரங்கப் பலகையில் காய்கள் அடுக்கும் விதம், இராஜாவினை நகர்த்தும் முறை, இராணியினை நகர்த்தும் முறை, கோட்டையினை நகர்த்தும் முறை, மந்திரியினை நகர்த்தும் முறை, குதிரையினை நகர்த்தும் முறை, சிப்பாயினை நகர்த்தும் முறை, செக் என்றால் என்ன?, செக்கிற்குள்ளாகும் சந்தர்ப்பங்களில் என்ன செய்யவேண்டும்?, செக்மேட் என்றால் என்ன?, சிப்பாயின் உயர் பதவி, சதுரங்கக் காய்களின் குறியீடுகள், சதுரங்கப் பலகையிலுள்ள கட்டங்களின் பெயர்கள், மத்திய சதுரங்கள், சதுரங்கத்தில் காய்களின் புள்ளியிடல், கோட்டை கட்டுதல், கோட்டை கட்டுவதற்கான நிபந்தனைகள், சமநிலை ஆட்டங்கள், ஸ்டேல் மேட் என்றால் என்ன?, Fifty Moves Rule, சமநிலையடைவதற்கான அடிப்படை வழிமுறைகள், Touch move Rule, Rank-File-Diagonal, Open File, Doubled Pawn, Seventh Rank, ஒப்புதலின் பேரில் சமநிலை, Fork என்றால் என்ன?, Pin என்றால் என்ன? என இன்னோரன்ன தகவல்களையும் சட்டதிட்டங்களையும் இந்நூல் சுருக்கமாக விளக்குகின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 45241).

## 12720

**சர்வதேச கிரிக்கட் நிகழ்வுகள்.** எஸ்.எல்.ரியாஸ். எம்.மொஹம்மட் ஜெஸ்மின். கல்முனை: ஹோலிபீல்ட் பப்ளிக்கேஷன், முதலாவது தளம், 220, பிரதான வீதி, 1வது பதிப்பு, ஏப்ரல் 2001. (கல்முனை: அல்-நூர் கிராப்பிக்ஸ்).

xi, 180 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 200., அளவு: 21x15 சமீ., ISBN: 955-8528-00-5.

இந்நூலில் டெஸ்ட் போட்டிகள், ஒருநாள் சர்வதேச போட்டிகள் ஆகிய இரண்டு பிரிவுகளின்கீழ் சர்வதேசரீதியாக நடைபெற்ற கிரிக்கெட் நிகழ்வுகள் பற்றி நாடுகள் வாரியாக விபரிக்கப்பட்டுள்ளது. டெஸ்ட் போட்டிகள் -என்ற முதலாவது பிரிவில் இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, மேற்கு இந்திய தீவுகள்,

*நியூசிலாந்து, இந்தியா, பாக்கிஸ்தான், இலங்கை, ஸிம்பாப்வே, பங்களாதேஷ் ஆகிய நாடுகளின் நிகழ்ச்சிகள் விளக்கப்பட்டுள்ளன. ஒருநாள் சர்வதேச போட்டிகள் என்ற பிரிவில் இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, மேற்கு இந்திய தீவுகள், நியூசிலாந்து, இந்தியா, பாக்கிஸ்தான், இலங்கை, ஸிம்பாப்வே, பங்களாதேஷ், கனடா, கிழக்கு ஆபிரிக்கா, ஏனைய நாடுகள் ஆகியவற்றின் கிரிக்கெட் நிகழ்ச்சிகள் விபரிக்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 40778).*

**மேலும் பார்க்க: 12509**

# 800 இலக்கியம்

## 800. (1) இலக்கிய அமைப்புகள்

### 12721

**தமிழ் கலைவிழா 1994: சிறப்பு மலர்.** *ஏ.எம்.நஹியா (தொகுப்பாசிரியர்). கொழும்பு: இந்து சமய, கலாசார அலுவலகள் திணைக்களம், கலாசார, சமய அலுவல்கள் அமைச்சு, 1வது பதிப்பு, 1994. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளூமெண்டால் வீதி).*

*(14), 98 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25.5x19 சமீ.*

*முன்னர் தமிழ் சாகித்திய விழா என அழைக்கப்பட்ட தமிழ் கலைவிழா, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வருடாந்த விழாவாகும். 1991இல் கண்டியில் நடந்த இவ்விழா 1992 முதல் கொழும்பில் நடத்தப்பட்டது. 1994இல் நடத்தப்பட்ட விழா கொழும்பு இராமகிருஷ்ண மிசன் மண்டபத்தில் நடந்தேறியது. இவ்விழாவையொட்டி வெளியிடப்பட்ட சிறப்பு மலர் இது. இலங்கையின் அரங்கியல்துறை தொடர்பான சிறப்புக் கட்டுரைகளைக் கொண்ட இம்மலரில், தமிழ் நாடக வளர்ச்சி (ஏ.என்.பெருமாள்), எழுதப்படாத வரலாறுகள்: தமிழ் நாடக வரலாறு பற்றிய சில சிந்தனைகள் (கே.ஏ.குணசேகரன்), சமகாலத் தமிழ் நாடகம் (ஜே.ரெங்கராஜன்), பாடசாலை நாடகங்கள் -சில அவதானிப்புகள் (குமாரசாமி சோமசுந்தரம்), தொடர்புக் காத்திரமும் கலை ஆழமும் கொண்ட நாடக அரங்க முறைமை (அ.இரவி), தமிழ் நாடகத்துறையை வர்த்தக அடிப்படையில் கட்டிஎழுப்புவது எவ்வாறு?(காவலூர் இராசதுரை), சைவப் புலவரின் கிறீத்தவக் கூத்து (நீ.மரியசேவியர்), நவீன சிங்கள அரங்கும் பேராசிரியர் சரச்சந்திரவின் இரு நாடகங்களும் (எம்எஸ்.எம்.அனஸ்), இலங்கை வானொலித் தமிழ் நாடகங்கள்: ஓர் உள்நோக்கு (ஜோர்ஜ் சந்திரசேகரன்), இலங்கைத் தமிழ்த் தொலைக்காட்சி நாடகங்கள் (கமலினி செல்வராசன்), இலங்கையில் தமிழ் நாடகப் பயில்வு-ஒரு விவரணப் பதிவு (கா.சிவத்தம்பி), யாழ்ப்பாண மரபுவழி நாடகங்கள் (காரை. செ.சுந்தரம்பிள்ளை), வன்னிப் பிரதேச அரங்கியல் மரபு (மெற்றாஸ் மயில்), திருக்கோணமலைப் பிரதேச நாடக அரங்கப் பாரம்பரியம் (கா.சிவபாலன்),*

மலையக அரங்கியல்-ஒரு நோக்கு (மாத்தளை கார்த்திகேசு), மலையக நாடகங்களில் கட்டியக்காரன், கோமளி, பபூன் (மாத்தளை பெ.வடிவேலன்), கொழும்புப் பிரதேச அரங்கியல் பாரம்பரியம் (எம்.எச்.எம்.பௌசுல் அமீர்) ஆகிய 17 அரங்கியல்சார் கட்டுரைகள் இம்மலரை அலங்கரித்துள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 14182).

### 12722

**மீலாதுன் நபி விசேட மலர் 1991.** கலைவாதி கலீல், M.M.M.மஹ்ரூப், F.M.பைரூஸ் (மீலாத் விழா மலர்க்குழு). கொழும்பு: முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் அமைச்சு, 1வது பதிப்பு, 1991. (கொழும்பு: அரசாங்க அச்சுத் திணைக்களம்).

(110) பக்கம், புகைப்படத் தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 29.5x21 சமீ.

புத்தளம் மாவட்டத்தில் நடந்தேறிய 1991ம் ஆண்டுக்குரிய தேசிய மீலாத் விழா முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் அமைச்சினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இவ்வைபவத்தின்போது வெளியிடப்பட்ட சிறப்பு மலர் இது. இவ்விழாவையொட்டி ஒழுங்குசெய்திருந்த கட்டுரை, கவிதைப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர் களின் தரம்வாய்ந்த படைப்புக்கள் இம்மலரில் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 14124).

## 801. (1) சிறுவர் பாடல்கள், கவிதைகள்

### 12723

**சிற்பிகள்.** சூரியநிலா (இயற்பெயர்: ஆ.ஜென்சன் றொனால்ட்). சாவகச்சேரி: அன்சன் கலையகம், உசன், மிருசுவில், 1வது பதிப்பு, சித்திரை 2013. (சாவகச்சேரி: கஜானன் பன்முக சேவை, அல்லாரை வீதி, மீசாலை).

72 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 200., அளவு: 20x14 சமீ.

மிருசுவில்-உசன் பிரதேசத்தைச் சேர்ந்த சூரியநிலா தேசியப் பத்திரிகைகளில் தனது கவிதைகளால் அறியப்பெற்றவர். அவரது முதலாவது சிறுவர் பாடல் தொகுப்பு இதுவாகும். சூரியக் குளியல் என்ற கவிதைத் தொகுதியையும், சந்தனக்காற்று என்ற ஒலிப்பேழையையும் வெளியிட்ட இவரது மூன்றாவது நூல் இது. சிற்பிகள், என் அம்மா, ஆசை அப்பா, சுட்டித்தனம், முயல், யானை, சகுனம், மழை, விபத்துகள் வேண்டாம், ஆசிரியர் என இன்னோரன்ன 29 பாடல்களை இந்நூல் கொண்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 232159CC, 232162CC).

### 12724

**சிறகு விரி: சிறுவர் பாடல்கள் -04.** உ.நிசார் (இயற்பெயர்: H.L.M.நிசார்). மாவனல்லை: H.L.M. நிசார், 1வது பதிப்பு, 2008. (மாவனல்லை: எம்.ஜே.எம்.பதிப்பகம், 119, பிரதான வீதி).

*28 பக்கம், விலை: ரூபா 75.00, அளவு: 21x15 சமீ., ISBN: 978-955-50064-3-9.*

*சிறுவர்களுக்குக் கற்பிக்கும் பணியில் பல வருட அனுபவம் கொண்டவர் உ. நிசார். சிறுவர்களின் உளப்பாங்கு, சிறப்பாற்றல்கள், சுவையுணர்வு, சொல்வளம், இசையார்வம் என்பவற்றை அனுபவரீதியாக உணர்ந்த இவரது நான்காவது சிறுவர் பாடல் தொகுப்பு இது. முன்னதாக இவர் நட்சத்திரப் பூக்கள் (2006), வெண்ணிலா (2007), மலரும் மொட்டுக்கள் (2007) ஆகிய சிறுவர் நூல்களை வெளியிட்டுள்ளார். சிறகு விரி- சிறுவர் பாடல் தொகுதியில் 18 பாடல்கள் உள்ளன. சிறுவர் பாடத்திட்டத்திற்கு ஏற்ப இயற்கை, இயற்கையை அவதானித்தல், இயற்கையின் எழில், இயற்கைக்கு மனிதன் செய்யும் தீங்குகள், இயற்கையைப் பாதுகாத்தல், குடும்பம், உறவுகள், நல்லுபதேசங்கள், என்பனவற்றைக் கருப்பொருளாகக் கொண்டு இத்தொகுப்பு படைக்கப்பட்டுள்ளது. எனது அம்மா, கொக்கு, நல்லது செய்வோம், அழகுராஜா, நல்ல நல்ல உணவுகள், வண்ணம் மிகு மின்மினி, ஒலிகள், மழை, கல்வி கற்போம், குரங்காரே, பச்சைக் கிளி அக்கா, தம்பி உனக்குத்தான், சிறகு விரி, இவர் யார்?, கடலோரத்தில், குருவிக் குடும்பம், பொம்மைப் பாப்பா ஆகிய தலைப்புகளில் இவை எழுதப்பட்டுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 217207 CC).*

### 12725

**செந்தமிழ் பாப்பாப் பாடல்கள்.** *பத்மா இளங்கோவன். யாழ்ப்பாணம்: நாவேந்தன் பதிப்பகம், மயூரன் இல்லம், இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி கிழக்கு, 1வது பதிப்பு, ஜுன் 2015. (யாழ்ப்பாணம்: ஶ்ரீ மாருதி பிரின்டர்ஸ், 555, நாவலர் வீதி).*

*(2), 47 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 370., அளவு: 20x14.5 சமீ.*

*நீண்டகாலமாக ஆசிரியராகப் பணியாற்றியமை, பாலர் கல்வியில் விசேட பயிற்சி பெற்றிருந்தமை என்பன பத்மா இளங்கோவன் சிறுவர்க்கான சிறந்த பாடல்களை ஆக்குவதற்குத் துணை நிற்கின்றன. சிறுவர் இலக்கியத்தில் தனக்கென ஒரு இடத்தை தக்கவைத்துள்ள ஆசிரியை ஏற்கெனவே செந்தமிழ் மழலைப் பாடல்கள், செந்தமிழ் சிறுவர் பாடல்கள் ஆகிய நூல்களை வழங்கியவர். இந்நுலில் 24 பாலர் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. இலகு நடையில் எளிமையான தமிழ்ச் சொற்களால் ஆன ஓசை நயத்துடன், எதுகை மோனைச் சிறப்புடன் இப்பாடல்கள் அமைந்துள்ளன. குழந்தைகளின் சிந்தனாசக்தியைத் தூண்டும் கருத்துக்களையும் அவர்களை நல்வழிப்படுத்தும் ஒழுக்கவியல் கருத்துக்களையும் இப்பாடல்களில் பொதிந்துவைத்துள்ளார். பாடலுக்குப் பொருத்தமான சித்திரங்கள் நூலை சிறுவர்களின்பால் ஈர்க்கத் துணைபுரிகின்றன. பிரான்சில் புலம்பெயர்ந்து வாழும் பத்மா இளங்கோவன், "பரிசு" என்ற சிறுவர் சஞ்சிகையை பிரான்சிலிருந்து வெளியிட்டவர். தமிழ்நாடு கு.சின்னப்ப பாரதி இலக்கிய அறக்கட்டளையின் சிறுவர் இலக்கியத்திற்கான விருதினை 2012இல் பெற்றவர்.*

### 12726

**வாழத் துடிக்கும் வடலிகள்.** செ.அன்புராசா. மன்னார்: முருங்கன் முத்தமிழ் கலாமன்றம், 1வது பதிப்பு, மார்கழி 2017. (யாழ்ப்பாணம்: ஜே.எஸ். கிராப்பிக்ஸ்).

xviii, 30 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 21x15 சமீ., ISBN: 978-955-4609-02-0.

அருட்திரு செ.அன்புராசா எழுதிய சிறுவர் இலக்கிய நூல். இத்தொகுப்பில் 22 சிறுவர் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. சிறார்களை வடலிகளுக்கு உவமான மாக்குகின்றார். சிறார்கள் பெற்றோரின் நடத்தைகளைக் கேள்விக்கு உள்ளாக்குவ தாகவும் சமூகத்தில் உலாவும் மனிதர்களின் போலி முகத்திரைகளை கிழித்தெறிவதாகவும் தமது பிரச்சினைகளைத் தாமே உரத்துப் பேசுவதாகவும் இப்பாடல்கள் அமைந்துள்ளன. சிறுவர் தம் பிரச்சினைகளைத் தாமே வெளிப்படுத்துவதாகப் பாடல் வரிகளை அமைத்துள்ளார். பாடல்கள் உயரிய விழுமியங்களைப் போதிப்பதாகவும் அமைந்துள்ளன.

## 801. (2) சிறுவர் நாடகங்கள்

மேலும் பார்க்க: 12784

## 801. (4) சிறுவர் சிறுகதைகள்

### 12727

**கடவுளைக் கண்டவர்கள்.** த.துரைசிங்கம். கொழும்பு 6: உமா பதிப்பகம், 521/1B, காலி வீதி, 1வது பதிப்பு, டிசம்பர் 2007. (கொழும்பு 12: லங்கா புத்தகசாலை, F.L.1/14, டயஸ் பிளேஸ், குணசிங்கபுர).

56 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 75., அளவு: 20.5x15 சமீ., ISBN: 978-955-1162-31-3.

பக்தி வழியில் இறைவனையும் இறை உணர்வினையும் அடைந்த நாயன்மார்களின் கதைகளைச் சிறுவர்கள் புரிந்துகொள்ளும் வகையில் இந்நூல் விபரிக்கின்றது. இளையான்குடி மாறனார், காரைக்கால் அம்மையார், திருநாவுக்கரசர், திருக்குறிப்புத் தொண்டர், ஔவையார், திருநாளைப் போவார், சண்டீசர், கச்சியப்பர், நமிநந்தி, போன்ற சிவபக்தர்களின் கதைகளை இச்சிறுவர் நூல் கதை வடிவில் தருகின்றது. அவை நள்ளிரவில் வந்த விருந்தினர், பேய் வடிவம் கேட்ட பெண், போகும் வழியில் பொதிசோறு பெற்றவர், கல்லிலே தோன்றிய கை, ஔவை கண்ட முருகன், திருநாளைப் போவாரின் தில்லைத் தரிசனம், தந்தையையே தண்டித்த தனையன், கச்சியப்பரை மெச்சிய முருகன், சித்தராக வந்த சிவபெருமான், தண்ணீரால் விளக்கேற்றியவர் ஆகிய கவர்ச்சிகரமான 10 தலைப்புகளில் இவை சிறுவர் பக்திக் கதைகளாக விரிகின்றன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 52269).

### 12728

**புத்திமான் பலவான் (சிறுவர் கதைகள்).** *திருச்செல்வம் தவரத்தினம். யாழ்ப்பாணம்: தி. தவரத்தினம், சர்வசக்தி வெளியீடு, சடையாளி, காரைநகர், 1வது பதிப்பு, ஐப்பசி 2015. (யாழ்ப்பாணம்: கரிகணன் தனியார் நிறுவனம், இல.681, காங்கேசன்துறை வீதி).*

vi, *56 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 20.5*x*14.5 சமீ.,* ISBN: *978-955-44445-4-6.*

*நாட்டைக் காத்த சிறுவன், கோழி முட்டை, படி அளப்பான் பரமன், தம்பர், காசிநாதர், ஆட்காட்டி விரல் ஆகிய ஆறு சிறுவர் கதைகளின் தொகுப்பு. பொதுவாக இக்கதாபாத்திரங்களில் வரும் பெரும்பாலான சிறுவர்கள் கெட்டிக்காரர்களாகவும், அவர்களுடைய பல்துறை ஆற்றல்களை வெளிக்காட்டும் ஆர்வமுள்ளவர்களாகவும் சித்திரிக்கப்பட்டுள்ளமை சிறுவர்களை ஊக்கப்படுத்துவதாயுள்ளது. விறுவிறுப்பான சுவைமிக்க கதைக்களங்கள் அவர்களின் வாசிப்பு ஆற்றலைத் தூண்டும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்டுள்ளமையை அவதானிக்கமுடிகின்றது.*

## 801. (6) சிறுவர்க்கான கட்டுரைகள்

### 12729

**எழுதுவோம் வாசிப்போம்: 6-11 தரங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கான மாதிரிக் கட்டுரைகள்.** *ச.அருளானந்தம் (புனைபெயர்: கேணிப்பித்தன்). கொழும்பு 6: இலக்கியன் வெளியீட்டகம், குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, 2014. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).*

vi, *122 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 180., அளவு: 21.5*x*14.5 சமீ.,* ISBN: *978-955-1997-57-1.*

*ஆறு முதல் 11ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கேற்ற 35 சிறிய கட்டுரைகளை கேணிப்பித்தன் எழுதித் தொகுத்து வெளியிட்டுள்ளார். இடையிடையே புகைப்படங்களும் செருகப்பட்டுள்ளன. கட்டுரை எழுதும் முறை, என்னைப் பற்றி நான், எங்கள் வீடு, எனது நகரம், எனது நாடு, எனது நாய்க்குட்டி, எங்கள் வீட்டு வெள்ளைப் பசு, நான் விரும்பி வளர்க்கும் பறவை, குயிலாக நானிருந்தால், எனது பூந்தோட்டம், வீட்டுத் தோட்டம் வளர்ப்போம், நாம் வாழும் சூழல், விண்வெளிஆய்வு, சூரியன், பூமியின் சந்திரன், விண்வெளியில் வலம்வந்த முதற் பெண் வலண்டினா, மதங்க சூளாமணி ஒரு நாடகத் தமிழ் நூல், தமிழ் மொழி, நான் விரும்பும் நூல்-யாழ் நூல், நான் விரும்பும் பெரியார், கதைப் புத்தகங்களை வாசிப்போம், நாட்டார் பாடல்கள், ஊடகங்களின் பயன்பாடு, பழமொழிகளின் பயன்பாடு, கல்பனா செளலா, இலவசக் கல்வியின் தந்தை* C.W.W.*கன்னங்கரா, உயிர்காக்கும் இடி தாங்கி, சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்போம். வெகுசனத் தொடர்பு சாதனங்கள், தொலைக்காட்சியும் விளைவுகளும், வாசிப்பு மனிதனை உயர்த்தும், தமிழறிஞர் பேராசிரியர் சிவத்தம்பி, குறள் கூறும் வாழ்க்கைத் தத்துவங்கள், நல்ல நுல்களே நல்ல நண்பர்கள், அன்னை திரேசா ஆகிய தலைப்புகளில் இக்கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன.*

**12730**

**கட்டுரை மலர்கள் 80: 5ம் தர புலமைப்பரிசில் பரீட்சை.** திருமதி வ.நடராஜா. யாழ்ப்பாணம்: கலைவாணி புத்தக நிலையம், 10, மெயின் வீதி, பதிப்பு விபரம் தரப்படவில்லை. (கண்டி: Fine Graphics).

v, 90 பக்கம், தகடுகள், விலை: ரூபா 80., அளவு: 20x14 சமீ.

வரலாற்றுக் கட்டுரைகள், கற்பனைக் கட்டுரைகள், பண்டிகைகள், தற்சார்புக் கட்டுரைகள், விளக்கக் கட்டுரைகள், சுயசரிதைகள், வர்ணனைக் கட்டுரைகள், சிறுகதைகள், ஏனைய கட்டுரைகள், கடிதங்கள் கொடுக்கப்பட்ட வசனங்களைத் தொடர்ந்து எழுதுதல் ஆகிய பதினொரு பிரிவுகளின் கீழ் ஆசிரியரால் எழுதப்பட்ட 80 சிறு கட்டுரைகள் இந்நூலில் தொகுத்து வழங்கப்பட்டுள்ளன. ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் பயன்பாட்டைக் கருத்திற்கொண்டு இக்கட்டுரைகள் உருவாக்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 32689).

**12731**

**மாணவர் கட்டுரைக் களஞ்சியம்.** லீலாதேவி ஆலாலசுந்தரம். கொழும்பு 6: இலக்கியன் வெளியீட்டகம், குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, 2017. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

46 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 200., அளவு: 22x14.5 சமீ., ISBN: 978-955-7461-09-0.

கடவுள் வழிபாடு, அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம், கல்வி, சூழல் மாசுறுதல், பாழடைந்த மண்டபம், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், சுவாமி விபுலாநந்தர், செல்வி புளோரன்ஸ் நைற்றிங்கேல் ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட எட்டுக் கட்டுரைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. யாழ்ப்பாணம் அரியாலையில் பிறந்த லீலாதேவி ஆலாலசுந்தரம் (1935-2017) சென்னைப் பல்கலைக்கழகத்தின் கலைமாணிப் பட்டதாரி. யாழ்ப்பாணத்தில் செங்குந்தா இந்துக் கல்லூரி, கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் ஆகியவற்றில் ஆசிரியராகப் பணிபுரிந்தவர். தமிழ், ஆங்கிலம், இந்து நாகரிகம் ஆகியவற்றை பிரதான பாடங்களாகக் கற்பித்து நன்மாணாக்கர் சமூகத்தை உருவாக்கியவர். இவரது 25 ஆண்டுக்கால கற்பித்தல் அனுபவத்தின் வெளிப்பாடாக இக்கட்டுரைகள் அமைகின்றன.

**12732**

**மாணாக்கரின் காந்தி.** ஆர்.பாலகிருஷ்ணன், T.L.M.புஹாரி. கொழும்பு 13: இளம்பிறை எம்.ஏ.ரகுமான், அரசு வெளியீடு, 231 ஆதிருப்பள்ளித் தெரு, 1வது பதிப்பு, 1969. (கொழும்பு 13: ரெயின்போ பிரிண்டர்ஸ், 231 ஆதிருப்பள்ளித் தெரு).

(4), 67 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 19x13 சமீ.

*காந்தி நூற்றாண்டின் நினைவாக ஏககாலத்தில் அரசு வெளியீடாக வெளியிடப்பட்ட ஐந்து நூல்களுள் இதுவும் ஒன்றாகும். இந்நூல் 22ஆவது அரசு வெளியீடாக வெளியிடப்பட்டுள்ளது. இதில் அகில இலங்கையிலும் உள்ள பாடசாலை மாணவர்களுக்காக நடைபெற்ற காந்தி நினைவுப் போட்டிகளில் பரிசுபெற்ற பதினேழு கிழக்கிலங்கை மாணவர்களின் கட்டுரைகள் மட்டும் உள்ளடக்கப் பட்டுள்ளன. பொன் அனுரா, த.சிவமணி, பொன் மேகலா, கா.கனகசுந்தரம், ஆர்.சோமசுந்தரம், த.சதானந்தம், எஸ்.தம்பிராஜா, வீ.சாந்தராஜ், ரி.ஜெயவேணி, தி.காஞ்சனா, கே.சஞ்சிவரத்தினம், T.விஜயகுமாரி, வி.யோகராஜா, எம்.துரைராஜசிங்கம், எஸ்.மொஹிதீன் பாவா, இ.தாமோதரம்பிள்ளை, எம்.விமலாவதி ஆகிய 17 மாணவர்களின் ஆக்கங்கள் இவை. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 18958).*

**மேலும் பார்க்க: 12544**

## 820.9 ஆங்கில இலக்கியம்

### 12733

**ஆங்கில இலக்கிய வரலாறு.** *எஸ்.ஜெபநேசன். கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, 2017. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).*

xiv, *125 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 21.5*x*14.5 சமீ.,* ISBN: *978-955-659-525-3.*

*இந்நூல் ஆங்கில இலக்கிய வரலாற்றினை தமிழ் மாணவர்கள் விளங்கிக் கொள்ளும் வண்ணம் இங்கிலாந்தின் வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் காலப்பகுதிகளாக வகுத்து எழுதப்பட்டுள்ளது. சோசர் காலம் கி.பி.1400 வரை (*Age of Chaucer*), எலிசபெத் மகாராணியார் காலம் 1559-1603 (*Elizabethan Age*), தூய்மைவாதிகளின் காலம் 1603-1660 (*Puritan Age*), அகஸ்தன் காலம் 1660-1798 (*Augustan Age*), மனோரதியக் காலம் 1798-1850 (*Romantic Age*), விக்டோரியா மகாராணியார் காலம் 1850-1901 (*Victorian Age*), தற்காலம் 1901 முதல் (*Contemporary Period*). மேலும் ஒவ்வொரு காலத்தையும் ஆராய்கின்றபோது, பின்வரும் குறிப்புக்கள் எழுதப்பட்டுள்ளன. அக்காலத்தில் ஆட்சி புரிந்த மன்னர்கள், அக்காலத்தில் இடம்பெற்ற முக்கியமான சம்பவங்கள், அரசியல் நிலை, சமயமும் சமுதாயமும், இலக்கியப் பண்பு, கவிஞர்களும் நூல்களும், இப்படியாக ஆங்கில இலக்கிய வரலாற்றினை நோக்கும்போது இங்கிலாந்தின் அரசியல், பொருளியல், சமூகவியல் என்பன எவ்வாறு இலக்கியத்தைப் பாதித்திருக்கின்றன என்பதைப் புரிந்துகொள்ள முடிகின்றது. சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக் கொண்ட நூலாசிரியர் கலாநிதி எஸ்.ஜெபநேசன், தென்னிந்திய திருச்சபை யாழ். ஆதீனத்தின் ஓய்வுபெற்ற பேராயராவார்.*

## 891.2 சமஸ்கிருத/வடமொழி இலக்கியம்

### 12734

**வடகோவை சபாபதி நாவலரின் நான்மணிகள்.** யோகேஸ்வரி சிவப்பிரகாசம் (தொகுப்பாசிரியர்). அல்வாய்: ஜீவநதி வெளியீடு, கலை அகம், அல்வாய் வடமேற்கு, 1வது பதிப்பு, ஆடி 2016. (பருத்தித்துறை: பரணி அச்சகம், நெல்லியடி).

viii,156 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 20x15 சமீ., ISBN: 978-955-4676-47-3.

சபாபதி நாவலர் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் புகழ் மிக்க பெரும்புலவராய், சொல்லாற்றல் மிக்கவராய், சைவத்துக்கும் தமிழுக்கும் சிறந்த தொண்டாற்றியவராய் அறியப்பெற்றவர். யாழ்ப்பாணத்தில், கோப்பாய் வடக்கில் 1846 ஆம் ஆண்டில் சபாபதி நாவலர் பிறந்தார். இவர் தந்தையின் பெயர் சுயம்புநாதப் பிள்ளை. தாயின் பெயர் தெய்வயானை. தொடக்கத்தில் பிரம்மசிறீ ஜெகந்நாதையரிடம் சபாபதிப் பிள்ளை சிலகாலம் பயின்ற பின்னர், நீர்வேலி சிவசங்கர பண்டிதர் என்பவரிடம் தமிழையும், வடமொழியையும் கற்றார். அக்கால வழக்கப்படி ஆங்கிலத்தையும் நன்கு கற்றார். ஆறுமுக நாவலரின் வேண்டுகோளை ஏற்று, தமிழ்நாட்டில் சிதம்பரத்தில் சைவபிரகாச வித்தியாசாலையின் தலைமை ஆசிரியராகச் சில ஆண்டுகள் பணியாற்றினார். சிதம்பரத்தில் இருக்கையிலே "ஏம சபாநாத மான்மியம்" என்னும் வடமொழி நூலைத் தமிழில் மொழிபெயர்த்துச் "சிதம்பரம் சபாநாத புராணம்" என்னும் பெயரில் 893 செய்யுட்கள் கொண்டதாக எழுதி 1895-ஆம் ஆண்டு வெளியிட்டார். அக்காலத்தில் ஆறுமுக நாவலர் ஒருவர் மட்டுமே "நாவலர்" என்னும் பட்டம் பெற்றிருந்தார். திருவாவடுதுறையில் ஒரு பேரவையைக் கூட்டி, இவரை சொற்பொழிவு ஆற்றச் செய்து, அப்பேரவையில் சுப்பிரமணிய தேசிகர், இவருக்கும் "நாவலர்" என்னும் சிறப்புப் பெயரை வழங்கினார். வடகோவை சபாபதி நாவலர் வடமொழியிலிருந்து தமிழாக்கம் செய்திருந்த நான்கு படைப்பாக்கங்கள் இங்கு ஒன்றாகத் தொகுக்கப்பெற்றுள்ளன. சமயம் அல்லது ஞானாமிர்தம் (பக்கம் 7-26), சதுர்வேத தாற்பரிய சங்கிரகம் (பக்கம் 27-48), பாரத தாற்பரிய சங்கிரகம் (பக்கம் 49-100), ஞானாமிர்தம் (பக்கம் 101-506) ஆகியவையே அந்நான்மணிகளுமாகும். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 61505).

**மேலும் பார்க்க: 12794**

## 894.8 தமிழ் இலக்கியம்

### 12735

**யாழ்ப்பாணத்து நல்லூர் மகாவித்துவான்அரசகேசரி இயற்றிய இரகுவம்மிசம் மூலமும் பதவுரையும்: இரண்டாம் பாகம்.** அரசகேசரி (மூலம்), சி.கணேசையர் (பதவுரை). யாழ்ப்பாணம்: சி.கணேசையர், புன்னாலைக் கட்டுவன், 1வது பதிப்பு, புரட்டாதி 1932. (கொக்குவில்: சோதிடப்பிரகாச அச்சியந்திரசாலை).

324 பக்கம், விலை: ரூபா 2.00, அளவு: 20x14 சமீ.

"யாழ்ப்பாணத்து மகாவித்துவான் அரசகேசரியினாலே வடமொழியினின்றும் மொழிபெயர்த்துத் தமிழ்மொழிக் கண் யாக்கப்பட்ட இரகுவம்மிசமென்னும் நூலுக்குத் திக்குவிசயப்படலம் முடிய உரை எழுதி யாம் முன் வெளிப்படுத்தியதை அறிஞர் யாவருமறிவர். ஒழிந்தவற்றுள் அயனுதயப்படல முதல் இந்துமதி பிறப்புநீங்குபடல முடிய (பொதுக்காண்டம் முடிய) இவ்வுரை எழுதப்பட்டுள்ளது. இதனை இரண்டாம் பாகமாக அச்சிட்டு இப்பொழுது வெளிப்படுத்தியுள்ளோம். இவ்வுரை பதவுரையும் செய்யுண் முடிபுகளுமாகவே பெரும்பாலும் எழுதப்பட்டுள்ளது. அவற்றோடு விரிவுரையும் இன்றியமையாதவற்றிற்கு எழுதப்பட்டுள்ளது. ஏனையவற்றிற்கு விரிவஞ்சி விடுக்கப்பட்டது. முதனூற் கருத்தோடு மாறுபடாவண்ணம் இவ்வுரை எழுதப்பட்டுள்ளது. முதனூற் சுலோகங்களும் இடையிடையே மேற்கோள்களாகக் காட்டப்பட்டுள்ளன."-சி. கணேசையர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 2523).

## 894.8(01) தமிழ் இலக்கியப் பாடநூல்கள்

### 12736

**அரிச்சந்திர புராணம்: மயான காண்டம் உரையுடன்.** ஆசு கவிராஜர் (மூலம்). சுன்னாகம்: வட இலங்கைத் தமிழ் நூற் பதிப்பகம், 1வது பதிப்பு, 1962. (யாழ்ப்பாணம்: ஜோதி அச்சகம்).

viii, 123 பக்கம், விலை: ரூபா 1.25, அளவு: 17x12 சமீ.

அரிச்சந்திர புராணம் இருபதாம் நூற்றாண்டின் முற்பாதி காலம் வரையில் பலராலும் பயிலப்பட்டுவந்தது. இந்நூல் புராணம் என்னும் பெயரோடு அறியப்பட்டிருப்பினும் இது ஒரு காப்பியமென்றே அறிஞர்கள் கருதுகின்றனர். இது வடமொழி நூலைத் தழுவி 16-ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட தமிழ்க்காப்பியம். இதன் ஆசிரியர் பெயர் "வீரன்". இவரைக் "கவிராசர்" எனச் சிறப்புப் பெயரால் அழைப்பர். இவரது ஊர் இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள நல்லூர். இதனைக் குலோத்துங்க சோழநல்லூர் என்றும் கூறுவர். கவிராசரின் அரிச்சந்திர புராணத்துக்கு மூலநூலாக அரிச்சந்திர வெண்பா என்னும் நூலும் இருந்தது. அரிச்சந்திர புராணம் பத்துக் காண்டங்களைக் கொண்டது. 1215 பாடல்கள் இந்நூலில் உள்ளன. இதன் மயான காண்டப் பகுதியே தனியாகப் பிரித்தெடுத்து மாணவர்களுக்கேற்ற வகையில் எளிமையாக உரை எழுதப் பெற்றுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 2494).

### 12737

**இலக்கிய மஞ்சரி : ஐந்தாம் புத்தகம்.** வ.நடராஜன், கனக செந்திநாதன். சுன்னாகம்: வட இலங்கைத் தமிழ் நூற் பதிப்பகம், திருத்திய 7வது பதிப்பு, 1961, 1வது பதிப்பு, 1947, திருத்திய 6வது பதிப்பு, 1959. (யாழ்ப்பாணம்: திருமகள் அழுத்தகம், சுன்னாகம்).

viii, *96 பக்கம், சித்திரங்கள், விலை: 85 சதம், அளவு: 18x12 சமீ.*

*இந்நூலில் தமிழ்மொழி, மழை, கத்தரி வெருளி, எங்கள் நாடு, நாட்டு வணக்கம், வண்டிச் சவாரி, காடு, குதிரைகள் புலம்பல், ஔவையாரும் முருகக் கடவுளும், ஆருளர் இனியே?, பிராமணனும் புலியும், சந்திரமதி புலம்பல், குரங்குச் சேட்டை, நல்ல அரசு, நளனும் மக்களும், கல்வி, சூரிய உதயம், நன்னெறி, செய்யுளை மனனஞ் செய்யும் வழி, யுத்தியுள்ள தீர்ப்பு, காற்று, கிழவியின் அறியாமை, உண்மையின் பயன், புகழ் வாய்ந்த சில விசித்திர மனிதர்கள் ஆகிய 24 பாடங்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. இப்புத்தகம் இலங்கைக் கல்வித் திணைக் களத்தினரால் இலங்கைப் பாடசாலைகளிலும், கல்லூரிகளிலும் துணைப்பாட நூலாக உபயோகிக்கத் தகுந்ததென 16.9.1952ஆம் திகதி தொடக்கம் அங்கீகரிக்கப் பெற்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 4100).*

## 12738

**கம்பராமாயணம்: அயோத்தியா காண்டம்: மந்தரை சூழ்ச்சிப் படலம், கைகேசி சூழ்வினைப்படலம்.** *இ.பரமேஸ்வரி, சோ.இளமுருகனார் (உரையாசிரியர்கள்). யாழ்ப்பாணம்: செ.யோ. இளையதம்பி, வனிதா அச்சகம், 43, 3ம் குறுக்குத்தெரு, 1வது பதிப்பு, மாசி 1964. (யாழ்ப்பாணம்: வனிதா அச்சகம், 43, 3ம் குறுக்குத்தெரு).*

*175 பக்கம், விலை: ரூபா 3.50, அளவு: 20x13 சமீ.*

*1965-66ஆம் ஆண்டு ஜீ.சீ.ஈ.பரீட்சைக்குரியது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 3099).*

## 12739

**கம்பராமாயணம்: அயோத்தியா காண்டம்: மந்தரை சூழ்ச்சிப் படலமும் கைகேயி சூழ்வினைப் படலமும்.** *க.ந.வேலன் (உரையாசிரியர்). யாழ்ப்பாணம்: கலைவாணி புத்தக நிலையம், 10, மெயின் வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 1964. (யாழ்ப்பாணம்: கலைவாணி பிரின்டிங் வேர்க்ஸ்).*

xii, *231 பக்கம், விலை: ரூபா 3.50, அளவு: 21x13.5 சமீ.*

*இந்நூல் அரசினரின் ஜீ.சீ.ஈ. வகுப்பு, 1965,-66, -67ஆம் ஆண்டுக்குரிய பாடத் திட்டத்தைத் தழுவி எழுதப்பட்டது. கம்பராமாயண நூற்சிறப்பு, கம்பநாட்டாழ்வார் வரலாறு, அயோத்தியா காண்டம் (கதைச்சுருக்கம்), நூல் மூலமும் உரையும், மந்தரை சூழ்ச்சிப் படலம், கைகேயி சூழ்வினைப் படலம், செய்யுள் முதற் குறிப்ப கராதி ஆகிய தலைப்புகளில் இந்நூல் விரித்தெழுதப்பட்டுள்ளது. இந்நூலில் பாடல்களுக்குப் பதவுரையும், தூய நடையில் பொழிப்புரையும், மாணவர்களுக்குப் பயன்படும் முறையில் தெளிவை அளிக்கும் சிறந்த விளக்கமும், செய்யுள் நயம் காணும் முறையும், அருஞ்சொற் பொருளும் நலம்பெற அமைந்துள்ளன. ஒவ்வொரு செய்யுளுக்கும் இலக்கண விளக்கம் விபரமாகத் தரப்பட்டுள்ளது. நூலாசிரியர் வித்துவான் க.ந.வேலன் அவர்கள் மானிப்பாய் இந்துக் கல்லூரியின் தமிழா*

சிரியராவார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 35738).

### 12740

**கம்பராமாயணம் சுந்தரகாண்டம்: பகுதி 2-நிந்தனைப் படலம் (விளக்கவுரையுடன்).** செ.நடராசா. யாழ்ப்பாணம்: ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை, 235, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, சித்திரை 1979. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சுப்பிரமணிய அச்சகம், 63 B.A. தம்பி ஒழுங்கை).

(4), 97-220 பக்கம், விலை: ரூபா 6.50, அளவு: 21x14 சமீ.

இந்நூலில் எடுத்தாளப்பட்டுள்ள நிந்தனைப் படலம், க.பொ.த.ப. சாதாரணதரம், தமிழ்மொழி "அ" பாடத்திட்டம் 1979-ஆம் ஆண்டு 9ஆம் தரத்துக்கும் 1980ஆம் ஆண்டு 10ஆம் தரத்துக்கும் உரியது. இப்பாடற் பகுதிக்குக் கொண்டுகூட்டு, (எண்வகைப் பொருள்கோளுள் செய்யுளின் அடிகள் பலவற்றிலும் உள்ள சொற்களைப் பொருளுக்கு ஏற்றவிடத்தில் எடுத்துக்கூட்டிப் பொருள்கொள்ளுமுறை), பதவுரை, பொழிப்புரை, விளக்கவுரை, விஷயத் தொகுப்பு என்பன அமைய மாணவர்கள் இலகுவில் விளங்கக்கூடியவகையில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. மேலும் செய்யுள் நயமும், உவமான உவமேய விளக்கங்களும் விரிவாகத் தரப் பட்டுள்ளன. பொருள்நிலைக்குப் பொருத்தமாக விடயங்களைத் தொகுத்து ஏற்ற தலையங்கங்கள் தந்து பண்டிதர் செ.நடராஜா இந்நூலை எழுதியுள்ளார். (இந் நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 3100).

### 12741

**சுதந்திர இலங்கை: செய்யுள் திரட்டு (ஜே.எஸ்.சி.அல்லது எட்டாம் வகுப்பு).** மந்திரி கிரகோரி. கொழும்பு 12: மந்திரி கிரகோரி அன் கோ, 101 ஆர்மர் வீதி, மசங்கா வீதிச் சந்தி, 1வது பதிப்பு, 1946. (கொழும்பு 12: மந்திரி கிரகோரி அன் கோ).

vi, 128 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x13.5 சமீ.

நளவெண்பா, வில்லி பாரதம் ஆகிய இரண்டு தமிழ் இலக்கியப் படைப்பு களிலுமிருந்து தேர்வு செய்யப்பட்ட எட்டாம் வகுப்புத் தேர்வுக்குப் பொருத்தமான செய்யுள்களும் அதற்கான விளக்கங்களும், கேள்வி பதில்களும் கொண்ட பாட நூலாக இது இலங்கையில் சுதந்திரத்திற்கு முற்பட்ட காலப்பகுதியில் வெளியிடப்பட்டது. ஆங்கிலத் தலைப்பு Free Lanka: Poetical Selections for JSC or Standard 8 எனக் குறிக்கப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 35748).

### 12742

**தமிழ் இலக்கிய விளக்கம்: ஜீ.சீ.ஈ.(1962-1964).** க.ந.வேலன். காரைநகர்: கலைமகள் மன்றம், 1வது பதிப்பு, மார்ச் 1961. (சுன்னாகம்: கலாதேவி அச்சகம், புகையிரத வீதி).

(4), 96+38 பக்கம், விலை: ரூபா 2.00, அளவு: 22x14 சமீ.

காட்சிப் படலம், நிந்தனைப் படலம், பதவுரை, பொழிப்புரை, செய்யுள் நயம், பாரதி பாடல்கள், மாதிரி வினாக்கள், அலையும் கலையும், செய்யுள் விளக்கம், உதயணன் சரிதை மாதிரி வினாக்கள் ஆகிய க.பொ.த. வகுப்புக்குரிய பாட விதானத்துக்குட்பட்ட பாடங்கள் அடங்கிய நூல். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 24750).

## 12743

**தமிழ் இலக்கிய வினா-விடை: ஆண்டு 10-11.** க.சொக்கலிங்கம் (புனைபெயர்: சொக்கன்). யாழ்ப்பாணம்: ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை, 235, காங்கேசன்துறை வீதி, 8வது பதிப்பு, ஜுலை 1995. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சுப்பிரமணிய அச்சகம், 63 B.A. தம்பி ஒழுங்கை).

(44), 104 பக்கம், விலை: ரூபா 55.00, அளவு: 21x14 சமீ.

கல்வி வெளியீட்டுத் திணைக்களம் 10ஆம் 11ஆம் ஆண்டு மாணவர்களுக்கென வெளியிட்டுள்ள தமிழ் இலக்கியம் என்ற பாடநூலைக் கற்போருக்கு உதவுமுகமாக 150 வினா-விடைகள் கொண்டு எழுதப்பட்ட நூல் இது. செய்யுள், வசனம் என்ற இரு பகுப்புகளுக்குள் காலத்தாலும் சூழ்நிலையாலும் வெவ்வேறான பாடற் பகுதிகளும், வெவ்வேறான நடைகொண்ட உரைப் பகுதிகளும் (கட்டுரைகளும்) இந்நூலிலே அடங்கியுள்ளன. இலக்கிய நயம், பொருள்விளக்கம், சொற்களஞ்சியத் தேட்டம் அறிவு விருத்தி ஆகிய நோக்கங்களை நிறைவுசெய்யும் வகையில் இந் நூலின் பாடல்களும் கட்டுரைகளும் கற்கவும் கற்பிக்கவும் வேண்டியனவாயுள்ளன. மொழியறிவு விருத்திக்கு இலக்கண அறிவின் அடிப்படைத் தேவையும் உணரப்பட்டுள்ளமையால், இந்நூலின் விளக்கக் குறிப்புகளிலே ஆங்காங்கு இலக்கண விளக்கங்களும் தரப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 38601).

## 12744

**தமிழ் இலக்கியம்: ஆண்டு 10-11: விளக்கக் குறிப்புகள்.** தமிழவேள் (இயற்பெயர் க.இ.க.கந்தசாமி). கொழும்பு 12: குமரன் புத்தகசாலை, 201, டாம் வீதி, 1வது பதிப்பு, செப்டெம்பர் 1990. (கொழும்பு 12: குமரன் அச்சகம், 201, டாம் வீதி).

(4), 140 பக்கம், விலை: ரூபா 24.00, அளவு: 21x14 சமீ.

இலங்கையின் கல்வி வெளியீட்டுத் திணைக்களம் அண்மையில் வெளியிட்டுள்ள தமிழ் இலக்கியம் (ஆண்டு 10-11) என்னும் நூல் க.பொ.த. சாதாரண தேர்வு தமிழ் மொழிக்குப் பாடநூலாகவுள்ளது. அந்நூலில் காணப்படும் செய்யுட் பகுதி களும் உரைநடைப் பகுதிகளும் சொற்செறிவும் கருத்து வளமும் மிக்கவை. அவற்றின் பயனைப் பெறுவதில் மாணவர்கள் இடர்ப்படுவதைத் தவிர்க்கும் வகையில் இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது. இதில் 18 பாட அலகுகள் தரப்பட்டுள்ளன. கம்பராமாயணக் காட்சிகள், நளவெண்பா-சுயம்வர காண்டம், இஸ்லாமியக் கலையும் பண்பும், நாலடியார், மாதரும் மலர்ப் பொய்கையும், ஆசாரக்கோவை, சிரிக்கத் தெரிந்த பாரசீகர், பெரிய புராணம்-திருநகரச் சிறப்பு,

கர்ணனும் கும்பகர்ணனும், இலங்கை வளம், கலையின் விளக்கம், நபி அவதாரப் படலம், நீதிக்குப்பின் பாசம், கங்கையில் விடுத்த ஓலை, ஒன்றுக்கு ஆயிரம் ஆயிரம், செய்நம்பு நாச்சியார் மான்மியம், நன்றிப் பெருக்கு, வினாக்கள் ஆகிய தலைப்புகளில் 18 அலகுகளும் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு பாட அலகிலும் அரும்பதங்களும் அவற்றின் பொருள்களும் கொடுக்கப்பெற்றுள்ளன. கடினமான நீண்ட சொற்றொடர்கள் தனிச் சொற்களாகப் பிரித்து எழுதப்பட்டுள்ளன. இன்றியமையாத இலக்கணக் குறிப்புகள் கொடுக்கப்பெற்றுள்ளன. அணிகளின் அமைப்புக்கள் விளக்கப்பெற்றுள்ளன. இன்றியமையாத கருத்துக்கள் தொகுத்து எழுதப்பெற்றுள்ளன. பயனுள்ள வினாக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. செய்யுள் உரைநடைப் பகுதிகளின் ஆசிரியர்களையும் நூல்களையும் பற்றிய குறிப்புகளும் தரப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 24766).

### 12745

**தமிழ் இலக்கியம்: தரம் 10-11.** புலவர் இளங்கோ. யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா புத்தகசாலை, 234 காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2000. (கொழும்பு 12: பேபெக்ட் பிரின்டேர்ஸ், 130, டயஸ் பிளேஸ், குணசிங்கபுர).

(4), 174 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 21x14 சமீ.

இலங்கைக் கல்விச் சேவையில் பத்தாம் பதினொராம் தரங்களில் பயிலும் மாணவர் களின் உபபாடநூலாக வெளிவந்துள்ள நூல். இந்நூலில் கவிதை உள்ளம், இளையான்குடி மாற நாயனார் புராணம், நீதிப்பாடல்கள் 1, திருமணிமாலை-நமுறாது அழிவுண்ட படலம், இரட்சணிய யாத்திரிகம், குரு தரிசனப் படலம், கடலைநம்பி, அங்கதன் தூதுப் படலம், நீதிப்பாடல்கள் 2, அரிச்சந்திர புராணம், தங்கம்மா ஆகிய பாடங்கள் விளக்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 29670).

### 12746

**தமிழ் மொழியும் இலக்கியமும் தரம் 6 செயல்நூல் (புதிய பாடத்திட்டம்).** எம். நித்தியானந்தா. கொழும்பு 6: இனிய தென்றல் பதிப்பகம், இல 135, கனல்பாங் வீதி, வெள்ளவத்தை, 1வது பதிப்பு, ஜனவரி 2016. (கொழும்பு 13: கௌரி அச்சகம், 207, ஆட்டுப்பட்டித் தெரு).

(4), 115 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-0254-68-2.

தரம் 6இற்குரிய தமிழ் மொழியும் இலக்கியமும் (புதிய பாடத்திட்டத்தின்) பாடங்கள் தொடர்பான 20 பாடங்களுக்குமான செயல்நூல். ஒவ்வொரு பாடத்துக்குமான பல்வேறு கேள்விகளும் அவற்றிற்கான பதில்களும் இந்நூலில் தரப்பட்டுள்ளன. விதைத்தால் தங்கம் விளையுமா?, எலியும் சேவலும், ஏமாந்த நாய், குரங்குச் சேட்டை, தந்தை மகனுக்கு எழுதிய கடிதம், பறவைகள் பலவிதம், அழ.வள்ளியப்பா பாடல்கள், மூட ஆமை, தென்னமரக் கும்மி, புதிய அத்திசூடி,

கண்ணகி வழக்குரைத்தல், செய்தித் தாள்கள், செய்ந்நன்றி அறிதல், சேர். ஐசாக் நியூற்றன், புகழ்ச்சி இகழ்ச்சியை அளித்த கதை, ஈசலும் புற்றும், ஒழுக்கம் உயர்வளிக்கும், மரங்கள் வாழ்க மாநிலம் வாழ்க, குறும்பா, கம்பரிற் பாலர் கல்வி (கம்பராமாயணச் செய்யுள்கள்) ஆகிய இருபது பாடங்களை இச்செயல்நூல் உள்ளடக்கியுள்ளது.

## 12747

**பாரதியார் பாடல்கள்: விளக்கவுரை.** சுப்பிரமணிய பாரதியார் (மூலம்), க.வேந்தனார் (உரையாசிரியர்). யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா புத்தகசாலை, 234, காங்கேசன்துறை வீதி, 4வது பதிப்பு, 1965. (யாழ்ப்பாணம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை).

(4), 184 பக்கம், விலை: ரூபா 2.00, அளவு: 17.5x12.5 சமீ.

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்கு 1965-1966 காலப்பகுதியில் தோற்றும் மாணவர்களுக்கானது. பாரதியாரின் பாடல்களுக்கு வித்துவான் அவர்கள் எழுதியுள்ள நயம், மாணவர்களுக்குப் புதியதோர் இலக்கிய விருந்தாகப் பொலிகின்றது. எளிமையும், இனிமையும், உணர்ச்சி வீறும் கொண்ட பாரதியார் பாடல்களை, எங்ஙனம் நுகர்ந்து சுவைக்கலாம் என்பதற்கோர் வழி காட்டியாக வித்துவான் அவர்களின் விளக்கவுரை விளங்குகின்றது. பாரத தேசம், நடிப்புச் சுதேசிகள், சுதந்திரப் பெருமை, சுதந்திரதேவியின் துதி, புதுமைப்பெண், தொழில், தமிழ்த் தாய், தமிழ், மூன்று காதல், வெண்ணிலாவே, முரசு ஆகிய 11 பாரதி பாடல்களுக்கு பதவுரையும், உவமான உவமேய விளக்கமும் தரப்பட்டுள்ளன. இந்நூலில் உரையாசிரியர் வித்துவான் வேந்தனார் யாழ்ப்பாணம் பரமேஸ்வரக் கல்லூரியின் தமிழ் விரிவுரையாளராவார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 4838. நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தின் சேர்க்கை இலக்கம் 013430).

## 12748

**பாரதியார் பாடல்கள்: வினா-விடைத் தொகுப்பு ஏ.எல்.தமிழ்.** சரவணமுத்து கருணாகரன். யாழ்ப்பாணம்: கலைக்குயில் கலைவட்டம், புத்தூர், 2வது பதிப்பு, வைகாசி 2009, 1வது பதிப்பு, தை 2006. (வவுனியா: உமா பதிப்பகம்).

x, 87 பக்கம், விலை: ரூபா 175., அளவு: 20x13.5 சமீ.

வவுனியா, விபுலானந்தா கல்லூரியின் ஆசிரியரான ச.கருணாகரன், க.பொ.த. உயர் தர வகுப்பு மாணவர்களின் தமிழ் இலக்கிய பாடத் தேவைக்கு உதவும் வகையில் இந்நூலை வினா-விடைத் தொகுப்பாக எழுதிவழங்கியுள்ளார். சுப்பிரமணிய பாரதியார், விநாயகர் நான்மணி மாலை, வெண்ணிலாவே, வந்தே மாதரம், புதுமைப்பெண், தொழில், உயிர் பெற்ற தமிழர் பாட்டு, மகாத்மா காந்தி பஞ்சகம், காணி நிலம் வேண்டும், அக்கினிக் குஞ்சு, காற்று ஆகிய தலைப்புகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 46755).

### 12749

**புகழேந்திப் புலவர் இயற்றிய நளவெண்பா(சுருக்கம்) கலிதொடர் காண்டம்.** புகழேந்திப் புலவர் (மூலம்), வடஇலங்கை தமிழ்நூற் பதிப்பகம் (பதிப்பாசிரியர்கள்). சுன்னாகம்: வட-இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகம், 1வது பதிப்பு, 1959. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).

vi, 98 பக்கம், விலை: ரூபா 1.20, அளவு: 18.5x12.5 சமீ.

மகாபாரதத்தின் துணைக் கதைகளுள் ஒன்றான, நிடத நாட்டை ஆண்ட நளன் என்னும் மன்னனின் கதையைத் தமிழில் கூற எழுந்ததே நளவெண்பாவாகும். இதனை எழுதியவர் 13 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புகழேந்திப் புலவராவார். இதன் பெயர் சுட்டுவது போல், இந் நூல் வெண்பாக்களால் அமைந்தது. சுயம்வர காண்டம், கலிதொடர் காண்டம், கலிநீங்கு காண்டம் என மூன்று காண்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ள இந் நூலில், 405 வெண்பாக்கள் உள்ளன. இவற்றுள் சுயம்வர காண்டத்தில் 155 வெண்பாக்களும், கலிதொடர் காண்டத்தில் 147 வெண்பாக்களும், கலிநீங்கு காண்டத்தில் 90 வெண்பாக்களும் உள்ளன. எஞ்சிய 13 வெண்பாக்கள், பாயிரம், நூல்வரலாறு என்பனவாகும். இந்நூலில் கலிதொடர் காண்டத்தின் 124 செய்யுள்களை உள்ளடக்கியுள்ளனர். அவற்றுக்கான பதவுரை, விசேடஉரை, இலக்கணக் குறிப்புகள் ஆகியவை நூலின் இறுதியில் சேர்க்கப்பட்டுள்ளன. நூலாசிரியர் வரலாறும் முன்பகுதிக் கதைச் சுருக்கமும் மாணவர்களின் பயன் பாட்டுக்காக மேலதிகமாக இணைக்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 17164).

### 12750

**மணிமேகலை சரிதை.** வ.நடராஜன். சுன்னாகம்: வட இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகம், 2வது பதிப்பு, 1966, 1வது பதிப்பு, 1960. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).

viii, 122 பக்கம், விலை: ரூபா 2.75, அளவு: 17.5x12 சமீ.

ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றான மணிமேகலைக் கதையை ஆறாம் வகுப்பு மாணவர்களுக்கென இலகுவான அழகிய நடையில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆசிரியர் பண்டிதர் வ.நடராஜன் அவர்கள் 22 அத்தியாயங்களில் எழுதியுள்ளார். மணிமேகலை பிறப்பு, இந்திர விழாவும் மாதவி துன்பமும், மணிமேகலை உவவனம் அடைதல், உதயகுமாரன் மணிமேகலையைக் காணல், மணிமேகலா தெய்வம் தோன்றுதல், சக்கரவாளக் கோட்டம், மணிமேகலை தன் பழம் பிறப்புணர்தல், மணிமேகலையும் மணிமேகலா தெய்வமும், மணிமேகலை அமுதசுரபியைப் பெற்றமை, மாதவியுஞ் சுதமதியுந் தம் பழம்பிறப்பறிதல், ஆபுத்திரன் வரலாறு, ஆபுத்திரன் அமுதசுரபியைக் கோமுகியிலிட்டமை, ஆதிரையின் வரலாறு, காயசண்டிகையின் வரலாறு, மணிமேகலையும் உதயகுமாரனும், சிறைச்சாலை அறச்சாலையானது, உதயகுமாரன் இறப்பு, மணிமேகலையும் கந்திற்பாவையும், மணிமேகலை சிறைப்பட்டமை, மணிமேகலையும் இராசமாதேவியும், புண்ணியராசன் மணிபல்லவத்திலே தன்

வரலாறு அறிதல், மணிமேகலை வஞ்சிநகர் அடைந்தமை ஆகிய அத்தியாயங்களில் மணிமேகலையின் சரிதை எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 34218).

**மேலும் பார்க்க: 13A07, 13A21**

## 894.8(05) இலக்கிய அமைப்புகளின்/சஞ்சிகைகளின் சிறப்பிதழ்கள்

### 12751

**அலையருவி சிறப்பு மலர் 1995.** தமிழவேள் க.இ.க.கந்தசுவாமி. கொழும்பு 6: கொழும்புத் தமிழ்ச் சங்கம், 7, 57ஆம் ஒழுங்கை, 1வது பதிப்பு, 1995. (வத்தளை: வத்தளை அச்சகம், 17/10, நீர்கொழும்பு வீதி).

(82) பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x19.5 சமீ.

வடமேல் பிரதேச மாணவர்களுக்காகக் கொழும்புத் தமிழ்ச் சங்கம் 1994ஆம் ஆண்டு ஒழுங்குசெய்திருந்த தமிழ்த் திறன் தேர்வுகளின் பதிவாக வெளிவந்துள்ள சிறப்பு மலர் இது. கடவுள் வாழ்த்து, தமிழ் மொழி வாழ்த்து, தமிழவேள் க.இ.க. கந்தசுவாமியின் முன்னுரை, மற்றும் ஏ.ஜே.எம். ஜலீல், வீ. நடராசா, செ. குணரெத்தினம், எம்.பி. நடேசன், என்.டி. பீரிஸ் ஆகியோர் வழங்கிய வாழ்த்துச் செய்திகள் முன்னதாக இடம்பெற்றுள்ளன. தொடர்ந்து இம்மலரில் சிறப்புக் கட்டுரைகளாக வடமேற்கு பிரதேசத்தின் வரலாற்றாய்வு (ஏ.என்.எம். ஷாஜகான்), வடமேல் பிரதேசத்து தமிழ் ஊர்கள் (உடப்பூர் வீரசொக்கன்), வடமேல் பிரதேசப் பெரியார் திரு.சைமன் காசிச்செட்டி (கார்த்திகா சுப்பிரமணியம்) ஆகியவை இடம்பெற்றுள்ளன. தொடர்ந்து செல்வி எல்.பிரசீலா, செல்வி ஆர். சர்புன்னிசா, வை.உதயகுமார், ரா.நித்திய கல்யாணி, கார்த்திகா சுப்பிரமணியம், ஆர்.மேரி றெடிஸ்ரா, கே.நிரஞ்சன், ஜ.நிஸாஹிறா, கா.திலகேஸ்வரன், எஸ்.பிரதீபன்,சி. டெலியா டீ. றொபின்ஸ், வே.துஷ்யந்தி, சி.விநாயகமூர்த்தி, செல்வி வி. மனோரஞ்சிதம் ஆகியோரின் கட்டுரைகளும், எம்.எப்.றின்சாட் அகமட், கை.கஜந்தன், கை.அரவிந்தன், மு. கௌரிகாந்தன் ஆகியோரின் கவிதைகளும் இடம்பெற்றுள்ளன. இறுதியாக கொழும்புத் தமிழ்ச்சங்கப் பணிகள் பற்றித் தமிழவேள் க.இ.க. கந்தசுவாமி அவர்களது அறிக்கையும் நன்றியுரையும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 39201. நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தின் சேர்க்கை இலக்கம் 009529).

### 12752

**இலக்கிய விழா 1988-1989: சிறப்பு மலர்.** திருமலை நவம், அருள் சுப்பிரமணியம், பால சுகுமார் (மலர்க் குழுவினர்). திருக்கோணமலை: கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு, வடக்கு கிழக்கு மாகாணம், 1வது பதிப்பு, நவம்பர் 1991. (திருக்கோணமலை: பதிப்பகத் திணைக்களம், வடக்கு-கிழக்கு மாகாணம்).

(4), 32 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 26.5x19 சமீ.

வடக்கு-கிழக்கு மாகாண கல்வி, கலாசார அலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு 30.11.1991 அன்று நடத்திய இலக்கிய விழாவின் சிறப்பிதழ். வாழ்த்துச் செய்திகளுடன் தொடங்கும் இம்மலரில் வடக்கு-கிழக்கு மாகாண கல்வி, கலாசார அலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு நடாத்தும் இலக்கிய விழா 1991, இலக்கியப் பரிசில் பெறும் நூல்கள் 1988-1989, சாகித்தியமண்டலப் பரிசுத்திட்டத்திற்கான இலக்கியங்கள், இலக்கிய விழா தொடர்பாக... (எஸ். எதிர்மன்னசிங்கம்), திறன் ஆய்வு உமா வரதராஜனின் "உள்மன யாத்திரை" (கே.எஸ்.சிவகுமாரன்), மதிப்பீட்டுரை: "திருக்கேதீச்சர மான்மியம்" (வித்துவான் சா.இ.கமலநாதன்), ஒரு நோக்கு: கவிஞர் சோலைக்கிளியின் "எட்டாவது நரகம்" (இணுவையூர் தம்பு-சிவா), ஆக்க இலக்கியம், ஒரு கண்ணோட்டம்: "இலங்கையிற் தொல்லியலாய்வும் திராவிடக் கலாசாரமும்" (செ.அழகரெத்தினம்), நாடக இலக்கிய மதிப்பீடு: அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் "முதலாம்பிள்ளை", நவீன விமர்சன இலக்கியத்தின் முன்னோடி பேராசிரியர் கைலாசபதி (பாலசிங்கம் சுகுமார்), திருக்கோணமலையின் கலை இலக்கியம் பற்றிய ஓர் கண்ணோட்டம் (திருமலை நவம்), பாரதியை தமிழ் உலகுக்கு அறிமுகம் செய்த சுவாமி விபுலானந்தர் (நா.புவனேந்திரன்) ஆகிய படைப்பாக்கங்கள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 28288. நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தின் சேர்க்கை இலக்கம் 001440).

### 12753

**இலக்கிய விழா 1990-1991: சிறப்பு மலர்.** எஸ்.எதிர்மன்னசிங்கம் (மலர்க் குழுவினர் சார்பில்). திருக்கோணமலை: கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு, வடக்கு கிழக்கு மாகாணம், 1வது பதிப்பு, டிசம்பர் 1992. (திருக் கோணமலை: பதிப்பகத் திணைக்களம், வடக்கு-கிழக்கு மாகாணம்).

(12), 24 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 26.5x19 சமீ.

வடக்கு-கிழக்கு மாகாண கல்வி, கலாசார அலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு 05.12.1992 அன்று நடத்திய இலக்கிய விழாவின் சிறப்பிதழ். வாழ்த்துச் செய்திகளுடன் தொடங்கும் இம்மலரில் மலரை நுகருமுன்...(எஸ். எதிர்மன்ன சிங்கம்), கல்வி கலாசார அலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு நடாத்தும் இலக்கிய விழாவும் புத்தகக் கண்காட்சியும் 1992, இலக்கியப் பரிசில்களை பெறும் நூல்கள் 1990-1991, இலக்கிய பரிசு திட்டத்திற்கு கிடைத்த இலக்கியங்கள், சமய இலக்கியங்கள் காட்டும் வாழ்க்கை நெறி (ஆர். வடிவேல்), நமக்கு மேலே ஒருவன் (வெல்லவூர்க் கோபால்), நமது நாட்டின் பண்பாட்டுப் பாரம்பரியம்: செந்தமிழும் புதுப்புனைவும் (தமிழ்மணி ந. பாலேஸ்வரி), எமது கலைஞர்களின் அவலங்கள் (எஸ்.பற்குணம்), மேற்குலகு நாடுகளில் தமிழ்ச் சஞ்சிகைகள் ஓர் ஆய்வு (வி. மைக்கல் கொலின்), நன்றிக்குரியவர்கள் ஆகிய தலைப்புக்களில் படைப்பாக்கங்கள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 009050).

### 12754

**இலக்கிய விழா 1995: சிறப்பு மலர்.** மலர்க் குழு. திருக்கோணமலை: வடக்கு கிழக்கு மாகாண கல்வி, கலாசார அலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு, 1வது பதிப்பு, ஜுலை 1995. (அச்சக விபரம் தரப்படவில்லை).

(10), 40 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 27x21 சமீ.

திருக்கோணமலையில் நிர்வாகச் செயலகத்தைக் கொண்டியங்கிய வடக்கு-கிழக்கு மாகாண அரசின் கல்வி, கலாசார அலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு சில ஆண்டுகளாக, வருடாந்தம் தமிழ் இலக்கிய விழாவை சிறப்பாகக் கொண்டாடி வந்தது. அதன் நான்காவது இலக்கிய விழா மட்டக்களப்பில் 23.07.1995இல் நடந்தது. அவ்வேளையில் தேர்ந்தெடுத்த ஏழு துறைகளில் சிறப்பித்த அறிஞர்களை கௌரவித்து சாஹித்தியப் பரிசு வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றிருந்தது. இந்நிகழ்வினைச் சிறப்பிக்கும் வகையில் வெளியிடப்பட்ட சிறப்பு மலர் இதுவாகும். இதில் வெல்லவூர் கோபால் (இதுவே இன்றைய நியதி), அன்பு முகையதீன் (பாதைகள்), கேணிப்பித்தன் (மனுவிட்டு ஈசன் போனான்), தம்பையூர்த் தங்கராசன் (கடவுளாக மாறலாம்) ஆகிய கவிஞர்களின் கவிதைகளுடன் வி.சிவசாமி (இலங்கை யிலே பண்ணும் பரதமும்-சில குறிப்புகள்), கே.எஸ்.சிவகுமாரன் (ஈழத்து உடநிகழ்கால இலக்கியம்: சில அவதானிப்புகள்), சி.பற்குணம் (கவின்கலையும் அதன் நிலையும்), அகளங்கன் (கம்பராமாயணத்து வானரர்கள் குரங்குகளல்லர்: வாலுள்ள மனிதர்களே), அன்புமணி (ஆத்மீகம் செறிந்த கல்வியே அர்த்தமுள்ளது), துரை மனோகரன் (சங்க மருவியகால இலக்கியப் போக்கின் தனித்துவக் கூறுகள்), க.தங்கேஸ்வரி (ஈழத்தில் நாற்பது ஆண்டுகள் ஆட்சிசெய்த தமிழரசன் மாகோன்), எஸ்.எதிர்மன்னசிங்கம் (தமிழர் கலை இலக்கியங்களில் இசையின் பங்கு), சோ.இராசேந்திரம் (நோக்கும் போக்கும்) ஆகியோரின் கட்டுரைகளும் இடம் பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 14491).

### 12755

**இலங்கைக் கலாசாரப் பேரவையின் தமிழ் இலக்கிய விழா மலர்-1972.** என். சோமகாந்தன் (பொறுப்பாசிரியர்). கொழும்பு 3: தமிழ் இலக்கியஆலோசனைக் குழு, இலங்கை கலாசாரப் பேரவை, 135 தர்மபால மாவத்தை, 1வது பதிப்பு, ஜனவரி 1972. (கொழும்பு 13: ரஞ்சனா பிரின்டர்ஸ், 98, விவேகானந்தா மேடு).

(104) பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 23x18 சமீ.

விழாச் செயற்குழுவின் தலைவராக பேரா.கா.சிவத்தம்பியும், செயலாளராக டொமினிக் ஜீவாவும், உறுப்பினர்களாக ஆர்.பேரம்பலம், என்.சோமகாந்தன், ஆ.தேவராசன், நா.சண்முகநாதன் ஆகியோரும் இணைந்து செயற்பட்டிருந்தனர். இலங்கை கலாசாரப் பேரவையும் தமிழ் இலக்கிய வளர்ச்சியும் - தமிழ் இலக்கிய ஆலோசனைக் குழுவின் அறிக்கை (கார்த்திகேசு சிவத்தம்பி), ஈழத்தில் தமிழ்ச் சிறுகதை வளர்ச்சி (அம்பலத்தான்), கலாசாரப் பேரவையின் பணியே வாழ்க-கவிதை (இ.சிவானந்தன்), ஒரு கால் நூற்றாண்டுக் கவிதை வரலாற்றில்

தென்னகமும் ஈழமும் (கவிஞர் இ.முருகையன்), ஈழத்தின் முஸ்லிம் புலவர்கள் (எம்.எம்.உவைஸ்), ஈழத்தில் தமிழிலக்கியத் திறனாய்வு முயற்சிகள் (க.கைலாசபதி), சமய வீரரிலிருந்து தேசிய வீரர் வரை: நாவலரியக்கத்தின் படிமுறை வளர்ச்சி-(நா. சோமகாந்தன்), விடிவை நோக்கி-கவிதை (சில்லையூர் செல்வராசன்), தத்தை விடுதூது (பொ.பூலோகசிங்கம்), தற்காலத் தமிழ் இலக்கியத்தில் பண்டைய இலக்கியத்தின் தாக்கமும் தொடர்ச்சியும்-(கார்த்திகேசு சிவத்தம்பி), எங்கள் நாடு-கவிதை (நவாலியூர் சோமசுந்தரப் புலவர்), ஈழத்துத் தமிழ்ச் சஞ்சிகை வளர்ச்சியும் பிரச்சினைகளும், தீர்வு மார்க்கங்களும்- பிரேம்ஜி ஞானசுந்தரன்) ஆகிய படைப்பாக்கங்கள் இம்மலரில் இடம்பெற்றுள்ளன. விழாவில் பாராட்டப் பட்ட தமிழறிஞர்களின் விபரக்குறிப்பும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 18972. நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தின் சேர்க்கை இலக்கம் 004081).

## 12756

**ஊவா மாகாண 3-வது தமிழ் சாகித்திய விழா சிறப்புமலர் 1995.** மு.சச்சிதானந்தன் (மலர்க்குழுத் தலைவர்). பதுளை: ஊவா மாகாண இந்து கலாசார அமைச்சு, 199, கெப்பிட்டிபொல வீதி, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1995. (கண்டி: சென்ட்ரல் அச்சகம், 308, திருக்கோணமலை வீதி).

(110) பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 23.5x18.5 சமீ.

அப்புத்தளை தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் 1995, ஒக்டோபர் மாதத்தின் 13, 14, 15ஆம் திகதிகளில் நடைபெற்ற ஊவா மாகாண தமிழ் சாகித்திய விழாவினையொட்டி இம்மலர் வெளியிடப்பட்டுள்ளது. செயற்குழுவில் A.S.முத்தையா, R.A.தமிழோவியன், வை.நடனசபாபதி, செ.பாலசுப்பிரமணியம், வீ.ஸ்ரீராம் குமார், சுந்தரி, மு.கலாதேவி, ஆர். சிவரஞ்சனி, சிற்றரசு ஆகியோர் இயங்கியுள்ளனர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 28317).

## 12757

**கவின் தமிழ்2001: வடக்கு கிழக்கு மாகாண தமிழ்மொழித்தின விழா மலர்.** ந.அனந்தராஜ் (இதழாசிரியர்). திருக்கோணமலை: வடக்கு-கிழக்கு மாகாண கல்வித் திணைக்களம், 1வது பதிப்பு, ஜுலை 2001. (திருக்கோணமலை: உதயன் பதிப்பகம்).

xix, 120 பக்கம், சித்திரங்கள், விளக்கப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22.5x18.5 சமீ.

09 ஜுலை 2001 அன்று இடம்பெற்ற தமிழ்மொழித் தின விழாவின்போது வெளியிடப்பட்ட சிறப்பு மலர். இம்மலரில் தமிழ் மணம் கமழும் மட்டக்களப்பு மீனவர் பாடல் (கு.சண்முகம்), பாரதியின் வசன கவிதைகளும் காற்றும் (செ. யோகராசா), தமிழில் மருத்துவ அறிவியல் நூல்கள் (வல்வை ந.அனந்தராஜ்), இலங்கையின் மாறிவரும் சனத்தொகையும் வரலாற்றுச் சிதைவுகளும் (சிவானந்தி

*நடராஜா), அரக்கர் குலத்திலும் ஓர் அற்புத ஆன்மா (ச.கு.கமலசேகரன்), விபுலானந்தரின் கல்விக் கொள்கை (எஸ்.எதிர்மன்னசிங்கம்), காலத்தால் அழிந்துவிட்ட கந்தளாய் பிரம்மதேயம், அடங்காப்பற்றின் செட்டிகுளப் பிரதானிகளும் அவர்தம் வழிபாட்டு மரபுகளும் (ந.ஞானவேல்), சிறுவர்க்கு உகந்த சிறுவர் அரங்கு (முத்துக்குமாரு இராதாகிருஷ்ணன்), புறநானூற்றில் அறக்கருத்துக்கள் (தமிழ்மணி அகளங்கன்), நாவலும் காவியமும் (ஏ.எஸ். உபைத்துல்லா), பழம் மொழிகள் (தா.பி.சுப்பிரமணியம்), குழந்தையின் உடல், உள மேம்பாட்டில் நாட்டார் பாடல்கள் (செ.மெற்றாஸ் மயில்), பாரம்பரிய கலைகளை பேணிப்பாதுகாப்பதில் கல்வியியல் கல்லூரிகளின் பணிகள் (ச.இரமணீகரன்) ஆகிய கட்டுரைகளுடன் பாரதியார், நெடுந்தீவு மகேஸ், தாமரைத்தீவான், பு.சத்தியமூர்த்தி, அ.கௌரிதாசன், க.ஜெயவீரசிங்கம், கவிஞர் புரட்சிபாலன், நிலாந்தன் ஆகியோர் எழுதிய கவிதைகளும், இரத்தினசிங்கம் சர்வேஸ்வரா, ச.எனிடா, தட்சணாமூர்த்தி அகிலன், சிவலிங்கம் தாட்சாயினி, எம்.எம்.சர்ஹான் ஆகிய மாணவர்களின் ஆக்கங்களும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 20753).*

### 12758

**தமிழ் சாகித்திய விழா சிறப்பு மலர் 1992.** *மலர்க் குழு. கொழும்பு: இந்து சமய கலாசார அலுவல்கள், இராஜாங்க அமைச்சரின் அலுவலகம், 1வது பதிப்பு, 1992. (கொழும்பு: சிலோன் பிரின்டேர்ஸ் நிறுவனம்).*

*(61), 43 பக்கம், அட்டவணைகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x19 சமீ.*

*கொழும்பு மாநகரில் 1992, மே 7முதல் 10 வரை நான்கு நாட்கள் இடம்பெற்ற தமிழ் சாகித்திய விழாவின்போது வெளியிடப்பெற்ற சிறப்பு மலர். வாழ்த்துரைகள், ஆசியுரைகளுடன் வெளியிடப்பெற்றுள்ள இச்சிறப்பிதழில், நவீன தமிழ்க் கவிதை: ஒரு புதிய அலை (செ.யோகராசா), மலையகத்தில் நூல் வெளியீட்டு முயற்சிகள் (சாரல் நாடன்), விஞ்ஞானக் கலைச்சொல்லாக்க முயற்சிகளும் முரண்பாடுகளும் (சு.முரளிதரன்), ஈழத்தில் பயில் நிலையிலுள்ள தமிழ் நாடக அரங்கியற் கலை: அறிமுகமும், பேணுதல் வளர்த்தல் சம்பந்தமாக சில ஆலோசனைகளும் (சி. மௌனகுரு), தோப்பில் முகம்மது மீரான்: தமிழ் நாவல் உலகில் ஒரு புதிய வருகை (எம்.ஏ. நுஃமான்), இலங்கையிலுள்ள நானாதேசி வணிகரின் வெண்கல முத்திரை: தனிச்சிறப்புடையதொரு தொல்பொருட் சின்னம் (சி. பத்மநாதன்), சாகித்திய விழா - 1992: "இலக்கியச் செம்மல்" விருது பெறுபவர்கள்: ஓர் அறிமுகம், சாகித்தியப் பரிசு பெறும் நூல்கள் (1990 ஆம் ஆண்டில் பிரசுரமானவை), பாராட்டும் சான்றிதழும் பெறும் தமிழ்மணிகள் ஆகிய ஆக்கங்கள் இடம் பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 24889).*

## 12759

**தேசிய தமிழ் சாகித்திய விழா 1991: சிறப்பு மலர்.** ஏ.எம்.நஹியா (பதிப்பாசிரியர்). கொழும்பு: இந்து சமய, தமிழ் கலாசார அலுவல்கள் இராஜாங்க அமைச்சரின் அலுவலகம், 1வது பதிப்பு, 1991. (கொழும்பு 12: குமரன் பதிப்பகம், 201, டாம் வீதி).

(22), 168+(36) பக்கம், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x18.5 சமீ.

இம்மலரில் 31 ஆய்வுக் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. நாவலர் தொடக்கிவைத்த சைவசமயக் கல்வி மறுமலர்ச்சி (வ.ஆறுமுகம்), சித்தி லெவ்வையின் உரைநடைச் சிறப்பு (எஸ்.எம்.கமால்தீன்), பிள்ளைத் தமிழ்ப் பிரபந்தத்தின் தோற்றம் (ஆ. வேலுப்பிள்ளை), சீறாவும் திருமறையும் (ம.மு.உவைஸ்), யாழும் வீணையும் (பொ.பூலோகசிங்கம்), தமிழிசை பற்றிய சில குறிப்புகள் (செ.கணேசலிங்கன்), மட்டக்களப்பும் மட்டக்களப்பின் பண்டைய கூத்து மரபுகளும் (வி.சி.கந்தையா), பிராமி எழுத்துக்கள் ஒரு வரலாற்று நோக்கு (ஆ.தேவராசன்), எமது சிறுகதைகளிலே புதிய அனுபவங்கள் (சி.தில்லைநாதன்), இலகு தமிழில் விஞ்ஞான இலக்கியம் (திக்குவல்லை கமால்), ஈழத்துத் தமிழ் உரைநடை இலக்கியத்தின் ஆரம்பம் (வ.அ.இராசரத்தினம்), ஆனந்த குமாரசுவாமியின் இலங்கை வாழ்வும் பணிகளும் (அம்பலவாணர் சிவராசா), முத்தமிழ் வித்தகர் விபுலாநந்த அடிகளார் (ரீ. பாக்கியநாயகம்), மட்டக்களப்பு நாட்டுக்கவி இலக்கியமும் சங்கத் தமிழ் இலக்கியங்களும் (ஆ.மு.ஷரிபுத்தீன்), தமிழ் சிங்கள இலக்கிய உறவு (மயிலங்கூடலூ ர் த கனகரத்தினம்), மலையகத் தொழிலாளர் பற்றிய சிறுகதைகள்-ஓர் அறிமுகம் (க.அருணாசலம்), ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகளின் தோற்றமும் வளர்ச்சியும் (மேமன்கவி), எஸ்.பொ.வின் செந்தில்நாதன்: சடங்கு நாவலின் பாத்திரப் பண்பு பற்றிய ஒரு நோக்கு (துரை மனோகரன்), இலங்கையில் தமிழ் நூல் வெளியீடு: பிரச்சினைகளும் தீர்வுக்கான சில ஆலோசனைகளும் (எம்.ஏ.நுஃமான்), இலக்கிய வளர்ச்சிக்கான சில குறிப்புகள் (பிரேம்ஜி ஞானசுந்தரன்), இக்பாலும் பாரதியும் ஓர் ஒப்புநோக்கு (எம்.ஏ.எம்.சுக்ரி), தமிழ் மரபிற் கல்வி பற்றிய நோக்குகள் (சபா ஜெயராசா), தமிழிலக்கிய மரபில் அரங்கேற்றம்-சில அவதானிப்புகள் (நா. சுப்பிரமணியன்), நாட்டார் வழக்காற்றில் கொத்தித் தெய்வம் (இரா.வை. கனகரத்தினம்), மலையகக் கலை இலக்கியம் (சி.அழகுப்பிள்ளை), தமிழ் பேராசான் சு.கணபதிப்பிள்ளை அவர்களின் வாழ்வும் ஈழத்து மண் வாசனை தழுவிய தமிழ்த் தொண்டும் (செ.குணரத்தினம்), ஈழத்து இலக்கியத்தில் இருபது வருட கணக்குகள் (கந்தையா குணராசா), பண்பாட்டுக் கோலங்கள் (அ.ஸ.அப்துஸ்ஸமது), மட்டக்களப்பின் கிராமியக் கலைகள் (எஸ்.எதிர்மன்ன சிங்கம்), மலையகத்தில் சிறுகதை (தெளிவத்தை ஜோசப்), மொழிபெயர்ப்புக் கலை-சில அனுபவங்கள் (கே.கணேஷ்) ஆகிய தலைப்புகளில் இவ்வாய்வுக் கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 24888).

### 12760

**நாவலப்பிட்டி பிரதேச சாகித்திய விழா மலர்: 14.08.1993.** நாவலப்பிட்டி பிரதேச சபை. நாவலப்பிட்டி: பிரதேச சபை, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1993. (கொழும்பு 12: லங்கா பப்ளிஷிங் ஹவுஸ், திலகா குரூப், 257, டாம் வீதி).

(52) பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 27x21 சமீ.

நாவலப்பிட்டி கதிரேசன் கனிஷ்ட வித்தியாலயம், நாவலப்பிட்டி தமிழ் கலாச்சார மண்டபம் ஆகியவற்றில் 14.8.1993 அன்று நடைபெற்ற நாவலப்பிட்டி பிரதேச சாகித்திய விழாவையொட்டி வெளியிடப்பட்ட சிறப்புமலர். இதில் சாகித்திய விழா கீதம் (கவிஞர் ம.சண்முகநாதன்), தமிழின் இனிமை (க.சுப்பிரமணியம்), உயர்ந்த மனிதன் (அந்தனி ஜீவா), இலக்கியச் செம்மல் சிவகுருநாதன் ஒரு யுகம் (மேமன் கவி), நாவல் நகர் வளர்த்த தமிழ் (தமிழோவியன்), மலையகவாழ் மக்களும் வழிபாடு வகைகளும் (செ.தமிழ்ச் செல்வன்), சமூக மக்களிடையே ஒரு கண்ணோட்டம் (சித்தி பரீடா மொஹம்மட்), நாட்டாரியல்-வசையும் வாழ்வும் (சு.முரளிதரன்), நாட்டாரியலும் பாரம்பரியமும் (பெ.ராமானுஜம்), சடங்குகள் (செல்வி.தா.பத்மா), நாட்டார் பாடல்கள் - (ஐ.கோபாலகிருஷ்ணன்), நாட்டார் இயல்பு (எஸ்.இராமையா), செங்கரும்பின் சுவையைவிட சுவைமிகு தாலாட்டு : தாயின் உணர்ச்சி வெள்ளம் (கவிஞர் எஸ்.பி.தங்கவேல்) ஆகிய படைப்பாக்கங்கள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 28293. நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தின் சேர்க்கை இலக்கம் 003173).

### 12761

**நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு நினைவுமலர்.** பொ.பூலோகசிங்கம் (பதிப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றம், யாழ்ப்பாணக் கிளை, 1வது பதிப்பு, ஜனவரி 1974. (அச்சக விபரம் தரப்படவில்லை).

vi, 158 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x18 சமீ.

அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றத்தின் இலங்கைக் கிளையின் தலைவர் பேராசிரியர் சு. வித்தியானந்தன், பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, பொ. பூலோகசிங்கம் ஆகியோரின் உரைகள் வாழ்த்துக்களுடன், The Tamils in Ceylon (S.Pathmanathan), யாழ்ப்பாணத்து ஆரியச் சக்கரவர்த்திகள்: குல விருதுகளும் சின்னங்களும் (சி. பத்மநாதன்), வன்னி வீரர் (வே.சுப்பிரமணியம்), A True Patriot & Freedom fighter (S.Thommanupillai), The Tamils of Ceylon under Western Rule (B. Bastiampillai), The Indian Tamils of Ceylon (B.Bastiampillai), சுதந்திர இலங்கையின் பிரதிநிதிகள் சபையில் தமிழர் பிரதிநிதித்துவம் (அ.சிவராசா), இலங்கையில் தமிழ்ச் சாசனவியல் ஆராய்ச்சியின் வளர்ச்சி (செ. குணசிங்கம்), The Laws applicable to some Tamil Speaking communities in Sri Lanka (T.Nadarajah),The Population Structure of Northern Sri Lanka (P.Balasundarampillai), இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதிகளின் பொருளாதார வளமும் விருத்தியும் (சோ. செல்வநாயகம்), வன்னிப் பிரதேசம் : ஒரு பொருளாதார நோக்கு (மு.சிவலிங்கம்), இலங்கையில் தோட்டப்

பகுதிகளின் கல்வி (சோ.சந்திரசேகரம்), Education and training for Sri Lanka's Industry (Kopalapillai Mahadeva), Tamil Language in Sri Lanka (S.Suseendirarajah),The Adjectival system in Ceylon Tamil: A Grammatical Analysis (S.Thananjayarajasingam), இலங்கைத் தமிழ்ச் சாசன வழக்காறுகள் (ஆ.வேலுப்பிள்ளை), நாவலர் நிலைநாட்டிய சாதனைகள் (சு.வித்தியானந்தன்), விபுலாநந்த அடிகள் (ஈழவேந்தன்), நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் (வி.சிவசாமி), ஈழத்துத் தமிழ் இலக்கியம் (பொ. பூலோகசிங்கம்), ஈழத்துத் தமிழ்க் கவிதை வளர்ச்சி (சி.தில்லைநாதன்), புதிய ஈழத்துத் தமிழ்க்கவிதை (க.கலாபரமேஸ்வரன்), ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகளிற் சமுதாயநோக்கு (க.அருணாசலம்), ஈழத்துத் தமிழ் நாவல் இலக்கியம் (நா. சுப்பிரமணிய ஐயர்), சிறுவர் இலக்கியம் (க.நவசோதி), மன்னார்ப் புலவர்கள் (ம.பெஞ்சமின் செல்வம்), மலையகத்தார் புதுமைத் தமிழ் இலக்கியம் படைத்த வரலாறு (சி.வி.வேலுப்பிள்ளை), ஈழத்து இலக்கண முயற்சிகள் (பண்டிதர் க. வீரகத்தி), A Brief survey of some English Translations by Ceylon Tamil Writers (V. Sivarajasingam), ஈழநாட்டில் எழுந்த தமிழ் அகராதிகள் (எஸ்.செபநேசன்), ஈழத்தில் இசைத்தமிழ் வளர்ச்சி (சங்கீதபூஷணம் பி. சந்திரசேகரம்), The Influence of Tamil Dramatic Tradition on Sinhala Theatre (S.Nadarajah), பத்தொன்பதாம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ் வளர்ச்சி (பொ.பூலோகசிங்கம்), ஈழத்தில் புதுக்கவிதையின் தொடக்க காலம் (செ.யோகராசா), ஈழத்துத் தமிழ் நாட்டார் இலக்கியம் (இ. பாலசுந்தரம்), யாழ்ப்பாணத்துத் தாலாட்டுப் பாடல்கள் (வட்டுக்கோட்டை மு. இராமலிங்கம்), ஈழத்துக் கிராமிய நாடகங்கள் (சு.வித்தியானந்தன்), கோலம்: சிங்கள கிராமிய நாடகம் (செல்வி வி.முத்துக்குமாரு), ஈழநாட்டில் முருக வழிபாடு (செ.நவரத்தினம்), ஈழத்திற் கண்ணகை வழிபாடு (ம.சற்குணம்), மிருகங்களும் தமிழர் வழிபாட்டு முறையும் (வி.கே.கணேசலிங்கம்), Tamil influence on the Structure of Sinhalese Language (W.S.Karunatillake), Recent Epigraphical Discoveries in the Northern and Eastern Provinces of Sri Lanka (K.Indrapala) ஆகிய ஆய்வுக் கட்டுரைகள் இச்சிறப்பிதழில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 011834).

### 12762

**நானிலம்: கலாசார விழா சிறப்பு மலர் 1997**. மலர் வெளியீட்டுக் குழு. செங்கலடி: கலாசாரப் பேரவை, பிரதேச செயலகம், ஏறாவூர்ப்பற்று, 1வது பதிப்பு, 1997. (மருதமுனை: இளம்பிறை ஓப்செற்).

81 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x18.5 சமீ.

ஏறாவூர்பற்று பிரதேச கலாசாரப் பேரவையினரால் ஆண்டுதோறும் ஏற்பாடு செய்யப்பட்டுவரும் கலாசார விழாவின்போது வெளியிடப்பட்ட சிறப்பு மலர். கலாசார கீதம், முகம் தொலைந்த ஊரில் (கவிதை), கனவு மனிதர்கள் (சிறுகதை), பாடசாலை ஓர் பண்பாட்டு நிறுவனம் (கட்டுரை), வளர்க கலாசாரம் (கவிதை), சிவதொண்டன் நிலையக் கால்கோள், கொம்பு விளையாட்டு, அறுபதிலும் ஐடென்ரி (கவிதை), மட்டக்களப்பு தமிழகத்தில் இருந்து எறாவூர்ப்பற்றின் பங்கு, பழைய செஞ்சொற் செல்வம், நவீன தமிழ் இலக்கியத்தின் வித்துக்களும்

வளர்ச்சியும், ஊரும் பெயரும், சர்வதேச மின்னணு வலையமைப்பு (இன்டர்நெட்), கலைஞர் கௌரவம், நினைவு வானில், விழா இனிக்க, கலாசார விழா 1997 போட்டி முடிவுகள் ஆகிய 17 தலைப்புகளில் ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன. மலர் வெளியீட்டுக் குழுவில் ந.ஸ்ரீகரன், பி.விநாயகமூர்த்தி, வி.உதயகுமார், எஸ். சுதாஜினி, த.சேனாதிராஜா, அ.ச.பாய்வா ஆகியோர் பணியாற்றியிருந்தனர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 22155).

## 12763

**பிரதேச சாகித்திய விழா 1997: சிறப்பு மலர்**. மலர்க்குழு. மட்டக்களப்பு: பிரதேச செயலகம், மண்முனைப்பற்று, ஆரையம்பதி, 1வது பதிப்பு, 1997. (அக்கரைப்பற்று: செலெக்ஷன் ஓப்செட்).

xii, 48 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x17.5 சமீ.

மண்முனைப் பிரதேசத்தின் இலக்கியப் பாரம்பரியம் (ஆரையூர் அமரன்), மண்முனைப்பற்றுப் பிரதேசத்தின் பாரம்பரியக் கலைகள் (ஆரையூர் இளவல்), நாட்டு வைத்தியம் சொதிடம், மாந்திரீகம் (மூனாக்கானா), மண்முனைப்பற்று பிரதேச முஸ்லிம்களின் சடங்கு முறைகள் (ஐ.எம்.சரீப்), மண்முனைப்பற்று பிரதேச நவீன இலக்கிய முயற்சிகள் (த.மலர்ச்செல்வன்), கவனிக்கப்படாத கவிதைப் பாரம்பரியம் (செ.யொகராசா), துயரில் தோய்ந்த முகங்கள் (த. மலர்ச்செல்வன்), மட்டக்களப்பு-கோவிற்குளம் புராதன ஸ்ரீ காசிலிங்கேஸ்வரர் கோவில் சாற்றுகவி (சிவ.விவேகானந்த முதலியார்), மட்டக்களப்பு-கோவிற்குளம் புராதன ஸ்ரீ காசிலிங்கேஸ்வரர் ஆலயம் வரலாற்றுச் சுவடுகள் (சிவ. விவேகானந்த முதலியார்) ஆகிய படைப்பாக்கங்கள் இம்மலரில் இடம்பெற்றுள்ளன. இம்மலருக்கான தயாரிப்புக் குழுவில் வெ.தவராஜா, காசபதி நடராசா, க. செல்லத்தம்பி, ஜனாப் ஏ.எம்.ஆதம் அலி, மு.கணபதிப்பிள்ளை, மா.சதாசிவம் ஆகியோர் பணியாற்றியுள்ளனர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 22819).

## 12764

**புதுமை இலக்கியம்: இலக்கியப் பேரரங்கு சிறப்பு மலர் 1996**. பிரேம்ஜி ஞானசுந்தரன் (நிர்வாக ஆசிரியர்), என்.சோமகாந்தன் (பொறுப்பாசிரியர்). கொழும்பு 11: இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம், 340, செட்டியார் தெரு, 1வது பதிப்பு, ஜுலை 1996. (கொழும்பு 2: அரசன் அச்சகம்).

(20), 21-131, (9) பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25.5x19 சமீ.

1996 ஜுலை 5-7 திகதிகளில் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற இலக்கியப் பேரரங்கின் நினைவாக வெளியிடப்பட்ட புதுமை இலக்கியம் சஞ்சிகையின் சிறப்பிதழ் இது. என்.சோமகாந்தனை செயலாளராகக் கொண்டியங்கிய இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் ஏற்பாடு செய்திருந்த இப்பேரரங்கிற்கு ஈழத்தின் பிரபல எழுத்தாளர்களுடன், இந்தியாவிலிருந்து

வல்லிக்கண்ணன், பொன்னீலன், தாமரை.சி.மகேந்திரன் முதலானோரும் பங்கேற்றிருந்தனர். ஆய்வரங்கிற்குத் தலைமை தாங்கியவர் பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்களாவார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 16933. நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தின் சேர்க்கை இலக்கம் 053285).

### 12765

**புதுமை இலக்கியம்: பாரதி நூற்றாண்டு முன்னோடி மலர், 1956-1981.** என். சோமகாந்தன், லெ.முருகபூபதி (மலர்க் குழு). கொழும்பு 5: இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்க வெளியீடு, 215 G, 1/1, பார்க் வீதி, 1வது பதிப்பு, நவம்பர் 1981. (கொழும்பு 10: ருகுணு பிரின்டர்ஸ், 40/4 மாளிகாவத்த வீதி).

(8), 96 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 26x19 சமீ.

எழுத்தாளர் கீதம் (அ.ந.கந்தசாமி), பாரதி நடமாடிய பல நாட்கள் (இளங்கீரன்), உலக எழுத்தாளர்களுடன் 1வது மாநாடு (எச்.எம்.பி.முஹிதீன்), பிரம்மாக்களுடன் தாஷ்கந்தில் (பிரேம்ஜி), உலகத் தமிழ் எழுத்தாளர் மாநாடு (சில்லையூர் செல்வராசன்), உலக இலக்கியத்தில் பங்கேற்க ஏதுவாய் (க.கைலாசபதி), புதுமைப்பித்தன் இல்லத்தில் (பத்மா சோமகாந்தன்), இரண்டு அணிகள் உருவாகின (கா.சிவத்தம்பி), கவிதை பிறந்த கருங்கொடியூரில் (அ.ஸ.அப்துஸ்ஸமது), இனவாதிகளுக்கு மத்தியில் (நீர்வை பொன்னையன்), தமிழர் தலைநகரில் அறிஞருக்கு கௌரவம் (என்.சோமகாந்தன்), தேசியமும் ஒருமைப்பாடும் (மு.கனகராசன்), இலங்கை ஓரின நாடல்ல (லெ.முருகபூபதி), தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை (செ.மாணிக்கவாசகர்), 12 அம்சத் திட்டம் அமுலாகியிருந்தால் (ராஜ ஸ்ரீகாந்தன்), நாவலர் இயக்கம் (இ.முருகையன்), கூட்டுறவுப் பதிப்பகம் (காவலூர் ராசதுரை), கலை அரங்கில் (அந்தனி ஜீவா), காலச் சுவடுகள் (சபா ஜெயராசா), பாரதியார் நூற்றாண்டு விழா(ஆசிரியர் குழு) ஆகிய படைப்பாக்கங்கள் இவ்விதழில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 18973. நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தின் சேர்க்கை இலக்கம் 009329).

### 12766

**மட்டக்களப்புப் பிரதேசச் சாகித்திய விழா நினைவு மலர் 1993.** சா.இ.கமலநாதன் (தொகுப்பாசிரியர்). மட்டக்களப்பு: மட்டக்களப்புப் பிரதேசச் சாகித்திய விழா அமைப்புக் குழு, 1வது பதிப்பு, ஆவணி 1993. (மட்டக்களப்பு: வளர்மதி அச்சகம்).

(14), 80 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x19 சமீ.

மட்டக்களப்பில் 1993 ஆவணி 9ம், 10ஆம் திகதிகளில் நடைபெற்ற பிரதேச சாகித்திய விழாவின் நினைவுச் சின்னமாக இம்மலர் வெளிவந்துள்ளது. பாரத அம்மானை, 16ஆம் நூற்றாண்டு மட்டக்களப்பு, அரங்கநாயகி, மட்டக்களப்புத் தமிழும் மலையாளமும், மட்டக்களப்பின் நாடக அரங்கம், கூரைமுடிப் பாரம்பரியம் முக்குகர் வரலாறு எனப் பல்வேறு விடயங்களை ஆய்வுக்குட்படுத்தி

*இம்மலரில் கட்டுரைகளும் சில கவிதைகளும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 25175).*

## 12767

**மத்திய மாகாண தமிழ் சாகித்திய விழா 2000 சிறப்பு மலர்.** *சாரல்நாடன் (இதழாசிரியர்). கண்டி: மத்திய மாகாண கல்வி (தமிழ்) கைத்தொழில் கால்நடை அபிவிருத்தி உணவு வர்த்தகம் வாணிப சுற்றுலாத்துறை இந்துக் கலாசார அமைச்சு, 1வது பதிப்பு, 2000. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளூமெண்டால் வீதி).*

*(12), 13-98 பக்கம், அட்டவணைகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x19 சமீ.*

*மத்திய மாகாண கல்வி (தமிழ்) கைத்தொழில் கால்நடை அபிவிருத்தி உணவு வர்த்தகம் வாணிப சுற்றுலாத்துறை இந்துக் கலாசார அமைச்சினால் ஒழுங்கு செய்யப்படும் மத்திய மாகாண தமிழ் சாகித்திய விழா மலையகப் பிரதேசத்தில் எழுச்சியுடன் ஆண்டுதோறும் கொண்டாடப்படுவதுண்டு. அவ்வகையில் 2000ஆம் ஆண்டு இடம்பெற்ற நிகழ்வினையொட்டி வெளியிடப்பெற்ற இம்மலரில் மலையக மக்களின் அடையாளங்கள் (மா.செ.மூக்கையா), இருபதாம் நூற்றாண்டில் மலையக மக்கள் (சோ.சந்திரசேகரன்), பெருந்தோட்ட மக்களும் சமூக நலன் சேவைகளும் (மு.சின்னத்தம்பி), பெருந்தோட்டப் பெண்கள் (லலிதா நடராஜா), தோட்ட லயங்களும் கொற்றேஜ் வீடுகளும் (நா.வேல்முருகு), இருபத்தோராம் நூற்றாண்டில் மலையகத் தமிழரின் அரசியல் எதிர்காலம் (அம்பலவாணர் சிவராஜா), மலையகக் கல்வி (தை.தனராஜ்), மலையகமும் ஆசிரியர் கல்வியும் (எஸ்.முரளீதரன்) ஆகிய எட்டு படைப்பாக்கங்கள் இம்மலரில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 39878).*

## 12768

**மத்திய மாகாண தமிழ்மொழித் தின விழா மலர் 1993.** *தமிழ் மொழித்தின விழா செயற்குழு. ஹட்டன்: மத்திய மாகாண தமிழ்மொழித்தின விழா செயற்குழு, 1வது பதிப்பு, ஜுலை 1993. (ஹட்டன்: யுனிவர்சல் பிரின்டர்ஸ்).*

*(36) பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x18 சமீ.*

*மலையகத்தில் ஹட்டன் நகரில் 4.7.1993 அன்று நடந்த மத்திய மாகாண தமிழ்மொழித்தின விழாவின்போது வெளியிடப்பட்ட சிறப்பு மலர். பெரும்பாலும் ஆசியுரைகள், வாழ்த்துரைகளுடன் விளம்பரங்களுக்கு முன்னுரிமை அளிக்கப் பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 34616).*

### 12769

**மலையருவி: சிறப்புமலர்.** தமிழவேள் க.இ.க.கந்தசுவாமி (இதழாசிரியர்). கொழும்பு 6: இலக்கியக்குழு, கொழும்புத் தமிழ்ச் சங்கம், இல.7, 57ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, 1994. (வத்தளை: வத்தளை பிரின்டர்ஸ், 17/10, நீர்கொழும்பு வீதி).

106 பக்கம், அட்டவணை, புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x18.5 சமீ.

மலையக மாணவர்களுக்காக 1993ஆம் ஆண்டு நிகழ்த்தப்பட்ட நாவன்மை, மொழித்திறன் கட்டுரைகள், கவிதைகள் எழுதும் தமிழ்த்திறன் தேர்வுகள் தொடர்பான சிறப்பு மலர் இதுவாகும். இதில் முன்னுரை, கொழும்பு தமிழ்ச் சங்க வரலாறும் பணிகளும், சிறப்புச் செய்திகள், மாணவர் நல்லுரைகள், மாணவர் எழுத்துரைகள், மாணவர் கருத்துரைகள், மாணவர் பாமலர்கள், மாணவர் சிந்தனையுரைகள், மலையக மாணவர் தமிழ்த்திறன் தேர்வுப் பெறுபேறுகள், மலையக மாணவர் தமிழ்த் தேர்வுகளில் பரிசில் பெற்றவர் குறிப்புகள், மலையக மாணவர் தமிழ்த் தேர்வுகளும் விதிகளும், மலையக மாணவர் தமிழ்த்திறன் தேர்வுகள் அட்டவணை, நிகழ்ச்சி நிரல், நன்றிக்கும் பாராட்டுக்கும் உரியவர்கள் ஆகிய 15 தலைப்புகளில் இம்மலர் தொகுக்கப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 28208).

### 12770

**மேல் மாகாணத்தின் இரண்டாவது தமிழ் சாகித்திய விழா 2010: சிறப்பு மலர்.** விசு கருணாநிதி (மலராசிரியர்). மேல் மாகாணம்: போக்குவரத்து, விளையாட்டு, இளைஞர் விவகார, கலை கலாசார அலுவல்கள் கூட்டுறவு அபிவிருத்தி, உணவு வழங்கலும் விநியோகமும் மற்றும் கிராம அபிவிருத்தி அலுவல்களுக்கான அமைச்சு, 1வது பதிப்பு, 2010. (கொழும்பு: ஏ வன் பிரின்டர்ஸ்).

(50) பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 29x21 சமீ.

இச்சிறப்பு மலரின் மலர்க்குழுவில் எஸ்.இராஜேந்திரன், ராதாமேத்தா, தெளிவத்தை ஜோசப், ரஞ்சித் ஜெயகர், இதயநிலா சுகன்ஜி ஆகியோர் இணைந்து பணி யாற்றியுள்ளனர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 49426).

**மேலும் பார்க்க: 12321**

## 894.8(1) தமிழ்க் கவிதைகள்

### 12771

**அநுபவங்களும் அநுமானங்களும்: கவிதை நூல்.** இரா.ஜெயக்குமார். உரும்பிராய்: கவிஞர் இரா.ஜெயக்குமார், 68/8, சிவன் வீதி, உரும்பிராய் கிழக்கு, 1வது பதிப்பு, பெப்ரவரி 2018. (யாழ்ப்பாணம்: வைரஸ் கிரப்பிக்ஸ், இணுவில்).

xii, *96 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 300., அளவு: 21*x*14.5 சமீ.*, ISBN*: 978-955-43965-4-8.*

இரா.ஜெயக்குமார், குப்பிழானைப் பிறப்பிடமாகக் கொண்டவர். தற்போது உரும்பிராயில் வசித்து வருகிறார். கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் பயிற்சிபெற்ற ஆசிரியராகிக் கல்வித்துறையில் இணைந்து சேவையாற்றி வருகின்றார். யாழ்ப்பாணத்து ஊடகங்களில் அவ்வப்போது இவரது கவிதைகள் பிரசுரமாகியுள்ளன. இவரது புனைபெயர் "மேகதூதன்" என்பதாகும். இந்த நூலில் "தமிழே வாழ்க" என்ற கவிதை தொடங்கி "நானும் கவிதையும்" என்ற கவிதை ஈறாக 55 கவிதைகளைத் தொகுத்து வழங்கியிருக்கிறார்.

## 12772

**ஆயிரம் கவிஞர்கள் கவிதைகள் (32 நாடுகள், 1098 கவிஞர்கள்).** யோ.புரட்சி (தொகுப்பாளர்), யமுனா நித்தியானந்தன் (பதிப்பாசிரியர்). முல்லைத்தீவு: செல்லமுத்து வெளியீட்டகம், வள்ளுவர்புரம், விசுவமடு, 1வது பதிப்பு, ஜனவரி 2017. (கொழும்பு 13: சாய் அச்சகம், இல. 2, இரட்ணம் வீதி).

*1861 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 3500., அளவு: 30*x*22 சமீ.*, ISBN*: 978-955-4096-00-4.*

இந்தியா, தமிழ்நாட்டின் 32 மாவட்டங்கள் மற்றும் இந்திய பிற மாநிலங்கள், இலங்கையின் அனைத்து பிரதேசங்கள் என்பனவற்றின் கவிஞர்களுடன், அமெரிக்கா, அவுஸ்திரேலியா, அயர்லாந்து, பஹ்ரைன், மியன்மார், கனடா, சீனா, டென்மார்க், துபாய், ஈரான், இங்கிலாந்து, பிரான்ஸ், ஜேர்மனி, ஹொங்கொங், இந்தோனேசியா, இத்தாலி, குவைத், மலேசியா, நெதர்லாந்து, நியூசிலாந்து, நோர்வே, போர்த்துக்கல், கட்டார், ரஷ்யா, சிங்கப்பூர், சவூதி அரேபியா, சுவிட்சர்லாந்து, தாய்லாந்து, தைவான், தென் ஆபிரிக்கா ஆகிய நாடுகளைச் சேர்ந்த 1098 கவிஞர்கள் பற்றிய குறிப்புகள், புகைப்படங்கள் சகிதம், அவர்களது மாதிரிக் கவிதைகளும் தேடித் தொகுக்கப்பெற்றுள்ளன. ஈழத்துக் கவிதைத் துறையில்அதிக செலவில் பெருமெடுப்பில் விழாக்கண்ட உலகத் தமிழர்களின் கவிதைத் தொகுப்பு என்பது குறிப்பிடத்தக்கது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 261932CC).

## 12773

**ஆரண்ய வாசம்: கவிதைத் தொகுப்பு.** பாகீரதி கணேசதுரை (புனைபெயர்: மாவை பாரதி). தெல்லிப்பழை: கலை இலக்கியக் களம், 1வது பதிப்பு, செப்டெம்பர் 2016. (சுன்னாகம்: கிருஷ்ணா பிரின்டர்ஸ், வைத்திய கலாநிதி சுப்பிரமணியம் வீதி).

xiv, *102 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 250., அளவு: 20.5*x*15 சமீ.*, ISBN*: 978-955-43956-0-2.*

72 கவிதைகளைக் கொண்ட இக்கவிதைத் தொகுதி இளையோருடன், இறை யோருடன், உலகோருடன், உணர்வோருடன் ஆகிய நாலு பிரிவுகளின்கீழ்

பிரித்துத் தரப்பட்டுள்ளது. சிறுவர்களுக்கேற்ற 29 கவிதைகளை "இளையோருடன்" என்ற முதலாவது பிரிவு உள்ளடக்குகின்றது. "இறையோருடன்" என்ற இரண்டாம் பிரிவில் 16 பக்திப் பாமாலைகள் இடம்கொண்டுள்ளன. "உலகோருடன்" என்ற மூன்றாவது பிரிவில் ஆச்சார்ய தேவோபவ, சரண் புகுந்தாள், சரணாலயம், ஐந்திணை ஒழுக்கம், பொலியோ பொலி, விண்ணப்பம், அலைகளின் மேலே, மகாஜனத் தாய், நூற்றாண்டும் கடந்த அன்னை, பாராட்டும் தாயானவள், ஞானசாரதி, வளர்க சிங்கபுரி ஆகிய பன்னிரு கவிதைகள் இடம்பெற்றுள்ளன. "உணர்வோருடன்" என்ற நான்காவது பிரிவில் பிரபஞ்ச கீதம், பலர் நடந்த பாதை, மலைத்தேன், இதயமற்ற இரவுகள், கற்களும் பூக்களாகும் என இன்னோரன்ன 17 உணர்வுக் கவிதைகள் இடம்பெற்றுள்ளன.

## 12774

**காதல் வந்த சாலை: காதல் கவிதைகளின் சங்கமம்.** சமரபாகு சீனா உதயகுமார். வல்வெட்டித்துறை: குபேந்திரா பதிப்பகம், கூனன் தோட்டம், சமரபாகு, 1வது பதிப்பு, ஜுன் 2016. (யாழ்ப்பாணம்: அன்றா பிறின்ரேர்ஸ், கஸ்தூரியார் வீதி).

viii, 50 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 200., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-43074-0-7.

இது ஒரு நெடுங்கவிதைத் தொகுதி. காதல்வயப்பட்ட ஓர் இளைஞனின் கவித்துவ அரிதாரம் பூசிய புதுக்கவிதை வடிவிலான தொடர்ச்சியான ஒரு நெடுங்கவிதையாகக் காணமுடிகின்றது. திரைப்படப் பாடல் வரிகளை நினைவூட்டும் வகையிலும் கவர்ச்சியான இளம் பெண்களின் புகைப்படங்களுடனும் ஜனரஞ்சக வெளியீடாக அமைந்துள்ளது. காதல் உணர்வுகளை மிகத்துல்லியமாக வெளிப்படுத்த கவிஞர் முனைந்துள்ளார். ஒவ்வொரு பக்கங்களும் படங்களையும் அவற்றுக்குப் பொருத்தமான கவிதைகளையும் கொண்டதாக அமைந்துள்ளது. (இந்நூல் யாழ்ப் பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 250627CC).

## 12775

**கிளுவம் வேலியும் கிடுகுத் தட்டியும்: கவிதைத் தொகுப்பு.** வேலணையூர் சுரேஷ் (இயற்பெயர்: இராமச்சந்திரன் சுரேஷ்). யாழ்ப்பாணம்: வர்ணம் கிரியேஷன்ஸ், அளவெட்டி, 1வது பதிப்பு, நவம்பர் 2015. (யாழ்ப்பாணம்: நோபிள் பிரின்டர்ஸ், 103, பலாலி வீதி).

xxvii, 100 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-42692-0-0.

பல்வேறு சமூகப் பிரச்சினைகளைத் தனது கவிதைகள் மூலம் வெளிக்கொண்டுவரும் சுரேஷ், அவற்றை கேள்விக்குட்படுத்துகின்றார். முள்ளிவாய்க்கால் அவலத்தை எண்ணிக் கவலையுறும் இக்கவிஞன் "உயிர்விலை" என்ற கவிதையில் அதனை வேதனையுடன் விளக்குகின்றார். நவீன இலத்திரனியல் சாதனங்களால் தொலைந்துபோன எமது வாழ்வு முறையையும் பண்பாட்டு விழுமியங்களையும்கூடக்

கவிஞர் எடுத்துக்காட்டத் தவறவில்லை. வடமாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம் வழங்கும் நன்னூல் விருதினைப் பெற்றது.

## 12776

**தேடலின் வலி (கவிதைகள்).** ரமேஷ் வவுனியன். ஜேர்மனி: ரமேஷ் வவுனியன், 1வது பதிப்பு, ஜனவரி 2017. (வவுனியா: கலைமகள் அச்சகம், இல. 50, சந்தை சுற்றுவட்ட வீதி).

94 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 17.5x12.5 சமீ.

புலம்பெயர் வாழ்வில் ஏற்படும் அவலத்தின் தாக்கத்தினால் உள்ளத்தில் ஏற்படும் உணர்வின் அதிர்வுகளாக இக்கவிதைகள் மலர்ந்திருக்கின்றன. ரமேஷ் வவுனியன் இலங்கையில் வவுனியா நொச்சிமோட்டையில் பிறந்தவர். இவரது பெற்றோர் வீரசிங்க வவுனியன்-கமலநாயகி ஆகியோராவர். தற்பொழுது யேர்மனியில் புலம்பெயர்ந்து குடும்பத்தினருடன் வாழ்ந்து வருகிறார். மாணவனாக இருந்தபோது 1988இல் "தமிழ் மாணவர் நற்பணி மண்றம்" எனும் அமைப்பை இலங்கையில் தோற்றுவித்தார். பின்னர் ஐரோப்பாவிற்குப் புலம்பெயர்ந்து "தமிழ் இணைய வானொலி" எனும் இணைய வானொலியை இரண்டாயிரம் ஆண்டு யேர்மனியில் ஆரம்பித்தார். யேர்மனியிலிருந்து வெளியான "இளைஞன்" சஞ்சிகையின் இணை ஆசிரியராகவும் இருந்தார். கவிஞரான இவர், பல வானொலி நாடகங்களை எழுதி தயாரித்து நடித்துமிருக்கிறார்.

## 12777

**போதிமரக் குயில்: கவிதைத் தொகுப்பு.** அம்பிகை பஞ்சலிங்கம். யாழ்ப்பாணம்: செல்வி அம்பிகை பஞ்சலிங்கம், புனித செபஸ்தியார் வீதி, கோண்டாவில் கிழக்கு, 1வது பதிப்பு, மாசி 2018. (யாழ்ப்பாணம்: சாயி அச்சகம், காங்கேசன்துறை வீதி, கோண்டாவில், இணுவில்).

xii, 90 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 16x11.5 சமீ., ISBN: 978-955-38944-0-3.

"அம்பிகையின் படைப்புகள் -நேர்மை என்ற இலக்கணப் பாதையில் இசைந்து நடப்பவை. சமூகத்திற்கான சமரசங்கள் அவற்றிடம் இல்லை. அந்த நேர்மையே அம்பிகையின் அத்திவாரம். இலக்கணத்தின் அனுபவத்தை, புரிதலை, ஏக்கத்தை, நம்பிக்கையை, எதிர்பார்ப்பை அவர் எப்படிப் புரிந்துகொள்கிறாரோ அப்படியே சொல்ல முயல்கிறார். தமிழ்க் கவிதை எதுகை மோனை என்ற முரட்டுத் தளை களைத் தாண்டி வெகு காலமாயிற்று. இவரது கவிதைகளும் கட்டற்றவை. பொருளாலும் உருவாலும் ஒரு குழந்தை பிறந்து வளர்ந்து குமரியாகின்ற அனுபவத்தை இவரது கவிதைகளும் அப்படியே பிரதிபலிக்கின்றன- சொல் நேர்த்தியிலும் கட்டமைப்பிலும்." (ச.மணிமாறன், புனைந்துரையில்).

## 12778

**மழையில் நனையும் மனசு(கவிதைகள்).** தியத்தலாவ எச்.எப்.ரிஸ்னா. கல்கிசை: பூங்காவனம் இலக்கிய வட்டம், 21E, ஸ்ரீ தர்மபால வீதி, மவுன்ட் லவீனியா, 1வது பதிப்பு, ஒகஸ்ட் 2017. (அச்சக விபரம் தரப்படவில்லை).

*120 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 22x15 சமீ.,* ISBN: *978-955-52975-1-6.*

*தியத்தலாவ எச்.எப்.ரிஸ்னா ஊவா மாகாணத்தைச் சேர்ந்த பெண் கவிஞர். கொழும்புப் பல்கலைக்கழகத்தில் இதழியல் கற்கை நெறியை நிறைவு செய்தவர். கல்வி அமைச்சின் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தில் பணியாற்றுகின்றார். "இன்னும் உன் குரல் கேட்கிறது" என்ற தன் முதல் கவிதைத் தொகுதியை 2012 இல் வெளியிட்டவர். தொடர்ந்து சிறுகதை, சிறுவர் கதை, சிறுவர் பாடல், நூல் விமர்சனம் எனப் பல்வேறு துறைகளிலும் 9 நூல்களை ஏற்கெனவே வெளியிட்டவர். இக்கவிதைத் தொகுதி இவரது பத்தாவது நூலாகும். "என் வாழ்க்கை" முதல் "கவித்துளிகள்" ஈறாக ரிஸ்னாவின் 78 கவிதைகளை இத்தொகுப்பு உள்ளடக்கு கின்றது. தன் கவிதைகளில் அவற்றின் உள்ளடக்கத்துக்கும், உருவத்துக்கும் சமமான முன்னுரிமை வழங்கியுள்ளார். கவிதைகளின் உள்ளடக்கமாக காதல், சோகம், பெண்ணியம், சமூகவியல், சர்வதேசம் எனத் தளங்கள் பரந்து விரிகின்றன. தனது எழுத்துக்களின்மூலம் சமூக மாற்றத்தைத் தூண்ட இவர் முனைவது அவரது சில கவிதைகளில் புலனாகின்றது. பெரிய புள்ள என்ற கவிதையில் தன் பால்ய வயது ஞாபகங்கள் இரைமீட்கப்படுகின்றன. மலைநாட்டிலும் சுனாமி என்ற கவிதை மலையக மக்களின் பொருளாதார வறுமையைப் பாடுகின்றது. சிறகொடிந்த பறவையின் பாடல், குறியீட்டுக் கவிதையாக அமைந்துள்ளது. எதிர்காலக் கனவில் லயித்திருக்கும் ஒரு காதலியின் நினைவுகளாக உடன்பாடுகள் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 62114).*

### 12779

**மனவானின் மழைத்துளிகள்: கவிதைத் தொகுப்பு.** வேலணையூர் சுரேஷ் *(இயற்பெயர்: இராமச்சந்திரன் சுரேஷ்). வேலணை: தாய்சக்தி கலைக்கூடம், புளியங்கூடல், 1வது பதிப்பு, மார்கழி 2016. (கோண்டாவில்: சிவரஞ்சனம் ஒப்செட் பிறின்டேர்ஸ்).*

xviii, *82 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 19.5x11.5 சமீ.,* ISBN: *978-955-42692-2-4.*

*வேலணையூர் சுரேஷ் வழங்கியுள்ள கவிதைகள் கவிநயங்களுடன் மட்டும் நின்றுவிடாமல் தான் சார்ந்த மக்களின் சிந்தனைகளை நேர்வழியில் தூண்டி விடவும் உதவுகின்றன. வாழ்வியலின் யதார்த்தங்களைப் புரிந்துகொண்டு, அவர்களில் பலர் வாழும் பயனற்ற பகட்டு வாழ்விலிருந்து அவர்களைப் பிரித்தெடுத்து, யதார்த்த உலகினுள் கொண்டுசென்று சேர்ப்பதற்கான புதிய பாதையினை இக்கவிதைகள் உயிர்ப்புடன் காட்டமுனைகின்றன. இளைஞர் எழுச்சிக்கு உலக அரங்கில் முன்னர் பெயர்பெற்ற யாழ்ப்பாண மண்ணில் இன்று மலிந்துள்ள இளைஞர்களின் குற்றம் பயில் வாழ்வுமுறைகளைக் கண்டு துயருறும் போக்கும் சில கவிதைகளின் வழியே வருத்துகின்றன.*

**12780**

**விடியலைத் தேடும் இரவுகள் (கவிதைத் தொகுதி).** விவேகானந்தனூர் சதீஸ் (இயற்பெயர்: செல்லையா சதீஸ்குமார்). கிளிநொச்சி: படைப்பாளிகள் உலகம், காவியாலயா, இல. 177, விவேகானந்த நகர் கிழக்கு, 2வது பதிப்பு, சித்திரை 2017, 1வது பதிப்பு, கார்த்திகை 2016. (யாழ்ப்பாணம்: தேவி அச்சகம்).

xvii, 71 பக்கம், தகடுகள், விலை: ரூபா 250., அளவு: 18x12.5 சமீ., ISBN: 978-955-54448-1-1.

போர் முடிவடைந்த ஏழு வருடங்கள் சென்றபின்பும் போரின் நீட்சியாக கொழும்பு புதிய மகஸீன் சிறைச்சாலையில் சிறைவாழ்க்கை வாழ்ந்துவரும் ஒரு கவிஞனின் கவித்தூறல்களின் தொகுப்பு இது. மனித வாழ்வின் சுதந்திர நடமாட்டங்கள் மறுக்கப்பட்டு சிறையில் வாழும் ஒருவனின் சிந்தனைகள் பல கோணங்களில் பன்முகத் தன்மையுடன் இந்த நூலில் 74 கவிதைகளாக வெளிவந்துள்ளன. தான் வாழ்ந்த கரைச்சி பிரதேசத்தின் எழிலை இறை பக்தியுடன் பதிவுசெய்கிறார். சிறையின் கடினத்தன்மையை அந்த நாள், அவலத்தின் பறை ஆகிய கவிதைகள் உரைக்கின்றன. தெரியாது, முரளி, நிலைக்கவில்லை ஆகிய கவிதைகள் சிறைச் சாலையின் சோகத்தை பதிவுசெய்கின்றன. இவரது கவிதைகளில் உளவியல் ரீதியாகவும் பௌதிகரீதியாகவும் அரசியல் கைதிகளின் பாதிப்புக்கள் வெளிப் பட்டுள்ளன.

**மேலும் பார்க்க: 12125,12866**

## 894.8(11) மொழிபெயர்ப்புக் கவிதைகள்

**12781**

**சிறைக் குறிப்புகள்.** ஹோ சி மின் (மூலம்), கே.கணேஷ் (தமிழாக்கம்). தலாத்து ஓயா: கே.கணேஷ், கரந்தகொல்லை எஸ்டேட், 1வது பதிப்பு, ஒக்டோபர் 1973. (கொழும்பு 13: ரெயின்போ பிரிண்டர்ஸ், 231 ஆதிருப்பள்ளித் தெரு).

84 பக்கம், விலை: ரூபா 40., அளவு: 17.5x12 சமீ.

வியட்நாமின் தந்தை என வர்ணிக்கப்படும் தோழர் ஹோசிமின் தனது நாட்டை ஆக்கிரமித்த பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தையும், பின்னர் அமெரிக்க ஏகாதி பத்தியத்தையும் எதிர்த்துப் போராடுவதற்கு தனது நாட்டு மக்களுக்குத் தலைமைதாங்கி இன்றைய சுதந்திர சோசலிச வியட்நாமுக்கு வித்திட்டவர். ஹோசிமின் தலைமையில் தளபதி ஜியாட்பின் நெறிப்படுத்தலில் வியட்நாம் மக்கள் வீரமும், நியாயமும் நிறைந்த விடுதலைப் போராட்டத்தை நடத்தி 1975 இல் சுதந்திர வியட்நாமை உருவாக்கினர். உலகின் அசைக்க முடியாத வல்லரசு எனக் கருதப்பட்ட அமெரிக்கா படுதோல்வியை வியட்நாம் மக்களிடம் சந்தித்தது. ஹோசிமின் சீனாவின் பிற்போக்கு கோமின்டாங் ஆட்சியாளர்களினால் சில காலம் சிறை வைக்கப்பட்டவர். சிறந்த கவிஞரான அவர், சீனச் சிறையில் இருந்து கொண்டு எழுதிய கவிதைகள் ஹோசிமின் சிறைக் குறிப்புகள் என்ற பெயரில் நூலாக வந்து வியட்நாமிய மக்களின் போராட்ட உணர்வுகளுக்கு பெரும்

*உத்வேகத்தைக் கொடுத்தது. ஹோசிமின் கவிதைகள் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்க ஸ்தாபகர்களில் ஒருவரும், சிறந்த மொழிபெயர்ப்பாளருமான கண்டி தலாத்து ஓயாவைச் சேர்ந்த தோழர் கே.கணேஷ் அவர்களால் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு, வெளியிடப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 18939).*

### 12782

**சுதந்திரம்: தென்னாசிய மொழிபெயர்ப்புக் கவிதைகள்.** *கந்தையா ஸ்ரீகணேசன். வவுனியா: வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம், 1வது பதிப்பு, ஜனவரி 2018. (யாழ்ப்பாணம்: குரு பிரின்டர்ஸ், 39/2, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி).*

xxv, *63 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 22*x*14.5 சமீ.,* ISBN: *978-955-42913-0-0.*

*தென்னாசிய நாடுகளினிடையே பொதுவான பண்பாட்டு அம்சங்கள் நிறைய உள்ளன. இந்நாடுகள் காலனித்துவப்பிடிக்குள் அகப்பட்டு தாழ்வுற்று, வறுமை மிஞ்சி, தம் அடையாளங்களைத் தொலைக்கும் அளவுக்குப் போய் மீண்டவை. இக்கவிதைகளை மொழிபெயர்ப்பிலாவது படிக்கும் நாம், இவை தரும் அனுபவம் எமது சொந்த அனுபவங்களுக்குச் சற்றேனும் குறைந்தவை அல்ல என்பதை புரிந்துகொள்ள முடிகின்றது. அப்பொதுமைகளை அந்தந்த நாட்டுக் கவிஞர்களின் படைப்பாக்கங்களிலே காணமுடிகின்றது. மொழிபெயர்ப்பு அனுபவம் மிகப்பெற்ற ஆசிரியர், தென்னாசிய இலக்கிய சார்க் மாநாடுகளில் பங்குபற்றிய வேளையில் தான் சுவைத்து அனுபவித்த கவிதைகளின் மொழிபெயர்ப்புகளையும் புதிதாக எழுதிச் சேர்த்த மொழிபெயர்ப்புக் கவிதைகளையும் சேர்த்து 30 கவிதைகளை இந்நூலில் தந்துள்ளார். ஆங்கில மொழியில் தான் வாசித்த மூலக்கவிதைகளையும் இந்நூலில் இணைத்துள்ளார். மொழிபெயர்ப்புத்துறையில் ஆர்வம் உள்ளவர் களுக்கும் இலக்கிய ஆர்வலர்களுக்கும் பயனுள்ள நூல். இணுவிலைப் பிறப்பிட மாகக் கொண்ட கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஆங்கில மொழி கற்பித்தல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர்.*

## 894.8(2) தமிழ் நாடகங்கள்

### 12783

**ஆனை கட்டிய அரியாத்தை (நாடகம்).***அகளங்கன் (இயற்பெயர்: நா.தர்மராஜா). வவுனியா: வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம், 1வது பதிப்பு, மே 2017. (வவுனியா: வாணி கணனிப் பதிப்பகம், இல. 85, கந்தசுவாமி கோவில் வீதி).*

*73 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 21*x*14.5 சமீ.,* ISBN: *978-955-7654-14-0.*

*தனது மனைவியின் இறந்த உடலை எரிக்கின்ற சிதையில் பாய்ந்து உடன்கட்டைஏறி உயிரை மாய்த்துக்கொண்ட ஒரு கதையை ஆசிரியர் நாடகமாக்கித் தந்துள்ளார். இதன் மூலக்கதை செ.மெற்றாஸ் மெயில் தொகுத்து வெளியிட்ட வேலப்பணிக்கர் ஒப்பாரி என்ற நூலில் உள்ளது. வன்னி மண்ணின் பண்பாட்டைச் சிறந்த முறையில் காட்சிப்படுத்தும் நோக்கில் முன்னர் இதே தலைப்பில் வானொலி*

நாடகமாக எழுதியிருந்தார். தற்போது அதனை மேடை நாடக வடிவிற்கு மாற்றியுள்ளார். குறும்படமாகத் தயாரிக்கும் வகையில் குறிப்புகளையும், நாட்டார் பாடலின் அடிப்படையில் ஆனை கட்டிய அரியாத்தை கதையையும் இந்நூலில் சேர்த்துள்ளார். வேலப்பணிக்கர் ஒப்பாரியும் நூலின் பிற்பகுதியில் சேர்க்கப் பட்டுள்ளது.

## 12784

**சாபமும் சக்கரவர்த்தியும்: நாடகங்கள்.** பாகீரதி கணேசதுரை (புனைபெயர்: மாவை பாரதி). சென்னை 600 094: பூவரசி வெளியீடு, 20/2, சக்காரியா காலனி, முதலாவது தெரு, சூளைமேடு, 1வது பதிப்பு, மே 2016. (சென்னை 600 094: பூவரசி வெளியீடு, 20/2, சக்காரியா காலனி, முதலாவது தெரு, சூளைமேடு).

104 பக்கம், விலை: இந்திய ரூபா 120., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-93-81322-37-6.

மைந்தனின் மாட்சி (காத்தவராயன் சிந்துநடைக் கூத்தின் வடிவில் அமைந்த விசேட கூத்து), சரணாலயம் (மூவேந்தர் கரங்களில் தமிழன்னை வளர்ந்ததையும் மன்னர்களின் போரில் அவள் கலங்கித் துடித்ததையும் பின் அனைவரும் இணைந்து தமிழ் வளர்த்த வரலாற்றையும் கூறும் நாட்டிய நாடகம்), அறம் வளர்ப்போம் (சிறுவர் நாடகம்), துர்க்காதேவி சரணம் (சமூக நாடக வரிசையில் துர்க்காபுரம் தேவஸ்தானத்தின் அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் மறைவையொட்டி இல்லச்சிறார்கள் அவரது இழப்பினை தாங்காது தவித்த காலகட்டத்தில் ஆற்றுப்படுத்தல் வடிவமாக உருவாக்கப்பட்டது), எமதர்மராஜன் நிவாரணம் பெறுகிறார் (போர்க்காலச் சூழலிலே இலங்காபுரி வந்த நாரதரும் எமதர்மராஜனும் மேற்கொண்ட யாத்திரையில் அனைத்தும் இழந்து நிவாரணம் கோரி வைகுண்டம் சென்ற கதை நகைச்சுவையாகச் சொல்லப்படுகிறது), மேற்கில் தோன்றும் உதயம் (ஒரு சிறுவனின் மனதில் எழும் மண்பற்றின் வீரியம் பற்றிக் கவிதை நடையில் கூறுவது), நிழலைத் தேடும் நிஜங்கள் (சிறுவர் துன்புறுத்தலுக்கெதிரான பிரச்சார வடிவமாக சிறுவர் பாதுகாப்புச் சபையின் பரப்பரைக்கேற்ப தயாரிக்கப்பட்டது), சாபமும் சக்கரவர்த்தியும் (இராமன் வனம் புகுந்த காட்சியை விளக்கும் பா நாடகம்), தலைவன் வரவுக்காய் (சங்ககாலத்தின் தமிழர் சால்பாகிய ஐந்திணை ஒழுக்கம் பற்றி இடம்பொருள் தொழில்ரீதியாகச் சுட்டிநிற்கும் நாட்டிய நாடகம்), தென்றலே மெல்ல வீசு (போர்க்காலப் படைப்பான இந் நாட்டிய நாடகம், வீரமறத் தமிழன்னையின் வீர உணர்வையும் தமிழரின் இனிய காதல் உணர்வையும்கொண்டு புனையப்பட்டது), விபரீத ஆசை (சிறுவர் நாடகம்), அத்யந்த பக்தி (இசை நாடக வடிவம்)ஆகிய பன்னிரு நாடகங்கள் இத்தொகுதியில் இடம்பெற்றுள்ளன.

## 12785

**நா.சுந்தரலிங்கத்தின் விழிப்பு (நாடகம்).** நா.சுந்தரலிங்கம் (மூலம்), அம்மன்கிளி முருகதாஸ், கயிலைநாதன் திலகநாதன் (பதிப்பாசிரியர்கள்). வல்வெட்டித்துறை: ஜனனி வெளியீட்டகம், புது வளவு, பொலிகண்டி, 1வது பதிப்பு, டிசெம்பர் 2007. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, ½, டாம் வீதி).

75 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 21x14.5 சமீ.

க.பொ.த. சாதாரண தரத்தில் நாடகமும் அரங்கியலும் பாடத்திற்கு அமரர் நா.சுந்தரலிங்கத்தின் "விழிப்பு" ஒரு பாடமாக ஆக்கப்பட்டுள்ளது. சிவானந்தன், சுஹைர் ஹமீட், முருகையன், ம.சண்முகலிங்கம் போன்றோருடன் நா.சுந்தரலிங்கம் சேர்ந்து ஒரு காலகட்டத்தில் நாடகங்களை இயக்கியிருந்தார். நாடறிந்த நடிகர், நெறியாளர், நாடக எழுத்தாளர் எனப் பெயரெடுத்த அவர் "அபசுரம்" என்ற அபத்த நாடகத்தையும் எழுதியிருக்கிறார். அவரது "விழிப்பு" என்ற நாடகம் சமூகத்தில் காணப்பட்ட வேலையில்லாப் பிரச்சினையைப் பேசிய நாடகமாகும். 1969இல் எழுதப்பட்ட இந்நாடகம், கூத்தாடிகள் அமைப்பினரினால் முதல் மேடையேற்றத்தை கொழும்பு, ஹவ்லொக் நகர், லும்பினி கலையரங்கில் 21.11.1975இல் கண்டது. வேலையில்லாப் பட்டதாரியான சந்திரன், அரசாங்க உயர் அதிகாரியான அவனது தந்தை கார்த்திகேசு, சந்திரனின் பெரிய தகப்பன் சிவக்கொழுந்து, வசதியான குடும்பத்தில் பிறந்த சந்திரனின் மனைவி செல்வி, சந்திரனின் மாமன் சிற்றம்பலம் ஆகியோரை பிரதான பாத்திரங்களாகக் கொண்டு நாடகம் நகர்த்தப்படுகின்றது. இந்நாடகத்திற்கான பாடல்களை கவிஞர் இ. முருகையன் எழுதியிருந்தார். இந்நாடகம், க.பொ.த.சாதாரணதர மாணவர்களுக்கு இலங்கைத் தமிழ் நாடக வரலாற்றின் ஒரு காலகட்டத்து நாடகங்களின் பதச்சோறாக விளங்குகின்றது.

## 12786

**பகையாலே உதயமான உறவு: நாடகங்கள்.** இராகி (இயற்பெயர்: இரா. கிருஷ்ணபிள்ளை). காரைதீவு-2 (கிழக்கு மாகாணம்): இரா.கிருஷ்ணபிள்ளை, மலரகம், நடராசானந்தா வீதி, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2008. (காரைதீவு-12: மா.புஷ்பநாதன், நிதுஸ் ஓப்செற் அச்சகம்).

(6), 97 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x14.5 சமீ.

பகையாலே உதயமான உறவு, உயிரினும் மேலது பக்தி, கண்ணன் தூது, பிரிவின் பிரிவு, மதுவுக்கு ஒரு முற்றுப்புள்ளி, உத்தமன், முயற்சி, ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு, நமக்கு நாமே பிரச்சினை, சேற்றிலே ஒரு செந்தாமரை ஆகிய 10 நாடகங் களின் தொகுப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது. கலைப்பட்டதாரியான "பாண்டியூர் இராகி" ஏறத்தாழ ஐம்பதாண்டுகால இலக்கியப் பரிச்சயம் உள்ளவர். ஆசிரியராகப் பணியாற்றி, அதிபராக ஒய்வுபெற்ற இவர் முன்னதாக இராகியின் உறவுகள் (சிறுகதைத் தொகுப்பு), இராகியின் கவிதைகள் (கவிதைத் தொகுப்பு), ஆன்மீகமும் விழுமியங்களும் (கட்டுரைத் தொகுப்பு) ஆகிய நூல்களை எழுதியவர். அரங்கியல் பின்புலத்தில் வளர்ந்த இவரது முதலாவது நாடகம் "மன்னிப்பு" என்ற பெயரில்

கல்முனை பாத்திமா கல்லூரியில் மேடையேறியது. அப்போது இவர் எட்டாம் ஆண்டில் கல்வி பயின்று வந்தமை குறிப்பிடத்தக்கது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 47446).

## 12787

**பரிசுபெற்ற நாடகங்கள்: வடமோடி நாட்டுக்கூத்துகள்.** முருங்கன் செ.செபமாலை (புனைப்பெயர்: கலைஞர் குழந்தை). மன்னார்: நானாட்டான் பிரதேச கலாச்சாரப் பேரவை, உதவி அரசாங்க அதிபர் பணியகம், நானாட்டான், 1வது பதிப்பு, 1997. (மன்னார்: வாழ்வுதயம் அச்சகம்).

(9), 100 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 21.5x15 சமீ.

மன்னார் மாவட்டம், நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் வசித்து வரும் செபஸ்தியான் செபமாலை அவர்கள் "குழந்தை" எனும் பெயரில் புகழ்பூத்த ஒரு நாடகக் கலைஞர். நாட்டுக்கூத்து, மரபு நாடகங்கள், வில்லுப்பாட்டு, இசை நாடகங்கள், நாடகநெறியாள்கை, கவிதை, பாடல் போன்ற பல்துறைகளிலும் கலையாற்றல் மிக்கவர். 08.03.1940இல் முருங்கனில் பிறந்த செபமாலை, மன்னார் முருங்கன் மகாவித்தியாலயத்தில் பாடசாலைக் கல்வியைப் பெற்றார். யாழ்ப்பாணம் கொழும்புத்துறை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் ஆசிரியர் பயிற்சி பெற்ற இவர், கல்லூரி ஆசிரியராகத் தனது தொழிலை ஆரம்பித்து 40 வருட சேவையின் பின்னர் ஓய்வுபெறும் போது முதலாந்தர அதிபராகப் பதவி வகித்து வந்தார். இவரின் முதல் நாடகம் 1964ஆம் ஆண்டில் மேடையேறியது. 1964ஆம் ஆண்டு இவரால் ஆரம்பிக்கப்பட்டு இன்றுவரை நாடகங்களையும், இதர கலை நிகழ்ச்சிகளையும் வழங்கி வரும் "முத்தமிழ் கலா நாடகமன்றம்" இவரது ஆற்றலுக்கும், உழைப்புக்கும் சாட்சியாக விளங்கிவருகின்றது. இவரது முதல் ஆக்கமான "அறப்போர் அறைகூவல்" எனும் கவிதை இலங்கை வானொலியில் 1963ஆம் ஆண்டு முதலில் ஒலிபரப்பானது. 1998ல் அரச இலக்கிய விழாவில் இவரது "பரிசு பெற்ற நாடகங்கள்" நூலுக்குச் சாஹித்திய விருது வழங்கப்பட்டது. இந்நூலில் "வீரத்தாய்" (புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் கவிதையொன்றை மூலமாகக் கொண்ட நாடகம்), "கல்சுமந்த காவலர்கள்" (தமிழகத்தில் சேர மன்னனின் ஆட்சிக் காலத்தில் கனக விஜயர்கள் கண்ணகி சிலைக்காகக் கல்சுமந்த கதை), "இணைந்த உள்ளம்" (மதன நாட்டு மன்னன் மகள் எழிலரசி, அவளது ஆசிரியர் மணிவண்ணனுடன் கொள்ளும் காதல் அவனைச் சிரச்சேதம் செய்யும் அளவுக்குச் சென்றும் உள்ளங்கள் இணைந்த காதல்கதை), "யார் குழந்தை" (பரிசுத்த வேதாகமத்தில் சாலமன் அரசனின் காலத்தைய இருதாய்கள் ஒரு பிள்ளைக்கு உரிமைகொண்டாடிய வேளை உண்மைத்தாயைக் கண்டறிய மன்னன் சாலமன் கண்ட யுக்தி இங்கு கதையாகின்றது), "வீரனை வென்ற தீரன்" (பரிசுத்த வேதாகமத்தில் சவுல் மன்னனின் ஆட்சியில் வீரனான கோலியாத்தை போரில் வென்ற தாவீதுவின் கதை) ஆகிய ஐந்து நாடகங்களை இந்நூல் கொண்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 30453).

**மேலும் பார்க்க:** *12713*,**12866**

## 894.8(21) மொழிபெயர்ப்பு நாடகங்கள்

### 12788

**ஈடிப்பஸ் வேந்தன்: கிரேக்க நாடகம்.** சொஃவக்கிளிஸ் (கிரேக்க மூலம்), மொழிமாறன் (தமிழாக்கம்). கொழும்பு 11: தேசிய கலை இலக்கியப் பேரவை, வசந்தம், 44, 3வது மாடி, மத்திய சந்தைக் கூட்டுத் தொகுதி, இணை வெளியீடு, சென்னை 600002: சவுத் விஷன், இல. 6, தாயார் சாஹிப் 2ஆவது சந்து, 1வது பதிப்பு, ஜுன் 2000. (சென்னை 600005: மணி ஆப்செட்).

62 பக்கம், விலை: இந்திய ரூபா 30.00, அளவு: 21x13 சமீ.

கிரேக்க நாடகாசிரியர் சொஃவக்கிளிஸ் எழுதிய அவலச்சுவைமிக்க கிரேக்க நாடகம் இது. இந்நாடகத்தின் முக்கியத்துவம் என்னவெனில், பிரபல தத்துவஞானி அரிஸ்ரோற்றில், அவல நாடகத்தின் இலக்கணத்தை வகுப்பதற்கு இந்த நாடகத்தையே முன்மாதிரியாகக் கொண்டார் என்பது வரலாறு. பெரும்பாலான தொல்சீர்க் கிரேக்க அவலங்கள் போலவே சொஃவக்கிளிசின் இந்தப் படைப்பும் விதியின் வலிமையையும் மனிதர்களின் திண்டாட்டங்களையும் உணர்த்துகின்றது. எதிர்காலத்தை முன்கூட்டியே அறியவேண்டும் என்று மனிதர்கள் ஆசைப்படுகின்றனர். தெய்வ வாக்கு, குறி பார்ப்பு, ஆரூடம், முதலானவற்றில் நம்பிக்கை வைக்கின்றனர். இவை மூலம் கிடைக்கும் எதிர் உரைகளால் வருங்காலத்தை வசப்படுத்தி விடலாம் என்று விரும்பி முயல்கின்றனர். ஆனால் இவை எவையும் எதிர்பார்த்த நற்பலனைத் தருவதிற் பெரிதும் வெற்றி தருவதில்லை. இதுவே நாடகத்தின் கருவாகின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 28363).

### 12789

**சொப்ஹொக்கில்சின் கிரேக்க நாடகங்கள்: மூன்றாவது தொகுதி.முதலாவது பகுதி: மூன்று நாடகங்கள்.** சொப்ஹொக்கில்ஸ் (கிரேக்க மூலம்), ஈழத்துப் பூராடனார் (தமிழாக்கம்), எட்வேட் இதயச்சந்திரா (பதிப்பாசிரியர்). கனடா: ஜீவா பதிப்பகம், 1108 Bay Street, Toronto, Ontario M5S 2W9, 1வது பதிப்பு, ஆவணி 1990. (கனடா: ரிப்ளெக்ஸ் அச்சகம், 1365 Midway Blvd, Unit No.24, மிஸிஸாகா L5C 2J5, ஒன்ராரியோ).

xxxvi, 159, xii பக்கம், விலை: கனேடிய டொலர் 20., அளவு: 21x14 சமீ.

ஆதிக் கிரேக்க நாடகத் தொடரில் மூன்றாவது தொகுதியாக வெளிவந்துள்ள இந்த மொழிபெயர்ப்புத் தொகுதியில் கி.மு.496-406 காலப்பகுதியில் வாழ்ந்த கிரேக்கக் கவிஞரான சொப்ஹொக்கில்ஸ் எழுதிய ஈடிப்பசு மன்னன், கொலொனசில் ஈடிப்பசு, அன்ரிகோன் ஆகிய மூன்று நாடகங்களின் தமிழாக்கங்கள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 11316).

### 12790

**யூரிப்பைடசின் நாடகங்கள்: முதலாவது பகுதி.** *யூரிப்பைடஸ் (கிரேக்க மூலம்), ஈழத்துப் பூராடனார் (தமிழாக்கம்), எட்வேட் இதயச்சந்திரா (பதிப்பாசிரியர்). கனடா: ஜீவா பதிப்பகம், 1108* Bay Street, Toronto, Ontario M5S 2W9, *1வது பதிப்பு, ஐப்பசி 1990. (கனடா: ரிப்ளெக்ஸ் அச்சகம், 1365* Midway Blvd, Unit No.24, *மிஸிஸாகா* L5C 2J5, *ஒன்ராரியோ*).

*(24), 224 பக்கம், விலை: கனேடிய டொலர் 20., அளவு: 20.5*x*13.5 சமீ.*

*ஆதிக் கிரேக்க நாடகத் தொடரில் ஐந்தாவது தொகுதியாக வெளிவந்துள்ள இந்த மொழிபெயர்ப்புத் தொகுதியில் கிரெக்கக் கவிஞரான யூரிப்பைடஸின் நான்கு துன்பியல் நாடகங்களின் தமிழாக்கங்கள் இடம்பெற்றுள்ளன. அல்செஸ்ற்றிஸ், மெடியா, ஹீப்போலித்தஸ், ஹெக்கேப் ஆகிய தலைப்புகளில் இந்த நான்கு நாடகங்களும் தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 11318).*

## 894.8(3) தமிழ்க்கவிதை/இசை நாடகங்கள்-காவியங்கள்

### 12791

**காத்தவராயன்: சிந்து நடை நாடகம்.** *சண்முகநாதன் கஜேந்திரன். கனடா: சண்முகநாதன் கஜேந்திரன், கலாலயா வெளியீடு, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2017. (யாழ்ப்பாணம்: மதி கலர்ஸ், முத்திரைச் சந்தி, நல்லூர்).*

xxix, *240 பக்கம், தகடுகள், விலை: ரூபா 500., அளவு: 21.5*x*15 சமீ. ,* ISBN: *978-955-38635-0-8.*

*ஏற்கெனவே உரைகல்(2015), என்ற ஆய்வு நூலையும் வந்தவழி (2016) என்ற கவிதை நூலையும் எழுதியவர் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் உயர்நிலைக் கல்விபெற்ற ஆசிரியரான சண்.கஜேந்திரன். புலம்பெயர்ந்து கனடாவில் வாழும் இவர் தாயகத்தில் சிறுவிளான் கிராமத்தில் பெறப்பட்ட மூலப்பிரதியை அடிப்படையாகக் கொண்டு, நவீன சமூக நோக்கின் அடிப்படையில் சிற்சில மாற்றங்களுடன் காத்தவரான் கதையை சிந்துநடை நாடகமாக வழங்கியிருக்கிறார். புராண இதிகாசக் கதைகளில நாடக உலகில் புகழ்பெற்ற இருபாலை பொன்னப்பா அண்ணாவியார் மரபில் மயிலிட்டியில் வளர்ந்த காத்தவராயன் சிந்துநடைக் கூத்தில் நூலாசிரியரின் பேரனாரான பிள்ளையார் ஆச்சாரியார், 1956களில் பிற்காத்தவராயனாக நடித்துப் புகழ்பெற்றவர். தொடர்ந்து சிறுவிளான் சிந்துநடைக் கூத்தில் கஜேந்திரன் அவர்கள் பாலகாத்தானாக (1991) அரங்கேறி பாராட்டுக்கும் பாத்திரமாகி கலையுலகில் இன்றும் பயணித்துக்கொண்டிருக்கிறார்.*

### 12792

**தமிழழகி: ஐந்தாவது வீரமா/முனிவர் காண்டம்.** *க.தா.செல்வராஜகோபால் (புனைபெயர்: ஈழத்துப் பூராடனார்), எட்வேட் இதயச்சந்திரா (பதிப்பாசிரியர்). கனடா: சீவன் பதிப்பகம், இல. 3,* 1292 Sherwood Mills Blvd, Mississauga L5V1S6, Ontario, *1வது பதிப்பு, 2008. (கனடா: ரீ கொப்பி, டொரன்டோ*).

*(24), 1497-1880 பக்கம், விலை: கனேடிய டொலர் 25., அளவு: 21.5x14 சமீ.*

*ஈழத்துப் பூராடனார் என அழைக்கப்படும் க. தா. செல்வராசகோபால் (13 டிசம்பர், 1928 - 21 டிசம்பர் 2010) ஈழத்துப் பன்முகத் தமிழறிஞர். இருநூற்று ஐம்பதுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியும் பதிப்பித்தும் உள்ளார். புலம் பெயர்ந்து கனடாவில் வாழ்ந்தவர். பன்னிரண்டாயிரம் பாடல்கள், 2070 பக்கங்கள், ஒன்பது காண்டங்கள் கொண்ட காவியம் படைக்கவேண்டும், அது 81 படலங்களாகவும், 567 அங்கங்களாகவும் விளங்கவேண்டும் என்ற திட்டமிடலுடன் உருவான தமிழழகி காப்பியத்தின் ஐந்தாம் காண்டம் இந்த நூலாகும். (இந் நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 46173).*

### 12793

**பூதத்தம்பி இசை நாடகம்.** *த.கலாமணி. அல்வாய்: ஜீவநதி வெளியீடு, கலை அகம், அல்வாய் வடமேற்கு, 1வது பதிப்பு, மார்கழி 2016. (பருத்தித்துறை: பரணி அச்சகம், நெல்லியடி).*

xii, *48 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 20.5x14.5 சமீ.,* ISBN: *978-955-4676-53-4.*

*ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் இராசவாசல் முதலியாராக வாழ்ந்த பூதத்தம்பி என்பவரது வாழ்வில் இடம்பெற்ற துயரச் சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு த.கலாமணி அவர்களால் எழுதப்பட்ட இசை நாடக நூல் இது. இந்த இசை நாடகம் இதுவரை 60க்கும் மேற்பட்ட மேடையேற்றங்களைக் கண்டுள்ளது. 200க்கும் மேற்பட்ட இசை நாடகங்களில் நடித்ததில் பெற்ற அனுபவத்துடன் ஆசிரியரால் பிரதியாக்கம் செய்யப்பட்ட இந்நாடகம் நடிப்பதற்கும் படித்துச் சுவைப்பதற்கும் ஏற்றவகையில் எழுதப்பட்டுள்ளது. பூதத்தம்பியின் வரலாறுகூறும் வரலாற்று நூல்களில் பூதத்தம்பியின் குணப்பண்புகள் குறித்தும் வாழ்வியல் நடப்புகள் குறித்தும் உள்ள சித்திரிப்புகளில் வேறுபாடுகள் உண்டு. யாழ்ப்பாண இராச்சியத்தின் வரலாற்றினை விபரிக்கும் முதல்நூலான, மயில்வாகனப் புலவரின் யாழ்ப்பாண வைபவமாலை கூறும் பூதத்தம்பி கதை அமைப்புக்கு ஒத்ததாக 1950களின் தொடக்கத்தில் வடமராட்சியில் மேடை யேற்றப்பட்ட இசை நாடகப் பிரதி ஆசிரியரால் திருத்தி எழுதப்பட்டு 1999 முதல் இன்றுவரை இலங்கையின் பல பாகங்களிலும்அரங்கேற்றப்பட்டுவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.*

**மேலும் பார்க்க: 12700,12784**

## 894.8(31) மொழிபெயர்ப்பு இசை நாடகங்கள்-காவியங்கள்

### 12794

**குமார சம்பவம்: தமிழாக்கம்.** *ச.சுப்பிரமணியம். புத்தூர்: பண்டிதர் ச.சுப்பிரமணியம், சிவன் வீதி, ஆவரங்கால், 1வது பதிப்பு, 1997. (கொழும்பு 2: அரசன் அச்சகம், 30, ஹைட் பார்க் கோர்னர்).*

xxxvi, (2), 268 பக்கம், புகைப்படங்கள், ஓவியங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x19 சமீ.

கவி காளிதாசனின் கைவண்ணத்தில் உருவான சிவ-பார்வதி காதல் வைபவம்தான் குமாரசம்பவம் என்ற காவியமாகும். இந்திய தேசிய கீதத்தை இயற்றிய ரவீந்திரநாத் தாகூர், கவி காளிதாசனின் குமாரசம்பவத்தை "எல்லையில்லாத திரையில் வரைந்த ஓவியம் இது. காதலின் நிரந்தரத் தன்மையை வர்ணிக்கிறது. காதல் கொண்ட இதயத்தின் தூண்டுதல்களையும் வேண்டுகோளையும் தியாகத்தையும் இது விளக்குகிறது. காவியத்தின் முடிவில் காதல் ஜெயிக்கிறது" என்று குறிப்பிடு கிறார். குமாரசம்பவத்தின் முதல் சருக்கம் இமயமலையில் வருணனையையும், பார்வதியின் அழகையும் பேசுகிறது. இரண்டாவது சருக்கத்தில் தேவர்கள் தாரகனின் கொடுமைகள் பற்றி பிரம்மாவிடம் முறையிடுகிறார்கள். அதற்கு சிவ-பார்வதிக்கு மகனாகத் தோன்றுபவனால் (சிவனின் சக்தியாக) தாரகன் கொல்லப்படுவான் என்று கூறுகிறார். மூன்றாவது சருக்கத்தில், மன்மதன் காட்டுக்கு வந்ததால் அங்கே காமம் அதிகரிக்கிறது. இங்கு சிவனின் தவத்தின் மேன்மையும், மன்மதனின் தோல்வியும் கூறப்படுகிறது. நான்காவது சருக்கத்தில் மன்மதனை இழந்த ரதியின் புலம்பலும், வசந்தனின் ஆறுதலும், சிவனின் திருமணத்தின் போது கிடைக்கப்போகும் சாபவிமோசனமும் பேசப்படுகிறது. ஐந்தாவது சருக்கத்தில், பார்வதியின் தவவலிமை பற்றியும், சிவனே ஒரு பிரம்மச் சாரியாக வந்து பார்வதியிடம் உரையாடுவதையும், முடிவில் பார்வதியின் தவத்திற் கான வெற்றி பற்றியும் பேசப்படுகிறது. ஏழாவது சருக்கத்தில், ஏழு ரிஷிகள் அருந்ததிதேவியுடன் சிவனின் ஆணைப்படி இமவானிடம் சென்று பெண் கேட்பதும், இமவானின் சம்மதமும் காணலாம். திருமண வைபவத்தோடு ஏழா வது சருக்கம் முடிவடைகிறது. 1948இல் புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரியில் இணைந்த பண்டிதர் ச.சுப்பிரமணியம் தமிழ்ப் போதகாசிரியராகப் பணியாற்றியவர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 17161).

## 894.8(4) தமிழ்ச் சிறுகதைகள்

### 12795

**உறையும் பனிப்பெண்கள்: சிறுகதைகள்.** சுமதி ரூபன். சென்னை 600 005: கருப்புப் பிரதிகள், பி.55, பப்பு மஸ்தான் தர்கா, லாயிட்சு சாலை, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2010. (சென்னை600 005: ஜோதி என்டர்பிரைஸஸ்).

96 பக்கம், விலை: இந்திய ரூபா 60., அளவு: 21x14 சமீ.

கனேடிய புகலிடச் சூழலில் வெளிவந்த சுமதி ரூபனின் இரண்டாவது சிறுகதைத் தொகுப்பு. அமானுஷ்ய சாட்சியங்கள், இருள்களால் ஆன கதவு, ரெக்ஸ் எண்டொரு நாய்க்குட்டி, பெண்கள்: நான் கணிக்கின்றேன், சூட் வாங்கப் போறன், நஷ்ட ஈடு, வெளிச்சம், ஒரு நீண்ட நேர இறப்பு, எனக்கும் ஒரு வரம் கொடு, 40 பிளஸ், மூளி, உறையும் பனிப்பெண் ஆகிய 12 கதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. எந்த முன்முடிவுகளும் பாசாங்குகளுமின்றி வாழ்வின் மீதும் இருப்புசார்

சூழலின்மீதும் கேள்விகளை எழுப்பிச் செல்லும் இச்சிறுகதைகள் மனதைத் தொடும் நூண்ணலகுகளால் நெய்யப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 61596. நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தின் சேர்க்கை இலக்கம் 014585).

## 12796

**ஒரு பெண்ணின் கதை: சிறுகதைத் தொகுதி.** எம்.எஸ்.அமானுல்லா. மூதூர் 5: எம்.எஸ்.அமானுல்லா, 162, அரபுக் கல்லூரி வீதி, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2017. (மூதூர்: எஸ்.எச். பிரின்டர்ஸ்).

101 பக்கம், விலை: ரூபா 270., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-38888-0-8.

2007இல் வெளிவந்து சாகித்திய மண்டலப் பரிசைப் பெற்ற இவரது "வரால் மீன்கள்" கதைத் தொகுதியை அடுத்து இரண்டாவதாக வெளிவந்துள்ள சிறுகதைத் தொகுதி இது. இவர் இதுவரை 20 சிறுகதைகளையே எழுதியிருந்த போதிலும் அவற்றில் 16 சிறுகதைகள் தேசிய, சர்வதேச மட்டங்களில் பரிசுகளை வென்று கவனஈர்ப்பினைப் பெற்றுள்ளன. இவரது கதைமாந்தர்கள் பலரும் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்பவர்களாகவே இருக்கிறார்கள். இத்தொகுப்பில் ஒரு பெண்ணின் கதை, ஆலம் விழுதுகள், அனாவும் அரைப் பவுண் சங்கிலியும், பசி, ஒற்றை மாட்டு வண்டி, தாய்மை, தானும் தன் சுகமும், தாய்ப்பசு ஆகிய இவரது எட்டு சிறுகதைகள் அடங்கியுள்ளன. மூதூரின் மண் மணத்தை, கடலை, மலையை, மீன்களை, சாதாரண உழைக்கும் மக்களை, வறுமையை வெளிப்படுத்தவதாக இந்நூலுக்குக் குறிப்புரை வழங்கியுள்ள நந்தினி சேவியர் குறிப்பிடுகின்றார். எம்.எஸ்.அமானுல்லா, விஞ்ஞான ஆசிரியராக இருந்து அதிபராக ஓய்வுபெற்றவர். மாணவப் பருவம் முதல் எழுத்துத் துறையில் ஆர்வம் கொண்டவர்.

## 12797

**ஒரு வெளிநாட்டுத் தாயின் வாழ்க்கை: சிறுகதைகள்.** வண்ணை தெய்வம் (இயற்பெயர்: தெய்வேந்திரன்). சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல. 7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2018. (சென்னை 94: ஆதிலெட்சுமி பிரிண்டர்ஸ்).

xxviii, 244 பக்கம், விலை: இந்திய ரூபா 170., அளவு: 21x14 சமீ.

அகரம் சஞ்சிகையில் பிரசுரமான வண்ணை தெய்வத்தின் 26 சிறுகதைகளும், 12 குட்டிக் கதைகளும் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. பொன்னம்மாவும் ஒன்பது பிள்ளைகளும், திருமணங்களின் நிறம் சிகப்பு, வயது வந்தவர்களுக்கு மட்டுமல்ல, அந்தரங்கமான சோகங்கள், அவள் அம்மா ஆகிவிட்டாள், கால்கட்டு, எத்தனை எத்தனை மீனாட்சிகள், நோயாளிகள், பெரும் குடிமக்கள், கருணை, ஒரு வெளிநாட்டுத் தாயின் வாழ்க்கை, ஒரு கணவன்-ஒரு மனைவி-ஒரு மரணம், ஒரு வாத்தியார் பாடம் படிக்கின்றார், இன்றைய பிள்ளைகள் பெற்றோரைத் திருத்துகின்றார்களா? பழிவாங்குகின்றார்களா?, தொலைபேசிகள், வெளிநாட்டிலிருந்து யாழ்ப்பாணம் போன வெள்ளையம்மா, வாக்குமூலங்கள், வாழ்க்கையின்

மாற்றங்கள், கடிதங்கள், புதிய வெள்ளைக்காரர்கள், அவர்கள் மீண்டும் முருங்கை மரங்களில் ஏறுகின்றார்கள், ஒரு பூசாரி நாய் வளர்க்கின்றார், சிறைப் பறவைகள், கடன்காரர்கள், நியாயங்கள் சிரிக்கின்றன, அவள் சிலுவை சுமக்கின்றாள் ஆகிய தலைப்புகளில் இக்கதைகள் எழுதப்பட்டுள்ளன. தொடர்ந்து இடம்பெறும் பன்னிரு குட்டிக்கதைகளும் அரங்கேற்றம், நிறம் மாறியவர்கள், அகதிகள், ஒட்டாத உறவுகள், கொடுப்பனவு, விரதச் சோறு, நாங்கள் இப்படித்தான், பொருத்தம், சகுனம், அவனால் மாற முடியவில்லை, குற்றவாளிக் கூண்டில் மனுநீதிச் சோழன், சீட்டு ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்டுள்ளன.

## 12798

**கண்ணாடி சுவர்களும் சில காகித மனிதர்களும்.** மொழிவரதன் (இயற்பெயர்: க.மகாலிங்கம்). கொட்டகலை: கலாபூஷணம் க.மகாலிங்கம், கொட்டகலை தமிழ்ச் சங்கம், 34/20, மொழி அகம், கணபதிபுரம், 1வது பதிப்பு, மே 2017. (ஹட்டன்: யூனிவர்சல் அச்சகம்).

127 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 21x15 சமீ., ISBN: 978-955-7444-00-0.

மொழிவரதனின் 19 சிறுகதைகளை உள்ளடக்கிய இத்தொகுப்பு மலையக வாழ்க்கையைச் சுற்றியே பின்னப்பட்டுள்ளது. மலையக மக்களின் பெரும் உழைப்பு வியர்த்தமாகிப் போகும் அவலத்தை, அந்த உழைப்பு அந்த மக்களுக்கு மிகவும் அடிப்படையான வாழ்வாதாரங்களைக் கூட வழங்க மறுக்கும் கொடூரத்தை இவரது கதைகள் பேசுகின்றன. காற்றில் பறக்காத பட்டங்கள், கயிற்றில் ஆடும் பெண், தோணிகள் எதிர்கொள்ளும் அலைகள், ஊமையான உமையாள், வாந்தி, கோளாறு, பொன்னம்மா என்ற பெண் அம்மாள், வேர்கள் பதிந்த மண், தன்னையும் ஈந்திடுவான் மண்ணுக்கே, ராமு நீ தனிமரமல்ல, பதில் கிடைக்கும், பேச்சாளர், வினாக்களும் விடைகளும், கம்பீரம், சம்பளப் பாக்கி, கண்ணாடி சுவர்களும் சில காகித மனிதர்களும், அப்பா, இயற்கையோடு இயற்கையாய், காவலர்கள் ஆகிய தலைப்புகளில் 19 கதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

## 12799

**கனவுலகம்.** ஜுனைதா ஷெரீப் (இயற்பெயர்: மொஹமட் ஷெரீப், கச்சி மொஹமட்). காத்தான்குடி: ஜுனைதா ஷெரீப், 27, லேக் றைவ், 1வது பதிப்பு, 2018. (கொழும்பு 10: யூ.டீ.எச். கம்ப்யுபிரின்ட், 51/42, மொஹிதீன் மஸ்ஜித் வீதி).

xiii, 109 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 21x14 சமீ., ISBN: 978-955-38432-0-3.

இந்நூலில் ஜுனைதா ஷெரீப் எழுதிய நல்ல மனைவி அல்லது பூலோக சொர்க்கம், ஓங்கி ஒரு குத்து, இரண்டு முட்டாள்களின் கதை, நெய்னா தோட்டம், அன்னதானம், கனவுலகம், எல்லாப் புகழும் இறைவனுக்கே, மீட்சி பெறாத அடிமைகள், கண்ணகி, பருப்பும் செருப்பும் ஆகிய பத்து சிறுகதைகள் தொகுக்கப்பட்டுள்ளன. 15.09.1940 இல் பிறந்த ஜுனைதா ஷெரீப், அல் நஸார் வித்தியாலயமென வழங்கப்படும் காத்தான்குடி முதலாம் குறிச்சிப் பாடசாலை, காத்தான்குடி மத்திய மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் கல்வி கற்றவர். மார்ச் 1958

*முதல் ஆசிரியராகத் தன் பணியைத் தொடங்கியவர். இவர் மட்டக்களப்பில் இயங்கிய நாடகக் குழுவொன்றில் சேர்ந்து பல மேடை நாடகங்களில் நடித்துள்ளார். இவரது மூன்றாம் முறை, சிதைவுகள், சாட்சிகள் இல்லாத சாமத்தில் ஆகியவை தொடர்கதைகளாகத் தினகரன், வீரகேசரி ஆகிய பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன. மேலும் இவரால் காட்டில் எறித்த நிலா, ஒவ்வாமுனைக் காந்தங்கள், இது நம்ம சொத்து, ஒரு கிராமத்தின் துயில் கலைகிறது போன்ற பல நாவல்கள் இலங்கைத் தேசிய நூலக சேவைகள் சபையின் அனுசரணையுடன் எழுதப்பட்டுள்ளன. இவர் தேசிய ரீதியாகவும், வட கிழக்கு மாகாண ரீதியாகவும் நான்கு சாகித்திய விருதுகள், இலங்கை அரசின் கலாபூசண விருது, இலக்கிய வித்தகர் விருது உட்படப் பல விருதுகளைப் பெற்றுள்ளார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 261878CC).*

### 12800

**காண்டாவனம்:சிறுகதைகள்.** *சண்முகம் சிவலிங்கம். ஐக்கிய அமெரிக்கா: வெளியீட்டுப் பிரிவு,* iPMCG Inc *வெளியீடு, 3311,* Beard Road, Fremont, CA 94555, *1வது பதிப்பு, மார்கழி 2014. (அச்சக விபரம் தரப்படவில்லை).*

*(17), 18-249 பக்கம், விலை: ரூபா 750., அளவு: 22x14 சமீ.,* ISBN: *978-0-9863148-3-4.*

*கல்முனை, பாண்டிருப்பைச் சேர்ந்த அமரர் சண்முகம் சிவலிங்கம் (1936-2012), கேரளா பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானப் பட்டதாரி. இவர் உயிரியல் விஞ்ஞானம், ஆங்கிலம், ஆங்கில இலக்கியம் ஆகிய துறைகளில் இலங்கையில் ஆசிரியப் பணியாற்றியவர். இலக்கியத்துறையில் கவிதை, கட்டுரை, சிறுகதை, நாவல், விமர்சனம், நாடக எழுத்துரு, நெறியாள்கை, நடிப்பு என பல்பரிமாணங்களில் அறியப்பெற்றவர். நீர்வளையங்கள் (1988), சிதைந்துபோன தேசமும் தூர்ந்துபோன மனக்குகையும் (2010)ஆகிய இரு கவிதைத் தொகுதிகளை ஏற்கெனவே எமக்களித்தவர். சண்முகம் சிவலிங்கம் எழுதிய சிறுகதைகளில் இருந்து தேர்ந்த 16 கதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. இவை, திசைமாற்றம் (1975), மனித நேயமும் மண்ணாங்கட்டியும் (1980), காண்டாவனம் (1985), உன்னை வாழ்த்திப் பாடுகிறேன் (1987), காட்டுத்தோடை (1987), உட்சுழிகள் (1988), போருக்குப் போனவர்கள் (1984), வாலி வதையும் வானரச் சேனையும் (1988), மரணப் பூட்டு (1989), வெளியேற்றம் (1990), பிரமாண்டம் நோக்கி (1990), படைகள் நகர்ந்த போது (1990), பிரகஷ்த்தம் (1989), தொலைந்துபோன கிரகவாசி (1992), �லூ-லூ (1999), காலடி (1987) ஆகிய தலைப்புகளில் இவை 1975-1999 காலகட்டத்தில் எழுதப்பெற்றவை. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 246292CC).*

### 12801

**குழந்தையும் தேசமும் (சிறுகதைகள்).** சி.சிவசேகரம். கொழும்பு 11: தேசிய கலை இலக்கியப் பேரவை, 44, மூன்றாவது தளம், C.C.S.M கொம்பிளெக்ஸ், 1வது பதிப்பு, நவம்பர் 2011. (கொழும்பு 11: வேர்ல்ட் விஷன் கிராப்பிக்ஸ், இல. 5, முதலாம் மாடி, 2வது ரோகிணி ஒழுங்கை).

xii, 200 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 21x14.5 சமீ., ISBN: 978-955-8637-31-9.

சமகாலத்தில் தான் அவதானித்த அவலங்களையும் அநீதிகளையும், ஒவ்வாமை களையும், அப்பாவித்தனங்களையும், அடாவடித்தனங்களையும், தன் உணர்வானுபவங்களையும், சிந்தனைகளையும், மற்றவர்களோடு, அவர்களின் கவனத்தை ஈர்க்கத்தக்க வகையில், பகிர்ந்துகொள்வதற்குச் சிவசேகரம் சிறுகதையை ஒரு ஊடகமாகத் தேர்ந்தெடுத்துள்ளார். சீருடை, ஒரு நாள் மத்தியானம் நடந்தது, சபிக்கப்பட்டவர்கள், ஐயரும் அவதாரமும், நீங்கும் நினைவுகள், மீன்களுடன் ஒரு நடைப்பயணம், தம்பரின் இரும்புப் பெட்டி, நிவாரணம், சிறை மீட்புப் படலம், குழந்தையும் தேசமும், இக்கரையும் அக்கரையும், செங்காய், புல்லு வெட்டுவது யார்? கொழுந்தெடுக்கிறது யார்?, ஓடும் வண்டியில் ஒரு பாடல், மீட்சி, பட்டுத் தெளிந்தது, மதமாற்றம், ஆள் மாறாட்டம், குமாரி, அனற்காற்று வீசிய ஒரு நாளில், பாடசாலை வாங்கு, டோன்ற் மென்ஷன் ஆகிய தலைப்புகளில் அவ்வப்போது இவர் எழுதி வெளியிட்ட 22 சிறுகதைகளை இத்தொகுப்பு உள்ளடக்குகின்றது. நூலின் முன் அட்டையில் இஸ்ரேலிய முற்றுகைக்குட்பட்ட காஸாவில் ஒரு சிறுவனின் புகைப்படமும், பின் அட்டையில் பலஸ்தீன மேற்குக்கரை (West Bank) பகுதியில் காணப்பட்ட ஒரு சுவரோவியத்தின் பிரதியும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 015427. கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகப் பதிவெண் 54182).

### 12802

**கொற்றாவத்தையில் உலாவும் குட்டிக்கதைகள்.** கொற்றை பி.கிருஷ்ணானந்தன். அல்வாய்: ஜீவநதி வெளியீடு, கலை அகம், அல்வாய் வடமேற்கு, 1வது பதிப்பு, மே 2017. (பருத்தித்துறை: பரணி அச்சகம், நெல்லியடி).

x, 116 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 18x13 சமீ., ISBN: 978-955-4676-61-9.

கொற்றை பி.கிருஷ்ணானந்தன் இன்றைய காலத்தின் தேவை கருதி சிறுகதையின் வடிவத்தை பல்பரிமாணங்களில் எழுதுகின்ற திறனை வளர்த்துக்கொண்டவர். சிறுகதைகள், குறுங்கதைகள், குட்டிக்கதைகள் என மூன்று வகைமாதிரிகளிலும் கதைகளைப் படைக்கும் திறன் மிக்கவராக அவர் திகழ்கின்றார். கொற்றையினுடைய சுமார் 40 குட்டிக்கதைகள் ஞானம் சஞ்சிகையில் ஒக்டோபர் 2011 முதல், மாதந் தோறும் இரண்டு கதைகள் என்ற அடிப்படையில் வெளிவந்தன. அப்பொழுது அவற்றின் சுவாரஸ்யம் பற்றி வாசகர்கள் பலரும் தத்தம் இதயங்களின் வெளிப்பாடுகளை அடுத்தடுத்த இதழ்களில் வாசகர் கடிதங்களின் வாயிலாகப் பதிவுசெய்து மகிழ்ந்தனர். இக்கதைகள் யாவும் தொகுக்கப்பெற்று இந்நூல்வழியாக

நூலுருவாகியுள்ளன. வடமராட்சியில் பொலிகண்டி கிழக்கு, அல்வாய் மேற்கு, கரணவாய் வடக்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைத் தன்னகத்தே கொண்ட தாக வல்வெட்டித்துறையை அண்டி அமைந்துள்ளது கொற்றாவத்தையாகும். இந்நூல் 76ஆவது ஜீவநதி வெளியீடாகும். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 62102).

## 12803

**சமாதானத்துடன் சில கதைகள்.** மக்கள் சமாதான இலக்கிய மன்றம். மாத்தறை: மக்கள் சமாதான இலக்கிய மன்றம், 52B, தர்மரத்ன மாவத்தை, 1வது பதிப்பு, ஜனவரி 1996. (மஹரகம: தரஞ்ஜீ பிரின்ட்ஸ், 506, ஹைலெவல் வீதி, நாவின்ன).

vi, 96 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ., ISBN: 955-9430-02-5.

தெனகம சிரிவர்த்தன மன்றத்தின் செயலாளராகப் பணியாற்றிய வேளையில், மக்கள் சமாதான இலக்கிய மன்றத்தினரால் மும்மொழிகளிலும் நடாத்தப்பட்ட "சமாதானம்" என்ற கருத்தியலில் எழுதப்படும் சிறுகதைப் போட்டிக்கென கிடைக்கப்பெற்ற சிறுகதைகளில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சில சிறுகதைகளின் தொகுப்பு இது. தேர்வுக்குழுவின் நடுவர்களாக ரஞ்சித் பத்திரன, ரத்னஸ்ரீ விஜேசிங்க, எஸ்.ஜீ.புஞ்சிஹேவா, ஜீ.ஜீ.சிறிசேன, யோ.பெனடிக்ற் பாலன், சோ.ரஞ்சகுமார், மு.பொன்னம்பலம்ஆகிய இலக்கியகர்த்தாக்கள் பணியாற்றினர். பாதை தவறாமல் (சோ.ராமேஸ்வரன்), நிகழ்கால நிதானங்கள் (கே.குணநாதன்), கடவுளின் குழந்தைகள் (இரா.பரமேஸ்வரன்), மனிதம் (எம்.பி.சிராஜ்டீன்), ஏன் இந்த நிலை (இர்ஃபானா ஜெப்பார்), பேதமில்லா நெஞ்சங்கள் (எஸ்.இலங்கேஸ்வரன்), எனக்குள் உதிர்ந்த அவன் (எஸ்.எச்.அரஃபத்), நேசத்துள் ஒரு தேசம் (அக்குறணை எம்.நஸூபர்), தியாகதீபம் (பாக்கியராஜன் அனுராதா), மதம் (எம்.எச்.எம்.ஷம்ஸ்) ஆகிய தேர்வுபெற்ற சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. (இந் நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 19304).

## 12804

**சுவடுகள்: சிறுகதைத் தொகுப்பு.** மதுபாரதி (இயற்பெயர்: திருமதி பரமேஸ்வரி இளங்கோ). திருக்கோணமலை: பண்பாட்டலுவலகள் திணைக்களம், கிழக்கு மாகாணம், 1வது பதிப்பு, 2016. (திருக்கோணமலை: A.R.T. பிரின்டர்ஸ், 82, T.G. சம்பந்தர் வீதி).

xvi, 139 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-4628-34-2.

சமகாலச் சிறுகதைகளின் செல்நெறி பற்றிக் குறிப்பிடும் பேராசிரியர் செ. யோகராசா, கணிசமான படைப்புக்கள் போர்க்காலத்துடன் அல்லது போருக்குப் பிற்பட்ட காலத்துடன் தொடர்புபட்டவை. அல்லது, நீண்டகால சமூகப் பிரச்சினைகள் பற்றிப் பேசுபவையே என்று கூறுகிறார். இத்தகைய செல்நெறிச்

*சூழலில் மதுபாரதியின் சிறுகதைகளில் பாதிக்கு மேற்பட்டவை கல்வியியல் மற்றும் பாடசாலைச் சூழல் சார்ந்தவையாக உள்ளன. ஆசிரியரின் மனதில் நெருடிய உண்மைச் சம்பவங்களே கதைகளின் கருவாயமைந்துள்ளன. அக்கினிக் குஞ்சொன்று, எல்லாம் நன்மைக்கே, இனி அவன், இன்னொரு தாயாக, அவரா இவர், நெஞ்சமெல்லாம் ஓர் நிறைவு, கடைப்பார்வை, ஆசான், அந்தியில் ஓர் விடியல், ஆசிரியர்களை எனக்குப் பிடிக்காது, சுவடுகள், ஒப்பன்னா, நிலா எனும் அரிவை, நேசமுடனொரு நினைவதுவாகி, காதல் போயின் ஆகிய 15 கதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. ஏறாவூர் எல்லை நகரைச் சேர்ந்த மதுபாரதி எண்பதுகளிலிருந்து எழுதிவருகின்றார்.*

## 12805

**தாய்நிலம்:சிறுகதைத் தொகுதி.** ஆ.முல்லை திவ்யன். வல்வெட்டித்துறை: வர்ணா வெளியீடு, கொற்றன்தறை, பொலிகண்டி கிழக்கு, 1வது பதிப்பு, டிசம்பர் 2015. *(அல்வாய்: மதுரன் கிராப்பிக்ஸ் அன்ட் ஒப்செட் பிரின்டர்ஸ்).*

xi, *64 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 17*x*12.5 சமீ.,* ISBN: *978-955-7934-00-6.*

*தாய்மண்ணின் சாரல் தழுவும் படைப்புக்களின் தொகுப்பு. இலங்கையில் இடம்பெற்ற போர் காரணமாக ஆசிரியர் பெற்ற அனுபவங்களின் வெளிப்பாடாக இவரது சிந்தனையில் உதித்த எட்டுக் கதைகளின் தொகுப்பு இது. மானிட நேயமும் மண்ணின் நிலைகண்டு ஏற்படும் துயரும், புரட்சி வீரர்களை நேசிக்கும் மனப்பாங்கும், தமிழினத்தின் விடிவும் இவரது எழுத்தின் கருப்பொருள்களாகின்றன. போர்க்கால நினைவுகள் வரிகளாகி சிறுகதை உருவம்பெற்று நினைவு மறவாத கடந்த காலங்களையும் மிக மென்மையான நயத்துடன் ஆழமாகக் கூறி நிற்கின்றது. இடம்பெயர்வு, மரணம், போராட்ட வாழ்வு எனத் துயரப்பட்டபோதும் அத்துயரைத் தாண்டி எழுந்து நிற்கும் ஒரு இனத்தின் குரலாக இக்கதைகள் அமைகின்றன. அழகிய தமிழ்ப்பெயர்களால் உருவாக்கப்பட்ட கதாபாத்திரங்கள், செம்மண் வீதி களினூடாக வாடைக்காற்றைச் சுவாசித்தவண்ணம் செவ்வரத்தம் பூக்களை (செம்பருத்திப்பூக்கள்) நுகர்ந்தவண்ணம் இக்கதைகளில் மண்வாசனையுடன் பயணிக்கின்றன. கத்தியின்றி இரத்தமின்றி தமிழ் இனம் விடிவு காணவேண்டும் என்பதில் அக்கறைகொண்ட ஆ.முல்லைதிவ்யன் முல்லை மண் தந்த ஒரு இளம் படைப்பாளி. முல்லைத்தீவில் பிறந்து வளர்ந்து தற்போது பொலிகண்டியில் வாழும் இவர் ஏற்கெனவே நான்கு கவிதைத் தொகுதிகளை வெளியிட்டவர். இவரது முதலாவது சிறுகதைத் தொகுதி இது. இருள் விலகுமா?, வேலை கிடைச்சாச்சு, தாய்நிலம், பாசம், செவ்விரத்தப் பூ, சிகரம், வாழும் ஆசை, விடிவெள்ளி ஆகிய எட்டு சிறுகதைகள் இத்தொகுதியில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 249114*CC*).*

**தாய்நிலம்:சிறுகதைத் தொகுதி.** ஆ.முல்லை திவ்யன். வல்வெட்டித்துறை: வர்ணா வெளியீடு, கொற்றன்தறை, பொலிகண்டி கிழக்கு, 2வது பதிப்பு, ஒக்டோபர் 2016, 1வது பதிப்பு, டிசம்பர் 2015. (அல்வாய்: மதுரன் கிராப்பிக்ஸ் அன்ட் ஓப்செட் பிரின்டர்ஸ்).

xiii, 64 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 18x12.5 சமீ.

முல்லைத்திவ்வியன் எழுதிய முதலாவது சிறுகதைத் தொகுதியின் இரண்டாவது பதிப்பு இது. வாழும் ஆசை, விடிவெள்ளி ஆகிய முதற்பதிப்பில் இடம்பெற்ற சிறுகதைகளை நீக்கி, இருள் விலகுமா?, வேலை கிடைச்சாச்சு, தாய்நிலம், பாசம், செவ்விரத்தப் பூ, சிகரம், ஆகிய ஆறு சிறுகதைகளுடன், புதிதாக எழுதப்பட்ட பாரமில்லாக் கனவுகள், நட்சத்திரப் பூக்கள், பெயர், மனதில் பெய்த மழை ஆகிய மேலதிகமான நான்கு கதைகளையும் சேர்த்ததாக, இத்தொகுதி இடம்பெற்றுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 252812CC).

**12806**

**நந்தகுமாரனுக்கு மாதங்கி எழுதுவது.** தமிழ்நதி (இயற்பெயர்: கலைவாணி இராஜகுமாரன்). சென்னை 600017: காதை, கே.கே. புக்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 19, சீனிவாச ரெட்டி சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, டிசம்பர் 2007. (சென்னை 600005: மீரா ஓப்செட்).

(8), 9-158 பக்கம், விலை: இந்திய ரூபா 90.00, அளவு: 21x14 சமீ.

திருக்கோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர் தமிழ்நதி. ஈழத்துப் போரினால் கனடாவுக்குப் புலம்பெயர்ந்தவர். கனடாவில் வாழ்ந்த காலத்தில் கலைவாணி இராஜகுமாரன் என்ற பெயரில் சிறுகதை, கவிதை, நாடகம், கட்டுரை எனப் பல்வேறு ஆக்க இலக்கிய வடிவங்களையும் பயன்படுத்தித் தனது படைப்புகளை வெளியிட்டவர். தற்காலிகமாக சென்னையில் வாழ்ந்து வரும் வேளையில் தமிழ்நதியின் சூரியன் தனித்தலையும் பகல் (கவிதைகள்) முன்னதாக வெளிவந்துள்ளது. கானல்வரி - ஆசிரியரின் முதலாவது குறுநாவல். பார்த்தீனியம் இவரது இரண்டாவது நாவல். நந்தகுமாரனுக்கு மாதங்கி எழுதுவது என்ற இந் நூல் தமிழ்நதியின் முதலாவது சிறுகதைத் தொகுப்பாகும். நதி நடந்த சுவடு, அந்த எசமாடன் கேக்கட்டும், இருப்பு, ஊர், நலம் மற்றுமோர் நிலா, கப்பற் பறவைகள், வீடு, காத்திருப்பு, என் பெயர் அகதி, அவனது கேள்வியும் அவனது ஆண்டுக் குறிப்புகளும், மதுவந்தி, மனக்கூத்து, விழுதின் கண்ணீர், தொலைவில் தெரியும் நீர்நிலைகள், பெண் எனும் ஞாபகம், கவரிமான்கள், கதை சொன்ன கதை, நந்தகுமாரனுக்கு மாதங்கி எழுதுவது ஆகிய 18 தலைப்புகளில் இவை எழுதப் பட்டுள்ளன.

### 12807

**நிலவு நீரிலும் தெரியும்: சிறுகதைத் தொகுப்பு.** முருகேசு ரவீந்திரன். யாழ்ப்பாணம்: யாழ். இந்துக் கல்லூரி நண்பர்கள் (உயர்தரம் 1985) வட்டம், இணை வெளியீடு, யாழ்ப்பாணம்: திருமதி அருணா ரவீந்திரன், அருணோதயம், 22/10, பாரதி வீதி, கச்சேரி-நல்லூர் வீதி, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2014. (யாழ்ப்பாணம்: அன்ரா பிரின்டர்ஸ், 356 ஏ, கஸ்தூரியார் வீதி).

xv, 90 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 20x15 சமீ., ISBN: 978-955-54221-1-6.

யாழ்ப்பாண மக்களின் வாழ்வியலைக் கருவாகக்கொண்ட 12 சிறுகதைகளின் தொகுப்பு. தளிர்ப்பின் வாட்டம், இறுக்கம், நிலவு நீரிலும் தெரியும், தெளிவு, கானலைக் கடத்தல், மாறும் மனிதர்கள், தொண்ணூறுகளின் தொடக்கம், காகங்களுக்கும் நாய்களுக்கும், நல்லநாள், தேடல், மாலாக்குஞ்சி, தனிமையின் நீட்சியில் ஆகிய தலைப்புகளில் இவை எழுதப்பட்டுள்ளன. இறுக்கம் என்ற கதை போர்க்கால வாழ்வின் துயரைப் பகிர்கின்றது. போர்க்காலத்தில் தன் குடும்பத்தைப் பிரிந்து கொழும்பில் வாழும் குடும்பத் தலைவன் கொழும்பில் நல்ல தொழிலை உதறித்தள்ளிவிட்டு குடும்பத்துடன் இருக்கவென்றே உள்ளூரின் சிறிய தொழிலை நாடமுடிவெடுப்பது இக்கதை. தலைப்புக் கதையும் பிரிவின் துயரின் மற்றொரு பரிமாணத்தைச் சொல்கின்றது. தன் மகளுக்கும் தனக்கும் இடையே உள்ள பிரிவுத்துயரை ஒரு ஐஸ்கிரீம் பரிமாற்றத்தினூடாக அசைபோடும் சுஜீயின் தந்தையின் பாத்திரத்தின் வாயிலாக பகிரவைக்கிறார். முருகேசு ரவீந்திரன் இலங்கை வானொலியின் அறிவிப்பாளராவார். வடக்கு மாகாண கல்வி, பண் பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை, மற்றும் இளைஞர் விவகார அமைச்சு 24.10.2015இல் கிளிநொச்சியில் நடாத்திய வடக்கு மாகாண இலக்கியப் பெருவிழாவில் 2014இல் வடக்கு மாகாணத்தில் வெளிவந்த சிறந்த சிறுகதை நூலுக்கான பரிசை வென்ற நூல் இதுவாகும். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 243036PL).

### 12808

**பரசுராம பூமி.** வி.மைக்கல் கொலின். மட்டக்களப்பு: மகுடம் வெளியீடு, இல. 90, பார் வீதி, 1வது பதிப்பு, மே 2018. (மட்டக்களப்பு: வணசிங்கா பிரின்டர்ஸ், திருக்கோணமலை வீதி).

xvi, 111 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 300., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-4041-08-0.

முழுக்க முழுக்க தொன்மங்களையும் மறை நூல்களையும் மறுவாசிப்புக்குட்படுத்தும் ஈழத்தின் சிறுகதைத் தொகுப்பொன்று இதுவாகும். இதில் வரம், குருஷேத்திரபுரம், புதிய ஏற்பாட்டின் எழுதப்படாத பக்கங்கள், இராவணாபுரி, யாருமிங்கே தீர்ப்பிடலாம், பரசுராம பூமி, ஓர்மம், ஞானம், எல்லாம் நிறைவேறிற்று ஆகிய ஒன்பது கதைகளை இடம்பெறச் செய்துள்ளார். இவற்றுள் வரம், இராவணாபுரி, ஓர்மம் என்பன இராமாயணத் தொன்மம் சார்ந்தவை. குருஷேத்திரபுரம், பரசுராமபூமி ஆகியவை மகாபாரதத் தொன்மம் சார்ந்தவை. ஞானம் ஜாதகக்

கதைகளின் தொன்மம் சார்ந்தது. புதிய ஏற்பாட்டின் எழுதப்படாத பக்கங்கள், யாருமிங்கே தீர்ப்பிடலாம், எல்லாம் நிறைவேறிற்று என்னும் கதைகள் விவிலியத் தொன்மம் சார்ந்தவை. ஆசிரியர் இக்கதைகளை முன்னதாகப் பத்திரிகைகளில் வாசித்த வாசகர்களின் மனப்பதிவுகளை பார்வைகள்-பதிவுகள் என்றவாறாக நூலின் இறுதியில் வழங்கியிருக்கிறார். ச.மணிசேகரன், கந்தையா தவராஜா, வாசுகி குணரத்தினம் ஆகியோரின் மனப்பதிவுகள் இதில் இடம்பெற்றுள்ளன. நூலின் ஆரம்பத்தில் கவிஞர் அ.ச.பாய்வா, பேராசிரியர் சி.மௌனகுரு, பேராசிரியர் செ.யோகராசா, ஜிஃப்ரி ஹாஸன், ஆகியோரின் கருத்துரைகள் இடம்பெற்றுள்ளன. திருக்கோணமலையைப் பிறப்பிடமாகவும் மட்டக்களப்பை வசிப்பிடமாகவும் கொண்ட மைக்கல் கொலின் இரு மாவட்டங்களிலும் நன்கு அறியப்பட்ட கலை இலக்கியவாதியாவார். தாகம், மகுடம் ஆகிய சஞ்சிகைகளின் ஆசிரியரான இவர் கவிஞர், எழுத்தாளர், குறும்பட இயக்குநர், பத்திரிகையாளர், வெளியீட்டாளர் எனப் பல்பரிமாணங்களில் இயங்குபவர்.

### 12809

**பரதேசம் போனவர்கள்.** க.நவம். வல்வெட்டித்துறை: நான்காவது பரிமாணம், தெணியகம், பொலிகண்டி, 1வது பதிப்பு, 2017. (நெல்லியடி: பரணீ அச்சகம்).

*120 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 18.5x12.5 சமீ.,* ISBN: *978-955-7295-01-5.*

நூலின் தலைப்பைத் தாங்கிய சிறுகதைகள் எதுவும் இத்தொகுப்பில் இல்லாத போதிலும் அனைத்துக் கதைகளும் புலம்பெயர்ந்து சென்றவர்களின் வாழ்வியல் அனுபவங்களைப் பேசுவதாகவே உள்ளன. இவற்றில் பல சோகங்கள் சொல்லப் பட்டிருக்கின்றன. வெளிப்பார்வைக்கு புலம்பெயர்ந்தோர் சௌகரியமாக வாழ்வதான மாயை தாயகத்தில் தோற்றம்பெற்றிருந்த போதிலும், இக்கதைகள் அவர்களின் ஆத்மார்த்தமான இழப்புகளையும், பல்வேறுவிதமான பதகளிப்பு களுடன் அவர்கள் வாழ்வதையும் நுணுக்கமாகப் பதிவுசெய்துள்ளன. கத்தரிக் குழம்பும் கருத்து முரண்பாடும், வெள்ளைப் புறா ஒன்று, எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன், ஜீவித சங்கல்பம், பசிக்கு நிறமில்லை, தினவு, பிச்சைக் காசு, விருந்தாளி, காற்றைப் போன்றதடி என் காதல், ஆசாரசீலம், சீருடை ஆகிய 11 தலைப்புகளில் க.நவம் எழுதிய கதைகள் இங்கே தேர்ந்து தரப்பட்டுள்ளன.

### 12810

**பன்னீர் வாசம் பரவுகிறது (சிறுகதைகள்).** மருதூர் ஏ.மஜீத். கல்முனை: ஸாகிறாக் கல்லூரி பழைய மாணவர் சங்கம், 1வது பதிப்பு, செப்டெம்பர் 1979. (மட்டக்களப்பு: கத்தோலிக்க அச்சகம்).

*(4), 74 பக்கம், விலை: ரூபா 5.00, அளவு: 18x12.5 சமீ.*

மருதூர் ஏ. மஜீத், பத்திரிகைகள், சஞ்சிகைகள், ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் என்பன வற்றில் ஏற்கனவே வெளிவந்த தமது சிறுகதைகளுள் பதினொன்றைத் தொகுத்து “பன்னீர் வாசம் பரவுகிறது” என்னும் இச்சிறுகதைத் தொகுதியை வெளியிட்டுள்ளார். மஜீத் நாடறிந்த எழுத்தாளர், கவிஞர். புதுமைக் கருத்துக்

*களையும், சிந்தனைத் தெளிவையும் கொண்டவர். அக் கருத்துக்களின் வெளிப்பாடே இச் சிறுகதைகள். அவள் ஏன் அழதாள்?, டாக்டர் ஒருபிடி மண்ணைஅள்ளிச் செல்கிறார், தாய்மையின் முன்னால், உண்மை ஊமையாய் ஊரெல்லாம் அலைகிறது, நானும் ஒரு மனிதன், பாலையில் ஒரு பனித்துளி, குப்பையிலே ஒரு குன்றுமணி, பன்னீர் வாசம் பரவுகிறது, பக்கீர் ஒருவர் பள்ளி கட்டுகிறார், ஒரு யுகம் முடிந்தது, என் மகள் ஒரு விடிவெள்ளி ஆகிய 11 கதைகளைக் கொண் டுள்ள சிறுகதைத் தொகுப்பு இது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 18382).*

## 12811

**மழைக்கால இரவு (சிறுகதைகள்).** *தமிழினி ஜெயக்குமரன். சென்னை 600102: பூவரசி வெளியீடு, C-63, முதலாவது தளம், முதலாவது பிரதான சாலை, அண்ணா நகர், இணை வெளியீடு, வாகனேரி 30424: ஷேக் இஸ்மாயில் நினைவு வெளியீடு,* SIM Publication, *ஆற்றங்கரை வீதி, காவதாமுனை, 1வது பதிப்பு, ஜனவரி 2017. (சென்னை 600102: பூவரசி வெளியீடு, C-63, முதலாவது தளம், முதலாவது பிரதான சாலை, அண்ணா நகர்).*

*110 பக்கம், விலை: இந்திய ரூபா 150., அளவு: 21.5*x*14 சமீ.,* ISBN: *978-93-81322-37-6.*

*"அளுயம் சிஹினய" என்ற பெயரில் முன்னர் சிங்களத்தில் மொழிபெயர்ப்புச் செய்து வெளியிடப்பட்ட சிறுகதைத் தொகுதியின் தமிழ்ப்பதிப்பு இது. இத்தொகுதியில் உள்ள ஆறு கதைகளும் ஈழத்தின் போர்க்கால வரலாற்றின் 2009ஆம் ஆண்டுக்காலத்தைச் சுற்றிப் பேசுகின்றன. தமிழினி ஈழப்போராட்டத்தில் விடுதலைப் புலிகள் அமைப்பின் முக்கிய உறுப்பினராகச் செயற்பட்டவர். இறுதிக்காலத்தில் இராணுவத்தின் தடுப்புக்காவல்களிலும், "புனர்வாழ்வு" முகாம்களிலும் தன் காலத்தைக் கழித்து விடுவிக்கப்பட்டவர். சிலகாலங்களில் புற்றுநோயால் பாதிக்கப்பட்டு உயிர்நீத்தவர். போரின் தோல்வியும், சிறை வாழ்வும் தமிழினியைப் பாதித்தவகையை இதிலுள்ள பலகதைகளின் எழுதப்படாத வரிகளின்மூலம், சொல்லாத சேதிகளாக, மனிதத்தின் வலிமையுணர்த்தும் கதைகளாக எம்மைவந்தடைகின்றன. கவுரவக் கவசம், மழைக்கால இரவு, சுதர்சினி, வைகறைக் கனவு, பாக்கியம்மா, எனது மகன் வந்திட்டான் ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட கதைகள் இத்தொகுப்பில் இடம்பெறுகின்றன.*

## 12812

**மறுபிறப்பு (சிறுகதைத் தொகுப்பு).** *வை.கஜேந்திரன். மன்னார்: தமிழமுது நண்பர்கள் வட்டம், 10/38, முதலாம் ஒழுங்கை, எமில் நகர், 1வது பதிப்பு, மார்கழி 2016. (யாழ்ப்பாணம்: எவகிறீன் அச்சகம், இல. 693, காங்கேசன்துறை வீதி).*

xvi, *112 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 22*x*15 சமீ.,* ISBN: *978-955-41112-1-9.*

*இந்நூலில் வை.கஜேந்திரனின் ஒளி பிறந்தது, தங்கம், மறுபிறப்பு, சுயமாக, இது தான் வாழ்வு, நிலா, கல், நீ நீயாக, இரவு தான், தலையெழுத்து, குடிகுடியை,*

*உணர்கின்றேன், சுமைதான் வாழ்க்கை, கனவு, மனமாற்றம், முதற்தடவையல்ல, ஒரு முத்தம், நிஜமில்லையே, கறுப்பு மலர், மரம், பசி, ஒரு குழந்தை, வெளியில் ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட 23 சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. ஒரு முத்தம், நிஜமில்லையே, கறுப்பு மலர்கள் ஆகிய மூன்று கதைகளும் காதலின் உண்மைத் தன்மையையும், போலிக் காதலையும் இனம்காட்டுகின்றன. உள்ளக இடப்பெயர்வின் சின்னமாகிவிட்ட கம்பிவேலி முகாம் வாழ்க்கையின் அவதியையும், மீள்குடியேற்ற வீடமைப்பிற்காக மரங்கள் வகைதொகையின்றி வெட்டப்படுவதால் வனவலங்குகளும், பறவைகளும் சந்திக்கும் நெருக்கடிகளை மரம் என்ற கதை உணர்த்திச் செல்கின்றது. பொறுப்பற்ற குடும்பத் தலைவனால் சிதையும் குடும்பக் கட்டுக்கோப்பினை பசி என்ற கதை கூறுகின்றது. வைத்தியம் என்ற பெயரிலும் சாமியார்களின் மந்திர தந்திர ஏமாற்றுக்களாலும் அலையும் குழந்தைகளின் கதையை ஒரு குழந்தை என்ற கதை கூறுகின்றது. வெளியில் என்ற கதை சிறைக்கு உள்ளே இருப்பவர்கள் எல்லாம் குற்றவாளிகளும் இல்லை, வெளியே இருப்போர் எல்லோரும் சுற்றவாளிகளும் இல்லை என்பதை வலியுறுத்து கின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 62112).*

### 12813

**முஸ்தபாவைச் சுட்டுக்கொன்ற ஓரிரவு (சிறுகதைகள்).** *அகரமுதல்வன். சென்னை 600078: டிஸ்கவரி புக் பேலஸ், பாண்டிச்சேரி கெஸ்ட் ஹவுசுக்கு அருகில், கே.கே. நகர் மேற்கு, 1வது பதிப்பு, டிசம்பர் 2016. (அச்சக விபரம் தரப்படவில்லை).*

*111 பக்கம், விலை: இந்திய ரூபா 100., அளவு: 18x11 சமீ., ISBN: 978-93-8430-210-8.*

*சுந்தரலிங்கம் அகரமுதல்வன், இலங்கையின் வடபுலத்தில் பளை என்ற ஊரில் 1992இல் பிறந்தவர். இரண்டாம் லெப்டினன்ட் என்ற முன்னைய சிறுகதைத் தொகுதியையடுத்து வெளிவரும் இவரது இரண்டாவது சிறுகதைத் தொகுப்பு இதுவாகும். இதில் மரணத்தின் சுற்றிவளைப்பு, திருவளர் ஞானசம்பந்தன், சர்வ வியாபகம், கிழவி, நிலமதி, முஸ்தபாவைச் சுட்டுக்கொன்ற ஓரிரவு, பிரேதங்கள் களைத்து அழுகின்றன, பிட்டுப் பூசை, பெய்துகொண்டிருக்கும் மழை, தேடியலையும் நள்ளிரவு ஆகிய பத்துக் கதைகள் இடம்பெற்றுள்ளன. இக்கதைகளில் பெரும்பான்மையானவை ஈழத்தமிழர் கடந்துசென்ற போர், அழிவு, கொடுங் கொலைகள், வதை எனப் பேசுகின்றன.*

### 12814

**மெல்லச் சாகும் வாலிபம் (சிறுகதைகள்).** *நற்பிட்டிமுனை பளீல் (இயற்பெயர்: ஆதம்லெப்பை முஹம்மது பளீல்). கல்முனை: A.L.M. பளீல், நற்பிட்டிமுனை-1, 1வது பதிப்பு, 1997. (அச்சக விபரம் தரப்படவில்லை).*

*60 பக்கம், விலை: ரூபா 55., அளவு: 20x14 சமீ.*

*இதயத்தை அறுக்கும் இடைவெளி (சிந்தாமணி 1986), மறக்கத் தெரியாத மனசு (1989), மறுபடியும் மறுபடியும் (முனைப்பு 1989), எது எது எப்படியோ அது அது*

அப்படித்தான் (மல்லிகை 1989), அவர்களுக்கும் இதயம் ஒன்றுதான் (வீரகேசரி 1989), ஜெயவேவா (சரிநிகர் 1994), 16 மாடிகளும் 17 வருடங்களும் (சரிநிகர் 1995) ஆகிய எட்டுச் சிறுகதைகள் கொண்ட சிறுகதைத் தொகுப்பு இது. சமூக அவலங்களையும் மூடநம்பிக்கைகளையும் கருப்பொருளாக்கி எழுதும் சிறுகதைப் படைப்பாளி இவர். கிழக்குப் பல்கலைக்கழகப் பட்டதாரியான பஸீல் விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியராக 1986இல் அரச சேவையில் இணைந்து சிலகாலம் பணியாற்றியவர். பின்னாளில் 1.4.1991 முதல் கல்முனை பிரதேச செயலாளராகவும் 1.1.2003 முதல் காத்தான்குடி பிரதேச செயலாளராகவும் பணியாற்றிய இப்படைப்பாளி 1.1.1965 இல் பிறந்தவர். 4.12.2005 அன்று அவர் தனது 40ஆவது அகவையில் துப்பாக்கிதாரிகளால் கொலைசெய்யப்பட்டார். தன் மறைவுவரை, இவர் 30க்கும் அதிகமான கதைகளையும் 65 கவிதைகளையும் எழுதியுள்ளர். தனது முதலாவது நூலாக "மடிக்குள் விழுந்த வெள்ளிகள்" என்ற புதுக்கவிதை நூலை 1988இல் வெளியிட்டார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 17146).

### 12815

**வசந்தகால நினைவுகள்: சிறுகதைத் தொகுதி.** கே.ஈஸ்வரலிங்கம். கொழும்பு 14: சினிலேன்ட் வெளியீடு, 13, சென்.ஜோசப் வீதி, 1வது பதிப்பு, நவம்பர் 1994. (கொழும்பு 14: நிரோஷன் பிரிண்டர்ஸ்).

36 பக்கம், விலை: ரூபா 40., அளவு: 19x15 சமீ.

கொழும்பு 14, பாபா பிள்ளை பிளேசைச் சேர்ந்தவரான கே.ஈஸ்வரலிங்கம், 1984 முதல் 1994 வரையிலான பத்தாண்டு காலத்தில் தான் எழுதிய ஐந்து சிறுகதைகளை இத்தொகுதியில் தந்துள்ளார். சித்திரா வந்தாள், கனவுகள் கரைவதில்லை, உறவு, சலனம், ராசிக்காரன் ஆகிய ஐந்து கதைகள் இதில் அடங்கியுள்ளன. கணவன்-மனைவி குடும்ப நலம் கூறும் ராசிக்காரன், சலனம் ஆகிய கதைகளும், ஆண்-பெண் உறவு என்றால் பாலியல் ரீதியானது மட்டுமே அல்ல. மாறாக, சகோதர பாசமும் அதில் உண்டு என்பதைக் காட்டும் உறவு என்ற கதையும், சீதன மாலைக் காகத் தாலி கட்டத் தயங்கியவனுக்கு கழுத்தை நீட்ட மறுக்கும் மணப்பெண்ணின் கதையான கனவுகள் கரைவதில்லை என்ற கதையும், தமிழ் சினிமாக் காட்சிப் படிமங்களாக வாசகர் மனதில் தோற்றம் பெறத்தக்கவை. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 21697).

**மேலும் பார்க்க: 12866**

## 894.8(41) மொழிபெயர்ப்புச் சிறுகதைகள்

### 12816

**கலங்கரை விளக்க அடிவாரமும் ஏனைய கதைகளும்: சிங்கள சிறுகதைத் தொகுப்பு 1.** எம்.எச்.எம்.யாக்கூத், திக்வல்லை கமால், எஸ்.ஏ.சீ.எம்.கரமத் (மொழிபெயர்ப்பாளர்கள்). ஆனமடுவ: தோதென்ன வெளியீட்டகம், உஸ்வெவ வீதி, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2008. (கனேமுல்ல: ஜயன்ட் பிரின்ட் கிராப்பிக்ஸ், 52 A/1, கலஹிட்டியாவ).

viii, 9-264 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 21x14 சமீ., ISBN: 978-955-1848-20-0.

இனங்களுக்கிடையேயான உறவை இலக்கியத்தின் வழியாக வலுப்படுத்தும் நோக்கில் 18 சிங்களச் சிறுகதைகள் இங்கு தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளன. கலங்கரை விளக்கம், தேவன், தேன்மா, தாய், எனது அருமையான புனைகதைக்குக் குறுக்காக விழுந்துகிடந்த பிச்சைக்காரன், பாவப்பட்ட ஆவிகளின் கதை, மணிக்கல் தேடுவோர், பேய் பிசாசுகளின் இரவு, அத்தியாவசியப் பாவனைப் பொருட்கள், நண்பர்கள், இரத்த உறவினர்கள், எமக்கு விடிவு கிடைக்குமா?, விடுதலை, மறுபிறவி, தெய்யனே (ஆண்டவனே), மாட்டுவண்டி, உயரதிகாரியும் சிற்றூழியரும், வெள்ளைக்கொடி ஆகிய 18 கதைகள் இத்தொகுப்பில் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 53295).

## 894.8(5) தமிழ் நாவல்கள், குறுநாவல்கள்

### 12817

**இருளுக்குள்ளே ஒரு நம்பிக்கை வெளிச்சம் (நாவல்).** குடத்தனை உதயன். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல. 7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2014. (சென்னை 94: ஆதிலட்சுமி ஆப்செட்).

xii, 476 பக்கம், விலை: இந்திய ரூபா 300., அளவு: 21.5x14 சமீ.

யாழ்ப்பாண மாவட்டத்தின் வடமராட்சி கிழக்கில் குடத்தனை கிராமத்தில் பிறந்தவர் உதயகுமார். புலம்பெயர்ந்து சுவிஸ் நாட்டில் வாழும் இப்படைப்பாளியின் முதற் படைப்பு 1998இல் வெளிவந்த "விழியோரத்துக் கனவு" என்ற நாவலாகும். ஈழமுரசு பத்திரிகையில் தொடராக வெளிவந்த "விடியலைத்தேடி", மற்றும் "விழியில் பூத்த நெருப்புகள்" என்பன இவரது முன்னைய படைப்பாக்கங்களாகும். "இருளுக்குள்ளே ஒரு நம்பிக்கை வெளிச்சம்" என்ற இந்த நாவல் ஐம்பது அத்தியாயங்களைக் கொண்டது. தமிழீழ மண்ணின் வாழ்வையும் அந்நிய மண்ணின் வாழ்வையும் துல்லியமாக முன்வைக்கும் நாவல் இது. தமிழீழ மண்ணில் தொடங்கும் இந்நாவல் ஈழத்தின் பல்வேறு நிலப்பரப்புகளையும் அந்நிலப்பரப்பில் வாழும் மக்களையும் வாழ்க்கையையும் மிகவும் எதார்த்தமாக சித்திரிக்கிறது. நாவலின் கதாபாத்திரங்கள் உயிர்ப்புடன் உலாவருகின்றன. மனித மனங்களுக்கிடையே உள்ள முரண்கள், நட்பு, பகை, அன்பு, வெறுப்பு என

அனைத்தையும் வெவ்வேறு கதாபாத்திரங்களின் வாயிலாக வெளிப்படுத்தி இறுதியில் புகலிட தேசத்தில் நரேனின் தற்கொலையுடன் நாவல் நிறைவுபெறுகின்றது.

### 12818

**உரிமையை விரும்பாத உறவுகள் (நாவல்).** அருணா செல்வம். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல. 7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2006. (சென்னை 94: ஸ்கிரிப்ட் ஆப்செட்).

iv, 276 பக்கம், விலை: ரூபா 280., அளவு: 18x12 சமீ.

உறவுகளில் உரிமைகள் இருந்தால்தான் அந்த உறவுக்கே அழகு, மரியாதை எல்லாம் கூடிவரும். வாழ்க்கையில் ஆணோ, பெண்ணோ தனக்கு வாய்க்கப்போகும் துணை இப்படியெல்லாம் இருக்கவேண்டும் என்று நினைத்துக் கற்பனை பண்ணிவைத்திருப்பார்கள். கடைசியில் அவர்கள் கொஞ்சமும் எதிர்பார்க்காமல் தமக்குக் கிடைத்த துணை தமது கற்பனைக்குத் தலைகீழாக அமைந்தும் விடலாம். அப்போது ஏற்படும் ஏமாற்றத்தின் காரணமாக அவர்களின் எதிர்கால வாழ்க்கை, பொய்யான உறவுடனும், பொய்யான உரிமையுடனும்தான் முடியும் என்றுகூறும் கதாசிரியரின் கதாபாத்தரங்கள் இரண்டும் அப்படிப்பட்ட ஏமாற்றங்கள் நிறைந்த வாழ்க்கையை காலத்தின் கோலத்தால் பெற்றுக்கொண்டவர்களே. தமக்குக் கிடைத்த இந்த ஏமாற்றம் நிறைந்த வாழ்க்கையை அன்பாலும் பாசத்தாலும் பலப்படுத்தாமல் எரிச்சலாலும் கோபத்தாலும் சீரழிக்கமுனைவதே கதையின் போக்காகின்றது. உரிமைகளை விட்டுக்கொடுக்கலாம் -உறவுகள் பலப்படும் போது என்பதையும், உரிமைகளை விட்டுக்கொடுக்கக்கூடாது -உறவுகள் அழிந்து விடும்போது என்பதையும் விளக்கமாகச் சொல்லியிருக்கிறார். பிரான்சில் Vernon பிரதேசத்தில் புலம்பெயர்ந்து வாழும் நூலாசிரியரின் மூன்றாவது நாவல் இது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 41286).

### 12819

**உள்ளமென்னும் மாளிகையில்.** குகனேந்திரன். யாழ்ப்பாணம்: நிலா மலர் வெளியீடு, காங்கேசன்துறை சாலை, கொக்குவில், 1வது பதிப்பு, வைகாசி 2002. (யாழ்ப்பாணம்: ஷாமளி அச்சகம்).

(4), 203 பக்கம், விலை: ரூபா 95.00, அளவு: 16.5x12.5 சமீ.

யாழ்ப்பாணச் சமூகச் சூழலில் எழுதப்பட்டுள்ள இந்நாவல் பெண்மை பற்றியும் பெண்களின் சமகால வாழக்கைப் பிரச்சினைகள் பற்றியும் பதிவுசெய்கின்றது. தாய்மையின் புனிதத்தன்மையை வணங்கி வரவேற்கிறது. கல்விகற்றுத் தொழில்வாய்ப்பில் முன்னேறி ஆணுக்குச் சமனாக உழைப்பை வழங்கும் முற்போக்குச் சிந்தனை கொண்ட பெண்களும் இந்நாவலில் உலாவருகின்றனர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 33950).

### 12820

**உன்னைச் சரணடைந்தேன் (நாவல்).** லதா உதயன். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல. 7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2015. (சென்னை 94: ஸ்கிரிப்ட் ஆப்செட்).

xiv, 166 பக்கம், விலை: இந்திய ரூபா 100., அளவு: 21x14 சமீ.

யாழ்ப்பாண மாவட்டத்தின் வடமராட்சியில் உள்ள சுப்பர்மடம் கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட லதா உதயன் 20 ஆண்டுகளுக்கும் மேலாக சுவிட்சர்லாந்தில் புலம்பெயர்ந்து வாழ்கின்றார். கவிதைத் துறையில் ஈடுபாடு மிக்க இவரது முதலாவது நூலாக ஒரு நதியின் தேடல் என்ற சிறுகதைத் தொகுப்பே வெளிவந்தது. தாய் மண்ணின் நினைவுகளையும் புலம்பெயர் வாழ்வின் அனுபவங்களையும் அழியாக் காதல் ஒன்றையும் கருவாக்கி இந்நாவலைப் படைத்துள்ளார். இவரது நாவல் உள்ளிட்ட அனைத்துப் படைப்புகளிலும் தாயக உணர்வினையும் தாய் மண்ணை இழந்து வந்த ஏக்கத்தையும் மண்ணின் மக்கள் அங்கு சுமக்கும் வலிகளையும் உணரமுடிகின்றது.

### 12821

**கருணை நதி (நாவல்).** கானவி (இயற்பெயர்: த.மிதிலா). வவுனியா: த.மிதிலா, 160, வைத்தியசாலை வீதி, 1வது பதிப்பு, 2013. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

xiii, 114 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 18x12 சமீ., ISBN: 978-955-44428-0-1.

போர்ச் சூழலில் நின்று மக்கள் துயர் துடைத்த மருத்துவப் பணியாளர்களின் கருணை போற்றுதற்குரியது. அந்த வகையில் முள்ளிவாய்க்கால் மக்களின் பேரவலமும் மருத்துவப் பணியாளர்களது அர்ப்பணிப்பான சேவையும் இவரது குறுநாவலில் யதார்த்தமாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளது. மருத்துவத்துறையில் anaesthesist பணியில் சேவையாற்றும் த.மிதிலா தனது வன்னிப் பிராந்திய மருத்துவ அனுபவங்களின் பின்னணியில் இந்நாவலை எழுதியுள்ளார். காதலின் ஏக்கமும் தேடலுமே கதையின் கருவாக விரிந்திருந்தாலும், அதன் பின்னணியில் மருத்துவப் பணியின் மனிதநேய அணுகுமுறையே கருணை நதியாகப் பிரவாகிக்கின்றது. 20 அத்தியாயங்களில் எழுதப்பட்ட நாவல். திவா என்ற ஆணின் முகாம் வாழ்க்கையின் சங்கடமான நிலைமைகளை விளக்குவதுடன் தொடங்குகின்றது. அவனுக்குத் தெரிந்த ஒரு பெயரறியாப் பெண்ணை (சங்கவி) முகாமில் தேடிவருகின்றான். முகாமிலிருந்து வெளியேறிய அவனுக்கு வவுனியாவில் ஒரு வேலை கிடைக்கிறது. வேலையுடன் சங்கவியைத் தேடிச் சந்திக்கிறான். தன் உள்ளக்கிடக்கையை கடிதம் மூலம் வெளியிடத் துணிந்தாலும் அவனால் தொடர முடியவில்லை. யுத்த களங்களின் யதார்த்தநிலை கதையின் மூலம் வெளிப்படுத்தப்படுகின்றது என்ற வகையில், இது நல்லதொரு போர்க்காலப் படைப்பிலக்கியமாகும். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 233026 CC).

### 12822

**கரையைத் தேடும் கட்டுமரங்கள் (நாவல்).** கே.எஸ்.பாலச்சந்திரன். சென்னை 600078: வடலி, எண். 6/3, சுந்தரர் தெரு, எம்.ஜி.ஆர். நகர், 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2009. (அச்சக விபரம் தரப்படவில்லை).

305 பக்கம், விலை: இந்திய ரூபா 200., அளவு: 21x13.5 சமீ., ISBN: 978-81-90840-50-7.

தொண்ணூறுகளின் ஆரம்பத்தில் எழுதப்பட்ட இந்நாவல் அதற்கும் ஒரு தசாப்தம் முந்திய 1979-80 ஆண்டுக்காலப் பகுதியை பதிவுசெய்ய முற்பட்டுள்ளது. "மான் பாய்ஞ்ச வெளி" கிராமத்தில் மீனவ சமூகத்தில் கதை களம்கொள்கின்றது. சம்மாட்டி மரியாம்பிள்ளை, தாய் மதலேனாள், அந்தோனி, அவனது தங்கை எலிசபெத், சின்னத் தங்கை மேரி, இளம் விதவையான ஸ்ரெல்லா எனத் தொடரும் பாத்திரங்கள் உயிரோட்டமாக இந்நாவலில் உலாவருகின்றன.

### 12823

**குறிஞ்சிக் குமரிகள்(நாவல்).** எஸ்.புஷ்பராஜன். யாழ்ப்பாணம்: புஷ்பராஜா துஜீஸ்காந்த், 1வது பதிப்பு, ஜனவரி 2018. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ மாருதி பிரின்டர்ஸ், 555, நாவலர் வீதி).

xx, 125 பக்கம், தகடுகள், சித்திரங்கள், விலை: ரூபா 400., அளவு: 20.5x14.5 சமீ.

மருதமும் நெய்தலும் கைகோர்த்துச் சிரிக்கும் யாழ்நகரின் அரியாலைக் கிராமத்தைச் சேர்ந்தவர் புஷ்பராஜன். குறிஞ்சிக் குமரிகள் என்ற இந்த இலக்கிய நாவலில் மருதம், முல்லை, குறிஞ்சி, நெய்தல், பாலை ஆகிய ஐந்துவகை நிலங்களிலும் வாழ்கின்ற மக்களின் வாழ்வியலை இந்நூலில் அப்படியே படம்பிடித்துக் காட்டுகின்றார். அந்நிலங்களின் அழகியலையும் துன்பியலையும் சித்திரிக்கும் கதையோட்டம் கொண்ட நாவல் இது. நான்கு குறிஞ்சிக் குமரிகளின் கதையாக இந்த நாவலின் களங்கள் விரிகின்றன. தம் அன்னையரைப் போன்று தம்மைப் பெற்றெடுத்ததன் மூலம் கன்னித் தாயாக நேரிட்டது போன்று தொடர்ந்தும் குறிஞ்சிக்கு இந்த நிலை வரவேண்டாம் எனப் புறப்படுகின்றனர் குறிஞ்சிக் குமரிகள். முருகக் கடவுளையும் அவர்தம் மனைவி வள்ளியையும் அறிந்த நாம் குறிஞ்சிக் குமரிகளின் ஊடாக குறிஞ்சி நிலத்தின் இன்னொரு தரிசனத்தையும் இந்நாவலில் பார்க்கலாம். கோதை, குயிலி, அருந்ததி, அகலிகை, மேனகை போன்ற பாத்திரங்களுடன் மருதபிள்ளை, வண்ணன், கமலன், முகுந்தன், குமரன், மகிந்தன் போன்ற ஆண் பாத்திரங்களையும் உலவவிட்டுள்ளார். கதையின் நாயகி குயிலி, நாவல் முழுவதும் உலாவந்து குறிஞ்சிக் குமரிகளைத் தத்தம் கணவர்களுடன் இணைத்துவைக்க முயல்கின்றாள். தன் மூதாதையரின் துயர்களை ஏற்கெனவே நன்கறிந்த அவள், அடுத்த தலைமுறைக்கும் அது பரவாமல் அத்துயர்களைத் துடைத்தெறியும் வீறுடன் இலட்சிய வேட்கைகொண்டு, தோழியருடன் முறையான திட்டமிடலுடன் மேற்கொண்ட பயணம் கதையை விறுவிறுப்பாக்குகின்றது. ஒவ்வொரு நிலமாகச் சென்று ஆங்காங்கே சந்திக்கும் பாத்திரங்களினூடாக பிரச்சினைகளை அணுகி, அவற்றுக்கான தீர்வினைக் கண்டு, தாம் கொண்ட

இலட்சியத்தில் வெல்வதாகக் கதை சொல்லப்படுகின்றது. நெய்தல் நிலத்துக் கமலனுடன் குறிஞ்சி நிலத்துக் குமரிகளில் ஒருத்தியான அருந்ததியின் காதலும் களவொழுக்கமும் சொல்லப்படுகின்றன. கமலனின் இறப்பும் அருந்ததியின் தொடரும் துயரும் கதையில் வருகின்றது. கூடவே அகலிகை, மேனகை ஆகிய குறிஞ்சிக் குமரியர்களின் காதல்களும் சொல்லப்படுகின்றன. கன்னியரின் காதல்களும் திருமணம் முடித்துவாழ வேண்டுமென்ற ஏக்கங்களும் கதைகளாக - காவியங்களாக இங்கே நீள்கின்றன. குறிஞ்சி நிலத்தில் திருமணமாகாமல் கன்னியர் சேர்ந்து தாய்மையடைவதும், கன்னித்தாய்கள் திருமணமாவதற்கு ஏங்குவதும் இக்காவியத்தின் பேசுபொருளாகின்றன.

## 12824

**சூனியத்தை நோக்கி.** ஜுனைதா ஷெரீப். காத்தான்குடி: ஜுனைதா ஷெரீப், 27, லேக் றைவ், 1வது பதிப்பு, 2017. (கொழும்பு 10: யூ.டீ.எச்.கம்ப்யுபிரின்ட், 51/42, மொஹிதீன் மஸ்ஜித் வீதி).

xiii, 210 பக்கம், விலை: ரூபா 450., அளவு: 21x14 சமீ., ISBN: 978-955-38432-0-3.

வடக்கிலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்ட வரலாற்றுச் சோகத்தைப் பின்னணியாகக் கொண்டு இந்த நாவல் எழுதப்பட்டுள்ளது. யாழ்ப்பாண நகரின் "சோனகத் தெரு"வில் வாழும் குடும்பமொன்றின் கதையாக இந்நாவல் தொடர்கின்றது. அங்குள்ள பள்ளிவாசல்கள், கடைத்தெரு, மக்களின் வாழ்க்கை முறை என்பன இலக்கியநயத்துடன் விவரிக்கப்பட்டுள்ளன. சாவகச்சேரியில் வசிக்கும் மற்றொரு குடும்பம் சோனகத் தெரு வியாபாரத்தோடு மட்டுமல்லாமல் குடும்ப உறவாகவும் மாறுகின்றது. குடும்பத்தின் புதிய தலைமுறைக்குள் உருவாகும் காதலும் இக் கதையை சுவாரஸ்யமாக்குகின்றது. நம்பிக்கைக்குரிய தமிழர்கள் உறவும் சிங்கள நண்பர்களின் உறவும் இணைந்த யாழ்ப்பாணத்து முஸ்லிம்களின் வாழ்க்கை நாவலின் முதற்பாகத்திலும், யாழ்ப்பாணத்திலிருந்து இருமணிநேர அவகாசத்தில் முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்பட்ட அவலம் இரண்டாவது பாகத்திலும் விரிகின்றது. அகதி வாழ்க்கையில் அவர்கள் பட்ட அவஸ்தை, அவலம் என்பன இரண்டாம் பாகத்தை உணர்ச்சிபூர்வமாக்குகின்றது. எப்படி யாயினும் இந்தக் கொடூரமான துயரத்தினூடாகவும் யாழ்ப்பாண மக்களின் வாழ்வோடு ஒன்றித்திருக்கும் உழைப்பும் கல்வியும் தளராத தன்னம்பிக்கையும் நாவலின் கதாபாத்திரங்களினூடாக சிறப்பாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 261874CC).

## 12825

**புகையில் தெரிந்த முகம்.** அ.செ. முருகானந்தன். கொழும்பு: நவலட்சுமி புத்தகசாலை, 136 செட்டியார் தெரு, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1950. (கொழும்பு: சுதந்திரன் அச்சகம்).

viii, 48 பக்கம், விலை: 50 சதம், அளவு: 18x12 சமீ.

கொழும்பிலிருந்து வெளிவந்த சுதந்திரன் வார இதழில் தொடராக வெளிவந்த நாவல். இந்நாவலின் கதை சொல்லியான ராமலிங்கம் சுருட்டொன்றைப் பற்ற வைத்துக்கொண்டு சாய்வு நாற்காலியில் சாய்ந்திருக்கின்றார். புகையை வட்ட வட்ட வளையங்களாக விட்டுக்கொண்டிருக்கின்றார். அச்சமயம் அச்சுருட்டுப் புகையினூடு அழகிய முகமொன்று தெரிகின்றது. அந்த முகத்துக்குரியவள் வேறு யாருமல்லள். புகையிலை வியாபாரி பொன்னுச்சாமியின் மகளான காந்திமதியே அவள். காந்திமதியையும் அவளது அத்தானான காதலன் முருகேசனையும் அவர்களது காதலை எதிர்த்து, பொன்னுச்சாமி கொன்று புதைத்து விடுகின்றார். புதைகுழியின் மீது தென்னம்பிள்ளையொன்றையும் நாட்டி வளர்த்து விடுகின்றார். அவ்விதம் அவரால் கொல்லப்பட்ட அவரது மகளான காந்திமதியும், அவளது காதலனான முருகேசனும் கதை சொல்லியான ராமலிங்கத்துக்குத் தங்களது கதையினைக் கூறுவதாக நாவல் நகர்த்தப்படுகின்றது. (இந்நூல் நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 000168).

### 12826

**பேஸ்புக்கில் அந்த அழகிய முகம்**.வி.ஜனகன். கொழும்பு: மஸ்ட்ரோ மயின்ட்ஸ் பிரைவேற் லிமிட்டெட், 1வது பதிப்பு, நவம்பர் 2016. (கொழும்பு: தேவி அச்சகம்).

170 பக்கம், விலை: ரூபா 325.00, அளவு: 21x14 சமீ., ISBN: 978-955-725-500-2.

"உங்களை நீங்கள் விரைவில் அறிந்துகொள்ளத் தவறுவீர்களானால் வேறு ஒருவர் உங்களை தனது அடையாளத்திற்காக பயன்படுத்திக்கொள்வார்" என்ற அறிவுரையை இந்நாவல் வழியாகச் சொல்லமுனைகிறார் இந்நாவலாசிரியர். யாழ். இந்துக் கல்லூரி, கொழும்பு இந்துக் கல்லூரி, கொழும்புப் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் கற்றுத்தேர்ந்து IDM நிறுவனத்தில் பிரதம நிறைவேற்று அதிகாரியாகப் பணியாற்றும் ஜனகனின் இலக்கியப்பாதை பள்ளிப்பருவத்தில் கையெழுத்து நூல்களை எழுதுவதில் தொடங்கியுள்ளதாகக் குறிப்பிடுகின்றார். தற்கால இளைஞர்களை கவரும்வகையில் தமிழ் ஆங்கில உரைநடையில் கலந்து எழுதப்பட்டுள்ள நாவல் என்ற வகையில் இது வித்தியாசமானதொரு முயற்சி. உதாரணத்துக்குச் சில வரிகள்: "பொதுவாகவே மென்நிற shirtகளை மட்டுமே விரும்பி அணியும் அனந்தயன் இன்றும் மெல்லிய நீலநிற "Mark & Spencer" brand shirt ஒன்றினை அணிந்திருந்தான். நிச்சயமாக அவன் London இற்குப் போனதே இல்லை. ஆனால் அந்த London brand shirt இனை அவனுடைய நண்பனே London இல் இருந்து அவனுடைய பிறந்த நாள் பரிசாக அனுப்பியிருந்தான்". (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 61520).

### 12827

**பொய்மையும் வாய்மையிடத்து (நாவல்).** ஞானம் பாலச்சந்திரன். கொழும்பு 6: ஞானம் பதிப்பகம், 3B, 46வது ஒழுங்கை, 1வது பதிப்பு, டிசம்பர் 2017. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளூமெண்டால் வீதி).

viii, *128 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 21*x*14.5 சமீ.*, ISBN: *978-955-8354-79-7.*

*புத்தர் பிறந்த புண்ணிய பூமியாகக் கருதப்படும் நேபாளத்தில் தொடங்கும் இந்நாவல் அவரின் "தந்ததாது" பாதுகாக்கப்பட்டுவரும் கண்டியிலே நிறைவு பெறுகின்றது. நாவலின் புதிய விரிவுகளின் வழியே உறவாடும் ஞானம் பாலச்சந்திரனின் இப்படைப்பு, இலக்கியவெளியில் இன்று மறக்கப்பட்டுவிட்ட "சித்திரக்கவிகள்", அதில் உள்ளடங்கிய ஆழ்ந்த கருத்துக்கள், புத்தரின் புனிதச் சின்னமான தந்த தாதுவின் வரலாற்றுப்பதிவுகள், இன்றைய நவீன எண்ணிம/ கணனி யுகத்துடன் இணைந்த புலனாய்வின் நீட்சிகள் என்பவற்றோடு சுவையானதொரு துப்பறியும் நாவலாக விறுவிறுப்புடன் விரிகின்றது. யாவும் கற்பனை என்றில்லாது, அறிவியலை மக்களிடம் கொண்டுசேர்க்கும் ஒரு ஊடகமாக இந்நாவலை ஆசிரியர் பயன்படுத்தியுள்ளார். முன்னதாக இவர் எழுதிய பாரிய கவித் தொகுப்பு நூலான "சித்திரக்கவிகள்" என்ற இலக்கிய நூலில் தொகுக்கப்பட்டிருந்த நம்முன்னோர் எழுதிய சித்திரக்கவிகள் பற்றிய சிக்கலான புராதன வரலாற்றை மக்களிடம் எடுத்துச்சொல்வதற்கானதொரு எளிமைப்படுத்தப்பட்ட முன்னுரையாகவும் இந்நாவலை நாம் கொள்ளலாம். "இந்நாவல் கதையுரைப்பின் வடிவம் புனைவு மற்றும் புனைவு அல்லாதது என்ற இரண்டினுக்குமிடையேயுள்ள எல்லைகளைத் தகர்த்து விடுகின்றது. இந்த ஆக்கத்தில் இடம்பெறும் அமைவிடங்களும் நூல்களும் நிஜமானவையென்றும், பாத்திரங்களும் சம்பவங்களும் கற்பனையானவை என்றும் கூறப்படுதல், இருநிலைத் தொடர்பு சார்ந்த பிரிகோடுகளின் உள்ளே நிகழும் ஊடாட்டங்களைக் குறிப்பிடும் முற்கோப்பாகவுள்ளது. புனைவில் ஆவணங்களை உட்செலுத்தும் போதும் மறுபுறம் ஆவணங்களில் புனைவை உட்செலுத்தும்போதும், அது ஆவணப் புனையமாக மாற்றம் பெறும். ஆவணத்தை உட்புகுத்துகையில் புலமை நேர்மை என்பது பராமரிக்கப்படுதல் இந்த ஆக்கத்துக்குரிய தனித்துவம் எனலாம்" என்ற பேராசிரியர் சபா.ஜெயராசா அவர்களின் அணிந்துரை வரிகள் இந்நாவல் பற்றிய பார்வையை எமக்கு விரிவுபடுத்துகின்றன.*

### 12828

**போரும் மனிதனும்.** *ஏ.ஏ.ஜெயராஜா. வத்தளை: எம்.எம். பப்ளிக்கேஷன்ஸ், 1026/3, ரைபிள் ரேஞ்ச் வீதி, ஹுணுப்பிட்டி, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1991. (அச்சக விபரம் தரப்படவில்லை).*

*(6), 28 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18*x*13 சமீ.*

*1986இல் எழுதப்பட்ட இந்நாவலில் ஒரு சிங்களப் போர்வீரன் யாழ்ப்பாணத்துத் தமிழ்ப் பெண்ணொருத்தியைக் காதலித்து, அவளை ஒரு குழந்தைக்குத் தாயாக்கிவிட்டு தன் ஊருக்கு வந்து வேறொரு சிங்களப்பெண்ணை மணந்து விடுகிறான். பின்னாளில் அந்தத் தமிழ்த் தாயின் மகனும், இந்தச் சிங்களப் போர்வீரனின் மகனும் வன்னிக் காடுகளில் எதிரெதிர் நிலைகளில் நின்று போரிட்டு ஒருவரை ஒருவர் கொல்லமுயல்கின்றனர். இறுதியில் சிங்களப் போர்வீரன் தன் தமிழ்ச் சகோதரனைக் கொன்றுவிட்டு, அவனது உடலைத் தன் தந்தையின்*

*காதலியான அத்தமிழ்த்தாயிடம் ஒப்படைக்கிறான். இதுதான் கதையின் கற்பனை. இக்கதையின் துணைகொண்டு ஆசிரியர் மானிட வாழ்வின் அர்த்தங்களைத் தேட முயற்சித்துள்ளார். (இந்நூல் நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 000800).*

**போரும் மனிதனும்.** *அனிஸ்டஸ் ஜெயராஜா. கொழும்பு 6: பூங்காற்றுப் பதிப்பகம், 59, 1/1, ஹைலெவல் வீதி, கிரில்லப்பனை, 2வது பதிப்பு,செப்டெம்பர் 2011, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1991. (அச்சக விபரம் தரப்படவில்லை).*

xvi, *46 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 18*x*13 சமீ.,* ISBN: *978-955-0700-00-4.*

*இந்நூலில் முதற்பதிப்பு 1994 என்று தவறாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. நூலாசிரியர் திருக்கோணமலை மாவட்டத்தில் மூதூர் பிரதேசத்தைச் சேர்ந்தவர். செகுவேரா, அப்பா ஆகிய நாவல்களை முன்னர் வழங்கியவர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 54051).*

### 12829

**மீண்டும் வசந்தம்.** *திருமலை வீ.என்.சந்திரகாந்தி. திருக்கோணமலை: ஜெயகாந்தி கலை கலாச்சார விளையாட்டு மேம்பாட்டுக் கழகம், 572/*A*, ஏகாம்பரம் வீதி, 1வது பதிப்பு, டிசம்பர் 2004. (திருக்கோணமலை: ரெயினிபோ மினிலாப், 361, நீதிமன்ற வீதி).*

*200 பக்கம், விலை: ரூபா 150., 20.5*x*14.5 சமீ.,* ISBN: *955-98979-0-*x.

*குடும்பத் தலைவன் ஒழுக்கம் தவறுதலும் குடும்பத்தினரின் தீயோர் சேர்கையும் தீமையையே அக்குடும்பத்தில் விளைவிக்கும் என்ற அறப்போதனையை இந்நாவல் வழங்குகின்றது. தொழில்புரி நிலையங்களில் புரையோடிக் கிடக்கும் ஆண்-பெண் மன அவசங்களை இக்கதை தெளிவாக வெளிப்படுத்துகின்றது. பல்வேறு திசைகளிலிருந்தும் நாவல் நகர்த்தப்படும் உத்தி கையாளப்பட்டிருக்கின்றது. ராஜநாதருக்கும் அவரது வங்கி ஊழியர் ஜூலிக்கும் இடையிலான முறையற்ற தொடர்பு அவரது முழுக் குடும்பத்தையும் சீரழித்து விடுவதே கதையின் கரு. திருக்கோணமலை நகரை கதைக்களமாகக் கொண்ட இந்நாவலில், வங்கி முகாமையாளர் ராஜநாதர், ஜூலி, நிலாவினி, சீதா ஆகிய பாத்திரங்கள் நாவலில் உயிரோட்டமாக அமைகின்றன. யாழ்ப்பாணம் அச்சுவேலியில் 28.12.1946இல் பிறந்த வீ.என்.சந்திரகாந்தி, திருக்கோணமலையைத் தன் வசிப்பிடமாக வரித்துக்கொண்டு திருமலை வீ.என்.சந்திரகாந்தியாக ஈழத்து இலக்கியத்துறையில் தடம்பதித்து வருபவர். இந்நாவலில் சுனாமி பற்றி எவ்வித செய்தியும் இல்லாத போதிலும், இந்நூல் உலகெங்கும் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கான காணிக்கையாக்கப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 153994*CC*).*

## 894.8(6) பொது இலக்கியக் கட்டுரைகள், திறனாய்வு

### 12830

**உரைநடை விருந்து.** நூல் வெளியீட்டுக் குழு. சுன்னாகம்: வட இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகம், 6வது பதிப்பு, 1957, 1வது பதிப்பு, 1953. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).

(6), 118 பக்கம், விலை: ரூபா 1.50, அளவு: 18x12.5 சமீ.

இலங்கைக் கல்விச் சேவையில் எஸ்.எஸ்.சீ./எச்.எஸ்.சீ தரங்களில் பயிலும் மாணவர்களுக்குப் பயன்படும் வகையில், தமிழறிஞர்களின் தமிழ் இலக்கியக் கட்டுரைகளைத் தாங்கி வெளிவந்துள்ள நூல். ஈழநாடும் தமிழகமும் (ரா. பி.சேதுப்பிள்ளை), ஊரைக் காத்த பாட்டி (சுத்தானந்த பாரதியார்), இரண்டு மனுஷர்கள் (சி.கணபதிப்பிள்ளை), சிந்தனா சக்திப் பயிற்சி 1 (பொ.திருகூடசுந்தரம்), சிந்தனா சக்திப் பயிற்சி 2 (பொ.திருகூடசுந்தரம்), இலங்கை ஆற்றுப்படை (சு.நடேசபிள்ளை), எனது யப்பான் யாத்திரை (ச.பேரின்பநாயகன்), இமயம் சேர்ந்த காக்கை (சுவாமி விபுலானந்தர்), கம்பர் காட்டும் பெண்கள் (கா. பொ.இரத்தினம்), யூலியஸ் சீசர் (வ.நடராஜன்) ஆகிய பத்துக் கட்டுரைகள் இத் தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 13608).

### 12831

**சங்க காலம் முதல் சமகாலம் வரை: சி.மௌனகுருவுடனான நாடகம் தவிர்ந்த நேர்காணல்.** செ.யோகராஜா. மட்டக்களப்பு: மகுடம் வெளியீடு, இல. 90, பார் வீதி, 1வது பதிப்பு, 2015. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

x, 124 பக்கம், விளக்கப்படங்கள், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14.5 சமீ.

ஈழத்தின் இரு ஆளுமைகள் சந்தித்துக்கொண்ட உரையாடலின் தொகுப்பு. இதுகாலவரையில் கூத்துக்கலையின் ஆளுமையாகக் கருதப்பட்ட பேராசிரியர் சி.மௌனகுருவின் பன்முகப் பரிமாணம் இங்கே விரிகின்றது. மட்டக்களப்பைப் பிறப்பிடமாகக்கொண்ட சி.மௌனகுரு பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தனது கலைமாணி, முதுமாணிப் பட்டங்களைப் பெற்றவர். கொழும்புப் பல்கலைக்கழகத்தில் கல்வி டிப்ளோமா பட்டத்தையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டத்தையும் பெற்றவர். அரங்கியலுக்கு அப்பால் அவரது இன்னொரு முக்கிய பரிமாணம் கல்வித் துறை சார்ந்தது. இலங்கையில் முக்கியத் தமிழ்ப் பல்கலைக்கழகங்கள் அனைத்திலும் அவர் பணியாற்றி பங்களிப்புகள் செய்தாரென்பதோடு கிழக்குப் பல்கலைக்கழக உருவாக்கத்திலும் வளர்ச்சியிலும் அவருக்குப் பிரதான பங்குண்டு. பேராசிரியரின் அடுத்த பரிமாணம் தமிழ் ஆய்வு சார்ந்தது. தமிழ் இலக்கிய வரலாறு, சங்க காலம் தவிர விபுலானந்தரின் கருத்துலகம் முதலான துறைகளில் அவரது பங்களிப்பு குறிப்பிடத்தக்கது. நீலாவணன், சுபத்திரன் முதலான ஈழத்துக் கவிஞர்களைத் தொடர்ந்து

பாரதிதாசனையும் தனது ஆய்வுக்கு எடுத்துக் கொண்டுள்ளார். இவருடனான நேர்காணலில் கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறைப் பேராசிரியர் செ. யோகராஜா நாடகம் தவிர்ந்த பிற சுவையான விடயங்களைத் தனது திறமையான தொடர்பாடலின் வழியாக வெளிக்கொணர்ந்திருக்கிறார்.

## 12832

**சுதந்திரத்திற்குப் பின் இலங்கை: ஒரு பன்முகப் பார்வை.** ம.சண்முகநாதன் (தொகுப்பாசிரியர்). கொழும்பு: இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், 98, வோட் பிளேஸ், 1வது பதிப்பு, ஒக்டோபர் 1998. (கொழும்பு 13: ஸ்பாட்டன் பிரெஸ், 154, ஆட்டுப்பட்டித் தெரு).

(6), 86 பக்கம், விலை: ரூபா 80., அளவு: 27x21.5 சமீ.

1998இல் இலங்கையில் பரவலாகக் கொண்டாடப்பட்ட இலங்கையின் சுதந்திரதினப் பொன்விழாவை (1948-1998) ஒட்டி வெளியிடப்பெற்ற கட்டுரைத் தொகுப்பு. இதில் சுதந்திரத்திற்குப் பின் இலங்கையின் பொருளாதார மாற்றங்கள் (நா.பாலகிருஷ்ணன்), இலங்கையின் சுதந்திரமும் மலையக மக்களின் அரசியல் நிலைப்பாடும் (சோ.சந்திரசேகரன்), இலங்கையில் சுதந்திரத்தின் பின்னர் ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள், மலையகத் தமிழ் மக்கள் வாழ்வில் ஏற்படுத்திய தாக்கங்களும் விளைவுகளும் (மா.செ.மூக்கையா), கடந்த ஐந்து தசாப்த ஈழத்துத் தமிழ் நாவல் துறையில் ஏறபட்ட மாற்றமும் வளர்ச்சியும் (க.குணராசா), சுதந்திரத்திற்குப் பின் ஈழத்துக் கவிதை மாற்றமும் வளர்ச்சியும் (செ.யோகராசா), சமகால ஈழத்தமிழ்ச் சிறுகதைகள்-ஒரு பார்வை (ந.இரவீந்திரன்), இலங்கை சுதந்திரம் பெற்றபின் தமிழ் நாடகத்துறையில் ஏற்பட்ட மாற்றமும் வளர்ச்சியும் (காரை.செ.சுந்தரம்பிள்ளை), யோக சுவாமிகள் ஆன்மீக வாழ்வில் ஏற்படுத்திய தாக்கம் (க.ந.வேலன்), பாரம்பரிய சமயமும் நவீன சமயமும் (குமாரசாமி சோமசுந்தரம்), அறநெறிக் கல்வியின் தேவையும் வளர்ச்சியும் (சாந்தி நாவுக்கரசன்) ஆகிய 10 கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 17450).

## 12833

**செல்லப்பாக்கியம் மாமியின் முட்டிக் கத்தரிக்காய் (புனைவுக் கட்டுரை).** ஆ.சி. கந்தராஜா (பதிப்பாசிரியர்). கொழும்பு 6: ஞானம் பதிப்பகம், 3B, 46வது ஒழுங்கை, 1வது பதிப்பு, 2017. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளூமெண்டால் வீதி).

xx, 112 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 21x15 சமீ., ISBN: 978-955-8354-53-7.

"ஆ.சி.கந்தராஜா என்ற அறிவியல் அறிஞனின் ஆக்கங்கள் நமக்கு அவசியம் வேண்டுபவை. அவை அறிவியலைக் கூற முனைந்தபோதும் அதனுள்ளே மொழி, பண்பாடு என்ற விடயங்கள் தேங்கி நிற்கின்றன. அவை இலகு நடையில் நகைச்சுவை கலந்து விளங்கவைப்பவை. அவற்றை வெறும் அறிவியலாகவோ அல்லது புனைவாகவோ கொள்ள முடியவில்லை. இரண்டும் கலந்த கலவை. அறிவியல் உண்மைகளைத் தான் சார்ந்த பண்பாட்டுக் கோலங்களை மிக

*நுணுக்கமாகப் பயன்படுத்தி அந்த பண்பாட்டிற்கேயுரிய மொழி வழக்குகளைச் சேகரம் செய்தும் பதிவிட்டும் தருகின்ற புதிய புனைவு உத்தி, புதிய வரவு இது" (வ.மகேஸ்வரன், முன்னுரையில்). இந்நூலில் ஆசிரியரின் புனைவுக்கட்டுரைகளான செல்லப்பாக்கியம் மாமியின் முட்டிக்கத்தரிக்காய், ஒட்டுக் கன்றுகள், மரங்களும் நண்பர்களே, வீரசிங்கம் பயணம் போகிறார், விலாங்கு மீன்கள், என்.பி.கே., மைனாக்கள், தம்பித்துரை அண்ணையும் பேரனும் ஐந்து ஐமிச்சங்களும் ஆகிய எட்டு படைப்பாக்கங்கள் இடம்பெற்றுள்ளன.*

## 12834

**தடங்களைக் கடந்துசெல்லும் காலநதி.** *க.நவம். வல்வெட்டித்துறை: நான்காவது பரிமாணம், தெணியகம், பொலிகண்டி, 1வது பதிப்பு, 2017. (பருத்தித்துறை: பரணி அச்சகம், நெல்லியடி).*

*116 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 300., அளவு: 18.5*x*13 சமீ.,* ISBN: *978-955-7295-03-9.*

*உலகப் பொது விடயங்கள் பலவற்றையும் சாதாரண வாசகனும் படித்துப் பயனுறும் வகையில் சிக்கலின்றி இலகு தமிழில் பேசும் நூல் இது. முழு மானுடத்தினதும் முன்னேற்றம், மேம்பாடு, அபிவிருத்தி என்பன குறித்து அக்கறையுடன் அலசி ஆராயும் ஒரு நூல். அடையாளம், பண்பாட்டு அபகரிப்பு, மாஸ்ரர் படும் பாடு, கனடாவில் பன்முகப் பண்பாடு: ஒரு நாற்பது வருட நடைப்பயணம், கேடாகிப் போன கேலிச்சித்திரம், ஈழத்தமிழ்க் கனடியர்களின் தவிப்பும் தன்முனைப்பும், நேசித்தால் நெஞ்சிலிருப்பேன் தூஷித்தால் நினைவிலிருப்பேன், சாமானிய நோக்கில் சமஷ்டி, பால்- நிறம்- வெள்ளை, தமிழரின் சமூக ஊடாட்டங்களில் உடல் பற்றிய கருத்தியல், கறுப்பு உயிர்களும் உயிர்களே, தீவிரவாதமும் தீக்கோழி மனோபாவமும் ஆகிய பன்னிரண்டு கட்டுரைகளை ஆசிரியர் இந்நூலில் தொகுத்தளித்திருக்கின்றார்.*

## 12835

**தமிழ் ஆய்வுச் சிந்தனைகள்: மொழி-இலக்கியம்-பண்பாடு.** *பொ.பூலோகசிங்கம் (மூலம்), முருகேசு கௌரிகாந்தன் (தொகுப்பாசிரியர்). கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு 2017. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).*

xx, *362 பக்கம், விலை: ரூபா 750., அளவு: 22*x*14.5 சமீ.,* ISBN: *978-955-659-553-6.*

*பேராசிரியர் பொ.பூலோகசிங்கம் அவர்கள் தமிழியல் ஆய்வில் மிகுந்த ஆர்வமும் ஆழ்ந்த புலமையும் கொண்டவர். இவரால் எழுதப்பட்ட 37 கட்டுரைகளின் தொகுப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது. ஈழத்து இலக்கிய வரலாறு, தமிழக இலக்கிய வரலாறு, மொழியியல், சமயம், தத்துவம், பண்பாடு எனும் விடயங்களை சம்பந்தப்பட்ட உள்ளடக்கங்களை இந்நூலில் உள்ள கட்டுரைகள் கொண்டுள்ளன. பேரா.பூலோகசிங்கம் வவுனியா செட்டிகுளத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். யாழ்.சம்பத்திரிசியார் கல்லூரியின் பழைய மாணவர். இலங்கைப் பல்கலைக்*

கழகத்தின் பேராதனை வளாகத்தில் தமிழைச் சிறப்புப் பாடமாகக் கற்று 1961இல் முதல்வகுப்பில் சித்தியெய்தியவர். இலங்கைப் பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளராக 1965இல்இணைந்து கொழும்பு, களனிப் பல்கலைக்ககழகங் களிலும் நிறைவாக, பேராதனைப் பல்கலைக்கழகத்திலே 1997இல் இணைப் பேராசிரியர் பதவியை விட்டு விலகும்வரை பணியாற்றியவர். இலங்கை அரசினால் வழங்கப்பெறும் "கலாகீர்த்தி" பட்டத்தை 1993இல் பெற்றவர். இந்நூலின் பதிப்பாசிரியர் மு.கௌரிகாந்தன் பேராதனைப் பல்கலைக்கழகத்திலே முதுகலைமாணிப் பட்டத்தினையும் கொழும்புப் பல்கலைக்கழகத்திலே பட்டப்பின் கல்வி டிப்ளோமா பட்டத்தையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலே முதுகல்விமாணிப் பட்டத்தையும் பெற்றவர். யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் சிரேஷ்ட விரிவுரையாளராகப் பணியாற்றி வருகிறார்.

## 12836

**தமிழ்க் கலைக் கோவை.** கலைவாணி பதிப்பகம். யாழ்ப்பாணம்: கலைவாணி புத்தக நிலையம், 1வது பதிப்பகம், பெப்ரவரி 1962. (யாழ்ப்பாணம்: கலைவாணி அச்சகம்).

176 பக்கம், விலை: ரூபா 2.50, அளவு: 18x12 சமீ.

கலைவாணி புத்தக நிலையத்தினரால் தொகுக்கப்பெற்ற கட்டுரைத் தொகுப்பு இது. இதில் அருவி ஓசை (கி.வா.ஜகந்நாதன்), தமிழ்நாட்டில் ஓவியக்கலை (க.நவரத்தினம்), தமிழர் பண்பாடு-ஆடையும் அணியும் (ரா.பி.சேதுப்பிள்ளை), அறிவியல் (பெ.நா.அப்புஸ்வாமி), காப்பியக் கவிஞர் வீரமாமனிவர் (தனிநாயக அடிகள்), சீதை (இரத்தினம் நவரத்தினம்), பண்டை விளையாட்டுக்கள் (கோ. சுப்பிரமணியபிள்ளை), ஐயோ யமனே (அ.ச.ஞானசம்பந்தன்), முத்தமிழ் (வி. கோ.சூரியநாராயண சாஸ்திரி), புறநானூற்றில் ஒரு பாட்டு (வி.செல்வநாயகம்), பொத்தகுட்டன் (மயிலை-சீனி வெங்கடசாமி), உருசியாவின் கல்வித் திட்டம் (கா.பொ.இரத்தினம்), சிறு கதை (அகிலன்), நாட்டுக்கூத்து (அருள். செல்வநாயகம்), தமிழ்நாட்டுப் பெண்பாலார் (உ.வே.சாமிநாத ஐயர்), மக்கள் கடமை (மறைமலை அடிகள்), பொற்கொல்லன் (ஆ.சிவலிங்கனார்) ஆகிய தேர்ந்த 17 கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.(இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 2596).

## 12837

**திருக்குறள் ஆய்வுரை: பாகம் 2.** ஆ.வடிவேலு. பருத்தித்துறை: ஆ.வடிவேலு, ஓய்வுநிலை அதிபர், 1வது பதிப்பு, ஆனி 2013. (பருத்தித்துறை: தீபன் பதிப்பகம், பிரதான வீதி).

xxx, 108 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 20x14 சமீ., ISBN: 978-955-44548-1-1.

திருக்குறள் பற்றிய ஆய்வுக்கட்டுரைகளை உள்ளடக்கிய நூல் இது. அறநூல் களைப் படிப்பதிலிருந்து பின்வாங்கிவரும் ஒரு இளைய தலைமுறையினரை மீளவும் அந்நூல்களின்பால் அக்கறைகொள்ளச்செய்யும் நோக்கம் இந்நூலின்

உருவாக்கத்தின் பின்புலமாயமைந்துள்ளது. இவ்விரண்டாம் பாகத்தில் தேர்ந்தெடுத்த 27 குறள்களைக் கொண்ட ஆய்வுக் கட்டுரைகள் உள்ளன. அறத்துப்பாலில் 17 குறள்களும் பொருட்பாலில் 10 குறள்களும் எடுத்தாளப் பட்டுள்ளன. குறள் கூறுகின்ற அறிவுரைகளும், அறவுரைகளும் அறிவை வளர்ப்பதோடு, ஒழுக்கத்தையும் வாழ்க்கை நலத்தையும் உயர்த்தும் தன்மை வாய்ந்தவை. அந்தக் குறள்நெறிகளைப் புரிந்துகொண்டு வாழ்வை வளமாக்க இந்நூல் உதவுகின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 53207).

## 12838

**திருக்குறள்-ஒழிபியல்: பரிமேலழகர் உரை விளக்கம்.**பண்டிதமணி மு.கந்தையா. யாழ்ப்பாணம்: ஏழாலை கலாநிதி பண்டிதர் மு.கந்தையா நூல்வெளியீட்டுக் கழகம், 1வது பதிப்பு, பெப்ரவரி 2000. (யாழ்ப்பாணம்: சாந்தி அச்சகம்).

xvi, 193 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 20.5x14.5 சமீ.

இந்நூலில் திருக்குறள் ஒழிபியலுக்கு பரிமேலழகர் வழங்கிய உரைக்கான பண்டிதமணி மு.கந்தையா வழங்கிய விளக்கம் இந்நூலில் விரிவாக பதிவு செய்யப்பட்டுள்ளது. அதிகாரம் 96 (குடிமை), அதிகாரம் 97 (மானம்), அதிகாரம் 98 (பெருமை), அதிகாரம் 99 (சான்றாண்மை), அதிகாரம் 100 (பண்புடைமை), அதிகாரம் 101 (நன்றியில் செல்வம்), அதிகாரம் 102 (நாணுடைமை), அதிகாரம் 103 (குடிசெயல்வகை), அதிகாரம் 104 (உழவு), அதிகாரம் 105 (நல்குரவு), அதிகாரம் 106 (இரவு), அதிகாரம் 107 (இரவச்சம்), அதிகாரம் 108 (கயமை) ஆகியவற்றுக்கான குறள் விளக்கம் தரப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 37996).

## 12839

**திருக்குறள் நெறியில் இலக்கியச் சிந்தனைகள்.** நா.நல்லதம்பி. சாவகச்சேரி: நா.நல்லதம்பி, மட்டுவில் வடக்கு, 1வது பதிப்பு, ஜனவரி 2011. (கொழும்பு 11: அனுஷ் பிரின்டர்ஸ்).

xiv, 153 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 19x12.5 சமீ.

தென்மராட்சி- மட்டுவில் கிராமத்தில் 1928இல் பிறந்த ஆசிரியதீபம் நா.நல்லதம்பி, ஈழத்துத் தமிழ் இலக்கிய உலகில் நன்கறியப்பெற்ற மூதறிஞர். "இலக்கிய அமுதம்" முதலான பன்னூலாசிரியர். இந்நூலில் இல்லச் சிறப்பு முதல் காதலும் கண்ணும் என்பது வரை ஐம்பது தலைப்புகளில் திருக்குறளின் புலமைக் கருத்துக்கள் காணப்படுகின்றன. குறள்களின் துணைகொண்டு எழுதப்பட்ட இக்கட்டுரைகளில் புராணங்கள், இதிகாசங்கள், காப்பியங்கள், நீதிக்கதைகள், முதலானவற்றின் உயரிய கருத்துக்களும் பொருத்தமாகச் சேர்க்கப்பட்டுள்ளன. அறநூல்களைப் படிப்பதிலிருந்து பின்வாங்கிவரும் ஒரு இளைய தலைமுறையினரை மீளவும் அந்நூல்களின்பால் அக்கறைகொள்ளச்செய்யும் நோக்கம் இந்நூலின் உருவாக்கத் தின் பின்புலமாயமைந்துள்ளது. இந்நூலில் எடுத்தாளப்பட்டுள்ள குறட்பாக்களும்

பெரும்பாலும் எமது அன்றாட வாழ்வோடு தொடர்புபட்டவையாக அமைந்துள்ளன. இந்நூல் ஆசிரியதீபம் நா.நல்லதம்பி, திருமதி ந.இரத்தினபூரணம் ஆகியோரின் பவளவிழாவையொட்டி வெளியிடப்பட்டுள்ளது.

### 12840

**திருக்குறள் (பொழிப்புரை).** சொக்கன் (இயற்பெயர்: க.சொக்கலிங்கம்), வரதர் (இயற்பெயர்: தி.ச.வரதராசன்). யாழ்ப்பாணம்: ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை, 235, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, மாசி 2001. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சுப்பிரமணிய அச்சகம், 63, B.A.தம்பி லேன்).

viii, 291 பக்கம், விலை: ரூபா 90., அளவு: 18x12.5 சமீ.

தமிழறிஞர்களான சொக்கனும் வரதரும் இணைந்து திருக்குறளுக்குச் செய்த பொழிப்புரையின் நூலுரு இதுவாகும். முதல் 700 குறட்பாக்களுக்கும் சொக்கன் அவர்களும், 701 முதல் 1330 குறட்பாக்களுக்கு வரதர் அவர்களும் பொழிப்புரை வழங்கியுள்ளனர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 33607).

### 12841

**தெளிதல்: பல்துறைசார் கட்டுரைகள்.** த.கலாமணி. அல்வாய்: ஜீவநதி வெளியீடு, கலை அகம், அல்வாய் வடமேற்கு, 1வது பதிப்பு, மார்கழி 2016. (பருத்தித்துறை: பரணி அச்சகம், நெல்லியடி).

vi,110 பக்கம், விலை: ரூபா 280., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-4676-50-3.

பல்வேறு ஊடகங்களிலும் அவ்வப்போது வெளியான கலாநிதி த.கலாமணி அவர்களின் பத்துக் கட்டுரைகளின் தொகுப்பு இந்நூலாகும். சமயம், இலக்கியம், கல்வி, உளநலம், நாடகம், சமூகம் சார்ந்த கட்டுரைகள் இத்தொகுப்பில் அடங்கியுள்ளன. ஆய்வின் அடிப்படையில் எழுதப்பெற்றுள்ள இக்கட்டுரைகளில் அடங்கியுள்ள கருத்துக்கள் அவ்வத்துறைசார்ந்து முக்கியமானவையாகவும் தெளிவானவையாகவும் அமைந்துள்ளன. "மனதற்ற நிலை" வேண்டிய தாயுமானவர் சுவாமிகள், உதித்தனன் உலகம் உய்ய, ஜப்பானிய ஹைக்கூ கவிதை மரபை விளங்கிக் கொள்ளல், யாழ். மாவட்ட இலக்கியங்களில் பின் நவீனத்துவத்தின் தாக்கம், ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்கான கல்வி "போலொ பிறெய்றி"யின் சிந்தனைகள் பற்றிய சில குறிப்புகள், முதியவர்களின் உளநலம்: பேசப்பட வேண்டிய பொருளொன்றுக்கான முகவுரை, விஞ்ஞானக் கல்வியும் மொழியும்: ஒரு முன்னோட்டம், ஸ்பெஷல் நாடகம்: சில சிந்தனைகள், மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வதிரி பூவற்கரைப் பிள்ளையார் ஆலய விருத்தி பற்றிய ஒரு சமூகசவியற் பார்வை, வடமராட்சி வடக்குப் பிரதேச இலக்கியப் பாரம்பரியம்: குறிப்பான ஆளுமைகளும் சில அவதானிப்புகளும் ஆகிய தலைப்புகளில் இவை எழுதப்பட்டுள்ளன.

### 12842

**தேம்பாவணி இரட்சணிய யாத்திரிகம் இயேசு புராணமாதிய மூன்று கிறித்தவ இலக்கிய நூல்களின் நூல் ஆராய்வு.** *ஈழத்துப் பூராடனார் (இயற்பெயர்: க.தா. செல்வராஜகோபால்). கனடா: சீவன் பதிப்பகம், இல. 3,* 1292 Sherwood Mills Blvd, Mississauga L5V1S6, Ontario, *1வது பதிப்பு, 2009. (கனடா: ரீ கொப்பி, டொரன்டோ).*

xxxvi, *312 பக்கம், விலை: கனேடிய டொலர் 35., அளவு: 21*x*14 சமீ.*

*தேம்பாவணி, இரட்சணிய யாத்திரிகம், இயேசு புராணம் ஆகிய மூன்று கிறித்தவ இலக்கியங்களையும் விரிவாக ஆய்வுசெய்து தனி நூலாக ஆசிரியர் வழங்கியிருக்கிறார். நான் கண்ட தேம்பாவணி, முதலாவது வீரமாமுனிவரின் தேம்பாவணி, தேம்பாவணி இலக்கிய நூலாராய்வு, தேம்பாவணி நூல் வரலாற்று ஆய்வு, தேம்பாவணி நூல் ஆசிரியர் வரலாறு, தேம்பாவணி நூற்பதிப்பு வரலாற்று ஆராய்வு, தேம்பாவணி நூலடக்கப் பொது ஆராய்வு, தேம்பாவணி முதற் காண்ட ஆராய்வு, தேம்பாவணி இரண்டாம் காண்ட ஆராய்வு, தேம்பாவணி மூன்றாம் காண்ட ஆராய்வு, முடிவுரை பற்றிய ஆராய்வு என தேம்பாவணியின் பல்வேறு கூறுகளையும் தனித்தனி இயல்களாகப் பிரித்து ஆய்வுசெய்துள்ளார். அவ்வாறே இரண்டாவது கிறிஸ்தவக் கம்பனின் இரட்சணிய யாத்திரிகம், இரட்சணிய யாத்திரிக இலக்கிய நூல்ஆராய்வு, இரட்சணிய யாத்திரிக நூலாராய்வு, நூலாசிரியர் வரலாற்று ஆராய்வு, இரட்சணிய யாத்திரிக பருவங்களின் ஆராய்வு, இரட்சணிய நூல் ஆராய்வின் முடிவுரைத் தொகுப்பு எனப்பகுத்து இரட்சணிய யாத்திரிகத்தை ஆராய்ந்துள்ளார். இறுதியாகத் தான் எழுதிய இயேசுபுராணத்தையும் ஆய்வுசெய்துள்ளார். ஈழத்துப் பூராடனாரின் இயேசு புராணம், இயேசு புராண இலக்கிய நூல் ஆராய்வு, இயேசு புராண நூல் நூற்பதிப்பு பற்றிய ஆராய்வு, பரமபிதாப் பருவ நூலாராய்வு, பரமசுதன் பருவம், பரிசுத்தாவிப்பருவ நூலாராய்வு ஆகிய தலைப்புகளில் இவ்வாய்வை மேற்கொண்டு இறுதியில் நூலாராய்வுகளின் முடிவுரை, ஒரு படைப்பாளியின் தகவல் ஆராய்வு ஆகிய இயல்களில் அனைத்தையும் தொகுத்துக்கூறியுள்ளார். அமரர் நா.சா.கதிர்காமத்தம்பி நினைவு நிதிய ஆதரவில் வெளிவரும் இது ஒரு நிழல் வெளியீடு. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 47042).*

### 12843

**பண்டைத் தமிழர் சிந்தனை மரபு.** *சமரபாகு சீனா உதயகுமார். பருத்தித்துறை: அமரர் தங்கம்மா முத்துக்கிருஷ்ணன் ஞாபகார்த்த வெளியீடு, பொலிகண்டி, 1வது பதிப்பு, மே 2017. (ஊரெழு: சிறீலட்சுமி பிரின்டர்ஸ், பலாலி வீதி).*

xviii, *68 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5*x*14.5 சமீ.,* ISBN: *978-955-43155-4-3.*

*இந்நூலில் பழந்தமிழ்ப் பாடல்களில் கணிதம், சிங்ககத்தீவு, "கள்" பெற்ற சிறுவாழ்வு, ஒரு பாடல்-ஒரு குறள்-சில பழமொழிகள், துளிப்பா இலக்கியம், தொடைகள், விவேக கணிதம் ஆகிய ஏழு கட்டுரைகள் அடங்கியுள்ளன. தமிழ் தொடர்பாகவும் தமிழர் தொடர்பாகவும் பல விடயங்களைச் சொல்லிச்செல்லும்*

*ஆசிரியர் பல்வேறு விடயங்களிலும் மரபாகச் சொல்லப்படும் விடயங்களிலிருந்து மாறுபடுகிறார். அதுவே இக்கட்டுரைத் தொகுப்பின் சிந்தனைக்கான திறவுகோல். இன்றைய புதிய தலைமுறை ஆய்வாளர்களுக்கும் முன்மாதிரியாக விளங்கக்கூடியவை இத்தொகுப்பிலுள்ள இவரது கணிதம் தொடர்பான கட்டுரை களாகும். இவை பண்டைய எமது தமிழ்ப் புலவர்களின் அறிவியலில் புலமைத்துவத்தைக் காட்டுவதாக அமைந்துள்ளன.*

## 12844

**பல நாடுகளில் வசிக்கும் வாசகர்களுக்குப் பயனுள்ள குறிப்புகள்.** கே.எஸ். *சிவகுமாரன். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல. 7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, ஒக்டோபர் 2013. (சென்னை 94: பி.வி.ஆர். ஆப்செட்).*

*(4), 64 பக்கம், விலை: இந்திய ரூபா 35., அளவு: 18x12.5 சமீ.*

*ஈழத்தின் திறனாய்வாளர் கே.எஸ்.சிவகுமாரன் எழுதிய 17 கட்டுரைகளின் தொகுப்பு. க.நா.சு.வின் ஆக்கப் படைப்புகள்,* Francz Kafka *(பிரான்ஸ் க/ப்கா), க/ப்காவின் கதைகளும் தத்துவமும், வைதீக இந்துக்களும் மார்க்சிய கண்டனமும்,* SAARC *நாடுகளின் இலக்கியத் தொகுதிகள், கே.ஜீ.மகாதேவா, பேனா மனோகரன், புத்தகக் காட்டில் அல்லலுறல், கற்பனாவாதத் தவிப்பு, முற்போக்கு எழுத்தாளர்கள், புதிய திறனாய்வாளர்கள்-விமலன், யாழ்ப்பாண மக்களின் வாழ்வியல் கோலங்கள், திரைப்பட விமர்சனம்: ஒரு புதிய கண்டுபிடிப்பு, மனமோகி, பூங்காவனம், சத்தியனின் சிரத்தை, நாட்டார் இலக்கியம்-அனார் ஆகிய தலைப்புகளில் இக் கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 54657).*

## 12845

**பாரதிதாசனின் தேசியக் கருத்துநிலையும் ஈழத்துக் கவிஞர்களில் அதன் செல்வாக்கும்.** *சி.மௌனகுரு. சென்னை 600 098: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 41-*B, *சிட்கோ இன்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2006. (சென்னை 600 014: பாவை பிரின்டர்ஸ், 142, ஜானிஜான்கான் சாலை, இராயப்பேட்டை).*

*(8), 84 பக்கம், விலை: இந்திய ரூபா 40., அளவு: 21x14 சமீ.,* ISBN: *81-234-1033-6.*

*சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத் துறையினர் 2004ஆம் ஆண்டில் பாரதிதாசன் அறக்கட்டளைச் சொற்பொழிவாற்ற ஈழத்தின் கிழக்குப் பல்கலைக் கழக நுண்கலைத்துறைத் தலைவராகப் பணியாற்றிய பேராசிரியர் சி.மௌனகுரு அவர்களை அழைத்திருந்தார்கள். இரண்டு தினங்களில் இவர் ஆற்றிய மூன்று சொற்பொழிவுகள் தொகுக்கப்பெற்று இங்கு தனி நூலாக்கப்பட்டுள்ளது. தேசியக் கருத்துநிலையும் இந்திய இலங்கைத் தமிழரிடையே தேசியவாதம் வளர்ந்தமையும், பாரதிதாசனின் கவிதைகளுக்கூடாக அவரது தேசியக் கருத்து நிலை, ஈழத்து நவீன கவிதை மரபில் பாரதிதாசனின் கருத்துநிலைத் தாக்கம் ஆகிய மூன்று தலைப்புகளில் இவ்வுரைகள் ஆற்றப்பட்டன. தமிழ்த் தேசிய பண்பாட்டு ஆதிக்கம்*

*இல்லாததாக அனைத்துத் தமிழ் மக்களையும் உள்ளடக்கியதாக, சமதர்ம நோக்குடையதாக, பெண் விடுதலை கொண்டதாக, சமயச் சார்பற்றதாக, தொழிலாளர் விடுதலை, விளிம்புநிலை மக்கள் விடுதலை கொண்டதாக அமையவேண்டும் என்பது பாரதிதாசனின் நோக்காக இருந்தது. நிலவும் அமைப்பை உடைத்து ஒரு புதிய வாழ்வைக் கற்பனைசெய்த தேசியக் கருத்து நிலையை பாரதிதாசன் கொண்டிருந்தார். பாரதிதாசனின் தேசியக் கருத்துநிலையும் தமிழர் விடுதலைக் கருத்துக்களும் 1940, 1950, 1960ஆம் ஆண்டுகளில் ஈழத்தமிழ்க் கவிஞர்கள் மீது பெரும் செல்வாக்குப் பெற்றிருந்தன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 43115).*

### 12846

**புலவர்மணி கட்டுரைகள்.** *ஏ.பெரியதம்பிப்பிள்ளை (மூலம்), பெ.விஜயரெத்தினம், இரா.நாகலிங்கம் (தொகுப்பாசிரியர்கள்). திருக்கோணமலை: கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு, வடக்கு-கிழக்கு மாகாணம், 1வது பதிப்பு, 1998. (திருக்கோணமலை: பதிப்பகத் திணைக்களம், வடக்கு-கிழக்கு மாகாணம்).*

*(12) 159 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 21.5x14.5 சமீ.*

*புலவர்மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் எழுதிய 25 கட்டுரைகளை அவரது மகனார் பெ.விஜயரெத்தினம் அவர்கள், அன்புமணி இரா.நாகலிங்கம் அவர்களுடன் இணைந்து தொகுத்து வெளியிட்டுள்ளார். கட்டுரைகள் சமயம், இலக்கியம், சமூகம், தமிழறிஞர் ஆகிய நான்கு பிரிவுகளுக்குள் அடக்கப்பட்டுள்ளன. சமயம் என்ற பிரிவில் கலித்தொகையின் கடவுள் வாழ்த்து, குணங்குடி மஸ்தான் சாகிபு பாடல்கள், ஸ்ரீகாளிகாமடு கற்பகவிநாயகர், சக்தி வழிபாடு ஆகிய கட்டுரைகள் உள்ளன. இலக்கியம் என்ற பிரிவில் இலக்கியமும் சமூக வாழ்வும், வாழ்வாங்கு வாழ வழிகாட்டும் இலக்கியம், கம்பன் நாட்டிய தமிழ் நாகரீகம், அகவாழ்வும் புறவாழ்வும், ஒருவருக்கொருவர் உதவி வாழுதல் ஆகிய கட்டுரைகள் உள்ளன. சமூகம் என்ற பிரிவில் மட்டக்களப்பில் சிதைந்து வழங்கும் சொற்கள், இலட்சியமும் சமநோக்கும், மனிதனை மனிதன் உள்ளத்தால் அணுகுவதே மொழி, பாடறிந்து ஒழுகும் பண்பு, தியாகசேவை வேண்டும், சூழ்ந்த பார்வையுள்ள நல்லாசிரியர் வாழ்க, பேராசை ஒரு பல தலைப்பேய், நாடகம் ஆடுவானேன் நாம் அதை நாடுவானேன் ஆகிய கட்டுரைகள் உள்ளன. தமிழறிஞர் என்ற பிரிவில் விபுலானந்த அடிகளார், விபுலானந்த அடிகளாரின் கல்வித் தொண்டு, வித்தக விபுலானந்தரின் நினைவு, வைத்திலிங்க தேசிகர், நாவலர் பெருமான், தி.த.கனகசுந்தரம்பிள்ளை, வித்துவான் ச.பூபாலபிள்ளை, அடியார்க்கடியன் சரவணமுத்தன் ஆகிய கட்டுரைகள் அடங்கியுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 21122).*

12847
**புனைவுகள், நினைவுகள், நிஜங்கள்: ஒரு ஆய்வுநிலைத் தொகுப்பு.** செல்வி திருச்சந்திரன். கொழும்பு 6: பெண்கள் கல்வி, ஆய்வு நிறுவனம், 58 தர்மராம வீதி, 1வது பதிப்பு, 2013. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

xii, 134 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-9261-62-9.

செல்வி, திருச்சந்திரன் யாழ்ப்பாணம், மானிப்பாயைச் சேர்ந்த பெண்ணிய ஆய்வாளர், எழுத்தாளர். கொழும்பில் உள்ள பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனத்தின் நிறைவேற்று இயக்குனராகப் பணியாற்றுகிறார். இவர் பெண்நிலை, வர்க்கம், பண்பாடு, பால் நிலை போன்ற பல விடயங்களை ஆய்வு செய்து எழுதி நூலாக்கியுள்ளார். "நிவேதினி" என்ற பெண்நிலைவாத சஞ்சிகையின் ஆசிரியராகவும் இருக்கிறார். இவரது தந்தை ஹன்டி பேரின்பநாயகம். இவர் கொக்குவில் இந்துக் கல்லூரியில் கற்றுப் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டத்தையும் சமூக ஆய்வு நிறுவனத்தில் முதுகலைமாணிப் பட்டத்தையும் அம்ஸ்ரடாமில் உள்ள Vrige பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டத்தையும் பெற்றிருக்கின்றார். இவர் கிழக்குப் பல்கைக்கழகத்தில் அதிதி விரிவுரையாளராகப் பணியாற்றுவதுடன் பெண்ணியம் சார்ந்த அமைப்புகளில் முக்கிய உறுப்பினராக இருந்து ஆய்வு முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றார். இவர் தமிழில் எழுதிய 10 ஆய்வுக்கட்டுரைகள் இரண்டு பிரிவுகளில் இங்கு இடம்பெற்றுள்ளன. "வரலாறும் இலக்கியமும்" என்ற முதற் பிரிவில் இலக்கியத்தின் மையப்பொருளும் மறைபொருளும்: சமூகம்சார் பண்பாட்டில் அவற்றின் அர்த்தப்பாடல், பெண்களின் வாய்மொழி இலக்கியம்: தாலாட்டு ஒப்பாரி பற்றிய ஒரு சமூகவியல் நோக்கு, அஞ்சுகத்தின் சயசரிதை, வரலாற்றைப் புரட்டிப் பார்த்து ஆறுமுக நாவலர் பற்றி ஒரு மீள் பரிசீலனை, அக்டோபர் புரட்சியின் வரலாற்று முக்கியத்துவம் ஆகிய கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. சமூகம்-பண்பாடு-கோட்பாடுகள் என்ற இரண்டாவது பகுதியில் சமூகவியல் கோட்பாடுகளும் அவை பற்றிய சில வாதங்களும், பெரும்போக்கு வாதங்களின் போதாமைகளும் ஒரு சாராரின் மறுப்புகளும், சொல் என்று ஒரு சொல், பண்பாட்டிற்கு மறுபக்கங்களும் உண்டு, நூல்விமர்சனம்: பஞ்சமரும் சமூகத் தொடர்புகளும் ஆகிய தலைப்பிலான கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

12848
**யோகிஸ்ரீ சுத்தானந்த பாரதியாரின் பாரத சக்தி மகா காவியத்தில் ஒரு ஆய்வுக் கண்ணோட்டம்.** ஈழத்துப் பூராடனார். கனடா: சீவன் பதிப்பகம், இல. 3, 1292 Sherwood Mills Blvd, Mississauga L5V1S6, Ontario, 1வது பதிப்பு, 2007. (கனடா: ரீ கொப்பி).

xxiv, 208+4 பக்கம், விலை: கனேடிய டொலர் 20., அளவு: 21x14 சமீ.

பாரதசக்தி மகாகாவியம் கவியோகி சுத்தானந்த பாரதியால் இயற்றப்பட்ட ஒரு பெருங்காவியம் ஆகும். இது ஐம்பதாயிரம் அடிகளால் ஆனது. இக்காவியம்,

சித்தி காண்டம், கௌரி காண்டம், சாதன காண்டம், தானவ காண்டம், சுத்த சக்தி காண்டம் என்னும் ஐந்து காண்டங்களைக் கொண்டது. இக்காவியம் படலம் என்னும் அமைப்பினைக் கொண்டது. "மங்கல வாழ்த்துப் படலம்" முதல் "சுத்தவாணிப் படலம்" ஈறாக 147 படலங்களைக் கொண்டுள்ளது. கலிவிருத்தம், கலித்துறை, ஆசிரிய விருத்தம், நேரிசை, இன்னிசை, ஆசிரியப்பா, குறள் வெண்பா ஆகிய பலவகை யாப்பு வடிவங்கள் இக்காப்பியத்தில் கையாளப்பட்டுள்ளன. இக்காப்பியத்தில் இராமதாசர், குருநானக், சொராஷ்டிரர், இராமகிருஷ்ண பரமஹம்சர், சுவாமி விவேகானந்தர், கௌதம புத்தர், மகாவீர், இயேசுநாதர், நபிகள் நாயகம், கபீர்தாசர், வேத முனிவர்கள், தயானந்த சரசுவதி, ஆதி சங்கரர், மெய்கண்டார், அப்பர், மாணிக்கவாசகர், வள்ளலார், அரவிந்தர், சிவானந்தர் ஆகிய ஆன்மிகப் பெருமக்களின் வாழ்வும் பிம்பிசாரர், அசோகர், அண்ணல் காந்தியடிகள் உள்ளிட்ட பல வரலாற்று மாந்தரின் வாழ்வும் இடம்பெறுகிறது. தொடர்ந்து கதை இருபதாம் நூற்றாண்டில் நடப்பதாய் ஆரம்பிக்கிறது. கதை நன்மைக்கும் தீமைக்கும் இடையில் போராட்டத்தில் இறுதியில் தீமையைத் திருத்தி நன்மை வெல்வதாய் அமைகிறது. இதன் முதல் பதிப்பு 1948லும் விரிவுபடுத்தப்பட்ட இரண்டாம் பதிப்பு 1969லும் வெளிவந்தன. மக்கள் அனைவரும் சாதி, சமய, இன, மொழி வேற்றுமை இன்றிச் சன்மார்க்க நெறியில் சமயோக வாழ்வு பெறுவதை நோக்கமாக இக்காப்பியம் முன்னெடுத்துச் செல்கிறது. இச்சமயோகம் பற்றி இந்நூலில் பல இடங்களிலும் பேசப்பட்டுள்ளது. தொரன்ரோ-சிறகு மாசிகையில் ஈழத்துப் பூராடனார் தொடர்ந்து 23 அத்தியாயங்களில் எழுதிவந்த பாரதசக்தி மகாகாவியத்தின் கண்ணோட்டம் இங்கு தனிநூலாக வெளிவந்துள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 44295).

### 12849

**வள்ளுவம் வழங்கும் தமிழர் தத்துவம்.** க.கணேசலிங்கம். சென்னை 600 090: க.கணேசலிங்கம், 21 (9/2), பீச் ஹோம் அவென்யூ, பெசென்ட் நகர், 1வது பதிப்பு, டிசம்பர் 2001. (சென்னை 5: மாசறு D.T.P., 2, பார்த்தசாரதி தெரு, திருவல்லிக்கேணி).

144 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 18x12 சமீ.

கவிஞரும் பொறியியலாளருமான இந்நூலாசிரியர் சைவசித்தாந்த கலாநிதி சித்தாந்தரத்தினம் க.கணேசலிங்கம் அவர்கள் யாழ்ப்பாணம் குப்பிழானைச் சேர்ந்தவர். திருக்குறளிள் நுண்பொருள்கண்டு தான் எழுதிய 14 கட்டுரைகளை இந்நூலில் தந்துள்ளார். வள்ளுவம் வழங்கும் தமிழர் தத்துவம், அகர முதல்வன், அறிவாகிய மெய்ப்பொருள், மெய் உணர்தல், அருளாகிய திருவடி, உயிரின் சார்புநிலை, இருள்சேர் இருவினை, ஊழிற் பெருவலி யாவுள?, இருமை கடந்த ஒருமை, நூலறிவும் உண்மையறிவும், மண்ணுலகும் விண்ணுலகும், இறப்பும் பிறப்பும், ஏற்றத்தாழ்வு அறவழி அல்ல, வள்ளுவர் கண்ட எண்ணும் எழுத்தும் ஆகிய தலைப்புகளில் இவை எழுதப்பட்டுள்ளன. பின்னிணைப்புகளாக என் பார்வையில் ஒரு குறள், ஈரடியால் இருள் களைந்தான் ஆகிய இரு கவிப்

படைப்பாக்கங்களும் சேர்க்கப்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 29962).

### 12850

**வான்மீகியார் தமிழரே: ஆராய்ச்சிக் கட்டுரைகள்.** தென்புலோலியூர் மு. கணபதிப்பிள்ளை. சென்னை 600001: பாரி நிலையம், 59, பிராட்வே, 1வது பதிப்பு, அக்டோபர் 1966. (சென்னை 600017: சௌந்தரா பிரின்டர்ஸ்).

80 பக்கம், விலை: இந்திய ரூபா 1.75, அளவு: 21.5x14.5 சமீ.

தென்புலோலியூர் மு.கணபதிப்பிள்ளை அவர்களின் தமிழிலக்கிய ஆய்வுக் கட்டுரைகள் ஏழின் தொகுப்பு. மு. கணபதிப்பிள்ளை பருத்தித்துறை புலோலி கிராமத்தில் தமிழ் வித்துவப் பரம்பரையில் பிறந்தவர். இலங்கை அரச மொழித் திணைக்களத்தில் மொழிபெயர்ப்பாளராகப் பணியாற்றியவர். இலங்கை வானொலியிலும், இலக்கிய மேடைகளிலும் மற்றும் இலக்கிய நூலுருவாக்கத்திலும் பெரும் பங்களிப்பை வழங்கியிருந்தவர். இவரது மனைவி தனபாக்கியம் ஒரு வயலின் இசைக்கலைஞர். இலங்கை வானொலிக் கலைஞர் கமலினி செல்வராஜன் இவர்களது மூத்த மகள் ஆவார். அன்னை தயை, தமிழன் எங்கே, ஈழநாட்டின் தமிழ்ச் சுடர்மணிகள், பயிற்சித் தமிழ் 1, மொழிபெயர்ப்பும் சொல்லாக்கமும், மொழியும் மரபும் ஆகிய நூல்களை ஏற்கெனவே எழுதியுள்ளார். "வான்மீகியார் தமிழரே" என்ற இவ்வாய்வுக் கட்டுரைத் தொகுப்பில், வான்மீகியார் தமிழரே, ஆடலும் பாடலும், நெடுங்கணக்கின் கதை, பழந்தமிழ்க் கடவுள் முருகன், வள்ளுவர் கூறிய அறிவியல் ஒப்புரவு, திருவள்ளுவர் நகை செய்கிறார், மொழிபெயர்ப்பு-ஒரு கலை ஆகிய தலைப்புகளில் இவை எழுதப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 24040).

**மேலும் பார்க்க: 12197.**

## 894.8 (62) இலக்கிய வரலாறுகள்

### 12851

**ஈழத்தில் ஒல்லாந்தர் காலத் தமிழ் இலக்கியங்கள்: சமூக-அரசியல் நோக்கு.** நவரட்ணம் குகபரன். கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு 2017. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

xiv, 190 பக்கம், புகைப்படம், விலை: ரூபா 600., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-659-544-4.

யாழ்ப்பாண மன்னர்கள் காலம் வரை தவழ்ந்துவந்த ஈழத்து இலக்கிய வரலாற்று ஆய்வு முயற்சிகள் ஒல்லாந்தர் காலத்திலே தான் மெல்ல மெல்ல எழுந்து நடக்க முயற்சிக்கிறது. இந்த முயற்சிக்கு நடைவண்டி கொடுத்து உதவுவதாகக் குகபரனின் நூல் அமைகின்றது. ஒல்லாந்தர் கால அரசியற் பின்னணியை நன்கு விளங்கிக் கொண்ட இந்நூலாசிரியர், அக்காலத் தமிழ் மக்களின் கல்வி, கலை, பண்பாடு,

தொழில் முயற்சிகள், குடியேற்றங்கள், சமூக அடுக்கமைவு, புலமைத்துவத் தொடர்புகள் முதலான பல்வேறு விடயங்களையும் நுணுக்கமாக ஆய்வுசெய்துள்ளார். ஈழத்து இலக்கிய வரலாற்றைத் துலக்க முயலும் ஆய்வாளர்களுக்கு உதவும் வகையில் எழுதப்பட்டுள்ள இந்நூலின் தகவல்கள் ஈழத்தமிழரின் வரலாற்றுப் பின்னணி, சமயமும் சமூக அரசியலும், மரபுகளும் வழக்காறுகளும், கலைகள், அதிகார அடுக்கமைவு ஈழமும் இந்தியத் தொடர்பும், மதிப்பீடு ஆகிய ஏழு அத்தியாயங்களில் விரிகின்றன. இந்நூலாசிரியர் யாழ்ப்பாணம் சித்தன்கேணியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் கல்வி கற்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தனது இளங்கலைமாணிச் சிறப்புப் பட்டத்தினையும் முதுதத்துவமாணிப் பட்டத்தினையும் பெற்றுக் கொண்டவர். கல்விப்பின் படிப்பு டிப்ளோமாவை இலங்கைத் திறந்தவெளிப் பல்கலைக்கழகத்தில் பெற்று கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் ஆசிரியராகக் கடமையாற்றுகின்றார்.

## 894.8 (621) இஸ்லாமியத் தமிழ், அரபுத்தமிழ் இலக்கியம்

### 12852

**அமைதி வழியும் மதுர மொழியும்.** ஆர்.மகேஸ்வரன். கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, 2015. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

xviii, 98 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 350., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-659-487-4.

உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாடு மலேசியா - 2011, மலேசியாவின் தலைநகர் கோலாலம்பூரில் 2011 மே 20 முதல் மே 22 வரை நடைபெற்றது. தமிழ்நாடு இஸ்லாமிய தமிழ் இலக்கிய கழகத்தின் இஸ்லாமிய தமிழ் இலக்கிய 15வது மாநாடு தமிழ்நாடு தூத்துக்குடி மாவட்டம், காயல்பட்டினத்தில் 2011 ஜுலை 8 மதல் 10ம் திகதிவரை நடைபெற்றது. இவ்வாறான இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாடுகள் ஏற்கனவே இந்தியாவிலும், இலங்கையிலும் பல முறை நடத்தப்பட்டுள்ளன. இத்தகைய பல இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டு பயணப் பதிவுகளை ஒன்று சேர்த்து ஆவணப்படுத்தும் முயற்சி இதுவாகும். இந்திய வர்த்தக சங்கத்தின் மூலமே இஸ்லாம் மலேசியாவில் வேரூன்றியது, ஏற்பாட்டுக்குழுவின் குளறுபடிகளால் திண்டாடிப்போன இலங்கைப் பேராளர்கள், ஆய்வு மாநாடுகள் ஆய்வு மாநாடுகளாக நடந்தால் மட்டுமே நோக்கம் நிறைவேறும், பேராசிரியர் நுஃமானுக்குத் தகுந்த கௌரவம் வழங்கப்பட்டிருக்க வேண்டும், கிராமத்துக் கல்யாண வீடுபோல நடைபெற்ற காயல்பட்டண விருந்தோம்பல், சர்ச்சையைக் கிளப்பிய பர்வின் சுல்தானாவின் ஆவேச உரை, காயல்பட்டணத்துக்கு காயல் என்ற பெயர் ஏன் வந்தது, அநாவசிய விஷயங்களை கவியரங்கில் சேர்த்துக் குழப்பலாமா? இலங்கைப் பேராளர்களுக்கு கவிக்கோ எட்டிக்காயானது ஏன்?, பேராசிரியர் எம்.எம்.உவைஸை கௌரவிக்கும் மாநாடு இலங்கையில் நடத்தப்படாதது ஏன்?, சிறப்பாக அமைந்த கலாநிதி வ.மகேஸ்வரனின்

"சீறாப்புராணத்தில் உலா" ஆய்வுக் கட்டுரை, முஸ்லிம் இலக்கியம் எழுச்சிபெற்ற 16-19ஆம் நூற்றாண்டு காலப்பகுதி, தமிழ் அரசர்களின் அன்பையும் கௌரவத்தையும் பெற்ற இராவுத்தர்கள், இஸ்லாமிய இசை மரபுக்கு சான்றாக விளங்கும் ஃபகீர்களின் தப்ஸ் பாடல்கள், நொண்டிச் சிந்தை முதலில் அறிமுகம் செய்தவர் ஒரு முஸ்லிம் புலவரே, பள்ளு இலக்கியம் படைத்து சாதியை மறுத்த இஸ்லாமிய இலக்கியம், இஸ்லாமிய இலக்கியம் படைத்த பெண் படைப்பாளர்கள், இஸ்லாமிய நாட்டுப்புறவியல்துறை தனிப்பிரிவாக வளர்த்தெடுக்கப்பட வேண்டும், ஆகிய 18 தலைப்புகளில் எழுதப்பட்ட படைப்பாக்கங்கள் வழியாக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டு நிகழ்வுகளை ஆசிரியர் பதிவுசெய்துள்ளார். இவை முன்னர் "வண்ணவானவில்" பத்திரிகையில் தொடராக பிரசுரமானது. நூலாசிரியர் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பதில் நூலகராகவும், தமிழ்ப் பிரிவுப் பொறுப்பாளராகவும் பணியாற்றுகின்றார்.

## 12853

**இஸ்லாமும் கவிதையும்.** எஸ்.எச்.ஆதம்பாவா. சாய்ந்தமருது 4: கலமுஷ்-ஷர்க் வெளியீடு, "வரித மஹால்", 1வது பதிப்பு, ஜூன் 1987. (கல்முனை: அஸீஸ் பிரின்டிங்).

(16), 46 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18.5x12.5 சமீ.

அல்-ஹாஜ் மௌலவி எஸ்.எச்.ஆதம்பாவா எழுதி வெளியிட்ட முதல் நூலாகும். இதுவே கலமுஷ் ஷர்க் எனும் பெயரில் அவரால் நிறுவப்பட்ட வெளியீட்டுப் பணியகத்தின் முதல் நூலாகவும் இந்நூல் அமைகின்றது. இஸ்லாத்தின் வரம்புகளை மீறாமல் முஸ்லீம்கள் கவிதை எழுத முடியுமா எனக் குரல் எழுப்பும் நூல் இது. இஸ்லாம் கவிதை போன்ற இலக்கிய வடிவங்களை ஆதரிக்கின்றதா என்பதை ஆய்வு செய்வதே இந்நூலின் நோக்கமாகும். இஸ்லாம் எவ்வாறான கவிதைகளை ஆதரிக்கின்றது, எவற்றை வெறுக்கின்றது என்பதை விபரிப்பதுடன் இஸ்லாமிய இலக்கியத்துக்கான ஒரு வரையறையும் இந்நூல் வழங்குகிறது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 23807).

## 12854

**ஈழத்து முஸ்லீம்களின் பேச்சு வழக்கில் பயன்படுத்தப்படும் செந்தமிழ்ச் சொற்கள்.** எம்.எம்.உவைஸ். பாணந்துறை: எம்.எம்.உவைஸ், "மர்கஸி", ஹேனமுல்லை, 1வது பதிப்பு, 1976. (கொழும்பு 10: அல்பியன் அச்சகம், 157, ஜயந்த வீரசேகர மாவத்தை, மருதானை).

25 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x11.5 சமீ.

1976 ஜுன் 8ஆம் 9ஆம் திகதிகளில் சென்னை புதுக்கல்லூரியில் நடைபெற்ற இரண்டாவது அனைத்துலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய ஆராய்ச்சிக் கருத்தரங்கு மாநாட்டில் வாசிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை. ம.மு. உவைஸ் (15.01.1922 -25.3.1996) பாணந்துறையில் உள்ள கொறக்கானை எனும் சிற்றூரில் மகுமூது லெப்பை, சைனம்பு நாச்சியார் ஆகியோருக்கு ஒரே மகனாகப் பிறந்தவர். பாணந்துறை

*அர்ச். யோவான் கல்லூரியில் சேர்ந்து உயர்தரப் படிப்பை முடித்து 1946 ஆம் ஆண்டில் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் சேர்ந்தார். சுவாமி விபுலாநந்தரின் வேண்டுகோளுக்கிணங்கத் தமிழைச் சிறப்புப் பாடமாகவும் சிங்களத்தை உப பாடமாகவும் கற்றார். விபுலானந்தரின் மறைவைத் தொடர்ந்து பேராசிரியர் க. கணபதிப்பிள்ளையின் உதவியுடன் முதுமாணிப் பட்டமும் பெற்றார். "தமிழ் இலக்கியத்திற்கு முஸ்லிம்களின் பங்களிப்பு" என்பது இவரது முதுகலைமாணிப்பட்ட ஆய்வேடு ஆகும். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 2589).*

## 12855

**சீறாவின் இயங்கியல்.** *ஏ.பீ.எம். இத்ரீஸ். வாழைச்சேனை 05: உயிர்ப்பைத் தேடும் வேர்கள், மஹ்மூத் ஆலிம் வீதி, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2005. (அச்சக விபரம் தரப்படவில்லை).*

*88 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 21x14.5 சமீ.*

*தாகம் தீராத பாலை நிலத்தைப் போன்றே பிரச்சினைகளும் தீர்வுகளும் இருக்கின்றன. நீர் புகட்டப்படும் போதெல்லாம் இன்னும் நீர் கேட்டுக்கொண்டே இருக்கின்றது. பாலையின் தாகம் தீர்வதில்லை என்பதைப்போல் எமக்குத் தேவையான சமூக மாற்றமும் இன்னும் நிகழவில்லை. மனித இன வரலாற்றில் செயலூக்கத்துடன் தலையிட்டவர் என்ற வகையில் நபிகளாரின் சீறாவில் இயங்கிவந்த விதிகளையும் உண்மைகளையும் இந்நூல் தொகுத்தாய்வு செய்கின்றது. முன்னுரை, வரலாறும் இயங்கியலும், சீறாவில் மாறாததும் மாறக் கூடியதும். ஒவ்வொரு நபிக்கும் ஓர் எதிரி உண்டு, பொதுக் குறிக்கோளும் கிளை இலட்சியங்களும், முதன்மையான இலக்கைத் தேர்வுசெய்தல், சமகால கிளைக் குறிக்கோள்கள், முறைவழிகளின் பன்மையும் வகைமையும், சீறாவில் சமூகமாற்றமுறை வழிகள், மக்கா காலகட்ட முறைவழி, மதினா காலகட்ட முறைவழி, சீறாவும் வன்முறையும், போராட்டத்தில் வலுசமநிலை, சீறாவும் வலுசமநிலையும், கோட்பாட்டாக்கம் தொடர்பாக, சீறாவில் ஒப்பந்தங்கள், சீறாவும் தற்காலப் போராட்டமும், மக்கள் சக்தியைத் திரட்டுதல் ஆகிய அத்தியாயங் களினூடாக இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 37736).*

## 12856

**வாய்மையின் வெற்றி: ஆராய்ச்சிக் கட்டுரைகள்.** *ம.முஹம்மது உவைஸ். நுகெகொடை: ம.முஹம்மது உவைஸ், தமிழ்த்துறைத் தலைவர், வித்தியோதய பல்கலைக்கழகம், கங்கொடவில, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (காலி: அல்பியன் பதிப்பகம், 9 மாத்தறை வீதி).*

*(6), 113 பக்கம், விலை: ரூபா 2.50, அளவு: 18x13 சமீ.*

*காயல்பட்டினத்தைச் சேர்ந்த புலவர்நாயகம் செய்கு அப்துல் காதிறு நயினார் லெப்பை ஆலிம் புலவர் இயற்றிய குத்பு நாயகம் என்னும் முகியித்தீன் புராணத்தில்*

உள்ள யாத்திரைப் படலம், வாய்மை விளக்கிய படலம், பகுதாதுபுக்க படலம், கல்விபயில் படலம் பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரைகளின் தொகுப்பு இதுவாகும். இந்நூல் முன்னுரை, குத்பு நாயகம், நாட்டு நகர வருணனை, கல்வியில் ஆர்வம், தாயர்சொல் உறுதி பூண்டது, பாவ மன்னிப்பு, இயற்கை வருணனை, உவமைகளும் உருவகங்களும், குணநல இயல்பு 1, குணநல இயல்பு 2, கல்வியின் பெருமை, வாய்மையின் வெற்றி, கவிதை நடையின் சிறப்பு, அறபுச்சொற்கள், முடிவுரை ஆகிய 15 அத்தியாயங்களின்கீழ் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 30674).

**மேலும் பார்க்க: 12527**

## 894.8(63) சங்க இலக்கியங்கள் தொடர்பானவை

### 12857

**ஐங்குறுநூறு: மூலமும் உரையும்.** தி.சதாசிவ ஐயர் (பதிப்பாசிரியர்). சென்னை 600113: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சி.ஐ.டீ வளாகம், தரமணி, 1வது பதிப்பு, 1999. (சென்னை 600 014: வி.கருணாநிதி, தி பார்க்கர் கொம்பெனி, 293, அகமது கொம்பிளெக்ஸ், 2வது தளம், இராயப்பேட்டை நெடுஞ்சாலை).

xxxii, 360 பக்கம், விலை: இந்திய ரூபா 85.00, அளவு: 21.5x14 சமீ.

தமிழ் வளர்ச்சித்துறையின் அரிய நூல் வெளியிடும் திட்டத்தின்கீழ் நிதியுதவி பெற்று ஈழத்துத் தமிழறிஞரின் இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது. முகாந்திரம் தி. சதாசிவ ஐயர் (1882 - நவம்பர் 27, 1950) பல வடமொழி இலக்கியங்களைத் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். இவர் யாழ்ப்பாணம், தெற்கு அளவெட்டியில் பெருமாக்கடவை என்னும் ஊரில் 1882 ஆம் ஆண்டு தியாகராஜ ஐயர், செல்லம்மாள் ஆகியோருக்கு மகனாகப் பிறந்தார். இவர் கல்வித் துறையில் ஆசிரியராக, தலைமை ஆசிரியராக, பாடசாலைப் பரிசோதகராகப் பணியாற்றிப் பின்னர் இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைந்த கல்வி மாவட்டத்துக்கு வித்தியாதரிசியாகவும் பணியில் இருந்துள்ளார். யாழ்ப்பாணத்தில் பல தமிழ்ப் பண்டிதர்களை உருவாக்கிய ஆரிய திராவிட பாஷாவிருத்திச் சங்கத்தை நிறுவியதில் முக்கிய பங்காற்றியவர் சதாசிவ ஐயர். சங்கம் நடாத்திய பிரவேச பண்டிதர், பால பண்டிதர், பண்டிதர் பரீட்சைகளில் தேறியவர்களுக்கு பள்ளிகளில் ஆசிரிய நியமனம் கிடைக்க வழி செய்தார். தனது சொந்தச் செலவில் சுன்னாகம் கதிரமலை தேவஸ்தானத்துக்கு எதிரில் “பிராசீன பாடசாலை” என்ற பெயரில் பாடசாலை ஒன்றை அமைத்தார். இப்பாடசாலையில் தமிழும் சம்ஸ்கிருதமும் தக்க அறிஞர்களைக் கொண்டு பயிற்றுவிக்கப்பட்டு வந்தன. புகழ் மிக்க தமிழறிஞர் வித்துவ சிரோமணி சி. கணேசையர் இப்பாடசாலைக்கு பொறுப்பாக இருந்துள்ளார். தமிழறிஞர் தி. சதாசிவ ஐயர் பதிப்பித்துள்ள இந்நூலின் அணிந்துரை, ஆய்வுரை, முகவுரையைத் தொடர்ந்து சங்கநூல்கள், ஐங்குறுநூறு, தொகுப்பித்தவர் முதலியோர் வரலாறு, பதிப்புரை ஆகியனவும், தொடர்ந்து ஐங்குறுநூறு மூலமும் உரையும் இடம்பெற்றுள்ளன. ஐங்குறுநூறு விஷயசூசிகை, செய்யுள் முதற்குறிப்பகராதி, அரும்பத அகராதி ஆகியனவும் நூலின் இறுதியில் காணப்படுகின்றன. (இந்

*நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 18286).*

## 12858

**சிலப்பதிகாரம் காலமும் வரலாறுகளும்.** *அ.சி.உதயகுமார். சுன்னாகம்:* Institute of Historical Studies, *வேதராணியார் வளவு, உடுவில், 1வது பதிப்பு, ஜுன் 2002. (யாழ்ப்பாணம்: டெக்னோவா பிரின்டர்ஸ்).*

*32 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x15 சமீ.*

*யாழ்ப்பாணத்தில் 2002ஆம் ஆண்டு ஜுன் 22,23,24ஆம் திகதிகளில் நடைபெற்ற சிலப்பதிகார ஆய்வரங்கில் வாசிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரை. சிலப்பதிகாரம் தோன்றிய காலம் பற்றிய குழப்பநிலை நீண்டகாலமாக உள்ள நிலையில் ஆசிரியரின் இந்நூல் இவ்விடயத்தில் புதுவெளிச்சம் பாய்ச்சியுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 26936).*

## 12859

**வில்லிபுத்தூராழ்வார் அருளிச்செய்த மகாபாரத மூலம்.** *வில்லிபுத்தூராழ்வார் (மூலம்), ந.ச.பொன்னம்பலபிள்ளை (புத்துரை). யாழ்ப்பாணம்: வீ.நாராயணசுவாமி நாயுடு இணை வெளியீடு, மு.மூத்ததம்பிச் செட்டியார், 1வது பதிப்பு, ஜுலை 1886. (யாழ்ப்பாணம்: மெய்ஞ்ஞானப்பிரகாச யந்திரசாலை, வண்ணார்பண்ணை).*

*320 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x16 சமீ.*

*வில்லிபுத்தூராழ்வார் அருளிச்செய்த மகாபாரத மூலத்துக்கு காரைக்குடியைச் சார்ந்த முத்துப்பட்டணம் ரா.ம.கு.ராம.சொக்கலிங்க செட்டியாரும், அரிமளம் அ.செ.ப.அண்ணாமலைச் செட்டியாரும் வேண்டிக்கொண்டபடி, யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் மருகரும் மாணாக்கருமாகிய ந.ச.பொன்னம்பலபிள்ளை அவர்கள் புத்துரை எழுதிவந்தார். இவை வண்ணார் பண்ணையில் புத்தகவியாபாரம் செய்துவந்த வீ.நாராயணசுவாமி நாயுடுவாலும், அவ்வூரைச்சேர்ந்தவரும் விஞ்ஞானவர்த்தனி பத்திரிகை ஆசிரியருமான மு. முத்துத்தம்பி செட்டியாராலும் தமது மெய்ஞ்ஞானப் பிரகாச யந்திரசாலையில் 40 பக்க மாத சஞ்சிகைப் பிரசுரங்களாக 12.7.1886 அன்று முதல் ஒரு வருடமளவில் தொடர்ச்சியாக பிரசுரிக்கப்பட்டு சந்தாதாரருக்கு விநியோகிக்கப்பட்டு வந்துள்ளது. பின்னாளில் அந்தப் பிரதிகளின் பெருந்தொகுப்பாக இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 21653).*

**மேலும் பார்க்க: 13A24**

## 894.8(64) சமகால இலக்கிய ஆய்வுகள், கட்டுரைகள்

### 12860

**அறுவடைகள்.** வெலிகம ரிம்ஸா முஹம்மத். லண்டன் SM7 1NT: இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகம், No.2, Blue Cedars, Warren Road, Surrey, இணை வெளியீடு, கொழும்பு 6: இலங்கை தமிழ் இலக்கிய நிறுவகம், இல. 9, 2/1 நெல்சன் இடம், 1வது பதிப்பு, 2015. (அச்சக விபரம் தரப்படவில்லை).

250 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 600., அளவு: 21x15 சமீ., ISBN: 978-955-50020-6-6.

ஆசிரியர் முன்னதாக எழுதிப் பத்திரிகைகளில் வெளிவந்த நூல்விமர்சனக் கட்டுரைகளின் தொகுப்பு. கருநாவு, தீ குளிக்கும் ஆண்மரம், பாயிஸா அலி கவிதைகள், இறகுகளினால் ஒரு மாளிகை, சடலத்தின் வேண்டுதல், கடலின் கடைசி அலை, ஆனாலும் திமிருதான் அவளுக்கு, முள் மலர்கள், ஓ பாலஸ்தீனமே, கடவுளிடம் சில கேள்விகள், அமைதிப் பூக்கள், இரும்புக் கதவுகளுக்குள்ளிருந்து, உயிர் வலித்த கணம், என் எல்லா நரம்புகளிலும், நகர வீதிகளில் நதிப் பிரவாகம், தடம் தொலைத்த தடயங்கள், அண்ணல் வருவானா, அன்புள்ள தோழியே, சொல்லில் உறைந்துபோதல், மரண வலிகள், தாலாட்டு, சுட்ட பழமே சுவை அமுதே, எஞ்சியிருந்த பிரார்த்தனையோடு, பாலமுனை பாரூக் குறும்பாக்கள் ஆகிய 24 கவிதை நூல்கள், கடைசி வேரின் ஈரம், குதிரைகளும் பறக்கும், நினைவுகள் அழிவதில்லை, நினைவு நல்லது வேண்டும், வடக்கே போகும் மெயில், காவி நகரம், விதி வரைந்த பாதை, தியாகம், அழுகைகள் நிரந்தரமில்லை, ஆஷா நாயும் அவளும் ஆகிய 10 சிறுகதைத் தொகுப்புகள், கொல்வதெழுதுதல், வீடு ஆகிய இரு நாவல்கள், தென்றலே வீசிவா, பூவும் கனியும் ஆகிய சிறுவர் இலக்கியங்கள், ஒரு ஈர நெஞ்சனின் உளவியல் உலா, கலை இலக்கியப் பார்வைகள், ஒளி அரசி சஞ்சிகை, திறந்த கதவுள் தெரிந்தவை-ஒரு பார்வை. திறனாய்வு ஆகிய ஐந்து பலவின நூல்கள் தொடர்பாக வெலிகம ரிம்ஸா முஹம்மத் அவர்களால் எழுதப்பட்ட மொத்தம் 43 விமர்சனக் கட்டுரைகள் இத் தொகுப்பில் இடம் பெற்றுள்ளன.

### 12861

**ஒரு சில விதி செய்வோம்: கவிதைச் சிந்தனைகள்.** இ.முருகையன். யாழ்ப்பாணம்: வரதர் வெளியீடு, 226, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, 1972. (யாழ்ப்பாணம்: ஆனந்தா அச்சகம்).

(6), 80 பக்கம், விலை: ரூபா 3.00, அளவு: 20.5x13.5 சமீ.

நெடியதொரு பழைய மரபினை உடையது தமிழ்க் கவிதை. இந்த மரபின் சுமை யுடன் நவீனத்துவத்தை எவ்வாறு எதிர்நோக்குவது என்பது, தமிழ்க் கவிஞர்களின் மிகப் பெரிய பிரச்சினையாக இருந்துவந்துள்ளது. மரபின் தொடர்பிலே நவீனத்துவம் பிறப்பிக்கும் பிரச்சினைகளையே இந்நூல் பரிசீலனைசெய்கின்றது. இதனால் பழமைப் பீடிப்பின் தேக்கமும் சூனியவாத எதிர்மறை நோக்கின் போலிப் புதுமையினது வியர்த்தமும் இங்கு எடுத்துப் பேசப்படுகின்றன. குருட்டுப்

பழமையிலும் மேலோட்டமான புதுமையிலும் உள்ள நோய்க்குணங்களை அடையாளம் காட்டும் முயற்சியே இந்நூலாகும். இன்று, எளிமையா கடுமையா, ஓதுக்கல் முறை, பாடவா பேசவா?, குளியலறை முணுமுணுப்பு, இனி, ஆகிய தலைப்புகளில் கவிஞர் முருகையன் எழுதியுள்ள இக்கட்டுரைகள் முன்னதாக எழுத்து, தாமரை, வீரகேசரி முதலான ஊடகங்களில் பிரசுரமாகியிருந்தன. 2007இல் சாஹித்திய இரத்தினா விருது பெற்ற கவிஞர் இராமுப்பிள்ளை முருகையன் சாவகச்சேரி, கல்வயல் கிராமத்தில் 23.4.1935இல் பிறந்தவர். தன் 12ஆவது வயதில் கவிதை புனையத் தொடங்கியவர். 1950 முதல் கவிதை எழுதிவரும் இவர் பல பிறமொழிக் கவிதைகளையும் தமிழுக்குத் தந்துள்ளார். "நோக்கு" என்ற காலாண்டுக் கவிதை இதழின் (1964-1965) இணை ஆசிரியராகவும் பணியாற்றியுள்ளார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கௌரவ கலாநிதிப் பட்டமும் இவருக்குக் கிடைத்திருந்தது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 19415).

### 12862

**திறந்த கதவுள் தெரிந்தவை ஒரு பார்வை.** தியத்தலாவை எச்.எப்.ரிஸ்னா. கொழும்பு 10: எஸ்.கொடகே சகோதரர்கள், 675 பி.டி.எஸ்.குலரத்ன மாவத்தை, மருதானை வீதி, 1வது பதிப்பு, 2013. (வெல்லம்பிட்டிய: சத்துர அச்சகம், 69, குமாரதாச பிளேஸ்).

(14), 248 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 600., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-955-30-4157-9.

இந்நூலில் 40 விமர்சனக் கட்டுரைகள் அடங்கியுள்ளன. அவை கவிதை நூல்கள், சிறுகதை நூல்கள், நாவல்கள், சிறுவர் இலக்கியம், ஏனையவை என ஐந்து பிரிவுகளாக வகுக்கப்பட்டுள்ளன. நூலில் ஆசிரியை ரிஸ்னா, தான் வாசித்த நூல்களில் காணப்படும் விடயங்களை விமர்சனரீதியில் ஆழமாகவும் நேர்த்தி யாகவும் எளிமையான தமிழ்நடையில் எழுதியுள்ளார். சமகாலத்தில் வெளியான நூல்களின் இரசனைக் குறிப்புத் திரட்டாக இந்நூல் அமைகின்றது. ஆழமான இலக்கியத்தேடலற்ற வாசகனுக்கும் குறித்த ஆசிரியர் பற்றியதும் அவரது படைப்புகள் பற்றியதுமான தகவலை வழங்கி, அவரை அவ்வாசிரியரின் நூலைத் தேடிச்செல்லவேண்டும் என்ற அவாவை வரவழைப்பதாக இக்கட்டுரைகள் அமைகின்றன. புறக்கணிக்கப்பட்ட அல்லது கண்டுகொள்ளப்படாத புதிய எழுத்தாளனையும் இவரது கட்டுரைகள் பரந்த வாசகர் குழாமை நாடிக் கொண்டு சேர்க்கும் தொடர்புப்பாலப் பணியை மேற்கொள்கின்றன.

### 12863

**படைப்புகளும் பார்வைகளும்: கலை இலக்கியப் படைப்புகள் மீதான பார்வைகள்.** க.நவம். வல்வெட்டித்துறை: நான்காவது பரிமாணம், தெணியகம், பொலிகண்டி, 1வது பதிப்பு, 2017. (நெல்லியடி: பரணீ அச்சகம்).

124 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 18.5x12.5 சமீ., ISBN: 978-955-7295-02-2.

இந்நூலில் சண்முகம் சிவலிங்கத்தின்-காண்டாவனம், செங்கை ஆழியானின்-விடியலைத்தேடி, மயூ மனோவின் - நாம் பேசிக்கொண்டிருந்தபோது பெய்திராத மழை, இளங்கோவின்- சாம்பல் வானத்தில் மறையும் வைரவர், தேவகாந்தனின்-கூர் 2010 சஞ்சிகை, டாக்டர் என்.எஸ்.நடேசனின் -வாழும் சுவடுகள், தேவமுகுந்தனின் -கண்ணீரினூடே தெரியும் வீதி, தீபச்செல்வனின் - பதுங்குகுழியில் பிறந்த குழந்தை, மெலிஞ்சிமுத்தனின்- வேருலகு, கருணாகரமூர்த்தியின் -பதுங்குகுழி, சேரனின் - What if the Rain Falls, தெணியானின் - இன்னொரு புதிய கோணம் ஆகிய பன்னிரண்டு கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. எழுத்தாளர் நவம் அவர்கள் ஒரு தேர்ந்த வாசகனாகவும், நயப்புரையாளனாகவும், விபரிப்பாளனாகவும், விமரிசகனாகவும், பல்வேறு தளங்களிலும் இருந்து தாம் சுவைத்த நூல்களைப்பற்றி மேற்கொண்ட பதிவுகள் இவை. தான் கண்ட வாசிப்பின் இன்பத்தை அடுத்தவரும் அடையத்தூண்டுவதாக அவரது எழுத்துக்கள் அமைந்துள்ளன.

### 12864

**பொச்சங்கள்.** வ.அ.இராசரெத்தினம். திருக்கோணமலை: கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு, வடக்கு-கிழக்கு மாகாணம், 1வது பதிப்பு, ஏப்ரல் 1999. (திருக்கோணமலை: அச்சகத் திணைக்களம், வடக்கு-கிழக்கு மாகாண அரசு).

(16), 17-175 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 17x11 சமீ.

ஆசிரியர் தான் வாசித்தறிந்த பல்துறைசார்ந்த நூல்களைப் பற்றிய ஓர் அசைபோடலாக அல்லது இரைமீட்டலாக இந்நூல் அமைந்துள்ளது. 1925 இல் பிறந்து 1946 இல் தமது 21 வயதில் இலக்கியப் பிரதிகளை எழுதத்தொடங்கிய வ.அ. இராசரத்தினம் தமது மறைவு வரையில் எழுதிக்கொண்டே இருந்தார். தினக்குரல் ஞாயிறு இதழில் பொச்சங்கள் என்ற தலைப்பிலும் அவர் இறுதியாக நீண்ட தொடரை எழுதி ஓய்ந்தார். தினக்குரல் ஞாயிறு இதழில் வெளிவந்த அவரது தொடரே "பொச்சங்கள்" என்ற அதே தலைப்பில் இப்பொழுது நூலுருவாகியுள்ளது. இதில் நிகண்டு, இலக்கண நூல், செம்மீன், சிங்கள நாவல், அரும்பிய முல்லை, திவ்யப் பிரபந்தம், விவிலியம், உலக சரித்திரம், மட்டக்களப்புத் தமிழகம், நம்பியகப்பொருள், யாப்பு, தண்டியலங்காரம், உள்மன யாத்திரை, மதங்க சூளாமணி, தேம்பாவணி, பந்த நூல், குறும்பா, உருவகக் கதைகள், மகாபாரதம், பூர்த்தியடையாத மட்டக்களப்புக் காவியம், சிறுவர் இலக்கியம், சரணம்(மலையக நாவல்), ஒரு பறவையின் பாடல், கண்டியரசன் நாடகம், பெ.பொ.சி. கவிதைகள், சரித்திர நாவல், திருக்கடைக்காப்பு ஆகிய 27 தலைப்புகளில் இத்தொடர் எழுதப்பெற்றுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 23154).

## 12865

**மா.பா.சி. கேட்டவை (தினக்குரல் பதிவுகள்).** *மா.பாலசிங்கம். கல்கிஸ்ஸை: புதிய பண்பாட்டுத் தள வெளியீடு, 13, மவுண்ட் அவெனியு, மவுன்ட் லவீனியா, 1வது பதிப்பு, சித்திரை 2016. (கொழும்பு 6: ஆர்.எஸ்.ரி. என்டர்பிரைசஸ், 114,* W.A.*சில்வா மாவத்தை).*

xxvi, *488 பக்கம், விலை: ரூபா 900., அளவு: 22*x*15 சமீ.,* ISBN: *978-955-41109-2-2.*

*தினக்குரல் பதிவுகளாக வெளிவந்த இலக்கியக் கூட்டங்களில் ஆற்றிய மா. பாலசிங்கத்தின் உரைகளின் தொகுப்பு, கொம்யூனிஸ்ட் கார்த்திகேயன், பேராசிரியர் கைலாசபதி ஆகியோரின் நினைவுப் பேருரைகள், பேராசிரியர் கா.சிவத்தம்பி பவளவிழா மலர், சுபைர் இளங்கீரனின் இனிய நினைவுப் பகிர்வு, உழைக்கும் மக்கள் வாழ்வை இலக்கியமாக்கியவர் செ.யோகநாதன், கவிநாயகர் கந்தவனத் துடனான இலக்கியச் சந்திப்பு, வி.ரி.வி.தெய்வநாயகம்பிள்ளை ஒரு திறந்த புத்தகம், சங்கீதபூஷணம் அமரர் திலகநாயகம் போல் அஞ்சலியுரை, மல்லிகை டொமினிக் ஜீவாவின் பிறந்தநாள் விழா, மூத்த பத்திரிகையாளர் ஈ.வீ.டேவிட் ராஜுவின் பவளவிழா, தகவம் பரிசளிப்பு-2009, தம்பிஐயா தேவதாசின் இரு நூல்களின் வெளியீடு, மட்டுவில் ஞானகுமாரனின் கவிதைத் தொகுதி வெளியீடு எனப் பல்வேறு இலக்கிய நிகழ்வுகள் பற்றிய செய்திக் கட்டுரைகளும், அந்தரத்து உலவுகிற சேதி, மஹாகவியியல், ஞானம் எஸ்பொ. சிறப்பிதழ், தமிழ்நேசனின் நெருடல்கள், திருக்குறளின் கல்விச் சிந்தனை-சமூகநோக்கில் ஒரு மறுவாசிப்பு, கலை இலக்கியக் கட்டுரைகள், அவர்கள் துணிந்துவிட்டார்கள், லெனின் மதிவானம் எழுதிய உலகமயம்-பண்பாடு-எதிர்ப்பு அரசியல், இதயராசனின் முரண்பாடுகள்,சுதாராஜின் உயிர்க் கசிவு, ஐங்கரநேசனின் ஏழாவது ஊழி, நீர்வை பொன்னையனின் காலவெள்ளம், நீலாவணன் காவியங்கள், ஊருக்கு நல்லது சொல்வேன், கசந்தகோப்பி உள்ளிட்ட பல்வேறு நூல்களின் வெளியீடு பற்றிய அறிமுக, விமர்சனக் கட்டுரைளையும் உள்ளிட்டதான 70 படைப்பாக்கங்களை இந்நூல் கொண்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 60577).*

# 894.8 (7) பலவினத் தொகுப்பு

## 12866

**பல்கலைச் செல்வி இராஜம் புஷ்பவனம் படைப்புகள்.***ஷெல்லிதாசன், நிர்மலாதேவி கோவைநந்தன் (தொகுப்பாசிரியர்கள்). பிரான்ஸ்: ரேவதி மோகன், ஆனந்தரஜனி வெளியீடு, 1வது பதிப்பு, ஆடி 2017. (யாழ்ப்பாணம்: குரு பிரிண்டர்ஸ், 39/2, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி).*

xviii, *205 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 21*x*14 சமீ.,* ISBN: *978-955-52563-2-2.*

*ஈழத்துப் பெண் எழுத்தாளர் வரிசையில் ஆளுமைமிக்க எழுத்தாளர்களில் ஒருவராகத் திகழ்ந்தவர் பல்கலைச்செல்வி என். இராஜம் புஷ்பவனம். 1994இல் அமரராகிவிட்ட இவரது தேர்ந்தெடுக்கப்பட்ட படைப்புகளின் தொகுப்பாக*

இந்நூல் உருவாகியுள்ளது. கவிதை, சிறுகதை, நாடகம், வானொலி மெல்லிசை, கருத்தோவியப் படைப்பாளி எனப் பல்துறை ஆளுமைமிக்கவராகத் திகழ்ந்த இவர் "சுமதி எங்கே" என்ற திரைப்படத்திற்கு வசனகர்த்தாவாகவும் இருந்தவர். இத்தொகுப்பில் இவர் எழுதிய ஒன்பது சிறுகதைகள் (ஆத்மபேதம், அம்மா, அவன் பெரியவன், ஜீன்பண்டா, குடிப்பேதம், சுபீட்சத்தை நோக்கி, விடிவு வரும், செம்பாட்டு மண், புனிதங்கள் போற்றப்படும்), பன்னிரு கவிதைகள் (அமைதிகாண நீ வருவாய், அறிஞர் அண்ணா வாழ்த்துப்பா, இனிதாய் வாழ்வோம், எமைவிட்டு ஏனையா போனீர்?, கீதம் மீட்டுவார், நீல நதியின் .., என்றும் இனிதாய் வாழ, றோட்டில் ஆடு, செந்தமிழ்த் தாயே வணக்கம், சிற்றருவி சலசலக்க, வீணையின் நாதம், வித்தகர் விபுலாநந்தர்), எட்டு நாடகங்கள் (ஆஞ்சநேயர், ஜோதீஸ்ரூபன், காளமேகம், மலையுச்சிச் சாமியார், நல்ல மாணாக்கன், நேர்மை தந்த பரிசு, பிரியம்வதா, தாமரைக்குமரி), இரு கட்டுரைகள் (ஆஞ்சநேயர், இளஞ்சிறார்களின் எதிர்காலம், பெண்களும் பிரச்சினைகளும்) ஆகியவை அடங்கியுள்ளன. (இந் நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 62100).

# 900 புவியியல், வரலாறுகள்

## 901. (1) வரலாற்றுப் பாடநூல்கள்

### 12867

**இலங்கையினதும் உலகத்தினதும் மூலாதாரச் சரித்திர நூல்.** L.H.ஹொஹஸ் பெறேறா, M.இரத்தினசபாபதி (ஆங்கில மூலம்), B.M.யோசவ் பொன்ராசா, M.J.வேதநாயகம் (தமிழாக்கம்). கொழும்பு: W.M.A.வாஹிட் அன் பிரதர்ஸ், 233, பெரிய தெரு, 1வது பதிப்பு, 1955. (கொழும்பு: கூட்டுறவு மொத்த விற்பனவு அச்சக நிலையம், 160, மெக்கலம் ரோட்).

*(18), 398 பக்கம், விளக்கப்படங்கள், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.*

கொழும்பு சென்ற் பெனடிக்ஸ் கல்லூரியில் சரித்திரபாட விரிவுரையாளரான L.H. ஹொஹஸ் பெறேறா, மற்றும் கொழும்பு சென்ற் பீற்றேஸ் கல்லூரியில் சரித்திரபாட விரிவுரையாளராகிய M.இரத்தினசபாபதி ஆகியோரால் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட நூலின் தமிழாக்கம். ஆதிகாலம் தொடக்கம் கி.பி. 1505 வரையுமான காலகட்ட இலங்கை வரலாற்றையும் உலக வரலாற்றையும் கனிஷ்டி வகுப்பு மாணவர்களுக்கு ஏற்றவாறு விளக்குகின்றது. ஆதிகாலம், இலங்கை-சரித்திர காலத்திற்கு முன் இருந்த விதம், நாகரிகத்தின் தொடக்கம், புகழ்மிக்க புராதன கிறீஸ், பண்டைய உரோமை, பௌத்தம்-அதன் தோற்றமும் வளர்ச்சியும், இலங்கையின் பூர்வநாகரிகம், மத்திய காலத்தில் மேற்கு நாடுகளின் நிலை, இலங்கை அனுராதபுரக் காலம்-1, மகாயானக் கொள்கை, இந்துமதம் மறுமலர்ச்சி பெற்றுப் பரம்புதல், அனுராதபுரக் காலம்-2, பிற்காலத் தென் இந்தியப் பேரரசுகள், இலங்கை-பொலநறுவைக் காலம் 1, இலங்கை-பொலநறுவைக் காலம் 2, மத்திய

காலத்தில் கிழக்கு நாடுகள், ஐரோப்பா விழிப்படைதல், இலங்கை-தென்மேற்குத் திசையாக இடம்பெயருதல் ஆகிய 17 அத்தியாயங்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 34111).

### 12868

**உலக வரலாறு: மூன்றாம் பாகம்.** த.இராமநாதபிள்ளை. யாழ்ப்பாணம்: த.இராமநாதபிள்ளை, பருத்தித்துறை, 1வது பதிப்பு, 1953. (யாழ்ப்பாணம்: சைவப் பிரகாச யந்திரசாலை).

vi, 170 பக்கம், விலை: ரூபா 3.00, அளவு 21.5x14 சமீ.

இந்நூல் பதினாறாம் அதிகாரம் முதல் பத்தொன்பதாம் அதிகாரம்வரை நான்கு அதிகாரங்களையும், 30 பாடங்களையும் உள்ளடக்கியது. மேனாட்டரசுகள் (பிராஞ்சியர் அரசியற் புரட்சி, சுயாதீனவியக்கம், இத்தாலியர் தேசியம், செருமானியர் இணையரசு, ரூஷியர் கோல்), யந்திர காலம் (கைத்தொழில் முறை மாற்றம், துருக்கர் இராச்சியம், பிரித்தானியர் துணையரசு, இந்தியா, அமெரிக்க ஐக்கியக் குடியரசு, ஜப்பானும் சீனாவும், ஐரோப்பியர் மாயுத்தம், அங்கிலர் கல்வி நிலையங்கள், பொருளுடைமை, பொதுவுடைமை), இலங்கைஅங்கிலர் கோல் (அங்கிலர் கீழிந்திய வணிகர் கூட்டம், அங்கிலர் முடியாட்சி, அங்கிலர் ஆட்சியின் பலாபலன், காப்பி தேயிலை ரப்பர், கமம், கல்வி, உள்நாட்டரசியல், பிரயாண வசதிகள், அரசியற் சீர்திருத்தம், சுயாதீன விலங்கை), இக்காலவுலகு (இந்தியத் தேசியமும் காந்தியடிகளும், மேனாட்டார் வாழ்க்கை, சாதியும் நாகரிகமும், உலகமாயுத்தம், சுயாதீனவிந்தியா) ஆகிய தலைப்புகளில் இம் மூன்றாம் பாகத்தில் உலக வரலாறும் இலங்கை வரலாறும் சொல்லப்படுகின்றன. லண்டன் பீ.ஏ. பட்டதாரியான நூலாசிரியர் த.இராமநாதபிள்ளை, புலோலி இந்துக் கல்லூரி அதிபராகப் பணியாற்றியவர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 2775).

### 12869

**வரலாறு: முதற் பகுதி.** அமரதாச லியனகமகே, சிறிமல் ரணவல, P.V.J.ஜயசேகர, நந்தா ஜயசிங்க (மூல நூலாசிரியர்கள்), இ.முருகையன், வே.வல்லிபுரம், ஐ. தம்பிமுத்து, த.ர.இராசலிங்கம் (மொழிபெயர்ப்பாளர்கள்), வே.பேரம்பலம் (பதிப்பாசிரியர்). கொழும்பு 10: கல்வி வெளியீட்டுத் திணைக்களம், மாளிகாவத்தைச் செயலகம், 1வது பதிப்பு, 1976. (கொழும்பு: எயிற்கின் ஸ்பென்ஸ் கம்பெனி லிமிட்டெற்).

vi, 93 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14 சமீ.

இது தேசிய உயர் கல்விச் சான்றிதழ் பரீட்சைக்குரிய பாடநூல். பதினொராம் நூற்றாண்டின் இறுதிவரை இலங்கை வரலாற்றுச் சுருக்கம், நீர்வள நாகரிகத்தின் எழுச்சியும் வீழ்ச்சியும், பின் மத்திய காலத்து ஆட்சிமுறை, சமய-பண்பாட்டு மாற்றங்கள், இலங்கைக்கு வெளியுலகுடன் இருந்த வியாபாரத் தொடர்புகளும்

பண்பாட்டுத் தொடர்புகளும், குடியேற்றப் பருவம், மத்திய வகுப்பின் எழுச்சி ஆகிய ஏழு அத்தியாயங்களைக் கொண்டதாக இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 30725).

**மேலும் பார்க்க: 13A17, 12204,12205.**

## 909 நாகரீகங்கள்

### 12870

**மக்கள் இனங்கள்.** எச்.ஜே.புளூவர் (ஆங்கில மூலம்), ச.சரவணமுத்து (தமிழாக்கம்). கொழும்பு 7: வெளியீட்டுப் பிரிவு, அரச கரும மொழித் திணைக்களம், 1வது பதிப்பு, 1964. (கொழும்பு: இலங்கை அரசாங்க அச்சகம்).

(6), 69 பக்கம், அட்டவணைகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

Professor H.J.Fleure அவர்களால் எழுதப்பெற்று லண்டன் Ernest Benn நிறுவனத்தால் வெளியிடப்பெற்ற The Races of Mankind என்ற நூலின் தமிழாக்கம் இது. மனிதனின் கூர்ப்பும், பின்னர் புவியியல் தடைகள் அல்லது வாய்ப்புகளினால் தீர்மானிக்கப்பட்டனவும் பல்வேறு திசைகளிற் சென்றனவுமான மனித நகர்வுகளும் பற்றிச் சுருக்கமாக விளக்கும் நூல் இது. மனித இனங்கள், ஆபிரிக்காவிலுள்ள இனம், தென் ஆசியாவுக்கூடாகப் பசிபிக்கு வரை, ஆசியாவில் வடக்கு, வடமேற்கு நகர்வுகள், ஆசிய பருவக்காற்று நிலங்களிலும் பசுபிக்கிலுமுள்ள மக்கள், அமெரிக்கா, ஐரோப்பாவும் மத்தியதரைப் பிரதேசமும் ஆகிய ஏழு இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 23460).

### 12871

**மறைந்த நாகரிகங்கள்.** ந.சி.கந்தையா. சென்னை 600017: அமிழ்தம் பதிப்பகம், A 4, மாதவ் குடியிருப்பு, 5 டாக்டர் தாமசு சாலை, தியாகராய நகர், 2வது பதிப்பு, 2004, 1வது பதிப்பு, 1950. (சென்னை 600 017: தமிழ்மண் பதிப்பகம், 2, சிங்காரவேலர் தெரு, தியாகராய நகர்).

xii, 148 பக்கம், விளக்கப்படங்கள், விலை: இந்திய ரூபா 80., அளவு: 21x14 சமீ., ISBN: 81-7269-019-3.

"இவ்வுலகின் பழைய நாகரிகங்களை எல்லாம் ஆராய்ந்து நோக்கின் அவை எல்லாவற்றுக்கும் ஒரே அடிப்படை உண்டு என்பது தெள்ளதில் தோன்றும். அவ்வடிப்படைதான் யாது என அறிதல் ஆராய்ச்சி வல்லார்க்கெல்லாம் பெரு மயக்கம் அளிப்பதாயிற்று. சிந்துவெளிப் புதைபொருள் ஆராய்ச்சிக்குப் பின்னர் பழஞ்சரித்திர ஆராய்ச்சியிற் றலைமை சான்ற டாக்டர் பிராங்போர்ட் போன்ற சிலர் சிந்துவெளி நாகரிகமே பழைய நாகரிகங்களுக்கு எல்லாம் அடிப்படை யாகவுள்ளதெனத் தமது கருத்தினைத் தயக்கமின்றி வெளியிட்டுள்ளனர். சிந்துவெளி

*நாகரிகம், ஆராய்ச்சியில் திராவிடருடைய நாகரிகமாகவும், திராவிடருள்ளும் தமிழருடையதாகவும் காணப்படுதல் மிக வியப்பளிப்பதேயாகும். பழைய நாகரிக மக்களின் வரலாறுகளை ஒரு சிறிதளவாவது அறிந்திருப்பின் அன்றோ அவை தம்மை ஒப்பிட்டு அவைகளுக்குள்ள ஒற்றுமை வேற்றுமைகளை அறிதல் சாலும். இச்சிறிய நூல் அவ்வழியில் ஊக்குதற்கு எழுந்த ஒரு சிறு நூலாகும்." நூலாசிரியர், முன்னுரையில். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 36774).*

## 910 பொதுப் புவியியல்

### 12872

**புவியியலாளன்: மலர் 3 இதழ் 1 (1964/1965).** *க.சின்னராஜா (இதழ் ஆசிரியர்). எஸ்.கே.பரமேஸ்வரன், கமலா செல்வதுரை (உதவி ஆசிரியர்கள்). பேராதனை: புவியியற் சங்கம், புவியியல் துறை, இலங்கைப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, 1965. (யாழ்ப்பாணம்: நாமகள் அச்சகம்).*

*(9), 80 பக்கம், விளக்கப்படங்கள், அட்டவணைகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x17.5 சமீ.*

*இலங்கைப் பல்கலைக்கழகத்தின் பேராதனை வளாகப் புவியியல் சங்கம் வெளியிடும் ஆண்டு மலர். "இலங்கையின் விவசாயம்"-சிறப்பு மலராக இவ்விதழ் வெளியிடப்பட்டுள்ளது. இவ்விதழில் வெளியாய்வு முறைகளும் நிலப் பயன்பாட்டு ஆராய்ச்சியும் (சோ.செல்வநாயகம்), இலங்கையின் குடியிருப்பு வகைகளும் நிலப்பயன்பாடும் (பி.எல். பண்டிதரத்னா), இலங்கையின் மண்வகைகளும் புவிச்சரிதவியலும் (டி.பி.பட்டியாராய்ச்சி), இலங்கையின் மண்களினது புவியியல் (சி.ஆர்.பானபொக்கே), தென்மேற் பருவக் காற்றும் பயிர்ச்செய்கையும் (ஜோர்ஜ் தம்பையாபிள்ளை), இலங்கையின் பொருளாதார விருத்தியில் விவசாயத்தின் முக்கியத்துவம் (சிட்னி எம்.டி.சில்வா), இலங்கையின் பயிர்ச்செய்கை (பிலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயக்கா), இலங்கையின் தேயிலைச் செய்கை (எஸ்.கே. பரமேஸ்வரன்), இலங்கையின் றப்பர்ச் செய்கை (இ.கணேந்திரன்), இலங்கையின் தென்னைப் பயிர்ச்செய்கை (ந.வேல்முருகு), நெல் உற்பத்தியை அதிகரித்தல் (எஸ்.ரி.செனெவிரத்னா), இலங்கையின் மீன்பிடித் தொழில் (கா.ரூபமூர்த்தி), யாழ்ப்பாணப் பகுதியின் பயிர்ச்செய்கைப் பிரச்சினைகளும் கைத்தொழில் விருத்தியும் (சோ.செல்வநாயகம்), இலங்கையின் உணவு உற்பத்தியும் மக்கட் பெருக்கமும் (க.சின்னராஜா), புவியியலும் பொருளாதார நிறைவு பெறத் திட்டமிடுதலும் (கா.குலரத்தினம்) ஆகிய ஆய்வுக்கட்டுரைகளும், வருடாந்த சங்க அறிக்கையும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 011846).*

## 12873

**யாழ்ப்பாணப் புவியியலாளன்: ஜுன் 1983.** பொ.பாலசுந்தரம்பிள்ளை, இ.மதனாகரன் (ஆலோசக ஆசிரியர்கள்). யாழ்ப்பாணம்: புவியியற் கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, 1வது பதிப்பு, ஜுன் 1983. (யாழ்ப்பாணம்: சித்திரா அச்சகம், 310, மணிக்கூண்டு கோபுர வீதி).

(6), 84 பக்கம், தகடுகள், விளக்கப்படங்கள், அட்டவணைகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x18 சமீ.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் புவியியற் கழகம் வருடாந்தம் வெளியிடும் ஆய்விதழின் முதலாவது மலர் இது. யாழ்ப்பாணச் சுண்ணக்கற் பிரதேசத்தின் புவிப் பௌதிகவியல் (இ.மதனாகரன்), கன்னியா வெந்நீரூற்று (சு.செல்வநாயகம்), நில நீரின் உருவாக்கக் கொள்கைகளும் இலங்கையில் அதன் வளப்பரம்பலும் (ம.லியோன், றெவ்வல்), இலங்கையில் விவசாய நிலவுடமைகளின் அளவும் நில ஆட்சியும் (அ.கணதிபதிப்பிள்ளை), இலங்கையில் பசுமைப் புரட்சியில் நெல் உற்பத்தியும் பிரச்சினைகளும் (எஸ்.பி.சர்மா), யாழ்ப்பாணக் குடா நாட்டின் நெல் விளை நிலங்களின் வரள் பருவப் பயிர் செய்கை (செல்வி ப.கந்தசாமி), இலங்கையின் காட்டு வளமும் அதன் பொருளாதாரப் பின்னணியும் (செல்வி.ச.சற்குணதிலகம்), இலங்கையின் கைத்தொழில் வளர்ச்சியில் கைத்தொழில் கொள்கைகளின் பங்கு -1950ம் ஆண்டின் பின் (செல்வி ஜயந்தி அற்புதநாதன்), இலங்கை மீன்பிடியில் அண்மைக்காலப் போக்கு (க.கி.ஆறுமுகம்), இலங்கையின் குடிசனத்தொகை வளர்ச்சியும் பரம்பலும் மாற்றங்களும் (பொ.பாலசுந்தரம்பிள்ளை), இலங்கையில் இந்திய மக்களின் குடித்தொகை வேறுபாடும் குடிப் புள்ளியியல் மாதிரிகளும் (கா.குகபாலன்), தொலைவு நுகர்வு பற்றிய அறிமுகம் (எஸ். பாலச்சந்திரன்), இலங்கையின் மழைவீழ்ச்சி மாறுதன்மை பற்றிய ஆய்வுகளில் காணப்படும் சில முரண்பாடான முடிவுகள் (மா.புவனேஸ்வரன்), விமானப் படங்களுக்குரிய பொதுப்படையான வியாக்கியானம் (S.T.B.இராஜேஸ்வரன்) ஆகிய ஆய்வுக்கட்டுரைகள் இம்மலரில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 31789. நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தின் சேர்க்கை இலக்கம் 009735).

## 12874

**யாழ்ப்பாணப் புவியியலாளன்: இதழ் 2 (1983/1984).** ஜெ.ஜெயராஜ் (இதழாசிரியர்), இ.மதனாகரன் (ஆலோசக ஆசிரியர்). யாழ்ப்பாணம்: புவியியற் கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, 1வது பதிப்பு, ஜுலை 1984. (யாழ்ப்பாணம்: ஆசீர்வாதம் அச்சகம், 50, கண்டி வீதி).

94 பக்கம், தகடுகள், புகைப்படங்கள், அட்டவணைகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x17.5 சமீ.

விருத்தியும் விருத்தி தொடர்பான கருத்துக்களும் (சு.செல்வநாயகம்), விருத்தி அடைந்துவரும் நாடுகளின் விருத்திக்கான தடைகள் (தி.பத்மநாதன்), விருத்தி அடைந்துவரும் நாடுகளின் பொதுவான பண்புகளும் வேறுபாடான அமைப்புகளும்

(இ.மதனாகரன்), இலங்கையைச் சிறப்பாகக் கொண்டு குறைவிருத்தியும் குறைவிருத்தி அம்சங்களும் (நா.தேவரஞ்சிதம்), பொருத்தமான தொழில்நுட்பமும் விருத்தி அடைந்துவரும் நாடுகளும் (சாரதா சுப்பிரமணியம்), விருத்தியும் குடித்தொகை நிலைமாற்றக் கோட்பாடும் (பங்கயச்செல்வி சிவபாதசுந்தரம்), விருத்தி அடைந்துவரும் நாடுகளின் வர்த்தகம் (ரஜனி நாகராஜா), வன்னிப் பிரதேசத்தின் பொருளாதார அபிவிருத்தியில் மத்திய இடங்களின் பங்கு (பொ. பாலசுந்தரம்பிள்ளை), ஜப்பானின் வெளிநாட்டு உதவி (கா.ரூபமூர்த்தி), விருத்தியடைந்துவரும் நாடுகளில் தொழிலின்மையும் அதனோடு தொடர்புடைய பிரச்சினைகளும் (ஜெயந்தி அற்புதநாதன்), விருத்தியடைந்து வரும் நாடுகளில் நகரவாக்கம் (க.கி.ஆறுமுகம்), நில மதிப்பீட்டு ஆய்வுகளில் நில ஆய்வுகளினதும் நில வகைப்பாடுகளினதும் பங்கு (S.T.B.இராஜேஸ்வரன்), விருத்தி அடைந்துவரும் நாடுகளில் கல்வி நிலை (கலாமாலினி நாகரத்தினம்) ஆகிய புவியியல் ஆய்வுக் கட்டுரைகள் இவ்விதழில் இடம்பெற்றள்ளன.

### 12875

**யாழ்ப்பாணப் புவியியலாளன்: இதழ் 3 (1985/1986).** வி.ரவிச்சந்திரன், செல்வி எஸ்.திருமணிச்செல்வி (இதழ்ஆசிரியர்கள்), S.T.B. இராஜேஸ்வரன் (ஆலோசக ஆசிரியர்). யாழ்ப்பாணம்: புவியியற் கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, 1வது பதிப்பு, ஜுலை 1986. (யாழ்ப்பாணம்: ஸ்ரீகாந்தா அச்சகம், 213, காங்கேசன்துறை வீதி).

(16), 100 பக்கம், தகடுகள், விளக்கப்படங்கள், அட்டவணைகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x18 சமீ.

1984/85க்குரிய இதழ் 2 வெளியிடப்படாத நிலையில் 3வது இதழாக இவ்வாண்டிதழ் வெளிவந்துள்ளது. இதில் கண்டங்களின் பரிணாமம் (S.T.B.இராஜேஸ்வரன்), புவிச்சரித வரலாற்றுக் காலத்தில் காலநிலை (செ.பாலச்சந்திரன்), நீரியல் வட்டத்தின் பொதுவான செயல் முறைகள் (க.விமலநாதன்), புவி வெளியுருவவியல் சிந்தனை விருத்திக்கு டேவிஸ் பெர்ங் பங்களிப்பு (இ.மதனாகரன்), எல்லைகளும் எல்லைக்கோடு பற்றிய வரையறையும் சர்வதேச பிரச்சினாயில் அதன் தாக்கமும் (வி.சிவமூர்த்தி), இருதய நிலக் கொள்கையும் ஒரு நிலக்கொள்கையும் (ஜி.எஸ். சிவராசா), இலங்கையின் விவசாயக் காலநிலை (செல்வி தா.ஜெயராணி), இலங்கையின் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையில் தேயிலை (செல்வி கே. கேந்திரேஸ்வரி), உலக மீன்வள மீளாய்வு (கே.ரூபமூர்த்தி), இலங்கையின் நன்னீர் மீன்பிடித்தொழில் (எம்.இராதாகிருஷ்ணன்), வடக்குக் கிழக்கு மாகாணங்களின் விவசாயத் திட்டமிடலுக்கு ஆதாரமான சில அம்சங்கள் (மாணிக்கம் புவனேஸ்வரன்), இலங்கையில் விவசாய நிலச்சீர்திருத்த நடவடிக்கை (இரா. சிவசந்திரன்), இலங்கையின் குடித்தொகைக் கொள்கை (செல்வி ந.மேனகா), இலங்கையில் குடித்தொகைப் பிரச்சினையும் குடும்பத் திட்டமிடலின் அணுகுமுறையும் (கா.குகபாலன்), இலங்கையில் நகர வளர்ச்சி (என்.ரங்கநாதன்), வெளிநாட்டு உதவியும் இலங்கையும் (எஸ்.எஸ்.சாலிவாகனன்), இலங்கையில் அபிவிருத்தித் திட்டமிடல் (வி.பரம்சோதி), மூன்றாம் உலக நாடுகளில் நவகுடி

யேற்றவாதத்தின் ஊடுருவல் (செல்வி எஸ்.மரியநாயகி) ஆகிய ஆய்வுகள் இவ் விதழில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் நூலகம் நிறுவன இணையத்தள நூலகத் தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 009733).

## 12876

**யாழ்ப்பாணப் புவியியலாளன்: இதழ் 4 (1986/1987).** P.குணரத்தினம் (இதழ் ஆசிரியர்), இரா.சிவச்சந்திரன் (ஆலோசக ஆசிரியர்). யாழ்ப்பாணம்: புவியியற் கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, 1வது பதிப்பு, 1987. (யாழ்ப்பாணம்: நியூ ஈரா பப்ளிக்கேஷன்ஸ் லிமிட்டெட்).

(12), 80 பக்கம், தகடுகள், விளக்கப்படங்கள், அட்டவணைகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x18.5 சமீ.

இவ்விதழில் புவியியல் கழக அறிக்கை 1986 - 87 (ஏ.அன்ரனிராஜன்), பிரதேச அபிவிருத்தி (இ.மதனாகரன்), திட்டமிடலில் வளமதிப்பீட்டு வழி முறைகள் (ஜி. றொபேட்), விவசாய அபிவிருத்தியில் காலநிலை (மா.புவனேஸ்வரன்), நில நீர்மட்ட நடத்தைகள் (ச.வீ.துருவசங்கரி), பிரதேச நிலப் பயன்பாட்டுத் திட்டமிடல் (S.T.B.இராஜேஸ்வரன்), பயிர் பன்முகப்படுத்துதல் (அ.கணபதிப்பிள்ளை), கிளிநொச்சி-இடப்பெயர்வும் குடியேற்றமும் (இ.கேந்திரேஸ்வரி), யாழ்ப்பாண மாநகர அபிவிருத்தி (பொ.பாலசுந்தரம்பிள்ளை), யாழ்ப்பாணத்தில் மீன்பிடித்தொழில் (கா.ரூபாமூர்த்தி), முல்லைத்தீவு கடல் வள உற்பத்தி (ச. முருகையா), விவசாயத் தொழிற்துறை விரிவாக்கம் (இரா.சிவசந்திரன்), குடித்தொகை இயக்கப் பண்புகள் (கா.குகபாலன்), உயிர்ச் சூழல் ஒழுங்கு (செ. பாலச்சந்திரன்), வடமராட்சி கிழக்கு அபிவிருத்தி (பொ.பாலசுந்தரம்பிள்ளை) ஆகிய படைப்பாக்கங்கள் இவ்வாய்விதழில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 32272. நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தின் சேர்க்கை இலக்கம் 009736).

## 12877

**யாழ்ப்பாணப் புவியியலாளன்: இதழ் 5 (1987/1988).** கே.சுதாகர் (இதழ் ஆசிரியர்), S.T.B. இராஜேஸ்வரன் (ஆலோசக ஆசிரியர்). யாழ்ப்பாணம்: புவியியற் கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, 1வது பதிப்பு, 1988. (யாழ்ப்பாணம்: புனித வளன் கத்தோலிக்க அச்சகம்).

x, 150 பக்கம், தகடுகள், விளக்கப்படங்கள், அட்டவணைகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x18 சமீ.

"யாழ்ப்பாணப் புவியியலாளன்" இதழ் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியல் துறையால் 1983 இல் முதலில் வெளிவந்தது. பின்னர் இந்த இதழ் காலத்துக்குக் காலம் புவியியல் துறையால் வெளியிடப்பட்டது. இந்த இதழை மாணவர்கள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் எனப் பலரும் அலங்கரித்தனர். இலங்கையின் நில அமைப்பு, பயிர்ச்செய்கை, போன்ற பல இலங்கைப் புவியியல் சார் கட்டுரைகள் தாங்கி இவ்விதழ் வெளிவந்தது. இவ்வைந்தாவது இதழில், இலங்கையில்

பல்கலைக்கழகப் புவியியல் கல்வி வளர்ச்சி 1940-1990 (பொ.பாலசுந்தரம்பிள்ளை), விமான ஒளிப்படங்களை அடிப்படையாகக் கொண்ட புவி வெளியுருவப் படங்களும் அவற்றின் பயன்பாடுகளும் (S.T.B. இராஜேஸ்வரன்), காலநிலை மாற்றங்களும் அதற்கான சான்றுகளும் (க.சுதாகர்), ஆவியாக்க ஆவியுயிர்ப்புக் கணிப்பீடுகளும் அவற்றின் பயன்பாடுகளும் (செல்வி S.கணபதிப்பிள்ளை), இலங்கையின் வரட்சி மாதங்களின் நிகழ்வுகள் (செ.பாலச்சந்திரன்), வளிமண்டல பொதுச் சுற்றோட்டம்-சிறப்பாக அயனத்திற்குரிய சுற்றோட்டம் (ஜெ. கஜேந்திரபாலன்), அயனச் சூறாவளியின் நிகழ்வுகளும் அதன் தாக்கங்களும் (என்.மீரா), தென்னாசிய மொன்சூன் சுற்றோட்டம் (க.இராஜேந்திரம்), தென்னாசிய நாடுகளின் நீர்ப்பாசன நடவடிக்கைகளும் அவற்றின் அபிவிருத்தியும் (அ. கணபதிப்பிள்ளை), வடக்குக் கிழக்குப் பிரதேச நீர்வள அபிவிருத்தி ஓர் புவியியல் நோக்கு (மா.புவனேஸ்வரன்), விருத்தியடைந்த நாடுகளின் கோதுமை வேளாண்மை (க.ஜெயானந்தகுமாரி), பருவக் காற்றாசியாவின் நெற்செய்கை (ச.விஜயராணி), இயற்கை காடுகளும், அவற்றின் உலகளாவிய முக்கியத்தவமும் (ஜெ.ஜயந்தி), ஜப்பானின் கைத்தொழில் வளர்ச்சி (கே.ரூபமூர்த்தி), இலங்கையில் இறப்புகளும் அவற்றிற்கான காரணிகளும் (க.குகபாலன்), உலகின் பெரு நகரங்கள் (ஜி. றொபேட்) ஆகிய புவியியல்சார் கட்டுரைகள் இம்மலரில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 31490).

### 12878

**யாழ்ப்பாணப் புவியியலாளன்: இதழ் 6,7,8 (1989/1991).** செல்வி சரஸ்வதி சுந்தரம்பிள்ளை (இதழ்ஆசிரியர்), S.T.B. இராஜேஸ்வரன் (ஆலோசக ஆசிரியர்). யாழ்ப்பாணம்: புவியியற் கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, 1வது பதிப்பு, 1993. (யாழ்ப்பாணம்: தாசன் அச்சகம்).

(28), 147 பக்கம், தகடுகள், விளக்கப்படங்கள், அட்டவணைகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x18 சமீ.

ஒழுங்கு முறையான மாதிரி எடுப்பு நுட்பங்களை அடிப்படையாகக் கொண்டு நிலப் பயன்பாட்டுப் படங்களில் இருந்து வேறுபடும் நிலப்பயன்பாட்டு வகைகளை மதிப்பீடு செய்தல்: அரியாலையின் (யாழ் மாவட்டம்) ஒரு பகுதிக்கான நிலப்பயன்பாட்டு வகைகளை மதிப்பீடு செய்தலுக்கான ஆய்வு (பா.இராஜேஸ்வரன்), இலங்கையின் கல்வி அபிவிருத்தி: குடிப்புள்ளியியல் நோக்கு (கார்த்திகேசு குகபாலன்), வடக்கு கிழக்கு மாகாணங்களின் அரிசி உற்பத்தியின் தன்னிறைவு மட்டநிலையும் போக்கும் 1981/82, 1987/88 (க.சுதாகர்), கிளிநொச்சி மாவட்டத்தின் குடித்தொகையின் வளர்ச்சியும் அபிவிருத்திப் பிரச்சினைகளும் (பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை), தமிழர் பாரம்பரியப் பிரதேசம் விவசாயமும் நீர்ப்பாசனமும் (இரா.சிவச்சந்திரன்), வரண்ட வலய இயற்கைத் தாவரங்கள் யாழ்ப்பாணக் குடா நாட்டின் கரையோரப் பிரதேசங்களைச் சிறப்பாகக் கொண்ட ஆய்வு (க.றொபேட்), மாதாந்த மழை வீழ்ச்சிப் பரம்பல் ஒரு ஒப்பீட்டுக் குறிகாட்டி (செ.பாலச்சந்திரன்), காலநிலைக் குறிகாட்டிகள் திருக்கோணமலைப்

பிரதேசத்திற்கான ஓர் பிரயோகம் (க.இராஜேந்திரம்), மீன்பிடிப் பொருளியலும் வருமான செல்வு ஆய்வும் (இ.நந்தகுமாரன், ஏ.எஸ்.சூசை), குடியிருப்புக்கள் பற்றிய ஆய்வில் கிறிஸ்ராலரின் மத்திய இடக் கோட்பாட்டின் பங்கு (அ. அன்ரனிராஜன்), புவிமேற்பரப்புத் தகவல்களைப் பெறுவதற்கான செய்ற்கைக்கோள் மூலமான தொலையுணர்வு (ப.சிவசித்திரா), கனகராயன் ஆற்று வடிநில உள்ளார்ந்த அபிவிருத்தி (சரஸ்வதி சுந்தரம்பிள்ளை) ஆகிய ஆய்வுகளை இவ்விதழ் உள்ளடக்கியுள்ளது. (இந்நூல் நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 009734).

## 12879

**யாழ்ப்பாணப் புவியியலாளன்: இதழ் 9 (1992/1993).** க.சிவகரன் (இதழ் ஆசிரியர்), S.T.B. இராஜேஸ்வரன் (ஆலோசக ஆசிரியர்). யாழ்ப்பாணம்: புவியியற் கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, 1வது பதிப்பு, 1994. (யாழ்ப்பாணம்: தாசன் அச்சகம்).

(16), 96 பக்கம், தகடுகள், விளக்கப்படங்கள், அட்டவணைகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x18 சமீ.

வலிகாமம் தென்மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்கான நிலப்பயன்பாட்டு மதிப்பீடு (த.அருள்மொழி, ந.யசோதினி, பா.அனந்தசக்தி, சூ.கொன்சிலி, ஜே.யூலியட்), வானிலை அவதானிப்பு பகுப்பாய்வு முன்னறிவிப்பு சிறப்பாக அயன மண்டலம் (க.சிவகரன்), வொன்தியூனனின் விவசாய இட அமைவுக் கோட்பாடு (செல்வி வி.சியாமளா), இயற்கைச் சூழல் மாசடைதலும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளும் (எஸ்.கணேசலிங்கம்), நிலைத்து நிற்கும் அபிவிருத்தி (செல்வி ப.கலைச்செல்வி), குடிப்புள்ளியியல் நிலைமாறற் கோட்பாடு (கா.குகபாலன்), அபிவிருத்தித் திட்டமிடலில் சமூகப் பொருளாதார குறிகாட்டிகளின் பயன்பாடு (அ.அன்ரனிராஜன்), சமுத்திரச் சூழலில் பிளாந்தன்கள் (ஏ.எஸ்.சூசை), வடகீழ் மாகாணம்: எமக்குப் பொருத்தமான மாற்றுச் சக்திவளம் (இரா.சிவசந்திரன்), சூழலில் நீர்வளத்தின் முக்கியத்துவம் (செ.பாலச்சந்திரன்), இடி மின்னற் புயல்: ஒரு விளக்கம் (செ.பாலச்சந்திரன்), யாழ்ப்பாண நகரில் நிலமீட்சிக்குட்பட்ட கரையோரப் பகுதிகளில் காணப்படுகின்ற சுற்றுச் சூழல் பிரச்சினைகள் (க.றொபட், செல்வி து.இராஜசூரியர்), யாழ்ப்பாணக் குடாநாட்டிற் கான அபிவிருத்தி திறமுறைகள் (பொ.பாலசுந்தரபிள்ளை), மன்னார்ப் பிரதேச மழைவீழ்ச்சி மாறுதன்மை பற்றிய ஓர் ஆய்வு (சு.இராஜேந்திரம்) ஆகிய ஆய்வுகளை இவ்விதழ் உள்ளடக்கியுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 31492. நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தின் சேர்க்கை இலக்கம் 009737).

**12880**

**யாழ்ப்பாணப் புவியியலாளன்: இதழ் 10/11 (1994/1995).** செல்வி நளினி திருநாவுக்கரசு (இதழ் ஆசிரியர்), A.அந்தனிராஜன் (ஆலோசக ஆசிரியர்). யாழ்ப்பாணம்: புவியியற் கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, 1வது பதிப்பு, 1997. (கொழும்பு 6: அட்மிரல் கிராப்பிக்ஸ், 403 1/1, காலி வீதி).

xv, 131 பக்கம், தகடுகள், விளக்கப்படங்கள், அட்டவணைகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x18 சமீ.

இவ்விதழில் புவிச் சூழல் ஒழுங்கு (செல்வி ப.கலைச்செல்வி), சூழல் மனிதன் தொடர்பு (செ.ஸ்ரீஸ்கந்தராசா), வளமும் வள அகழ்வினால் ஏற்படும் சுற்றுச்சூழல் பிரச்சனைகளும் (கே.ஏ.ஞானேஸ்வரன்), பச்சை வீட்டுத்தாக்கம் (செல்வி கு. சந்திரலீலா), வளிமண்டல ஓசோன்: ஒரு பார்வை (செல்வி ஷர்மிலா சொர்ணலிங்கம்), இலங்கையில் நீர் மாசடைதல் (செல்வி விஜிதா சிவராஜா), அருகிவரும் தாவரப்போர்வையும் சூழலில் அதன் தாக்கமும் (கா.குகபாலன்), நிலவளம் குறைவடைதல்: காரணங்களும் பாதிப்புக்களும் (க.சுதாகர்), சமுத்திரச் சூழல் மாசடைதலும் - விளைவுகளும் (ஏ.எஸ்.சூசை), நகர சனத்தொகை அதிகரிப்பும் சூழற்பிரச்சினையும் (செல்வி நளினி திருநாவுக்கரசு), போக்குவரத்தும் சூழல் பிரச்சனைகளும் (செல்வி அன்பரசி சிவசாமி), ரியோ புவிச்சூழல் உச்சிமாநாடு (செல்வி சுமதி இராசரத்தினம்), இலங்கையில் சூழல் சட்டங்கள் (செல்வி த.தர்மேஸ்வரி), இயற்கை அனர்த்தங்களில் புவிநடுக்கங்கள் (S.T.B.இராஜேஸ்வரன்), பொருளாதார வளர்ச்சி சூழல் பாதுகாப்பு: விருத்தியடைந்து வரும் நாடுகள் எதிர்நோக்கும் முக்கிய சவால் (அன்ரனிராஜன்), கோளவெப்ப அதிகரிப்பு (செ.பாலச்சந்திரன்) ஆகிய ஆய்வுக் கட்டுரைகள் இவ்விதழில் இடம் பெற்றுள்ளன. (இந்நூல் நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 009738).

**12881**

**யாழ்ப்பாணப் புவியியலாளன்: இதழ் 18/19 (2005/2006).** சர்ப்பா அருளானந்தம், தியாகராசா தனம் (இதழ் ஆசிரியர்கள்), A.அந்தனிராஜன் (ஆலோசக ஆசிரியர்). யாழ்ப்பாணம்: புவியியற் கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, 1வது பதிப்பு, 2007. (யாழ்ப்பாணம்: கரிகணன் தனியார் நிறுவனம், இல. 424, காங்கேசன்துறை வீதி).

xii, 137 பக்கம், விளக்கப்படங்கள், அட்டவணைகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x18.5 சமீ.

யாழ்ப்பாணப் புவியியலாளன் ஆண்டு இதழ், யாழ்ப்பாண பல்கலைக்கழக புவியியல் துறையால் 1983 முதல் வெளியிடப்பட்டு வருகின்றது. இவ்விதழை மாணவர்கள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் தங்களது ஆய்வுக் கட்டுரைகளின் மூலம் அலங்கரித்து வந்துள்ளனர். இலங்கையின் நில அமைப்பு, பயிர்செய்கை, போன்ற பல இலங்கை புவியியல் சார் கட்டுரைகளைத் தாங்கி யாழ்ப்பாண புவியியலாளன் வெளிவருகின்றது. இவ்விதழில் காவித் தரவு முறையைப்

பயன்படுத்தி புவியியல் தகவல் ஒழுங்கில் இடம்சார் ஆய்வு (அ.அன்ரன் கமிலஸ்), நகரங்களின் உட்கட்டமைப்பு பற்றிய கோட்பாடுகளும் அவற்றின் பிரயோகத் தன்மைகளும் (பா.துஷ்யந்தன்), தந்திரோபாயத் திட்டமிடல் (இ.துஷ்யந்தி), பிரதேசத் திட்டமிடலில் வளர்ச்சிமுனைக் கோட்பாடு (வ.மதுரா, சி.சாயிஜனனி), செயற்றிட்ட முகாமைத்துவம் (சி.திருச்செந்தூரன்), சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டம் (அ.லக்ஷ்மன்), திண்மக்கழிவு முாமைத்துவம் (அ.சர்ப்பா, பி.சிவகௌரி), யாழ்ப்பாண மாவட்டத்தில் மிதிவெடிகளினால் ஏற்பட்ட சமூக பொருளாதாரத் தாக்கங்கள் (தி.தனம்), இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் வல்லரசுகளின் ஆதிக்கப் போட்டி-ஒரு புவிசார் அரசியல் நோக்கு (ந.பிரதீபராஜா), ஐரோப்பிய ஒன்றியத்தின் விரிவாக்கம் ஓர் புவிசார் அரசியல்ரீதியானநோக்கு (பி.விபுலன்), இயற்கை அனர்த்தங்களில் வெள்ளப்பெருக்கு (க.உதயராசா), அனர்த்தங்களும் அவற்றைக் குறைத்தலும் (பொ.பாலசுந்தரம்பிள்ளை), குடித்தொகை வயதடைதல் (கா. குகபாலன்) ஆகிய 13 ஆய்வுக் கட்டுரைகளை இவ்விதழ் உள்ளடக்குகின்றது.

## 910.01 புவியியல் பாடநூல்கள்

**மேலும் பார்க்க: 13A20, 12603**

## 910.(1) அபிவிருத்திப் புவியியல்

### 12882

**பொருளாதாரப் புவியியல்.** க.குணராசா (புனைபெயர்: செங்கைஆழியான்). யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 82, பிரவுண் வீதி, திருத்திய 3வது பதிப்பு, ஏப்ரல் 1994, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1972. (யாழ்ப்பாணம்: ஸ்ரீலட்சுமி அச்சகம், 37, கண்டி வீதி).

(8), 164 பக்கம், வரைபடங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14 சமீ.

பொருளாதாரப் புவியியல் என்பது மனிதனையும் அவனது வாழ்க்கைத் தொழிலையும் விளக்கும் புவியியற் பகுதியாகும். பொருளாதாரப் புவியியல் பொருளாதார நடவடிக்கைகளை ஆராய்வதோடு, அந்த நடவடிக்கைகளை நிலைநாட்ட எக்காரணங்கள் ஏதுவாயிருந்தன என்பதையும் ஆராய்கின்றது. இந்நூலில் உலகின் குடித்தொகை, பண்டையமுறை வாழ்க்கை, உலகின் வேளாண்மை வகைகள், உலகின் நெற்செய்கை, உலகின் கோதுமைச் செய்கை, உலகில் சோளம், பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை, உலகின் மீன்பிடித் தொழில், உலகின் விலங்கு வேளாண்மை, வலுப்பொருட்களும் உலோகப் பொருட்களும், உலகின் பிரதான கைத்தொழில் பிரதேசங்கள், இரும்புருக்குத் தொழில்கள், பொறியியற் கைத்தொழில்கள், இரசாயனக் கைத்தொழில்கள், குடியிருப்புகள், காடுகளும் காட்டுத் தொழில்களும் போக்குவரத்து வசதிகளும் தொடர்பாடல் வசதிகளும் ஆகிய 17 அத்தியாயங்களில் விளக்கப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 30586).

## 911 பிரயாண நூல்கள், வழிகாட்டிகள்

### 12883

**மலேயா-இந்தியா யாத்திரை**.கா. இராமநாதன் செட்டியார். சுழிபுரம்: திரு.பே. கிருஷ்ணர், 1வது பதிப்பு, 1965. (யாழ்ப்பாணம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை).

iv, 70 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x13.5 சமீ.

தனது மலேயா-இந்திய யாத்திரை பற்றிய பிரயாண நூலாக இதனை தமிழகத்தின் கா.இராமநாதன் செட்டியார் அவர்கள் எழுதியுள்ளார். நல்ல கூட்டம் (குழுவினர், விருந்து, நாய்க்கடி), பிரயாணம் (பினாங்கு, கப்பல், முதல் வரவேற்பு), மலையில் (சுப்பிரபாதம், அகண்ட பஜனை, காஞ்சியின் பெருமை), குமரியும் கிழவனும் (காஞ்சியின் பெருமை, காமாட்சி, சேவாஸ்ரமம், அன்பால் கஷ்டம்), தலைநகர் (ஆக்ரா, டெல்லி, இராஜகாட், சட்டசபை, தொலைந்தது), குருபுங்கவர், விடுதலை (ஹரித்துவாரம், திருவேணி, காசிநாதர், கேதாரிநாதர்), ஏழைப்பூசாரி, அரசாங்க பஸ், பெருஞ்சோதி, வருமோ (பழநி, ஆவினன்குடி), அவனாட்சி, காவேரிக் கரையில், கோவில், பிறந்த ஊர், சோழநாடு, சிவலோகம் ஆகிய 17 தலைப்பு களில் இப்பிரயாணநூல் சுவையான அனுபவப் பகிர்வாக எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 4040).

### 12884

**மிஸ்றின் வசியம்**. எ.எம்.எ.அஸீஸ். யாழ்ப்பாணம்: கலைவாணி புத்தக நிலையம், இல.10, பிரதான வீதி, 1வது பதிப்பு, ஏப்ரல் 1967. (யாழ்ப்பாணம்: கலைவாணி அச்சகம், இல. 10, பிரதான வீதி).

(8), 190 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 3.00, அளவு: 18x12 சமீ.

மிஸ்றின் வசியம், ஏ.எம்.ஏ.அஸீஸ் அவர்களின் மிஸ்ர் (எஹிப்து) நாட்டுக்கான பிரயாணத்தைப் பற்றிய நூலாயினும், அமெரிக்கா, சோவியத் ரஷ்யா, ஐரோப்பிய நாடுகள், அறபு நாடுகள், இந்தியா, பாக்கிஸ்தான் முதலிய தேசங்களுக்குப் பிரயாணஞ் செய்து பெற்ற அனுபவங்களையும் ஆங்காங்கே பிரதிபலிக்கின்றது. எகிப்து வடக்கு ஆப்பிரிக்காவில் உள்ள ஒரு குடியரசு நாடு. கெய்ரோ இந்நாட்டின் தலைநகர் ஆகும். இது உலகின் 15வது அதிக மக்கள் தொகை கொண்ட நாடாகும். மேற்கே லிபியாவையும், தெற்கே சூடானையும், கிழக்கே காசாக் கரை மற்றும் இஸ்ரேலையும் எல்லையாகக் கொண்ட எகிப்தின் இஸ்லாமியப் பெயரே மிஸ்ர் என்பதாகும். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 18407).

### 12885

**மொஸ்கோ அனுபவங்கள்**. ஆரையம்பதி க.சபாரெத்தினம். சென்னை 24: இளம்பிறை பதிப்பகம், 32-8 (375),ஆற்காடு சாலை, கோடம்பாக்கம், 1வது பதிப்பு, டிசம்பர் 2002. (சென்னை 600 024: இளம்பிறை பதிப்பகம்).

*232 பக்கம், புகைப்படங்கள், விலை: இந்திய ரூபா 75.00, அளவு: 18x12 சமீ.,* ISBN: *81-88686-00-x.*

*ஆசிரியர் 1991 மே மாதம் முதல் நான்காண்டுகள் மொஸ்கோ நகரிலுள்ள இலங்கைத் தூதரகத்தில் பணியாற்றவென அனுப்பிவைக்கப்பட்டார். அக்கால கட்டத்து அனுபவங்களை இந்நூலில் இரண்டு பிரிவுகளில் சுவையான சிறு கட்டுரைவடிவில் எழுதியிருக்கிறார். முதலாம் பகுதியான "பொது நிகழ்வுகள்" என்ற பிரிவில் 20 கட்டுரைகளும், இரண்டாம் பகுதியான "கடமைசார் நிகழ்ச்சிகள்" என்ற பிரிவில் மேலும் 12 கட்டுரைகளுமாக மொத்தம் 32 மொஸ்கோ அனுபவக் கட்டுரைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 32996).*

**மேலும் பார்க்க:** *12995,12997*

## 915 பிரதேசப் புவியியல்

**மேலும் பார்க்க: 12985.**

## 920.01 துறைசாரா வாழ்க்கைவரலாறுகள்

### 12886

**அல்மாத் தோட்டக் கணக்கப்பிள்ளை சுப்பையா சிவஞானம் நினைவு மலர்.** *சிவஞானம் பிரபாகரன் (குடும்பத்தினர் சார்பாக). ஆள்கரனோயா: சுப்பையா சிவஞானம் குடும்பத்தினர், சீட்டன் இல்லம், இல. 6, மஹாகுடுகல குடியிருப்பு, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2006. (களனி: பிரின்ட்கெயார் குழுமம், இல. 77, நுண்கமுகொட பாதை).*

*73 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14.5 சமீ.*

*அமரர் அல்மாத் தோட்ட கணக்கப்பிள்ளை சிவஞானம் (27.1.1936-26.7.2006) நினைவாக மலையகம் பற்றிய சிந்தனைகளுடன் வெளிவந்துள்ள நினைவு மலர் இதுவாகும். அமரர் சுப்பையா சிவஞானம் கந்தப்பளை அல்மாத் தோட்டம் சிட்டன் பிரிவில் வாழ்ந்தவர். இம்மலரில் அறிமுகம், அல்மாத் தோட்டம் சில வரலாற்றுப் பதிவுகள், குடும்பத்தவரின் இரங்கல் உரைகள், அல்மா சகாக்களின் உணர்வுகள் ஆகிய நினைவுப் பதிகைகளுடன், பேராசிரியர் கா.சிவத்தம்பி எழுதிய "மலையகப் பண்பாட்டுப் பேணுகை: சிக்கல்களும் சவால்களும்", தை.தனராஜ் எழுதிய "மலையகக் கல்வி ஒரு எதிர்கால நோக்கு", சீ.அ.யோதிலிங்கம் எழுதிய "மலையக அரசியல் வரலாற்று வளர்ச்சியும், முன் நகர்த்த வேண்டிய பணிகளும்" ஆகிய தலைப்புகளிலான மலையகம் சார்ந்த கட்டுரைகளும் மீள்பிரசுரம் செய்யப் பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 40003).*

### 12887

**உமா கரம்(புற்றுநோய் தவிர்ப்போம் என்ற நூலின் மீள்பிரசுரம்).** *சி.உமாகரன். நயினாதீவு: சிவசம்பு உமாகரன் குடும்பத்தினர், திருவாலவாய், 3ஆம் வட்டாரம், 1வது பதிப்பு, பெப்ரவரி 2016. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளூமெண்டால் வீதி).*

*(6), 128 பக்கம், விளக்கப்படங்கள், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22.5x15 சமீ.*

*நயினாதீவு-3, அமரர் சிவசம்பு உமாகரன் (31.1.1964-27.1.2016) அவர்களின் நினைவு மலராக வெளிவரும் இந்நூல் "புற்று நோய் தவிர்ப்போம்" என்ற தலைப்பில் கா. வைத்தீஸ்வரன் 2015இல் வெளியிட்ட நூலினை உள்ளடக்கி வெளிவந்துள்ளது. புற்றுநோய்-பொதுவான கண்ணோட்டம், கலங்களின் அசாதாரண வளர்ச்சியே புற்றுநோய், புற்றுநோய் ஆரம்பநிலையில் இனம்காணப்படல் வேண்டும், நோய்க்கெதிரான சிறந்த ஆயுதம் ஆரம்பத்தில் இனம் காண்பதே, நோய் அதிகரிப்புக்கான காரணிகள், கறுப்புப் புள்ளி-ஆரம்ப அறிகுறிகள், தொண்டை-குரல்வளைப் புற்றுநோய், கற்றது கைம்மண் அளவு, களப் புற்றுநோய், வாய்ச் சுகாதாரம், வாய்க்குழிப் புற்றுநோய், நுரையீரல் புற்றுநோய், கருப்பைப் புற்றுநோய், மார்பகப் புற்றுநோய், மார்பகப் புற்றுநோயைக் குறைப்பதற்கான ஐந்து எளிமையான வழிமுறைகள், தைரொயிட் புற்றுநோய், இரத்தப் புற்றுநோய், புற்றுநோய்-உணவுப் பழக்கவழக்கத்திற்கு இடையேயான தொடர்புகள், உணவும் ஒட்சிசனெதிரிகளும், பெருங்குடற் புற்றுநோய், புராஸ்ரேட் புற்றுநோய் ஆகிய 19 அத்தியாயங்களில் எழுதப்பெற்றுள்ள இந்நூலின் இறுதியில் நோய்வாய்ப் பட்டிருக்கும் நண்பருக்கு உதவுவது எப்படி? பித்தப்பை மற்றும் பித்தக்கானில் ஏற்படும் புற்றுநோய், குழந்தைகளில் ஏற்படும் புற்றுநோய் ஆகியவை பின்னிணைப்புகளாகத் தரப்பட்டுள்ளன.*

### 12888

**எம்மவர்கள்: மறக்கப்படமுடியாத ஆளுமைகள்.** *த.கலாமணி. அல்வாய்: ஜீவநதி வெளியீடு, கலை அகம், அல்வாய் வடமேற்கு, 1வது பதிப்பு, மார்கழி 2016. (பருத்தித்துறை: பரணி அச்சகம், நெல்லியடி).*

*76 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 20.5x14.5 சமீ.,* ISBN: *978-955-4676-51-0.*

*ஆசிரியர் தனது மனதிற் பதிந்த சில ஆளுமைகள் பற்றிய கட்டுரைகளை இந் நூலில் தந்துள்ளார். பண்டிதர் க.சச்சிதானந்தன், கலாவினோதன் எம்.பீ. அண்ணாசாமி, துணைவேந்தர் பேராசிரியர் அ.துரைராஜா, பேராசான் க. தங்கவடிவேல், ஆசிரியர் க.முருகேசு, கலைஞானகேசரி க.பரஞ்சோதி, நடிகமணி வி.வி.வைரமுத்து, சைவப்பெரியார் கா.சூரன், அல்வாய் க. வேலுச் சோதிடர், அல்வாயூர் மு.செல்லையா, அதிபர் வே.த.தணிகாசலம், கலாபூஷணம் வே.க. பாலசிங்கம் ஆகிய பன்னிரு ஆளுமைகள் பற்றிய பதிவுகள் படிப்போர்க்குப் பயனுள்ள வகையிலும் வரலாற்றில் பதியப்படவேண்டும் என்ற நோக்கிலும்*

தந்துள்ளார். இது 65ஆவது ஜீவநதி வெளியீடாகும். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 61478).

### 12889

**கோமாதா கருத்துக் களஞ்சியம்.** சு.செல்லத்துரை. இளவாலை: அன்னை சுப்பிரமணியம் பத்தினிப்பிள்ளை நினைவு வெளியீடு, புனித வாசம், பத்தாவத்தை, 2வது பதிப்பு, மார்ச் 2001, 1வது பதிப்பு, ஏப்ரல் 1994. (சங்கானை: சாய்ராம் புத்தக நிலையம்).

35 பக்கம், தகடுகள், விலை: ரூபா 50.00, அளவு: 20x14.5 சமீ.

தனது அன்னை சுப்பிரமணியம் பத்தினிப்பிள்ளை நினைவாக 11.3.2001 அன்று வெளியிட்ட நினைவு நூல் இது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 25172).

### 12890

**திண்ணபுரத் திருக்கூத்தன் திருவிளையாடல்.** மலர்க் குழு. கனடா: ஜீ.சுப்பிரமணியம், 2425, Eglinton Ave. East, Unit 6A,Scarborough, Ontario, 1வது பதிப்பு, 2001. (அச்சக விபரம் தரப்படவில்லை).

(4), 73 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14 சமீ.

இலங்கை சுங்கத் திணைக்களத்தின் ஓய்வுபெற்ற உதவி ஆணையாளர் கே.கே. சுப்பிரமணியம் (சமாதான நீதவான், இல.28, ரட்ணகார பிளேஸ், தெகிவளை) அவர்களின் அகவை எழுபது பூர்த்தியானதையிட்டு அவரது குடும்பத்தினர் வெளியிட்ட காலப் பெட்டகம். இதில் அவரது மலரும் நினைவுகளின் பதிவுகள் புகைப்படங்களுடன் தொகுக்கப்பெற்றுள்ளன. இவரது சமூகப் பணிகள் மற்றும் பெருமைக்குரிய தருணங்களின் புகைப்பட சாட்சியங்கள் என சுயவரலாற்றுப் பதிவாக இந்நூல் அமைந்துள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 21412).

### 12891

**நேயத்தே நின்றவர்கள்.** மலர்க் குழு. லண்டன்: சித்தா-மகேஸ் 25ஆவது மணநாள் விழா ஒழுங்கமைப்பாளர்கள், 1வது பதிப்பு, நவம்பர் 2002. (லண்டன்: வாசன் அச்சகம், மிச்செம்).

128 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x15 சமீ.

லண்டனில் புலம்பெயர்ந்து வாழும் ஈழத்தவர்களான திரு. குமாரசாமி சிதம்பரப்பிள்ளை-மகேஸ்வரி சிதம்பரப்பிள்ளை ஆகியோர் 16.11.2002 அன்று லண்டனில் தமது மணவிழாவின் 25ஆவது ஆண்டை கொண்டாடிய வேளையில் தமது வாழ்வின் மலரும் நினைவுகளை வண்ணப் புகைப்படங்கள் சகிதம் ஆவணப்படுத்தி இச்சிறப்பிதழை வெளியிட்டிருக்கிறார்கள். தமக்கு வழங்கப்பட்ட ஆசியுரைகள், வாழ்த்துரைகளுடன், தமது குடும்பப் படங்களையும், பல்வேறு

பிரமுகர்களுடன் தாம் எடுத்துக்கொண்ட புகைப்படங்களையும் பெருமளவில் இம்மலரில் நினைவுப் பதிகையாக இடம்பெறச்செய்துள்ளனர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 48669).

### 12892

**பன்னாலை-தெல்லிப்பழை அமரர் வ.சி.செல்லையா அவர்களின் சிவபதப்பேறு குறித்து வெளியிடப்பட்ட நினைவுமலர்**. மலர் வெளியீட்டுக் குழு. கொழும்பு 2: வ.சி. செல்லையா நினைவு மலர்க்குழு, சைவ முன்னேற்றச் சங்கம், 101/70, கியூ வீதி, 1வது பதிப்பு, நவம்பர் 1992. (கொழும்பு 2: ராஜன் பிரிண்டர்ஸ், 31, கியு லேன்).

(10), 60 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14.5 சமீ.

29.11.1992 அன்று வெளியிடப்பட்ட இந்நினைவு மலரில் பஞ்சபுராணம், தேவாரப் பதிகங்கள், திருத்தொண்டர் தொகை, சிவபுராணம், திருவாசகம், திருவெம்பாவை, திருப்பொற்சுண்ணம், விநாயகர் அகவல், தேவி வழிபாடுகளான அபிராமி அந்தாதி, சகலகலாவல்லி மாலை என்பனவும், முருகன் வழிபாடுகளான கந்தரநுபூதி, கந்தசஷ்டி கவசம், திருப்புகழ் ஆதியனவும் தொகுத்து வழங்கப் பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 34850).

### 12893

**புண்ணிய நதி:அமரர் கந்தையா புண்ணியமூர்த்தி நினைவு மலர்**. மலர்க் குழு. மாதகல்: அமரர் கந்தையா புண்ணியமூர்த்தி நினைவுக் குழு, 1வது பதிப்பு, ஏப்ரல் 2016. (யாழ்ப்பாணம்: போஸ்கோ பதிப்பகம். நல்லூர்).

(4), 75 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x15 சமீ.

யாழ்ப்பாண மாவட்டத்தில், மாதகலைச் சேர்ந்த அமரர் கந்தையா புண்ணியமூர்த்தி அவர்களின் அமரத்துவம் குறித்த நினைவுமலர். 02.04.2016 அன்று அமரரின் அந்தியேட்டி நிகழ்வின்போது வெளியிடப்பட்டது. இம்மலரில் பஞ்சபுராணம், திருவெம்பாவைப் பாடல்கள், சரஸ்வதியந்தாதி, மூலமந்திரம், நண்பர்களின் மனப்பதிவு, உறவுகளின் துயர்ப்பதிவு, துன்பங்களிலிருந்து விடுதலை (கவிஞர் கண்ணதாசனின் அர்த்தமுள்ள இந்துமதம் நூலிலிருந்து சில பகுதிகள்), அந்தியேட்டி (பேராசிரியர் இரா.குமாரவடிவேலின் சைவ அபரக் கிரியைகள் என்ற கையேட்டிலிருந்து சில பகுதிகள்) ஆகியவை இடம்பெற்றுள்ளன.

### 12894

**புனித பயணம்: சிவபாலன் சாந்தரூபன் நினைவு மலர்**.சு.சிவபாலன் (தொகுப்பாசிரியர்). வவுனியா: சு.சிவபாலன், 40, வைரவ கோவில் வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 2002. (அச்சக விபரம் தரப்படவில்லை).

175 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x15 சமீ.

'Facts can never be denied', 'Lie repeated ninety-nine times will become a truth' ஆகிய இரு பொன்மொழிகளையும் அடிப்படை வாசகங்களாகக் கொண்டு சிவபாலன் சாந்தரூபன் என்ற இளைஞனின் நினைவு மலர் பெற்றோர், உறவினர் மற்றும் நண்பர்கள், சமூக ஆர்வலர்களின் பங்களிப்புடன் உருவாக்கப்பட்டுள்ளது. "பத்திரிகைச் சுதந்திரத்தின்" மறுபக்கம் பற்றி இந்நினைவுமலர் அழுத்தமாகப் பதிவுசெய்கின்றது. 7.12.2001 அன்று வவுனியாவில் துப்பாக்கிச் சூட்டில் இறந்த சாந்தரூபனின் மரணத்தை ஊடகங்கள் திசை மாற்றிச் செய்திகளை வெளியிட்டதாகவும், தவறான/உண்மைக்குப் புறம்பான செய்திகள் வதந்திகளாகப் பரப்பப்பட்டதாகவும் அறியப்படுகின்றது. மேற்படி மரண விசாரணை மீதான நீதிபதியின் தீர்ப்பின் வாசகங்கள் இவ்விளைஞனின் மரணத்தின்பாற் பட்ட வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதாக உள்ளது. "எந்த அரசியலிலும் ஈடுபடாத பாடசாலை மாணவர்கள் இருவர் மரணித்திருக்கிறார்கள். வழங்கப்பட்ட சாட்சியங்களில் இருந்தும், மன்றுக்கு அளிக்கப்பட்ட தடயப் பொருள்களில் இருந்தும் இவ்விரு மரணங்களும் கொலை எனத் தீர்ப்பளிக்கிறேன்" என்ற நீதிபதியின் வாசகங்களுடன் இம்மலர்த் தொகுப்பு நிறைவுபெறுகின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 34746).

### 12895

**பொன் அம்பலம்: அமரர் கதிர்காமர் பொன்னம்பலம் நினைவு மலர்.** க.ஆறுமுகம் (தொகுப்பாசிரியர்). கொழும்பு 13: அமரர் கதிர்காமர் பொன்னம்பலம் நினைவுக்குழு, 62, விவேகானந்த மேடு, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1992. (கொழும்பு 2: ராஜன் பிரின்டர்ஸ், 31 கியூ லேன்).

(6), 148 பக்கம், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14.5 சமீ.

அமரர் கதிர்காமர் பொன்னம்பலம் (19.12.1924-22.07.1992) புங்குடுதீவு பத்தாம் வட்டாரத்தைச் சேர்ந்தவர். 21.8.1992 அன்று நடைபெற்ற அன்னாரின் 31ஆம் நாள் நிகழ்வின்போது வெளியிடப்பெற்ற நினைவு மலர் இதுவாகும். பஞ்சபுராணம், தேவாரப் பதிகங்கள், திருவாசகம், விநாயகர் அகவல், தேவி வழிபாடு, முருகன் வழிபாடு, இரண்டாம் சைவ வினா-விடை தொகுப்பு, அபிடேகப் பலன்கள், திருமுறைத் தலங்கள், திருத்தொண்டர் குருபூசை ஆகிய பக்திப்பாமாலைகளின் தொகுப்பாக இம்மலர் அமைந்துள்ளது. இதனை யாழ்ப்பாணம், நல்லூரைச் சேர்ந்தவரான அவரது சகோதரர் க.ஆறுமுகம் தொகுத்துள்ளார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 35627).

### 12896

**வைகுந்த திலகம்: ஆயர்பாடி ஆழ்வார் ஸ்ரீ வே.த.மயில்வாகனம் நினைவு மலர்.** மலர் வெளியீட்டுக் குழு. தெல்லிப்பழை: திருமதி லட்சுமி மயில்வாகனம் குடும்பத்தினர், ஆயர்பாடி, மாவிட்டபுரம், 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (அச்சக விபரம் தரப்படவில்லை).

*(2), 74 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 23x18 சமீ.*

*தெல்லிப்பழை, மாவிட்டபுரத்தில் வாழ்ந்து பின்னாளில் தெகிவளை 28ஏ, அபொன்சொ அவென்யுவில் வாழ்ந்து மறைந்த ஆயர்பாடி ஆழ்வார் ஸ்ரீ வே.த. மயில்வாகனம் அவர்களின் மறைவையொட்டி வெளியிடப்பெற்ற நினைவஞ்சலி மலர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 24593).*

**மேலும் பார்க்க: 12137.**

## 920.1 ஊடகவியலாளர், ஒலிபரப்புத்துறையினர்

### 12897

**திரைமறைவுக் கலைஞர்கள்: ஓர் அனுபவப் பகிர்வு.** *எஸ்.நடராஜன். கொழும்பு 6: ஞானம் பதிப்பகம், 3B, 46வது ஒழுங்கை, 1வது பதிப்பு, 2017. (கொழும்பு: அச்சக விபரம் தரப்படவில்லை).*

viii, *68 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 300., அளவு: 21.5x14.5 சமீ.,* ISBN: *978-955-8354-76-6.*

*இந்நூலில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ்ச் சேவையின் ஐம்பது வருடகால வரலாற்றின் ஒரு வெட்டுமுகத்தை ஆசிரியர் காட்சிப் படுத்தியுள்ளார். நீண்ட கால அனுபவம் மிக்க ஊடகவியலாளர் எஸ். நடராஜான் ஞானம் சஞ்சிகை யில் 2006 ஜுன் இதழிலிருந்து 2007ஜுன் இதழ் வரை தொடராக எழுதிய தனது ஒலிபரப்புத்துறை அனுபவங்களே இந்நூலாகும். 87ஆவது அகவையில் இவர் எழுதிய முதலாவது நூல் இது. 30 வருடங்களுக்கு மேலாக ஒலிபரப்புத் துறையிலும் 20 வருடங்களுக்கும் மேலாக ஒளிபரப்புத் துறையிலும் பணியாற்றி வந்தவர் எஸ். நடராஜன். யாழ்ப்பாண மாவட்டத்தின் புன்னாலைக்கட்டுவன் கிராமத்தில் அஞ்சல் நிலையப் பொறுப்பாளராகவிருந்த சோமசுந்தர ஐயர்-மனோன்மணி தம்பதியினரின் மூத்த புதல்வரான இவர், இலங்கை வானொலியில் அறிவிப்பாளராக, செய்தி வாசிப்பவராக, நிகழ்ச்சித் தயாரிப்பாளராக, வானொலி மாமாவாக அரும்பணியாற்றியவர். இவர் கும்பாபிஷேகம், தேர்த்திருவிழா என்பனவற்றின் நேர்முக வர்ணனையாளராகவும் இருந்துள்ளார். ரூபவாஹினியின் "ஐ" அலைவரிசையிலும் செய்திவாசிப்பவராக இருந்து பின்னர் சைவ நீதி நிகழ்ச்சிக்குப் பங்களிப்பினையும் செய்துவந்தவர். (இந்நூலின் சரவைப்பிரதி கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 58250).*

### 12898

**பண்டிதர் ம.வே.திருஞானசம்பந்தப்பிள்ளை.** *ம.பா.மகாலிங்கசிவம். கொழும்பு 6: கொழும்புத் தமிழ்ச்சங்கம், 7, 57வது ஒழுங்கை, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2007. (அச்சக விபரம் தரப்படவில்லை).*

*(8), 68 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 22x15 சமீ.,* ISBN: *978-955-8564-14-1.*

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியிற் புதிதாக எழுத்தறிவாக்கம் பெற்றோரை குவியப்படுத்தி ஆக்கங்ளை மேற்கொண்டோர் வரிசையில் பண்டிதர் மட்டுவில் வே. திருஞானசம்பந்தப்பிள்ளை அவர்கள் தனித்துவமானவர். இவரது எழுத் தாக்கங்களைப் புறந்தள்ளிவிட்டு, இந்நாட்டின் இதழியல் தமிழ் வளர்ச்சியின் அமைப்பையும், அறிகைத் தொழிற்பாடுகளையும், பின்னர் நிகழ்ந்த மாற்றங்களையும் விளங்கிக் கொள்ள முடியாது. இவர் பங்குபற்றி ஆக்கம் செய்த வாசிப்புத் தளத்திலே தான் தமிழகத்திலிருந்து வந்த இலக்கிய வார இதழ்கள் ஆழ்ந்தும் அகன்றும் கால்பதிக்கலாயின. மேலும் யாழ்ப்பாணத்துச் சமய அசைவியக்கத்தை தருக்க நிலையில் விளங்கிக்கொள்வதற்குரிய அறிகைத் தளங்களை உருவாக்கியவர் களுள் இவரது தனித்துவம் மேலேழுகின்றது. இந்த ஆய்வறிவாளரின் பணிகளை ஆழ்ந்து வெளிக்கொண்டு வரும் ஆசிரியர் திரு.ம.பா. மகாலிங்கசிவம் அவர்களின் இந்நூல் நாவலர் பரம்பரையும் மட்டுவிற் கல்விப் பாரம்பரியமும், வாழ்வும் பணிகளும், பத்திரிகாசிரியர், புனைகதையாசிரியர், நாடகாசிரியர், உரையாசிரியர், பதிப்பாசிரியர், வகிபாகம் ஆகிய எட்டு இயல்களில் எழுதப்பட்டுள்ளது. தமிழ்ச்சங்கத்தின் "இலங்கைத் தமிழர் வாழ்வும் வகிபாகமும்" என்ற வெளியீட்டுத் தொடரில் இதுவொரு புது வரவாகின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 44288. நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தின் சேர்க்கை இலக்கம் 008600).

## 922 சமயத் தலைவர், சிந்தனையாளர்

### 12899

**அண்ணாமலை அருள்விளக்கு**. ஸ்ரீ ரமண அடியார் குழு. இலங்கை: பகவான் ஸ்ரீரமண மகரிஷிகள் நூற்றாண்டு விழா வெளியீடு, 1வது பதிப்பு, மார்ச் 1980. (கொழும்பு: ராஜா பிரஸ், 92, பாமங்கடை வீதி).

(20) பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12.5 சமீ.

ரமண மஹரிஷி (டிசம்பர் 30, 1879 - ஏப்ரல் 14, 1950) தமிழகத்தைச் சேர்ந்த ஆன்மீகவாதி யாவார். அத்வைத வேதாந்த நெறியை போதித்த இவர் திருவண்ணாமலையில் வாழ்ந்தவர். இவர் விருதுநகர் மாவட்டம் திருச்சுழியில் 1879ம் ஆண்டு டிசம்பர் 30 ஆம் நாள் சுந்தரம் ஐயர், அழகம்மாள் ஆகியோருக்கு மகனாகப் பிறந்தார். இவருக்கு நாகசுவாமி என்கிற மூத்த சகோதர் உண்டு. இவரது இயற்பெயர் வேங்கடராமன். இவர் மதுரையில் ஸ்காட் நடுநிலைப் பள்ளியில் கல்வி பயின்றார். ரமணரின் முக்கியமான உபதேசம் "நான் யார்" என்னும் ஆன்ம விசாரம். ஞான மார்க்கத்தில் தன்னை அறிதல் அல்லது முக்தி பெறுதலே இவ்வழியின் நோக்கம். உபநிடதங்கள் மற்றும் அத்வைத வேதாந்த நெறிகள் ஆகியவற்றின் சாரத்தினை இவரது உபதேசங்களில் காணலாம். இவரது உபதேசங்களின் தொகுப்பான "நான் யார்?" என்ற நூல் முதன்மையானதாகும். ஆதி சங்கரரின் ஆக்கமான "ஆத்ம போதம்" ரமணரால் தமிழில் வெண்பாக்களாக ஆக்கப்பட்டது. பலகாலம் திருவண்ணாமலையின் பல இடங்களில் தங்கிய ரமண மகரிஷி, 1922 இல் அவரது தாயின் மறைவிற்குப் பிறகு திருவண்ணாமலையின்

அடிவாரத்தில் குடிபுகுந்தார். அங்கு அவரது சீடர்களால் ஆசிரமம் ஒன்று உருவாக்கப்பட்டது. இதுவே ரமண ஆசிரமமாகும். இதன் பின்னர் அவர் சமாதியடையும் வரை அந்த ஆசிரமத்தை விட்டு எங்கும் செல்லவில்லை. இந் நூல் ரமணமகரிஷின் நினைவஞ்சலியாக வெளிவந்துள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 235 PAM).

### 12900

**எங்கள் குருநாதன் திருவாசக சுவாமிகள்.** முருக.வே.பரமநாதன் (புனைபெயர்: ஆழ்கடலான்). களுபோவிலை: தெகிவளை திருவாசகம் சுவாமிகள் தொண்டர் சபை, 11/6, ரூபன் பீரிஸ் மாவத்தை, 1வது பதிப்பு, ஜுன் 1994. (கொழும்பு 13: இலட்சுமி அச்சகம் இணை பதிப்பாளர், வீமாஸ் அச்சகம்).

(4), 57 பக்கம், விலை: ரூபா 25., அளவு: 21.5x14 சமீ.

திருக்கேதீஸ்வரம் திருவாசகம் ஸ்ரீமத் சபாரத்தினம் சுவாமிகளின் தொண்ணூறாவது ஜயந்தி தினத்தை முன்னிட்டு எழுதிய நூல். திருவாசக சுவாமிகள் என அழைக்கப்படும் சபாரத்தினம் சுவாமிகள் (மார்ச் 28, 1904 - ஜனவரி 25, 1988) தேவாரப் பாடல் பெற்ற திருக்கேதீச்சரத்தில் சிவதொண்டுகள் புரிந்து தவ வாழ்வினை மேற்கொண்டவர். அங்கு திருவாசக மடம் ஒன்றை நிறுவி அடியார்களுக்கு அமுதளித்து திருவாசக உரையையும் வழங்கி வந்தார். திருவாசக சுவாமிகள் 1904 ஆம் ஆண்டு பங்குனித் திங்கள் திருவாதிரை நாளில் யாழ்ப்பாணம் அல்வாயைச் சேர்ந்த சின்னத்தம்பி என்பவருக்கும் சுண்டிக்குளியில் பாண்டியன் தாழ்வில் வசித்த சின்னத்தங்கத்திற்கும் மூத்த மகனாகப் பிறந்தார். இளமையிலே யோகர் சுவாமிகளின் அருட்பார்வை இவருக்கும் கிட்டியது. இறுதி நாட்களில் சுவாமிகள் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்தார். நாள்தோறும் சுவாமியைச் சந்தித்து உரையாடவும் ஆசீர்வாதம் பெறவும் அவருடைய திருவாசக உரைகளைக் கேட்கவும் அடியார்கள் கூடுவார்கள். 1988 ஆம் ஆண்டு தை மாதம் பூர்வ பக்க சப்தமி திதியில் அவரது சுண்டிக்குளி இல்லத்தில் காலமானார். அவரது அஸ்தி அடங்கிய நினைவாலயம் ஒன்று மறவன்புலவில் அமைக்கப்பட்டுள்ளது. சுவாமிகள் பற்றிய கட்டுரைகளும், அவர்மேற் பாடப்பெற்ற பாடல்களும், விளக்கவுரைகளுமாக ஆழ்கடலான் தொகுத்துள்ள இந்நூலில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 2453).

### 12901

**என் குருநாதன்.** அடியார்க்கடியன் (இயற்பெயர்: தவத்திரு சிவகுருநாதன் அடிகளார்). கொழும்பு 2: தத்துவஞானத் தவச்சாலைப் பிரசுரம், 31/21, டோசன் வீதி, 1வது பதிப்பு, மே 2001. (கொழும்பு 13: லக்ஷ்மி அச்சகம், 195, ஆட்டுப்பட்டித் தெரு).

xii, 82 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 18x12 சமீ.

தத்துவஞானத் தவச்சாலைக் காப்பாளரான தவத்திரு சிவகுருநாதன் அடிகளார் உலக நலனுக்காக 42 நாட்கள் நடத்திய மௌனதவம் என்ற ஞானவேள்வியை

முடித்த நாளையொட்டி இந்நூல் வெளியிடப்பட்டது. சித்தர் ஸ்ரீ சத்சித்திரமுத்தடிகளின் வாழ்க்கை வரலாற்றைக் கூறும் இந்நூல் வெளிவரும் காலகட்டம் அவரது நூற்றாண்டுப் பூர்த்தியடைந்த காலகட்டமுமாகும். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 42711).

### 12902

**சபாரத்தினமெனும் திருவாசகப் பேரூற்று.** ஆழ்கடலான் (இயற்பெயர்: முருக வே.பரமநாதன்). தெகிவளை: திரு.த.துரைராசா, "திருவாசகம்", 11/6, றூபன் பீரிஸ் மாவத்தை, களுபோவில, 1வது பதிப்பு, டிசம்பர் 1998. (கொழும்பு 13: லக்ஷ்மி அச்சகம், 195, ஆட்டுப்பட்டித் தெரு).

(6), 116 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.

கதம்பநதிப் பாங்கர், திருவாசகம்-குட்டித் திருவாசகம், ஆன்மீக வள்ளல், திருவாசக மடம், நிதி-நீதி-சோதி, நன்றி நாகரீகம், தேர்ந்து பாருங்கள், சிங்கை நகரில், ஆனந்தாச்சிரமம், விதானையார் ஒழுங்கை, தேன் கலசம், சொல்லுகைக்கு இல்லாதது, வந்தவேலையைப் பார், சபாரத்தினப் பேரூற்று, தேவகானமே ஜீவகானம், கருணை வெள்ளம், எப்போதும் குரு சரணம் நினைவாய் நெஞ்சே, நிறைகுடம், திருவாசகம் தந்த பலாபலன்கள் ஆகிய 19 தலைப்புகளின்கீழ் திருவாசகம் சுவாமிகள் என்றழைக்கப்படும் திருக்கேதீஸ்வரம் திருவாசகம் ஸ்ரீமத் சபாரத்தினம் சுவாமிகளின் வாழ்வும் பணிகளும் பதிவுசெய்யப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 27452).

### 12903

**சீரடி சாயிபாபா மகிமை.** திருச்செல்வம் தவரத்தினம். கொழும்பு 12: பீனிக்ஸ் பப்ளிக்கேஷன்ஸ், No.C.G.6, செபஸ்தியன் தொடர்மாடிக் குடியிருப்பு, புனித செபஸ்தியார் வீதி, குணசிங்கபுர, இணை வெளியீடு, யாழ்ப்பாணம்: சர்வசக்தி வெளியீடு, சடையாளி, காரைநகர், 1வது பதிப்பு, 2017. (கொழும்பு 15: பிரின்ட் ஹவுஸ்).

64 பக்கம், வண்ணத் தகடுகள், விலை: ரூபா 120., அளவு: 21x14.5 சமீ., ISBN: 978-955-7226-05-7.

சீரடி வரலாறு, சீரடி பாபாவும் நானும், சீரடி சாயிபாபா ஒன்பது வியாழக்கிழமை விரதமுறை, சீரடி சாயிபாபாவின் உபதேச மொழிகள், சீரடி சாயிபாபாவின் வணக்கப்பாடல்கள், பின்னிணைப்பு- சீரடி சாயிபாபாவின் வர்ணப்படங்கள் ஆகிய ஆறு அத்தியாயங்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. சீரடி சாயிபாபா (Shirdi Sai Baba) செப்டம்பர் 28, 1838 இல் பிறந்து அக்டோபர் 15, 1918இல் இறையடி சேர்ந்தவர். மகாராஷ்டிராவில் அகமது நகர் மாவட்டத்தில் சீரடியில் வசித்திருந்த ஓர் இந்திய குரு, யோகி மற்றும் சூஃபி துறவியாவார். இவரை இந்துக்களும் இஸ்லாமியரும் புனித சாமியாராகப் போற்றுகின்றனர். இந்துக்கள்

இவரை கடவுள் தத்தாத்திரேயரின் அவதாரமாகக் கருதுகின்றனர். இசுலாமியர் பிர் அல்லது குதுப் ஆக நம்புகின்றனர். சீரடியில் இவர் சமாதி அடைந்த இடம் தற்போது பல்லாயிரக்கணக்கானவர் தொழும் புண்ணியத் தலமாக விளங்குகிறது. சுழிபுரம் விக்ரோரியா கல்லூரியின் முன்னாள் ஆசிரியரும் அராலி முருகமூர்த்தி வித்தியாலயத்தின் தற்போதைய அதிபருமான திருச்செல்வம் தவரத்தினம் அவர்கள் எழுதிய நூல் இது.

### 12904

**சைவத் தமிழர்களின் கலங்கரை விளக்கம்.** ஆறு. திருமுருகன். கொழும்பு 4: இந்துப் பண்பாட்டு நிதியம், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம், மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சு, 248, 1/1, காலி வீதி, 1வது பதிப்பு, 2016. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

(8), 100 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14.5 சமீ.

சைவமும் தமிழும் பெரும் ஆபத்துக்களை எதிர்நோக்கிய காலப்பகுதியிலே நல்லூரில் தோன்றியவர் தான் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர். சைவம் நலிவுற்ற நிலையில் தன் சொல்லாலும் எழுத்தாலும் மக்களின் அகக்கண்களைத் திறந்து அவலநிலையை அவர்களுக்கு உணர்த்தியதோடு சைவமும், தமிழும் மீண்டும் புத்துயிர் பெறுவதற்காக தம்மாலியன்ற அத்தனை பணிகளையும் செய்தார். ஈழத்தமிழரின் சமய, சமுதாய வரலாற்றிலே ஆறுமுகநாவலர் என்றும் போற்றத் தக்கவர். அத்தகைய சிறப்புமிக்க நாவலர் பெருமான் தொடர்பாக இன்றைய இளம் தலைமுறையினர் அறிவதற்காக இந்நூல் அவரது வாழ்வும் பணிகளும் பற்றிய சுருக்க விளக்கமாக உருவாக்கப்பட்டுள்ளது.

### 12905

**சைவப் பெரியார் நூற்றாண்டுவிழாச் சபை: முதலாவது ஆண்டு வரலாற்றுச் சிறப்பிதழ் 31.3.1979.** மலர் வெளியீட்டுக் குழு. யாழ்ப்பாணம்: சைவப் பெரியார் நூற்றாண்டு விழாச் சபை, 1வது பதிப்பு, மார்ச் 1979. (யாழ்ப்பாணம்: ஸ்ரீகாந்தா அச்சகம், 213, காங்கேசன்துறை வீதி).

(2), 56 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x13.5 சமீ.

சைவப்பெரியார் சு.சிவபாதசுந்தரனார் நூற்றாண்டு விழா தொடர்பான அறிக்கை, 11.2.1978-24.1.1979 வரையிலான காலகட்டத்துக்கான வரவு செலவுக் கணக்கு அறிக்கை, சுழிபுரம் விக்ரோரியா கல்லூரியில் 9.9.1978 இல் நடாத்தப்பட்ட சைவப்பெரியார் சு.சிவபாதசுந்தரனார் நூற்றாண்டு நினைவு விழாவின் காலை அமர்விற்குத் தலைமைதாங்கிய ச.சிதம்பரப்பிள்ளை அவர்களின் தலைமை உரை, மாலை அமர்விற்குத் தலைமைதாங்கிய பண்டிதர் சி.கணபதிப்பிள்ளை அவர்கள் ஆற்றிய தலைமைப் பேருரை, நன்கொடை வழங்கியோர் பட்டியல், சொக்கன் அவர்கள் இயற்றிய "சைவப்பெரியாரின் சால்பை உரைத்திடுவோம்" என்ற

செய்யுள், சைவப்பெரியார் சு.சிவபாதசுந்தரனார் ஞாபகார்த்த போட்டிகளின் விபரம் என்பன போன்ற பல்வேறு தகவல்களும் இச்சிறப்பிதழில் ஆவணப் படுத்தப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 4405/19631).

## 12906

**நல்லை ஆதீன முதல்வர் நற்சரிதம்.** இராசையா ஸ்ரீதரன் (தொகுப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம், நல்லூர், 1வது பதிப்பு, செப்டெம்பர் 2004. (அச்சக விபரம் தரப்படவில்லை).

(16), 42 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x18 சமீ.

சைவத்துக்கே தன்னை அர்ப்பணித்து தமிழ்த் தொண்டாற்றிய பெரியார் நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன ஸ்தாபகர் நல்லைக் குருமணி ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களின் வாழ்க்கைச் சரிதத்தை நூல்வடிவில் தொகுத்துத் தந்துள்ளார். மணி பகவதராக இருந்து கதாப்பிரசங்கம் செய்து காலம் கழித்த சுவாமிகளின் இளமைக்கால கடின உழைப்பும், இந்தியாவில் அவர் பெற்ற துறவுநிலை என்பனவும் விரிவாகப் பதியப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 47428).

## 12907

**நாவலர்.** சி.கணபதிப்பிள்ளை (தொகுப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: சைவ பரிபாலன சபை, 1வது பதிப்பு, 1968. (யாழ்ப்பாணம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை).

(4), 60 பக்கம், விலை: ரூபா 1.00, அளவு: 21x14 சமீ.

அருட்பாச் சம்பவம், ஆலய சீர்திருத்தம் முதலியவைகளைச் சரித்திரத் தொடர்புடன் தெளிவுபடுத்தும் வகையில் எழுதப்பட்டதொரு விமர்சனக் கட்டுரை. முன்னர் இந்துசாதனத்தில் பிரசுரமானதன் மீள்பதிப்பு. நாவலர் சைவப்பிரகாச வித்தியா சாலையின் 120ம் ஆண்டு ஞாபகார்த்த வெளியீடு. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 2741).

## 12908

**நாவலர் சிந்தையும் செயலும்.** இரா.வை.கனகரத்தினம் (மூலம்), ஸ்ரீ பிரசாந்தன், பா.சுமன் (தொகுப்பாசிரியர்கள்). கொழும்பு 4: நாவலர் நற்பணி மன்றம், இல. 36, நந்தன கார்டின், இணை வெளியீடு, கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, 2017. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

x, 197 பக்கம், விலை: ரூபா 600., அளவு: 21x14.5 சமீ., ISBN: 978-955-659-542-0.

பேராசிரியர் இரா.வை.கனகரத்தினம் அவர்கள் நாவலர் பணிகளைத் தனது வாழ்நாள் ஆய்வுப் பொருளாக வரித்துக்கொண்டவர். நாவலர் மீதும் அவரது

பணிகள் மீதும் மிகுந்த மதிப்புக் கொண்டிருந்தவர். அதனை எழுத்தின் வாயிலாகவும் பேச்சின் வாயிலாகவும் தொடர்ந்தும் வெளிப்படுத்தி வந்தவர். இந்தப் பின்புலத்தில் அமரர் பேராசிரியர் இரா.வை.கனகரத்தினம் அவர்கள் நாவலர் பற்றி ஆங்காங்கே இதழ்களில் எழுதி வெளியிட்ட கட்டுரைகளையும் கையெழுத்துப் பிரதியாக எழுதி வைத்திருந்த சில கட்டுரைகளையும் ஒருசேரத் தொகுத்தளிக்கும் முயற்சியாகவே இத்தொகுப்புநூல் வெளிவருகின்றது. நாவலர் பெருமானின் சிந்தனைகள், சைவசித்தாந்த மெய்யியலில் ஆறுமுக நாவலரின் பங்களிப்பு, ஆறுமுக நாவலரின் சமய, சமுதாயப் பணிகள், தமிழ்நாட்டில் நாவலரின் சைவசமய முயற்சிகள், நாவலரின் பதிப்புநெறி, ஆறுமுக நாவலரும் காரைதீவு மு.கார்த்திகேயப் புலவரும், நாவலர் பற்றிய ஆய்வின் போக்கு ஒரு மதிப்பீடு, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் ஆய்வடங்கல் ஆகிய எட்டுக் கட்டுரைகள் இந்நூலில் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. பின்னிணைப்புகளாக பேராசிரியர் இரா.வை. கனகரத்தினம் அவர்கள் எழுதிய நாவலர் பற்றிய நூல்கள், ஆறுமுக நாவலரின் சமய, சமுதாயப் பணிகள் பிரசுரத்துக்கான பண்டிதமணியின் வாழ்த்துரை ஆகியவை சேர்க்கப்பட்டுள்ளன. இக்கட்டுரைகள் ஆறுமுக நாவலரைப் பல்வேறுபட்ட கோணங்களிலும் ஆராய்கின்றன. சில அவரது சிந்தனைகளை நோக்குகின்றன. வேறு சில அவரது சமய, சமூக, பதிப்புப் பணிகளை ஆராய்கின்றன. ஒரு கட்டுரை நாவலரையும் கார்த்திகேயப் புலவரையும் இணைத்து நோக்குகின்றது. நூலாசிரியர் அமரர் இரா.வை.கனகரத்தினம் (23.8.1946-24.5.2016) பேராதனைப் பல்கலைக் கழகத்தில் முதுமாணிப்பட்டம் பெற்று, களனிப் பல்கலைக்கழகத்தில் உதவி விரிவுரையாளராகப் பணியாற்றி, பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையின் இந்து நாகரிகத்துறையில் பணியாற்றியவர்.

## 12909

**விபுலானந்த அடிகளார் நூற்றாண்டு விழா மலர்: 20.07.1991.** மலர்க்குழு. கனடா: வே.கணேஸ்வரன், தலைவர், தமிழ் முருகன் கோவில் சபை, 1வது பதிப்பு, ஜூலை 1991. (கனடா: ரிப்ளெக்ஸ் அச்சகம், 1108 Bay Street, Toronto, Ontario M5S 2W9).

68 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21 சமீ.

கனடாவில் 1989 திருக்கார்த்திகையின்போது அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்ட தமிழ் முருகன் கோவில் சபையின் வெளியீடு இது. விபுலானந்த அடிகளாரின் நூற்றாண்டை முன்னிட்டு 20.7.1991 அன்று நடத்திய விழாவின்போது வெளியிடப்பட்டது. ஆசிஉரைகள், விளம்பரங்கள் ஆகியவற்றின் இடையிடையே கீழ்க்கண்ட முக்கிய கட்டுரைகளும் இடம்பெற்றிருக்கின்றன. பேராசிரியர் அமரர் ப.சந்திரசேகரம் அவர்கள் திருநெல்வேலி, ஆடியபாதம் வீதியிலுள்ள ஸ்ரீ இராம கிருஷ்ணாலயத்தில் ஆற்றிய உரை, க.தா.செல்வராஜகோபால் (ஈழத்துப் பூராடனார்) எழுதிய "விபுலாநந்த சுவாமியின் முத்தமிழ் வித்தகம்", வல்வை கமலா பெரியதம்பியின் "விபுலானந்தரின் யாழிசை", மறைந்த கி.லக்ஷ்மண ஐயர் கொழும்பு ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் பொன்விழாவையொட்டி எழுதிய கட்டுரைத் தொடரில் ஒரு பகுதியான "இராமகிருஷ்ண மிஷன் வளர்ச்சியில் விபுலாநந்தர் ஆற்றிய பணிகள்" என்ற கட்டுரை ஆகியன இம்மலரின் பெறுமதியை

உயர்த்துகின்றன. கனடா, ரிப்ளெக்ஸ் அச்சகம், இந்நூலை அன்பளிப்பாக வழங்கியிருந்தது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 32143).

**மேலும் பார்க்க: 13A19,12008,12037,**

## 923 சமூகவியல்துறை சார்ந்தோர்

### 12910

**செஞ்சொற் செல்வம்: செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன் அவர்களது அகவை ஐம்பது நிறைவையொட்டிய சிறப்பு மலர்.** சிறப்பு மலர்க் குழு. கொழும்பு: அகில இலங்கை இந்து மாமன்றம், 1வது பதிப்பு, மே 2011. (யாழ்ப்பாணம்: கரிகணன் தனியார் நிறுவனம், இல. 424, காங்கேசன்துறை வீதி).

xvi, 276 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x19 சமீ.

செஞ்சொற்செல்வரின் வாழ்வும் பணிகளும், செஞ்சொற்செல்வரின் சிறப்புகளும் பாராட்டுகளும், செஞ்சொற்செல்வரின் ஆக்கங்களும் சொற்பொழிவுகளும், செஞ்சொற்செல்வரின் நிகழ்வுகளும் நினைவுகளும் ஆகிய நான்கு பிரிவுகளின்கீழ் ஆறு.திருமுருகன் அவர்களின் வாழ்வும் பணிகளும் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. ஆசிரியர் கந்தையா ஆறுமுகம்-சரஸ்வதி தம்பதியினருக்கு 28.5.1961இல் மகனாகப் பிறந்தவர் திருமுருகன். சுன்னாகம் இராமநாதன் இந்துக் கல்லூரி, யாழ் இந்து ஆரம்ப பாடசாலை ஆகியவற்றில் ஆரம்பக் கல்வியைப் பெற்ற இவர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் தன் இடைநிலைக் கல்வியைப் பெற்றார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பட்டதாரியாகித் தேசிய கல்வி நிறுவகத்தில் ஆசிரியப் பயிற்சி பெற்ற இவர் சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாசாலையில் 1989இல் ஆசிரியத் தொழிலை ஆரம்பித்தார். 1991இல் நல்லாசிரியர் விருதினைப்பெற்ற இவர் 1993இல் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கு மாற்றலாகி அங்கு பணியாற்றி 16.3.2008 முதல் கல்லூரியின் முதல்வராகப் பணியாற்றி வருகிறார். சமூக சேவையாளராகவும், சிறந்த சொற்பொழிவாளராகவும் அறியப்பெற்றவர். தெல்லிப்பழையில் துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அறங்காவலர் சபைத் தலைவராகவும், துர்க்காபுர மகளிர் இல்லத்தின் தலைவராகவும் பணியாற்றும் இவர் சிவபூமி அறக்கட்டளையின் தாபகராவார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 50357).

### 12911

**மக்கள் நேசன் கார்த்திகேசன் மாஸ்டர்.** வீ.சின்னத்தம்பி. வட்டுக்கோட்டை: வீ. சின்னத்தம்பி, வட்டு மேற்கு, 1வது பதிப்பு, செப்டெம்பர் 1993. (யாழ்ப்பாணம்: அருண் பிறின்டேர்ஸ்).

60 பக்கம், புகைப்படம், விலை: ரூபா 35., அளவு: 20x14 சமீ.

இலங்கை இடதுசாரி இயக்கத்தின் முன்னோடிகளில் ஒருவரும், சிறந்த கல்விச் சிந்தனையாளருமாகிய தோழர் மு.கார்த்திகேசன் (25.6.1919-10.9.1977) அவர்களது வாழ்வும் பணிகளும் இந்நூலில் பேசப்பட்டுள்ளன. மிகவும் இறுக்கமான சமூகக் கட்டுமானங்களைக் கொண்ட வடபுலத்தில் கம்யுனிஸ்ட் கட்சியை ஸ்தாபித்து அதன் முழுநேரப் பொறுப்பாளராக இருந்துகொண்டு, ஆசிரியராகவுமிருந்து கடுமையான பணிகளைச் செய்தவர் மு.கார்த்திகேசன். மக்களின் ஒடுக்கு முறைகளை உடைத்தெறிய இடைவிடாத வகுப்புகளை எடுத்தவர். வடபுலத்தில் மூலை முடுக்கெல்லாம் அடக்கப் பட்ட சமுதாயம் விழித்தெழக் கம்யுனிஸ்ட் கட்சிக் கிளைகளைத் திறந்து பல பணிகளைச் செய்தவர். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 98925).

**மேலும் பார்க்க: 13A06, 12732.**

## 923.2 அரசியல் துறையினர்

### 12912

**எங்கள் ஜனாதிபதி.** ராஜா திவ்வியராஜன். கொழும்பு 3: ராஜா திவ்வியராஜன், 532, காலி வீதி, கொள்ளுப்பிட்டி, 1வது பதிப்பு, 1980. (கொழும்பு: நிர்மால் அச்சகம், ஜெம்பட்டா).

40 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 27.5x21 சமீ.

ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் பணிகளை விதந்துபோற்றும் வகையில் புகைப்படங்களுடன் வெளிவந்துள்ள ஒரு பிரச்சாரப் பிரசுரம் இதுவாகும். ஜூனியஸ் ரிச்சட் ஜெயவர்தனா (செப்டம்பர் 17 1906 - நவம்பர் 1 1996), இலங்கையின் இரண்டாவது ஜனாதிபதியும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட முதலாவது ஜனாதிபதியுமாவார். வில்லியம் கொபல்லாவவுக்குப் பின்னர் பெப்ரவரி 4 1978 முதல் ஜனவரி 1 1989 வரை இவர் ஜனாதிபதியாகப் பணியாற்றினார். இவரக்குப் பின்னர் ரணசிங்க பிரேமதாசா ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டார். இலங்கையின் சட்டத்துறையில் பிரபலமாக விளங்கிய குடும்பமொன்றில் பிறந்த இவர் ஜனாதிபதிப் பதவியை ஏற்கும் முன் அரசில் பல பதவிகளை வகித்துள்ளார். இவர் ஐக்கிய தேசியக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தியதோடு அதன் தலைவராகவும் செயலாற்றினார். பத்திரிகைத் துறையில் பிரபலமான டி. ஆர். விஜேவர்தனா (லேக் ஹவுஸ்) இவரது தாய்வழி மாமனாராவார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 10276).

### 12913

**செயலாளர் செல்லச்சாமி: வாழ்க்கை வரலாறு.** சி.அழகுப்பிள்ளை. மாத்தளை: கவிஞர் சி. அழகுப்பிள்ளை, எல்கடுவ உன்னஸ்கிரிய தோட்டம், 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (கொழும்பு 12: சுதந்திரன் அச்சகம்).

8 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14.5 சமீ.

இலங்கை அரசியல்வாதியும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் இலங்கை அமைச்சருமான எம்.எஸ்.செல்லச்சாமி (முத்து சங்கரலிங்கம் செல்லச்சாமி) அவர்களின் வாழ்க்கை வரலாறு இந்நூலில் சுருங்கக் கூறப்பட்டுள்ளது. இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமானின் தலைமையில் தன்னை தொழிற்சங்கத் துறையில் ஈடுபடுத்திக்கொண்ட இவர், தொழிலாளர் காங்கிரசில் 35 ஆண்டு காலமாக பொதுக் காரியதரிசியாக சேவை புரிந்தார். 1977 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் வேட்பாளராக மத்திய கொழும்பில் முதன் முதலில் போட்டியிட்டு 24,969 வாக்குகளைப் பெற்று தோல்வியடைந்தார். பின்னர் முதல் முறையாக அறிமுகப்படுத்தப்பட்ட விகிதாசார தேர்தல் முறையில் கொழும்பு மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தலில் 1981 ஆம் ஆண்டு ஐக்கிய தேசிய கட்சியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். கொழும்பு மாவட்ட அபிவிருத்தி சபையில் போக்குவரத்து அமைச்சராக நியமனம் பெற்றார். 1989ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் சார்பில் கொழும்பு மாவட்டத் தேர்தல் தொகுதியில் போட்டியிட்டு 36,820 வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றார். அன்றைய அரசாங்கத்தில் சிறு கைத்தொழில்துறை அபிவிருத்தி ராஜாங்க அமைச்சராக நியமனம் பெற்றார். இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் இரண்டாகப் பிளவு பட்டபோது, செல்லச்சாமி இலங்கை தேசிய தொழிலாளர் காங்கிரஸ் என்ற தொழிற்சங்கத்தைத் தொடங்கினார். 1994 பொதுத்தேர்தலில் சந்திரிக்கா குமாரதுங்கவின் பொது சன ஐக்கிய முன்னணியின் சார்பில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்டு 15,000 வாக்குகளைப் பெற்றும் தோல்வியடைந்தார். அதன் பின்னர் மீண்டும் இலங்கை தொழிலாளர் காங்கிரசில் இணைந்து அதன் பிரதித் தலைவரானார். பின்னர் அக்கட்சியின் தேசியப் பட்டியல் மூலம் நாடாளு மன்றம் சென்றார். அவரது வாழ்வின் முற்பகுதி வாழ்வின் பதிவாக இந்நூல் அமைந்துள்ளது. வெளியிட்ட ஆண்டு தெரியாத போதிலும், இதில் சொல்லப்பட்ட தகவல்களின் அடிப்படையில் 1977க்கு முன்னர் இப்பிரசுரம் வெளியிடப்பட்டிருக்க வாய்ப்புள்ளது. மாத்தளை மாவட்டம் எல்கடுவ உன்னஸ்கிரிய தோட்டத்தில் பிறந்தவர் கவிஞர் சி.அழகுப்பிள்ளை. இவரது தந்தையார் தோட்டப் பாடசாலை ஆசிரியராகப் பணி புரிந்தவர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 10276).

## 12914

**தர்மதீபம்: அமரர் வி.தர்மலிங்கம் நினைவு இதழ், 1985.** அமரர் வி.தர்மலிங்கம் குடும்பத்தினர். சுன்னாகம்: திருமதி சரஸ்வதி தர்மலிங்கம், காமதேனு, கந்தரோடை, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1985. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).

viii, 80 பக்கம், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x18.5 சமீ.

20.10.1985 அன்று வெளியிடப்பெற்ற மானிப்பாய் தொகுதி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர் விசுவநாதர் தர்மலிங்கம் அவர்களின் அந்தியேட்டி நிகழ்வின்போது வெளியிடப்பெற்ற நினைவிதழ். குடும்பத்தின் ஒரே பிள்ளையான இவரை அவரது உறவினர் "இலங்கையர்" என்றும் "தர்மர்" என்றும் அன்புடன்

அழைப்பர். இவரின் தந்தையார் விசுவநாதர் அந்நாட்களிலேயே அமெரிக்காவுக்குச் சென்று முதுமாணிப் பட்டம் பெற்ற கல்விமானாவார். அமரர் வி.தர்மலிங்கம் (பெப்ரவரி 5, 1918 - செப்டம்பர் 2, 1985) இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவராகவும் 23 ஆண்டுகள் தொடர்ச்சியாக உடுவில், மானிப்பாய் தொகுதிகளின் நாடாளுமன்ற உறுப்பினராகவும் பணியாற்றியவர். 1952ஆம் ஆண்டு இலங்கைத் தமிழரசுக் கட்சி முதன் முதலாக தேர்தலில் போட்டியிட்ட போது அதன் தலைவர் தந்தை செல்வா காங்கேசன்துறைத் தொகுதியில் போட்டியிட்ட போது, அவரை ஆதரித்து மாபெரும் கூட்டம் ஒன்றை நடத்தினார். 1960 மார்ச் மாதம் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு அமோக வெற்றியீட்டினார். உடுவில் தொகுதியில் மார்ச் 1960 நாடாளுமன்றத் தேர்தலில் தமிழரசுக் கட்சியின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று நாடாளுமன்றம் சென்றார். அப்பொழுது இவருடன் போட்டியிட்ட கல்விமான் ஹன்டி பேரின்பநாயகம், கூட்டுறவாளர் வீ. வீரசிங்கம், கம்யூனிஸ்ட் வி. பொன்னம்பலம் போன்றவர்கள் தோல்வியடைந்தனர். 1972 ஆம் ஆண்டில் தமிழரசுக் கட்சி, தமிழ்க் காங்கிரஸ் ஆகியன இணைந்து தமிழர் விடுதலைக் கூட்டணியைத் தோற்றுவித்தனர். தர்மலிங்கம் மானிப்பாய் (உடுவில்) தொகுதியில் விடுதலைக் கூட்டணி சார்பில் 1977 தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். ஆறாவது அரசியல் திட்டத்திலிருந்த சட்ட மூலத்திற்கு அமைய சத்தியப் பிரமாணம் எடுக்க மறுத்ததனால் இவரின் பதவி 1983 அக்டோபர் 8 இல் பறிக்கப்பட்டது. தர்மலிங்கம் மற்றும் தமிழரசுக் கட்சியின் மு.ஆலாலசுந்தரம் இருவரும் 1985, செப்டம்பர் 2 ஆம் நாள் போராளிகள் குழுவினால் மானிப்பாயில் வைத்து படுகொலை செய்யப்பட்டனர். வி.தருமலிங்கம் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்) என்ற அரசியல் கட்சியின் தலைவரான தர்மலிங்கம் சித்தார்த்தனின் தந்தையார் ஆவார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 32302).

**மேலும் பார்க்க: 12228.**

## 923.3(1) தொழிற்சங்கவாதிகள்

### 12915

**கரவை ஏ.சீ.கந்தசாமி நினைவுக் கருத்தரங்கு கட்டுரைத் தொகுப்பு.** வி.ரி.தமிழ்மாறன், கொன்சன்ரைன், சோ.சந்திரசேகரம். கொழும்பு: பாரதி வெளியீட்டகம், 1வது பதிப்பு, டிசம்பர் 1995. (தெகிவளை: டெக்னொ பிரின்ட், இல. 6, ஜெயவர்த்தன அவென்யூ).

(4), 28 பக்கம், விலை: ரூபா 25., அளவு: 21x14 சமீ.

31.12.1994அன்று மறைந்த கரவை ஏ.சீ.கந்தசாமி அவர்கள் பற்றிய மனப்பதிவுகளை - அரசியலில் ஈடுபட்ட மாணவனாக, ஒரு கம்யூனிஸ்டாக, தொழிற்சங்கவாதியாக, அரசியல்வாதியாக எனப் பல்வேறு கோணங்களில் தரிசிக்கப்பட்ட பார்வைகளாகத் திரட்டி லீலா முத்தையா, ஆனந்த குணத்திலக்க, த.சித்தார்த்தன் ஆகியோர் பதிவுசெய்திருக்கிறார்கள். மேலும்ஆய்வுக் கட்டுரைகளாக வி.ரி.தமிழ்மாறன் எழுதிய "சிறுபான்மை தேசிய இனங்களின் போராட்டம் 20ஆம் நூற்றாண்டின்

இறுதி தசாப்தத்தில் ஒரு பார்வை" என்ற ஆய்வும், கொன்சன்ரைன் எழுதிய "யுத்தமும் சிறுவர் உளவியலும்-ஒரு சமூகவியல் பார்வை" என்ற கட்டுரையும், சோ.சந்திரசேகரம் எழுதிய "வன்முறையும் கல்வியும்" என்ற கட்டுரையும் இடம் பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 10976).

### 12916

**மனிதருள் மாணிக்கம்: அப்துல் அஸீஸ்.** பி.எம்.லிங்கம். கொழும்பு 12: அஸீஸ் மன்ற வெளியீடு, 17, புதிய சோனகத் தெரு, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1995. (கொழும்பு 12: குமரன் அச்சகம், 201, டாம் வீதி).

(8), 190 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: ரூபா 100., அளவு: 21x14 சமீ.

இலங்கை ஜனநாயக தொழிலாளர் காங்கிரசின் தலைவராக இருந்து மறைந்த பெரியார் அப்துல் அஸீஸ் அவர்களின் வாழ்க்கைப் பேரேட்டிலிருந்து வரலாறு தரும் பாடங்கள் சிவலவற்றைப் பதிவுசெய்வதாக இந்நூல் அமைகின்றது. இந்தியாவில் மகாத்மா காந்தி அவதரித்த போர்பந்தரில் பிறந்த அப்துல் அஸீஸ் தனது படிப்பை முடித்துக் கொண்டு தனது தந்தையின் வர்த்தகத்துக்கு உதவும் பொருட்டு இலங்கை வந்த பின்னர், மலையக தோட்ட மக்களோடு தன்னை சங்கமித்துக் கொண்டார். அஸீஸ் அவர்களின் மனிதாபிமானம் தொழிலாளர் வர்க்கத்தினரை மாத்திரமல்ல நாட்டிலுள்ள முற்போக்குச் சிந்தனையாளர்கள் அனைவரையும் கவர்ந்தமை வியப்புக்குரியதொன்றல்ல. தொழிற்சங்க வரலாற்றை எழுத முற்படும் எவரும் அஸீஸை புறந்தள்ளி அதனை எழுத முடியாது. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மேதினத்தில் தொழிலாளருக்கு விடுமுறையுடன் சம்பளம் பெற்றுத் தந்த பெருமை மறைந்த தொழிற்சங்கவாதி அஸீஸ் அவர்களைச் சாரும். காலம் காலமாக அவரின் சேவை முழுவதும், பெருந்தோட்டத் துறைக்கே அர்ப் பணிக்கப்பட்டுள்ளது. அஸீஸ் அவர்களின் தலைமையில் பல்வேறு போராட்டங்கள் நடைபெற்றன. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகளுக்கு எதிராக நடத்தப்பட்ட அப்போதைய மகாதேசாதிபதி சேர். சோல்பரிக்கு எதிராக லங்கா சமசமாஜக் கட்சியுடன் இணைந்து தேசிய சுதந்திரத்துக்காக குரல் எழுப்பினார். அந்தக் காலகட்டமே இலங்கையின் பொற்காலம் என்று வர்ணிக்கப்படுகிறது. இந்திய வம்சாவளி தொழிலாளர்களின் தேசிய உரிமைகளுக்காக போராடவும் இறப்பர், தேயிலை தோட்டங்களில் உழைத்து வரும் மக்களுக்காக இலங்கை இந்திய காங்கிரஸ் தொழிற்சங்கத்தை உருவாக்குவதற்கு ஸ்தாப உறுப்பினராக கடமை யாற்றிய பெருமை அஸீஸை சாரும். அத்துடன் இவர்தான் இலங்கை இந்திய காங்கிரஸின் முதலாவது பொதுச் செயலாளராகவும் கடமையாற்றினார். (இந் நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 20357).

## 923.5 பொது நிர்வாகத்துறையினர்

### 12917

**வே.ந.சிவராசா நினைவுமலர்.** *சச்சிதானந்தம், செ.கணேசலிங்கன் (தொகுப்பாசிரியர்). கொழும்பு 12: திருமதி கோகிலாம்பாள் சிவராசா, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1993. (அச்சக விபரம் தரப்படவில்லை).*

*50+156 பக்கம், புகைப்படத் தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.*

*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பதிவாளராகப் பணியாற்றிய வே.ந.சிவராசா அவர்கள் 07.10.1934இல் வடமராட்சியில் துன்னாலை தெற்கில் வேலுப்பிள்ளை நடராசா ஆசிரியரின் தலைமகனாகப் பிறந்தவர். சிறந்த சைவ பக்தரான இவர் காசி முதலான வடஇந்தியத் தலங்களைத் தரிசிக்கச் சென்றவிடத்தில் சுகவீனமற்று சென்னை தனியார் மருத்துவமனையொன்றில் 27.9.1993இல் மரணமனவர். அவர் நினைவாக வெளிவரும் இம்மலரில், மகேச பக்தர் மக்கள் நேசர் (நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்), அமருங்கள் நீங்கள் யார் எங்கிருந்து வருகின்றீர்கள் (சுவாமி உமாஷங்கரானந்த சரஸ்வதி), சிறந்த கர்மவீரன் (க.கைலாசநாத குருக்கள்), ஓர் ஆத்மீக நிர்வாகி (நந்தி), அன்னார் சேவைகள் மறக்க முடியாதவை (சொ. கணேசநாதன்), சிவநெறிச் சீலர் (வ.சிவராசசிங்கம்), மனிதருள் தலையாய ஒரு மனிதர் (ஆ.குணநாயகம்), கொழும்புத் தமிழ்ச் சங்க அஞ்சலி, ஆன்மீகம்-குடும்பம்-முக்தி, ஆத்மீக ஞானி (கு.குருசாமி), அவருக்கு மரணமில்லை (செ. யோகநாதன்), எல்லாம் சிவமயம் (லோகநாயகி சற்குணநாதன்), இயற்கையின் குரூரம் (செ.கணேசலிங்கன்), தெளிவான சிந்தனையாளர் (சுவாமி ஆத்மானந்தா), பிரார்த்தனையின் பலனுக்கு சிவராஜா அவர்கள் பிரத்தியட்சப் பிரமாணமே (க.சிவானந்தன்), எளிமையாக வாழ்ந்த சிந்தனையாளர் (எஸ்.சிவதாசன்), அவர் மறைந்து விடவில்லை (எம்.சோமசுந்தரம்), (மரணத்திற்குப் பின்) ஆகிய பிரமுகர்களின் அஞ்சலி உரைகளுடன், நல்லூரரான் திருவடி, திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆகியோரின் தேவாரமும், மணிக்கவாசக சுவாமிகள் திருவாசகம், திருக்கோவையார், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருமந்திரம், அற்புதத் திருவந்தாதி, திருத் தொண்டர் புராணம், அபிராமி அந்தாதி, சகல கலாவல்லி மாலை, சரஸ்வதியந்தாதி, லலிதாம்பிகை நவரத்தின மாலை, விநாயகர் அகவல், விநாயக கவசம், கி.வா. ஜகந்நாதன் விநாயகர் வழிபாடு, அருணகிரிநாத சுவாமிகள் திருப்புகழ், கந்தரநுபூதி, கந்தரலங்காரம், ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் திருச்செந்தூர் கந்தர் கலிவெண்பா, தேவராய சுவாமிகள் கந்தர், சஷ்டி கவசம், திருச்செந்தூர் முருகன், பாம்பன் சுவாமிகள் சண்முக கவசம், திருப்போரூர் சந்நிதி முறை, ஆறுமுக நாவலர் கதிர்காமத் திருமுருகன், இராமலிங்க அடிகளார் திருவருட்பா, கந்தபுராணம் ஆகிய பிற பக்தி இலக்கியங்களும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 13601).*

## 923.6 சமூக சேவகர்கள்

### 12918

**'தமிழ் மகள்" மங்களம்மாள் மாசிலாமணி.** வள்ளிநாயகி இராமலிங்கம் (மூலம்), க.குமரன் (பதிப்பாசிரியர்). கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு 2017. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

44 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 150., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-659-559-8.

இந்நூல் திருமதி வள்ளிநாயகி இராமலிங்கம் அவர்களின் "யாழ்ப்பாணச் சமூகத்தில் பெண் கல்வி: ஓர் ஆய்வு" என்னும் நூலில் இடம்பெற்ற "காந்தியவழி சமூகசேவையாளர் தமிழ்மகள் மங்களம்மாள் மாசிலாமணி" என்னும் கட்டுரையினை அடிப்படையாகக்கொண்டு தொகுக்கப்பட்டது. மேற்படி கட்டுரை செவ்விதாக்கப் பெற்றதுடன் மங்களம்மாள் தொடர்பான புதிய பல விடயங்கள் இக்கட்டுரையுடன் இணைக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையைச் சேர்ந்த மங்களம்மாள் மாசிலாமணி (1884-1971) காந்திய வழியில் தன்னை சமூக சேவையில் இணைத்துக்கொண்டவர். "தமிழ் மகள்" என்ற சஞ்சிகையை நடத்திவந்தவர். இந்நூல் சமூகப் பின்னணி, மங்களம்மாளின் தோற்றமும் பண்பும், இயக்கங்களின் தலைவராக, பேச்சாளராக இந்தியாவிலும் இலங்கையிலும், அரசியலில் வீராங்கனையாக, சமூக சேவையாளராக, பத்திரிகை யாளராக, கணவனின் பங்கு, பல்கலைக்கழகம் சம்பந்தமாக, முடிவுரை ஆகிய 10 அத்தியாயங்களில் விரிவான தகவல்களுடன் எழுதப்பட்டுள்ளது.

### 12919

**தொண்டர் திலகம்.** எம்.ஏ.ரஹ்மான். கொழும்பு 13: இளம்பிறை எம்.ஏ.ரகுமான், அரசு வெளியீடு, 231 ஆதிருப்பள்ளித் தெரு, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1972. (கொழும்பு 13: ரெயின்போ பிரிண்டர்ஸ், 231 ஆதிருப்பள்ளித் தெரு).

32 பக்கம், புகைப்படம்,விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

கொழும்பு தப்ரபேன் ஹோட்டலில் 1971ம் ஆண்டு ஜனவரி 23ஆம் நாள் அனைத்திலங்கைத் தமிழ் எழுத்தாளர் கூட்டமைப்பு, முஸ்லீம் லீக்கின் தலைவராகப் பணியாற்றிய அல்ஹாஜ் தை.அ.செ.அப்துல் காதர் அவர்களுக்கு அவர்தம் சமூகசேவை வெள்ளிவிழா நிறைவின் போது தொண்டர் திலகம் என்ற விருது விங்கி கௌரவித்த வேளையில் அவர் பற்றி வெளியிடப்பட்ட பிரசுரம். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 106/10276).

### 12920

**பாரதிநேசன் வீ.சின்னத்தம்பி நினைவுமலர்.** நினைவு மலர்க்குழு. கனடா: பாரதிநேசன் வீ.சின்னத்தம்பி நினைவுக்குழு, ஒன்ராரியோ, 1வது பதிப்பு, ஜூலை 2001. (கனடா: ரோயல் கிராப்பிக் ஸ்தாபனம்).

*(6), 116 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.*

*அண்ணல் வழி தொடர்ந்திடுவோம் ஆட்சி காண்போம், முன்னுரை, அணிந்துரை, சின்னத்தம்பியின் சிந்தனைத் தெளிவு என்றைக்கும் எமக்கு வழிகாட்டும், மணிவிழாக் காலத்தில் துணைவியூர்க் கேசவனிக்குத் தம்பி அளித்த பேட்டி (க.கந்தசமி), அவன் வழி மலர வைப்போம் பொதுவுடமைச் சமுதாயம் (த. சிவபாலு), பாசம் நிறைந்த அண்ணர் பெருமலையாய் சரிந்தார் (வீ.கனகசபை), எமது மைந்துனர் "தம்பி மாமா" (மு.கார்த்திகேசன் குடும்பம் சார்பாக புதல்வி ஜானகி பாலகிருஷ்ணன்), சமூக சேவையாளர் வீ.சின்னத்தம்பிக்கான மணிவிழா பற்றி, மணி விழா நிகழ்வுகள், ஆய்வரங்கு, பத்திரிகையாளர் திரு.வீ.சின்னத்தம்பி அவர்களின் வாழ்வுக் குறிப்புக்கள், மணிவிழா காணுந் தம்பியின் "மணியான காலந்" தொடர்ந்திடுக, மூத்த எழுத்தாளர் திரு.வீ.சின்னத்தம்பி மன நிறைவு வாழ்த்து, மணி விழா எழுத்தாளர் பாரதி நேசன் வீ.சின்னத்தம்பிக்கான பாராட்டு விழா பற்றி, பாரதி நேசனின் கருத்துக்களில் உண்மையும் நேர்மையும் கரும்பொருளாக இருக்கும். பீக்கிங் பிரதிநிதி சீனாத்தம்பியின் உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் வரவேற்பு பற்றி. தோழர் வீ.சின்னத்தம்பி மறைவைத் தொடர்ந்து, பாரதிநேசன் காலமானார், பீக்கிங் வானொலி முன்னாள் ஒலிபரபாளர் காலமானார், மூத்த பத்திரிகையாளர் சின்னத்தம்பியின் கண்கள் தானம் பூதவுடல் மருத்துவபீடத்திற்கு, வட்டுக்கோட்டையில் கறுப்புக்கொடிகள், துயர்பகிர்வும் அஞ்சலியும் அமரர் வீ.சின்னத்தம்பி அவர்கள், மறைந்த சின்னத்தம்பியின் கண்களால் இருவர் வாழ்வில் ஒளி, பத்திரிகையாளரின் கண் கோண்டாவில்வாசி ஒருவருக்கு, பத்திரிகையாளரின் 2வது கண் யாழ்.மாநகர சபை ஊழியருக்கு, தோழர் வீ.சின்னத்தம்பி அவர்களுக்கு செங்கொடி தாழ்த்தி அஞ்சலி செலுத்துவோம், அஞ்சலி கூட்ட விமர்சனம், பீக்கிங் சின்னத்தம்பி சிந்தனையால் மிக உயர்ந்தோன், நெஞ்சில் நிறைந்த நண்பர் சின்னத்தம்பி, மானிடம் போற்றிய பாரதிநேசன், அமரர் வீ.சின்னத்தம்பியின் ஆக்கங்களும் படைப்புகளும், ஓ கனடா கலைந்த கனவு, கம்யூனிஸ்ட் பிரகடனம் வரலாறாகி விடவில்லை, பிரகடனத்தின் தோற்றம், கம்யூனிஸ்ப் பிரகடனம் என்றது ஏன், பிரகடனம் காலாவதியாகி விட்டதா, உள்ளடக்கம், ஒக்டோபர் புரட்சியில் மலர்ந்த சோவியத் யூனியன் சிதைந்தது ஏன், மாக்சியத்தின் வெற்றி, ஒக்டோபர் புரட்சியின் சாதனைகள், சோவியத் யூனியன் ஏன் சிதைந்தது, நித்திய ஒளி, தோழமை நிறைந்த உளமார்ந்த நன்றிகள் அனைவர்க்கும் ஆகிய தலைப்புவழிக் கட்டுரைப் பதிவுகளின் மூலம் அமரர் வீ.சின்னத்தம்பியின் வாழ்வும் பணிகளும், அவரது மறைவின் நிகழ்வுகளும் பதிவுசெய்யப்பட்டுள்ளன. இந்த நினைவு மலர்க்குழுவில் க.சிவபாலு, க.கந்தசாமி, வீ.கனகசபை, ஜானகி பாலகிருஷ்ணன் ஆகியோர் பங்கேற்றிருந்தனர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 39900. நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தின் சேர்க்கை இலக்கம் 004150).*

## 923.61 விடுதலைப் போராளிகள்

### 12921

**ஒரு ஈழப் போராளியின் பார்வையில் தோழர் தமிழரசன்.** தோழர் பாலன். லண்டன்: தோழர் பதிப்பகம், 1வது பதிப்பு, செப்டெம்பர் 2017. (அச்சக விபரம் தரப்படவில்லை).

*(7), 163 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x13.5 சமீ.*

*இந்நூலாசிரியர் தோழர் பாலன் இலங்கையில் கரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். தற்போது லண்டனில் வாழ்ந்து வருகின்றார். இவர் தமிழ் மக்கள் பாதுகாப்பு பேரவை என்னும் புரட்சிகர இயக்கத்தின் ஆரம்பகர்த்தாக்களில் ஒருவர். அதன் செயற்குழு உறுப்பினர்களுள் ஒருவராகவும் இயங்கியவர். தோழர் பாலன் "பேரவை" அமைப்பு சார்பாக தமிழ்நாடு விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துவந்த தோழர் தமிழரசனுடன் ஐக்கியத்தை மேற்கொண்டவர். அவர் தோழர் தமிழரசனுடனான தனது அனுபவங்களை இந்நூலில் விவரித்துள்ளார். தோழர் பாலன் 12.3.1991 அன்று சென்னையில் கியூ பிரிவு உளவுப்பொலிசாரால் கைது செய்யப்பட்டார். எட்டு வருட சிறை மற்றும் சிறப்பு முகாம் சித்திரவதையை அனுபவித்த பின்னர் 03.04.1998 அன்று விடுதலை செய்யப்பட்டதுடன் இந்தியாவிலிருந்தும் வெளியேற்றப்பட்டார். இந்நூலில் தோழர் தமிழரசன்- ஒரு சுருக்க அறிமுகம், தோழர் தமிழரசன் பயங்கரவாதியா? தோழர் தமிழரசனும் அவர் பின்பற்றிய தத்துவங்களும், தோழர் தமிழரசனும் சாதியத்துக்கு எதிரான போராட்டமும், தோழர் தமிழரசனும் இலங்கை மீதான இந்திய ஆக்கிரமிப்பும், தோழர் தமிழரசனை வஞ்சனையால் கொன்ற இந்திய அரசு, தோழர் தமிழரசன்பற்றி புலவர் கலியபெருமாள், தோழர் தமிழரசன் பாதையில் பயணித்த தோழர் சுந்தரம், தோழர் தமிழரசன் பறறி உரையாடல் மற்றும் குறிப்புகள் ஆகிய பத்துத் தலைப்பு களின்கீழ் தோழர் தமிழரசனுடனான தனது அனுபவங்களை ஆசிரியர் பகிர்ந்து கொண்டுள்ளார்.*

### 12922

**சர்வாதிகாரி ஹிட்லரை அடிபணிய வைத்த மாவீரன் செண்பகராமன்.** சமரபாகு சீனா உதயகுமார். வல்வெட்டித்துறை: குபேந்திரா பதிப்பகம், கூனன் தோட்டம், சமரபாகு, 1வது பதிப்பு, மார்கழி 2017. (வவுனியா: துஅச்சுப் பதிப்பகம்).

viii, *36 பக்கம், விலை: ரூபா 170., அளவு: 18.5x12 சமீ.,* ISBN: *978-955-73630-1-1.*

*சர்வாதிகாரி ஹிட்லரை அடிபணிய வைத்த மாவீரன் செண்பகராமனின் வரலாற்றை சிறியதொரு கைநூலாக்கித் தந்துள்ளார் சமரபாகு சீனா உதயகுமார். உலக மகா யுத்தத்தின்போது செண்பகராமன் தனது எம்டன் கப்பலின் மூலம் வழித்தாக்குதல்களை மேற்கொண்டு எதிரிகளின் கடற் கப்பல்களை மூழ்கடித்து பெரும் வீரதீரச் செயல்கள் புரிந்தவர். அக்காலத்தில் இந்தியாவில் இருந்த பிரிட்டிஷ் படைகளைத் தாக்கி பெரும் சேதம் விளைவித்த இவர் பர்மாவில் நிலைகொண்டிருந்து ஜப்பானியருடன் இணைந்து தன் தேசிய இராணுவப் போராளிகள் மூலம்*

*காலனித்துவ பிரித்தானியப் படையினரை நிலைகுலைய வைத்துக்கொண்டிருந்த சுபாஷ் சந்திரபோசுக்கு வழிகாட்டியாகவும் உதவியாகவும் இருந்தவர். இவர் எவ்வாறு வரலாற்றின் ஒருகட்டத்தில் ஹிட்லரைத் தன்னிடம் மன்னிப்புக் கேட்கவைத்தார் என்பதும் இச்சிறுநூலில் சுவையாக விளக்கப்பட்டுள்ளது. ஹிட்லரின் நாஜிப் படையினர் இறுதியில் நயவஞ்சகமாக செண்பகராமனுக்கு வழங்கிய உணவில் விஷமிட்டு அவரைக் கொன்றார்கள் என்பதையும் ஆசிரியர் இந்நூலில் பதிவுசெய்திருக்கிறார்.*

**மேலும் பார்க்க: 13000**

## 923.7 கல்வியியலாளர்கள்

### 12923

**அமரர் உயர்திரு சு.பற்குணம்: நினைவு மலர்.** *மலர்க் குழு. கொழும்பு 4: பழைய மாணவர் சங்கம், இந்துக் கல்லூரி, இல.77, லோரன்ஸ் வீதி, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1991. (அச்சக விபரம் தரப்படவில்லை).*

*(36) பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x18.5 சமீ.*

*02.16.1929இல் பிறந்து இந்துக்கல்லூரியின் ஆசிரியராகவும் துணையதிபராகவும் 23 ஆண்டுகள் பணியாற்றி 21.6.1989இல் இளைப்பாறியவர் அமரர் சு.பற்குணம். இளைப்பாறிய பின்பும் பாடசாலை அபிவிருத்திச் சபையின் துணைத்தலைவராகப் பணியாற்றி 09.07.1991இல் இறைபதமெய்தியவர். அவரது மறைவையொட்டி அவரது வாழ்வும் பணியும் பற்றிய கருத்துரைகளுடன் இந்நினைவு மலர் உருவாக்கப்பட்டுள்ளது. சிவஸ்ரீ பா.சிற்சபேசக் குருக்கள், கல்லூரி அதிபர் பா.சி. சர்மா, கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் எம்.எஸ்.செல்லச்சாமி, கல்வி இராஜாங்க அமைச்சர் இராசமனோகரி புலந்திரன், மேல் மாகாண சபை உறுப்பினர் ராஜன் சின்னத்துரை, இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் T.சங்கரலிங்கம் பிரதி மாநகர முதல்வர் க.கணேசலிங்கம், இந்துக் கல்லூரி தாபகர் வி.மாணிக்கவாசகர், அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவர் வே. பாலசுப்பிரமணியம், பொன்னம்பலவாணேசர் கோவில் அறங்காவலர் D.M. சுவாமிநாதன், செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, க.வேலாயுதபிள்ளை, கந்தையா நீலகண்டன், ரூ.சிவகுருநாதன், க.சேய்ந்தன், க.த.இராஜரட்ணம், தி.கனகலிங்கம் ஆகியோரின் இரங்கலுரைகளும், வளர்ச்சிப் பாதையில் இந்துக் கல்லூரி (சு. பற்குணம்), பற்குணம் மாஸ்டர் அறநிதியம் ஆகிய ஆக்கங்களும் இம்மலரில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 35803. நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தின் சேர்க்கை இலக்கம் 004097).*

**12924**

**ஆசிரியமணி:அ.பஞ்சாட்சரம் அவர்களின் பாராட்டுவிழா மலர்**. மலர்க் குழு. உரும்பிராய்: ஆசிரியமணி அ.பஞ்சாட்சரம் அவர்கள் பாராட்டுவிழாச் சபை, சைவத் தமிழ் வித்தியாலயம், 1வது பதிப்பு, ஒக்டோபர் 2001. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).

(44), 46 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x18.5 சமீ.

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள், மஹாராஜஸ்ரீ சு.து.ஷண்முகநாதக் குருக்கள், தங்கம்மா அப்பாக்குட்டி, அ.சண்முகதாஸ், இ.கந்தையா, சுப்பிரமணியம் யோகராசா, இ.செல்லத்துரை, ச.நா.தணிகாசலம் பிள்ளை, மு.கந்தையா, க.சொக்கலிங்கம், இ.முருகையன், சீ.விநாசித்தம்பிப் புலவர், வ.ஆறுமுகம், க.சச்சிதானந்தன் வ.கந்தசாமி, அ.பஞ்சலிங்கம், எஸ். ஜெபநேசன், செல்வராணி மகாலிங்கம், ம.பார்வதிநாதசிவம், ப.கோபாலகிருஷ்ண ஐயர் ஆகியோரின் வாழ்த்துரைகளுடன் தொடங்கும் இம்மலரில், கவிஞர் சோ. பத்மநாதன், மு.கந்தப்பு (மன்னவன்), சைவப்புலவர் சு.செல்லத்துரை, ந. வீரமணிஐயர், செ.ஐயாத்துரை, சேந்தன், க.ஆனந்தராஜா ஆகியோரின் வாழ்த்துக் கவிதைகளும், கிலேசம் தீர்க்கும் பஞ்சாட்சரம் (இரா.சுந்தரலிங்கம்), குரு சிஷ்ய வழியில் இன்பங் கண்டவர் (இ.சிவஞானசுந்தரம்), ஆசிரியமணி அ.பஞ்சாட்சரம் அவர்கள் (வி.கே.கணேசலிங்கம்), குருபக்தியின் சிகரம் ஆசிரியமணி பஞ்சாட்சரம் (செல்லப்பா நடராசா), நல்லமனம் வாழ்க, நாடுபோற்ற வாழ்க (த.செல்வநாயகம்), நாவலர் (மணியும்), பண்டிதமணியும், ஆசிரியமணியும் (குமாரசாமி சோமசுந்தரம்), ஆசிரியமணியும் பண்டிதமணியும் (பொன்.பாக்கியம்), ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம் அவர்கள் (க.இ.குமாரசாமி), "வாழையடி வாழையென வந்த" ஆசிரியமரபு (முருக வே.பரமநாதன்-ஆழ்கடலான்), வாழிய பல்லாண்டு (க.இ. சரவணமுத்து), ஈழத்துச் சைவத் தமிழ்க் காவலர் (க.இ.க.கந்தசுவாமி), கடந்த காலத்தை நினைத்துப் பார்க்கிறேன் (ஆ.க.ஆறுமுகம்), சைவத்தமிழில் ஆசிரியமணி (ந.கணேசலிங்கம்), குன்றின்மேல் விளக்குப் போன்ற நல்லாசான் (சி.நந்தகுமார்), மதிப்புக்கும் வணக்கத்துக்கும் உரியவர் (சிவ.மகாலிங்கம்), ஆசிரியமணி பஞ்சாட்சரம் அவர்களின் மணி விழாவின் போது மனம் மகிழ்ந்து அளித்த வாழ்த்துரை (மு.விருத்தாசலம்), புகழ் வளர்க (கா.இ.விசாகேசுவரன்), பஞ்சாட்சரம் ஐயா (கா.சிவபாலன்), பண்டிதமணி கண்ட அனுமான் (அம்புஜன்), பண்டித மணிக்குக் கிடைத்த பஞ்சாட்சரம் (எஸ்.டி.சிவநாயகம்), ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம் அவர்களின் வாழ்க்கைக் குறிப்பு, அநுபந்தம்: யாழ்ப்பாண விவசாயத்துறை சந்தை நோக்கியது ஓர் ஆரம்ப நோக்கு (ப.சிவநாதன்), யாழ்ப்பாணத்து மரபுவழி ஆசிரியத்துவம் (சபா.ஜெயராசா) ஆகிய கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 008773).

## 12925

**ஆசிரியமணி மலர் (உரும்பிராய் மேற்கு ஆசிரியமணி அருணாசலம் பஞ்சாட்சரம் அவர்களின் நினைவுமலர்).** மலர்க் குழு. உரும்பிராய்: ஆசிரியமணி அருணாசலம் பஞ்சாட்சரம் குடும்பத்தினர், உரும்பிராய் மேற்கு, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2007. (கோண்டாவில்: சிவரஞ்சனம் ஓப்செட் பிறின்டேர்ஸ்).

78 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 19.5x11.5 சமீ.

பல்வேறு பிரமுகர்களின் அஞ்சலி உரைகளுடன், அருணாசலம் பஞ்சாட்சரம் அவர்கள் வாழ்வும் வளமும், ஆசிரியமணி ஆற்றிய சேவைகளில் மீண்டும் நினைத்துப் பார்க்க வேண்டியவை கருணை இல்லத்தின் காருண்ய சேவை, பொன் முகத்தான்: வெண்பா (க.சச்சிதானந்தன்), பண்டிதமணியும் ஆசிரியமணியும் (அ.பஞ்சாட்சரம்), குரு சிஷ்ய பரம்பரை, ஆசிரியமணியின் ஆக்கங்களில் சில: உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் கோயில் வரலாறும் மகத்துவமும், இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்கள் வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம், எங்கள் தெய்வம், பண்டிதமணி அவர்களும் அவர் பெற்ற பாராட்டுக்களும், சைவாசிரிய கலாசாலைக்கு விளக்கேற்றிய மூவர், இலங்கையில் சைவப் பாட சாலைகளின் பணி (ச.ஏழூர் இராசரத்தினம்), உரும்பிராய் பற்றிய நோக்கு ஆகிய ஆக்கங்களும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 003758).

## 12926

**ஒரு கிராமத்துச் சிறுவனின் பயணம்: எஸ்.எச்.எம். ஜெமீலின் வாழ்வியல்.** ஏ.பீர் முகம்மது, எஸ்.எல்.சியாத் அஹமட் (தொகுப்பாசிரியர்). கொழும்பு 2: அல்ஹாஜ் எஸ்.எச்.எம்.ஜெமீல் பாராட்டு விழாக் குழு, இல. 9, சவுன்டர்ஸ் கோர்ட், இணைவெளியீடு, கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, 2013. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

xiv, 408 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: ரூபா 1500., அளவு: 24.5x17.5 சமீ., ISBN: 978-955-659-403-4.

தமிழறிஞர் எஸ்.எச்.எம்.ஜெமீல் இலங்கையில் அரச நிர்வாகம், ஆய்வு, எழுத்து, மேடைப்பேச்சு, பன்னூல் வெளியீடு என்று பல்முனைகளில் பிரபல்யம் பெற்றவர். அவரது வாழ்க்கை வரலாற்றினூடாக கல்வி, சமூக, பண்பாட்டு வரலாற்றினைக் கூறும் நூலாக இது அமைந்துள்ளது. முதலாவது இயலான "ஓர் அறிமுகம்", எஸ்.எச்.எம்.ஜெமீல் அவர்கள் பற்றி மும்மொழிகளிலும் அமைந்த சுருக்க விபரங்களையும், "துளிர்ப்பு" என்ற இயல் அவரது குடும்பத்தின் ஆறு தலை முறையினரின் வாழையடி வாழையாக வழிவந்த வரலாற்றையும், பல்கலைக்கழக வாழ்வு வரையிலான அவரது பயணத்தையும் பதிவுசெய்கின்றன. "மலர்வு" என்ற இயல் அவரது பரந்துபட்ட சேவைக்களங்களையும், "அங்கீகாரம்" என்ற இயல் அவரைப் பற்றிக் கடந்த அரைநூற்றாண்டுக் காலமாகப் பிறர் எழுதிய 27 கட்டுரைகள், 11கவிதைகள், 27 நூலாய்வு என்பவற்றையும் உள்ளடக்கியுள்ளன.

"சுவடுகள்" என்ற இயல் எஸ்.எச்.எம்.ஜெமீல் அவர்களின் வாழ்வின் முக்கிய தடங்களையும், "அடையாளம்" என்ற இறுதி இயல் எஸ்.எச்.எம்.ஜெமீல் தொடர்பான 160 புகைப்படங்களையும் உள்ளடக்குகின்றன.

## 12927

**கசடறு: ஓய்வுபெற்றோரை வாழ்த்தும் பனுவல் 2010.** சத்தார் எம்.பிர்தௌஸ் (பிரதம ஆசிரியர்), ஏ.ஆர்.நிஃமத்துல்லா (பிரதம பதிப்பாசிரியர்). கல்முனை: வலயக் கல்வி அலுவலகம், 1வது பதிப்பு, ஜனவரி 2010. (அக்கரைப்பற்று: நியூ செலெக்ஷன்ஸ்).

xxviii, (22), 171 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x15 சமீ.

கல்முனைப் பிரதேச கல்வித்துறையில் தம் பங்கினை ஆற்றி ஓய்வுபெற்றவர்களை வாழ்த்துவதுடன் அவர்கள் ஒவ்வொருவர் பற்றிய தனித்தனி வரலாற்றுக் குறிப்பு, புகைப்படம், அவர்கள் மேற்கொண்ட பணிகள், தற்போதைய முகவரி எனப் பல்வேறு தகவல்களையும் பதிவுசெய்துள்ள ஒரு வரலாற்று ஆவணம் இதுவாகும். 155 அரச கல்வித்துறை ஊழியர்களின் விபரங்களை இந்நூல் விரிவாகத் தருகின்றது. M.A.C.மொஹிடீன், D.பெஞ்சமின், N.நாகராஜா, R.தியாகலிங்கம், ஐ.எம்.இஸ்ஸதின், ஆ.மு.ஷரிபுத்தீன், எம்.ஐ.எம்.சரிபு, S.H.L.அலியார், A.R.A.அஸீஸ், T.பொன்னம்பலம், S.A.I.மத்தியூ, A.M.A.மஜீத், P.நமசிவாயம், எம்.ஏ.எம்.சாபிடீன், M.K.M.ஹனிபா, M.P.H.முஹம்மது, T.L.இப்றாலெவ்வை, R.எட்வேர்ட் ஞானராஜா, எம்.சோமசேகரம், U.L.அலியார், T.மயில்வாகனம். M.H.காதர் இப்றாஹிம், K.முத்துலிங்கம், திருமதி எஸ்.சிவராஜா, T.A.பூபாலசிங்கம், I.M.S.M.பழீல் மௌலானா, சீ. சிவப்பிரகாசம், K.L.சின்னலெப்பை, திருமதி ஆர்.அருளானந்தம், S.L.ஆதம்பாவா, ஏ.சூசைதாசன், கே.பாலகிருஷ்ணன், A.H.M.மஜீத், S.கணேசபிள்ளை, E.L.H.சுலைமாலெப்பை, எஸ்.தில்லையம்பலம், திருமதி வீ.வேல்நாயகம், M.C.ஆதம்பாவா, M.H.யாக்கூப் ஹசன், U.L.மகுமூது லெப்பை, கே.இராசமாணிக்கம், A.M.பரீட் அலி, வீ.ஜெயநாதன், A.L.M.அமீன், திருமதி எஸ். புவனேந்திரராஜா, M.I.A.ஜப்பார், ஐ.விநாயகமூர்த்தி, K.L.அபூபக்கர் லெப்பை, எம்.சடாட்சரம், A.முசம்மில், திருமதி T.பத்மநாதன், A.A.L.M.இனாயத்துல்லா, ஏ.அரன்மகன், திருமதி என்.கிருபராஜா, P.பொன்னம்பலம் சு.சண்மகநாதன், வி.சுப்பிரமணியம், எம்.ஐ.முஸ்ஸம்மில், ரீ.சண்முகரெத்தினம், S.M.இப்றாஹிம், A.M.M.இஸ்மாயில், M.C.அகமது முகையதீன், S.L.அசனார், M.M.ஆதம்பாவா என்போர் உள்ளிட்ட 155 பேர் பற்றிய குறிப்புகள் இவ்விதழில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 48732).

## 12928

**கல்வி ஊற்றுக் கண்களில் ஒன்று.** ஏ.இக்பால். பேருவளை: பேசும் பேனா பேரணி, 63, பள்ளிவாசல் வீதி, 1வது பதிப்பு, ஏப்ரல் 1994. (பேருவளை: குவிக் கிராப்பிக் பிரின்ட், 26/6, பள்ளிவாசல் வீதி).

*111 பக்கம், விலை: ரூபா 55., அளவு: 17.5x13 சமீ.*

*இந்நூல் ஆசிரிய தந்தை அல்ஹாஜ் ஐ.எல்.எம்.மஷ்ஹூர் அவர்களின் வாழ்க்கை வரலாறாகவும் இலங்கை முஸ்லிம்களின் ஒரு காலகட்டத்துக் கல்வி வரலாறாகவும் எழுதப்பெற்றுள்ளது. ஆசிரியராக, அதிபராக, நூலாசிரியராக இருந்தவரும் தர்கா நகரைச் சேர்ந்த ஆசிரியர் தந்தையுமான காலஞ்சென்ற அல்-ஹாஜ் ஐ.எல்.எம். மஷ்ஹூர் இந்நாட்டு முஸ்லிம்களின் கல்வி மறுமலர்ச்சிக்காக பாரிய பணிகளைச் செய்துள்ளார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 14742).*

### 12929

**கலாநிதி A.M.A.அஸீஸ்: நினைவுதினக் கட்டுரைகள்.** எஸ்.எம்.கமால்தீன். கொழும்பு 9: அகில இலங்கை முஸ்லீம் வாலிபர் சங்கப் பேரவை, 63, ஸ்ரீ வஜிரஞான மாவத்தை, 1வது பதிப்பு, 1990. (கொழும்பு 9: டெவலோ பிரின்ட், 33 அல்பியன் ஒழுங்கை).

*32 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12.5 சமீ.*

*அமரர் கலாநிதி A.M.A.அஸீஸ் அவர்களை நினைவுகூர்ந்து எஸ்.எம்.கமால்தீன் அவர்கள் நினைவுதினங்களின்போது எழுதிய ஐந்து கட்டுரைகளின் தொகுப்பாக இந்நூல் மலர்ந்துள்ளது. "அந்த ஒற்றைப்பனை வீட்டார்" (தினகரன் 1975), "அறிஞர் அஸீஸும் ஜாமியா நளீமிய்யாவும்" (தினகரன் 1976), "பெண் கல்வித்துறையில் அஸீஸின் பணி" (தினகரன் 1977), "அஸீஸ் கண்ட ஜாமியா நூலகம்", "அறிஞர் A.M.A.அஸீஸ்" (இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன உரை 1988) ஆகிய கட்டுரைகள் இதில் அடங்குகின்றன. இந்நூல் கொழும்பில் 1950 எப்ரல் 30ஆம் திகதி அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட அகில இலங்கை முஸ்லிம் வாலிபர் சங்கப் பேரவையின் நாற்பதாவது ஆண்டு நிறைவினையொட்டி வெளியிடப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 19334).*

### 12930

**காசிநாதர் மான்மியம்.** கா.சிவபாலன் (பதிப்பாசிரியர்). சாவகச்சேரி: திரு.க.காசிநாதர் குடும்பம், "ஆயம்", மட்டுவில் வடக்கு, 1வது பதிப்பு, மாசி 2005. (சாவகச்சேரி: திருக்கணிதப் பதிப்பகம், 114, டச்சு வீதி).

xlvi*, 86 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x14.5 சமீ.*

*மட்டுவில், சந்திரமௌலீச வித்தியாசாலையில் பணியாற்றிய அமரர் கந்தர் காசிநாதர் அவர்களின் அமரத்துவத்தை முன்னிட்டு வெளியிடப்பட்ட நினைவுமலர். தெல்லிப்பழை துர்க்கை அம்மன்மேற் பாடப்பெற்ற பாடலும், பஞ்சபுராணங்களும் இம்மலரில் இடம்பெற்றுள்ளன. வெறும் நினைவஞ்சலி மலராக மாத்திரமன்றி, மட்டுவில் மண்ணின் பெருமைகூறும் பல படைப்புக்களும் இம்மலரில் தொகுக்கப்பெற்றுள்ளன. சிவஸ்ரீ அ.சிவசாமிக் குருக்கள் எழுதிய சந்திபுர*

தலவரலாறு, ஈழத்துப் பேரறிஞர்களான ம.க.வேற்பிள்ளை, பண்டிதர் ம.வே.குருகவி மகாலிங்கசிவம், பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை, பண்டிதர் ம.க.வே. திருஞானசம்பந்தர் ஆகியோரது வாழ்க்கை வரலாறு என்பனவும் இந்நூலில் சிறப்பிடம் பெறுகின்றன. மட்டுவில், சந்திரமௌலீச வித்தியாசாலையின் பூர்வீக வரலாற்றுக் குறிப்புகளும் இந்நூலின் இறுதியில் காணப்படுகின்றன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 36117).

### 12931

**சுவடுகளும் நினைவுகளும்: சில பதிவுகள்.** செ.இளங்குமரன் (பதிப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: பேராசிரியர் செ.இளங்குமரன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, 1வது பதிப்பு, டிசம்பர் 2012. (யாழ்ப்பாணம்: கரிகணன் தனியார் நிறுவனம், இல. 424, காங்கேசன்துறை வீதி).

111 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x15 சமீ.

அமரர் கந்தையா செல்லையா அவர்களின் 31ஆம் நாள் (08.12.2012) நினைவு வெளியீடு. இம்மலரில் அமரர் க.செல்லையாவின் கல்விப்பணிகளை ஏ. அருளன்னராஜா, ஏ.பீர் முஹம்மது, வீ.பொன்னம்பலம், எஸ்.எஸ்.மனோகரன், த.கோபாலகிருஷ்ணன், ஞா.ஸ்ரீநேசன், ஈ.பீ.ஆனந்தராசா, பீ.சீ.பக்கீர் ஜவுபர், இ.மாணிக்கராசா, கி.துரைராஜசிங்கம், அ.சிவநேசராஜா, ய.ஜெயராசா, பீ.பூபாலசிங்கம், க.யுவராஜன், தி.கணேசமூர்த்தி, சி.மௌனகுரு, க.ஆறுமுகம் ஆகியோர் நினைவுகூர்ந்துள்ளனர். அவரது குடும்பத்தினரின் அஞ்சலிப் பதிவுகளும், அவரது மரண அறிவித்தல்களும், அஞ்சலிப் பிரசுரங்களும் இம்மலரின் இரண்டாவது பிரிவில் தொகுக்கப்பட்டுள்ளன. பின்னிணைப்புகளாக அமரரின் சான்றிதழ்கள், அவரது கையெழுத்துப் பிரதி, அவரது பாடக்குறிப்புகள், வம்ச விருட்ச அட்டவணை என்பனவும் நினைவாவணங்களாகச் சேர்க்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 53413).

### 12932

**சைவ வித்தியாரத்தினம்: பேராசிரியர் இரா.வை.கனகரத்தினம் அவர்களின் நீள நினைதல் மலர்.** முருகேசு கௌரிகாந்தன், கோணலிங்கம் உதயகுமார் (மலராசிரியர்கள்). வவுனியா: கோணலிங்கம் சரஸ்வதி நிலையம், கனகராயன்குளம், 1வது பதிப்பு. 2016. (யாழ்ப்பாணம்: கணபதி பிரின்டர், 54/2, தலங்காவல் பிள்ளையார் கோவிலடி, திருநெல்வேலி).

xxxii, 212 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x18.5 சமீ.

சைவ வித்தியாரத்தினம் நீள நினைதல் காலமும் கருத்தும், ஆசிச் செய்திகள் ஆகியவற்றுடன், வீரசைவக் கோட்பாடுகளும் அதன் சமுதாய நோக்கமும், பகவத் கீதை- அதன் முக்கியத்துவம் பற்றிய ஒரு குறிப்பு, சைவசமய பாரம்பரியம், சேரமான் பெருமான் செந்தமிழ் மாலை, வழிபாடு, சங்கர வேதாந்தமும் சைவ

*சித்தாந்தமும், திருமுறை காட்டும் கோமானும் ஜப்பானியக் கமியும், மட்டக்களப்புப் பிரதேசத்தில் கந்தபுராணம் நாடக வடிவங்களைக் கொண்ட ஓர் ஆய்வு நோக்கு, பெரியபுராணமும் சமயப்பண்பாடும், பண்டைத்தமிழர் இசைக்கருவிகள், பள்ளுப் பிரபந்தத்தின் தோற்றமும் வளர்ச்சியும், தமிழில் பதிக இலக்கியத்தின் தோற்றம், சங்க இலக்கியத்தில் மெய்ப்பொருள் தேடல், இலங்கைப் பல்கலைக்கழக வளர்ச்சிக்குத் தமிழர் பங்களிப்பு, தமிழ் வரிவடிவமும் இலக்கண மரபும், யாழ்ப் பாணத் தமிழ்மொழியினதும் முஸ்லிம் தமிழ் மொழியினதும் மாற்றுப் பெயர்கள்- ஓர் ஒப்புமை ஆராய்ச்சி, தமிழ் இலக்கணப் பதிப்புக்கள்- அடைவு உருவாக்கத்தி லிருந்து வரலாறு எழுதுதல், ஔவையாரின் கல்வியொழுக்கம்-ஒரு நோக்கு, மனம் பற்றிய அறிகையும் மேலைப்புலத் தேடலும்,* Psychology and the mystery of consciousness, *பாடசாலைகளில் பெறுமானக் கல்வி, ஒன்றிணைந்து வாழ்வதற்கான கல்வி: தேவைகளும் அறைகூவல்களும், கற்றல்-கற்பித்தல் செயன்முறை மூலம் ஆக்கத்திறன் விருத்தி, வன்னிமையின் நாட்டாரியல் ஆய்வில் பேராசிரியர் இரா. வை.கனகரத்தினம், தமிழில் மதனநூல் பதிப்பு, நம் உரைநடையில் இடம்பெற வேண்டியவர்கள் ந.கந்தசாமி எனும் புலமையாளன், ஈழத்துக் கவிதைகளில் தொன்மம் சொற்பொருள் விளக்கம், இங்கிலாந்தின் விவசாயப் புரட்சியும் நில அடைப்பு இயக்கங்களும், கட்டற்ற சர்வதேச வர்த்தகமும் றிக்காடோவின் ஒப்பீட்டு நன்மைத் தத்துவமும்: ஒரு கோட்பாட்டுப் பகுப்பாய்வு, நன்றி மறப்பது நன்றன்று, பேராசிரியர் இரா.வை. கனகரத்தினம் அவர்களின் வாழ்க்கைக் குறிப்புக்கள் (சுருக்கம்) ஆகிய ஆக்கங்கள் இம்மலரை அணிசெய்கின்றன.*

## 12933

**தணிகை-பணிநயப்பு மலர்: கல்விப் பணியில் நான்கு தசாப்தங்கள்.** *கந்தையா ஸ்ரீகணேசன், சிவகுருநாதன் கேசவன் (பதிப்பாசிரியர்கள்). யாழ்ப்பாணம்: கலாநிதி ச.நா.தணிகாசலம்பிள்ளை அவர்களின் பணிநயப்புக் குழு, 1வது பதிப்பு, செப்டெம்பர், 2009.(அச்சக விபரம் தரப்படவில்லை).*

*(2), 237 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x18.5 சமீ.*

*வாழ்த்தியல் என்ற முதலாவது பிரிவில் கல்வியியல், சமூகவியல், சமயத்துறை பிரமுகர்களின் வாழ்த்துச் செய்திகள் இடம்பெற்றுள்ளன. பதிவியல் என்ற இரண்டாம் பிரிவில் கலாநிதி ச.நா. தணிகாசலம்பிள்ளை அவர்களின் வாழ்க்கைப் பாதையில் ....., குடும்பம் (தணிகை) ஒரு பல்கலைக்கழகம், கலாநிதி நா.த.அவர்கள் பிரதம விருத்தினராக கலந்து கொண்ட நிகழ்வுகள், கலாநிதி நா. த. அவர்கள் கலந்து கொண்ட நிகழ்வுகள் போன்ற அவர் சார்ந்த தகவல்கள் ஆவணப்படுத்தப் பட்டுள்ளன. பொதுவியல் என்ற மூன்றாவது பிரிவில் பல்வேறு ஆய்வுக்கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. தமிழ் (மொழி) இலக்கியப் பேறு: ஓர் அறிமுகக் குறிப்பு (கா.சிவத்தம்பி), பொருளாதார அபிவிருத்தியும் அரசும் சந்தையமைப்பும்- இலங்கை அனுபவங்கள் காட்டும் நிலைப்பாடுகள் (ந. பாலகிருஷ்ணன்), கல்வி முகாமைத்துவ வினைப்பாடுகள் (சபா.ஜெயராசா), கைத்தொழில் சமூகங்களின் கல்வி வளர்ச்சி (சோ.சந்திரசேகரன்), மனிதவள முகாமையாளர் என்ற வகையில் பாடசாலை*

அதிபர் (க.சுவர்ணராஜா), மலையகத்திற்கென்றொரு பல்கலைக்கழகம் சில சிந்தனைகள் (லெனின் மதிவானம்), பிற்பட்ட சோழர் காலத் தமிழகத்தில் நிலமானியம் அதிகாரம் அரண்மனைகள் பேரரசு முகாமை சாசானச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு (செல்லையா கிருஸ்ணராசா), கவிதையென்னும் கலை (சோ.பத்மநாதன்), ஈழத்து இடப்பெயர்வு இலக்கியம் சில அவதானிப்புக்கள் (செ.யோகராசா), வள்ளுவர் வாய்மொழி மாண்பு (மனோன்மணி சண்முகதாஸ்), ஈழத்து நாடக அரங்க மரபில் நா.சுந்தரலிங்கம் (கந்தையா ஸ்ரீ கந்தவேள்), நாகரும் நாகபூமியும் வட இலங்கை பற்றி உடுத்துறையில் கிடைத்த நாணயம் தரும் ஒரு புதிய தகவல் (ப.புஷ்பரட்ணம்), பாடசாலை மாணவிகளின் சீருடை (அகளங்கன்), அரங்கக் கட்டடக்கலை பற்றிய அறிமுகம் (க.திலகநாதன்), சுவாமி விபுலாநந்தரின் நாடக நோக்கு (க.ரகுநாதன்), Challenges in Tertiary Education: Social Science (A.Sanmugadas), My Theatre involvement in English Language Teaching: Improvisations in an impoverished Background (Kandiah Shriganeshan), Appropriate English as a second language class room activity sessions (M.Saravanabava Iyer), English Tuition in Jaffna (Vairamuthu Suntharesan) ஆகிய ஆக்கங்கள் இப்பிரிவில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 47472. நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தின் சேர்க்கை இலக்கம் 009113).

### 12934

**நீர்வேலி ஸ்ரீலஸ்ரீ சிவ-சங்கரபண்டிதர் சரித்தரம்**.ச.குமாரசுவாமிக் குருக்கள். யாழ்ப்பாணம்: ஸ்ரீலஸ்ரீ சிவ-சங்கரபண்டிதர் ஞாபகார்த்த சபை, 1வது பதிப்பு, ஜய வருடம் சித்திரை 1954. (யாழ்ப்பாணம் ஸ்ரீகாந்தா அச்சகம்).

xvi, 42 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18.5x13 சமீ.

ஸ்ரீலஸ்ரீ சிவ-சங்கரபண்டிதர் ஞாபகார்த்த சபை 14.2.1954 அன்று நீர்வேலி ஸ்ரீ சுப்பிரமணிய சனசமூக நிலைய மண்டபத்தில் கூடிய பொதுக்கூட்டமொன்றில் தலைவர் சிவஸ்ரீ க.குமாரசுவாமிக் குருக்களின் தலைமையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. இச்சபையின் முதலாவது வெளியீடாக சிவசங்கர பண்டிதரின் வாழ்க்கை வரலாற்று நூல் வெளியிடப்பட்டுள்ளது. தென்மொழிகளில் பாண்டித்தியம் பெற்றதோடு, ஆங்கில மொழியறிவும் பெற்றிருந்த ஸ்ரீலஸ்ரீ சிவசங்கர பண்டிதர் அவர்கள், தனது இல்லத்திலேயே மாணவர்களை அழைத்து, சமஸ்கிருதம், தமிழ் இலக்கணம், இலக்கியம் என்பனவற்றைப் போதித்ததோடு, புராண படனங்களையும் கற்பித்தார். மாணவர்களுக்குப் போதிப்பதும், கிரந்தங் களைப் பரிசோதித்து எழுதுவதும் இவருக்கு இடையறா வேலையாகவிருந்தது. இவரது வீடு திண்ணைப் பள்ளிக்கூடமென அழைக்கலாயிற்று. வடமொழியிலும் தமிழிலும் பாண்டித்தியம் பெற்ற சிவசங்கர பண்டிதரின் நூல்களாக சம்ஸ்கிருத சித்தாந்த சாராவலி லகுடீகை, சம்ஸ்கிருத சிவஞானபோதத் தமிழுரை, சம்ஸ்கிருத சட்சுலோகித் தமிழுரை, தமிழ்ச் சிவபூசை யந்தாதி விருத்தியுரை, தமிழ் மிலேச்சமத விகற்பம், தமிழ் கிறிஸ்து மத கண்டனம், தமிழ் சைவப் பிரகாசனம், தமிழ் சிராத்த விதி, சம்ஸ்கிருத அக நிர்ணயத் தமிழுரை, சம்ஸ்கிருத சத்த சங்கிரகம்-1ம்

பாகம், சம்ஸ்கிருத அகபஞ்ச சட்டித் தமிழுரை, சம்ஸ்கிருத பாலபாடம் (2வது நூல்), சம்ஸ்கிருத தாது மாலை ஆகியவை குறிப்பிடப்படுகின்றன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 18433).

### 12935

**பத்மம் (பேராசிரியர் எஸ்.பத்மநாதன் சேவை நயப்பு மலர்).** இரா.வை.கனகரத்தினம். எஸ்.ராஜகோபால், ப.புஷ்பரட்ணம், வி.மகேஸ்வரன் (பதிப்பாசிரியர்கள்). யாழ்ப்பாணம்: பவானி பதிப்பகம், புத்தூர் கிழக்கு, புத்தூர், 1வது பதிப்பு, 2004. (சென்னை 600035: தமிழ் நிலம், 33, வேங்கடநாராயணன் சாலை, நந்தனம்).

xxxx, 335 பக்கம், விலை: ரூபா 500., அளவு: 23x18 சமீ.

பேராசிரியர் சி.பத்மநாதனின் 65ஆவது அகவைப் பூர்த்தி நினைவாக வெளியிடப் பட்ட மலர். அவரை வாழ்த்தி வழங்கப்பட்ட உரைகளுடன், தென்-தென்கிழக்காசிய நாடுகளில் கணபதி வழிபாட்டு மரபும் தொன்மையும் (செ.கிருஷ்ணராஜா), சிவன்கோயில் நம்பிக்கைப் பொறுப்பாளர் சண்டேசுவரர் (வ.மகேஸ்வரன்), ஆழ்வார் பாசுரங்களில் திருமால் அவதாரங்கள் (மா.வேதநாதன்), யாழ்ப்பாணத்து சைவசித்தாந்த வளர்ச்சியில் ஞானப்பிரகாசரின் பங்களிப்பு (கலைவாணி இராமநாதன்), இலங்கையில் சமயக் கல்வியும் மனச்சான்று வாசகமும் (ஏ.சத்தியசீலன்), கெடுதி பற்றிய பிரச்சினை சமய மெய்யியல் நோக்கு (க.சிவானந்த மூர்த்தி), சங்கச் சமுதாய மாற்றமும் முருக வழிபாடும் (பெ.மாதையன்), பண்டைத் தமிழகச் சேரிகள் (சு.இராசகோபால்), வன்னிப்பிரதேச கண்ணகி வழிபாட்டில் கோவலன் கூத்து-இலக்கிய சமூக மரபுநிலை நின்ற ஆய்வுகள் (மஇரகுநாதன்), சங்கு-பெயர்களும் சில தொன்மங்களும் (ந.அதியமான்), நச்சினார்க்கினியர் (இ.சுந்தரமூர்த்தி), நாவலரின் பதிப்பு நெறி (இரா.வை.கனகரத்தினம்), தமிழில் பிறமொழிச் சொற்கள்: ஒரு வரலாற்று நோக்கு (சுபதினி ரமேஷ்), இலங்கைத் தமிழர் நிலைமை குறித்த தமிழகக் கவிஞர்களது கருத்துக்கள் (க.அருணாசலம்), மானவச் சக்கரவர்த்திகள் (வெ.வேதாசலம்), குலோத்துங்கன் பிள்ளைத் தமிழில் சோழர்களின் தென்கிழக்காசிய வெற்றிகள் (இ.ஸ்ரீஹரி), இலங்கை வணிகக்குழுக் கல்வெட்டுக்கள்: ஒரு மீள்பார்வை (ஏ.சுப்பராயலு), ஈழத்தமிழர் கட்டடக் கலையின் தோற்றமும் வளர்ச்சியும்: ஒரு மீள்வாசிப்பு (ப.புஷ்பரட்ணம்), செவிவழிச் செய்தியும் வீரராகவப் பெருமாள் கோயிலும் (சொ.சாந்தலிங்கம்), திருவாஞ்சியம்: திருவாஞ்சி நாதர் திருக்கோயில் (பொ.இராசேந்திரன், திருமதி எஸ். பாண்டியம்மாள்), இலங்கையில் நிலவிய இந்து நடன மரபுகள் (கி.பி.1300-1800), பாலசந்தரின் திரைப்படங்கள்: ஒர் பார்வை (துரை மனோகரன்), யாழ்ப்பாண இளைஞர் காங்கிரசும் ஹன்டி பேரின்பநாயகமும்: ஒரு மீள்மதிப்பீடு (ச. சத்தியசீலன்), இருபதாம் நூற்றாண்டின் ஐரோப்பிய ஆய்வறிவுச் சிந்தனை இயக்கங்கள் (சி.மௌனகுரு) ஆகிய 24 தமிழ் ஆய்வுக் கட்டுரைகளும், 11 ஆங்கில வரலாற்றுக் கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 37884).

12936

**மணிமகுடம்: மா.சின்னத்தம்பி அவர்களின் மணிவிழா மலர் 2008**. வே.கருணாகரன், என்.விஜயசுந்தரம் (மலராசிரியர்கள்). யாழ்ப்பாணம்: மணிவிழாக் குழுவினர், 1வது பதிப்பு, மார்ச் 2008. (யாழ்ப்பாணம்: ஆந்திரா டிஜிட்டல் பிரின்டர்ஸ்).

68 பக்கம், அட்டவணைகள், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x18 சமீ.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வியியல் துறைப் பேராசிரியர் மா.சின்னத்தம்பி அவர்களின் மணிவிழாவை முன்னிட்டு 20.03.2008 அன்று கொக்குவில் இந்துக் கல்லூரியில் ஒழுங்குசெய்யப்பட்ட மணிவிழாவின்போது வெளியிடப்பட்ட மலர் இது. மணிவிழாக் குழுவின் தலைவராக வேலணை மத்திய கல்லூரி அதிபர் பொ.அருணகிரிநாதர் அவர்களும், செயலாளராக கொக்குவில் இந்துக் கல்லூரி ஆசிரியர் என்.விஜயசுந்தரம் அவர்களும் பணியாற்றியுள்ளனர். வாழ்த்துரைகளுடன் பலாலி ஆசிரியர் கலாசாலையின் ஓய்வுபெற்ற அதிபர் திரு. சோ.பத்மநாதன் எழுதிய "சின்னத்தம்பி-சில தரிசனங்கள்" என்ற கட்டுரையும், "வழிகாட்டியோன் வாழ்க நீடூழி", "மாணவர் மனதில் தடம்பதித்த பேராசான் எம்.எஸ்." ஆகிய இரண்டு கவிதைகளும், "மணிவிழா நாயகனின் வாழ்வும் வளர்ச்சியும்" என்ற தலைப்பில் அவரது வாழ்க்கைப் பதிவுகளும், கல்விப் பேராசானின் கட்டுரைகள் என்ற பகுதியில் "கிராமிய சமூகங்களும் பாடசாலைகளும்: ஒன்றிணைந்த அணுகுமுறை", "வறியவரும்-பாடசாலையும்: இடைவெளி அதிகரித்துச் செல் கின்றதா?" ஆகிய இரு கட்டுரைகளும், இறுதியாக- மணிவிழா நிகழ்ச்சி நிரலும் இம்மலரில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 45071).

12937

**யோகநாதம் மணிவிழா மலர்.** முருகேசு கௌரிகாந்தன் (மலராசிரியர்). யாழ்ப்பாணம்: மணிவிழா அமைப்பு, தேசிய கல்வியியற் கல்லூரி, 1வது பதிப்பு, மே 2013. (யாழ்ப்பாணம்: கரிகணன் (தனியார்) நிறுவனம், 681, காங்கேசன்துறை வீதி).

237 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x19 சமீ.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதியாகத் தலைமைப் பொறுப்பேற்றிருந்த சங்கரப்பிள்ளை கதிரவேலு யோகநாதன் அவர்கள் சேவை ஓய்வு பெறுவதையொட்டி 18.5.2013அன்று மணிவிழா பாராட்டு நிகழ்வொன்று கல்லூரியில் ஒழுங்குசெய்யப்பட்டிருந்தது. இத்தருணம் வெளியிடப்பட்ட சிறப்பு மலர் இதுவாகும். அருளாசிகளும், வாழ்த்துச் செய்திகளும், திரு. S.K.யோகநாதனின் வாழ்வும் பணியும் பற்றிய செய்திகளும், தமிழ், ஆங்கில மூலமான கட்டுரைகளும், கவிதைகளும், பீடாதிபதி அவர்கள் தொடர்பாக அவரிடம் பயின்ற முகிழ்நிலை ஆசிரியர்கள் கூறிய இரத்தினச் சுருக்கமான கருத்துக்கள் மற்றும் இவர் தொடர்பான நிழற்படங்கள் என்பன இம்மலரை அலங்கரித்துள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 54649).

## 12938

**வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் உயர்திரு இரா.சுந்தரலிங்கம் அவர்களின் மணிவிழா மலர்-1993.** சபா.ஜெயராசா, செ.சோதிப் பெருமாள், பொ.கனகசபாபதி. யாழ்ப்பாணம்: செ.சோதிப் பெருமாள், செயலாளர், மணிவிழாக் குழு, 1வது பதிப்பு, 1993. (கொழும்பு 13: M.B.Printers, 14, சிறில் சி. பெரேரா மாவத்தை).

(10), 70 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 23.5x18 சமீ.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர், தென் இந்திய திருச்சபை யாழ்ப்பாண ஆதீன முதல்வர், யாழ் கத்தோலிக்க மறைமாவட்ட குருமுதல்வர், திரு கா. மாணிக்கவாசகர், திரு அ.துரைராசா, துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோரின் ஆசியுரைகளுடன் தொடங்கும் இம்மலரில் தளரில் பெரும் செல்வக் கல்வியாளர் (நா.வி.மு.நவரத்தினம்), சுடர்மணிச் சுந்தரர் வாழ்க (சு.செல்லத்துரை) ஆகிய கவிதைகளுடன் நவீன கல்விக் காட்டுருக்களும் திரு. இ.சுந்தரலிங்கத்தின் கல்விப் பணிகளும் (சபா.ஜெயராசா), திருமுருகன் திருமணம் (சி.கணபதிப்பிள்ளை), இலங்கையில் கல்வி-சில அவதானிப்புக்கள் (பொ. பாலசுந்தரம்பிள்ளை), யாழ்ப்பாணத்தில் சைவக் கல்வியின் மறுமலர்ச்சியின் அடிப்படைக் கருமவீரர்கள் (வ.ஆறுமுகம்), நாவலரின் மானுட விழுமியங்கள் (கு.சோமசுந்தரம்), விஞ்ஞானக் கல்வி விருத்திக்கு உதவும் பள்ளிப்புறச் செயல்கள் (க.சின்னத்தம்பி), ஆரம்பமட்டத்து மாணவரும் விஞ்ஞானம் கற்பித்தலும் (செல்வி சு.அருளானந்தம்), சமூக முன்னேற்றத்தில் பரீட்சைகளின் பங்கு (மா.சின்னத்தம்பி), நிகழ்த்தத் தக்கவையும் ஐந்தொகைத் திகதிக்குப் பின்னரான நிகழ்வுகளும் இலங்கை கணக்கியல் நியமம் - 12 (கந்தையா தேவராஜா), தமிழிசை (பொன். தெய்வேந்திரன்), இணுவைப் பெரும்பதி (சோ.பரமசாமி) ஆகிய கட்டுரைகளும் முக்கிய இடம்பெறுகின்றன. நூலின் இறுதியில் மணிவிழா நாயகர் வரலாறு, மணிவிழா அமைப்புகள், மணிவிழா மலர் மலரவைத்த உள்ளங்கள் ஆகிய பதிவுகள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 13520. நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தின் சேர்க்கை இலக்கம் 009336).

## 12939

**ஸ்ரீஸ்கந்தநாதம்: மணிவிழா மலர் 16.10.2013.** மலர்க் குழு. யாழ்ப்பாணம்: ஞா.இரத்தினசிங்கம், மணிவிழாக் குழுவின் சார்பாக, முகாமையாளர், ஆசிரிய நிலையம், யாழ்ப்பாணக் கல்வி வலயம், 1வது பதிப்பு, ஒக்டோபர் 2013. (யாழ்ப்பாணம்: ஆந்திரா டிஜிட்டல் பிரின்டர்ஸ்).

v, 155 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x17.5 சமீ.

மணிவிழாக்காணும் கல்வியியலாளர் ஆறுமுகம் ஸ்ரீஸ்கந்தமூர்த்தி அவர்களின் சேவைநலன் பாராட்டி ஆசிச்செய்தி, வாழ்த்துரைகள் ஆகியவற்றுடன் பல்வேறு அறிஞர்களினால் எழுதப்பெற்ற 20 கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன. கட்டுரை கள், பணியும் பயனும், எனது பளை மகாவித்தியாலய வாழ்வுக்காலம்,

*ஆசிரியத்துவம், பாடசாலைகளில் விளைதிறன்மிக்க கூட்ட முகாமைத்துவத்தை நடைமுறைப்படுத்துதல், கல்வியின் பண்புத் தரவிருத்தி ஒரு பன்முக நோக்கு, பாடசாலை மட்டத்தில் தலைமைத்துவத் திறன்களை வளர்த்தல், யாழ்ப்பாணத் தமிழாசிரியர் கல்விப் பாரம்பரியங்களும் மரபுகளும், கணித பாட அபிவிருத்தியில் அதிபரின் பங்கு, யாழ். பாடசாலை மட்டத்தில் தமிழ்மொழிப் பாடபோதனை-அவதானிப்பு, கல்வி தொழில் வாய்ப்புகளை விரிவுபடுத்தும் புதிய தொழில்நுட்பத்துறை, வாசிப்பீர் வளம்பெறுவீர், உளவியலில் புதிய வளர்ச்சி-சூழலியல் உளவியல், இறையுணர்வின் விஞ்ஞான அடிப்படை, மருத்துவ விஞ்ஞானமும் பொறியியலும், க.பொ.த. உயர்தரத்தில் தொழில்நுட்பவியல் பாடவிதானம்: சாத்தியப்பாடுகளும் சவால்களும், உயர்தர வகுப்புகளுக்கான ஐந்தாவது துறையாக தொழில்நுட்பவியல் கற்கைத்துறை, சாட்சிகளின் முறைமைகளூடாக சிறுவர் உலகை வளம்படுத்துவோம், அபிவிருத்தியும் கல்விச் செலவும்- தொடர்புகளும் அறைகூவல்களும், பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான பயனுள்ள குறிப்புகள், வகுப்பறை முகாமைத்துவத்தில் ஆசிரியர் என்னும் பங்குதாரர் ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 54545).*

**மேலும் பார்க்க: 12009,12286,12308,12338,12831,12917,12957.**

## 923.8 வர்த்தகர்கள்

### 12940

**வாழ்க்கையின் சோதனை.** *ஆர்.செல்லையா (மூலம்), இ.நாகராஜன் (பதிப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: சன்லைற் டையேர்ஸ் அன் றைக்கிளீனர்ஸ், பெரியகடை, 1வது பதிப்பு, மே 1970. (யாழ்ப்பாணம்: அர்ச. பிலோமினா அச்சகம்).*

*(8), 216 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12 சமீ.*

*யாழ்நகர் பிரதான பேருந்து நிலையத்துக்கு எதிராக* Sunlight Laundry *என்ற வர்த்தக தாபனத்தை நிறுவி இயக்கிய அமரர் ஆர்.செல்லையா அவர்களின் வாழ்க்கைச் சரித நூல். தனிப்பட்ட வர்த்தக நிறுவனமொன்று யாழ்மண்ணில் உருவாகி வளர்ந்த வரலாறு இந்நூலில் உரிமையாளரின் வாழ்க்கை வரலாற்றுடன் இணைந்த வகையில் அவரது வாய்மொழிமூலக் கதையைக் கேட்டு இ.நாகராஜன் அவர்களால் எழுத்தில் வடிக்கப்பட்டு, ஒரு சுவைமிகு நாவலைப்போன்று சொல்லப்பட்டுள்ளது. திரு. செல்லையா அவர்கள் தன்னுடைய சுயதேவையை, இலட்சியங்களைப் பூர்த்திசெய்வதற்கு நேர்மையென்ற பாதையில் எவ்வளவு தூரத்திற்குச் சென்றுள்ளார் என்றும், எத்தகைய சோதனைகளுக்குத் தன்னை உள்ளாக்கிக்கொண்டார் என்றும் இச்சுயசரிதை சொல்கின்றது. நூல் வெளிவந்த காலமாகிய 1970களுக்கு முந்தைய 50 ஆண்டுக்கால சமூக வரலாற்றை இச்சுயசரிதையின் மூலம் அறியும் எமக்கு அக்காலகட்டத்து யாழ்ப்பாணத்தின் சாதிவெறி பற்றியும் அறிந்துகொள்ள முடிகின்றது. யாழ் மண்ணில் தமிழில் வெளியான முதலாவது சுயசரித நூல் இதுவென்று கருதப்படுகின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை*

யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 28876. நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தின் சேர்க்கை இலக்கம் 004526).

## 924 மொழியியலாளர்கள்

### 12941

**சுவாமி ஞானப்பிரகாசருக்கு நினைவு முத்திரை.** தமிழ் மொழி அலுவல்கள் திணைக்களம். கொழும்பு 4: தமிழ்மொழி அலுவல்கள் திணைக்களம், பிரதேச அபிவிருத்தி அமைச்சு, 244, காலி வீதி, 1வது பதிப்பு,மே 1981. (கொழும்பு: அரசாங்க அச்சகம்).

36 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x13 சமீ.

இலங்கை அரசாங்கத்தால் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் அடிகளாருக்கு 22.5.1981 அன்று நினைவு முத்திரை வெளியிடப்பட்டபோது வெளியிடப்பட்ட சிறப்பிதழ். சுவாமி ஞானப்பிரகாசருக்கு மதிப்பளிக்கும் முகமாக இலங்கை அரசு அவரது படத்துடன் கூடிய அஞ்சல் முத்திரை ஒன்றையும், சிறப்பு முதல் நாள் உறை ஒன்றையும் 1981 மே 22 இல் வெளியிட்டது. வழமையாக நினைவு முத்திரைகள் தலைநகர் கொழும்பிலேயே வெளியிடப்படும். ஆனால் இந்த முத்திரை ஞானப்பிரகாசரின் ஊரான யாழ்ப்பாணத்தில் வெளியிடப்பட்டது. வீரசிங்கம் மண்டபத்தில் சிறப்பாக நிறுவப்பட்ட அஞ்சல் அலுவலகத்தில் யாழ் ஆயர் அதி வணக்கத்துக்குரிய எஸ். தியோகுப்பிள்ளை ஆண்டகை முன்னிலையில் யாழ்ப்பாணம் பிரதம அஞ்சல் அதிபர் தி. தியாகராசாவிடமிருந்து நினைவு முத்திரையுடன் கூடிய முதல் நாள் தபால் உறையை மாவட்ட அமைச்சர் யு. பி. விஜயக்கோன் பெற்றுக் கொண்டார். பன்மொழிப் புலவர் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் (ஆகஸ்ட் 30, 1875 - ஜனவரி 22, 1947) தமிழின் தொன்மையை உலகிற்கு எடுத்தியம்பியவர்களுள் ஒருவர். இலத்தின், கிரேக்கம் முதலாய பதினெண் மொழிகளில் எழுதவும், பேசவும் வல்லவராய் இருந்தார். பல தமிழ் நூல்களின் ஆசிரியர். சொற்பிறப்பு ஒப்பியல் தமிழ் அகராதி என்ற பெயரில் இவர் வெளியிட்ட தமிழ் ஒப்பியல் அகராதி சிறந்த நூலாகும். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 2747).

### 12942

**தவத்திரு தனிநாயகம் அடிகளார் (மாட்சி நயப்புமலர்).** தாபி.சுப்பிரமணியம் (மலர்க் குழுவின் சார்பில்). திருக்கோணமலை: தவத்திரு தனிநாயகம் அடிகளார் நினைவு மன்றக் குழு, 1வது பதிப்பு, செப்டெம்பர் 1993. (திருக்கோணமலை: பிறைட்ஸ் அச்சகம்).

(38) பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x18 சமீ.

ஜோஸப் கிங்ஸிலி சுவாம்பிள்ளை, சொ.கணேசநாதன், எம்.ஏ.சி.முகைதீன், க.தியாகராஜா எஸ்.எதிர்மன்னசிங்கம், நா.புவனேந்திரன் ஆகியோரின் வாழ்த்துரை/ ஆசியுரைகளுடன் வெளியிடப்பெற்றுள்ள இம்மாட்சி நயப்பு மலரில் ஓரினத்தவர், தமிழர் பண்பாட்டின் கோட்பாடுகள் (முதுமுனைவர் தவத்திரு தனிநாயகம்

அடிகளார்), தனிநாயகம் அடிகளாரின் வாழ்க்கை விருது வாக்கு, பன்மொழிப் புலவர் தனிநாயக அடிகள், தனிநாயகம் அடிகளார் நடாத்திய தமிழாராய்ச்சி மாநாடுகள், தனிநாயக அடிகளாரின் தனிப்பண்பாடு, அனைத்துலகத் தமிழியலாய்வின் தந்தை: தனிநாயகம் தமிழாராய்ச்சி மாநாடுகள் எதற்காக..., தமிழ் ஆராய்ச்சியும் தனிநாயக ஆய்வகமும் - வே.அந்தனிஜான் அழகரசன் அடிகள், தனிநாயகம் ஒரு தனிநாயகம், தனிநாயக அடிகளார் பற்றி இவர், தவத்திரு தனிநாயகம் அடிகளார் நினைவு மன்றக் குழு, திருமலையில் நடைபெற்ற முன்னைய நிகழ்வு, தமிழ்த்திரு தனிநாயகம் அடிகளார் நினைவு தின விழா, நன்றி மறப்பது நன்றன்று ஆகிய தலைப்புகளின்கீழ் தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளார் பற்றிப் பேசும் படைப்பாக்கங்கள் இம்மலரில் இடம்பெற்றுள்ளன. திருக்கோணமலையில் அமைக்கப்பட்ட நினைவு மன்றக் குழுவின் தலைவராக புனித மரியாள் பேராலயத்தின் பங்குத்தந்தை அருட்திரு T.பயஸ் பத்மராஜா அடிகளாரும், செயலாளராக புனிதவளனார் வித்தியாலய அதிபர் திரு தா.பி. சுப்பிரமணியம் அவர்களும் பங்காற்றினர். (இந்நூல் நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 004049).

## 12943

**நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர்: வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம்.** மு.வி.ஆசீர்வாதம். யாழ்ப்பாணம்: நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் நூற்றாண்டு விழா ஞாபக ஏடு, மு.வி.ஆசீர்வாதம், 49, கண்டி வீதி, 1வது பதிப்பு, 1975. (யாழ்ப்பாணம்: ஆசீர்வாதம் அச்சகம்).

12 பக்கம், விலை: 75 சதம், அளவு: 21.5x14 சமீ.

பன்மொழிப் புலவர் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் (30.08.1875 - 22.01.1947) தமிழின் தொன்மையை உலகிற்கு எடுத்தியம்பிய ஈழத்தறிஞர். இலத்தீன், கிரேக்கம் போன்ற 18 மொழிகளில் எழுதவும், பேசவும் வல்லவராய் இருந்தார். பல தமிழ் நூல்களின் ஆசிரியர். சொற்பிறப்பு ஒப்பியல் தமிழ் அகராதி என்ற பெயரில் இவர் வெளியிட்ட தமிழ் ஒப்பியல் அகராதி சிறந்த நூலாகும். இவர் யாழ்ப்பாணத்தை ஆட்சி புரிந்த மன்னர்களுள் ஒருவரான ஆறாவது பரராசசேகரனின் வழித் தோன்றலான இராசலிங்கம் சாமிநாதப் பிள்ளை, தங்கமுத்து இணையரின் மகனாகப் பிறந்தார். இவரது இயற்பெயர் வைத்தியலிங்கம் என்பதாகும். அவருக்கு ஐந்து வயதாக இருந்த போது தந்தை காலமானார். இளம் விதவையான தங்கமுத்து அம்மையார் உறவினர்களின் விருப்பத்துடன் கத்தோலிக்கரான தம்பிமுத்துப் பிள்ளையை மறுமணம் புரிந்தார். அவருக்கு ஞானப்பிரகாசர் என்ற பெயர் சூட்டப்பட்டது. தாயும் மகனும் ஞானஸ்நான திருவருட்சாதனத்தைப் பெற்று கத்தோலிக்க மதத்தைத் தழுவினர். அச்சுவேலியில் அமைந்திருந்த அமெரிக்க மிஷன் ஆங்கிலப் பாடசாலை ஒன்றில் தொடக்கக் கல்வியைக் கற்ற ஞானப்பிரகாசர், யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியில் கல்வி பயின்றார். 1893 இல் தொடர்வண்டித் துறையில் எழுதுவினைஞர் தேர்வில் முதலாவதாகத் தேறி கடிகமுகவவிலும் பின்னர் கொழும்பிலும் மூன்று ஆண்டுகள் பணியாற்றினார். பின்னர் 1895 ஆம் ஆண்டு இறைப்பணிக்கென தம்மை அர்ப்பணித்து யாழ். குரு மடத்தில்

சேர்ந்துகொண்டார். 01.12.1901 அன்று குருவானவராக திருநிலைப்படுத்தப்பட்டார். சுவாமி ஞானப்பிரகாசருக்கு மதிப்பளிக்கும் வகையில் இலங்கை அரசு அவரது படத்துடன் கூடிய அஞ்சல் முத்திரை ஒன்றும், சிறப்பு முதல் நாள் உறை ஒன்றையும் 1981 மே 22 இல் வெளியிட்டது. இச்சிறுநூல் சுவாமி ஞானப்பிரகாசரின் வாழ்க்கை வரலாற்றை மிகச்சுருக்கமாக பிறப்பு, வளர்ப்பு, கல்வி, தொழில், துறவியாக, குருப்பட்டம், சமயத் தொண்டகள், பன்மொழிக் கல்வி, நூல் ஆக்கம், மறைவு ஆகிய குறுந் தலைப்புகளில் எழுதப்பட்டுள்ளது. இறுதியாக ஞானப்பிரகாசர் மீது பாடப்பெற்ற அந்தாதிப் பதிகமும் இடம்பெற்றுள்ளது. இவ்வந்தாதி முன்னர் 1960 ஜனவரி மாதத்தில் வெளிவந்த விவேகி சஞ்சிகையின் ஆண்டு மலரிலிருந்து மீள்பிரசுரம் செய்யப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 14141).

### 12944

**வண. கலாநிதி ஹயசிந்து சிங்கராயர் தாவீதடிகளார்.** ஸ்ரீலங்கா புத்தகசாலை. யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா புத்தகசாலை, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, 1971. (யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா அச்சகம், காங்கேசன்துறை வீதி).

33 பக்கம், விலை: ரூபா 1.00, அளவு: 20.5x13.5 சமீ.

சொற்பிறப்பு ஒப்பியல் தமிழ்-சிங்கள அகராதியை இயற்றியவரும் இம்மொழிகளின் பொதுத்தாய் ஆகிய தொல் திராவிடம் அன்றேல் சீரிய சிறந்த தாமீழ மொழியை விளக்குபவருமான வண கலாநிதி ஹயசிந்து சிங்கராயர் தாவீதடிகள் பற்றிய இந்நூலானது இவரைக் குறித்து 1971ஆம் ஆண்டில் பத்திரிகைகளில் வெளியிடப் பட்ட பத்துக் கட்டுரைகளின் தொகுப்பாகும். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 2634. நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தின் சேர்க்கை இலக்கம் 004797).

## 927 கலைஞர்கள்

### 12945

**கலாயோகி ஆனந்த குமாரசுவாமி.** ச.அம்பிகைபாகன். யாழ்ப்பாணம்: வரதர் வெளியீடு, 226, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, ஜுலை 1978. (யாழ்ப்பாணம்: ஆனந்தா அச்சகம்).

x, 94 பக்கம், புகைப்படத் தகடு, விலை: ரூபா 20.00, அளவு: 18x12.5 சமீ.

இந்நூல் யாழ்ப்பாணம் வைத்தீஸ்வர கல்லூரி முன்னாள் அதிபரும் தமிழறிஞருமான ச.அம்பிகைபாகன் அவர்களால் எழுதப்பட்டது. ஆனந்த குமாரசுவாமி (22.08.1877-09.09.1947) அவர்களின் வாழ்வும் பணிகளும் பற்றிய தகவல்களை இந்நூல் தருகின்றது. குடும்ப விளக்கை ஏற்றிவைத்தவர், தந்தையும் தாயும், தாயின் அரவணைப்பில் கல்வி, இலங்கையில் கனிப்பொருள் ஆராய்ச்சியும் கலையில் ஆர்வம் அரும்புதலும், இலங்கை சமூக சீர்திருத்தச் சபை, யாழ்ப்பாணத்தில் ஆனந்தகுமாரசுவாமி, இந்தியாவும் இலங்கையும், இந்திய விடுதலை இயக்கமும் சுதேசியமும், இந்தியக் கலையின் நோக்கங்களும் செயல்முறைகளும்,

இங்கிலாந்திலும் இந்தியாவிலும் நூல்கள் வெளியிடுதல்: கலைக் காட்சிகள் நடத்தல், அமெரிக்காவில் கலைப்பணியும் தத்துவ ஆராய்ச்சியும், வித்தகர் புகழுடம்பு எய்துதல் ஆகிய தலைப்புகளில் அமைந்த 12 இயல்களில் இந்நூல் விரிவாக எழுதப்பட்டுள்ளது. இவை முன்னர் ஈழநாடு வாரமலரில் தொடராகப் பிரசுரிக்கப்பட்டன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 21567. நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தின் சேர்க்கை இலக்கம் 007235).

### 12946

**சோமாஸ்கந்தம் நினைவுமலர் 2003.10.26.** மலர்க் குழு. உடப்பு: நவ இளங்கதிர் நாடக மன்றம், 1வது பதிப்பு, ஒக்டோபர் 2003. (அச்சக விபரம் தரப்படவில்லை).

60 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22.5x15 சமீ.

தனது வில்லிசை வல்லமையால் இலங்கையில் மாத்திரமன்றி, தமிழகம், மலேசியா, சிங்கப்பூர் ஆகிய அயல்தேசங்களிலும் ரசிகர்களைப் பெற்றிருந்தவர் பெரி. சோமாஸ்கந்தர் ஆசிரியர் அவர்களாவார். சமயத் தொண்டனாக, கவிஞனாக, வில்லிசைக் கலைஞனாக, மேடைப் பேச்சாளனாக, ஆசானாக, பாடசாலை அதிபராக, பாடகராக, நாடக நடிகராக, கதாசிரியராக, எனப் பல்பரிமாணங்களில் மக்களின் இதயத்தைக் கவர்ந்தவர். தான் பிறந்த மண்ணின் பெருமையைத் தான் சென்றவிடமெல்லாம் கொண்டுசேர்த்தவர். இம்மலர் அவரது வாழ்க்கை வரலாற்றையும், அவரது மெய்யன்பர்களால் எழுதப்பட்ட புகழுரைகள், நினைவுரை கள், மலரும் நினைவுகளின் பகிர்வுகள், கண்ணீர் அஞ்சலிப் பாக்கள், எனப் பல்வேறு ஆக்கங்களையும் அவர் விரும்பி ஓதும் திருப்பதிகங்களையும் உள்ளடக்கி வெளிவந்துள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 32142).

## 927.3 சிற்பக்கலைஞர்

**மேலும் பார்க்க: 12683**

## 927.8 இசைக்கலைஞர்கள்

### 12947

**பாடிப்பறந்த குயில்கள் (மறைந்த 98 இசைக்கலைஞர்களின் சரிதம்).** முருகு. (இயற்பெயர்: ச.முருகையா). யாழ்ப்பாணம்: ச.முருகையா, வாஹினி பிரசுராலயம், 45 சுவாமியார் வீதி, கொழும்புத்துறை, 1வது பதிப்பு, ஆவணி 2016. (யாழ்ப்பாணம்: ஜெயஸ்ரீ பிரிண்டர்ஸ், பிரவுண் வீதி).

xv, 303 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 350., அளவு: 21x14.5 சமீ.

ஈழத்தின் இசைக்கலைப் பாரம்பரியத்தில் வாழ்ந்து மறைந்த 98 இசைக் கலைஞர் களின் வாழ்வும் பணிகளும் பற்றிப் பேசுவதாக இந்நூல் அமைந்துள்ளது. இந் நூலில் வாய்ப்பாட்டுக் கலைஞர்கள் 34 பேரினதும், வயலின் கலைஞர்கள் 15

பேரினதும், வீணைக் கலைஞர்கள் 2 பேரினதும், பரதக் கலைஞர்கள் 2 பேரினதும், தவில்-நாதஸ்வரக் கலைஞர்கள் 3 பேரினதும், ஆர்மோனியக் கலைஞர்கள் 2 பேரினதுமாக 58 கலைஞர்கள் பற்றிய புகைப்படங்களுடனான விரிவான தகவல்களும், இவர்களைப் பற்றி அறிந்தவை இவ்வளவே என்ற தலைப்பில் இரண்டாவது பகுதியில் பாட்டுக் கலைஞர்கள், வீணை வித்துவான்கள், வயலின் வித்துவான்கள் எனப் பல்துறைசார்ந்த மேலும் 40 கலைஞர்களின் சுருக்கமான வாழ்வும் பணிகளும் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. இக்கலைஞர்களில் பலரும் வாழ்ந்த அக்காலங்களில் அவர்கள்மீது ஊடகவெளிச்சம் பாய்ச்சப்பட்டிருக்கவில்லை. இவர்கள், சக கலைஞர்கள், சிறு ரசிகர் வட்டம் ஆகிய வரையறுக்கப்பட்ட ஆதரவுடன் வாழ்ந்து மறைந்ததால், இன்றைய தலைமுறையினர் இவர்கள் தொடர்பான அடிப்படைத் தகவல்களையே பெறமுடியாத நிலை காணப்படுகின்றது. இவர்களது போதனைகள், வேதனைகள், சாதனைகள் என்பவை மக்களை முறையாகச் சென்றடையவேண்டும் என்ற உணர்வுடன் கவிஞர் முருகு அவர்கள் இத்தொகுப்பை தனிமனித முயற்சியாக மேற்கொண்டு வெற்றிகண்டிருக்கிறார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 253891CC).

## 927.92 நாடகக் கலைஞர்கள்

**மேலும் பார்க்க: 13A25,12831.**

## 928 இலக்கிய அறிஞர்கள், புலவர்கள்

### 12948

**இலங்கை முற்போக்கு இலக்கிய எழுத்தாளர்கள்**.நீர்வை பொன்னையன் (தொகுப்பாசிரியர்). கொழும்பு 6: இலங்கை முற்போக்கு கலை இலக்கிய மன்றம், இல.18/6/1, கொலிங்வுட் பிளேஸ், 2வது பதிப்பு, ஜனவரி 2017, 1வது பதிப்பு, 2016. (தெகிவளை: ஏ.ஜே.பிரின்ட்ஸ், 44, புகையிரத நிலைய வீதி).

xxiv, 327 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 600., அளவு: 20x14 சமீ., ISBN: 978-955-

இப்பாரிய தொகுப்பில் எம்மிடையே வாழ்ந்தவர்களும், வாழ்ந்து வருபவர்களுமாக மொத்தம் 40 ஈழத்து முற்போக்கு எழுத்தாளர்களை இனம்கண்டு அவர்கள் பற்றிப்பிற அறிஞர்கள் எழுதிய கட்டுரைகளைத் தொகுத்து வழங்கியிருக்கிறார் நீர்வை பொன்னையன். சி.வி.வேலுப்பிள்ளை 1914-1984 (லெனின் மதிவானம்), கே.கணேஷ் 1920-2004 (லெனின் மதிவானம்), அ.ந.கந்தசாமி 1924-1968 (ஏ.இக்பால்), கே.டானியல் 1925-1986 (சி.மௌனகுரு), கவிஞர் பசுபதி 1925-1965 (ந.ரவீந்திரன்), அகஸ்தியர் 1926-1995 (லெ.முருகபூபதி), சுபைர் இளங்கீரன் 1927-1997 (செ.யோகராசா), பிரேம்ஜி ஞானசுந்தரம் 1930-2014 (லெனின் மதிவானம்), காவலூர் இராஜதுரை 1931-2014 (லெ.முருகபூபதி), எச்.எம்.பி.முஹிதீன் 1932-1988 (நீர்வை பொன்னையன்), கா.சிவத்தம்பி 1932-2011 (சபா ஜெயராசா), முகம்மது சமீம் 1933-1988 (லெனின் மதிவானம்), க.கைலாசபதி 1933-1982 (சபா ஜெயராசா),

நா.சோமகாந்தன் 1933-2006 (வசந்தி தயாபரன்), சில்லையூர் செல்வராசன் 1933-1995 (எம்.ஏ.நுஃமான்), சுபத்திரன் தங்கவடிவேல் 1935-1979 (சித்திரலேகா மௌனகுரு), கவிஞர் முருகையன் 1935-2009 (ந.ரவீந்திரன்), ப.ஆப்டீன் 1937-2015 (திக்குவல்லை கமால்), யோ.பெனடிக்ட் பாலன் 1939-1997 (செ.யோகராசா), இ.சிவானந்தன் 1941-1995 (செ.யோகராசா), செ.யோகநாதன் 1941-2008 (ஐ. சாந்தன்), கே.விஜயன் 1943-2016 (லெனின் மதிவானம்), சாருமதி க.யோகநாதன் 1947-1998 (சி.மௌனகுரு), ராஜஸ்ரீகாந்தன் 1948-2004 (திக்குவல்லை கமால்), செ.கணேசலிங்கன் 1928- (சபா.ஜெயராசா), டொமினிக் ஜீவா 1927- (எம்.எஸ். தேவகௌரி), என்.கே.ரகுநாதன் 1929- (எம்.கே.முருகானந்தன்), நீர்வை பொன்னையன் 1930- (சபா ஜெயராசா), சி.தில்லைநாதன் 1937- (வ.மகேஸ்வரன்), ஏ.இக்பால் 1938- (தர்காநகர் ஸபா), சபா ஜெயராசா 1940- (வ.மகேஸ்வரன்), தெணியான் 1942- (வசந்தி தயாபரன்), மருதூர்க்கனி 1942- (ஏ.இக்பால்), செ.கதிர்காமநாதன் 1942- (எம்.கே.முருகானந்தன்), மு.கனகராசன் 1942- (திக்குவல்லை கமால்), சி.மௌனகுரு 1943- (எம்.ஏ.நுஃமான்), எம்.ஏ.நுஃமான் 1944- (வ.மகேஸ்வரன்), ஐ.சாந்தன் 1947- (எம்.எஸ்.தேவகௌரி), திக்குவல்லை கமால் 1950- (ந..ரவீந்திரன்), லெ.முருகபூபதி 1951- (வசந்தி தயாபரன்) ஆகிய எழுத்தாளர்களின் வாழ்வும் பணியும் பற்றிய தகவல்கள் இக்கட்டுரைகளில் காணமுடிகின்றன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 61508).

## 12949

**கலாசூரி, இலக்கியச் செம்மல், மகாவித்துவான் F.X.C.நடராசா: வாழ்க்கை வரலாறு.** த.செல்வநாயகம். மட்டக்களப்பு: த.செல்வநாயகம், 37, திசவீரசிங்கம் சதுக்கம், எல்லை வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 1993. (மட்டக்களப்பு: புனித வளனார் கத்தோலிக்க அச்சகம்).

xii, (4), 92 பக்கம், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, தகடுகள், அளவு: 21x14.5 சமீ.

கலாசூரி F.X.C.நடராசா, பிறப்பும் ஆரம்பக் கல்வியும், ஆசிரியர் பயிற்சியும் மட்டுநகர் வருகையும், ஆசிரியர் பணியும் இல்வாழ்வும், வித்துவான் பயிற்சியும் விரிவுரையாளர் பணியும், அரசகரும மொழித் திணைக்கள உத்தியோகம், இளைப்பாறிய பின், நூலாசிரியர், இயல்புகள்-குணாகுணங்கள், தன்மைகள் ஆகிய ஒன்பது பிரதான இயல்களில் மகாவித்துவான் F.X.C.நடராசா அவர்களின் வாழ்வும் பணிகளும் விரிவாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளன. பிற்சேர்க்கையாக கலாசூரி விருதுப் பட்டயம், ஆணையாளர் Dr.N.D.விஜயசேகரா கடிதம், ஆணையாளர் பீற்றர் அபேசேகரா கடிதம், மகிமைப் பட்டங்களும் விபரமும், குரவர்கள்/ஆசிரியர்கள், புலவர்மணி மன்றத்தினரின் வைரவிழாப் பாராட்டு வாழ்த்து, மட்டக்களப்பு தமிழ் மன்றத்தினரின் மூன்றாவது ஆண்டு நிறைவு விழா அழைப்பு, குடும்ப விபர அட்டவணை ஆகியவை இணைக்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 13442).

## 12950

**சதாவதானி நா.கதிரைவேற்பிள்ளை.** *ஸ்ரீ பிரசாந்தன். கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு 2017. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).*

*67 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 200., அளவு: 21.5x14.5 சமீ.,* ISBN: *978-955-659-558-1.*

*யாழ்ப்பாணம், புலோலியில் 1871இல் பிறந்தவர் நாகப்பிள்ளை கதிரவேற்பிள்ளை. இளமையிலேயே சுறுசுறுப்பும் ஞாபகசக்தியும் மிகுந்தவராக காணப்பட்ட இவர், வித்தியாரம்பம் செய்யப்பட்ட பின்னர் ஊரிலிருந்த ஒரு பாடசாலையிலே கல்வி யினைத் தொடர்ந்தார். வறுமையின் காரணமாய் தொடர்ந்து கற்க முடியாமையால் ஆறாம் வகுப்புடன் பாடசாலைக் கல்வியினை நிறுத்திக்கொண்டார். பின்னர் சிதம்பரப்பிள்ளை எனும் நொத்தரிசுக்கு உதவியாளராய் வேலைக்குச் சேர்ந்து கொண்டார். சிறிது காலத்தின்பின் தமிழ்நாடு சென்று தமிழ் மற்றும் சமஸ்கிருதம் ஆகிய இரு மொழிகளையும் சிறப்புறக் கற்றார். அங்கே அவர் திருகோணமலை கனகசுந்தரம்பிள்ளையையும் சந்தித்து தொல்காப்பியத்தினையும் அவரிடம் திரிபறக் கற்றார். சங்க இலக்கியங்களையும் கேட்டறிந்தார். பிற்கால இலக்கியங் களிலும் தன் புலமையினை வளர்த்துக்கொண்டார். கதிரவேற்பிள்ளை கூர்மபுராணம் மற்றும் பழனித் தலபுராணம் என்பவற்றிற்கு உரையும் செய்துள்ளார். சைவசந்திரிகை, சைவசித்தாந்தம் எனும் நூல்களையும் செய்துள்ளார். இவர் செய்த அகராதி யாழ்ப்பாண அகராதி என வழங்கப்படுகின்றது. இவர் மாயாவாதிகளை கண்டிப்பதில் முன்னிற்பவர். அதனால் வித்துவான்கள் பலரும் காசிவாசி செந்திநாதையர் தலைமையிற்கூடி இவருக்கு "மாயாவாததுவம்சகோளரி" என்றொரு பட்டத்தினை வழங்கினார்கள். இராமலிங்க சுவாமிகள் பாடிய பாடல்கள் அருட்பாக்கள் அல்லவென்றும் அவை மருட்பாக்கள் என்றும் எழுதிய கண்டனங்கள் காரணமாய் சென்னை நீதிமன்றில் 1904 மார்கழியில் நடந்த விவாதத்திலே கதிரவேற்பிள்ளை அவர்கள் வெற்றிபெற்றார்கள். அட்டாவதானம், சதாவதானம் செய்வதிலும் கதிரவேற்பிள்ளை வல்லவர். இதனால் அவர் பெயர் சதாவதானி ந. கதிரவேற்பிள்ளை என வழங்குவதாயிற்று. திரு. வி. உலகநாத முதலியார், திரு. வி. கலியாணசுந்தர முதலியார் என்போர் இவர் மாணக்கருள் குறித்துச் சொல்லப்படக் கூடியவர்கள். புலோலி சதாவதானி. ந. கதிரவேற்பிள்ளை அவர்கள் 1907ம் ஆண்டிலே சிவனடி சேர்ந்தார். குமரன் பதிப்பகத்தின் இலங்கைத் தமிழ்ச் சுடர்மணிகள் வரிசையில் 22ஆவதாக வெளிவந்துள்ள இந்நூல், வாழ்க்கைப் பின்புலம், பேச்சாளர், கண்டன அறிஞர், திருமுறைக் காவலர், அகராதிச் செல்வர், உரையாசிரியர், வசனநடை வல்லார், மரபுக்கவிஞர், பதிப்பாசிரியர், நல்லாசிரியர், சதாவதானி, மதிப்பீடு ஆகிய 12 தலைப்புகளில் அவரது வாழ்வும் பணிகளும் இங்கு சுருக்கமாக விளக்கப்பட்டுள்ளன. பின்னிணைப்புகளாக கால வரிசையில் கதிரைவேற்பிள்ளை வரலாறு, கதிரைவேற்பிள்ளை நூற்பட்டியல் ஆகியவை சேர்க்கப்பட்டுள்ளன.*

## 12951

**நவாலியூர் சோமசுந்தரப் புலவர்.** ஸ்ரீ பிரசாந்தன். கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு 2017. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

60 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 200., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-659-557-4.

நவாலியூர் க.சோமசுந்தரப் புலவர் (25.05.1878-10.07.1953) தங்கத் தாத்தா என அன்பாக அழைக்கப்பட்டவர். ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை போன்ற செய்யுள் உள்ளிட்ட பதினைந்தாயிரம் செய்யுள்கள் வரை சுவையான முறையில் எளிய தமிழில் பாடி வழங்கியுள்ளார். பனையின் பெருமைகளைக் கூறும் தாலவிலாசம், கதிர்காமம் முருகக் கடவுளைக் குறித்து பாடிய கதிரைச் சிலேடை வெண்பா உள்ளிட்ட பல படைப்புக்கள் இன்றும் இவரை எமக்கு நினைவூட்டுகின்றன. வலிகாமம் மேற்கில் மானிப்பாய்க் கோவிற்பற்றைச் சேர்ந்த நவாலியூர் என்னும் சிற்றூரில் வன்னியசேகர முதலியார் வழித்தோன்றலாய் அருமையினார் கதிர்காமர், இலக்குமிப்பிள்ளை ஆகியோருக்குப் பிறந்தவர் சோமசுந்தரர். தனது இளமைப் பருவத்திலேயே அட்டகிரி முருகன் பதிகம், அட்டகிரி முருகன் திருவூஞ்சல், சாவித்திரி கதை, பசுவின் கதை போன்ற நூல் களை இயற்றினார். பதிகம், ஊஞ்சல் என்றும் இரண்டு பிரபந்தங்களையும் பாடிய சோமசுந்தரப் புலவர் கலம்பகம், நான்மணி மாலை, அட்டகம், அந்தாதி, சிலேடை வெண்பா, திருப்பள்ளியெழுச்சி ஆகிய பிரபந்தங்களையும் பாடினார். நானூ ற்றுக்கும் மேற்பட்ட அடிகளைக் கொண்ட கலிவெண்பாப் பாவகையால் அமைந்த தாலவிலாசம் என்ற இவரது செய்யுள் நூல் பனையின் பெருமைகளைக் கூறுகிறது. குமரன் பதிப்பகத்தின் இலங்கைத் தமிழ்ச் சுடர்மணிகள் வரிசையில் 21ஆவதாக வெளிவந்துள்ள இந்நூல் சோமசுந்தரப் புலவரின் வாழ்வும் பணிகளும் பற்றிச் சுருக்கமாக விளக்குகின்றது. வாழ்க்கைப் பின்புலம், குழந்தைக் கவிஞர், ஆன்மீகக் கவிஞர், சமூகநலக் கவிஞர், தேசம் குறித்த படைப்பாளி, தன்வாழ்வியற் படைப்பாளி, நாடகாசிரியர் தத்துவ அறிஞர், நல்லாசிரியர், மதிப்பீடு ஆகிய பத்துத் தலைப்புகளில் இவை பதிவுசெய்யப்பட்டுள்ளன. பின்னிணைப்புகளாக காலவரிசையில் புலவர் வரலாறு, புலவர் நூற்பட்டியல், வகைமாதிரிக்குச் சில புலவர் பாடல்கள் என்பன தரப்பட்டுள்ளன.

## 12952

**பண்டிதர் சி.அப்புத்துரை: ஓர் ஆய்வு.** கலைமதி மகேஸ்வரன். யாழ்ப்பாணம்: பண்டிதர் சி.அப்புத்துரை பவளவிழாச் சபை, இளவாலை, 1வது பதிப்பு, ஏப்ரல் 2003. (யாழ்ப்பாணம்: அம்மா அச்சகம், இணுவில்).

xvi, 48 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x14 சமீ.

23.4.2003இல் பவளவிழாக் காணும் பண்டிதர் சி.அப்புத்துரை அவர்களின் நினைவாக இந்நூல் வெளியிடப்பெற்றுள்ளது. திருமதி கலைமதி மகேஸ்வரன் அவர்கள் இந்நூலில் பண்டிதர் சி.அப்பத்துரை அவர்களின் வாழ்க்கை வரலாற்றைப்

பதிவுசெய்திருப்பதுடன் அவர் இதவரை எழுதியுள்ள நூல்களை விரிவாகப் பட்டியலிட்டுள்ளார். அத்துடன் பண்டிதர் சி.அப்புத்துரை அவர்களை ஒரு கல்விப்பணியாளராக, ஆக்க இலக்கிய கர்த்தாவாக, பேச்சாளராக, கட்டுரையாளராக, மதிப்பீட்டுரை வழங்குவதில் வல்லவராக எனப் பல்பரிமாணங்களில் இனம்கண்டு தன் அவதானிப்பை தனித்தனி இயல்களாக வகுத்து விரிவாக ஆய்வு செய்துள்ளார். அவ்வகையில் பண்டிதர் சி.அப்புத்துரை அவர்களின் வாழ்வும் அறிவியல்பணிகளும் இந்நூலில் விரிவாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 28983).

### 12953

**மதுரகவி இ.நாகராஜன் அவர்கள் நினைவுமலர்.** வி.கந்தவனம் (தொகுப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: யாழ். இலக்கிய வட்டம், 1வத பதிப்பு, செப்டெம்பர் 1972. (சுன்னாகம்: மு.சபாரத்தினம், மகாமையாளர், திருமகள் அழுத்தகம்).

27 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x11.5 சமீ.

மதுரகவி இ.நாகராஜன் (17.9.1927-15.8.1972) அவர்களின் மறைவையொட்டி வெளியிடப்பட்ட நினைவுமலர் இது. யாழ்.இலக்கிய வட்டத்தினால் 14.9.1972 அன்று வெளியிடப்பட்ட இம்மலரில் அமரர் இ.நாகராஜனின் வாழ்க்கை வரலாற்றினை கவிஞர் வி.கந்தவனம் அவர்கள் எழுதியுள்ளார். தொடர்ந்து உரைகளை இரசிகமணி கனக செந்திநாதன், சசிபாரதி சபாரத்தினம் ஆகியோர் வழங்கியுள்ளனர். நினைவஞ்சலிக் கவிதைகளை சீ.வினாசித்தம்பி, விகந்தவனம், செ.கதிரேசபிள்ளை, காரை.செ.சுந்தரம்பிள்ளை, வே.ஐயாத்துரை, நா.ஆறுமுகம், ம.பார்வதிநாதசிவம் ஆகியோர் எழுதியுள்ளனர்.

### 12954

**மனநிறைவான வாழ்வு: பேரறிஞர் பண்டிதர் சபா ஆநந்தர் அவர்களின் நினைவுப் பேருரை.** வி.ஜெகநாதன். யாழ்ப்பாணம்: பண்டிதர் சபா ஆநந்தர் நினைவுக்குழு, 1வது பதிப்பு, மே 2005. (அச்சக விபரம் தரப்படவில்லை).

40 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ.

பேரறிஞர் பண்டிதர் சபா ஆனந்தர் அவர்களின் நினைவுப் பேருரை "மன நிறைவான வாழ்வு", பண்டிதர் க.சபா.ஆனந்தர் அவர்களின் வாழ்க்கை வரலாறு, அமரர் சபா ஆனந்தரின் அமரத்துவம், செயற்கரிய செய்வர் பெரியார், ஒளிவளர் விளக்காய் விளக்கிய கல்விமான், இணுவில் சபா.ஆனந்தர், உலகுவப்ப வாழ்ந்தாய் வாழி, இணுவையம்பதி, மும்மொழி வல்ல முன்னாள் கல்லூரி அதிபர், சபா ஆனந்தர், ஆனந்தன் பிரிவு, நினைந்தவலமுறும் நெஞ்சம், மாபெரும் அறிஞர், சிவப்பேறு பெற்ற செம்மல், A Noble Soul, அறிவிலுயர்ந்த எங்கள் பாட்டா, எமது பாட்டாவின் நகைச்சுவை, புண்ணியவான் ஆகிய தலையங்கப் பதிவுகளினூ டாக இந்நூலில் பேரறிஞர் பண்டிதர் சபா ஆனந்தர் அவர்களின் வாழ்வும் பணிகளும் விதந்து போற்றப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க

நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 36477. நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தின் சேர்க்கை இலக்கம் 004108).

### 12955

**வாழ்வோரை வாழ்த்துவோம் 1994: முஸ்லிம் கலாசார விருது விழா 1994.** கலைவாதி கலீல், F.M.பைரூஸ், S.I.நாகூர்கனி (பதிப்பாசிரியர்கள்). கொழும்பு 2: முஸ்லிம் சமய, பண்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சு, 34, மலே வீதி, 1வது பதிப்பு, பெப்ரவரி 1994. (கொழும்பு: அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்).

230 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x18.5 சமீ.

முஸ்லிம் சமய, பண்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சராக அல்ஹாஜ் A.H.M.அஸ்வர் பணியாற்றிய வேளையில் 1991இல் அறிமுகப்படுத்திய நிகழ்வு இது. நான்காவது ஆண்டாக பொற்கிழியும், பத்திரமும், விருதும் ஒருங்கே வழங்கி கௌரவிக்கப்படும் இந்நிகழ்வில் இஸ்லாமியர்களான பாவலர்கள், நாவலர்கள், நாவலாசிரியர்கள், நாடகாசிரியர்கள், தயாரிப்பாளர்கள், வானொலிப் பாடகர்கள், மேடைக் கலைஞர்கள், இசையமைப்பாளர்கள், நிழற்படப்பிடிப்பாளர்கள், ஓவியமணிகள் என நாற்பது பிரமுகர்கள் தெரிவுசெய்யப்பட்டு 11.2.1994அன்று கௌரவிக்கப்பட்டார்கள். அவ்வகையில் நடந்தேறிய நான்காவது முஸ்லிம் கலாசார விருதுவிழாவில் வெளியிடப்பட்ட சிறப்பு மலர் இதுவாகும். இம்மலரில் விசேஷ அம்சமாக உள்ள கட்டுரைப் பகுதியில் வட புலத்து முஸ்லிம்களின் கலை இலக்கியப் பணிகள் (கலைவாதி கலீல்), ஊவா மாகாண முஸ்லிம்களின் கலை இலக்கியப் பங்களிப்புகள் (சாரணா கையூம்), இலங்கை முஸ்லிம்களின் நூல் வெளியீட்டு முயற்சிகள் 1900-1924 (S.H.M.ஜெமீல்), மத்திய மாகாண முஸ்லிம்களின் கலை கலாசாரப் பணிகள் (எம்.சி.எம்.சுபைர்), இலங்கையில் மேமன் இனம் (மேமன் கவி), சப்ரகமுவ மாகாண முஸ்லீம்களின் கலை கலாசாரப் பங்களிப்புகள்(எம்.வை.எம்.மீஆது), பாராளுமன்ற கலரியில் கால் நூற்றாண்டு (M.P.M.அஸ்ஹர்) ஆகிய கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 14126).

### 12956

**வானுறையுந் தெய்வம்: அமரர் கலாநிதி க.செ.நடராசா நினைவுமலர்.** வி.கந்தவனம் (தொகுப்பாசிரியர்). ரொறன்ரோ: கனடா தமிழ் எழுத்தாளர் இணையம், 1வது பதிப்பு, 1994. (கனடா: சங்கர் அச்சகம்).

28 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21 சமீ.

நாவற்குழியூர் நடராஜன் (ஜூன் 30, 1919 - பெப்ரவரி 17, 1994) எனப்படும் கலாநிதி கனகசபை செல்லப்பா நடராசா மரபுவழிக் கவிஞரும், ஆசிரியரும், எழுத்தாளருமாவார். இவர் இலங்கை வானொலி தமிழ்ச் சேவைப் பணிப்பாளராகப் பணியாற்றியவர். யாழ்ப்பாண மாவட்டம் நாவற்குழியில் பிறந்த இவர், தமிழ் இலக்கியத்தில் முதுகலைப் பட்டம் பெற்ற இவர் யாழ்ப்பாண சரித்திரத்தைக்

கூறும் வையாபாடல் என்னும் செய்யுள் நூலை ஆராய்ந்திருந்தார். ஈழத்துத் தமிழிலக்கிய வரலாற்றை ஆராய்ந்து உலகத் தமிழாராய்ச்சி மாநாடுகளில் ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்துமிருந்தார். முதுபெரும் எழுத்தாளர் வரதருடன் இணைந்து மறுமலர்ச்சிச் சங்கத்தை நிறுவி மறுமலர்ச்சி என்னும் மாத இதழை வெளியிட்டு அதன் ஆசிரியராகவும் பணியாற்றினார். நடராசன் கொழும்பு ரோயல் கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றிய காலத்தில் அவரது நண்பர் சானாவின் வேண்டுகோளின் பேரில் 1951 இல் இலங்கை வானொலியில் பேச்சுப் பகுதியில் உதவியாளராகப் பணியில் சேர்ந்தார். பின்னர் 1953 இல் அப்பகுதியின் பொறுப்பாளராகப் பணியுயர்வு பெற்றார். அதன் பின்னர் தமிழ் நிகழ்ச்சி அமைப்பாளராகவும் பணியாற்றினார். 1960 சிலம்பொலி என்ற கவிதைத் தொகுதியை வெளியிட்ட இவரது கவிதைகள் பல இலங்கை வானொலியில் மெல்லிசைப் பாடல்களாக ஒலிபரப்பாகியுள்ளன. இலங்கை வானொலியின் தமிழ்ச் சேவைப் பணிப்பாளராக இருந்து 1978 ஆம் ஆண்டில் ஓய்வு பெற்ற பின்னர் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் தலைவராக 1980 வரை இருந்து சேவையாற்றினார். தனது ஆய்வுக் கட்டுரைகள் அடங்கிய "ஈழத்து தமிழ் இலக்கிய வரலாறு: 18ஆம் நூற்றாண்டு வரை" என்னும் நூல் 1982 இல் வெளியிடப்பட்டது. தனது வாழ்வின் இறுதிக் காலத்தை தனது பிள்ளைகளுடன் கனடாவில் கழித்து 1994 இல் கனடாவில் காலமானார். கனடாவில் வசித்த போதும் இவர் அறு நூற்றுக்கு அதிகமான பாடல் கொண்ட "உள்ளதான ஓவியம்" என்னும் காப்பியத்தை எழுதி முடித்தார். இந்நூல் இவர் இறந்த பின்னர் வெளிவந்தது. "ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சி" என்ற இவரது நூலுக்கு இலங்கை சாகித்திய மண்டலத்தின் பரிசு கிடைத்தது. அமரர் க.செ.நடராசாவின் இழப்பிற்கான அஞ்சலிக் கட்டுரை களும், உரைகளும், கவிதைகளும் கொண்டதாக இம்மலர் தொகுக்கப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 14186).

### 12957

**வித்துவான் வேலன் நினைவலைகள்: சாவினை வென்றவன் வேலன் அறிவையோ.** வித்துவான் க.ந.வேலன் நினைவுக் குழு. லண்டன்: வித்துவான் க.ந.வேலன் நினைவுக் குழு, 66, Westrow Garden, Seven King, Illford, Essex IG3 9NF, 1வது பதிப்பு, ஜுலை 2003. (லண்டன்: ஜே.ஆர்.பிரின்ட்).

(2), 30 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14.5 சமீ.

வித்துவான் க.ந.வேலன் (இயற்பெயர்: கதிர்காமர் நல்லதம்பி இரத்தினவேல் 06.11.1923-07.06.2003) அவர்களின் மறைவின் நினைவுப்பதிகை, 19.07.2003 அன்றைய அந்தியேட்டி நிகழ்வின்போது வெளியிட்டு விநியோகிக்கப்பட்டது. வேலன் வாழ்க்கைக் குறிப்புக்கள், Last Will of Vidvan Velan, வேலன் விருப்பாவணம் (வித்துவான் க.ந.வேலன்), தமிழ் சாவதில்லை நீயும் சாகவில்லை (கவிமலர்-பார்கவி), வித்துவான் வேலனின் உள்ளத்தின் உள்ளே நின்ற குருநிலை ஆசிரியர்கள், வித்துவான் வேலனின் உள்ளத்தில் நின்ற கல்லூரி அதிபர்கள், வித்துவான் வேலனின் உள்ளத்தில் நின்ற உடன் ஆசிரியர்கள், வித்துவான் வேலனின் அன்பு

மாணவர்கள், வித்துவான் எழுதியவைகள், வித்துவானின் முத்துக்கள் சில, வித்துவான் விரும்பிய இலக்கியச் செய்யுள்கள், சத்தியமுணர்ந்தபேர்க்குச் சாவென்ற ஒன்றுமுண்டோ?(கனடா, எஸ்.திருச்செல்வம்), சிறந்த ஒரு தமிழ் மனிதன் (க.வி. விக்கினேஸ்வரன்) ஆகிய ஆக்கங்கள் இம்மலரில் இடம்பெற்றுள்ளன.

## 12958

**விபுலாநந்த அடிகளார் நூற்றாண்டுவிழா-சிறப்பு வெளியீடு (ஆய்வுக் கட்டுரைத் தொகுதி).** கி.விசாகரூபன் (தொகுப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: தமிழ் மன்றம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, 1வது பதிப்பு, 1992. (யாழ்ப்பாணம்: முல்லை அச்சகம், ஆடியபாதம் வீதி, நல்லூர்).

(12), 82 பக்கம், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x18 சமீ.

சுவாமி விபுலாநந்தர் (மார்ச் 27, 1892-ஜூலை 19, 1947) கிழக்கிலங்கையில் பிறந்து தமிழ் மொழி வளர்ச்சிக்குப் பெரும் தொண்டாற்றியவர். இலக்கியம், சமயம், தத்துவஞானம், அறிவியல், இசை முதலிய பல துறைகளில் கற்றுத் தேர்ந்தவர். அன்னாரின் 100ஆவது பிறந்ததினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புத்திஜீவிகளினால் எழுதப்பட்ட ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பு இதுவாகும். இதில் சுவாமி விபுலாநந்தர்-ஒரு கல்வி நோக்கு (வ.ஆறுமுகம்), தமிழ் உரைநடை வரலாற்றிலே விபுலாநந்த அடிகளாரின் இடம் (க.சொக்கலிங்கம்), மனம் பற்றி சுவாமி சுவாமி விபுலாநந்தர் (சோ. கிருஷ்ணராஜா), விபுலாநந்த அடிகளாரின் ஆய்வுப் புலங்கள் (இ.பாலசுந்தரம்), சுவாமி விபுலாநந்தரும் ஈழத்தமிழும் (அ. சண்முகதாஸ்), அடிகளாரைக் கவர்ந்த ஆங்கில இரங்கற்பா (சோ.பத்மநாதன்), விபுலாநந்த அடிகள்: ஆய்வடங்கல் (விமலா பாலசுந்தரம்), விபுலாநந்த ஆய்வியல் பற்றிய ஒரு பிரச்சினை மையம் (கா.சிவத்தம்பி), முத்தமிழ் முனிவரின் சமய சமரசம் (ஏ.ஜே.வி.சந்திரகாந்தன்), விபுலாநந்தரும் கவிதையும் (எஸ்.சிவலிங்கராஜா), இந்துப் பண்பாடும் விபுலாநந்த அடிகளாரும் (நாச்சியார் செல்வநாயகம்), விபுலாநந்த அடிகளாரின் விஞ்ஞானச் சார்பு (இ.முருகையன்), விபலாநந்தர் மீட்சிப் பத்திலிருந்து (ஏ.பெரியதம்பிப்பிள்ளை), வரலாறு படைத்த பெரும் தமிழனாவான் (நாக. சண்முகநாதபிள்ளை), விபுலாநந்த அடிகள் பற்றிய சில பதிவுகள் (கி.விசாகரூபன்) ஆகிய கட்டுரைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 22677).

## 12959

**ஸ்ரீமான் ராவ்பகதூர் சி.வை.தாமோதரம்பிள்ளை அவர்கள் சரித்திரம்.** T.A.ராஜரத்தினம். சென்னை: T.A.ராஜரத்தினம், 1வது பதிப்பு, மே 1934. (அச்சக விபரம் தரப்படவில்லை),

viii, 112 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 17x12 சமீ.

சி. வை. தாமோதரம்பிள்ளை (சிறுப்பிட்டி வைரவநாதபிள்ளை தாமோதரம்பிள்ளை C.W. Thamotharampillai, 12.09.1832-01.01.1901) பண்டைய சங்கத் தமிழ் நூல்கள்

செல்லரித்து அழிந்து போகாது, தமது அரிய தேடல்கள் மூலம் அவற்றை மீட்டெடுத்து, காத்து, ஒப்பிட்டுப் பரிசோதித்து, அச்சிட்டு வாழ வைத்த தமிழறிஞர். தமிழின் நூல்கள் தொடர்ந்து தமிழ் மக்களுக்குக் கிடைக்கவேண்டும் எனவும் தமிழின் பெருமையை, அருமையை தமிழர் உணர்ந்து உயர வேண்டும் எனவும் விரும்பித் தொண்டாற்றியவர். தமிழ்ப் பதிப்புத்துறையின் முன்னோடியான இவர் பற்றிய வாழ்க்கை வரலாற்றை இந்நூல் பதிவுசெய்கின்றது. ஈழச்சிறப்பு-ஆரம்ப உரை, பிள்ளை அவர்களின் ஜனனம், இல்வாழ்க்கைச் சிறப்பு, பிள்ளையவர்கள் ஏற்ற கடமை, தொல்காப்பியம், வீரசோழியமும் தணிகைப் புராணமும், தொல்காப்பியம் பொருளதிகாரம், கலித்தொகை, பிள்ளையவர்கள் நீதியதிபரானது, இலக்கண விளக்கம், சூளாமணி, தொல்காப்பியம் எழுத்ததிகாரம், குடும்ப விஷயங்கள், அரசினர் மதிப்பு, அகநானூறு, வசன சூளாமணி, பிள்ளையவர்களின் பிற்காலமும் மரணமும், முடிப்புரை ஆகிய 18 இயல்களில் இந்நூல் எழுதப் பட்டுள்ளது. மேலும், பக்கம் 96 முதல் 112 வரை சி.வை.தா அவர்கள் இறந்தபோது பல்வேறு வித்துவான்களும் இயற்றிப்பாடிய சரமகவிகள் தொகுக்கப்பெற்றுள்ளன. அவ்வகையில் கும்பகோணம் இராஜாங்க கலாசாலைத் தலைமைத் தமிழ்ப் பண்டிதரும் பிள்ளையவர்களின் நண்பருமான உ.வே.சாமிநாத ஐயரவர்கள், வி.கோ.சூரியநாராயண சாஸ்திரி, அ.குமாரசுவாமிப் புலவர், நா.கதிரவேற்பிள்ளை, சி.வை.சின்னப்பாபிள்ளை (சி.வை.தா. வின் சகோதரரும் அவரது மாணாக்கரும்), சி.தா.அழகசுந்தரம் ஆகியோரின் சரமகவிகள் இந்நூலின் பின்னிணைப்பில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 14119. நூலின் முற்பகுதி எஸ்.காராளசிங்கம் அவர்களினால் மார்ச் 1993இல் எழுதி வெளியிடப்பட்ட Life of Rau Bahadur C.W.Thamotharampillai என்ற நூலும் இடம்பெற்றுள்ளது).

**மேலும் பார்க்க: 12011.**

## 941 பிரித்தானிய வரலாறு

### 12960

**பிரித்தானியாவின் புதிய அடிப்படை வரலாறு: இரண்டாம் பகுதி 1485-1688.** யொட்சு தவுன்சென் உவாணர், சி.என்றி கே. மாட்டின், டி.எசுகின் மூர் (ஆங்கில மூலம்). சோ.நடராசா (தமிழாக்கம்). கொழும்பு 7: வெளியீட்டுப் பிரிவு, அரச கரும மொழித் திணைக்களம், 1வது பதிப்பு, 1961. (கொழும்பு: இலங்கை அரசாங்க அச்சகம்).

x, 324 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x13.5 சமீ.

George Townsend Warner, C.Henry K.Marten, D.Erskine Muir ஆகிய மூவராலும் எழுதப்பெற்று லண்டன் Blackie and Son நிறுவனத்தால் வெளியிடப்பெற்ற The new Groundwork of British History Section Two (1485-1688) என்ற நூலின் தமிழாக்கம் இது. இலங்கைப் பாடசாலைகளில் உயர்வகுப்புகளுக்குப் பயன்படுத்தவென இலங்கை அரசகரும மொழித்திணைக்களத்தால் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டது. இதில் புதிய முடியாட்சி-ஏழாம் என்றி (1485-1509), எட்டாம்

என்றி (1509-1547), 1329 தொடக்கம் 1542 வரை கொத்துலாந்தின் நிலை, ஆறாம் எட்டுவேட்டு (1547-1553), தியூடர் மேரி அரசி (1553-1558) கத்தோலிக்க எதிரியக்கம், கொத்தலாந்திலே சமயச் சீர்திருத்தம், இலிசபெத்து (1558-1603), தியூடர் ஆட்சியில் அயலந்து (1485-1603), முதலாஞ் சேமிசும் (1603-1625) அவன் பிறநாட்டுப் பூட்கையும், முதலாம் சேமிசும் உண்ணாட்டு அலுவல்களும், முதலாம் சாள்சு (1625-1645), உண்ணாட்டுப் போர் (1642-1645), பொதுநலவாயமும் (1645-1653) புரப்பகமும் (1653-1659), பிரித்தானியப் பேரரசின் தொடக்கம், இரண்டாம் சாள்சு (1660-1685), இரண்டாம் செமிசு (1685-1688), சுதுவட்டு மன்னராட்சியில் அயலந்தும் கொத்தலாந்தும் ஆகிய 17 அத்தியாயங்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந் நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 23208).

## 950 ஆசிய வரலாறு

### 12961

**தென் கிழக்கு ஆசியா**. ஈ.எச்.ஜீ.டொபி (ஆங்கில மூலம்), சோ.செல்வநாயகம் (தமிழாக்கம்). கொழும்பு 3: இலங்கை கல்வி வெளியீட்டுத் திணைக்களம், 1வது பதிப்பு, 1970. (கொழும்பு: இலங்கை அரசாங்க அச்சகம்).

xviii, 496 பக்கம், வரைபடங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x13.5 சமீ.

E.H.G.Dobby அவர்களால் எழுதப்பெற்று லண்டன் University of London Press நிறுவனத்தால் வெளியிடப்பெற்ற South East Asia என்ற நூலின் தமிழாக்கம் இது. மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ள இந்நூலின் தென்கிழக்காசியாவின் இயற்கைத் தோற்றம் என்ற முதலாவது பகுதியில் தென் கிழக்கு ஆசியாவின் இயற்கைத் தோற்றம், தென் கிழக்கு ஆசியாவின் காலநிலைக் காரணிகள், தென் கிழக்கு ஆசியாவின் வடிகால் அமைப்பு, தென் கிழக்கு ஆசியாவின் இயற்கைத் தாவரம், தென் கிழக்கு ஆசியாவின் மண் வகைகள் ஆகிய அத்தியாயங்களும், தென் கிழக்கு ஆசிய நாடுகள் என்ற இரண்டாம் பகுதியில் மலாயாவின் இயற்கை நிலத் தோற்றம், மலாயாவின் பண்பாட்டியல்புகள், மலாயாவின் சமூகப் புவியியல், பேர்மாவின் இயற்கை நிலத் தோற்றம், பேர்மாவின் பண்பாட்டு நிலத் தோற்றம், பேர்மாவின் சமூகப் புவியியல், கிழக்கு இந்தியத் தீவுகள்: மேற்குத் தீவுகள்-சுமாத்திரா, கிழக்கு இந்தியத் தீவுகள்: மேற்குத் தீவுத் தொடர்-யாவாவின் இயற்கைத் தோற்றம், கிழக்கு இந்தியத் தீவுகள்: மேற்குத் தீவுத் தொடர்-யாவாவின் பண்பாட்டு சமூகவியல்புகள், கிழக்கு இந்தியத் தீவுகள்: மேற்குத் தீவுத் தொடர்-போணியோ, கிழக்கு இந்தியத் தீவுகள்: செலிபீஸ், பாலி, லொம்பொக், தீமோர், மேற்கு ஈரியான், தைலாந்தின் இயற்கைத் தோற்றம், தைலாந்தின் பண்பாட்டுச் சமூக நிலைமைகள், இந்தோ-சீனாவின் இயற்கைத் தோற்றமும் பிரிவுகளும், இந்தோசீனாவின் பண்பாட்டுச் சமூக நிலைமைகள், பிலிப்பைன் தீவுகள் ஆகிய அத்தியாயங்களும், மூன்றாவது பிரிவான தென்கிழக்கு ஆசியாவின் மக்கட் புவியியல் என்ற பகுதியில் தென் கிழக்கு ஆசியாவிற் பயிர்ச்செய்கை, தென் கிழக்கு ஆசியாவில் மீன்பிடித்

தொழில், தென் கிழக்கு ஆசியாவின் கைத்தொழிலும் வியாபாரமும், தென் கிழக்கு ஆசியாவின் மக்கள், அரசியல், எதிர்கால நிலைமை ஆகிய அத்தியாயங்களுமாக மொத்தம் 25 அத்தியாயங்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. நூலாசிரியர் டொபி மலாயாப் பல்கலைக்கழகத்திலும் கானா பல்கலைக்கழகக் கல்லூரியிலும் புவியியல் பேராசிரியராகப் பணியாற்றியவர். மொழிபெயர்ப்பாளர் சோ.செல்வ நாயகம், இலங்கைப் பல்கலைக்கழகத்தின் புவியியல்துறையைச் சேர்ந்தவர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 23533).

## 954 இந்திய வரலாறு

### 12962

**பல்லவர் காலமும் பக்திக் கோலமும்.** க.நவசோதி. கொழும்பு: புத்தொளி வெளியீடு, 1வது பதிப்பு, பங்குனி, 1971. (கொழும்பு 13: இரஞ்சனா அச்சகம், 98, விவேகானந்தர் மேடு).

28 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 17.5x11 சமீ.

க.நவசோதி அவர்களின் பல்கலைக்கழகச் சொற்பொழிவொன்றினை குறிஞ்சிக் குமரன் கோயில் நிதிக்காக புத்தொளி வெளியீட்டகத்தின் இரண்டாவது வெளியீடாக வெளியிட்டுள்ளனர். தமிழகத்தின் பல்லவர் காலத்தின் சிறப்பினைக் கூறும் சொற்பொழிவினைக் கொண்ட இந்நூலில் முதுநெறி, தமிழர் நெறி, அந்நியர் வருகை, பரசமய எழுச்சி, பரநெறிகளின் விளைவு, வள்ளுவனின் சமரசம், பக்திமார்க்க மறுமலர்ச்சி, ஆரியச் செல்வாக்கு, ஒற்றுமைக் குரல், எதிர்ப்பியக்கம், வர்க்கப் போராட்டமல்ல, மன்னரின் பக்திக்கோலம், கோயில்களின் எழுச்சி, முற்பட்ட காலக் கோயில்கள், ஒற்றைக்கல் இரதங்கள், இராசசிம்ம முறை, பக்திக் கலைகள், பக்தி இலக்கியம் ஆகிய பல்வேறு உபதலைப்புகளின்கீழ் இவ்வுரை பதிவுசெய்யப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 2654).

### 12963

**வரலாற்று முன்னர் இந்தியா.** ஸ்ருவாட் பிகற் (ஆங்கில மூலம்), திருமதி ஞானம் இரத்தினம் (தமிழாக்கம்). கொழும்பு 3: இலங்கை கல்வி வெளியீட்டுத் திணைக்களம், 1வது பதிப்பு, 1970. (கொழும்பு: இலங்கை அரசாங்க அச்சகம்).

xiv, 356 பக்கம், விளக்கப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12.5 சமீ.

Stuart Piggot அவர்களால் எழுதப்பெற்று லண்டன் The Penguin Books Ltd நிறுவனத்தால் வெளியிடப்பெற்ற Prehistoric India என்ற நூலின் தமிழாக்கம் இது. "வரலாற்று முன்னர்" என்ற தமிழ்ப் பதம் Prehistoric என்ற ஆங்கிலச்சொல்லுக்கான தமிழ் மொழிப் பிரதியீடாக இந்நூலில் பயன்படுத்தப்பட்டுள்ளது. வரலாற்று முன்னர் இந்தியக் காட்சி, ஆரம்பம்-இந்தியக் கற்காலம், பிற்களம்- மேற்கு ஆசியாவில் ஆதி விவசாயச் சமுதாயங்கள், மேற்கிந்தியாவின் வெண்கல ஊழி வேளாண்

சமுதாயங்கள், சிந்து, பஞ்சாப் ஆகியவற்றின் நகர்கள், இடர் நிறைந்த காலமும் மாநகர்களின் முடிவும், மேற்பாலிருந்து வந்த வெற்றியாளர்-ஆரியரும் இருக்கு வேதமும் ஆகிய அத்தியாயங்களில் இந்நூல் வரலாற்றுக்காலத்திற்கு முற்பட்ட இந்தியாவின் வரலாற்றை விளக்குகின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 28261).

## 954.93 இலங்கை வரலாறு

### 12964

**இலங்கையின் பண்டை நிலவாட்சியும் அரசிறையும்.** H.W.கொட்றிங்ரன் (ஆங்கில மூலம்), திருமதி T.சிவரத்தினம் (தமிழாக்கம்). கொழும்பு 7: வெளியீட்டுப் பிரிவு, கல்வி வெளியீட்டுத் திணைக்களம், சேர் ஏர்ணஸ்ட் த சில்வா மாவத்தை, 1வது பதிப்பு, ஏப்ரல் 1969. (கொழும்பு: இலங்கை அரசாங்க அச்சகம்).

viii, 154 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

H.W.Codrington அவர்களால் எழுதப்பெற்று இலங்கை அச்சத்தினரால் அச்சிடப்பெற்ற Ancient Land Tenure and Revenue in Ceylon என்ற நூலின் தமிழாக்கம் இது. இலங்கைப் பாடசாலைகளில் உயர்வகுப்புகளுக்குப் பயன்படுத்தவென இலங்கை அரசகரும மொழித்திணைக்களத்தால் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டது. 1833 வரையிலான இலங்கையின் பண்டைய வரலாறு பற்றி அறிவதுடன் பண்டைய இலங்கையரின் பழக்கவழக்கங்கள் பற்றியும் அறிய இந்நூல் உதவுகின்றது. கிராமம், நிலப் பாகுபாடு, சேவையாட்சி முதலியன, சேவையடிப்படையில் கிராமங்கள், வரிகள் வருமதிகள் கட்டணங்கள் ஆகியன (இரு அத்தியாயங்கள்), தமிழ் மாவட்டங்கள், வரலாற்றுப் பொழிப்பு என எட்டு அத்தியாயங்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. அனுபந்தங்களாக, கம்-பந்திம, ஒரு புதிய கிராமத்தை உருவாக்கும் முறை, தளதாகேப் பொறிப்பு ஆகியன இணைக்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 39741).

### 12965

**வீரசங்கிலியன்: பாகம் 1.** ம.க.அ.அந்தனிசில் (மூலம்), முருகேசு கௌரிகாந்தன் (பதிப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: கரிகணன் (தனியார்) நிறுவனம், இல.681, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2017. (யாழ்ப்பாணம்: கரிகணன் (தனியார்) நிறுவனம்).

x, 47 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ.

யாழ்ப்பாண மன்னன் சங்கிலியன் பற்றிய வரலாற்று இலக்கியமாக இந்நூல் படைக்கப்பட்டுள்ளது. ஈழநாடு பத்திரிகையில் 1979ஆம் ஆண்டு தொடர் கட்டுரையாக, 21.10.1979 இல் தொடங்கி 18.11.1979 வரை ஐந்து வாரங்கள் வெளிவந்தது. பின்னர் சிறிய இடைவெளியின் பின்னர் 16.12.1979இல் இறுதிப்பகுதி வெளிவந்தது. இவ்விதழில் சங்கிலி மன்னன் ஆட்சிபீடம் ஏறியது வரையிலான வரலாறு சொல்லப்பட்டிருந்தது. 16.12.1979 இதழில் கட்டுரையின் இறுதியில்,

"சங்கிலி மன்னனின் ஆட்சி நிர்வாகம் எப்படியிருந்ததென்பதை அடுத்த வாரமலரில் காண்க" என்றிருந்தது. தொடர்ந்து எழுதுவதில் அவருக்கிருந்த தடைகள் காரணமாக இத்தொடர் பின்னர் தொடரவேயில்லை என்பது சோகமான செய்தியாகும். "சங்கிலி அரண்மனை பாதுகாக்கப்படுமா?" என்ற தலைப்பில் ஈழநாடு 04.10.1979 இதழில் வெளிவந்த கட்டுரையும் இங்கு சேர்க்கப்பட்டுள்ளது. ம. க. அ. அந்தனிசில் (31.12.1934-09.07.2005) ஈழத்தின் குறிப்பிடத்தக்கதொரு எழுத்தாளரும், பத்திரிகையாளருமாவார். தீப்பொறி, ஒரு தீப்பொறி ஆகிய பத்திரிகைகளின் ஆசிரியராக இருந்தவர். தமிழ்த் தேசியத்துக்கு ஆதரவான கருத்துக்களை தமது பத்திரிகைகளில் எழுதியவர். 1967 இல் தீப்பொறி, 1970 இல் பல்கலை ஆகிய பத்திரிகைகளை நடத்தியவர். இவரது தீப்பொறி பத்திரிகை இலங்கை அரசினால் தடை செய்யப்பட்டதை அடுத்து, 1972 இல் ஒரு தீப்பொறியைத் தொடங்கி நடத்தினார். இவரது அடுக்குமொழித் தலைப்புக்கள் நீண்ட காலம் பொதுமக்களால் பேசப்பட்டுவந்தன. நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்துக்காக யாழ்ப்பாண நீதி மன்றம் இவருக்கு இரண்டு ஆண்டுகள் சிறைத்தண்டனை வழங்கியிருந்தது. இவர் ஒரு சிறந்த மல்யுத்த வீரரும் ஆவார். தமது இறுதிக் காலத்தில் தமிழின் தொன்மையையும் இலக்கிய நயத்தையும் வெளிப்படுத்தும் கருத்துச் செறிவுள்ள கட்டுரைகளை பத்திரிகைகளில் தொடராக எழுதி வந்தார். விவிலியக் கதைகளை தமிழில் எழுதினார். சொல்லேருழவர் என இவர் அழைக்கப்பட்டார். தமது இறுதிக் காலத்தில் கண்பார்வைக் கோளாறையும், நீரிழிவு நோய்ப் பாதிப்புக்கும் உள்ளான நிலையில், அந்தனிசில் மட்டக்களப்பில் 2005 இல் காலமானார். ("சங்கிலி மன்னன்" பற்றிய பேராசிரியர் சி.பத்மநாதனின் கூற்று இங்கு குறிப்பிடல் பொருத்தமானது: "யாழ்ப்பாண மன்னர்களில் இருவர் சங்கிலி எனும் பெயருடையோர். முதலாம் சங்கிலி (1519-1561) வலிமை படைத்த அரசன். துப்பாக்கி, பீரங்கி முதலிய நவீன ஆயுதங்களை யாழ்ப்பாணப் படைகளுக்கு முதன்முதலாக வழங்கியவன். சாதுரியமானவன் தந்திரசாலி. கோவையிலுள்ள அரச பிரதிநிதியின் தலைமையில் படையெடுத்து வந்த போர்த்துக்கேயரின் பலமான சேனையை வெற்றியேற்றியமை சங்கிலியனின் சிறப்புமிக்க சாதனை. போர்த்துக்கேயருக்கு எதிரான போர்கள் இடையறாது நடைபெறவேண்டும் என்பது சங்கிலியின் நிலைப்பாடு. புத்த சமயத்தைப் பாதுகாப்பதற்குப் போர்த்துக்கேயருக்கெதிரான போரைத் தொடங்குமாறு அவன் மாயதுன்னையை வலியுறுத்தினான். படையுதவி தருவதாகவும் சொன்னான். இரண்டாம் சங்கிலி 17ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலே சில வருடங்கள் அதிகாரஞ்செய்தவன். அரசகேசரி எனும் அறிஞரைப் படுகொலை செய்தவன். 1691இலே போர்த்துக்கேயர் போரிலே சங்கிலி குமாரனைக் கைப்பற்றிச் சென்றனர். யாழ்ப்பாண இராச்சியம் வீழ்ந்தது. இவர்களைக் காட்டிலும் மிகச்சிறந்த மன்னர்கள் யாழ்ப்பாணத்தில் முற்காலத்தில் அரசு புரிந்தனர். பலமான கடற்படையைக் கொண்டிருந்தனர். ஆரியச் சக்கரவர்த்தியின் 100 வணிகக் கப்பல்கள் யெமென் நாட்டுக்குப் பிரயாணம் செய்வதைக் கண்டதாக இபுன் பத்தூத்தா சொல்வார். தமிழின் தேசிய அடையாளமான தேசவளமைக்கு அவர்களே வடிவம் கொடுத்தனர். மருத்துவ

நூற் களஞ்சியமான பரராசசேகரம் போன்ற தொகுதிகளும் தக்ஷிணகைலாச புராணம் முதலான நூல்களும் அவர்கள் உருவாக்கிய அருஞ்செல்வங்கள்".)

**மேலும் பார்க்க: 13A04, 13A30**

## 954.93(1) இலங்கை வரலாறு-பாடநூல்கள்

### 12966

**பண்டைய ஈழம்: இரண்டாம் பாகம்: பொலன்னறுவைக் காலமும் பிந்திய காலங்களும்.** வே.க.நடராசா. யாழ்ப்பாணம்: சேது நூலக வெளியீடு, கேவளை, கரவெட்டி, 3வது திருத்திய பதிப்பு, மாசி 1973. (யாழ்ப்பாணம்: தமிழ்ப் பூங்கா அச்சகம், நெல்லியடி-கரவெட்டி).

viii, (24), 218 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: ரூபா 5.50, அளவு: 21x14 சமீ.

க.பொ.த. உயர்தர வகுப்புகளுக்குரிய இவ்வரலாற்று நூலில் பொலன்னறுவைக் காலத்துக்கும் பிந்திய காலங்களுக்கும் உரிய வரலாறுகள் விளக்கப்பட்டுள்ளதுடன் பரீட்சை வினாத்தாள்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. சோழராட்சியில் இலங்கை-விளைவுகள், விஜயபாகுவும் விடுதலை இயக்கமும், மகா பராக்கிரமபாகு, தென்கிழக்காசிய நாடுகளும் இலங்கையும், கலிங்க மன்னன் ஆட்சி: பொலந்நறுவை யின் வீழ்ச்சி, பொலந்நறுவைக் காலப் பண்பாடு, தம்பதெணிய அரசு: பாண்டிய செல்வாக்குப் பரவல், யாழ்ப்பாண அரசும் கம்பளை ஆட்சியாளரும், கோட்டை அரசின் எழுச்சி: 6ஆம் பராக்கிரமபாகு, பிந்திய காலச் சிங்களப் பண்பாடு ஆகிய 10 அத்தியாயங்களில் விளக்கப்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 39627).

## 954.93(2) இலங்கை இனப்பிரச்சினை வரலாறு

### 12967

**இலங்கையில் இனப்பிரச்சினையின் வரலாறு: 1833-1990 வரை காலவரிசைப்படுத்தப்பட்ட சிறு குறிப்புகள்.** சி.அ.யோதிலிங்கம். கொழும்பு 7: விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம், இல.3, டொறிங்டன் அவென்யு, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (அச்சக விபரம் தரப்படவில்லை).

54 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18.5x10.5 சமீ.

இலங்கையில் தமிழ் சிங்கள முஸ்லிம் இனங்களுக்கிடையேயான பிரச்சினை 1833ஆம் ஆண்டிலிருந்து பதிவுசெய்யப்பட்டுவந்துள்ளது. 1948இல் சுதந்திரத்திற்குப் பின்னர் இப்பிரச்சினையின் போக்கு தீவிரமடைந்து வந்துள்ளது. காலக்கிரமத்தில் அரசியல்மயப்படுத்தப்பட்ட இனவாத சிந்தனையால் ஆயுதரீதியான இன விடுதலைப் போராட்டமாக அது எழுச்சிபெற்றமை ஒரு துன்பியல் வரலாறாகும். இந்நூலில் 1833-1990 வரையான காலகட்டத்தில் இடம்பெற்ற இனப்பிரச்சினை தொடர்பான சம்பவங்கள், தீர்வு முயற்சிகள் என்பவற்றை காலவரிசைப்படுத்தப்பட்ட

*பட்டியலாகச் சிறு குறிப்புகள் வாயிலாக இந்நூலில் ஆசிரியர் பதிவுசெய்திருக்கிறார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 25489).*

### 12968

**இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணுவதில் எதிர்நோக்கும் அடிப்படைப் பிரச்சினைகள்: சிறீ லங்காவின் வாளேந்தும் ஆண் சிங்கக் கொடியும் இலங்கைப் பிரஜைகளும்.** *அ.சி.உதயகுமார். சுன்னாகம்:* Institute of Historical Studies, *வேதராணியார் வளவு, உடுவில், 1வது பதிப்பு, ஏப்ரல் 2002. (யாழ்ப்பாணம்: பாரதி பதிப்பகம், 430, காங்கேசன்துறை வீதி).*

xxii, *58 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20*x*14.5 சமீ.*

*இலங்கையின் தேசக் கொடி பற்றியும் அதில் காணப்படும் வாளினை ஏந்தும் ஆண்சிங்கமொன்றின் உருவப்படம் பற்றியும் அதன் அரசியல் பின்னணி பற்றியும் இந்நூலில் ஆராயப்பட்டுள்ளது. அதன் பின்னணியில் இலங்கையின் இனப் பிரச்சினைக்கான தீர்வுபற்றியும் பேசப்படுகின்றது. கவனிக்கப்படாத பல்வேறு சிறு விடயங்களே இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றைக் காணுவதில் பிரச்சினைகளை தோற்றுவித்தபடி உள்ளன என இந்நூல் குறிப்பிடுகின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 26751).*

### 12969

**இனப்பிரச்சினை: ஓர் இஸ்லாமியக் கண்ணோட்டம்.** M.A. M. *மன்சூர். கொழும்பு 14: மீள்பார்வை வெளியீட்டகம், 63/5* C, Stace Road, *1வது பதிப்பு, பெப்ரவரி 1999. (அச்சக விபரம் தரப்படவில்லை).*

*(4), 40 பக்கம், விலை: ரூபா 40., அளவு: 21.5*x*14.5 சமீ.,* ISBN: *955-8226-00-9.*

*இனப்பிரச்சினை பற்றிய இஸ்லாமியக் கண்ணோட்டம் என்ன என்ற கருத்தினை இங்கு முன்வைக்க முயற்சி செய்யப்படுகிறது. இதுவொரு வித்தியாசமான சிந்தனை. இலங்கை நாட்டினுள்ளே வாழுகின்ற பல்லினங்கள் குறித்த இஸ்லாமியக் கண்ணோட்டம் யாது என்பதை இந்நூலில் ஆசிரியர் விரிவாக ஆராயவில்லை. பொதுவாக இப்பிரச்சினையை இஸ்லாம் எப்படி நோக்குகிறது, இதன்போது ஒரு முஸ்லீமின் நிலைப்பாடு என்ன என்பதையே கூற முயன்றுள்ளார். இனப் பிரச்சினைகளும் போராட்டங்களும், இஸ்லாத்தில் நாடு, இனம், மொழி, இஸ்லாத்தில் தேசியம், இஸ்லாத்தில் மனிதம், மதச்சார்பின்மையும் இஸ்லாமும், இஸ்லாமிய அரசில் சிறுபான்மையினர், இஸ்லாமியவாதியின் நிலைப்பாடு, போராட்ட ஒழுக்கம், முஸ்லிமை இயக்குவது எது ஆகிய ஒன்பது இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 21548. நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தின் சேர்க்கை இலக்கம் 012196).*

12970

**உதவி, மோதல் மற்றும் இலங்கையில் சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் 2000-2005.** ஜொனாதன் குட்ஹான்ட், பார்ட் கிளெம், டில்ருக்சி பொன்சேகா, எஸ்.ஐ.கீதபொன்கலன் மற்றும் சொனாலி சர்தேசாய். கொழும்பு 7: ஆசிய மன்றம், 3 1/A, ராஜகீய மாவத்தை, 2வது பதிப்பு, 2005, 1வது பதிப்புவிபரம் தரப்படவில்லை. (அச்சக விபரம் தரப்படவில்லை).

iii, 173 பக்கம், அட்டவணைகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21 சமீ.

நெதர்லாந்து வெளிவிவகார அமைச்சு, சுவீடிஷ் சர்வதேச அபிவிருத்தி ஒத்துழைப்பு முகவரகம், ஆசியமன்றம், ஐக்கிய இராச்சிய அரசாங்கம் , உலக வங்கி ஆகியவற்றின் உதவியுடன் முன்னெடுக்கப்பட்ட திட்டத்தின் பெறுபேறாக இந்நூல் வெளியிடப் பட்டுள்ளது. 2000ஆவது ஆண்டின் பின்னர் இடம்பெற்ற முக்கிய நிகழ்வுகள் குறித்த ஒரு பொது நோக்கு, மோதல் கட்டமைப்புக்கள் (அறிமுகம்/இலங்கை மோதலின் அமைப்புரீதியான பரிமாணங்கள்/மோதல் கட்டமைப்புக்கள் குறித்த முடிவுரைகள்), மோதல் இயங்கியல் (அறிமுகம்/சமாதானத்தின் இயங்கியல்/ பாதுகாப்பு இயங்கியல்/அரசியல் இயங்கியல்: துண்டாடப்பட்ட நிலை மற்றும் சமாதானச் செயன்முறை/ சுனாமி மற்றும் சமாதானம்/மோதல் இயங்கியல்/ முடிவுக் குறிப்புகள் மற்றும் வருங்காலத் தோற்றப்பாடுகள்), சர்வதேச தலையீடு (அறிமுகம்/சமாதானத்தை எடுத்து வருதல்/அபிவிருத்தி உதவி மற்றும் சமாதானத்தைக் கட்டியெழுப்புதல்/ சுனாமி மற்றும் சர்வதேச உதவி/முடிவுரைகள்), முடிவுரைகள் மற்றும் தாக்கங்கள் (ஒட்டுமொத்த முடிவுரைகள்/சமாதானத்தை எடுத்து வருவது தொடர்பான தாக்கங்கள்/உதவி வழங்குநர்கள் தொடர்பான தாக்கங்கள்) ஆகிய ஆறு பிரிவுகளில் இவ்வறிக்கை எழுதப்பட்டுள்ளது. (இந் நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 44545).

12971

**தமிழ் மக்களின் விடுதலைப் பயணத்தில் ஊடகர்களின் பங்கு (கட்டுரைத் தொகுப்பு).** சண். தவராஜா. ஜேர்மனி: அகரம் வெளியீடு, 1வது பதிப்பு, 2018. (திருக்கோணமலை: ஸ்ரீராம் அச்சகம்).

xx, 188 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x13.5 சமீ., ISBN: 978-955-4036-05-5.

மட்டக்களப்பைப் பிறப்பிடமாகக் கொண்ட சண். தவராஜா, 2004 முதல் சுவிஸில் வாழ்ந் வருகிறார். 1995 ஆம் ஆண்டில் வீக் என்ட் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் செய்தியாளராகத் தனது பணியை ஆரம்பித்த அவர் தொடர்ந்து தினக்குரல் பத்திரிகையின் மட்டக்களப்பு மாவட்ட நிருபராக ஒன்பது வருடங்கள் கடமையாற்றினார். சுவிஸ் நாட்டில் "நிலவரம்" பத்திரிகையின் ஆசிரியராகப் பணியாற்றிய அவர் ஜேர்மனி- ஐரோப்பிய தமிழ் வானொலி, தமிழமுதம் போன்ற புகலிடத் தமிழ் வானொலிகளிலும், T.T.N. பிரான்ஸ், G.T.V. லண்டன், தீபம் -

லண்டன் உள்ளிட்ட தொலைக்காட்சிகளிலும் செய்தியாளராகவும் அரசியல் விமர்சகராகவும் பணியாற்றியவர். இந்நூலில் அகரம் சஞ்சிகைக்காக இவர் எழுதிய 25 சமூகவியல், அரசியல்சார் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. தமிழ் மக்களின் விடுதலைப் பயணத்தில் ஊடகர்களின் பங்கு, மறுவாசிப்புக்கு ஆளாகும் சிவராம், தாமதிக்கப்பட்ட நீதி மறுக்கப்பட்ட நீதி, தமிழ் மக்களுக்கு என்ன தேவை, மகிந்த குழுமத்தின் சரிவு ஆரம்பம், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் -வழிதவறிய சகோதரன், தமிழ்நாட்டில் நிலவும் ஈழத் தமிழர் ஆதரவு அலை காத்திரமான ஒரு தீர்வை நோக்கி இட்டுச் செல்லுமா? இசைப்பிரியா-ஊடகர்? பயங்கரவாதி? ஊடகப் பயங்கரவாதி? இரா.சம்பந்தன் கையில் தமிழர் தலைவிதி? ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வு, முஸ்லிம் இனவாதத்தைத் தமிழ் இனவாதத்தால் முறியடித்தல், தமிழகத்தில் திறந்தவெளியில் சிறையிருக்கும் ஈழத்தமிழ் ஏதிலிகள், கிழக்கு மாகாணசபைத் தேர்தல்-தேவை தமிழ் முதலமைச்சரா, இன ஐக்கியமா?, அனந்தி எழிலன்- ஒரு பரிசோதனை எலி, வித்தியா படுகொலை-தேவை கலாசாரப் புரட்சி, மட்டக்களப்பின் வரலாறு நேர்மையாகப் பதிவு செய்யப்படுமா?, சுப்பர் சிங்கர் ஜுனியர் பாடல் போட்டி- சிறுவர் உரிமை மீறல், வேட்டி பற்றிய கனவில் இருந்தபோது கட்டியிருந்த கோவணமும் ..? பேசாப் பொருள், சைவத்தமிழ்த் திருக் கோவில்களின் கருவறையில் செந்தமிழ்த் திருமறை வழிபாடு- புதிய தொடக்கத்தின் ஆரம்பம், தோழர் கி.பி. அரவிந்தனின் இறுதி நிகழ்வு-சில மனப்பதிவுகள், புலம்பெயர் நாட்டில் காலாவதியாகும் அரசியல் செயற்பாடுகள், தமிழ் மக்கள் தலையில் திணிக்கப்படவுள்ள தீர்வு- பரிகாரம் ஆகுமா? மரணித்தோரெல்லாம் மாவீரர் உயிரோடிருப்போர் யாவரும் துரோகிகள்?, தேசிய மாவீரர் நாள் ஒரு சடங்கு நிகழ்வா? எனப் பல்வேறு தலைப்புகளில் இக்கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

### 12972

**பண்டாரநாயக்க இலட்சியங்களும் சமூக அமைதியும்.** நீலன் திருச்செல்வம். கொழும்பு 7: நினைவுக்குழு, பண்டாரநாயக்க நினைவுச் சொற்பொழிவு, பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபம், பௌத்தலோக மாவத்தை, 1வது பதிப்பு, செப்டெம்பர் 1992. (அச்சக விபரம் தரப்படவில்லை).

36+4 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x14 சமீ.

1992 செப்டெம்பர் 26ஆம் திகதி பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் கலாநிதி நீலன் திருச்செல்வம் ஆற்றிய உரையின் நூல்வடிவம் இது. பின்னிணைப்பாக இறுதி நான்கு பக்கங்களிலும் 26.7.1957 இல் கைச்சாத்திடப்பட்ட பண்டா-செல்வா உடன்படிக்கை முழுமையாகத் தரப் பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 13824/10276. நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தின் சேர்க்கை இலக்கம் 014870).

## 12973

**பெண் விடுதலையும் விடுதலைப் புலிகளும்: தேசத்தின்குரல் அன்ரன் பாலசிங்கம் எழுத்தும் பேச்சும்.** அன்ரன் பாலசிங்கம் (மூலம்), அறிவன் தமிழ் (தொகுப்பாசிரியர்). சென்னை 600107: தமிழர் தாயகம் வெளியீடு, எண் 1/70 C, பூந்தமல்லி நெடுஞ்சாலை, 1வது பதிப்பு, மே 2015. (சென்னை: பாண்டியன் மறுதோன்றி அச்சகம்).

(12), 147 பக்கம், விலை: இந்திய ரூபா 110., அளவு: 22x14 சமீ.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகராக இருந்த அன்ரன் பாலசிங்கம் அவர்களின் உரைகளும், எழுத்தாக்கங்களும் இந்நூலில் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. பொறுப்பை வாரித் தூற்றிவரும் புளுகர்களுக்கு ஊடே புதிய புறநானூறு படைத்த புலிப்படைத் தலைமகன் என்ற முன்னுரையுடன் தொடங்கும் இத்தொகுப்பில் அரச பயங்கரவாதமும் ஆயுதப் புரட்சியும், சோசலிசத் தமிழீழம், இரண்டு தசாப்தங்களும் புலிகளும், பெண் விடுதலையும் விடுதலைப் புலிகளும், சாதியமும் புலிகளும், புலிகளும் மதச் சுதந்திரமும், ஆக்கிரமிப்பு யுத்தம், மாவீரர் நாள் நிகழ்வு-அன்ரன் பாலசிங்கம் இங்கிலாந்தில் ஆற்றிய சிறப்புரை (27.11.1999), நெருக்கடியைத் தவிர்த்து இயல்பு நிலையைத் தோற்றுவித்தல் அவசியம், பிரச்சினையைப் பேசித் தீர்க்க அரசிற்கு உண்மையான அக்கறை இல்லை (25.3.2000), மாவீரர் நாள் நிகழ்வு-அன்ரன் பாலசிங்கம் இங்கிலாந்தில் சிறப்புரை (27.11.2000), சிறிலங்கா அரசு முழு அளவிலான போருக்குத் தயாராகின்றது (12.01.2001) தமிழ் கார்டியனுக்கு வழங்கிய செவ்வி ஆகிய 12 ஆக்கங்கள் இங்கு ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

## 12974

**போரின் படிப்பினைகள்-3: நம்பிக்கையின் மலர்ச்சி.** ஜோன் றிச்சார்ட்சன் (ஆங்கில மூலம்), க.சண்முகலிங்கம் (தமிழாக்கம்). கொழும்பு 5: சமூக விஞ்ஞானிகள் சங்கம், 12, சுலைமான் டெர்ரஸ், 1வது பதிப்பு, செப்டெம்பர் 2011. (நுகேகொட: பிக்பேர்ட் பிரின்டர்ஸ், 119, சுபத்திராம வீதி, கங்கொடவில).

xiv, 152 பக்கம், வரைபடங்கள், விலை: ரூபா 200., அளவு: 22x15 சமீ.

ஜோன் றிச்சார்ட்சன் ஆங்கிலத்தில் எழுதிய "நஞ்சூட்டடப்பட்ட சுவர்க்கம்" (Paradise Poisoned) என்ற நூலின் தமிழ்/சிங்கள மொழிபெயர்ப்புகள் எட்டுப் பாகங்களாக வெளியிடத் திட்டமிடப்பட்டது. அவ்வகையில் "போரின் படிப்பினைகள்" என்ற தலைப்பில் ஏககாலத்தில் சிங்கள, தமிழ் மொழிகளில் வெளியிடப்பட்ட அந் நூலின் மூன்றாவது பாகம் இது. முதலாவது பாகம் இலங்கை உள்நாட்டுப் போரின் செலவுகளும் தாக்கங்களும் பொருளாதார இழப்புகளும் (2008) என்ற தலைப்பிலும், இரண்டாம் பாகம் நெருக்கடியின் பாதை (2011) என்ற தலைப்பிலும் வெளியிடப்பட்ட நிலையில் இம்மூன்றாம் பாகம் மூலநூலின் 6ம்,7ம்,8ம் அத்தியாயங்களின் மொழிபெயர்ப்பாக அமைந்துள்ளது. இதில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலம், பண்டாரநாயக்க யுகத்தின் தொடக்கம், புதிய யுகத்தின் அரசியல் ஆகிய மூன்று பிரதான இயல்கள் அடங்குகின்றன. ஜோன் றிச்சார்ட்சன் அமெரிக்க பல்கலைக்கழகங்களின் சர்வதேச சேவைகளுக்கான பள்ளியில்

சர்வதேச அபிவிருத்தி பேராசிரியராகவும் அதே பல்கலைக்கழகத்தின் கற்பித்தலுக்கான சிறப்பு மையத்தின் இயக்குநராகவும் பணியாற்றுகின்றார். இலங்கையிலுள்ள கொழும்புப் பல்கலைக்கழகம் மற்றும் அமெரிக்காவிலுள்ள மசசூசட்ஸ் தொழில்நுட்பத்திற்கான நிறுவனம் ஆகியவற்றின் வருகை தரு புலமையாளராகவும் இருந்துள்ளார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 60881).

## 12975

**மனிதனைத் தேடும் மனிதன்.** அன்ரன் பாலசிங்கம். சென்னை 600004: கானல் வெளியீடு, 1வது பதிப்பு, 2014. (சென்னை: கிளாசிக் பிரின்டர்ஸ்).

176 பக்கம், விலை: இந்திய ரூபா 150., அளவு: 21.5x13.5 சமீ.

1990களின் முற்பகுதிகளில் கருணாகரனை ஆசிரியராகக் கொண்டு யாழ்ப்பாணத்திலிருந்து கலை பண்பாட்டுக் கழகத்தினால் வெளியிடப்பட்டுவந்த "வெளிச்சம்" சஞ்சிகையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்டன் பாலசிங்கம் பிரம்மஞானி என்ற புனைபெயரில் எழுதிய தொடர் கட்டுரைகளின் தொகுப்பு. எம்.ஜி.ஆரும் புலிகளும், ராஜீவ்-பிரபா சந்திப்பு, மனிதனைத் தேடும் மனிதன், கருத்துலகமும் வாழ்வியக்கமும், மனப்புரட்சியும் மனித விடுதலையும்-ஜிட்டு கிருஷ்ணமூர்த்தி, உலக வரலாறும் மனித விடுதலையும், பழமைக்கு எதிரான பண்பாட்டுப் புரட்சி, அதிகாரத்தின் அரூபக் கரங்கள், தனி மனித தத்துவம், அர்த்தமும் அபத்தமும், மனிதத்துவம்-சாத்தர் பற்றிய ஒரு அறிமுகம் ஆகிய பதினொரு கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

## 12976

**வன்னியில் தமிழரசு: சிம்மக்குரலோன் செல்லத்தம்பு அரச பேரவையில் ஆற்றிய உரைகள்.** சேவியர் மார்க் செல்லத்தம்பு (மூலம்), த.ம.பீற்றர் பொன்கலன்ட் (தொகுப்பாசிரியர்). நெடுங்கேணி: த.ம.பீற்றர் பொன்கலன்ட், 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1973. (கொழும்பு: அருளொளி அச்சகம்).

32 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 19x13.5 சமீ.

இந்நூல் திரு. சே.மா.செல்லத்தம்புவின் இலங்கைப் பாராளுமன்ற உரைகளின் ஹன்சார்ட் பதிவுத் தொகுப்பாகும். இதில் அரசியல் சாசனம் பற்றி 7.7.1972இல் ஆற்றிய உரை (ஹன்சார்ட் பக்கம் 997-1005), தென்னை ஆராய்சிச் சட்டமூலம் தொடர்பாக 8.10.1971இல் ஆற்றிய உரை (ஹன்சார்ட் பக்கம் 1307-1319), அடக்குமுறை ஜனநாயகமா என்ற தொனிப்பொருளில் 19.09.1971இல் ஆற்றிய உரை (ஹன்சார்ட் பக்கம் 663-675) என்பன இடம்பெற்றுள்ளன. இலங்கைத் தமிழ் அரசியல்வாதியும், நாடாளுமன்ற உறுப்பினருமான சே.மா. செல்லத்தம்பு, 20 அக்டோபர் 1917 இல் பிறந்தவர். இவர் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் வவுனியா தேர்தல் தொகுதியில் 1970 நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு 273 வாக்குகள் வித்தியாசத்தில் தமிழ் காங்கிரசு வேட்பாளர் தா.சிவசிதம்பரத்தை வென்று நாடாளுமன்றம் சென்றிருந்தார். பின்னர் தமிழர்

விடுதலைக் கூட்டணியின் வேட்பாளராக முல்லைத்தீவு தேர்தல் தொகுதியில் 1977 தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். "தமிழ் ஈழத்துக்கு ஆதரவளிப்ப தில்லை" என நாடாளுமன்றத்தில் சத்தியப்பிரமாணம் எடுப்பதற்கான ஆறாம் திருத்தச் சட்டமூலத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், கருப்பு சூலை வன்முறைகளில் 3,000 தமிழ் மக்கள் கொல்லப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், அனைத்து தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்களும் 1983 முதல் நாடாளுமன்றத்தை ஒன்றியொதுக்கல் செய்த வேளையில், மூன்று மாதங்கள் நாடாளுமன்றத்துக்குச் சமூகமளிக்காதமையால், 21.10.1983 அன்று திரு. செல்லத்தம்பு முல்லைத்தீவு தொகுதிக்கான நாடாளுமன்ற இருக்கையை இழந்தார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 10276).

## 12977

**விடுதலைப் புலிகளும் சமாதான முயற்சிகளும்.** கரிகாலன் (தொகுப்பாசிரியர்), கு.பூபதி (பதிப்பாசிரியர்). சென்னை 600078: தோழமை வெளியீடு, எண் 10, ஆறாவது தெரு, முதல் பிரிவு, கே.கே.நகர், 1வது பதிப்பு, ஜுலை 2013. (அச்சக விபரம் தரப்படவில்லை).

375 பக்கம், விலை: இந்திய ரூபா 300., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-93-80369-39-6.

விடுதலைப் புலிகள் சமாதான முயற்சிகளில் அக்கறையுடன் செயற்படவில்லை என்று பரவலான கருத்தொன்று உலக அரங்கில் விதைக்கப்பட்டிருந்த நிலையில் அதனை மறுதலிப்பதாக, சமாதான நோக்கில் விடுதலைப் புலிகளுக்கு இருந்த ஈடுபாட்டை விளக்கும் நோக்கில் விடுதலைப் புலிகளின் பார்வையில் அவர்களின் நியாயப்பாடுகளை உள்ளடக்கி வெளிவந்திருக்கும் விரிவான அரசியல் வரலாற்று ஆவண நூல் இது. ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கவின் காலப்பகுதியில் 2.9.1994 இல் த.வி.பு.தலைவர் வே.பிரபாகரன் பத்திரிகை அறிக்கையின் மூலம் தொடக்கி வைத்த சமாதானத்துக்கான பாதையில் நடைபெற்ற தொடர் கடிதப் பரிமாறல்கள், சம்பவங்கள் ஆகியவற்றின் துணையுடன் இக்கட்டுரை வடிவமைக்கப் பட்டுள்ளது. 7.2.2004இல் விசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் பாராளுமன்றக் கலைப்பு வரையிலுமான விடுதலைப் புலிகள் - (நோர்வேயின் பங்களிப்புடனான) அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தையின் முறிவு வரையில் மிக விரிவாக இந் நூலில் எழுதப்பட்டுள்ளது. பேச்சுவார்த்தைகளில் நேரடித் தொடர்புள்ளவராக உணரப்பட்டபோதிலும் இந்நூலின் ஆசிரியர் யார் என்று நூலின் எவ்விடத்திலும் குறிப்பிடப்படவில்லை. பயன்படுத்தப்பட்ட கடிதத்தொடர்பு ஆவணங்கள் மூலப்பிரதிகளாகவன்றி, நூலுக்காகவே மீளத்தட்டச்சிடப்பட்டமையால் அவற்றின் ஆய்வுநோக்கம் கருதிய நம்பகத்தன்மையும் கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது. மொத்தத்தில் வரலாற்று நம்பகத்தன்மை பற்றிய எவ்வித உசாத்துணை ஆதாரங்களும், மூலாதாரக் குறிப்புகளுமின்றி இந்நூல் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

**மேலும் பார்க்க: 12224,12227,12236,12240,12259,12981,12994.**

## 954.93(3) இனங்கள், மக்கள் குழுமங்கள், இன உறவுகள்

### 12978

**சமாதானத்திற்கு வழி.** தகவல் திணைக்களம். கொழும்பு: இலங்கை தகவல் திணைக்களம், கைத்தொழில் உள்ளூர் விவகார, கலாசார அமைச்சு, 1வது பதிப்பு, 1960. (கொழும்பு: இலங்கை அரசாங்க அச்சகம்).

219 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12 சமீ.

1958 இனக்கலவரத்தின் பின்னர் கடந்துவந்த இரண்டாண்டுகளில், இலங்கையில் சமாதானம் உருவாகி அனைவரும் இணைந்து வாழும் கருத்தியலை இளம் மாணவர்களிடையே விதைக்கும் நோக்கமாக இலங்கைப் பாடசாலை மாணவர்களிடையே "சமாதானத்திறக வழி" என்ற தலைப்பில் (சாமயே மாவத்த, Way to Peace) கைத்தொழில் உள்ளூர் விவகார, கலாசார அமைச்சினால் பாடசாலை கள் தோறும் ஆக்கங்கள் கோரப்பட்டிருந்தன. கிடைத்தவற்றுள் சிறந்ததெனக் கருதிய 14 சிங்களக் கட்டுரைகளையும், எட்டு தமிழ்க் கட்டுரைகளையும், ஐந்து ஆங்கிலக் கட்டுரைகளையும் இந்நூலில் தொகுத்து வழங்கியிருக்கிறார்கள். மும்மொழிகளிலும் அமைந்துள்ள இந்நூலின் பக்கம் 7-116 வரை சிங்கள மொழியிலும், பக்கம் 119-188 வரை தமிழ் மொழியிலும், பக்கம் 191-219வரை ஆங்கில மொழியிலும் விடயங்கள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 2904).

### 12979

**பபிலோனியாவில் இயேசுவும் தமிழர்களும்.** A.E.C.இராசரெத்தினம். வவுனியா: A.E.C.இராசரெத்தினம், 154, குட்செட் வீதி, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (வவுனியா: அமைதி அச்சகம், 154, குட்செட் வீதி).

83 பக்கம், வரைபடங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 19x14 சமீ.

இந்நூலாசிரியர் இயேசுவுக்கும் தமிழருக்கும் இடையில் இருந்த ஆதித் தொடர்பினை நிரூபிக்க முயன்றுள்ளார். தமிழருக்கு முருகன் போன்று, பபிலோனியாவில் இயேசு குலதெய்வமாக இருந்தார் என்கிறார். கலாநிதி தாவீது அடிகளாரும், ஞானப்பிரகாச அடிகளாரும் இதைக் கூறியுள்ளதாகப் பதிவுசெய்யும் இவ்வாசிரியர், தமிழைப்போன்ற திராவிட மொழியான "எலு", அம்மொழியைப் பேசிய ஈழவர் அகதிகளாகப் பரவிப் புலம்பெயர்ந்தமையினால் அழிந்து விட்டது என்கிறார். இலங்கையில் விஜயனின் வருகையும் பபிலோனியாவின் வீழ்ச்சியும் ஒரே ஆண்டில் நடைபெறுகின்றது என்பதால் இலங்கைத் தமிழரின் பூர்வீகம் பபிலோனியா எனக் கூறுகின்றார். விஜயனையும் அவனது நண்பர்களையும் பபிலோனியாவிலிருந்து புலம்பெயர்ந்து இலங்கை வந்த தமிழர்களாக நிறுவ முனையும் ஆசிரியர் ஈழவர் மொழி "எலு" என்பதை ஏற்பதன் மூலமே இதனை நிரூபிக்கலாம் என்கிறார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 50051).

**12980**

**மலேசிய தமிழரின் சமகால வாழ்வியல் பரிமாணங்கள்: சில அவதானிப்புக்கள்.** லெனின் மதிவானம். கொழும்பு 8: அமரர் இர.சிவலிங்கம் ஞாபகார்த்தக் குழு, BQ 2/2 மெனிங் டவுன், மங்கள ரோட், 1வது பதிப்பு, செப்டெம்பர் 2007. (கொழும்பு 6: டெக்னோ பிரின்டர்ஸ், 55, டொக்டர் ஈ.ஏ.கூரே மாவத்தை, வெள்ளவத்தை).

*52 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14.5 சமீ.*

*அமரர் இர.சிவலிங்கம் அவர்களின் எட்டாவது நினைவுப் பேருரையாக ஆற்றப்பட்ட உரையின் எழுத்து வடிவம். அட்டனைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு.லெனின் மதிவானம் இலங்கை கல்வியமைச்சின் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தில் பிரதிக் கல்வி வெளியீட்டு ஆணையாளராகப் பணிபுரிகிறார். இவர் கொழும்புத் திட்டம் மற்றும் மலேசியாவின் இராஜதந்திரம், வெளிநாட்டு உறவுகள் நிலையத்தின் புலமைப்பரிசில் பெற்று மலேசியாப் பல்கலைக்கழகத்தில் இராஜதந்திரத் துறையில் முதுமாணிப் பட்டம் பெற்றவர். மலேசிய சமூகத்தில் ஏற்பட்டுள்ள சிறு குழுவினரின் வளர்ச்சியை மையமாகக் கொண்டு முழுச் சமூகத்தின் பொருளாதார நிலைமைகளையும் மதிப்பிட முனைவது நியாயமற்றது எனக்கூறும் இவர், இக்கூற்றானது மலேசியத் தமிழருக்கு எதிரான ஒடுக்குமுறைகளை மூடிமறைப்பதுடன் அத்தகைய பொருளாதார கலாசாசார பண்பாட்டு ஒடுக்குமுறை களை ஏனைய நாடுகளுக்கு இறக்குமதி செய்வதற்கான முயற்சிகளாகவே காணப்படுகின்றன என்கிறார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 44652).*

**மேலும்பார்க்க: 13A01,12197,12214,12227,***12228***,12993**

## 954.93(4) பிரதேச வரலாறு

**12981**

**அழிக்கப்பட்ட தமிழ் கிராமங்கள்.** எஸ்.ஜெயானந்தமூர்த்தி. வாழைச்சேனை: அபிஷா வெளியீட்டகம், இரத்தினம் வீதி, 1வது பதிப்பு, தை 2008. (மட்டக்களப்பு: ஆதவன் அச்சகம்).

*ix, 174 பக்கம், அட்டவணைகள், புகைப்படங்கள், தகடுகள், விலை: ரூபா 400., அளவு: 20x14.5 சமீ.*

*இனப்பிரச்சினையாலும், அரசாங்கத்தின் திட்டமிட்ட குடியேற்றத் திட்டங்களாலும் பாதிக்கப்பட்ட இலங்கையின் தமிழ்க் கிராமங்கள் பற்றிய ஆவணத் தொகுப்பு இது. ஒரு பத்திரிகையாளராகச் சம்பந்தப்பட்ட இடங்களுக்குச் சென்றும், பாதிப்புக்குள்ளானவர்களைச் சந்தித்தும் பதிவுசெய்யப்பட்ட தகவல்களை உள்ளடக்கிய கட்டுரைகள் இவை. வீரகேசரி வாரவெளியீட்டில் ஏற்கெனவே பிரசுரமானவை. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 47373).*

## 12982

**ஆழக்கடல் வென்றவர்கள்.** ஆதிகோவிலடி ஜெயம் (இயற்பெயர்: நடராசா சிவரத்தினம்). யாழ்ப்பாணம்: வல்வை மாலுமிகள் நலன்புரிச்சங்கம், இணை வெளியீடு: வல்வெட்டித்துறை: கலை கலாச்சார இலக்கிய மன்றம், 2வது பதிப்பு, 2013, 1வது பதிப்பு, 1995. (யாழ்ப்பாணம்: குரு பதிப்பகம், ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி).

xvi, 91 பக்கம், அட்டவணைகள், புகைப்படங்கள், விலை: ரூபா 150., அளவு: 20x14.5 சமீ.

ஆழ்கடல் வென்றவர்களில் இறுதியாக வாழ்ந்தவர்களில் ஒருவரான ஐயாத்துரை இரத்தினசாமியின் எண்ணக் கருத்தக்களை மிகவும் தத்ரூபமாக இந்நூலில் விபரித்து எம்மையெல்லாம் 1938ஆம் ஆண்டிற்கு அழைத்துச் செல்கிறார். திரு. இரத்தினசாமியின் நேர்காணலில் இருந்து 7ஆம், 8ஆம் நூற்றாண்டுகளிலிருந்து இவ்வூரில் வாழ்ந்த கப்பல் உரிமையாளர்கள் பற்றியும், கப்பல் கட்டும் தொழிலாளர் கள் பற்றியும் அறியமுடிகின்றது. 89 அடி நீளமான இரட்டைப் பாய்மரக் கப்பலான அன்னபூரணி கப்பலைக் கட்டி அதனைத் தற்பாதுகாப்பு அங்கிகளோ, உரிய பாதுகாப்புக் கருவிகளோ இல்லாமல் ஐந்தே ஐந்து வல்வை மாலுமிகளுடன் அத்திலாந்திக் கடலைக் கடந்த கதை மயிர்க்கூச்செறியச் செய்கின்றது. நூலாசிரியர் இலங்கை வங்கியின் வடமாகாண உதவிப் பொது முகாமையாளராகப் பணியாற்றி ஓய்வுபெற்றவர். படைப்பாளியாக "வரலாற்றில் வல்வெட்டித்துறை" என்ற நூலை முன்னர் வெளியிட்டவர். யாழ்மாவட்ட இலங்கை வங்கி விளையாட்டு நலன்புரி இலக்கிய மன்றத்தின் தலைவராகவும் "ஊக்கி" காலாண்டு சஞ்சிகையின் பிரதம ஆசிரியராகவும் பணியாற்றியவர். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 261845CC).

## 12983

**இணையில்:சீரினுவைத் திருவூரின் வாழ்வும் வளமும்.** மூத்ததம்பி சிவலிங்கம். யாழ்ப்பாணம்: சைவத்திருநெறிக் கழகம், இணுவில், 1வது பதிப்பு, 2013. (யாழ்ப்பாணம்: ஈஸ்வா பிறின்டேர்ஸ், திருநெல்வேலி).

xiv, 446 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: ரூபா 1000., அளவு: 25x18.5 சமீ., ISBN: 978-955-44538-0-7.

இந்நூல் சமய இயல், கல்வி இயல், கலை இயல், வாழ்வாதார இயல், சிறப்பியல், தொன்மை இயல், நிறைவியல் எனும் ஏழு இயல்களாக வகுக்கப்பட்டும் அவ்வவ் வியல்களுக்குரிய தகவல்கள் உபதலைப்புகளில் தொகுக்கப்பட்டும் பதிவுசெய்யப் பட்டுள்ளன. சமய இயலில் இணுவிலைச் சேர்ந்த கோயில்கள், சித்தர்கள், அருளாளர்கள், அந்தணர்கள், பூசகர்கள் ஆகியோர் பற்றிய தகவல்களும், கல்வியியலில் இணுவிலைப் பொலிவுறச்செய்த திண்ணைப் பள்ளிகள், புலவர்கள், பண்டிதர்கள், பேராசிரியர்கள், கலாநிதிகள், கல்விச் சாலைகள், மற்றும் கல்வித் துறையினர், இலக்கியப் படைப்பாளிகள் பற்றிய தகவல்களும், கலை இயலில் இணுவைக் கலைஞர்கள் பற்றியும் அவர்களால் பொலிவுபெற்ற கலைகள் பற்றியும்

தகவல்கள் தரப்பட்டுள்ளன. வாழ்வாதார இயலில் இணுவிலில் சிறந்தோங்கிய கைத்தொழில், நெசவுத் தொழில், மற்றும் தொழில் நிறுவனங்கள், வைத்திய பரம்பரையினர், கூட்டுறவு, சோதிடம், சந்தை பற்றிய தகவல்கள் தரப்பட்டுள்ளன. சிறப்பியலில் உலக அரங்கில் இணுவிலுக்குப் பெருமை தேடித்தந்த மகான்கள், சான்றோர்கள், பிரமுகர்கள், பொது நிறுவனங்கள் பற்றிய தகவல்கள் தரப் பட்டுள்ளன. தொன்மை இயலில் பெருமைதரும் பண்பாட்டுப் பாரம்பரியங்கள், அறநெறி தவறாத மூத்தோர் வாழ்க்கைமுறைகள் பற்றிய தகவல்கள் தரப்பட்டுள்ளன. இறுதியான நிறைவியலில் இணுவைத் திருவூர் பற்றிய 150 ஆண்டுக்கால பாரம்பரிய வரலாற்றைத் தொகுத்து வழங்கிய அனுபவக் குறிப்புடன் இந்நூலை ஆசிரியர் பூர்த்திசெய்கின்றார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 53962).

### 12984

**இராவண தேசம்: திருகோணமலை மண்ணின் வரலாற்றுப் பதிவுகள்.** திருமலை நவம் (இயற்பெயர்: திரு.சி.நவரத்தினம்). திருக்கோணமலை: வி.மைக்கல் கொலின், தாகம் பதிப்பகம், அனுசரணை, கனடா: உள்ளம் அமைப்பினர், 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2017. (மட்டக்களப்பு: வணசிங்கா பிரின்டர்ஸ், திருக்கோணமலை வீதி).

xvi, 160 பக்கம், வண்ணப் புகைப்படங்கள், விலை: ரூபா 500., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-4044-00-5.

வீரகேசரி பத்திரிகையில் தொடராக வெளிவந்த திருக்கோணேஸ்வரம், கன்னியா வெந்நீரூற்றுக்கள், கங்குவேலி அகத்தியர் ஸ்தாபனம் ஆகிய மூன்று கட்டுரைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. திருக்கோணமலையின் வரலாற்றைப் பேசும் தன்மையால் மூன்று கட்டுரைகளுக்கிடையேயும் ஒற்றுமை உள்ளது. தமிழரின் பாரம்பரிய அடையாளமான கன்னியா வெந்நீரூற்று எவ்வாறு அதன் பூர்வீக அடையாளங்கள் அழிக்கப்பட்டும் சிதைக்கப்பட்டும் பேரினவாத சக்திகளினால் அபகரிக்கப்பட்டுள்ளன என்பதைப் பொருத்தமான ஆவணங்களின் துணையுடன் புலப்படுத்துகின்றார். இதற்குச் சில தமிழர்களும் துணைபோனமை வேதனையாக உள்ளது. கன்னியாவைப்போலன்றி பாடல்பெற்ற திருத்தலமான கோணேஸ்வரத்தின் தொன்மையைக் காட்ட விஷமிகள் அழிக்கமுடியாத வகையில் பற்பல சான்றுகள் உள்ளதை திருக்கோணேஸ்வரம் என்ற கட்டுரை தெளிவுபடுத்துகின்றது. கங்குவேலி அகத்தியர் ஸ்தாபனம் என்ற மூன்றாவது கட்டுரையின் வாயிலாக, கன்னியா வெந்நீரூற்றின் அதிகாரபூர்வமான கையகப்படுத்தலுக்கு வழிகோலிய அரச அதிபர் மேஜர் ஜெனரல் T.T.R.D. சில்வா தனது செயலுக்குப் பரிகாரம் தேடும் முகமாக பேரினவாதிகளின் அடாவடித்தனத்தால் சிதைக்கப்பட்ட மற்றொரு புராதன ஆலயத்தின் புனருத்தாபனத்திற்கு பக்தி சிரத்தையுடன் உதவிய செயல்குறித்தும் ஆசிரியர் பதிவுசெய்துள்ளார்.

## 12985

**தீவகம்: தொன்மையும் மேன்மையும்**. கார்த்திகேசு குகபாலன். யாழ்ப்பாணம்: பேராசிரியர் கா.குகபாலன், 26/2, சம்பியன் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில், 1வது பதிப்பு, ஏப்ரல் 2017. (யாழ்ப்பாணம்: கரிகணன் (தனியார்) நிறுவனம், 681, காங்கேசன்துறை வீதி).

viii, 336 பக்கம், வரைபடங்கள், அட்டவணைகள், விலை: ரூபா 600., அளவு: 22x15 சமீ., ISBN: 978-955-38153-0-9.

இந்நூல் தீவகப் பிரதேசத்தின் பொருளாதார, சமூக விழுமியங்களை உள்ளடக்கியதாக வெளிவந்துள்ளது. அமைவிடம், பௌதிக நிலை, நிர்வாகக் கட்டமைப்பு, வரலாறு, குடித்தொகைப் பண்புகள், மதமும் மக்களும், பொருளாதார நிலை, கல்வி, அரசியல், போக்குவரத்து, தாம்போதிகளின் போக்குவரத்து, சுற்றுலாத்துறைக்கான வளங்களும் வாய்ப்புக்களும், அபிவிருத்திக்கான உபாயங்கள், பெருமைசேர்த்த பெரியார்கள் ஆகிய 12 இயல்களில் இவ்வாய்வு விரிகின்றது. பேராசிரியர் கா.குகபாலன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியல்துறைத் தலைவராகவும் பேராசிரியராகவும் இருந்து அண்மையில் ஓய்வுபெற்றவர். பேராதனைப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், சென்னைப் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் பட்டப்படிப்புகளைப் பூர்த்திசெய்தவர். குடித் தொகைக் கல்வி, குடிப்புள்ளியியல்துறைகளில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற இவர் பல ஆய்வுகளை மேற்கொண்டு உள்நாட்டிலும் சர்வதேசத்திலும் வெளிவரும் ஆய்விதழ்களில் வெளியிட்டுவருபவர். தீவகம் தொடர்பான மேலும் பல நூல்கள் இவரால் எழுதப்பட்டுள்ளன.

## 12986

**பத்தும் பதியமும்**.கமலாம்பிகை லோகிதராஜா. அம்பாறை: திருமதி கமலாம்பிகை லோகிதராஜா, 352, பிரதான வீதி, பாண்டிருப்பு 2, 1வது பதிப்பு, மே 2012. (சாய்ந்தமருது: டிசைன் வேர்ள்ட் பிரின்டர்ஸ்).

(18), 19-271 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: ரூபா 500., அளவு: 20.5x15 சமீ., ISBN: 978-955-54358-0-2.

அம்பாறை மாவட்ட தமிழ் எழுத்தாளர் மேம்பாட்டு பேரவையின் ஸ்தாபக உறுப்பினரான அமரர் திருமதி கமலாம்பிகை லோகிதராஜா (12.05.1930-24.09.2015) அவர்கள் எழுதிய நூல். ஆங்கில பாட உதவிக் கல்விப் பணிப்பாளராக ஓய்வு நிலையடைந்த அமரர் கமலாம்பிகை லோகிதராஜா, கல்முனை பாண்டிருப்பைப் பிறப்பிடமாகக் கொண்டவர். கல்வி, விளையாட்டுத்துறை, கலை, இலக்கியத்துறை, சமூகப்பணி, என்பவற்றில் தன்னை அர்ப்பணம் செய்ததன் காரணமாக பல ஆய்வுக் கட்டுரைகள் எழுதுவதிலும் நூல் விமர்சனம் செய்வதிலும் தனது பேச்சாற்றல் மூலமும் வெளிப்படுத்தி சிறந்து விளங்கினார். சமாதான நீதவானாக திகழ்ந்த இவர் சாமஸ்ரீ தேசகீர்த்தி போன்ற உயர் கௌரவங்களையும் பெற்றிருந்தவர். இவரால் எழுதப்பட்ட "பத்தும் பதியமும்" எனும் இந்நூல் பலராலும் பேசப்படும் ஒரு நூலாகும். இதில் தென்கிழக்கில் புகழ்பூத்த தனது ஊரான பாண்டியூர்

(பாண்டிருப்பு) பற்றிய பிரதேச வரலாற்றை ஆராய்கின்றார். பாண்டியர் குடியேற்றத்துடனும், பஞ்சபாண்டவர் சரித்திர வழிபாடுகளுடனும் அவ்வூரைத் தொடர்புபடுத்துகிறார். கல்வெட்டுகள், ஓலைச்சுவடிகள், செப்பேடுகள், தொல்லியல் தடயங்கள், கண்ணகை அம்மன் வழிபாட்டு முறைகள், அனுபவமும் புலமையும்கொண்ட முதியோரையும் நேர்கண்டு தன் ஆய்வுக்கான தகவல்களைப் பெற்றிருக்கிறார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 51328).

## 12987

**புதுவையாள்: பிரதேச பண்பாட்டு விழா மலர்: 2014.** வீ.பிரதீபன், இ.செல்வநாயகம் (மலராசிரியர்கள்). முல்லைத்தீவு: பிரதேச பண்பாட்டுப் பேரவை, பிரதேச செயலகம், புதுக்குடியிருப்பு, 1வது பதிப்பு, ஜனவரி 2014. (அச்சக விபரம் தரப்படவில்லை).

viii, 265 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 23x16 சமீ.

இம்மலரில் புதுக்குடியிருப்பு வரலாற்றுக் கண்ணோட்டம், வரலாற்றுக் காலத்திற்கு முந்திய வன்னி நாடு, வன்னிவளநாட்டில் இந்து சமயம், வன்னிவளநாட்டில் நாச்சிமார் வழிபாடு, குடமூதற் கும்மி, முல்லைப் பிரதேச கூத்து மரபு, முல்லைத் தீவுக் கூத்து மரபு, புதுக்குடியிருப்பு புராதன சின்னங்கள், வன்னிப்பிரதேசத்தின் பொருளாதார முயற்சிகள், ஆக்க இலக்கிய வரலாறு கூறும் புதுக்குடியிருப்பு, தமிழ்மொழியில் புதுக்குடியிருப்புப் பற்றிய செய்திகள், வன்னிவள நாட்டார் பாடல்கள், முல்லைத்தீவு மாவட்டத்தின் நீர்நிலைகள், முல்லை மாவட்டமும் சுதேச வைத்தியமும், போரின் பின்னரான கிராமிய மேம்பாட்டில் புதுக்குடியிருப்பு, வன்னியில் முயற்சியாண்மையும் அபிவிருத்தியும், புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் சமூக நாடகங்கள், முல்லைத்தீவுப் பிரதேச வழக்காறுகளும் சடங்குகளும், முல்லைத்தீவு மாவட்ட பாரம்பரிய வழிபாட்டு முறைகள், முல்லை மாவட்ட கிறிஸ்தவ வழிபாட்டு மரபு, புதுமை கண்ட புதுக்குடியிருப்பு அன்னை, புதுக்குடி யிருப்புப் பிரதேச உள்ளூர் வளங்கள், புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் ஆயுர்வேத வைத்தியம், வளம் கொழிக்கும் புதுக்குடியிருப்பு, மூங்கிலாற்றின் மூங்கில் காடு-சித்திரம், குருவிப்பள்ளு ஆகிய தலைப்புகளில் ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 54717).

## 12988

**யார் துரோகிகள்?: சாய்ந்தமருது உள்ளூராட்சி சபை.** எம்.எம்.எம். நூறுல்ஹக் (ஆசிரியர்), உவைஸ் முஹம்மட் (பதிப்பாசிரியர்). சாய்ந்தமருது 5: மருதம் கலை இலக்கிய வட்டம், 129 B, ஒஸ்மன் வீதி, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2017. (அச்சக விபரம் தரப்படவில்லை).

44 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 21x15 சமீ., ISBN: 978-955-43179-3-2.

*சாய்ந்தமருது மக்களின் கோரிக்கையான தனியான உள்ளூராட்சி சபை ஒன்றிற்கான கோரிக்கைக்கு வலுச்சேர்க்கும் விதத்தில் பன்னூலாசிரியர் ஹாதிபுல் ஹுதா எம். எம்.எம். நூறுல்ஹக் அவர்கள் எழுதிய நூல் இதுவாகும். சாய்ந்தமருது மக்களின் தனியான உள்ளூராட்சி சபைக்கான கோரிக்கையில் உள்ள நியாயங்களையும் அக்கோரிக்கை கிடப்பில் போடப்படுமிடத்தில் இந்த ஊர் மக்கள் எவ்வாறு செயற்படவேண்டும் என்பன போன்ற ஆலோசனைகளையும் கருத்துக்களையும் இச்சிறுநூலில் ஆசிரியர் வழங்கியுள்ளார். (இந்நூல் நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 044971).*

### 12989

**யாழ்ப்பாணச் சரித்திரம்: ஆங்கிலேயர் காலம்.** *முதலியார் செ.இராசநாயகம். கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, மீள்பதிப்பு, 2018, 1வது பதிப்பு 1934. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).*

*x, 180 பக்கம், விலை: ரூபா 600., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-659-583-3.*

*ஆரம்பகாலம் தொடங்கி ஒல்லாந்தர் காலம் வரையிலான யாழ்ப்பாண வரலாற்றை விபரித்து "யாழ்ப்பாணச் சரித்திரம்" என்ற முதலியார் செ.இராசநாயகம் அவர்களால் எழுதப்பட்ட புகழ்பெற்ற நூலினைத் தொடர்ந்து யாழ்ப்பாணப் பிரதேசத்தின் ஆங்கிலக்கால வரலாற்றை விபரிப்பதாக இந்நூல் அமைந்துள்ளது. வடமாகாண ஏசண்டர்கள், தலைமைக்காரர், வரிகள், நீதி பரிபாலனம், நாணயங்கள், ஏற்றுமதி - இறக்குமதி, ஊழியம், முத்துச்சலாபம், புகையிலை, புடைவை நெய்தல், தபால், பகிரங்க வீதிகள், சட்டசபைத் தமிழ்ப் பிரதிநிதிகள், இந்தியக் கூலிகள், யாழ்ப்பாணச் சுகாதாரம் போன்ற 37 விடயங்களினூடாக யாழ்ப்பாணத்தின் ஆங்கிலகால வரலாறு இந்நூலில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் நவாலியைப் பிறப்பிடமாகக் கொண்ட முதலியார் செ.இராசநாயகம்(1870-1940), கல்கிசை புனித தோமஸ் கல்லூரியில் கல்வி கற்ற பின்னர் நீதிமன்ற மொழிபெயர்ப்பாளராகவும் பின்னர் உயர்நீதிமன்றப் பதிவாளராகவும் பணியாற்றி முதலியார் பட்டம் பெற்றவர். பின்னர் சிவில் சேவையில் இணைந்து யாழ்ப்பாணக் கச்சேரியில் பணியாற்றி ஓய்வுபெற்றவர். யாழ்ப்பாணம் தொடர்பான வரலாற்றாராய்ச்சியில் ஆழ்ந்த ஈடுபாட்டைக் கொண்ட இவர் இத்துறையில் ஒரு முன்னோடியாவார்.*

**மேலும் பார்க்க: 13A22,13A30,12087,12965**

## 954.93(41) ஊர்ச் சங்கங்களின் சிறப்பு மலர்கள்/ஆண்டு மலர்கள்

### 12990

**காரை தீபம்: வெள்ளிவிழா மலர் 2015.** *பரமநாதர் தவராஜா, சிவசம்பு சிவராஜா, ப.ஐங்கரன், ந.திவாகரன் (தொகுப்பாசிரியர்கள்). லண்டன்: பிரித்தானியா காரை நலன்புரிச் சங்கம், 1வது பதிப்பு, ஒக்டோபர் 2015. (லண்டன்: எய்ம்ஸ் மீடியா சேர்விஸ், ஹரோ).*

*216 பக்கம், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 29.5x21 சமீ., ISBN: 978-1-943844-94-4.*

*பிரித்தானியா காரை நலன்புரிச் சங்கம், தனது 25ஆவது ஆண்டு விழாவை 03.10.2015 அன்று லண்டன் பெக் தியேட்டரில் வெள்ளிவிழாவாகக் கொண்டாடியபோது, வெளியிடப்பட்ட மலர். இதில் ஆசிச் செய்திகள், நிறுவன அறிக்கைகள், வண்ணப் புகைப்படத் தகடுகள், தாயகத்தில் நிறைவேற்றிய வேலைத் திட்டங்கள் எனப் பல்வேறு தகவல்கள் நிறைவாக இடம்பெற்றுள்ளன. காரைநகர் பற்றிய பிரதேச வரலாற்றுக் குறிப்புகளும் ஆங்காங்கே கட்டுரைகளாகக் காணப்படுகின்றன. காரைநகரும் விளையாட்டும், காரை மக்களும் பாரம்பரியங் களும், காரைநகரில் பிரசித்தியான கோவில்கள், காரை நீர்த்தேக்கங்கள் எனப் பல்வேறு தகவல்களை இம்மலரில் பெறக்கூடியதாகவுள்ளது.*

## 954.93(5) தொல்லியலாய்வு

### 12991

**அடங்காப்பற்று வன்னியில் ஆதிகாலத் தமிழர் வரலாறு: நாகர்காலத்துப் புராதன தொல்பொருட் சின்னங்கள்.** *அருணா செல்லத்துரை. வவுனியா: அருணா வெளியீட்டகம், எண் 68, வைரவர் கோவில் வீதி, வைரவர் புளியங்குளம், 1வது பதிப்பு, 2016. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).*

xxiv, *151 பக்கம், புகைப்படங்கள், வண்ணத் தகடுகள், விலை: ரூபா 1300., அளவு: 23.5*x*18 சமீ.,* ISBN: *978-955-1347-20-8.*

*அடங்காப்பற்று வன்னியின் இயற்கை அமைப்பு, வேடர்கள்-இயக்கர்கள்-நாகர்கள், ஆறுகளும் அணைக்கட்டுகளும் குளங்களும், புராதன காலங்களும் பிரிவுகளும், சமய வழிபாடுகள், அடங்காப்பற்றில் இலிங்க வழிபாட்டுத் தலங்கள், நாகவழிபாடும் நாகலிங்க வழிபாடும், அடங்காப்பற்று வன்னியில் கருங்கல் செங்கல் பாவனை, அந்நியர் ஆட்சியில் அடங்காப்பற்று வன்னி, அடங்காப்பற்று வன்னியில் நாகர்கால புராதன தொல்லியல் சின்னங்கள் ஆகிய பத்து அத்தியாயங்களில் இந்நூல் புகைப்பட ஆதாரங்களுடன் எழுதப்பட்டுள்ளது. ஊடகவியலாளர் அருணா செல்லத்துரை தொல்லியல் பயின்ற ஆய்வாளர் அல்ல. இருப்பினும் தான் கண்டவற்றை பிறரும் அறியும் வகையில் பத்திரிகைகளில் கட்டுரைகளாக எழுதிவருபவர். அவரது சாதனைகள் அடங்காப்பற்று வன்னியிலே தமிழரின் ஆதிகால வரலாற்றை ஆழமாகவும் பரந்தளவிலும் ஆய்வுசெய்வதற்கு அடித்தளம் அமைத்துள்ளன. அக்காலத்துச் சமுதாய நிலைகள், வழிபாட்டு முறைகள், கட்டுமான முறைகள், நீர்த்தேக்கங்கள் என்பன பற்றிய ஆய்வுகளுக்கு அவை ஆதாரமாகின்றன. இதுவரை வேறெவரும் கண்டு அடையாளப்படுத்த முடியாது போன பண்பாட்டுச் சின்னங்கள் பற்றிய விபரங்கள் பெரும் அளவிலானவற்றை அவர் வெளியிடுகின்றார்.*

### 12992

**இலங்கைத் தொல்பொருளியலளவை ஞாபகவேடு: தொகுதி 5: இலங்கைத் தூபி.** செ.பரணவிதான (ஆங்கில மூலம்), ஞானகலாம்பிகை இரத்தினம் (தமிழாக்கம்). கொழும்பு 7: வெளியீட்டுப் பிரிவு, அரச கரும மொழித் திணைக்களம், 1வது பதிப்பு, 1964. (கொழும்பு: இலங்கை அரசாங்க அச்சகம்).

xii, 99 பக்கம், விளக்கப்படங்கள், வரைபடங்கள், 22 தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25.5x19 சமீ.

Senarath Paranavitana அவர்களால் எழுதப்பெற்று இலங்கை தொல்பொருளாராய்ச்சித் திணைக்களத்தினால் வெளியிடப்பெற்ற The Stupa in Ceylon என்ற நூலின் தமிழாக்கம் இது. வரலாறு, தூபியின் வடிவம்: தெற்றிகளும் கும்மட்டமும், மேற்கொப்பு, வாசல்கடை, ஒரு தூபியின் சுற்றுப்புறம், சேதியகரம், அருவழக்கு வகைத் தூபிகள், ஆகிய ஏழு இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந் நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 24159).

### 12993

**தொல்லியல் சிந்தனைகள் (கட்டுரைத் தொகுதி).** நா.நவநாயகமூர்த்தி. அக்கரைப்பற்று: நா.நவநாயகமூர்த்தி, வானதி பவனம், பனங்காடு, 1வது பதிப்பு, ஜுன் 1995. (அக்கரைப்பற்று: கணேசன் அச்சகம், சாகாமம் வீதி).

viii, 64 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12.5 சமீ.

நூலாசிரியர் திருக்கோவில் -தம்பிலுவில் கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். அக்கரைப்பற்று தெற்கு, ப.நோ.கூ.சங்க சமாசத்தின் காசாளராகப் பணியாற்றியவர். இந்நூலில் பண்டைக்காலத்தில் சைவம், இந்து பௌத்த புரிந்துணர்வு, தமிழரிடையே கணபதி வழிபாடு தோன்றிய காலம், சங்ககாலப் புகார்ப் பட்டினத் துறையில் ஈழத்துணவு, பண்டைக்காலத்தில் இமயம் முதல் இலங்கை வரை வாழ்ந்த நாகர் இனம், கோவலன் -கண்ணகி வாழ்ந்த காலம், சங்கமன்கண்டி முதல் தாடகிரி வரை பரவியிருந்த பண்டைய நாகரிகம் ஆகிய தலைப்புகளில் எழுதப்பெற்ற ஆசிரியரின் கட்டுரைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. (இந் நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 25538).

# 999 இலங்கை தொடர்பான பன்னாட்டவரின் தமிழ்ப்படைப்புகள்

## 999 பன்னாட்டவரின் தமிழ்ப்படைப்புகள்

### 12994

**இதயம் துடித்த இருபது ஆண்டுகள்**. இரா.சனார்த்தனம். சென்னை: இரா. சனார்த்தனம், 1வது பதிப்பு, செப்டெம்பர் 1987. (அச்சக விபரம் தரப்படவில்லை).

*(2), 32 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.*

*உலகளவில் தமிழர்கள் மத்தியில் பரவலாக அறியப்பட்ட தமிழ் ஆர்வலர் இரா. சனார்த்தனம், 9.9.1987 அன்று தனது பிறந்த நாளையொட்டி, கடந்த 20 ஆண்டுகளாக ஈழத்தமிழருடன் தான் கொண்டிருந்த உறவையும் தொடர்புகளையும் இந்நூலில் விரிவாகப் பதிவுசெய்துள்ளார். தமிழுக்காக பல்வேறு தளங்களில் அவர் பணியாற்றி வந்தார். 1965 ஆம் ஆண்டு ஹிந்தி எதிர்ப்பு போராட்டத்தில் பங்கு பற்றிய அவர், திமுக நிறுவனர் அண்ணாதுரையின் நாடகங்கள் குறித்து ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்றவர். 1974 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற உலகத் தமிழராய்ச்சி மாநாட்டில், அரசின் தடையை மீறி அவர் சொற்பொழிவாற்ற முனைந்தபோதுதான், காவல்துறையினருக்கும் தமிழ் மக்களுக்கும் இடையே மோதல் ஏற்பட, அதையடுத்து நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டிலும் மின்சாரம் தாக்கியும் 9 பேர் கொல்லப்பட்டனர். அச்சம்பவம் இலங்கை தமிழர் போராட்ட வாலாற்றில் ஒரு முக்கிய திருப்புமுனையாக அமைந்தமை வரலாறாகும். விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிராபகரன் உள்ளிட்ட பலரை முதல் முறையாக தமிழகத்துக்கு அழைத்து வந்தவர் சனார்த்தனம் அவர்கள் என்பதும் குறிப்பிடத் தகுந்தது. ஈழ ஆதரவாளரான இவர் தனது மகனுக்கு தந்தை செல்வாவின் நினைவாக "செல்வா" என்றும், மகளுக்கு "ஈழச்செல்வி" என்றும் பெயரிட்டு மகிழ்ந்தவர். 20.2.2013இல் சென்னையில் காலமானபோது அவருக்கு வயது 75. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 10276).*

### 12995

**இலங்கையில் ஒரு வாரம்**. கல்கி (இயற்பெயர்: இரா.கிருஷ்ணமூர்த்தி). சென்னை 17: பாரதி பதிப்பகம், தியாகராய நகரம், 2வது பதிப்பு, செப்டெம்பர் 1956, 1வது பதிப்பு, ஜனவரி 1954. (சென்னை 14: மாருதி பிரஸ், இராயப்பேட்டை).

*96 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 17.5x12.5 சமீ.*

*பத்து அத்தியாயங்களில் தனது ஒரு வாரகால இலங்கைப் பயணத்தை சுவைமிக்க தனது எழுத்தாளுமையுடன், அங்கதச் சுவை கலந்து இப்பயணக் கதையில் விபரித்திருக்கிறார். "மரகதத் தீவு" என்று வர்ணிக்கப்படும் இலங்கைக்குப் பயணம்*

செய்து, தன் அனுபவங்களை "ஆனந்த விகடன்" இதழ்களில் 05.06.1938 முதல் 02.10.1938 வரை சுவைபட எழுதியிருந்தார். தான் சென்றுவந்த ஈழத்தின் தமிழ்ப் பிரதேச மக்களின் கலாச்சாரம் பழக்க வழக்கங்கள், தான் சந்தித்த தமிழ் அறிஞர்கள் என விரிவாகத் தன் மனவுணர்வுகளைப் பதிவுசெய்திருக்கிறார். அந்தத் தொடரின் நூல்வடிவம் இது. கல்கி அவர்கள் 09.09.1899-அன்று தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள புத்தமங்கலம் என்னும் ஊரில் ஒரு பிராமணக் குடும்பத்தில் பிறந்தவர். ஆரம்பப் பள்ளிப் படிப்பைத் தனது கிராமத்தில் முடித்த பிறகு அவர் திருச்சியில் உள்ள தேசிய உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்தார். 1921-ல் மகாத்மா காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடங்கிய வேளையில் அவரது கருத்துக்களால் ஈர்க்கப்பட்டு கல்கி தனது பள்ளிப்படிப்பைப் பாதியில் துறந்து இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியில் சேர்ந்தார். 1922-ல் சுதந்திரப் போராட்டத்தில் பங்குபெற்றதற்காக ஓராண்டு சிறைத் தண்டனை அனுபவித்தார். 1923-ல் அவர் "நவசக்தி" என்னும் பத்திரிக்கையின் துணை ஆசிரியராகப் பணியாற்றினார். அவருடைய முதல் புத்தகம் "ஏட்டிக்குப் போட்டி" 1927-ல் வெளியானது. மிகச் சிறந்த சமூக மற்றும் வரலாற்றுப் புதினங்களை எழுதியதற்காக பரவலாக அறியப்படுகிறார். இவர் எழுதிய "பொன்னியின் செல்வன்" புதினம் புகழ் பெற்றதாகும். தன் படைப்புகள் மூலம் இந்திய தேசிய விடுதலை போராட்டத்திற்கும் இவர் பங்களித்திருக்கிறார். "தியாகபூமி" நாவல் பின்னர் திரைப்படமாகவும் வெளிவந்தது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 19442. நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தின் சேர்க்கை இலக்கம் 004265).

### 12996

**இலங்கையின் கொலைக்களம்: ஆவணப்பட சாட்சியம்.** யமுனா ராஜேந்திரன். சென்னை 600041: பேசாமொழி பதிப்பகம், 30-A, கல்கி நகர், கொட்டிவாக்கம், 1வது பதிப்பு, ஜனவரி 2014. (சென்னை 600077: மணி ஆப்செட்).

109 பக்கம், புகைப்படங்கள், விலை: இந்திய ரூபா 130., அளவு: 21.5x14 சமீ.

இலங்கையின் போர்க்குற்றமும் மனித உரிமைமீறல்களும் குறித்து உலகெங்கிலும் வெளியான 17ஆவணப் படங்களைப்பற்றிய ஆசிரியரின் கட்டுரைகளின் தொகுப்பே இந்நூலாகும். எல்லைகளைக் கடக்கும் ஆவணப்படக் கலைஞர்கள், இலங்கையின் கொலைக்களங்கள், ராஜபக்சேக்களின் ஆபாச நடனம், ஒப்புக்கொள்ளக் கோரப்படும் பொய்கள், பிரியம்வதாவின் இனக்கொலை சாட்சியம், மிகுயா சௌத்ரியின் கோபம், தண்டிக்கப்படாத போர்க்குற்றங்கள், யுத்தத் தவிர்ப்பு வலயம், எனது மகள் பயங்கரவாதி, சிந்துவதற்கு இனிக் கண்ணீரில்லை சகோதரி, விடுதலைப் போராட்டம் என்பது பயங்கரவாதம் இல்லை, மௌனமாக்கப்பட்ட குரல்கள் ஆகிய தலைப்புகளில் இக்கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன. இறுதியில் நூலின்உருவாக்கத்துக்குத் தூண்டுதலாகவிருந்த அந்தப் பதினேழு ஆவணப்படங்கள் பற்றிய தகவல் குறிப்புகளும் தரப்பட்டுள்ளன.

### 12997

**ஈழ நாட்டுப் பிரயாணம்.** பகீரதன். சென்னை 17: பாரதி பதிப்பகம், தியாகராய நகரம், 1வது பதிப்பு, 1959. (சென்னை: நவபாரத் பிரஸ்).

272 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18.5x12.5 சமீ.

இலங்கையின் மலையகம் உள்ளிட்ட பல்வேறு பிரதேசங்களுக்கும் பிரயாணம்செய்து தனது அனுபவத்தினை இந்நூலில் பிரயாண இலக்கியமாக வழங்கியுள்ளார். தமிழகத்தைச் சேர்ந்த பகீரதன் எழுத்தாளராகவும், இதழாசிரியராகவும் அறியப்பட்டவர். நாவல்கள், சிறுகதைகள் பயணக்கட்டுரைகள் பலவற்றையும் எழுதியவர். விடுதலைப் போராட்ட வீரரான பகீரதன் தொடங்கிய "சத்திய கங்கை" என்ற இதழ் தொடர்ந்து 33 ஆண்டுகள் வெளிவந்தது. இவர் 18 ஆண்டுகள் கல்கியில் துணையாசிரியராகவும், 14 ஆண்டுகள் "ஓம் சக்தி" மாத இதழில் ஆசிரியராகவும், 4 ஆண்டுகள் "கிசான் வேர்ல்ட்" என்ற ஆங்கில வேளாண்மை இதழில் இணையாசிரியராகவும் பணிபுரிந்துள்ளார். 14 நாவல்கள், 4 சிறுகதைத் தொகுதிகள் என்பவற்றுடன் தாம் சென்ற இடத்தைப் பற்றியெல்லாம் அவர் எழுதிய எண்ணற்ற பயணக் கட்டுரைகளும் குறிப்பிடத்தக்கவை. கல்கியில் வெளிவந்த இவருடைய பயணக் கட்டுரைகளை வாசித்த அறிஞர் அண்ணாதுரை, "திராவிட நாடு" இதழில் இவரது எழுத்தை மனமாரப் பாராட்டினார். பகீரதனின் நூல்களில் மிகுந்த மதிப்போடு பேசப்பட்ட நூல்களென "சர்தார் வேதரத்தினத்தின் வாழ்க்கை வரலாறு", "ஜோதி வழியில் வள்ளலார்", "முல்லை வனத்து மோகினி", "கல்கி நினைவுகள்" முதலியவற்றை குறிப்பிடலாம். எழுத்தாளர் பகீரதன், 7.2.2001 அன்று காலமானார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 19462).

### 12998

**செந்தமிழ் வாசகம்: ஐந்தாம் புத்தகம்.** மணி. திருநாவுக்கரசு முதலியார். சென்னை: மணி. திருநாவுக்கரசு முதலியார், தமிழாசிரியர், சென்னை பச்சையப்பன் கலாசாலை, 1வது பதிப்பு, 1944. (சென்னை: ஜுப்பிட்டர் பப்ளிஷிங் ஹவுஸ்).

(4), 120 பக்கம், சித்திரங்கள், விலை: 0-8-6 அணா, அளவு: 17x12 சமீ.

நமது மொழி இயல்பு, பழக்க ஒழுக்கங்கள், நூன்முறைகள் முதலியவற்றையும், தமிழ் அரசர், புலவர், வீரர், மக்கள் முதலானோர் செயல்களையும் சிறுவர்களுக்குச் சிறுவயது முதலே புகட்டும் நோக்குடன் எழுதப்பட்டது. ஆங்காங்கு வினாக் களையும், உள்ளக் கிளர்ச்சியூட்டும் சிறுவர் வினோதக் கதைகளையும், வேடிக்கைக் கவிதைகளையும் சேர்த்திருக்கின்றார். கடவுள், குதிரை, மாணாக்கர், இன்னா பத்து, புகைவண்டி-ஜோர்ஜ் ஸ்டீவன்சன், வேண்டியவாறு கொடுத்த வேந்தன், ஒழுக்கம், உப்புப் பயிர், இனியவை பத்து, உனக்கும் பேபே உன் அப்பனுக்கும் பேபே, மரங்களின் மாண்பு, நன் மரம், ஒரு நியாயாதிபதி, சிற்றுயிர்களின் நற்றுணை, உயிர்களிடத்து அன்பு, புத்தர் பொருளுறை, கூந்தலழகி, தொண்டைமான் இளந்திரையன், வீரத்தாய், பழைய கறுப்பன் கறுப்பனே, விவேக சிந்தாமணி, மன்னனும் மரக்கலக் கள்வனும், குமணன், அவ்வையார் தனிப்பாடல், அரிமா,

வருஷம் மாதம் தேதி, பொங்கலோ பொங்கல், நோன்பென்பது கொன்று தின்னாமை, கோநாயும் ஆட்டுக்குட்டியும், முதலுதவி, நவமணிகள், கடிதம் எழுதுதல், செய்யுள் பாடம், குறிப்புரை ஆகிய தலைப்புக்களின் கீழ் பாடங்கள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. இலங்கையில் சுதந்திரத்திற்கு முன்னர் பாடசாலைகளில் பாடநூலாகப் பயிலப்பட்ட இந்நூல் சென்னை பச்சையப்பன் கலாசாலைத் தமிழாசிரியரான மணி. திருநாவுக்கரசு முதலியார் எழுதியதாகும். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 2289).

### 12999

**தூதர் திலகம் மேதகு செ.இராஜதுரை: மலேசியாவின் ஸ்ரீலங்கா தூதர் 1990-1994.** கு.செல்வராஜு (பதிப்பாசிரியர்). கோலாலம்பூர்: ஜெயபக்தி வெளியீடு, 28&30, Wisma Jaya Bakti, Jalan Cenderuh 2, Batu 4, Jalan Ipoh,51200 KL, 1வது பதிப்பு, 1994. (கோலாலம்பூர்: PercetakanAdvanco Stn Bhd.,23 Jalan Segambut Selatan, 51200 KL).

(64) பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x13 சமீ.

மலேசியாவின் இலங்கைத் தூதராக திரு. செ.இராஜதுரை பணியாற்றிய 1990-1994 காலகட்டத்தில் அவர் பணிமாற்றம் பெற்றுச் செல்கையில் வெளியிடப்பட்ட நூல். அவரது பணிகளை நயந்து போற்றிய மலேசியத் தமிழர்களின் ஆசியுரைகள், வாழ்த்துரைகள், கட்டுரைகள், கவிதைகள் எனப் பல்வகையிலும் அமைந்த படைப்பாக்கங்களின் தொகுப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 21998).

### 13000

**முதல் நெருப்பு: தாய்த்தமிழகத்தில் ஈழ நெருப்பை மூட்டிய முதல் வீரன் அப்துல் ரவூப்.** சே.ஜெ.உமர்கயான். தமிழ்நாடு: இன அழிப்புக்கு எதிரான இசுலாமிய இளைஞர் இயக்கம், 105, ஆர்.பி.ஆர். வணிக வளாகம், குமரன் சாலை, திருப்பூர் 641 601, 1வது பதிப்பு, டிசம்பர் 2011. (திருப்பூர்: 641 608: எழில் அச்சகம், அருண் டவர்ஸ், தாராபுரம் சாலை).

112 பக்கம், புகைப்படங்கள், விலை: இந்திய ரூபா 50., அளவு: 20.5x14 சமீ.

1995களில் இலங்கையின் இன விடுதலைப்போராட்டம் தீவிரமடைந்திருந்த வேளையில் தமிழகத்திலிருந்து அதற்கு ஆதரவாகக் குரல்கொடுத்துவந்ததுடன் முதல் களப்பலியானவர் தமிழகத்தின் பெரம்பலூரைச் சேர்ந்த அப்துல் ரவூப். 1995ம் ஆண்டு சந்திரிகாவின் ஆட்சிக் காலத்தின் போது யாழ். குடா நாடு மீதான பெரும் படையெடுப்பின்போது பல இலட்சக்கணக்கான மக்களின் இடப்பெயர் வினால் துயருற்ற அப்துல் ரவூப் அவர்கள், ஈழத்தமிழர்கள் மீதான சிறிலங்கா அரச பயங்கரவாதத்தை எதிர்த்து தமிழ்நாட்டின் திருச்சியில் 15.12.1995 அன்று தீக்குளித்து ஈகைச்சாவடைந்தார். ஈழத்தமிழர்களுக்காக தீக்குளித்து சாவடைந்த முதல் தமிழக உறவு அப்துல் ரவூப் என்பது குறிப்பிடத்தக்கது. அவரது வாழ்க்கை

வரலாற்றை இந்நூலில் உணர்வுபூர்வமாக பதிவுசெய்துள்ளார் தமிழக வழக்கறிஞரான சே.ஜெ.உமர்கயான். இடைக்கிடையே தோழர் தமிழகன் தொகுத்த "நெருப்பின் வரிகள்" என்ற கவிதை நூலில் இடம்பெற்ற கவிதைகள் எடுத் தாளப்பட்டுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 261574CC).

### முன்னைய பதிவுகள் பின்னிணைப்பு

### 13A01

**இலங்கையில் இஸ்லாம்.** M.M.A.அஸீஸ். யாழ்ப்பாணம்: கலைவாணி புத்தக நிலையம், 10, மெயின் வீதி, 1வது பதிப்பு, ஜூன் 1963. (யாழ்ப்பாணம்: கலைவாணி அச்சகம்).

(10), 224 பக்கம், விலை: ரூபா 3.00, அளவு: 18x12.5 சமீ.

M.M.A.அஸீஸ் (1911-1973) அவர்கள் எழுதிய 26 கட்டுரைகளைக் கொண்ட நூல். நேர்வழி காட்டிய நாயகம், கல்விக்கு மதிப்பளித்த உம்மி நபி, வெற்றிகண்ட தீர்க்கதரிசி, மனிதனை மனிதனாக்கும் மார்க்கம், பரிசுத்த றமழானின் தத்துவங்கள், பெருநாளுக்கொரு சிந்தனை விருந்து, சாத்திரமும் சமத்துவமும் சமய வாழ்வும், முஸ்லிம் சகோதரத்துவம், தியாகத் திருநாள், இலங்கை முஸ்லிம்களின் வரலாறு, வேற்றுமையில் ஒற்றுமை, எங்கள் குறிக்கோள், எங்கள் ஜின்னாஹ், பாக்கிஸ்தானின் முதல் மூன்றாண்டுகள், இலங்கையில் அறபிபாஷா, ஜாமிஉல் அல்ஹார், எமக்கு ஒரு ஜாமியஹ், முஸ்லிம்களின் கல்வி நிலை, பழமை என்ற விளக்கு, அறபுத் தமிழ் எங்கள் அன்புத் தமிழ், முஸ்லிம் கல்விச் சரித்திரச் சுருக்கம் 1-3, பாட அமைப்பில் பல மொழிகள், ஆத்மீக ஒளியே அறிவின் சிகரம், இக்பாலாற்றுப்படை ஆகிய தலப்புகளில் இக்கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன. கலாச்சார அமைச்சின் சாகித்திய மண்டலம் இந்நூலுக்கு அரச விருதினை வழங்கி கௌரவித்திருந்தது. 1963இல் வெளியிடப்பட்ட மூலநூலின் மீள்பதிப்பு இதுவாகும். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 18401. பின்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 4139).

### 13A02

**இலங்கையிற் கலை வளர்ச்சி.** க.நவரத்தினம். தெல்லிப்பழை: ஈழகேசரிப் பொன்னையா நினைவு வெளியீட்டு மன்றம், குரும்பசிட்டி, 1வது பதிப்பு, 1954. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).

xv, 103 பக்கம், விளக்கப்படங்கள், புகைப்படங்கள், தகடுகள், விலை: ரூபா 10.50, அளவு: 25x19 சமீ.

இந்நூல் ஈழகேசரி பொன்னையா நினைவு வெளியீட்டு மன்றப் பிரசுர வரிசையில் முதலாவது வெளியீடாக வெளிவந்துள்ளது. இந்தியாவும் இலங்கையும், இலங்கையிற் சிற்ப வளர்ச்சி-1, இலங்கையிற் சிற்ப வளர்ச்சி-2, தாதுகோபங்கள், பௌத்த சிற்ப வடிவங்கள், சைவ சிற்ப ஆலயங்களும் வடிவங்களும், யாழ்ப் பாணத்திற் சைவ ஆலயங்கள், இலங்கை ஓவியங்கள், கலையும் கைத்தொழிலும்,

இந்திய கலா தத்துவம் ஆகிய 10 தலைப்புகளில் எழுதப்பட்டுள்ள இந்நூலின் அநுபந்தமாக கலாஜோதி ஆனந்தக் குமாரசுவாமி அவர்களின் வாழ்க்கைச் சுருக்கம், அவர் வெளியிட்ட நூல்கள், அவர் சிறப்பாகச் செய்துள்ள பணிகள், புகழுரைகள் ஆகியன இடம்பெற்றுள்ளன. மேலும் பட விளக்கங்கள், மேற்கொள் நூல்கள், அரும்பொருள் அட்டவணை ஆகிய பட்டியல்களும் இடம்பெற்றுள்ளன. நூலாசிரியர் கந்தையா நவரத்தினம் (1898-1962) யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகக் கொண்ட இவர் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் தனது கல்வியைப் பெற்று, அதே கல்லூரியிலேயே 1920ம் ஆண்டு முதல் வர்த்தகத்துறை ஆசிரியராகப் பணியாற்றி வந்தார். சுவாமி விவேகானந்தரின் போதனைகளில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்ட இவர் யாழ்ப்பாணத்தின் கலை, நுண்கலை வளர்ச்சியில் பெரும்பங்காற்றியுள்ளார். "தென்னிந்திய சிற்ப வடிவங்கள்" என்ற பிரபல்யமான நூலின் ஆசிரியரும் இவரே. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 2611. பின்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 7390).

## 13A03

**ஈழத்தில் நாடகமும் நானும்.** க.சொர்ணலிங்கம். யாழ்ப்பாணம்: க.சொர்ணலிங்கம், இலங்கை இளம் நடிகர் சங்கம், நவாலி, மானிப்பாய், 1வது பதிப்பு, டிசம்பர் 1968. (யாழ்ப்பாணம்: ஆசீர்வாதம் அச்சகம், 32 கண்டி வீதி).

(36), 200 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14.5 சமீ.

ஈழத்து நாடகத்துறையின் தந்தை எனக் கருதப்படும் கலையரசு க.சொர்ணலிங்கம் (30.3.1889-26-7-1982) அவர்கள் "ஈழத்தில் நாடகமும் நானும்" என்ற தலைப்பில் கொழும்பு தினகரன் பத்திரிகையில் தொடராக எழுதிய கலைத்துறை வாழ்க்கை வரலாற்றுப்பதிவு நூலுருவில் வெளிவந்துள்ளது. இது ஈழத்தின் நவீன மேடை நாடக வரலாற்றினை எழுத்துருவில் வழங்கிய முதல் நூலாகக் கருதப்படுகின்றது. நடிகர்கள், நாடகங்கள், நாடக ஆசிரியர்கள், மக்களின் வரவேற்பு மற்றும் ரசனை முறைகள் குறித்தெல்லாம் நூல் முழுவதும் பேசப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 18988. பின்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 5443)

## 13A04

**கண்டிராசன் கதை.** சாரல்நாடன். சென்னை 600 098: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 41-B, சிட்கோ இன்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், 2வது பதிப்பு, நவம்பர் 2012, 1வது பதிப்பு, ஜுன் 2005. (சென்னை 600 014: பாவை பிரின்டர்ஸ், 16(142), ஜானிஜான்கான் சாலை, இராயப்பேட்டை).

(viii), 48 பக்கம், சித்திரங்கள், விலை: இந்திய ரூபா 40., அளவு: 21x13.5 சமீ., ISBN: 978-81-234-2275-6.

1815இல் முடிவுற்ற கண்டி இராச்சியத்தின் வரலாற்றை இந்நூலில் கூறமுற் பட்டுள்ளார். கண்டி இராச்சியம் வீழ்ச்சியடைந்ததற்கான காரணத்தை இன்றுவரை தீர்க்கமாக அறியமுடியாதுள்ள நிலையில், புலமைத் திறத்துடன் ஆங்கிலேயர்களால் எழுதப்பட்ட ஆவணங்களிலிருந்தும், சிங்களத்திலும் தமிழிலும் வழங்கிவந்த நாட்டார் பாடல்களிலிருந்தும் தகவல்களைச் சேர்த்து சுவையான வரலாற்று நாவல் போல விறுவிறுப்பாக இந்நூலை சாரல்நாடன் படைத்துள்ளார். அறிமுகம், நாயக்கர் வம்சம், விஜயராஜ சிம்மனுக்குப் பிறகு, விக்கிரமராஜசிம்மனின் ஆட்சி, கண்டி மன்னனின் கைது, மன்னர்கள் ஆற்றிய பணிகள் (1747-1782), தமிழ்நாட்டில் கதைவடிவில், கண்டிராசன் எழுத்து வடிவில், நிறைவாக, நூல் எழுதப் பயன்பட்ட ஆதார நூல்கள் ஆகிய 10 அத்தியாயங்களில் எழுதப்பட்டுள்ளது. கண்டிராசன் ஸ்ரீ விக்கிரம இராசசிங்கன் தொடர்பான புகைப்படங்களும், சித்திரங்களும் நூலுக்கு மெருகூட்டுகின்றன. சென்னை நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், இந்நூலை தமது 1ஆவது பதிப்பாகக் குறிப்பிட்டுள்ளது. (முன்னைய பதிப்பிற்கான நூல் தேட்டம் பதிவிலக்கம் **3960**).

## 13A05

**கர்னாடக சங்கீதம்: தரம் 10: வழிகாட்டற் குறிப்புகள்.** கிருஷ்ணவேணி மயில்வாகனம். யாழ்ப்பாணம்: கீதவாஹினி இசைக் கல்லூரி, கொழும்புத்துறை, 3வது பதிப்பு, 2002, 1வது பதிப்பு, 1998, 2வது பதிப்பு, 2000. (யாழ்ப்பாணம்: உயர்கல்விச் சேவை பதிப்பகம்).

ix, 116 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 150.00, அளவு: 21x15 சமீ.

மேல் வகுப்புகளில் இசை கற்கும் மாணவர்களுக்கு மட்டுமின்றி, வட இலங்கைச் சங்கீத சபையினர் நடத்தும் பரீட்சைகளுக்குத் தோற்றும் மாணவர் அனைவருக்கும், கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் இந்நூல் சிறந்த வழிகாட்டியாகின்றது. புதிய பாடத் திட்டத்திற்கு அமைவாக எழுதப்பட்டுள்ள வழிகாட்டற் குறிப்புகள் இவை. சங்கீதம், நாதம், ஸ்ருதி, ஸ்வரம், பிரக்ருதிஸ்வரம், விக்ருதிஸ்வரம், குறில்ஸ்வரம், நெடில்ஸ்வரம், லகுவின் ஜாதிபேதம், 35 தாளவிளக்கம், திரியாங்கம், ஷடாங்கம், இராகலட்சணம், கரஹரப்பிரியா, தோடி, ஸ்வரஜாதி-லக்ஷணம், வீணை, தம்புரா, லக்ஷணம்-கீதம், ஜதீஸ்வரம், ஜனக ஜன்னிய இராக விளக்கம், முத்துத்தாண்டவர், இந்தியாவின் 7ஆம் 8ஆம் நூற்றாண்டின் கலாசாரப் பின்னணி, சங்கீதக் கலையின் ஆரம்பம், ஸ்வரஸ்தானம், பண்ணிசை, லக்ஷணம்-கல்யாணி, பிலகரி, வர்ணம்-தானவர்ணம், பதவர்ணம், புல்லாங்குழல், பாபநாசம் சிவன், கோபாலகிருஷ்ண பாரதி, ஆலயங்களும் இசையும், ஆவர்த்தனம், இராக லக்ஷணம் -மாயாமாளவ, கௌளை சங்கராபரணம், மோகனம், நாதஸ்வரம், புரந்தரதாசர், லக்ஷணம்-பதம், நாட்டார் பாடல், செய்முறை விடயங்கள், வினாக்கள்-விடைகள், அரும்பத விளக்கம் ஆகிய தலைப்புகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 30150. பின்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 5427).

## 13A06

**காந்தி தரிசனம்.** எஸ்.பொன்னுத்துரை (தமிழாக்கம்). கொழும்பு 13: இளம்பிறை எம்.ஏ.ரகுமான், அரசு வெளியீடு, 231 ஆதிருப்பள்ளித் தெரு, 1வது பதிப்பு, 1969. (கொழும்பு 13: ரெயின்போ பிரிண்டர்ஸ், 231 ஆதிருப்பள்ளித் தெரு).

100 பக்கம், விலை: ரூபா 3.25, அளவு: 19x13 சமீ.

காந்தி நூற்றாண்டு நினைவாக வெளியிடப்பட்ட ஐந்து நூல்களில் இதுவும் ஒன்று. 29 உலகத் தலைவர்கள் எவ்வாறு காந்திஜியின் வாழ்க்கையையும் ஊழியத்தையும் தரிசித்தார்கள் என்பதைப் படித்தறியும் வகையில் இந்நூல் தொகுக்கப்பட்டுள்ளது. இதில் விநோபாஜி, ரவீந்திரநாத் தாகூர், ஈன்ஸ்டீன், பேர்ல் பக், ஸ்ரீ அரவிந்தர், எல்.பி.பியர்சன், டபிள்யூ. ஸெய்ஸன்பேர்க், எம்.சொலொக்கொவ், சீ.வீ.ராமன், சங்.பிதா.டொமினிக் பியர், மார்ட்டின் லூதர் கிங், ஊதாண்ட், கேஸி பிரபு, கிளமென்ட் அட்லி, லூயி பிர், ஹெய்லி ஸெலஸ்ஸி, ஜே.ஸி.ஸ்மட்ஸ், ஹரோல்ட் வில்சன், தேவதாஸ் காந்தி, அபுல் கலாம் ஆஸாத், ஜவஹர்லால் நேரு, சரோஜினி நாயுடு, சேர். எம்.ஸஃ்ருல்லா கான், டாக்டர் பிரதாப் சந்திர சந்தர், சி.ராஜகோபாலாச் சாரியார், ராஜேந்திர பிரசாத், டாக்டர் எஸ்.ராதாகிருஷ்ணன், ஸாக்கிர் ஹுசேன், வி.வி.கிரி, சேர். இவான் மக்கே, இந்திரா காந்தி, ஜெயப்பிரகாஷ் நாராயண், கிருபளானி, முல்க்ராஜ் ஆனந்த் ஆகிய பிரமுகர்களின் பார்வையில் இப்பதிவுகள் அமைந்துள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 2899. பின்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 7863)

## 13A07

**சாவித்திரி.** க.சோமசுந்தரப் புலவர். சுன்னாகம்: வட - இலங்கைத் தமிழ் நூற் பதிப்பகம், 3வது பதிப்பு, டிசம்பர் 1955, 1வது பதிப்பு, 1914, 2வது பதிப்பு, 1954. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).

xii, 46 பக்கம், விலை: சதம் 75, அளவு: 18.5x14.5 சமீ.

மகாபாரதத்தில் வரும் சாவித்திரியின் கதையை இங்கு சிறுவர்களுக்கேற்றவகையில் வசனமரபும் செய்யுள் மரபும் இணைந்து வரும் பாங்கில் நவாலியூர் சோமசுந்தரப் புலவர் இயற்றியிருக்கிறார். இந்நூலுக்கான அணிந்துரையை திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையிலிருந்து சி.கணபதிப்பிள்ளை அவர்கள் வழங்கியுள்ளார். நூலாசிரியர் வரலாற்றுடன் தொடங்கும் இந்நூல், அசுவபதி ஆட்சி, சாவித்திரி பிறத்தல், கல்வி பயிலுதல், முனிவர் உபதேசம், சத்தியவானைக் காதலித்தல், திருமண நிகழ்ச்சி, சத்தியவான் இறத்தல், காலன் வரங்கொடுத்தல், கணவனுயிர் மீட்டல், எல்லாம் மங்கலமாதல் என 10 அத்தியாயங்களில் சத்தியவான்-சாவித்திரி கதையைக் கூறுகின்றது. இலங்கை வித்தியா பகுதியின் வித்தியா பிரசுர சபை யினரால் இலங்கைப் பாடசாலைகளிலும் கல்லூரிகளிலும் உபயோகிக்கத் தகுந்த தென அங்கீகரிக்கப்பட்ட நூல். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 4738. முன்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 5389).

### 13A08

**சுத்த போசன பாக சாத்திரம்**.சு.திருச்சிற்றம்பலவர். சுன்னாகம்: நா.பொன்னையா, வட-இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகம், 4வது பதிப்பு, 1967, 1வது பதிப்பு, 1935. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).

xii, 196 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12.5 சமீ.

சமையல் விதிகள், அன்ன வகைகள், பாயச வகைகள், பருப்புச் சமையல் வகைகள், கறி வகைகள், பச்சடி வகைகள், அரையல் வகைகள், வறுவல் வகைகள், பொரியல் வகைகள், மசியல்-புரட்டல் முதலான வகைகள், குழம்பு வகைகள், சாம்பார் வகைகள், புளிச்சாறு- சொதி வகைகள், இரச வகைகள், வடக வகைகள், ஊறுகாய் வகைகள், கூழ் வகைகள், கஞ்சி வகைகள், பான வகைகள், பிரயாணத்துக்குரிய உணவு வகைகள், மாப்பண்ட வகைகள், உப்புமா வகைகள், வடை வகைகள், காரப் பணிகார வகைகள், இனிப்புப் பணிகார வகைகள் என 25 அத்தியாயங்களில் தாவரபோசன சமையல் வகைகள் பற்றியும் அவற்றைத் தயாரிக்கும் முறை பற்றியும் இந்நூலில் தூயதமிழில் எழுதப்பட்டுள்ளது. பொருள் அட்டவணை நூலின் இறுதியில் காணப்படுகின்றது. இந்நூலின் பதிப்புரிமைமதலியார் சு.திருச்செல்வம் அவர்களிடமிருந்து 19.8.1939இல் தம்மால் பெறப்பட்டதாக நா.முத்தையா அவர்களின் குறிப்பும் நூலில் காணப்படுகின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 21612. நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தின் சேர்க்கை இலக்கம் 007181. பின்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 2361)

### 13A09

**சூடாமணி நிகண்டு: மூலமும் உரையும்**. மண்டல புருடர் (மூலம்), ஆறுமுகநாவலர் (பரிசோதித்தவர்), யாழ்ப்பாணம்: பொன்னம்பலபிள்ளை, தருமபரிபாலகர், சிதம்பர சைவப்பிரகாச வித்தியாசாலை, 10வது பதிப்பு, ஆடி 1912, 1வது பதிப்பு விபரம் தரப்படவில்லை. (சென்னை: வித்தியாநுபாலனயந்திரசாலை).

182 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 19.5x12 சமீ.

இவை யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலரவர்களால் பரிசோதித்து, சிதம்பர சைவப் பிரகாச வித்தியாசாலைத் தருமபரிபாலகர் பொன்னம்பலபிள்ளையால் முதலிரண்டு தொகுதிப் பெயர்ப்பொருளோடு வெளியிடப்பட்டது. 10 பிரிவுகளில் தெய்வப்பெயர்த் தொகுதி, மக்கட் பெயர்த் தொகுதி, விலங்கின் பெயர்த் தொகுதி, மரப் பெயர்த் தொகுதி, இடப் பெயர்த் தொகுதி, பல்பொருட் பெயர்த் தொகுதி, செயற்கை வடிவப் பெயர்த் தொகுதி, பண்பு பற்றிய பெயர்த் தொகுதி, செயல் பற்றிய பெயர்த் தொகுதி, பண்பு பற்றிய பெயர்த் தொகுதி, செயல் பற்றிய பெயர்த் தொகுதி, ஒலி பற்றிய பெயர்த் தொகுதி ஆகியன அடங்கியுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 21713).

**சூடாமணி நிகண்டு: மூலமும் உரையும்**. மண்டல புருடர் (மூலம்), ஆறுமுகநாவலர் (பதிப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர், நல்லூர், 4வது பதிப்பு,

1921, 1வது பதிப்பு விபரம் தரப்படவில்லை. (சென்னை: நிரஞ்சன விலாச அச்சியந்திரசாலை, சூளை).

216 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 19x12 சமீ.

யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர் பதிப்பித்த சூடாமணி நிகண்டுவின் இப்பதிப்பு, 10 பிரிவுகளில் தேவப்பெயர்த் தொகுதி, மக்கட் பெயர்த் தொகுதி, விலங்கின் பெயர்த் தொகுதி, மரப் பெயர்த் தொகுதி, இடப் பெயர்த் தொகுதி, பல்பொருட் பெயர்த் தொகுதி, செயற்கை வடிவப் பெயர்த் தொகுதி, பல்பொருட் பெயர்த் தொகுதி, செயற்கை வடிவப் பெயர்த் தொகுதி, பண்பு பற்றிய பெயர்த் தொகுதி, செயல் பற்றிய பெயர்த் தொகுதி, ஒலி பற்றிய பெயர்த் தொகுதி, ஆகியனவும் இரண்டாம் பகுதியில் ஒருசொற்பல்பொருட் பெயர்தொகுதி, பல்பெயர்க் கூட்டத்தொரு பெயர்த் தொகுதி ஆகியனவும் வகுத்துத் தரப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 26774. பின்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 4255)

**சூடாமணி நிகண்டு: மூலமும் உரையும்.** மண்டல புருடர் (மூலம்), ஆறுமுகநாவலர் (பரிசோதித்தவர்), யாழ்ப்பாணம்: விசுவநாதபிள்ளை, தருமபரிபாலகர், சிதம்பர சைவப்பிரகாச வித்தியாசாலை, 14வது பதிப்பு, மாசி 1926, 1வது பதிப்பு விபரம் தரப்படவில்லை. (சென்னை: வித்தியாநுபாலனயந்திரசாலை).

216 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x12 சமீ.

இவை யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலரவர்களால் பரிசோதித்து, சிதம்பர சைவப் பிரகாச வித்தியாசாலைத் தருமபரிபாலகர் விசுவநாதபிள்ளையால் முதலிரண்டு தொகுதிப் பெயர்ப்பொருளோடு வெளியிடப்பட்டது. 10 பிரிவுகளில் தேவப்பெயர்த் தொகுதி, மக்கட் பெயர்த் தொகுதி, விலங்கின் பெயர்த் தொகுதி, மரப் பெயர்த் தொகுதி, இடப் பெயர்த் தொகுதி, பல்பொருட் பெயர்த் தொகுதி, செயற்கை வடிவப் பெயர்த் தொகுதி, பண்பு பற்றிய பெயர்த் தொகுதி, செயல் பற்றிய பெயர்த் தொகுதி, பண்பு பற்றிய பெயர்த் தொகுதி, செயல் பற்றிய பெயர்த் தொகுதி, ஒலி பற்றிய பெயர்த் தொகுதி ஆகியன அடங்கியுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 18356).

## 13A10

**சைவ சமயம்: ஓர் அறிமுகம்.** ப.அருணாசலம். கொழும்பு: அமரர் திருமதி பொன்னுச்சாமி பரமேஸ்வரி அவர்களின் நினைவு வெளியீடு, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2010. (கொழும்பு 13: தேவி பிரின்டர்ஸ், 41, Brass Founders Street).

(12), 168 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14.5 சமீ.

சைவம் (அறிமுகம், சிவன் திருக்கோலம், நாமம், சிவபரத்துவம், சைவன், சைவ உட்பிரிவுகள்), அடிப்படை நூற்கள் (அறிமுகம், வேதம், ஆகமங்கள், புராண இதிகாசங்கள், திருமுறைகள்/சித்தாந்த நூற்கள்), சிவதன்மம் (சிவதன்மம், பதிபுண்ணியம், சரியை-தாசமார்க்கம், கிரியை-சற்புத்திர மார்க்கம், யோகம்-

சகமார்க்கம், ஞானம்-சன்மார்க்கம்), சிவவழிபாடு (சிவபூசை, சிவபூசை செய்வோர், தீக்கை, சிவபூசையின் நோக்கம், ஆன்மார்த்த-பரார்த்த பூசைகள், பரார்த்த பூசை, பூசை நிகழ்ச்சிகள், புற வழிபாடு, பஞ்சசுத்தி, உபசாரங்கள்), திருக்கோவில் வழிபாடு (அறிமுகம், வழிபாட்டுத் திருக்கோலங்கள், சிவலிங்கம், நடராசர், தட்சிணாமூர்த்தி, சோமாஸ்கந்த மூர்த்தி, சந்திரசேகரர், ஸ்ரீபலி, பைரவர், விநாயகர், முருகன், தேவி வழிபாடு, திருக்கோவில் பூசை, நித்தியபூசை, திருவிழா, சிவாலய தரிசனம்), அடியார் வழிபாடு (அறிமுகம், திருக்கோவிலில் அடியார் வழிபாடு, சமயக் குரவர்கள், தேவார ஆசிரியர்கள் மூவரையும் வழிபட்டு உய்ந்த நாயன்மார்கள்-கணநாதர்/அப்பூதி அடிகள்/ சோமாசிறிமாறர்/ பெருமிழலைக் குறும்பர் ஆகியோர், சிவகுரு, குருமடம்-திருவாவடுதுறை மடம்/தருமபுர மடம்/திருப்பனந்தாள் மடம் ஆகியவை), பொதுவான வழிபாடு, சைவசமயக் குரவர்கள், சித்தாந்தக் கோட்பாடு என ஒன்பது அத்தியாயங்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. இந்நூலின் முதற் பதிப்பு 1979இல் வெளிவந்திருந்த நிலையில், குமரன் புத்தக இல்லத்தின் அதிபர் செ.கணேசலிங்கம் அவர்களின் துணைவியார் அமரர் திருமதி மீனாம்பாள் கணேசலிங்கம் அவர்களின் நினைவு மலராக 2004 இல் மீள்பதிப்பாக வெளிவந்திருந்தது. இப்புதிய பதிப்பும் அமரர் திருமதி பொன்னுச்சாமி பரமேஸ்வரி (27.8.1926-15.8.2010) அவர்களின் நினைவு வெளியீடாக வெளிவந்துள்ளது. (முன்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 2126).

## 13A11

**சைவ வினாவிடை: முதற் புத்தகம்.** ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர். யாழ்ப்பாணம்: சண்முகநாதன் புத்தகசாலை, 1வது பதிப்பு, 1953. (யாழ்ப்பாணம்: சண்முகநாதன் அச்சகம்).

58 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 13x10.5 சமீ.

கேள்வி-பதில்களின் வடிவில் பாமரருக்கும் சைவ சமய தத்துவங்களை எளியமுறையில் பரப்புவதில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் சைவ-வினாவிடை அந்நாளில் வெற்றிகண்டிருந்தது. இன்றளவில் சைவசமயம் கற்போருக்கான விருப்பு நூலாக இது இருந்து வருகின்றது. தோத்திரத் திரட்டுடன் கூடியதாக இம்மீள்பதிப்பு பாடசாலை மாணவர்களின் உபபாட நூலாக வெளியிடப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 2755. பின்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 9182).

## 13A12

**சைவப் பிரகாசிகை: இரண்டாம் புத்தகம்.** ச.குமாரசுவாமிக் குருக்கள். யாழ்ப்பாணம்: ச.குமாரசுவாமிக் குருக்கள், அச்சுவேலி, 3வது பதிப்பு, 1937, 4வது பதிப்பு, விரோதி வருடம் தை 1950. (கொக்குவில்: சோதிடப்பிரகாச யந்திரசாலை).

54 பக்கம், படங்கள், விலை: சதம் 15, அளவு: 17.5x11.5 சமீ.

அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை மானேசர் சிவஸ்ரீ ச.குமாரசுவாமிக் குருக்கள் அவர்களால் எழுதப்பெற்று வெளிவந்துள்ள சமயக் கட்டுரைகளின் தொகுப்பாக

*இந்நூல் அமைகின்றது. விநாயகக் கடவுள் வல்லாளனுக்கு அருள்செய்தது என்பதில் தொடங்கி, பொன்னாலயம் ஈறாக, சைவ சமய அறிவினை வழங்கும், 31 கட்டுரைகளை இது உள்ளடக்கியது. தான் தோன்றியீஸ்வரர், வல்லிபுரக்கோயில், போன்ற இடங்கள் பற்றியும், நகுல முனிவர், மாருதப்பிரவல்லி, மார்க்கண்டேய முனிவர், உபமன்யு முனிவர், புகழ்த்துணை நாயனார், கணம்புல்ல நாயனார், சுசங்கீதன், ஞானப்பிரகாச முனிவர் ஆகியோர் பற்றியும் தனித்தனிக் கட்டுரைகள் உள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 3077. பின்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 9184).*

## 13A13

**சைவப் பிரகாசிகை: ஐந்தாம் புத்தகம்.** *ச.குமாரசுவாமிக் குருக்கள். யாழ்ப்பாணம்: ச.கு.வைத்தியேசுவரக் குருக்கள், அச்சுவேலி, 9வது பதிப்பு, ஆனி 1954, 7வது பதிப்பு, நந்தன வருடம் தை 1953, 1வது பதிப்பு, மார்ச் 1933. (பருத்தித்துறை: சிவஸ்ரீ வைத்தீசுவரக் குருக்கள், கலாநிதியந்திரசாலை).*

*(4), 48 பக்கம், படங்கள், விலை: ரூபா 1.00, அளவு: 21x13.5 சமீ.*

*அச்சுவேலி சரசுவதி வித்தியாசாலை மனேசரான சிவஸ்ரீ ச.குமாரசுவாமிக் குருக்கள், சிவனடியார் பெருமைகளையும், சிவதலங்களின் பெருமையையும், சைவசமயக் கருத்துக்களை உள்ளடக்கிய உபகதைகளையும் எளிய நடையில் இளையோரும் புரிந்துகொள்ளக்கூடிய வகையில் சுவையாக எழுதி சைவப்பிரகாசிகை என்ற தொடர்நூல் வழியாக அவ்வப்போது வழங்கிவந்துள்ளார். அவ்வகையில் வெளிவந்துள்ள ஐந்தாம் புத்தகம் இதுவாகும். விநாயகக் கடவுள், நம்பியாண்டார் நம்பி, சிவபெருமான், விட்டுணு பிரமர் அடிமுடி தேடியது, உமாதேவியார், சுப்பிரமணியக் கடவுள், சிவதூஷணம், வீரபத்திரக் கடவுள் சர்பவடிவம் கொண்டது, வைரவக் கடவுள், தவம், அன்புடைமை, திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் ஞானப்பாலுண்டது, பாண்டியன் சுரந்தீர்த்தது, அப்பூதியடிகள் நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார் முதலைவாய்ப்பட்ட பிள்ளையை மீட்டது, மாணிக்கவாசக சுவாமிகள் புத்தரை வாதில் வென்றது, மெய்கண்ட தேவர், உமாபதி சிவாசாரியார், கோச்செங்கட் சோழநாயனார், மனுநீதிகண்ட சோழர், ஆலய வழிபாடு, சிவாலயத் திருத்தொண்டுகள், திருவிளக்கிடுதல் சிவநின்மாலியம், சிவத்திரவியங் கவர்தல், குருசங்கம வழிபாடு, நக்கீரர், சுப்பிரமணியக் கடவுளும் ஔவையாரும், முசுகுந்தச் சக்கரவர்த்தி, கரிக்குருவி உபதேசம்பெற்றது, விட்டுணு, சைவாசாரியரும் வைணவனும், சண்டேசுர நாயனார் ஆகிய தலைப்புகளில் இக் கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 2951. முன்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 9185)*

## 13A14

**தமிழ் ஏழாந்தரம்.** கல்வி வெளியீட்டுத் திணைக்களம். கொழும்பு 10: தமிழ் மொழிக் குழு, பாடவிதான அபிவிருத்தி நிலையம், கல்வி வெளியீட்டுத்திணைக்களம், 3வது பதிப்பு, 1980, 1வது பதிப்பு, 1973, திருத்திய 2வது பதிப்பு, 1979. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).

(8), 144 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21 x14 சமீ.

கல்வி அமைச்சின் பாடவிதான அபிவிருத்தி நிலையத் தமிழ் மொழிக் குழுவினால் திட்டமிட்டெழுதப்பட்ட பாடநூல் இது. இக்குழுவின் தலைவராக செ. வேலாயுதபிள்ளை இயங்கியுள்ளார். கா.ஜெயராஜா, திருமதி ந.சண்முகநாதன், எம்.எஸ்.ஜமால், எஸ்.கே.சௌந்தரராஜா, எஸ்.மௌனகுரு ஆகியோர் நூலாக்கக் குழுவில் பணியாற்றியுள்ளனர். திருத்திய நூற்பதிப்புக் குழுவில் த.கனகரத்தினம், சு.வேலுப்பிள்ளை ஆகியோர் பணியாற்றியுள்ளனர். குருவிகள் கூடுகட்டும் விந்தை, காணாமற் போன குழந்தை, ஹெலன் கெல்லர், கண்ணன் என் சேவகன், வழிகோலிகள் கட்டடங் கட்டுகிறார்கள், விளையாட்டுக்கள், யூரி ககாரின், மாபெரியோன் மாண்புகள், முத்திரை சேகரித்தல், குத்தில காவியம், பூமி, அமுதூட்டும் அன்னை, மழை, மார்க்கோ போலோ கண்ட ஈழமும் தமிழகமும், மணிமேகலை, நாட்டார் பாடல்கள், ஒடிசி, நாளை நமக்கொரு காலம், அறிஞர் சித்திலெவ்வை, உழவுத் தொழில், உணவு முறைகள், கூட்டுறவு இயக்கம், பெருஞ்சேரலிரும்பொறை, வாய்மை, ஸோரப்பின் வீரமரணம், குசெலோபாக்கியாநம் ஆகிய தலைப்புகளில் பாடங்கள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.

(இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 24755. முன்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 11405).

## 13A15

**திருவாசக மணிகள்.** சு.சிவபாதசுந்தரம். கொழும்பு: விவேகானந்த சபை, மேட்டுத் தெரு, மீள் பதிப்பு, 1961, 4வது பதிப்பு, 1954, 1வது பதிப்பு மாசி 1934. (கொழும்பு 13: டொமினியன் அச்சகம்).

64 பக்கம், விலை: சதம் 85., அளவு: 17x12 சமீ.

மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய திருவாசகப் பதிகங்களிலிருந்து தேர்ந்து வெளியிடப்பட்ட இந்நூலை புலோலியூர் சு.சிவபாதசுந்தரனார் தொகுத்து அதற்கான உரையெழுதியுமுள்ளார். இதில் சிவபுராணம், கீர்த்தித் திருவகவல் முதலிய மூன்று பதிகங்கள், திருச்சதகம், நீத்தல் விண்ணப்பம், திருவெம்பாவை முதலிய ஒன்பது பதிகங்கள், திருக்கோத்தும்பி முதலிய நான்கு பதிகங்கள், திருப்பள்ளியெழுச்சி முதலிய மூன்று பதிகங்கள், கோயிற்றிருப் பதிகம் முதலிய நான்கு பதிகங்கள், அடைக்கலப் பத்து முதலிய எட்டுப் பதிகங்கள், வாழாப் பத்து முதலிய பதினேழு பதிகங்கள் ஆகியன இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 2973. முன்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 5156)

## 13A16

**திருவாதவூரடிகள் புராணம்**. கடவுள் மாமுனிவர் ( மூலம்), ம.க.வேற்பிள்ளை (விருத்தியுரை). ம.வே.திருஞானசம்பந்தப் பிள்ளை (பதவுரை). யாழ்ப்பாணம்: சி.சி.சண்முகம்பிள்ளை, அதிபர், சண்முகநாதன் புத்தகசாலை, வண்ணார்பண்ணை, 3வது பதிப்பு, ஆடி 1931, 1வது பதிப்பு, 1895, 2வது பதிப்பு, 1915. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சண்முகநாத யந்திரசாலை).

iv, 156 பக்கம், விலை: ரூபா 190., அளவு: 20.5x14.5 சமீ

இந்நூலின் முதற் பதிப்பு 1895இல் ம.வே.திருஞானசம்பந்தப்பிள்ளையின் தந்தையாரும், சிதம்பரத்திலுள்ள நாவலர் கலாசாலைத் தலைமையாசிரியருமாயிருந்த ம.க.வேற்பிள்ளையினால் எழுதி வெளியிடப்பட்டது. 1915இல் வண்ணார்பண்ணை எஸ்.எஸ்.சண்முகநாதன் அவர்களது புத்தகசாலையின் வாயிலாக இரண்டாம் பதிப்பு வெளிவந்தது. இவ்விரண்டாம் பதிப்பு, அக்காலத்தில் தமிழகத்தில் வழக்கிலிருந்த பல்வேறு திருவாதவூரடிகள் புராண நூல்களிலும், உரைகளிலும் இருந்த பாடபேதங்கள், விபரீத உரைகள் என்பவற்றைக் கண்டித்தும் முன்னைய பதிப்பைப் புதுக்கியும் வழங்கியிருந்தது. இரண்டாம் பதிப்பின் மீள்பதிப்பே இந்நூலாகும். இது சிறப்புப்பாயிரம், உரைப்பாயிரம், பாயிரம், மந்திரிச் சருக்கம், திருப்பெருந்துறைச் சருக்கம், குதிரையிட்ட சருக்கம், மண் சுமந்த சருக்கம், திருவம்பலச் சருக்கம், புத்தரை வாதில் வென்ற சருக்கம், திருவடி பெற்ற சருக்கம் ஆகிய இயல்களில் விரித்து எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 2441. பின்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 11229).

## 13A17

**நம் முன்னோரளித்த அருஞ்செல்வம்: மூன்றாம் பாகம்: இலங்கைச் சரித்திரமும் உலக சரித்திரமும்**. ஜீ.ஸி.மெண்டிஸ், எஸ்.ஏ.பேக்மன். கொழும்பு: கொழும்பு அப்போத்திக்கரிஸ் கம்பெனி லிமிற்றெட், 84, பிரதான வீதி, பெட்டா, 2வது பதிப்பு, 1955, 1வது பதிப்பு, 1951. (கொழும்பு: அப்போத்திக்கரிஸ் கம்பெனி லிமிட்டெட், குமார வீதி, கோட்டை).

xi, 368 பக்கம், வரைபடங்கள், படங்கள், விலை: ரூபா 3.75, அளவு: 18.5x12.5 சமீ.

1936-ம் ஆண்டில் வித்தியா பகுதியினர் வெளியிட்ட புதிய சரித்திர பாடத்திட்டத்துக் கமைய எழுதப்பட்டது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 2770. பின்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 9941).

## 13A18

**நலமுடன்**. எஸ்.சிவதாஸ். வவுனியா: வவுனியா மனநலச் சங்கம், மனநலப் பிரிவு, மாவட்டப் பொது வைத்தியசாலை, 4வது திருத்திய பதிப்பு, 2013, 1வது பதிப்பு, ஏப்ரல் 2005. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

xvi, *136 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 200., அளவு: 21* x*14.5 சமீ.*, ISBN: *978-955-0924-01-1.*

*ஆழிப்பேரலையின் பாதிப்பின் பின்னர் வெளியான உளவளத்துணை நூல். மனநல மருத்துவர் எஸ் சிவதாஸ் எழுதிய இந்நூல் 2004இல் ஏற்பட்ட ஆழிப்பேரலையின் பின்னரான மீட்புப்பணிகளில் ஈடுபட்ட அனுபவங்களையும், கண்ட காட்சிகளையும், பாதிக்கப்பட்டவர்களுக்கு அளித்த பராமரிப்புச் சிகிச்சைகளையும் அடிப்படையாக வைத்து உருவாக்கப்பட்டுள்ளது. இந்நூலில் சொல்லப்படுகின்ற அறிவு, தத்துவங்கள், கோட்பாடுகள், உதவும் முறைகள் எல்லாம் பிற அனர்த்த உளமீட்புப் பணிகளுக்கும் பொருந்துவனவாக உள்ளன. அறிமுகம், உளப்பேரதிர்வு, சிக்கலான அவசர நிலைமை, மனநலமும் சமூக ஆதரவும், நெருக்கீட்டினை எதிர்கொள்ளல், தீவிர நெருக்கீட்டு எதிர்த்தாக்கம், நெருக்கீட்டுக்குப் பிற்பட்ட மனவடுநோய், இழிவிரக்கம், மெய்ப்பாடு, ஏனைய விளைவுகள், பதகளிப்பு, மனச்சோர்வு, உதவும் வழிமுறைகள், உளவளத்துணை, அரங்கச் செயற்பாடு, சாந்த வழிமுறைகள், நிறைவுரை ஆகிய 17 தலைப்புகளில் இந்நூல் விரிகின்றது. (முன்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 4049, 7*A*22)*

## 13A19

**நாவலர் பெருமான்.** *கா.மாயாண்டி பாரதி. கொழும்பு 4: இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்,248, 1/1 காலி வீதி, 4வது பதிப்பு, 2016, 1வது பதிப்பு, ஜுலை 1955, 2வது பதிப்பு, 1957, 3வது பதிப்பு, 1962. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).*

x, *147 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 21.5*x*14.5 சமீ.*

*தமிழ்நாடு, பாளையங்கோட்டை, தூய யோவான் கல்லூரி, தமிழ் விரிவுரையாளரான வித்துவான் கா.மாயாண்டி பாரதி அவர்கள், ஈழத்து நல்லூர் ஆறுமுக நாவலர் பற்றி எழுதிய நூல் இது. தோற்றுவாய், குலச் சிறப்பும் பெருமான் பிறப்பும், கல்வி வேட்கையும் இளமை வாழ்க்கையும், இரு பெரும் பணிகள், உரையாசிரியரும் பதிப்பாசிரியரும், சொல்லின் செல்வர், குணக்கலைக் குன்று, பிறவாப் பெருநிலை ஆகிய எட்டு இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (முன்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 7993).*

## 13A20

**படவரைகலையில் எறியங்கள்: உயர்தர வகுப்பிற்குரியது.** *க.குணராஜா. யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 82, பிரவுண் வீதி, 7வது பதிப்பு, ஓகஸ்ட் 2002, 1வது பதிப்பு, ஏப்ரல் 1965. (யாழ்ப்பாணம்: அச்சக விபரம் தரப்படவில்லை).*

*88 பக்கம், வரைபடங்கள், விலை: ரூபா 120., அளவு: 21*x*14 சமீ.*

Projection *எனப்படும் எறியங்கள், படவரைகலையில் பயன்படுத்தப்படும் வகை முறைகளை இந்நூல் விளக்குகின்றது. எறியங்கள், உச்சியெறியங்கள், கூம்பெறியங் கள், உருளையெறியங்கள், எறியங்களைத் தெரிவுசெய்தல் ஆகிய ஐந்து*

அத்தியாயங்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) வகுப்பு மாணவர்களுக்கும் பொதுக்கலைத்தேர்வு மாணவர்களுக்கும் பயன்படக்கூடியளவு இந்நூலை ஆசிரியர் ஆக்கியுள்ளார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 30173. முன்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 9853).

## 13A21

**10ம் 11ம் தரம் கட்டுரை மஞ்சரி: சிறப்புச் சித்திக்குச் சிறந்த துணை.** சு.வேலுப்பிள்ளை. யாழ்ப்பாணம்: சு.வேலுப்பிள்ளை, நாவற்குழி, பதிப்பு விபரம் தரப்படவில்லை. (கொழும்பு 12: லங்கா புத்தகசாலை, F.L.1/14, டயஸ் பிளேஸ், குணசிங்கபுர).

208 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 21x14 சமீ.

நல்ல கட்டுரைகள் எழுதும் ஆற்றலை மாணவரிடையே வளர்க்கும் நோக்குடன் ஆசிரியர் சு.வே. எழுதிய 50 கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. மாணவர் பொருளை மனதிலே நிறுத்திச் சிந்தித்தற்கேற்ற வகையில் பொருள்பற்றிய குறிப்புகள் கட்டுரையின் ஆரம்பத்தில் தரப்பட்டுள்ளன. வரலாறு, விளக்கம், சிந்தனை, வர்ணனை, சொல்லோவியம், மேடைப்பேச்சு, கற்பனை, விமர்சனம், பத்திரிகைக் கட்டுரை, வானொலி நாடக விமர்சனம், தற்சார்புக் கட்டுரை, உரையாடல், சிறுகதை, சுயசரிதை ஆகிய பண்புகளைக் கொண்ட தனித்தனிக் கட்டுரைகள் இவை. இந்நூலின் பல பதிப்புக்கள் நூல்தேட்டத்தில் பதிவாகியுள்ளன. எவற்றிலும் ஆண்டு விபரம் உள்ளிட்ட முக்கிய நூலியல் விபரங்கள் தரப்படவில்லை. பதிப்புகளுக்கிடையே புதிய கட்டுரைகள் செருகப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 29860. முன்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 8713, 9745, 10A12).

## 13A22

**பிரதேச வரலாற்று மூலங்கள்: ஒரு நூல்வழித் தேடல்: தீவகம்.** என்.செல்வராஜா. லண்டன்: யாழ்.தீவக ஒன்றியம், பிரித்தானியா, 2வது பதிப்பு, மே 2018, 1வது ஜேர்மன் பதிப்பு, செப்டெம்பர் 2017. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

x, 129 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 500., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-0-9930143-5-2.

தாம் பிரிந்துவந்த மண்ணின் நினைவுகளை பிரதேச வரலாறுகளாகப் பதிவுசெய்யும் நடைமுறை புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் நீண்டகாலமாகவே இருந்து வந்துள்ளது. அதே வேளை உள்ளக இடப்பெயர்வுகளால் தாம் இழந்த மண் பற்றிய துயரப் பதிவுகளை மேற்கொண்டு வரலாறாக்கும் பணிகளும் அண்மைக் காலத்தில் தாயகத்தில் முனைப்புப்பெற்று வந்திருக்கின்றன. பிரதேச வரலாறென்பது வளர்ந்துவரும் ஒரு ஆய்வுப்பரப்பாக மாறிவிட்டதெனலாம். இன்று நமது புகலிடங்களில் உருவாக்கப்பட்டு இயங்கிவரும் கோவில்கள் கூட, தாயகத்துக் கோயில்களின் நினைவுகளைத் தாங்கியே இயங்குவதை ஆழ்ந்து அவதானிக்க

முடிகின்றது. ஆங்காங்கே உருவாக்கப்பட்டு, ஆண்டுதோறும் சந்திப்பு நிகழ்வுகளை மேற்கொண்டு கூடிப் பேசிப் பிரியும் ஊர்ச் சங்கங்கள் கூட, பிரதேச வரலாற்றின் கூறுகளாகவே அமைகின்றன. அவை அவ்வப்போது வெளியிடும் மலர்களும் அவ்வப் பிரதேசத்தின் வரலாற்றுப் படிமங்களாகவே காணப்படுகின்றன. பாடசாலை பழைய மாணவர் சங்கங்களும் இந்த வகைக்குள் அடங்குகின்றன. இன்று ஈழத்தமிழர்களால் ஆங்காங்கே பதிவுசெய்யப்பட்டுவரும் பிரதேச வரலாற்றுக் கூறுகளைத் தொகுத்துப் பகுத்துப் பார்ப்பதே ஒரு வரலாற்று ஆவணமாகி விடும். அத்தகையதொரு விரிந்த தேடலுக்குமுன்னோடியாக, தனிப்பட்டசில பிரதேச வரலாற்றுக் கூறுகளை இனம்காண ஆய்வாளர்களுக்கு உதவும் வகையில் இந்தக்கட்டுரைத் தொடர் அமைகின்றது. இத் தொடரில் குறிப்பாகத் தீவகம் பற்றி ஈழத்தில் இதுவரை எழுந்தவையும், ஆசிரியரின் பார்வைக்குக் கிட்டியவையுமான நூல்களையே பயன்படுத்தியிருக்கின்றார். ஒவ்வொரு இயலிலும் குறிப்பிடப்பட்ட நூல்களின் நூலியல் விபரம், வாசகரின் ஆய்வுத்தேடலுக்கான விரிவான வகையில் ஒவ்வொரு இயலின் இறுதியிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. இது ஆசிரியரின் 46ஆவது நூலாகும். (முன்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 11986).

## 13A23

**புதிய சுகாதாரக் கல்வி தரம் 9**. எஸ்.செல்வநாயகம், செல்வி எஸ்.பிரான்சிஸ். யாழ்ப்பாணம்: மாசில் பதிப்பகம், 9/2, ஈச்சமோட்டை வீதி, 1வது பதிப்பு, செப்டெம்பர் 1979. (யாழ்ப்பாணம்: வஸ்தியான் அச்சகம்).

(4), viii, 83 பக்கம், விளக்கப்படங்கள், அட்டவணைகள், விலை: ரூபா 9.00, அளவு: 21x14 சமீ.

இந்நூல் உணவும் பயனும், போசாக்கின்மை, உணவில் தொற்றல் அல்லது அழுக்குப் படல், உயிர்வாழ்வதற்கு நீர், உயிர்வாழ்வதற்கு வளியின் அவசியம், தொற்றுநோய்கள் ஆகிய ஆறு இயல்களில் எழுதப்பட்டுள்ளது. (பின்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 9438. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 35412).

## 13A24

**பெருங்காப்பியம் பத்துப் பற்றிய காப்பியச் சொற்பொழிவுகள்**. எஸ்.பொன்னுத்துரை (தொகுப்பாசிரியர்). கொழும்பு 11: அரசு வெளியீடு, 231 ஆதிருப்பள்ளித் தெரு, 1வது பதிப்பு, நவம்பர் 1965. (கொழும்பு 13: ரெயின்போ பிரின்டர்ஸ், 231 ஆதிருப்பள்ளித் தெரு).

104 பக்கம், விலை: ரூபா 3.50, அளவு: 21.5x14 சமீ.

முற்காலத்தில் தமிழில் எழுதப்பட்ட சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டலகேசி, வளையாபதி, சீவக சிந்தாமணி என்னும் காப்பியங்கள் ஒருங்கே ஐம்பெருங் காப்பியங்கள் என அறியப்படுகின்றன. பெருங்காப்பியங்களை ஐந்தாகப் பகுப்பது தமிழ் மரபு. பின்னாளில் எஞ்சிய காப்பியங்களான பெரிய புராணம், கம்பரா

மாயணம், சீறாப்புராணம், தேம்பாவணி, இரட்சணிய யாத்திரிகம் ஆகியவற்றையும் சேர்த்துப் பெருங்காப்பியம் பத்து என்கிறார் எஸ்.பொ. இக்காப்பியங்கள் பத்தையும் பற்றிப் பல்வேறு தமிழறிஞர்கள் வழங்கிய அரிய கருத்துக்களைத் தொகுத்து எழுதப்பெற்ற கட்டுரைகள் அடங்கிய தொகுப்பே இந்நூலாகும். அறிஞர் எப். எக்ஸ்.சி.நடராசாவும் இத்தொகுப்புக்குப் பங்களிப்பைச் செய்துள்ளார். காப்பியங்கள் மீது எஸ்.பொ விற்கு இருக்கும் ஆழ்ந்த ஈடுபாடு இந்நூலில் புலப்படுகின்றது. ஆய்வாளர்களுக்கும் தமிழ் ஆர்வவலர்களுக்கும் அரிய பொக்கிஷம். இது பத்தாவது அரசு வெளியீடாக வெளிவந்துள்ளது. (பின்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 0341. இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 2569).

### 13A25

**பேராசிரியர் எதிரிவீர சரச்சந்திராவும் ஈழத்து நாடக மரபும்.** *சி.மௌனகுரு. ராஜகிரிய: விபவி மாற்றுக் கலாசார மையம், 51/7, ராஜாஹேவாவித்தாரண மாவத்தை, ராஜகிரிய வீதி, 1வது பதிப்பு, 1997. (கொழும்பு: அச்சக விபரம் தரப்படவில்லை).*

*55 பக்கம், விலை: ரூபா 50., அளவு: 20x14.5 சமீ.*

பேராசிரியர் எதிரிவீர சரச்சந்திரா அவர்கள் ஈழத்து நாடக உலகில் முக்கியமான ஓர் ஆளுமை. இந்த ஆளுமையின் தாக்கம் ஈழத்து நாடக உலகை வெகுவாகப் பாதித்துள்ளது. 1960களில் ஈழத்துத் தமிழரின் நாடக மூலமான கூத்தினது மீள்கண்டுபிடிப்பும், அதன் செம்மைப்பாடும் பேராசிரியர் சரச்சந்திராவின் நேரடித் தாக்கத்தின் விளைவுகளாகும். அவரது ஆளுமை மறைமுகமாக 1970களுக்குப் பின் வந்த தமிழ் நாடகத்திற் தீவிர செயற்பாட்டாளர்களாக விளங்கிய இளம் தலைமுறையினரைப் பாதித்தது. ஆய்வறிவாளர் மத்தியில் கலைஞராகவும், கலைஞர் மத்தியில் ஆய்வறிவாளராகவும் விளங்கிய இவர், மனிதர்களுடைய அன்பையும், சௌஜன்யத்தையும், ஒற்றுமையையும் வேண்டிய மிகப்பெரும் மனிதாபிமானி. அவர் பற்றிய அறிமுகம் தமிழ் மக்களுக்கு மிக அவசியம். இந் நூல் அதனைச் செய்துள்ளது. இந்நூல் இரண்டு கட்டுரைகளைக் கொண்டது. ஒன்று பேராசிரியர் எதிரிவீர சரச்சந்திரவும் ஈழத்து நாடக மரபும் என்ற சி.மௌனகுருவின் கட்டுரை. இரண்டாவது, மறைந்த பேராசிரியர் சரச்சந்திரா அவர்களின் நினைவை யொட்டி இலங்கை வானொலியில் கிழக்குப் பல்கலைக் கழகக் கலைப்பீடாதிபதி யாகப் பணியாற்றிய கலாநிதி சி.மௌனகுருவுடனான ஒரு உரையாடல். இலங்கைத் தேசிய நாடகங்கள் என்ற தொனிப்பொருளில் இவருடன் உரையாடியவர் எஸ்.எழில்வேந்தன். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 17106. பின்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 9521)

## 13A26

**பொது இரசாயனம் பகுதி 2: ஆவர்த்தன அட்டவணை.** தம்பையா சத்தீஸ்வரன். யாழ்ப்பாணம்: த.சத்தீஸ்வரன், 102, பிரவுண் வீதி, 1வது பதிப்பு, 1990. (யாழ்ப்பாணம்: புதிய சித்திரா அச்சகம், 664, ஆஸ்பத்திரி வீதி).

(6), 72 பக்கம், வரைபடங்கள், குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14 சமீ.

இந்நூல் ஆவர்த்தன விதி, ஆவர்த்தன அட்டவணை, ஆவர்த்தன இயல்புகள், அணுப்பருமன் (அணு ஆரை), அயனாக்கற் சக்தி, மின்னெதிர் இயல்பு, இலத்திரன் நாட்டச் சக்தி, அணுக்கனவளவு, உருகுநிலை, கொதிநிலை, மேலதிக பயிற்சி வினாக்கள், பயிற்சி வினாக்களின் விடைகள், மேலதிக பயிற்சி வினாக்களின் விடைகள், முடிவுரை ஆகிய பிரிவுகளின்கீழ் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 33114. பின்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் **9411**).

## 13A27

**முரசம் 2018: பிரித்தானிய தமிழர் தகவல் ஏடு.** இலண்டன் IG1 9RY: Murasam Publications Limited, P.O.Box 2203, Ilford, 11வது பதிப்பு, 2018. (இலண்டன்: அச்சக விபரம் தரப்படவில்லை).

418 பக்கம், வண்ணத் தகடுகள், விலை: இலவசம், அளவு: 21x15 சமீ.

பிரித்தானியாவில் வெளியாகும் வர்த்தக வழிகாட்டி. பயனுள்ள பிரித்தானிய தொலைபேசி இலக்கங்கள், மற்றும் பல்வேறு உசாத்துணைத் தகவல்களுடன் 2002 முதல் ஆண்டுதோறும் வெளிவரும் வழிகாட்டி. வர்த்தகத் துறைகள் அகரவரிசையில் தொகுக்கப்பட்டுள்ளன. புகலிடத்தில் குறுகிய காலத்தில் தொழில், வர்த்தகம், தொழில்நுட்பம், தகவல் தொடர்பு, மருத்துவம், கல்வி போன்ற பல்வேறு துறைகளில் தமிழ்மக்கள் காட்டிவருகின்ற ஈடுபாடும், கடின உழைப்பும் திறமையும் வெற்றியும் ஒவ்வொரு பக்கங்களிலும் விரவிக்கிடக்கின்றன. தகவல் பகுதி, அகரவரிசை தொகுப்பு, தகவல் பகுதி-2, அகரவரிசை பொருளடக்கம் ஆகிய நான்கு பிரிவுகளின்கீழ் தகவல்கள் வகுக்கப்பட்டுள்ளன.(முன்னைய பதிவிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 1028).

## 13A28

**மெய்கண்டதேவர் அருளிச்செய்த சிவஞானபோதமும் வார்த்திகமென்னும் பொழிப்புரையும்.** மெய்கண்டதேவர் (மூலம்), சிவஞான சுவாமிகள் (சிற்றுரை), ஆறுமுகநாவலர் (பரிசோதித்தவர்). சிதம்பரம்: முதலியார் ஜி.சுப்பிரமணியம், தருமபரிபாலகர், சிதம்பர சைவப்பிரகாச வித்தியாசாலை, 4வது பதிப்பு, தை, 1949, 1வது பதிப்பு, பார்த்திப வருடம், வைகாசி மாதம் 1885). (சென்னபட்டணம்: வித்தியாநுபாலனயந்திரசாலை).

(4), 245 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 17x12 சமீ.

திருவெண்ணெய் நல்லூர் மெய்கண்டதேவர் அருளிச்செய்த இந்நூல் திருவாவடுதுறை சிவஞான சுவாமிகளின் சிற்றுரையுடன் யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக

நாவலரவர்களால் பரிசோதிக்கப்பட்டு, முதலியார் ஜி.சுப்பிரமணியம் அவர்களால் சென்னையில் அச்சிடப்பட்டது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 34107. முன்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 5071).

### 13A29

**மொழிபெயர்ப்பு நுட்பம்: ஓர் அறிமுகம்.** இ.முருகையன். கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 2வது பதிப்பு, 2014, 1வது பதிப்பு, 2002. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

x, 154 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 500., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-659-381-5.

எல்லோரும் எளிதில் விளங்கிக்கொள்ளும் வகையில், இந்நூலில் மொழிபெயர்ப்பு தொடர்பான இலகுவான அடிப்படைக் கூறுகள் படிப்படியாகத் தெளிவுபடுத்தப் பட்டுள்ளன. அதன்பொருட்டு பரும்படியான எடுத்துக்காட்டுக்களின் உதவியுடன் பொதுமதியின் பாற்பட்ட சிந்தனைகளோடு தொடங்கினாலும், உளவியல், கல்வியியல், மொழியியல், இலக்கியம், இலக்கணம் சார்ந்த ஏனைய கூறுகளையும் மெல்ல மெல்ல இணைத்து மொழிபெயர்ப்பு நுட்பங்களை இந்நூல் அறிமுகம் செய்கின்றது. மொழியியல் சார்ந்த கற்கை நெறிகளிற் பயிலும் முதற்பட்ட மாணவர்களுக்கும், இதழியல், வானொலி, தொலைக்காட்சி என்பவற்றுடன் தொடர்புடைய ஊடகவியலாளருக்கும் அரசு-தனியார்துறை மொழிபெயர்ப் பாளருக்கும் ஏற்ற நூல். விளக்கங்களும் வரைவிலக்கணங்களும், வழிமுறைகளும் மாதிரியுருக்களும், அமைப்புகளின் ஒப்பீடு, சொல்லும் பொருளும், மரபுத் தொடர்கள் எனப்படும் ஆகுமொழிகள், மொழியில் நிகழும் மாற்றங்கள், கலைச்சொல் ஆக்கம், கவிதை மொழிபெயர்ப்பு, பன்மொழிப் பயில்வு ஆகிய ஒன்பது இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. பின்னிணைப்பாகத் தமிழ் மொழிபெயர்ப்பின் தொடக்கங்கள் என்ற கட்டுரை இணைக்கப்பட்டுள்ளது. முன்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 2281).

### 13A30

**யாழ்ப்பாண இராச்சியம்.** சி.க.சிற்றம்பலம் (பதிப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: பேராசிரியர் சி.க.சிற்றம்பலம், முதுநிலைப் பேராசிரியர், வரலாற்றுத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, 2வது பதிப்பு, 2006, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1992. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, ½, டாம் வீதி).

xvi, 336 பக்கம், 20 தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

கி.பி. 16ம் நூற்றாண்டின் ஆரம்பகாலத்தில் (கி.பி.1505) போர்த்துக்கேயர் ஈழத்திற்கு வந்தபோது இங்கே மூன்று அரசுகள் காணப்பட்டன. அவை யாழ்ப்பாணம், கோட்டை, கண்டி அரசுகள் எனப் பெயர்பெற்றிருந்தன. கோட்டை, கண்டி அரசுகளைப் போலன்றி யாழ்ப்பாண அரசுக்கு நீண்டதொரு அரசியற் பின்னணி

*இருந்தது. கி.பி.13ம் நூற்றாண்டுகளின் பிற்பகுதிகளில் எழுச்சிபெற்ற இவ்வரசு கி.பி.17ம் நூற்றாண்டின் முற்பகுதியில் (கி.பி.1619) போர்த்துக்கேயரிடம் போர் முனையில் தன் சுதந்திரத்தை இழந்தது. இக்காலப்பகுதிக்குரிய இவ்வரசின் வரலாறு இந்நூலின் கருப்பொருளாகின்றது. வரலாற்று அறிமுகம் (சி.க.சிற்றம்பலம்), வரலாற்று மூலங்கள் (வி.சிவசாமி), ஆரியச் சக்கரவர்த்திகள் காலம் (சி.பத்மநாதன்), யாழ்ப்பாண மன்னர்களும் போர்த்துக்கேயரும் (திருமதி சோ.கிருஷ்ணகுமார்), தொல்லியற் கருவூலங்கள் (ப.புஷ்பரட்ணம்), ஆட்சிமுறை (சி.பத்மநாதன்), சமூகம் (சி.க.சிற்றம்பலம்), சமயம் (சி.க.சிற்றம்பலம்), பண்பாடு (வி.சிவசாமி), சிற்பம் (செ.கிருஷ்ணராஜா), நாணயம் (சி.பத்மநாதன்) ஆகிய 11 கட்டுரைகளின் வாயிலாக இந்நூல் முழுமைபெற்றுள்ளது. (முன்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 2960).*

**பதின்மூன்றாம் தொகுதி முற்றிற்று**

# தலைப்பு வழிகாட்டி


அக நூல். 12016

அகண்டாகார அருணாசல அருவி: நல்லைக் குகன் அழகு மதுரம். 12118

அகமலர்ச்சி. 12020

அகில இலங்கை தமிழ்மொழித் தினம் 1990. 12439

அகில இலங்கை தமிழ்மொழித் தினம் 1991. 12440

அகில இலங்கை தமிழ்மொழித் தினம் 1992. 12441

அகில இலங்கை தமிழ்மொழித் தினம் 1993. 12442

அகில இலங்கை தமிழ்மொழித் தினம் 1995. 12443

அகில இலங்கை தமிழ்மொழித் தினம் 1996. 12444

அகில இலங்கை தமிழ்மொழித் தினம் 1997. 12445

அகில இலங்கை தமிழ்மொழித் தினம் 1998. 12446

அகில இலங்கை தமிழ்மொழித் தினம் 1999. 12447

அகில இலங்கை தமிழ்மொழித் தினம் 2001. 12448

அகில இலங்கைத் தமிழ்த் தின விழா: மட்டக்களப்பு, 1970. 12449

அகில உலக மனித உரிமை வெளியீடு: ஆசிரியர்களுக்கான குறிப்புக்கள். 12230

அட்சரகணிதம்-1. 12584

அடங்காப்பற்று வன்னியில் ஆதிகாலத் தமிழர் வரலாறு: நாகர்காலத்துப் புராதன தொல்பொருட் சின்னங்கள். 12991

அடிப்படை உயிரியல்: க.பொ.த.உயர்தரம் உயிரியல் பாடத்திட்டம். 12607

அடிப்படைச் சந்தைப்படுத்தல்: உயர்தர வகுப்புகளுக்குரியது. 12681

அடிப்படைச் சிங்களம். 12534

அண்ணாமலை அருள்விளக்கு. 12899

அநுபவங்களும் அநுமானங்களும்: கவிதை நூல். 12771

அப்பரும் சுந்தரரும் அருளிய அற்புதத் திருப்பதிகங்கள்: பதிக விளக்கத்துடன். 12119

அபிராமி அந்தாதி. 12120

அபிவிருத்திக்கான முகாமைத்துவச் சிந்தனைகளும் செயற்பாடுகளும். 12644

அம்பிகையின் மகத்துவங்கள். 12043

அமரர் உயர்திரு சு.பற்குணம்: நினைவு மலர். 12923

அமைதி வழியும் மதுர மொழியும். 12852

அமைதியான சமாதானத் தூதுவர்: ஆசிரியர்களுக்குச் சமர்ப்பணம். 12285

அரங்க நிர்மாணம்: நாடகமும் அரங்கியலும்: மாணவர் கைந்நூல். 12701

அரங்கியல் நூல்:க.பொ.த.உயர்தரம் (நாடகமும் அரங்கியலும்). 12702

அரசறிவியலாளன் (இதழ் 2, டிசம்பர் 2007). 12220

அரசறிவியலாளன் (இதழ் 3, டிசம்பர் 2009). 12221
அரிச்சந்திர புராணம்: மயான காண்டம் உரையுடன். 12736
அருங்கலை ஆடற்கலை. 12697
அருணகிரிநாத சுவாமிகளருளிய கந்தரநுபூதி. 12121
அருணகிரிநாத சுவாமிகளும் கதிர்காமத் திருப்புகழும். 12122
அல்மாத் தோட்டக் கணக்கப்பிள்ளை சுப்பையா சிவஞானம் நினைவு மலர். 12886
அலுவலகம் மரபும் செயலும். 12645
அலையருவி சிறப்பு மலர் 1995. 12751
அழகியற் கல்வி சித்திரக் கல்வி (பாடநூல்): தரங்கள் 10-11. 12684
அழகியற் கல்வி: பரத நாட்டியம். 12698
அழிக்கப்பட்ட தமிழ் கிராமங்கள். 12981
அளவெட்டி-நாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானம் ஸ்ரீ நாகவரத நாராயணர் சித்திரத்தேர் மலர். 12097
அளவையியல், விஞ்ஞான முறை-1. 12023
அற்புதமான நீரைப் பராமரிப்போம். 12279
அறநெறிப் பாடசாலைகளுக்கான பாடத்திட்டம். 12510
அறிவியல் உண்மைகள். 12001
அறிவின் சமூகவியல் சிந்தனைகள். 12195
அறுவடைகள். 12860
அன்பான வேண்டுகோள்(கல்வி, உளவியல், தத்துவம்). 12286
அன்புள்ள தம்பிக்கு 1000 உபதேசங்கள். 12024
அன்றாடத் தேவைகளுக்காக எழுதுதல் I: மேலதிக மொழி விருத்திப் பாடநெறி-தமிழ். 12542
அனர்த்த காலங்களில் நெருக்கீடுகளை எதிர்கொள்ளல். 12022
ஆங்கில இலக்கிய வரலாறு. 12733
ஆச்சி நீ காளி. 12123
ஆசிரிய தீபம்: சர்வதேச ஆசிரிய தின விழா சிறப்பு மலர் 1991. 12450
ஆசிரிய தீபம்: சர்வதேச ஆசிரிய தின விழா சிறப்பு மலர் 1994. 12451
ஆசிரியமணி:அ.பஞ்சாட்சரம் அவர்களின் பாராட்டுவிழா மலர். 12924
ஆசிரியமணி மலர் (உரும்பிராய் மேற்கு ஆசிரியமணி அருணாசலம் பஞ்சாட்சரம் அவர்களின் நினைவுமலர்). 12925
ஆயிரம் கவிஞர்கள் கவிதைகள் (32 நாடுகள், 1098 கவிஞர்கள்). 12772
ஆரண்ய வாசம்: கவிதைத் தொகுப்பு. 12773
ஆரம்ப பொருளியல். 12243
ஆரம்ப விஞ்ஞானம்: ஆண்டு 5. 12578
ஆரம்ப விஞ்ஞானம்: 7-1. 12579
ஆரம்ப விண்ணியல். 12592
ஆரோக்கியம் தேகப்பயிற்சி. 12716
ஆலய வழிபாட்டில் அதிசய அனுபவங்கள். 12124
ஆழக்கடல் வென்றவர்கள். 12982
ஆனந்த சாகரம்: அங்குரார்ப்பண சிறப்பு மலர். 12075
ஆனை கட்டிய அரியாத்தை (நாடகம்). 12783
இசைத்தமிழ்ச் சிந்தனைகள்: தமிழரின் இசை மரபு சார்ந்த கட்டுரைகளின் தொகுப்பு. 12688
இசையியல் விளக்கம்: 3ம் பாகம். 12689
இணுவில் இந்து: 150ஆவது ஆண்டு நிறைவு சிறப்பு மலர் 1864-2014. 12452
இணையிலி:சீரிணுவைத் திருவூரின் வாழ்வும் வளமும். 12983
இதயம் துடித்த இருபது ஆண்டுகள். 12994
இந்து சமய பாட வினா-விடை. 12063
இந்து சமய மன்றம். 12076

இந்து சமய விழாக்களும் விரதங்களும். 12044
இந்து சாதனம் 75ஆவது ஆண்டு நினைவு மலர்(இந்து சாதன எழுபானைந்தாண்டு மலர்). 12013
இந்து தருமம் 1960-1961 (மாணவர் மலர்). 12090
இந்து தருமம் 1977 (நடராஜர் சிவகாமியம்மன் மணிவாசகர் குடமுழுக்குச் சிறப்பிதழ். 12091
இந்து தருமம் 1989-1990. 12092
இந்து தருமம் 1991-1992: பேராதனை பல்கலைக்கழக பொன்விழா சிறப்பு மலர். 12093
இந்து தருமம் 1992-1993: குறிஞ்சிக்குமரன் ஆலய வெள்ளிவிழா. 12094
இந்து தருமம் 1993-1994. 12095
இந்து நாகரீகம் A/L, G.A.Q. மாணவர்களுக் குரியது: பாகம் 2. 12025
இந்து நாகரிகம்: பாகம் 3. 12026
இந்து நாதம்: 1994. 12339
இந்து பாரம்பரியம். 12045
இந்து மதம் என்ன சொல்கிறது: பாகம் 4: இறை நோக்கிய பயணம். 12046
இந்து மதமும் கடவுள்கள் வரலாறும். 12047
இந்து மாநாட்டுச் சிறப்பு மலர்-2007. 12453
இந்து மாருதம் 2016. 12340
இந்துக்களின் சடங்குகள். 12048
இந்துப் பண்பாட்டு மரபுகள். 12049
இந்துவின் சொல்லாடற் களறி (இயற்றமிழ் வேள்வி 2003). 12341
இந்துவின் தமிழ்த் தீபம் (தமிழ்ச் சுடரின் ஆண்டுச் சிறப்பிதழ்). 12342
இமயம் 2012-2013: கொ/இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி. 12343
இமயம் 2016: கொ/இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி. 12344
இயற்கையுடன் வாழுதல்: கட்டுரைகள். 12618
இயைபாக்கமும் ஒரு சீர்திட நிலையும்: உயிரியல் புதிய பாடத்திட்டம். 12608
இரண்டாம் குடியரசு அரசியலமைப்பு. 12266
இராவண தேசம்: திருகோணமலை மண்ணின் வரலாற்றுப் பதிவுகள். 12984
இருளுக்குள்ளே ஒரு நம்பிக்கை வெளிச்சம் (நாவல்). 12817
இலக்கண விளக்கம்: மூலமும் உரையும். 12537
இலக்கிய மஞ்சரி : ஐந்தாம் புத்தகம். 12737
இலக்கிய விழா 1988-1989: சிறப்பு மலர். 12752
இலக்கிய விழா 1990-1991: சிறப்பு மலர். 12753
இலக்கிய விழா 1995: சிறப்பு மலர். 12754
இலங்கை அரசியலும் பொருளாதாரமும் (1912-1959). 12222
இலங்கை இந்து: திருக்கேதீச்சரம் மண்டலாபிஷேக மலர் 1976. 12098
இலங்கை மத்திய வங்கி: ஆண்டறிக்கை 1970. 12659
இலங்கை மத்திய வங்கி: ஆண்டறிக்கை 1971. 12660
இலங்கை மத்திய வங்கி: ஆண்டறிக்கை 1972. 12661
இலங்கை மத்திய வங்கி: ஆண்டறிக்கை 1976. 12662
இலங்கை மத்திய வங்கி: ஆண்டறிக்கை 1977. 12663
இலங்கை மத்திய வங்கி: ஆண்டறிக்கை 1980. 12664
இலங்கை மத்திய வங்கி: ஆண்டறிக்கை 1983. 12665
இலங்கை மத்திய வங்கி: ஆண்டறிக்கை 1985. 12666

இலங்கை மத்திய வங்கி: ஆண்டறிக்கை 1990. 12667
இலங்கை மத்திய வங்கி: ஆண்டறிக்கை 1998. 12668
இலங்கை மத்திய வங்கி: ஆண்டறிக்கை 1999. 12669
இலங்கை மத்திய வங்கி: ஆண்டறிக்கை 2000. 12670
இலங்கை மத்திய வங்கி: ஆண்டறிக்கை 2001. 12671
இலங்கை மத்திய வங்கி: ஆண்டறிக்கை 2002. 12672
இலங்கை மத்திய வங்கி: ஆண்டறிக்கை 2003. 12673
இலங்கை மத்திய வங்கி: ஆண்டறிக்கை 2008. 12674
இலங்கை மத்திய வங்கி: ஆண்டறிக்கை 2010. 12675
இலங்கை மத்திய வங்கி: ஆண்டறிக்கை 2012. 12676
இலங்கை மத்திய வங்கி: பொருளாதார அளவீடு 1992இன் முதலரைப் பகுதி. 12244
இலங்கை மத்திய வங்கி: பொருளாதார நிலை 1997. 12245
இலங்கை மத்திய வங்கி: பொருளாதார மீளாய்வு 1982. 12246
இலங்கை மனித உரிமைகள் நிலை 1994. 12231
இலங்கை மனித உரிமைகள் நிலை 2002. 12232
இலங்கை மீதான இந்திய ஆக்கிரமிப்பு. 12236
இலங்கை முற்போக்கு இலக்கிய எழுத்தாளர்கள். 12948
இலங்கைக் கலாசாரப் பேரவையின் தமிழ் இலக்கிய விழா மலர்-1972. 12755
இலங்கைக்கான ஜனநாயக அரசியல் கட்டமைப்பு. 12267
இலங்கைத் தேசிய நூற்பட்டியல் (கடந்த காலம்) 1941-1961. 12004
இலங்கைத் தொல்பொருளியலளவை ஞாபகவேடு: தொகுதி 5: இலங்கைத் தூபி. 12992
இலங்கைப் பாடசாலைப் பாடப்புத்தக வரலாறு. 12287
இலங்கையில் இனப்பிரச்சினையின் வரலாறு: 1833-1990 வரை காலவரிசைப் படுத்தப்பட்ட சிறு குறிப்புகள். 12967
இலங்கையில் இஸ்லாம். 13A01
இலங்கையில் 8ஆம் 10ஆந்தர மாணவரின் அடைவு பற்றிய தேசிய கணிப்பீடு: தேசிய அறிக்கை. 12288
இலங்கையில் ஒரு வாரம். 12995
இலங்கையில் கற்புடைமாதர் வழிபாடு. 12050
இலங்கையில் தமிழர் இறைமை. 12259
இலங்கையில் தமிழர் உயர்கல்வி. 12289
இலங்கையில் பழப்பயிர்களைப் பாதிக்கும் பீடைகளும் அவற்றைக் கட்டுப் படுத்தலும். 12639
இலங்கையிற் கல்வி: கி.மு.ஆறாம் நூற்றாண்டு முதல் இற்றை வரை: நூற்றாண்டுவிழா மலர் (பகுதி 1). 12290
இலங்கையிற் கல்வி: கி.மு.ஆறாம் நூற்றாண்டு முதல் இற்றை வரை: நூற்றாண்டுவிழா மலர் (பகுதி 2). 12291
இலங்கையிற் கல்வி: கி.மு.ஆறாம் நூற்றாண்டு முதல் இற்றை வரை: நூற்றாண்டுவிழா மலர் (பகுதி 3). 12292
இலங்கையிற் கலை வளர்ச்சி. 13A02

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணுவதில் எதிர் நோக்கும் அடிப்படைப் பிரச்சினைகள்: சிறீ லங்காவின் வாளேந்தும் ஆண் சிங்கக் கொடியும் இலங்கைப் பிரஜைகளும். 12968
இலங்கையின் கொலைக்களம்: ஆவணப்பட சாட்சியம். 12996
இலங்கையின் பண்டை நிலவாட்சியும் அரசிறையும். 12964
இலங்கையின் பொதுப் பறவைகள். 12609
இலங்கையின் வருங்கால ஆசிரியர்கள் (சஞ்சிகை இலக்கம் 2). 12454
இலங்கையினதும் உலகத்தினதும் மூலாதாரச் சரித்திர நூல். 12867
இலண்டன் சைவ மாநாடு (பத்தொன்ப தாவது) சிறப்புமலர். 12099
இலை மரக்கறிகள். 12640
இளங்கதிர்: இதழ் 1 மலர் 3 (1950-1951). 12345
இளங்கதிர்: இதழ் 1 மலர் 6 (1953-1954). 12346
இளங்கதிர்: இதழ் 1 மலர் 9 (1956-1957). 12347
இளங்கதிர்: 10ஆவது ஆண்டு மலர் (1957-1958). 12348
இளங்கதிர்: 11ஆவது ஆண்டு மலர் (1958-1959). 12349
இளங்கதிர்: 12ஆவது ஆண்டு மலர் 1959-1960. 12350
இளங்கதிர்: 13ஆவது ஆண்டு மலர் (1960-1961). 12351
இளங்கதிர்: 14ஆவது ஆண்டு மலர் (1961-1962). 12352
இளங்கதிர்: 17ஆவது ஆண்டு மலர் 1965/1966. 12353
இளங்கதிர்: 19ஆவது ஆண்டு மலர் (1967-1968). 12354
இளங்கதிர்: 26ஆவது ஆண்டு மலர் 1991/1992. 12355
இளங்கதிர்: 27ஆவது ஆண்டு மலர் 1992-1993. 12356
இளங்கதிர்: 28ஆவது ஆண்டு மலர் 1993-1994. 12357
இளங்கதிர்: 29ஆவது ஆண்டு மலர் 1994-1995. 12358
இளங்கதிர்: 30ஆவது ஆண்டு மலர் 1996-1997. 12359
இளங்கதிர்: 31ஆவது ஆண்டு மலர் 1997-1998. 12360
இளங்கதிர்: 32ஆவது ஆண்டு மலர் 1998-1999. 12361
இளங்கதிர்: 33ஆவது ஆண்டு மலர் 1999/2000. 12362
இளங்கதிர்: 34ஆவது ஆண்டு மலர் 2000-2001. 12363
இளங்கதிர்: 35ஆவது ஆண்டு பவளவிழா மலர் 2002/2003. 12364
இளங்கதிர்: 36ஆவது ஆண்டு மலர் 2004/2005. 12365
இளங்கதிர்: 39ஆவது ஆண்டு மலர் 2008. 12366
இளைஞர் சாரணீயம். 12284
இறை மணி மாலை. 12125
இனப்பிரச்சினை: ஓர் இஸ்லாமியக் கண்ணோட்டம். 12969
இஸ்லாமிய வாழ்வியல் கோட்பாடுகள். 12187
இஸ்லாமும் கவிதையும். 12853
ஈடிப்பஸ் வேந்தன்: கிரேக்க நாடகம். 12788
ஈழத்திருநாட்டின் திரௌபதி வழிபாடுகள். 12051
ஈழத்தில் ஒல்லாந்தர் காலத் தமிழ் இலக்கியங்கள்: சமூக-அரசியல் நோக்கு. 12851
ஈழத்தில் நாடகமும் நானும். 13A03

ஈழத்தின் தமிழ்க் கவிதையியல்: ஒரு நூல்விபரப் பட்டியல். 12005

ஈழத்து நாட்டார் வழிபாடு. 12526

ஈழத்து முஸ்லீம்களின் பேச்சு வழக்கில் பயன்படுத்தப்படும் செந்தமிழ்ச் சொற்கள். 12854

ஈழநாட்டுப் பிரயாணம். 12997

ஈழநாதம்: 1வது ஆண்டு மலர். 12014

ஈழம்-மட்டக்களப்பு மாநிலத்தில் தொன்று தொட்டு வழக்கில் இருந்துவரும் வசந்தன் கூத்து: ஒரு நோக்கு. 12528

உடப்பு தமிழ் மகாவித்தியாலயம்: நூற்றாண்டு விழா சிறப்பிதழ் 2004. 12455

உடல்நல வாழ்வும் அதற்குரிய மூலிகை மருந்துகளும் தாவர உணவு வகைகளும். 12628

உடல்நல வாழ்வும் மூலிகை மருத்துவமும் உணவு வகைகளும். 12629

உடுப்பிட்டி மகளிர் கல்லூரி 125ஆவது ஆண்டு விழா மலர் 1868: 1993. 12456

உதவி, மோதல் மற்றும் இலங்கையில் சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் 2000-2005. 12970

உமா கரம்(புற்றுநோய் தவிர்ப்போம் என்ற நூலின் மீள்பிரசுரம்). 12887

உமா வாசகம்: முதலாம் புத்தகம். 12543

உயர் கணக்கீடு: உற்பத்திக் கணக்கீடு: அலகு 1-1. 12651

உயர்தர மாணவர் பௌதிகம்: ஒளியியல். 12595

உயர்தர மாணவர் பௌதிகம்: காந்தவியலும் மின்னியலும். 12600

உயர்தர மாணவர் பௌதிகம்: மின்னியல். 12597

உயர்தர மாணவர் பௌதிகம்: வெப்பவியல். 12596

உயிர்ப்பல்வகைமை Biodiversity. 12610

உயிரியல் திரட்டு Block 2 (Unit 2) புதிய பாடத்திட்டம். 12612

உயிரியல்(பொதுத் தராதரப் பத்திர வகுப்புக் குரியது). 12611

உரிமையை விரும்பாத உறவுகள் (நாவல்). 12818

உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் கோவில் புனராவர்த்தன மகாகும்பாபிஷேக விழாமலர். 12100

உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம் பவளவிழா மலர், 1915-1990. 12457

உரைநடை விருந்து. 12830

உரைமலர். 12188

உலக வரலாறு: மூன்றாம் பாகம். 12868

உலகில் மிகச் சிறந்த எட்டு சிவத்தலங்கள். 12077

உலகின் தேசிய இனங்களின் விடுதலையும் சமஷ்டி அரசியல் தீர்வும். 12223

உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர் தொடர் பானநெறிமுறை விதிகள். 12233

உள்ளக் கமலம். 12506

உள்ளமென்னும் மாளிகையில். 12819

உளநூலும் கல்வியும். 12293

உறையும் பனிப்பெண்கள்: சிறுகதைகள். 12795

உன்னைச் சரணடைந்தேன் (நாவல்). 12820

ஊவா மாகாண 3-வது தமிழ் சாகித்திய விழா சிறப்புமலர் 1995. 12756

எங்கள் குருநாதன் திருவாசக சுவாமிகள். 12900

எங்கள் ஜனாதிபதி. 12912

எண்ணக்கரு கற்றல். 12294

எதிர்கால உலகமும் நாமும். 12237

எம்மவர்கள்: மறக்கப்படமுடியாத ஆளுமைகள். 12888

எமது கலாசார பாரம்பரியம்: இரண்டாம் தொகுதி. 12218

எயிட்சிலிருந்து பாதுகாத்துக் கொள்வது எப்படி? 12623

எவ்வழி நல்வழி அவ்வழி நாடுவோம்: பல்சமய உறவாடல் ஏடு. 12034

எழுதுவோம் வாசிப்போம்: 6-11 தரங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கான மாதிரிக் கட்டுரைகள். 12729

என் குருநாதன். 12901

எனது வாழ்வில் சாயிபாபா: முதலாம் பாகம். 12126

ஏட்டு மருத்துவம்(தல்பதே பிலியம் 22ஆம் தொகுப்பு). 12633

ஐங்குறுநூறு: மூலமும் உரையும். 12857

ஐரோப்பிய ஓவிய வரலாற்றுச் சுருக்கம். 12685

ஒரு ஈழப் போராளியின் பார்வையில் தோழர் தமிழரசன். 12921

ஒரு கிராமத்துச் சிறுவனின் பயணம்: எஸ். எச்.எம். ஜெமீலின் வாழ்வியல். 12926

ஒரு சில விதி செய்வோம்: கவிதைச் சிந்தனைகள். 12861

ஒரு சைவவாசகம்: தமிழ் மொழிபெயர்ப் புடனானது. 12064

ஒரு நூலின் மகத்துவம்: தரமான நூலொன்றை ஒழுங்கமைப்பதற்கான வழிமுறைகள். 12006

ஒரு பெண்ணின் கதை: சிறுகதைத் தொகுதி. 12796

ஒரு வெளிநாட்டுத் தாயின் வாழ்க்கை: சிறுகதைகள். 12797

ஒன்றே உலகம். 12213

ஓர் அஜமி கண்ட அல்குர்ஆன். 12189

க.பொ.த.உயர்தர வகுப்புக்கான பிரயோக கணிதம்: இயக்கவியல் பயிற்சிகள்: பகுதி 1. 12591

கசடற: ஓய்வுபெற்றோரை வாழ்த்தும் பனுவல் 2010. 12927

கட்டியம்: உலகத் தமிழர் அரங்க ஆய்விதழ். தொகுதி 1-எண்1: ஏப்ரல்-ஜுன் 2002. 12703

கட்டியம்: உலகத் தமிழர் அரங்க ஆய்விதழ். தொகுதி 1-எண்3: அக்டோபர்-டிசம்பர் 2002. 12704

கட்டியம்: உலகத் தமிழர் அரங்க ஆய்விதழ். தொகுதி 1-எண்6: அக்டோபர்-டிசம்பர் 2003. 12705

கட்டுரை மணிகள். 12544

கட்டுரை மலர்கள் 80: 5ம் தர புலமைப்பரிசில் பரீட்சை. 12730

கடவுளைக் கண்டவர்கள். 12727

கண்டிராசன் கதை. 13A04

கண்ணாடி சுவர்களும் சில காகித மனிதர்களும். 12798

கணக்கியல்: இரண்டாம் பகுதி. 12652

கணக்கியற் சுருக்கம்: பகுதி II. 12653

கணக்கீடு பகுதி 3. 12654

கணிதம் ஆண்டு 4. 12585

கணிதம் ஆண்டு 5-பகுதி 2. 12586

கணிதம்: ஆண்டு 8: செயல்நூல். 12587

கணிதம் தரம் 6. 12588

கணிதம் 10ஆம் ஆண்டு. 12589

கந்த புராணக் கதைகளும் அவை களுணர்த்தும் உண்மைநூற் கருத்தும். 12127

கந்த புராணச் சுருக்கம். 12128

கந்தபுராணம்-யுத்தகாண்டம்: சூரபன்மன் வதைப்படலம் மூலமும் தெளிபொருள் விளக்க விரிவுரையும். 12129

கந்தர்வ கானங்கள்: மாவைக் கந்தன் பாமாலை. 12130

கம்பராமாயணம்: அயோத்தியா காண்டம்: மந்தரை சூழ்ச்சிப் படலம், கைகேசி சூழ்வினைப்படலம். 12738

கம்பராமாயணம்: அயோத்தியா காண்டம்: மந்தரை சூழ்ச்சிப் படலமும் கைகேயி சூழ்வினைப் படலமும். 12739
கம்பராமாயணம் சுந்தரகாண்டம்: பகுதி 2-நிந்தனைப் படலம் (விளக்கவுரை யுடன்). 12740
கமலமலர்: பவளவிழா சிறப்பு மலர் 2011. 12458
கமிக்காசிகள். 12273
கர்நாடக சங்கீதம். 12690
கர்மயோகம். 12027
கர்னாடக சங்கீதம்: தரம் 10: வழிகாட்டற் குறிப்புகள். 13A05
கரவை ஏ.சீ.கந்தசாமி நினைவுக் கருத்தரங்கு கட்டுரைத் தொகுப்பு. 12915
கரவை விக்னேஸ்வராக் கல்லூரி: பவளவிழா 1917-1992 சிறப்பு மலர். 12459
கருணாகர கானாமுதம் 2014. 12131
கருணை நதி (நாவல்). 12821
கருத்திட்ட முகாமைத்துவம். 12680
கரையைத் தேடும் கட்டுமரங்கள் (நாவல்). 12822
கல்வி அகராதி. 12295
கல்வி உளவியல்(பாகம் 1): பிள்ளை வளர்ச்சி. 12296
கல்வி உளவியல்(பாகம் 2): கற்றலும் கற்பித்தலும். 12297
கல்வி ஊற்றுக் கண்களில் ஒன்று. 12928
கல்வி-ஒரு பன்முக நோக்கு. 12298
கல்வி பயிற்றலின் அத்திவாரம். 12299
கல்வி முகாமைத்துவம்(தொடர் 1). 12300
கல்வி முன்னேற்றம்: செப்டெம்பர்1997- ஆகஸ்ட் 1998. 12301
கல்வி வளர் சிந்தனைகள் (பாகம் 1). 12302
கல்விக் கொள்கைகள் பாடசாலைப் பரி பாலனம் சம்பந்தமான விரிவுரைகளின் தொகுப்பு. 12303
கல்விக் கொள்கையும் முகாமைத்துவமும். 12304
கல்விக் கோட்பாடுகளும் இலக்கியக் கோட்பாடுகளும். 12305
கல்விக்கான உரிமையும் உலகளாவிய ஏற்பாடுகளும். 12306
கல்விச் செயற்பாட்டில் புதிய செல்நெறிகள். 12307
கல்விப் பணியில் நாவலர். 12308
கல்விப் பாரம்பரியங்கள். 12309
கல்விப் பொதுத்தராதரப் பத்திரப் பரீட்சை (சாதாரணம்): 1978ஆம் ஆண்டு 10ஆந் தரத்துக்கான பாடத்திட்டம். 12310
கல்வியியல் அடிப்படைகள். 12311
கல்வியியல்: ஓர் அறிமுகம். 12312
கல்வியியல் சுற்றறிக்கைகளின் தொகுப்பு (தெரிந்தெடுக்கப்பட்டவை) 2006. 12313
கல்வியியல் நோக்கு. 12314
கல்வியியலாளன்: தொகுதி 01, ஒக்டோபர் 2003. 12367
கல்வியியலாளன் ஆய்விதழ்: தொகுதி 04, ஏப்ரல் 2016. 12368
கல்வியியலாளன் ஆய்விதழ்: தொகுதி 05, ஒக்டோபர் 2016. 12369
கல்வியியற் சிந்தனைகள். 12315
கல்வியின் அடிப்படைகள். 12316
கல்வியும் கலைத்திட்டமும். 12511
கலங்கரை விளக்க அடிவாரமும் ஏனைய கதைகளும்: சிங்கள சிறுகதைத் தொகுப்பு 1. 12816
கலாசுரபி: தூண்டல்-01, துலங்கல்-01. 12370
கலாசுரபி: தூண்டல்-02, துலங்கல்-11. 12371
கலாசுரபி: தூண்டல்-02, துலங்கல்-12. 12372
கலாசுரபி: தூண்டல்-02, துலங்கல்-13. 12373
கலாசூரி, இலக்கியச் செம்மல், மகா வித்துவான் F.X.C.நடராசா: வாழ்க்கை வரலாறு. 12949

கலாநிதி A.M.A.அஸீஸ்: நினைவுதினக் கட்டுரைகள். 12929
கலாயோகி ஆனந்த குமாரசுவாமி. 12945
கலைச்செல்வி: 1974. 12374
கலைச்செல்வி: 1986. 12375
கலைச்செல்வி: 1997. 12376
கலையரசி 2017. 12460
கலைவிழா 1999. 12461
கவிதைகளையும் பாடல்களையும் சுவைப்போம்: மேலதிக மொழி விருத்திப் பாடநெறி-தமிழ். 12547
கவின் தமிழ்2001: வடக்கு கிழக்கு மாகாண தமிழ்மொழித்தின விழா மலர். 12757
கற்பிப்பதற்கான சுதந்திரமும் கற்பதற்கான சுதந்திரமும். 12317
கற்றலில் மாணவர் பிரச்சினைகளுக்கான தீர்வுகள்(ஓர் உளவியல் நோக்கு). 12318
கன்னித் தமிழ் ஓதை: மூன்றாம் புத்தகம். 12545
கன்னித் தமிழ் வாசகம்: இரண்டாம் புத்தகம்: 7ம் வகுப்பு. 12546
கனவுலகம். 12799
காசிநாதர் மான்மியம். 12930
காண்டாவனம்:சிறுகதைகள். 12800
காத்தவராயன்: சிந்து நடை நாடகம். 12791
காதல் வந்த சாலை: காதல் கவிதைகளின் சங்கமம். 12774
காந்தி தரிசனம். 13A06
காப்புறுதி: பூட்கையும் செயற்பாடும். 12283
காயத்ரி என்றால் என்ன? 12052
காரை தீபம்: வெள்ளிவிழா மலர் 2015. 12990
காலநிலையியல்: வளிமண்டல இயக்கமும் பிரதேச காலநிலையும். 12606
காவலூர் புனித அந்தோனியார் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் இலங்கைக் கிளைச் செய்தி ஏட்டின் வெள்ளிவிழா மலர் 1978-2003. 12462
காளி ஆச்சி. 12132
கிரந்தம் தவிர் தமிழ்பழகு. 12535
கிரயக் கணக்கியல்: பாகம் 1. 12655
கிரயக் கணக்கீடு: அலகு 6-2: கூலிக்கிரயமும் மேந்தலைக் கிரயமும். 12656
கிராமோதய சபை கைந்நூல். 12270
கிரிக்கெட் உலக சாதனையாளர்கள். 12717
கிரிக்கெட் உலகில் பிரகாசித்தவர்கள். 12718
கிலரி கிளிண்டன் தோற்றாரா தோற்கடிக்கப் பட்டாரா?. 12238
கிளுவம் வேலியும் கிடுகுத் தட்டியும்: கவிதைத் தொகுப்பு. 12775
குணமாக்கும் மூலிகைகளின் மகத்துவம். 12630
குமார சம்பவம்: தமிழாக்கம். 12794
குருக்கேத்திரன் போர்: வடமோடிக் கூத்து. 12529
குருநாகல் இந்து தமிழ்மகாவித்தியாலயம் வெள்ளிவிழா சிறப்புமலர் 1969-1994. 12463
குழந்தைகளுக்கான ஆரம்ப விஞ்ஞானம்: ஆண்டு 4. 12580
குழந்தையும் தேசமும் (சிறுகதைகள்). 12801
குறிஞ்சிக் குமரிகள்(நாவல்). 12823
கூர்மதி (மலர் 1): 2003. 12377
கூர்மதி (மலர் 2): 2004. 12378
கூர்மதி (மலர் 3): 2005. 12379
கூர்மதி (மலர் 4): 2006-2008. 12380
கூர்மதி (மலர் 5): 2011. 12381
கூர்மதி (மலர் 7): 2014. 12382
கூர்மதி (மாணவர் சிறப்பு மலர்): 2005. 12383
கேத்திர கணிதம்: முதற் புத்தகம். 12590
கேள்வியும் நிரம்பலும். 12247
கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் கொழும்புக் கிளை பொன் விழா சிறப்புமலர் 1944-1994. 12464

கொங்கிறீற்றின் முக்கிய தன்மைகளும் அதன் கலவை விதானமும். 12638
கொழும்பு இந்துக் கல்லூரி ஆண்டு மலர் 1997. 12384
கொழும்பு இந்துக் கல்லூரி -முகத்துவாரம்: வெள்ளிவிழா மலர் 2002. 12465
கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி வரசித்தி விநாயகர் புனராவர்த்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேக மலர். 12101
கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி இருபதாம் ஆண்டு நிறைவையொட்டிய வெளியீடு 2001. 12466
கொழும்பு ஸ்ரீ ராமகிருஷ்ண ஆச்சிரம பஜனாவளி. 12133
கொற்றாவத்தையில் உலாவும் குட்டிக் கதைகள். 12802
கோ பெருஞ்செல்வம். 12642
கோமாதா கருத்துக் களஞ்சியம். 12889
சக்தி வழிபாடு. 12134
சக்தியின் வடிவங்கள். 12053
சங்க காலம் முதல் சமகாலம் வரை: சி. மௌனகுருவுடனான நாடகம் தவிர்ந்த நேர்காணல். 12831
சங்கீதம்: வினா-விடை தரம் 2 & 3. 12691
சடமும் கதிர்ப்பும். 12593
சத்துணவுகள். 12643
சதாவதானி நா.கதிரைவேற்பிள்ளை. 12950
சதுரங்கத்தின்அடிப்படைகளும் தொடக்க முறைகளும். 12719
சந்தைப்படுத்தல்: தத்துவங்களும் நடைமுறையும்-1. 12682
சபரிமலை ஸ்ரீ ஐயப்பன் திருப்பாற்கடல்: 24ஆவது ஆண்டு மண்டலபூஜை சிறப்பு மலர். 12102
சபரிமலை ஸ்ரீ ஐயப்பன் திருப்பாற்கோவை: 22ஆவது ஆண்டு மண்டலபூஜை சிறப்பு மலர்-1997. 12103
சபரிமலை ஸ்ரீ ஐயப்பன் மகரஜோதி தரிசனம்: 26ஆவது ஆண்டு மண்டலபூஜை சிறப்பு மலர்-2001. 12104
சபாரத்தினமெனும் திருவாசகப் பேரூற்று. 12902
சமகால உளவியல். 12507
சமாதானத் தூது: கட்டுரைத் தொகுப்பு. 12224
சமாதானத்திற்கு வழி. 12978
சமாதானத்தின் மகிமை. 12196
சமாதானத்துடன் சில கதைகள். 12803
சமுத்திரவியல். 12604
சமூக சேவைகள்: 1998ஆம் ஆண்டின் செயற்பாட்டு அறிக்கை. 12274
சமூகக் கல்வி: 10ஆம் ஆண்டு. 12202
சமூகக் கல்வி: 11ஆம் ஆண்டு. 12203
சமூகக் கல்வியும் வரலாறும்: 7ஆம் தரம். 12204
சமூகக் கல்வியும் வரலாறும்: 11ஆம் தரம். 12205
சர்வதேச அரசியல் பிரச்சினைகள்: மொழிபெயர்ப்புக் கட்டுரைகளின் தொகுப்பு. 12239
சர்வதேச கிரிக்கட் நிகழ்வுகள். 12720
சர்வதேச வர்த்தகமும் ஒத்துழைப்பும்: சர்வதேச அமைப்புக்கள். 12517
சர்வாதிகாரி ஹிட்லரை அடிபணிய வைத்த மாவீரன் செண்பகராமன். 12922

சனத்தொகையும் குடும்ப வாழ்க்கைக் கல்வியும்: ஆசிரியர் ஆலோசகர்களுக்கான கைந்நூல். 12319
சாபமும் சக்கரவர்த்தியும்: நாடகங்கள். 12784
சாவித்திரி. 13A07
சிகரம். 12706
சித்த மருத்துவம் 1988/1989. 12634

சிந்தனை: மலர் 1 இதழ் 1 (ஏப்ரல் 1967). 12385
சிந்தனை: மலர் 1 இதழ் 2 (ஜுலை 1967). 12386
சிந்தனை: மலர் 1 இதழ் 3 (ஒக்டோபர் 1967). 12387
சிந்தனை: மலர் 2 இதழ் 1 (ஏப்ரல் 1968). 12388
சிந்தனை: மலர் 2 இதழ் 4 (ஜனவரி 1969). 12389
சிந்தனை: மலர் 3 இதழ் 2 (ஜுலை 1970). 12390
சிந்தனை: மலர் 4 இதழ் 1,2 (ஜனவரி-ஜுலை 1971). 12391
சிந்தனை: மலர் 5 இதழ் 1&2 (ஜனவரி-ஜுலை 1972). 12392
சிந்தனை: தொகுதி I இதழ் 1 (ஜனவரி 1976). 12393
சிந்தனை: தொகுதி I இதழ் 2 (சித்திரை 1976). 12394
சிந்தனை: தொகுதி I இதழ் 3,4 (புரட்டாதி, மார்கழி 1976). 12395
சிந்தனை: தொகுதி I இதழ் 1 (பங்குனி 1983). 12396
சிந்தனை: தொகுதி I இதழ் 2 (ஆடி 1983). 12397
சிந்தனை: தொகுதி I இதழ் 3 (கார்த்திகை 1983). 12398
சிந்தனை: தொகுதி II (புதிய தொடர்) இதழ் 1 (மார்ச் 1984). 12399
சிந்தனை: தொகுதி II (புதிய தொடர்) இதழ் 2 (ஆடி 1984). 12400
சிந்தனை: தொகுதி II (புதிய தொடர்) இதழ் 3 (நவம்பர் 1984). 12401
சிந்தனை: தொகுதி III இதழ் 1 (மார்ச் 1985). 12402
சிந்தனை: தொகுதி III இதழ் 2,3 (ஜுலை,ஆகஸ்ட் 1985). 12403
சிந்தனை: தொகுதி IV இதழ் 1 (மார்ச் 1990). 12404
சிந்தனை (தொகுதி V, இதழ் 1/2). 12405
சிந்தனை (தொகுதி V, இதழ் 3). 12406
சிந்தனை (தொகுதி VI, இதழ் 1,2). 12407
சிந்தனை: தொகுதி VI இதழ் 3 (நவம்பர் 1994). 12408
சிந்தனை (தொகுதி VII, இதழ் 1/3). 12409
சிந்தனை: தொகுதி VIII 1996 முதல் தொகுதி XI 1999 வரை இணைந்த வெள்ளிவிழாச் சிறப்பிதழ். 12410
சிந்தனை தொகுதி XII, இதழ் 1.(மார்ச் 2000). 12411
சிந்தனை தொகுதி XIV, இதழ் 1 (பங்குனி 2004). 12412
சிந்தனை தொகுதி XIV, இதழ் 2 (ஜுலை 2004). 12413
சிந்தனை (தொகுதி XV, இதழ் 1). 12414
சிந்தனை (தொகுதி XV, இதழ் 2). 12415
சிந்தனை (தொகுதி XV, இதழ் 3). 12416
சிலப்பதிகாரம் காலமும் வரலாறுகளும். 12858
சிவசக்தி 1967-1968: றோயல் கல்லூரி இந்து மாணவர் மன்ற ஆண்டுமலர். 12417
சிவசக்தி 2016: றோயல் கல்லூரி இந்து மாணவர் மன்றம் கலைமகள் விழா மலர். 12467
சிவநடனம்: ஒரு தலைசிறந்த கலை. 12028
சிவபுண்ணியமும் சங்காபிஷேகமும். 12054
சிவபூசைத் திரட்டு. 12135
சிவஸஹஸ்ரநாமார்ச்சனை. 12136
சிவாகம சைவசித்தாந்த சாத்திரப் படிப்பு: சிவஞானசித்தியார் சுபக்கம்-மூலம்: முதலாம் சூத்திரம். 12029
சிற்பிகள். 12723
சிறகு விரி: சிறுவர் பாடல்கள் -04. 12724

சிறுவர் உளநலம்: ஆரம்பப் பாடசாலை மாணவர்களுக்கு உதவும் ஆசிரியர் கைந்நூல். 12018

சிறுவர்களுடன். 12019

சிறைக் குறிப்புகள். 12781

சின்மயாக்னி. 12096

சீரடி சாயிபாபா மகிமை. 12903

சீறாவின் இயங்கியல். 12855

சுகிர்தம்: இதழ் விரிப்பு (யாழ். ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியா சாலை சிறப்பிதழ்) 2001. 12468

சுத்த போசன பாக சாத்திரம். 13A08

சுதந்திர இலங்கை: செய்யுள் திரட்டு (ஜே.எஸ்.சி.அல்லது எட்டாம் வகுப்பு). 12741

சுதந்திரத்திற்கான கல்வி-அபிவிருத்தி, தனிப்பட்ட இலக்குகள், சமூக முன்னுரிமைகள் ஆகியன தொடர்பான பிரச்சினைகள். 12320

சுதந்திரத்திற்குப் பின் இலங்கை: ஒரு பன்முகப் பார்வை. 12832

சுதந்திரம்: தென்னாசிய மொழிபெயர்ப்புக் கவிதைகள். 12782

சுதேச மருத்துவம் பற்றிய இலங்கைத் தமிழ் நூல்கள்: பொருள் மரபும் இலக்கிய வளர்ச்சியில் அவற்றின் பங்கும். 12631

சுவடுகள்: சிறுகதைத் தொகுப்பு. 12804

சுவடுகளும் நினைவுகளும்: சில பதிவுகள். 12931

சுவாமி கெங்காதரானந்தஜீ அவர்களின் மணிமொழிகள். 12030

சுவாமி ஞானப்பிரகாசருக்கு நினைவு முத்திரை. 12941

சுழிபுரம் பறாளை விநாயகர், மூளாய் விநாயகர், பொன்னாலை விஷ்ணு ஆலய வரலாறுகள். 12078

சுற்றுநிருபம்: தமிழ் மொழித் தினம்-1998. 12321

சுனாமி ஒரு மீள்பார்வை. 12605

சூடாமணி நிகண்டு பதினொராவது பன்னிரண்டாவது (மூலமும் உரையும்). 12536

சூடாமணி நிகண்டு: மூலமும் உரையும். 13A09

சூனியத்தை நோக்கி. 12824

செஞ்சொற் செல்வம்: செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன் அவர்களது அகவை ஐம்பது நிறைவையொட்டிய சிறப்பு மலர். 12910

செந்தமிழ் பாப்பாப் பாடல்கள். 12725

செந்தமிழ் வாசகம்: ஐந்தாம் புத்தகம். 12998

செந்தமிழ்ப் பயிற்சி மாலை: ஆறாம் ஏழாம் வகுப்புகளுக்குரியது. 12548

செந்தமிழ்ப் பயிற்சி (வாசிப்பு நூல்): ஐந்தாம் வகுப்புக்குரியது. 12549

செந்தமிழ்ப் பூம்பொய்கை பாகம் 3. 12550

செய்முறைப் பௌதிகவியல் நூல். 12594

செயலாளர் செல்லச்சாமி: வாழ்க்கை வரலாறு. 12913

செல்லப்பாக்கியம் மாமியின் முட்டிக் கத்தரிக்காய் (புனைவுக் கட்டுரை). 12833

செல்வச் சந்நிதி முருகன் புகழ்மாலை. 12137

செழுந்தமிழ்ச் சிகரம்-சிறப்புமலர் 2003 (அகில இலங்கைத் தமிழ்மொழித் தினம்). 12469

செழுந்தமிழ்ச் சிகரம்-சிறப்புமலர் 2004 (அகில இலங்கைத் தமிழ்மொழித் தினம்). 12470

செழுந்தமிழ்ச் சிகரம்-சிறப்புமலர் 2005 (அகில இலங்கைத் தமிழ்மொழித் தினம்). 12471

சேதனப் பசளைகள். 12641

சைப்பிரஸ் மற்றும் சூடான்: அவர்களது சமாதானத்தின் இரு உதாரணங்கள். 12240

சைவ சமயம்: ஓர் அறிமுகம். 13A10
சைவ சமயம்: க.பொ.த.(சாதாரணம்) புதிய பாடத்திட்டத் தொகுதி 1974-75. 12065
சைவ நற்சிந்தனை. 12138
சைவ நெறி: ஒன்பதாம் வகுப்பு. 12066
சைவ நெறி: 11ஆம் தரம். 12067
சைவ போதினி-இரண்டாம் வகுப்பு. 12068
சைவ போதினி-மூன்றாம் வகுப்பு. 12069
சைவ போதினி: நான்காம் ஐந்தாம் வகுப்புகள். 12070
சைவ போதினி-ஐந்தாம் வகுப்பு. 12071
சைவ போதினி கீழ்ப்பிரிவு 1 (ஆறாம் வகுப்புக்குரியது). 12072
சைவ போதினி: பாலர் பிரிவு- இரண்டாம் மூன்றாம் வகுப்புகள். 12073
சைவ வித்தியாரத்தினம்: பேராசிரியர் இரா. வை.கனகரத்தினம் அவர்களின் நீள நினைதல் மலர். 12932
சைவ வித்தியாவிருத்திச் சங்கம்: 1958ஆம் ஆண்டு முடிவுக்கான அறிக்கை. 12472
சைவ வினாவிடை: முதற் புத்தகம். 13A11
சைவக் கிரியைகளும் விரதங்களும். 12055
சைவத் தமிழ் திருமணங்கள்: ஓர் கையேடு. 12524
சைவத் தமிழர்களின் கலங்கரை விளக்கம். 12904
சைவத் தொண்டன்: எட்டாவது சைவ மாநாட்டு சிறப்பிதழ்-1972. 12105
சைவப் பிரகாசிகை: இரண்டாம் புத்தகம். 13A12
சைவப் பிரகாசிகை: ஐந்தாம் புத்தகம். 13A13
சைவப் பெரியார் நூற்றாண்டுவிழாச் சபை: முதலாவது ஆண்டு வரலாற்றுச் சிறப்பிதழ் 31.3.1979. 12905
சொப்ஹொக்கில்சின் கிரேக்க நாடகங்கள்: மூன்றாவது தொகுதி.முதலாவது பகுதி: மூன்று நாடகங்கள். 12789
சோஃபகிளீஸின் மன்னன் ஈடிப்பஸ். 12707
சோமாஸ்கந்தம் நினைவுமலர் 2003.10.26. 12946
சோழப் பேரரசும் சமயப் பெருநெறிகளும். 12056
ஞானகுரு. 12139
ஞானகோஷம் (சரணாமிர்தத்துடன்). 12140
ஞானச்செல்வர் குணங்குடியார். 12190
ஞானம்: எழுத்துலகில் அ.முத்துலிங்கம் 60. 12011
தடங்களைக் கடந்துசெல்லும் காலநதி. 12834
தடை தாண்டல், பதவி உயர்வுகள், நேர்முகப் பரீட்சைகள். 12647
தணிகை-பணிநயப்பு மலர்: கல்விப் பணியில் நான்கு தசாப்தங்கள். 12933
தந்திரோபாய மனிதவள முகாமைத்துவம் (உயர்கல்விக்குரியது). 12646
தமிழ் அர்ச்சனை மந்திரங்கள். 12141
தமிழ்: ஆண்டு 5. 12551
தமிழ்: ஆண்டு 6. 12552
தமிழ்: ஆண்டு 8. 12553
தமிழ்: ஆண்டு 9. 12554
தமிழ்: ஆண்டு 9: பயிற்சி விளக்கங்களும் விடைகளும். 12555
தமிழ்: ஆண்டு 10. 12556
தமிழ்: ஆண்டு 11. 12557
தமிழ் ஆய்வுச் சிந்தனைகள்: மொழி-இலக்கியம்-பண்பாடு. 12835
தமிழ் ஆரம் 2016. 12418
தமிழ் இலக்கிய விளக்கம்: ஜீ.சீ.ஈ.(1962-1964). 12742
தமிழ் இலக்கிய வினா-விடை: ஆண்டு 10-11. 12743
தமிழ் இலக்கியம்: ஆண்டு 10-11: விளக்கக் குறிப்புகள். 12744
தமிழ் இலக்கியம்: தரம் 10-11. 12745
தமிழ் எழுத்து பேச்சுப்பயிற்சி. 12558

தமிழ் எழுத்துப் பயிற்சி (Practice in Tamil Writing). 12559
தமிழ் ஏழாந்தரம். 13A14
தமிழ் கலைவிழா 1994: சிறப்பு மலர். 12721
தமிழ் சாகித்திய விழா சிறப்பு மலர் 1992. 12758
தமிழ்: தரம் 4-பாடநூல். 12560
தமிழ் நயம் 2003: ரோயல் கல்லூரி தமிழ் இலக்கிய மன்றம் கலை விழா மலர். 12473
தமிழ் நயம் 2006: ரோயல் கல்லூரி தமிழ் இலக்கிய மன்றம் கலை விழா மலர். 12474
தமிழ் நூல் வெளியீட்டு விநியோக அமையம்: புத்தகக் கையேடு. 12007
தமிழ் மக்களின் விடுதலைப் பயணத்தில் ஊடகர்களின் பங்கு (கட்டுரைத் தொகுப்பு). 12971
தமிழ் மகள் மங்களம்மாள் மாசிலாமணி. 12918
தமிழ் மலர்: மூன்றாம் புத்தகம். 12561
தமிழ் மலர்: நான்காம் புத்தகம். 12562
தமிழ் மலர்: ஏழாம் புத்தகம். 12563
தமிழ்மொழி வழிகாட்டி: தமிழ்மொழி பயிலும் மாணவர்களுக்கான வழி காட்டி நூல். 12564
தமிழ் மொழி விளக்கம்: இரண்டு பகுதிகள் அடங்கியது. 12565
தமிழ்மொழித் தின விழா மலர் 1994. 12475
தமிழ்மொழித் தின விழா மலர் 1995. 12476
தமிழ்மொழித் தின விழா மலர் 1996: சிறப்பு மலர். 12477
தமிழ்மொழித் தினம் 1993. 12478
தமிழ்மொழித் தினம் 1994. 12479
தமிழ்மொழித் தினம் 1994. 12480
தமிழ்மொழித் தினம் 1997: சிறப்பு மலர். 12481
தமிழ் மொழிப் பயிற்சி நூல். 12566
தமிழ் மொழியும் இலக்கியமும் தரம் 6 செயல்நூல் (புதிய பாடத்திட்டம்). 12746
தமிழ்க் கலைக் கோவை. 12836
தமிழ்த் தட்டெழுத்து: தொடுகைமுறைப் பயிற்சி வழிநூல். 12650
தமிழ்த் திரைப்படக் களஞ்சியம்: தொகுதி இருபத்தொன்று. 12714
தமிழ்ப் புராண காப்பியமாகிய சங்கர விலாசம். 12142
தமிழர் அறிகையும் பரத நடனமும். 12699
தமிழர் கல்விச் சிந்தனைகள். 12322
தமிழர் சுகாதாரம்: சித்த வைத்திய சுகாதாரம். 12635
தமிழர் தகவல்: 27ஆவது ஆண்டு மலர்: இளந்தளிர் சுவடு. 12012
தமிழருவி: ஐந்தாவது இதழ் 1974-1975. 12483
தமிழருவி: தமிழ்விழா சிறப்பிதழ்: 1990: தமிழ் மகா வித்தியாலயம், பண்டாரவளை. 12482
தமிழருவி 1994: கலைவிழாச் சிறப்பிதழ். 12484
தமிழருவி 1997-1998: கலைவிழாச் சிறப்பிதழ். 12485
தமிழருவி 2002-2003: கலைவிழாச் சிறப்பிதழ். 12486
தமிழழகி: ஐந்தாவது வீரமாமுனிவர் காண்டம். 12792
தமிழிசைத் தீபம்: பகுதி 1. 12692
தமிழில் இசைப்பாடல் வகைகள்: அறிவனாரின் பஞ்சமரபு நூலை மையப் படுத்திய ஒரு நுண்ணாய்வு. 12693
தமிழில் நாடகம்: கட்டுரைத் தொகுப்பு. 12708
தமிழோவியம் 1945-2014. 12419
தர்மதீபம்: அமரர் வி.தர்மலிங்கம் நினைவு இதழ், 1985. 12914

தவத்திரு தனிநாயகம் அடிகளார் (மாட்சி நயப்புமலர்). 12942
தாய்நிலம்:சிறுகதைத் தொகுதி. 12805
தாயுமான சுவாமிகள் அருளிச்செய்த திருப்பாடற்றிரட்டு. 12143
தாரகை - இதழ்18:2014. 12420
தாரகை - இதழ்19:2015. 12421
தாரகை - இதழ்20:2016. 12422
திண்ணபுரத் திருக்கூத்தன் திருவிளையாடல். 12890
திரு அருட்பா மாலை: வழித் துணைவன். 12144
திருக்குறள் ஆய்வுரை: பாகம் 2. 12837
திருக்குறள்-ஒழிபியல்: பரிமேலழகர் உரை விளக்கம். 12838
திருக்குறள் நெறியில் இலக்கியச் சிந்தனைகள். 12839
திருக்குறள் (பொழிப்புரை). 12840
திருக்கோணமலை அன்புவழிபுரம் தில்லையம்பலப் பிள்ளையார் ஆலய மகா கும்பாபிஷேக சிறப்பு மலர் 01.09.2000. 12106
திருக்கோணமலை இராமகிருஷ்ண சங்க ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி அருள்மிகு சித்தி விநாயகர் ஆலய மகா கும்பாபிஷேக மலர். 12107
திருக்கோணமலை விசாலாட்சி சமேத விஸ்வநாதசுவாமி (சிவன்) கோவில் மகாகும்பாபிஷேக மலர். 12108
திருக்கோணமலைப் புராதன திருவுருவங்கள்: மேற்படி தலத் தேவாரப் பதிகத்துடன். 12079
திருக்கோவையார்(மூலம்) 12145
திருஞானசம்பந்தர் அருளிய அற்புதத் திருப்பதிகங்கள்: பதிக விளக்கத்துடன். 12146
திருத்தம்பலகாமம் ஆதிகோணநாயகர் கோயில் மஹா கும்பாபிஷேக விழாச் சிறப்பு மலர் 1999. 12109
திருத்தொண்டர் திருநெறி: ஆய்வரங்கச் சிறப்பிதழ்-2017. 12057
திருநெல்வேலி தலங்காவற் பிள்ளையார் கோவில் கும்பாபிஷேக மலர். 12110
திருமந்திரம் அடிப்படையில் யோகர் சுவாமிகள் அறிவுரைகள். 12147
திருமந்திரம்: ஓர் அறிமுகம். 12148
திருமுறையும் சைவத்திருநெறியும்: திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருமந்திரம். 12149
திருவாசக ஆராய்ச்சியுரை: முதலாம் பாகம். 12150
திருவாசக ஆராய்ச்சியுரை: இரண்டாம் பாகம். 12151
திருவாசக மணிகள். 13A15
திருவாசகம்-சிவபுராணம். 12152
திருவாதவூரடிகள் புராணம். 13A16
திருவெம்பாவை-திருவம்மானை: மூலமும் உரையும். 12153
திரைப்பட விழாக்களின் படங்களும் அவை தொடர்பான சுவையான செய்திகளும். 12715
திரைமறைவுக் கலைஞர்கள்: ஓர் அனுபவப் பகிர்வு. 12897
திறந்த கதவுள் தெரிந்தவை ஒரு பார்வை. 12862
தீவகம்: தொன்மையும் மேன்மையும். 12985
தூதர் திலகம் மேதகு செ.இராஜதுரை: மலேசியாவின் ஸ்ரீலங்கா தூதர் 1990-1994. 12999
தூரிகை 2007. 12423
தெய்வீகம் மலரும் பொழுது. 12154
தெளிதல்: பல்துறைசார் கட்டுரைகள். 12841
தென் கிழக்கு ஆசியா. 12961

தென்மதி: தென்மராட்சிக் கல்வி வலய வெளியீடு ஆடி-மார்கழி 2013. 12424
தென்னவள்: மார்கழித் திங்கள் முழுநிலா நாள் கலைவிழாச் சிறப்பு மலர் 2014. 12488
தேசிய தமிழ் சாகித்திய விழா 1991: சிறப்பு மலர். 12759
தேடலின் வலி (கவிதைகள்). 12776
தேம்பாவணி இரட்சணிய யாத்திரிகம் இயேசு புராணமாதிய மூன்று கிறித்தவ இலக்கிய நூல்களின் நூல் ஆராய்வு. 12842
தேவார திருவாசகத் திரட்டு: உரையுடன். 12155
தேவாரத் திருவமுதம். 12156
தொடக்குந் தொடர்பும் அல்லது ஆசௌச விளக்கம். 12058
தொண்டர் திலகம். 12919
தொல்லியல் சிந்தனைகள் (கட்டுரைத் தொகுதி). 12993
தொலைக் கல்விப் பாடநெறிகள்: கைந்நூல். 12323
தொழில் உறவுகள் பற்றிய கையேடு. 12254
தொழில் சட்டங்கள் 01. 12269
தொழிலாளர் கல்விக் கையேடு. 12324
தொழிற்சங்க நூற்றாண்டு: 1893-1993. 12255
தொழிற்படும் விலங்கு: க.பொ.த. உயர்தரம் உயிரியல் பாடத்திட்டம். 12613
ந.சி.க.முகவுரைகள். 12197
நக்கீர தேவநாயனார் அருளிச்செய்த திருமுருகாற்றுப்படை. 12157
நக்கீரர் இயற்றிய திருமுருகாற்றுப்படை. 12158
நட்சத்திரப் போர்:ஒரு யுத்த நோக்கு. 12241
நந்தகுமாரனுக்கு மாதங்கி எழுதுவது. 12806
நம் அனைவரதும் நாடு. 12268
நம் முன்னோரளித்த அருஞ்செல்வம்: மூன்றாம் பாகம்: இலங்கைச் சரித்திரமும் உலக சரித்திரமும். 13A17
நம்பமுடியாத உண்மைகள். 12002
நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன். 12080
நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர்: வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம். 12943
நல்லூர்க் கந்தன் திருப்புகழ். 12159
நல்லை ஆதீன முதல்வர் நற்சரிதம். 12906
நலம் பேணல் விஞ்ஞானம்(Text book of Nursing). 12619
நலமுடன். 13A18
நவரசம் 2016. 12490
நவரசம்: நாடகவிழா மலர் 2003. 12489
நவாலியூர் சோமசுந்தரப் புலவர். 12951
நவீன உயர்தர இலகு மாணவர் பௌதிகம்: அலகு 6: ஓட்ட மின்னியல், வெப்ப விளைவு, மின்காந்தத் தூண்டல். 12598
நவீன விஞ்ஞானம்(முழு அலகுகளும்): ஆண்டு 8. 12581
நற்சிந்தனைத் திரட்டு. 12160
நன்னூல் விருத்தியுரை. 12538
நன்னூற் காண்டிகையுரை. 12539
நா.சுந்தரலிங்கத்தின் விழிப்பு (நாடகம்). 12785
நாகதம்பிரான் மான்மியம். 12081
நாட்டார் பாடல்கள். 12530
நாட்டார் பாடல்கள் (தொகுப்பு): க.பொ.த. சா.த. தமிழ்மொழி புதிய பாடத்திட்ட பாடநூல். 12531
நாட்டிய நாடகத் தொகுப்பு (பரிசு பெற்ற நாடகங்கள்). 12700
நாடகமும் அரங்கியலும். 12709
நாடகமும் அரங்கியலும்: 2015 புதிய பாடத் திட்டத்திற்கு அமைவானது-தரம் 10. 12710

நாடகமும் அரங்கியலும்: 2016 புதிய பாடத்திட்டத்திற்கு அமைவானது-தரம் 11. 12711

நாணய முகாமைத்துவம். 12257

நாயக்கர்சேனை ஸ்ரீ ஐயனார் சுவாமி கோவில் கும்பாபிஷேக சிறப்பு மலர் 1995. 12111

நாவலப்பிட்டி பிரதேச சாகித்திய விழா மலர்: 14.08.1993. 12760

நாவலர். 12907

நாவலர் சிந்தையும் செயலும். 12908

நாவலர் பெருமான். 13A19

நாவலரியல்: ஆறுமுக நாவலரினதும் ஆறுமுக நாவலர் பற்றியதுமான வெளியீடுகள்: தேர்ந்தெடுக்கப்பட்ட நூல்விபரப் பட்டியல். 12008

நாளும் நலம் தரும் நாம பஜனை. 12161

நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு நினைவுமலர். 12761

நானிலம்: கலாசார விழா சிறப்பு மலர் 1997. 12762

நித்திய கல்யாணி: இளவாலை இந்து இளைஞர் சனசமூக நிலைய பொன் விழா மலர் 1952-2002. 12207

நித்திலம்: தமிழ் மொழித்தினவிழா மலர் 1998. 12425

நித்திலம் 2009. 12426

நித்திலம் 2010. 12427

நிதானமான சமூகத்தை நோக்கி. 12198

நிதி வளர நெறி இதுவே. 12677

நிதிக் கணக்கீட்டுக்கோர் அறிமுகம்: கணக்கீட்டு முதன்மைகள், இலங்கை கணக்கீட்டு நியமங்கள். 12657

நியூ வேவ் டிரைவிங் ஸ்கூல். 12523

நிலவு நீரிலும் தெரியும்: சிறுகதைத் தொகுப்பு. 12807

நிலைமாற்று முகவர். 12325

நிவேதினி: பால்நிலைக் கற்கை நெறிச் சஞ்சிகை: இதழ் 9 மலர் 2 (ஆனி 2004). 12216

நிவேதினி: பால்நிலைக் கற்கை நெறிச் சஞ்சிகை: இதழ் 16 (2014-2015). 12217

நிழல். 12275

நிறந் தீட்டுவோம்: உடல் உளவிருத்திக்கான துணைநூல். 12686

நிறைவான கல்விக்கு. 12326

நினைத்ததை தரும் திருமுறைப் பதிகங்கள். 12162

நீதிமுரசு 1989. 12260

நீதிமுரசு 1991. 12261

நீதிமுரசு 1994. 12262

நீதிமுரசு 2009. 12263

நீதிமுரசு 2010. 12264

நீதிமுரசு 2012. 12265

நீர்கொழும்பு இந்து இளைஞர் மன்றம் பவளமலர் 2008. 12112

நீர்வேலி ஸ்ரீலஸ்ரீ சிவ-சங்கரபண்டிதர் சரித்தரம். 12934

நீரிழிவு நோயாளர் பராமரிப்பு. 12624

நீரிழிவு வியாதியும் அது பற்றிய சில அனுபவக் குறிப்புகளும். 12625

நூலகம். 12010

நேயத்தே நின்றவர்கள். 12891

பக்தர்களுக்கு சுவாமியின் வழிகாட்டல்கள். 12059

பகவான் ஸ்ரீ ரமண மஹரிஷிகளின் அவதார மகிமையும் சந்நிதானப் பெருமையும். 12082

பகையாலே உதயமான உறவு: நாடகங்கள். 12786

பங்குடமைக் கணக்கீடு- அலகு 9. 12658

பசுமை:உலக சூழல்தின சிறப்பிதழ் 2001. 12280

பட்டம்: சனத்தொகையும் குடும்பநலக் கல்வியும் செயற்றிட்டம். 12199
படவரைகலையில் எறியங்கள்: உயர்தர வகுப்பிற்குரியது. 13A20
படைக் குறைப்பும் மூன்றாம் உலகமும். 12242
படைப்புகளும் பார்வைகளும்: கலை இலக்கியப் படைப்புகள் மீதான பார்வைகள். 12863
பண்டங்கள் சேவைகள் வரிச் சட்டத்தின் கைநூல். 12271
பண்டாரநாயக்க இலட்சியங்களும் சமூக அமைதியும். 12972
பண்டிதர் சி.அப்புத்துரை: ஓர் ஆய்வு. 12952
பண்டிதர் ம.வே.திருஞானசம்பந்தப்பிள்ளை. 12898
பண்டைத் தமிழ்ச் சமூகம்: வரலாற்றுப் புரிதலை நோக்கி. 12214
பண்டைத் தமிழர் சிந்தனை மரபு. 12843
பண்டைய ஈழம்: இரண்டாம் பாகம்: பொலன்னறுவைக் காலமும் பிந்திய காலங்களும். 12966
10ம் 11ம் தரம் கட்டுரை மஞ்சரி: சிறப்புச் சித்திக்குச் சிறந்த துணை. 13A21
பத்தினி வழிபாடு. 12163
பத்தும் பதியமும். 12986
பத்மம் (பேராசிரியர் எஸ்.பத்மநாதன் சேவை நயப்பு மலர்). 12935
பபிலானியாவில் இயேசுவும் தமிழர்களும். 12979
பயிலுனன்: பயிற்சி ஆசிரியர் நினைவுமலர் 1991-1993. 12491
பயிற்று மொழியாக மீண்டும் ஆங்கிலம்: ஒரு விளக்கநிலை நோக்கு. 12327
பரசுராம பூமி. 12808
பரதேசம் போனவர்கள். 12809
பரராசசேகரம்: பித்தரோக நிதானமும் சிகிச்சையும். 12636
பரிசுபெற்ற நாடகங்கள்: வடமோடி நாட்டுக்கூத்துகள். 12787
பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம்: ஆண்டுமலர் 27.12.1991. 12083
பருவமானவர்கள். 12617
பல்கலை: தொகுதி 07, இதழ் 01: 2015. 12428
பல்கலைச் செல்வி இராஜம் புஷ்பவனம் படைப்புகள். 12866
பல்லவர் காலமும் பக்திக் கோலமும். 12962
பல்லின சமூகத்தில் சனநாயகம். 12225
பல நாடுகளில் வசிக்கும் வாசகர்களுக்குப் பயனுள்ள குறிப்புகள். 12844
பழமொழித் தீபிகை. 12533
பன்மைச் சமூகத்தில் இஸ்லாமிய நெறிமுறைகள்: அறபுக் கல்லூரிகளுக்கான பாடவிதானத்துடன் தொடர்புடைய ஆவணங்கள். 12512
பன்னாலை-தெல்லிப்பழை அமரர் வ.சி. செல்லையா அவர்களின் சிவபதப்பேறு குறித்து வெளியிடப்பட்ட நினைவு மலர். 12892
பன்னிரு திருமுறைத் தோத்திரத் திரட்டு. 12164
பன்னீர் வாசம் பரவுகிறது (சிறுகதைகள்). 12810
பஜனானந்தம்: திவ்ய த்ரிமூர்த்திகளுக்கு சமர்ப்பணம். 12165
பாடசாலைகளில் முரண்பாடுகளை முகாமைத்துவம் செய்தல். 12328
பாடசாலையும் ஆசிரியரும்: ஓர் ஊடக வழிப் பார்வை. 12329
பாடத் திட்டமும் ஆசிரியர் கைந்நூலும்: தரம் 2. 12513
பாடவிதான முகாமைத்துவமும் பாடசாலை ஒழுங்கமைப்பும் (அத்தியாயம் 1-6). 12514

பாடவிதான முகாமைத்துவமும் பாடசாலை ஒழுங்கமைப்பும் (அத்தியாயம் 7-12). 12515

பாடிப்பறந்த குயில்கள் (மறைந்த 98 இசைக் கலைஞர்களின் சரிதம்). 12947

பாதுகாப்பாக இருங்கள். 12282

பாதுகாப்பையும் இறைமையையும் பங்கமின்றிப் பாதுகாத்தல் (கே.ஜி. கண்ணபிரான் அங்குரார்ப்பண நினைவுப் பேருரை). 12226

பாரதிதாசனின் தேசியக் கருத்துநிலையும் ஈழத்துக் கவிஞர்களில் அதன் செல்வாக்கும். 12845

பாரதிநேசன் வீ.சின்னத்தம்பி நினைவுமலர். 12920

பாரதியார் பாடல்கள்: விளக்கவுரை. 12747

பாரதியார் பாடல்கள்: வினா-விடைத் தொகுப்பு ஏ.எல்.தமிழ். 12748

பாரம்பரிய தொழிற்பயிற்சி முறையில் உய்த்துணரத்தக்க கல்வி முறைகள். 12330

பாராளுமன்றத்தில் ஹிஸ்புல்லாஹ். 12227

பாலபாடம்: முதற்புத்தகம். 12567

பாலபாடம்: இரண்டாம் புத்தகம். 12568

பாலபோதினி: ஐந்தாம் புத்தகம். 12569

பாலர் கல்வியும் விஞ்ஞான அணுகுமுறையும். 12508

பாலர் விளையாட்டுக்கள். 12509

பிரதிமைக் கலை. 12687

பிரதேச சாகித்திய விழா 1997: சிறப்பு மலர். 12763

பிரதேச வரலாற்று மூலங்கள்: ஒரு நூல்வழித் தேடல்: தீவகம். 13A22

பிரபஞ்சமும் வாழ்வியலும். 12015

பிரம்ம ஞானி ஸ்ரீமத் சுவாமி கெங்காதரானந்தா அவர்கள் வழங்கிய அமிர்தத் துளிகள். 12031

பிரவாதம் இதழ்எண் 5: ஏப்ரல் 2011. 12208

பிரவாதம் இதழ்எண் 6: ஜுலை 2011. 12209

பிரவாதம் இதழ்எண் 7: ஒக்டோபர் 2011. 12210

பிரவாதம் இதழ்எண் 8: ஜனவரி 2012. 12211

பிரவாதம் இதழ்எண் 9-10: மே-செப்டெம்பர் 2012. 12212

பிரித்தானியாவின் புதிய அடிப்படை வரலாறு: இரண்டாம் பகுதி 1485-1688. 12960

பிள்ளைகளுக்குச் சமாதானத்தைக் கற்பித்தல்: ஓர் மாதிரிப் பாடத்திட்டம் (உயர் இடைநிலை வகுப்புகளுக்காக). 12516

பிள்ளையார் துதியும் ஔவையார் மதியும். 12166

புகழேந்திப் புலவர் இயற்றிய நளவெண்பா (சுருக்கம்) கலிதொடர் காண்டம். 12749

புகையில் தெரிந்த முகம். 12825

புண்ணிய நதி:அமரர் கந்தையா புண்ணிய மூர்த்தி நினைவு மலர். 12893

புத்த தம்மம்: அடிப்படைக் கொள்கைகள். 12041

புத்தளம் மன்னார் வீதி ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய கும்பாபிஷேக மலர்: 11.6.2001. 12113

புத்திமான் பலவான் (சிறுவர் கதைகள்). 12728

புதிதாக சிந்திப்போம்: சமுதாயத்திற்கான கல்வி. 12331

புதிய அரசியலமைப்பில் மனித உரிமைகள். 12234

புதிய க.பொ.த. உயர்தர விலங்கியல் பகுதி III: ஒப்பீட்டு உடலமைப்பியலும் உடற்றொழிலியலும்: கரப்பான்-தேரை-மனிதன். 12614

புதிய க.பொ.த. உயர்தர விலங்கியல் பகுதி IV: ஒப்பீட்டு உடலமைப்பியலும் உடற்றொழிலியலும்: கரப்பான்-தேரை-மனிதன். 12615

புதிய சுகாதாரக் கல்வி தரம் 7. 12621

புதிய சுகாதாரக் கல்வி தரம் 9. 13A23

புதிய சைவ சமயபாடம்-8 (1978 முதல்). 12074

புதிய விஞ்ஞானம்: ஆண்டு 10 பகுதி 1. 12582

புதியதோர் உலகம் செய்வோம். 12021

புதுமை இலக்கியம்: இலக்கியப் பேரரங்கு சிறப்பு மலர் 1996. 12764

புதுமை இலக்கியம்: பாரதி நூற்றாண்டு முன்னோடி மலர், 1956-1981. 12765

புதுவையாள்: பிரதேச பண்பாட்டு விழா மலர்: 2014. 12987

புதை குழிக்குத் தள்ளும் புகைப்பழக்கம். 12278

புலவர்மணி கட்டுரைகள். 12846

புவியியலாளன்: மலர் 3 இதழ் 1 (1964/1965). 12872

புள்ளிவிபரப் படவரைகலையியல். 12219

புனித பயணம்: சிவபாலன் சாந்தரூபன் நினைவு மலர். 12894

புனைவுகள், நினைவுகள், நிஜங்கள்: ஒரு ஆய்வுநிலைத் தொகுப்பு. 12847

பூதத்தம்பி இசை நாடகம். 12793

பெண் விடுதலையும் விடுதலைப் புலிகளும்: தேசத்தின்குரல் அன்ரன் பாலசிங்கம் எழுத்தும் பேச்சும். 12973

பெண்ணுரிமைகள் கண்காணிப்பு: ஆண்டறிக்கை 1999. 12215

பெருங்காப்பியம் பத்துப் பற்றிய காப்பியச் சொற்பொழிவுகள். 13A24

பெருநதியின் புதிய கிளை: வித்தியானந்தன் பாணியிலான மரபுவழி நாடக மரபு. 12712

பெற்றோர் அறிய வேண்டியவையும் மாணவர் பிரச்சனைகளும். 12332

பேச்சுத் தமிழுக்கு அறிமுகம். 12570

பேராசிரியர் எதிரிவீர சரச்சந்திராவும் ஈழத்து நாடக மரபும். 13A25

பேராசிரியர் சோ.சந்திரசேகரனின் ஆக்கங்கள்: நூல்விபரப் பட்டியல். 12009

பேரிடர்களை பெருவாய்ப்புகளாக மாற்றுதல்: இளம் பருவத்தினரும் எச்ஐவி/எயிட்சும்-தெற்காசியா. 12626

பேழை: மட்/வின்சன்ற் மகளிர் கல்லூரி, மட்டக்களப்பு: 175ஆவது ஆண்டு நிறைவு சிறப்பு மலர்: 1820-1995. 12429

பேஸ்புக்கில் அந்த அழகிய முகம். 12826

பொச்சங்கள். 12864

பொது இரசாயனம் பகுதி 2: ஆவர்த்தன அட்டவணை. 13A26

பொது முதலீடு 1991-1995. 12678

பொது முதலீடு 1992-1996. 12679

பொய்மையும் வாய்மையிடத்து. 12827

பொருளாதார வளர்ச்சிக் கட்டங்கள்: பொதுவுடைமைவாதச் சார்பற்ற ஒரு பனுவல். 12248

பொருளாதாரக் கொள்கைகள். 12249

பொருளாதாரப் புவியியல். 12882

பொருளாதாரம்: பொருளாதாரக் கொள்கைகள் பற்றிய பாடநூல். 12250

பொருளியல்: முதற் பகுதி. 12251

பொருளியல்: இரண்டாம் பகுதி. 12252

பொருளியல் மூலம் (பகுதி 1). 12253

பொன் அம்பலம்: அமரர் கதிர்காமர் பொன்னம்பலம் நினைவு மலர். 12895

பொன்னெழுத்துக்களிற் பொறிக்கவேண்டிய ஒரு கதை. 12492

போசாக்குக் கைந்நூல். 12622

போதிமரக் குயில்: கவிதைத் தொகுப்பு. 12777
போரின் படிப்பினைகள்-3: நம்பிக்கையின் மலர்ச்சி. 12974
போரின் பின்-முன்நோக்கிய நகர்வு. 12258
போருக்குப் பின்: தென்மோடி நாட்டுக்கூத்து. 12532
போரும் மனிதனும். 12828
பௌதிக இரசாயனம்: பகுதி 1: வாயுக்களின் நடத்தைக் கோலங்கள். 12602
பௌதிகப் புவியியற் றத்துவங்கள். 12603
மக்கள் இனங்கள். 12870
மக்கள் நேசன் கார்த்திகேசன் மாஸ்டர். 12911
மகப்பேற்று மருத்துவம். 12627
மகாஜனன் பாரிஸ்-மலர் 1993. 12493
மகாஸ்தபதி கோவிந்தராஜுவின் தேர்த்திறன். 12683
மகுடம்: 85ஆவது ஆண்டு சிறப்பு மலர் 1923-2008. 12494
மஞ்சுகாசினியம்-இயங்கு தமிழியல். 12540
மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றம்: வெள்ளிவிழா மலர் 1968-1993. 12084
மட்டக்களப்பு செட்டிபாளையம் ஸ்ரீலஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலய வரலாறு. 12085
மட்டக்களப்புப் பிரதேசச் சாகித்திய விழா நினைவு மலர் 1993. 12766
மணிமகுடம்: மா.சின்னத்தம்பி அவர்களின் மணிவிழா மலர் 2008. 12936
மணிமலர்: நீர்கொழும்பு இந்து இளைஞர் மன்றம்: கலாசார மண்டபத் திறப்புவிழா. 12276
மணிமேகலை சரிதை. 12750
மத்திய மாகாண தமிழ் சாகித்திய விழா 2000 சிறப்பு மலர். 12767
மத்திய மாகாண தமிழ்மொழித் தின விழா மலர் 1993. 12768
மதுரகவி இ.நாகராஜன் அவர்கள் நினைவுமலர். 12953
மருந்தில்லா மருத்துவம். 12637
மலேசிய தமிழரின் சமகால வாழ்வியல் பரிமாணங்கள்: சில அவதானிப்புக்கள். 12980
மலேயா-இந்தியா யாத்திரை. 12883
மலையருவி: சிறப்புமலர். 12769
மழைக்கால இரவு (சிறுகதைகள்). 12811
மழையில் நனையும் மனசு(கவிதைகள்). 12778
மறுபிறப்பு (சிறுகதைத் தொகுப்பு). 12812
மறைந்த நாகரிகங்கள். 12871
மன்னார் சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி: நாற்பதாண்டு நிறைவுச் சிறப்பு மலர் 1959-1999. 12495
மனநிறைவான வாழ்வு: பேரறிஞர் பண்டிதர் சபா ஆநந்தர் அவர்களின் நினைவுப் பேருரை. 12954
மனவானின் மழைத்துளிகள்: கவிதைத் தொகுப்பு. 12779
மனித உரிமைகள், அரசியல் மோதலும் இணக்கப்பாடும். 12235
மனித வள முகாமை: உற்பத்தித்திறன் அதிகரிப்பிற்கான தந்திரோபாயங்களும் நுட்பங்களும். 12648
மனித விழுமியத்துக்கான சத்திய சாயி கல்வி. 12333
மனிதருள் மாணிக்கம்: அப்துல் அஸீஸ். 12916
மனிதனின் கௌரவப் பெயர். 12191
மனிதனைத் தேடும் மனிதன். 12975
மனோதத்துவமும் கலையும் போதனா முறையும். 12017
மஹாளய சிராத்தம். 12525
மா.பா.சி. கேட்டவை (தினக்குரல் பதிவுகள்). 12865
மாணவர் கட்டுரைக் களஞ்சியம். 12731

மாணவர் சூழல் வாசகம்: இரண்டாம் வகுப்பு. 12206
மாணவர் மஞ்சரி (Student's Bouquet of Verses in Tamil). 12571
மாணாக்கரின் காந்தி. 12732
மார்க்கோணியின் மின்சாதன பாதுகாப்புக் கையேடு. 12599
மாவடிப்பிள்ளையார் ஆலய கும்பாபிஷேக சிறப்பு மலர் 2004. 12114
மாவத்தகம டெனவர் ஸ்ரீ சகலபுவனநாயகி அம்மன் ஆலய மகாகும்பாபிஷேக மலர்-2005. 12115
மானுடமும் சோதிடமும். 12033
மிஸ்றின் வசியம். 12884
மீண்டும் வசந்தம். 12829
மீலாதுன் நபி விசேட மலர் 1991. 12722
முக்கிய இரு நிகழ்வுகளின் நினைவு மலர். 12036
முக்கிய உபநிஷதங்களின் சாரம்: அத்தியாயம் 5- முண்டகோபநிஷதம். 12032
முதல் உலகத் தமிழாசிரியர் மாநாடு, சிங்கப்பூர் 1992. 12496
முதல் நெருப்பு: தாய்த்தமிழகத்தில் ஈழ நெருப்பை மூட்டிய முதல் வீரன் அப்துல் ரவூப். 13000
முதலாம் தொடர்புறு பாட வாசகம் 1: மேற்பிரிவு. 12572
35 தாளங்களில் தனியாவர்த்தனம். 12694
முரசம் 2018: பிரித்தானிய தமிழர் தகவல் ஏடு. 13A27
முரண்பாட்டுத் தீர்வுக்கான கல்வி: ஆரம்பக் கல்வி ஆசிரியர் கைந்நூல். 12334
முரண்பாடு தீர்வுக்கான கல்வி: பயிற்றுநர் கைந்நூல். 12335
முருகன் பாடல்: முதலாம் பகுதி. 12167
முருகன் பாடல்: இரண்டாம் பகுதி. 12168
முருகன் பாடல்: மூன்றாம் பகுதி. 12169
முருகன் பாடல்: நான்காம் பகுதி. 12170
முருகன் பாடல்: ஐந்தாம் பகுதி. 12171
முருகன் பாடல்: ஆறாம் பகுதி. 12172
முருகன் பாடல்: ஏழாம் பகுதி. 12173
முருகன் பாடல்: எட்டாம் பகுதி. 12174
முருகன் பாடல்: ஒன்பதாம் பகுதி. 12175
முருகன் பாடல்: பத்தாம் பகுதி. 12176
முருகன் பாடல்: பதினொன்றாம் பகுதி. 12177
முருகன் பாடல்: பன்னிரண்டாம் பகுதி. 12178
முன்பள்ளி ஆசிரியர் பயிற்றுநர் கைநூல். 12336
முன்பள்ளிக் கல்விக் கற்றற் செயற்பாடுகள். 12337
முஸ்தபாவைச் சுட்டுக்கொன்ற ஓரிரவு (சிறுகதைகள்). 12813
முஸ்லிம் அரசியல் முன்னோடி அறிஞர் சித்திலெப்பை. 12228
முஸ்லிம் நாட்டாரியல்: தேடலும் தேவையும். 12527
முஹம்மத் (ஸல்) அவர்களின் தலைமைத்துவமும் முகாமைத்துவமும். 12192
மூலிகை மகத்துவம். 12632
மெதொடிஸ்த சபையாரின் தேவாராதனை ஒழுங்கு. 12039
மெய்கண்டதேவர் அருளிச்செய்த சிவஞானபோதமும் வார்த்திக மென்னும் பொழிப்புரையும். 13A28
மெல்லச் சாகும் வாலிபம் (சிறுகதைகள்). 12814
மேதின வரலாறும் அதன் போதனைகளும். 12256
மேல் மாகாணத்தின் இரண்டாவது தமிழ் சாகித்திய விழா 2010: சிறப்பு மலர். 12770

மேலகரம் திரிகூடராசப்பக் கவிராயர் இயற்றிய திருக்குற்றாலக் குறவஞ்சி. 12713
மொழித்திறன்: ஒத்த கருத்துச் சொற்களும் எதிர்க் கருத்துச் சொற்களும். 12541
மொழிப் பயிற்சி: உயர்தர வகுப்புகளுக் குரியது. 12573
மொழிபெயர்ப்பு நுட்பம்: ஓர் அறிமுகம். 13A29
மொஸ்கோ அனுபவங்கள். 12885
யா/இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம் பவளமலர் 1922-1997. 12497
யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி: 150ஆவது ஆண்டு நிறைவு மலர் 1852-2002. 12498
யா/புங்குடுதீவு ஸ்ரீ சித்திவிநாயகர் மகா வித்தியாலயம் நூற்றாண்டு மலர். 12499
யார் துரோகிகள்?: சாய்ந்தமருது உள்ளூராட்சி சபை. 12988
யாழ். இந்து மகளிர் கல்லூரி: பொன்விழா மலர் 1943-1993. 12500
யாழ்.திருநெல்வேலி முத்துமாரியம்பாள் அருள்நிதியம். 12179
யாழ்நாதம்: இதழ் 3-1997. 12430
யாழ்நாதம்: இதழ் 6-2000. 12431
யாழ்நாதம்: இதழ் 9-2003. 12432
யாழ்ப்பாண இராச்சியம். 13A30
யாழ்ப்பாணச் சமூகத்தை விளங்கிக் கொள்ளல்: அதன் உருவாக்கம், இயல்பு, அசைவியக்கம் பற்றிய ஒரு பிராரம்ப உசாவல். 12200
யாழ்ப்பாணச் சரித்திரம்: ஆங்கிலேயர் காலம். 12989
யாழ்ப்பாணத்து நல்லூர் மகாவித்துவான் அரசகேசரி இயற்றிய இரகுவம்மிசம் மூலமும் பதவுரையும்: இரண்டாம் பாகம். 12735
யாழ்ப்பாணப் புவியியலாளன்: ஜுன் 1983. 12873
யாழ்ப்பாணப் புவியியலாளன்: இதழ் 2 (1983/1984). 12874
யாழ்ப்பாணப் புவியியலாளன்: இதழ் 3 (1985/1986). 12875
யாழ்ப்பாணப் புவியியலாளன்: இதழ் 4 (1986/1987). 12876
யாழ்ப்பாணப் புவியியலாளன்: இதழ் 5 (1987/1988). 12877
யாழ்ப்பாணப் புவியியலாளன்: இதழ் 6,7,8 (1989/1991). 12878
யாழ்ப்பாணப் புவியியலாளன்: இதழ் 9 (1992/1993). 12879
யாழ்ப்பாணப் புவியியலாளன்: இதழ் 10/11 (1994/1995). 12880
யாழ்ப்பாணப் புவியியலாளன்: இதழ் 18/19 (2005/2006). 12881
யூரிப்பைடசின் நாடகங்கள்: முதலாவது பகுதி. 12790
யோகநாதம் மணிவிழா மலர். 12937
யோகாசனமும் மூலிகையின் மகத்துவமும். 12620
யோகிஸ்ரீ சுத்தானந்த பாரதியாரின் பாரத சக்தி மகா காவியத்தில் ஒரு ஆய்வுக் கண்ணோட்டம். 12848
வசந்தகால நினைவுகள்: சிறுகதைத் தொகுதி. 12815
வடகோவை சபாபதி நாவலரின் நான்மணிகள். 12734
வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் உயர்திரு இரா.சுந்தரலிங்கம் அவர்களின் மணிவிழா மலர்-1993. 12938
வண. கலாநிதி ஹயசிந்து சிங்கராயர் தாவீதடிகளார். 12944
வணிகக் கல்வி: உயர்தர வகுப்புகளுக்குரியது: வங்கிகளும் வங்கித் தொழிலும். 12518

வணிகக் கல்வி: துணைச் சேவைகள் பாகம் 1 (க.பொ.த.உயர்தர வகுப்புக்குரியது). 12519
வணிகக் கல்வி-பகுதி II: முகாமைத்துவம். 12520
வணிகக் கல்வியும் கணக்கீடும்: தரம் 11. 12521
வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம் வெள்ளிவிழா மலர் 1946-1971. 12501
வர்த்தகவியல்: தொழில் முன்னிலைப் பாடநெறி: ஒன்பதாம் தரம். 12522
வரலாற்று முன்னர் இந்தியா. 12963
வரலாறு: முதற் பகுதி. 12869
வரி விதிப்பு 1998/1999, 1999/2000, 2000/2001. 12272
வலுவூட்டல் முகாமைத்துவம். 12649
வவுனியா வெளிவட்ட வீதி ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய முகபத்திர வட்ட (வேசரம்) சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா மலர் 2001. 12116
வழிபாட்டுத் திரட்டு. 12180
வழிபாடு. 12060
வள்ளுவம் வழங்கும் தமிழர் தத்துவம். 12849
வளருந் தமிழ்: ஆறாம் வகுப்புக்குரியது. 12574
வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் கருணை மலர்: புனராவர்த்தன கும்பாபிஷேக மலர்-2003. 12117
வன்முறை மோதலுக்குப் பின்பான மீளிணக்கப்பாடு: கொள்கைச் சுருக்கம். 12229
வன்னியில் தமிழரசு: சிம்மக்குரலோன் செல்லத்தம்பு அரச பேரவையில் ஆற்றிய உரைகள். 12976
வன வளம். 12281
வாய்மையின் வெற்றி: ஆராய்ச்சிக் கட்டுரைகள். 12856
வாழ்க்கை நிகழ்ச்சிக் கோவையும் இலங்கை மிஷனின் சுருக்கமும். 12037
வாழ்க்கையின் சோதனை. 12940
வாழ்வகம்:விழிப்புல வலுவிழந்தோர் இல்லம். 12277
வாழ்வோரை வாழ்த்துவோம் 1994: முஸ்லிம் கலாசார விருது விழா 1994. 12955
வாழத் துடிக்கும் வடலிகள். 12726
வான்மீகியார் தமிழரே: ஆராய்ச்சிக் கட்டுரைகள். 12850
வானுறையுந் தெய்வம்: அமரர் கலாநிதி க.செ.நடராசா நினைவுமலர். 12956
விஞ்ஞான போதினி: 7ஆம் 8ஆம் வகப்பு களுக்குரியது. 12583
விஞ்ஞானமும் தொழில்நுட்பவியலும்: க. பொ.த. சாதாரண தர மற்றும் தரம் 10 மாணவர்களுக்கு உரியது. 12616
விடியலைத் தேடும் இரவுகள் (கவிதைத் தொகுதி). 12780
விடிவை நோக்கி: 1997/1998. 12038
விடுதலை இறையியல். 12035
விடுதலைப் புலிகளும் சமாதான முயற்சி களும். 12977
வித்தியாதீபம்: இதழ் 1&2: 1994/1995. 12433
வித்தியாதீபம்: இதழ் 7&8: 2000-2001. 12434
வித்தியோதயம்: 1975-1976. 12435
வித்தியோதயம்: 1976-77-78. 12436
வித்துவான் வேலன் நினைவலைகள்: சாவினை வென்றவன் வேலன் அறிவையோ. 12957
விபுலவாணி: வாணிவிழாச் சிறப்பு மலர் 2004. 12502
விபுலவாணி: வாணிவிழாச் சிறப்பு மலர் 2005. 12503
விபுலாநந்த அடிகளார் நூற்றாண்டு விழா-சிறப்பு வெளியீடு (ஆய்வுக் கட்டுரைத் தொகுதி). 12958

விபுலானந்த அடிகளார் நூற்றாண்டு விழா மலர்: 20.07.1991. 12909

விரத நியதிகள். 12061

வில்லிபுத்துராழ்வார் அருளிச்செய்த மகாபாரத மூலம். 12859

விவேகப் பரீட்சைகளும் பொது அறிவும். 12003

விழி 1994. 12437

விளங்கி எழுதுவோம் வாசிப்போம்-II: மேலதிக மொழி விருத்திப் பாடநெறி-தமிழ். 12575

விளங்கி வாசித்தலும் எழுதுதலும்-II: மேலதிக மொழி விருத்திப் பாடநெறி-தமிழ். 12576

விளங்கிக் கொண்டு கருத்து வெளியிடுதல் -1: மேலதிக மொழி விருத்திப் பாடநெறி - தமிழ். 12577

வினை தீர்க்கும் விநாயகர். 12062

வீரசங்கிலி: முத்தமிழ் விழா மலர் 2017. 12504

வீரசங்கிலியன்: பாகம் 1. 12965

வெசாக் சிரிசர 1996. 12042

வெல்ஸுக்கோர் வெடிகுண்டு. 12193

வெள்ளவத்தை மயூரபதி ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்: ஆலயச் சிறப்பும் வரலாறும். 12086

வெளி: நான்காவது ஆண்டு மலர் 2004. 12438

வெற்றியின் வழி. 12040

வே.ந.சிவராசா நினைவுமலர். 12917

வேதாரணிய புராணம். 12087

வேலாயுதம்: 1895-2010: 115ஆவது ஆண்டு நிறைவுவிழா சிறப்பு மலர். 12505

வைகுந்த திலகம்: ஆயர்பாடி ஆழ்வார் ஸ்ரீ வே.த.மயில்வாகனம் நினைவு மலர். 12896

வைரவ வழிபாடும் யாழ்.குப்பிழான் தைலங்கடவை ஞானவைரவர் ஆலய வரலாறும். 12088

ஜீ.சீ.ஈ. உயர்தரம் 10: 1998-2007 பரீட்சை வினாக்களும் விடைகளும்: இரசாயனவியல் 1&2. 12601

ஸ்ரீ அரவிந்தரின் கல்விச் சிந்தனைகளும் கல்விப் பணிகளும். 12338

ஸ்ரீ காயத்ரீ உபாசனா பத்ததி (காயத்ரீ நித்ய ஹோம விதியுடன்). 12181

ஸ்ரீ நவராத்திரி நாயகியும் தோத்திர மாலையும். 12182

ஸ்ரீ முன்னேஸ்வரம் திருக்கோயில் பண்பாட்டுக் கோலங்கள். 12089

ஸ்ரீ ராமகிருஷ்ண பஜனாவளி. 12183

ஸ்ரீ லலிதா கட்கமாலா, ஸஹஸ்ரநாமம், த்ரிஸதி. 12184

ஸ்ரீமத் அர்த்தநாரீஸ்வரி அர்த்தநாரீஸ்வர மகிமை (சங்காதேகார்த்தம்). 12185

ஸ்ரீமான் ராவ்பகதூர் சி.வை.தாமோதரம் பிள்ளை அவர்கள் சரித்திரம். 12959

ஸ்ரீஸ்கந்தநாதம்: மணிவிழா மலர் 16.10.2013. 12939

ஸ்பியர் திட்டம்: மனிதநேய சாசனமும் மனிதநேய மறுசீரமைப்பின் அடிப் படைத் தரங்களும். 12201

ஸலவாத்துன் நபி. 12194

ஸௌந்தர்யலஹரிக் கீர்த்தனாஸதகம். 12695

ஹரிஹர சுதன் தெய்வீகப் பாமாலை. 12186

ஹிந்துஸ்தானி இசை-மேற்கத்திய இசை: ஓர் அறிமுகம். 12696

# ஆசிரியர் வழிகாட்டி


அகரமுதல்வன் 12813
அகளங்கன் 12116,12783
அகில இலங்கை இந்து மாமன்றம் 12910
அகோரதேவர் 12087
அசோகன், கணபதிப்பிள்ளை 12609
அடைக்கலமுத்து, ச. 12349
அந்தனிசில், ம.க.அ.12965
அந்தனிராஜன், A. 12880-881
அப்பாக்குட்டி, தங்கம்மா 12055
அப்புத்துரை, சி. 12058,12119,12146,12179
அபயவர்த்தன, யூ.எம். 12454
அபராஜிதன், தி. 12488
அபிராமிப்பட்டர் 12120
அபிஷேக்பரன், என்.கே. 12467,12490
அம்பலவாணர், சிவகாமி 12430-432
அம்பலவாணர், வண. இரா. டா. 12037
அம்பிகைபாகன், ச. 12945
அம்பிகைபாகன், வேலுப்பிள்ளை 12053, 12683
அமரசிறி, சரத் 12279
அமரர் கந்தையா புண்ணியமூர்த்தி நினைவுக் குழு 12893
அமரர் திருமதி செல்லம்மா பாலசுந்தரம் நினைவுக்குழு 12137
அமரர் தில்லைநாயகி அம்மையார் நினைவுக்குழு 12184
அமரர் வ.சி.செல்லையா நினைவு மலர்க்குழு 12892
அமரர் வி.தர்மலிங்கம் நினைவுக்குழு 12914
அமரர் வே.த.மயில்வாகனம் நினைவு மலர்க்குழு 12896
அமானுல்லா, எம்.எஸ். 12796
அமிர்தலிங்கம், சி. 12090,12645
அரசகரும மொழிகள் திணைக்களம் 12534
அரசகேசரி 12735
அரசயாப்பு சீர்திருத்த இயக்கம் 12267
அரசாங்க தகவல் திணைக்களம். 12036
அரசினர் தமிழர் ஆசிரியர் சங்கம் 12303
அரசு, வீ. 12703-705
அரவிந்தன், டிலக்ஷிகா 12418
அருட்சோதி, ச. 12436
அருணா செல்வம் 12818
அருணாசலம் சுவாமிகள், ஸ்ரீமத் 12118
அருணாசலம், ப. 13A10
அருள்நந்தி, க.ச. 12594
அருள்மணி, அ. 12501
அருளம்பலவனார், சு. 12150-151
அருளானந்தம், க. 12584
அருளானந்தம்,ச. 12337,12479, 12729
அருளானந்தம், சர்ப்பா 12881
அலன், H.S. 12594
அலியார், யூ.எல். 12314
அழகுப்பிள்ளை, சி. 12913
அழகேசன், வே. 12522,12653
அறிவன் தமிழ் 12973
அன்புராசா, செ. 12726
அனந்தராஜ், வல்வை ந. 12001,12757
அனர்த்தகால உளநலப் பணிக்குழு 12022
அனஸ், எம்.எஸ்.எம். 12228,12527
அஸ்ரன் பதிப்பகம் 12601
அஸ்ஹர், M.J.M. 12542
அஸீஸ், எ.எம்.எ. 12884

அஸீஸ், M.M.A. 13A01
அஷ்ரப், அ.ப.மு. 12360
அஹமட், எஸ்.எல்.சியாத் 12227,12926
ஆசிநாத பண்டிதர், க.யோ. 12574
ஆசிரியமணி அ.பஞ்சாட்சரம் அவர்கள் பாராட்டுவிழாச் சபை 12924
ஆசிரியமணி அருணாசலம் பஞ்சாட்சரம் நினைவு மலர்க்குழு 12925
ஆசீர்வாதம், மு.வி. 12943
ஆசு கவிராஜர் 12736
ஆதம்பாவா, எஸ்.எச். 12853
ஆதர்ஷன், வி. 12419
ஆதிகோவிலடி ஜெயம் 12982
ஆயுள்வேத திணைக்களம் 12633
ஆரிப், எம். 12552
ஆலாலசுந்தரம், லீலாதேவி 12731
ஆழ்கடலான் **பார்க்க** பரமநாதன், முருக. வே.
ஆறுமுக நாவலர் 12135,12143,12157,12536, 12539,12567-568,13A09,13A11,13A28
ஆறுமுகம், ஓ. 12324
ஆறுமுகம், க. 12895
ஆறுமுகம், வ.12309
ஆனந்தசிவம், கார்த்திகேயன் 12112
ஆனந்தன், ஏ.எஸ். 12604
இக்பால், ஏ. 12002,12928
இத்ரீஸ், ஏ.பீ.எம். 12855
இதயச்சந்திரா, எட்வேட் 12792
இதயராஜ், செ.ஜோர்ஜ் 12714
இதயராஜா, வீ.எஸ். 12380
இந்திரசித், குமாரசாமி 12523
இந்திரபாலா, கா. 12385-392
இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் 12164,12510,12758
இந்து மகளிர் மன்றம். 12048
இம்மானுவேல், செல்லமுத்து 12519
இம்மானுவேல், வ.கி. 12545-546
இரகுநாதன், சு.இராஜகிருஷ்ணர் 12518
இரகுபரன், க. 12056,12057,12149,12308
இரத்தினசபாபதி, M. 12867
இரத்தினசபாபதி ஐயர், சி. 12142
இரத்தினசிங்கம், நா.சா. 12583
இரத்தினசிங்கம், ஞா. 12939
இரத்தினசிங்கம், பொ. 12435
இரத்தினம், இ. 12521
இரத்தினம், திருமதி ஞானம் 12963
இரத்தினம், ஞானகலாம்பிகை 12992
இரவிசங்கர், இராசரத்தினம் 12359
இரவீந்திரநாத், சி. 12429
இராகி 12786
இராசதுரை, வி.கி. 12351
இராசநாயகம், முதலியார் செ. 12989
இராசரத்தினம், க. 12687
இராசரெத்தினம், A.E.C. 12979
இராசரெத்தினம். வ.அ. 12864
இராசலிங்கம், சீ. 12375
இராசலிங்கம், த.இ. 12652,12869
இராசையா, E.P. 12079
இராசையா, பி. 12379,12383
இராமகிருஷ்ணன், வீ. 12611
இராமச்சந்திரன், க. 12082
இராமநாதபிள்ளை, த. 12293,12868
இராமநாதன், எஸ். 12147
இராமநாதன் செட்டியார். கா. 12883
இராமலிங்கம், வள்ளிநாயகி 12918
இராஜகுமாரன், கலைவாணி **பார்க்க** தமிழ்நதி
இராஜகோபால், காயத்திரி 12466
இராஜதுரை, ஸ்ரீமதி த. 12101,12380
இராஜரட்ணம், K.T. 12023
இராஜராஜன், இ. 12485
இராஜு,ந. 12376
இராஜேஸ்வரன், S.T.B. 12875,12877-879
இராஜேஸ்வரன், ப. 12329

இராஜேஸ்வரன், பரராஜசிங்கம் 12367-369
இலங்கை கல்வி கலாசார அலுவல்கள் அமைச்சு 12290-292
இலங்கை சட்டக் கல்லூரி தமிழ் மன்றம் 12260-265,
இலங்கை தகவல் திணைக்களம் 12978
இலங்கை பரீட்சைத் திணைக்களம் 12310
இலங்கை மத்திய வங்கி 12244-246, 12659-676,
இலங்கைத் தொழிலாளர் கல்வியாளர் கழகம் 12255
இளங்குமரன், செ. 12931
இளங்கோ, செ. 12014
இளங்கோ, திருமதி பரமேஸ்வரி **பார்க்க** மதுபாரதி
இளங்கோ, புலவர் 12745
இளங்கோவன், பத்மா 12725
இளமுருகனார், சோ. 12738
இளவாலை இந்து இளைஞர் சனசமூக நிலையம் 12207
இன்பமோகன், வடிவேல் 12529
ஈசன், க. 12363
ஈசான சிவாச்சாரிய சுவாமிகள், ஸ்ரீலஸ்ரீ பழனி 12054
ஈழத்துப் பூராடனார் **பார்க்க** செல்வராசகோபால், க.தா.
ஈஸ்பரதாசன், ச. 12090
ஈஸ்வரலிங்கம், கே. 12815
ஈஸ்வரன், க.க. 12424
உ.நிசார் **பார்க்க** நிசார், H.L.M.
உடப்பு நவ இளங்கதிர் நாடக மன்றம் 12946
உடப்பூர் வீரசொக்கன் 12051
உதயகுமார், அ.சி. 12237,12858,12968
உதயகுமார், கோணலிங்கம் 12932
உதயகுமார், சமரபாகு சீனா 12774,12843, 12922
உதயசந்திரன், வி.என்.எஸ். 12686
உமர்கயான், சே.ஜெ.13000
உமாகரன், சிவசம்பு 12887
உமாமகேஸ்வரன், வே. 12450
உயன்கொட, ஜெயதேவ 12196
உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் கோவில் 12100
உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம் 12457
உரும்பிராய் பரத்தைப்புலம் ஸ்ரீ கருணாகரப் பிள்ளையார் கோவில் 12131
உவாணர், யொட்சு தவுன்சென் 12960
உவைஸ், ம.முகம்மது 12042,12190,12854, 12856
உள்நாட்டு இறைவரித் திணைக்களம் 12271-272
உள்ளூராட்சி வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சு 12270
எட்வேட், மரியா 12677
எதிர்மன்னசிங்கம், எஸ். 12425,12753
எதிரிவீர, எஸ்.ஏ. 12041
எஸ்கேப் ஆசிரியர் குழு 12282
ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலை 12468
ஏறாவூர்ப்பற்று கலாசாரப் பேரவை 12762
ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் 12622
ஐக்கிய நாடுகளின் அகதிகள் ஸ்தானிகராலயம் 12233
ஐங்கரன், ப. 12990
ஓம்பிரசாதம், K. 12417
கங்காமுருகன் 12112
கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள் 12129
கடவுள் மாமுனிவர் 13A16
கண்ணதாஸ், நல்லை க. 12694
கண்ணுச்சாமிப் பிள்ளை, சி. 12628
கண்ணையா, தவயோகி 12052,12181
கணபதிப்பிள்ளை, க. 12013
கணபதிப்பிள்ளை, சி. 12163,12907

கணபதிப்பிள்ளை, தென்புலோலியூர் மு. 12564,12850
கணபதிப்பிள்ளை, ப. 12060
கணேசதுரை, பாகீரதி **பார்க்க** மாவை பாரதி
கணேசபிள்ளை, வைகுந்தம் 12700
கணேசலிங்கம், அ. 12108
கணேசலிங்கம். க. 12849
கணேசலிங்கம், கார்த்திகேசு 12591
கணேசலிங்கன், செ. 12917
கணேசையர், சி. 12735
கணேஷ்,கே. 12781
கணேஷ்,சி. 12025
கதிர்காமநாதன், தனாளினி 12466
கதிரமலை, வீரகத்தி 12483
கதைவாணன் **பார்க்க** ரஜா, S.F.L. மொஹிடீன்
கந்தசாமி, க.12063
கந்தசாமி, தமிழவேள் க.இ. 12074,12153,12555,12744,12751,12769
கந்தப்பு, சௌந்தரம் சந்தனநங்கை 12548-549
கந்தராஜா, ஆ.சி. 12833
கந்தவனம், வி. 12501,12953,12956
கந்தையா, ஆறுமுகம் 12162
கந்தையா, ந.சி. 12871
கந்தையா, பண்டிதமணி மு. 12838
கந்தையா, ஸ்ரீ வே. 12029
கந்தையாபிள்ளை, ந.சி. 12197
கமலநாதன், க. 12584
கமலநாதன், சா.இ. 12766
கமால்தீன், எஸ்.எம். 12929
கயிலாயநாதன், க. 12565
கரமத், எஸ்.ஏ.சீ.எம். 12816
கரிகாலன் 12977
கருணலிங்கம், வீ. 12316
கருணாகரர், அ. 12595-598,12600
கருணாகரன், சரவணமுத்து 12748
கருணாகரன், வே. 12936
கருணாநிதி, மா. 12198,12225,12249,12288,12327
கருணாநிதி, விசு 12770
கல்கி 12995
கல்வி அமைச்சு 12470
கல்வி இராஜாங்க அமைச்சு-தமிழ் மொழிப் பிரிவு 12439-448
கல்வி உயர்கல்வி அமைச்சு 12321
கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத் துறை, இளைஞர் விவகார அமைச்சு 12336
கல்வி வெளியீட்டுத் திணைக்களம் 12066,12531,12553-554,12557,12561,12562-563,12582,12588,13A14
கலாமணி, த. 12793,12841,12888
கலால்தீன், H.M. 12358
கலீல், M.I.S.A. 12552
கலைச்செல்வன், கு. 12651,12656-658
கலைஞர் குழந்தை **பார்க்க** செபமாலை, முருங்கன் செ.
கலைவாணன், இராமநாதன் 12632
கலைவாணி புத்தக நிலையம் 12543,12836
கலைவாணி, யோ.12366
கலைவாதி கலீல் 12722,12955
கவிதா, ஜெ. 12220-221
கனகசபாபதி, பொ. 12938
கனகசிங்கம், க. 12374
கனகரத்தினம், இரா.வை. 12526,12908,12935
கனகரத்தினம், K.T. 12319
கனகரத்தினம், த. 12283,12552
கனகரத்தினம், தம்பு 12492
கனகரெத்தினம், குமுதினி 12691
கஜேந்திரன், சண்முகநாதன் 12791
கஜேந்திரன், வை. 12812
காசிநாதன், தம்பிப்பிள்ளை 12043
கானவி 12821

கிருபாகரன், T. *12370*
கிருஷ்ணகுமார், இ. *12008*
கிருஷ்ணகுமார், சோமேசசுந்தரி *12411*
கிருஷ்ணபிள்ளை, இரா. **பார்க்க** இராகி
கிருஷ்ணபிள்ளை, மேனகா *12311*
கிருஷ்ணமூர்த்தி, இரா. **பார்க்க** கல்கி
கிருஷ்ணமூர்த்தி, சிவா *12505*
கிருஷ்ணராசா, செல்லையா *12415-416*
கிருஷ்ணராசா, சோ. *12412-413*
கிருஷ்ணானந்தன், கொற்றை பி. *12802*
கிளெம், பார்ட் *12970*
கீதபொன்கலன், எஸ்.ஐ. *12970*
கு.வி. அச்சகத்தினர் *12578*
குகநாதன், வி.இ. *12535*
குகபரன், நவரட்ணம் *12851*
குகபாலன், கார்த்திகேசு *12412-414,12985*
குகனேந்திரன் *12819*
குகாதரன், கே.வி. *12612*
குட்ஹான்ட், ஜொனாதன் *12970*
குடத்தனை உதயன் *12817*
குணசேகர, H.M. *12251-252*
குணசேகரம், கே.வி. *12286*
குணத்தொகையன், கி. *12197*
குணநாதன், இ. *12579*
குணரட்ண, A.G. *12547,12576*
குணரத்தினம், P. *12876*
குணராசா, க. *12219,12882,13A20*
குணரெத்தினம், செல்லத்துரை *12347*
குமரன், க. *12918*
குமாரசாமி, க.இ. *12050*
குமாரசுவாமி, சந்திரா *12324*
குமாரசுவாமிக் குருக்கள், ச. *12934, 13A12, 13A13*
குமாரவடிவேல், இ. *12524*
குருகே, ஆனந்த W.P. *12218*
குருநாகல் இந்து தமிழ் மகாவித்தியாலயம் *12463*
குருப்பு, ராஜா *12042*
குருமூர்த்தி ஐயர், க. *12128*
குலசிங்கம், என்.கே. *12275*
குலரத்தினம், க.சி. *12076, 12206*
குறமகள் **பார்க்க** இராமலிங்கம். வள்ளிநாயகி
குறூஸ், ஹிலறி *12289*
குஹானந்த சர்மா, சோ. *12044*
கெங்காதரன், M. *12370*
கெங்காதரானந்தஜீ *12030*
கேசவன், சிவகுருநாதன் *12933*
கேசவன், செ. *12419*
கேசவன், துளசிகா *12265*
கேணிப்பித்தன் **பார்க்க** அருளானந்தம்,ச.
கைதடி இந்து வாலிபர் சங்கம் *12105*
கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் *12464*
கொட்றிங்ரன், H.W. *12964*
கொடகம, சரத் *12609*
கொலின், வி.மைக்கல் *12808*
கொழும்பு இந்துக் கல்லூரி *12280,12384, 12923*
கொழும்பு தெற்குக் கல்விக் கோட்டம் *12475-476*
கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி *12343-344,12466*
கொழும்பு புனித அந்தோனியார் தமிழ் மகா வித்தியாலயம் *12423*
கொழும்பு ரோயல் கல்லூரி தமிழ் நாடக மன்றம் *12489-490*
கொழும்பு வடக்கு கல்விக் கோட்டம் *12480*
கொழும்பு விவேகானந்த சபை *12065,12068-073*
கொழும்பு விவேகானந்த மகா வித்தியாலயம் *12502-503*
கொள்கை திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சு *12678-679*
கொள்கை திட்டமிடல் கண்காணிப்பு பிரிவு *12301*

கொன்சன்ரைன் 12915
கோகுலசிங்கம், வி. 12364
கோணேசபிள்ளை, கோ. 12585
கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி 12498
கோபாலகிருஷ்ண ஐயர், ப. 12049
கோபாலசிங்கம், சீனித்தம்பி **பார்க்க** வெல்லவூர்க் கோபால்
கோபிநாத், இரா. 12021
கோவைக்கிழார் **பார்க்க** குமாரசாமி, க.இ.
கோவைநந்தன், நிர்மலாதேவி 12866
கௌதீபன், ந. 12486
கௌரிகாந்தன், முருகேசு 12504,12835,12932, 12937,12965
சக்திவேல், பொன். 12684
சங்கரநமச்சிவாயப் புலவர் 12538
சச்சிதானந்தம் 12917
சச்சிதானந்தன், க.12540
சச்சிதானந்தன், கணபதிப்பிள்ளை 12289
சச்சிதானந்தன், மு. 12756
சசீதரன், தி. 12452
சட்டத்துக்கும் சமூகத்துக்குமான அறநிலையம் 12231-232
சடகோபன், கிறேஸ் 12381-382
சண்முகசர்மா, இ. 12477,12481
சண்முகதாஸ், அ.12393-395
சண்முகநாதன், ம. 12832
சண்முகபிரகாஷ், ம. 12485
சண்முகலிங்கம், க. 12208-212,12223,12239, 12974
சண்முகலிங்கம், குழந்தை ம. 12707
சண்முகலிங்கன், என். 12195
சண்முகானந்தன், சு. 12499
சத்தியசீலன், ச. 12405-407
சத்தீஸ்வரன், தம்பையா 12602,13A26
சதாசிவ ஐயர், தி. 12857
சதீஸ்குமார், செல்லையா **பார்க்க** விவேகானந்தனூர் சதீஸ்
சதீஸ்குமார், பிரியா 12706
சந்திரகாந்தி, திருமலை வீ.என். 12829
சந்திரகுமார், சுந்தரலிங்கம் 12710-712
சந்திரகுமாரன், எஸ்.யூ.12495
சந்திரசேகரம், எஸ். 12285,12415-416
சந்திரசேகரம், சோ. 12915
சந்திரசேகரன், சோ. 12198,12298,12307,12327
சந்திரஹாசன், V. 12487
சபாநாயகம், இரா. 12121
சபாநாயகம், வெ. 12439
சபாரத்தினசிங்கம், உடுவில் வே.மு. 12716
சபாரெத்தினம். ஆரையம்பதி க. 12885
சபீக், சீ.எம். 12004
சம்பந்தன், ஐ.தி. 12098
சமரக்கோன், S.M.R.P. 12542
சமூக சேவைகள் அமைச்சு 12274
சனார்த்தனம், இரா.12994
சர்தேசாய், சொனாலி 12970
சர்மா, பீ.எஸ். 12285
சர்மிளாதேவி, செல்வி இரா. 12360
சரவணபவான், நி. 12435
சரவணபவானந்தன், சி. 12313
சரவணமுத்து, ச. 12870
சற்குணராஜா,ஈ.ஜே. 12593
சஜிஷ்னவன், எஸ். 12490
சஷ்விந்த்,ர. 12340
சாமுவேல், குமுதினி 12215
சாரல்நாடன் 12767,13A04
சித்தார்த்தா, வீ. 12041
சித்தீக், எம்.வை.எம். 12682
சிதம்பரநாதபூபதி 12142
சிதம்பரப்பிள்ளை, குமாரசாமி 12891
சிதம்பரப்பிள்ளை, ச. 12590
சிதம்பரப்பிள்ளை, வே.ஆ. 12533
சிதம்பரம்பிள்ளை, வே. 12129
சிந்துஜன், T. 12467
சிந்துஜா, க. 12004

*சியாமளாதேவி, தா. 12031*
*சில்வா, எம்.சீ. த. 12202,12203*
*சிவகரன், க. 12879*
*சிவகாந்தன், விநாசித்தம்பி 12097*
*சிவகுமாரன், கே.எஸ். 12715,12844*
*சிவகுமாரன், திருமதி பீ. 12202,*
*சிவகுமாரன், பீ. 12575*
*சிவகுமாரன், வீ.ச. 12607-608,12610,12613*
*சிவகுருநாதன் அடிகளார் 12901*
*சிவசந்திரன், இராசரத்தினம் 12408-410,12876*
*சிவசுப்பிரமணிய சர்மா, சே. 12650*
*சிவசுப்பிரமணியம், சுகிர்தா 12418*
*சிவசுப்பிரமணியம், செ.* **பார்க்க** *விழிசைச் சிவம் 12125*
*சிவசுப்பிரமணியம், ந. 12637*
*சிவசேகரம், சி. 12801*
*சிவஞான சுவாமிகள் 12538, 13A28*
*சிவத்தம்பி, கார்த்திகேசு 12200,12214*
*சிவதாஸ், எஸ். 12019,13A18*
*சிவநாதன், ப. 12247,12403-404*
*சிவநாயகம், மங்களவதி 12126*
*சிவநாயகமூர்த்தி, சுப்பிரமணியம் 12332*
*சிவநிர்த்தானந்தா, எஸ். 12377-379,12383, 12426-427,12471*
*சிவநேசச்செல்வன், ஆ. 12008,12353,12393-395*
*சிவப்பிரகாசம், யோகேஸ்வரி 12734*
*சிவபாதசுந்தரம், சு. 12016,13A15*
*சிவபாதவிருதயர், மு.க. 12154*
*சிவபாலன், கா. 12930*
*சிவபாலன், சு. 12894*
*சிவயோக சுவாமிகள் 12160*
*சிவயோகன், சா. 12018*
*சிவரத்தினம், திருமதி T. 12964*
*சிவரத்தினம், நடராசா* **பார்க்க** *ஆதிகோவிலடி ஜெயம்*
*சிவராசா, மலர் 12643*
*சிவராசா, வே.ந. 12030*
*சிவராஜா, சிவசம்பு 12990*
*சிவராம், சி.கு. 12341*
*சிவராமகிருஷ்ண சர்மா, பா. 12089*
*சிவலிங்கம், சண்முகம் 12800*
*சிவலிங்கம், மூத்ததம்பி 12983*
*சிவாகணேஷ், ச. 12473*
*சிவானந்தர், ஸ்ரீலஸ்ரீ சுவாமி 2032*
*சிவானந்தன், இ. 12652*
*சிற்றம்பலம், சி.க.12396-402,13A30*
*சிறிசேன, ஆனந்த 12652*
*சிறிதரகுமார், ச. 12426-427*
*சிறீக்கந்தராசா, செல்லத்தம்பி 12148*
*சின்னத்தம்பி, அ. 12619,12627*
*சின்னத்தம்பி, மதுராந்தகி 12362*
*சின்னத்தம்பி, மா. 12329,12331*
*சின்னத்தம்பி, வீ. 12911*
*சின்னராஜா, க. 12872*
*சீவரத்தினம், சி. 12013*
*சீவரத்தினம், சு.க. 12302*
*சுக்ரி, M.A.M. 12187*
*சுகசீவன்* **பார்க்க** *சீவரத்தினம், சு.க.*
*சுகன்னியா, பா. 12484*
*சுகிர்தா, ரா. 12420*
*சுதந்திரராஜா, பி. 12324*
*சுந்தரம்பிள்ளை, செல்வி சரஸ்வதி 12878*
*சுந்தரராஜ சர்மா, ஆர். 12161*
*சுந்தரலிங்கம், நா. 12785*
*சுப்பிரமணிய பாரதியார் 12747*
*சுப்பிரமணியம், அருள் 12752*
*சுப்பிரமணியம், ஆ. 12459*
*சுப்பிரமணியம், கே.கே. 12890*
*சுப்பிரமணியம், ச. 12326,12794*
*சுப்பிரமணியம், த.12081*
*சுப்பிரமணியம், தாபி.12942*
*சுப்பிரமணியம், துர்க்கா 12422*
*சுப்பிரமணியம், V. 12603*

சுப்பிரமணியம், வி.ச. 12587
சுப்பிரமணியன், கௌசல்யா 12688,12693
சுமணானந்த, எம்.ரீ. 12652
சுமதி ரூபன் 12795
சுமந்திரன், K. 12487
சுமன், பா. 12908
சுரேந்திரன், ந. 12273
சுரேஸ், வனிதா 12702
சுரேஷ், இராமச்சந்திரன் **பார்க்க** வேலணையூர் சுரேஷ்
சுல்தான், N.P.M. 12311
சுவாமிநாதன், கயிலைமணி அருள் 12144
சூசை, எஸ். 12411
சூதீன், S.M.R. 12335
சூரியநிலா 12723
செட்டிபாளையம் ஸ்ரீலஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயம் 12085
செந்திநாதன், கனக 12737
செந்தில்நாதன், இ. 12592
செந்தூரன்,க. 12341
செபநேசன் எஸ். 12352
செபமாலை, முருங்கன் செ. 12787
செல்லத்தம்பு, சேவியர் மார்க் 12976
செல்லத்துரை, அருணா 12991
செல்லத்துரை, குணரத்தினம் 12078
செல்லத்துரை, சு. 12058,12889
செல்லப்பா, நா. 12028
செல்லையா, அ.பொ. 12623
செல்லையா, ஆர். 12940
செல்வதுரை, கமலா 12872
செல்வநாயகம், இ. 12987
செல்வநாயகம், இந்திரா 12507
செல்வநாயகம், எஸ். 12614-615,12621,13A23
செல்வநாயகம், சோ. 12961
செல்வநாயகம், த. 12084,12949
செல்வரத்தினம், அராலியூர் வி. 12024,12077
செல்வராசகோபால், க.தா. 12287,12792, 12528,12789-790,12842,12848
செல்வராஜா, என். 12005,13A22
செல்வராஜா, மா. 12300,12304,12328,12644
செல்வராஜு,கு. 12999
சேய்ந்தன், க. 12384
சேரலாதன், த. 12438
சேனாநாயக்க, ரஞ்சினி 12202-203
சைதன்யா, பிரமச்சாரி வியக்த 12020
சைலஜா, B. 12634
சைவப் பெரியார் நூற்றாண்டு விழாச் சபை 12905
சொக்கலிங்கம், க. 12026,12743,12840,12159
சொக்கலிங்கம், சனா 12620
சொக்கன் **பார்க்க** சொக்கலிங்கம், க.
சொர்ணலிங்கம், க. 13A03
சோதிப் பெருமாள், செ. 12938
சோமகாந்தன், என். 12755,12764-765
சோமசுந்தரப் புலவர், நவாலியூர் க. 12127,13A07
சோமசுந்தரம், ஆ.வி. 12572
சோமசுந்தரம், தயா 12018,12506
சோமசுந்தரம், வண.டி.ஜீ. 12040
சோமசேகரம், சிவ உ. 12013
சோமேசன், பே. 12486
ஞானசுந்தரன், பிரேம்ஜி 12764
ஞானசுரபி புத்தகசாலை 12580
ஞானசேகர ஐயர், திருமதி. ஞானம் 12046
ஞானசேகரன், தி. 12011
ஞானப்பிரகாசம், மு. 12027
ஞானப்பிரகாசம். ஸ்ரீ முருகேசு 12136
ஞானேஸ்வரன், கே. 12428
டி பப்லோ, ஜுவான் கார்லோஸ் 12249
டிலோஜன், அ. 12461
டொபி, ஈ.எச்.ஜீ. 12961
தங்கராசா, கலகா பெ. 12047
தங்கவேலாயுதன், கந்தவனம் 12062

தங்கேஸ்வரி, க. 12528
தண்டிகைக் குலசேகரம்பிள்ளை 12635
தணிகாசலம்பிள்ளை, ச.நா. 12315,12330
தந்திரதேவா மகராஜ், சுவாமி 12140
தம்பிமுத்து, ஐ. 12203,12869
தம்பிராஜா, யோகி 12677
தம்பியையா, மா. 12088
தம்பையா, ஸ்ரீமதி சிவானந்தம் 12158
தமயந்தி, திருமதி து. 12375
தமிழ் முருகன் கோவில் சபை 12909
தமிழ் மொழி அலுவல்கள் திணைக்களம் 12941
தமிழ்நதி 12806
தமிழ்நூல் வெளியீட்டு விநியோக அமையம் 12007
தமிழ்மாறன், வி.ரி. 12915
தமிழமுதன், தனபாலசுந்தரம் 12342
தமிழவேள் **பார்க்க** கந்தசாமி, தமிழவேள் க.இ.
தமீம், U.T. 12266
தர்மகுலசிங்கம், வே. 12091
தர்மசுதர்சன் 12338
தர்மராஜா, நா. **பார்க்க** அகளங்கன்
தர்மலிங்கம், என்.கே. 12338
தர்மலிங்கம், ரி. 12269
தல்பாவெல, அனுஷா 12196
தவசிலிங்கம், து. 12108
தவயோகராஜா, வனஜா 12045
தவரத்தினம், திருச்செல்வம் 12033,12281,12530,12642,12728,12903
தவராஜா, சண். 12971
தவராஜா, சத்தியன் 12010
தவராஜா, பரமநாதர் 12990
தவரூபன், த. 12499
தவவதனி, த. 12355
தளையசிங்கம், மு. 12350
தனராஜ், தை. 12249,12516
தனிநாயக அடிகள் 12213
தஹநாயக்க, ஹயசிந்த் 12202
தாபர், பிந்தியா 12626
தாமோதரம்பிள்ளை,சி.வை. 12537
தாயுமானவர் 12143
திக்வல்லை கமால் 12816
திசாநாயக்க, S.T. 12641
தியாகராஜா, தயா 12282
தியாகராஜா, வீரகுட்டி 12517
தியாகராஜா, ஜெயராணி 12517
திருக்கோணமலை கல்வித் திணைக்களம் 12478-479
திருக்கோணமலை தில்லையம்பலப் பிள்ளையார் ஆலயம் 12106
திருச்சந்திரன், செல்வி 12216-217,12847
திருச்சிற்றம்பலவர், சு. 13A08
திருச்செல்வம், எஸ். 12012,12110
திருச்செல்வம், ஏ.கே. 12111
திருச்செல்வம், நீலன் 12972
திருஞானசம்பந்தப் பிள்ளை, ம.வே. 12155, 13A16
திருநாவுக்கரசு, செ. 12316
திருநாவுக்கரசு, செல்வி நளினி 12880
திருநாவுக்கரசு, திருமதி ம. 12585,12589
திருநாவுக்கரசு முதலியார், மணி. 12998
திருநீலகண்டன், இந்திரா 12144
திருமணிச்செல்வி, செல்வி எஸ். 12875
திருமலை சுந்தா 12108
திருமலை நவம் 12752,12984
திருமுருகன். ஆறு. 12904
திருவாசகன், நடராசா 12367
தில்லைநடராஜா, எஸ். 12448
திலகநாதன், க. 12709,12713
திலகநாதன், கயிலைநாதன் 12785
திவ்வியராஜன், ராஜா 12912
திவாகரன், கு. 12339
திவாகரன், ந. 12990

துரை, கி.செ. 12238
துரைசிங்கம்,த. 12727
துரைராஜா, கே. 12630
துரயமணி **பார்க்க** மிக்கேல்பிள்ளை, பிரான்சிஸ்
தெட்சணத்தார் வேளாளர் மகமை பரிபாலன சொசைட்டி லிமிட்டெட் 12167-178
தெய்வேந்திரராசா, திருமதி ஜீ. 12379,12383
தெய்வேந்திரன், பொன். 12061
தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகம் 12424,12488
தேசிய கல்வி நிறுவகம் 12204-205,12334, 12513,12514-515,12560,12577,12690
தையிட்டி இந்து இளைஞர் சங்கம் 12180
தொலுவீர, ராஜகருணா 12641
தொலைக் கல்வி நிறுவகம் 12323
தொலைக் கல்வி மத்திய நிலையம் 12491
தோழர் பாலன். 12236,12921
நக்கீரதேவ நாயனார் 12157-158
நடராசன், க.கி. 12013
நடராசா, F.X.C. 12222
நடராசா, காசுபதி 12645
நடராசா, சி. 12501
நடராசா, செ. 12740
நடராசா, சோ. 12960
நடராசா, தெல்லியூர் செ. 12284
நடராசா, வே.க. 12966
நடராஜ ஐயர், எஸ். 12218
நடராஜசுந்தரம், மாணிக்கம் 12257
நடராஜபிள்ளை, பண்டிதர் 12122
நடராஜன், எஸ். 12897
நடராஜன், வ. 12573,12737,12750
நடராஜா, என். 12377-378
நடராஜா, திருமதி வ. 12730
நடனசபாபதி, க. 12617
நடனசபாபதி சர்மா, நீர்வேலி தி. 12525
நடேசானந்தம், மு. 12528
நந்தகுமாரன், அ. 12485
நம்பி, வீ.வ. **பார்க்க** நல்லதம்பி, வீ.வ.
நரேந்திரன், ஆர். 12612
நல்லதம்பி, நா. 12839
நல்லதம்பி, வீ.வ.12166
நல்லலிங்கம், சந்தனா 12124
நவசோதி, க. 12962
நவநாயகமூர்த்தி, நா. 12993
நவநீதகிருஷ்ண பாரதியார், க.சு. 12152
நவம், க. 12809,12834,12863
நவம், ஷியாமளா 12618
நவமணி, ந. 12501
நவமோகன், வே. 12541
நவரட்ண, ஏ.ஏ. 12288
நவரட்ணம், R.R. 12417
நவரத்தினம், க. 13A02
நவரத்தினம்,சி. **பார்க்க** திருமலை நவம்
நவரத்தினம், திருமதி இரத்தினம் 12248
நவராஜ், நாகேந்திரம் 12707
நவரெத்தினராசா, வே. 12638
நவாதரன், ச. 12484
நற்பிட்டிமுனை பளீல் 12814
நஹியா, ஏ.எம். 12721,12759
நாகராஜன், இ. 12940
நாகலிங்கம், அன்புமணி இரா. 12528
நாகலிங்கம், இரா. 12846
நாகலிங்கம், நீலாம்பிகை 12009
நாகலிங்கம்பிள்ளை, ஆ.சி. 12550
நாகூர்கனி, S.I. 12955
நாகேஸ்வரன், கனகசபாபதி 12080,12631
நாதன், வே.க.ப. 12156
நாவலப்பிட்டி பிரதேச சபை 12760
நி/மத்துல்லா, ஏ.ஆர். 12927
நிசார், H.L.M. 12724
நித்தியானந்தன், யமுனா 12772
நித்தியானந்தா, எம். 12746
நியமுவா வெளியீடு 12240

நிஜாம், பாத்திமா நஸீரா 12422
நிஸாமுதீன், எம்.ஐ. 12009
நிஷாம்டீன், திருமதி றெஷியா 12380
நீர்கொழும்பு இந்து இளைஞர் மன்றம் 12276
நீர்வை பொன்னையன் 12948
நூறுல்ஹக், எம்.எம்.எம். 12988
நோபேட், எஸ்.அன்ரனி 12225,12249,12606
பக்கீர்த்தம்பி, எம்.ஐ.எல். 12188
பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபா பஜனை நிலையம் 12059
பகீரதன் 12997
பஞ்சலிங்கம், அம்பிகை 12777
பஞ்சாட்சரக் குருக்கள், பி.பா. 12185
பண்டாரவளை தமிழ் மகா வித்தியாலயம் 12482
பத்மசீலன், பா. 12486
பத்மநாதன், ச. 12424
பத்மநாதன், சி. 12056
பத்மநாதன், சுபாஷிணி 12697
பத்மரஞ்சன், இரா. 12648
பத்மானந்தன், நடராஜா 12455
பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி 12339,12341-342,
பர்ணாந்து, G.W. 12252
பரஞ்சோதி, வீரவாகு 12437
பரணவிதான, செ. 12992
பரமநாதன், முருக.வே. 12900,12902
பரமலிங்கம், சந்திரசேகரம் 12259
பரமலிங்கம், வ.பொ. 12075
பரமானந்தன், ம. 12583
பரமேஸ்வரன், எஸ்.கே. 12872
பரமேஸ்வரன், த. 12616
பரமேஸ்வரி, இ. 12738
பவணந்தி முனிவர் 12539
பவெல் பிரபு, கில்வெல்-பேடன் 12284
பளீல், ஆதம்லெப்பை முஹம்மது **பார்க்க** நற்பிட்டிமுனை பளீல்
பளீல், ஏ.எல்.எம். 12647
பறோஸ், லொறேன் 12333
பஹீம், எம்.எம். 12318
பாசின், கம்லா12626
பாண்டியன், சுப. இரத்தினவேல் 12134
பார்த்திபன், பரா. 12460
பாரதிநேசன் வீ.சின்னத்தம்பி நினைவுக்குழு 12920
பாலஐயா, சக்தி அ. 12017
பாலகணேசன், பாலசிங்கம் 12504
பாலகிருஷ்ணன், ஆர். 12732
பாலச்சந்திரன், கே.எஸ். 12822
பாலச்சந்திரன், ஞானம் 12827
பாலசிங்கம், அன்ரன் 12973,12975
பாலசிங்கம், ப. 12493
பாலசிங்கம், மா. 12494,12865
பாலசுகுமார் 12708,12752
பாலசுந்தரம்பிள்ளை, பொ. 12873
பாலசுப்பிரமணியம், அ. 12230
பாலசுப்பிரமணியம், க. 12635
பாலசூரிய, ஏ.எஸ். 12328,12516
பாலர் கல்விக் கழகம் 12508
பாலு **பார்க்க** பாலஐயா, சக்தி அ.
பாலேந்திரன், ஆ.12354
பிகற், ஸ்ருவாட் 12963
பிர்தௌஸ், சத்தார் எம். 12325,12927
பிரதாபன், பாலகிருஷ்ணன் 12361
பிரதீபன், பீ. 12474
பிரதீபன், வீ. 12987
பிரபாகரன், அ. 12101
பிரபாகரன், சிவஞானம் 12886
பிரான்சிஸ், செல்வி எஸ். 12621,13A23
பிரித்தானிய சைவத் திருக்கோயில்கள் ஒன்றியம் 12099
பிரேம் ஆனந்த், சிவயோகநாதன் 12107
பிலிப், பீலிக்ஸ் டீ. 12254
பிலேந்திரன், ஞானமுத்து விக்ரர் 12035

*பிறிந்தன்,ப. 12341*
*பிறெட்ரிக் ஈபர்ட் ஸ்டிவ்டுங் 12254*
*புகழேந்திப் புலவர் 12749*
*புத்தளம் மன்னார் வீதி ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம் 12113*
*புத்திரசிங்கம், த. 12611*
*புரட்சி, யோ. 12772*
*புவனபூஷணம், க. 12596*
*புளூவர், எச்.ஜே. 12870*
*புஷ்பரட்ணம், ப. 12935*
*புஷ்பராசா, ந. 12364*
*புஷ்பராஜன், எஸ். 12823*
*புஷ்பவனம், இராஜம் 12866*
*புஹாரி,* T.L.M. *12732*
*பூபதி, கு.12977*
*பூலோகசிங்கம், பொ.12761,12835*
*பெக்கி மோகன் 12617*
*பெர்னாண்டோ, ஆர்தர் ஜோன்ஸ் 12516*
*பெரியசாமி, சீரங்கன் 12279,12639,12641*
*பெரியதம்பிப்பிள்ளை, ஏ. 12846*
*பெரேரா, எச்.எஸ். 12299*
*பெரேரா, டீ.ஏ. 12317*
*பெரேரா, பத்மினீ என். 12202-203*
*பெரேரா, லால் 12288*
*பெரேரா, ஜெஹான் 12224*
*பெறேறா,* L.H.*ஹொஹஸ்12867*
*பேக்மன், எஸ்.ஏ. 13*A*17*
*பேரம்பலம், வே. 12652,12869*
*பேரானந்தன், சகோ.ஜோன் 12038*
*பேரின்பநாதன்,ஆ. 12458*
*பேரின்பநாதன்,ந. 12247*
*பைரூஸ்,* F.M. *12722,12955*
*பைரூஸ், எம்.பீ.எம். 12009*
*பொன்கலன்ட், த.ம.பீற்றர் 12976*
*பொன்சேகா, டில்ருக்சி 12970*
*பொன்ராசா,* B.M. *யோசவ் 12867*
*பொன்ராஜா, அன்ரன் 12703-705*
*பொன்னம்பலபிள்ளை, ந.ச. 12859*
*பொன்னம்பலம், சி. 12064*
*பொன்னம்பலம், மு. 12626*
*பொன்னுத்துரை, எஸ். 13*A*06, 13*A*24*
*பொன்னையாபிள்ளை, ஐ. 12636*
*மக்கள் சமாதான இலக்கிய மன்றம் 12803*
*மக்கீன், அஸீம்அ. 12473*
*மகாசேனன், முருகவேள் 12094*
*மகாலிங்கசிவம், ம.பா. 12898*
*மகாலிங்கம், க.* **பார்க்க** மொழிவரதன்
*மகேந்திரன், கோகிலா 12018,12506*
*மகேந்திரன், சு.வே. 12584*
*மகேஸ்வரன், ஆர். 12852*
*மகேஸ்வரன், கலைமதி 12952*
*மகேஸ்வரன், பொ. 12584*
*மகேஸ்வரன், வி. 12935*
*மகேஸ்வரன், வீ. 12428*
*மங்கவுசு,* F.J. *12603*
*மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் கலாசாலை 12375-376*
*மட்டக்களப்பு கல்வித் திணைக்களம் 12449*
*மட்டக்களப்பு மாவடிப் பிள்ளையார் ஆலயம் 12114*
*மட்டக்களப்பு வின்சன்ற் மகளிர் கல்லூரி 12429*
*மண்டல புருடர் 12536,13*A*09*
*மண்முனைப்பற்று பிரதேச செயலகம், 12763*
*மத்திய மாகாண தமிழ்மொழித்தின விழா செயற்குழு 12768*
*மதனாகரன், இ. 12873-874*
*மதிவாணன், இரா. 12496*
*மதிவானம், லெனின் 12980*
*மதுபாரதி 12804*
*மந்திரி கிரகோரி அன் கோ 12741*
*மயில்வாகனம், கிருஷ்ணவேணி 13*A*05*
*மயில்வாகனம், மு. 12013*
*மயூரகிரி, நீர்வை தி. 12034*

மயூரன், சின்னத்துரை 12262
மருதவாசி **பார்க்க** முபாறக், M.S.M.
மலையக இளைஞர் பேரவை 12256
மன்சூர், M.A. M. 12969
மன்ஸுர், உஸ்தாத் எம்.ஏ.எம். 12189
மனித உரிமைகள் அமைப்பு 12234
மனிதநேய அமைப்புக்களின் கூட்டமைப்பு 12201
மனிதவள அபிவிருத்தி, கல்வி, பண்பாட்டு அலுவல்கள் அமைச்சு 12469
மனோகரன், எம். 12380
மனோகரன், ச. 12112
மனோகரன், சின்னத்துரை 12493
மனோஜன், சி. 12340
மஜீத், மருதூர் ஏ.12625,12810
மஹ்ரூப், M.M.M. 12722
மாசிலாமணி, சொர்ணவதி 12067
மாட்டின், சி.என்றி கே. 12960
மாணிக்கவாசகர் 12145
மாயாண்டி பாரதி, கா. 13A19
மார்க்கோணி தொழில்நுட்ப நிறுவனம் 12599
மார்ட்டின், இயன் 12235
மாரிமுத்து, செல்வி வ. 12374
மாவத்தகம டெனவர் ஸ்ரீ சகலபுவனநாயகி அம்மன் ஆலயம் 12115
மாவை பாரதி 12130,12773,12784
மிக்கேல்பிள்ளை, பிரான்சிஸ் 12532
மிதிலா, த. **பார்க்க** கானவி
முகம்மது, ஏ.பீர் 12926
முத்தலிப், மவ்லவி A.S.A. 12192
முத்துலிங்கம், ச. 12296-297,12312
முத்தையா, நா. 12098,12138
முபாறக், M.S.M. 12191
முரசம் குழுமம் 13A27
முருகதாசன், வேலாயுதம் 12362
முருகதாஸ், அம்மன்கிளி 12713,12785
முருகபூபதி, லெ. 12765
முருகவேள், சிற்றம்பலம் 12136
முருகவேள், சி. 12396,12405-407
முருகானந்தன், அ.செ. 12825
முருகு **பார்க்க** முருகையா, ச.
முருகுப்பிள்ளை, ஆ.சி. 12629
முருகேசு சுவாமிகள், ஆர்.கே. 12139
முருகையன், இ. 12861,12869,13A29
முருகையா, ச. 12947
முல்லைதிவ்யன், ஆ. 12805
முஸ்லிம்களுக்கான செயலகம் 12512
முஹ்ஸின், M.M.M.12547,12576
முஹம்மட், உவைஸ் 12988
முஹம்மத், எம்.ஏ.ஸெய்யித் 12194
முஹம்மத், வெலிகம ரிம்ஸா 12860
மூக்கையா, மா.செ. 12224
மூயர், H. 12594
மூர், டி.எசுகின் 12960
மெதொடிஸ்த சபை, யாழ்ப்பாணம் 12039
மெண்டிஸ், ஜீ.ஸி. 13A17
மெய்கண்டதேவர் 13A28
மென்டிஸ், லயனல் 12242
மெனிக்கே, ஜயந்தா இளங்கோன் 12639
மொழிமாறன் 12788
மொழிவரதன் 12798
மொஹமட், மொஹமட் ஷெரீப், கச்சி **பார்க்க** ஜுனைதா ஷெரீப்
மோகன்குமார், கே. 12102
மோகனதாஸ்,சா. 12451
மோதீஸ், எம். 12474
மௌனகுரு, சி. 12845,13A25
யாக்கூத், எம்.எச்.எம். 12199,12328,12816
யாகூத், M.H. 12575
யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி 12500
யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம் 12430-432

யாழ்ப்பாணம் சைவ வித்தியாவிருத்திச் சங்கம் 12472
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி 12370-373,12504
யாழ்ப்பாணம் மெய்கண்டான் மகா வித்தியாலயம் 12497
யாழினி, ஜெ.ஆன். 12365
யோகராசா, எஸ்.ஜே. 12558-559,12566,12570
யோகராசா, நாகலிங்கம் 12654
யோகராஜா, செ. 12831
யோகேந்திரராஜா, ரதிராணி 12655
யோகேந்திரன்,S. 12634
யோண்பிள்ளை, V.A. 12003
யோதிலிங்கம், சி.அ. 12967
ரகுராகவன், க. 12648
ரங்கநாதன், அ. 12345
ரசாபான, தர்மசேன 12492
ரணவல, சிறிமல் 12869
ரமண சைத்தன்யா, பிரம்மச்சாரி 12096
ரமணேஷ், க. 12384
ரவிச்சந்திரன், மரியாம்பிள்ளை 12095
ரவிச்சந்திரன், வி. 12875
ரவீந்திரகுமார். க. 12103-104
ரவீந்திரன், தனேஸ்வரி 12646
ரவீந்திரன், முருகேசு 12807
ரவீந்திரன், மோகனவதனி 12277
ரஜா, S.F.L. மொஹிடீன் 12544
ரஸீன்-ஹஸனீ, முஹம்மத் 12278
ரஹ்மான், எம்.ஏ. 12919
ராஜகுமார், V. 12487
ராஜகோபால், எஸ். 12935
ராஜரத்தினம், T.A. 12959
ராஜேந்திரன், யமுனா 12996
ரியாஸ், எஸ்.எல். 12720
ரிஸ்னா, தியத்தலாவ எச்.எப். 12778,12862
ரூபீக்ஷன், எம். 12467
லக்ஷ்மன், குணரட்ணம் 12342
லக்ஷ்மன், W.D. 12251-252
லங்காநேசன், தம்பையா 12680
லதா உதயன் 12820
லிங்கம், பி.எம். 12916
லியனகமகே, அமரதாச 12869
லியனகே, சுமனசிறி 12268
லியுங்கிரன், போர்ஜ் 12249
லெடியன், ஹெமினியா டீ குஸ்மேன் 12630
லோகிதராஜா, கமலாம்பிகை 12986
வசந்தன், எஸ். 12474
வட இலங்கை தமிழ்நூற் பதிப்பகம் 12569, 12830
வடக்கு கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் 12425,12754
வடிவேல், இ. 12108
வடிவேலு, ஆ.12837
வடிவேலு, குமார் 12086
வண்ணை தெய்வம் 12797
வரதசுந்தரம், வே. 12109,12123,12132
வரதர் 12840
வரதராசன், தி.ச. பார்க்க வரதர்
வரதராசா, N. 12023
வரதராசா, நா. 12436
வரதராசா, மு. 12241
வல்லிபுரம், வே. 12869
வவுனியன், ரமேஷ் 12776
வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி 12433-434,12453,12507
வாகீசமூர்த்தி, ந. 12585-586,12589
வாகீசன், சாமிநாதன் 12092
விக்டர், கே.ஆர். 12461
விக்னேஸ்வரன், சி.வி. 12226,12258
விக்னேஸ்வரன், ப.12506
விசாகரூபன், கி. 12958
விசாகலிங்கம், இ. 12551,12552,12556
விசாலாட்சி மாதாஜி, ஸ்ரீ விசுவாம்பா 12182
விசுவநாதன், அ. 12243

வித்தியாதரன், சி. 12719
வித்துவான் க.ந.வேலன் நினைவுக் குழு 12957
விதானகே, புஷ்பகுமார 12006
விநாசித்தம்பி,சீ. 12141
விநாயகமூர்த்தி, ச. 12501
விமலாதித்தன், வி. 12473
வில்சன், ஏ.ஜே. 12222
வில்லவராயர், மீரா 12689,12696
வில்லிபுத்தூராழ்வார் 12859
விலென்ஸ்கி, R.H. 12685
விவசாயத் திணைக்களம் 12640
விவேக், செ. 12419
விவேகானந்தன், யசோதரா 12698
விவேகானந்தனூர் சதீஸ் 12780
விழிசைச் சிவம் 12125
வின்ஸ்லோ, மைரன் 12037
வின்ஸ்லோ, ஹரியட் வாட்ஸ்வேர்த் 12037
வினோஷியா, க. 12420
விஜயசுந்தரம், என். 12936
விஜயதுங்க, சுவர்ணா 12288
விஜயரெத்தினம், பெ. 12846
விஜேசேகர, G.A.W. 12639
விஜேந்திரன், A. 12520
விஸ்மன், எஸ். 12474
வீ.வ. நம்பி **பார்க்க** நல்லதம்பி, வீ.வ
வீரக்கொடி, மித்தா 12199
வீரசேகர, லாம்ஸன் 12283
வீரசொக்கன் **பார்க்க** உடப்பூர் வீரசொக்கன்
வீரமணி ஐயர், மா.த.ந. 12695
வீரவர்த்தனா, I.T.S. 12253
வுல்வெண்டால் பெண்கள் உயர்தரப் பாடசாலை 12420-422
வெங்கடேச சர்மா, சி. 12346
வெல்லவூர்க் கோபால் 12015,12605
வேட், றோபேட் 12249
வேணுகோபாலப் பிள்ளை, மே.வீ. 12158
வேதநாயகம், M.J. 12867
வேந்தனார், க. 12747
வேல்நம்பி, தி. 12649
வேலணையூர் சுரேஷ் 12775,12779
வேலன், க.ந. 12739,12742
வேலுப்பிள்ளை, ஆ. 12348
வேலுப்பிள்ளை, ச. 12456
வேலுப்பிள்ளை, சு. 12573,13A21
வேலுப்பிள்ளை, த. 12093
வேற்பிள்ளை, க. 12087
வேற்பிள்ளை, ம.க. 13A16
வைத்தியநாத தேசிகர், திருவாரூர் 12537
வைத்தியலிங்கம், மு. 12013
வைத்தீஸ்வரன், கா. 12624
றஊப், ஏ.எம்.மொஹமட் 12261
றமீஸ், எம்.ஏ.முஹம்மது 12357
றாசீக், எம்.எம். 12202
றிச்சார்ட்சன், ஜோன் 12974
றொனால்ட், ஆ.ஜென்சன் 12723
றொஸ்ரோ, W.W. 12248
ஜமாஹிர், பீ.எம். 12428
ஜயசிங்க, நந்தா12869
ஜயசேகர, P.V.J. 12869
ஜயத்திலக்க, லக்ஷ்மன் 12320
ஜவாத், அல்-ஷெய்ஹ் எம்.முஹம்மத் 12306
ஜனகன், வி. 12826
ஜனநாயகம் மற்றும் தேர்தல் செயற்பாட்டு உதவிக்கான சர்வதேச நிறுவகம் 12229
ஜீவலிங்கம், க. 12484
ஜும்லி, மு. 12473
ஜுனைதா ஷெரீப் 12799,12824
ஜெகநாதன், ஐ. 12581
ஜெகநாதன், ச. 12363
ஜெகநாதன். வி. 12954
ஜெபநேசன், எஸ். 12733
ஜெயக்குமரன், தமிழினி 12811
ஜெயக்குமார், இரா. 12771

ஜெயகிருஷ்ணன், J. *12487*
ஜெயசிங்கம், W.L. *12603*
ஜெயசிவதாசன், க.ந. *12477*
ஜெயசீலன், மு. *12366*
ஜெயரத்தினம், அ. *12196*
ஜெயராசா, சபா. *12294-295,12305,12322, 12333, 12509,12511,12699,12938*
ஜெயராமன், தேவராஜன் *12681*
ஜெயராஜ்,பொ. *12014*
ஜெயராஜ், ஜெ. *12874*
ஜெயராஜா, அனிஸ்டஸ் **பார்க்க** ஜெயராஜா, ஏ.ஏ.
ஜெயராஜா, ஏ.ஏ. *12828*
ஜெயானந்தமூர்த்தி, எஸ். *12981*
ஜெஸ்மின், எம்.மொஹம்மட் *12720*
ஜோசெப், எஸ்.எம். *12462*
ஜோர்ஜ், A.ஜோன் *12685*
ஜோர்ஜ், எஸ்.டபிள்யூ. *12465*
ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் *12133,12165,12183*
ஸ்ரீ ஐயப்பன் புனித யாத்திரைக் குழுவினர் *12186*
ஸ்ரீ ரமண அடியார் குழு *12899*
ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் *12083*
ஸ்ரீ லங்கா புத்தகசாலை *12944*
ஸ்ரீகணேசன், கந்தையா *12782,12933*
ஸ்ரீகந்தவேள், கந்தையா *12701*
ஸ்ரீகாந்தன், ஆர். *12324*
ஸ்ரீகாந்தா, சச்சிதானந்தம் *12692*
ஸ்ரீதர், எஸ்.வை. *12080,12356,12631*
ஸ்ரீதரன், இராசையா *12906*
ஸ்ரீபிரசாந்தன் *12149,12908,12950-951*
ஸ்ரீஸ்கந்தராசா, அ. *12522*
ஸ்டோனியர், அல்பிரட் W. *12250*
ஸஹானா, சி. *12421*
ஸாஹிரா, பா. *12421*
ஸெயின், முஹம்மது *12193*
ஷண்முகசர்மா, ஹேமா *12117*
ஷாவ்றர், அ.ஜே. *12571*
ஷிப்லி, M.P.M.M. *12328,12585-586,12589*
ஷெல்லிதாசன் *12866*
ஹக், லறீனா அப்துல் *12006*
ஹசன், எம்.எச்.எம். *12202,12328*
ஹசன், நூராணியா *12717-718*
ஹரன், தேவகுமாரி *12057*
ஹரோவிட்ஸ், டொனால்ட் எல். *12225*
ஹார்பேர்கர், ஆனொல்ட் *12249*
ஹிஸ்புல்லாஹ், M.L.A.M. *12227*
ஹுசைன்மியா, பி.ஏ. *12392*
ஹெட்டிகே, சிறி *12198*
ஹேக், டக்ளஸ் சி. *12250*
ஹொய்ற், எட்வின் பீ. *12273*
ஹோ சி மின் *12781*

*நூல்தேட்டம் தொகுதிகளில் உங்கள் நூல்களையோ,*
*பிற ஈழத்துப் படைப்பாளர்களின் நூல்களையோ பதிவுசெய்து*
*அவற்றை ஆவணப்படுத்துவதற்கு உதவிசெய்ய விரும்புகின்றீர்களா?*
*நூல்களின் பிரதிகளை கீழ்க்கண்ட எனது முகவரிக்கு அனுப்பிவைக்கலாம்.*
*ஒவ்வொரு பிரதியிலும் தலைப்புப் பக்கத்தில்*
**நூல்தேட்டம் பதிவுக்காக என்.செல்வராஜாவுக்கு வழங்கப்பட்டது**
*என்ற குறிப்பினை எழுதத் தவறாதீர்கள்.*

**N.Selvarajah**
**14, Walsingham Close, Luton, LU2 9BH**
**United Kingdom**

*எனது மின்னஞ்சல் முகவரி:* Noolthettam.ns@gmail.com
*எனது தொலைபேசி இலக்கம்:* (0044)78 1740 2704

*நேரில் அனுப்பிவைப்பதில் சிரமங்களை எதிர்நோக்குபவர்கள் நூல்களின்*
*பிரதிகளை இலங்கையிலும் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பிவைக்கலாம்.*
*காலக்கிரமத்தில் இவை என்னிடம் கையளிக்கப்படும்.*

**யாழ்ப்பாணம்**

**Dr. Mrs.Kalpana Sandrasekar**
**180/4, Sir P.Ramanathan Road, Thirunelveli,**
**Jaffna**

**மட்டக்களப்பு**

**Mrs. Sunthari Krishnapillai**
**Boundary Road, Eravur 4, Chenkallady,**
**Batticaloa**

**திருக்கோணமலை**

**Mr. T.Sanjeevan**
**338 A, Veerapaththirar Lane, Anbuvalipuram**
**Trincomalee**

**கொழும்பு**

**G.Kumaran**
**Kumaran Book House, 39, 36th Lane,**
**Colombo 6**

# நூல் தேட்டம் 13

## என். செல்வராஜா

ஈழத்துத் தமிழ் நூல்களுக்கான நூல் விபரப்பட்டியலான நூல்தேட்டத்தின் முதலாவது தொகுதி 2002 இலும் இரண்டாவது தொகுதி 2004 இலும் மூன்றாவது தொகுதி 2005 இலும் நான்காவது தொகுதி 2006 இலும் ஐந்தாவது தொகுதி 2008 இலும் ஆறாவது தொகுதி 2010 இலும் ஏழாவது தொகுதி 2011 இலும் எட்டாவது தொகுதி 2012 இலும் ஒன்பதாவது தொகுதி 2014 இலும் பத்தாவது தொகுதி 2015 இலும் வெளியிடப்பட்டன. அதன் தொடர்ச்சியான பதினொறாவது தொகுதி இதுவாகும். இதில் ஈழத்துத் தமிழ் எழுத்தாளர் களினதும், வெளியீட்டாளர்களினதும் ஆயிரம் நூல்கள் பற்றிய அடிப்படை நூலியல் குறிப்புகளும் அதனையடுத்து நூல் பற்றிய சிறு அறிமுகக் குறிப்பும் இடம்பெற்றுள்ளன. தொடர் இலக்கங்கள் முதலாவது தொகுதியிலிருந்து தொடர்ச்சியாக வழங்கப்பட்டுள்ளன. அவ்வகையில் பதினொறாவது தொகுதியில் இடம்பெறும் நூல்களுக்கு 12001 இலிருந்து 13000வரை தொடரிலக்கமிடப்பட்டுள்ளன.



என். செல்வராஜா: ஈழத்து நூலகவியல் துறையிலும் வெளியீட்டுத்துறையிலும் நன்கு அறிமுகமானவர் திரு. என். செல்வராஜா அவர்கள். சுன்னாகம் இராமாதன் கல்லூரியில் தன் நூலகப் பணியை ஆரம்பித்த இவர், பின்னர் யாழ். சர்வோதய மத்திய நூலகம், இவ்லின் இரத்தினம் பல்லினப் பண்பாட்டியல் நிறுவன நூலகம், இனத்துவ ஆய்வுக்கான சர்வதேச நிலையத்தின் கொழும்புக் கிளையின் நூலகம் ஆகியவற்றில் பணியாற்றியவர்.

அயோத்தி நூலக சேவைகள் நிறுவனத்தின் தாபகரான இவர் அந்நிறுவனத்தினூடாகப் பல நூலகவியல் சார்ந்த நூல்களை வெளியிட்டு வருகின்றார். 'நூலகவியல்', 'நூல்தேட்டம்' ஆகிய இரு சஞ்சிகைகளினதும் பிரதம ஆசிரியராக இருந்ததுடன் 'கிராமிய நூலகங்களும் அபிவிருத்தியும்', 'ஆரம்ப நூலகர் கைந்நூல்', 'உருமாறும் பழமொழிகள்', 'யாழ்ப்பாணப் பொது நூலகம்: ஒரு வரலாற்றுத் தொகுப்பு', 'நூலகர் கைந்நூல்: சிறுவர், பாடசாலை, கிராம நூலகர்களுக்கு', 'தேடலே வாழ்க்கையாய்', 'Selected Bibliography of James T. Ratnam', 'Rising From the Ashes' ஆகிய நூல்களையும் எழுதியுள்ளார். தற்போது இங்கிலாந்தில் வசித்துவரும் இவர் அங்கும் புத்தகப் பண்பாட்டை ஊக்குவிக்கும் முயற்சிகள் பலவற்றிலும் ஈடுபட்டு வருகின்றார்.

ISBN 978-955-659-635-9

அயோத்தி நூலக சேவைகள் &
குமரன் புத்தக இல்லம்

விடயம்: நூலகவியல்

விலை ரூபா 2000.00

#823